இலங்கை பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள்

கி.பி. 1500 ஆண்டுகள் வரை





JPL
C11924

ச. கிருஷ்ணராசா

25

இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள்

பாகம் I

(கி.பி. 1500 ஆண்டுகள் வரை)

Structure of the Evolution of Culture of Sri Lanka

Part - I

(Till 1500 years AD)

09 SEP 2016

KOHA JPL

ALL CEYLON DISTRIBUTORS
No: 212
K.K.S. ROAD
JAFFNA
Tel: 021 222 5542

தொகுப்பாசிரியர்:

பேராசிரியர். செல்லையா. கிருஷ்ணராசா M.A.,

வரலாறு - தொல்லியற்றுறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

யாழ்ப்பாணம்

KOHA JPL

251892

வெளியீடு

AB Creator & Publishers

கொழும்பு - 06, இலங்கை

தொலைபேசி: 011-2055085 மின்னஞ்சல்: abcreators2012@gmail.com

2012

251892 CC

நூலின் தலைப்பு	: இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள் பாகம் I - (கி.பி. 1500 ஆண்டுகள் வரை)
நூலின் தன்மை	: கி.பி. 1500 ஆண்டுகள் வரை இலங்கையில் காணப்பட்ட வரலாறு, கலை, கலாச்சாரம், அரசியல், சமயங்களின் வளர்ச்சி போன்றவற்றின் உண்மைத் தன்மையின் அடிப்படையிலான ஒரு தொகுப்பு
தொகுப்பாசிரியர்	: பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா MA
விடயம்	: இலங்கை வரலாறு (கி.பி. 1500 ஆண்டுகள் வரை)
பக்கம்	: VIII + 744
வெளியீடு	: AB Creator & Publishers 8A-4/2, புகையிரதநிலைய வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06, இலங்கை.
அலுவலகம்	: வரலாறு - தொல்லியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
முதற்பதிப்பு	: 2012 புரட்டாதி
பதிப்புரிமை	: பிறைநிலா வெளியீடு, 2ஆம் கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்
பிரதிகள்	: 1000
நூலளவு, தாள் வகை	: B5, 60 gsm வெள்ளை பாங்க் தாள்
ISBN	: 978-955-4568-02-0

Title	: Structure of the Evolution of Culture of Sri Lanka - Part - I (Till 1500 years AD)
Editor	: Professor Selliah Krishnarajah, MA
Subject	: Sri Lankan History (Till 1500 years AD)
Pages	: VIII + 744
Publishers	: AB Creator & Publishers 8A-4/2, Station Road, Wellawatha, Colombo - 06, Sri Lanka.
Official Address	: Department of History and Archaeology, University of Jaffna, Thirunelvely.
Home Address	: 2nd Kaladdy Lane, Kondavil West, Kondavil, Jaffna.
Telephone	: Office - 021-2227419, Home - 021-2053321, Mobile : 077 7283618
E-mail	: krishna53@jfn.ac.lk **OR** skrishna514@gmail.com
First print	: 2012 October
Copy Rights	: Pirainila Publication, 2nd Kaladdy Lane, Kondavil West, Kondavil, Jaffna.
Number of Copies	: 1000
Book Size & Paper	: B5, 60 gsm White Bank Paper
ISBN	: 978-955-4568-02-0

KOHA-JPL

அணிந்துரை

பேராசிரியர் செ. கிருஷ்ணராசாவின் இலங்கை பண்பாட்டு பரிமாணத்தின் அடிப்படைகள் - பாகம் I (கி.பி. 1500 வரை) என்ற நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றின் பொருள் விளக்கமும் பரப்பும் நோக்கமும் அணுகுமுறையும் என்ற முதலாவது அத்தியாயம் வரலாறு தெரியாதவர்களுக்கே ஒரு சிறந்த அறிமுகத்தைக் கொடுக்கின்றது. இலங்கை வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்களை சாசனவியலில் குறிப்பிடும் ஆசிரியர் இவற்றுக்கான பலவகையான உதாரணங்களைக் குறிப்பிட்டுள்ளார். மனித நாகரிகம் நதிக்கரையோரத்தில் ஆரம்பிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் பலவகை சாசனங்களில் உள்ளன போன்று, இலங்கையின் பாரம்பரியங்களை எடுத்துக்காட்டியதுடன் அக்கால இலங்கை அரசியலின் பண்பாட்டினை விளக்கும்போது பௌத்த மதத்துடன் இணைந்த பெருங்கற்காலத்தை ஆராய்ந்துள்ளார். அதனைத் தொடர்ந்து பன்மத சமூக நிறுவனங்களின் எழுச்சி பற்றியும் பின்னர் ஏற்பட்ட நிலப் பிரபுத்துவ சமூகத்தின் பண்பாட்டுச் செல்வாக்கு, இலங்கையின் கலை மற்றும் இலக்கிய வளர்ச்சிப் பாரம்பரியம் என்பவற்றையும் இணைத்து குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய உண்மைத் தன்மையிலான நூல்கள் எமக்கு மிகவும் இன்றியமையாதது. வரலாறு பற்றிய அடிப்படையை அறியாதவர்களுக்கும் வரலாற்றை ஒரு பாடமாகக் கற்கும் உயர்வகுப்பு மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இலங்கை வரலாறு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கும் பயன்படும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலாசிரியர் மேலும் மேலும் இத்தகைய நூல்களை எழுதவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
16. 08.2012

KOHA
JPL

முன்னுரை

இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள் - பாகம் I என்ற இந்த விரிவான பண்பாட்டு வரலாற்று நூலானது நாம் ஏற்கெனவே வெளியிட்ட **இலங்கை வரலாறு - பாகம் 1** என்ற நூலினைத் தளமாகக் கொண்டு, ஆய்வு அடிப்படையிலான விரிவாக்கமாக உருவாக்கி வெளியிடப்படுகின்றது. அடிப்படையில் கி.பி. 1500 ஆண்டுகள் வரையிலான இலங்கையின் பண்பாட்டு வரலாற்றின் மூல அலகுகளை அண்மைக் காலத்தில் நிகழ்ந்த **தொல்லியல், சாசனக் கண்டுபிடிப்புக்களையும்** அவை தொடர்பான அண்மைக் காலத்தில் வெளிவந்த வெளியீடுகளையும் இணைத்த வகையில் ஒரு புதிய கண்ணோட்டத்தில் இந்நூலுக்கான விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றைக் கற்கின்ற மாணவர்களது தேவையைப் பூர்த்தி செய்கின்ற அதே நேரத்தில் ஆய்வு நோக்கில் இலங்கை வரலாறு தொடர்பான பிரச்சினைகளை அணுக முயல்வோருக்கான தொடக்க நூலாகவும் இது அமையவேண்டும் என்ற நோக்கில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மொத்தமாகப் பதினைந்து அத்தியாயங்களினூடாக இக்குறிப்பிட்ட நோக்கத்தினை மையமாகக்கொண்டு இப்புதிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வரலாறு மீதான பார்வை ஒரு கோட்பாட்டு அடிப்படையில் என்றும் இருப்பதுமில்லை, இருந்ததுமில்லை. சமகாலத் தேவைகளுக்கு ஏற்பவும், தொல்லியல் அகழ்வாய்வு மூலாதாரங்கள் கிடைப்பதன் அடிப்படையிலும் அரசியல் நோக்கங்களையும் மற்றும் தேசிய இனங்களின் அகப்புற முரண்பாடுகளையும் மையப்படுத்தியே வரலாற்று நூல்களும் கோட்பாடுகளும் ஆக்கப்படுவதனைக் காணமுடிகின்றது.

இலங்கைத்தீவின் வரலாற்றெழுத்தியல் இதற்கு மிகச்சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும். வரலாற்றுக் கருக்களை திரிவுபடுத்தியும் மறைத்தும் விளக்கம் கொடுப்பதன் மூலமும் குறிப்பிட்ட சமூகம் சார்பான வரலாற்றினை பலர் படைத்துள்ளனர். இன்னும் சிலர் வரலாற்று மூலங்களுக்கு மட்டும் விளக்கம் கொடுப்பதன் மூலம் வரலாற்றினை எழுதியுள்ளனர். மொழியை, சமயத்தினை, பிராந்தியத்தினைத் தழுவி வரலாறு எழுதப்படும்பொழுது பக்கச்சார்பான நிலை தோற்றம் பெறுவது தவிர்க்கமுடியாததாகி விடுகின்றது. பேச்சுரிமை, கருத்தறியும் சுதந்திரம் என்பன மறுக்கப்படும் பொழுதும் வரலாறு பற்றிய எண்ணக்கரு மாற்றமடைகின்றது. வரலாற்று மூலங்கள் காட்டுகின்ற உண்மையான தோற்றப்பாட்டினை நாட்டுப்பற்று அல்லது தேசிய ஒருமைப்பாடு காரணமாக மாற்றியமைக்கின்ற ஒரு போக்கே இத்தென்னாசியப் பிராந்தியங்களில் இற்றைவரைக்கும் வரலாறு எழுதும்போது கடைப்பிடிக்கப்படுவதனைக் காணமுடிகின்றது. இவ்வாறான ஒரு பின்னணியையுடைய சூழலில் இலங்கைப்

பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள் என்ற இந்நூல் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இயன்ற வரைக்கும் வரலாறு பற்றிய எண்ணக்கரு சிதைவடையாத வகையில் வரலாற்று மூலங்களுக்கான விளக்கங்களை இங்கு கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

இந்நூலுக்கான அணிந்துரையை எமது மதிப்பிற்குரிய பல்கலைக்கழகத் துணைவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் MSc, PhD அவர்கள் மனமுவந்து அளித்துள்ளார்கள். இதே போன்று என்னைக் கற்பித்து உருவாக்கிய ஆசான்களில் ஒருவரும், தற்போதைய பட்டப்பின் படிப்பு **உயர்கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியுமான** பேராசிரியர் கலாநிதி சமாதிலிங்கம் சத்தியசீலன் MA, PhD அவர்கள் இந்நூலுக்கான நூலாசிரியரைப் பற்றிய குறிப்பை வழங்கியுள்ளார்கள். இவர்களுக்கு எனது முதல் நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூல் **பிறைநிலா வெளியீட்டின் ஐந்தாவது பதிப்புரிமை பெற்ற நூலாக** வெளிவரும் இச்சந்தர்ப்பத்தில் இந்நூலுக்கான பதிப்பு வேலைகளை தேவி அச்சகம், கொழும்பு - 13 பொறுப்பேற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாது ஒரு **சர்வதேசத் தரம்வாய்ந்த நூலின் தோற்றப்பாட்டினை** வெளிக்கொண்டுவரும் நோக்கில் கொழும்பு - 06 இல் அமைந்துள்ள AB Creator & Publishers நிறுவனத்தார் புத்தக வெளியீட்டையும் மேற்கொண்டுள்ளனர். அத்துடன் வழமைபோல் எமது வெளியீடுகளை நாடு முழுவதும் விநியோகம் செய்துவரும் கொழும்பு 12இல் அமைந்துள்ள லங்கா புத்தகசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது, இந்நூல் விநியோகத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது. அந்நிறுவன பணிப்பாளர்களுக்கும் முகாமையாளர் திரு.க. சதீஸ் அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றிகளும் வணக்கங்களும் உரித்தாக வேண்டும். மேலும் இந்நூலின் அடுத்த பதிப்பில் **வன்னிப்பிராந்தியத்தின் வரலாற்று மரபுகளின் வளர்ச்சி** இணைத்துக் கொள்ளப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொண்டு, எதிர்காலத்தில் இந்நூலை ஒரு முழுமையான, தகவல் நிறைந்த சர்வதேச தரம் வாய்ந்த அணுகுமுறையில் உருவாக்குவதற்கு இந்நூலின் வாசகர்கள் ஆக்கபூர்வமான வகையில் தமது கருத்துக்களை இந்நூலாசிரியருடன் பகிர்ந்துகொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு உங்களிடமிருந்து விடைபெற்றுக்கொள்கின்றேன்.

நன்றி

செ. கிருஷ்ணராசா
கலட்டி 2ம் ஒழுங்கை
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்
16. 08. 2012

KOHA
JPL

பொருளடக்கம்

1. வரலாற்றின் பொருள் விளக்கமும் பரப்பும் நோக்கமும் அணுகுமுறையும் 1

2. இலங்கை வரலாற்றைக் கற்பதற்குரிய மூலாதாரங்கள் 37

3. வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சமூகங்களின் இருப்பும் பண்பாடும் இடஅமைவும் 128

4. பெருங்கற்கால இலங்கையும் பண்பாடும் 155

5. புராதன நதிக்கரையோர நாகரிகங்களும் இலங்கையின் நீரியல் நாகரிகத்துடனான பண்பாட்டு வழித் தொடர்புகளும் 203

6. விலங்குவேளாண்மைக் குதிரைக் (Horse riders as cattle keepers) குழுமங்களின் வருகையும் கீழைத்தேயத்தில் அவர்களது குடியேற்ற நடவடிக்கைகளும் 240

7. ஆக்ககால இலங்கையின் அரசியல், பண்பாடு (பௌத்தமதத்துடன் இணைந்த பெருங்கற்காலம் - Buddhisized Megalithism) 262

8. ஒரு மைய அரசின் பரிணாமமும் பன்மத - சமூக நிறுவனங்களின் எழுச்சியும் (ஆக்ககால வளர்ச்சி தொடர்பான சாசனவியல் மூலங்கள் ஊடான சிறப்பாய்வு) 301

9. நிலப் பிரபுத்துவ சமூகமும், அரசின் மேனிலையாதிக்கமும் (தேரவாத பௌத்த பீடங்களின் பண்பாட்டுச் செல்வாக்கு) 317

10. நிலப்பிரபுத்துவ சமூகமும் அரசின் மேனிலை ஆதிக்கமும் (இந்துமதம் மற்றும் மகாயான பௌத்தபீடங்களின் பண்பாட்டுச் செல்வாக்கு) 387

11. இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியும் தென்மேற்கு, வடக்கு, கிழக்கு நோக்கிய அரசியல் பண்பாட்டுப் புலப்பெயர்ச்சியும் 471

12. அரசியற் கோட்பாடுகளும் வெளிநாட்டுக் கொள்கைகளும் (அநுராதபுரம், பொலனறுவைக் காலங்கள்) 492

13. அரசியற்கோட்பாடுகளும் வெளிநாட்டுக் கொள்கைகளும் (தென்மேற்கு - வடகிழக்கு இடப்பெயர்வுக் காலங்கள்) - (1236-1505) 536

14. இலங்கையின் கலை மற்றும் இலக்கிய வளர்ச்சிப் பாரம்பரியம் (சிங்களப் பௌத்தப் பண்பாடு) 583

15. இலங்கையின் கலை மற்றும் இலக்கிய வளர்ச்சிப் பாரம்பரியம்: (இந்துத் திராவிடப் பண்பாடு) 648

அத்தியாயம் : ஒன்று

வரலாற்றின் பொருள் விளக்கமும் பரப்பும் நோக்கமும் அணுகுமுறையும்

மனித இனம் இப்பூமியில் தோற்றம் பெற்ற காலத்திலிருந்தே **வரலாற்றுப் பதிவுகள** நிகழத் தொடங்கிவிட்டன. இற்றைக்கு **450 கோடி** வருடங்களுக்கு முன்னர் தோற்றம் பெற்றதாகக் கருதப்படும் இப்புவியில் உயிரினங்களின் தோற்றம், அவற்றின் பரிணாம வளர்ச்சிப் பாதைகள் ஊடாக புராதன மனித இனத்தின் மூதாதையரின் இனம் தோற்றம் பெற்றதாகக் கருதப்படுகின்றது. இற்றைக்கு **350 கோடி** வருடங்களுக்கு முன்னர் இப்புவியில் முதலுயிரினங்கள் தோற்றுவிக்கப்பட்டதாக மானிடவியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். பின்னர் இற்றைக்கு **150 கோடி** வருடங்களுக்கு முன்னரே இம் மனித இனமானது உதயமானது எனவும், பின்னர் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு சற்று முன்னரேதான் புராதன நதிக்கரைகளில் நகரங்களை அமைத்து நாகரிக வாழ்வுநிலையை அவ்வினம் எய்தியது எனவும் தொல்லியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதாவது இற்றைக்கு **150 கோடி** வருடங்கள் தொடக்கம் **கி.மு. 3000** ஆண்டுகள் வரைக்கும் வாழ்ந்த மனித சமூகம் நிறுவனமயப் படுத்தப்படாத, சீரற்ற, குழும வாழ்வியலின் அடிப்படையிலேயே வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பது வெளிப்படையாகின்றது. நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம் இவ்வாழ்வியக்கமானது சீரற்ற தன்மையின் அடிப்படையில் தட்ப – வெப்ப சூழலியற் காரணிகளுக்கு ஏற்ப இசைவாக்கம் பெற்று வந்தமையைக் காண்கின்றோம். இந்நிலையானது இற்றைக்கு 5000 வருடங்களுக்கு முன்னர் உலகின் குறிப்பிட்ட பிராந்தியங்களில் மனிதவாழ்வு சடுதியான மாற்றத்திற்குட்பட வேண்டி நேர்ந்தது. அதுவே **பழம்பெரும் புராதன நதிப்பள்ளத்தாக்குகளில் தோற்றம் பெற்ற நாகரிக வாழ்வு** என்ற அலகாகும். நாகரிக வாழ்வு முறை, ஆரம்பமானதிலிருந்து மெல்ல மெல்ல **குழும வாழ்க்கை** முறை கைவிடப்பட்டுச் சென்ற நிலையைக் காண்கின்றோம். பதிலாக பல குழுமங்களை, அதாவது **சிறப்புத் தேர்ச்சி அலகுகளை** ஒன்றிணைத்த வகையிலான **நகர சமுதாயக்கட்டமைப்பு வடிவமைப்பு முறை** ஒன்று உருவாயிற்று. அதன் பின்னணியிலேயே தொழில்நுட்ப – சுகாதார மற்றும் வானிலை – காலநிலை பற்றிய அனுபவக் கண்டுபிடிப்புக்கள், போக்குவரத்து – படகுப்பயணங்கள் ஆகிய செய்திகளைச் சேகரித்து பதிவு செய்து வைத்து பாதுகாத்து, அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்கும் ஒரு போக்கு உருவானது. **இங்கு மொழியுடன் இணைந்த எழுத்து வழக்கு, மக்கள் கூடும் ஒரு மன்று,**

குறிப்பிட்ட எண்ணிக்கையை உள்ளடக்கியதாக வாழும் ஒரு மக்கட்கூட்டத்தினைக் கொண்ட ஒரு நகரம், அந்நகரத்திற்குள்ளே அமைந்த ஆவணசாலைகள் அல்லது நூலகங்கள் என்பன வளர்ச்சி பெற்றன. இப் பின்னணியானது மனித வாழ்வு பற்றிய நேரடியான வரலாற்றுப் பதிவு முறையை – வரலாறு எழுதும் முறையை – ஆரம்பித்து வைக்கக் காரணமாகியது எனலாம். முதன்முதலாக நகர இலக்கியங்கள தோற்றுவிக்கப்பட்டன. கல்வெட்டுக்கள் பதியப்பட்டன, நாணயங்கள் (வெள்ளி, தங்கம், செப்பு, ஈயம் முதலானவை) பரிவர்த்தனைக்குட்படுத்தப்பட்டன. லிடியாவை (மாசிடோனியாவை) மையமாகக் கொண்ட மத்தியாசியப் பரப்பிலேயே முதன்முதலாக மேற்கூறப்பட்ட அபிவிருத்திகள் தோற்றுவிக்கப்பட்டன. முதலாவது பேரரசமுறையும் அங்கேயே தோற்றுவிக்கப்பட்டது என்றால் அது மிகையான கூற்றாக அமையாது.

எனவே மனித இனத்தின் வரலாற்றுப் பரப்பானது எழுத்து வழக்கு அறியப்பட்ட 5000 ஆண்டு கால எல்லையைவிட அதற்கும் முற்பட்ட 150 கோடி வருட அதி நீண்ட காலப் பரப்புக்குரியதாக அமைவதனை இங்கு அவதானிக்க முடிகிறது. இக்காலப் பரப்பிலேயே மனித வரலாற்றின் கூர்ப்பு நிகழ்ந்தேறியது. மிருகங்களுடன் மிருகங்களாகவும் (period of savagery), வேட்டையாடி அலைந்து திரியும் வாழ்வு முறையாகவும் (period of hunting and gathering), விலங்குகளை வளர்க்கும் மந்தையோட்டிகளாகவும் (period of hearding and grazing) உணவு உற்பத்தியை மேற்கொண்ட விவசாயிகளான ஒரு நிலையிலுமே (period of food producing or farming) அம்மனித சமூகத்தின் பரிணாமம நிகழ்ந்தேறியது. கருவிகளின் பயன்பாட்டு நோக்கில் பழங்கற்கால யுகம (Paleolithic Era), புதிய கற்கால யுகம (Neolithic Era), குறுணிக்கற் காலயுகம (Mesolithic Era), பெருங்கற்கால யுகம (Megalithic Era) என்றவோர் ஒழுங்கில் அம்மனித இனத்தின் கருவிப் பயன்பாடு அமைந்து கொண்டது. சமூகவியல் நோக்கில் விலங்கு வாழ்க்கை முறை, தாய்வழிச் சமூகம், அடிமைச் சமூகம், முதலாளித்துவ சமூகம், சோஸலிஸச் சமூகம் என மனித வாழ்வின் பரிணாமத்தை சமூகவியலாளர் வகுத்துக் கூறுவர். எனவே வரலாற்றின் பொருளானது மனித சமூகத்தின் பரிணாம நோக்கில் அதன் கருவிப் பாவனையின் வரன்முறையையோ அல்லது சமூகக் கட்டமைவின் வளர்ச்சி அடிப்படையிலோ அல்லது தேசியத்தின் அடையாளத்தின் அடிப்படையிலோ எழுதப்படுவதற்குரிய ஒரு பிரச்சினையாக (Problem) உருவாக்கப்பட்டது. இங்கு பிராந்தியங்கள் வரலாற்று வளர்ச்சியில் முனைப்பான அலகாக தோற்றுவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் கீழைத்தேயம, மேலைத்தேயம், லத்தீன்-அமெரிக்க நாடுகள், ஆபிரிக்க நாடுகள என்று பாகுபடுத்தும்போது வரலாற்றியலின் பொருள், நோக்கம், பரப்பு என்பன பெரிதும் முற்கூறப்பட்டவற்றிலிருந்து மாறுபாடடைவதனைக் காணலாம். கீழைத்தேய – மேலைத்தேயப் பாகுபாடானது மத உணர்வின்

அடிப்படையிலோ அல்லது நிற – காலனித்துவக் கோட்பாடுகளின் அடிப்படையிலோ எழுந்ததாக அமையலாம் அல்லது **ஆரியர் – ஆரியரல்லாதார்** என்ற சமூகப் பிறழ்வின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டதாக இருக்கலாம். **ஆண்டான் - அடிமை** என்ற கோட்பாடே இவ்வாறான சமூகப் பிறழ்விற்குரிய ஓர் அடிப்படைக் காரணமாக இருந்திருக்க முடியும். எனவே வரலாறானது அதன் பொருள் விளக்கத்தின் அடிப்படையிலும், அதன் பரப்பு, நோக்கம், அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையிலும் காலத்திற்குக் காலம் வெவ்வேறு வடிவங்களையும், கோட்பாடுகளையும் அடித்தளமாகக் கொண்டு இயக்கம் பெற்று வந்தமையைக் காணலாம். **இன ஒடுக்கல் மற்றும் இன அழிப்பிற்காகவும், மதவாதத்திற்காகவும், பிரதேச வாதத்திற்காகவும், சர்வதேசியத்திற்காகவும்** (Pan – Nationalism) வரலாற்று எழுத்தியல் முறை இன்று பயன்படுத்தப் படுவதனைக் காண முடிகின்றது. எனவே வரலாறு பற்றி நாம் கொள்ளும் பொருளும், பரப்பும் நோக்க விதானமும் அவ்வப் பிராந்திய அரசியல் அலகுகளால் தீர்மானிக்கப்படுவதனை மறந்துவிடலாகாது. இவை எல்லாவற்றையும் விஞ்சி அப்பழுக்கற்ற நிலையில் ஓர் ஒழுக்கமாக அணுகப்படும் போதே வரலாறானது காலத்தினையும் விஞ்சி நிற்கின்றது. கீழைத்தேயத்தில் அவ்வாறான ஒரு வரலாற்றாசிரியர் **(தூஷிடைட்ஸ் போன்று)** உருவாகாமல் இருப்பதற்குரிய அடிப்படையும் அதுவாகின்றது. **வரலாறு பற்றிய ஓர் உண்மையான - தெளிந்த தரிசனம், வரலாற்று ஆய்வு முறைமை பற்றிய ஒரு திண்ணியமான அறிவியல் பார்வை, சுய விருப்புச் சலனங்களற்ற புறநிலை நோக்கு, சமூகவியல் பற்றிய ஓர் ஆழமான கண்ணோட்டம், பிரதேச வேறுபாடின்மை, பல்பக்கப் பண்பாட்டுத்தொகுப்பு என்பன ஒருங்கே கைவரப்பெற்ற நிலையில் ஒரு வரலாற்றாசிரியன் இலங்கையில் உருவாக வேண்டுமெனில் இங்குள்ள பௌத்த நிக்காயங்களை சமகால அரசியலிலிருந்து விடுவிப்பதோடு, அவர்களது மகாவம்சகாலப்பாணிச் சிந்தனைக்கும் முற்றுப்புள்ளியிடல் வேண்டும்.**

'வரலாறும் இனமும் தொடர்பான பிரச்சினைகளானவை உலகெங்கிலும் புதிய நாடுகளைத் தோற்றுவிப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளன. அவை அனைத்துலகிலும் சமகால அரசியலில் ஒரு பிரதான இடத்தைப் பிடித்துள்ளதோடு, அநேக நிலைமைகளில் தேசியப் பிரச்சினையின் பிரிக்க முடியாத அம்சமாகவும் மாறியுள்ளன.' தென்னாசியாவைப் பொறுத்த வரையிலும் இக்கூற்றானது மிகப் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது எனலாம். சிறப்பாக இலங்கை வரலாற்றைப் பொறுத்த வரையில் வரலாற்று எழுத்தியலானது மிக மிகப் பாரபட்சமான முறையில் பெரும்பான்மை இனத்தின் இருப்பினை நியாயப்படுத்தும் நோக்கிலேயே வரையப்பட்டு வரும் போக்கினை மிகவும் எளிதாகக் காணமுடிகிறது. பாலர் பாடம் முதல் பல்கலைக்கழகப் போதனைவரையில் வேதனையான வகையில் இன முரண்பாட்டுக்குரிய வரலாற்றுப் பாடவிதானம் அமைக்கப்பட்டிருப்பதனை இலங்கைத் தீவில் காணமுடிகிறது. வளர்ந்துவரும்

இனப்பகைமைக்கான அடிப்படைகளை வேரறுக்கத்தக்க வகையில் வரலாற்றுப் போதனையும், பாடவிதானமும் மாற்றியமைக்கப்படுதற்குரிய சூழ்நிலை இன்னும் இங்கு கைகூடிவரவில்லை. **இங்கு பரீட்சை – பாடவிதானத்துக்குரிய வரலாற்று விடயங்கள் வேறாகவும், உயர்கல்வி மட்டத்தில் வரலாற்று ஆராய்ச்சிக் குரிய பொருளடக்கம் இன்னொன்றாகவும் இருந்து கொண்டிருப்பதனையே காண்கின்றோம். ஆகவே இருவகையான வரலாற்று எழுத்தியல் மரபு அல்லது போதனை மரபு இத்தீவில் வளர்ச்சிபெற்று வருவதனைக் காணலாம். ஒன்று சமகால அரசியல் இலக்கினை எய்துவதற்கான வரலாற்றுப் போதனை, மற்றையது அறிவியல் நோக்கத்திற்குப் பயன் படத்தக்க வரலாற்றுப் பாடவிதான அமைப்பு என்பனவாகும். இவ்விரு மரபுகளின் வளர்ச்சியின் அறுவடையாகவே இனப் பகைமையின் உச்ச நிலையை அனுபவிக்க வேண்டிய முறைக்குள் இலங்கையர் தொடர்ச்சியாக உட்படுத்தப்பட்டுள்ளனர்.**

இலங்கைத்தீவின் வரலாற்று மரபு பற்றிய எழுத்துக்களும் அணுகு முறைகளும் இந்திய வரலாற்று அணுகுமுறையில் ஏற்பட்டிருந்த வளர்ச்சியைப் போலன்றி மிகவும் தனித்துவமாகவே அமைந்து கொண்டது. சோவியத் (ரஷ்யா) வரலாற்று ஆசிரியர்களினால் இந்திய வரலாறு நோக்கப்பட்டமை போன்றோ அல்லது **K.M. பணிக்கர், D.D. கோசாம்பி, றோமிலா தாப்பர்** ஆகியோரால் இந்தியப் பெருநில சமூக பண்பாட்டு வரலாறு எழுதப்பட்டமையை ஒத்தவகையிலோ இலங்கைத் தீவின் வரலாறு ஒப்புநோக்கி, சீர்தூக்கி ஆராய்ந்து எழுதப்படுவதற்கு இன்னும் காலம் கைகூடி வரவில்லை என்பதே யதார்த்தமாகும்.

'இவ்வாறு உலகின் ஏனைய இடங்களைப்போன்று எமது நாட்டுப் பின்னணியிலும் வரலாற்றுக் கருத்துக்கள், இனவேறுபாடுகள் பற்றிய சுயஉணர்வானது தேசியப் பிரச்சினையினதும் இனவாத இழுபறிகள், பிணக்குகள் ஆகியவற்றின் அன்றாடச் சுற்றோட்டத்தினதும் மிகத் தெளிவான அடிப்படை அம்சமாக அமைந்துள்ளது. எனவே வரலாற்றியலாளர், சமூகவியலாளர், இது தொடர்பான வேறுதுறைகளில் பணிபுரிவோர் யாவரும் இப்பிரச்சினைகளில் ஏதோ ஒருவகையில் தம்மை ஈடுபடுத்துமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இக்கருத்துகளின் உயிர் மையமாக உள்ள சில கட்டுக்கதைகளையும், திரிபுரைகளையும் அம்பலப்படுத்துகின்ற விசேட பொறுப்பும் இவர்களுக்கு உண்டு. அத்தகைய முயற்சிகள் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் நேர்முகமாகப் பங்காற்றாதிருக்கலாம்; ஆனால் வகுப்புவாதத்தின் பண்பாட்டுக் கட்டமைப்புகளென நாம் குறிப்பிடக்கூடியவற்றை நிர்மூலமாக்குவதற்கும் வரலாறு, **இனம்** ஆகியவற்றின் நவீன விஞ்ஞான உணர்வை சிறப்பாக இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டுணர்வை உருவாக்குவதற்கும் அவை துணைபுரியலாம்.'

"இனம்" என்னும் பதம் **'ஓர் இனக்குழு'** என்பதையே கருதுவதனால் அன்றாட உரையாடல்களிலும், இனக்கலவரங்களை விபரிக்கும்போதும் **'இனம்'**

என்னும் சொல்லைத் தெளிவான உயிரியல் கருத்துகளுடன் பயன்படுத்துவது பொதுவானதொரு தவறாகும். **'இனக்குழு என்பதனால் கருதப்படுவது யாதெனில் வரலாற்று ரீதியாக வரையறுக்கப்பட்ட சுயவுணர்வுள்ள ஒரு சமூகமாகும். அதற்குப் பெரும்பாலும் மொழியும், சமயமும் முக்கிய அமிசங்களாயமைந்த சிறப்பான வரலாறும் பண்பாடும் உண்டு. அவ்வாறே, அதற்குத் திட்டவட்டமான பிரதேசப் பிணைப்புகள் சென்ற காலத்திலும், நிகழ்காலத்திலும் இருந்து வந்துள்ளன அல்லது சென்ற காலத்திலாயினும் இருந்திருக்க வேண்டும்.'**

'இந்த அவதானிப்புக்களை இன்றைய எமது உரையாடலுக்குரிய விடயத்தோடு தொடர்புறுத்தி நவீன காலத்தில் எமது சொந்த நாட்டிலே இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளுடன் சம்பந்தமுடைய அடிப்படையான இரு கருத்துக்களை எமது கவனத்திற்கு எடுப்போம். முதலாவது **'ஆரியர்', 'திராவிடர்'** என்னும் எண்ணக்கருக்கள் இரண்டாவது இன்று இலங்கையில் வாழுகின்ற **பல்வேறு 'இனங்கள'** பற்றிய பிரச்சினை. **ஆரியரும், திராவிடரும் இரு வேறு இனங்கள** என்னும் பொதுவான எண்ணம் தவறானதென அறிஞர்களால் நிராகரிக்கப் பட்டுள்ளது. ஆயினும் அது பொதுமக்கள் உள்ளத்திலும், அறிஞர்களின் சிந்தனையிலும் ஆழமாகப் பதிந்துள்ளதுடன் அது தொடர்ந்தும் பரவலாகச் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. இந்த விடயத்தின் சாராம்சம் யாதெனில் **'ஆரியன்'** என்னும் பதம், **ஒரு மொழியியல் தோற்றப்பாட்டை, இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பத்தை,** இந்திய வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட அமிசத்தை அதாவது இந்திய வரலாற்றையும், பண்பாட்டையும் உருவாக்குவதில் **வேத ஆரியர்களின் பங்கை,** இந்து பௌத்த சிந்தனையில் **'ஆரிய'** என்னும் எண்ணக்கருவைக் குறிக்கிறதென்பதாம். இப்பதத்தின் பூரணமானதும் சரியானதுமான கருத்து **ஏ.எல். பஸாம், றோமிலோ தாப்பர்** ஆகியோரின் நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட விரிவான பகுதிகளின்மூலம் சிறப்பாகத் தெளிவாக்கப்பட்டுள்ளது.'

"ஆரியரும் திராவிடரும் பற்றிப் பேசும்போது என்ன கருதுகிறோம் என்பது பற்றி நாம் உறுதியாக இருத்தல் வேண்டும். இந்தியப் பின்னணியிலே 'ஆரியர்' என்னும் பதம் மூல முதலாக கி.மு. இரண்டாயிரம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்தியாவை வந்தடைந்த உறவினரைக் கொண்ட குழுவின் பெயராயிருந்தது. இவர்களுள் சிலர் இருக்கவேதப் பாடல்களை யாத்துள்ளனர். இக்காலத்தில் அப்பதம் ஏறக்குறைய இனவாதக் கருத்தைக் கொண்டிருந்தது. பின்னர் இப்பதம் ஆரம்ப இந்துமதத்தோடு இணைந்த வகுப்புகளையும், ஆச்சிர தர்மத்தையும் (வர்ணாச்சிரம தர்மம்) சிறப்பாகப் பின்பற்றி ஒழுகிய ஒருவனைக் குறித்தது. அவர் உபநயனச் சடங்கை (பூணூல் அணியும் விழாவை)ப் பூர்த்திசெய்த பிராமண, சைத்திரிய அல்லது வைசிய குலத்தைச் சேர்ந்தவராவர். கௌடிலிய அர்த்த சாத்திரம் (13) ஆகக்குறைந்தது ஒரு செய்யுளிலாயினும், சிறப்பாக மிகவுயர்ந்த சூத்திரனையும் இப்பதத்தினுள் அடங்கியுள்ளது. பௌத்தர்கள்

ஆரிய என்னும் பதத்தை விரிவான கருத்தில் பயன்படுத்தினர். அவர்களுடைய இலக்கியங்களில் இப்பதம் பெரும்பாலும் **'அதி உத்தம'** அல்லது **'மேன்மை மிக்க'** என்ற கருத்தையே குறித்தது. உதாரணமாக **சத்தாரி ஆரிய சச்சானி** அதாவது **நான்கு 'மேன்மையான உண்மைகள'** அவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வழக்காற்றுக்கு இணங்க தமிழ்ப் பிராமணன் ஒரு ஆரியனே. மேலும் பொதுவாகத் தமிழில் அநேக பெயர்களுடன் இணைத்து வழங்கப்படுகின்ற **'ஐயர்'** என்னும் கௌரவச் சொல் உண்மையில் ஆரிய என்னும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து வந்ததாகும்."

'புராதன காலத்தில் தென்னிந்தியாவில் தெளிவின்றி வரையறுக்கப்பட்ட ஒரு பிரதேசம் வடக்கிலே **திராவிடம்** என அறியப்பட்டிருந்தது. **திராவிடம்** என்னும் இச்சொல் நம்பகமாக **தமிழ்** என்னும் சொல்லின் திரிந்த வடிவமாகும். 19-ம் நூற்றாண்டு மொழியியலாளரான **கால்டுவெல** என்பவரால் இச்சொல் இந்தியத் தீபகற்பத்தில் பேசப்பட்டுவந்த **மொழிக்குடும்பத்திற்கு** இடப்பட்டது. **தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்** என்பன இம்மொழிக் குடும்பத்தில் அடங்கும் பிரதான மொழிகளாகும். இனவியலாளரான **றிஸ்வே** என்பவர் இப்பதத்தைக் கடன்பெற்று இந்தியாவின் பல இடங்களில் தாம் கண்ட, குறிப்பாக தீபகற்பத்தில் மிகச் செறிந்துள்ள குறிப்பிட்டதொரு இனவகையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தினார். பின்னர் இனவியலாளரும் மானிடவியலாளரும் அறிவுசார் வெளியீடுகளில் இப்பதத்தைப் பெரும்பாலும் பயன்படுத்துவதில்லை. உண்மையில் **விஞ்ஞான வழக்காற்றில** திராவிட இனமென்று ஒன்றுமில்லை. ஆரிய இனமென்று ஒன்றுமில்லை: ஆனால் இவ்விரு பதங்களும் மொழியியல் அல்லது ஒரேவிடத்து பண்பாட்டு விடயங்களில் மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன. இப்பிரச்சினையைப் புதிதாக நோக்குவதற்கு ஆதிவரலாற்றுக்கால அபிவிருத்திகள், வரலாற்றின் தொடக்கம் என்பன பற்றிய எமது அறிவு, ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு மாத்திரமன்றிப் புரிந்துகொள்ளலின் ஆரம்ப நிலையைத்தானும் எய்துவதற்கே இன்னும் போதமானதாயில்லை என்னும் உண்மையிலிருந்தே ஆரம்பித்தல் வேண்டும். **எமது இன்றைய கருத்துக்கள் இலக்கிய மரபுகளிலும், பிராமிக் கல்வெட்டுகளில் பொறித்துள்ள ஆதிச் சிங்களமொழி கூறுகின்ற மொழியியற் சான்றுகளிலுமே முற்றிலும் தங்கியுள்ளது.** இன்று பயன்படுத்தப்படுகின்ற ஏனைய எல்லாவகைச் சான்றுகளும் ஐயத்துக்கிடமானவை. **தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட கால, ஆதிவரலாற்றுக்கால பொருள் மீதிகளைக் கண்டுபிடித்தல், ஏற்றுக் கொள்ளத்தக்க நவீன முறைகளினால் இலக்கிய மொழியியல், மானிட இனவியற் சான்றுகளை மேலும் ஆராய்தல், இலங்கை, இந்திய தென்கிழக்காசிய சான்றுகள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வுகள் முதலியவை மாத்திரமே உண்மையான வரலாற்று அபிவிருத்திகளை நாம் நன்கு புரிந்துகொள்வதற்கு நம்மை வழிநடத்திச் செல்லக்கூடியனவாகும்.'**

'இன்று, கற்றறிந்தோர் கையாளத் தொடங்கியுள்ள **புதிய ஆய்வு** முறைகளைப பற்றிச் சுருக்கமாக ஆராய்வது பயனுள்ளது. ஏனெனில் வரலாற்று

நம்பிக்கையின் இன்றைய கட்டமைப்புக்கு நாம் சவால்விடுவது நீதியானதென அவை காட்டுகின்றன. நாம் ஏற்கனவே வரலாற்றுக்கு முற்பட்ட நிலைமைகளின் விரிவான எல்லைக்கோடுகளைத் தொட்டுக் காட்டியுள்ளோம். மேலும், இடைக் கற்கால வேடர்-நாடோடிகளிற் சிலராவது புராதன உணவு உற்பத்தி முறைகளைக் கையாளத் தொடங்கினர் என்னும் எமது முன்னைய ஐயப்பாட்டை மிக அண்மைக்கால அகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன. இலங்கையில் **இடைக் கற்கால அகழ்வாய்வு** நடாத்தப்பட்ட முக்கியமான இடமொன்றில் கண்டெடுக்கப்பட்ட குடியிருப்புச் சிதைபொருள்களுள் அடங்கியிருந்த உணவுத் தானியங்களும், பெரும்பாலும வரலாற்றுக்கு முற்பட்ட காலச் **சேனைப் பயிர் செய்கையின** விளைவாகச் சில பிரதேசங்களின் இயற்கைத் தாவர அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களும் இதை மேலும் உறுதிப் படுத்தியுள்ளன. இத்தீவின் வரலாற்றுக்கு முற்பட்டகால மக்கள் மத்தியில் அலைந்துதிரிந்து வேட்டையாடும் நிலையிலிருந்து நிலையான உற்பத்தி முறைக்கு மாறியமை ஆரம்ப காலத்திலாயினும் புலம்பெயர்வுத் தலையீடின்றி சுதந்திரமாக நடைபெற்றிருக்கச் சாத்தியம் உண்டென இவை சுட்டிக்காட்டுகின்றன.'

'இன்னொரு ஆய்வுமுறை பலாங்கொடை மனிதனின் எழும்புக்கூட்டு மீதிகளுடன் தொடர்புடையது. இந்த எழும்புக்கூட்டு மீதிகள் ஏறக்குறைய கி.மு. 6ஆம் அல்லது 5ஆம் ஆயிரம் ஆண்டில் பலாங்கொடை மாவட்டத்தில் முதன் முதலாக வாழ்ந்த குழுவினருடையது. இவற்றை வரலாற்றுக்கால, சமகால மக்களின் மிகப் பிந்திய எழும்புக்கூடுகளுடன் ஒப்பிட்டுச் செய்யப்பட்ட பகுப்பாய்வானது வரலாற்றுக்கு முற்பட்டகால மக்களுக்கும், வரலாற்றுக்கால மக்களுக்குமிடையே **'ஓர் உயிரியல் தொடர்பும்** உண்டெனக் காட்டியுள்ளது. குருதிக் குழும, பரம்பரைப் பண்பியல் ஆய்வுகளும் பரம்பரைப் பண்பியல் அளவுமுறைக்கிணங்க இலங்கையர், தென்னிந்தியாவிற்கும், தென்கிழக்காசியா விற்கும் இடையே யாதாயினுமொரு இடத்தில், இரண்டாவதிலும் பார்க்க முதலாவதின் அண்மையிலிருப்பர், வேறு வார்த்தைகளிற் கூறின், அவர்கள் இலங்கைத் தீவின் புவியியல் நிலையத்துக்கு மிகப் பொருத்தமான ஓர் இனக்கலப்பைக் காட்டுகின்றனரெனச் சுட்டிக்காட்டியுள்ளன. ஆதி இலங்கையரின் புவியியல் இன மூலங்கள் எதுவாயிருப்பினும் அவர்கள் புலம்பெயர்ந்த ஓரினக் குழுவினரல்லர் என்று வரலாற்று நிகழ்வுகள்தாமே சான்று பகர்கின்றன. மனிதக் குடியிருப்புப்பற்றிய நீண்டதொரு வரலாற்றைக் கொண்ட இலங்கையின் இத்தகைய மக்கள் குடியமருகையின் சிக்கலான செயன்முறையைக் கவனத்திற் கொண்டு நோக்கும்போது, இலங்கை மக்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் ஆதி வரலாற்றுக் காலத்திலும் இன்றுபோல் பெரும்பாலும் **பல்லின இயல்பினராயிருந்தனரென** நம்ப இடமுண்டு.'

'இலங்கையில் இன உருவாக்க வரலாற்றை இவ்வாறு நோக்கும்போது அது **ஒரு சிக்கலான (பல்லின) செயன்முறை** என்பதைக் காணமுடியும். இச்செயன் முறையிலே பல மூலக்கூறுகள் அடங்கியுள்ளன. முதலாவது

இலங்கையின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சியுடன் வரலாற்றுக்கு முற்பட்ட, ஆதிவரலாற்றுக்கால பல்வேறு அபிவிருத்திகளின் கூட்டிணைவானது **'சிங்களவர்'** என்னும் பெரியதொரு இனக்குழுவை உருவாக்கியமை, இரண்டாவது இவ் இனக்குழு உருவான அதேகாலத்தில் அல்லது அதற்குச் சற்றுப் பிந்திய வரலாற்றுக் காலங்களில் ஏனைய பெரிதும் சிறிதுமான இனக்குழுக்கள் முகிழ்ந்தமை, மூன்றாவதாக நவீன யுகத்திலே வரலாற்று ரீதியாகச் சிக்கலான தோற்றங்களையுடைய இனக்குழுக்கள், சிக்கல் குறைந்த ஆனால் இன்னும் ஆரம்ப நிலையிலுள்ள **'இலங்கைத் தேசிய' மாக ஒருங்கிணைதல**, நவீன இலங்கைச் சமூகத்திலும் பண்பாட்டிலும் மரபுமுறையான இன வேறுபடுத்துகையும், இனக்குழுக்களுக்கிடையே பிணக்குகளும், முரண்பாடுகளும் தொடர்ந்து நிலவியபோதும, பண்பாட்டுக் கோலங்களிலே பிரதேசத்துக்குப் பிரதேசம், குழுவுக்குக் குழு, இனத் தடைகளையும் மீறி பௌதிக ஆத்மீகத்துறைகள் இரண்டையும் உள்ளடக்கிய ஒரு தெளிவான ஒப்புமை காணப்படுகின்றது. தீவிர இனப் பிணக்குகளும், இன, சாதிப் போட்டா போட்டிகளும் ஆதிக்கம் பெற்றுள்ள ஒரு காலத்திலே நாம் வாழுகின்றபோதும் 21ஆம் நூற்றாண்டின் பிற்கூற்றிலே இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கையில் **தற்போது நிலைநிறுத்தப்பட்டுள்ள ஒருமைப்பாடுகள்** எதிர்காலத்துக்கான ஒரு பாதையைத் தெளிவாகக் காட்டுகின்றன. **கட்டுக்கதை களையும் திரிபுரைகளையும் புறந்தள்ளி, சகலவித இனவாதக் கண்ணோட்டத்திலிருந்தும் விடுபட்டு இலங்கை வரலாற்றைக் கற்பதன் மூலம் ஐக்கியம் கொண்ட நவீன பல்லினச் சமூகத்தை உருவாக்குகின்ற வரலாற்றுச் செயன்முறைக்குப் பெரும் பங்களிப்புச் செய்ய முடியும்.'**

புராதன இலங்கையின் வரலாற்று வளர்ச்சி மரபுகள் பற்றிய அணுகு முறைகள் இன்னும் **தலைநகர்கள்** என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்த **அநுராதபுரம், பொலனறுவை, தம்பதேனியா, குருணாகல், யாப்பகூவ,கம்பளை, கண்டி, கோட்டை** முதலானவற்றின் பெயர்களின் அடிப்படையிலேயே வரலாற்றுக் காலப்பகுப்புக்கு உட்படுத்தப்பட்ட வகையில் நோக்கப்படுவதைக் காணலாம். இது இலங்கையின் தென்மேற்குத்திசை நோக்கிய அதிகாரமைய நகர்ச்சியின் பின்னணியில் எழுதப்பட்ட **பல்லினத்தன்மைக்கு முரணான** வரலாறாக உள்ளது. இம்முறையானது ஓரினத்துக்குரிய பிரதான அரசகுடும்பப் பாரம்பரியத் தொடர்ச்சி, தொடர்ச்சியான காலவரன்முறை, ஓரினச் சமூகத்தின் அதிகாரத் தொடர்ச்சி போன்றவற்றை அறிவதற்கு ஓரளவிற்கு உதவினாலும் கூட, **தீவடங்கலிலுமான தொடர்ச்சியான பல்லினச் சமூக வரலாற்றுப் பண்பாட்டுத் தொடர்புகள** பற்றி அறிவதற்கோ அல்லது பன்மத – பல சமூகங்களுக்கான கட்டமைப்புக்கு அடிப்படையாக இருந்திருக்கக்கூடிய அடிமட்ட உற்பத்தியுறவு முகாமை முறைகளையும் **பிறிதொரு அரசகுடும்பத்திற்குரிய குழுமத்தினரின** வடகீழ்திசை நோக்கிய அதிகாரமையக்கட்டு முறைகளையும், அவற்றின் பரிணாம வளர்ச்சி நிலைகளையும் தெளிவுபடுத்தி காட்டுவதற்குரிய உகந்த சட்டக

வரைபுமுறை என்றோ கூறமுடியாது. தலைநகர்களை அடிப்படையாகக் கொண்ட மையப்படுத்தப்பட்ட வரலாற்று நோக்கமானது பிராந்தியங்களினது வரலாற்றுப் பங்களிப்புக்களையும், சமூக-பொருளாதார வரலாற்றில் அவை கொண்டிருந்திருக்கக்கூடிய தொடர்புகளையும் மூடி மறைத்துவிடுவதாகவே உள்ளது. ஒரு நாட்டின் நிலப்பரப்பிற்குள் ஒரே சீராய் - சம காலத்தில் மையநாட்டப் பரப்பிலும், மைய நீக்கப்பரப்பிலும் (விளிம்புப் பகுதியிலும்) சமூக – பொருளாதார வாழ்வியக்கம் ஒத்த வளர்ச்சியுடையதாகவும், சீரானதாகவும் இருந்திருக்கும் எனக் கூறமுடியாது. அமைவிடமும், புவியியற் கூறுகளும், கால நிலையுமே அக்குறிப்பிட்ட சீரற்ற சமூக அசைவியக்கத்தினை நிர்ணயித்திருக்கும் காரணிகளாக அமையும்.

இந்திய உபகண்டப்பரப்பின் வரலாற்று வளர்ச்சியை உதாரணமாக எடுத்து நோக்கும்போது பிராந்தியங்களினதும், மையங்களினதும் வரலாற்று வளர்ச்சியானது சமச்சீரற்ற முறையில் இருந்தமையைத் தெளிவாகக் கண்டுகொள்ள முடிகிறது. வடமேற்கு இந்தியாவில் இந்துநதிப் பள்ளத்தாக்கில் சிந்துவெளி நாகரிகம் உச்ச நிலையில் வளர்ச்சியடைந்திருந்தபொழுது (கி.மு.3500) தக்கணத்திலும், தென்னிந்தியாவிலும் **செம்புப் பண்பாடு** (Copper hoard Culture) நிலவிக் கொண்டிருந்தமையைக் காணும்போது, **இலங்கைத் தீவிலும் வரலாற்று வளர்ச்சியானது அதன் மையப் பரப்பிலும், கரையோரப் பகுதியிலும் சமச்சீரற்றதாக இருந்திருக்க வேண்டிய தன்மையை உணர முடிகிறது.** அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வின் முடிபுகள் தென்னிந்திய - ஈழப் பண்பாட்டுத் தொடர்புகள், **குறிப்பாக மன்னார்க் குடா உள்ளிட்ட கரையோரப் பிராந்தியங்களின் வரலாற்று வளர்ச்சியானது தீவுப் பரப்பின் உட்பரப்பில் ஏற்பட்டிருந்த வளர்ச்சி நிலைக்கு முற்பட்டது** என்பதனையே எடுத்துக் காட்டுகின்றன. மன்னார்க் குடாவில் விளைந்த முத்துக்களை சிந்துவெளி மாந்தர் விரும்பியணிந்து உள்ளமைக்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளமையை அவதானிக்கும்போது அவ்வளர்ச்சி நிலையை உறுதிப்படுத்த முடிகிறது. **இலங்கைத் தீவின் சமூக – பண்பாட்டு உருவாக்க மையமானது மாந்தை உள்ளிட்ட மன்னார்க் குடாப் பரப்பிலிருந்தே உருவாகி மல்வத்து ஓயா வழியாக தீவின் உட்பரப்பினைச் சென்றடைந்திருந்தது.**

'இலங்கைத் தீவிற்குள் பிராந்திய அடிப்படையிலான வரலாற்று எழுத்து மரபுகளை உருவாக்கி, அவற்றின் அடிப்படையில் சமூக – பொருளாதாரக் கட்டமைவுகளுக்குரிய தரவுகளை வெளிப்படுத்துவதன் மூலமே ஒரு பொதுமையான வரலாற்று மரபின் வளர்ச்சிப் போக்கினை இனம் காண காணமுடியும். இப்பெறுபேற்றினை அடைந்து கொள்வதற்குரிய பிராந்திய வரலாற்று அலகுகளை எவ்வாறு நிர்ணயம் செய்து கொள்வது என்றவோர் அடிப்படையான பிரச்சினை எழுவதும் இயல்பே. தற்போதைய நிலையில் உள்ள பண்பாட்டுப் பகைப்புலத்தினை அடிப்படையாகக் கொண்டும் அப் பிராந்திய அலகுகளை

நிர்ணயம் செய்துகொண்டும் வரலாற்று மரபுகளைப் மீள்பதிவு செய்யலாம். அவ்வாறு பதிவு செய்யும்போது ஓர் அடிப்படையான பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டி நேரிடும். **அதாவது உதாரணமாக யூப்பிரட்டீஸ், ரைகிறிஸ், நதிப்படுக்கைகளில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த சுமேரிய நாகரிகத்தின் மையம் இன்று அரபுப் பண்பாட்டின் பின்புலமாக விளங்குவதனையொத்த வகையில், இலங்கையிலும் பிராந்திய அலகுகளின் தற்போதைய நிலையும் காணப்படக்கூடும்.** தற்போதைய பாகிஸ்தானிய நாடு முன்னைய இந்துப் (சிந்துவெளிப்) பண்பாட்டுக்குரிய பிராந்தியமாக விளங்கியமையைப் போன்ற – ஒத்த – பிரச்சினைகளையும் இலங்கைத் தீவிற்குள் பிராந்திய அலகுகளின் வரலாற்று மரபுகளைப் பதிவு செய்யும்போது எதிர்கொள்ள நேரிடும். **தக்கணத்திலும், தென்னிந்தியப் பரப்பிலும் ஏற்பட்ட இடையீடற்ற – தொடர்ச்சியான வரலாற்று மரபினையொத்த வகையில் இலங்கையில் பண்பாட்டு வளர்ச்சி ஏற்பட்டிருக்கவில்லை என்பதே யதார்த்தம்.உதாரணமாகக் குறிப்பிடுவதாயின் யாழ்ப்பாணக்குடாநாட்டின் வரலாற்று, பண்பாட்டு முகிழ்ச்சியும் வளர்ச்சியும் இலங்கையின் பிரதான நிலப்பரப்பின் வளர்ச்சியிலிருந்தும், தொடர்ச்சியிலுருந்தும் வேறுபட்டமைந்திருந்தது என்பது குறிப்படத்தக்கது.** புராதன மனிதன் இலங்கையில் தனது எல்லாப் படிநிலைகளிலும் வாழ்ந்திருந்தானா என்ற வினாவிற்கு திட்டவட்டமாகப் பதிலளிக்க முடியாதவொரு சூழ்நிலை இருப்பது போன்றே, இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் உள்ளிட்ட மையப்பரப்பும் சமகாலத்தில் பண்பாட்டு வளர்ச்சியை பெற்றிருந்தானா என்றும் ஐயத்திற்கிடமாகவுள்ளது. இக் காரணிகளினாலேயே இலங்கையின் பண்பாட்டு, பொருளாதாரவளர்ச்சியை வரலாற்று ரீதியாக ஆராயும்பொழுது அவற்றின் பண்பாட்டுத் தொடர்ச்சியையும், அவற்றின் இடையீடு அல்லது தடங்கல்களையும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய பொறுப்பு இலங்கை வரலாற்றாசிரியர்க்குண்டு.'

தற்போது உள்ள நிலையில் இலங்கைத் தீவின் வரலாற்று மரபின் பரிமாணத்தினைப் பொறுத்தவரையில் மதச்சார்புடைய மையங்களை மட்டுமே நிரைப்படுத்தி வகுக்கப்பட்டு எழுதப்பட்ட வரலாற்று இலக்கியங்களில் காணமுடிகிறது. இதனால் இலங்கையின் வரலாற்று மரபின் வளர்ச்சியை மதவரலாறாகவே காணமுடிகிறது. தென்னாசியாவில் பாதுகாக்கப்பட்டுள்ளவை யாவும் இன்றைய நிலையில் பெருமளவிற்கு மதச்சார்பு உடையவையாகவே காணப்படுவதனை ஒத்த வகையில் இலங்கைத் தீவின் வரலாற்று மரபும், வரலாற்று இலக்கியங்களும் சமயசார்புடையனவாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இதனால் இலங்கையின் வரலாற்றுப் பரிணாமத்தில் இருந்திருக்கக்கூடிய சமூக உற்பத்தியுறவுகள் பற்றிய தரவுகள், உலோகாயுத உணர்வுகளைப் பிரதிபலித்திருக்கக் கூடிய(material culture) வர்த்தகப் பட்டுவாடா நடவடிக்கைகள் - போர் ஒழுங்குகள்- போக்குவரத்துத் தொடர்புகள் - சமூக

மேம்பாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றிய தரவுகள் முதலானவை அவ்வகையான இலக்கியங்களில் வெளிப்படையாக பொறிக்கப் பட்டிருப்பதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை. எனவே இலங்கையின் வரலாற்று ஆய்வில் சமூக, பொருளாதார நிறுவனங்களின் கட்டமைப்புக்களை ஆராயமுற்படும்போது தொல்லியற் சான்றுகளையே பெருமளவிற்குப் பயன்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது. அவையே சமூக இயங்கியலின் மூலங்களை உள்ளவாறு தரக்கூடிய முறைமையையும் கொண்டுள்ளன.

இலங்கையின் வரலாற்று எழுத்தியலுக்கு தொல்லியற்சான்றுகளின் தேவையும் பங்கும் முறையே அவசியமானதும், தனித்துவமானதுமாக உணரப்பட்டுள்ளது. இவையே இலங்கை வரலாறு தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ள ஐதீகங்களையும், புராண இதிகாசக் கருத்துருவங்களையும் தர்க்க ரீதியாக நோக்கிக் கொள்வதற்குரிய அடிப்படைகளாகின்றன. மதச்சார்புடைய இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளவாறான இலங்கை வரலாற்றுத் தொடக்கமும், அதிலிருந்து தொடர்ச்சியாக நிகழ்ந்ததாக எடுத்துக் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் தொடர்பான கதைகளையும், விளக்கங்களையும் நுணுகி ஆராய்வதற்கு தொல்லியற் சான்றாதாரங்களே முக்கிய மூலங்களாகின்றன. இவற்றுள் கி.மு.6ஆம் நூற்றாண்டிலிருந்து பொறிக்கப்பட்டுக் கிடைத்த சாசனச் சான்றுகளே மிகவும் நம்பகரமான தகவல்களை அரசியல், சமூகம், சமயநிலை, பொருளாதார நிறுவனங்கள் தொடர்பாக எடுத்து வழங்குகின்றன. கி.மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13ஆம் நூற்றாண்டின் இறுதிவரைக்கும் தொடர்ச்சியான வகையில் கிடைத்துள்ள சாசனச் சான்றுகளே இலங்கைக்குள் முகிழ்ந்த சமூகத் தளத்தினைப் பற்றியும் **நிலம்-உற்பத்தி அலகுகள் - உற்பத்தியுறவுகள** போன்றவற்றை நிரைப்படுத்துவதற்குரிய ஆதாரங்களாகின்றன. புராதன இலங்கையின் சமூகவியல் பற்றிய ஆரம்பக் குறிப்புக்களை இச்சாசன மூலங்களே வழங்குகின்றன என்றால் அது மிகையாகாது.

'வரலாற்றுக் காலத்தின் (கி.மு. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 1ஆம் நூற்றாண்டு வரை) அதி ஆரம்பக் கூற்றிலே ஆதிவரலாற்றிலிருந்து வரலாற்றுக் காலத்துக்கு நிகழ்ந்த பாய்ச்சல் **பிராமிக் கல்வெட்டுகளின் தோற்றத்தினால** எல்லையிடப்படுகிறது. இவை ஒருபுறத்தில் ஆதிசிங்கள மொழியின் பரவல், பௌத்த மதத்தின் எழுச்சி போன்ற பண்பாட்டுத் தோற்றப்பாட்டுடனும் தொடர்புற்றுள்ளன. மறுபுறத்தில் சமூக பொருளாதார தொழில்நுட்ப விருத்திகளுடனும் அதாவது ஈர நெற்பயிர்ச் செய்கை, குள நீர்ப்பாசனம் ஆகியவற்றின் விரிவான புத்தமைப்புடனும் சமூக வேறுபாட்டின் பல்வேறு வடிவங்களின் தோற்றத்துடனும் தொடர்புற்றுள்ளன. பெரும்பான்மையான கல்வெட்டுக்கள் புதிதாகத் தோன்றிய உயர் குழாத்தின் வேலைபோல் தோன்றுகிறது. இந்த உயர் குழாம் செல்வத்தின் உரிமையாளராகவும், கட்டுப் பாட்டாளராகவும் இருந்தனர். அவர்கள் அரசியல் அதிகாரமுடையோராயும், மதமானியங்கள் வழங்குவோராயும் விளங்கினர். இங்கே எமது கவனத்தை

விசேடமாகக் கவருவது இலங்கையில் மக்கள் குடியமருதல், மக்கள் குடியிருப்பு, சிங்கள இனச் சிறப்பியல்புகளின் தோற்றம் முதலியன தொடர்பாக இவை கொண்டுள்ள முக்கியத்துவமாகும்.'

'இந்த பிராமிக் கல்வெட்டுக்கள் வரலாற்று அபிவிருத்தியின் சடுதியான எழுச்சியையும் பண்டைய சிங்கள மொழியுடைய பரவலான உபயோகத்தின் தெளிவான அமிசங்களைக் கொண்ட ஒருவகையான புரட்சிகர உருமாற்றத்தையும் சுட்டிக் காட்டுகின்றன. இந்தக் கல்வெட்டுக்களில் காணப்பட்ட மொழியின் வியத்தகு ஓரினத்தன்மையும், அது இலங்கைத் தீவின் விவசாயக் குடியிருப்புகள் பூராவும் விரிவாகப் பரவியிருந்தமையும், முதற்பார்வையில் அவை ஆகக் குறைந்தளவில் மொழியியல் ரீதியாக ஓரினப் பண்பாடுடைய குழுவினது புலம்பெயர்வின் திடீர் அலையின் விளைவென்னும் கருத்தை ஆதரிக்கின்றன. ஆனால் இன்னும் யதார்த்தபூர்வமாக நோக்குகையிலும், நாம் உரையாடுகின்ற வரலாற்றுக்கு முற்பட்ட கால ஆதிவரலாற்றுக்கால அபிவிருத்தியின் அடிப்படையிலும் அது நாம் ஆராய்கின்ற ஆதிவரலாற்றுக்காலச் செயன்முறையின் உச்சநிலையாகவும் அல்லது திருப்பு முனை விளைவாகவும் நாம் கருதிக்கொள்ள முடியும்.'

'இக்கல்வெட்டுக்களில் காணப்படுகின்ற **ஆதி சிங்கள மொழியானது** இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் ஒரு கிளையான வடஇந்தியப் பிராகிருதத்தின் விரிந்த குழுவைச் சேர்ந்ததென்பது மிக முக்கியத்துவமானதும் அதேபோன்று புதிரானதுமாகும். மேலும் ஒத்த சிறப்பியல்புகளையும், வரன் முறையையுமுடைய மாலைதீவு மொழியுடன் மிக நெருங்கிய தொடர்புடைய மொழியுடன் சேர்ந்து **இம்மொழியானது இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் தெற்கு நோக்கிய விரிவைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அவ்விரிவானது இந்தியத் தீபகற்பத்தின் தென்னரைப் பகுதியை உள்ளடக்கிய பெருந்திராவிட மொழி மாநிலத்தினால் அத்தகைய மொழிகள் வழங்கும் பிரதான பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது.** இன்றைய மொழியியல் ஆய்வுகள் சிங்களமொழியானது அதனுடைய பரிணாமவளர்ச்சியில் ஆரம்ப கட்டத்திலும், பிற்கால கட்டத்திலும் விசேட சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளதெனச் சுட்டிக்காட்டுகின்றன. அம்மொழி மேற்கு, கிழக்கு, இந்திய பிராகிருத மொழிகளுடன் நெருங்கிய உறவு கொண்டிருக்கும் அதேவேளையில் அது தனது தனித்துவத்தையும் பேணி வருகின்றது. அதாவது அது ஒரு புறத்தில் இந்திய பிராகிருதமொழிகளுடன் தொடர்புற்றுள்ளது, ஆனால் அதேசமயம் அவற்றிலிருந்தும் வேறுபட்டுள்ளது. மறுபுறத்தில் அது திராவிட மொழிகளிலிருந்து வேறுபட்டதாயிருந்தபோதும் அம் மொழிகளினால் நன்கு செல்வாக்கும் பெற்றுள்ளது. சுருக்கமாகக் கூறின், கி.மு.3ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயிருந்து அதன் கூட்டிணைவுப்பான்மையும் தேசிய விசேடத்துவமும் உயர்ந்த அளவில் இருந்தன' எனக்குறிப்பிடலாம்.

251892

'இலங்கை வரலாற்றரங்கிலே ஏனைய சிறுபான்மை இனங்களின் தோற்றம், சிங்கள மக்களின் தோற்றத்துடன் அதே காலத்தில் நிகழ்ந்திருக்கலாம், அல்லது அதற்குப் பின்னரும் நிகழ்ந்திருக்கலாம். எவ்வாறாயினும் அதே முறையியலையும் பகுப்பாய்வையும் இலங்கையின் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கும் பிரயோகிக்க முடியும். இதன் மிகத்தெளிவான உதாரணம் இலங்கைத் தமிழராவர். இவர்கள் ஆரம்ப வரலாற்றுக் காலத்திலிருந்து, நம்பகமாக ஆதிவரலாற்றுக் காலத்திலிருந்து யாதாயினும் ஒரு வகையில் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார்கள். மிக ஆரம்பகாலம் முதல் தமிழினத் ததுவச் சிறப்பியல்புடைய மக்கள் இங்கு வாழ்ந்துவந்தமைக்கு பிராமிக் கல்வெட்டுக்கள் சான்று பகிர்கின்றன. அதற்குச் சமமான முக்கியத்துவமுடைய உறவுகள் யாதெனில் ஆதிவரலாற்றுக் காலத்தினதும் ஆரம்ப வரலாற்றுக் காலத்தினதும் பௌதிகப் பண்பாடும், பௌதிகமல்லாத ஏனைய பண்பாட்டுத் தோற்றப்பாடுகளும் இலங்கைக்கும், தென்னிந்தியாவிற்கும் இடையே நிலவியது எனக் காட்டப்படுகின்ற தெளிவான உறவுகளாகும். பெருங் கற்தொகுதியுடன் தொடர்பான பௌதிகப்பண்பாடு, பெருங்கற்கால மரணச் சடங்கு முறைகள் பற்றிய ஒப்பியல் ஆய்வுகளும், மேலும் இரு பிரதேசங்களிலும் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம், விவசாய நுணுக்க முறைகள், பயிர் வளர்ப்பு, விலங்கு வளர்ப்பு முதலியவை தொடர்பான ஒப்பியல் ஆய்வுகளும் நிச்சயமாக இந்த உறவுகள் பற்றிய மிகத் தெளிவான படத்தை எமக்களிக்கும். தென்னிந்தியாவின் அண்மையும், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலுள்ள பாக்குநீரிணையின் ஒடுக்கமும் பிந்திய வரலாற்றுக் காலத்திற் போல் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் புலம்பெயர், வர்த்தகத் தொடர்புகள் ஆகியன ஏற்படுவதற்கு நிச்சயமாக எளிய வாய்ப்புக்களை வழங்கியிருத்தல் வேண்டும்.'

'இலங்கை வரலாற்றிலே தமிழரும், தமிழ்ச் சமூகங்களும் அநேகமாக ஆக்கிரமிப்பாளர் அல்லது அந்நியராக உருவகிக்கப் பட்டனர். அதுமாத்திரமன்றி அவர்கள் பௌத்த மதத்தின் புரவலராகவும் தந்ததாதுவின் பாதுகாவரலாகவும், கூலிப்படைகளாகவும் இலங்கையின் உள்நாட்டு அரசியலில் ஆழமாகப் பங்குபற்றியவர்களாகவும், வணிகராகவும், வர்த்தகராகவும் காட்டப்பட்டதற்கும் அநேக சான்றுகள் உண்டு. லியனகமகே என்பவர் அண்மையில் சுட்டிக் காட்டியதுபோல தென்னிந்திய பௌத்தர்களுக்கும் இலங்கைப் பௌத்தர்களுக்கும் இடையே நிலவிய உறவு பெரும்பாலும் மறக்கப்பட்டதாயிருந்த போதும், அது பேணப்பட்டமைக்கும் ஏராளமான சான்றுகள் உள. 13-ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டுவரை வடக்கிலே தமிழ் இராச்சியம் தாபிக்கப்பட்டிருந்தமையும் 13ஆம் நூற்றாண்டு தொட்டு 19ஆம் நூற்றாண்டு வரை வன்னிக் குறுநில மன்னர் ஆட்சிப்பகுதிகளில் பெருமளவாய்த தமிழர் வாழ்ந்தமையும் இலங்கைத் தமிழ் இனம் முகிழ்ந்து நிலைகொண்டமையில் முக்கிய பங்கு வகித்துள்ளன.'

'ஒருமைப்படுதலும், வேறுபடுகையும், கூடுகையும், பிரிவுறலும் ஓரினவியல்பும் பல்லினவியல்பும் ஆகிய கோலங்கள் இந்த அபிவிருத்திகளில் தெளிவாகத் தெரிகின்றன. அவை இலங்கைத் தமிழ் மக்களின் வரலாறு சிங்கள மக்களுடைய வரலாற்றைப் போல் எளிதான ஒரு தனிச் செயன்முறை அன்று எனக்காட்டுகின்றன.'

சாசனச் சான்றுகளின் செறிவும், அவை கண்டுகொள்ளப்பட்ட பிராந்தியங் களுமே வரலாற்று வளர்ச்சியில் முதனிலை பெற்றிருந்தன எனலாம். இவற்றோடு இணைந்த வகையில் செறிவாகக் கண்டு கொள்ளப்பட்ட **புராணாஸ் நாணயங்களும், வெளிநாட்டு ரோம நாணயங்கள்** முதலானவையும் வர்த்தக - வாணிப தொழில் சட்டத்துடன் இணைந்த வகையிலான சமூக உருவாக்கத்தினைக் கோடிட்டுக்காட்டும் சான்றுகளாகின்றன. தீபகற்ப இந்தியாவில் கண்டுகொள்ளப்பட்டமை போன்ற வெளிநாட்டு வாணிபக் குடியிருப்புக்களை இலங்கையில் காண முடியாவிட்டாலும் கூட வெளிநாட்டு வாணிபக் கலங்கள், நாணயங்கள் தொடர்பான சான்றுகள் நிறையக் கிடைத்துள்ளன. எனவே புராதன இலங்கையின் சமூக உருவாக்கத்தில் உண்ணாட்டு விவசாயப் பகைப் புலமும், வெளிநாட்டு வாணிப மேலீட்டமும் இணைந்து சர்வதேச வியாபார முகப்பு ஒன்றை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்த இலங்கைத் தீவிற்கு ஈட்டிக் கொடுத்திருந்தது. இதுவே சர்வதேச வியாபார மார்க்கங்களின் வலைப் பின்னலுடன் இச்சிறு தீவினையும் இணைப்பதற்குக் காரணமாயிற்று. இவ்வினைப்பானது பிராந்திய அடிப்படையிலான சமூக-பொருளாதார நிறுவனங்களின் வளர்ச்சிக்கே முதலில் வழிகோலியிருந்தது என்பது இங்கு நோக்கத்தக்கது. அதாவது இலங்கைத் தீவு முழுமைக்குமான வெளிநாட்டு வாணிபத் தொடர்புகள் என்று குறிப்பிடுவதிலும் பார்க்க அதன் **கரையோரப் பிராந்தியங்கள் பகுதி பகுதியாகக் கொண்டிருந்த தொடர்புகள்** என்றே குறிப்பிடுவது சாலவும் பொருத்தமாகும். ஏனெனில் இலங்கையில் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வின் முடிவுகள் இந்நிலைப்பாட்டை நன்கு உறுதி செய்கின்றன எனலாம்.

'எனவே இலங்கையின் புராதன வரலாற்றுப் போக்கினை நிர்ணயித்த உற்பத்திக் காரணிகளை ஆராயும் ஒருவர் இத்தீவில் பிராந்திய ரீதியில் அமைந்த சமூக உருவாக்க முனைப்புக்களை அடையாளம் கண்டுகொள்ளத் தவறமாட்டார். அண்மைக் காலங்களில் தீபகற்ப இந்தியாவிலும், இலங்கையிலும் மேற்கொள்ளப்பட்ட சமூகவியல் பற்றிய ஆய்வின் முடிபுகள் இதனையே வலியுறுத்துகின்றன. இதுவரையில் இந்திய உபகண்டத்திலிருந்து மக்களின் குடிப்பெயர்வு இத்தீவு நோக்கி ஏற்பட்டது என்றே மக்கட்பரப்பியலாளரும், வரலாற்றாசிரியரும் முடிபு கொண்டிருந்தனர். ஆனால் தென்னிந்திய குலங்குடிகள் பற்றி ஆய்வுசெய்த அமெரிக்க சமூகவியலாளர்களுடைய முடிபுகள் இலங்கைத் தீவிலிருந்தும் குடிப்பெயர்வுகள் தீபகற்ப இந்தியா நோக்கி அலையலையாக இடம்பெற்றது என்பதனை உறுதிப்படுத்திக் காட்டுகின்றன. தென்கிழக்காசியத்

தொல்லியியலாளர்கள் அண்மைக் காலங்களில் தென்கிழக்காசியாவில் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாகக் கண்டுகொண்ட முடிபுகளின்படி புராதனகால நெற்பயிர்ச் செய்கையானது பிலிப்பீன்ஸ், தாய்லாந்து, யாவா ஆகிய நாடுகளிலிருந்து தென்னிலங்கை ஊடாக வடக்கு நோக்கி நகர்ந்து தீபகற்ப இந்தியப் பரப்பினை சென்றடைந்தது என வலியுறுத்தப்படுகின்றது. மகியங்கணைப்பிரதேசம் அவ்வாறான அபிவிருத்தியை முதலில் பெற்று, அந்நெற்பயிர்ச்செய்கையை அனுராதபுரத்தினை நோக்கி நகர்த்தியது எனலாம். **இதேபோன்று ஆடை நெய்யும் கைத்தொழில் மரபும் இலங்கையூடாகவே தென்கிழக்காசியாவிலிருந்து தீபகற்ப இந்தியப் பரப்பினைச் சென்றடைந்தது என எடுத்துக் காட்டுகின்றனா.** ஆகவே புராதன இலங்கையிலிருந்தும் குடிப்பெயர்வும், பண்பாட்டுப் பெயர்வும் தீபகற்ப இந்தியா நோக்கி ஏற்பட்டுக் கொண்டமையை இவ்விளக்கத்தின் பின்னணியில் ஏற்றுக் கொள்ளமுடிகிறது. விஜயன் இலங்கைக்கு வந்தபோது குவேனி என்ற பெண் இயக்கி **கிணற்றடி ஒன்றின் அருகில் நூல் நூற்றுக்கொண்டிருந்தாள** என்று மகாவம்சம் தரும் குறிப்பு இங்கே நினைவு கூரத்தக்கதாகவுள்ளது. அதேபோன்று கௌதமபுத்தரின் இலங்கைத்தீவிற்கான முதல் வருகையானது தென்னிலங்கையி லுள்ள **மகியங்கணைக்கே** நிகழ்ந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது'

புராதன இலங்கையின் சமூக வரலாற்றில் இதுவரையில் ஆய்வு செய்து எழுதப்பட்ட தரவுகளின்படி இயக்கர், நாகர் என்போர் **அமானுஸ்யமானவா** என்ற கருத்துத் தொனிக்க வரையப்பட்டனர். ஆனால் அண்மைக்கால ஈழத்துத் தொல்லியல் ஆய்வின் முடிவுகள் அவர்களை வரலாற்று வளர்ச்சியின் முனைப்புக்களுடனும் நிறுவனங்களுடனும் தொடர்புபட்டவர்கள் என்பதையே எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. செ. பரணவிதான என்ற தொல்லயலாளரின் நோக்கவிதானத்தினின்றும் மாறுபட்டு, இன்று தொல்லியலாளர்கள் குறிப்பாக **சிரான் தெரணியாகல** போன்றோர் நாகர்களை குறுணிக்கற்காலப் பண்பாட்டினை முடித்து வரலாற்றுதயகால வாழ்வினைத் தொடக்கி வைத்த மக்களாகக் கொள்கின்றனர். **அதாவது குறுணிக்கற்காலப் பண்பாட்டு யுகத்தினை முடிவுக்குக் கொணர்ந்து, செம்புக் காலத்தினையும், இரும்புக் காலத்தினையும் குறிக்கும் பெருங்கற்கால யுகத்தினை இலங்கையில் தொடக்கிவைத்த மக்கள் கூட்டத்தினராக நாகர்களை இன்று உறுதிப்படுத்தியுள்ளனர்.** அவ்வகையில் இலங்கைத் தீவில் பிராந்திய ரீதியாக வாழ்ந்த நாகர் சமூகம் உள்நாட்டு – வெளிநாட்டு வாணிப முனைப்புக்களால் முதன்முதலில் உந்தப்பட்டு, **இலங்கையின் புராதன தேசிய மக்களினமாகத் திகழ்ந்துள்ளார்கள்** என்பதைக் கண்டுகொள்ள முடிகிறது. வரலாற்றுத் தொடக்ககாலத்தில் **எழுத்தறிவுடைய முதற் சுதேசிய மக்களாகவும் இலங்கையில் திகழ்ந்தவர்கள் நாகர் சமூகத்தினரே** என்றால் அது மிகையாகாது. கந்தரோடையி லிருந்து மீட்டெடுக்கப்பட்ட நாகலிங்கம், நாகர் நாணயம், நாகர் முத்திரைகள் என்பன அச்சமூகத்தினரின் இருப்பு,

வழிபாடு, வாணிப நடவடிக்கைள் போன்றவற்றை முறையே கோடிட்டுக் காட்டுகின்ற தொல்லியல் ஆதாரங்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே இலங்கையின் வரலாற்று மரபு பற்றிய கோட்பாட்டில் நாகர்களை முதற்குடி மக்களாகக் கொள்ளக்கூடிய நிலை இப்பொழுது ஏற்பட்டுள்ள வகையில் இலங்கையின் ஆக்ககாலப் பகுதி (Formative Period)யின் அபிவிருத்தி பண்பாட்டு நிறுவனங்கள் பற்றிய மறுமதிப்பீடு அவசியமானதாகக் கருதப்படுகிறது. நாகர் மக்கட் கூட்டம் வளர்த்தெடுத்திருந்த பன்முகப்படுத்தப்பட்டிருந்த விவசாய நிறுவனங்களின் பிணைப்போடு வெளிநாட்டு வாணிப முனைப்பும் இணைந்து அரச உருவாக்க முறைமை ஒன்றிற்கு வழிவகுத்திருந்தது எனலாம். அவ்வரச உருவாக்க முறையுடன் பின்னர் பௌத்தமத வாழ்வியக்கமும் கலந்து புதியதொரு கலப்புச் சமூக இயக்கவியலுடன் இலங்கையில் மக்கள் வாழ்வு வழிகோலப்பட்டதையே **மகாவம்ச மரபு ஊடாக அறியப்பட்ட இலங்கையின் வரலாற்று வரைபியல்** எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கைத்தீவின் **வரலாற்று வரைபியலில** (Historiography of Sri Lanka) அடிப்படையான சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இவ்வேளையில், மேலைத்தேயப் பார்வையிலிருந்து நோக்கப்பட்ட வரலாற்று முறையியலுக்குப் பதிலாக சுதேசிய நோக்கியலமைந்த ஒரு வரலாற்றுப் பார்வை இப்பொழுது பதியப்பட்டுக் கொண்டிருப் பதனைக் காணமுடிகிறது. பெரும்பாலான சிங்கள வரலாற்றாசிரியர்கள் இப்பொழுது நாகர் இன மக்களை இலங்கைத்தீவின் வரலாற்றைத் தொடக்கி வைத்த முதன் மக்களாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளனர். **நாகர் அமானுஷ்'யர் அல்லர் எனவும், இலங்கைத்தீவின் தொடக்க கால வரலாற்று மற்றும் பண்பாட்டுத் தோற்றப்பாட்டிற்குரிய பிதா மகர்கள் இவர்களே என்பதனையும் இலங்கை** வரலாற்றாசிரியர்களால் இப்பொழுது சான்றுகளுடன் எடுத்துக்காட்டப்படுகிறது. அண்மைக்காலங்களில் ஏற்பட்ட தொல்லியல் மேலாய்வுகள், மற்றும் அகழ்வாய்வுகளின் வளர்ச்சியின் பின்னணியில் பெற்றுக்கொள்ளப்பட்ட பண்பாட்டெச்சங்கள் நாகர் மரபினரின் இருப்பு, செறிவு மற்றும் சமயப் பின்னணி போன்ற பல விடயங்களை எமக்கு தெளிவுபடுத்தியுள்ளன. கௌதம புத்தரின் வருகையின் பின்னர் குறிப்பாக 300 வருடங்களின் பின்னர் வடஇந்தியாவிலிருந்து மகிந்ததேரர் தரைமார்க்கமாக இத்தீவிற்கு வருகை தந்து தேரவாத பௌத்தமதத்தினை உத்தியோகபூர்வமாக அரச மதமாக்கியதோடு, சமகாலத்தில் இத்தீவில் காணப்பட்டிருக்கக்கூடிய அரச வம்சங்களையெல்லாம் தேரவாத பௌத்த நிறுவனங்களுக்குள் உள்ளீர்த்திருந்தமையைக் காண்கின்றோம். இலங்கைத்தீவில் தேரவாத பௌத்தமத நிறுவனங்களுடன் குறிப்பாக பொருளாதார – நீர்ப்பாசனவியல் நிறுவனங்களுடன் நாகர் வம்சத்தினர் கொண்டிருந்த தொடர்புகள் காரணமாக நாகர் வம்சத்தினரின் ஒரு பிரிவினர் பௌத்தர்களாக மாறிய அதேவேளையில் இலங்கையின் வடக்குக்கிழக்குப் பரப்பில் நாகர் வம்சத்தினர் தொடர்ந்தும் இந்து சமயத்தவர்களாகவே வாழ்ந்து,

அரசமரபிலும் சமயபண்பாட்டு வாழ்விலும் செல்வாக்குச் செலுத்தி வந்திருந்தனர். நந்திச் சின்னமே நாகர்களது அரசமரபிற்குரிய சின்னமாக பின்பற்றப்பட்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்தும் தொல்லியல் சான்றுகளும் இப்பொழுது கிடைத்துள்ளன. **கந்தரோடையி லுள்ள அரசமாளிகைத்திடல்** என்ற மையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய மோதிரச்சின்னமொன்றில் இணைக்கப்பட்டிருந்த **சந்திரகாந்தக் கல்லில் செதுக்கப்படிருந்த நந்திச்சின்னம்** அத்தகையதாகும்.

தென்னாசியப் பண்பாட்டுருவாக்கத்திற்குப் பங்களித்த **இனக்குழுமங்கள்** பலவாகும். அவற்றுள் **நாகர் இனம்** மிகவும் தொன்மைவாய்ந்த ஒரு குழுமம் என்பதனை இலக்கிய, தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. தென்னாசியாவின் பல்வேறு பிராந்தியங்களிலும் இக்குழுமத்தினர் பல்வேறு காலப்பரப்பில் வாழ்ந்திருந்தனர் என்பதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. வட இந்தியாவைப் பொறுத்த வரையில் வடகிழக்குப் பிரதேசத்திலுள்ள **நாகலாந்து** மாநிலமும், தென்னிந்தியாவில் **கேரளமாநிலமும்** நாகர் இனம் வசித்த பிரதேசமாகவும், **நாகர் பண்பாடு தொடர்ச்சியாக** நிலவிவரும் பரப்புக்களாகவும் எடுத்துக் காட்டப்படுவதனைக் காணமுடிகிறது. இந்தோனேசியாவில் **யாவாத்தீவில** (நாகர் நாடு) **நாகர் இனமும் அவர்களது பண்பாடும** புராதன காலத்தில் **அரசியல் இறைமையுடன** வளர்ச்சி பெற்றிருந்தற்கான தொல்லியற் தடயங்களும் கிடைத்துள்ளன. இலங்கைத் தீவினைப் பொறுத்தமட்டிலும் நாகர் இனத்தினர் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பரப்பிலிருந்து வாழ்ந்து வந்தமைக்கான தொல்லியற் தடயங்களும் கிடைத்துள்ளன. கிழக்கிலங்கையில் இற்றை வரைக்கும் **நாகர் வம்சமரபில் வந்த போடியார் பரம்பரையினா** வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையின் வடபகுதி **நாகதீபம்** அல்லது **நாகத்துவீபம** என மிக நீண்ட காலமாக அழைக்கப்பட்டு வந்த மரபினையும் காண்கின்றோம்.

இலங்கைத்தீவின் பூர்வீக மக்கள் குழுமங்களுள் நாகர் இனக்குழுமம் மிகவும் தனித்துவம் வாய்ந்த வாழ்க்கைமுறை யொன்றினைக் கட்டமைத்து, முதன் முதலாக ஒழுங்குபடுத்தப்பட்ட சமூக – பொருளாதார நிறுவனங்களின் உதவியுடன் வாழ்ந்திருந்மைக்கான தொல்லியற் சான்றுகளை இப்பொழுது ஆய்வாளர் கண்டுபிடித்துள்ளனர். தென்னிலங்கையிலிருந்து வட இலங்கை வரைக்கும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளும், அகழ்வாய்வுகளுமே நாகர் பற்றிய சமூக – பொருளாதார, சமயத்தரவுகளை எமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ள மூலதாரங்களாகும். இப்பின்னணியிலேயே நாகர் வம்சத்தினரது தோற்றம், இன அடையாளம் பற்றிய குறியீடுகள், குழுமங்குழுமமான அவர்களது பரவல், இலங்கைத்தீவில் அக்குழுமத்தினரால் வளர்த்தெடுக்கப்பட்ட பண்பாட்டுக் கட்டுமானம், தேரவாத பௌத்தம் **ஓர் அரசியல் மதமாக** கி.மு. 3ஆம் நூற்றாண்டில் உத்தியோகபூர்வமாக இங்கு அறிமுகப்படுத்தப்படும் வரைக்கும் **முதுபெருங்கற் பண்பாட்டுச் சிற்பிகளாக** அக்குழுமத்தினர்

நீரியல்வள முகாமைத்துவத்தின் முகாமையாளர்களாக, குளச்சொந்தக்காரர்களாக, **இடுகாட்டுப் பண்பாட்டுச் சடங்குதாரிகளாக**, "காவல் தெய்வங்களை" குளக்கட்டுக்களிலும், வாணிபமையங்களிலும் நிறுத்தி, வளத்தினைப் பாதுகாக்க வைத்தவர்களாக வாழ்ந்திருந்த வகையினை மிகத்தெளிவாக எடுத்துக்காட்ட முடிகின்றது

நாகர்கள் யார்? இவ்வினாவிற்கான விளக்கம் இங்கு அவசியமானது. நாகர் இனக் குழுமத்தினர் மத்திய தரைக்கடற்பிராந்தியத்தினைச் சேர்ந்தவர்களாக எடுத்துக்காட்டப் படுவதனைக் காண்கின்றோம். எகிப்திய நாகரிக காலத்திலிருந்து (கி.மு. 4000 – கி.மு. 3000) கிரீட்டன் தீவில் வளர்ச்சியடைந்த ஏஜியன் நாகரிகம் வரைக்கும் (Agean civilization கி.மு. 1700 – கி.மு. 500) இவ்வினத்தினர் மத்தியதரைக்கடற் பிராந்தியத்தில் **பன்னாட்டு வாணிப முகாமையாளர்களாக** தொழில் புரிந்திருக்கின்றார்கள். எகிப்துடன் இக்குழுமத்தினர் மேற்கொண்டிருந்த வாணிப நடவடிக்கைகளுக்குச் சான்றாக மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ள பிராமிச்சாசனப் பதிவுகள் விளங்குகின்றன. நாகர் குழுமத்தினர் கீழைத்தேயத்திற்கு மத்தியதரைக் கடற்பிராந்தியத்திலிருந்து மத்தியாசியா வினூடாகப் பரவி, **ஸஸானியர்களுடைய** (Sassanians) செல்வாக்கினையும் பெற்று, **இணைந்த வாணிபத்தில** ஒன்றுபட்டு செயலாற்றியிருந்துள்ளார்கள் என்பதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன. கிறிஸ்துவிற்கு முற்பட்ட முதலாம் நூற்றாண்டிலிருந்து நாகர்கள் **ஸஸானியருடன** இணைந்து வர்த்தகமுயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்குப் பெருங்கற்கால மட்பாண்டங்களில் வரையப்பட்டுள்ள **கிராபிடிக் குறியீடுகளே** சான்றாகவுள்ளன. இக்குறியீட்டு வரைபுகளில் ஸஸானிய வம்சத்தினரின் செல்வாக்கு உட்பட நாகர் குழுமத்தினருடான கைவண்ணமாக மட்பாண்டவரைபுகள் எமக்குக் கிடைத்துள்ளன. பெருங்கற்கால மட்பாண்டங்களில் வரையப்பட்ட **முச்சூலக்குறிகள், நாற்சூலக்குறிகள** யாவும் **ஸஸானிய வம்சத்தினரின** செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டு **நாகர் மயப்படுத்தப்பட்ட** கிராபிடிக் குறிகளாகவே உள்ளன. **(ஆனைக்கோட்டை முத்திரைச் சாசனத்தில் பொறிக்கப்பட்ட ஈரின வரிவடிவத்தில் மேலேயுள்ள வரிவடிவம் ஸஸானிய மரபிற்குரியதாகவே காணப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது).**

குறுணிக்கற்காலப் பண்பாட்டை இலங்கையில் முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் நாகர்களேயாவர். இவர்களே பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய குழுத்தலமை யதிகாரிகளாக சமூகத்தினை ஒழுங்குபடுத்தி, வாணிபக்குழுக்களை அமைத்து, முதலில் ரோமானியர்களுடனும், பின்னர் ஸஸானியர்களுடனும் கீழைத்தேயத்தில் பொருளீட்டத்தில் ஈடுபட்ட வர்த்தகப் பெருமக்களாவர். குஷாணப் பெருவம்சத்தினர் இப்பண்பாட்டினை மத்தியாசியப் பிரதேசத்திற்கு எடுத்துச் சென்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வம்சத்தினருடைய நாணயங்கள் இலங்கையின் முக்கிய துறைமுகங்களான மாந்தை, வல்லிபுரம், ஜம்புக்கோளப்பட்டினம், நாகர்கோயில் (**கௌத்தன்துறை**) கந்தரோடை

(திருப்புதுறை) போன்ற மையங்களில் கிடைக்கப்பெற்றுள்ளன. **கி.மு. 1ம் நூற்றாண்டிலிருந்து குஷாணியர்- ஸஸானியர் - நாகர் வாணிபக்கூட்டு நடவடிக்கைகள் இப்பிராந்தியத்தில் இடம்பெற்றிருந்தமைக் கான தொல்லியல் சான்றாதாரங்கள் எமக்கு கிடைத்துள்ளன.**

"நகர்த்தப்பட்டவர்கள்" நாகர்கள் என்றவொரு கருதுகோள் தென்னியந்தியப் பரப்பில் நிலைபெற்றுள்ளமையை நோக்கும் போது நாகர் இனத்தினரது தோற்ற மூலம் பற்றிய சில செய்திகளை வெளிக்கொணர முடியும். நாவலந்தீவு ஜலசமாதியுட் பிரவேசித்திருந்த காலத்திலிருந்து **நாகர் இனம் நீரினுள் அமிழ்ந்து அழிந்தவை போக,** எஞ்சியோர் மீதமாகக் காணப்பட்ட தரைப்பரப்பிற்கு **நகர்த்தப்பட்ட நிலையிலேயே** இன்று **தென்னிந்தியா, இலங்கை, இந்தோனேசித் தீவுகளாகக** காட்சியளிக்கின்ற பிராந்தியங்களில் அன்று நிலைகொண்டிருந்ததாக **செவிவழிமரபுகள** குறிப்பிடுகின்றன. **நாவலந்தீவு** என அழைக்கப்பட்ட **பாரதம்** உட்பட ஒரு பெருநிலப்பரப்பு இந்து சமுத்திரத்தினால் விழுங்கப்பெற்ற நிகழ்வின் இறுதியில், **எஞ்சியிருந்து வாழ்ந்து, பின்னர் வரலாற்றுக்கால நாகர் இனமாக அரசோச்சி மறைந்த ஓர் இனக் குழுவினராகவே நாகர் இனத்தினை வரலாற்றாசிரியர்கள் இனம் கண்டு கொள்கின்றனர்.** தொலமி, ஸ்டிராபோ, இராசநாயகம் முதலியார் போன்றோரால் நாகர் இனம் தொடர்பான ஆரம்ப வரலாற்றுக் குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. இக்குறிப்புக்களின் அடிப்படையில் **நாகர் இனம் வாழ்ந்த பூமி நாகநாடு, நாகத்தீவு, நாகதீபம், நாகதுவீபம், நகதிவ, நாகதிவயின, மணிநாகத்தீவு, மணிபல்லவம், மணிநாகத்தீவு எனப் பலவாறாக பாளி, தமிழ் மற்றும் சிங்கள மொழி வடமொழி இலக்கியங்களில் பதியப்பட்டிருப்பதனைக் காண்கின்றோம்.**

கி.பி நான்காம் நூற்றாண்டிற்குரிய **வல்லிபுரம் பொற்றகட்டுச்** சாசனத்தில், **"நகதிவ"** என **ஆந்திரமாகதி** மொழிநடையில் பிராமி வரிவடிவ வாசகமாகப் பொறிக்கப்பட்டுள்ளமையை நோக்கும்போது, யாழ்ப்பாணக்குடாநாடு அக்காலகட்டத்தில் **நாகதீபம்** என்று அழைக்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. **மகாவம்சம** என்ற பாளிமொழி இலக்கியத்திலும் **"நகதிப"** என்ற சொல் இடம்பெற்றிருப்பதனைக் காண்கின்றோம். மணிமேகலையில் **நாகதீபம், மணிபல்லவம்** என்ற சொற்கள் யாழ்ப்பாணத்தினைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நாணயமொன்றில் **"நாகபூமி"** என தமிழ்ப் பிராமி வரிவடிவில் பொறிக்கப் பட்டிருந்தமையைக் காணும் போது இலங்கையின் வடபகுதி **நாகருடைய தாயகமாக** விளங்கியிருந்தமையை உறுதிப்பட எடுத்துக் கூறக்கூடியதாகவுள்ளது. வன்னிப் பிராந்தியத்திலுள்ள அக்கராயன் என்ற மையத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட உலோகத்தாலான **மீன் இலச்சினையில் நாகன்** என்ற தமிழ்ப்பிராமி வாசகம் பொறிக்கப்பட்டிருப்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

"இலங்கை வரலாற்றினை எழுதுவதில் இனவாதமும், பாரபட்சமும்" என்ற தலைப்பில் G.C. மென்டிஸ் அவர்களின் ஞாபகர்த்தச் சொற்பொழிவொன்றினை **வரலாற்றுப் பேராசிரியர் C.E.D. சில்வா** நிகழ்த்தியிருந்தார். அவருடைய உரையின் முக்கிய பகுதிகளைக் கவனிக்கும்போது **இலங்கையின் வரலாற்றியல் வரைபு** எத்தகையதொரு பரிமாணத்தினைக் கொண்டுள்ளது என்பதனைத் தெளிவாகக் கண்டு கொள்ள முடிகிறது. அது பின்வருமாறு:

"இலங்கையின் சமூகவியல் சம்பந்தமான துறையில் வரலாறு முக்கிய இடத்தினை எடுத்துள்ளது. இதற்கு கலாநிதி G.C. மென்டிஸ் போன்ற கல்விமான்களின் சேவையே பெரிதும் காரணமாகும். சென்ற காலங்களில் வரலாற்றுக் கல்விக்கு இருந்த மதிப்பும், செல்வாக்கும் இப்பொழுது குறைந்து வருகிறது."

"வரலாற்றை ஒரு பாடமாகப் படித்துவரும் மாணவரின் தொகை குறைந்துவருவது இலங்கை வரலாறு எழுதுவதில் ஒரு பெருந்தாக்கத்தினை ஏற்படுத்தப்போகின்றது. பல பின்தங்கிய நாடுகளிற் போல இலங்கையிலும் வசதி படைத்த சிலர் இலங்கை வரலாற்றைப் பொழுதுபோக்காகப் படித்தும், நூல்களை எழுதியும் வருகின்றனர். இவற்றுட் சில தரம் உடையவை, நாடு சுதந்திரம் பெற்றபின் வரலாற்று ஆராய்ச்சி செய்பவர்கள் பெரும்பாலும் பல்கலைக் கழகங்களின் பேராசிரியராகவும், விரிவுரையாளராகவும் இருப்பவர்களே பல்கலைக்கழகங்களிலும் வரலாற்றுக் கல்வியின் சிரத்தை குறைய மக்கள் மத்தியில் இத்துறையில் ஊக்கம் அதிகரித்துவருவது வினோதமாக இருக்கிறது."

ரல்கோட் பார்சன்ஸ் (Tolcott Parsons) என்பவர் இனத்தைப் பற்றிக் கூறுவது பின்வருமாறு: "இனமென்பது தனித்தன்மையுடைய பண்புகள் உடையதாய் இருத்தல் வேண்டும். இத்தனித் தன்மையை பிறரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். இந்த இனத்திற்கு ஒரு வரலாற்றுப் பின்னணியும் இருத்தல் வேண்டும். "இனம் பற்றிய உணர்ச்சி அவர்களுடைய எதிர்காலத்தில் ஆபத்து வரும்பொழுதுதான் தலைதூக்கும். 19ஆம் நூற்றாண்டில் பௌத்தர்களுடைய சமயத்திற்கு கிறிஸ்தவர்களால ஆபத்து ஏற்பட்டபொழுது பௌத்த சமய உணர்வு வலுவடைந்தது. சிங்களமொழியை ஆங்கில மோகத்தினால் புறக்கணித்தபொழுது சுத்த சிங்களமொழி ஆங்கிலமொழியைவிடத் தொன்மையானதென நிரூபிக்க முனிதாச குமாரதுங்க என்பவர் பல சான்றுகளை எடுத்துக்காட்டினார். 1950ஆம் ஆண்டளவில் சிங்களமொழிக்கேற்பட்ட விழிப்புணர்வுக்கு தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் அரச மொழிகளானால் சிங்களமொழிக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் எனற் அச்சமே காரணமாக அமைந்தது.

"தமிழர் மத்தியிலும் இதே நிலையைக் காணலாம். 1950ஆம் ஆண்டளவிலேயே தமிழ் மக்கள் தங்கள் மொழியின் எதிர்காலத்தைப் பற்றி அச்சங்கொள்ளத்

தொடங்கினர். இதனால் தங்கள் பூர்வீகம் பற்றி ஆராயத் தொடங்கினர். இதனால் தங்கள் பூர்வீகம் பற்றி ஆராயத் தொடங்கினர். இந்த நிலையில் வரலாற்றுப் பேராசிரியர் எப்படி நடந்து கொண்டார்கள்? அவர்கள் இனத்துவேசத்திற்கு இடம் கொடுக்கவில்லை என்றே சொல்லவேண்டும். ஓரளவிற்கு இதற்கு கலாநிதி **G.C. மென்டிஸ்** வழிகாட்டியாய் இருந்தார் என்று கூறலாம். அவர் 1936ம் ஆண்டிலேயே சிங்கள இனம் கலப்பினம் என்று கூறியுள்ளார். அவர் கூறியிருப்பது பின்வருமாறு: **"இலங்கையிற் குடியேறியவர்களுள் திராவிடரும் அடங்குவர். அவர்கள் எப்பொழுது குடியேறினார்கள் என்று கூறமுடியாவிட்டாலும், அவர்கள் போர் வீரராகவும், சாதாரண குடியேறிகளாகவும் இத்தேசத்திற்கு காலத்திற்குக் காலம் வந்தனர். அவர்களுள் பலர் சிங்களமொழியைக் கற்று சிங்களவராயினர்."**

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மிக அண்மையில் ஒரு மகஜரில் கொடுத்துள்ள இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் தொடர்பான மிகநீண்ட ஆய்வுக்கட்டுரையில் இலங்கை வரலாற்றுப் போக்குப்பற்றிய அறிமுகமாக மிகச்சிறப்பான விளக்கமொன்று பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளமை அமைகின்றது. **"இன்று இந்த இலங்கைத்தீவில் காணப்படும் அரசியல் ரீதியான நெருக்குவாரங்களுக்குப் பிரதான காரணம் தற்போது நடைமுறையிலுள்ள ஒற்றையாட்சி அரசியலமைப்பேயாகும். இத்தீவில் வாழும் அனைத்துச் சமூகத்தவரதும் நியாயபூர்வமான அபிலாசைகளை உள்வாங்காது உருவாக்கப்பட்ட இந்த அரசிலமைப்பானது சமூகத்தவர் இடையே நாம் இலங்கையர் என்ற அடையாளத்தினை வளர்ப்பதற்குப் பதிலாக இனரீதியிலான பிளவுகளையும் சமூக நல்லிணக்கமின்மையையுமே ஏற்படுத்தியுள்ளது.**

இத்தகைய இனமுரண்பாடுகள் கூர்மையடைய அடிப்படைக் காரணம் சிங்கள மக்கள் மத்தியில் தமது ஆதிக்குடியேற்றம் சம்பந்தமாகச் செல்வாக்குப் பெற்றுள்ள ஐதீகங்களேயாகும். இந்த ஐதீகங்கள் அவர்களால் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்ற பாளிமொழியிலான வரலாறு சார்பான இலக்கியங்களிலேயே காணப்படுகின்றன."

மூத்த பிரபல வரலாற்றாசிரியரான **ஜி.சி. மென்டிஸ்**, விஜயன் பற்றிய ஐதீகங்கள் எந்தவிதமான வரலாற்றடிப்படையும் கொண்டவை அல்ல என்றும் சிங்கள மக்களின் ஆதிக்குடியேற்றத் திற்கும் அவற்றிற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவரது கருத்தின் பிரகாரம் தற்போது வழக்கிலுள்ள சிங்கள இனத்தினைச் சுட்டும் **"சிஹல"** அல்லது **"சிங்ஹல"** என்னும் பெயர் ஆரம்பத்தில் இந்நாட்டினைக் குறிப்பதாகவே அமைந்துள்ளது. விஜயன் சம்பந்தப்பட்ட பாளி வரலாற்றிலக்கியங்கள் கூறும் ஐதீகங்களும் மேற்போந்த பதங்களை விளக்க எழுந்தனவாகும். ஆனால் இப்பெயர்கள் விஜயன் ஐதீகத்தினைத் தொடர்ந்து பல நூற்றாண்டுகளுக்குப்பின்னர் ஓர் இனப்பிரிவினரையே குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

மறுபுறத்தில் கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்றுவரும் தொல்பொருளாய்வுகள் விஜயன்பற்றிய ஐதீகங்கள் எந்தவதமான வரலாற்றடிப்படைகளுமற்றவை என்பதை உறுதிப்படுத்தியுள்ளதுடன் இன்று இத்தீவில் வாழும் தமிழர், சிங்களவர் ஆகியோரின் மூதாதையர் கி.மு. 1000 அளவிலே தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்றும் நாகரிகத்தின் கூறுகள் அவர்களாலேயே இத்தீவில் அறிமுகஞ் செய்யப்பட்டன என்றும் எடுத்துக்காட்டின.சிங்கள – தமிழ் இரத்தத்தொடர்புகள், மொழியியல் ஒற்றுமை, சமூக, சமய ஒற்றுமைகள் ஆகியன தொல்லியற்தரவுகளால் மேலும் உறுதிசெய்யப்பட்டுள்ளன.

சிங்கள மக்கள் மத்தியில் பெரும் கலாசாரப்பாதிப்பினை ஏற்படுத்திய பௌத்த மதத்தின் வருகையைத் தொடர்ந்தே சிங்கள இனம் பற்றிய கருத்து நிலைகள் கூர்மையடைந்தன என **சுசந்த குணதிலக** மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். அவரது முடிவுகளின்பிரகாரம் பௌத்தமதம் பரவிய பின்னரே சிங்களமயமாக்கம் கூர்மையடைந்தது என்பதும் அதற்குமுன்னர் - பௌத்தம் பரவுவதற்கு முன்னர் - அத்தகைய பார்வைகள் இத்தீவில் வாழ்ந்த மக்களிடையே காணப்படவில்லை என்பதும் புலனாகின்றன.

ஈழத்தில் தமிழர் பண்டையகாலந்தொட்டு வாழ்ந்து வந்ததை வரலாற்று, தொல்லியல் ஆதாரங்கள் எந்தவித ஐயமுமில்லாமல் உறுதிப்படுத்தியுள்ளன. பாளி வரலாற்றிலக்கி யங்கள் குறிப்பபிடுவது போல பண்டைய - இடைக்கால இலங்கையில் ஓர் ஒற்றையாட்சி முறை இத்தீவு பூராகவும் இருந்தமைக்கு வரலாற்றடிப்படையின் ஆதாரபூர்வமான தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

"சுருக்கமாகக் கூறுவதானால், ஆரம்ப காலத்திலிருந்தே இலங்கை பன்மொழி பேசுகின்றதும் பல்லினங்கள் வாழ்கின்றதுமான தீவாகவே இருந்து வந்துள்ளது. இலங்கையின் ஆரம்பகால , மற்றும் பிற்கால அரசகட்டுமானங்கள் பற்றி ஆராய்கின்ற போது பிரதேச அரசுகள் மிகமுக்கியமான அங்கங்களாக அதிலமைந்து வந்துள்ளன. இத்தீவு முழுமையும் ஒருங்கிணைந்த மைய அரசும் அதுபற்றிய எண்ணக்கருவும் நடைமுறைச் சாத்தியமற்றுப்போனமைக்கு போக்குவரத்து வசதியீனமும் தகுதிவாய்ந்தொரு அரசகட்டமைப்புச் செயற்பாடின்மையுமேயாகும். நாளடைவில் மொழியடிப்படையில் நாடு இரண்டு பெரும்பிரிவுகளாகப் பிரிந்தது. தமிழர்கள் வடக்கு-கிழக்குப்பிரதேசங்களிலும் சிங்களவர் ஏனைய பிரதேசங்களிலும் வாழ்கின்ற சூழ்நிலை ஏற்பட்டது. பின்னர் இத்தீவில் காலனித்துவ ஆதிக்கம் செலுத்திய அந்நிய சக்திகளும் இத்தனித்துவங்களை அடையாளங்கண்டுகொண்டனர்.இந்த அந்நிய சக்திகளுள் பிரித்தானியர் மிகத்தெளிவாக இத்தீவில் வாழும் தமிழர், சிங்களவருக்கிடையிலான இன அடையாளங்களையும் தனித்துவங்களையும் அடையாளங்கண்டதோடு நாட்டை ஒருமைய அரசின் நிர்வாகக்கட்டமைப்பின் கீழ் கொண்டுவந்தனர்."

"பரணவிதானவினால் இருபது ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டு, இலங்கைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட இலங்கை சரித்திரத்தில் இனக்கலப்புப் பற்றிய கொள்கையை ஏற்றுள்ளார். இப்பொழுது சிங்களம், தமிழ் முதலிய மொழிகளைப் பேசுவோர் இயக்கர், நாகர் என்பவர்களின் வழித்தோன்றல்கள் என்று கூறுவது சாத்தியமான தாகும்.இனங்களைப் பற்றி இலங்கையில் எழுதப்பட்ட நூல்களில் மூன்றை விசேடமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். முதலாவதாகச் சமூகவியலிலும், மொழித்துறையிலும் ஈடுபாடுள்ள பேராசிரியர் K.N.O. தர்மதாஸ வரலாறு சம்பந்தமாக எழுதிய ஒரு கட்டுரையைக் குறிப்பிட விரும்புகின்றேன். அவற்றுள் " இடப்பெயர்களும் இன பேதங்களும்" என்னும் கட்டுரையை விசேடமாகக் குறிப்பிட விரும்புகிறேன். இவருடைய கட்டுரையானது வரலாற்று விரிவுரையாளரான S. குணசிங்கம், திருகோணமலையைப் பற்றி எழுதிய கட்டுரையால் தூண்டப்பட்டதாகும். திருகோணமலை என்னும் பெயர் அந்த ஊருக்கு ஆயிரம் வருடங்களுக்கு மேல் இருந்து வருவதால் அங்கு அக்காலந் தொடங்கி தமிழர் வாழ்ந்து வருகின்றார்கள் எனக் குணசிங்கம் கூறியுள்ளார்."

"பேராசிரியர் தர்மதாஸாவின் நோக்கம் மேற்படி விரிவுரையாளர் போன்றவர்களுடைய எழுத்துக்களால் ஏற்படக்கூடிய விபரீதங்களை எடுத்துக் காட்டுவதாகும். ஓர் ஊர்ப் பெயரைக்கொண்டு அந்த ஊரில் வாழ்பவர்களின் இனத்தைக் கண்டுபிடிக்க முடியாது. மாச்சூசெற் என்ற அமெரிக்காவிலுள்ள இடத்தின் பெயரைக் கொண்டு அங்கு சிவப்பிந்தியர் (வேடரைப் போன்ற ஒரு சாதியார்) வாழ்கின்றனர் என்று கூறமுடியாது. பாணந்துறைக்கு அருகாமையில் சிங்களவர் வாழ்ந்து வரும் ஒரு கிராமத்திற்கு **'நல்லகுவா'** என்ற தமிழ்ப் பெயர் உண்டு. இதைக் கொண்டு தமிழர் அங்கு **வாழ்ந்து வருகின்றார்கள** என்று கூறமுடியாது. யாழ்ப்பாணத்தில் தனிச் சிங்களப் பெயரைக்கொண்ட கிராமங்களில் முற்றுமுழுதாக தமிழர் வாழ்ந்து வருகிறார்கள். **பேராசிரியர் தர்மதாஸ திருகோணமலை என்னும் சொல் உற்பத்தியை முற்றுமுழுதாகத் தமிழ் என்று கூறமுடியாது என்று குறிப்பிடுகின்றார்.** இந்த இடம் கோனா (பாளியில் கோகன்னா) என்று சிங்களத்தில் கூறப்பட்ட இந்தப் பெயரே திரு என்ற (ஸ்ரீக்குப் பதிலாக) மங்களச் சொல்லுடன் தொடங்கி மலை என்ற தமிழ்ச் சொல்லோடு முடிகிறது. இதனால் இடப் பெயரைக் கொண்டு அங்கு வாழும் மக்களைப் பற்றி நிர்ணயிப்பதில் உள்ள சங்கடத்தை நன்கு காட்டுகின்றது."

"இரண்டாவதாக நான் எடுத்துக்காட்டும் உதாரணம் **பேராசிரியர் கா.இந்திரபாலா** றோயல் ஏசியாற்றிக் சொசைற்றியில் 1969ஆம் ஆண்டு, மே மாதம் 6ஆம் திகதி நிகழ்த்திய சொற்பொழிவாகும். தொல்பொருள் ஆராய்ச்சியில், சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சியில் மக்களின் தோற்றத்தில் (உடலமைப்பு) உள்ள வேறுபாடு பற்றிய ஆராய்ச்சிகளின் உதவியில்லாமல் மக்களின் குடியேற்றங்களைப் பற்றி ஒரு முடிவுக்கு வரமுடியாதென அவர் கூறியுள்ளார். ஆனால் சில தொல்பொருளாராய்ச்சிச் சாதனங்களும் நூற்றுக்கு மேற்பட்ட

தமிழ்ச் சாசனங்களும், பாளி, சிங்களச் சரித்திரக் குறிப்புக்களும், இறந்தவர்களைப் புதைக்கும் பழைய மட்பாண்டங்களும், கி.மு.2ஆம் நூற்றாண்டளவில் தமிழர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்ந்துள்ளார்கள் என்பதனைக் காட்டுகின்றன."

"நான் குறிப்பிடவிருக்கும் கட்டுரை பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த R.A.L.H குணவர்த்தனா என்பவர் எழுதிய "சிங்கத்தைச் சேர்ந்த மக்கள் - (The People of the Lion) சரித்திரத்தில் அவர்களின் இடம்" என்பதாகும். அவர் கூறியிருப்பவற்றைச் சுருக்கிக் குறிப்பிடுவது மிகக் கஷ்டமான காரியம் ஆகும். ஆரம்பத்தில் சிங்களம் என்னும் சொல் தென்னிலங்கையில் வசித்துவந்த ஒரு குழுவையே குறித்தது. அங்கு வசித்த எல்லோரையும் சிங்களவர் என்று குறிப்பிடவில்லை. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் சிங்கள உணர்ச்சி ஏற்பட்ட பின்னரே சிங்களவர் அல்லாதவர் இலங்கையில் அரசராக வருவதை அவர்களாற் தடுக்க முடியவில்லை.

கி.பி 7ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் ஆதிக்கம் படைத்த தமிழ் அரசர்கள் ஆட்சிக்கு வந்த பின்புதான் அங்கு இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் விரோதம் ஏற்பட்டது. அதற்கு முன் இந்துக்களும் பௌத்தர்களும் அந்நியோன்யமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். சிங்கள – பௌத்தர்களுக்குள் ஓர் எழுச்சி பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டது. இந்த எழுச்சி சமூகத்திலும், பொருளாதாரத்திலும் ஏற்பட்ட மாற்றங்களினால் உண்டானது. இக்காலத்திற்தான் ஆரியர் பற்றிய கொள்கையும் மேல்நாட்டில் ஏற்பட்டது."

"**மாக்ஸ் முல்லர், வில்லியம் கைகா** போன்றோர் முறையே வேத இலக்கியங்கள், பாளி இலக்கியங்கள் போன்றவற்றை ஐரோப்பிய மொழிகளுக்கு மொழிபெயர்க்க ஆரம்பித்திருந்த காலங்களே **ஆரிய-திராவிட** பிரச்சினைகள் எழுந்த கால கட்டங்களாகும். இலங்கையில் ஏற்பட்ட கிறிஸ்தவர்-கிறிஸ்தவரல்லாத சிங்கள பௌத்தர் என்ற இன - மத உணர்வே பின்னர் ஆரிய-திராவிடப் பிரச்சினையாகவும், சிங்கள-தமிழர் பிரச்சினையாகவும் உருவெடுக்கக் காரணமாகிறது. இதனால் வரலாற்று நூல்கள் எழுதும்போது இயல்பாகவே மொழி - மத ரீதியான பண்பாட்டுப் பங்களிப்புக்கள் பற்றிய பரஸ்பரம் காழ்ப்புணர்வுடன் எழுதப்படக் காரணமாயிற்று. ஓரினத்தினுடைய பண்பாட்டுப் பங்களிப்புக்கள் பரஸ்பரம் மறைத்தொழிக்கப்படவும் காரணமாகியது."

பேராசிரியர் கா. இந்திரபாலா அரசியலுக்கும் வரலாற்றிற்குமிடையிலான தொடர்பினை மிக அண்மையில் எழுதிவெளியிட்டுள்ள நூல் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். **'அரசியல் போராட்டங்களில் வரலாறு ஓர் ஆயுதமாகப் பல இடங்களில் பயன்படுத்தப்படுகின்றது. இன்று இதுபற்றிப் பல வரலாற்றறிஞர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இவர்களுள் ஒரு பிரபல வரலாற்றறிஞராகிய பேராசிரியர் எரிக் ஹொப்ஸ்பாம் தெரிவித்துள்ள கருத்து மிகவும் கவனிக்கத்தக்கது. ஹெரோயின் என்ற போதைப்**

251892

பொருளுக்குப் பொப்பி மலர் மூலப்பொருள். அதுபோல தேசியவாதக் கருத்துக்கள், இனக்குழு சார்ந்த கருத்துக்கள், மற்றும் அடிப்படைவாதக் கருத்துக்கள் ஆகியவற்றுக்கு வரலாறு மூலப்பொருளாக அமைகின்றது. இப்படியான கருத்துக்களுக்கு கடந்த காலம் என்பது ஓர் அத்தியாவசியமான கூறு. இக்கருத்துக்களுக்குப் பொருத்தமான கடந்த காலம் இல்லையென்றால், அதனை வேண்டிய வகையில் ஆக்கிக்கொள்ள முடியும். எதையும் நியாயப்படுத்தக் கடந்தகாலம் உதவுகின்றது. மகிழ்ச்சியுடன் கொண்டாடுவற்கு அதிகம் இல்லாத நிகழ்காலத்திற்கு ஒரு புகழ்பூத்த பின்னணியைக் கடந்த காலம் வழங்குகின்றது. இது கொப்ஸ்பாம் தெரிவிக்கும் கருத்து.

ஹொப்ஸ்பாம் மேலும் கூறுவதாவது:

> வரலாறு எழுதும் தொழிலானது அணு ஆய்வுப் பௌதிகவியல் போல் அல்லாது யாருக்கும் தீங்கு விளைவிக்காத ஒருதொழில் என நான் எண்ணியிருந்தேன். ஆனால் இத்தொழில் தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதை இப்பொழுது நான் உணர்கின்றேன். பிரித்தானியாவில் ஜரிஷ் குடியரசுப்படையினர் ரசாயன உரத்தை வெடிகுண்டாக மாற்றுவதற்குப் பயன்படுத்திய தொழிற்சாலைகளைப் போல, எங்கள் படிப்பறைகள் குண்டுத் தொழிற்சாலைகளாக மாறக்கூடியவை. இந்த நிலை எங்களை (வரலாறு எழுதுவோரை) இரு வகைகளில் பாதிக்கின்றது. ஒன்று, வரலாற்றுண்மைகளை எடுத்துரைக்கும் பொறுப்பு எமக்கிருப்பதைப் பொதுவாக உணர்ந்துகொள்வது, இரண்டாவதாக, அரசியல் தத்துவ நோக்கங்களுக்காக வரலாறு தவறாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்டிக்கும் பொறுப்பு எமக்கு இருப்பதைச் சிறப்பாக உணர்ந்து கொள்வது.

இலங்கைவரலாற்றெழுத்தியலைப் பொறுத்தவரையில் கா.இந்திரபாலாவினுடைய இக்கூற்றின் எடுத்தாழ்கை மிகவும் பொருத்தமானதாகக் கருதவேண்டியுள்ளது.

வரலாற்றின் பொருள் விளக்கம்

மிகப்பழங்காலந் தொட்டே, நாகரிக முதிர்ச்சியற்ற காலத்திலிருந்து நாகரிக உயர்ச்சி பெற்ற காலம் வரை, மனித இனம் வரலாறு பற்றிய ஒரு கருத்தினைப் போற்றி வந்துள்ளது. அவர்கள் அக்காலத்தில் பழங்களையும் கிழங்குகளையும் தேடி இடம்விட்டு இடம் சென்று அலைந்து திரிந்து கொண்டிருந்தனர். மிருகங்களை வேட்டையாடி, பகைவர்களான கொடிய விலங்குகளையும் தன் இன விரோதிகளையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தனர். அவர்கள் நிழல் தரும் மரத்தினடியிலோ நீரோடையின் அருகிலோ நெருப்பினைச் சுற்றியோ, கோவில்களிலோ கூடியபோது மகிழ்ச்சி ஊட்டும் அனுபவங்களையும் கசப்பான அனுபவங்களையும் விவரித்துக் கூறினர். தலைவர்கள் தங்கள் வீரதீரச் செயல்களை விவரித்து தங்கள் குழுவினை வழிநடத்திச் சென்றனர். தங்கள்

துணிகரச் செயல்களையும், அருந்திறச் சாதனைகளையும் நினைவிலிருத்திப் போற்ற கதைப் பாடல்களையும், கற்பனைக் கதைகளையும், காவியங்களையும் படைத்தனர். இவ்வாறு அவர்கள் புரிந்த செயல்களால் அவர்களையறியாமலே வரலாற்று அறிவிற்குப் பழங்காலத்திலே அடிப்படையிட்டனர்.

எனினும் உடனடியாக உண்மையான வரலாறு தோன்றவில்லை. பழங்கால மக்கள் திறனாய்வு செய்து பகுத்தறியும் பண்பற்றவர்களாயிருந்ததால் எது உண்மை, எது பொய்மை, எது நடக்கக் கூடியது, எது நடக்க முடியாதது, எது சாத்தியமானது, எது சாத்தியமற்றது என்று வேறுபடுத்திப் பார்க்க முடியாதவர்களாக இருந்தனர். மூட நம்பிக்கை மிகுந்த அக்காலத்தில் ஆவிகள் சுதந்திரமாக நடமாடின. இயற்கை மர்மம் மிகுந்ததாகத் தோன்றியது. அச்சம் ஆட்டிப்படைத்தது. இச்சூழ்நிலையில் கதைப் பாடல்களும் பழங்கதை மரபுகளும் வியப்பூட்டின. அவற்றில் நாடக இயல்பும் திடீர்திருப்பங்களும் குடிகொண்டிருந்தன. மேலும் எழுதும் முறை இன்னமும் வளர்ச்சியுறவில்லை. மனதில் பதிய வைத்து, வாய்மொழியாகக் கூறுவதற்கு ஏற்ப அவை செய்யுள் வடிவில் இயற்றப்பட்டன. ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு, ஒரு பகுதியிலிருந்து மற்றுமொரு பகுதிக்கு வாய்மொழிக் கவிதைகள் வழங்கப்படும்போது, சுவை, தேவை, விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அவை மாற்றங்களுக்குள்ளாயின. அதன் விளைவாக எந்த அளவிற்கு அவை உண்மையானவை என்பதை நிச்சயிக்க இயலாது போயிற்று.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில்தான் அறிவியல் அடிப்படையிலான வரலாறு துளிர்விட ஆரம்பித்தது. கிரேக்கர்கள் அவர்களுள் குறிப்பாக அயோனியர்கள் வரலாறு எழுதும் முறைக்கு அடிகோலினர். **'இஸ்டோரியா' (Istoria) என்ற கிரேக்கச் சொல்லுக்கு 'ஆராய்ச்சியின் விளைவால் பெற்ற அறிவு அல்லது செய்தித்தொகுப்பு'** என்பது பொருளாகும். இச்சொல் கிரேக்கர்களிடமிருந்து ரோமானியர்களிடமும் பிற மொழியினரிடமும் பரவித் தெளிவான, பரவலான பொருட்கருத்தினையுடையதாக மாறியது. பிற மொழிகளிலும் வரலாற்றைக் குறிக்கத் தனிச்சொற்கள் உள்ளன. ஆனால் அவை அறிவியல் அடிப்படையி லானவை அன்று. 'Geschichte' என்ற ஜெர்மானியச் சொல் **'நிகழ்ச்சி'** என்ற பொருளுடையதாகும். இங்ஙனமே **'தாரீக்'** (tarikh) என்ற அரபுச் சொல்லின் பொருள் நாள், தேதி என்பதாகும் இதிகாசம் என்ற வடமொழிச் சொல்லின் நேர்ப்பொருள் **'பேச்சு'** அல்லது **'மரபுவழிக் கதை'** என்பதாகும்.

வரலாற்றியல என்பது வரலாற்று நூல்களின் வரலாறு ஆகும். வரலாற்றியலில், வரலாற்று மாந்தர்கள், நிகழ்ச்சிகள் முக்கிய இடம் பெறுவதில்லை. **வரலாற்றாசிரியர்கள், அவர்கள் வரலாற்றை ஆராயும் முறை, எழுதும் முறை அவற்றில் எழும் பிரச்சினை ஆகியவைகளே முக்கிய இடம் பெறுகின்றன.** ஒரு நிகழ்ச்சியை உண்மையான பின்னணியில், பிற சம்பவங் களுடன் தொடர்புபடுத்திக் காண்பதே வரலாற்று நோக்கமாகும். வரலாற்றாசிரியனின் பணி முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், ஒரு நிகழ்ச்சியை நோக்கும்

தன்மைதான் அவன் கூறும் வரலாறு சரியானதா இல்லையா என்பதை முடிவு செய்யும். காலம் செல்லச் செல்ல, எண்ணிலடங்கா வரலாற்றாசிரியர்களின் தொடர்ச்சியான பணி காரணமாக வரலாறும் வளர்ச்சியுறுவது போல் **வரலாற்றின் வரலாறு** எனப்படும் **வரலாற்றியலும** வளர்ச்சியடைகிறது.

வரலாற்றின் பொருள் வரையறை

வரலாற்றிற்குப் பல்வேறு அறிஞர்கள் பல்வகை பொருள் கூறிச்சென்றுள்ளனர். பொருள் கூறப்பயன்படுத்தப்படும் சொற்கள் மாறுபட்டதாயினும், அதன் உட்பொருள், அடிப்டை நிலையில் மாறுபடவில்லை. இயல்பிலே சில பொருள் விளக்கங்கள் எளிமையாயும் வேறு சில குழப்பமூட்டுபவனவாயுமிருக்கின்றன.

பழங்காலத்தில், முதலில் **அரிஸ்டோட்டில** பொருள் விளக்கம் தர முயன்றார். அவருக்கு, வரலாறு, மாற்ற முடியாத கடந்த காலத்து நிகழ்ச்சிகளாயிற்று. ரெனியர் (Renier) என்பாரும் கடந்த காலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, 'கடந்த காலத்து மனிதனைச் சார்ந்த ஆராய்ச்சியே வரலாறு' என்று பொருள் கொண்டார். இதற்கு மாறாக **இ.ஹெச்.கார** என்பார், வரலாறு, கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையில் உள்ள இணைப்பு என்ற கருத்தினைக் கொண்டு, கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையில் நடைபெறும் முடிவுறா உரையாடல் என்ற பொருள் கொடுத்துள்ளார். அவரது கண்ணோட்டத்தில், வரலாற்றாசிரியரின் முதன்மையான பணி, நிகழ்காலத்தைப் புரிந்து கொள்ளுதற்கு ஒரு வழியாக கடந்த காலத்தை அறிந்து முற்றிலும் அதை உணர்ந்து கொள்ளுதலேயாகும். வரலாற்றின் முக்கியத்துவம் எதுவென்றால் நிகழ்காலச் சம்பவங்களின் உட்பொருளை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு கடந்த காலத்தைத் தெரிந்து கொள்ளுவதேயாகும். இதை யாரும் மறுக்க முடியாது. பழக்கமில்லாச் சூழ்நிலையில் திக்குத் தெரியாது திணறிக் கொண்டிருப்பதைத் தவிர்க்க வரலாறு பயன்படலாம் என ராபின்சன் கூறுகின்றார்.

ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்துடன் வரலாற்றை அணுகி அதற்கு விளக்கம் கொடுக்க ஒரு சில வரலாற்றாசிரியர்கள் முற்படுகிறார்கள். அந்தவகையில் கார்லைல் **'வரலாற்றுக் கதாநாயகர்கள்'** என்ற நோக்குடன் வரலாற்றை அணுகுகின்றார். **'வரலாறு என்பது சான்றோர்களின் வாழ்க்கைச் சரித்திரமே'** என்று கூறுகிறார். ஆனால் இப்பொருள் விளக்கம் வரலாற்றின் நோக்கத்தை மிகவும் குறுகலாக்கிவிடுகின்றது. ஏனெனில் அது பல அம்சங்களைப் புறக்கணித்துவிடுகிறது. பிற மனிதர்களின் சாதனைகளையும், நிகழ்ச்சிகளையும் பிறவற்றையும் ஒதுக்கித் தள்ளிவிடுகிறது. பர்க்கார்ட் (டீரசஉம-ாயசனவ) என்பார், ஒரு தலைமுறை, முந்திய தலைமுறையின் குறிப்பிடத்தகுந்த வி'யங்களை பதிவு செய்வதே வரலாறு என்று விளக்குகின்றார். இக்கருத்தும் குறுகிய தெளிவற்ற பொருளினையே தருகின்றது. **உண்மையில் வரலாறு இடைவெளியற்றது, தொடர்ச்சியாய் இயங்குவது, அதை அறிந்தனுபவிக்கும் இயல்பு இனத்துக்கு இனம் மாறுபடுகிறது.**

பல வரலாற்றறிஞர்கள் சிக்கலான விளக்கங்களைத் தந்துள்ளனர். சார்லஸ் /பிர்த் (Charles Firth) மனித சமுதாய வாழ்க்கையின் பதிவுக்குறிப்புக்களே வரலாறுஷ சமுதாயத்தில் அவ்வப்போது நிகழும் மாறுதல்கள், அச்சமுதாயத்தின் செயலாக்கத்தை நிர்ணயிக்கும் கருத்துக்கள், சமுதாய வளர்ச்சிக்கு ஊறுவிளைவிக்கும் அல்லது ஊக்கம் அளிக்கும் சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகளே வரலாறு என்று கூறுகின்றார். **யார்க் பாவெல** (York Powell) 'சமுதாய நிலையில் வாழும் மனித இனத்தின் தன்மை,அத்தன்மையை முறைப்படுத்தி மாறுதல்களைப் புகுத்தும் சட்டங்கள் ஆகியவற்றை விளக்குவதே வரலாறு' என்று கூறுகின்றார். **கிளைடு பியர்ஸ்** என்போர் பொருட்கள், சிந்தனைகள், சொன்னவைகள், சாதனைகள் ஆகியவற்றை விளக்குவதே வரலாறு என்று கூறியுள்ளார். அவர்கள் உண்மை வரலாற்றிற்கும் எழுதப்பட்ட வரலாற்றிற்கும் சரியான முறையில் தனி விளக்கம் தருகின்றனர். தொடர்ச்சியான எண்ணங்களும் நிகழ்ச்சிகளும் உண்மையில் நிகழ்ந்தவாறே கூறப்படுவது உண்மை வரலாறு, எழுதப்பட்ட வரலாறு, வழக்கமாக, வரையறை செய்யப்பட்டதாயும், உருமாற்றஞ் செய்யப்பட்டதாயு மிருக்கும். ஏனெனில் அது ஒரு தனிநபர் தம் நினைவில் கொண்டு உறிதிப்படுத்திய தொடர்ச்சியான எண்ணங்களாயும் நிகழ்ச்சிகளாயுமிருக்கின்றன. இவ்வரலாறு பாரம்பரியங்களுக்கும் சமுதாய உணர்வுகளுக்கும் ஏற்றவாறு இருப்பதால் மக்களிடையே செல்வாக்குடன் திகழ்கிறது. அதுவும் ஒரு குறிப்பிட்ட அளவுடன் தான் இருக்கிறதுஷ ஏனென்றால் அது முற்றிலும் உண்மையை அடிப்படையாகக் கொண்டதல்லஷ மக்கள் எதை விரும்புகிறார்களோ, எண்ணுகிறார்களோ, நம்புகிறார்களோ அத்தகைய கருத்துப் போக்கினை அடிப்படையாகக் கொண்டது. உண்மை வரலாற்றிற்கும் எழுதப்பட்ட வரலாற்றிக்குமிடையில் நிலவும் நிகழ்வுப்பொருத்தமும் தொடர்பும், அதிகாரபூர்வமான வரலாற்றை எழுதும் வரலாற்றாசிரியனின் திறமையைப் பொறுத்து அமைகிறது. டீரவல்யன், வரலாற்றின் நோக்கு எல்லையை விரிவுபடுத்தி, **'வரலாறு என்பது எல்லாப் பாடப்பொருட்களும் குடியிருக்கும் இல்லம் போன்றது'** எனக் கருத்துத் தெரிவிக்கின்றார்.

வரலாற்றிற்கு வெறுப்பூட்டும் விளக்கங்களும் தரப்படாமலில்லை. பிரஞ்சு தத்துவ ஞானியான வால்டேயர் 'வரலாறு என்பது மனிதன் இழைக்கும் குற்றங்கள் அனுபவிக்கும் இன்னல்கள் ஆகியவற்றின் சித்திரமேயன்றி வேறல்ல' என்று கூறுகின்றார். பேக்காரியோ என்ற பதினெட்டாம் நூற்றாண்டு எழுத்தாளர் கூறுவதாவது: **'வரலாறு இல்லாத நாடு மிக மகிழ்ச்சியான நாடு'**. இவ்விளக்கங்களை யெல்லாம் திரிவு செய்யப்பட்ட சித்திரங்களாக விளங்குகின்றன. ஏனென்றால் வரலாறு என்பது போர்களும் குழப்பங்களும் நிரம்பியதொன்று என்ற எண்ணத்தில் எழுந்தவையேயாகும். வரலாற்றில் அமைதி அரசோச்சிய காலங்களும் வளங்கொழிக்கும் பகுதிகளும் உண்டு என்பதை மறந்து விடலாகாது. போர்களைத் தொடர்ந்து போர்கள் எழுந்தாலும் நாடுகள் தொடர்ந்து நிலைத்திருக்கின்றனஷ மனித இனம் ஒழுங்கினையும் முன்னேற்றத்தினையும் உருவாக்கி ஒன்றிணைக்க பாடுபட்டுக்கொண்டுதானிருக்கிறது.

வரலாறு என்பது மனிதனின் கடந்த காலத்தை பற்றிய ஆராய்ச்சி என்பதே எளிய, நடைமுறைக்குகந்த பொருள் விளக்கமமாகும். என்ன நடந்தது, ஏன் நடந்தது, அவ்வாறு நடைபெற்றவைகளை ஆட்டிப்படைத்த அடிப்படை விதி எது என்பதையெல்லாம் விளக்கிக்காட்டும் மனித இனத்தின் கதையே வரலாறு ஆகும். இன்னும் சற்றுத் தெளிவாக கூறப்போனால், வரலாறு என்பது மனிதனின் முன்னேற்றத்திற்கான போராட்டத்தின் நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆராய்ச்சியாகும். அவ்வாக்கத்தின் ஒரு பிரிவாக, வரலாறு அதனியல்பிற்கேற்ற பொதுக்கருத்தினையும் சான்றுகளைச் சேகரிக்கும் முறைகளையும், அவற்றை மதிப்பீடு செய்து ஒருங்கிணைந்து பொருள் படைத்த ஓவியமாக உருவாக்குகின்றது.

வரலாற்றின் உட்கருத்தினை உணர்ந்து தரப்படும் பொருள் விளக்கங்கள் அதன் பல்வேறு இயல்புத் தன்மைகளைச் சுட்டிக காட்டுவதாக அமைகிறது. முதலாவதாக, வரலாறு மனித இனம் சார்ந்தது. அடிப்படையிலே அது மனித நடவடிக்கைகளைப் பற்றியது, பிற வி'யங்கள் கூறப்பட்டால் அவை தற்செயலாக நிகழ்ந்த தாயிருக்கும் அல்லது தொடர்புடையதாகவிருக்கும். இரண்டாவதாக, வரலாற்றில் முக்கியமானது என்னவென்றால் நடைபெற்ற நிகழ்ச்சிகளேயாகும். அது மாறுதலே இல்லாதவை உண்மையில் நடைபெறாதவை ஆகியவற்றைப் பற்றியதல்ல. தற்புனைவு செய்துகொள்ளுதல் கற்பனை கவிஞர்களுடையது. அது வரலாற்றாசிரியர்களுடன் எந்தவிதத்தொடர்பும் கொண்டதல்ல. மூன்றாவதாக, வரலாறு மாறுதல் சம்பந்தப்பட்டது. வரலாற்றாசிரியனின் சாதனை மாறிக்கொண்டிருக்கிற அரசியல், சமூகம், பொருளாதாரம், கலை, தத்துவம், அறிவியல் ஆகிய துறைகளிலே ஆர்வம் கொள்கின்றமையாகும். அணுகும் முறை நபருக்கு நபர் வேறுபடலாம். ஆனால் எல்லா வரலாற்றாசிரியர்களுக்கும் பொதுவான பண்பு என்னவென்றால், ஏன், எப்படி, எப்பொழுது மாறுதல்கள் நிகழ்ந்தன என்று மாறிக்கொண்டிருப்பவை பற்றிச் சிந்தனை செய்வதுதான். மனிதனின் எண்ணங்களிலும், நிறுவனங்களிலும் இத்தகைய மாறுதல்கள் திடீரெனத் தோன்றி மிக வேகமாக இயங்கினால் அதையே நாம் **புரட்சி** என்று கூறுகிறோம். இது காலம், இடம் என்ற இரு பொருட்களால் உருவாக்கப்படுவது ஆகும். நிகழ்ச்சிகள் காலம், நேரம் ஆகியவற்றாலே சுட்டிக்காட்டப்படுகின்றன. காலமும், இடமும் மனிதனின் நடவடிக்கைகளையும் குணநலன்களையும் நிர்ணயிப்பதால், சமூக அமைப்பும் சம்பவங்களும் சரியான கால, இடப்பின்னணிகளில் வைக்கப்பட்டால் அவற்றை நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். ஐந்தாவதாக, வரலாறு **அறிவியல் சார்ந்தது.** வரலாறு எழுதுவது என்பது சான்றுகளை துருவி ஆராய்வதை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. ஆதாரங்களை, பகுத்தறிவின் மூலம் பகுத்தாய்வதும் ஆகும். மனித யுகத்தின் பெரும்பகுதி மனித நடவடிக்கைகளைப் பற்றிய ஆதாரங்கள் இல்லாத பகுதியாகும்ளு ஏனென்றால் மனிதர்கள் பண்பாடற்றவர்களாகவே நெடுங்காலம் வாழ்ந்துவந்தனர். எழுத்து முறையும் அச்சடிக்கும் முறையும் வளர்ச்சியுற்ற பின்னரும் ஒரு சில நிகழ்ச்சிகள் தான் எழுத்து வடிவம் பெற்றன. வரலாற்றாசிரியன்,

தனக்குக் கிடைக்கக்கூடிய ஆதாரங்கள் அனைத்தையும் அலசி ஆராய்ந்து தப்பெண்ணம் நடைபெற்ற விவரங்களையும், தவறவிடப்பட்ட நிகழ்ச்சிகளையும் கருத்திற்கொண்டு நடுநிலை நோக்கோடு ஓர் முடிவிற்கு வரவேண்டும். இறுதியாக வரலாறு அறிவுத்துறையின் தனியொருபிரிவு, தனித்தியங்கும் தன்மை பெற்று அது சுய விளக்கம் தரவல்லது. கடந்தகால மனித அனுபவங்களை எடுத்துக்காட்டி நிகழ்காலத்தை சரியாகப்புரிந்துகொள்ள உதவுவது ஆகும்.

நோக்க எல்லையும் செயல் நோக்கமும்

வரலாற்றின் நோக்க எல்லையும் (Scope) செயல் நோக்கமும் (Purpose) பல்வேறு காலங்களில் பல்வேறு வரலாற்றறிஞர்களால் வெவ்வேறு கண்ணோட்டங்களில் பார்க்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிலையில் வரலாறு என்றால் மரபு வழிக்கதைத் தொகுதி, வீரதீர சாகசச் செயல்கள், நாடோடிப் பாடல்கள் என்றே எண்ணப்பட்டு வந்தது. ஒரு குழுத்தலைவனின் சாதனைகளை மேன்மைபடுத்திக் கூறும் ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்புக்களும், ஓரிடத்தின் பாரம்பரியச் சிறப்பின் நினைவுக் குறிப்புகளும் இவ்வகையைச் சாரும். இவை உண்மை வரலாறு ஆகாது. ஏனெனில் நடைபெற்றவைகளை உய்த்துணர்ந்து விரித்துரைக்க வில்லை. அவர்கள் கேட்டவைகளை, திறனாய்வு செய்து மதிப்பிடவில்லை.

எனினும், கிரேக்க, ரோமானியப் பண்பாட்டு இலக்கிய காலத்தில் அறிவியல் கண்ணோட்டம் வரலாற்றிலுள் புகுத்தப் பட்டது. பகுத்தாராய்ந்து விசாரணை செய்து ஏற்றுக்கொள்ளப்படும் பாடமாக் கருதப்படத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. வரலாற்றின் மீது ஆதிக்கம் செலுத்திய இடைக்காலத்திருச்சபை, நிகழ்ச்சிகள் எழுதப்படுமுன் திறனாய்வு செய்யப்பட வேண்டும் என்பதை ஆதரிக்கவில்லை. கடவுளின் விருப்பம் எவ்வாறு மனித நடவடிக்கையில் ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை விளக்கும் வகையில் வரலாற்றின் நோக்கத்தை வரையறை செய்தது. நவீன காலத்தோற்றத்திற் குப்பின் வரலாற்றைப் பற்றிய கருத்து மீண்டும் மாறுபட்ட பகுத்தறிவுக் கண்ணோட்டம் புதிதாக வலியுத்தப்பட்டது. பொதுப்படையாக, உலகில் ஏற்பட்ட எல்லா மாறுதல்களையும் பற்றிய அறிவாக வரலாறு கருதப்பட்டது. இத்தகைய பொதுப் படையான கண்ணோட்டத்தில் பல நடைமுறைச்சிரமங்கள் ஏற்பட்டன. மனித இனம் சம்பந்தப்பட்ட, மனித இனத்தின் சிந்தனை, சொல், செயல், வளர்ச்சி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை மட்டும் ஆராய்தல் என்றும் வரையறை செய்யப்பட்டது.

சில வரலாற்றறிஞர்கள் வரலாற்றின் ஏதாவது ஒரு தனிப்பட்ட அம்சத்திற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்தனர். இது வரலாற்றினுள்ளே தனித்துறை வளர்ச்சிக்கு வழிவகுத்து வரலாற்றின் எல்லைகளை விரிவுபடுத்தியது. ஹெரோடொட்டசும், தூசிடைட்ஸும் காரண - காரியத் தொடர்புகளுக்கும் உண்மைக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். இது வரலாற்றை அறிவியல் வழிக்குத் திருப்பியது. பிற்காலத்தில் லியோபால்டு வான் ராங்கே உண்மை

வரலாறு எழுதப்படவேண்டும் எனவும், பொருள் நோக்கினைப் பெறுவதற்கு திட்டமிட்டு வகுக்கப்பட்ட முறைகளைக் கையாள வேண்டுமெனவும் வலியுறுத்தினார். .பிரிமேன் (Freeman) வரலாற்றின் ஒரு அம்சமான அரசியல் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். காரல் மார்கஸ் பொருளாதார அம்சத்திற்கும் முக்கியத்துவம் அளித்துள்ளனர். இந்த அம்சங்களைத் தனித்தனியாக பிரித்து நோக்குவது இயலாது. ஏனெனில் எல்லா அம்சங்களும் ஒன்றோடொன்று பிணைக்கப் பட்டவை. எனினும் இந்த வரலாற்றாசிரியர்களின் கோட்பாட்டுக் கொடைகள் வரலாற்றின் எல்லையை அதிகரித்ததோடல்லாமல் அதற்கு புதிய பொருளினையும் கொடுத்துள்ளன.

இவ்வாறாக வரலாற்றின் செயல், நோக்கம் என்பன குறுகிய மற்றும் பரந்த கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறது. குறுகிய கண்ணோட்டத்தில் அது அரசியல் வரலாறு, இராச்சிய வரலாறு என்றும் இது போன்ற தனித்துறையாகக் கருதப்படுகிறது. அதே சமயம் பல்வேறு நிகழ்ச்சிப் போக்குகளை உள்ளடக்கிய உலகளாவிய வரலாறாகவும் பரந்த கண்ணோட்டத்திலும் பார்க்கப்படுகிறது. சமூக முக்கியத்துவங்களைக் குறித்துக் காட்டும் நிகழ்ச்சிகள், அவைவிட்டுச் சென்ற பல்வேறு வகையான சான்றுகளின் ஆய்வு பற்றியதாகவும் வரலாறு நோக்கப்படுகின்றது.

வரலாற்றைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் அதன் நோக்கு எல்லைக்கும், பொருளடக்கத்திற்கும் பல புதுப்புது அம்சங்களை வழங்கியுள்ளது. அவற்றுள் ஒன்று **இறைமை சார்புக் கோட்பாடு** ஆகும். ஹோமரின் கருத்துப்படி வரலாறு இறைவன் ஆணைப்படி படைக்கப்பட்டதாகும். சார்லஸ் ஒமனுக்கு அது தொடர்ச்சியான சுவையான நிகழ்ச்சிகளாக அமைந்திருந்தன. ஆனால் பல சமயங்களில் முன்பின் முரணாகவும், பிரளயக் கொந்தளிப்பாகவும், காரண காரியப்படி முறையான வளர்ச்சியற்றதாகவும் இருக்கிறது. **பண்டைய ஹீப்ரு எழுத்தாளர்களும் வரலாற்றை தெய்வச் சார்புடையதாவே கருதுகின்றனர்.** அவர்கள் கடவுளின் விருப்பப்படி செயற்படுமாறு தங்கள் அரசர்களுக்கு எச்சரிக்கை விடுத்து அதன் மூலம் தங்கள் அரியணைகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் தங்கள் செயல்களில் வெற்றி பெறுமாறும் வேண்டுகோள் விடுத்தனர். சமயக்குருக்கள் இக்கோட்பாட்டினை வலுப்படுத்த விவிலியப் பாரம்பரியங்களை முறைப்படி பரிசீலனை செய்தனர். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களான இஸ்ரேயர்களை தொல்லைகளிலிருந்து காப்பாற்றி அற்புதமாக வழிநடத்திய **ஜெஹோவாவைப்போல** இறைவன் வரலாற்றை வழிநடத்துகிறார் என்ற கருத்தினை கிறித்துவம் ஏற்றுக் கொள்கிறது. கடவுளின் விருப்பம் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் வெளியிடப்பட்டிருப்பதால், வரலாற்றறிஞரின் பணி, இறைவனின் விருப்பம் நிகழ்ச்சிகளின் மூலமாக எவ்வாறு வெளியிடப் பட்டிருக்கின்றது என்பதை எழுதுவதுதான் இக்கோட்பாடாகும். இந்தக் கோட்பாட்டின் செல்வாக்கு காரணமாகப் பல எழுத்தாளர்கள் நடைபெறும் நிகழ்ச்சிகள் எல்லாம் கடவுள் அருள் காரணமாகத்தான் நடைபெறுகின்றன

என்றும், வரலாறு நல்லவை தீயவை ஆகியவற்றிற்கிடையே நடைபெறும் போராட்டமென்றும், இப்போரில் மனித இன மீட்பிற்காக இறைவன் தன் திட்டத்தைச் செயற்படுத்துகிறார் என்றும் கருதுகின்றனர். கடவுளின் விருப்பம் எவ்வாறு செயற்படுகிறது என்று விளக்குவதே வரலாற்றின் நோக்கமாக வரையறுக்கப்பட்டது.

மற்றொரு பழங்கால வரலாற்றியல் கருத்து **வரலாற்றுத் தலைவர்கள் கோட்பாடு** ஆகும். பழங்காலத்தில் இயற்றப்பட்ட வீரதீர ஆட்சியாளர்களைப்பற்றி இயற்றப்பட்ட வரலாற்று நிகழ்ச்சித்தொகுப்புகள் இக்கருத்தை விளக்குகிறது. கிரேக்க, ரோமானியப்பேரரசு காலத்தில் செயற்கரிய செயல்களைச் செய்த செம்மல்கள் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட சுவையான நிகழ்ச்சிகளை வரலாற்றாசிரியர்கள் விவரித்தனர். தற்காலத்தில் தாமஸ் கார்லைல் இக்கோட்பாட்டினை நன்முறையில் விளக்கியவராவார். உலகளாவிய வரலாற்றின் அடிப்படையானது அரும்பணி ஆற்றிய தலைவர்களால் ஆக்கப்பட்டது எனக் கருத்துத் தெரிவிக்கிறார். இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளும் சார்ல்ஸ் ஓமன் வரலாற்றின் போக்கினை நிர்ணயித்த மாபெரும் தலைவர்களின் பெயர்களடங்கிய பட்டியல் ஒன்று தயாரித்துள்ளார். அதில் புத்தர், மகா அலெக்சாண்டர், அகஸ்டஸ் சீசர், முகமது நபி, மகா பீட்டர், மகா பிரடரிக், நெப்போலியன் போனபார்ட் ஆகியோரின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் அவர் மாபெரும் வரலாற்றுக் கொடையாளர்கள் சிலரது பெயர்களைக் கூறாது விட்டுவிட்டார். அவர்களுள் ஆர்க்கிமிடிஸ், காபர்நிக்கஸ், கொலம்பஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். **'இப்பெரிய மனிதர்கள் கோட்பாடு'** செயற்கரிய செய்த செம்மல்கள் ஆற்றிய ஒரு சில தனித்தனி நிகழ்ச்சிகளைப் பற்றியது. ஆனால் அது அம்மாபெரும் மனிதர்கள் தோன்றுதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய சமூக அரசியல் அறிவாற்றில் இயக்கங்கள் போன்றவற்றைப் புறக்கணித்து விடுகிறது. எனினும் தலைசிறந்த தனிநபர்களின் சாதனைகளை அது நமது கவனத்திற்கு கொண்டுவருகிறது.

தூசிடைடஸ், **'வரலாற்று வட்டச் சுற்று'** (historical cycle) முறையை முதலில் விளக்கியவராவார். இக்கோட்பாடு, வரலாறு வட்டமாகச் சுற்றி இயங்குகிறது, அதில் நிகழ்ச்சிகள் அதே விளைவுகளோடு மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன என்று விளக்குகிறது. மறுமலர்ச்சிக் காலத்திற்குப் பின் இக்கோட்பாடு புத்துயிர் பெற்றது. பழங்கால கிரேக்க ரோமானியப் பேரரசுகளின் வளர்ச்சிகளுக்கும் தற்கால ஐரோப்பிய பேரரசுகளுக்குமிடையில் ஒப்புமைகள் காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அசிரியா, பாபிலோன், பராசீகம், கிரீஸ், ரோம், ஸ்பெயின், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய பேரரசுகளின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் கிட்டத்தட்ட ஒரே சூழ்நிலைகள் காணப்படுவதையடுத்து ஒப்புமை தேடுபவர்கள் இச்சுற்று வட்டக்கோட்பாட்டின் மீது நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தனர். ஆனால் இந்த ஒப்புமையாக்கங்கள் மேலெழுந்த வாரியாக இருப்பதால் இக்கோட்பாடு வலுவிழந்தது. **வரலாறு உண்மையில் படிப்படையாக திரண்டு வளர்ச்சியுறும் முறையில் முன்னோக்கிச் செல்வதால் வட்டமாகச் சுற்றுகிறது என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது.**

மேலும் பல கோட்பாடுகள் வரலாற்று உட்பொருளை விளக்குகின்றன. புவியியல் கோட்பாடானது வரலாற்றுப் போக்குகளுக்கு புவியியல் கூறுகளைக் காரணங்களாகச் சுட்டிக் காட்டுகின்றது. மனித இனத் தோற்றக் கோட்பாடு, பல்வேறு சமூகங்களின் பழக்கவழக்கம், சமூக நிறுவனங்கள் ஆகியவற்றை மரபுவழி முறையில் விளக்கம்தர முயல்கிறது. வடிவியல் கோட்பாட்டினர், வரலாற்று நிகழ்ச்சிகள் ஒரு நிரந்தரத் திட்டத்தின்படி அல்லது திட்டமிட்ட அட்டவணைப்படி நடைபெறுகின்றது என்று உறுதியாகக் கூறுகின்றனர்.

வரலாறு, பற்றி ஒரு திட்டவட்டமான செயல் நோக்கம் கொள்ளமுடியாத போது இத்தகைய கோட்பாடுகளும் கருத்துக்களும் தோன்றி முக்கியத்துவம் பெறுகின்றன. மாறுதல்கள் ஏற்படுங்காலையில் அவை வரலாற்றின் பொருளையும் பொருளடக்கத்தையும் அதிகரிக்கச்செய்கின்றன. தற்காலத்தில் உண்மையைத் தேடிக் கண்டு அறிவதே முக்கியம் எனக்கருதப்படுவதால், உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கண்டுணர்ந்து எழுதுவதுதான் வரலாற்றின நோக்கம் என்பது வரையறுக்கப்பட்டுவிட்டது.

வரலாறு கலையா அல்லது அறிவியலா?

வரலாறு கலை என்றே வழிவழியாகக் கருதப்பட்டு வந்துள்ளது ஏனெனில் அது நிகழ்ச்சிகளுக்கு உண்மை பொருள் விளக்கமளித்து அறிவாக்கப் பயன் தந்து நிற்கின்றது. நாட் செல்லச்செல்ல வரலாற்றறிஞரும் அறிவியல் வல்லுநரும் அது அறிவியல் இல்லையா என ஐயுற ஆரம்பித்துவிட்டனர். தூசிடைடஸ் மனித நடவடிக்கைகளில் ஒரு அறிவியல் ஒழுங்குமுறை இருப்பதாக கண்டுணர்ந்தார். இன்பக் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டால் மனிதன் சிரித்து மகிழ்வான் தவறிழைக்கப்பட்டால் பழிவாங்கும் உணர்ச்சி எய்துவான் என்றும் கூறியுள்ளார். மறுமலர்ச்சிக் காலத்திலிருந்து வரலாற்று ஆய்வுமுறைகளுக்கு அறிவியல் கூறுகளைப் பயன்படுத்துவதால் அது அறிவியல் என அழைக்கப்பட உரிமை பெறுகிறது.

இயங்கியல் அறிவியலின் வளர்ச்சி, வரலாறும் ஓர் அறிவியல் என்ற கருத்தை வலுப்படுத்தியுள்ளது. அறிவியலைப்போன்று, வரலாறும் உண்மையின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, அறிவாக்கத்தை ஒழுங்கமைதி செய்ய ஆரம்பித்தது. டார்வின் இயற்கைத் தோற்றங்களின் தன்மையை பரிசீலனை செய்யும் பொழுது அறிவியல் சோதனை முறைகளோடு வரலாற்றுப் பகுத்தாய்வு முறைகளையும் இணைத்துக் கையாண்டு பரிமாணக் கோட்பாட்டை இயற்கைத் தேர்வுக் கொள்கையில், தகுதியானவைகளே நிலைக்கும் என்ற கருத்தினை நிலைநாட்டினார். உண்மையில் இவை வரலாற்று வழிமுறைகளைக் கொண்டதே யாகும். அதிலிருந்து மனிதன் போன்ற இயற்கை அம்சங்கள் நிலையான பொதுவிதிகளின்படி இயங்குபவை என்று கருத ஆரம்பித்தனர். அகஸ்ட் காம்டே, 'வரலாற்றுப் போக்கினை இயக்கும் விதியைக் கண்டுபிடித்துவிட்டால் வரலாறு செல்லும் வழியைத் தீர்மானித்துவிடலாம்' என எண்ணினார். ஜேர்மன் நாட்டைச்

சேர்ந்த ராங்கே, துல்லியமான உண்மையையும் நம்பத்தக்க நிலையையும் வலியுறுத்தி வரலாறு அறிவியல் போன்று கருதப்படவேண்டுமென விரும்பினார். யார்க்பவல், சீலி, ஜே.பி.ப்யூரி போன்றோரும் வரலாறு அறிவியலன்றி வேறில்லை என அறிவித்துள்ளனர்.

வரலாற்றை ஒரு ஆய்வுப்பாடம் என்ற முறையில் அதன் தன்மையை நடுநிலைநின்று மதிப்பிட்டால், அது சில தன்மைகளில் அறிவியலாகவும், சிலவகைகளில் அறிவியல் சார்பில்லாததாயும், பலவகைகளில் அது கலையாகவும் காட்சியளிக்கிறது. அறிவியற் கூறுகளை ஏற்றிக்கூறினால் அது அறிவியலாகவும் கலை அம்சங்களை வலியுறுத்திக் கூறினால் அது கலையாகவும் காட்சி தருகிறது. வரலாற்றியல் மேம்பட்டவரான டிரவல்யன் 'வரலாறானது கலைப் பண்புகளையும் அறிவியற் கூறுகளையும் ஒருங்கே கொண்டது' எனக்கூறுகிறார். ஏ.எல்.ரௌஸ், 'அறிவியல் முறைகளாலும் கண்டுபிடிப்புக்களாலும் வரலாற்றியல் எவ்வளவுதான் பயன்பெற்றாலும் அது எப்பொழுதும் கலைத்துறையைச் சார்ந்ததாகவே இருக்கிறது' என்று சரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றின் சில இயக்கப்பண்புகள் அறிவியற் தன்மையுடையதாக இருக்கிறது. அறிவியலைப்போன்று வரலாறும் இயற்கையுடன் செயல் தொடர்பு கொண்டுள்ளது. வரலாற்றின் ஆய்வுப்பொருளான மனிதன் இயற்கையின் மாபெரும் படைப்பு: பொது அறிவியலின் பாடப் பொருள்களான மிருகங்கள் தாவரங்கள் ஆகியவற்றைப் போல் மனிதனும் இயற்கையின் நிரந்தர விதிகளுக்குட்பட்டு இயங்கும் பொருளாகவே கருதப்படுகிறது. இயற்கையின் பிற பொருட்களைவிட மனிதன் மேலானவன் என்று உரிமைகொண்டாடினால், வரலாறும் இயற்கையோடு தொடர்பு கொண்டுள்ள அறிவியலை விட மேலானது என உரிமை கொண்டாடலாம். ஏனென்றால் அது மனிதனின் செயல்களோடு தொடர்பு கொண்டுள்ளது. இரண்டாவதாக, வரலாறு ஆராய்ச்சிக்கு அறிவியல் முறைகளைப் பயன்படுத்துகிறது. உண்மையைக் கண்டறிதலையே நோக்கமாகக் கொண்டுள்ளது. வரலாறும் அறிவியலும் ஒரு பிரச்சினையை ஆராய்ச்சி செய்ய திட்டமிட்ட முறைகளைக் கையாளுகிறது, சரியான சான்றுகளைச் சேகரிக்கிறது, அவற்றைப் பகுத்தாய்வு செய்கிறது. இறுதியில் ஒரு பொது விதி காணுகிறது. மூன்றாவதாக, வரலாறு சமூக உறவுகளை விவாதிக்கும் ஒரு சமூக அறிவியல், மனித இனம் சமூகத்தில் வாழும் நிலைபற்றி ஆய்வதுபோல் வரலாறும், நாகரிகங்கள் அல்லது அரசுகளின் வளர்ச்சி, வீழ்ச்சி போன்ற மாறுதல்களுக்குக் காரணமான பொது விதியை கண்டுகொள்ள முயல்கிறது.

வரலாற்றின் வேறு சில தன்மைகள் இது இயற்பொருள் சார்ந்த அறிவியலினின்றும் வேறுபட்டது. ஆனால் கலையோடு ஒன்றுபட்டது எனச் சுட்டிக்காட்டுகின்றன. வரலாறு மனிதன், மற்றும் அவனது நடவடிக்கைகளோடு செயல் தொடர்பு கொண்டுள்ளது. அறிவியலோ, இயற்கை மற்றும் அதன் தோற்றத்தோடு தொடர்பு கொண்டுள்ளது. வரலாற்றறிஞனின் முதன்மையான

பணி, மனிதன் விட்டுச்சென்ற சான்றுகளை ஆராய்ந்து மனிதன் என்ன செய்தான் என்று அறிவதேயாகும். அறிவியல் வல்லுனரோ அதற்கு மாறாக, உயிரற்ற பொருட்களோடும், அரை உயிருள்ள பொருட்களோடும் தொடர்புகொள்ளுகிறார். வேதியல், மற்றும் பௌதீக வல்லுநர்கள், பௌதீகப் பொருட்களான நீர், காற்று போன்றவற்றின் மீதே ஆர்வம் காட்டுகிறார்கள். தாவரவியல், விலங்கியல் வல்லுநர்கள் செடி கொடிகள் பிராணிகள் போன்ற அரை உயிருள்ள பொருட்களோடு தொடர்பு கொள்ளுகின்றனர். இரண்டாவதாக அறிவியலானது சோதனைக்குட்படுத்தப்படுவது, வரலாறோ சோதனைக்குட்படுத்தப்பட முடியாதது. வரலாறு, ஏற்கனவே நடந்து முடிந்து போன நிகழ்ச்சி சம்பந்தப்பட்டது. **அவை மீண்டும் நடக்கமுடியாது.** எனவே பரிசோதனை செய்து பார்க்கவும் இயலாது. வரலாற்றறிஞன் நூலகங்களில் அமர்ந்து, நிகழ்ச்சிகளின் சான்றுகளை பதிவு செய்யப்பட்ட ஆவணங்களிலிருந்து கண்டுணர முயற்சிக்கிறான். அறிவியலோ அதற்கு மாறாக காணக்கூடிய பொருட்களான இலை, பாறை வெளித் தோற்றங்களான ஒளி, உஷ்ணம் ஆகியவற்றோடு தொடர்பு கொள்கிறது. அறிவியல் வல்லுனரோ சோதனைச்சாலையில் அமர்ந்து பொருட்களை உற்று நோக்கி, அவற்றின் உண்மைத் தன்மைகளை கண்டுணர முயற்சிக்கின்றனர். மூன்றாவதாக, அறிவியலில் சோதனையின் பயனாக பொதுவிதிகளைக் கண்டுபிடிக்க முடியும். வரலாற்றின் சோதனைப் பொருட்களான சான்றுகள் தனித்தன்மை பொருந்தியதால், ஒவ்வொரு நிகழ்ச்சியும் தனியொரு சூழ்நிலையின் விளைவால் நிகழ்வதால் **பொதுவிதி** காண இயலாது. எதிர்காலத்தையும் கணித்தறிய இயலாது. அறிவியலில் எது முக்கியமென்றால் ஒழுங்கமைதிகளை உற்றுநோக்குவதேயாகும். ஒழுங்கமைதி என்பது இயற்கை நியதி ஆதலால் பொது விதிகள் உருவாக்கப்படலாம். எதிர்கால விளைவுகளை முன்கூட்டியே ஊகித்தறியலாம். **அறிவியல் வல்லுநர்கள் மழையையும், கிரகணத்தையும் முன்னறிவிப்பது போல் வரலாற்றறிஞர்கள் பஞ்சத்தையும்** போரையும் முன்னறிவிப்பு செய்தல் இயலாது. ரிக்மேன் (Rickman) என்பார், தமது **வரலாற்றின் பொருள்** என்ற நூலில், 'வரலாறு காலவரிசைப்படி நிகழும் நிகழ்ச்சிகளைப் பற்றியது, அவை ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தது. அறிவியலோ நடைமுறை ஒழுங்குத் தோற்றங்களைப் பற்றியது பொது விதி காண்பதையும் விதி முறைப்படி இயங்கும் ஒழுங்கமைதிகளை நிறுவுவதையும் நோக்கமாகக் கொண்டது', என்று கூறியுள்ளார். இறுதியாக, அறிவியலில் கடைப்பிடிக்கப்படும் முறை (Inductive) விதிவரு நிலையாகும். வரலாற்றில் (Deductive) விதிதரு நிலையாகும். அறிவியலில் தனித்தனி உதாரணங்களிலிருந்து பொது விதி பெறப்படுகிறது. இரும்பு, பித்தளை, மற்றும் உலோகங்கள் சூடேற்றப்பட்டால் விரிவடைகின்றன என்ற விதியை நிறுவுகிறோம். ஆனால் வரலாற்று வழிமுறையில் பல சம்பவங்களை அலசி ஆராய்ந்து குறிப்பிட்ட முடிவிற்கு வந்து சேருகிறோம். அதன்படி **அன்னியப்படை யெடுப்பு, ஆட்சியாளர்களின் பலவீனம், திறமையற்ற நிர்வாகம், அடக்குமுறை நடவடிக்கைகள் காரணமாக ஒரு பேரரசு வீழ்ச்சியடையும் என்றும் அறிகிறோம்.**

இலங்கையின் வரலாறு பற்றிய இந்நூலானது பல்கலைக்கழக மட்டத்தில் பயன்படுத்தப்படுவதற்கேற்ற விடயங்களை உள்ளடக்கிய வகையில் அமைக்கப் பெற்றுள்ளது. இந்நிலையில் இலங்கை வரலாற்றைப் படிப்பதில் உள்ள சிக்கல்களையும், பொதுமையான வரலாற்று வளர்ச்சியின் போக்கினையும் இணைத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளின் முடிபுகளை அடிப்படையாகக் கொண்டும், வரலாற்றாய்வாளரின் முடிபுகளையும் தளமாகக் கொண்டும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நிலையில் பாடசாலை, கல்லூரி மட்ட வகுப்பு மாணவர்களுக்குரிய பாடவிதானத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்கள் சிலவற்றிற்கு முரணாகக்கூட வரலாற்று விளக்கங்கள் இங்கு எடுத்துக் கையாளப்படக்கூடும். அவற்றை ஆசிரியர்களின் உதவியுடன் மாணவர்கள் விளங்கிக்கொள்ள எத்தனிக்கவேண்டும். ஏனெனில் பாடவிதானத்தில் கொடுக்கப்பட்ட வரலாற்றுச் செய்திகள் இன்னும் இன-முரண்பாடுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலாகும். உதாரணமாகக் குறிப்பிடுவதாயின் இலங்கையில் இரும்பின் உபயோகத்தினை அறிமுகம் செய்து வைத்தவர்கள் ஆரியர்கள் என்றே இற்றைவரைக்கும் பல்கலைக்கழக புகுமுக வகுப்பிற்கு உட்பட்ட பாடவிதானங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தொல்லியல் அகழ்வாய்வு அறிக்கையில் கி.மு. 1000இல் கி.மு. 800இல் வாழ்ந்த பெருங்கற்கால மக்களாலேயே இரும்பின் (வேல்) உபயோகம் இலங்கைக்கு முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது எனக் கொடுக்கப்பட்டமையைக் காணமுடிகிறது. இவ்வாறான வரலாற்றுச் செய்திகள் சில மாறுபட்ட வகையில் பாடவிதானங்களில் திரித்துக் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கதாகும்.

அத்தியாயம்: இரண்டு

இலங்கை வரலாற்றைக் கற்பதற்குரிய மூலாதாரங்கள்

அ. வரலாற்று மூலங்கள் - சாசனங்கள்

அநுராதபுரத்தினைத் தலைநகரமாகக் கொண்டு இலங்கையில் அரசியல், பண்பாட்டு வளர்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் சிங்கள மக்களதும் அவர்களைச் சூழ்ந்து வாழ்ந்த மக்களதும் வாழ்வு நடவடிக்கைகளை அறிவதற்கு சாசன ஆதாரங்களே முதன்மையான சான்றுகளாக விளங்குகின்றன. தொல்லியற் சான்றுகளை நீக்கிப் பார்க்கும்போது இம்மக்களது ஆரம்பகால நடவடிக்கைகளை ஓரளவுக்காவது சாசனங்களே பதிவுசெய்து வைத்துள்ளன. அநுராதபுரகால இலங்கைத் தீவின் பண்பாட்டு வளர்ச்சியின் கட்டங்களில் பெரும்பான்மையின மக்களதும், அவர்களைச் சூழ்ந்து வாழ்ந்த மக்களதும் பங்களிப்பினை சாசனச் சான்றுகள் வாயிலாகவே தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இக்காலத்தில் தோற்றம்பெற்ற இலக்கிய மரபுகளில் காணப்படும் ஒரு பக்கச் சார்பான செய்திகளைப் பகுப்பதற்குக் கூட இச்சாசனங்களே உதவியாகவுள்ளன. இலக்கியச் சான்றுகளில் காணப்படும் இடைச்செருகல், அதீத கற்பனை, தழுவல்கள் போன்ற நம்பகத்தன்மையைக் குறைக்கும் அம்சங்களை இச்சான்றுகளில் மிக அரிதாகவே காணமுடியும் என்பதால் அவை வரலாற்றுச் சான்றுகளுள் முக்கியமானவையாக உள்ளன.

சாசனப் பொறிப்பின் தன்மை

அநுராதபுரக்காலம் வரையிலான சாசனச் சான்றுகள் பல வகையான உண்மைகளைக் கொண்டுள்ளன. ஒரு நிலையான தலைநகரம் இக்காலப்பகுதி அரசியல், பண்பாட்டு அபிவிருத்திகளுக்குரிய இருக்கையாக அமையும் வரைக்குமுள்ள காலப்பகுதியில் தோற்றம் பெற்ற சாசனங்களாக உள்ளன. ஒரு விதத்தில் இவ்வகையான சாசனங்களின் பரவலானது **உலர்வலயப் பரப்பில** பயிர்ச்செய்கை மூலமாக ஜீவனோபாயத்தினை மேற்கொண்ட மக்கள் குடியிருப்புக்களினூடே காணப்படுகின்றன எனக் குறிப்பிடலாம். **தெளிவாகக் குறிப்பிடுவதானால் பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரப்புகளில் அவை பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன** எனலாம். இத்தகைய சாசனப் பொறிப்புக்கள் கி.மு. 3ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரைக்கும் உள்ள காலத்தில் வெளியிடப்பட்டன எனலாம்.

கி.பி. 1ஆம் நூற்றாண்டிலிருந்து இராஜரட்டையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங் காரணமாக சாசனப் பொறிப்புக்களிலும், வெளியீடுகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. பெரும்பாலான இலங்கை வரலாற்றாசிரியர்களது கருத்துப்படி இலங்கைத் தீவு முழுவதனையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் ஓரணிப்படுத்தப்பட்டதன் காரணமாகவும், சமூக பொருளாதார நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும் சாசனப் பொறிப்பில் சிறிது மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. அதாவது இராஜரட்டையில் இதுவரையில் நிலவி வந்திருக்கக்கூடிய செவிவழிச் செய்தி மரபுகள் முதன்முறையாக கல்லில் பொறிக்கப்படுவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கல்பொத்த எனக் குறிப்பிடுமளவுக்கு சாசனப் பரப்பு அதிகரித்தமையைக் காணலாம். இந்நிலையானது கி.பி. 1ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 4ஆம், 5ஆம் நூற்றாண்டுகள் வரைக்குமாவது நீடித்திருக்க வேண்டும்.

கி.பி. 5ஆம் நூற்றாண்டின் முடிவில் இருந்து இப்பிராந்தியத்தின் **புவிசார் அரசியலில** ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக சாசனப் பொறுப்பு முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. சாசனப் பொறிப்பில் தென்னிந்திய சொற்பதங்களும் பாணியும் இக்காலத்தில் பின்பற்றப்பட்டன. **வடமொழிச் சுலோகங்கள** தென்னிந்தியப் பண்பாட்டுப் பின்னணியில் இச்சாசனங்களில் பொறிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டன. **சாசனங்கள் நீண்டவையாகவும் மங்கலச் சொல், பொருள், ஓம்படைக்கிழவி (சாசனத்தின் பாதுகாப்பு)** என மூன்று ஒழுங்குகளில் பொறிக்கப்பட்டன. இந்நிலையானது கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இருந்து வளர்ச்சி பெற்றுச் சென்று கி.பி. 9ஆம், 10ஆம், 11ஆம் நூற்றாண்டுகளில் தனித்துவமான தன்மையை அடைந்தன.

H.C.P.Bell என்பவருடைய காலத்திலிருந்து தொல்லியல் மேலாய்வின் பெறுபேறாகக் கிடைத்துவரும் மூலாதாரங்களுள் **கல்வெட்டுகள்** எனப்படும் **பொறிப்புக்கள்** முக்கியமானவையாகும். 'இலங்கையின் ஆதிகால வரலாற்றுக்குப் பெருந்தொகையான பொறிப்புக்கள் கிடைத்துள்ளமை, வரலாற்றுக்குத் தெளிவையும், உண்மையையும் ஊட்டுகின்றது. கல்வெட்டுக்கள் அதிகமாக அவை குறிக்கும் நிகழ்ச்சிகள் சமகாலத்தவையாகவே இருக்கும். இதனாலும், கல்வெட்டுக்களில் உள்ள எழுத்துக்கள் இலகுவில் அழியாத தன்மை பெற்றிருப்பதாலும், சுருக்கமாகவும் நேரடியாகவும் சொல்ல வந்ததைக் கூறுவதாலும் இவ்வகை ஆதாரங்கள் மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றன. முதலில் **குகை முகடுகளிலும**, பின்னர் **கற்பாறைகளிலும**, தூண்களிலும், கற்சுவர்களிலும், கற்றளிகளிலும் கல்வெட்டுக்கள் இலங்கையில் பொறிக்கப்பட்டன. ஒரு சில பொறிப்புக்கள் **செப்பேடுகளிலும், பொற்றகடுகளிலும** உள. கிறிஸ்துவுக்கு முன் முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுக்களே இலங்கையிற் கிடைக்கும் கல்வெட்டுக்களில் மிகவும் பழையவை. பெரும்பாலான கல்வெட்டுக்கள் ஆராயப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. ஆதிகாலக் கல்வெட்டுக்கள் அதிகமாகச் சமயத் தொடர்புடையவை. அரசனோ,

அவன் குடும்பத்தவரோ, அதிகாரிகளோ, உள்ளூர் அலுவலர்களோ, பொது மக்களோ செய்துள்ள நன்கொடைகள் அக்கல்வெட்டுக்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும். அரச நன்கொடைகளைப் பதிவு செய்த கல்வெட்டுக்கள், அரசனது மரபைக்கூறி அவன் புகழ் இயம்பும் வாக்கியத்துடன் தொடங்கும். மன்னர்களின் மரபு வழிகள், பட்டப் பெயர்கள், ஆட்சிக்காலம், ஆட்சிப் பரப்பு அல்லது எல்லைகள் முதலியவற்றை அறிவதற்குப் பொறிப்புக்கள் பெரிதும் துணை செய்கின்றன. இவையன்றி நாட்டின் நிருவாக ஒழுங்குகள், வரிமுறை முதலான பிற விவரங்களும் இப்பொறிப்புக்கள் வாயிலாகப் பெறப்படுகின்றன. இலக்கிய ஆதாரங்களில் கூறப்படாது விடப்பட்ட பலவற்றைத் தந்து வரலாற்றைப் பூரணமாக்குவதோடு, அந்த ஆதாரங்களில் வரும் செய்திகளின் உண்மையைப் பரிசீலனை செய்யவும் இப்பொறிப்புக்கள் துணைநிற்கின்றன. பொறிப்புக்கள் தரும் செய்திகள், இலக்கிய ஆதாரங்களால் பெறப்பட்டவற்றை உறுதி செய்யவும், சில சமயங்களில் அவற்றைத் நீக்கித்தள்ளவும் உதவுகின்றன. இதனாலேயே பொறிப்புக்கள் இலக்கிய ஆதாரங்களின **உரைகல்** என அழைப்பர்.'

'தென்ஆசியாவில் கி.மு.3ஆம் நூற்றாண்டில் இருந்தே சாசனப் பொறிப்புக்கள் கிடைக்கத் தொடங்குகின்றன. அவ்வகையில் இலங்கைத் தீவினது வரலாற்றினைப் பொறுத்தவரைக்கும் இதே காலவரையறையே பொருந்துவதாக உள்ளது என்பர் சிலர். இக்காலகட்டத்திற்குரியதாகக் கொள்ளப்படும் சாசனப் பதிவுகளை ஆதி பிராமிச் சாசனங்கள் எனக் குறிப்பிடுவர். இராஜரட்டையின் பல பாகங்களுடன் இணைந்த வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்தும் இத்தகைய பதிவுகள் காணப்பட்டுள்ளன. இப்பதிவுகளானவை அதிகளவு அரசியல் சம்பந்தப்பட்ட குறிப்புக்களைக் கொண்டிருக்கவில்லை. இருந்தும் சமகால சமூக நிலைகளைப் பற்றியும், பொருளாதார சமய நிலைகளையிட்டும் சில தரவுகளைக் கொண்டிருப்பதாகக் கொள்ளலாம். சமூக, பொருளாதார, சமய நிலைகளைப் பற்றிய தேட்ட ஒழுங்கமைப்பே தற்போது வரலாறாக அமைவதன் காரணத்தினால் இவ்வாதிப் பிராமிச் சாசனங்களைப் பற்றிய விளக்கமானது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.'

சமகாலச் சம்பவங்களின் பதிவாகக் காணப்படும் ஆதிப் பிராமிச் சாசனங்கள் பிராமி எனப்படும் வரிவடிவில் பொறிக்கப்பட்டுள்ளன. இப்பிராமி வரிவடிவின் உபயோகமானது தென்னாசியாவில் கி.மு. 5ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.3ஆம் நூற்றாண்டின் இறுதிவரை மக்கள் மத்தியில் இருந்தது. ஆனால் பிரதேசத்திற்குப் பிரதேசம் சுதேசிய மொழிகளுடைய பயன்பாட்டிற்காக அல்லது அவற்றினைப் பதிவு செய்வதற்காக இவ்வரிவடிவம் உபயோகப்பட்டது. உதாரணமாகக் குறிப்பிடுவதாயின் உடஇந்தியாவில் இதே காலகட்டத்தில் பிராகிருதம், கரோஷ்டி மொழிகளைப் பதிவுசெய்வதற்காக அசோகன் பிராமி வரிவடிவத்தினை உபயோகித்திருந்தான். தக்கணத்தினைப் பொறுத்தவரையில் சதவாஹனர்கள் தாம் வெளியிட்டிருந்த இரட்டை மொழி நாணயங்களில் தமிழ்மொழி பிராகிருதம் இவையிரண்டையும் பதிவு செய்வதற்காக பிராமி வரிவடிவத்தினை

உபயோகித்தனர். தமிழகத்தினைப் பொறுத்தவரையில் ஆதித்தமிழ் மொழியை விளங்கிக்கொள்வதற்கு இவ்வரிவடிவம் உபயோகிக்கப்பட்டது. இதேபோன்று இலங்கைத் தீவில் தமிழ்மொழியையும் பாளி மொழியையும் அல்லது ஆதிச் சிங்கள, எலு மொழிகளையும் பதிவுசெய்து கொள்வதற்காகப் பிராமி வடிவம் உபயோகிக்கப்பட்டமையைக் காணலாம். அண்மையில் பூநகரிப் பிராந்தியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிராமி எழுத்துக்கள் பொறித்த ஏராளமான மட்பாண்ட ஓடுகள் ஆதித் தமிழ்மொழியின் பரவலான உபயோகத்தினைக் குறித்து நிற்கின்றன. இவை அவ்வப் பிராந்தியங்களில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த பண்பாட்டு அம்சங்களை ஓரளவுக்காவது பதிவு செய்துள்ளமையால் அவற்றை நம்பகமான வரலாற்றுச் சான்றாகக் கொள்ள முடிகிறது.

தமிழ்ப் பிராமி மட்பாண்டச் சாசனங்களும் அவற்றின் வரலாற்று முக்கியத்துவமும்

தெளிவான ஆய்வு செய்யப்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கும் தமிழ் பிராமிச் சாசனங்கள் பற்றி இங்கு சற்று நோக்குதல் வேண்டும். ஏற்கனவே இலங்கையில் ஒரிரு இடங்களில் தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் கிடைத்துள்ளதாக இலங்கை வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்தது அநுராதபுரத்தில் தமிழ் வணிக கணத்தினர் தங்கியிருந்ததாகக் கொள்ளப்படும் இருக்கைத் தமிழ் பிராமிக் கல்வெட்டாகும். பரணவிதான இது தொடர்பாக பல கட்டுரைகள் எழுதியுள்ளார். கி.மு. 1ஆம் நூற்றாண்டுக்குரிய பிராமி வரிவடிவ வளர்ச்சி நிலையில் இத்தமிழ் வணிக கணத்தினர் அறுவரது பெயர் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கொடுக்கப்பட்டுள்ள இப்பெயர்கள் படிமுறை ஒழுங்கில் பொறிக்கப்பட்டிருப்பது ஆராய்வதற்குரியது. உயர் அதிகார வரம்பு முறையில் அமையப்பெற்ற (செப்பனிடப்பட்ட பாறைப்) படிக்கட்டுகளில் **காரவ** என்பவனது பெயரைத் தலைமையாகக் கொண்டு இக்கற்பொறிப்பு இடம்பெற்றுள்ளது **நசத(ன்), சாக(ன), குபிரகஜாத(ன்), திஸ்ஸ(ன்), குபிர(ன்)** என்பனவே ஏனைய பெயர்களாகும். கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட கால அநுராதபரத்தில் காணப்பட்ட தமிழர் கட்டிடத்தின் அமைப்பு என்ற வகையிலும் இச்சாசன பதிவினைத் தாங்கியுள்ள அடித்தளப் பரப்பு தமிழ்ப் பண்பாட்டின் வெளிப்பாடாகவுள்ளமை நோக்கத்தக்கது. இது பற்றித் தெளிவாக எதிர்காலத்தில் ஆராயப்பட வேண்டியது அவசியமாகும்.

ஈழத்துத் தமிழ்ப் பிராமிச் சாசன வரிசையில் **மட்டக்களப்பில** இருந்து கண்டு பிடிக்கப்பெற்ற **வேளிர்** பற்றிய சாசனம் பிரதானமானதாகும். வேளிர் பற்றிய சாசனமொன்று **பூநகரியில** இருந்து மிக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டு வாசிக்கப்பட்டு விட்டது. சங்ககாலத் தமிழகத்தில் காணப்பட்டிருந்த வேளிர்குல குறுநிலத் தலைவர்களை ஒத்தவகையில் **மட்டக்களப்பிலிருந்து கதிர்காமம** வரையுள்ள கரையோரப் பகுதியில் **குறுநில அரசு** அமைப்பு காணப்பட்டிருந்தது.

பஞ்சவர் ஆட்சி மரபு ஒன்று கதிர்காமத்தில் நீண்டகாலம் நிலைத்திருந்ததற்குச் சாசன ஆதாரங்கள் கிடைத்துள்ளன. பஞ்சவர் மரபு பாண்டியருடைய குலமுறையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது என்பதனை கதிர்காமப் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட **மீன் சின்னம் பொறித்த (தமிழ்ப்) பிராமிச் சாசனங்கள் உறுதிப்படுத்தி நிற்கின்றன.**

பெரிய புளியங்குளம என்ற இடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்ப் பிராமிச் சாசனம் தமிழ் எழுத்துக்களுக்குரிய விசேட எழுத்துக்களைக் கொண்டுள்ளது. இதேபோன்று தமிழ் வரிவடிவங்களுக்குரிய சிறப்பு வடிவங்களைக் கொண்டுள்ள பல பிராமிக் கல்வெட்டுக்கள் இராஜரட்டைப் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய ஆதிப்பிராமித் தமிழ்க் கல்வெட்டுக்கள் வாயிலாக கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட கால ஈழத்தின் தமிழ்ப் பண்பாட்டுப் பரப்பின் சமூக பொருளாதார அம்சங்களை ஆராய முடியும்.

1. ஆனைக்கோட்டை 'கோவேதன்' தமிழ் பிராமி முத்திரைச் சாசனம்

1980இல் ஆனைக்கோட்டையில் உள்ள **கரையாம்பிட்டி** ஈமச்சாலையில் மேற்கொண்ட அகழ்வாய்வின் பெறுபேறாக இத்தமிழ்ப் பிராமி முத்திரைச் சாசனம் மீட்கப்பட்டது. திராவிடப் பண்பாட்டுக் குறிகாட்டியான கறுப்பு – சிவப்பு மட்கலமொன்றினுள் பாதுகாக்கப்பட்டிருந்த இம்முத்திரை செம்பினாலான ஒரு மோதிரமாகும். இரண்டு வரிகளில் எழுத்துக்களின் பொறிப்பினைக் கொண்டிருக்கும் இம்முத்திரைச் சாசனம் கீழ்வரியில் **கோவேதம்/கோவேத** என்ற வாசகத்தினைக் கொண்டிருக்கின்றது. கி.பி. முதலாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட காலப் பகுதிக்குரிய இவ்வரிவடிவமானது ஈழத்தமிழர் பயன்படுத்தியிருந்த பழந்தமிழ் வழக்கினை ஐயத்திற்கிடமின்றி எமக்கு நிரூபித்துள்ளது. தென்னிந்திய திராவிட – பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரப்பில் கிடைத்த **ஒரேயொரு செம்புச்சாசனம்** இது என்பதனை எவருமே இதுவரையில் மறுத்துரைக்கவில்லை. அவ்வகையில் ஈழத்தமிழர் பண்பாட்டுப் பரப்பில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்தில் **கோன்** முறையொன்று வளர்ச்சி பெற்றுவிட்டிருந்தமையை ஆனைக்கோட்டை முத்திரைச் சாசனம் உறுதிப்படுத்தி நிற்கின்றது. அவ்வகையில் ஈழத்தமிழரின் வரலாற்றுத் தொன்மையை மிகத் தெளிவாகக் காட்டிய முதலாவது தொல்லியற் சான்றும் இதுவெனலாம்.

2. பூநகரி 'வேளிர்' தமிழ்ப் பிராமிச் சாசனம்

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு தென்மேற்கேயுள்ள பூநகரியும் அதனுடன் இணைந்த நிலப்பரப்புக்களும் வரலாற்றுக்கு முற்பட்ட – பிற்பட்ட தொல்லியற் தடயங்களை நிறையவே கொண்டிருக்கின்றன. அவ்வகையில் குடாநாட்டிற்கு வெளியே தமிழ்ப் பிராமிச் சாசன வழக்குமுறை மக்கள் வாழ்வில் பங்கெடுத்திருந்த தன்மையை பூநகரியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தமிழ்ப் பிராமி மட்பாண்ட

சாசனங்கள் திட்டவட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளன. அவற்றுள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது 'வேளிர்' என்ற குலப்பெயர் பொறிக்கப்பட்டு கிடைத்த ஒரு மட்பாண்ட சாசனமாகும். ஈழத்தினதும் தென்னிந்திய தொல்லியலாளரதும் கவனத்தினை ஒருங்கே ஈர்த்த இச்சாசனமானது **சங்ககால வாழ்க்கை** முறையை ஒத்த பண்பாடும் குலமுறையும் ஈழத்தின் வடபகுதியில் இருந்தது என்பதனைத் திட்டவட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளது.

சங்ககால இலக்கியங்களில் **வேளீர் மரபு** பற்றிய பல அரிய வரலாற்று செய்திகளை நாம் காண்கின்றோம். சிற்றரச மரபு ஒன்று வேளீர் குலமக்களிடம் காணப்பட்டிருந்த தன்மையை அச்சான்றுகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. எனவே இப்பின்னணியில் பூநகரி வேளீர் தமிழ்ப்பிராமி மட்பாண்ட சாசனத்தையும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் நோக்கும்பொழுது கி.பி. முதலாம் நூற்றாண்டளவில் பூநகரியில் கோன்மை முறையைத் தழுவிய அரச குடும்பமொன்று ஆட்சி புரிந்திருக்க வேண்டுமென்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். இதனை மேலும் அங்கிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சங்ககால நாணயங்களும் உறுதிப்படுத்தி நிற்கின்றன. பூநகரியில் பெருங்கற் பண்பாட்டு தடயங்களும் அவ்வாறான ஒரு கோன்மை முறையை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

3. கந்தரோடையில் கிடைத்த 'ஆபதி' மட்பாண்டச் சாசனம்

மிகவும் அண்மைக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொல்லியற் சான்று என்ற வகையில் கந்தரோடை **"ஆபதி"** மட்பாண்டத் தமிழ்ப் பிராமிச்சாசனம் ஈழத்தமிழர் வரலாற்றிற்கு மேலும் உதவுவதாக உள்ளது. கறுப்பு – சிவப்பு மட்கலத்தில் பொறிக்கப்பட்ட இச்சாசனம் தொடர்ச்சியானதாகப் பொறிக்கப்பட்டிருந்தும் எமக்கு **"ஆபதி எ....."** என மட்டுமேயுள்ள வாசகம் மாத்திரம் கிடைத்துள்ளது. தமிழ்ப்பிராமி வாசகத்தினைக் கொண்டுள்ள இச்சாசனம் கி.பி. 1ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்டது என்பதனை அதன் வரிவடிவ முறைமையிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது.

பழந்தமிழ் வழக்கில் **'ஆ'** என்பது பசுவினையும், **'பதி'** என்பது தலைவனையும் குறித்து நின்றமையால் **"ஆபதி'** என்பது பசுக்களின் தலைவன் என்ற பொருளில் கொள்ளமுடியும். அவ்வாறாயின் அதுவும் **'கோன்மை'** தொடர்பாகவே சங்ககால வாழ்வு மரபில் கையாளப்பட்டிருந்த தன்மையை சங்க இலக்கியங்கள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது. ஆநிரை கவர்தல் - ஆநிரை மீட்டல் என்பன சங்ககாலத்து அரசமுறையோடு தொடர்புபட்டதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. **பசுக்களைச் செல்வமாக உடையவனே அரசன் என்பது இதனாற் பெறப்படும்.** அவ்வகையில் குடாநாட்டுப் பரப்பினுள் கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட **'ஆபதி'** என்ற தமிழ்ப்பிராமிச் சாசனமானது ஈழத்தமிழர் வரலாற்றின் கோன்மையை எடுத்துக்காட்டியுள்ளது. ஈழத்து வரலாற்று இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படாத இச்செய்தியை, கந்தரோடை தமிழ்ப்பிராமி மட்பாண்டச் சாசனம் தருவதிலிருந்து அம்மக்கட்

கூட்டத்தின் தொன்மையான பண்பாட்டு எல்லையை, கிறிஸ்தவ சகாப்த காலத்திற்கும் முற்பட்ட நூற்றாண்டுகளுக்கு எடுத்துச்செல்ல முடிகின்றது.

4. கந்தரோடை 'அபிசிதன்' மட்பாண்டச்சாசனம்

1985 இல் கந்தரோடையில் இக்கட்டுரையாசிரியரினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின்போது இவ்வாசகம் பொறிக்கப்பட்ட மட்பாண்டச்சாசனம் கிடைக்கப்பெற்றது. தமிழ்நாட்டுக்குரிய **பழந்தமிழ் பிராமிவரிவடிவமாக கறுப்புச்சிவப்பு மட்பாண்டத்தில** பொறிக்கப்பட்டுக்கிடைத்த இச்சாசனம் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். **அன் விகுதியுடன** முடிவடைகின்ற இச்சாசனம் தமிழ்ப்பிராமி வரிவடிவப் பிரயோகத்தினை கந்தரோடையில் திட்டவட்டமாக உறுதிப்படுத்திய ஒரு சாசனப் பதிவேடாகும்.

மேலே கூறப்பட்டவற்றைத் தொகுத்து நோக்கும்போது பின்வரும் விடயங்கள் எமது அறிவிற்கு தெளிவாகின்றன. அதாவது ஈழத்தமிழர் பண்பாட்டுப் பகைப்புலமானது தென்னிந்தியத் தமிழகப் பண்பாட்டுப் பகைப்புலத்துடனான தொடர்புகளையும், சமாந்தரமான உறவுகளையும் காலாதிகாலமாகக் கொண்டிருந்திருப்பினும் ஈழத்துக்கெனத் தனித்துவமான வெளிப்பாட்டினை தமிழகத்திலிருந்தும் சிறப்புக்கூறாக வேறுபடுத்திய நிலையில் தாங்கிக் கொண்டிருப்பதனை இப்போது காணமுடிகிறது. தற்கால நிலையில் தமிழ்மொழி வழக்காறானது யாழ்ப்பாணத்தில் அதன் தனித்துவத்தினையும் இலக்கிய வழமைகளையும் இலக்கணச் செழுமைகளையும் கொண்டு எவ்வாறு தமிழகமொழிப் பயன்பாட்டின் விழுமியங்களிலிருந்து தனித்துவப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றதோ அவ்வாறே புராதன ஈழத்தமிழர் பண்பாட்டுப் பரப்பும் தனித்துவமான அரசியல் சமூக, பொருளாதார கட்டமைவுகளுடன் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தென்கிழக்கிலங்கையின் கடற்கரையோரப் பிராந்தியம், வடமேற்கு – வடகிழக்கிலங்கையின் கடற்கரையோரப் பிராந்தியங்கள் என்பன காலத்தால் முற்பட்ட ஈழத்தமிழரின் பண்பாட்டு மண்படையடுக்குகளைக் கொண்டிருப்பதனையே அகழ்வாய்வின் முடிபுகள் தெளிவாக்கியுள்ளன. காலத்தின் போக்கில் - வளர்ச்சியில் ஏற்பட்ட பண்பாட்டு கட்டுமானங்களின் சேர்க்கையினாலும், கலப்பினாலும், இடப்பெயர்ச்சியினாலுமே ஈழத்தமிழரின் வரலாற்றுகாலக் குடியிருப்புகள் நகர்த்தப்பட்டு மாற்றங்களுக்கு உட்படுத்துவதற்குரிய அடிப்படைக் காரணியாயிற்று.

இந்நிலையில் ஈழத்தின் அடிப்படைப் பண்பாட்டுப் பரப்பு ஆதித்திராவிட பெருங்கற்காலச் சமூகத்தினரின் அலகுகளினால் **பாவப்பட்டிருந்த** (Pavement) வகையினையும், பிற்காலத்தில் அதற்கு மேல் பிறிதொரு மொழி, சமய பண்பாட்டுப் பிரிவினரால் அடுக்கப்பட்ட **பௌத்தப் பண்பாட்டு மேற்கட்டுமான அலகுகளும்**, பிற்காலங்களில் **'ஆரியம் அல்லாத'** கலை வடிவங்களும் குறியீடுகளும் இலச்சினைகளும் மரபுக்குறிகளும் இடம்பெறுவதற்கும், பிறபண்பாட்டு விழுமியங்களை ஏற்றுக்கொள்வதற்குமான தவிர்க்கமுடியாதபடியான சூழல்

காணப்பட்டிருந்தது எனலாம். பௌத்த மதத்தினை எடுத்துக்கொண்டாற்கூட இலங்கையில் 'சிங்கள' என்ற இனத்துவ 'அடையாள அலகு' என்ற முறையையும் மீறி பூர்வீக திராவிட மதக்குழுவினரின் தவிர்க்கமுடியாத அம்சங்களின் அரவணைப்பினை உள்வாங்கவேண்டியிருந்த சூழ்நிலையையும காண்கின்றோம். இதுவே இலங்கையில் பௌத்தம் என்பது "அரசியல் அலகுகளினால் மட்டும்" வலுப்படுத்தப்பட்டமைக்கும், ஜீவனோபாய ஊடகங்களின் தொடர்பினின்றும் நீங்கி அம்மதம் சாதாரண பொதுமக்களின் வழிபாட்டு முறைகளினின்றும் தனிமைப்படுத்தப்பட்டமைக்கும காரணமாயிற்று. இதனாலேயே தென்னிலங்கை வாழ் பாமர சிங்கள மக்களின் வாழ்வில் 'இந்துமதம் ஒரு குடும்ப மதமாக' கி.பி. 16ஆம் நூற்றாண்டு வரைக்குமாவது முக்கியத்துவம் பெற்று விளங்கக் காரணமாயிற்று. அவ்வழியே ஈழத்தமிழரின் ஆதித்திராவிடப் பண்பாட்டுக் கட்டுமானப் பரப்பின் புதிய எல்லைகளையும் கால வரம்பினையும் நிரற்படுத்திக்கொள்ள முடிகிறது. அவ்வாறான நிரற்படுத்தலுக்கு உதவுவதாகவே ஈழத்தில் கிடைத்த திராவிடக் கலைமுறைகளும், தமிழ் பிராமிச் சாசனங்களும், ஈழத்துத் திராவிட ராஜ்ய குலங்களால் வெளியிட்டு வைக்கப்பெற்ற நாக, உரக, சிங்க நாணயங்களும் முத்திரைகள், உருவம் பொறிக்கப்பட்ட ரத்தின மணிகள் (கந்தரோடை) மட்பாண்ட முத்திரைகள் போன்றனவும் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளின் பெறுபேறாக எமக்குக் கிட்டியுள்ளன. அவையே ஈழத்தமிழரின் பண்பாட்டுப் பரப்பின் புதிய எல்லைகளின் மூலங்களுமாகும். அவ்வழியே ஈழத்தமிழரின் பண்பாட்டுக் கட்டுமானப்பரப்பின் கால வரம்பினையும் பிரதேச வரம்பினையும் நிரற்படுத்திக் கொள்ளமுடிகின்றது. அத்தகைய நிரற்படுத்தலுக்கு உதவியாகவே வன்னிப்பிராந்தியத்தில் அண்மைக்காலங்களில் கிடைத்த புராதன தமிழ்ப்பிராமிச் சாசனங்களும் ஈழத்து ஆதித்திராவிட ராஜீய குலங்களால் வெளியிடப்பெற்று வைக்கப்பட்ட முத்திரைகள், நாணயங்கள் ரத்தின மணிகள் போன்றனவும் கிடைத்துள்ளமையை அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வின் பெறுபேறுகள் தெளிவுபடுத்தியுள்ளன.

5. கந்தரோடை 'பலூர்' மட்பாண்டச் சாசனம்

1985 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது கந்தரோடையிலிருந்து கிடைத்த இம்மட்பாண்டச்சாசனம் சிவத்த வண்ணமுடைய தடித்த மட்பாண்டமொன்றின் வயிற்றுப்பாகத்தில் பொறிக்கப்பட்டுக் காணப்பட்டது. தமிழ்நாட்டுப் பிராமி வரிவடிவில் அமைந்துள்ள இம்மட்பாண்டச்சாசனம் ஓரிடப் பெயரினைக் குறித்து நிற்கின்றது. பலூர் என வாசிக்கத்தக்க இவ்விடப்பெயரினை தென்னிந்தியாவிலுள்ள ஒரிஸா மாவட்டத்திலுள்ள அதே பெயரினையுடைய கிராமத்துடன் அடையாளம் காணலாம். யாழ்ப்பாணக்குடாநாட்டில் பலாலி, பல்லப்பை, பல்லவம் ஆகிய கிராமப் பெயர்களுடனும் பலூர் என்ற வாசகத்தினை இணைத்துப் பார்க்க முடிகின்றது. எவ்வகையிலேனும் இம்மட்பாண்டச் சாசனமானது யாழ்ப்பாணக்குடாநாட்டு வரலாற்றுக்கு மட்டுமல்லாது தென்னிந்திய

- இலங்கை பண்பாட்டுத்தொடர்பின் வரலாற்றினை வரைவதற்கு பேருதவியாக அமைந்துள்ளது.

6. கந்தரோடை 'குணி' மட்பாண்டச் சாசனம்:

1985 ஆம் ஆண்டில் கந்தரோடையிலிருந்து கிடைத்த இம்மட்பாண்டச் சாசனப் பொறிப்பானது பொதுமக்கள் மண் தேவைக்காக கிண்டிய கிடங்கொன்றிலிருந்து மீட்டெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இம்மட்பாண்டச் சாசனத்தினுடைய இருபக்கங்களும் உடைந்துவிட்டநிலையில், குணி என்று மிகத்தெளிவாக வாசிக்கத்தக்க வகையில் அச்சாசன வாசகம் காணப்படுகின்றது. ஒருவேளையில் **பிக்குணி** என்ற சொற்தொடரின் இறுதி எழுத்துக்களாக **குணி** அமைந்திருக்குமாயின் இலங்கையின் **தமிழ்ப்பௌத்த வரலாற்றிற்கு** இம்மட்பாண்டச் சாசனம் சான்று சேர்ப்பதாக அமையும். **மணிமேகலை** காவியத்தில் பிக்குணி என்ற வாசகம் **பெண்துறவியைக** குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதனையும் காணமுடிகின்றது.

சிங்கள மொழியின் பிரயோகத்தினைக் காட்டும் மட்பாண்டச் சாசன மூலங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், அனுராதபுரம் மற்றும் திஸமகரகமையிலும் இருந்து சிங்களப்பிராகிருத மொழியில் பொறிக்கப்பட்ட மட்பாண்டச்சாசனங்கள் குறிப்பிடத்தக்களவில் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கந்தரோடையிலிருந்து இரு முக்கியத்துவம் வாய்ந்த சிங்களப்பிராகிருதச் சாசனங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் முதலாவது **ததஹபத** என்ற வாசகத்தினையும், இரண்டாவது **அனுராதஸ** என்ற வாசகத்தினையும் கொண்டு விளங்குவதனைக் காணலாம். இந்த இரண்டு பொறிப்புக்களும் இலங்கையின் பௌத்தமத வரலாற்றிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மட்பாண்டச் சாசனங்களாக இருப்பதனையும் காணலாம். **ததஹபத** என்ற பிராகிருதத் தொடருக்கு **தத்தாவின் பாத்திரம** என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. ஒரு பௌத்தப்பிக்குவினுடைய உண்கலமாக அப்பாத்திரம் விளங்கியிருந்திருக்க வேண்டும். **அனுராதஸ** என்பதும் **அனுராதாவினுடையது** என்ற பொருளில் அவ்வாசகம் பொறிக்கப்பட்ட மட்கலம் உணர்த்துகின்றது. இதே வாசகத்தினுடைய இன்னொரு மட்பாண்டச்சாசனம் அனுராதபுரத்திலிருந்தும் ஏற்கனவே கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. சிரான் தெரணியாகல அம்மட்பாண்டத்தில் பொறிக்கப்பட்ட பெயரினடியாகவே **அனுராதபுரி** நகர் பெயர் பெற்றதாகக் குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கது.

ஆதிச் சிங்களப் பிராகிருதப் பிராமிச் சாசனங்களும் இலங்கைப் பண்பாட்டு வரலாறும்

அநுராதபுரத்திற்கு பௌத்த சமயம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னரே இங்கு பிராமி வரிவடிவம் உபயோகப்படுத்தப்பட்டது என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆனாலும் தமிழ் நாட்டினூடாக பௌத்த சமயம்

அநுராதபுரத்திற்கு அறிமுகமான நிகழ்வு தமிழ் நாட்டுச் செல்வாக்கினூடாக தபிராமி வரிவடிவத்தின் உபயோகம் இங்கு பரவலாக அமைவதற்கு வாய்ப்பாயிற்று. இக்காலகட்டத்தில் ஓரிருவரிச் சாசனங்கள் குகைகளில் மேல் விளிம்புகளின் கீழ்ப்பகுதிகளில் பொறிக்கப்பட்டன. இதனால் இவ்வகைச் சாசனங்கள் பிராமிக் குகைக் கல்வெட்டுக்கள் என அழைக்கப்பட்டன. இவ்வகைச் சாசனங்கள் இக்கால வரலாற்றிற்கு மிகவும் நம்பகமான ஆதாரமாக விளங்குவதனைக் காணலாம்.

ஆதிப்பிராமிக் குகைக் கல்வெட்டுக்களின் பதிவின் பிரதான நோக்கம், முதலில் குகைத் தானங்களையே பதிவு செய்வதாகும். கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையுள்ள காலப் பகுதியில் இலங்கையில் குடியிருப்பாளர்கள் பலதரப்பட்டவர்களும் குகைகளைத் தானமாக வழங்கியிருந்த செய்தியினையே இச்சாசனங்கள் பதிவுசெய்திருந்தன. பலதரப்பட்ட குடியிருப்பாளர்கள் என்று குறிப்பிடும் பொழுது **வணிகர், நெசவாளர், எண்ணெய் வியாபாரி, உப்பு வியாபாரி, மணிகர** போன்றோர் அடங்குவர்.

நான்கு திசைகளிலுமுள்ள பௌத்த சங்கத்திற்கு இறந்த காலத்திலும், எதிர்காலத்திலும் இக்குகை என பிராமிப் பொறிப்பில் பெருமளவிற்கு ஒரே தன்மையை உடையதாய் பொறிக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். இச்சாசனங்களில் தானம் வழங்கியவரின் பெயர், அவருடைய விருதுப்பெயர், அவரது பரம்பரை, தொழில், சமுதாயத்தில் அவரது அந்தஸ்து முதலான பல விபரங்களைப் பதிவு செய்துள்ளமையைக் காணமுடிகிறது. எனவே கி.மு.3ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி.1ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரைக்கும் பொதுமக்களால் பௌத்த சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட குகைத்தான விபரங்களை இச்சாசனங்கள் பதிவு செய்துள்ள நிலையில் அவை எமக்கு சான்றாதாரமாக அமைகின்றன.

கி.பி. 1ஆம் நூற்றாண்டிற்கும் 3ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட சாசனங்கள்

கி.பி. 1ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.3ஆம் நூற்றாண்டு முடியும் வரையுள்ள காலப்பகுதியில் வெளிவந்த பிராமிக் குகைக் கல்வெட்டுக்களின் தன்மை, பொருளடக்கம் என்பன வேறுபட்டமைகின்றன. இப்பொழுது அப்பிராந்தியத்தின் அதிகாரம்மிக்க ஒருவன் ஒருவேளை சிற்றரசனாகக்கூட இருப்பவன் பௌத்த சங்கங்களுக்கு குகைத்தானங்களுடன் வாவி, கால்வாய், நிலம் போன்றவற்றைத் தானமாகக் கொடுக்கின்ற பண்பு உருவாக்கப்படுகிறது. இதனால் பிராமிக் கல்வெட்டுக்கள் சிலவேளைகளில் நான்கு வரிகளை உடையனவாகவும் அமைக்கப்படுவதனைக் காணலாம்.

இக்காலகட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் **ராஜா, தீபராஜ, மகாராஜ** என்ற பதங்கள் இடம்பெறுவதிலிருந்து சமூக அமைப்பானது சமகாலத்தில் பல

இராச்சியப் பிரிவுகளுக்குள் அடங்கியிருந்தமையினையும் பின்னர் வலுவான அரச பிரிவுக்குள் உள்ளடங்கிச் செல்வதனையும் காணமுடிகிறது. **தீபராஜா** என்ற பதப்பிரயோகமானது ஒருவேளை **நாகன்** என்ற முதற்பதம் கெட்டநிலையில் யாழ்ப்பாணத்து மன்னன் ஒருவனைக் குறித்து நின்றது எனக் குறிப்பிடலாம். இதேபோன்று தென் இலங்கையிலும் **கல்யாணி, மகாகம, திகவாவி** போன்ற மையங்களில் சிறுசிறு **அரசமுறைகள்** இக்காலத்தில் காணப்பட்டிருந்தன என்பதனை இப்பிராமிக் கல்வெட்டுக்கள் சான்று காட்டிநிற்கின்றன.

தோணிகல, வெகரகல, பெருமியன்குளம், பகலகயினாட்டம, ரூவான்வலிதாபக, திம்பரிவேவ, வேலன்கோள, நாகரிகந்த, ராஜகெல ஆகிய இடங்களைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுக்களில் வழங்கப்பட்ட தானங்களின் பல்வேறுபட்ட தன்மைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மதகுருமாரின் வசிப்பிடங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், அதில் திருத்த வேலைகளைச் செய்தல், விளக்குகளுக்காக எண்ணெய் வழங்கல், விழாக்களுக்காக உணவு வழங்கல் போன்றன பதிவுசெய்யப்பட்ட செய்திகளாகும். இப்பொழுது கிராமங்கள்கூட தானமாகப் பதிவு செய்யப்பட்டதனைக் காணமுடிகிறது. தோணிகலக் கல்வெட்டில் தனிப்பட்ட ஒருவர் சங்கத்திற்கு உணவு வழங்கிய செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. **லபுஆத்தபண்டிகல** என்ற இடத்திலுள்ள கல்வெட்டு ஒன்று குறிப்பிட்ட வணிக கணத்தினர் பௌத்த சங்கமொன்றிற்கு தலைநகரில் இருந்து **நெல்மணி** தானம் செய்தமையைப் பதிவு செய்துள்ளது. **ஹிங்குராஹல** பிராமிக் கல்வெட்டொன்று போர்வீரர் குழு ஒன்றிடமிருந்து விகாரை ஒன்றுக்கு நிலத்தொகுதியை வாங்கிக்கொண்டமையினைப் பதிவு செய்துள்ளது. இதேகாலகட்டத்திற்குரிய **வல்லிபுரம் பொற்சாசனமானது** நாகதீபத்தில் விகாரை ஒன்று கட்டுவிக்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு **கி.பி. 3ஆம் நூற்றாண்டு முடியும்வரைக்குமுள்ள காலப் பகுதியில் ஆதிப் பிராமச் சாசனங்கள் பதிவுசெய்துள்ள சமூக, பொருளாதார, சமயச் செய்திக் குறிப்புக்கள் இக்காலப் பண்பாட்டு வளர்ச்சியைக கண்டுகொள்வதற்கு உதவுவதாக உள்ளது.**

பொதுவாக இவ்வாதிப் பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு படிப்படியாக பொதுமக்களிடமிருந்த சொத்தானது பௌத்த சங்கங்களுக்குச் சென்றடைவதனையும், பின்னர் செல்வாக்குப் பெற்ற அச்சங்கம் வலுவான அரசு ஒன்றினை அமைப்பதனையும் காணலாம். சிற்றரசுகள் பல படிப்படியாக மறைந்து அநுராதபுரத்தினை மத்தியாகக் கொண்ட பெரிய அரசின் கீழ் ஒற்றுமைப்பட்டமையினையும் அவ்வாறான ஒரு நிலை கி.பி. 1ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து ஏற்பட்டது என்பதனையும் இச்சாசனங்களில் இருந்து கண்டுகொள்ள முடிகிறது. இவ்வளர்ச்சியின் போதே வடபகுதியில் இருந்த தமிழ் அரசுகளும் தென்கிழக்குப் பகுதியிலும், மகாவலிகங்கைப் பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் இருந்த தமிழ் அரசுகளும் அரசியல் அதிகாரத்தின் அடிப்படையில் வெற்றி கொள்ளப்பட்டமையையும், அதன் விளைவாக சிங்கள அரசு தனி முதன்மையைப் பெற்றமையினையும் இந்தப் பிராமிச் சாசனங்களினூடாக

அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வளர்ச்சியினூடாகவே சிங்களமொழி ஒன்றும் அதன் வரிவடிவமும் தோற்றம் பெற்றமையைக் காணமுடிந்தது.

மகாயானப் பௌத்த கருத்துக்களுடன் இலங்கையில் புதியவகையில் அமைந்த சாசனங்கள் வெளிவந்தன. திருகோணமலையில் உள்ள **குச்சவெளிக் கல்வெட்டானது** வடமொழியில் பொறிக்கப்பட்ட ஒரு பதிவாகும். அது குறிப்பிடுகின்ற செய்தியானது ஒருவன் பல சைத்தியங்களை அமைப்பதன் மூலம் சுவர்க்கத்தினை அடையலாம் என்ற கோட்பாட்டினைக் கொண்டுள்ளது. வடமொழியில் அமைந்த **திரியாய்க் கல்வெட்டு** ஒன்று அவலோகிதீஸ்வரர் பற்றிய வர்ணனைகளைக் குறிப்பிடுகின்றது. இக்காலப் பகுதிக்குரிய **மிகிந்தலைச் சாசனம்** ஒன்று திரிகயஸ்டவம் என்ற சொற்பிரயோகத்தினைக் கொண்டு மகாயான பௌத்தக் கோட்பாட்டினை விளக்கி நிற்கின்றது. இவ்வாறு மகாயான பௌத்த சமயக் கருத்துக்களுடன் இலங்கையின் சாசனப் பொறிப்பு முறையிலும், பொருளமைதியிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டமையைக் காணலாம்.

கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் சாசனங்கள்

அநுராதபுரகால இலங்கையில் கி.பி. 6ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து பொறிக்கப்பட்ட சாசனங்கள் மிகமிகக் குறைவாகவே இருந்தபொழுதிலும் அவற்றின் தன்மை, பொருளடக்கம் என்பன தென்னிந்திய முறைகளைத் தழுவி அமைந்தமையைக் காணலாம். குறிப்பாக தூண் சாசனங்களை உருவாக்குகின்ற முறைமை இலங்கை மன்னர்கள் தெரிந்திருந்தனர். ஸ்ரீமேகவர்ணனைத் தொடர்ந்து பல்லவப் பண்பாட்டின் தாக்கம் இலங்கையை ஊடுருவியமையால் பல்லவ அரண்மனையின் மாதிரி முறை இங்கும் பின்பற்றப்பட்ட வாய்ப்பாயிற்று. பல்லவ நிர்வாக முறையின் மாதிரி இங்கும் பின்பற்றப்பட்டமைக்குச் சான்றுகள் உள. வாரிசுரிமை தொடர்பான விடயத்தில் இக்காலத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. சிங்கள வாரிசுரிமைக் கோட்பாடான மூத்த சகோதரன் வழி கைவிடப்பட்டு இப்பொழுது தகப்பன் - மகன் வழி பின்பற்றப்பட்டது. எனவே அரச பொறிப்பு முறைகளிலும் பல்லவர் பாணி பின்பற்றப்பட்டது என்பது தெளிவு. எனவே ஏராளமான தூண் பொறிப்புக்கள் இக்காலத்திலிருந்து கிடைக்கப் பெறுகின்றன.

1ஆம் சேன மன்னன காலத்திலிருந்து **தூண் சாசனங்கள** பெருந்தொகையாகக் கிடைக்கின்றன. நிலங்கள் அல்லது கிராமங்கள் அல்லது விகாரைகள் தொடர்பாக பிரகடனப்படுத்தப்பட்ட சில விதிகளை இவை வெளிப்படுத்துகின்றன. வரிவிலக்குப் பெற்ற நிலங்கள், வரிவிதிப்புக்குட்பட்ட நிலங்கள் பற்றிய தகவல்களை அவை வழங்குகின்றன. இத்தகைய பதிவேடுகள் யாவும் அநுராதபுரகால அரசியல், நிர்வாக வரலாற்றுக்கு முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. இவை நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்களையும், உத்தியோகத்தர்களது பல்வேறு நிலைப்பட்ட தரங்களையும் சூடிக்கொண்ட விருதுப் பெயர்களையும் தருகின்றன. இவ்வகைப்பட்ட சாசனங்களுட் சில மத்திய அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டவையாகவும், சில மாகாண

அரசியலமைப்பினாலும், மற்றும் சில நிர்வாக சபைகளினாலும், வெளியிடப்பட்டன வாகவும் உள்ளன. இவற்றிலே ஒரே தன்மைத்தான பொருளடக்கத்தினையும் ஒழுங்கினையும் காணமுடிகின்றது.

கி.பி.10ஆம் நூற்றாண்டாரம்பத்தில மிக நீண்ட தன்மையுடன் ஒரு சில சாசனங்கள் வெளிவந்தமையைக் காணமுடிந்தது. பல்வேறு வகையான நோக்கங்களுக்காக நீண்ட சாசனங்கள் ஏற்படுத்தப்பட்டன. இத்தகைய சாசனங்கள் யாவும் பாறைகளின் மேற்பரப்பில் பொறிக்கப்பட்டன. இவற்றுள் மிகவும் பிரசித்தி பெற்ற சாசனமாக விளங்குவது **மிகிந்தலையில் உள்ள கற்பலகைச் சாசனமாகும**. இது விகாரைகளுக்குரிய நிலங்களின் பரிபாலனங்களை பௌத்த குருமார் எவ்வாறு மேற்கொள்ளவேண்டும் என்பதனைக் குறிப்பிடுகிறது. இவ்வகையான ஏனைய கற்பலகை சாசனங்களாக அநுராதபுரத்திலுள்ள 5ஆம் கஸ்ஸபனுடைய சாசனம், களுதியபொக்குணவில் உள்ள 3ஆம் சேனனுடைய சாசனம், புளியங்குளத்திலுள்ள 5ஆம் தப்புலனது சாசனம் என்பன பிரதானமாகக் குறிப்பிடத்தக்கவை. பதுளையில் உள்ள ஒரு தூண் கல்வெட்டானது வியாபார நகர் ஒன்றின் பொதுநிர்வாக அமைப்பு முறையினைக் குறிப்பிடுகின்றது. 4ஆம் மகிந்தனுடைய வெஸ்ஸகிரி கற்பலகைச் சாசனமானது அரசனுக்குரிய பிரதான குளத்திலிருந்து நீரினை வழங்குவதற்கான சில ஒழுங்கு விதிகளை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. அபயகிரி விகாரையிலுள்ள நீண்ட சமஸ்கிருதக் கல்வெட்டானது புத்தகுருமாரின் வதிவிடம் பற்றிய சில ஒழுக்க விதிகளை எடுத்துக் காட்டுகின்றது. இக்காலகட்டத்தில் நிலத் தானங்களைக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் மிகக்குறைவு என்றே கூறவேண்டும். ஆனால் **பமுனு நிலம** எனக் குறிப்பிடப்படும் நிலங்களைப் பற்றிய குறிப்பினையும் சில இடங்களில் உள்ள சாசனங்களில் காணமுடிகின்றது.

சிகிரியின் பளிங்குச் சுவர்களில் பொறிக்கப்பட்ட அந்த ஓவியங்களைப் பற்றிய பாடல்கள், பாடற் தொகுப்புக்கள் அநுராதபுரகால சாசனவியற்துறை வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றுள் 100க்கும் மேற்பட்டவை சுவரோவியங்களில் காணப்படும் கன்னிகளின் அழகினைப் பற்றிச் சித்தரிப்பனவாக உள்ளன. இவற்றிலிருந்து தற்செயலாகக் குறிப்பிடப்பட்ட சில பெயர்கள், விருதுப்பெயர்கள், இடப்பெயர்கள், அந்த ஓவியங்களை வரைந்தவர் பற்றிய குறிப்புக்கள், காலம் முதலியவற்றை அறியக்கூடியதாகவுள்ளது. பெருமளவிலான பாடல்கள் **தன்னுணர்ச்சிப் பாடல்களாகவே** உள்ளன. இவை பெரும் அளவுக்குச் சிங்களமொழியிலும், குறிப்பிடத்தக்களவிற்குத் **தமிழ்மொழியிலும** உள்ளன. சிங்களமொழியில் அமைந்தனவற்றைப் பேராசிரியர் பரணவிதான படியெடுத்து வெளியிட்டுவிட்டார். **ஆனால் தமிழ்ப் பாடல்கள் இன்னும் பிரதிசெய்யப்படாமல் காணப்படுகின்றன**. இவை 8ஆம், 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவையாகும். சில இக்காலகட்டத்திற்கு முற்பட்டவை யாகவும் உள்ளன. இவை முற்பட்ட அநுராதபுர காலப் பண்பாட்டு வரலாற்றிற்குரியனவாகவும் உள்ளன. அவை அநுராதபுர காலப் பண்பாட்டு வரலாற்றிற்கு உதவுவனவாகும் என்பதில் ஐயமில்லை.

இலங்கை தொடர்பான வெளிநாட்டு சாசனப் பதிவுகள்

அநுராதபுரகால அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றுத் தடயங்களையும், தொடர்புகளையும் இலங்கைக்கு வெளியே குறிப்பாக இந்தியாவில் உள்ள சில சாசனப் பதிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய சாசனப் பதிவுகள் இவ்விரு பிராந்தியங்களுக்குமிடையே ஆதிகாலம் முதல் இருந்து வருகின்ற அரசியல், பண்பாட்டுத் தொடர்புகளை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

வட இந்தியாவில் ஆட்சிசெய்த அசோகப் பேரரசன் தனது ஆட்சிக் காலத்தின்போது இலங்கைத் தீவுடனும், அரசியல் பண்பாட்டு அடிப்படைகளில் தொடர்பு கொண்டிருந்தான் என்பதனை அவனது **கிர்னார் பாறைப் பிரகடனத்தின் 2ஆம் 13ஆம் இலக்கப் பிரதிகள** எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பிட்ட இக்கல்வெட்டுக்களில் இலங்கையானது **தம்(ப்)பபம்ணி** (தாமிரபரணி) எனக் குறிப்பிடப்பட்டிருப்பது நோக்கத்தக்கது. இம்மன்னன் தனது பாறைப் பிரகடனங்களில் தன்னை **தேவானம் பியேன பிரியதர்ஸிராஜா** என்றே குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம். சமகாலத்தில் இலங்கையில் சமகாலத்தில் ஆட்சிபுரிந்த **தீசன்** என்ற மன்னனும் அதே விருதினைச் சூடி ஆட்சி புரிந்திருந்தான் என்பதனை இங்குள்ள சாசனங்கள் காட்டுகின்றன. எனவே இத்தகைய தொடர்புகளை அரசியல் அடிப்படையிலும், பண்பாட்டடிப்படைகளிலும் இவ்விரு மன்னர்களும் கொண்டிருந்தனர் என்பதும், அதன் வழியே பௌத்த சமயத் தூதுக் குழுவின் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

குப்தப் பேரரசர்களின் ஆட்சியின்போது (கி.பி. 3ஆம் நூற்றாண்டில்) வடஇந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பண்பாட்டுத் தொடர்புகள் இருந்தமையினை **சமுத்திரகுப்தனின் அலாஹாபாத்தூண் பிரஸஸ்தி சாசனம்** குறிப்பிடுகின்றது. சமகால இலங்கை மன்னனான **ஸ்ரீமேகவர்ணன்** சமுத்திர குப்தனுடன் தொடர்புகொண்ட வகையில் புத்தகாயாவில் இலங்கை யாத்திரிகர்கள் தங்குவதற்கான மடம் ஒன்றினைக் கட்டிய செய்தியினை அது குறிப்பிடுகின்றது.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரையிலும் இலங்கையுடனான தொடர்புகளைக் குறிப்பிடும் பல சாசனப் பதிவுகளைக் கொண்டிருப்பதனைக் காண முடிகின்றது. சங்க காலப் பகுதிக்குரிய தமிழ்ப் பிராமிப் பதிவுகளில் ஈழம் பற்றிய பல குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இதேபோன்று பல்லவ வம்சத்தினர்களுடைய செப்பேட்டுப் பட்டயங்களில் அவர்களுடைய தோற்றத்தினை மணிபல்லவத்துடன் எடுத்துக்காட்டப்படுவதனையும் காணலாம். இவ்வாறாக தென்னிந்தியச் சாசனங்களிலும் அநுராதபுரகால வரலாற்றினை அறிவதற்கு உதவும் பல செய்திகள் பொறிக்கப்பட்டிருப்பதனைக் காணலாம்.

ஆ. வரலாற்று மூலங்கள் :

நாணய மூலாதாரங்கள (நாணயவியல்-NUMISMATICS)

நாணயவியல என்பது மனிதனால் வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் பண்டமாற்று முறைகளுக்கீடாக உயோகிக்கப்படுத்தப்பட்ட பெறுமதியுடைய திண்மப் பொருட்களைப் பற்றி ஆராயும் ஒரு துறையாகும். அத் திண்மப் பொருட்கள் ஆரம்பத்தில் சிப்பி, சோகி, தாயத்து போன்றவற்றையும் பின்னர் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட உலோகத் துண்டுகளால் ஆன நாணயங்களைப் பற்றியும் குறிப்பிட்டு நிற்கும். எனவே நாணயவியல் என்ற அறிவியல் துறையானது குறிப்பிட்டு நிற்கின்ற தொழிற்பாடானது பெருமளவிற்கு உலோகங்களினால் வெளியிடப்பட்டு வந்த ஏதாவது ஒரு வடிவத்தில் உருவாக்கப்பட்ட நாணயங்களைப் பற்றி ஆராய்கின்ற ஒரு துறை எனலாம். இத்துறையானது அக்குறிப்பிட்ட உலோகத்தினுடைய தன்மை அந்த உலோகத்தில் பொறிக்கப்பட்ட வடிவம், எழுத்து, அந்த உலோகம் குறிப்பிடும் பெறுமதி, நிறை போன்ற பல பிரதான அம்சங்களை ஆராய்கின்ற ஓர் அறிவியல் துறையாக அமையும். எனவே ஆங்கிலத்தில் Numismatics என குறிப்பிடப்படுகின்ற நாணயவியல் என்ற பதமானது விஞ்ஞானபூர்வமாக மனிதனால் வெளியிடப்பட்டிருந்த பொருளாதார முறையின் ஊடகமான சின்னங்களைப் பற்றி ஆராய்கின்ற ஒரு துறை எனலாம். இத்துறையானது மிகவும் அண்மைக்காலத்திலே மேற்கைரோப்பிய நாடுகளில் ஓர் அறிவியல் துறையாக உருவாக்கப்பட்டது.

கிரேக்கத்தில் **Numisma** என அழைக்கப்படும் பதத்தின் அடியாகவே **Numismatics** என்ற ஆங்கிலப்பதம் உருவாக்கப்பட்டது. **Numisma** என்பதன் கருத்து ஓர் ஒழுங்கான திட்டவட்டமான பருப்பத்தினைக் கொண்ட குறியீடுகளையுடைய சின்னங்களைப் பற்றி ஆராய்வது என்பதாகும். அவ்வகையில் **Numisma** என்ற பதம் நாணயங்களை குறிப்பதற்கு உதவுகின்ற **Numismatics** என்ற பதத்தினை உருவாக்க அடிப்படையாக அமைந்தது. ஓர் ஒழுங்கான, திட்டவட்டமான பருப்பத்தினையுடையதாய், தன்னகத்தே சில குழுக்குறியீடுகளைக் கொண்டு, அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட உலோகத் துண்டுகளை நாம் நாணயம் என்று அழைக்கின்றோம். இவ்வாறான நாணயங்களின் வெளியீடுகளானவை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்பதனையிட்டு தொல்லியல் ஆய்வாளர் மற்றும் நாணயவியலாளர் மத்தியிலும் தொடர்ந்து சர்ச்சைகள் நிலவிக்கொண்டு வருவதனைக் காணலாம். இருந்தபொழுதிலும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி கி.மு. 6ம் நூற்றாண்டில் **லிடியா** என்ற இடத்திலேயே முதன்முதலாக நாணயங்களை குறிப்பிட்டு நின்ற உலோகத்துண்டுகள் வெளியிடப்பட்டன என்பதனை தொல்லியல் ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன. **Lydia** வில் கண்டெடுக்கப்பட்ட **சிம்மத் தலைபொறித்த** வெள்ளி உலோகத்தாலான கட்டிகளே உலகிலேயே முதன்முதலில் வெளியிட்டு வைக்கப்பட்ட நாணயங்கள் எனக் கருதப்படுகின்றன. எனவே உலகப் பண்பாட்டு கருவூலங்களை

உருவாக்கிய மத்திய ஆசியாவே முதன்முதலாக பண்டமாற்று பொருளாதாரத்திலிருந்து வந்த சிக்கலை தீர்க்குமுகமாக பொருளாதார கொடுக்கல் - வாங்கலின் ஊடகமாக நாணயங்களை வெளியிட்டு வைத்தமையைக் காணலாம்.

நாணய வெளியீட்டின் உபயோகமானது மனிதனுடைய வாழ்வின் பரிணாமத்தில் ஏற்பட்டிருந்த ஒரு முக்கியமான அறிவியல் துறைச் சாதனை எனலாம். மனித பரிணாமத்தின் வளர்ச்சியில் அத்தியாவசிய தேவைகளாயிருந்த உணவு, உறையுள், உடை என்பன உருவாக்கப்பட்டதன் பின்னர் மனித சமூகங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த கொடுக்கல் - வாங்கல் பிரச்சனையை தீர்ப்பதற்காக அச்சமூகத்தில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையைக் காணலாம். நீண்டகாலமாகவே நிலையான பயிர்ச்செய்கை பொருளாதார முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரும் கூட சமூகக் குழுக்கள் தமக்கிடையே பல போராட்டங்களை; தமது சமமான பண்டங்கள் பகிர்வு தொடர்பான போராட்டங்களை ஏற்படுத்தி வந்தமையினைக் காண்கின்றோம். ஆபிரிக்க நாடுகளிலுள்ள பல குழுவினர் தற்காலம் வரை அப்போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமையைக் காணலாம். எனவே அத்தியாவசிய தேவையின் உற்பத்தி பெருக்கமடைந்த பொழுதிலும் மனித சமூகத்தினிடையே ஏற்பட்ட சமத்துவமற்ற பண்டங்களின் பகிர்வானது பல பிரச்சனைகளைத் தோற்றுவித்திருந்தது என்பது தெளிவு. எனவே சமத்துவமற்ற பண்டங்களின் பகிர்வினை சமத்துவமான முறையில் உருவாக்குவதற்காக ஒரு வகையான பண்டமாற்று பொருளாதாரம் தோற்றுவிக்கப்பட்டது. தோற்றுவிக்கப்பட்ட அப்பண்டமாற்று பொருளாதார அமைப்பில் உணவுப் பண்டங்களின் தரமும் அளவும் வேறுபட்டு அமைந்தமையைக் காணமுடிகின்றது. அப்பண்டங்களின் தரத்திற்கேற்ப அதன் அளவை தீர்மானிப்பதில் பல சிக்கல்கள் உருவாகின. அந்த சிக்கல்களின் விளைவாக ஆரம்பத்தில் தாயத்துக்கள், சிப்பி, சோகி, மதிப்புமிக்க இரத்தினக்கற்கள் என்பன மாற்றீடுகளாகவும் உபயோகிக்கப்படுவதற்கும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனவே பண்டமாற்று பொருளாதார முறையில் அமைந்த சிக்கல்களை தீர்க்கும் வகையில் உருவாக்கப்பட்ட நாணயப் பரிவர்த்தனையின் முதற்படி இவ்வாறு இயற்கையில் உருவாக்கப்பட்ட திண்மப் பொருட்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டது. இவ்வாறு நீண்டகாலமாக இத் திண்மப்பொருட்களையே பண்டங்களின் கொடுக்கல் வாங்கலுக்காக பாவித்து வந்த மனிதன், அம் முறையில் ஏற்பட்ட சிக்கல்கள் மேலும் அதிகரித்ததை தொடர்ந்து நாணயப் பரிவர்த்தனை முறையை கண்டு பிடித்துள்ளான். அதாவது பண்டங்களின் உற்பத்தி, அவற்றின் விநியோகம் என்பன அதிகாரம்மிக்க ஒரு அமைப்புக்குள் அடங்கியிருக்க, அவற்றினை பொதுமக்கள் நாணய உபயோகத்தின் அடிப்படையில் பெற்று தமது ஜீவனோபாயத்தை நடாத்தும் முறை உருவாக்கப்பட்டது. இதுவே உலோகங்களிலான நாணயங்கள் பிறந்த கதையாகும். அப்பிறப்பினை முதன்முதலாக மத்தியாசியாவிலுள்ள லிடியாவில் கண்டுபிடிக்கப்பட்ட சிம்மத்தலை பொறித்த வெள்ளி உலோகக கட்டிகளிலிருந்து காணமுடிகின்றது.

நாணயங்களும் வரலாற்றுச் சான்றுகளும்

நாணயங்களின் தோற்றத்தினைத் தொடர்ந்து அவற்றின் பல்வேறு வடிவங்கள் வேறுபட்ட தொழில்நுட்ப முறையின் அடிப்படையில் உலக நாடுகளில் பரந்து கொண்டதனைக் காணமுடிகின்றது. அப்பரவலானது பல்வேறுவகைப்பட்ட நாணயங்களின் பரிவர்த்தனைக்கு வழிவகுத்தது. நாணயப் பரிவர்த்தனை ஊடாக பொருளாதார அமைப்பு வளர்ச்சி பெற, அரசியல் அதிகாரங்களும் அவ்வதிகாரங்களை வரையறை செய்ய நிறுவனங்களும் தோற்றம் பெற்றமையைக் காணமுடிகின்றது. முதன் முதலில் **அரசு, இறை** என்ற கோட்பாடு இந்த நாணய பரிவர்த்தனை முறையிலிருந்து உருவாக்கப்பட்டது. எனவே **அரசு, இறை கோட்பாடு** உலகில் பல பேரரசுகள் தோற்றம் பெற வாய்ப்பாயிற்று. பேரரசின் வளர்ச்சியானது உலகில் பெரும் பண்பாடு தோற்றம் பெற வாய்ப்பாயிற்று. தோற்றுவிக்கப்பட்ட பல பண்பாடுகள் தரை-கடல் மார்க்கமாக பல்வேறு நாடுகளுக்குள் சென்று பரந்து கொண்டன. அவ்வகையான ஓர் அமைப்புக்குள் உள்நாட்டு வணிக மையமும், துறைமுகமும் பெரும் பங்காற்றின. துறைமுக நகரங்களானவை வெளிநாட்டு-உள்நாட்டு நாணய பரிவர்த்தனையின் பிரதான மையமாக காணப்படுகிறது. சுங்கம், திறை போன்ற சொற்பிரயோகங்கள் அவ் வகைப்பட்ட நாணய பரிவர்த்தனையின் தொழிற்பாட்டைக் குறித்து நின்றன. கடந்த கிறிஸ்தவ தசாப்தத்தின் ஆரம்ப ஆண்டுகளில் ரோம நாணயம் தென்கிழக்காசியாவில் வாணிபம் உள்ளடங்கப் பரந்து கொண்டது. கி.முற்பட்ட ஆண்டுகளில் பக்டீரிய, கிரேக்க, மசிடோனிய, குசாண நாணயங்கள் வடமேற்கு இந்தியாவில் வந்து கலந்து கொண்டன. சகர்சத்திராபுகளால் வெளியிடப்பட்ட நாணயங்கள் இத்தகையனவாகும். தென் இந்தியாவில் பேரரசு நடத்தியவர்கள் ஈழத்தில் தமது நாணய வெளியீடுகளை பரப்பியிருந்தனர். தென் இலங்கையில் ஆட்சியின் மேலதிகாரத்திலிருந்தவர்கள் வட இலங்கையில் தமது நாணய வெளியீடுகளைப் பரப்பியிருந்தனர். மத்தியகால ஐரோப்பாவில் வர்த்தக துறையில் செல்வாக்குப் பெற்றிருந்த அராபியர்கள் கீழைத்தேயங்களில் தமது நாணயங்களை முதலீடு செய்திருந்தனர். எனவே நாணய பரிவர்த்தனையின் உபயோகமானது அரசியல், பொருளாதார அடிப்படையில் குறிகாட்டிகளாக விளங்கியிருந்தன என்பதனைக் காணலாம். அரசியல் அதிகார இறையின் வரம்பாக இந்த நாணய வெளியீடுகளைக் காணமுடிகின்றது. கி.பி. 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த மன்னன் விஷ்ணுவர்த்தனன் நுளம்பபாடியை வெற்றி கொண்டதன் சின்னமாக "தலைக்காடு கொண்ட" என்ற விருத்தினை தனது நாணய வெளியீடுகளில் சேர்த்திருந்தான். தக்கணத்தில் ஆட்சி செய்திருந்த சதவாகனர்கள் துவிசமுத்திராதிபதி என்ற விருதினை நாணயங்களில் எழுதியிருந்தனர். இராஜராஜனது நாணய வெளியீடுகளில் பரகேசரி ராஜராஜ என்ற பெயர் இடம்பெற்றிருந்தது. இவ்வாறு நாணய வெளியீடுகளின் அடிப்படையில் அரசியல் அதிகார இறையின் எல்லையினை வரையறை செய்யமுடிகின்றது. எனவேதான் நாணயங்கள் வரலாற்றுச் சான்றாக மாறுகின்றன.

அரசியல் வரலாற்றை குறிப்பிடும் அதே நேரத்தில், நாணய மூலங்களைக் கொண்டு நாட்டின் பொருளாதாரச் செழிப்பின் தன்மையை அறிந்துகொள்ள முடிகின்றது. அடிப்படையில் நாணய பரிவர்த்தனையானது பொருளாதார முறையின் அடிப்படையாகத் தோற்றம் பெற்ற சிக்கல்களைக் கொண்டே தோற்றம் பெற்றது. எனவே நாணய பரிவர்த்தனையின் வரலாறானது பொருளாதார வரலாறாக அமையும். நவீன பொருளாதார அமைப்பு முறையில் உருவாக்கப்பட்ட வங்கிகளின் தோற்றம் இவ்வகையான நாணயங்களை அடிப்படையாகக் கொண்டே அமைந்தது குறிப்பிடத்தக்கது. கெயினினுடைய நவீன பொருளாதார வங்கியியல் கோட்பாட்டில் வங்கியின் தோற்றம் தொடர்பாக நாணய வெளியீடுகளே அடிப்படையாக இருந்ததை காணமுடிகின்றது. எனவே நாணயவியல் வரலாறானது ஒரு நாட்டில் பொருளாதார வரலாறாகவும் அமைகின்றது. ஆதிகால அரசியல் சமூகங்கள் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக ஈட்டிய சாதனைகளை அச் சமூகங்களின் நாணய வெளியீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வது ஒரு பொது இயல்பாகும். கி.பி 1ம் நூற்றாண்டளவில் செங்கடலில் வரிசேகரித்துக் கொண்டிருந்த ஓர் உரோம கப்பற் தலைவன் தீடீரென செங்கடலில் ஏற்பட்ட ஒரு புயல் காரணமாக அக்கப்பலுடன் இலங்கையிலுள்ள குதிரைமலைக்கு அண்மையில் கரையொதுங்க நேர்ந்தது. இது கி.பி 88ம் ஆண்டு நடைபெற்றது. இக்காலத்தில் இலங்கை ஆட்சியாளனாக விளங்கிய மூத்தசிவன் என்பவன் அக் கப்பற்தலைவனை அணுகி கப்பலை பார்வையிட்டபோது அதில் ஏராளமான ரோமானியத் தங்கக் காசுகளைக் கண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. அதன் மீது அதிக விருப்பம் கொண்ட மன்னன் **ரோமாபுரிக்கு நான்கு இலங்கை தூதுவரை** அனுப்பி வைத்ததாகக் காண்கின்றோம். அதனைத் தொடர்ந்து ரோமானிய வர்த்தகர்கள், இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கொள்ளப்படுகின்றது. ஈழத்து முத்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதனடிப்படையில் ரோமத் தங்க நாணயம் கப்பல் கப்பலாக இலங்கைக்கு வந்தது. இவ்வாறு பிளினியினால் எழுதப்பட்ட நூலில் 6வது அத்தியாயத்தில் **ரோமில் நான்கு இலங்கைத் தூதுவர்** என்ற தலைப்பில் பல செய்திகள் இடம்பெறுவதனைக் காண்கின்றோம். எனவே நாணயப் பரிவர்த்தனைக்கும் வர்த்தகத்துக்கும் இடையிலான தொடர்பு கண்ணுக்கும் பார்வைக்கும் இடையிலான தொடர்பைப் போன்றது என்பதனை உணரலாம். ஆகவே வரலாற்றுக் கால வர்த்தக அபிவிருத்தி நடவடிக்கைகளை அறிய எமக்கு நாணயங்கள் பேருதவி புரிகின்றன.

புராதனகால சமூகத்தின் பண்பாட்டு வரலாற்றை அறிவதற்கும் நாணயங்கள் முக்கிய சான்றாக விளங்குவதனைக் காணலாம். பண்பாடு என்று குறிப்பிடும் பொழுது குறிப்பிட்ட அச்சமூகத்தில் பின்பற்றியிருந்த சமயநிலை பற்றிய செய்தி, வணங்கப்பட்ட தெய்வங்கள், வணக்க முறைகளில் பின்பற்றியிருந்த குறியீடுகள் என்பனவற்றைத் தாங்கி வெளிவந்த நாணயங்களிலிருந்து அறிந்துகொள்ள முற்படுகின்ற வரலாற்று விளக்கமாகும். தென்னாசியாவில் காலத்தால்

முற்பட்டதாகக் கருதப்படுகின்ற நாணய வகைகளாக அச்சுக் குத்தப்பட்ட நாணயம் காணப்படுகின்றது. (Punch marked coin) இவ்வச்சுக் குத்தப்பட்ட நாணயங்கள் வெள்ளி உலோகத் தகடுகளில் செய்யப்பட்டிருந்தன. இவ் வெள்ளி உலோகத் துண்டுகளில் இடம்பெற்ற மலை, சுவஸ்திகா, யானை, அரசமரம் வேதிகை என்பன புராதன சமூகம் மேற்கொண்ட வணக்க முறையின் குறியீடுகளாக எடுத்துக்காட்டப்படுகிறது. இதேபோன்று வரலாற்றுக் காலங்களில் வெளியிடப்பட்ட நாணயங்களிலிருந்து சமய, தத்துவக் கோட்பாடுகள், விக்கிரவியல் தொடர்பான பல கருத்துக்களையும் காணமுடிகின்றது. கி.மு 1ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் குஷாண மன்னனான கனிஸ்கனது நாணயமொன்றிலிருந்து முதல் முதலாக புத்தருடைய திருவுருவமும் பெயரும் பொறிக்கப்பட்ட வடிவம் வெளியிடப்பட்டிருந்தமையைக் காணலாம். அவ்வகையில் இந்தியக் கலைப் பாரம்பரியத்தில் புத்தருக்கு திருவுருவம் அமைக்கப்பட்ட வரலாறு எடுத்துக்காட்டப்படுவதனைக் காணலாம். இவ்வாறு குஸாண நாணயமொன்றில் வெளியிடப்பட்ட புத்தருடைய திருவுருவத்தினடிப்படையில் இந்திய கலைப் பாரம்பரியம் தொடர்பாக ஒரு பாரிய பிரச்சனை கிளப்பப்பட்டது. அதாவது சமகால காந்தாரக் கலைமரபிலா மதுராக் கலைமரபிலா முதல் முதலாக புத்தருக்கு திருவுருவ அமைதி ஏற்படுத்தப்பட்டது என்பதாகும். இது கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்களுக்கு இந்திய கலைமரபு தொடர்பாக ஒரு பிரச்சனையை கிளப்பிவிட்டது. எனவே ஒரு சிறிய நாணய வெளியீடு இந்திய கலைப் பாரம்பரியத்தில் ஏற்படுத்திய தாக்கம் பெரியளவில் ஏற்பட்டது எனக் காணலாம்.

தென்னாசியாவில் இந்து சமய தத்துவக் கோட்பாடுகள் பலவற்றை தாங்கி வந்த நாணயங்கள் பலவற்றை இப்பிராந்தியத்தில் முதன்மை பெற்றிருந்த பலவம்சங்கள் வெளியிட்டிருந்தன. அத்தகைய வம்சங்களுள் பல்லவ வம்சம், சோழ பாண்டிய வம்சங்கள், விஜயநகர நாயக்கர்கள், குறிப்பாக திருமலை நாயக்கர்கள் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்கியிருந்தனர். விஜயநகர நாயக்க வம்சம் வெளியிட்ட நாணயம் பலவற்றில் விஷ்ணுவினுடைய அவதார வடிவங்கள் பல பொறிக்கப்பட்டு காணப்பட்டிருந்தன. பல்லவ, சோழ வம்சங்களின் ஆட்சிக் காலங்களின் பொழுது தென்னாசிய பிராந்தியத்தில் வணிக முயற்சியில் ஈடுபட்டிருந்த வணிக கணகங்கள் பல வகையான நாணய வெளியீடுகளை உருவாக்கியிருந்தன. மிகவும் அண்மையில் தென்னிலங்கையிலுள்ள அம்பாந்தோட்ட என்ற கடற்கரைக் கிராமத்தில் ஒரு வயலில் கண்டு பிடிக்கப்பட்ட "நானாதேசிகள் சகை" எனக் குறிப்பிடப்பட்ட நாணயப் பதக்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நாணயத்தின் பின்புறத்தில் பரமேச்வரி போர் புரிகின்ற காட்சி சித்தரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்த நாணயத்தைப் பற்றி ஆய்வு செய்த வரலாற்று ஆசிரியர்கள் இது சோழர் காலத்துக்குரிய நாணயம் எனவும், நானாதேசிகர் என்ற வணிக கணத்தினர் புவனேஸ்வரி என்ற காளியை தமது வீரதெய்வமாக வழிபட்டனர் எனவும் குறிப்பிட்டனர்.

நாணயங்களூடாக சமய வரலாற்று முக்கியத்துவத்தினை விளக்க வந்த இராசநாயக முதலியார் தனது Ancient Jaffna என்ற நூலில் இராமநாதபுரம் சேதுபதி முதலிய மன்னரால் வெளியிடப்பட்ட சேது நாணயங்களுக்கும் இராமேஸ்வரத்திலுள்ள சிவன் கோயிலுக்குமிடையிலான தொடர்பினை எடுத்துக் காட்டுவதாக குறிப்பிடுகின்றார். சேது என்ற பதமும் அந்த நாணயங்களில் பொறிக்கப்பட்ட திமில் பருத்த எருதுவும் குத்து விளக்கும் பிறையும் இராமேஸ்வரத்திலுள்ள சிவன் கோயிலைக் குறிப்பிடுவன என பேராசிரியர் பத்மநாதனும் ஏற்றுக்கொண்டு, விளக்கமளித்துள்ளார்.

தென்னாசிய சமூகத்தின் சமய வரலாற்று முக்கியத்துவத்தினை கால ஒழுங்கில் எடுத்துக்காட்டக் கூடியதாகவிருப்பது இம் மூலாதாரங்களின் தன்மையின் சிறப்பெனலாம்.

நாணய ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு சமூக வரலாற்றின் தன்மையினை **ரோமிலா தாப்பர், K.M.பணிக்கர், பரமேஸ்வரி லால்குப்தா** போன்றோர் எடுத்துக்காட்டுகின்றனர். புராதன சமூகத்தினுடைய வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை நாணய வெளியீடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. சிறுச்சிறு சமூகக் குழுக்களாக காணப்பட்டிருந்த நிலையானது கால ஓட்டத்தில் பொருளாதார அமைப்பு முறையின் மாற்றம் காரணமாக ஒரு குறிப்பிட்ட சமூகம் இன்னொரு சமூகத்தின் கீழ் தனது தனித்தன்மையை இழப்பதும், ஒரு சமூகத்தின் மீது இன்னொரு சமூகம் மேலாதிக்கத்தினை செலுத்துவதும் இயல்பான ஒன்றாயிற்று. அந்த வகையில் கிறிஸ்துவின் காலத்துக்கு முற்பட்ட காலத்தில் குறிப்பாக கி.மு. 6ம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில் ஏறத்தாழ 16 பிரிவுகளாகக் காணப்பட்ட இயற்கை எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றிருந்த சமூகமானது கி.மு. 3ம் நூற்றாண்டளவில் மதத்தை மையமாகக் கொண்ட ஒரு பெரும் சமூகமாக மாற்றம் பெற்றுச் சென்ற தன்மையை 16 மகாஜன பதங்களும் வெளியிட்ட நாணயங்களிலிருந்து கண்டு கொள்ளமுடிகிறது. இந்த 16 சிறுச்சிறு சமூகங்கள் பல முடியரசின் கீழும் சில கண அமைப்புக்களின் கீழும் வளர்ச்சி பெற்றிருந்ததைக் காண்கின்றோம். அவை பின்னர் 4 முக்கியமான வலிமை வாய்ந்த அரசியற் சமூகத்தின் மேலாதிக்கத்துக்குக் கீழ் தத்தமது நிலைமையை இழந்ததும் பின்னர் மகதப் பிராந்தியத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட செய்தியினையும் மகதப் பேரரசின் வரலாறு எடுத்துக்காட்டுகிறது. எனவே 16 அரசியற் சமூகங்களால் வெளியிடப்பட்டிருந்த நாணயங்கள் இறுதியில் மகத அரசியற் சமூகத்தினால் வெளியிடப்பட்ட நாணய வெளியீடுகளின் கீழ் மறைந்து, அழிந்து சென்றமையைக் காணமுடிகிறது. புராதன இந்திய சமூக அமைப்பில் பல ஏற்றத்தாழ்வுகள் இருந்தமையினை ஒரு குறிப்பிட்ட வம்சத்தில் வெளியிடப்பட்டிருந்த பல உலோகங்களிலான நாணய வெளியீடுகள் சான்றுகாட்டி நிற்கின்றன. உதாரணமாகக் குறிப்பிடுகையில் குப்தர்களால் வெளியிடப்பட்டிருந்த நாணய வெளியீடுகளை இங்கு எடுத்துக்காட்டலாம். குப்தர் காலம் ஒரு பொற்காலச்

சமூகம் என்று குறிப்பிடுமளவிற்கு அவ்வம்சத்தின் முதற்காலப் பகுதியில் ஒரு பொற்காலம் ஏற்பட்டிருந்தமையினை தங்க நாணய வெளியீடுகள் சான்று காட்டுகின்றன. சமுத்திர குப்தன், 2ம் சந்திர குப்தன், குமார குப்தன் ஆகியோர் காலங்களில் தங்க நாணயங்கள் ஏராளமாக வெளியிடப்பட்டன. குமார குப்தனின் இறுதிக் காலத்தில் தங்க நாணயங்களுக்குப் பதிலாக செம்பு நாணயங்கள் வெளியிடப்பட்டன. குமார குப்தனுக்குப் பின்னர் விஷ்ணு குப்தன், புதகுப்தன் ஆகியோர் காலங்களில் செம்பு நாணயங்களுக்கும் குறைந்த தரத்திலான நாணய வெளியீடுகள் ஏற்பட்டன. எனவே ஒரே வம்ச காலத்தில் பலதரப்பட்ட உலோகங்களில் நாணய வெளியீடுகள் வெளிவந்த வரலாறானது குப்த சமூகத்தில் ஏற்பட்ட பொருளாதாரத் தன்மையின் ஏற்ற-இறக்கங்களையே குறிப்பிடுவதாகக் கொள்ளப்பட்டது.

பொதுவாக நாணய மூலாதாரங்களை வரலாற்றுச் சான்றுகளாக கொள்ள முற்படும்போது அதனை எந்தளவிற்கு முதன்மையான வரலாற்றுச் சான்று எனக் கொள்ளலாம் என்பதையிட்டு பல்வேறு கருத்து நிலைகள் நாணயவியலாளர் மத்தியில் நிலவுகின்றமையைக் காணலாம். தென்னாசியாவின் வரலாற்று எழுத்தியலில் காலத்துக்கு காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்தமையைக் காணலாம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட எழுத்து முறையானது இன்று முற்று முழுதாக கைவிடப்பட்டு, புதிய அணுகுமுறையுடன் தென்னாசியாவில் வரலாற்று எழுத்தியல் பின்பற்றப்பட்டுக் கொண்டு வருவதனைக் காணலாம். இந்நிலையில் Euro – Centric என்ற நிலையிலிருந்து (Asiatic History) ஆசியாவின் வரலாற்றைப் பார்க்கும் முறையானது பலமிழந்து, ஆசியாவின் பார்வையில் தென்னாசிய வரலாறு எழுதப்படுகின்ற ஒரு புதிய சூழல் உருவாக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் நாணயங்களை பிரதான மூலமாகக் கொண்டு, இவ் பிராந்திய வரலாற்றினை எழுதலாமா? என்பதும் எத்தகைய சாதக பாதக கருத்து நிலைகளை அது கொண்டுள்ளது என்பதும் ஆராயப்படவேண்டியதாகும். ஒரு சாரார் ஆசியாவின் வரலாற்றை எழுதுவதற்கு ஆசிய வம்சங்களால் வெளியிடப்பட்ட நாணயங்களே சிறந்த சான்று என குறிப்பிடுவர். அவ்வாறு வாதிடுபவர்கள் குப்தவம்ச மன்னர்களால் வெளியிட்டு வைக்கப்பட்ட நாணயங்களை ஆதாரம் காட்டுவர். ஜவகர்லால்நேரு இத்துறையில் குறிப்பிடத்தக்கவராவார். அவரால் எழுதப்பட்ட Re –discovery of India என்ற நூலில் பாரதம் கண்ட முதலாவது தேசிய உணர்ச்சிக் காலம் குப்தர் காலம் என்பது அவரது வாதமாகும். தேசியமயமாக்கல் கோட்பாட்டினை (இந்திய மயமாக்கல்) முதல்முறையாக நடைமுறைப்படுத்திய பெருமை குப்தர்களையே சாரும் என்பதனையும் அவர்களால் வெளியிடப்பட்ட தங்க நாணயமே வரலாற்றில் மூலச்சான்று என்று அவரால் குறிப்பிடப்பட்டமையைக் காணலாம். ஆனால் வேறு சில ஆசிரியர்கள் நாணய ஆதாரங்களை ஒரு துணை ஆதாரமாகவே வரலாற்றில் கொள்ளலாம். ஏனெனில் நாணய ஆதாரங்களைக் கொண்டு மட்டும் புராதன இந்தியாவின் தொடர்ச்சியாக அரசியல், பொருளாதார பண்பாட்டு

வரலாற்றினை எடுத்துக்காட்டுவது மிகமிக கடினம் என்பது அவர்களது வாதமாகும். அந்த வகையில் கி.மு 1760ல் சிந்துவெளி நாகரிகம் முற்றுப் பெற்றகாலம் தொடக்கம் கி.மு 4ம் நூற்றாண்டு வரையுள்ள ஏறத்தாள 1200 வருடகால வரலாற்றை அறிவதற்கு நாணய ஆதாரங்கள் உதவுமா என்பது அவர்களது கேள்வியாகும். இவ்வாறு நாணய ஆதாரங்களை வரலாற்றில் சான்றாகக் கொள்ளும்பொழுது வரலாற்று ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் முரண்பாடான வகையில் அமைவதனைக் காணலாம்.

அச்சுக் குத்தப்பட்ட நாணயங்கள் (Punch – marked – coin)

தென்னாசியாவில் அச்சுக்குத்தப்பட்ட நாணயங்கள் (Punch marked coins) பரவலாக உபயோகிக்கப்பட்டு வந்திருந்தமையினை தொல்லியல் சான்றுகள் ஆதாரம் காட்டுகின்றன. இவ்வகையான நாணயங்கள் பெருமளவுக்கு வெள்ளி உலோகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளன.

வடஇந்தியாவில் அச்சுக்குத்தப்பட்ட நாணய வெளியீடுகள் கி.மு. 6ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 4ம் நூற்றாண்டு வரைக்குமாவது இடம்பெற்றிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது. தென்னாசியாவில் காலத்தால் முற்பட்ட நாணய வெளியீடுகள் கி.மு. 6ம் நூற்றாண்டுக்கு சற்று முன்பே ஆரம்பித்ததெனலாம். அவ்வகையில் அச்சுக்குததப்பட்ட நாணயங்கள் வட இந்தியாவில் காலத்தால் முற்பட்ட நாணய வெளியீடுகளாக காணப்படுவதனை அவதானிக்கமுடிகிறது.

அச்சுக் குத்தப்பட்ட நாணயம் என்பது 'உருவங்களைப் பதிக்கக்கூடிய அச்சொன்றினால் உலோகங்களின் மீது அறைவதன் மூலம் உருவாக்கிக் கொள்ளும் நாணய வெளியீடு' ஆகும். அச்சுக் குத்தப்பட்ட நாணயங்களானவை வெள்ளி உலோகத்தினாலான நீண்ட சதுரமான உலோகத் தகடுகளில் உருவங்களை ஓங்கி அறைவதன் மூலம் உருவாக்கப்படும் தன்மையுடையனவாக மக்கள் மத்தியில் புழக்கத்தில் விடப்பட்டவையாகும். இந்நாணயம் உருவாக்கப்படும் தன்மையானது, அவற்றினை உருவாக்குவதற்கு ஏதுவாக அமைந்த சாதனங்களின் தன்மையின் அடிப்படையில் தங்கியிருப்பதைக் காணலாம். அச்சுக்குத்தப்பட்ட நாணயத்தினை உருவாக்குவதற்குத் தேவையான சாதனங்களுள் Anvil, உருவத்தைப் பதியச் செய்யும் அச்சு, நாணயத்தை உருவாக்குவதற்கேற்ற உலோகம் என்பன முக்கியமானதாகும். இது அச்சுக்குத்தப்பட்ட நாணயத்தினைத் தாங்கி இருக்கின்ற உருவ அமைதி, அவை செய்யப்படும் பொழுது பின்பற்றப்பட்டிருந்த தொழில்நுட்ப முறையைச் சார்ந்திருந்தமையைக் காணலாம். அதாவது ஓங்கி அறைந்து, அச்சால் வெள்ளி உலோகங்களில் உருவங்களைப் பதிப்பிக்க முயலும்போது அவ்வெள்ளி உலோகத்திற்கு ஆதாரமாகத் தாங்கியுள்ள மரத்தினாலான அல்லது உலோகத்தினாலான Anvil வின் உடைய தன்மையைப் பொறுத்து அவை அமைவதனைக் காணலாம். Anvil மரத்தினால் இருக்கும்பட்சத்தில்

அச்சுக்குத்தப்பட்ட நாணய உருவத்தின்போது உருவங்கள் பெருமளவிற்கு அதன் உருவ அமைதி பிசகாத முறையில் பதிவதற்கு வாய்ப்பிருக்கின்றது. சிலவேளையில் மரத்தினால் செய்யப்பட்ட Anvil ஆயினும் உருவங்களைப் பதிக்கின்ற உலோகத்தின் வெப்பம் போதாமல் இருந்தால் சிலவேளை அந்நாணயம் கொண்டிருக்கும் உருவ அமைதி தெளிவற்றதாக இருப்பதற்கு வாய்ப்பளிக்கின்றது. மறுவளமாக அந்நாணய வெளியீடுகளின் போது உலோகத்தினாலான Anvil ஆதாரமாக இருப்பின் உருவங்களை ஓங்கி அறைந்து பதிப்பிக்கும் பொழுது அவற்றின் உருவ அமைதி பெருமளவிற்கு சிதறிவிடக்கூடிய அபாயம் ஏற்படுவதுண்டு. வட இந்தியாவில் பெரும்பாலான அச்சுக் குத்தப்பட்ட நாணயங்களில் உருவங்கள் தெளிவற்றதாக இருப்பதனைக் காணலாம்.

அச்சுக்குத்தப்பட்ட நாணயங்களில் காணப்படுகின்ற சிறப்பியல்புகளில் ஒன்று அவற்றில் இடம்பெறும் குறியீடுகளாகும். அந்நாளில் அதன் முற்பக்கங்களில் மலை, சூரியன், யானை, சுவஸ்திகா, தாமரை, வேதிகை போன்ற உருவங்கள் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம். இந்நாணயங்களில் இடம்பெறும் உருவங்கள் தனித்தும் கூட்டுருவங்களாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அச்சுக்குத்தப்பட்ட நாணயத்தில் இடம்பெறுகின்ற உருவங்களின் அடிப்படையில் சமகாலத்தில் அவை உணர்த்தும் வரலாற்று முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளன. வடஇந்தியாவைப் பொறுத்தவரையில் கி.மு. 6ம் நூற்றாண்டிலிருந்து உபநிடதச் சிந்தனை வளர்ச்சி பெற்று வந்துள்ளதனைக் காணலாம். இச்சிந்தனை வளர்ச்சி காரணமாக மக்கள் மத்தியிற் சமய வாழ்விற் பல மாறுதல்கள் ஏற்பட்டன. சமய வாழ்வில் கண்மூடித்தனமான வணக்க முறைகளும், நம்பிக்கைகளும் இக்காலத்திலிருந்து கைவிடப்படுவதைக் காணலாம். பௌத்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ஒருவேளை சமய வாழ்வில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு காரணமாக இருந்திருக்கலாம். இச் சிந்தனையின் வளர்ச்சி காரணமாக குறியீட்டு முறையில் சமய அனுஷ்டானங்கள், சடங்குகள் என்பன மக்களால் பின்பற்றப்பட்டன. இந்து, பௌத்த மரபுகளில் இக்குறியீட்டு வழக்குகள் முதலிடத்தைப் பெற்றன. அத் தன்மைகளை முற்பட்ட கால அச்சுக்குத்தப்பட்ட நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறியீடுகளே எடுத்து விளக்குவனவாக உள்ளன.

அச்சுக்குத்தப்பட்ட நாணயத்தில் இடப்படுகின்ற உருவங்களுள் யானை முக்கியம் வாய்ந்த ஒரு சின்னமாகும். பௌத்த ஜாதகக் கதை மரபிலும். இந்து வழிபாட்டு மரபிலும் யானைக்குரிய இடம் பல அர்த்தங்களைக் கொடுப்பதாக உள்ளது. பொதுவாக யானை கருவளத்தின் சின்னமாக இவ்விரு மரபுகளிலும் சித்தரிக்கப்படுவதைக் காணலாம். பௌத்தமதத்தில் மாயாதேவியின் கனவில் யானை நெருங்கிய தொடர்புபடுத்தப்படுகின்றது. இதேபோன்று இந்து மரபிலும் கஜலக்குமியுடன் யானை தொடர்புபடுத்தப்படுகின்றது. யானை செல்வத்தின், பிறப்பின் சின்னம் என்னும் தத்துவத்தில் இங்கு உருவம் இடம்பெற்றுள்ளது. பிற்காலச் சந்திரவட்டக்கற்களிற்கூட யானை ஒரு முக்கியமான சின்னமாக அமைக்கப்பட்டுள்ளது.

அச்சுக்குத்தப்பட்ட நாணயத்தில் இடம்பெறும் குறியீடுகளுள் சுவஸ்திகா, சின்னம் பிரபல்யம் வாய்ந்தது. இக்குறியீடானது ஒரு பொதுப் பண்பாட்டின் குறியீடாக பிற்காலத்தில் நிலவியதைக் காணலாம். இந்துமதக் கோட்பாடுகளில் சுவஸ்திகா முக்கியமான ஓர் அங்கமாகத் திகழ்வதைக் காணலாம். இக்குறியீடு செழிப்பின் சின்னமாக விளங்கும் அதே நேரத்தில் தாய்த்தெய்வத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்த வடிவமாகவும் விளங்கியது. லக்ஷ்மி பிளாக்குகளில் இடம்பெறும் முக்கிய வடிவம் இதுவாகும். ஒரு புறத்தில் சுவஸ்திகாவும், மறுபுறத்தில் நிற்கும் பெண்ணின் உருவமும் கொண்ட நீள் சதுர நாணயங்களில் லக்ஷ்மி யானைகளுடன் உள்ளார். இவை அச்சுக் குத்தப்பட்ட நாணயத்தின் வெளியீட்டில் அடுத்த நிலையில் வார்க்கப்பட்ட முறையில் உருவானவை. எனவே இந்து மதக் கோட்பாடுகளில் சுவஸ்திகா செழிப்பின் சின்னமாக விளங்குவதைக் காணலாம. ஜேர்மனி (Germany) போன்ற நாடுகளில் நாசிகளுடைய பிரதான வர்க்கக் குறியீடாகவும் சுவஸ்திகாச் சின்னம் பயன்பட்டு வந்தமையைக் காண லாம்.

அச்சுக்குத்தப்பட்ட நாணயத்தில் இடம்பெறும் உருவங்களில் இயற்கை சார்ந்த மலை, சூரியன், கண், மீன், கப்பல் போன்ற உருவங்களும் குறிக்கப் பட்டுள்ளன. இவற்றுள் கப்பலும், மீனும் கடலோடு தொடர்பான முயற்சிகளை குறிப்பனவாகவுள்ளன. கி.மு. 6ம் நூற்றாண்டு தொட்டு வடகிழக்கு இந்தியாவின் பெரும்பகுதி தாமிரலிப்தி துறைமுகத்தினூடான கடல்மார்க்க வியாபார முயற்சிகள் கங்கை வழிப்பாதையூடாக ஈடுபட்டமைக்கான சான்றுகள் உள்ளன. அவ்வகையில் கடல்வழிகளுக்கான போக்குவரத்து இக்காலச் சின்னங்களில் மேலோங்கியிருந்தது எனலாம். பௌத்த ஜாதகக் கதைகளில் கப்பல் ஓடுவது தொடர்பான சம்பவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கௌதம புத்தர் ஒருமுறை கங்கைநதியில் படகுப் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டபோது மீனுடன் சம்பாஷித்த சம்பவம் இடம்பெற்றதாக மச்சயந்திர ஜாதகக் கதை எடுத்துக்காட்டுகின்றது. இதேபோல பிற்காலத்தில் தோற்றம் பெற்ற விஷ்ணு புராணங்களிலும் எடுத்துக் காட்டப்படுவதிலிருந்து கி.மு. 6ம் நூற்றாண்டு தொட்டு இம்மரபு இங்கு வளர்ச்சி பெற்று வந்துள்ளதை அறியலாம். சூரியன், மலை போன்ற உருவங்கள் இயற்கையிலே சாதாரணமாகக் காணும் உருவங்களாக இருப்பதனால், வழிபாட்டு முறைகளுள் முக்கியத்துவம் பெற்றிருந்த மலைகள், மலைவாழ் மக்களால் கூடுதலாக வணங்கப்பட்ட இயற்கை அம்சமாகக் காணப்பட்டது. அச்சுக்குத்தப்பட்ட நாணயத்தில் இடம்பெறும் தூபிகள் போன்ற கும்மட்டமான பகுதிகள், வேலிகள் போன்றன பௌத்த சமயத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்ததைக் காணலாம். புத்தர் இறந்தபின் அவரது ஞாபகச் சின்னங்களைப் புதைத்து ஒரு நினைவு மண்டபம் அமைக்கும் மரபு வடகிழக்கு இந்தியாவில் கி.மு. 5ம், 4ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. புத்தருடைய கேசதாது, தந்ததாது, காறையென்பு போன்றவற்றை வைத்து கும்மட்டமான வடிவில் நினைவுத் தூபிகள் அமைக்கும் மரபு அக்காலத்தில் எழுந்தது. இது சமகால நாணய வெளியீடுகளிலும்

உருவங்களாக வெளியிடப்பட்டுள்ளன. எனவே சாக்கிய குலத் தோன்றல்கள் தமது நாணய வெளியீட்டில் தூபி போன்ற கும்மட்டமான வடிவங்களையும், வேலியமைப்பையும் இட்டனர்.

அச்சுக்குத்தப்பட்ட நாணயங்களின் பெறுமானங்கள் பலவகையில் உணரப்பட்டன. கி.மு. 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 4ம் நூற்றாண்டு வரைக்குமாவது வெளியிடப்பட்ட அச்சுக்குத்தப்பட்ட நாணயங்களில் உலோகப் பெறுமதி பல பாகங்களை உடையதாக விளங்கியது. பொதுவாக வெள்ளி உலோகக் கட்டிகளிலேயே அச்சுக்குத்தப்பட்ட நாணயங்களை வெளியிடுவது மரபாக விளங்கியது. அவ்வாறு அந்த நாணய வெளியீடுகளின்போது அவற்றின் தடிப்பு, கனம், பெறுமானம் என்பன வெளியிடப்படுகின்ற அரச நிறுவனத்தின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பொறுத்துக் காணப்பட்டன. முடியரசு முறைகளிலுள்ள அரசியல் நிறுவனங்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் பெருமளவு உலோகத்தினுடைய தரத்தினாலும், கனதியினாலும், பெறுமானத்தாலும் அதிகரித்து இருந்தன. குறிப்பாக வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகளில் ஈடுபடும் குடியரசுகள் தரமான நாணய வெளியீடுகளைச் செய்தன. மகதம், கோசலம் ஆகிய இரண்டு அரசுகளும் ஒன்றுக்கொன்று போட்டிபோட்டு வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தன. மகதத்தினால் வெளியிடப்பட்ட அச்சுக்குத்தப்பட்ட நாணயத்தின் பெறுமதியானது கி.மு. முற்பட்ட நிலையிலும் இருவேறுபட்ட பெறுமானத்தன்மை கொண்டு விளங்கியதைக் காணலாம். 16 மஹாஜனபத அரசுகளும் வளர்ச்சி பெற்று வரும் காலகட்டத்தில் மகதத்தினால் வெளியிடப்பட்ட நாணய வெளியீடுகள் வேறுபட்ட கருத்துக்களை உடையதாக விளங்கியது. அப் 16 மஹாஜன பதங்களும் வத்சம், கோசலம், அவந்தி, மகதம் என்ற நான்கு நிலைகளில் இருக்கும்போது மகத்தில் வெளியீடுகள் இன்னொரு தரத்தினைக் குறித்தன. இந்நான்கு அரசுகளும் மகதத்தின் கீழ் ஒற்றுமைப்பட்ட கி.மு. நான்கிற்கு பிற்பட்ட நிலையில் மகதத்தால் வெளியிடப்பட்ட நாணயங்கள் அவற்றின் பெறுமதி அங்கீகரிக்கப்பட்டதாயும், அதிகரிக்கப்பட்டதாயும் சர்வதேச ரீதியான மகதத்தின் நாணயம் புழக்கத்தில் விடப்பட்ட தன்மையும் காணப்படுகின்றது. இவ்வாறு அச்சுக்குத்தப்பட்ட நாணயங்களின் பெறுமதியானது அரச அதிகாரத்தின் தன்மை, அரசின் பொருளாதாரச்சிறப்பு, வெளிநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகள் போன்ற அம்சங்களில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இ. வரலாற்று மூலங்கள்: தொல்லியற் சான்றுகள்

(இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால மற்றும் தொடக்க கால குடியிருப்புக்களுக்கான சான்றுகள்)

இலங்கை இந்தியாவின் தென்முனைக்கு அப்பாலுள்ள ஒரு தீவாகும். இலங்கையின் 130,000 ஆண்டுகளுக்கு முன்னர் நம்பக்கூடிய அளவிலும் இற்றைக்கு ஏறத்தாழ 300,000 ஆண்டுகளுக்கு முன்னர் (சாத்தியமாக இற்றைக்கு

500,000 ஆண்டுகளுக்கு அல்லது அதனிலும் முன்னர்) குடியிருப்புக்கள் இருந்தன என்பதற்கு உறுதியான சான்றுகள் உண்டு. தொன்மைச் சூழலியல் நுண்ணாய்வுகள் பனிக்கட்டியாற்றுக் காலங்களுக்கு இடைப்பட்ட காலங்கள் தீவின் மீதான அதிகரித்த வளிமண்டலச் செயற்பாட்டுடன் இணைவுற்றவையாக இருந்தன என்பதனைக் காட்டுகின்றன. இது மத்திய மலைகளின் காற்றுப்பக்கமாக அதிகரித்து காணப்பட்ட மழைவீழ்ச்சியினாலும் இறங்கு காற்றின் வறட்சியடையச் செய்த விளைவின் காரணமாக காற்றுக்கொதுக்கான பக்கத்தில் நிலவிய அதிகரித்த வெப்ப உயர்ச்சியினாலும் வெளிக்காட்டப்பட்டது. இந்த மாதிரி வகை நாட்டின் எட்டுப் பிராதான சூழல் வலயங்களில் வரலாற்றுக்கு முற்பட்டகாலச் சுமக்கும் இயலாற்றல்களுடன் நிலைமாற்றமெய்தியது. இச்சூழல் வலயங்களின் சனத்தொகை அடர்த்தி நான்காம் பகுதி பனியுகதிற்கு மக்கட் பரம்பலியல் ஒப்புமையின் அடிப்படையில மதிப்பிடப்பட்டுள்ளன.

கி.மு. 1ஆம் ஆயிரமாண்டுக் காலத்தின் தொடக்க காலத்தில் கோணவடிவக் குறுங்கற்களை பயன்படுத்தும் மத்தியகாலப் பண்பாட்டிலிருந்து குதிரை, ஆடு, மாடுகள், வனைதொழில் (மட்பாண்டம்), நெற்செய்கை என்பவற்றுடன் கூடிய இரும்புயுக ஆரம்பகாலத்திற்குரிய துரித மாற்றம் நிகழ்ந்தமையைக் காட்டும் அறிகுறிகள் உள்ளன. இதுவரை எளிதில் கையாளமுடியாது இருந்த மத்திய கோட்டு மாழைக்காடுகளை வெளியாக்குவதற்கு உதவிய இரும்புத்தொழில் நுணுக்கவியலுடன் மிகுந்த அளவில் அதிகரித்த உணவு உற்பத்தியாற்றலானது நமக்கும் பரிவர்த்தனைக்குரிய கொள்ளளவினைப் பன்மடங்காக்கி இந்தியாவுடனான நெடுதூர இணைப்புக்களைத் தூண்டியது. இப்பிணைப்புக்கள் புலம் பெயர்தல்களுக்கு இடமளித்தன. அதன் விளைவான தோற்றப்பாடுகளுள் ஒன்றே இந்தோ - ஆரிய சிங்கள மொழியாகும் (இம் மொழி கி.மு 500 ஆம் ஆண்டளவிலிருந்தேனும் இலங்கையில் வழக்கில் இருந்ததாகக் கொள்ளப்படுகிறது.)

பழைய கற்காலம்

இந்தியாவின் வேறுபட்ட பகுதிகளில் மனிதர்கள் வாழ்ந்தாக அறியப்படும் கடந்த ஒரு மில்லியன் காலப்பகுதியில் பல்வேறு காலங்களில் இலங்கை இந்தியாவுடன் தொடுக்கப்பட்டிருந்தது. பூகோளக் காலநிலையிலான குளிர் - வெப்ப ஏற்றத்தாழ்வுகளின் விளைவாக கடல்மட்டத்தில் நிலவிய ஏற்றமும் வீழ்ச்சியும் இத்தொடுப்புகளின் ஆவர்த்தனத்தை நிர்ணயித்தன. கடைசியான துண்டிப்பு இற்றைக்கு ஏறத்தாழ 17000 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. எனவே இலங்கையின் வரலாற்றுக்குமுற்பட்ட காலத்தை இந்தியாவில் இருந்து தனிமைப்படுத்தி நோக்கமுடியாது.

இந்தியாவிலிருந்தான முதல் மனிதர்கள் ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பேனும் ஓரளவில் இதனிலும் முன்பு -இலங்கையை வந்தடைந்திருத்தல் கூடும். இதுவரையில் இதற்கான சான்றெதுவும் உறுதிப்படுத்தப்பட்ட வகையில்

கிடைக்கவில்லை. ஆனால் இது அக்காலத்தில் இலங்கையில் மனிதர்கள் எவரும் இருக்கவில்லை என்பதைக் கருதமாட்டாது. சூழலியல் ரீதியில் அடையத்தகு தன்மையினாலும் பயன்கொள்ளப்படத்தக்கதாயிருந்த உணவு, நீர் என்பவற்றாலும் மனிதக் குடியிருப்புக்குத் தடை எதுவும் இருக்கமாட்டாது. எனினும் தீவின் வடக்கிலும் தென்கிழக்கிலும் காணப்படும் பண்டைய மணற்கடற்கரை 250,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக (இன்றேல் இற்றைக்கு 70,000- 500,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக) இருக்கமுடியும். இம்மணல்கள் மனிதர் உறைவிடமாக இருந்தமைக்கான சான்றினைக் கொண்டுள்ளனவா என்பது துணியப்பட வேண்டியதாக உள்ளது. அது எதிர்காலத்தில் ஆராய்ச்சியின் முதன்மைவாய்ந்த இலக்காக இருத்தல் வேண்டும்.

இற்றைக்கு ஏறத்தாழ 125,000ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குடியிருப்புகள் காணப்பட்டிருந்தன. புந்தலவிற்கு அண்மையில் கடற்கரை படிவுகளில் நடத்தப்பட்ட அகழ்வுகளிலிருந்து இதற்கானசான்று கிடைத்தது. இம்மக்கள் தமது கருவிகளை வடிக்க கற்களிலிருந்தும் ஒரு சிலவற்றை சேட் கற்களிலிருந்தும் ஆக்கினார். இவை பழைய கற்கால நடுப்பகுதிக்குரியவையாகக் கொள்ளப்படலாம். அத்தகைய கருவிகளைத் தவிர அவர்களது பண்பாட்டின் அடிச்சுவடுகள் எவையும் காலத்தினதும் அயனமண்டல வானிலையாலழிதலினதும் தாக்கத்தினின்றும் எஞ்சியிருக்கவில்லை. இம் மக்கள் எத்தகைய தோற்றத்தினைக் கொண்டிருந்திருந்தனர் என்பது எமக்குத் தெரியாது. எனினும் அவர்கள் உடலமைப்பு ரீதியில் தற்காலத் தெற்கு ஆசிய மக்களை ஒத்த ஆரம்பகால ஹோமேஸேப்பியன்ஸ் ஆக இருந்தன என ஊகிக்கமுடியும். அவர்களது குடியிருப்புகளின் பருமன்கள் பற்றிகூட மதிப்பீட்டு அகழ்வுகள் வரையரைக்குட்பட்டவையாக இருந்ததன் காரணமாக அறிந்துகொள்ள முடியவில்லை. மேலும் மேற்பரப்பு அடையாளங்களும் அமைவிடம் ஒன்றுக்கு ஏறத்தாழ 50 சதுர மீற்றருக்கு அல்லது அதனிலும் குறைவான பரப்பிற்கு உரியனவாக உள்ளன. குடியிருப்பாளர்கள் வேட்டையாடி அல்லது தேவையானவற்றைச் சேகரித்து வாழ்ந்தனர் என்பது வெளிப்படை. இது ஏறத்தாழ 100,000 ஆண்டுகளுக்கு பின்னர் அவர்களது சந்ததியினரின் செயற்பாடுகளில் காணக்கூடியதாக இருந்த கோலத்துடன் பொருந்தியமைந்தாக இருந்திருத்தல்கூடும். பிளீஸ்ரோசின் காலத்தின் நடுப்பகுதி தொடக்கம் மழைவீழ்ச்சிக்கு இடைப்பட்ட காலங்களிலும் இவ்வாரம்பகால மனிதர்களின் பௌதீக உயிர் வாழ்க்கைச் சூழல்கள் மனித குடித்தொகை அடர்த்திகளிலான மாற்றத்தில் பிரதிபலிக்கப்படத்தக்க வகையில் விலங்கு உணவு, தாவர வளங்கள் என்பவற்றிலான ஒத்த ஊசலாட்டத்துடன் மாறிய வண்ணமாயிருந்தன.

இற்றைக்கு ஏறத்தாழ 125,000 ஆண்டுகளுக்கு முன் இருந்தவாறு தெற்கு ஆசியாவிலான குறித்த சில மழைவீழ்ச்சிக் காலங்களின் போது வடக்கு, கிழக்கு, தெற்கு இலங்கையின் உலர்வலயத்தில் சனத்தொகை அடர்த்தி சதுர கிலோமீற்றரொன்றுக்கு 1.5இற்கும் 0.8இற்குமிடைப்பட்ட வீச்சில் தனிப்பட்டவர்களை

கொண்டிருக்க மேற்கில் ஈரவலயத்தில் சனத்தொகை அடர்த்தி 0.1 ஆக அன்றேல் அதனிலும் குறைவாக இருத்தல்கூடும். மழைவீழ்ச்சிக்கு இடைப்பட்ட காலங்களில் வலயங்கள்சார் சனத்தொகை அடர்த்திகளின் ஒடுங்கிய இணைப்பிரிவுகளைக் கொண்டிருந்தன எனக் காணப்பட்டுள்ளன. மதிப்பீடுகள் முறையே உலர்வலயத்திற்கு 0.3இலும் குறைவாகவும் ஈரவலயத்திற்கு 0.1இற்கு மேற்படவும் இருந்தன. இவ்வெண்கள் தென், தென்கிழக்காசிய வேட்டையாடுவோர், உணவு சேகரிப்போர் பற்றிய இன விவரண மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்டவையாகும். உணவு வழங்கல்களில் ஊகிக்கப்பட்ட அடர்த்திகள் தரப்படுமிடத்து கடல் உணவுகளை தமது சிறந்த வளங்களாகக் கொண்டிருந்த வடக்கு-கிழக்குக் கரையோரங்கள் தவிர்ந்த இடங்களில் ஒரு சில மையங்களில் குடும்பங்கள் கொண்ட மிகப்பெரிய சமுதாயங்கள் இருந்திருக்கமுடியாது.

வரலாற்றுக்கு முற்பட்டகால இலங்கையின் பண்பாடு பற்றிய ஆய்வியலில் மிக அண்மைக்காலத்து முக்கிய அபிவிருத்தியாக புதிய கண்டுபிடிப்பொன்று இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வடஇலங்கையில் யாழ்ப்பாணக்குடாநாட்டின்கண் வடமராட்சிப் பிரதேசத்தில் தம்பசிட்டியிலுள்ள மாயக்கை (மாயக்குகை) என்னுமிடத்திலுள்ள குகையின் முகப்பு வாயிலில் இருந்து இந்நூலாசிரியரினால் 1984 இல் தொல்லியல் மேலாய்வின் போது சேகரிக்கப்பட்ட பழங்கற்காலக் கற்கருவிகள் சில இப்பொழுது தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், அவை 600000 வருடங்கட்கு முந்திய பழங்கற்கால மனிதர்களுடைய கற்கருவிகள் என அடையாளம் காணப்பட்டமையானது ஒரு வரலாற்றுத் திருப்பமாக அமைந்துள்ளது. இப்பின்னணியில் மாயக்கை குகையினுள் பழங்கற்காலத்தினைச் சேர்ந்த ஹோமோ இறக்ரஸ் (HOMO ERECTUS) என்ற மனித இனம் வாழ்ந்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பேராசிரியர் சிரான் தெரணியாகல நேரடியாக இக்குகைப் பிரதேசத்திற்கு தொல்லியல் திணைக்களத்தின் பிரதி ஆணையாளரான கலாநிதி நிமால் பெரேராவுடன் வருகைதந்து, அப்பகுதியின் இயற்கைச்சூழலையும் நன்கு ஆராய்ந்து, வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதர் வாழ்ந்த பரப்பு அதுவென்பதனை திட்டவட்டமாக உறுதிப்படுத்தியுள்ளனர். மேலும் இக்குகையின் உட்பகுதியை அகழ்வாய்வு செய்வதன்மூலம் இக்கண்டுபிடிப்பினை மேலும் உறுதிப்படுத்தலாம் என அவர்களால் நம்பப்படுகின்றது.

மத்திய கற்காலம்

இற்றைக்கு ஏறத்தாழ 34,000 ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பதிவு கூடிய அளவில் நிறைவாக உள்ளது. தாழ்நில ஈர வலயத்திலான குகை அகழ்வுகளில் தொடரொன்றிலிருந்து

தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. புலத் சிங்களவிற்கு அண்மையிலான பாகியன் குகை (இற்றைக்கு 34,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது) குருவிற்றவிற்கு அண்மையிலுள்ள பற்றொடம்ப குகை (இற்றைக்கு 28500-11500 ஆண்டுகளுக்கு முற்பட்டது) கித்துல்கலவிலுள்ள வெலி குகை (இற்றைக்கு 27000 - 35000 ஆண்டுகளுக்கு முற்பட்டது) கேகாலைக்கு அண்மையில் அத்தனகொடவிலுள்ள அலுகுகை (இற்றைக்கு 105000 ஆண்டுகளுக்கு முற்பட்டது) என்பவையே அகழ்வுக்கு உட்பட்டகுகைகளாகும். இத்தரவுகள் எம்பிலிப்பிற்றியாவுக்கு அண்மையில் பெல்லன்- பன்டிபலஸ்ஸ (6500 ஆண்டுகளுக்கு முற்பட்டது) எனும் திறந்தவெளி அமைவிடத்தில் கிடைத்த தரவுகளினால் குறைநிரப்பப்பட்டுள்ளன. தேதியிடல் பிரதானமாக பெரிய குகை தொடரியல் வெப்ப ஒளிர்வுத் தேதியிடலுக்கு எத்ரதக மரக்கரி மீது தனியாகச் செவ்வை பார்க்கப்படும் கதிர்க்காபன் சோதனைகளையே அடிப்படையாகக் கொண்டது. இவ்வமைவிடங்களில் வேறுபட்ட சந்தர்ப்பங்களிலிருந்து அத்தகைய 50 இற்கும் மேற்பட்ட தேதிகள் பெறப்பட்டன என்பதுடன் இக்காலவரன்முறை அமைப்புத்திட்டம் உறுதியானது எனக் கருதலாம்.

உடலமைப்பில் ரீதியில் தெற்கு ஆசியாவிலான தற்கால மனிதன் பற்றிய காலத்தால் மிக முந்திய சான்றினைத் தந்தது பாகியன் குகை ஆகும் (இற்றைக்கு 340,00 ஆண்டுகளுக்கு முந்தியது). அதைத் தொடர்ந்து சான்று அளித்தவை இற்றைக்கு 28,500-16,000ஆண்டுகளுக்கு முந்திய பற்றடோம்ப குகை; இற்றைக்கு 13,000 ஆண்டுகளுக்கு முந்திய பெரிய குகை; 69,000 ஆண்டுகளுக்கு முந்திய பாகியன் குகை; 65,000 ஆண்டுகளுக்கு முந்திய பெல்லன் பண்டி பலஸ்ஸ குகை என்பவையாகும். அம்மனித எச்சங்கள் விரிவான பௌதிக மனிதரியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இற்றைக்கு 16,000 ஆண்டுகளுக்கு முன் பற்றடோம்ப தொடக்கம் இற்றைக்கு 13,000 ஆண்டுகளுக்கு முன் பெரியகுகை வரையிலும் இற்றைக்கு 65000 ஆண்டுகளுக்கு முன் பெலன் பன்டி பலஸ்ஸ வரையிலும் அண்மைக்கால வேடர் பழங்குடிகள் வரையிலும் தலைமுறைத் தொடர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் வெளிப்படையாக இருந்தமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. பாகியன் குகையிலிருந்தான முன்னைய விவரங்கள் ஒப்பீட்டு ஆய்வினை மேற்கொள்ள முடியாத அளவுக்குத் துண்டுபட்டவையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

குடித்தொகை இயக்கவியல் அடிப்படையில் இது ஒரு தேக்க நிலையைக் காட்டுவதாக உள்ளது. அது வேறுபட்ட உடற்பண்புகளைக் கொண்ட புதிய சனத்தொகைகளின் வருகையினாலும் கூட பாதிக்கப்படாது நீண்ட காலமாக குறிப்பிடத்தக்க விதத்தில் ஒரு மாறாத நிலையில் இருந்தது. உடலமைப்பியல் ரீதியில் வரலாற்றுக்கு முற்பட்ட கால நவீன மனிதன் பலாங்கொடை மனிதன் எனப் பொதுவான பேச்சில் குறிப்பிடப்படுகின்றான் (பலாங்கொடைக்கு அண்மையிலுள்ள அமைவிடங்களில் முதன் முதலாக மத்திய கற்காலப் பண்பாடு வரையறுக்கப்படுவதற்கு அவனே காரணமாக இருந்ததனால் இப்பெயர் வந்தது).

இலங்கையின் இற்றைய சனத்தொகைகளுடன் ஒப்பிடும்பொழுது அக்கால மாதிரிகளில் ஆண்களுக்கு 174 செமீ எனும் மதிப்பிட்ட உயரத்தை மனிதர் கொண்டிருந்தனர். (தெரணியகல 1992) தடித்த மண்டையோடு, துலக்கமான புரவ மேடுகள், குழிவான மூக்கு, கனம் மிகுந்தாடை எலும்புகள், குறுகிய கழுத்துக்கள் என்பவற்றுடன் அவனது எலும்புகள் வலிமை வாய்ந்தவையாக இருந்தன. பற்கள் பெரிதாக இருந்தன; இப்பண்புகள் வேறுபட்ட அளவுகளில் வேடர்களிடையேயும் குறித்த சில சிங்களத் தொகுதியினரிடையும் தொடர்ந்து காணப்பட்டமை பலாங்கொடை மனிதன் அவர்களது பொது மூதாதையாக இருந்தமையைக் காட்டுகின்றது. பழைய கற்காலம் தொடக்கம் இந்தியாவின் தென்முனைக்கும் இலங்கைக்குமிடையில் (இரு திசைகளிலும்) தடையற்ற சந்ததிச் சுவட்டுப் பாச்சலாக இருந்திருக்கக் கூடும் என்பதையும் வருங்கால ஆராய்ச்சியானது இப்பிரதேசத்தின் வரலாற்றுக்கு முற்பட்டகால மக்கட் தொகைகளின் சந்ததிச் சுவட்டுத் திரள்களின் முழுமையான வீச்சினை வெளிப்படுத்தி ஓரியல்பினதான இனமாக பலாங்கொடை மனிதன் பற்றிக் கொள்ளப்படும் எண்ணக்கருவைச் செல்லுபடியற்றதாக்கும் என்பதையும் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

தீவின் கடந்த நான்காம் பகுதி பனிக்கட்டி யுக மனிதர் தொடர்பில் பலாங்கொடை மனிதன் தொழிற்படுவதற்குப் பயனுள்ள எண்ணக்கருவாக அமைகின்றான். அவன் மஹாஎலிய (ஹோட்டன் சமவெளி) போன்ற ஈரலிப்பும் குளிரும் மழை மிகுந்த உயர் சமவெளிகள் தொடக்கம் மன்னார் வில்பத்து ஆகிய தாழ்நிலங்கள், சப்பிரகமுவாவின் மத்தியகோட்டு மழைக்காடுகள் ஆகியவை வரை இலங்கையின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் வாழ்ந்தவனாகக் காணப்படுகின்றான். அவனது உறைவிடங்கள் சிறியனவாக, அரிதாகவே 50 சதுர மீற்றரிலும் கூடுதலானவையாக இருந்தன. உயர் அளவில் ஒரு சில மையக் குடும்பங்கள் மட்டுமே அங்கு வாழ்ந்திருத்தல் கூடும் என்பதை இது கருத வைக்கின்றது. இவ்வாழ்க்கைப் பாங்கு இலங்கையின் வேடர்களுக்கும் இந்தியாவின் காடர், மலபந்தரம், செஞ்சுக்கள் ஆகியோருக்கும் அந்தமான் தீவினருக்கும் மலேசியாவின் செமாங் குடிகளுக்கும் விவரிக்கப்பட்டதிலிருந்து அதிகம் வேறுபட்டதாக இருக்கமுடியாது. அவர்கள் உணவைத்தேடி ஆண்டுக்குரிய கால வட்டங்களில் இடத்திற்கு இடம் பெயர்ந்து வந்திருத்தல்கூடும். குகைகளிருந்தும் பெல்லன்-பன்டி பலஸ்ஸவிலிருந்தும் கிடைத்த நன்கு பேணப்பட்ட சான்றுகள் பரந்த வீச்சிலான உணவுத் தாவரங்களும் விலங்குகளும் பயன்கொள்ளப்பட்டன என்பதைக் காட்டுகின்றன. முதற் குறிப்பிட்டதில் கனேரியம் வித்துக்கள், காட்டு ஈரப்பலா, காட்டு வாழைப்பழம் என்பவை முக்கியத்துவம் பெறுகின்றன. டுயஸ்கொறியா கிழங்கு வகைகள் அண்மைக்காலத்தில் தெற்கு ஆசியாவின் வேட்டையாடுவோரிடையும் உணவு சேகரிப்போரிடையும் காணப்பட்டவாறு முக்கிய உணவுப் பொருளாக இருந்தன. யானைகள் தொடக்கம் பாம்புகள், எலிகள், நத்தைகள், சிறுமீன்கள் வரை விலங்கு வகை ஒவ்வொன்றும்

உண்ணப்பட்டதாக தெரிகின்றது. மனித ஓட்டின் எச்சங்களின் திண்மை உறுதிப் படுத்தப்படுகின்றவாறு அவ்வுணவு நன்கு சமநிலை பெற்ற உணவாக (நிறை யுணவு) இருந்திருத்தல் கூடும். மாப்பசை உணவும் சுறுசுறுப்பற்ற வாழ்க்கைப் பாங்கும் காரணமாக என்புகள் சீர்கெடும் நிலை இதுவரை காணப்படவில்லை.

பலாங்கொடை மனிதனின் கருவித்தொகுதி கோணவடிவக் குறுணிக் கற்களினால் அடையாளங் காணப்படுகின்றது. அவை குவாட்ஸ், சேட் கற்களின் பிறை போன்ற முக்கோண சரிவகத் திண்ம வடிவங்களிலமைந்த 4செ.மீ இலும் குறைவான நீளங்கொண்ட சிறு துண்டங்களைக் கொண்டிருந்தன. அத்தகைய கோணவடிவ குறுணிக்கற்கள் முதலில் ஐரோப்பாவில் வரையறுக்கப்பட்டவாறு மத்திய கற்காலத்தின் அடையாளமாகக் கருதப்பட்டது. ஐரோப்பாவில் கோணவடிவ குறுணிக்கல் மரபிற்கான காலத்தால் மிகமுற்பட்ட தேதிகள் இற்றைக்கு ஏறத்தாழ 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். எனவே **பற்றடொம்ப** குகையில் இற்றைக்கு 28,500 ஆண்டுகளுக்கு முன்பும் புந்தலவின் இரு கடற்கரை அமைவிடங்களில் இற்றைக்கு 28,000 ஆண்டுகளுக்கு முன்பும் பெலி குகையில் இற்றைக்கு 27,000 ஆண்டுகளுக்கு முன்பும் அத்தகைய கருவிகள் காணப்பட்டமை வியப்பைத் தருவதாக அமைந்தது. ஐரோப்பாவில் இருந்ததிலும் ஏறத்தாழ 16,000 ஆண்டுகளுக்கு முன்னதாக இலங்கை இந்த எடுப்பான தொழில்நுணுக்கக் கட்டத்திற்குரிய சான்றினை அளித்தது. எனினும் இந்த முரண்பாடு இற்றைக்கு 27,000 ஆண்டிற்கு மிக முற்பட்ட சந்தர்ப்பங்களில் ஆபிரிக்காவில் ஸயர், தென்ஆபிரிக்கா போன்ற வேறுபட்ட பகுதிகளில் கோணவடிவக் குறுணிக் கற்கள் கண்டுபிடிக்கப்பட்டமையுடன் தீர்வு பெற்றது. இன்னும் வரையறுக்கப்படாத காரணங்களால் பற்றடொம்பவுடன் தீர்வு பெற்றது. இன்னும் வரையறுக்கப்படாத காரணங்களால் ஐரோப்பா இத்தொழில்நுணுக்க மரபினை வெளிப்படுத்துவதில் பின்னின்றது எனும் கருத்தை இது தருகிறது. இற்றைக்கு 28,500 ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் கற்கருவிகள் தவிர மனிதன் எலும்பு, மான் கொம்பு என்பனவற்றிலிருந்து ஆக்கிய பொருட்கள் சிறப்பாக சிறு எலும்பு முனைகள்- மிகுதியாகக் காணப்பட்டன. ஓடுகளிலான மணிகளும் காலத்தால் முந்திய இச்சந்தர்ப்பங்களிற் காணப்பட்டன. பற்றடொம்ப குகை போன்ற நாட்டின் உட்புற அமைவிடங்களில் கடற் சிப்பிகள் காணப்பட்டமை கடற்கரையோரத்திற்குமிடையில் தொடர்புகளின் பரந்த வலையமைப்பு ஒன்று இருந்தமையைக் காட்டுகின்றது. பெலி குகையிலிருந்தான சான்று இற்றைக்கு 27,000 ஆண்டுகளுக்கு மிக முற்பட்ட ஒரு தேதியில் கடற்கரையிலிருந்து அங்கு உப்பு கொணரப்பட்டமையைச் சுட்டுகின்றது. கற்காலக் கலை பற்றி அறிவதற்கு இலங்கை இன்னும் ஐயத்திற்கு இடமற்ற சான்றினை அளிக்க வேண்டியுள்ளது. உலர் வலயத்தின் வேறுபட்ட பகுதிகளில் அவதானிக்கப்பட்ட குகைச்சித்திரம் மனித இன ஆய்வாளர்களினால் காட்டப்பட்டபடி வேடர்களின் படைப்பாகும். அவற்றுள் குறித்த ஒரு விகித சமமானவையே வரலாற்றுக்கு முற்பட்டகாலத்தைச் சேர்ந்தவையாகும். இதையொத்தவாறே மதக்கிரிகைகள்

பற்றிய தோற்றப்பாடுகளுடன் சான்று அரிதாகவே உள்ளது. இறந்தவர்களை தமது வாழிடத் தலங்களினுள் அடுத்தடுத்து புதைப்பது பலாங்கொடை மனிதர்களின் நியமமாக இருந்தது என்பதற்கான எடுத்துக்காட்டுகள் உள்ளன. இந்நோக்கத்திற்குக் குறித்த சில எலும்புகளை அவன் தெரிவுசெய்து வைத்திருந்தான். ராவணல்ல குகை, பாகியன்குகை ஆகியவற்றில் எலும்புகள் மீது வைபவரீதியில் **செம்மண் பூசப்பட்டிருந்தது.** இவ்வழமைகள் வேடுவர்களுடையதையன்றி அந்தமான் தீவினரது சவஅடக்க வழமைகளை ஒத்தவையாக உள்ளன. வேடுவர் பண்பாட்டு பின்னடைவுச் செயன்முறையினூடாக தமது மூதாதையினரின் விரிவான சவ அடக்க வழமைகளைக் கைவிட்டனர் போலும்.

வரலாற்று உதயகாலம்

புதிய கற்கால - கல், இரும்பல்லாத உலோக பண்பாட்டுக் காலம்

மத்திய கற்கால பலாங்கொடைப் பண்பாட்டிலிருந்து வரலாற்று உதயகால இரும்புயுக ஆரம்பத்திற்கான மாற்றம் இலங்கையிலே போதிய அளவில் எழுத்திற் பொறிக்கப்படவில்லை. வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குகை வாழிடங்களிலிருந்து வளம்படுத்திகள் பெயர்த்தெடுக்கப்பட்டமை காரணமாக பொருத்தமான மாற்ற காலத்திற்குரிய படிவுகள் குலைக்கப்பட்டுள்ளன. கேகாலைக்கு அண்மையில் தொரவக்ககந்த குகையில் அண்மைக்கால அகழ்வுகள் இச்சங்கடமான நிலையைத் தீர்த்து வைத்திருக்க வேண்டும். அகழ்வாய்வாளர் டபிள்யூ.எச் விஜயபாலாவின் கருத்திற்கமைய இற்றைக்கு 6,300 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வமைவிடத்தில் மட்பாண்டங்கள் (கற்கருவிகளுடன்) பயன்படுத்தப் பட்டமைக்கும், தானியமொன்று பயிரிடப்பட்டிருத்தல் கூடும் என்பதற்கும் எடுத்துக்காட்டுகள் உள்ளன. முடிவான பகுப்பாய்வுகளும் அமைவிட அறிக்கையும் இன்னும் வெளியிடப்படவில்லை. அகழ்வாளரின் கருத்துக்கள் நம்பத்தகுந்தவை எனில் (அ) தென்னிந்திய புதிய கற்காலம் கி.மு 2000 ஆண்டுகள் அளவேனும் பழமை வாய்ந்தது. மற்றும் (ஆ) தொறவக்க கந்தவிலான கரிய சுரும் பாண்டங்களாகக் குறிப்பிடப்பட்ட மட்பாண்டங்களுக்கு முற்பட்டதாக தனிச் சிவப்புப்பாண்டம் காணப்பட்டது. தோறவக்க கந்த தரும் செம்பாண்டம் அநுராதபுரத்தில் ஏறத்தாழ கி.மு 900 ஆம் ஆண்டிற்குரியதாகத் தேதியிடப்படு கின்றது. எனவே தொறவக்ககந்தவின் செம்பாண்டம் அதற்கு முற்பட்ட தேதியைச் சேர்ந்ததாதல் வேண்டும். தீபகற்ப இந்தியாவின் புதிய கற்காலத்திற்குரிய வகை மாதிரியான நேர்த்தியாக்கப்பட்ட கோடரிகள் மண்பாண்டங்கள் ஆகியவை இலங்கையில் இன்னும் கண்டுபிடிக்கப்பட வேண்டியவையாக உள்ளன. தொறவக்க கந்த தரவுகள் வேறுவிதமாக நிறுவும் வரை தீவில் புதிய கற்காலம் ஒன்று இருந்தமை இதுவரை இன்னும் தாபிக்கப்படவில்லை.

இலங்கையில் மத்திய கற்கால கோணவடிவக் குறுணிக் கற் கைத்தொழிலுக்கான காலவரன்முறை மேல் எல்லையொன்றை வழங்குவதற்காகக்

கிடைத்த அண்மைக்கால கதிர்கார்பன் தேதிகள் அண்ணளவாக மாந்தையில் கி.மு. 1800 ஆம் ஆண்டும் பெலிகுகையில் கி.மு. 1500ஆம் ஆண்டுமாகும். கடைசியாகக் குறிப்பிடப்பட்டது வீட்டு வளர்ப்பு இனங்கள் அல்லது மட்பாண்டங்களுடன் கூடியதாக இருக்கலாம். மாதோட்டத்தில் இந்த மத்திய கற்காலச் சூழ்நிலையிலிருந்து செப்பு வேலைக் கழிவின் சிறு துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டமை இலங்கையில் கல்- இரும்பல்லாத உலோகப் பண்பாட்டின் முதல் அடையாளங் காணலைக் குறித்து நிற்கிறது. இலங்கையின் கல்-இரும்பல்லாத உலோகப் பண்பாடும் தீபகற்ப இந்தியாவின் உறுதியாகத் தேதி குறிக்கப்பட்ட கல் - இரும்பல்லா உலோகப் பயன்பாடும் சம காலத்தவையாகும். எனினும் இக்கழிவு உலோகம் மிக அவதானமாக மேற்கொள்ளப்பட்டது அகழ்வின் மாதிரியினுள் பிழையான பெயர் குறித்தலினூடாக புகுந்திருக்கக்கூடும்; அவற்றுடன் மட்பாண்டம் எதுவும் காணப்படவில்லை. இவ்விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கு மேலதிக மாதிரிகள் தேவைப்படும். இந்தியாவின் மத்தியப்பிரதேசத்திற்கு தெற்கே காணப்படும் பிரதான செப்புத் தாதுவின் தனியொரு தோற்றுவாய் இலங்கையின் கிழக்கே சேருவாவிலவில் அமைந்துள்ளது என்பது இப்பொழுது அறியப் பட்டுள்ளது. இதனை இந்திய கல்-இரும்பல்லா உலோகப் பண்பாட்டு மக்கள் அறிந்திருக்கக் கூடும். இலங்கை இவ்வரியவளத்தை பயன்படுத்திக் கொண்டு இருந்திருக்க முடியும். இதனால் மாந்தை இந்தியாவுக்கு செப்பினைக் கப்பலிலேற்றிய கப்பற்துறையாகவும் இருந்திருக்கக்கூடும்.

வடஇந்தியாவில் புதிய கற்காலக் குடியிருப்புகள் கி.மு. 6500இற்கும் 5000 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. தீபகற்ப இந்தியாவிலும் இலங்கையிலும் சமாந்தரமான நிகழ்வுகளைக் கண்டறிய வேண்டியவையாக உள்ளன. தீபகற்ப இந்தியா கி.மு. 2000ஆண்டிற்கும் முற்பட்ட காலத்தில் இல்லாவிடினும், அவ்வாண்டளவிலேனும் முற்றுமுழுதாக கல்-இரும்பல்லாத உலோக பண்பாட்டைக் கொண்டிருந்தது. இலங்கையின் புதிய கற்கால-கல்-இரும்பல்லா உலோகப்பண்பாட்டுக் குடியிருப்புகளுக்கான தேடுதலாய்வுகள் இரும்புயுக ஆரம்பத்திற்கு முன்தேதியிடும் சந்தர்ப்பங்களில், விலங்கு அல்லது தாவர வளர்ப்பினங்கள், மட்பாண்டங்கள், இன்றேல் செப்பு-கலப்பு உலோக வேலைச்சான்றுகள் ஆகியவற்றைக் கண்டுகொள்வதில் கவனத்தைக் குவித்தல் வேண்டும். இவை மத்திய கற்காலத்திற்குப் பொதுவாக ஒதுக்கி வைத்திருக்கப்படக் கூடிய கோண வடிவக் குறுணிக்கற்களுடன் காணப்படக்கூடும். தீபகற்ப இந்தியாவின் புதிய கற்கால-கல் இரும்பல்லாத உலோகப் பயன்பாட்டிற்குரிய கற்கருவிகள் ஒருவர் தெற்கு நோக்கி நகரும்பொழுது குறுணிக்கற் (மத்திய காலப்) பண்பாட்டிற்கு எதிரொலியாக கூர்முனை புதிய கற்கால-கல் இரும்பல்லா உலோகப் பண்பாட்டுப் பாங்குகளைத் துரித கதியில் வெளிகாட்டுவனவாக உள்ளன.

இரும்பு யுகத்தின் ஆரம்பகாலம்

வரலாற்று உதயகால இரும்பு யுகத்தின் ஆரம்பம் தென் இந்தியாவில் கி.மு. 1200 ஆம் ஆண்டிற்கு முன்னர் இல்லாவிடினும் குறைந்தபட்சம் அவ்வாண்டுக் கால அளவிலேனும் நிறுவப்பட்டுள்ளது. இலங்கையில் இதன் காலத்தால் மிக முந்திய தோற்றப்பாட்டுடன் அநுராதபுரத்திலும் சீகிரியா இலிகல ஒதுக்கிடத்திலும் கி.மு. 1000-800 ஆன காலப்பகுப்பாக கதிர்கார்பன் தேதியிடப்பட்டுள்ளது. (தெரணியகலை1992:709-29: கருணாரட்ணவும் அதிகாரியும் 1994:58 மோகிறென் 1994 :39 அநுராதபுரத் தேதிக் குறிப்பீடு இப்பொழுது கானிங்காமினால் 1996 இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது).

அநுராதபுரத்திலான குடியிருப்பு கி.மு. 800 ஆம் ஆண்டளவில் பரப்பில் 10 ஹெக்டயருக்கு மேற்பட்டதாக இருந்தது. கி.மு. 700-600ஆன காலப்பகுதியில் அது 50 ஹெக்டயர்களையேனும் கொண்டதாகி, ஏற்கெனவே ஒரு நகரமாக விளங்கியது (அலச்சின்1989) இதுவரை இலங்கையில் இரும்பு யுக ஆரம்ப காலத்தைச் சேர்ந்த பிற குடியிருப்புகள் எவையும் இடம் குறித்துரைக்கப்படவில்லை (அலிகல பாறை ஒதுக்கிடத்தினுள் சிறிய அளவிலான படிவு மட்டும் காணப்பட்டது). சாத்தியமான அமைவிடங்கள் கந்தரோடை, மாதோட்டம் (மாந்தை) களனியில் பிலபிற்றிய, திஸ்ஸமஹாராம என்பனவையாகும். எனினும் சான்று இன்னும் வெளிப்படவேண்டியதாக உள்ளது. இலங்கையின் பெருங்கால இரும்புயுக ஆரம்பகாலச் சவக்கிடங்குத் தொகுதி (செனவிரட்ண 1984) தீபகற்ப இந்தியாவினுடையதை ஒத்து விளங்குகின்றது. அது தேதியிடப்பட்ட ஒரேயொரு அமைவிடமான அப்பங்காற்றுவவில் கி.மு. 770-400 ஆன அதன் கதிர்காபன் காலத்தாற் காட்டப்படுகின்றவாறு முதன்மையாக அல்லது சாத்தியமான ரீதியில் முழுமையாக வரலாற்று உதயகாலத்தினுள் இடம்பெறுவதாக உள்ளது. இலங்கையின் முழு மொத்தமான இரும்புயுக ஆரம்பகாலப் பண்பாட்டினுள் அச்சவக் கிடங்கு பங்குபெறும் இடம் இன்னும் துணியப்படவில்லை. எடுத்துக்காட்டாக இப்பங்கற்றுவவிற் போல இந்த மயானபூமிகள் அவற்றுடன் சம்பந்தப்பட்ட சமகாலக் குடியிருப்புகளைக் கொண்டிருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. (கருணாரட்ண 1994) எதிரிடையாக அநுராதபுரத்திலான இரும்புயுக ஆரம்பகாலக் குடியிருப்பு அதனுடன் அரிதாகவேனும் பிணைக்கப்படத்தக்க பெருங்கல் மயானபூமியொன்றைக் கொண்டிருக்கவில்லை. அநுராதபுர பெருங்கல் சவக்கிடங்குத் தொகுதி அநுராதபுரத்தில் வதிந்தோரின் சுற்றெல்லையில் மதகுருக்கள் போன்ற சிறப்பான மக்கள் தொகுதியுடன் மட்டும் சம்பந்தப்பட்டதாக இருத்தல் கூடும் (லெஷிங்க் 1974). சுருங்கக்கூறின் இது கருதுவது யாதெனின் பெருங்கல் சவக்கிடங்குப் பாங்கு இந்தியாவின் வரலாற்று உதய கால இரும்பு யுக ஆரம்பப் பண்பாட்டுத் தொகுதியின் தனியொரு பக்கத் தோற்றப்பாடு மட்டுமேயாகும்.

இந்தியாவின் இவ்வரலாற்றுதய கால ஆரம்ப இரும்புயுகப் பண்பாட்டுத்தொகுதி பிரதேசம்சார் மாறுபாடுகளுடன் கங்கைநதிப் பள்ளதாக்கு தொடக்கம் கீழே

இலங்கைவரை தனது பரம்பலைக் கொண்டிருந்தது. இச்சவக்கிடங்குப் பாங்கு தீபகற்ப இந்தியாவினதோ இலங்கையினதோ இரும்புயுக ஆரம்பத்துடன் கட்டாயமாக இணக்கம் கொண்டதாக இல்லாததால் அறிஞர்கள் பலர் கருதுவதுபோல பெருங்கற் பண்பாடு ஒன்று பற்றிக் குறிப்பிடுவது தவறாக வழி காட்டுவதாகும். இதை ஒத்தவாறே கரும் செம்மண்பாண்ட மரபு உபகண்டத்தினது பெரும்பாகத்தின் (வடமேற்கு நீங்கலாக) இரும்பு யுக ஆரம்பத்தின் ஓர் அடையாளச் சின்னமாகும். அது தீபகற்ப இந்தியாவில் பெருங்கற்சவக்கிடங்கு எச்சங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை என்பது பெரும்பாலும் கருத்திற் கொள்ளப்படுவ தில்லை. ஒன்றிற்கொன்று சமன் எனும் அடிப்படையில் தொடக்கத்திலிருந்தே பொருள் கோடலின் அடிப்படைத் திரிவுபடுத்தும் வகையில் கரும் செம்மட்பாண்டத்தைப் பெருங்கற் தொகுதியுடன் சமப்படுத்தும் போக்கு காணப்படுகின்றது. தொல்பொருளியற் பதிவின் பொருள்கோடலில் குழப்பத்தை உண்டுபண்ணுவதைத் தவிர்ப்பதற்காக (அ) உபகண்டத்தின் இரும்புயுக ஆரம்ப காலப் பண்பாட்டுத் தொகுதி (ஆ) அதன் கரும் செம்மட்பாண்டத் தொகுதி (இ) தென்இந்தியாவிலும் இலங்கையிலுமான பெருங் கல்மயான பூமித்தொகுதி என்பவற்றுக்கிடையிலான இந்த இடைத்தொடர்பின் தன்மை தெளிவாக மனத்திற் கொள்ளப்படவேண்டியது முக்கியமாகும். இலங்கைக்கான தரவுகள் மொத்தமாக உபகண்ட இரும்புயுக ஆரம்பகாலத்தின் பின்னணிக்கு எதிரிலேயே பொருள் கொள்ளப்படவேண்டும். அவற்றிடையே இடைத்தர நெடுவீச்சுப் பண்பாட்டுப் பரவல் இடம்பெற்றதாகக் காணப்படுவதே இதற்கான காரணமாகும்.

இலங்கையில் இரும்புயுக ஆரம்பகால மனிதனின் உயிரியல் மானிடவியல் பலாங்கொடை மனிதனின் இயல்பிலும் வேறுபட்டதாக உள்ளது. எனினும் ஆய்ந்தறியப்பட்ட தனியொரு பெருங்கல் பொம்பரிப்பிலிருந்தான சான்று குறித்த அளவில் கலப்பு இனவிருத்தி இடம்பெற்றிருக்கக்கூடும் எனும் கருத்தை தருவதாக உள்ளது. இது கி.பி. 500 இற்கு முன்னரும், பெல்லன் பண்டி பலஸ்ஸவில் கி.மு. 4500 இற்குப் பின்னரும் இடம்பெற்றிருக்கலாம். இத்தகைய முற்பட்ட ஒரு காலத்திலே நாட்டினுள் புகுத்துவதற்கு இம்மக்களைக் கவர்ந்த அம்சம் யாது? இலங்கையின் உள்ளார்ந்த விவசாய ஆற்றல் குறிப்பாக அதன் நிறைந்த நீர்வழங்கல், மத்தியகோட்டு அடர்ந்த மழைக்காடுகளையும் கனமான தரைகளையும் அடக்கியாள்வதற்கான இரும்புத்தொழில் நுணுக்கத்திறனுடன் சேர்ந்த பிரதான காரணியாக இருத்தல்கூடும். தீவின் வடமேற்கில் அமைந்த முத்துக்குளிப்பு, கடற்தள மேடைகள், செருவில் செப்புதாதின் பிரதான தோற்றுவாயாக காணப்பட்டமை தென்கிழக்கு ஆசியாவிற்கும் மேற்கு ஆசியாவிற்குமிடையில் நிகழ்ந்த நெடுந்தூர வியாபாரத்திற்கு ஏற்றியிறக்குமிடத் துறைமுகமாக இலங்கை அமைவுபெற்றமை என்பன ஏனைய பிரதான கவர்ச்சிகரமான அம்சங்களாகும் (கி.மு 2ஆம் ஆயிரமாம் ஆண்டுக்காலத்தில் பரோவா மன்னர்களது எகிப்தில் பயன்படுத்தப்பட்ட மிளகு கேரளம், இலங்கை அல்லது தெற்கு ஆசியாவிலிருந்து தான் சென்றிருக்கவேண்டும்). அதன் பின்னர்

தென்னிந்தியாவிற்கு அப்பாலிருந்து வந்தோருக்கு இலங்கையிற் குடியேறும் நாட்டம் துரிதமாக விருத்தியடைந்தது. அவ்வெழுச்சி இந்தோ-கங்கைச் சமவெளியின் இரண்டாம் நகரமயமாக்கத்துடன் ஒரே சமயத்தில் நிகழ்ந்தது. முன்னர் குறிப்பிட்டவாறு கி.மு. ஏறத்தாழ 900 ஆம் ஆண்டளவில் அநுராதபுரம் குறைந்தபட்சம் 10 ஹெக்டயர் பரப்பளவினதாக இருந்தது (இன்னும் கூடுதலான தாகவும் இருந்திருக்கக்கூடும்). அவ்வேளையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால கற்களைக் கொண்டு கருவிகளைச் செய்யும் தொழில் நுணுக்கம் இத் தலத்திலே முற்றிலும் இரும்புத்தொழில் நுணுக்கமயமாகியது. முன்னேற்றமெய்திய பிற போக்குகள் செப்பு - கலப்பு உலோக ஆக்கப் பொருட்கள் உயர்தரமான மட்கலங்கள் (குறிப்பாக கரும் செம்மட்பாண்டங்கள்) ஆடு, மாடு, குதிரைகள் வளர்ப்பு, நெற்செய்கை என்பனவாகும். கி.மு. 700-500 வரையான காலப்பகுதியில் அநுராதபுரம் 50 ஹெக்டயருக்கும் கூடுதலான பரப்பளவைக் கொண்டிருந்தது. இந்தியாவின் இரண்டாவது நகரமயமாக்கற் தோற்றப்பாடு இலங்கையில் எதிர்பாராத விதத்தில் ஒன்றில் துரிதமான தூண்டற்பரம்பல் அல்லது நெடுந்தூர வியாபாரம் போன்ற வெளிப்புறத் தூண்டல் காரணமான இணைந்து சிறத்தல் அன்றேல் இரண்டினதும் சேர்க்கை காரணமாக குறிப்பிட்ட காலத்திற்கு முந்தியே வெளிப்பட்டது போலும்.

வரலாற்றுக் காலத்திற்கான நிலை மாற்றம்

ஏறத்தாழ கி.மு. 800 வரையான காலப்பகுதியில் இலங்கையின் இரும்புயுக ஆரம்பகாலமானது அமைந்தது. இக்காலத்தில் எழுத்துச்சான்றுகள் எதுவும் இல்லாததால் வரலாற்று உதயகாலமாகக் குறிப்பிடப்படுகின்றது. கி.மு. ஏறத்தாழ 600-500 வரையான காலப்பகுதியில் எழுத்தின் முதல் தோற்றம் **(பிராமி எழுத்தானது ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்குப் பிற்பட்ட அசோக வரிவடிவத்திற்குச் சமமானது)** வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்தை வெளிப்படுத்தியது. மரக்கரி மீது கதிர்காபன் தேதியிடப்பட்டு, வெப்ப ஒளிர்வு மூலம் செவ்வை பார்க்கப்பட்ட எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. **இவ்வெழுத்தானது உரிமையைக் குறிப்பிடுமுகமாக பானை ஓடுகள் மீது பொறிக்கப்பட்டுள்ளது.** பெயர்களுள் ஒன்று **அநுராத** என்பதாகும். பண்டைய வரலாற்றேடுகளில் அது கி.மு. 500ஆம் ஆண்டளவில் சிங்களவர் இனத்தைத் தாபித்த தலைவனாகக் கருதப்படும் இளவரசன் விஜனின் அமைச்சர் ஒருவரின் பெயராக கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள கந்தரோடையிலிருந்தும் **அனுராதஸ** என வாசகம் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ள (RGW) ரோமானிய நரைவர்ண கறுப்புநிற தட்டையான மட்பாண்டம் (BOWL) கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பொறிப்பு மிகத்தெளிவான **அசோகபிராமி வரிவடிவினைக்** கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'எழுத்தின் ஆரம்ப நிலைகளுக்கான புதிய காலவரன்முறை தெற்கு ஆசியாவின் வரலாற்றுக் காலத்தின் தாழ் எல்லை பற்றிய எமது எண்ணக்கருவை

மாறுபடச் செய்துள்ளது. அது அதனை குறைந்தபட்சம் இரு நூற்றாண்டுகளேனும் புத்தர் காலத்தினுள் பின்தள்ளியுள்ளது. அநுராதபுரத்தில் எழுத்தின் தோற்றத்துடன் சமகாலத்தில் புதிய மட்கல வடிவங்களின் மீதும், **(ஆரம்ப வரலாற்றுக்கால கரும்செம்பாண்டங்கள் போன்றவை)** பாண்டங்களின் மீதும் (வட இந்தியாவிலிருந்து இறக்குமதியாகி இருக்கக்கூடிய நடுத்தர நேர்த்தியான சாம்பல் நிறப்பாண்டம்) டுட்டிசலா எனப்படும் சிவப்புக் கண்ணாடி மணிகள் மற்றும் எலும்பினாலான பொருட்கள் மீதும் எழுதும் கருவியின் செயற்பாட்டின் எழுச்சி காணப்பட்டது. பண்பாட்டுத் தூண்டுதல்களுக்குப் பொறுப்பாக நின்று தொழிற்பட்டிருக்கக்கூடிய **அனைத்திந்திய அவையொன்றே** இத்திரவியங்களினூடாகப் பெறப்பட்ட காலமாற்றங்களில் தன்னை வெளிப்படுத்தியது. **இந்தியாவிலிருந்து இளவரன் விஜயனின் இலங்கை வருகை பற்றிய கதையில் வெளிப்படுகின்றவாறு நெடுந்தூரத்திற்கான புலம்பெயர்தல்கள் இத்தோற்றப்பாட்டுடன் பொருந்தியமைபவையாக இருக்கலாம்.**

'அநுராதபுரியின் மட்கலங்கள் மீதான காலத்தால் முற்பட்ட மிக முக்கிய பொறிப்புகளை (கி.மு. 600-500) மொழியியற் கலையின் அடிப்படையில் நிர்ணயிப்பதற்கு போதிய அளவிற்கு **பூரணமான வாசகங்கள இந்தோ-ஆரிய பிராகிருத மொழியில** உள்ளன. இந்நிலையில் தென்னிந்தியாவின் **பெருங்கற்கால கொடுமணலிலும அரிக்கமேட்டின் அதி தாழ்மட்டங்களிலும்** காணப்படும் காலத்தால் மிக முந்திய பொறிப்புகளிலும் பிராகிருத வாசகங்கள் இடம்பெறுகின்றன. அவற்றுள் எவையேனும் இதுவரையில் தூய்மையான திராவிடமொழியில் அமைந்திருக்கவில்லை. **அது விஜயனுடன் சம்பந்தப்பட்ட 'ஆரிய விசையொன்று' சம்பந்தமாக வரலாற்றேடுகளில் உறுதியாக நிலைநிறுத்தப்படுகின்றவாறு இலங்கையில் கி.மு. 500ஆம் ஆண்டுக் காலத்திலிருந்தேனும் இந்தோ -ஆரியப் பண்பாடு தலைமை பெற்றிருந்தது எனும் கருத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது.** இது தொடர்பில் **பார்ப்போலா** வெளியிடும் கருத்துக்கள், தெரணியகல குறிப்பிடும் கருத்துக்களுக்குப் பொருத்தமானவையாக இருப்பினும், அக்கருத்துக்கள் துணிச்சல் வாய்ந்தவையாகவும் (கோபமூட்டத்தக்கவையாகவும்) உள்ளன. அத்துடன் அவை தீவிரமாக கருத்திற்கொள்ளப்பட வேண்டியவையாகும். இத்தூண்டுதல்களுக்கான பிரதான காரணியைத் தனிப்படுத்திக் காணுதல் சிரமமானது. கங்கை சமவெளியின் நகர்ப்புற மையங்களிலிருந்து மாநிலங்களினை நோக்கி (வரிவடிவ) விருத்தி செய்யப்படுவதற்காக இவை விலகிச்சென்று, பின்னர், பின்னூட்டல் நோக்குடன் மூல நிலையங்களுக்குத் திரும்பிவந்த முறையைக் காணமுடிகின்றது. அதேசமயம், சார்பளவில் மூடிய இடைத்தாக்கமொன்றை அவை மேற்கு ஆசியா, மத்தியதரைப் பிரதேசம், சீனா ஆகிய இடங்களிலிருந்தும் பெற்றுக்கொண்டிருந்த உள்ளீடுகைகள் ஊடாக வரிவடிவ வளர்ச்சிக்கான உந்துதலைக் கொண்டிருந்தமையை ஒருவர் புறக்கணிக்க முடியாது. **இறுதியாகக் குறிப்பிடப்பட்ட அம்சம் குறைந்தளவிலேயே மதிக்கப்பட்டிருந்தாலும் பிராமி வரிவடித்தை இந்தியாவில் உருவாக்கும் எண்ணம் மேற்கு**

ஆசியாவிலிருந்தான செமித்திய வியாபாரக் கையெழுத்துப்பிரதிகளுடனான தொடர்பினூடாகவே தோன்றியிருத்தல்கூடும்.'

'கி.மு. 500 ஆம் ஆண்டளவில் இலங்கையில் நகரமயமாக்கத்தை தொடக்கி வைப்பதற்குதவிய அதே பொறிமுறைத்தொழினுட்பம் வரலாற்றுக்கால ஆரம்பத்தில் நகரங்கள் தோற்றம் பெற்று துரிதகதியடைவதற்கும் பேருதவியாக இருந்தது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் பேரரசன் அசோகன் காலத்தில் **அநுராதபுர நகா ஏறத்தாழ 100 ஹெக்டயர் பரப்பளவினைக் கொண்டிருந்தது.** அதன் மூலம் அது தற்போதைய மதிப்பீடுகளின் அடிப்படையில் அக்கால இந்தியாவில் இலங்கையில் அது பத்தாவது மிகப்பெரிய நகராகவும், வட இந்தியாவின் **உஜ்ஜெயினிக்கும் சிசுபல்காரிற்கும** தெற்கே **மிகப்பெரிய நகராகவும் திகழ்ந்தது.** அச்சமயம் தீவின் நியாயமான நம்பிக்கை முறைமையாக பௌத்தம் வேரூன்றியிருந்தது. மேலும் தொழினுட்ப அடிப்படையில் **இரும்புயுக ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதாக கருதப்படும் நீர்ப்பாசன விவசாய எண்ணக்கரு** வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்தில் சிக்கல் வாய்ந்த குடியிருப்பு அமைப்புக்களுக்குப் பொருளாதார அடித்தளமாக அமைந்த பாரிய நீர்ப்பாசன முறைமைகளாகவும் விருத்தியடைந்தது.'

'இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலக்குடித்தொகை அடர்த்தி **மேல் பிளீஸ்ரோசீன்** காலத்தின் பெரும் பகுதியிலும் ஐதானதாக சதுர கிலோமீற்றரொன்றுக்கு 0.1-0.8 தனிப்பட்டவர்களைக் கொண்டிருந்ததாக மிதிப்பிடப் பட்டுள்ளது. கி.மு. 1000 ஆவது ஆண்டளவில் இரும்புத் தொழில்நுட்பத்தின் தோற்றத்துடன் இவ்வடர்த்தி அதிகரித்திருத்தல் கூடும். எனினும் தீவின் இரும்புக ஆரம்பகால அமைவிடங்கள் மிக அரிதாகவே காணப்பட்டன. இரும்பு விவசாயத் தொழில்நுட்பவியலின் மத்தியிலும்கூட இரும்புயுக ஆரம்பகாலப் பொருளாதாரத் திற்கு இலங்கை கொண்டிருந்த கவர்ச்சி குடியிருப்புகள் பலவற்றைத் தோற்று விப்பதற்குப் போதுமான அளவில் வலிமை வாய்ந்ததாக இருக்கவில்லை என்பதையே அது கருதுகிறது. குடியிருப்புகளின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு அடுத்து வந்த வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்தில் (கி.மு. 500 - கி.பி. 300) குறிப்பிடத்தக்க வகையில் விருத்தியடைந்தது. இந்த நிகழ்ச்சி இன்னும் கூடுதலாக வரலாற்றுக்காலத்தின் மத்திய பகுதியில் (கி.பி. 300-1200) அநுராதபுரம், மாந்தை போன்ற தலங்கள் தலைசிறந்து நின்ற காலத்தில் இடம்பெற்றதுடன் உலர்வலயம் பூராகவும் குடியிருப்புக்களில் பாரிய நெருக்கம் காணப்பட்டது. வரலாற்றுக் காலத்தின் ஆரம்ப, மத்திய பகுதிகளில் குடியிருப்புகளின் எழுச்சிக்கு இரும்புத் தொழினுட்பமும் விவசாயமும் தனித்த காரணிகளாக இருக்கவில்லை. செல்வத்தின் விருத்திக்கு வழிவகுத்த நடுத்தர, நெடுந்தூர வியாபாரமும் மூன்றாவது காரணியாக அமைந்தது. இது குடியிருப்புகளின் அடர்த்தியிலான அதிகரிப்புக்கு ஓர் ஊக்கியாக அமைந்தது. அக்கருதுகோளைச் சோதிப்பதற்கும் இவ்விருத்தியின் தன்மையை எடுத்து விளக்குவதற்கும் இலங்கையின் தொல்பொருளியல் ஆராய்ச்சியின் முறைமையான அளவையீடுகள் முன்னுரிமைபெறுவது அவசியம்.'

இலங்கையின் வரலாற்றுக்காலம் ஆரியர் இலங்கைக்கு வந்ததோடு தொடங்குகின்றது. அவ்வாறு ஆரியர் இலங்கைக்கு முதன்முதலில் கி.மு. 500 அளவில் வந்தனர் என்பர். ஆரியர் வருகைக்கு முன்னரும் இலங்கையில் மக்கள் வாழ்ந்தனரெனினும், அவர்களைப் பற்றிய வரலாற்றை விரிவாகவும் தொடர்பாகவும் கூறுவதற்குப் போதிய சான்றுகள் இப்பொழுது கிடைத்தவண்ணமுள்ளன. மற்றைய நாடுகளைப் போலவே இலங்கையிலும் பழைய கற்காலம், புதிய கற்காலம் என்ற காலப்பகுதிகள் இருந்தமைக்கு அக்காலச் சின்னங்களும், கருவிகளும் ஆதாரங்களாகவுள்ளன. மகாவம்சம் போன்ற இலக்கிய ஆதாரங்களில், ஆரியர் வந்த காலத்தில் இலங்கையில் வாழ்ந்த ஆதிக்குடிகள் பற்றி சில குறிப்புக்கள் வருகின்றன. இராமாயணம் மகாபாரதம் போன்ற நூல்களில் நாகரிக நிலையிற் குறைந்த இயக்கர், நாகர், இராக்கதர் (அரக்கர்) பற்றிய சில செய்திகள் உண்டு. ஆனால், இவற்றிலுள்ள உண்மைகளை தொல்லியல் அகழ்வாய்வுகள் இப்பொழுது படிப்படியாக உறுதிசெய்து வருகின்றன. (**நாகர் என்ற குலக் குழுமம் திராவிட இனத்தவரையே குறிப்பதாக இப்பொழுது கொள்கின்றனர்.**) அக்காலத்திலும் இலங்கையின் சில பாகங்களிலும் வாழ்ந்துவரும் வேடர் இலங்கையின் ஆதிக்குடிகளின் வழிவந்தவராக கருதப்படுகின்றனர். வேடரைப் பற்றியும், இலங்கையின் கற்காலங்கள் பற்றியும் விரிவான சில ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

பொதுவாகக் கூறுமிடத்து, இலங்கையில் வாழ்ந்த கற்கால மாந்தருக்கும், இந்தியா போன்ற பிற நாடுகளில் வாழ்ந்த ஆதிக்குடிகளுக்குமிடையே பல ஒற்றுமைகள் இருந்தன. உண்மையில், இலங்கை இந்தியாவினின்றும் நீர்ப்பரப்பால் பிரிக்கப்படாதிருந்த மிகப் பழைய காலத்தில் இவ்விரு நாடுகளிலும் வாழ்ந்த மக்களிடையே தொடர்புகள் இருந்தன எனக் கொள்ளஇடமுண்டு. **எவ்வாறாயினும், ஆரியர் வருகைக்கு முன் இலங்கையில் வாழ்ந்த மக்கள் நாகரிக நிலையில் மிகவும் குறைந்தவர்களாகவே இருந்தனர். ஆரியர் வருகையாலேயே, இலங்கை நாகரிக வளர்ச்சியெய்தலாயிற்று. ஆரியர் இலங்கைக்கு வந்து குடியேறியமையே நீர்ப்பாசனவியல் தொழினுட்பம் விரைவாக வளர்ச்சியடையக் காரணமாகியது.**

ஈ) வரலாற்று மூலங்கள்:

இலக்கியங்கள்: சுதேச இலக்கியங்கள்

'வரலாறு என்ற கட்டிடத்தை அமைப்பதற்குப் பயன்படும் செங்கற்களே வரலாற்று மூலங்கள் அல்லது ஆதாரங்கள் ஆகும். இம்மூலங்கள் என்ற சாளரங்களினூடாக, பழைய காலத்தை இக்கால மக்கள் பார்வையிடுகின்றனர் எனப்படுகிறது. வரலாற்றில் வரும் கூற்றுக்கள் யாவும் ஆதாரமுடையனவாக இருத்தல் வேண்டும் எனவும் கொள்ளப்படுகின்றது. தக்க ஆதாரமில்லாத விடத்து அவை வெறும் ஊகங்கள், அனுமானங்கள் அல்லது தனிப்பட்ட கொள்கைகள் எனப் பலஹீனப்படுத்தி விடுவர்.'

'ஆதிகால இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரையில், இலக்கிய ஆதாரங்கள் எனப்படும் பழையகால நூல்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. சமய அல்லது இலக்கிய நூல்களாக அவையிருப்பினும், அவற்றில் கூறப்படும் செய்திகளைக் கொண்டு அரசியல் மற்றும் பண்பாட்டுடன் தொடர்பான வரலாற்றை எழுத முடிகின்றது. பழைய நூல்களிலிருந்து பெறப்படும் செய்திகளை நாம் பிற ஆதாரங்களுடன் ஒப்பிட்டு, ஆராய்ந்து, வரலாற்றை எழுதலாம். இலங்கைக்குப் **பௌத்த மதம** பரவிய காலத்திலிருந்து, இலங்கையில் இருந்த முக்கிய விகாரைகளில் **பல மரபுகள்,** பேணப்பட்டு வரலாயின. அம்மரபுகளில், வரலாற்றுச் செய்திகள் அடங்கியிருந்தன. அவற்றைப் பின்பற்றி **தீபவம்சம், மகாவம்சம** போன்ற **பாளி** நூல்களைப் பௌத்த குருமார்கள் எழுதலாயினர். மகாவிகாரை போன்ற விகாரைகளில் பேணப்பட்டு வந்த மரபுகளில், இந்தியாவில் பௌத்தம் தோன்றி வளர்ந்தமை பற்றிய மரபும், பௌத்தம் பரவுமுன் இலங்கையிலிருந்த நிலைபற்றிய மரபும் முக்கியமானவை. பின்னர், பௌத்தம் பரவிய பின் இலங்கையில் அது வளர்ச்சியடைந்த வரலாற்றுடன் சேர்க்கப்படலாயிற்று. இவ்வாறு பேணப்பட்ட மரபுகள் **'அட்டகதா'** எனப்பட்டன. **'அட்டகதா'க்களில,** மேலே கூறப்பட்ட மரபுகள் **'அட்டகதா – மகாவம்சம்'** என்பதில் அடங்கியிருந்தன. இந்த 'அட்டகதா – மகாவம்ச'த்தைத் தழுவியே கி.பி. 4ஆம் நூற்றாண்டளவில் **'தீபவம்சம்'** எழுதப்பட்டு முடிக்கப்பட்டது. இந்நூலே இலங்கையில் எழுதப்பட்ட முதற் பாளி நூலாகும். இதைப் பல ஆசிரியர்கள் வெவ்வேறு காலத்தில் எழுதியிருக்கவேண்டும் எனக் கூறலாமே தவிர, இதன் ஆசிரியர் யார் என்று கூறமுடியாது. பௌத்தம் இந்தியாவில் தோன்றி, வளர்ந்து இலங்கைக்குப் பரவிய வரலாறும், மிக ஆதிகாலந் தொடங்கி மகாசேனன் ஆட்சிக்காலம் வரையுள்ள இலங்கை வரலாற்றுச் செய்திகளும் தீபவம்சத்தில் சுருக்கமாகக் கூறப்படுகின்றன. **நல்ல செய்யுள் அமைப்பையோ, வடிவத்தையோ, இலக்கிய அழகையோ தீபவம்சம் கொண்டிராத போதும், வரலாற்றுக்கு இந்நூல் மிக்க உதவியாக உள்ளது.'**

'தீபவம்சம எழுதப்பட்ட காலத்திலிருந்து மேலும் இரு நூற்றாண்டுகளுக்குப் பின், அதாவது கி.பி. 6ஆம் நூற்றாண்டளவில், **'மகாவம்சம்'** என்ற பிறிதொரு **பாளி நூல்** எழுந்தது. இலங்கை வரலாற்றுக்குரிய இலக்கிய ஆதாரங்களில் முதன்மை பெற்றதும் இம் **மகாவம்சமே** ஆகும். இந்நூலும், முந்திய மரபுகளைப் (குறிப்பாக, அட்டகதா – மகாவம்சத்தை) பின்பற்றியே எழுதப்பட்டது. இதை எழுதியவர் **மகாநாமதேரா** என்ற ஒரு பௌத்தப் பிக்கு எனத் தெரிகிறது. தீபவம்சத்தில் கூறப்பட்ட அதே காலப்பகுதியையும் **(மகாசேனன் வரை)**, அதே நிகழ்ச்சிகளையுமே மகாவம்சம் கூறுகின்றதாயினும், தீபவம்சத்திலும் பார்க்கத் திருத்தமான செய்யுளமைப்பிலும், விரிவாகவும், காவிய அழகுடனும் அது பாடப்பட்டுள்ளது. தீபவம்சத்தின் குறைபாடுகள் இடம்பெறாவண்ணம், சீரிய முறையில் மகாவம்சம் பாடப்பட்டிருப்பதை நாம் உணரலாம். மகாவம்சத்தில் 37 அத்தியாயங்கள் உள்ளன. அதன் தொடர்ச்சியாகப் பாடப்பெற்ற **'சூளவம்சம்'**

என்ற நூலையும் 'மகாவம்சம்' என்ற பொதுப்பெயரில் அடக்குவர். இவற்றைவிட இலங்கையில் எழுதப்பட்ட வேறும் பல பாளி நூல்கள் இலங்கை வரலாற்றுக்குரிய இலக்கிய ஆதாரங்களாகவிருப்பினும், இங்கு அவற்றுள் ஒன்றிரண்டையே குறிப்பிட முடியும். புத்தகோசர் எழுதிய **'சமந்த பாசாதிகா'** என்ற நூலுக்கு அவர் எழுதிய வரலாற்று முன்னுரையில், மகாவம்சத்திலும், தீபவம்சத்திலும் கூறியுள்ள வகையில், பௌத்தமதம் இலங்கையில் புகுத்தப்பட்ட வரலாற்றையே கூறிச்செல்கின்றார்.'

'சிங்களத்தில் எழுதப்பட்ட நூல்களில் **பௌத்த சாசன** (சமய) வரலாற்றைக் கூறும் **நிக்காய சங்கிரஹ, ராஜாவலீய, பூஜாவலிய** என்பன முக்கியமானவை. கம்பளை கடலாதெணி விகாரையைச் சேர்ந்த ஜயபாகு தேவரக்கிதர் எழுதிய **நிக்காய சங்கிரஹ,** புத்தர் பரிநிர்வாணமெய்தியதிலிருந்து, இலங்கைக்குப் பௌத்தம் பரவி வளர்ந்த வரலாற்றைக் கம்பளை 5ஆம் புவனேகபாகு காலம்வரை கூறுகின்றது. நிக்காய சங்கிரஹ, இலங்கையின் ஆதிகால வரலாற்றில் சங்க(ம்) வகித்த பங்கையும், மாறுபாடான சமய இயக்கங்கள் அடக்கப்பட்ட வகையினையும் காட்டுவதிலேயே முக்கியமாகக் கவனம் செலுத்துகின்றது. பூஜாவலீய நூலை இயற்றிய மயூரபாத மகாதேரர் 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். **பரிநிர்வாணம** எய்துவதற்கு முன்னும் பின்னும் உள்ள காலப்பரப்பில் **புத்தருக்குச் செய்யப்பட்ட காணிக்கைகளையே** இந்நூல் விவரிக்கின்றது. இந்த நூலின் கடைசி இரு அத்தியாயங்களில், பௌத்தமதம் பரவும் வரையுள்ள இலங்கையின் வரலாறும், இந்தியாவில் பௌத்தமதம் வளர்ந்த வரலாறும் கூறப்படுவதுடன், இலங்கை மன்னர்கள் சங்கத்துக்கும், சாசனத்துக்கும் வழங்கிய பல நன்கொடைகள் விவரிக்கப்பட்டுள்ளன. இவ்விரு அத்தியாயங்களுமே இந்த நூலில், எமது தேவைக்கு அதிகமாகப் பயன்படுபவை. **இராஜாவலீய** என்பதும் ஒரு பிற்கால சிங்கள இலக்கியமாகும். இதில் கோட்டை இராச்சிய காலத்துக்கு முந்திய இலங்கை மன்னர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளபோதும், கோட்டை இராச்சியத்தின் வரலாற்றை அறிவதற்கே இந்நூல் பெருமளவிற்கு உதவியாகவுள்ளது.'

இலங்கைத் தீவின் வரலாற்றினைப் பொறுத்தவரையில் அதனைத் தொடர்ச்சியாக அறிந்துகொள்ளக்கூடிய வகையில் மேலே குறிப்பிடப்பட்டவாறு இலக்கியச் சான்றுகள் கிடைப்பதே ஒரு சிறப்பியல்பாகும். வேறு எந்த நாட்டுக்கும் இல்லாத சிறப்பியல்பு இது எனலாம். வரலாற்றுக்காலம் முதற்கொண்டு ஏறத்தாழ கி.பி. 17, 18ஆம் நூற்றாண்டுகள் வரைக்கும் தொடர்ச்சியான வரலாற்றினைக் கூறிச்செல்லும் இலக்கியங்களை இலங்கைத்தீவு உருவாக்கியுள்ளது. அவ்வகையில் அநுராதபுரகால, பொலனறுவைக்கால அரசியல், பண்பாட்டு வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு உள்நாட்டில் தோற்றம்பெற்ற இலக்கியங்களே பெருமளவிற்கு உதவுகின்றன. இவற்றுள் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் (1ஆம் 2ஆம் பாகங்கள்) மகாவங்ஸ தீகா, ஸிகள அட்டகதா மகாவங்ஸ போன்றன முக்கியமான வரலாற்று மரபுகளை எடுத்துக்கூறுகின்றன. குறிப்பாக இந்தியாவிலுள்ள இதிகாசங்களான **மகாபாரதம், இராமாயணம** போன்றவற்றை

மரபுகளின் தொகுப்பாகக் குறிப்பிடலாம். தமிழில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இரட்டைக் காப்பியங்களும், சங்க நூல்களும் இலங்கைத் தீவு கொண்டிருந்த வர்த்தக, பண்பாட்டு வெளித்தொடர்புகளை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இத்துறையில் **யாத்திரைக் குறிப்புக்களையும்** இணைத்து நோக்கலாம். இவற்றுள் பிளினியின் நூல் **(உரோமில் நான்கு இலங்கைத் தூதுவர்கள்)**, பாஹியானது குறிப்புகள், தொலமியினது குறிப்புக்கள் **(தொலமியினது இலங்கைப் படம் முதலானவை)** போன்றன முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.

உள்நாட்டுப் பாளி இலக்கியங்கள்

1. தீபவம்சம்

அநுராதபுர காலத்து அரசியல் பண்பாட்டு வளர்ச்சி நிலைகளை அறிந்து கொள்வதற்கு உதவுகின்ற, இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள இலக்கிய வடிவங்களுள் தீபவம்சமே காலத்தால் முற்பட்டதாகும். இவ்விலக்கியமானது அதன் பெயரில் கொண்டுள்ள பொருளுக்கேற்ப தீவகத்தின் வம்சாவழிப் பட்டியலை அது தொகுக்கப்பட்ட காலம் வரையில் தருவதாக உள்ளது. பாளி மொழியில் கொண்டு சேர்க்கப்பட்ட இத்தொகுப்பு கி.பி. 4ஆம் நூற்றாண்டில் பூரணத்துவப் படுத்தப்பட்டது எனக் குறிப்பிடப்படுகிறது. இந்நூலானது தனிப்பட்ட ஒருவரினால் செய்யப்பட்டது எனக் கொள்ளமுடியாது. இந்நூலை வாசிக்கும்பொழுது ஏற்படுகின்ற சொற்பிரயோக வேறுபாடு, தொடர்பற்ற தன்மை, செய்யுட் தொகுப்பில் வேறுபாடு என்பன காலத்துக்குக் காலம் இதனைப் பலர் எழுதிப் பூரணப்படுத்தினர் எனக் கொள்ளக்கிடக்கின்றது. தீபவம்சம் என்ற இந்நூல் கி.பி. 4ஆம் நூற்றாண்டின் முடிவில் எழுதி முடிக்கப்பட்டாலும், அதில் கூறப்பட்ட வரலாற்று விடயங்கள் பல கிறிஸ்தவ சகாப்தத்திற்கும் முற்பட்ட காலப்பகுதிக்குரியவை என்பது புலனாகின்றது. ஆனால் இந்நூலின் ஒரு சிறப்பியல்பு என்னவெனில் பௌத்த சங்கத்தின் தொடர்பில்லாமல் உருவாக்கப்பட்ட ஓர் இலக்கியம் என்பதாகும்.

தீபவம்சத்தில் புத்தருடைய இலங்கைக்கான மும்முறை விஜயம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதேபோன்று சர்ச்சைக்குரிய துட்டகாமணி, எல்லாளன் வரலாறானது தீபவம்சத்தில் 13 செய்யுள்களில் மாத்திரம் கூறப்பட்டுள்ளது. பெருமளவிற்கு இந்நூலானது செவிவழிச் செய்தி மரபினை அவ்வப்போது பதிவு செய்துகொண்டதன் விளைவாக உருவாக்கப்பட்டது எனலாம். திட்டமிடப்பட்டு, வரலாற்று மரபுகளைக் கொண்ட பௌத்த சங்கங்கள் உருவாக்கப்படமுன் தீபவம்சநூல் தோற்றம் பெற்றமையால் தொடர்பற்ற தன்மைகள், தெளிவற்ற சம்பாஷணைப் பகுதிகள், விளங்கமுடியாத நடை முதலியனவற்றை அவதானிக்கமுடிகிறது.

பௌத்த மதத்திற்கு முற்பட்ட கால இலங்கை வரலாற்றினை மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டதனை இந்நூலில் காணமுடிகிறது. இந்நூலிற்குச் சற்றுப் பிற்பட்ட காலத்தில் எழுந்த மகாவம்சம் என்ற பாளிமொழி நூலில் முக்கியத்துவம்

கொடுக்கப்பட்ட பாகங்கள் இந்நூலில் முக்கியத்துவம் பெறவில்லை. அதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்காத பாகங்கள், குறிப்பாக வம்ச வரலாற்றுப் பாகங்கள் தீபவம்சத்தில் முக்கியத்துவம் உடையனவாக உள்ளன. இதனால் மஹாவங்ஸத்தில் ஏற்பட்ட மாற்றங்களை பகுத்து எடைபோடுவதற்கு தீபவம்சம் என்ற நூல் அடிப்படை ஆதாரமாக உள்ளது.

2. மகாவம்சம்

இலங்கையின் வரலாற்று மரபின் வளர்ச்சியில் மகாவம்சமானது பிரதானமான ஒரு பங்கினைக் கொண்டுள்ளது. இலங்கையில் வரலாற்று மரபு ஒன்று வடஇந்திய பௌத்த பண்பாட்டு பின்னணியுடனான முகவுரையுடன் வளர்த்தெடுக்கப்பட்டிருந்த காலத்தில் மகாவம்சம் தோற்றம் பெற்றது. இந்நூலினை பாளி மொழியில் கி.பி.6ஆம் நூற்றாண்டில் பௌத்த பிக்குவான மகாநாமதேரர் என்பவர் எழுதி முடித்திருந்தார் எனக் கூறப்படுகிறது. இந்நூலினையே இலங்கை வரலாற்று ஆசிரியர்கள் பலரும் மூல நூலாகக் கொண்டு வரலாற்றினை எழுதி வருவதனைக் காணலாம்.

பாளிமொழியில் எழுதப்பட்ட மகாவம்சமானது 37 அத்தியாயங்களாக வகுக்கப் பட்டிருந்தது. இதனுள் 11 அத்தியாயங்கள் மட்டுமே துட்டகாமணி காவியமாக எழுதப்பட்டிருக்கின்றது. துட்டகாமணியை மகாநாமதேரர் தனது நூலின் காவிய நாயகனாகக் கொண்டு இந்நூலினைப் படைத்துள்ளார். அரசியல் அடிப்படையிலும், பௌத்த சமய அடிப்படையிலும் காவியநாயகனுக்குரிய சிறப்பினை இந்நூலில் ஆசிரியர் சேர்த்துள்ளார். இதனாலேயே தீபவம்சத்தில் 13 நினைவுச் செய்யுள்களில் காணப்பட்ட அவ் வரலாறானது இங்கு 11 அத்தியாயங்களாக உருமாற்றம் பெற்றுக்கொண்டது. இது ஒரு பெருங்குறைபாடாகும்.

ஆனால் மகாவம்சத்தில் இடம்பெறுகின்ற வம்ச வரலாற்றுப் பாகமானது அநுராதபுர கால வரலாற்றிற்கு குறிப்பாக மகாசேன மன்னன் வரையுமுள்ள ஆட்சிக்கால வரலாற்றிற்கு (கி.பி. 303 வரை) பிரதானமான சான்றாதாரமாக அமைகின்றது. இதேபோன்று மகாவம்சத்தில் பௌத்தத்துக்கு முந்திய நிலையைப் பற்றிக் கூறப்படுகின்ற பாகமான பண்டுகாபய மன்னன் கால வரலாறு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இப்பகுதியில் பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட முன்னர் இலங்கையில் நிலவிய இயற்கை வழிபாடு, வாழ்ந்த மக்கள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இவை செவிவழி மரபாக வந்து மகாவம்சத்தில் குறிக்கப்பட்டிருப்பினும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.

இந்நூலில் பல குறைபாடுகள் காணப்படுவது அவதானிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது மகாவம்சம் எழுதப்பட்டபொழுது சில அடிப்படையான நோக்கங் களுக்காக வரையப்பட்டது என்பது இந்நூலிலேயே சொல்லப்பட்டுள்ளது. தேரவாத மதப் பிரிவினையுடைய மகாநாமதேரர் மகாவிகாரையைச் சார்ந்து நின்று, அம்மதத்தின் மேன்மையைப் பற்றி எழுத முற்பட்டபொழுது ஏனைய சமூக, பொருளாதார, மத அம்சங்களை இணைக்கத் தவறியிருந்தார். இதனால் ஒரு

மதப் பிரிவினருடைய வரலாறே ஒரு பக்கச் சார்பாக எழுதப்படவேண்டி ஏற்பட்டது, இந்து மதத்தினைப் பற்றியோ அல்லது அம்மதத்தினைத் தழுவியிருந்த தமிழ் மக்களைப் பற்றியோ எவ்விதமான செய்திகளையும் ஆசிரியர் சேர்க்க மறந்து விட்டார். இதனால் மகாவம்ச நூலானது மகாவிகாரையின் புராணமாக அமைந்தது. ஆனால் மகாநாமதேரர் தம்மையும் அறியாது சேர்த்துக் கொண்ட வம்சவரலாற்றுப் பாகங்களூடாக ஏனைய மதப்பிரிவினைப் பற்றியும், அவர்களது பண்பாட்டினைப் பற்றியும் ஓரளவுக்காவது அறிந்துகொள்ள முடிகிறது.

மகாவம்சம் எழுதப்பட்ட நோக்கங்களுள் பிரதானமானது **இத்தீவில் தேரவாத பௌத்தமதம் மட்டுமே வாழும் என்ற கோட்பாடாகும்.** இதனைத் **தம்மதீபக் கோட்பாடு** எனக் குறிப்பிடுவர். எனவே **தம்மதீபக் கோட்பாட்டு அடிப்படையில் பௌத்த – சிங்கள அரசு, பௌத்த சிங்கள அரசன், பௌத்த மதம் என்பன வலியுறுத்தப்பட்டன. இந்நிலையில் ஓரினம், ஒரு மதம், ஒரு தலைநகர் என்ற கோட்பாடும் வலியுறுத்தப்பட்டது.** இதனால் மகாவம்ச நூலை வாசிக்கும் ஒருவர் திடீரென சிங்கள அரசொன்று, தலைநகர் அநுராதபுரத்தைக் கொண்டு வலிமையான பௌத்த அரசனின் ஆணையின்கீழ் தோற்றம் பெற்றதையே உணர்வர். ஆனால் நடைமுறையில் இதற்கு முரணாக இத்தீவின் வரலாற்றுப்போக்கு அமைந்திருந்தமையினை **சாசனச் சான்றுகள்** எடுத்துக்காட்டி நிற்கின்றன. அவற்றின் அடிப்படையில் படிப்படியாகவே **பல சிற்றரசுகள்** வளர்ச்சியடைந்த நிலையில், **பெரிய அரசொன்றின் கீழ் ஆதிக்கம் இழந்த நிலையில் அரசியல் அமைப்பு தோற்றம்பெற்று** நின்றமையைக் காணலாம். கி.பி. 1ஆம் நூற்றாண்டுக்கு பின்னரே இந்நிலை இலங்கையில் ஏற்பட்டது. **எனவே மகாவம்சம் என்ற பாளி நூல் எடுத்துக்கூறுவது போல் அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சி நிலைகள் திடீரென ஏற்பட்டு நிற்கவில்லை. அவை படிப்படியான மாற்றங்களினூடான வளர்ச்சி நிலைகளையே கொண்டிருந்தன.**

3. சூளவம்சம் (முதலாம் பாகம்)

மகாசேன மன்னன் காலம் தொடக்கம் **முதலாம் மகாபராக்கிரமபாகு** வரையிலான இலங்கையின் தொடர்ச்சியான வரலாற்றினை சூளவம்சம் என்ற பாளி நூல் கூறிச் செல்கின்றது. இந் நூலினைத் தொகுத்தவராக **தர்மகீர்த்தி தேரர்** என்பவர் எடுத்துக்காட்டப்படுகின்றார். முதலாம் மகாபராக்கிரமபாகுவை காவிய நாயகனாகக் கொண்டு எழுதப்பட்ட சூளவம்சமானது **அநுராதபுரத்தின் வீழ்ச்சியை சோழருடைய படையெடுப்பு நடவடிக்கைகளுடன் இணைத்துக் காட்டுவதைக் காணலாம்.** பிற்பட்ட அநுராதபுர காலத்தில் ஏற்பட்ட நீர்ப்பாசனவியல் நாகரிகத்தின் அபிவிருத்திகளை சூளவம்சம் மிகவும் விரிவாக எடுத்துக் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது. அதுமாத்திரமன்றி அரசியல் அடிப்படையில் தென்னிந்தியாவுடன் இலங்கையானது முதன்முதலாகக் கொண்ட தொடர்புகள், பண்பாட்டுக் கலப்புகள், பாண்டிய- சிங்களவர் நட்புறவு, சோழர் - சிங்கள பகைமை உறவு போன்றனவற்றினை சூளவம்சம் தொடர்ச்சியாக

எடுத்துக் கூறியிருப்பதனைக் காணலாம். இலங்கைக்கும் - தென்னிந்தியா விற்கும் இடையே ஏற்பட்ட தொடர்புகளின் விளைவாக **அரசியல் அடிப்படை யிலான பகைமையுணர்வே** வளர்ச்சிபெற்று வந்தது என்பதனை சூளவம்சத்தினூடாகக் காணமுடிகிறது.

வெளிநாட்டு இலக்கியங்களில் இலங்கை பற்றிய குறிப்புக்கள்:

மேலே தரப்பட்ட ஆதாரங்கள் அனைத்தையும் நன்கு ஆராய்ந்தபின், நாம் இலங்கையின் ஆதிகால வரலாற்றை எழுதலாம். இந்த உள்நாட்டு ஆதாரங் களுக்குத் துணையாகப் பிறநாட்டு ஏடுகளில் வரும் குறிப்புக்கள் அமைந்துள்ளன. மிகப் பழைய காலந்தொட்டு ஒரு வணிக நாடாக இலங்கை புகழீட்டியிருந்தது. அக்காலத்திலிருந்த முக்கிய கடற்பாதைகளில் இலங்கை ஒரு கேந்திர நிலையையும் வகித்தது. எனவே இலங்கையைப் பற்றிய விவரங்கள் பிறநாடு களுக்கு அதிகமாக எட்டியிருந்ததில் வியப்பிருக்காது. கிரேக்க வியாபாரிகள் இலங்கை வந்து சென்றமையால், அவர்களிடம் பெறப்பட்ட செய்திகள் கிரேக்க நூல்களிலும், ஏடுகளிலும் இடம்பெற்றுவிட்டன. அலெக்சாந்தரின் படையிற் பணியாற்றிய ஒரு மாலுமியான **ஒனிஸிகிறிட்டஸ்,** இலங்கை சென்று மீண்ட இந்தியரிடம் இத்தீவு பற்றியறிந்த செய்திகளைத் தன் நூலில் கூறுகின்றான். மௌரிய அரசவையில் கிரேக்க தூதுவனாக விளங்கிய **மெகஸ்தனிஸ்** என்பவனும், தன் குறிப்புக்களில் இலங்கை பற்றியும் கூறியுள்ளான். இவற்றைவிட **'எரித்திரியக் கடலின் பெரிப்பிளஸ்'** (இதன் ஆசிரியர் யார் என்பது தெரியாது) என்ற நூலிலும் இலங்கை பற்றிய சில விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

பிளினி என்பவனும், தனது நூலில் இலங்கை பற்றிய சில முக்கிய விவரங்களைத் தந்துள்ளான். உரோமர்களுடைய மரக்கலமொன்று, பலத்த காற்றிற் சிக்கி அராபியக் கடலிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாகவும், இவ்வாறு வந்த அந்நியரை இலங்கைவேந்தன் தனது நாட்டில் தங்கியிருக்க அனுமதித்து அவர்களை உபசரித்ததாகவும், பின்னர் அவர்களுடன் ஒரு தூதுக்குழுவை உரோமப் பேரரசனிடம் அனுப்பி வைத்ததாகவும் **பிளினி** கூறியுள்ளான். இச்செய்தியில் வரும் சில விவரங்கள் தவறாகவிருப்பினும், இலங்கையிலிருந்து முதலாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஒரு தூதுக்குழு உரோமப் பேரரசானது அவைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதை மகாவம்சமும், **எகிப்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டும** உறுதி செய்கின்றன. தொலமி என்ற கிரேக்க புவியியலாளனும் இலங்கைபற்றி நிறைய விவரங்களைச் சேர்த்து **புவியியல் (Geographia)** என்ற தமது நூலில் இவற்றைக் குறிப்பிட்டுள்ளான். 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூலில் இலங்கை பற்றிய தகவல்கள் நிறைய இடம்பெற்றுள்ளதால், வணிகத் தொடர்பு காரணமாக மேனாட்டவர் இலங்கையைப்பற்றி எந்தளவுக்கு அறிந்திருந்தனர் என்பதை நாம் உணரலாம்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் நெடுங்காலமாக வணிக உறவும் சமயத் தொடர்பும் இருந்து வந்துள்ளன. இதன் விளைவாக, இரு நாடுகளுக்குமிடையே

கப்பற் போக்குவரத்து நடைபெற்று வந்தது. சீன யாத்திரீகர்கள் இலங்கைக்கு வந்து இங்குள்ள புண்ணிய தலங்களைத் தரிசித்து, பின்னர் தமது யாத்திரைக் குறிப்புக்களில் இலங்கையில் தாம் கண்டவற்றை எழுதி வைத்தனர். இலங்கை வந்த சீன யாத்திரீகர்களில் குறிப்பிடத்தக்கவர் **பாகியன** என்பவராவர். இவர் கி.பி. 5ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் (411இல்) இலங்கைக்கு வந்து அனுராதபுரம் போன்ற இடங்களில் தங்கி, சீனாவுக்குப் பயணமானார். பாகியன் விட்டுச்சென்றுள்ள பிரயாண நினைவுகளில், இலங்கையைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். இதன் வாயிலாக, அக்காலத்தில் இலங்கையின் சமயநிலை பற்றிப் பொதுவாகவும், அபயகிரி, மகாவிகாரை போன்ற முக்கிய விகாரைகளின் நிலைபற்றி விரிவாகவும் அறியப்பட்டுள்ளது.

கொஸ்மஸ் இண்டிகோபிளியூஸ்டஸ் என்ற உரோமானியர் எழுதிய "கிறிஸ்தவ இடங்களின் விவரணை" (**Topographia Christiana**) 6ஆம் நூற்றாண்டு இலங்கையின் நிலைமைகளைக் கூறுகின்றது. மாந்தை என்ற மகாதீர்த்தம் போன்ற இலங்கைத் துறைமுகங்கள் இந்திய, சீன அண்மைக் கிழக்கு நாடுகளின் வணிகப் பரிவர்த்தனை நிலையங்களாக அக்காலத்தில் விளங்கியதை அந்நூல் தெளிவுபடுத்துகின்றது. 7ஆம் நூற்றாண்டுக்குப்பின், அராபிய வர்த்தகரின் செல்வாக்கிலேயே இலங்கையின் மேலைநாட்டு வணிகம் நடைபெற்றது. இவர்களுடைய தொடர்பாலேயே பின்னர் கொழும்பு ஒரு பெருந்துறைமுகமாகியது.

13ஆம், 14ஆம் நூற்றாண்டுகளில் உலகப்புகழ் பெற்ற இரு யாத்திரீகர்கள் இலங்கை வரலாயினர். சீன அரசவைக்குச் சென்று தங்கிய **மார்க்கோ போலோ** 1293 அளவில் இலங்கை வந்து சென்றான். **தாங்கியரைச** சேர்ந்த இபின் பட்டூட்டா என்ற யாத்திரீகன் 1344இல் இலங்கைக்கு வந்து, சிவனொளிபாத மலையைத் தரிசித்தான். யாழ்ப்பாணத்தை ஆண்ட செகராசசேகரன் அவனை வரவேற்று உபசரித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இவ்விரு யாத்திரீகர்களின் நினைவுக் குறிப்புக்களால், இடைக்கால இலங்கையின் நிலைமைய நாம் ஓரளவுக்கு அறியமுடிகின்றது.

இலங்கையின் அமைவிடமானது சர்வதேச வர்த்தகத்தினை ஈர்க்கின்ற மையப் பகுதியில் அமைந்திருந்தமை காரணமாக பல வெளிநாட்டுத் தொடர்புகள் காலத்துக்குக்காலம் ஏற்படுவதற்கு வழிவகுக்கப்பட்டது. இவ்வெளிநாட்டுத் தொடர்புகளானவை மத அடிப்படையிலும் வர்த்தக அடிப்படையிலும் ஏற்பட்டிருந்தன. இதனால் வெளிநாட்டு இலக்கியங்களிலும் யாத்திரிகர்களுடைய யாத்திரைக் குறிப்புகளிலும் இலங்கையைப் பற்றிய செய்திகள் பொறிக்கப் பட்டிருந்தன. இவற்றில் சில சரியான நேரடியான முறையில் தகவல்களைப் பெற்றும் சில கேள்விச் செவி மூலமான தகவல்களைப் பெற்றும் பதிவு செய்யப்பட்டவையாக உள்ளன.

மகாபாரதம், இராமாயணம்

இந்தியாவின் பழம்பெரும் இதிகாசங்கள் என்ற வகையில் இவ்விரண்டு நூல்களிலும் இலங்கையைப் பற்றிய பல செய்திகள் குறிப்பிடப்படுகின்றன.

இலங்கையில் ஆட்சிசெய்த வம்சாவழி மரபானது **மகாபாரதத்தில் பாண்டவர் மரபுபோல** இங்கும் எடுத்துக்காட்டப்படுகின்றது. மகாவம்சத்தின் முன்னுரையில் பின்பற்றப்பட்டுள்ள மரபானது மகாபாரத முறையைப் பின்பற்றியதாக உள்ளமையைக் காணலாம். இராமாயணத்தில் காணப்படும் **இராம, இராவண** யுத்த ஜைனியத்துடன் தொடர்பாக இலங்கைத் தீவும் இணைக்கப்பட்டுள்ளது. **லங்கா** எனக் குறிப்பிடப்படும் லங்காபுரியின் தலைவனாக **இராவணேசன** எடுத்துக்காட்டப்பட்டுள்ளான். இக்கதைகளின் பின்னணியில் இராமேஸ்வரம், இராமர் **அணை, சீதா எலிய, இராவணன் நீர்வீழ்ச்சி** போன்ற மையங்கள் இணைக்கப்பட்ட வகையில் பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. எனவே இதிகாச காலத்தில் இலங்கை நன்கு அறியப்பட்டிருந்த ஒரு தீவு என்பதை இவற்றினூடாகக் காணலாம்.

சங்ககால இலக்கியங்களும், இலங்கையும்

சேரன் செங்குட்டுவன், கஜபாகு முதற்கொண்டு, **கரிகாலச் சோழன** வரையிலான சங்ககால ஆட்சியாளர் இலங்கையுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதனை அக்கால இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இரட்டைக் காப்பியங்களான **சிலப்பதிகாரம், மணிமேகலை** என்பன இவற்றிற்குரிய ஆதாரங் களாகும். இமயத்திலிருந்து கல்லெடுத்து வந்து சேரநாட்டில் பத்தினிக்கு விழா எடுத்த அரங்கில் இலங்கை மன்னனான முதலாம் கஜபாகு மன்னனும் பங்குபற்றியிருந்தான் என சிலப்பதிகாரம் கூறுகின்றது. கரிகாலச் சோழன் இலங்கையிலிருந்து முப்பத்தையாயிரம் கைதிகளைக் கொண்டுசென்று காவிரியாற்றில் அணை எழுப்பினான் என்றவொரு ஐதீகமும் அதே நூலில் காணப்பட்டுள்ளது. சங்க நூல்களான புறநானூறு, பதிற்றுப்பத்தில் ஈழத்தைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. **பட்டினப்பாலை ஈழத்துணவு** பற்றிக் குறிப்பிடுகின்றது. ஈழத்திலிருந்து பல தமிழ்ப் புலவர்கள் சங்கப்பலகையில் அமர்ந்து இலக்கியங்கள் செய்ததாக எடுத்துக்காட்டப்படுகின்றது. **ஈழத்துப் பூதந்தேவனார் அவர்களுள் சிறந்தவர் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.**

ஐரோப்பிய இலக்கியங்கள்

முதலாம் அலெக்சாந்தா காலத்திற்குப் பின்னர் மத்தியதரைக்கடல் - கீழ் நாடுகளுக்கிடையில் வர்த்தக முயற்சிகள் பெருமளவிற்கு ஏற்பட்டுக் கொண்டமையினைத் தொடர்ந்து, கடலோடிகளும் ஆய்வாளர்களும், வர்த்தகர்களும் இலங்கை வந்து திரும்பினர். அவர்கள் மூலம் பெறப்பட்ட செய்திகள் பல ஐரோப்பிய இலக்கியங்களிலும் இடம்பெறலாயின. **அரிஸ்ரோட்டல்** என்பவரால் எழுதப்பட்ட **டீமுண்டோ** என்ற நூலில் இலங்கையைப் பற்றிய குறிப்பு வருகின்றது. மௌரியப் பேரரசனது அரண்மனையில் இருந்த **மெகாஸ்தனஸ்** என்ற கிரேக்கத் தூதுவன் தனது **இன்டிக்கா** என்ற நூலில் இலங்கையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளான். விசேடமாக **இலங்கையின் முத்துப்பற்றி** அவன் குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. இவர்களைவிட

கிப்போக்ஸ், ஆட்டிமிடோறஸ், மாக்கியன் ஆகியோர்களது நூல்களில் இலங்கையைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம். மொஸ்கஸ் **இன்டிக்கோ பிரெஸ்ரஸ்** என்ற தொலமியினுடைய நூலில் இலங்கைப் படத்தினைக் காணலாம். இந்த நூல்களில் இலங்கையைப் பற்றி இடம்பெற்ற செய்திகள் யாவும் பெருமளவிற்கு வர்த்தகப் பாதைகளினூடாகவே சேகரிக்கப்பட்டிருந்தன.

அராபிய இலக்கியங்கள்

இஸ்லாமிய சமயத்தின் எழுச்சிக்கு முன்னர் அராபிய வர்த்தகர்கள் இலங்கையைப் பற்றி அறிந்திருந்தனர். கிரேக்கர்களும், உரோமர்களும் இங்கு வந்து வர்த்தகம் நடத்துவதற்கு முன்னோடிகளாக அராபியர்களே விளங்கினர். ஆரம்பகால உல்லாசப் பயணிகளில் ஒருவனான **அபுசாயிட்** என்பவன் எழுதிய நூலான **சில் சிலாட அல்தவரிக்** என்ற நூலில் இலங்கையைப் பற்றிய பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவனுக்குப் பின்னர் கி.பி.950இல் இந்தியாவுக்கு வந்திருந்த **குர்டாவே, மசூதி** ஆகியோர் இலங்கையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். **மசூதி** என்பவன் இலங்கைக்கு நேரடியாகவே வந்து, தனக்கு ஏற்பட்டிருந்த அனுபவங்களைக் குறிப்பிட்டிருந்தான். இவ்வாறு அராபிய வர்த்தகர்களும், கடலோடிகளும் அநுராதபுரகால இலங்கை பற்றிய பல செய்திக் குறிப்புக்களை தமது பதிவேடுகளில் வரைந்துள்ளனர்.

சீன இலக்கியங்கள்

மிக நெடுங்காலமாக இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே இருந்து வந்த தொடர்புகள் கால ஓட்டத்தில் இலங்கைக்கும் ஏற்பட்டுக்கொண்டது. இலங்கையில் வளர்ச்சி பெற்றுச் சென்ற பௌத்தமதத்தின் சிறப்பியல்புகளே சீனாவை நேரடியாக இலங்கையுடன் இணைத்துவைத்த அடிப்படைகளாக அமைந்தன. இதனால் சீனாவிலிருந்து மதம், வர்த்தகம் ஆகிய நோக்கங்களுக்காக பலர் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். இவர்களுள் கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் வருகை தந்திருந்த **பாகியான்** சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவன். பாகியானது சமயக் குறிப்புக்கள் அநுராதபுரக் காலத்தில் பௌத்தமதம் அடைந்திருந்த மேன்மையை எடுத்துக்காட்டுகின்றன. அதேபோன்று தேரவாத மகாயான சமயப் பிரிவுகளுக்கிடையே ஏற்பட்டிருந்த விரிசல் நிலைகளையும் எடுத்துக்காட்ட உதவுகின்றது. **பாகியான் கி.பி.414இல் இலங்கை வந்து அநுராதபுரத்தில் 2 வருடங்களாக புத்ததாச மன்னனின் ஆட்சிக் காலத்தில் தங்கியிருந்ததாக எடுத்துக்காட்டப்படுகின்றது.**

பிளினியின் 'உரோமில் நான்கு இலங்கைத் தூதுவர்கள்'

செங்கடலில் வரி சேகரித்துக் கொண்டிருந்த கப்பல் ஒன்று புயற்காற்றில் அகப்பட்டு இலங்கையிலுள்ள 'கிப்ப றோஸ்' என்ற இடத்திற்கு அடித்துச் செல்லப்பட்டது. இங்கு அரசனால் கைப்பற்றப்பட்டு அதன் கப்பற் தலைவனான **'அன்னிஸ்பின்க்காமூஸ்'** பாதுகாப்பில் வைக்கப்பட்டான். **'சாந்தமுக்தசிவ'**

(கி.பி. 44 -52) என்ற மன்னனே சம்பாஷணையின்போது அக்கப்பற் தலைவன் ஊடாக ரோமாபுரியைப் பற்றித் தெரிந்திருந்தான் எனக் கூறப்படுகிறது. ரோமர் களுடைய நாணயங்களைக் கண்டு பிரமிப்படைந்த மன்னன் அக்கப்பற் தலைவனுடன் நான்கு இலங்கைத் தூதுவர்களை ரோமுக்கு அனுப்பி வைத்தான் எனவும் அதன் அடிப்படையில் ரோமருடன் தொடர்புகொண்டான் எனவும் கூறப்படு கிறது. இச்செய்தி இயற்கையின் வரலாறு என்ற 37 பகுதிகளையுடைய பிளினியின் 6ஆம் பகுதியில் கூறப்பட்டுள்ளது. தப்ரபேன் என்ற பெயர் இந்நூலிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. அநுராதபுரகால வர்த்தக வரலாற்றுச் செய்திகள் பலவற்றை இந்நூல் தன்னகத்தே கொண்டுள்ளது.

இலங்கை வரலாற்றைக் கற்பதற்குரிய மூலாதாரங்கள்

வரலாற்று மரபின் தோற்றமும் வளர்ச்சியும்

மகாவம்சம் பற்றிய சிறப்பாய்வு

போட்டோலொக்கி என்பவர் இலங்கையைப் பற்றி எழுதிய தனது நூலில் உலகிலேயே தொடர்ச்சியான முறையில் வரலாறும், நாகரிகமுடைய ஒரு நாடு இலங்கையாகும் என விதந்து குறிப்பிட்டமையானது வெறும் புகழ்ச்சியாக அல்ல என்பது தெளிவாகின்றது. அவர் அவ்வாறு குறிப்பிட்டமைக்கான காரணம் வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கையின் வரலாறு தொடங்கி கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரைக்கும் தொடர்ச்சியான முறையில் இலக்கிய ஆதாரங்கள் இங்கு கிடைத்துள்ளமையே ஆகும். அவ்வகையில் முதலில் தீபவம்சம், மகாவம்சம், மகாவம்சடீகா, வம்சபாசாதிகா, சூளவம்சம்: முதலாம், இரண்டாம், மூன்றாம் பாகங்கள் ராஜாவலிய என்று வரலாற்று இலக்கிய மரபின் தொடர்ச்சியை இலங்கையில் காணமுடிவது ஒரு சிறப்பியல்பாக உள்ளது.

மகாவம்சம் என்ற வரலாற்று நூலானது ஏறக்குறைய கி.பி. 6ஆம் நூற்றாண்டில் மகாநாமதேரர் என்ற பௌத்த பிக்குவினால் எழுதப்பட்டது. 37 அத்தியாயங்களாக வகுத்து எழுதப்பட்டுள்ள நிலையில் மிகவும் முற்பட்டகால இலங்கை வரலாறு தொடங்கி மகாசேன மன்னன் காலம் வரைக்கும் (கி.பி. 4ஆம் நூற்றாண்டு) உள்ள வரலாற்றுச் செய்திகள் தொடர்ச்சியான வகையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. எமக்கு கிடைத்துள்ள பிற மூலாதாரங்களைவிட மகாவம்சமானது வரலாற்றாசிரியர்களாலே மிகக் கூடியளவிற்கு பயன்படுத்தப்பட்டு வருவதனைக் காணலாம். பாடநூல்களில் கொடுக்கப்பட்டுள்ள வரலாறு கூடியளவிற்கு மகாவம்சத்திலிருந்தே பெறப்பட்டதாக உள்ளது. இந்நிலையில் மகாவம்சத்தினை ஒரு வரலாற்று மூலாதாரமாக சிறப்பாய்விற்குட்படுத்தும்போது இயல்பாக எழும் பலவகைப்பட்ட கேள்விகளுக்கு விடை கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

மகாவம்சம்: வரலாற்று மூலநூலா? மகாவிகாரையின் புராணமா?

பாளி மொழியில் பாடப்பட்ட பழையகால ஏடுகளில், முதன்மை பெற்றது 'மகாவம்சம்' ஆகும். இலங்கையிற் கிடைத்துள்ள இலக்கிய ஆதாரங்கள்

அனைத்துள்ளும் அதிமுக்கியம் வாய்ந்ததும் இதுவே. மகாவம்சம் எனும்போது, உண்மையில் சூளவம்சம் எனக் குறிப்பிடப்படும் அதன் தொடர்ச்சியும் அதில் அடங்குமாயினும், இங்கு நாம் (பொது வழக்கில் மகாவம்சம் எனும்போது கருதப்படும்) 1-37 அத்தியாயங்களைக் கொண்ட முதற்பகுதியையே கவனத்திற்கு எடுத்துக்கொள்வோம். இனி மகாவம்சம் பற்றிச் சிறிது விரிவாக ஆராய்வோம்.

தீகசந்தசேனாபதி – பிரிவெனாவைச் சேர்ந்த மகாநாமதேரராலேயே மகாவம்சம் எழுதப்பட்டதென மகாவம்சத்தின் விளக்கவுரையான **'வம்சத்தப்பகாசினீ'யின** பாயிரம் கூறுகின்றது. இதை ஏற்றுக்கொண்டாலும், மகாவம்சத்தின் காலம் இலகுவாக நிர்ணயிக்கப்படக் கூடியதல்ல. சூளவம்சத்தில் வரும் சில கூற்றுக்களைக் கொண்டு, மகாவம்ச ஆசிரியரின் காலத்தைத் தீர்மானிக்க முயல்கின்றனர். தாதுசேனன் (459 – 477) ஆட்சிக்கு வருமுன், தன் இளமைக் காலத்தில் ஒரு பிக்குவான தன் மாமனுடன் இதே விகாரையில் வாழ்ந்து, உபசம்பதா வைபவத்தில் ஒருங்கே கலந்துகொண்டிருந்தான் எனச் சூளவம்சம் கூறுகின்றது. 1ஆம் மொகல்லானன் ஆட்சிசெய்தபோது (495 – 512), ஒரு மகாநாமதேரர் வாழ்ந்ததாக அந்நூல் குறிப்பிடுகின்றது. இவையிரண்டும் மகாவம்ச ஆசிரியரையே குறிப்பதாகக் கொள்வர். இந்தியாவில் புத்தகாயாவில் உள்ள கல்வெட்டொன்று மகாநாம(ர்) என்ற இலங்கைப் பிக்கு பற்றிக் குறிப்பிடுகின்றது. இந்த மகாநாமதேரரும், **'சத்தம்மப்பகாசினீ'யின் ஆசிரியரும் ஒருவரேயெனச** சிலர் கொள்வர். இப்பிந்திய நூல் 515 அளவில் எழுதப்பட்டதாகத் தெரிகின்றது. எனவே, மகாவம்ச ஆசிரியர் 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 6ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்திருத்தல் கூடும் எனலாம். ஆனால் இம்முடிபு உறுதிவாய்ந்ததல்ல என்பது கருத்திற் கொள்ளத்தக்கது.

மகாவம்சம் எவ்வாறு எழுதப்பட்டதென்பதை அறிந்தவர்க்கே, அந்நூலின் இயல்பு சரிவரப் புலப்படும். ஏற்கனவே பேணப்பட்டு வந்த மரபுகளையொட்டியே மகாவம்சம் எழுதப்பட்டதென்பதை நாம் உணரவேண்டும். பௌத்தம் இலங்கையிற் புகுத்தப்பட்ட காலந்தொட்டு, பௌத்த பிக்குகள் புத்தரைப் பற்றியும் தம் மதத்தைப் பற்றியும் சில உண்மைகளை மரபுக் கதைகளாகப் பேணி வரலாயினர். இலங்கையில் பௌத்தம் பரவியபின் இம்முக்கிய நிகழ்ச்சியுடன் தொடர்புடைய மூன்றாம் பௌத்த மாநாடு, மகிந்தரின் தூதுக்குழு, மகாவிகாரை நிறுவப்பட்டமை முதலான சில நிகழ்ச்சிகள் பற்றிய மரபுகளையும் சேர்த்துப் பேணலாயினர். பௌத்த மதக் கோட்பாட்டு நூல்களுக்கு உரை விளக்கங்கள் சிங்களத்தில் தோன்றியபோது, இம்மரபுகள் அனைத்தையும் ஒன்றாக்கி ஒரு வரலாற்று முன்னுரைபோலச் சேர்த்துக்கொண்டனர். இவ்வாறு ஒன்றுசேர்க்கப்பட்ட வரலாற்று மரபுகளுக்கே 'அட்டகதா – மகாவம்ச(ம்)' என்ற பெயர் உண்டாயிற்று. இம்மரபு களுடன், இலங்கையில் பௌத்தம் அடைந்த வளர்ச்சியும், தேவனம்பியதீசன் காலம்வரை இலங்கையின் பூர்வீக வரலாறும் இணைக்கப்படலாயின. தேவநம்பியதீசனுக்குப் பிந்திய மன்னர்களின் வரலாறும் பின்னர் சேர்க்கப் பட்டுள்ளது. இவ்வாறு சேர்க்கப்பட்ட மரபுகள் யாவும் ஒருங்கேயமைந்தபோது,

ஒரு காலவேட்டின் உருவத்தை அவை பெற்றுவிட்டன. வட்டகாமணியின் காலம் (கி.மு. முதல் நூற்றாண்டு) வரை, இம்மரபுகள் எழுதப்படாமலே பிக்குகளால் செவிவழி மரபாகப் பாராயணஞ் செய்யப்பட்டு வந்தன. வட்டகாமணி காலத்தில் இவை எழுத்து வடிவம் பெற்றபின்னரும், அடிக்கடி புதிய கதைகளும், மரபுகளும் கூட்டப்பட்டன. இவ்வாறிருந்த அட்டகதா – மகாவம்சத்தைப் பின்பற்றியெழுந்த முதல் பாளி நூல் தீபவம்சமாகும். பாளிச் செய்யுள் வடிவம் குருமார்களுக்குப் புதியதாகையால், தீபவம்சம் கலையழகு குறைந்து காணப்பட்டது. தீபவம்சத்தை விடத் திருத்தமான அழகிய செய்யுளில், இலக்கிய நயம் செறியப் பாடப்பட்டதே மகாவம்சமாகும். தீபவம்சம் மகாவம்சம் ஆகிய இரண்டின் ஆசிரியர்களும், பழைய மரபுகளைத் தழுவியே எழுதியதால், ஒரே காலப்பகுதியின் கதையையே பொருளாகக் கொண்டிருந்தனர். அட்டகதா மகாவம்சத்தில் உள்ள மரபுகளுக்கே, மகாவம்ச ஆசிரியர் தமது இலக்கிய வாண்மையைக் கொண்டும், புதிய உத்தி முறைகளைக் கையாண்டும் காவியமணங்கமழும் இலக்கிய வடிவங்கொடுத்தார்.

மகாவம்சத்தை ஆராய்ந்த அறிஞர்கள், அதற்குப் பல அடைமொழிகளைச் சூட்டியுள்ளனர். சிலர் அதை **ஒரு புராணமாகக** குறிப்பிட்டு, மகாவிகாரையின் வரலாற்றையே அது சிறப்பித்துக் கூறுவதாகக் கருதினர். தேரவாதப் பிரிவைச் சார்ந்த பௌத்தத்துக்கு இலங்கையில் நிலைக்களனாக விளங்கிய மகாவிகாரை, வைதிக மதத்தைப் பிற பிரிவுகள் பாதிக்காதவாறு தடுப்பதில் முன்னின்றது. **மகாவிகாரைக்குச் சிறப்புத் தந்த மன்னர்களை ஏத்தியும், ஏனையோரைப் புறக்கணித்தும் மகாவம்சம் பாடப்பட்டுள்ளதென்பதைக் காணலாம்.** இதற்கான எடுத்துக்காட்டுக்கள் பின்னர் விரிவாகக் கூறப்படும். மகாவிகாரைக்குப் பெருமை தேடித்தந்த தேவனம்பியதீசன், துட்டகாமணி ஆகியோருக்கு அளிக்கப் பட்ட முதன்மை வட்டகாமணி, மகாசேனன் போன்றோருக்குக் கிடைக்காததை இங்கு எடுத்துக்காட்டலாம். இவ்வாறு மகாவிகாரையைச் சார்ந்த மகாநாமதேரர், தமது விகாரைக்குச் சார்புடைய வகையில் அதன் வரலாற்றை அமைத்துள்ளார். இந்த ஒரு தலைச்சார்பு மகாவம்சத்தின் நடுவுநிலையைப் பெரிதும் பாதித்துள்ளமை கண்கூடு.

மகாவம்சத்தில் உள்ள முப்பத்தேழு அத்தியாயங்களையும் நாம் சிறிது உற்றுநோக்கினால், சில முக்கிய உண்மைகள் தெளிவாகும். புத்தபிரான் இலங்கைக்கு மும்முறை வருகை தந்தார் என்ற கதையைக் கூறுவதுடன் மகாவம்சம் தொடங்கி புத்தரின் மரபு, பௌத்தத்தின் தோற்றம், அதன் வளர்ச்சியில் மூன்று மாநாடுகள் செய்த பணியென்பன முதல் ஐந்து அத்தியாயங்களில் கூறப்படுகின்றன. அடுத்த ஆறு அத்தியாயங்களிலும், தேவநம்பியதீசன் ஆட்சிக் காலம் வரை இலங்கையின் ஆதி வரலாறு கூறப்படுகின்றது. விஜயனது வருகையில் தொடங்கி, பண்டுவாசுதேவன், பண்டுகாபயன் முதலான அரசர்களின் வரலாறு இவ்வத்தியாயங்களில் இடம்பெற்றுள்ளது. இப்பகுதியில் கட்டுக்கதைகளே அதிகமாகவுண்டு. வரலாற்றுக்குப் பயன்படும் உண்மைச் செய்திகள் மிகக் குறைவு. ஒருசில உண்மைகளை வைத்துக்கொண்டு, அடுத்த பத்து

அத்தியாயங்களைக் கொண்ட மூன்றாவது பிரிவில் இலங்கைக்குப் பௌத்தம் பரவி நிலைபெற்றமை விவரிக்கப்படுகின்றது (அத்.12 – 21). இலங்கைக் குருமார்கள் மிகவும் அக்கறையுடன் பேணிய மரபுகள் இத்தீவுக்குப் பௌத்தம் பரவியமை பற்றியதாகவே இருக்குமாதலால், இவ்வத்தியாயங்களில் வரலாற்று உண்மைகள் பலவிருத்தல் நியாயமே. எனினும், இந்நிகழ்ச்சிகளுக்கு உயர்வு கற்பிக்கும் நோக்குடன், சில புனைக்கதைகளை அல்லது மெருகு வேலைகளைப் பக்தியுடன் செய்திருப்பரெனக் கூறலாம். இதனாலேயே, சில அற்புதத்தன்மை வாய்ந்த நிகழ்ச்சிகள் இக்கதைகளில் இடம்பெற்றுள்ளன.

மகாவம்சத்தில் ஒரு தனிப்பிரிவாகக் கொள்ளத்தக்க பகுதி துட்டகாமணியின் (துட்டகெமுனு) வீரவரலாற்றைக் கூறும் அடுத்த பதினொரு அத்தியாயங்களாகும் (22 – 32 அத்.). 'துட்டகாமணியின் காவியம்' எனச் சிலர் மகாவம்சத்தை அழைப்பதற்கும் இதுவே காரணம். தேவானம்பியதீசன் உட்பட, மற்றெந்த இலங்கையரசனுக்கும் அளிக்கப்படாத அளவு முக்கியம், துட்டகாமணிக்கு அளிக்கப்பட்டுள்ளது. தீபவம்சத்தில் ஒரு சில செய்யுள்களில் கூறப்பட்ட துட்டகாமணியின் வரலாறு, மகாவம்சத்தில் ஏறக்குறைய மூன்றிலொரு பகுதியை நிரப்புவதைக் காண்கிறோம். பொதுமக்களால் போற்றப்படும் விடுதலை வீரனாக மட்டும் காமணியிருக்கவில்லை, அதிலும் மேலாக, மகாவிகாரைக்கும், பொதுவாக பௌத்தத்துக்கும் பெருமை தந்த மகாதூபம் எனப்படும் ரூவன்வெலிசயாவையும், பிற தாகபங்களையும் நிறுவிப் பௌத்தத்தின் நிலையை நிகரற்றதாக்கினான். இதனாலேயே, மகாவம்ச ஆசிரியர் துட்டகாமணியின் பணிகளை விரிவாகப் பாடியுள்ளார். அரசியல் நிகழ்ச்சிகளைக் கூறுவதிலும், சமய நிகழ்ச்சிகளைக் கூறுவதற்கே அவர் அதிக கவனம் செலுத்தினார் என்பது, துட்டகாமணியின் வரலாற்றை அவர் பாடிய வகையைக் கவனித்தால் விளங்கும். காமணியின் பிறப்பு முதல், எல்லாளன் என்ற தமிழ் மன்னனை வெற்றிகொண்ட அரசியல் நிகழ்ச்சிகள் யாவும் நான்கு அத்தியாயங்களில் (22 – 25) கூறப்பட்டு விட, ஏனைய ஏழு அத்தியாயங்களும் (26 – 32 அத்.) அவனது சமயப்பணிகளையே விவரித்துக் கூறுகின்றன. இவற்றுள்ளும், மகாதூபம் நிறுவப்பட்டதைக் கூறுதற்கு நான்கு அத்தியாயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன (28-32). சமயப்பணிகளே மகாவம்ச ஆசிரியரைக் கவர்ந்துள்ளன என்பது தெளிவு. மகாவம்ச ஆசிரியரின் இலக்கிய வன்மையும், சங்கீத இலக்கியப் பயிற்சியும் இப்பகுதியைப் பாடுவதில் பெரிதும் செயற்பட்டிருக்கின்றதைக் காணலாம். வடமொழிக் காவிய இலக்கணங்கள், அலங்காரங்கள் காமணியின் வரலாற்றுக் காவியத்தைப் பாடப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இறுதியாக உள்ள ஐந்து அத்தியாயங்களுமே (33 – 37 அத்.) மகாவம்சத்தில் மிகவும் நம்பிக்கை வாய்ந்ததும், வரலாற்றுண்மைகள் செறிந்துள்ளதுமான பிரிவு எனக் கூறுவர். காலஏடு (Chroniele) எழுதப்படுதற்கு முன்மாதிரியாகவும் இவ்வைந்து அத்தியாயங்களைக் குறிப்பிடலாம். நிகழ்ச்சிகள் நேரடியாகவும், தேவையற்ற வர்ணனைகளின்றியும் இந்த அத்தியாயங்களில் கூறப்படுகின்றன.

மேலும் நூலாசிரியர் வாழ்ந்த காலத்துக்கு மிகக் கிட்டிய காலத்து 'மன்னர்களே இப்பிரிவில் இடம்பெற்றதால், அவர்களைப்பற்றி அதிகம் புனைவுகள் இடம்பெறுதல் இயலாது.

மேலே கூறியவற்றால், மகாவம்சத்தை முழுமையாக நம்பிக்கையானதென்றோ, புனைகதையென்றோ கூறிவிடல் பொருந்தாது. அதை நன்கு ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கே, அதிலுள்ள உண்மைகளும், உண்மைகளை விளக்க எழுந்த கதைகளையும் கண்டுகொள்ளமுடியும். மேலும் பரம்பரை பரம்பரையாக விகாரை களில் பேணப்பட்ட மரபுகளைப் பெரிதும் பின்பற்றியே மகாவம்சம் பாடப்பட்டதால், அதன் ஆசிரியர் எதையும் தானாகக் கற்பனை செய்து கொண்டு பாடவில்லை என்பதையும் நாம் உணர்தல் வேண்டும். மகாவம்சத்தை நன்கு ஆராய்ந்து, அதில் கொள்ளத்தக்கவற்றைக் கொண்டும், தள்ள வேண்டியவற்றைத் தள்ளியும் பயிலுதல் நல்ல வரலாற்று அனுபவத்தை அளிக்கும். இந்திய மரபுகள், கல்வெட்டுக்கள் முதலான பிற ஆதாரங்களுடன் மகாவம்சக் கூற்றுக்களை ஒப்புநோக்கி, அவற்றின் உண்மையை நாம் நிதானித்துக் கொள்ளலாம். பொதுவாகப் பார்க்குமிடத்து, ஆதிகால இலங்கை வரலாற்றை எழுதப் பயன்படும் மிகவும் உபயோகமான ஆதாரநூல் மகாவம்சம் என்ற கருத்து வலுப்பெறும்.

இன்று எம்மில் பலரால் மகாவம்சத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் பல தகவல்கள் அவருடைய நோக்குக்கு உடன்பாடின்மையால், அவற்றைக் கூறாது தவிர்த்துள்ளார். பொருளியல் நிலை, சமூக வளர்ச்சிகள் முதலான பல விஷயங்களை அவர் கவனமெடுத்துக் கூறாது விட்டுள்ளார். 'கூறப்பட்டதில் அல்ல, கூறாதொழிந்தவையே தீர்வுகாண முடியாத பிரச்சினையாகவுள்ளது' என மகாவம்சம் பற்றி கைகர் என்ற ஜேர்மன் அறிஞர் (மகாவம்சம் மொழிபெயர்ப்பாளர்) கூறியுள்ளமை இங்கு மனங்கொளத்தக்கது. மகாவம்சத்தில் கூறப்படாதவற்றை நாம் கல்வெட்டுக்கள், தொல்பொருட் சான்றுகள் முதலிய மூலாதாரங்கள் கொண்டு நிரப்பலாம்.

கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு பௌத்த பிக்கு தன்னுடைய காலத்திலிருந்து பல நூற்றாண்டுகள் முன்பு நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி தொகுத்து எழுதி வைத்த ஒரு நூலை (மகாவம்சத்தினை) தற்கால வரலாற்று ஆசிரியர்கள் (நம்பத்தகாத நிலையிலும்) பயன்படுத்தி தமது நூல்களை எவ்வாறு எழுதத் துணிந்தனர்? கி.பி.6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாநாமதேரர் கிறிஸ்துவுக்கு முற்பட்ட இலங்கையின் வரலாற்று விடயங்களை எவ்வாறு அறிந்திருந்தார்? என்னென்ன காரணங்களுக்காக, எவ்வாறு வடஇந்தியாவின் பௌத்தமத வரலாறு ஈழவரலாற்று மரபின் தோற்றத்திற்கு முகவுரையாக அமைக்கப்பட்டது? இவ்வாறான வினாக்களுக்கு விடையளிக்க முயலும்போது மகாவம்சத்தைப் பற்றிய ஒரு சிறப்பாய்வினை நிகழ்த்தமுடியும்.

முதலில் மகாவம்சத்தின் பொருளடக்கம் கொண்டுள்ள செய்திகளின் நம்பகத் தன்மையை நிரூபிக்கவேண்டும். மகாநாமதேரர் உண்மையான வரலாற்றுச்

செய்திகளைத்தான் பதிவு செய்திருந்தார் என்று கொண்டாலும், அவ்வரலாறு எமக்கு எந்தவிதமான திரிபுகளுமின்றிக் கிடைத்துள்ளதா என்பதும் அவதானிக்கப்பட வேண்டும். இலக்கிய வரலாற்று மூலாதாரங்களில் திரிபும், இடைச் செருகல்களுமே பிரதான பின்னடைவாகக் காணப்படுகின்றன.

மகாநாமதேரர் தன்னுடைய காலத்திற்கும் ஆறு அல்லது எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்களை அவரது காலத்திற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருக்கக்கூடிய ஆவணங்களைப் பயன்படுத்தியும், பரம்பரைக் கதை மரபுகளைப் பயன்படுத்தியும் இந்நூலை எழுதி முடித்திருக்க வேண்டும். அவ்வாறு செவிவழி மரபாகக் கிடைத்த தகவல்களை மகாவம்சத்தில் மகாநாம தேரரால் பதிவு செய்யப்பட்டிருப்பின் அவற்றின் வரலாற்றுத் தன்மையை நாம் ஆராயவேண்டும். அவ்வாறு காண்பதற்கு நாம் பிற இலக்கிய மூலாதாரங்களையும், சாசன, தொல்லியல் சான்றுகளையும் கையாளவேண்டும். மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்ட செய்திகளை சாசன தொல்லியற் தகவல்களுடன் இணைத்து ஒப்பிட்டுப் பார்க்கும்போது மகாவம்சத்தின் நிலையை வரலாற்று ரீதியாகக் கண்டுகொள்ள முடியும்.

மகாநாமதேரர் தனது நூலின் ஆரம்பத்தில் முதன் மூன்று செய்யுட்களிலேயே தன்னுடைய நூல் முற்பட்ட ஆதாரங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இது மிக முக்கியமான விடயமாகும். இவர் தனது நூல் மரபுவழி வந்த மகாவம்சமானதாகவும் இருக்கவேண்டும் என்று விரும்பியமையால் இதற்கு முன்பு இருந்த மகாவம்சத்திற்கு விளக்கமாக இம்மகாவம்சத்தை எழுதுவதாகக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு மகாநாமதேரர் பயன்படுத்திய முற்பட்ட நூல்களாக இருந்த இரு நூல்களை எடுத்துக்காட்ட முடிகின்றது. (1) தீபவம்சம் (2) ஸமந்தபாஸாதிகாலின் முன்னுரை என்பனவே அவையாகும். இவ்விரு நூல்களும் கி.பி. 4ஆம் அல்லது 5ஆம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்றவை என நம்பப்படுகின்றன.

மகாவம்சத்திற்கு பிற்கால கட்டங்களில் அந்நூலுக்காக எழுதப்பட்ட உரைநூல்களும் மகாவம்சத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை ஆராய்வதற்கு உதவுகின்றன. மகாவம்ச டீகா அல்லது வங்ஸத்த பாகாஸ்னீ என்ற நூலும், ஸீகள – அட்டகதா மஹாவங்ஸ என்ற நூலுமே உரைநூல்களாகப் பிற்காலத்தில் தோற்றம் பெற்றவையாகும். மகாவங்ஸ-டீகாவையும் பிற வரலாற்று மூலாதாரங்களையும் ஆராயும்போது கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு நம்பகமான வரலாற்று மரபு இலங்கையில் தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்து வந்தமை பற்றி அறியமுடிகிறது. பொதுவாக இத்தீவின் வரலாற்று மரபுகள் ஆரியர் வருகையின் பின்னர் தான் பேணப்படத் தொடங்கப்பட்டது எனக் கூறப்படுகிறது. ஆனால் பௌத்த மதத்தின் வருகை வரை (கி.மு. 3ஆம் நுற்றாண்டு) இம்மரபுகள் ஓர் ஒழுங்கான முறையில் பேணப்பட்டிருந்தன எனக் குறிப்பிடமுடியாது. பௌத்த சங்கம் ஒன்று இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் தான் ஒழுங்காக வரலாற்று மரபுகள் பேணப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பௌத்த சங்கம் ஸ்தாபிக்கப்பட்டபோது வட இந்தியாவில் பௌத்தமதம் சம்பந்த மாகப் பேணப்பட்டிருந்த மரபொன்று மகிந்ததேரராலும் தூதுக்குழுவினராலும் இங்கு கொண்டுவரப்பட்டதெனலாம். கி.மு. 3ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இங்கு வளர்ச்சிபெற்றுச் சென்ற வரலாறு மரபிற்குரிய கருவாகவே வடஇந்திய பௌத்த மரபு அமைந்தது. இந்த வரலாற்று மரபே பௌத்த நூல்களுக்கெல்லாம் முன்னுரையாகவும் அமைந்து கொண்டது. இந்த மரபு இரு பிரதான பாகங்களாக வகுக்கப்பட்டிருந்தன. அவையாவன:

1) மத வரலாறு

2) வம்ச அரசியல் வரலாறு

புத்தர் காலம் தொடக்கம் மகிந்ததேரர் காலம் வரைக்கும் வளர்ந்த வரலாற்றுச் செய்திகள், அதேநேரத்தில் இவ்வரலாற்றுக்கு காலவரையறை கொடுப்பதற்காக பக்கம் பக்கமாக ஆச்சாரியர்களின் மகாநாட்டு அரசியல் தொடர்புகளும் இணைத்துக் கொடுக்கப்பட்டன. இதனால்தான் மகாவம்சம் ஒரு சமய நூலாக மட்டுமன்றி, அரசியல் வரலாற்று நூலாகவும் இருப்பதனைக் காண்கிறோம். இதுவே இந்நூலின் முக்கியத்துவமும் ஆகும்.

தேரவாத பௌத்த மத வரலாற்றிற்கு தேவநம்பியதீசன் காலம் தொடக்கம் அரசியல் வரலாற்றோடும் தொடர்புடைய பல விடயங்களை இணைத்து மகாவம்சம் தகவல்களைத் தருகின்றது. இங்கு அரசியல் வரலாற்றோடு தொடர்புடைய விடயங்கள் மட்டும்தான் கிடைக்கின்றது. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் இலங்கையில் போதனை செய்யப்பட்ட பௌத்த மரபினை மையமாகக் கொண்டே பிற்கால வரலாற்று மரபு வளர்ச்சியடைந்தது. இவ்வாறு ஆரம்பித்த வரலாற்று மரபு பௌத்தமதப் போதனை நூல்களுக்கு முன்னுரையாக அமைந்தபோத அந்நூல் களுடன் ஆதி சிங்கள மொழியில் எழுதப்பட்ட உரைப்பகுதிகள் இணைக்கப்பட்டன. இங்கு பௌத்தமதம் பரப்பப்பட்டபோது போதனை நூல்கள் பாளி மொழியில் எழுதப்பட்டுக் காணப்பட்டன. பொராண அட்டகதா என்ற பெயரில் அப் பாளிநூல்கள் அமைந்திருந்தன. இந்நூலில் உரைநடைப் பகுதியும், வரலாற்றுப் பகுதியும் கலந்து அமைந்திருந்தது. இவ்வாறு தோற்றம் பெற்ற வரலாற்று மரபு இலங்கையில் புதிய போக்கில் வளரத் தொடங்கியது. வட இந்திய பௌத்தமத வரலாற்றோடு இலங்கையில் பௌத்தமதம் பரப்பப்பட்ட, வளர்க்கப்பட்ட வரலாறும் இணைக்கப் பட்டது. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் மகிந்ததேரரால் பௌத்தமதம் பரப்பப்பட்ட பகுதியில்தான் விகாரைகள் அமைக்கப்பட்டன. சங்கமித்தையின் வருகை, வெள்ளரசுக் கிளை நாட்டல், பிக்குணி சங்கம் ஆரம்பித்தல் போன்ற சம்பவங்கள் இலங்கைப் பௌத்தமத வரலாற்றோடு சேர்க்கப்பட்டது. இக்காலத்தில்தான் முதன்முதலாக பௌத்தம் அரசியல் வரலாற்றோடு சேர்க்கப்பட்டது. இக்காலத்தில்தான் முதன்முதலாக அரசியல் செய்திகள் மத வரலாற்றுப் போர்வைக்குள் சேர்க்கப்பட்டு, மத வரலாறாக்கப்பட்டது. தேவநம்பியதீச மன்னனுக்குப் பின்னர் இலங்கையில் இருந்த மிக முக்கிய விகாரைகளில் ஒவ்வொரு மன்னருடைய காலத்திலும் பௌத்தமதத்தின் வரலாற்றில் காணப்பட்ட

அபிவிருத்திகள் பற்றிய செய்திகள் பேணப்பட்டு வந்தன. சிறப்பாக மகாவம்சத்தில் இவ்வாறு காலத்துக்குக்காலம் ஆரம்ப வரலாற்று மரபுடன் சேர்த்துக்கொள்ளப்பட்ட புதிய வரலாற்று விடயங்கள் உரைநூலான பொராண அட்டகதாவிலே அடக்க முடியாதளவிற்கு வளர்ந்து கொண்டு சென்றது. அவ்வாறான ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் உரைநூலிலிருந்து வரலாற்றுச் செய்திகளை வேறுபடுத்த வேண்டிய தேவையும் ஏற்பட்டது. வரலாறு விகாரைக்கு விகாரை வேறுபடத் தொடங்கியது. இக்கட்டத்தில் இலங்கையின் வரலாற்று மரபானது தனியான ஒரு நூல்வடிவினைப் பெற்றுக்கொண்டது. அந்நூல் தான் ஸீஹாள-அட்டகதா-மஹாவங்ஸ என்பதாகும். இவ்வாறு தனிநூலாக மாறியபோது இந்நூலில் இலங்கை வரலாறு சம்பந்தமான வேறு பகுதிகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட பகுதிகளாக பௌத்தமத வருகைக்கு முற்பட்ட காலத்தில் ஈழத்தில் இருந்தநிலை, ஆரியர் வருகைக்குமுன் இலங்கையில் இருந்த மக்கள்நிலை, ஆரியர் வருகையைத் தொடர்ந்து தேவநம்பியதீசன் காலம்வரை உள்ளடக்கியுள்ள வரலாறு ஆகியனவும் **ஸீஹள-அட்டகதா மஹாவங்ஸத்தில்** சேர்க்கப்பட்டது.

பொராண அட்டகதா பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் நிலவிய சூழ்நிலை காரணமாக எழுத்தில் பொறிக்கப்பட்டது. ஏனெனில் பஞ்சத்தின் நிமித்தம் பிக்குகள் பலர் பிரிந்துசெல்ல வேண்டியும், இறக்கவும் நேரிட்டது. உணவுப் பஞ்சம் காரணமாக பலர் இடம்பெயர்ந்து தமிழ்நாட்டிற்குக் கூடச் செல்லவேண்டி இருந்தது. இச் சந்தர்ப்பத்திலேயே **பொராண அட்டகதா** எழுத்து வடிவம் பெற்றது. கௌதம புத்தருடைய போதனைகள் முதன்முதலில் இலங்கையில் எழுத்து வடிவில் பதிவாகியது. இந்நிகழ்விற்குப் பின்னர்தான் **ஸீஹள-அட்டகதா-மஹாவங்ஸ என்ற நூல் தனிவடிவம் பெற்றது. விஷபந்து, தேவநம்பியதீச காலந்தொடக்கம் இந்நூலில் வரலாற்று மரபு பேணப்பட்டது.**

துட்டகாமணி காலத்தில் பொதுமக்களிடையே நிலவிய கதைகள் பல ஸீஹள – அட்டகதா – மஹாவங்ஸ என்ற நூலோடு சேர்க்கப்பட்டது. ஸீஹள – அட்டகதா – மஹாவங்ஸ தனி நூலாக எழுந்த காலத்திலும், அதற்குச் சிறிது பிற்பட்ட காலத்திலும் இலங்கை வரலாறு சம்பந்தமாக சில புதிய கருத்துக்கள் ஈழத்து பௌத்த சங்கத்தாரிடையே தோற்றம் பெற்றிருந்தன. அவ்வாறான ஒரு முக்கியமான கருத்து நிலையாகவே தம்மதீபக்கருத்து தோற்றம் பெற்றிருந்தது. அந்தக் கருத்து நிலையானது ஸீஹள – அட்டதா – மஹாவங்ஸ காலத்திலும் அதற்குப் பிந்திய காலங்களிலும், தற்காலத்திலும் கூட ஈழத்து மக்களிடையே ஒரு வலிமைவாய்ந்த கருத்து நிலையாகக் காணப்பட்டது. அதற்கேற்பவே இலங்கையில் பௌத்த சங்க வரலாறும் பொதுமையான வரலாறும் அப்புதிய நோக்குநிலையில் பேணப்பட்டன. தம்மதீப என்பது கௌதமபுத்தரின் போதனைகள் இலங்கைத் தீவிற்தான் இறுதிவரை நின்று நிலைக்கும் என்ற பொருளையுடையது. இவ்வாறான கருத்துநிலை தோன்றியதனால் புத்தரின் பிறப்பு, வளர்ப்பு, துறவு, ஞானம் அடைந்தமை, பரிநிர்வாணம் போன்ற வரலாற்று விடயங்களும் அந்நூலில் பொறிக்கப்பட்டன. இதே காலப்பகுதியில் இந்தியாவில்

மகாயான பௌத்தசமயம் தோன்றியபோது தேரவாத பௌத்த சமயம் நலிவடையத் தொடங்கியது. அதனாலேதான் இலங்கையில் அச்சமயப் பிரிவு இறுதிவரை நின்று நிலைபெறும் என்ற அத் தம்மதீபக் கருத்து மேலோங்கிக் காணப்பட்டது. புத்தரின் இலங்கைக்கான மும்முறை விஜயம், விஜயன் வரலாறு, விஜயன் வருகையை புத்தரின் பரிநிர்வாணத்துடன் இணைத்துக் காட்டப்படல் போன்றன இந்நூலில் பின்னர் சேர்க்கப்பட்ட பகுதிகளாகும். தம்மதீபக் கருத்து வளர்ச்சி அடைந்தமையால் இலங்கை வரலாற்றை வடஇந்திய பௌத்த வரலாற்றிலிருந்து பிரித்து எடுத்துக் கூறவேண்டியநிலையும் ஏற்பட்டது. இவ்விதம் வளர்ச்சிபெற்ற இலங்கையில் வரலாற்று மரபானது பாளியும், ஆதிச் சிங்கள மொழியும் கலந்தநிலையில் எழுதிப் பேணப்பட்டது. ஆனால் வடஇந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட வரலாற்று மரபு பாளிமொழியிலேயே தொடர்ந்தும் பேணப்பட்டது. (இற்றைவரைக்கும் அம்மரபு பேணப்பட்டுக் கொண்டு வரப்படுவதற்குச் சிறந்த உதாரணம் மகாவம்சத்தின் ஆறாம் பாகம் ஆகும். இது முள்ளிவாய்க்கால் வரையான வரலாற்றை உள்ளடக்கி, பாளி மொழியில் எழுதப்பட்டது.

கி.பி. 4ஆம் நூற்றாண்டில் ஸீஹள - அட்டகதா - மஹாவங்ஸத்தினை அடிப்படையாகக் கொண்டு முதன் முறையாக தனிப் பாளிமொழியில் இலங்கை வரலாற்றினை எழுதுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அம்முயற்சியின் விளைவுதான் தற்போது எமக்குக் கிடைத்த **தீபவங்ஸ** என்ற நூலாகும்.

தீபவங்ஸ என்ற நூல் ஒரே காலத்தில், ஒரே ஆசிரியரால், ஓர் இடத்தில் வைத்து எழுதி முடிக்கப்பட்ட நூல் அல்ல. உரைநடையும் செய்யுட்களும் மாறிமாறி கலந்து விரவிய வகையில் இந்நூல் தோற்றமளிக்கின்றது. பல செய்யுட்கள் இங்கு மக்கள் மத்தியில் இருந்திருக்கக்கூடிய நினைவுச் செய்யுட் களாகவே காணப்படுகின்றன. பௌத்தமதம் தொடர்பாகப் பாளியும் ஆதிச்சிங்களமும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஈழத்துப் பௌத்த சங்கத்தாரால் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த ஆரம்ப நூற்றாண்டுகளில் ஆதிச்சிங்களத்திலும் பாளியிலும் எழுதப்பட்ட நூல்கள், சிறப்பாக உரைநூல்கள் தெளிவற்ற நிலையில், இலக்கியச் சிறப்பற்ற தன்மையில் காணப்பட்டன. உரைநடைப் பகுதிகள் பண்படாத ஆதிச்சிங்களமொழியில் எழுதப்பட்டிருந்தன. அக்காலத்தில் இயற்றப்பட்ட சில செய்யுட்கள் பாளிமொழியில் இலக்கணப் பிழையுடனும் பொலிவற்ற தன்மையடிப்படையிலும் எழுதப்பட்டன. கி.பி. 3ஆம், 4ஆம் நூற்றாண்டுகளில் பேச்சு மொழியிலேயே, செம்மையற்ற நிலையில் இலக்கியங்களைப் படைக்கும் போக்கு ஈழத்தில் காணப்பட்டது. இவ்வாறான பொலிவற்ற பாளிமொழி, சிங்களமொழியில் எழுதப்பட்ட உரைநடை நூல்களை ஆதாரமாகக் கொண்டே தனிப் பாளிமொழியில் இலங்கை வரலாற்றைக் குறிப்பிடும் இலக்கியமொன்றை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அம் முயற்சியின் விளைவாகத் தோன்றியதே தீபவங்ஸ என்ற நூலாகும். ஈழத்தில் எமக்குக் கிடைத்த காலத்தால் முற்பட்ட ஒரு வரலாற்று இலக்கியமாக தீபவங்ஸ விளங்குகின்றது. இந்நூல் தனியொரு ஆசிரியரால் எழுதி முடிக்கப்பட்டது

என்று கூறமுடியாதுள்ளது. இந்நூலைப் படிக்கும்போது அதனைப் பலர் எழுதி ஒன்று சேர்த்துள்ளனர் என்பதை உணரமுடிகிறது.

தீபவங்ஸ நூல் கி.பி. 4ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆக்கப்பட்டதாயினும், அதில் அடங்கியுள்ள எத்தனையோ விடயங்கள், பிரிவுகள் அந்நூற்றாண்டிற்கும் முற்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. முன்பு எழுதப்பட்டுக் கிடைத்த நூல்களை அடிப்படையாக வைத்தே பல செய்திகள் பெறப்பட்டு தீபவங்ஸ ஆசிரியர்களால் அந்நூல் தொகுத்து முடிக்கப்பட்டது. பௌத்த சங்கத்தின் செல்வாக்கோ, தொடர்புகளோ அற்ற நிலையில் இந்நூல் உருவாக்கி முடிக்கப்பட்டது.

தீபவங்ஸ நூல் கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரலாற்று இலக்கியமாக இருந்தபோதிலும், அதில் கூறப்பட்டுள்ள பாகங்கள் பல கி.பி. 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவையாகவே உள்ளன. இந்நூலில் இணைக்கப்பட்டுள்ள பல நினைவுச் செய்யுட்கள் அத்தன்மையை நன்கு உறுதிப்படுத்துகின்றன. இவை கி.மு. 3ஆம் 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக உள்ளன. இந்நினைவுச் செய்யுட்கள் பழைய சமுதாயங்களிடையே நன்கு புழக்கத்திலிருந்தவை என்பதும் தெளிவாகின்றது. இந்நினைவுச் செய்யுட்களில் சில தன்கூற்றாகவும் சில பிறர்கூற்றாகவும் அமைந்துள்ள தன்மையைக் காணும்பொழுது நாட்டார் வழக்கியல் மரபு தீபவங்ஸத்தில் காணப்படுவதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

தீபவங்ஸத்தில் குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றதாகக் காட்டப்படும் மையங்களின் பெயர்கள், அரசர்களின் பெயர்கள் போன்றவற்றையே அந்நினைவுச் செய்யுட்களிலிருந்து பெறமுடிகிறது. தீபவங்ஸத்தில் புத்தரின் இலங்கை வருகை கூறப்பட்டுள்ளது. மகாவங்சத்தையும் தீபவங்ஸத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தீபவங்ஸத்தில் 13 நினைவுச் செய்யுட்களில் கூறப்பட்ட ஒரு விடயமானது மகாவங்சததில் 11 அத்தியாயங்களாக விரிந்துரைக்கப்பட்ட தன்மையையும் காண்கிறோம். தீபவங்ஸத்தில் விடயங்களை எளிதில் விளங்கிக்கொள்ள முடியாத நடை காணப்படுவதும், சில பாகங்களில் தன்கூற்றில் பேசுபவரது பெயர் குறிக்கப்படாது சம்பாஷணைப் பரப்பு இடம்பெற்றிருப்பதனையும் அவதானிக்க முடிகிறது. இங்கு பேசுபவர் யார் என்பதனைச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தியே அறிய வேண்டியுள்ளது. இவ்வாறான பாகங்கள் இலங்கையின் வரலாற்று மரபு எழுத்தில் பொறிக்கப்படாத ஒரு காலகட்டத்தில் செவிவழிச் செய்தி மரபுகளை ஆதாரமாக வைத்து வரலாற்றினை விரித்துக் கூறுபவரையும், சம்பாஷணை செய்பவரையும் பதிவு செய்வதாக தீபவம்சத்தின் அமைப்பு காணப்படுகின்றது. இந்நிலையில் வரலாற்றுத் தன்மை (Historicity) அடிப்படையில் தீபவங்ஸமானது மகாவம்சத்தினைவிட கூடிய முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஆனால் மகாவம்சத்தைப் போன்று விரிவான தகவல்களை தீபவங்ஸ தரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் வரலாற்று மரபின் வளர்ச்சியில் அடுத்த நிலையில **ஸமந்தபாஸாதீக** என்ற நூல் இடம்பெறுவதனைக் காணமுடிகிறது. கி.பி.

5ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்நூலுக்கான முன்னுரையை புத்தகோசர் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது. கி.பி. 4ஆம் நூற்றாண்டின் பின்னர் இலங்கையில் பாளிமொழி இலக்கியங்கள் மேனிலை பெறுவதனைக் காணமுடிந்தது. புத்துணர்வு பெற்றிருந்த ஈழத்து பாளி இலக்கிய வளர்ச்சியில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த பௌத்த பிக்குவான புத்தகோசரும் பங்கு கொண்டிருந்தார் என்பதனை மைந்தபாஸாதீகவிற்கு அவர் எழுதிய முன்னுரையிலிருந்து தெளிவாகின்றது. இந்த முன்னுரையானது சிறந்த பாளிமொழி நடையில் எழுதப்பெற்றதாகவும் பல வரலாற்று ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றதாகக் காணப்படுகின்றது. இந்நூலின் முன்னுரையினை புத்தகோசர் பௌத்த மகாசங்கத்தின் வரலாற்றையும், ஈழத்திலே பௌத்தம் வளர்ந்த வரலாற்றையும் மிக முக்கிய அம்சங்களாகக் கொண்டு எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இம் முன்னுரையில் தேவநம்பியதீசனின் காலத்துப் பௌத்தம் பரப்பப்பட்ட வரலாறாகவே உள்ளது. இம் முன்னுரையை புத்தகோசர் எழுதுவதற்கு **ஸிஹள – அட்டகதா – மஹாவங்ஸத்தையும், தீபவங்ஸத்தினையும்** ஆவணங்களாக அவர் பயன்படுத்தியிருந்தார் என்பதும் இவற்றின் மொழிநடையில் எந்தவிதமான அதிக மாற்றங்களையும் ஏற்படுத்தாது அப்படியே ஸமந்தபாஸாதீகாவின் முன்னுரையில் சேர்த்துக்கொண்டார் என்பதும் தெளிவாகின்றது.

மகாவம்சத்தினை எழுதிய ஆசிரியரது பெயரோ காலமோ அந்நூலில் குறிப்பிடப்படாதவொரு நிலையில் அதன் உரை நூலானது மகாவம்சடீகாவின் முன்னுரையில் இருந்துதான் **மகாநாததேரரின் பெயரை** அறிய முடிந்துள்ளது. மகாவம்சத்தின் அமைப்பினையும், உரைநடையையும் கொண்டு அந்நூல் தீபவங்ஸத்திற்கு பிற்பட்டநூல் எனக் கூறமுடிந்தாலும், குறிப்பாக அதன் காலத்தினைக் கூறுவது கஷ்டமாகும். **மகாநாமதேரர்** என்ற பெயர் **மகாவம்ச – டீகாவைவிட** வேறு ஆதாரங்களிலும் காணப்படுகின்றது. 5ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சி புரிந்த தாதுசேனனின் காலத்தில் **மகாநாமர் என்றவோர் அறிஞர்** பாளி நூல்கள் சிலவற்றிற்கு உரை எழுதியதாக அறிகின்றோம். **இந்த மகாநாமதேரர் தாதுசேன மன்னனின் மருகன் எனவும் அறிய முடிகின்றது.** கி.பி. 6ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினைச் சேர்ந்த இரு சமஸ்கிருதக் கல்வெட்டுக்களில் மகாநாமதேரர் என்பவர் பற்றிய குறிப்புக்கள் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுக்கள் வடஇந்தியாவிலுள்ள பௌத்த தலமான புத்தகாயாவில் காணப்படுகின்றன. இவ்வாறு கல்வெட்டுக்களிலும் சில இலக்கிய ஆதாரங்களிலும் குறிக்கப்பட்டுள்ள மகாநாமதேரர் தான் மகாவம்சத்தை இயற்றிய ஆசிரியர் எனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. இருந்தும் அவரது பெயரே திட்டவட்டமாக மேற்குறிக்கப்பட்ட ஆதாரங்களில் குறிக்கப்பட்டுள்ளனவா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. புத்தகாயாக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்ட மகாநாமதேரர் ஒருவேளை மகாவம்ச ஆசிரியராக இருக்கக்கூடும். ஆனால் இலக்கிய ஆதாரங்களில் தாதுசேன மன்னனின் மருமகனாக குறிப்பிடப் பட்டுள்ளவரான மகாவம்ச ஆசிரியருடைய காலத்தினை திருப்திகரமான முறையில்

நிர்ணயிக்க வேண்டியுள்ளது. அதில் சிறப்பாக முற்பட்ட வரலாற்று ஆதாரங்களில் இடம்பெறாது கி.பி. 5ஆம் 6ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட சில நூல்களிலே காணப்படும் தகவல்கள் மகாவம்சத்திலும் காணப்படுகின்றமையால் மகாவம்சநூல் கி.பி. 5ஆம் அல்லது 6ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதெனக் கொள்ள வேண்டியுள்ளது இதைவிட மகாவம்சத்தையும் தீபவங்ஸத்தையும் ஒப்பிடும்போது இரண்டு நூல்களுக்குமிடையில் 100 அல்லது 150 வருடங்கள் இடைவெளி காணப்படுகின்றதெனக் கொள்ளமுடியும். மொழியியல் அடிப்படையிலும், வரலாற்றுச் செய்திகளை கூறிச் செல்லும் அடிப்படையிலும் அக்கால வேறுபாட்டினை நன்கு உறுதிப்படுத்த முடிகிறது.

மகாவம்சமானது கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது கி.பி. 6ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளப் படுகிறது. முன்பு குறிப்பிட்டது போன்று மகாவம்ச ஆசிரியர் இந்நூலை எழுதும் போது சில குறிப்பான நோக்கங்களைக் கொண்டிருந்தார். அவற்றுள் ஒன்று தனக்கு முன் எழுதப்பட்ட மகாவம்சத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றமை யால், அக் குறைபாடுகளை நீக்கி, புதியதொரு வரலாற்று நூலை எழுதும் நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார். அவரது இரண்டாவது நோக்கம் ஒரு சமய நோக்கமாகும். அதாவது இப்படியான வரலாற்றைப் பலரும் வாசித்து தூய களிப்பினையும் உணர்ச்சியினையும் பெறவேண்டுமென்ற நோக்கமாகும். இந்நோக்கத்தை முதலாவது அத்தியாயத்தில் ஆரம்பத்தோடு கூறியது மட்டுமன்றி அதன் பின்னர் ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் திரும்பத்திரும்பக் குறிப்பிடப்படுவதையும் காண்கின்றோம்.

மகாவம்சத்தின் இயல்புகளும் தன்மையும் - ஒரு நுண்ணாய்வு

ஈழத்தின் இலக்கிய வரலாற்று மரபானது இந்தியாவின் இலக்கிய வரலாற்று மூலகங்களின் ஒரு பாகமாகும். இருந்தபோதிலும் இங்கு தோற்றம் பெற்றிருந்த மகாவம்சத்தையொத்த வேறொரு நூல் இந்திய இலக்கியங்களிடையே காணப்படவில்லை. மத்திய காலத்தில் வடஇந்தியாவில் உருவான காஷ்மீர் வரலாற்றுடனான கல்கணரால் எழுதப்பட்ட இராஜதரங்கிணீ என்ற நூல் ஓரளவுக்கு மகாவம்சத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது எனலாம். இவ்விரண்டு நூல்களுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படினும் மதநிறுவனங்களால் பேணப்பட்ட மரபுகளை உள்ளடக்கிய வகையிலான வரலாற்று வளர்ச்சி வரன் முறைகளைச் சிறப்பாகக் குறிப்பிடுவதில் ஒத்த தன்மையாகக் காணப்படுகின்றன. இராஜதரங்கணீ தீவிர வீரசைவத்தினையும், மகாவம்சம் தீவிர தேரவாத பௌத்த மதத்தினையும் ஆதரித்தன.

மகாவம்சம்திற்கு கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலேயே எழுத்து வடிவம் கொடுக்கப்பட்டு முழுமையாக்கப்பட்டது. அந்தக் காரணத்தினாலேயே இந்திய இலக்கியங்களில் காணப்படும் பல பண்புகள் மகாவம்சத்திலும் இயல்பாக இணைவதற்கு அடிப்படையாயிற்று. அப்பண்புகளானவை சிறப்பாக வடமொழி

இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள காவியமரபு மகாவம்சத்திலும் காணப்படுவது தவிர்க்க முடியாததாயிற்று. இதேநேரத்தில் வடமொழி இலக்கியங்களில் காணப்பட்ட புராணமரபும் இந்நூலில் இணைக்கப்பட்டது. ஆனால் மகாவம்சத்தினைத் தனிப்பட்ட முறையில் ஒரு தனிக்காவியமாகவோ அல்லது தனிப் புராணமாகவோ கொள்ளமுடியாது. இராமாயணத்துடனும் விட ஓரளவுக்கு மகாபாரத்தை ஒத்துள்ள நூலாக மகாவம்சம் விளங்குகின்றது. தற்பொழுது நமக்குக் கிடைத்துள்ள மகாபாரத நூலின் வடிவம் கிறிஸ்துவுக்கு பிற்பட்ட நூற்றாண்டுகளில் நிறைவுபெற்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை நன்கு அறிந்திருந்த மகாநாமதேரர் அந்நூலைப் போன்றதொரு வடிவமைப்பில் மகாவம்சத்தையும் உருவாக்க விரும்பினாரா என்பதும் ஆய்விற்குரியது. ஏனெனில் மகாவம்சத்திலுள்ள சில பாகங்களில் காவியமரபிற்கேற்ப வரையப்பட்ட அத்தியாயங்கள் இணைக்கப்பட்டிருப்பதனாலாகும். இங்கு கொடுக்கப்பட்டுள்ள சில மன்னரினதும் வீரர்களினதும் குணாதிசயங்கள் மகாபாரதத்தில் வருகின்ற கதாபாத்திரங்களை எமக்கு நினைவுபடுத்துவதாக உள்ளன. இருப்பினும் மகாவம்சம் முழுவதனையும் ஒரு காவியம் என்று குறிப்பிட்டுவிட முடியாது. இராமாயணத்தை எடுத்துக்கொண்டால் அங்கு முக்கிய பாத்திரங்களான இராமர், சீதை ஆகியோரது கதைகள் அக்காவியத்தின் மையமாகக் காணப்பட, மகாபாரதத்தில் குரு பரம்பரை அக்காவியத்தின் மையமாகக் காணப்படுகிறது. மகாவம்சத்திலும் அவ்வாறான ஒரு மையக்கரு காணப்படுகின்றதா என ஆராயும் போது, மகாவிகாரையை மட்டும் மையமாகக்கொண்டு அதன் அமைப்பு காணப்படுவதனை அவதானிக்கலாம். அதற்காக மகாவம்சத்தை ஒரு காவியம் எனக் குறிப்பிட்டுவிட முடியாது. வடமொழியிலுள்ள காவியங்கள் வரலாற்று நூலாக அமையவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மகாவம்சம் ஒரு வரலாற்று நூல் என்ற ஓர் அடிப்படையில் வைத்து நோக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மகாபாரதமும், இராமாயணமும் சத்திரிய மரபினை உயர்வாகக் குறிப்பிடும் தன்மை கொண்டவையாகும். அதனால் சத்திரியரின் வீரதீரச் செயல்கள் அடிக்கடி காவியமரபில் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாயிற்று. இவ்வாறான ஒரு பாகம் மகாவம்சத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அதுவே பண்டுகாபய மன்னனின் வரலாற்றுப் பாகமும், துட்டகாமணி வரலாற்றுப் பாகமுமாக இரு இடங்களில் அக்காவிய பாகம் அமைந்துள்ளது.

பண்டுகாபயன் கதைத்தொகுப்பு, துட்டகாமணி மன்னன் பற்றிய தொகுப்பு என்பனவற்றில் துட்டகாமணி வரலாற்றுப் பாகமானது உண்மையில் ஒரு காவிய மரபுக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இவ்விடத்தில் மகாவம்சம் முற்பட்ட நூல்களின் அமைப்பு முறையிலிருந்து பெருமளவிற்கு விலகிச் சென்றுள்ளமையை அவதானிக்க முடிகிறது. புராணங்களுடன் மகாவம்சத்தினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இன்னும் கூடியளவிற்கு ஒற்றுமைத் தன்மையைக் காணமுடிகிறது. காவியங்களைப் போல் அல்லாது

புராணங்களானவை கிட்டத்தட்ட வரலாறாகவே எழுதப்பட்டவையாகும். இவை ஓர் ஒழுங்குமுறையில் எழுதப்பட்டவையாக உள்ளன. அத்தகைய ஓர் ஒழுங்கு முறையை மகாவம்சத்திலும் காணமுடிவது குறிப்பிடத்தக்கது.

பொதுவாகப் **புராணங்கள** ஐந்து பெரும் பாகங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. **ஸர்க – உலகத்தோற்றம்**
2. **பிரதிஸர்க – உலக அழிவு – ஊழிக்காலம்**
3. **மனுவந்தர – யுகம் பற்றியது**
4. **வங்ஸ – ஆச்சாரியர் வரலாறு பற்றியது**
5. **வங்ஸ சரிதி – மன்னர் வரலாறு பற்றியது**

மகாவம்சத்தினை எடுத்துக்கொண்டால் **ஸர்க்க, பிரதிஸர்க** இவை இரண்டும் (உலகத் தோற்றம்,• உலக அழிவு பற்றியவை) அங்கு காணப்படவில்லை. இதற்கான காரணம் அடிப்படையில் மகாவம்சமானது ஒரு பௌத்த மரபிற்குரிய நூலாக விளங்குவதாகும். புராண மரபானது இந்துசமய நூல்களிலேயே இடம்பெறு வதனையும் காண்கின்றோம். அங்கு ஊழ், உலக அழிவு என்பன பிரதான கருப்பொருளாக அமைவதனைக் காணலாம். இதனால் ஸர்க்க பிரதிஸர்க ஆகிய இரு அம்சங்களும் புராண மரபுகளில் இடம்பெறுவது தவிர்க்க முடியாத தாகின்றது. பௌத்த மதத்தில் ஊழ், அழிவு இவை இரண்டும் அம்சங்களிலும் கோட்பாட்டு ரீதியான நம்பிக்கையின்மை காரணமாக யுக வரலாறுகளையும் அம்மதம் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. ஆனால் மகாவம்சத்தினைப் பொறுத்த வரையில் யுகவரலாறானது மாற்றுமுறையில் கணித்து இடம்பெறச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் வங்ஸ என்ற பகுதியில் ஆச்சாரியர் வரலாறும் வங்ஸ சரிதப் பகுதியில் பௌத்தமதத்தோடு இணைந்த மன்னர் பற்றிய வரலாறும் மகாவம்சத்தில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. எவ்வாறு இந்துமரபில் ஒவ்வொரு புராணமும் இந்துத் தலமொன்றினை மையமாகக் கொண்டு எழுதப்பட்டனவோ அதேபோன்று மகாவம்சமும் பௌத்த தலமான மகாவிகாரையை மையமாகக்கொண்டு எழுதப்பட்டது. அவ்வடிப்படையில் மகாவம்சத்தினை மகாவிகாரையின் புராணம் என்று குறிப்பிடுவதனையும் காணலாம். மகாவிகாரையை மையப்படுத்தி மகாவம்சம் எழுதப்பட்டிருப்பினும், அங்கு பெரும்பாலும் ஈழத்தின் பௌத்த சங்க வரலாறும், அச்சங்கத்தோடு தொடர்புடைய பிற பௌத்தம் சாரா மரபுகளின் வரலாறும் கூறப்பட்டுள்ளன.

முன்பு குறிப்பிடப்பட்டதைப் போன்று மகாவம்சத்தை பின்வருமாறு வகுத்து ஆராயமுடியும். அவையாவன :

அ) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைய வரலாற்றைக் கூறும் பகுதி

ஆ) வரலாற்று ஆரம்பகாலம் முதல் பௌத்த மதம் இலங்கையில் பரப்பப்பட்ட காலம் வரையுள்ள வரலாற்றுப் பகுதி.

இ) வம்ச வரலாற்றுக் காலப் பகுதி

ஈ) துட்டகாமணி காவியப் பகுதி

என்பனவே அவையாகும்.

முதலாம் அத்தியாயமும் ஆறாம் அத்தியாயம் தொடங்கி, பத்தாம் அத்தியாயம் ஈறாக உள்ள பகுதிகள் தேவநம்பியதீசன் காலத்திற்கு முற்பட்ட இலங்கை வரலாற்றைக்கூறும் பாகமாகக் காணப்படுகின்றன. இரண்டாம் அத்தியாயம் தொடங்கி ஐந்தாம் அத்தியாயம் வரையுள்ள பாகங்கள் இந்தியாவில் பௌத்தமதம் பெற்றிருந்த வரலாற்று வளர்ச்சியை எடுத்துக்கூறும் பகுதியாக உள்ளது. பதினோராம் அத்தியாயம் தொடங்கி இருபதாம் அத்தியாயம் வரையுள்ளவை தேவநம்பியதீசனது வரலாற்றையும், மகிந்ததேரரால் பௌத்த சங்கமொன்றை ஸ்தாபித்த வரலாற்றையும், எடுத்துக் கூறுவதாக உள்ளது. 21ஆம் அத்தியாயமும், 33 தொடக்கம் 37 ஆம் அத்தியாயங்கள் வரையுள்ள பாகங்கள் மன்னர்களுக்குரிய வம்ச வரலாற்றுப் பாகங்களாகும். 22ஆம் அத்தியாயம் தொடங்கி 32ஆம் அத்தியாயம் வரையுள்ள பாகம் துட்டகாமணியின் காவிய மரபுப் பரப்பாகக் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் பதினொரு அத்தியாயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மொத்தமாக மகாவம்சத்தில் 37 அத்தியாயங்கள், அவற்றில் துட்டகாமணியின் காவியப்பகுதி மட்டும் நூலின் 1/3 பங்காகக் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மகாவம்சத்தில் அதன் முதலாம் பிரிவினை எடுத்து நோக்கும்போது இங்கு இரு முக்கிய பாகங்கள் இடம்பெறுவதைக் காணலாம். இவ்விரண்டு பாகங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட வகையில் கொடுக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். அவையாவன:

1. **வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இங்கு வாழ்ந்த பழங்குடிகள் பற்றிய செய்திகள்.**
2. **இலங்கையில் ஏற்பட்ட ஆரியர் குடியேற்றம் பற்றிய கதைகள் ஆகியனவாகும்.**

மகாவம்சத்தின் முதலாம் அத்தியாயத்தில் ததாகர் (புத்தர்) இலங்கைக்கு மூன்று முறை வருகை தந்திருந்தார் எனக் கூறப்பட்டுள்ளது. முதலாம் வருகை மகியங்கணைக்கும் இரண்டாம் வருகை நாகதீபத்திற்கும், மூன்றாம் வருகை கல்யாணிக்கும் என புத்தரின் வருகை நிகழ்ந்தமையை மகாவம்சம் குறித்து உள்ளது. ஆறாம் அத்தியாயம் தொடங்கி பத்தாம் அத்தியாயம் வரையுள்ள பாகத்தில் விஜயன் வருகை, அவனது பட்டாபிஷேகம், பந்துவாச மன்னனுடைய பட்டாபிஷேகம், அபய மன்னனுடைய பட்டாபிஷேகம் இறுதியாக பந்துகாபய மன்னனுடைய பட்டாபிஷேகம் ஆகியன கூறப்பட்டுள்ளன. இப்பகுதியில் இலங்கை பற்றிய பொது விடயங்களே அதிகளவில் இடம்பெற்றுள்ளன. ஆனால் வரலாற்று விடயங்கள் அதிகளவில் இடம்பெறவில்லை.

மகாவம்சத்தில் அதன் முதலாம் பாகத்தில் இடம்பெற்றுள்ள ஆரியக குடியேற்றம் பற்றிய கதைகள் ஆய்விற்குரிய மிக முக்கியமான பகுதிகளாக

உள்ளன. ஆரியர் குடியேற்றம் பற்றிய கதைகள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப் பரப்பிலிருந்து இந்திய ஜாதக்க கதை மரபுகளிலம், சில இலக்கிய நூல்களிலும் குறிப்பிடப்பட்டு வந்துள்ளன. இலங்கையில் ஏற்பட்ட ஆரியக் குடியேற்றம் பற்றிய கதைகள் பல வகைப்பட்டனவாக உள்ளன. அவற்றுள் இரு முக்கியமான கதைத் தொகுப்புக்களாகக் காணப்பட்டவை இலங்கையின் இலக்கிய வரலாற்று மூலாதாரங்களிலும் சேர்க்கப்பட்டன. அக்கதைத் தொகுப்புக்களாவன:

1. **விஜயமன்னன் கதைத் தொகுப்பு**
2. **பந்துகாபய மன்னன் கதைத் தொகுப்பு**

இந்த இரண்டு கதைத்தொகுப்புக்களிலும் இலங்கையை எக்காலத்தில், எத்தகைய சூழ்நிலையில் எந்த வடஇந்திய ஆரிய இனங்களினால் குடியேற்ற நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டன என்ற செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இலங்கையில் ஏற்பட்ட ஆரியப்பண்பாடு முதலில் வடகிழக்கிந்திய குடியேற்ற அலையினாலும், இரண்டாம் முறை ஏற்பட்ட ஆரியப் பண்பாடு வடமேற்கிந்திய குடியேற்ற அலையினாலும் பாதிக்கப்பட்ட தன்மையை மேலே குறிக்கப்பட்ட இரு கதைகள் வாயிலாக மகாவம்சம் எடுத்துக் காட்டுகின்றது. இருப்பினும் இந்த வரலாற்றை ஆராய்ந்த கொள்வதற்கு பெருமளவிற்குச் சமகாலத்து நம்பகமான சில சாசன ஆதாரங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. இதேநேரத்தில் இலங்கையில் பேசப்படும் ஆரியமொழியின் அடிப்படையிலும் மொழியியலாளர் ஆராய்ந்து ஆரியப் பண்பாட்டுப் பரவல் பற்றிய தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். ஓரளவிற்குப் பிற்பட்ட கால இலங்கை மக்களுடைய உடற்தோற்ற இயல்புகளின் அடிப்படையிலும் இலங்கையில் ஆரியர் குடியேற்றம் பற்றிய கதைகளின் உண்மைத் தன்மையை மானிடவியல் அடிப்படையில் ஆராய்ந்துள்ளனர். அதேவேளையில், இங்கு ஆரியக் குடியேற்றங்கள் நிகழ்ந்ததாகக் கூறப்படும் காலப்பகுதியில் வாழ்ந்த அநாகரிகமக்கள் எனக் குறிப்பிடப்படும் மக்கள் பற்றிய தொல்பொருட் சான்றுகள் ஓரளவிற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனை விட இந்தியாவிலும், இந்தியாவிற்கு வெளியேயும் இங்கு ஏற்பட்ட ஆரியக் குடியேற்றங்கள் பற்றிய பல கதை மரபுகள் கிடைத்துள்ளன. இவற்றையும் மகாவம்சத்துடன் ஒப்பிட்டு அக்கதைகளின் - ஐதீகங்களின் வரலாற்றுத் தன்மையை அறிந்துகொள்ள முடியும்.

வடஇந்தியாவில் ஆரியப் பண்பாடும் குடியேற்றமும் முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட காலப்பகுதியாக கி.மு. 2ஆவது ஆயிரமாண்டின் நடுப்பகுதி எனப் பொதுவாக எற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. **(கி.மு. 1500) பௌத்த சமயத்தின் தோற்றத்திற்கு முன் அதாவது கி.மு. 1000ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கு முன்னர், வடஇந்தியாவில் ஆரிய மக்கள் (இந்தோ – ஆரிய) பரவிக் குடியேறி, வட இந்தியப் பிரதேசத்திற்கு அப்பாலும் தங்கள் பண்பாட்டைப் பரப்ப ஆரம்பித்தனா.** திட்டவட்டமாக கி.மு. 1000ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆரியப்பண்பாடானது இந்திய மலைத் தொடர்களையும்

தாண்டி, எல்லை கடந்து, தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் பரவத் தொடங்கி யிருந்தது. அதேநேரத்தில் கடல் வழியாகவும் இந்தியாவிற்கு அப்பாற் சில இடங்களிலும் வர்த்தகத் தொடர்பு மூலமாகவும் இந்தோ – ஆரியருடைய பண்பாடு பரவத் தொடங்கியிருந்தது.

இந்தோ-ஆரியப் பண்பாட்டின் நான்கு முக்கிய அம்சங்களாவன:

1. மொழி அம்சம்: அதாவது சமஸ்கிருத மொழி அல்லது பிராகிருத மொழி அல்லது இவை இரண்டிலுமிருந்து தோன்றிய வேறு-இந்தோ-ஆரிய மொழிகள் தத்தமது செல்வாக்கினை வடஇந்தியாவிற்கு அப்பால் பரப்பிக்கொள்ளல்.
2. சமய அம்சம்: அதாவது இந்தோ-ஆரியரால் வடஇந்தியப் பிரதேசத்தில் பேணப்பட்டு வளர்க்கப்பட்ட பிராமணிய மதத்தின் செல்வாக்கினை நிறுவன ரீதியாகப் பரப்பிக்கொள்ளல்.
3. இந்தோ ஆரிய மக்களால் வடஇந்தியாவில் உருவாக்கப்பட்ட சமுதாய அமைப்புமுறை அல்லது நான்கு வர்ணப் பண்பாட்டுச் செல்வாக்கு பரவிக்கொள்ளல்.
4. ஆரியர் இனக்கலப்பு ஏற்பட்டுக்கொள்ளல். இந்நான்கு அம்சங்களும் ஆரியப் பண்பாடு பரவிய எல்லா இடங்களிலும் ஒரே அளவில் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பதிலாக மொழியின் செல்வாக்கே கூடியளவிற்கு தாக்கத்தினை ஏற்பட்டிருந்தமையைக் காணலாம்.

இலங்கையில் ஏற்பட்ட ஆரியப் பண்பாடு தொடர்பாக வரலாற்று விடயங்கள் பலவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு பல ஆய்வாளர் பயன்படுத்தியிருந்த முக்கியமான ஒன்று மொழியியல் ஆதாரமாகும். அதாவது இங்கு பரப்பப்பட்ட ஆரியமொழியின் தன்மை, சிறப்பியல்புகள், இலக்கண அமைதி ஆகியவற்றை வடஇந்தியாவில் பேசப்படும் இந்தோ ஆரிய மொழிகளுடைய இலக்கண அமைதியுடன் ஒப்பிடுவதன் மூலம் இலங்கையில் ஏற்பட்டிருந்த ஆரியப்பண்பாடு பற்றி சில முடிபுகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுப்பட ஈழத்துச் சிங**களமொழிக்கும் வடஇந்திய ஆரியமொழிகளுக்கு** மிடையே இருக்கக்கூடிய தொடர்புகளை ஆராய்ந்த அறிஞர்கள் சில முக்கியமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். ஆனால் அவர்களுடைய கருத்துக் களிடையே பொதுமையான வேற்றுமை ஒன்றும் காணப்படுகின்றது. இவ்விரு பிராந்திய மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்த அறிஞர்களுள் ஒருவரான ஷா - ஹிதுல்லா, சித்தார்த்ததேரர் போன்றவர்கள் சிங்கள மொழிக்கும் இந்தியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் பேசப்படும் மொழிகளுக்குமிடையே மிக நெருங்கிய ஒற்றுமைகளை எடுத்துக்காட்டியுள்ளார்கள். அந்த ஒற்றுமையின் அடிப்படையில் இலங்கையில் குடியேறிய ஆரியர் அல்லது இலங்கையில் ஆரிய மொழியொன்றைப் பரப்பிய மக்கள் வடகிழக்கிந்தியப் பரப்பிலிருந்து வந்து இங்கு குடியேறியிருந்தனர்

எனக் குறிப்பிட்டுள்ளனர். அதேநேரத்தில் வில்ஹெலம் கைகர் போன்ற ஜேர்மனிய அறிஞர்கள் வடமேற்கிந்திய மொழி வழக்கிற்கும் சிங்கள மொழிகளுக்குமிடையே மிக நெருங்கிய தொடர்புகளைக் கண்டுள்ளனர். அவ்வடிப்படையில் இலங்கையில் முதலில் ஆரியமொழி ஒன்றைப் பரப்பிய மக்கள் மேங்கிந்தியாவிலிருந்தே முதலில் வந்து இங்கு குடியேறிக்கொண்டனர் என அவர்கள் தமது கருத்தினை முன்வைத்துள்ளனர். அதன் பின்னர் தான் வடக்கிந்தியாவிலிருந்து ஆரியக் குடியேற்றங்கள் இலங்கையில் ஏற்பட்டன என மேலும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் **மொழியியல் அடிப்படையில்** இலங்கையில் ஏற்பட்டிருந்த ஆரியப் பண்பாட்டுக் குடியேற்ற முறைமை தொடர்பாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாதுள்ளது. யதார்த்தத்தில் நிகழ்ந்தது என்னவென்றால் இந்தியாவின் இரு பக்கங்களிலிருந்து தான் ஆரியர் குடியேற்றம் இலங்கையில் ஏற்பட்டது என்பது வில்ஹெலம் கைகர் குறிப்பிட்டுக் கூறிய சான்றுக்கு அடிப்படையில் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சிங்களமொழிச் சொற்களஞ்சியத்தைப் பொறுத்தவரையில் வடகிழக்கிந்தியத் தொடர்புகளையும் மேற்கிந்தியத் தொடர்புகளையும் காணமுடிவது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாக **மானிடவியல** அடிப்படையிலான ஆய்வினை எடுத்துக் கொண்டால்கூட மேலே கூறப்பட்டனவற்றிற்கும் மேலாக பல பிரச்சினைகள் எழுவதனைக் காணலாம். சிங்கள மக்களின் உடற்தோற்ற இயல்புகளை ஓரளவிற்கு ஆராய்ந்து அதேபோன்ற இயல்புகளை கிழக்கிந்திய மக்களிடையேயும் மேற்கிந்திய மக்களிடையேயும் விகிதாசாரத்தின் அடிப்படையில் காண்பதற்கு முயன்றனர். இவ்வாறான ஆய்வு முடிபுகள் திட்டவட்டமான முடிபுகளைத் தரவேண்டுமானால் இலங்கையில் மட்டுமல்ல கிழக்கிந்தியாவிலும், மேற்கிந்தியாவிலும் வேறு இனங்களினுடைய கலப்பு எதுவும் ஏற்படாது இருந்திருக்கவேண்டும். ஆனால் யதார்த்தத்தில் அவ்வாறான ஒருநிலை என்றுமே இருக்கமுடியாது என்பது வெளிப்படையாகின்றது. ஆதலால் இம்மானிடவியல் ஆராய்ச்சி மூலம் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு ஒரு திட்டவட்டமான சான்றினையும் தரவில்லை. பொதுப்பட இங்கு வாழ்ந்த மக்கள் ஓரளவிற்கு ஆரியமக்களின் உடற்தோற்ற இயல்புகளையும், பெருமளவிற்குப் பிற இனங்களான ஆதி – ஆஸ்திரேலிய மத்தியதரைக் கடற் பிராந்தியத்தின் இனங்களின் உடற்தோற்ற இயல்புகளை அம்மக்கள் கொண்டிருப்பதனைக் காணமுடிகிறது. எனவே இத்தகைய சான்றுகள் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அடிப்படையான உறுதிப்பாட்டைத் தரமுடியவில்லை.

இந்நிலையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வுச் சான்றுகள் எத்தகைய முடிவுகளைத் தந்துள்ளன என நோக்குவது பொருத்தமாகின்றது. **கி.மு. 2000 ஆண்டுகட்கு முன் இங்கு வாழ்ந்த மக்களுடைய எழும்புக்கூடுகள், மண்டையோடுகள் ஆகியவை எத்தகைய சான்றுகளைத் தருகின்றன என்று பார்க்கும்போது அங்கும் தற்போதைய நிலையில் எமக்குக் கிடைத்த சான்றுகள் ஆரிய மக்களுக்கு உரியனவாக அல்லாது**

அவர்களின் வருகைக்கு முன்னர் வாழ்ந்திருந்த பூர்வீக மக்களின் சான்றுகளாகவே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இதனால் அவற்றை இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பண்பாடு பற்றி ஆராய்வதற்கு மட்டுமே பயன்படுத்தமுடியும் என்பது தெளிவாகின்றது.

மகாவம்சம் காட்டும் ஆரியர் வருகைக்கு முற்பட்டகால இலங்கைப் பழங்குடிகள் வரலாறு:

மகாவம்சத்திலே புத்தருடைய இலங்கைக்கான மும்முறை வருகை பற்றிக் கூறுகின்ற அத்தியாயம், அதற்குப் பின்னர் விஜய மன்னன் பற்றிக் கூறுகின்ற அத்தியாயங்களிலும் இலங்கைக்கு ஆரியர் வருகைக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்கள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இதேபோன்ற குறிப்புக்கள் தீபவங்ஸத்திலேயும் குறைந்தளவில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இக்குறிப்புக்களின்படி இலங்கையில் ஆதியிலிருந்து இயக்கர், நாகர், ராட்சதர் எனப்பட்ட அநாகரிக மக்கள் கூட்டங்கூட்டமாக வாழ்ந்திருந்தனர் என்பதாகும். இந்த மக்கட் கூட்டங்கள் நாகரிக முன்னேற்றமற்ற நிலையில், விசித்திரமானதும் கொடூரச் செயல்களிலும் ஈடுபட்டு வந்தனர் எனவும், இதே மக்களைத்தான் முதலில் கௌதம புத்தரும், பின்னர் விஜயனும் சந்திக்க நேர்ந்தது எனவும் கொடுக்கப்பட்டுள்ளது.

மகாவம்சத்தில் ஆரியர் வருகைக்கு முற்பட்ட காலங்களில் இலங்கையில் வாழ்ந்த அநாகரிக மக்கள் பற்றிச் சொல்லப்பட்ட செய்திகள் எந்தளவிற்குத் தொல்லியல் அகழ்வாதாரங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்பதை ஆராய வேண்டும். அவ்வாறு நோக்குகையில் குறிப்பிடத்தக்களவில் நம்பகரமான சில தகவல்கள் தொல்லியல் அகழ்வாய்வின் மூலம் கிடைக்கப்பெறுவதனைக் காணலாம். திட்டமிட்ட முறையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால தொல்லியல் அகழ்வாய்வுகள் விசாலமான வகையில் நடைபெறாவிட்டாலும், இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிபுகள் பிரத்தியேகமான பல செய்திகளை அம்மக்கள் தொடர்பாகத் தந்துள்ளமையைக் காணலாம். சிறப்பாக சிரான்தெரணியாகல என்பவரின் ஆய்வு முடிபுகள் இத்துறை ஆய்வில் குறிப்பிடக்கூடியளவிற்கு திருப்திகரமான சான்றுகளைத் தந்துள்ளன எனலாம்.

இலங்கையின் மத்திய பாகத்தில் வரலாற்றிற்கு முற்பட்டகால கற்கருவிகளும், மனித எலும்புக்கூடுகளும், மனித மண்டையோடுகளும் ஒரு குறிப்பிட்டளவிற்குக் கிடைத்துள்ளன. அவற்றுள்ளே சில பழைய கற்காலத்தைச் (Palaeolithic Culture) சேர்ந்த இனக்குழுமங்கள் பயன்படுத்தியிருந்ததாக குறிப்பிடப்படும் கற்கருவிகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் மேலும் சில கற்கருவிகள் புதிய கற்காலத்தினைச் (Neolithic Culture) சேர்ந்தனவாகவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இருப்பினும் இரத்தினபுரியிலும், பலாங்கொடையிலும் அகழ்ந்து வெளிப்படுத்திய மனித எலும்புக் கூடுகளும் மனித செய்பொருட்களும் (Artifacts) அப்பண்பாட்டுக்குரிய மக்களை இடைக்கற்காலப் (Microlithic Culture) பண்பாட்டுக்குரியதாக (குறுணிக்கற்காலத்திற்குரியதாக) அடையாளம்காண

வைத்துள்ளன. சிரான் தெரணியகலவின் விரிவான **வரலாற்றுக்கு முற்பட்டகால இலங்கை பாகம் 1, பாகம் 2** என வகுக்கப்பட்ட நூல்கள் இத்தன்மையை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. இரத்தினபுரிப் பண்பாடு, பலாங்கொடைப் பண்பாட்டிலும் பார்க்க காலத்தால் முற்பட்டிருந்தாலும் இவற்றின் கால வரையறையை **கி.மு. 29000 ஆண்டுகள** என நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது இலங்கையின் கற்காலப் பண்பாடு குறுணிக்கற்காலத்துடன் ஆரம்பிக்கின்றது என்பதனைக் கோடிட்டுக் காட்டுகின்றது. **இக்குறுணிக்கற்காலப் பண்பாட்டினை முடித்து வைத்து இரும்புக்கால யுகத்தினை இலங்கையில் ஆரம்பித்து வைத்தவர்களாக நாகர்களைக் கொள்கின்ற போக்கு சிரான் தெரணியகலவின் ஆய்வின்மூலம் இன்று உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.**

பண்டாரவளை, பலாங்கொடை, இரத்தினபுரி ஆகிய மையங்களில் கிடைத்த தொல்லியல் எச்சங்களிடையே காணப்பட்ட மண்டையோடுகள், எலும்புக்கூடுகள் ஆகியனவற்றை ஆராய்ந்தபோது அவற்றின் தோற்ற இயல்புகள் இரண்டு பிரதான மனித இனங்களை அல்லது வர்க்கங்களைச் சேர்ந்ததாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

அவையாவன: 1. **நீக்ரோ இனவியல்பு**

2. **ஆதி ஆஸ்திரேலிய இனவியல்பு**

என்பனவாகும்.

இந்த இரு வர்க்கங்களைச் சேர்ந்த மக்கள், திராவிட, ஆரிய இன மக்கள் இலங்கைக்கு வருகை தரமுன்னர் இத்தீவில் வாழ்ந்தவராவர். ஆகையினால் இந்த மானிடவியல் கூறுகளை உள்ளடக்கிய சான்றுகளையும் அவற்றோடு இணைந்து காணப்பட்டிருக்கக்கூடிய பிறதொல்லியல் ஆதாரங்களையும் வைத்துக்கொண்டு நோக்கும்பொழுது ஆரம்ப காலத்திலிருந்து இலங்கைக்கும் இந்தியத் துணைக் கண்டத்திற்குமிடையே மிக நெருங்கிய மக்களியற் தொடர்புகள் இருந்து வந்துள்ளன என்பது தெளிவாகின்றது. கி.மு.3000க்கும் முன்னதாக நீக்ரோ, ஆதி-ஆஸ்திரேலிய வர்க்கத்தினர் இலங்கையில் வந்து குடியேறினர் எனக் கொள்ளமுடிகின்றது. புதிய கற்காலத்திற்குப் பின்னர் இந்தியத் துணைக்கண்டத்தில் சிறப்பாகத் தீபகற்ப இந்தியப் பரப்பில் ஏற்பட்ட அபிவிருத்திகள் பக்கம் பக்கமாக இலங்கைத் தீவிலும் ஏற்பட்டதன் காரணமாக குறுணிக்கற்காலப் பண்பாடு, செம்புக்காலப் பண்பாடு, வரலாற்றுக்காலம் எனத் தொடர்ச்சியான வகையில் பண்பாட்டு வரலாறு இவ்விரு பிராந்தியங்களையும் இணைத்துச் செல்வதனைக் காணலாம். குறுணிக்கற்காலத்தின் பின் இலங்கையில் இரும்பின் உபயோகத்தினை அறிமுகப்படுத்திய பெருமை பெருங்கற்கால மக்களையே சாரும். இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதியில் குறுணிக்கற் காலப் பண்பாட்டினை முடித்து வைத்து, செம்புக் காலத்தினைத் தொடக்கி வைத்தவர்கள் நாகர் இனமக்களே என்றால் அது மிகையாகாது. பெருங்கற்கால மக்களான நாகர்கள் ஈழத்து வரலாற்று வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டிருந்த வர்கள் என்பது தற்போது வரலாற்று வெளிச்சத்திற்குக் கிடைத்துள்ளது.

கி.மு. 1000ஆம் ஆண்டில் பெருங்கற்காலப் பண்பாட்டு வளர்ச்சி தீபகற்ப இந்தியாவில் ஆரம்பித்திருந்தது. ஆனால் இலங்கையைப்

பொறுத்தமட்டில் கி.மு. **800ஆம்** ஆண்டில் அப்பண்பாடு தோற்றம் பெற்றுவிட்டது. **கி.மு. 500ஆம** ஆண்டிலிருந்து பிராமி வரிவடிவம் பொறிக்கப்பட்ட நிலையில் எழுத்தாதாரம் இங்கு தோற்றம் பெற்றுவிட்ட தன்மையைக் காண்கின்றோம். இவ்வரலாற்றாரம்பகால முன்னேற்றங்கள் இலங்கையில் நிகழ்ந்து கொண்டிருந்த சமயமே விஜயன் வருகை எனக் குறிக்கப்படும் ஆரியர் வருகை நிகழ்ந்ததாக மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் ஆரியப் பண்பாட்டுப் பரவல் பற்றியும் இங்கு வாழ்ந்திருக்கக் கூடிய சுதேச மக்கள் பற்றியும் தகவல்களைத் தருகின்ற பல கதை வடிவங்களின் தொகுப்புக்கள் இலங்கையிலும், இந்தியாவிலும் பல நூற்றாண்டுகளாக வழக்கிலிருந்து வந்துள்ளன. அவ்வாறான ஐதீகங்கள், மரபுகள் என்பன இலங்கையில் முறையான ஒரு வரலாற்றுக்காலம் ஆரம்பிக்க முன்னர் மக்கள் மத்தியில் செவிவழி மரபாகப் பேணப்பட்டிருந்தனவாகும். அத்தகைய கதைத் தொகுப்புக்களில் மூன்றினை மகாவம்சம் தன்னுள்ளும் பதிவுசெய்து கொண்டது.

அத்தகைய தொகுப்புக்களாவன :

1. **இராமன் பற்றிய கதைத்தொகுப்புகள்**
2. **விஜயன் பற்றிய கதைத்தொகுப்புகள்**
3. **பௌத்தம் பற்றிய கதைத்தொகுப்புகள்** என்பனவாகும்.

முதலாவது கதைத்தொகுப்பானது பெருமளவிற்கு இராமாயண நூலிலேயே காணப்படுகின்றது. அதில் கி.மு. 6ஆம், 5ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ஆம், 3ஆம் நூற்றாண்டுகள் வரைக்கும் வழக்கிலிருந்து வந்த கதை மரபுகள் இதிகாச வடிவத்தில் கூறப்பட்டுள்ளது. இராமாயணத்தை இயற்றிய வால்மீகி நிச்சயமாகத் தனக்கு முற்பட்ட காலத்து வரலாற்று மரபுகளையும் நாடோடிக் கதைகளையும் பயன்படுத்தியுள்ளார் என்பது நன்கு தெளிவாகின்றது. வால்மீகியின் காலத்திற்கு முன்னர் இராமர் பற்றிய கதை ஒன்று தஜரதஜாதக கதையில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு கொடுக்கப்பட்ட இராமர் கதையில் அவர் தென்னிந்தியா சென்றதாகவோ, இலங்கைக்குச் சென்றதாகவோ அல்லது இராவணனைச் சந்தித்ததாகவோ கூறப்பட்டிருக்கவில்லை. இச்சம்பவங்கள் பற்றிய கதை மரபுகள் காலத்துக்குக் காலம் வளர்ச்சிபெற்றுச் சென்ற ஐதீகங்கள், மரபுகளினால் செல்வாக்குப் பெற்று அம்மரபினூடாக இராமாயணத்தில் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையாகவே காணப்படுகின்றன. **H.D. சங்காலியா** என்ற தொல்லியளாளர் குறிப்பிடுவதன் பிரகாரம் கிருஷ்ணா நதிக்குக் கீழ்ப்புற மாகவும் கோதாவரி நதிக்கு மேற்புறமாகவும் உள்ள கிழக்கு இந்தியத் தீபகற்பத்தில் **(தற்கால ஒரிசா மாநிலம்) இராமர், இராமணன், லங்கா பற்றிய ஐதீகமொன்று** நெடுநாட்களாக நிலவி வந்திருந்த தன்மையைக் காணமுடிகிறது. இராமாயணத்தில் குறிப்பிடப்படுகின்ற **லங்காதீப** என்பது தற்போதைய லங்காதீபவைக் குறிக்காது **ஒரிசா மாநிலத்திலுள்ள லங்காவையே** குறிப்பிடுகிறது என சங்காலியா தொல்லியல் அகழ்வாய்வின் அடிப்படையில் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இராமாயணத்தில்

கூறப்பட்டுள்ள பல விடயங்கள், இலங்கையுடன் தொடர்புபடுத்திக் காட்டப்பட்ட கதைகள் முதலியன நிச்சயமாக இலங்கையுடன் சம்பந்தப்பட்டவை என்று ஏற்றுக்கொள்வதற்கு இன்று பலர் மறுக்கின்றனர். இக்கதையானது ஈழ வரலாற்றின் மரபில் தொடக்கத்தில் இடம்பெற்றிருக்காத தன்மையை நோக்கும்போது **இலங்கை வரலாற்றிற்கும் இராமர் கதை மரபுகளுக்கும் எவ்விதத் தொடர்புகளும் இருந்திருக்கவில்லை** என்பது புலனாகின்றது. தென்கிழக்காசிய நாடுகளில் இராமாயணம் என்ற ஐதீகம் ஏற்படுத்தியிருந்த தாக்கத்தினை ஒத்த வகையில் இலங்கையில் அது பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கவில்லை என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் எழுதப்பட்ட **இராஜாவலீ** போன்ற நூல்களிலே இராமர் பற்றிய குறிப்புக்கள் காணப்பட்டாலும் இதற்கு முற்பட்ட காலத்தில் உருவான இலக்கியங்களில் இராமர் போன்ற ஐதீகவுருக்களின் கதைகள் எவையும் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறான கதையுருக்கள் வடஇந்தியாவிலேதான் அதிகளவு பிரசித்தி பெற்றவையாக இருந்தும், ஈழத்து வரலாற்று நூல்களில் அவை இடம்பெறாமல் இருந்தமைக்கு ஒரு காரணத்தைக் குறிப்பிடமுடியும். இராமருடைய வரலாறு புத்தருடைய வரலாற்றிற்கு முற்பட்டதாகையாலும் ஈழத்தின் வரலாறு புத்தரின் வருகையோடு ஆரம்பிக்கப் பட்டமையாலும், பௌத்தமதத்திற்கும் ஈழத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புகள் இருந்தன என்பதை நிரூபிக்க முயன்றமையாலுமே இராமர் கதை தொகுப்பு மகாவம்சத்தில் இடம்பெறாமல் போனமைக்குரிய காரணங்கள் எனலாம்.

விஜயன் பற்றிய கதைத்தொகுப்பானது மகாவம்சத்தில் மட்டுமன்றி இலங்கையின் எல்லா முக்கிய வரலாற்று நூல்களிலும், இலங்கைக்கு வெளியே எழுதப்பட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம். மிகவும் முற்பட்ட காலத்தில் இக்கதையைப் பதிவுசெய்த நூல்களை வடஇந்தியாவிலும் காண முடிகிறது. தீபவங்ஸத்திலும், மகாவம்சத்திலும் காணப்படுகின்ற விஜயன் பற்றிய கதை மரபினைத் தழுவிய பல கதைகள் 'வலாஹஸ்ஸ ஜாதக' என்ற கதையிலும், 'திவ்வியாவதான' என்ற நூலிலும் காணப்படுகின்றன. இக்கதைகள் இலங்கைத் தீவின் வரலாற்று ஆரம்பம் பற்றிக் கூறப்படுகின்ற கதைகளாகும். ஹீவான்-ஸ்வாங் என்ற சீன யாத்திரிகன்கூட தனது பிரயாணக் குறிப்புக்களில் விஜயன் கதையைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கிடைத்த விஜய மன்னன் பற்றிய கதை வடிவங்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் காலத்தால் பிற்பட்ட – முற்பட்ட பகுதிகளை இலகுவாக பகுத்தறிந்து கொள்ளமுடியும். அத்துடன் மகாவம்சத்திலே காணப்படுகின்ற விஜயன் கதைதான் அதிகாரபூர்வமான கதைதானா என்பதனையோ அல்லது அவற்றில் தவறானது, பிழையானது எது என்பதனையோ நன்கு உறுதிப்படுத்திக்கொள்ளமுடியும். இந்தக் கதைகள் இலங்கையிலே ஆரியர் குடியேற்றம் ஏற்பட்டு, சில காலத்தின் பின்னர் இலங்கை வரலாற்றின் ஆரம்பத்தினை விளக்கிக்காட்டுவதற்காக கூறப்பட்ட கதைகளாகும். இலங்கையில் சிங்கள இனத்தின் தோற்றம் மறக்கப்பட்ட ஒரு காலத்தில் அத்தோற்றம் பற்றி விளக்குவதற்காக இக்கதைகள் குறிக்கப்பட்டன என்றே கொள்ளவேண்டும்.

விஜய மன்னன் கதையில் அடிப்படையில் காணப்படும் விடயமானது வடமேற்கு இந்தியாவிலிருந்து இந்தோ – ஆரிய இனக்கூட்டத்தினர் இலங்கைக்கு வந்து குடியேறிய சம்பவமாகும். இவ்வாறான குடியேற்றத்திற்குப் பொறுப்பாகவிருந்த ஆரியக் கூட்டத்தினரின் தலைவனுக்குக் கொடுக்கப்பட்ட பல பெயர்களில் விஜயன் என்ற பெயரும் ஒன்றாகும். விஜயன் என்றால் வெற்றிவாகை சூடுபவன் என்பது பொருளாகும். ஸிங்கள என்றவோர் பெயரும் அத்தலைவனுக்கு வழங்கப் பட்டிருக்கக்கூடும். தீபவங்ஸத்திலும், மகாவம்சத்திலும் இந்த இரண்டு நாமங்களும் எடுத்துக்கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. விஜயன் என்ற தலைவன் ஒரு சிங்க மிருகத்தின் வழித்தோன்றல் எனப் பொதுவாக அக்கதைகளில் சூட்டப் பட்டுள்ளமையைக் காணலாம். இக்கதைகள் பலவற்றில் அத்தலைவன் வாழ்ந்த நகரம் வடஇந்தியாவிலுள்ள சிம்மபுரம் எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சிம்மபுரம் வடமேற்குப் பாகத்திலேயே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆதலால் இலங்கையின் முதற்றொடர்பு வடமேற்கிந்தியா விலிருந்தே ஏற்பட்டிருக்கவேண்டும் என்பது சாத்தியமாகின்றது. அத்துடன் தீபவங்ஸத்திலும், மகாவம்சத்திலும் இக்கதை சம்பந்தமாகக் காணப்படும் இடப்பெயர்கள் மேற்கிந்திய இடப்பெயர்களாகவே காணப்படுகின்றன. விஜயனும் அவனது சகாக்களும் இலங்கைக்கு கடல் வழியாக வரும்போது இரு முக்கிய துறைமுகங்களில் தரித்து நின்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள் முதலாவது 'சுபராக', மற்றையது 'பாருகச்ச' என்பவையாகும். அத்துடன் இலங்கையில் ஆரியர் வருகைக்கு முற்பட்ட காலகட்டங்களில் இங்கு ஆட்சிபுரிந்த மன்னர்கள் கொண்டிருந்த விருதுப் பெயர்களாகிய 'மகணி', 'மஹரிஜ' என்பன வடமேற்கு இந்தியாவில் ஆட்சிசெய்த மன்னர்களால் சூடிக்கொண்டிருந்த விருதுப் பெயர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய காரணங்களினால் விஜயமன்னன் கதையிலே அடிப்படை அம்சமாகக் காணப்படும் ஆரியக் கூட்டம் ஒன்றின் இடப்பெயர்ச்சி வடமேற்கு இந்தியாவினின்றும் இலங்கை நோக்கிய இடப்பெயர்ச்சி என்று கருதப்படுகிறது.

இதே கதையில் மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படைக் கருத்திற்கு முரணான வகையில் சில சம்பவங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மகாவம்சத்தில் விஜயன் கதையில் இடம்பெறும் வேறுசில இடப்பெயர்களாக மகத(ம்), வங்க(ம்), லாள-லாட(ம்), கலிங்க(ம்) ஆகியன இடம்பெற்றிருப்பது நோக்கத்தக்கது. இவ்விடப் பெயர்களுள் மகத, வங்க, கலிங்க ஆகியன கிழக்கிந்தியாவிலும், லாள - லாட என்பது வடமேற்கிந்தியாவிலும் காணப்பட்ட மையங்களாகும். கிழக்கிந்தியாவில் லாடம் (உத்தரலாடம்) - சோழர் மெய்க்கீர்த்தி களில் உள்ளது) என்ற மையம் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மகாவம்சத்தில் மேற்கிந்திய - கிழக்கிந்திய இடப்பெயர்கள் கலந்த நிலையில் கொடுக்கப் பட்டுள்ளமையைக் காண்கின்றோம். இவ்வாறான கலப்புநிலை பிற்பட்ட காலங்களிலேயே ஏற்பட்டிருக்கவேண்டும்.

மகாவம்சத்தில் இடம்பெறும் விஜயன் பற்றிய கதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள விரிவான பகுதிகளை ஆராய்ந்து சென்றால் சில பகுதிகளை

அப்படியே ஆதாரபூர்வமற்றவை என இலகுவாக ஒதுக்கிவிடலாம். வேறு சில பகுதிகள் ஓரளவிற்கு வரலாற்றுத்தன்மை வாய்ந்தவை என இனங்கண்டுகொள்ள முடியும். முதலாவதாக இக்கதையில் ஆரியக் கூட்டத்தின் தலைவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர் பெரிதும் கருத்து வேறுபாடுகளுக்குட்பட்டுள்ளமையைக் காணலாம். மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளமை போன்று உண்மையில் ஆரியத் தலைவன் ஒருவன் விஜயன் என்ற பெயரைத் தாங்கிக் கொண்டிருந்தார் என்பதனைப் பலராலும் ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது. விஜய என்றால் வெற்றி என்பது பொருள். இக்காரணத்தினால் வெற்றியுடன் இலங்கையில் குடியேறிய காரணத்தினால் ஆரியத் தலைவன் தனக்குப் பின்னால் உள்ளவனுக்கு இட்ட பெயராக விஜயன் என்பது அமைந்திருக்கவேண்டும்.

இரண்டாவதாக விஜயன் என்பவன் இளமை முதல் ஆரிய மன்னனாக ஆட்சி புரிந்தவனா என்பதும் அவனுக்குப் பின் ஆட்சிபுரிந்த ஆரிய மன்னர்களுக் கிடையில் மகாவம்சம் குறிப்பிடுவது போன்ற இனத்தொடர்புகள் யாதேனும் உண்டா என்பதும் ஆய்வுக்குரிய விடயங்களாகின்றன. மகாவம்சத்தில் வரும் விஜயன் வரலாற்றையும், அவனுக்குப் பின்னர் வரும் சிங்கள மன்னர் வரலாற்றையும் எடுத்து நோக்கினால் இவ்விரு பாகங்களும் எல்லாவிதமான தொடர்புகளும் இன்றி தொகுக்கப்பட்டு இருப்பதனைக் காணமுடிகிறது. விஜயனை இலங்கையில் முதலாவது ஆரிய மன்னனாக்கி, அங்கு அவனுக்குப் பின்னால் ஆட்சிபுரிந்த மன்னர்களுக்கும் அவனுக்கும் இடையே எந்தவிதத் தொடர்புகளையும் காட்டாமல் இலங்கை வரலாறு கூறிச் செல்லப்பட்டிருப்பதனைக் காண்கின்றோம். உண்மையிலே இவ்விரண்டு பகுதிகளுக்குமிடையே தொடர்புகள் இல்லை. மகாவம்சத்தில் இவ்விடத்தில் தொடர்புகள் அற்ற, முரணான பல விடயங்கள் விஜயனோடு இணைத்து, எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. (1) இங்கு குடியேறிய இனம் சிங்கமொன்றின் வழித்தோன்றல் என்பது (2) விஜயனுடைய தந்தையும் தாயும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த உடன் சகோதரர்கள் என்பது (3) துஷ்டனான விஜயன் அவனது கூட்டாளிகளுடன் நாடு கடத்தப்பட்டான் என்பது. இவ்வாறான அம்சங்கள் உண்மையான வரலாற்று முறையியலுக்கு முரணானவையாக இருப்பினும் அவை யாவும் இலங்கையின் வரலாற்று முகவுரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னணி யாது?

பொதுவாக உலகில் உள்ள மனித இனங்கள் தத்தம் இனத்தோற்றம், வம்சாவழி ஆகிய விடயங்கள் தொடர்பாக பல குறியீடுகளையும் சின்னங்களையும் கொண்டிருப்பதனைக் காணலாம். இச்சின்னங்களுள் பெரும்பாலானவை மிருகச் சின்னங்களாகவே காணப்படுகின்றன. இந்தியாவில் அரச வம்சங்கள் பல மிருகச் சின்னங்களையே தத்தமது அடையாளமாக வைத்திருந்தமையை சான்றுகள் வாயிலாகக் காணலாம். அவ்வகையில் ஆரியமொழிக் குடும்பங்கள் கொண்டிருக்கும் மிருகச் சின்னங்களில் சிங்கமும் ஒன்றாக அமைந்தது. இலங்கையில் சிங்கள இனம் சிங்கத்தையும், வட இந்தியாவில் மௌரிய குடும்பத்தினர் நான்கு சிங்கங்களையும் தமது இலச்சினையாகக் கொண்டிருந்தனர். இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தோ - ஆரியப் பிரிவாகிய சிங்களவர்

இனம் சிங்க மிருகத்தைத் தமது இலச்சினையாகக் கொண்டு, தமக்குச் சிங்களவர் என்ற பெயரையும் இட்டு, தாம் சிங்கத்தின் வழித்தோன்றல்கள் என்ற கருத்தினை யும் ஏற்றிருந்தனர். தாம் கலப்பற்ற தூய இனத்தவர் என்பதனைக் காட்டுவதற் காகவே தமது ஆண் - பெண் சந்ததியைக் காட்டாது, ஒரே தாய் வயிற்றில் பிறந்த சந்ததி என்பதனை அழுத்திக் காட்டியுள்ளனர் போலும்.

மகாவம்ச ஆசிரியர் தமது காலத்தில் கிடைக்கப்பெற்ற வேறு சில கதை மரபுகளையும் தமது நூலில் இணைத்துள்ளமையைக் காணலாம். இதுவரையில் வரலாற்றில் இடம்பெறாத அம்மரபுகள் புதிய பல சமுதாயச் செய்திகளைத் தருவதாக அமைந்துள்ளது. இக்கதைகளைக் குறிக்கும் சம்பவங்களைக் கொண்ட கதைக் கோவை பதபுஸலமானஸ ஜாதகக் கதையிலிருந்தும் வலாஹஸ்ஸ ஜாதகக் கதையிலிருந்தும் பெறப்பட்டவை ஆகும். மகாவம்சத்தில் சிங்கபாகு சுபாதேவி ஆகியவற்றைப் பற்றிய பாகங்கள் இந்த இரண்டு ஜாதகக் கதைகளிலிருந்தும் பெறப்பட்டிருக்கின்றன. குவேனி பற்றிய கதை தீபவம்சத்தில் காணப்படவில்லை. மகாவம்ச ஆசிரியர் அதனை தன்னுடைய நூலிலே சேர்க்கும் போது அதனை நாடோடி மரபிலிருந்து பெற்றிருக்க வேண்டும். இதேபோன்ற ஒரு கதை வலாஹஸ்ஸ ஜாதகக் கதை மரபிலும் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. வலாஹஸ்ஸ ஜாதகக் கதை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதிக்கு உரியதாகும். மகாவம்ச ஆசிரியர் இவ் ஜாதகக் கதையை தனது நூலை விரித்து எழுதுவதற்கு நன்கு பயன்படுத்தியிருந்தார். வடகிழக்கிந்தியாவிலிருந்து சில வர்த்தகர்கள், இலங்கைக்கு ஆரியர் வருகை தருவதற்கு முன்னரே வந்திருக்கவேண்டும். இப்படியான காலகட்டத்தில் இலங்கையில் வாழ்ந்த அநாகரிக மக்கள் இவ்வர்த்தகர்களைச் சந்தித்திருந்த சம்பவங்கள் தொடர்பாகவே வலாஹஸ்ஸ ஜாதகம் குறிப்பிடுவதனைக் காணலாம். பாகியானுடைய இலக்கியக் குறிப்பில் மட்டுமே இங்கு ஏற்பட்ட ஆரியக் குடியேற்றமானது வடஇந்தியரால் ஏற்படுத்தப்பட்ட வர்த்தகக் குடியேற்றம் என்று குறிப்பிடுகின்றது. இக்கூற்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

வடஇந்தியாவிலிருந்து வர்த்தகத்திற்கு வந்த ஆரியர் இலங்கையிலுள்ள வர்த்தகக் குடியிருப்புக்களைக் கண்டுகொண்டதன் அடிப்படையில் தம்வம்சத்தவரை மேலும் வடஇந்தியாவிலிருந்து வருவித்து குடியேற்றங்களைத் தாபித்துக் கொண்டனர் எனலாம். விஜயன் கதை மரபினை ஆராய்ந்து பார்க்குமிடத்து கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்து ஆரியக் குடியேற்றம் பற்றியும், அக்குடியேற்றங்கள் ஏற்பட்ட காலத்தில் இலங்கையில் வாழ்ந்துவந்த பூர்வீகக்குடிகள் பற்றியும் சில அடிப்படையான உண்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிகிறது.

அவையாவன:

1) **ஆரியர் வருகை தந்த காலத்தில் இலங்கையில் நாகரிக முன்னேற்றம் காணாத மக்களின் அநாதியான குடியிருப்புக்கள் காணப்பட்டமை.**
2) **அநாதியான குடியேற்ற வாசிகளுக்கும் வர்த்தகக் குடியேற்ற வாசிகளுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட முதற்தொடர்புகள்.**

3) **இத்தகைய வர்த்தகத் தொடர்புகள் அதிகரிக்க, அதிகரிக்க இலங்கையைப் பற்றி ஆரியர் கூடுதலான அறிவினைப் பெற்றமையும், படிப்படியாக வர்த்தகரல்லாத ஆரியர் இங்கு வந்து குடியேற்றங்களைத் தாபித்துக்கொள்ளலும், இதையே தீபகற்ப இந்தியாவிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் காண்கின்றோம்.**

இங்கு ஆரியக் குடியிருப்புக்கள் ஏற்பட்டபோது ஆரியருக்கும், ஆதிவாசிகளுக்கு மிடையே ஓரளவிற்கு இனக்கலப்பு ஏற்பட வாய்ப்பாயிற்று. ஆதிவாசிகளான வேடர் விந்தனை வாகரை மற்றும் மத்திய மலைநாட்டிலுள்ள அடர்ந்த காடுகளுக்குள் வாழ்ந்தனர். இயக்கர், நாகர் என்போர் இலங்கையின் கரையோர மாகாணங்களில் வாழ்ந்துவந்தனர். இலங்கைக்கு வந்த ஆரியர் முதலில் இயக்கரையும், பின்னர் நாகரையும் சந்திக்க வேண்டியதாயிற்று. விஜயன் - குவேனி சந்திப்பு, புத்தர் - நாகர்கள் சந்திப்பு என்பன இலங்கை வரலாற்று நிகழ்வில் முக்கியமான சம்பவங்களாகக் கருதப்பட வேண்டியவையாகும்.

இலங்கையில் ஆரியக் குடியேற்றங்கள் நிகழ்ந்த காலத்திலிருந்து சுதேச மக்களுக்கும் ஆரியருக்குமிடையே ஏற்பட்ட கலப்புக் காரணமாக ஒரு புதிய சமூக உருவாக்கம் ஏற்பட வாய்ப்பாயிற்று. குறிப்பிட்ட சில ஆதிவாசிக் குடும்பங்கள் கலப்புக்குள் ஈர்க்கப்படாது தள்ளி வைக்கப்பட்டனர் அல்லது இலங்கையின் வேறு பகுதிகளுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டனர். இறுதியாக இங்கு குடியேறிய ஆரிய குடியேற்றவாசிகள் வடமேற்கிலங்கையிலுள்ள மல்வத்து ஓயாப் பள்ளத்தாக்கு, அதன் வழியே அனுராதகாமம், வடகிழக்கிலங்கையில் கோக்கண்ணவின் மேற்பகுதி ஆகிய இடங்களில் உள்ள விவசாயக் குடியிருப்புக் களோடு தம்மையும் இணைத்துக்கொண்டனர். பெருங்கற்கால பண்பாட்டு மக்களுடன் ஆரியர் கலந்து கொண்டதன் விளைவாக தனித்துவமான பண்பாட்டுக் குழுமங்கள் உருவாகின. சிவகண அல்லது ஸ்ரீகள அல்லது ஸீஹள அல்லது சிங்கள என்ற தலைவனின் பெயரில் அல்லது கூட்டத்தினரின் பெயரில் ஆரியக் குடியிருப்புக்கள் பெருங்கற்கால பண்பாட்டுக் குழுமங்களுடன் கலந்து புதிய சமுதாய அமைப்பிற்கும் முகாமைக்கும் வித்திட்டனர்.

மகாவம்சத்தில் உள்ள விஜயன் பற்றிய கதைத் தொகுப்பின் வரலாற்று முக்கியத்துவத்தினை ஆராயும்போது சில முரண்பாடுகளும் தோன்றாமல் இல்லை. முதல் தடவையாக புத்தர் இலங்கைக்கு வந்தபோது இயக்கர்களை கிரிதீபத்திற்கு துரத்தியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. பின்னர் விஜயன் இலங்கைக்கு வந்தபோது இங்கு இயக்கர்களின் வளம் மிகுந்த அரசு இருந்ததென்பதனை உறுதிப்படுத்துகின்றது. எனினும் தீபவம்சம் கூறும் விஜயன் கதை குவேனி பற்றியோ இயக்கர்களுடனான அவனது தொடர்புகள் பற்றியோ எதுவும் கூறவில்லை. இதனால் இது புத்தரின் வருகை பற்றிய கதையுடன் ஒத்ததாய் உள்ளது. இவ்விரு வரன்முறை ஏடுகளுக்கிடையேயுள்ள இம்முரண்பாடானது ஒருவேளை தீபவங்ஸத்தில் விஜயன் கதையில் வரும் முரண்பாடான பகுதிகளை நீக்கிவிட்டதா அல்லது மகாவம்சத்திலுள்ள இயக்கர் பற்றிய செய்திகள் பிந்திய சேர்க்கைகளா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனினும் பின்வரும விடயங்கள் வரலாற்று வளர்ச்சியுடன் தொடர்புபடுத்திப் பார்க்கக் கூடியவையாகும்.

அவையாவன:

1. குவேனிக்கும் விஜயனுக்குமுள்ள தொடர்பு
2. தென்பாண்டி இளவரசியை விஜயன் மணம் முடித்தமை
3. விஜயன் இலங்கையில் கால்வைத்த நாளன்று புத்தர் பரிநிர்வாணம் அடைந்தமை
4. இலங்கையில் பின்பு ஆட்சிபுரிந்த மன்னர்கள் விஜயனின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பது
5. விஜயன் வரலாறும் கௌதமபுத்தரின் வரலாறும் ஒன்றாக இணைக்கப்பட்ட தன்மை

மகாவம்சத்தில் புத்தரே தன் மதத்தை இலங்கையில் பாதுகாக்கும்படியும், தம் மதம் இலங்கையிற்றான் நிலைக்கப் போகின்றது என்பதனையும் தன் சீடர் களுக்கு எடுத்துக்கூறியதாகக்கூட ஒரு குறிப்பு இடம்பெற்றுள்ளது. கௌதமபுத்தர் தான் கண்ட உண்மையை மக்களுக்கெடுத்துப் போதித்த எவ்விடத்திலும் தன்னை ஒரு கடவுளாகவோ அல்லது தனது போதனைகளை ஒரு மதமாகவோ போதித்ததாக இந்திய இலக்கியங்களில் எங்குமே இடம்பெறவில்லை. ஆதலால் விஜயனையும் பௌத்த சமயத்தையும் இணைப்பதற்காக பிற்கால கட்டத்தில் உருவாக்கப்பட்டுச் சேர்க்கப்பட்ட ஒரு கதையாகவே இது இருக்கக்கூடும். பௌத்த வரலாற்றியலில் இது ஒரு சுவையான முரண்பாடான அம்சமும் ஆகும்.

நாகர்களும் இலங்கையின் வரலாற்றுத் தொடக்கமும்

இலங்கைத்தீவின் வரலாற்று வரைபியலில் (Historiography of Sri Lanka) அடிப்படையான சில மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இவ்வேளையில் மேலைத்தேயப் பார்வையிலிருந்து நோக்கப்பட்ட வரலாற்று முறையியலுக்குப் பதிலாக சுதேசிய நோக்கியலமைந்த ஒரு வரலாற்றுப் பார்வை இப்பொழுது பதியப்பட்டுக் கொண்டிருப்பதனைக் காணமுடிகிறது. பெரும்பாலான சிங்கள வரலாற்றாசிரியர்கள் இப்பொழுது நாகர் இன மக்களை இலங்கைத்தீவின் வரலாற்றைத் தொடக்கிவைத்த முதன் மக்களாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கி யுள்ளனர். நாகர் அமானுஸ்யர் அல்லர் எனவும், இலங்கைத்தீவின் தொடக்க கால வரலாற்று மற்றும் பண்பாட்டுத் தோற்றப்பாட்டிற்குரிய பிதா மகர்கள் இவர்களே என்பதனையும் இலங்கை வரலாற்றாசிரியர்களால் இப்பொழுது சான்றுகளுடன் எடுத்துக்காட்டப்படுகிறது. அண்மைக்காலங்களில் ஏற்பட்ட தொல்லியல் மேலாய்வுகள், மற்றும் அகழ்வாய்வுகளின் வளர்ச்சியின் பின்னணியில் பெற்றுக்கொள்ளப்பட்ட பண்பாட்டெச்சங்கள் நாகர் மரபினரின் இருப்பு, செறிவு மற்றும் சமயப் பின்னணி போன்ற பல விடயங்களை எமக்கு தெளிவுபடுத்தி உள்ளன. கௌதம புத்தரின் வருகையின் பின்னர் குறிப்பாக 300 வருடங்களின் பின்னர் வடஇந்தியாவிலிருந்து மகிந்ததேரர் தரைமார்க்கமாக இத்தீவிற்கு வருகை தந்து தேரவாத பௌத்தமதத்தினை உத்தியோகபூர்வமாக அரச மதமாக்கியதோடு, சமகாலத்தில் இத்தீவில் காணப்பட்டிருக்கக்கூடிய அரச

வம்சங்களையெல்லாம் தேரவாத பௌத்த நிறுவனங்களுக்குள் உள்ளீர்த்திருந்தமையைக் காண்கின்றோம். இலங்கைத்தீவில் தேரவாத பௌத்தமத நிறுவனங்களுடன் குறிப்பாக பொருளாதார - நீர்ப்பாசனவியல் நிறுவனங்களுடன் நாகர் வம்சத்தினர் கொண்டிருந்த தொடர்புகள் காரணமாக நாக வம்சத்தினரின் ஒரு பிரிவினர் பௌத்தர்களாக மாறிய அதேவேளையில் இலங்கையின் வடக்குக்கிழக்குப் பரப்பில் நாகவம்சத்தினர் தொடர்ந்தும் இந்து சமயத்தவர்களாகவே வாழ்ந்து, அரசமரபிலும் சமயபண்பாட்டு வாழ்விலும் செல்வாக்குச் செலுத்தி வந்திருந்தனர். நந்திச் சின்னமே நாகர்களது அரச மரபிற்குரிய சின்னமாக பின்பற்றப்பட்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்தும் தொல்லியல் சான்றுகளும் இப்பொழுது கிடைத்துள்ளன. நாகர் இனத்தினர் ஈழத்து இந்துசமய வளர்ச்சிக்கு ஈந்த பங்களிப்பு ஆராயப்படுகின்றமை வாயிலாக அவர்களது வரலாற்று முக்கியத்துவம் இங்கு வெளிக்கொணரப்படுகின்றது.

தென்னாசியப் பண்பாட்டுருவாக்கத்திற்குப் பங்களித்த **இனக்குழுமங்கள்** பலவாகும். அவற்றுள் **நாகர் இனம்** மிகவும் தொன்மைவாய்ந்த ஒரு குழுமம் என்பதனை இலக்கிய, தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. தென்னாசியாவின் பல்வேறு பிராந்தியங்களிலும் இக்குழுமத்தினர் பல்வேறு காலப்பரப்பில் வாழ்ந்திருந்தனர் என்பதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. வட இந்தியாவைப் பொறுத்த வரையில் வடகிழக்குப் பிரதேசத்திலுள்ள **நாகலாந்து** மாநிலமும், தென்னிந்தியாவில் **கேரளமாநிலமும்** நாகர் இனம் வசித்த பிரதேசமாகவும், **நாகர் பண்பாடு தொடர்ச்சியாக** நிலவிவரும் பரப்புக்களாகவும் எடுத்துக் காட்டப்படுவதனைக் காணமுடிகிறது. இந்தோனேசியாவில் **யாவாத்தீவில** (நாகர் நாடு) **நாகர் இனமும் அவர்களது பண்பாடும** புராதன காலத்தில் **அரசியல் இறைமையுடன** வளர்ச்சி பெற்றிருந்ததற்கான தொல்லியற் தடயங்களும் கிடைத்துள்ளன. இலங்கைத் தீவினைப் பொறுத்தமட்டிலும் நாகர் இனத்தினர் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பரப்பிலிருந்து வாழ்ந்து வந்தமைக்கான தொல்லியற் தடயங்களும் கிடைத்துள்ளன. கிழக்கிலங்கையில் இற்றைவரைக்கும் **நாகர் வம்ச மரபில் வந்த போடியார் பரம்பரையினா** வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையின் வடபகுதி **நாகதீபம்** அல்லது **நாகத்துவீபம** என மிக நீண்ட காலமாக அழைக்கப்பட்டு வந்த மரபினையும் காண்கின்றோம். மிகப் பழமை வாய்ந்த நாகதீப கலசங்கள் ஒரு சோடி (02) வியாபாரிமூலையிலுள்ள இன்பரூட்டிப் பிள்ளையார் ஆலயத்திலுள்ள மிகப் பழமைவாய்ந்த மடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இவை பல்லவர் கலை முறையை வெளிப்படுத்திக் கொண்டிருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இலங்கைத்தீவின் பூர்வீக மக்கள் குழுமங்களுள் நாகர் இனக்குழுமம் மிகவும் தனித்துவம் வாய்ந்த வாழ்க்கைமுறையொன்றினைக் கட்டமைத்து, முதன்முதலாக ஒழுங்குபடுத்தப்பட்ட சமூக-பொருளாதார நிறுவனங்களின் உதவியுடன் வாழ்ந்திருந்மைக்கான தொல்லியற் சான்றுகளை இப்பொழுது ஆய்வாளர் கண்டுபிடித்துள்ளனர். தென்னிலங்கையிலிருந்து வட இலங்கை

வரைக்கும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளும், அகழ்வாய்வுகளுமே நாகர் பற்றிய சமூக - பொருளாதார, சமயத்தரவுகளை எமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ள மூலாதாரங்களாகும். இப்பின்னணியிலேயே நாகர் வம்சத்தினரது தோற்றம், இன அடையாளம் பற்றிய குறியீடுகள், குழுமங் குழுமமான அவர்களது பரவல், இலங்கைத்தீவில் அக் குழுமத்தினரால் வளர்த்தெடுக்கப்பட்ட பண்பாட்டுக் கட்டுமானம், தேரவாத பௌத்தம் **ஓர் அரசியல் மதமாக** கி.மு. 3ஆம் நூற்றாண்டில் உத்தியோகபூர்வமாக இங்கு அறிமுகப் படுத்தப்படும் வரைக்கும் **முதுபெருங்கற் பண்பாட்டுச் சிற்பிகளாக** அக்குழுமத் தினர் நீரியல்வள முகாமைத்துவத்தின் முகாமையாளர்களாக, குளச்சொந்தக்காரர் களாக, **இடுகாட்டுப் பண்பாட்டுச் சடங்குதாரிகளாக**, "காவல் தெய்வங்களை" குளக்கட்டுக்களிலும், வாணிபமையங்களிலும் நிறுத்தி, வளத்தினைப் பாதுகாக்க வைத்தவர்களாக வாழ்ந்திருந்த வகையினை மிகத் தெளிவாக எடுத்துக்காட்ட முடிகின்றது. **இப்பின்னணியிலே இந்து சமய உருவாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் இத்தீவில் நாகர் இனக்குழுமத்தினர் ஆற்றியிருந்திருக்கக் கூடிய பங்கும் பணியும் பற்றிய வரலாற்றை ஆராய்கின்ற ஓர் அடிப்படையான நோக்கினையும் இவ்வத்தியாயத்தின் கட்டமைப்பு கொண்டுள்ளது எனலாம்.**

நாகர்கள் யார்? இவ்வினாவிற்கான விளக்கம் இங்கு அவசியமானது. நாகர் இனக்குழுமத்தினர் மத்தியதரைக் கடற்பிராந்தியத்தினைச் சேர்ந்தவர்களாக எடுத்துக்காட்டப்படுவதனைக் காண்கின்றோம். எகிப்திய நாகரிக காலத்திலிருந்து (கி.மு. 400 - கி.மு. 300) கிரீட்டன் தீவில் வளர்ச்சியடைந்த ஏஜியன் நாகரிகம் வரைக்கும் (Agean civilization கி.மு. 1700 - கி.மு. 500) இவ்வினத்தினர் மத்தியதரைக்கடற் பிராந்தியத்தில் **பன்னாட்டு வாணிப முகாமையாளர்களாக** தொழில் புரிந்திருக்கின்றார்கள். எகிப்துடன் இக்குழுமத்தினர் மேற்கொண்டிருந்த வாணிப நடவடிக்கைகளுக்குச் சான்றாக மட்பண்டங்களில் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ள பிராமிச்சாசனப் பதிவுகள் விளங்குகின்றன. நாகர் குழுமத்தினர் கீழைத்தேயத்திற்கு மத்தியாசியாவினூடாகப் பரவி, ஸஸானியர்களுடைய (Sassanians) செல்வாக்கினையும் பெற்று, இந்துசமுத்திர **இணைந்த வாணிபத்தில்** ஒன்றுபட்டு செயலாற்றியிருந்துள்ளார்கள் என்பதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன. கி.முற்பட்ட முதலாம் நூற்றாண்டிலிருந்து நாகர்கள் ஸஸானியருடன் இணைந்து வர்த்தகமுயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்குப் பெருங்கற்கால மட்பாண்டங்களில் வரையப்பட்டுள்ள கிராபிடிக் குறியீடுகளே சான்றாகவுள்ளன. இக்குறியீட்டு வரைபுகளில் ஸஸானிய வம்சத்தினரின் செல்வாக்கு உட்பட நாகர் குழுமத்தினருடான கைவண்ணமாக மட்பாண்ட வரைபுகள் எமக்குக் கிடைத்துள்ளன. பெருங்கற்கால மட்பாண்டங்களில் வரையப்பட்ட **முச்சூலக்குறிகள், நாற்சூலக்குறிகள** யாவும் **ஸஸானிய வம்சத்தினரின** செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டு **நாகர் மயப்படுத்தப்பட்ட** கிராபிடிக் குறிகளாகவே உள்ளன. **(ஆனைக்கோட்டை முத்திரைச்சாசனத்தில் பொறிக்கப்பட்ட ஈரின வரிவடிவத்தில் மேலேயுள்ள வரிவடிவம் ஸஸானிய மரபிற்குரியதாகவே காணப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது).**

குறுணிக்கற்காலப் பண்பாட்டை இலங்கையில் முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் நாகர்களேயாவர். இவர்களே பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய குழுத்தலைமையதிகாரிகளாக சமூகத்தினை ஒழுங்குபடுத்தி, வாணிபக்குழுக்களை அமைத்து, முதலில் ரோமானியர்களுடனும், பின்னர் ஸஸானியர்களுடனும் கீழைத்தேயத்தில் பொருளீட்டத்தில் ஈடுபட்ட வர்த்தகப் பெருமக்களாவர். குஸாணப் பெருவம்சத்தினர் இப்பண்பாட்டினை மத்தியாசியப் பிரதேசத்திற்கு எடுத்துச் சென்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வம்சத்தினருடைய நாணயங்கள் இலங்கையின் முக்கிய துறைமுகங்களான மாந்தை, வல்லிபுரம், ஜம்புக்கோளப் பட்டினம், நாகர்கோயில் (கௌத்தன்துறை), கந்தரோடை (திரும்புதுறை) போன்ற மையங்களில் கிடைக்கப்பெற்றுள்ளன. கி.மு. 1ம் நூற்றாண்டிலிருந்து குஸாணியர்-ஸஸானியர் - நாகர் வாணிபக்கூட்டு நடவடிக்கைகள் இப்பிராந்தியத்தில் இடம்பெற்று இருந்தமைக்கான தொல்லியல் சான்றாதாரங்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

"நகர்த்தப்பட்டவர்கள்" நாகர்கள் என்றவொரு கருதுகோள் தென்னிந்தியப் பரப்பில் நிலைபெற்றுள்ளமையை நோக்கும்போது நாகர் இனத்தினரது தோற்ற மூலம் பற்றிய சில செய்திகளை வெளிக்கொணரமுடியும். **நாவலந்தீவு** ஜல சமாதியுட் பிரவேசித்திருந்த காலத்திலிருந்து **நாகர் இனம் நீரினுள் அமிழ்ந்து, அழிந்தவைபோக,** எஞ்சியோர் மீதமாகக் காணப்பட்ட தரைப்பரப்பிற்கு **நகர்த்தப்பட்ட நிலையிலேயே** இன்று **தென்னிந்தியா, இலங்கை, இந்தோனேசியத் தீவுகளாகக** காட்சியளிக்கின்ற பிராந்தியங்களில் அன்று நிலைகொண்டிருந்ததாக **செவிவழி மரபுகள** குறிப்பிடுகின்றன. **நாவலந்தீவு** என அழைக்கப்பட்ட **பாரதத்தின் தென்பகுதி** உட்பட ஒரு பெருநிலப்பரப்பு இந்து சமுத்திரத்தினால் விழுங்கப்பெற்ற நிகழ்வின் இறுதியில், **எஞ்சியிருந்து தப்பிப்பிழைத்து வாழ்ந்து, பின்னர் வரலாற்றுக்கால நாகர் இனமாக அரசோச்சி மறைந்த ஓர் இனக்குழுவினராகவே நாகர் இனத்தினை வரலாற்றாசிரியர்கள் இனம்கண்டு கொள்கின்றனர்.** தொலமி, ஸ்டிராபோ, இராசநாயகம் முதலியார், பரணவிதான போன்றோரால் நாகர் இனம் தொடர்பான ஆரம்ப வரலாற்றுக் குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. இக்குறிப்புக்களின் அடிப்படையில் **நாகர் இனம் வாழ்ந்த பூமி நாகநாடு, நாகத்தீவு, நாகதீபம், நாகதுவீபம், நாகதிவ, நாகதிவயின, மணிநாகத்தீவு, மணிபல்லவம், மணிநாகத்தீவு எனப் பலவாறாக பாளி, தமிழ் மற்றும் சிங்கள மொழி இலக்கியங்களில் பதியப்பட்டிருப்பதனைக் காண்கின்றோம்.**

கி.பி நான்காம் நூற்றாண்டிற்குரிய **வல்லிபுரம் பொற்றகட்டுப்பிராமிச்** சாசனத்தில், **"நகதிவ"** என **ஆந்திரமாகதி** மொழிநடையில் பிராமி வரிவடிவ வாசகமாகப் பொறிக்கப்பட்டுள்ளமையை நோக்கும்போது, யாழ்ப்பாணக் குடாநாடு அக்காலகட்டத்தில் **நாகதீபம்** என்று அழைக்கப்பட்டிருந்தமையை பரணவிதானவின் வாசிப்பின் அடிப்படையில் உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. **மகாவம்சம** என்ற பாளிமொழி இலக்கியத்திலும் **"நகதிவயின"** என்ற சொல் இடம்பெற்றிருப்பதனைக் காண்கின்றோம். மணிமேகலையில் இடம்பெற்றுள்ள **நாகதீபம், மணிபல்லவம்** என்ற சொற்கள் யாழ்ப்பாணத்தினைக் குறிப்பதற்குப்

பயன்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திலிருந்து தொல்லியல் மேலாய்வின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட நாணயமொன்றில் **"நாகபூமி"** என்ற இடப்பெயர் தமிழ்ப் பிராமி வரிவடிவில் பொறிக்கப்பட்டிருந்தமையைக் கண்டபோது இலங்கையின் வடபகுதி நாகருடைய தாயகமாக விளங்கியிருந்தமையை உறுதிப்பட எடுத்துக்கூறக் கூடியதாகவுள்ளது.

முற்பட்ட அனுராதபுரகால அரசர்களுள் பெரும்பாலானோர் நாகர்வம்சத்தினைச் சேர்ந்தோரே என்பதனை ஆய்வாளர் பலரும் எடுத்துக்காட்டியுள்ளனர். வைத்திய கலாநிதி Fr. சேவையர் **ஈழநாகா வம்சம்** தொடர்பாக அரிய பல கருத்துக்களை தனது The Land of Letters என்ற வெளியிட்டிருப்பதனைக் காண்கின்றோம். **விஜயன் வருவதற்கு முன்பும், பின்னரும் இத்தீவில் வாழ்ந்து வந்த நாகர் மரபினரில் அரச அதிகாரத்துடன் விளங்கிய ஒரு பிரிவினரே அனுராதபுர நகரின் தோற்றத்திற்கும் அதனை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த நீர்ப்பாசனவியல் தொழினுட்பத்திற்கும் அடிப்படையாக தொழிற்பட்டிருந்தமையை Fr.சேவையர் தனது நூலினூடாக எடுத்துக் காட்டியுள்ளார்.**

"The Land of Letters" என்ற அவரது நூல் நாகர் இனத்தினரது தோற்றம், பரவல், பண்பாட்டுப் பங்களிப்புக்கள் தொடர்பாக அறிவதற்கு உதவும் மிக முக்கியமான வரலாற்று மூலாதாரமாகும். சேவையர் தனது நூலில் நாகர் இனம் தொடர்பாகக் குறிப்பிடும்போது, **"மகாவம்ச ஆசிரியர் கால வரன்முறை அடிப்படையில் இருவேறு காலகட்டங்களுக்குரியதாகவும் இருவேறு பண்பாட்டு மரபுகளுக்குரியதாகவும் காணப்பட்டிருந்த இருபெரும் வம்சப் பாரம்பரியங்களை ஒன்றாக்கி, சிங்கள இனத்தின் தோற்றம் பற்றிய கதையை உருவாக்கிவிட்டிருப்பதனைக் காணலாம் .... அவ்வாறு ஒன்றாக்கப்பட்ட வம்ச மரபுகளில் நாகர் இனம் குறிப்பிடத்தக்கது"** என விரிவாகத் தந்திருப்பது நோக்கத்தக்கது. இலங்கையில் நாகவம்ச ஆட்சியாளர் பலர் சிங்கள - பௌத்த இசைவாக்கத்திற்குள் உள்ளகப்படுத்தப்பட்ட தன்மையை உணர வைக்கின்ற முறையில் ஏராளமான தொல்லியற் சான்றுகள் இப்பொழுது கிடைத்த வண்ணமுள்ளன.

மகாவம்சம் குறிக்கின்ற விடயத்தின்படி, இயக்கர்குல அரசனான **காலசேனனைக்** கொன்றே ஆரியனான விஜயன் அரசு பீடம் ஏறியதாக குறிப்பிட்டாலும், அவ்வாறான ஒரு முக்கிய **அரசியல் கைமாற்றத்தின் பின்னணியில இருந்திருக்கக்கூடிய நாகவம்சத்தினரது பாரம்பரிய அரசியல் மேலாதிக்கம்** முற்றிலுமே மகாவம்சத்தில் மறைக்கப்பட்டிருப்பதனை எவருமே மறுக்கமுடியாது. **நாகவம்சத்தினரது ஆட்சி பௌத்தமதத்தின் வருகைக்கு முன்னர் இலங்கையின் கடல் முகப்புப் பிரதேசங்களில் நிலைபெற்று விட்டிருந்த வரலாற்றை மறைப்பதற்காகவே** கௌதம புத்தரது மும்முறை வருகையை எடுத்துக்காட்டி, ஐதீக மரபுரிமையாகப் பெற்றுக்கொண்ட விஜயன் பற்றிய செவிவழி மரபிற்கு இலக்கிய வடிவம் கொடுத்து, **இலங்கைத் தீவினை "விஜய" வருகையாளருக்குச் சொத்துடமையுமாக்கிய சிறப்பு** மகாவம்ச

ஆசிரியரான மகாநாமதேரருக்குரியதாகின்றது. இவ்விடத்திலேயே மறைக்கப்பட்டுப்போன நாகர் வம்ச வரலாற்றை மூலாதாரங்களுடன் விரித்துரைக்க வேண்டியதாகின்றது.

"…. விஜயனின் 35 ஆண்டுக்கால ஆட்சியின் பின்னர் அவனது தம்பி மகனான பந்துபாசுதேவவும் (கி.மு. 444 - 414) அதன் பின் பந்துபாசுதேவனின் மைத்துனனான அபயனும் (கி.மு. 414 - 399) ஆட்சி புரிகின்றனர். விஜயன் முதல் அபயன் வரை இம்மூவரும் அனுராத புரியை இராசதானியாகக் கொண்டிருக்கவில்லை. இம்மூவரினதும் இராசதானி எங்கு அமைந்திருந்தது என்று யாருக்கும் தெரியாது....."

"அபயனின் பின்னர் விஜயனின் பேரன் முறையான பந்துகாபயன் (கி.மு 377 - 307) ஆட்சிப்பீடமேறுகின்றான். அவனே முதன்முதலாக அனுராதபுரியைத் தனது இராசதானியாகக் கொண்டவன். பண்டு என்ற பதம் நாகர் இனத்தினருக்குரிய ஒரு சிறப்புச் சொல்லாகும். பண்டு அரவர் ⇒ பண்டரவர் ⇒ பண்டக்கர் ⇒ பண்டாக்கர் ⇒ பண்டுக்கா அநபாயன் ⇒ பண்டுகாபயன் என அச்சொல் விரிந்து செல்கின்றது. பண்டுகாபயன் என்பவனே நாகவம்ச மரபிலிருந்து வருகை தந்த முதல் அனுரதபுர அரசனாவன். கடம்ப நதிப்பள்ளத்தாக்கு (மல்வத்து ஓயா) நாகமரபுகள் வளர்ச்சி பெற்றிருந்த மிகச்சிறந்த பண்பாட்டுத் தொட்டி லாகும். கடம்பநதிப் பள்ளத்தாக்கில் நாகர்குல மரபுரிமைகளை வளர்த் தெடுத்த தலைநகர் ஒன்று இருந்திருக்கின்றது. கடம்பம் என்றால் ஒரு வகையான தாவரப் பெயராகவும், தமிழ் வளர்த்த முருகனது மறுநாமமாகவும் இருந்திருப்பதினைக் காணலாம்."

"அனுராதபுரத்தில் நாகர்களின் பழைய நகரம் இருந்திருப்பதானது அவர்கள் அங்கு செறிந்து வாழ்ந்திருப்பதனைக் குறிக்கின்றது... அனுராதபுரியில் சிவலிங்க வழிபாட்டிடம் இருந்திருப்பதை மகாவம்ச வாயிலாகவும் அறியமுடிகிறது. விஜயனோ, பந்துபாசுதேவாவோ, அபயனோ, பந்துகாபயனோ பௌத்தசமயம் சார்ந்திருக்கவில்லை.... இவ்வாறான பௌத்தத்திற்கு முந்திய இந்துசமய சடங்காசார - வணக்க சிந்தனையாளர்களே அனுராதபுரத்தில் முதல் ஆட்சியாளர்களாக விளங்கி, ஈழத்தின் புராதன சிவவழிபாட்டின் மூலமான ஈஸ்வர வழிபாட்டினை சிவலிங்க வழிபாடாக ஏற்றுக்கொண்ட சிவபூமியின் சொந்தக்காரர்கள் ஆவர். பஞ்ச ஈஸ்வரமும் அவற்றின் தோற்றமும் இவர்களாலேயே - இவர்களுடைய காலத்திலேயே நிகழ்ந்தது. குறிப்பாக அனுராதபுரி நகருடன் தொடர்பு படுத்தப்பட்ட வகையில் எடுத்துக் கூறப்படும் பண்டுகாபயனின் நடவடிக்கை களே ஈழத்தில் ஈஸ்வர வழிபாடு பிரசித்தம் பெற்றமைக்கான காரணமாகும். (ஸிவம் ⇒ ஸிம்மம் ⇒ ஸீ(ங்)களம் ⇒ சிங்களம்)

பண்டுகாபயனுக்குப் பின் அனுராதபுரத்தில் ஆட்சிக்கு வந்த மன்னர் வரிசையானது நாகர் வம்சத்தினராகவே காணப்பட்டனர். இவ்வம்சத்தில்

வந்த **மூத்தசிவன்,** இவனது மக்களாகிய **சூரதிசன, மகாநாகன, மகாசிவன அசேலன்** ஆகியோர் **நாகவம்ச திராவிடா** என்பதில் சந்தேகம் எழமுடியாது. இவர்களே அனுராதபுரத்தில் சிவன்கோயில்கள் பலவற்றையமைத்து ஈஸ்வர வழிபாட்டினை மேலோங்கச் செய்தவர்களாவர். மகாவம்சம் இவற்றையெல்லாம் மறைத்து இரண்டு பெரும் வம்சப் பாரம்பரியங்களை **காலவரன் முறையை நோக்காது,** ஒன்றுக்குள் ஒன்று கலந்து இருவேறு பண்பாட்டுக்கூறுகளை ஒரே வம்சப் பரப்புக்குள் உள்ளடக்கியமையினால் நாகர் வம்சத்தின் பங்களிப்புக்கள் வரலாற்று வெளிச்சத்திற்கு வருவதிலிருந்து மறைக்கப்பட்டுவிட்டது. சிங்கள இனத்தின் தோற்ற வரலாற்றைப் புனைவதற்குத் தடையாகக் காணப்பட்ட ஏனைய வம்சப் பாரம்பரியங்களையெல்லாம் மிகவும் **சாதுரியமாக மறைப்பதற்கே** புத்தரின் மும்முறை இலங்கை வருகை பற்றிய கதையை இலங்கையின் வம்ச வரலாற்றுப் பாகத்தின் முன்னுரையாக மாகவம்ச ஆசிரியர் புகுத்தியமையால் **ஈழ நாகமரபுகளும் நாகர்வம்சத்தினரின் மன்னர் வரலாற்றுப் பட்டியலும்,** சாதனைகளும் மகாவம்சத்திலிருந்து மறைக்கப்பட்டு விட்டமையைக் காண்கின்றோம்.

அனுராதபுரத்தில் 44 வருடங்கள் ஸ்திரமான ஆட்சியைப் புரிந்த எல்லாளனது அரசியல் பிரவேசம் தொடர்பான செய்திகள் மகாவம்சத்தினால் முரண்பாடாக்கப் பட்டுள்ளது. அசேலன் ஆட்சிசெய்து கொண்டிருந்தபோதே அனுராதபுர அரசினை எல்லாளன் தனது படையெடுப்பின் மூலம் கைப்பற்றிக் கொண்டதாக மகாவம்சம் குறிப்பிடும்போது, அசேலனை சிங்கள வம்ச மன்னனாகக் குறிப்பிடுவது வரலாற்றுக்கு முரண்பட்டதாக உள்ளது. **"தேவாநம்பிய"** என்ற விருதுப்பெயரை அசோகப்பேரரசன் தீசனுக்கு வழங்கி, **மீண்டும் முடிசூட்டுவித்த நோக்கம** அம்மன்னன் **நாகர் குலவம்ச அங்கத்தவனாக** ஆட்சியைப் பெற்றுக்கொண்டு பரிபாலித்துக் கொண்டிருந்தமையே ஆகும். நாகவம்ச மன்னனை பௌத்த மதத்திற்குள் அரவணைப்பதற்காகவே **"தேவாநம்பிய"** என்ற பட்டம் மகிந்ததேரரது முன்னிலையில் வைத்து **மிகிந்தலையில** வழங்கப்பட்டது. "தேவாநம்பியதீசனுக்குப் பின்னர் அனுராதபுரத்தில் ஆட்சிசெய்த நாகவம்ச ஆட்சியாளர்களின் பெயர்களை மகாவம்சமும், ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்களும் தருவதனைக் காணலாம். **அக்குறுகொட** என்ற தென்னிலங்கையிலுள்ள புராதன மையமொன்றிலிருந்து மீட்கப்பட்ட தமிழ்ப்பிராமி வரிவடிவம் பொறித்த நாணயங்களில் **நாகர்வம்ச மரபில் வந்த ஆட்சியாளரது பெயர்கள** பொறிக்கப் பட்டடிருப்பதனை பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் மிகவும் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. நாகர் வம்ச மரபுரித்தாளர்கள் பெருமளவுக்கு வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒரு பிராந்தியமாகவும் தென்னிலங்கைப் பிரதேசம் விளங்கியது. **கதிர்காமம், மகியங்கனை, மகாகமை, அக்குறுகொட** போன்ற வாணிப மையங்களை **யாவா நாகர்கள் (ஜாவ நாயர்கள்)** நன்கு பயன்படுத்தியிருந்தமைக்கான தொல்லியற் சான்றுகள், கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. துட்டகைமுனுவின் படைகளில் சேவையாற்றிய தமிழ்ப்படைத் தளபதிகள் பலர் ஜாவாத்தீவைச் சேர்ந்த **நாகர்களே** என்பதனை செ.பரணவிதானவும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார். கதிர்காமப்

பிரதேசத்தில் கிடைத்த ஆதிப்பிராமிக் கல்வெட்டு ஒன்றில் **"ஜாவநாயர்"** எனப் பொறிக்கப்பட்டிருப்பது இதற்குச் சிறந்த சான்றாகும். எனவே தேவநம்பிய தீசனுக்குப் பின்னர் **வட்டகாமினியின்** ஆட்சிக்காலம் வரைக்கும் அனுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த நாகமரபினரது வம்சாவழிப் பாரம்பரியம் உரியமுறையில் அடையாளம் காணப்படவேண்டிய பொறுப்பு வரலாற்றாசிரியர்களுக்கு உண்டு.

இலங்கைத்தீவில் வாழ்ந்து, இம்மண்ணில் பண்பாட்டு நிறுவனங்களைத் தோற்றுவித்த நாகர்வம்சத் திராவிடர்களை மிகவும் தந்திரோபாயமாக **"அந்நியர் களாக"** அதாவது இலங்கைக்கு வெளியே இருந்து வந்த படையெடுப்பாளர் களாகவும், மரக்கலத்தில் வருகை தந்த வணிகர்களாகவும், சிங்கள மன்னர் பாரம்பரியத்தினைக் குழப்பியவர்களாகவும் உத்தியோகபூர்வமற்ற வகையில் இலங்கைக்கு வருகை தந்தவர்களாகவும் மகாவம்சத்தில் திரிபுபடுத்திக் கூறப்பட்டதற்கான காரணங்கள் யாவை? **சேனன், குட்டிகன் வரலாறு** இவ்வாறு கூறப்பட்டதற்கான தேவை ஏன் ஏற்பட்டது? இந்த இரு மன்னர்களும் அனுராதபுரத்தில் 22 வருடங்கள் மொத்தமாக ஆட்சி புரிந்திருப்பது தற்செயலான ஒரு நிகழ்வு என்றே மகாவம்சம் குறிப்பிடுவதற்கான காரணங்கள் யாவை? இம்மன்னர்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள், நீரியல் நிறுவனங்கள் எல்லாம் எங்கே? 44 வருடங்கள் ஆட்சிபுரிந்த எல்லாளனது கல்வெட்டுக்கள் எல்லாம் எங்கே? அம்மன்னனது சாதனைப்பட்டியலை மகாவம்சம் ஏன் மறைத்துவிட்டது? இவ்வாறெல்லாம் கேள்விகளை தொடுத்துக்கொண்டு செல்லும்போது இலங்கையில் முற்பட்ட அனுராதபுர காலப்பரப்பில் நாகவம்ச மரபினரது மேலாதிக்கம் மற்றும் அரசியல் எழுச்சி பற்றிய மறைக்கப்பட்ட தகவல்களும், வம்சத்தின் தொடர்ச்சியான இருப்புப் பற்றிய செய்திகளும் அவற்றின் பின்னணியில் உருவாகியிருந்திருக்கக்கூடிய பண்பாட்டுத்துறை அம்சங்களும் வரலாற்று வெளிச்சத்திற்கு தானாகவே வெளிப்படும் என்பது யதார்த்தமாகும். அந்த அடிப்படையில் முதலாவதாக நாகர்வம்ச மரபினைச் சேர்ந்த **மூத்த சிவனின** மகனான **அசேலன்** என்பவனை சிங்களவம்ச இனத்தோடு இணைத்துக் காட்டுவதற்கு மகாவம்சவத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்மை. இரண்டாவதாக எல்லாளனை சோழநாட்டு இளவரசனாக எடுத்துக்காட்டியிருப்பது. இந்த இரண்டு விடயங்களுமே வரலாற்றில் உறுதிப்படுத்தப்பட முடியாத வகையில் ஆதாரங்கள் கிடைக்கமுடியாத வகையில், அவற்றை **இன்னொரு வம்ச உரித்துக்குரியதாக** மாற்றுவிக்கப்பட்டுவிட்டமையை மகாவம்சத்தினூடாகக் காண்கின்றோம். **ஈழராஜா** என்ற திராவிடப்பதம் எவ்வாறு **"எலாரா"** என பாளிமொழியில் திரிபுபடுத்தப் பட்டதோ அதேபோன்றே **முன்னீஸ்வரம்** என்ற அனுராதபுரத்தில் காணப்பட்ட மிகப்பழைய புராதன ஈஸ்வரர் கோவிலும் காலப்போக்கில் **"இருசுமுனி"** விகார என ஆக்கப்பட்டுவிட்டமையைக் காண்கின்றோம். திராவிடவம்சப்பெயர் மரபுகள் பாளிமொழியூடாக சிங்கள வம்சப்பாரம்பரியத்தினோடு கால ஓட்டத்தில் இணைக்கப்பட்டுவிட்ட வரலாற்றினை Fr.சேவையர் மிகவும் விரிவாக ஆராய்ந்து ஒரு நூலையே எழுதியுள்ளார்.

நாகர்கள் - புராதன குளச் சொந்தக்காரர்கள்

நீர்வள நாகரிகமொன்றின் தோற்றத்திற்கு அடிப்படையை இட்டுக்கொண்டிருந்த பெருங்கற்கால பெருமக்கள் சமூகத்திலிருந்து ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட குழுமமாக மாறியிருந்த ஒரு பிரிவினர், **மத்தியதரைக் கடற்பிராந்தியங்களின்றும், ஆசியமைனரிலிருந்தும் வணிகர்களாக வருகை தந்தவர்களோடு கலந்து நாகவம்சத்தினராக உருவாக்கம் பெற்றுக்கொண்டனர். இவர்கள் பேசிய வணிக மொழியும் எழுத்தும் கிரேக்க மொழியுடனும், பேர்சிய - ஸசானியர் களுடைய வரிவடிவங்களுடனும் கலந்து தனித்துவமான மொழி - மற்றும் வரிவடிவ வழக்காறுகள் உருவாவதற்கு வழிசமைத்தன.** ஸசானிய வம்சத்தினரின் தோற்றம், வளர்ச்சி மற்றும் குஷானிய வம்சத்தினரின் பேரரச நடவடிக்கைகள் இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்ட வகையில் நாகர் குலமுறைகளுடனும் வாணிபநோக்கில் இலங்கையுடன் தொடர்பு கொண்டிருந்தைக் காண்கின்றோம். **ஸஸானியர்களுடைய புராதன வரிவடிவப் பாரம்பரியம் ஒன்று பெருங்கற்கால "கிராபிடிக் குறியீடுகள்" என்ற பெயரில் தென்னிந்தியா - இலங்கை மட்பாண்டங்களில் பதியப் பட்டிருப்பதனைக் காண்கின்றோம்.** அனுராதபுரத்திலுள்ள சீகிரிய **நாகபடக் குகையினுள** மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின்போது கிடைத்த அணிகலன்கள், மட்பண்டங்கள், மற்றும் **சுடுமண் பாவைகளின் முகத்தோற்றங்கள்** என்பன ஸசானியக் கலைச் செல்வாக்கினை எடுத்துக்காட்டுவதாகத் தற்போது தொல்லியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இப்பண்பாட்டுப் பின்னணியில் உருவான நாகர் வம்சகுல முறையினரே நீர்ப்பாசனக் குளங்களை உருவாக்கி, நீர்வள நாகரிகமொன்றின் தோற்றம் அதன் வளர்ச்சிக்கு அடித்தளமமைத்துக் கொடுத்தார்கள். **குளக்கட்டின் உறுதிக்கும், குளத்து நீரின் செழுமைக்கும் பொறுப்பாக நாகதுவாரபால உருவங்கள், கணபதி உருவங்கள் போன்றவற்றை உருவாக்கி, நாகர் சமூகத்தின் விருத்திக்கும், பாதுகாப்பு மற்றும் நிலைபேறிற்கான நிறுவனங்களை அவர்கள் உருவாக்கியிருந்தனர். Annimism என்ற எண்ணக்கருவோடு இணைந்திருந்த ஒரு வகையான தெய்வக் கோட்பாட்டியலை உருவாக்கி, பௌத்தத்திற்கு முன்னரான ஈழத்தின் சமய வரலாற்றிற்கு அவர்கள் பங்களித்திருந்தனர்.**

நாகர் வம்சத்தவர்களது குலக்குறியீடு - எருது.

நாகர் அரசமரபானது படுத்திருக்கும் எருது அல்லது நிற்கின்ற ரிஷப வடிவத்தினையே குறியீடாகக் கொண்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான தொல்லியல் சான்றுகள் இப்பொழுது கிடைத்துள்ளன. **கந்தரோடையிலிருந்து மூன்று வகையில் ரிஷபக் குறியீடுகள் எமக்குக் கிடைத்துள்ளன.** முதலாவது கந்தரோடையிலிருந்து சேகரிக்கப்பட்ட பல்வேறு வகையான மணிவகைகளுள் (Various Beads) **சந்திரகாந்தக்கல்** ஒன்றில் செதுக்கப்பட்டுக் கிடைத்துள்ள குத்துவிளக்குடன்கூடிய படுத்திருக்கும் சேது வடிவம் இங்கு குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் இச்சந்திரகாந்தக்கல் ஒரு மோதிரத்தில் இலச்சினையாக பதிக்கப்பட்டிருந்து உபயோகிக்கப்பட்டிருக்க

வேண்டும். கந்தரோடைப் பிராந்தியத்தில் உள்ள **அரசமாளிகைத் திடலிலே** இக்குறிப்பிட்ட **அரசமுத்திரையான** எருது இலச்சினை கிடைக்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. **(பதவியாவில் கிடைத்த இலச்சினையைப் போன்று ஆனால் காலத்தால் முற்பட்டதாக இச்சந்திரகாந்தக் கல்லில் செதுக்கப்பட்ட எருது இலச்சினை விளங்குகின்றது).** பெருங்கற்காலப் பண்பாட்டின் மிகஉச்ச வளர்ச்சியில் உருவான ஓர் அரசமரபுடன் தொடர்புபட்டதாகவே நாகர்வம்ச அரசமுறை யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்பட்டது என்பது வரலாற்றாசிரியர் களின் பொதுவான அபிப்பிராயமாகும். **அந்த வகையில் திட்டவட்டமான நாகவம்ச அரச பாரம்பரியத்துடன் இணைத்துப் பார்ப்பதற்கேற்ற வகையில் பல்வேறு தொல்லியல் எச்சங்களுடன் இம்முத்திரை மோதிரக்கல் கிடைத்திருப்பது வம்ச வரலாற்றிற்கும் அப்பால் கந்தரோடையுடன் மத அடிப்படையில் நாகரை தொடர்புபடுத்தக் கூடிய வகையில் கிடைத்த இம்முத்திரைச் சின்னம் காணப்படுகின்றது எனலாம்.**

மற்றுமொரு தொல்லியல் மூலாதாரமாக அகழ்வினூடாக கந்தரோடையிலிருந்து கிடைத்துள்ள அரும்பொருள் எருத்துருவம் வரையப்பட்டுக் கிடைத்துள்ள எலும்பினாலான கத்தி போன்ற ஒரு கருவியாகும். இக்கருவியின் இரு விளிம்புகளில் ஒரு பக்கம் கத்தி போன்ற கூர்மையான இயல்பினையுடையதாகக் காணப்படுகின்றது. ஒன்றரை அங்குலமான அதன் ஒரு பக்கப்பரப்பில் **நீண்ட எருத்து வடிவம** ஒன்று வரையப்பட்டுள்ளது. வரையப்பட்ட இவ்வெருத்தின் தோற்றமானது **மத்தியதரைக் கடலில் உள்ள கிரீட்டன் தீவில் காணப்படும் நோஸஸ் நகரில் வரையப்பட்ட எருத்தின் வடிவத்தையொத்துக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.** 1995 இல் கந்தரோடையில் **உச்சாப்பனை** என்ற காணித் திடலில் மேற்கொண்ட அகழ்வின்போதே இந்த அரும்பொருள் கிடைக்கப்பெற்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலகட்டத்திற்குரியதாகக் கருதப்படும் இத்தொல்லியல் எச்சமானது பண்பாட்டடிப்படையில் நாகர் மரபினரின் தோற்றத்தினைக் கண்டுகொள்வதற்கும் உதவும் ஒரு வரலாற்று மூலமாகப் பயன்படுத்தமுடியும். இத்தகைய ஒரு வரைபு மரபு கந்தரோடையில் இன்றும் தொடர்வதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது **பசுமாடுகளுக்கு குறி சுடும் மரபில் காணப்படும் ஒரு குறியீடான சேதுவடிவமேயாகும.** யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்து சேது நாணய வெளியீட்டில் காணப்படும் அதே வடிவத்தினை இற்றைவரைக்கும் கந்தரோடையில் உள்ள நெல்வயற் செய்கையாளர்கள் தத்தமது பட்டிகளுக்கு (மாடுகளுக்கு) குறி சுடுவதனூடாகப் பேணி வருவதனை இந்நூலாசிரியர்(Eye witness) நேரடியாகவே கண்டுள்ளார். இவ்வாறான தொல்லியல் மற்றும் பண்பாட்டு மானிடவியற் சான்றுகளின் அடிப்படையில் நாகர்வம்சப் பாரம்பரியப் பின்னணியில் நாகரதும் அம்மக்கட் கூட்டத்தின் அரச இலச்சினையாக சேது வடிவம் இலங்கையில் பேணப்பட்டு வந்திருந்தமையைக் காண்கின்றோம். இப்பின்னணியில் நாகர்வம்சத்தினரது ஆட்சிக்காலத்தில் இந்துசமயப் பண்பாட்டில் அவர்களுக்கிருந்த தொடர்புகள் மிகத்தெளிவாக - துல்லியமாக வெளித்தெரிவதனைக் காண்கின்றோம். **சிவ வழிபாடே** அவ்வம்சத்தினரின் மிகப் பிரதானமான சமய

வெளிப்பாடாக அமைந்திருந்தது என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. சதுரமான செம்பு நாணயமொன்றில் **"சிவ"** என்ற வாசகம் தமிழ்ப்பிராமி வரிவடிவில் பொறித்திருக்கக் கண்டெடுக்கப்பட்ட நிகழ்வு 1995 இல் கந்தரோடை அகழ்வின் போது ஏற்பட்டது. இந்த நாணயம் நாகமன்னன் ஒருவனால் வெளியிடப்பட்டது என்பதும் தற்போது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், கந்தரோடையைத் தலைநகராகக் கொண்ட **நாகர் வம்சத்தினா நாகதுவீபத்தில் சிவவழிபாட்டு மரபுகளையே வளர்த்தெடுத்திருந்தனர் என்ற தெளிவான முடிபினை கண்டுகொள்ள முடிகிறது.**

நாகதுவீபமும் சிவன் வழிபாட்டு மரபும்

ஈழத்துப் புராதன பஞ்ச ஈஸ்வரங்கள் என வரலாற்றுப் புகழ்பெற்ற சிவன் கோவில்களுள் இரண்டு நாகதுவீபத்தின் கண் அமைந்திருப்பதனைக் காணலாம். **நகுலேஸ்வரம், தொண்டேஸ்வரம** என்றழைக்கப்பட்ட கோவில்களே அவையாகும். தொண்டேஸ்வரம் என்ற சிவன் ஆலயம் தொடர்பாக, அதன் அமைவிடம் தொடர்பாக வரலாற்றறிஞர் மத்தியில் கருத்தொருமைப்பாடு நிலவவில்லை. இந்த ஈஸ்வரன்கோவில் தென்முனையில் தென்னிலங்கையிலுள்ள **தொந்திரா** அல்லது **தேவேந்திரமுனையில** அமைந்திருப்பதாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர். நாகதுவீபத்தில் பழமையான மேலும் சில ஈஸ்வரன் கோயில்கள் அமைந்திருந்தமையை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. யாழ்ப்பாண வைபவமாலையில் **திருத்தம்பலேஸ்வரம** என்றொரு கோவிலும், யாழ்ப்பாண வைபவத்தில் **ஜம்புநாதேஸ்வரமும** குறிக்கப்படுவதனைக் காண்கின்றோம். **சந்திரமௌலீஸர்** என்றொரு பழம்பெரும் ஈஸ்வரன் கோவில், சாவகச்சேரிக்கு அண்மையில் அமைந்திருந்ததாகக் குறிப்பிடுவர். சிலர் இக்கோயிலை வல்லிபுரத்திற்கு அண்மையிலுள்ள ஆனைவிழுந்தான் சந்திக்கண்மையில் அமைந்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றனர். **வாரிவன நாதேஸ்வரர், சட்டநாதேஸ்வரர், கல்வத்தையிலுள்ள சிவன கோயில்** என வரலாற்றுப்பழமை மிக்க சிவன் கோவில்களும் நாகதுவீபத்தில் காணப்படுகின்றன. இவை **சோழர் காலத்துக் கோயில்களாக** அடையாளம் காணப்பட்டுள்ளன. இப்பொழுது நாகர்களுக்கேயுரித்தான மிகப் பழமையான சிவன் கோவில் ஒன்றின் பெயர் தேவார முதலிகளது பாடல்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கேயுரியதாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அக்கோவிலின் பெயர் **மணிநாகேச்சுரம்** என்பதாகும். **மணிநாக ஈஸ்வரம்** என்ற பெயரே **மணிநாகேச்சுரம** என மருவியதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மணிநாக ஈஸ்வரமும் நாகர்களும்

மிகவும் அற்புதமான வகையில் மணிநாகேஸ்வரம் என்ற சிவ ஈஸ்வரன் கோயில் நாகரின மக்களால் **நாவலந்தீவில் ஆராதிக்கப்பெற்றுப் பேணிப பாதுகாக்கப்பட்டது** என்ற செய்தியை தேவார முதலிகள் தந்த பதிகப் பாடற்றிரட்டுகளால் அறியமுடிகின்றது. காவிரிப் பள்ளத்தாக்கிலும் **நாகேச்சுரம்** என்றொரு கோயில் அமைந்திருந்தமையை சுந்தரரது பதிகங்கள் எடுத்துக்

காட்டியிருப்பினும் **அப்பரது** பதிகங்களிலிருந்தே நாவலந்தீவிலுள்ள சப்ததீவுகள் ஒன்றில் **மணி நாகேச்சுரம்** என்ற நாகர்களுடைய பழம்பெரும்கோயில் அமைந்திருந்த வரலாற்றினைக் காணமுடிகின்றது.

நாவலந்தீவு பற்றிய குறிப்புக்கள் காலத்திற்கு காலம் ஒரே பொருளில் வழங்கப்பட்டிருக்கவில்லை. குமரிக் கண்டத்தின் தென்பகுதியிலேயே நாவலந்தீவு அமையப்பெற்றிருந்தமைக்கான குறிப்புக்கள் மணிமேகலை - சிலப்பதிகாரம் ஆகிய இரட்டைக் காப்பியங்களில் இடம்பெற்றுள்ளன. ஒரு காலகட்டத்தில் இந்திய உபகண்டம் முழுவதனையும் 'நாவலந்தீவு' குறிப்பிட்டு நின்றதற்கான இலக்கியக் குறிப்புக்களும் காணப்படுகின்றன. குமரிக்கண்டத்தின் தென்பகுதியில் நாவலந்தீவு மற்றும் சப்ததீவுகளும் அமைந்திருந்தன எனவும் கடல்கோளினால் குமரிக்கண்டம் நீரில் அமிழ்ந்துபோக, நாவலந்தீவும், சப்ததீவுகளும் மட்டுமே இன்று எஞ்சியுள்ளன எனவும் அவையே இலங்கைத் தீவும், வடபகுதியிலுள்ள தீவுக்கூட்டங்களுமாகும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அப்பர் சுவாமி களினால் பாடப்பட்ட மணிநாகேச்சரம் இலங்கையின் வட பகுதியில் உள்ள சப்ததீவுகளுள் ஒன்றான நயினார் தீவிலேயே அமைந்துள்ளது என்று கருதும் ஆய்வாளருமுளர். மணிமேகலையில் இடம்பெற்றுள்ள குறிப்பொன்றின்படி நாவலந்தீவிலுள்ள சிந்தாதேவியின் படம் சிந்தாமணிப்பீடம் எனவும் மணிமேகலா தெய்வம் வந்துறைந்த பீடம் (சக்திபீடம்) இதுவே எனவும் இதுவே இன்று நாகேஸ்வரியின் சக்திபீடமாக காட்சியளிக்கின்றது எனக் கருதும் ஆய்வளரும் உளர். சிந்தாதேவியிடமிருந்து கிடைத்த 'அக்ஷயபாத்திரம்' ஆபுத்திரன் கையிற்கு கிடைத்த தன்மையும், பின்னர் அமுதசுரபியில் அப்பாத்திரம் ஜலசமாதியுற்ற வரலாறும் மணிமேகலையில் மிகவிரிவாகக் கூறப்பட்டுள்ளமையை நாம் அறிவோம். இப்பின்னணியிலே நாகர்வம்சத்தினர் நாவலந்தீவிலும், சப்ததீவுகளிலும் ஓர் அரச பாரம்பரியத்தினை உருவாக்கியிருந்தனர் என்பதும் அதன் தலைநகராக கதிரமலை (கந்தரோடை) விளங்கியிருந்தது என்பதும் தெளிவாகின்றது. இவ் வடிப்படையில் நோக்கும்போது **மணி நாகேச்சரம** அமைந்த நிலையம் நயினார் தீவு என்பதில் சந்தேகம் எழமுடியாது. மணிபல்லவம், மணித்துவீபம், மணிப்பீடம், மணிநாகதுவீபம், **மணியக்க** என்றெல்லாம் பல்வேறு பெயர்களில் 'மணி' இணைந்து பேசப்படுகின்ற ஒரு வரலாறு தற்போது நயினார் தீவிற்குரியதாகவே பெரும்பாலாரினால் கருதப்படுகின்ற நிலையில், மணிநாகேச்சரம் என்ற பாடல் பெற்ற நாகவம்சத்தினுடைய சிவத்தலம் சப்தத்தீவுகளில் ஒன்றாகிய நயினார்தீவில் அமைந்திருந்தது என்ற முடிவுக்கு வரலாம். எனினும் இன்று மணிநாகேஸ்வரியாக **சிவவழிபாடு, நாகவழிபாடு, அம்மன் வழிபாடு** இவை மூன்றும் ஒருமித்த வகையில் எவ்வாறு ஒரு சக்திபீடம் இங்கு உருவானது என்பது மேலும் ஆராயத்தக்கது. **நாகரும், பாணரும், திரையரும் வம்ச ஆட்சியாளர்களாக எழுச்சி பெற்றமையின் பின்னணியில் அம்மூன்று வழிபாட்டு மரபுகளும் ஒரே சந்நிதியில் சங்கமமாயிருத்தல் வேண்டும் எனக் கொள்வதே பொருத்தமாகும்.**

நாகரும் வைஷ்ணவ மரபும்

இலங்கைத் தீவினைப் பொறுத்த வரையில் நாகவம்ச பண்பாட்டுச் செல்வாக்குகள் பௌத்த மரபில் வைஷ்ணவப் பாரம்பரியத்துடன் இணைக்கப்பட்டே சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். மகியங்கணை ஓவியங்களிலும், களனிவிகாரை ஓவியங்களிலும் நாகவம்ச மரபுகள் யாவும் வைணவப் பண்பாட்டுக்குரியதாக (உபுல்வணன் மரபிற்குரியதாக) சித்தரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. **(சிகிரியாவில் மாத்திரம் நாகபடக்குகையினுள் வரையப்பட்ட ஓவியச் சிறையில் நாக மரபு தனித்துவமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.)** இலங்கையின் காவல் தெய்வமாக விஷ்ணு கருதப்பட்ட நிலையில் பௌத்த மரபுகளில் நாகரை அமானுஸ்ய சக்தி படைத்த தேவர்குலம் போன்ற ஒரு பிரிவினராக சித்தரித்த மரபினை பௌத்த இலக்கியங்களிலும் பௌத்த ஓவியங்களிலும் காண்கின்றோம். ஆனால் ஈழத்து சாசனச் சான்றுகளினூடாக ஆராயும்போது நாகவம்சத்தினர் பௌத்தத்திற்கு முந்திய இலங்கையின் வம்ச ஆட்சியாளர்களாக விளங்கியிருந்தமையும், சிவவழிபாட்டிற்குரியவர்களாக அவர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதனையும் தெளிவாக அறியமுடிகின்றது. தீசனது ஆட்சியின்போது அனுராதபுரம் இந்து மதத்திற்குரிய தலைநகரமாகவே இலங்கையில் விளங்கியிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பௌத்தத்தின் வருகையின் பின்னரேயே தேவனம்பியதீசன் இந்து சமயத்திற்குரிய ஆதரவினைக் கைவிட்டபோதிலும் நாகவம்சத்தினரான அவனது முன்னோர் வளர்த்தெடுத்த இந்துசமய நிறுவனங்கள் அனுராதபுரகால இலங்கையில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த வகையை கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்தி உள்ளன. பௌத்த கட்டிட சிற்பக்கலை மரபுகளுடன் நாகர் வம்சத்தினரின் கலைக்கோலங்கள் இணைக்கப்பட்டு ஸ்தூபிக்கட்டிடக் கலைப் பாரம்பரியமாக அவை மாற்றப்பட்டுவிட்டமையைக் காண்கின்றோம். நாகதுவாரபாலகர் வடிவங்கள் அவ்வாறு இணைந்து கொண்டமைக்கான சிறப்புதாரணமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

நாகரும் வேல் வழிபாட்டு மரபும்

ஈழத்து இந்து வழிபாட்டு மரபுகளில் வேல் வழிபாட்டு முறை இற்றைவரைக்கும் மிக ஆழமான முறையில் வேரூன்றியிருப்பதனைக் காணலாம். வே.அம்பிகைபாகன் தனது நூல் ஒன்றில் குறிப்பிடுவதுபோன்று நாகருடனான இலங்கையில் மகாபாரதம் குறிப்பிடும் 'காண்டவதகனம்' நிகழ்ந்த மரபு ஒன்றினை அடையாளப்படுத்துவதன் மூலம் நாகருக்கும் முருக வழிபாட்டிற்குமிடையில் இருந்திருக்கக்கூடிய மிக நெருங்கிய தொடர்பு வெளிப்படையாகின்றது. கதிர்காமம் அன்றைய காலகட்டத்தில் வகித்திருந்த பண்பாட்டு நிலையில் கந்தபுராண கலாசாரம் இலங்கையில் வேர்விட்டுக் கிளைத்திருந்தது என்பதும், நாகர் வம்ச மரபினர் அதன் பின்னணியில் இருந்து அப்பண்பாட்டை வளர்த்தெடுத்திருந்தனர் என்பதும் தற்போது தெளிவாகின்றது. **பெருங்கற்கால முதுமக்கட்தாழிகளுக்குள் வைக்கப்பட்டுக**

கிடைத்த இரும்பிலான வேல் கருவியிலிருந்து கதிர்காமம், செல்வச்சந்நிதி வரைக்கும் அம்முருக வழிபாடு இன்றுவரை உயிரோட்டமாக இருந்து கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். அன்றைய அமுதசுரபிக்குள் அமிழ்ந்து போன அக்ஷய பாத்திரம் இன்று **'அன்னக்கந்தராக'** கதிர்காமத்திலும் செல்வச்சந்நிதியிலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் அம்மரபு நாகவம்ச மரபு என்று கூறினால் அது மிகையாகாது. இப்பின்னணியில் இலங்கையில் நாக வம்சத்தினரின் சமயப் பங்களிப்பினை மேலும் ஆராய்ந்து செல்வதற்கு இடமுண்டு.

நாகர்இன மக்கள் வளர்த்தெடுத்த கணபதி வழிபாட்டு மரபுகள்

வரலாற்று உதயகாலம் விசயனின் இலங்கை வரவுடன் (நூல் நூற்றலுடன்) ஆரம்பிக்கின்றது. மகாவம்சத்தில் நாகதீப என்பது தமிழ் நூல்கள் கூறும் நாக நாடாகும். **நாகதீப அரசர்களது சண்டையை அடக்க புத்தபிரான்** இரண்டாவது தடவையாக **நாகதீபம்** வந்ததாக மகாவம்சம் கூறுகிறது. கந்தரோடையிலிருந்து அகழ்வின்போது மீட்டெடுக்கப்பட்ட மூன்று சுடுமண் வினாயகர் சிற்பங்கள் இக்கட்டத்தில் எமக்கு மிக முக்கியமான சான்றாக உள்ளன. நூல் நூற்றல் தொழிற் தேர்ச்சியில் ஈடுபட்டிருந்த பெருங்கற்கால சமூக - பொருண்மியத்திற்குள் உருவான மிகை உற்பத்தியே நாகதீப அரசர்களது அரசுரிமைப் போட்டிக்கான அடிப்படைக் காரணமாக அமைந்தது. **அச்சமூகத்தினுடைய வாணிபத் தெய்வமாகவே கணபதி தொழிற்பட்டிருந்தார் என்பது இங்கு வெளிப் படையான ஓர் அம்சமாகும்.**

செழிப்புத் தெய்வக் கோட்பாட்டில் வினாயகரும் நாகரும
(Fertility cult and serpant with Ganapati worship)

நாகர்கோயிற் பகுதியில் ஆதி நாகர் இராச்சியமும், அவர்களது குடியிருப்புக்களும் இருந்தமைக்கான ஆதாரங்களை ருசுப்படுத்துமாப்போல இக்கிராமத்தில் காணப்படும் நாக எனும் பதத்தினை உள்வாங்கிய பல பண்புகள் மக்கள் வாழ்வில் இன்றுவரை நின்று நிலைத்துள்ளன. அப்பண்புகள் முழுவதும் பெருங்கற்கால ஜீவனோபாய வாணிப நுட்பங்களைக் கொண்டிருப் பதனைக் காணலாம்.

"தென்னாசியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாய் பல வகைப்பட்ட இனங்கள் மத்தியில் வழங்கி வந்த பல வழிபாட்டு முறைகளும், தத்துவங்களும் காலப்போக்கில் இணைந்து இன்று இந்து மதம் என்னும் பொதுப்பெயர் பெற்றது..... ஆனால் தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய இடங்களிற் காணப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டில் இந்து மதத்திற்குரிய புராதனச் சான்றுகள் காணப்படுவதினால் தென்னிந்தியச் செல்வாக்கால் இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் இந்து மதக் கருத்துக்கள் தோன்றின எனக் கூறலாம்.... நீலகண்டசாஸ்திரி இலங்கைக்குச் சைவமதத்தின் அறிமுகம் தமிழ்நாட்டின் பின்னணியில் தோன்றியது என்பதில் சந்தேகம்

இல்லையெனக் கூறியிருப்பது பொருத்தமானதாகத் தெரிகிறது" என ப.புஸ்பரத்தினம் மேற்கோளுடன் குறிப்பிட்டிருப்பது எமது இந்த ஆய்வில் முக்கிய கருப்பொருளாகின்றாது. ஏனெனில் சைவசமயம் என்பதற்கான பொருளும், தத்துவமும் வரலாற்று மானிடவியல் நோக்கில் பிராமணீயக்கிரியைகள் சார்ந்ததாக இல்லாமல் பயிர் வேளாண்மரபுக் கிரியைகளும், மண்ணிடை மரித்தவரை வைத்து மூடிவிடும் சடங்குகளும் கலந்த நிலையில் உருவான ஒரு வாழ்க்கை முறையே ஆகும். அவ்வாழ்க்கை முறை தமிழகத்திலிருந்து இலங்கைக்கு பரப்பப்பட்டது என்று குறிப்பிடுவதிலும் பார்க்க தென்கிழக்காசியாவிலிருந்தே இலங்கைத் தீவு ஊடாக தமிழகத்தைச் சென்றடைந்திருக்க வேண்டும் என்று கொள்வதற்கான தொல்லியற்சான்றுகள் அதிகளவில் கிடைத்து வருகின்றன. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அக்குறுகொட என்ற மையத்தில் கிடைத்த அரும்பொருட்கள் அக்கருத்தினை மீண்டும் வலியுறுத்தத் தூண்டுகின்றன.

நீலகண்டசாஸ்திரி குறிப்பிட்டவற்றின் பின்னணியில் ஓரளவிற்குச் சாத்தியமான கூறுகள் கலந்திருப்பினும், அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் அகழ்வாய்வின் பின்னணியில் மாற்றுக்கருத்துக்களையும் முன்வைக்க வேண்டியவர்களாக உள்ளோம். அதாவது தென்னிந்தியப் பெருங்கற்பண்பாட்டு கேந்திரமையமான மஹாராஷ்டிர மானிலத்தின் தென்பகுதியில் அதாவது கர்நாடக மானிலத்தின் வட பகுதியில் கி.மு.1000ஆம் ஆண்டிலிருந்து அப்பண்பாடு தெற்கு நோக்கி பரவிவந்து, தமிழகத்தை கி.மு.800க்குச் சற்று முற்பட்ட காலப் பரப்பிலும், அதற்கு தெற்கே உள்ள இலங்கைத்தீவினை இன்னும் சற்றுப்பிற்பட்ட காலத்திலும் தழுவிக் கொண்டிருந்ததாக தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். தென்னாசியாவில் நகரங்களினதும் அரசுகளினதும் தோற்றத்தினை ஆராய்ந்த அலீஜின்கூட இதே காலவரையறையைக் கொள்வதனைக் காண்கின்றோம். இருந்தபோதும் இப்பண்பாட்டுக்கெல்லாம் உயிரோட்டமான ஜீவாதாரமாகத் திகழ்ந்த நெல்லரிசியும், அதன் உற்பத்தி அறுவடையும் தென்னிந்தியப்பரப்பில் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்னர் தென்கிழக்காசியாவில் முதலில் தாய்லாந்திலும், பின்னர் பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் தோற்றுவிக்கப்பட்டிருந்த முறைமையை அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுச் சான்றுகளினூடாக உறுதிப்படுத்தி உள்ளனர். இங்கு கி.மு.30000ஆம் ஆண்டிற்குரிய ஈமக் காடொன்றில் நெல்லரிசியைக் கொண்டிருந்த மட்பாண்டங்களும், அவற்றுடன் இணைந்து காணப்பட்டிருந்த செங்கட்டிகளுடனாக நெல் உமியும் [Paddy Husk] தொல்லியல் அகழ்வாய்வூடாக வெளியுலகிற்குத் தெரியப்படுத்தப்பட்டன. எனவே பெருங்கற்கால ஜீவாதாரமாகத் திகழ்ந்த நெற்பயிர்ச்செய்கையின் முதல் உற்பத்திப் பண்பாடு நிலவிய பிராந்தியமாக தென்கிழக்காசியா விளங்கியிருந்த நிலையில் இலங்கைக்கான நெல் உற்பத்திப் பண்பாட்டின் அறிமுகம் தமிழகத்திலிருந்து முதன்முதலாக இங்கு வந்திருக்கக்கூடிய சாத்தியம் பற்றிய எண்ணக்கருவை இப்பொழுது மீள்பரிசீலனைக்கு உட்படுத்தவேண்டியுள்ளது. அவ்வழியே ஈழத்தின கலையுருவாக்கம் தொடர்பான விடயங்களிற்கூட தென்கிழக்காசியாவே முதற்செல்வாக்கு செலுத்தியிருந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை. ஒரு

புதிய சமயத்தின் சடங்காக (சைவம்?) மோதகக்கணபதி [Ganapati worship with Rice cake] மரபு தென்னிலங்கையூடாக இராசரட்டைப் பரப்பிற்கு செறிந்து வந்திருந்தது என்றால் மலேசியா, யாவா (இந்தோனேசியா நாடுகளிற் சில) தென்னிலங்கையுடன் கொண்டிருந்திருக்கக்கூடிய சமுத்திரவியற் தொடர்புகளை உள்ளீர்த்துக் கொண்டிருந்த ஒரு வரன்முறையை குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். [இங்கே தான் தென்னிலங்கையிலுள்ள மகியங்கணை விகாரைக்கு கௌதமபுத்தர் ஆகாய மார்க்கமாக முதலாவது வருகையாக வந்திருந்ததாகக் குறிப்பிடப்பட்ட தொன்மம் துலங்குகின்றது.]. தென்கிழக்கிலங்கைத் துறைமுக நகரங்கள் இலங்கைக்கு பௌத்தம் கொண்டு வரப்படுவதற்கு முன்னரேயே இந்தோனேசிய நாடுகளிலிருந்து மிகவும் தொன்மையான இந்துப் பண்பாட்டு மரபுத் தொடர்புகளை ஈர்த்து வைத்திருந்த வகையினை அக்குறுகொட, கதிர்காமம் போன்ற மையங்களில் நிகழ்த்தப்பெற்ற ஆய்வுகளினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையை இங்கு காணமுடிகின்றது. அந்தவகையில் மகியங்கணை மற்றும் கதிர்காமம் உள்ளிட்ட தென்கிழக்குப் பிராந்தியமே கற்காலயுகத்தின் முடிவிலும் வரலாற்றுக்காலத் தொடக்கத்திலும் வாழ்ந்து, இற்றைவரைக்கும் இலங்கையின் **பூர்வீகக் குடிமக்கள** என்ற பெயரைப் பெற்றுள்ள வேடர்கள் வாழ்ந்த - வாழ்ந்துவரும் பிரதேசமாகும்.

மகியங்கணை- வாகரை வேடர்கள்

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகாலத் தொடக்கத்திலிருந்து இற்றைவரைக்கும் மாற்றமடையாத ஜீவனோபாய உத்திமுறைகளைக் கையாண்டு தொடர்ச்சியாக வாழ்ந்து வருகின்ற ஓர் ஆதிச்சமூகமாக **மகியங்கணை** மற்றும் **மட்டக்களப்பு - வாகரைப் பிராந்திய** வேடர்குலம் விளங்குகின்றது. இச்சமூகத்தினர் எண்ணிக்கையில் தற்போது குறைவடைந்துகொண்டு வருகின்றபோதும் கற்காலமனிதர்கள் இலங்கையில் எவ்வாறு வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கு இவ்வேட்டுவ சமூகத்தினரின் வாழ்வுமுறை ஓர் உதாரணத்திற்குரிய உரைகல்லாக அமைகின்றது. மகியங்கணை வேடர்கள் **கதிர்காமப் பரப்பினை** தமது பண்பாட்டு மையமாகக்கொண்டு தென்கிழக்குக்காட்டுப்பிராந்தியத்திற்குள் வாழ்ந்து வருவதனைக் காணலாம். மட்டக்களப்பு - அம்பாறை - கதிரவெளிப்பிராந்தியங்களுக்குள் வாழ்ந்துவரும் வேட்டுவ இனங்கள் **வாகரையை** தமது பண்பாட்டு மையமாகக் கொண்டு வாழ்ந்து வருவதனைக் காணலாம். இந்த இருபிரிவினரும் **தமிழ்மொழியையே** தத்தமது பண்பாட்டு மொழியாக வெளிப்படுத்திக் கொண்டிருப்பதனையும் காண்கின்றோம். இலங்கையின் **ஆதிவாசிகள்** என்றவோர் அடிப்படையில் அவர்களது தோற்றம், வாழ்வுமுறை, அவர்களது கலைப் படைப்புக்கள், ஜீவனோபாயத்தின் பொருட்டு கைவினைப்பொருட்களாக வெளிக்கொணரப்படும் வனப்பண்டங்கள் ஆகியன இலங்கையின் பண்பாட்டு வரலாற்றாய்வுகளுக்குரிய பிரதான விடயங்களாக உள்ளன. **கோடரி, ஈட்டி, அம்பு-வில்லு, கவண்கல், கவுராயம் போன்ற கருவிகள் அவர்களது ஜீவனோபாயத்திற்கு அடிப்படையாகப் பிரயோகிக்கப்படுகின்றன.** மரவுரி

ஆடைகளையே வேடர்கள் விரும்பி அணிகின்றார்கள் தேன், தினை, குரக்கன், கிழங்குவகைகள், மிருக இறைச்சி வகைகள் போன்றன அவர்களது பிரதான உணவு வகைகளாகும். சக்கி-முக்கிக் கற்களைக் கொண்டும், கடைதல் மூலமும் நெருப்பினை உருவாக்கும் இவ்வேடர்கள் கொடிய விலங்குகளிடமிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கும் அதனையே பயன்படுத்துகின்றனர். இவ்வேட்டுவ இனத்தினர் இற்றைவரைக்கும் கதிர்காமக் கந்தவேள் கோட்டத்துடன் கொண்டிருக்கும் தொடர்புகள், வழிபாட்டு முறைகள் என்பன இலங்கையில் முருக வழிபாட்டின் தொன்மையை எடுத்தியம்பப் போதுமானதாகும்.

அத்தியாயம் : மூன்று

வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சமூகங்களின் இருப்பும் பண்பாடும் இடஅமைவும்

'வரலாறு காலத்திலும் இடத்திலும் நிகழ்வது' எனக் கூறுவர். ஒரு நாட்டின் வரலாற்றுக்கும், அதன் புவியியல் மற்றும் தரைத்தோற்ற அமைப்புக்கும் இடையே மிகநெருங்கிய தொடர்புண்டு. உண்மையில் ஒரு நாட்டின் வரலாற்றிற்கு முற்பட்ட கால வரலாற்றுப் போக்கைத் தீர்மானிக்கும் காரணிகளில், புவியியல் தொடர்பான காரணிகள் மிகவும் முக்கியமானவையாகும். புவியியற் காரணிகளுள் முதலில் ஒரு நாட்டின் நிலையமானது அந்நாட்டைப் பாதித்த பிற பண்பாடுகள் மற்றும் நாடுகளின் செல்வாக்கைத் தீர்மானிக்கும். மேலும், அந்நாட்டின் **பௌதிக உறுப்புக்கள் - காலநிலை, மழைவீழ்ச்சி, தரைத்தோற்றம், நீர்வளம் நிலவளம் முதலானவை - அதன் நிலையத்துடன்** (Location) தொடர்புபட்டவை யாகவே இருக்கும். இப்பௌதீக உறுப்புக்களும் உள்நாட்டு வரலாற்றின், **வரலாற்றுக்கு முற்பட்டகாலப் பண்பாட்டு விருத்திகளைப** பெரிதும் பாதிக்கும் இயல்புடையவை. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட மற்றும் ஆதிகால வரலாற்றில், இத்தகைய புவியியற் காரணிகள் கொண்டிருந்த செல்வாக்கைப் புலப்படுத்தப் பல எடுத்துக்காட்டுகள் உண்டு. இலங்கை வரலாற்றில் புவியியற் காரணிகள் வகித்த பங்கை அறிந்துகொள்ளுதல் மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பண்பாட்டு விருத்திகளை நன்கு விளங்கிக்கொள்ளமுடியும்.

இலங்கையின் நிலையமும், கடல்முகப்பு வாணிப மையங்களும்

'இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில், இந்தியாவுக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு சிறு தீவாகும். வடக்கு அகலக்கோடுகள் 5 பாகை 54 கலைக்கும் 9 பாகை 52 கலைக்கும் இடையேயும், கிழக்கு உச்ச நெடுங்கோடுகள் 79 பாகை 39 கலைக்கும் 81 பாகை 53 கலைக்கும் இடையேயும் இலங்கை அமைந்திருப்பதைக் காணமுடியும். இலங்கையின் வரலாற்றைப் பொறுத்தவரையில், அது அமைந்துள்ள நிலையத்தின் முக்கிய தன்மைகள் இத்தீவின் வரலாற்று வளர்ச்சியினைப் பாதித்துள்ளன. ஆசியாவின் படத்தினை நாம் நோக்கும்போது இலங்கை ஒரு படிக்கட்டு மையமாக (step stone), வர்த்தகப் பாதைகள் சந்திக்கின்ற கேந்திர நிலையத்தில் அமைந்துள்ளதைக் காணலாம். இதனால், ஆசிய நாடு களுடன் நடைபெற்ற வணிகம் முதலான கடல்வழித் தொடர்புகளில், இலங்கை அதன் நிலையம் காரணமாக முக்கிய பங்கை வகிக்க முடிந்தது. இரண்டாவதாக, இந்தியாவுக்கு மிக அண்மையில் அதன் தென்கோடியில் இலங்கை இருக்கின்றது.

இதனால் பர்மா, மலாயா, கம்போடியா, சீயம், யாவா முதலான பிற அயல் நாடுகளைக் காட்டிலும், தென்னிந்தியாவுடனேயே இலங்கை கூடுதலான தொடர்புகளை வைத்திருந்தது. மலாக்கா நீரிணையூடாகச் சீனாவும், இலங்கையும் கடல்வழித் தொடர்புகள் கொள்ள வாய்ப்பிருந்தது. மூன்றாவதாக, இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பிருக்கும் வகையில் இலங்கை அமைந்திருப்பினும், இந்தியாவினின்றும் இலங்கையைப் பிரித்து வைக்கும் **பாக்குநீரிணை**, இலங்கையை ஒரு தனித்துவமானதும், சுதந்திரமானதுமான பண்பாட்டுத் தளத்திற்குரிய நாடாக உருவாக்க உதவியது. இதனால், ஓரளவுக்கு இலங்கையானது இந்திய உபகண்டத்தினின்றும் தனித்தவரலாற்று வளர்ச்சிப் போக்குடன் இயங்க இப்பாக்குநீரிணை உதவியுள்ளது.'

'இத்தன்மைகள் ஒவ்வொன்றும் இலங்கையின் வரலாற்றில் பெரும் மாறுதல்களை விளைவித்ததை விரிவாக நோக்கலாம். இந்துசமுத்திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்திருந்ததால், பழைய காலத்தில் மேலைநாடுகள் ஆசிய நாடுகளுடன் நடாத்திய வணிகத்தில், **மாதோட்டம்** போன்ற **வடபகுதிக்குரிய இலங்கைத் துறைமுகங்கள்** முக்கிய பங்கை வகித்தன. இத்துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட **உரோம, சீன, அராபிய, யப்பானிய நாணயங்கள்** இலங்கை பிறநாடுகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளை வலியுறுத்துகின்றன. **மகாதீர்த்தம்** என்றழைக்கப்பட்ட இத்துறைமுகத்தில் பிறநாட்டு வணிகர் தமது பொருட்களைப் பரிவர்த்தனை செய்தனர். இவ்வாறு வணிகத் தொடர்புகளில் இலங்கை ஈடுபட்டிருந்தமையினாலேயே, **கிரேக்க உரோம ஆசிரியர்களும், புவியியலாளர்களும்** இலங்கையைப் பற்றி அறிந்து, தமது நூல்களில் இலங்கையைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர்.'

'போர்த்துக்கேயர் வருகைக்கு முந்திய இலங்கை வரலாற்றில் செல்வாக்குப் பெற்ற அயல்நாடுகளில், இந்தியாவுக்குத் தனியிடம் உண்டு. இவ்வாறு தனியிடத்தை இந்தியா பெறக் காரணமாகவிருந்தது இலங்கையின் நிலையமே ஆகும். இலங்கையின் வரலாறு மட்டுமன்றி அதன் புவியியலைப் பாதிக்கும் பல அம்சங்கள் கூட இந்தியாவுடன் தொடர்புடையனவாகவுள்ளன. ஒரு காலத்தில், இலங்கை இந்தியத் தீபகற்பத்தின் ஒரு பகுதியாக, நிலப்பரப்பால் இணைக்கப் பட்டிருந்ததாக ஆராய்ச்சியாளர் கொள்கின்றனர். எனினும், வரலாறு தொடங்கும் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே, அதாவது **இதுவரைக்கும் 17 தடவைகளில் இலங்கை இந்தியாவினின்றும் நீர்ப்பரப்பினால் பிரித்து விடப்பட்டது.** இறுதியாக இற்றைக்கு 70000 வருடங்கட்கு முதல் இலங்கை மிக அண்மையிலிருந்த பெரும் உபகண்டத்திலிருந்து பிரித்து விடப்பட்டது. இருப்பினும் இந்தியாவிற்கு மிகவும் அண்மித்த நிலையில் இலங்கை விளங்கியதால், இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளும் வளர்ச்சிகளும், இயக்கங்களும், போர்களும் இலங்கையைப் பாதிக்கலாயின. **குறுணிக்கற்காலம் - பெருங்கற்காலம் தொடங்கி ஆரியர் வருகை, பௌத்தம் பரவல், மௌரிய, குப்த, பல்லவ, சோழ, விஜயநகர அரசுகளின் பண்பாட்டுத் தாக்கங்கள்**

வரைக்கும் இத்தீவின் சமுதாய பண்பாட்டுத்துறைகளில் மிகுந்த ஆதிக்கத்தைச் இந்தியா செலுத்தியிருந்தது. இலங்கைக் குடிகளில் பெருந்தொகையினர் வட-தென் இந்தியாவிலிருந்து குடியேறியவர்களின் வழிவந்தவர்களே. இந்தியாவில் உருவான **பௌத்தம், சைவம், வைஷ்ணவம் முதலான** சமயங்கள் இலங்கைக்கு பரவியதுமல்லாது அங்கு உண்டான சமய இயக்கங்களும் (எ-கு: மகாயானப் பிரிவு) இலங்கையைப் பாதிக்கவே செய்தன. சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் ஏற்பட்ட இலக்கிய, இலக்கண வளர்ச்சிகளும் இலங்கையில் எழுதப்பட்ட நூல்களைப் பாதித்துள்ளன. அரசியல் துறையில் ஏற்பட்ட மாறுதல்கள் அனைத்தும் இலங்கையைப் பாதிக்காவிடினும், தென்னிந்தியாவில் எழுச்சிபெற்ற முக்கிய அரசுகள் அடிக்கடி இலங்கையைத் தாக்கி வரலாயின. பிந்திய அநுராதபுர காலத்தில் இத்தாக்குதல்கள் அதிகரித்து, ஈற்றில் சோழப் பேரரசுக்குட்பட்ட பகுதியாக இலங்கை அமர்ந்தது. இவ்வாறு, தென்னிந்திய அரசியல் வளர்ச்சிகள் இலங்கையை அடிக்கடி பாதித்து வரலாயின. வடஇந்திய அரசியல் துறையில் நேரடியாக இலங்கையைப் பாதிக்காதிருக்க, தென்னிந்தியா அதிகமாகப் பாதித்தமைக்கும் இலங்கையின் நிலையமே காரணமாகும். இந்தியாவை விட **பர்மா, சீயம், கம்போடியா, ஸ்ரீவிஜயராச்சியம** (மலாயாத் தீபகற்பத்தில் விளங்கிய பேரரசு) சீனா முதலான நாடுகள் கலாசார சமய, வணிக உறவுகளை இலங்கையுடன் வைத்திருந்ததோடு இடையிடையே இலங்கையின் அரசியலையும் பாதித்தன. மாகன், சந்திரபானு ஆகியோரின் படையெடுப்புக்கள் பொலன்னறுவைக்கால இலங்கையில் புதிய விருத்திகள் ஏற்படக் காரணமாயிருந்தன. இதேபோல, 15ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் நடைபெற்ற **செங்-ஹோவின** (சீனப்) படையெடுப்புக்களும் அந்நேரத்தில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. இவ்வாறு, தொலைவிலுள்ள நாடு களும் இலங்கையின் அரசியற் போக்கைச் சில வேளைகளில் மாற்றியுள்ளதைக் காண்கிறோம்.'

இறுதியாக, இந்தியாவினின்றும் இலங்கை ஒரு **சிறு நீரிணை வாய்க்காற்ப் பரப்பால்** பிரிக்கப்பட்டிருந்ததால், இலங்கை தன் தனித்தன்மையைப் பேணித் தனக்கென ஒரு பண்பாட்டையும் வரலாற்றையும் உருவாக்கிக்கொள்ள முடிந்துள்ளது. சமயத்துறையில், பௌத்தம் தோன்றிய இந்தியாவிலேயே காலப் போக்கில் அது அருகி மறைந்துபோக, இலங்கையில் **தேரவாத பௌத்தம** அதன் தூய்மைகெடாது இன்றுவரை பேணப்பட்டுக் கொண்டிருப்பதாக (?) கருதப்படுகின்றது. இந்தியாவிலேற்பட்ட எல்லா மத, சமூக இயக்கங்களாலும், உள்நாட்டுப் போர்களாலும் குழப்பங்களாலும் இலங்கை பாதிக்கப்படாது, ஒதுங்கி வாழவும் முடிந்துள்ளது. கலைத்துறைகளில் ஒரு தனித்தன்மையைப் பெற்றும், தனக்கென ஒரு தனிப்பட்ட வரலாற்றுடனும் இலங்கை விளங்கவும் உதவியது இந்நிலையத்திலுள்ள நீரிணைப் பரப்பேயாகும். இவ்வாறாக, இலங்கையின் **முகப்பு நிலையத்தின்** ஒவ்வொரு அலகும் இலங்கைப்பண்பாட்டினைப் பல வழிகளில் பாதித்துள்ளதை நாம் காணலாம்.

பௌதிக உறுப்புக்கள் வரலாற்றைப் பாதித்தமை:

'இலங்கையின் இடஅமைவு நிலையத்தின் முகப்புத் தன்மைகளே இலங்கையை வெளிநாட்டுத் தாக்கங்களிலிருந்து பாதுகாத்து வைப்பதற்குரிய அளவுகோலைத் தீர்மானித்தன என்று கூறினால் அது மிகையாகாது. வரலாற்றைப் பாதித்த உள்நாட்டுச் சக்திகளாக நாட்டின் பௌதீக உறுப்புக்களைக் குறிப்பிடலாம். **இலங்கையின் புராதனகால வரலாற்றில், நாட்டின் பௌதீக உறுப்புக்கள் பல - குறிப்பாகத் தரைத்தோற்றம், காலநிலை, மழைவீழ்ச்சி, நீர்வளம், நிலவளம், கனிப்பொருட்கள் ஆகியன செயற்பட்டு,** அவ்வரலாற்றைப் பாதித்துச் சென்றுள்ளதைக் காண்கின்றோம்.'

'இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட **ஆதிக் குடியேற்றங்களும் அவற்றின் பரவலும்** தரைத்தோற்றம், காலநிலை, நிலவளம் முதலானவை பௌதீகக் காரணிகளாலேயே தீர்மானிக்கப்பட்டன. இந்தோ-ஆரியப் பண்பாட்டின் குடியேற்றத் தொகுதிகளில் முக்கியமானவை, **வரட்சி வலயத்திலுள்ள வடக்குச் சமநிலம், தென்கிழக்குச் சமநிலம்** ஆகியவற்றிலேயே அமைந்தன. ஆறுகளையடுத்த வளம்பெற்ற நிலத்தையும், அடர்த்தி குறைந்த காடுகளையும், குறைந்த மழைவீழ்ச்சியையும் உடைய நிலப்பகுதிகளே அவர்களின் தேவைக்கு உகந்தனவாக இருந்தன. கடல் மட்டத்திலிருந்து 1000 அடிக்கும் உயரமான பகுதிகளில் சிறிது பின்னரே குடியேற்றங்கள் நடைபெறத் தொடங்கின. 2500 அடிக்கும் உயரமான மலைநாட்டுப் பகுதிகளில் 9ஆம் நூற்றாண்டுக்குப் பின்பே மக்கள் குடியேறினர். பொலன்னறுவை அரசின் வீழ்ச்சிக்குப் பின்னரே (13ஆம் நூற்றாண்டில்) மக்கள் பெருந்தொகையாக மலைநாட்டிற் குடியேறுவாராயினர். அதிக செழிப்பு, இரு பருவக் காற்றுக்களின் போது மழைவீழ்ச்சி என்பவற்றைத் தாழ்பூமிக் குளிர்வலயம் (தென்மேற்குச் சமநிலம்) பெற்றிருந்தும், **தொடக்க காலத்தில் களனிப் பகுதியில் ஒரு சிறு குடியேற்றமேயிருந்து வந்தது. இப்பகுதியும் 13ஆம் நூற்றாண்டளவிலேயே முக்கிய குடியேற்றமுடைய பகுதியாக மாறியது.**'

'**பொருளியல் வளர்ச்சியிலும்** இப்புவியியற் காரணிகள் முக்கிய பங்கை வகித்தன. பயிர்ச்செய்கைக்கு முதலில் இயற்கை வளமும் ஆண்டுதோறும் பெய்யும் மழையும் போதுமானவையாக இருந்தன. உணவுத்தேவை அதிகரிக்க நீர்த்தேக்கங்களை நிறுவி வயல்களுக்கு நீர்ப்பாய்ச்ச வேண்டிய தேவையும் எழுந்தது. **இந்நீர்த்தேக்கங்கள் தரைத்தோற்றவியல்புகளைப் பயன்படுத்தித் தொழில்நுட்பத் திறமையுடன் அமைக்கப்பட்டன.** மல்வத்து ஓயா, அம்பன் கங்கை, மகாவலிகங்கை, காலஓயா முதலான ஆறுகளின் நீரைப்பயன்படுத்தும் வகையிலேயே இக்குளங்கள் அமைக்கப்பட்டன. இதைத்தவிர, பிறநாடுகளுடன் நடைபெற்ற வணிகத்தில் இடம்பெற்ற இரத்தினக்கற்கள், முத்துக்கள், வாசனைத் திரவியங்கள் ஆகியன இலங்கையின் இயற்கை வளங்கள் வாயிலாகப் பெறப்பட்டவையே. இவற்றைப் போலவே, மக்கள் மேற்கொண்ட பிற பொருளியல் முயற்சிகளையும் புவியியற் காரணிகள் பாதிக்கலாயின.'

'இலங்கையின் அரசியலிலும், ஆட்சிமுறையிலும இப்பௌதீக உறுப்புக்கள் தொழிற்பட்டன. ஆதிகால இலங்கையின் **அரசியல் நிருவாகப் பிரிவுகள்**, இயற்கை அமைப்பைப் பின்பற்றியே அமைந்தன. **இராஜரட்டை** என்ற முக்கிய பிரிவுக்கு **மலைநாடும்,** மகாவலிகங்கையும் தென்கிழக்கு எல்லைகளாக விளங்கின. மத்திய மலைநாட்டுப் பிரதேசத்தைக் கொண்டது **மலையரட்டை** எனவும், மகாவலிக்கு மேற்கேயும், மலையரட்டை களுகங்கை இரண்டுக்கும் தெற்கேயும் அமைந்த தென்னிலங்கைப் பகுதி **'உருகுணை'** அல்லது **'உரோகணம'** என்றும் அழைக்கப்பட்டன. இப்பெரும் பிரிவுகளிடையே ஏற்படுத்தப் பட்ட உட்பிரிவுகளும், அதிகமாக இயற்கை எல்லைகளைப் பயன்படுத்தியிருந்தன. தலைநகர்கள் தெரிவுசெய்யப்பட்டபோதும் இப்பௌதீகக் காரணிகள் கருத்திற் கொள்ளப்பட்டன. மல்வத்து ஓயாவில் அனுராதபுரமும் மகாவலிகங்கைக்கு மிக அண்மையில் பொலனறுவையும் அமைந்துள்ளன. சில இடைக்காலத் தலைநகர்களும் அரச பீடங்களும் மலைக்குன்றுகளிலும், பாறைத்தொடர்களிலும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. சிகிரியா, யாப்பாகு, தம்பதெனி, குருணாகலை, வாகிரிகலை என்பன இவ்வகையில் முக்கியம் வாய்ந்தவையாகும்.'

'ஆதிகால இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்களின்போதும், அந்நியப் படையெழுச்சிகள் நிகழ்ந்தபோதும், நாட்டின் தரைத்தோற்றவியல்புகள், ஆறுகள் முதலானவை பயன்படுத்தப்பட்டன. அனுராதபுரத்திலிருந்து உருகுணைக்குப் படைகள் அனுப்பப்பட்டு வந்தபோதும், உருகுணையிலிருந்து அனுராதபுரத்தை நோக்கிப் படைகள் அணிவகுத்துச் சென்றபோதும், மாந்தோட்டையிலிருந்து மகியங்கணைவரை மகாவலிகங்கையின் கிழக்குப் புறமாகவிருந்த பாதை உபயோகிக்கப்பட்டது. துட்டகாமணியின் படைகள் உருகுணையிலிருந்து முன்னேறி இதே பாதையாற் சென்று மாந்தோட்டையில் ஆற்றைக்கடந்து அனுராதபுரம் வரை சென்றன. தென்இந்தியாவிலிருந்து அடிக்கடி படையெடுப்புக்கள் நடாத்தப்பட்டபோது, அந்நியப்படையினர் மாந்தையில் இறங்கி, மல்வத்து ஓயாக்கரையாக அனுராதபுரத்தை அடைந்தனர். அனுராதபுரத்திலிருந்து தப்பியோடிய அரசர்களும் தெற்கேயிருந்த காடுகளிலும், மலையகத்திலும் தலைமறைவாக வாழ்ந்து பின்னர் படைகளைத் திரட்டி மீண்டும் அரசைப்பெற்றனர்.'

'இயற்கையமைவு காரணமாகவே, அரசியல் முக்கியம் வாய்ந்த பகுதியாக உருகுணை அக்காலத்தில் விளங்கியது. அனுராதபுர ஆட்சியாளருக்கெதிராகக் கலகஞ் செய்தவர்கள் உருகுணையைத் தமது புகலிடமாகக் கொண்டனர். மத்திய மலைத்தொடரும், காடுகளும் இராசரட்டை ஆட்சியாளரை உருகுணையைச் சரிவர அடக்கவியலாதவாறு செய்தன. இதனால் கலகக்காரரும், விடுதலை வீரரும் உருகுணையிலிருந்து போதிய ஆயத்தங்கள் செய்து பின் அனுராதபுரத்துக்குப் படையெடுத்துச் சென்றனர். துட்டகாமணி, விஜயபாகு போன்றவர்கள் தம் விடுதலைப் போரை உருகுணையிலிருந்தே ஆரம்பித்தனர். வலிமைமிக்க சோழராலும், உருகுணை நன்கு அடக்கப்படவில்லை. மகாவலிகங்கைக் கடவைகளைக் காவல் செய்வதன்மூலம் உருகுணைப்

படைகளை முன்னேறவிடாது தடுப்பதற்கான வழிவகைகள் அக்காலப் போர் முறைகளில் கைக்கொள்ளப்பட்டன. உள்நாட்டு வணிகத்துக்கும் போக்குவரத்துக்கும் பயன்பட்ட பாதைகள் பெரும்பாலும் இயற்கையமைவுடன் தொடர்புடையவையாக விருந்தன.

இவ்வாறாக, மக்களின் குடியேற்றங்கள், பயிர்ச்செய்கை முதலான பொருளில் முயற்சிகள், அரசியற் பிரிவுகள், தலைநகர்களின் தெரிவு, போர்கள், படையெழுச்சிகள் என்ற பலதிறப்பட்ட தேவைகளுக்கும் நாட்டின் இயற்கை அமைப்புப் பயன்பட்டுள்ளது.'

இலங்கையின் வரலாற்றுக் காலப்பரப்பின் தொடக்கம் கி.மு.3ஆம் நூற்றாண்டு எனப் பொதுவாக வரையறை செய்யப்பட்டுள்ள போதிலும், பிராந்திய அடிப்படையிலும் எழுத்து மூலாதாரங்கள் கிடைத்ததன் அடிப்படையிலும் வரலாற்றுக்காலத் தொடக்கத்தினை கி.மு. 5ஆம் நூற்றாண்டு என இப்பொழுது கொள்கின்றனர். அதாவது இலங்கைக்கு மகிந்ததேரரது தலைமையில் பௌத்த வாழ்வியக்கம் ஒன்று வருமுன்னர் அல்லது ஏற்படுத்துவதற்கு முன்னரேயே வரிவடிவ வளர்ச்சி இங்கு நன்கு நிலைபெற்றுவிட்டிருந்தது. இவ்வரிவடிவ வளர்ச்சிக்குப் பொறுப்பாக இருந்த மக்கள் நிலையான பயிர்ச்செய்கையுடனும், குள நீர்ப்பாசன வலைப்பின்னல் முகாமைத்துவத்துடனும், பன்னாட்டு வாணிப முயற்சி களுடனான முனைப்பினையும் கொண்டிருந்தவர்களாகும். அவ்வகையில் கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் கரையோரப் பிராந்தியங் களிலேயே முதன்முதலாக வரிவடிவத்திற்கான தேவை முதலில் உணரப் பட்டது. நாகவம்சத்தினைச் சேர்ந்த பெருங்கற்கால மக்கள் கூட்டத்தினரே இலங்கையில் முதன்முதலாக வரிவடிவ வழக்கினையும் ஆரம்பித்து வைத்தனர்.

இலங்கையின் வரலாற்றுக் காலத்தினைத் தொடக்கிவைத்த மக்கள் கூட்டமாக **நாகவம்சத்தினரைக** கொள்வோமாயின், இலங்கையின் வரலாற்றுக்காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டாகும் எனக் கொள்ளமுடியும். கௌதம புத்தர் வாழ்ந்த காலத்தில், இலங்கையில் நாகர்வம்ச அரசியல், நிர்வாக, பண்பாட்டு முறைமைகள் நன்னிலையடைந்திருந்தமையினை அண்மைக்காலத் தொல்லியற் சான்றுகளும் தெளிவுபடுத்துகின்றன. கந்தரோடையில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நாகநாணயம் ஒன்று இதற்கான அகச்சான்றாக விளங்குகின்றது. பௌதம புத்தர் இலங்கைக்கான தனது இரண்டாவது விஜயத்தினை நாகமன்னர் இருவரின் உட்பூசல்களைத் தீர்த்து வைப்பதற்காக நாகதீபத்திற்கு வருகை தந்ததாக அமைந்துள்ளது. அநுராதபுர இராச்சியம் ஒன்று தோற்றம் பெறுவதற்கு முன்னர் **நாகதீப அரசு நாகர்களின** தலைமையில் தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்து விட்டது என்தனை இக்கதை உறுதிப்படுத்துகின்றது.

தென்னிந்தியாவிலுள்ள உறையூரில் அகழ்வின்போது கிடைத்த மண்பாண்டச் சாசனமொன்றில் **பூநாகன** எனத் தமிழ்ப் பிராமி வடிவில் பொறித்திருப்பதும்,

இலங்கையிலுள்ள **குருநாகலில** மிக அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்ப் பிராமிச் சாசனமொன்றில் காணப்படும் **குறுநாகர்** என்ற வாசகமும் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்குரியவையாகக் காணப்படுகின்றன. பூநகரியிலிருந்தும், கந்தரோடையிலிருந்தும், அநுராதபுரத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்ட தமிழ்ப்-பிராமி வரிவடிவங்களானவை கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்குரியவையாகக் காணப்படுகின்றன. உறையூரில் இருந்து மீட்கப்பட்ட தமிழ்ப் பிராமிச் சாசனங்கள், அண்மையில் கொடுமணற் பரப்பிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவையும் கி.மு. 5ஆம் நூற்றாண்டுக்குரியவையாகக் காணப்படுகின்றன.

இப்பின்னணியில் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால சமூக அமைப்புப் பற்றியும், அதன் இயக்கவியல் பற்றியும் ஆய்வுசெய்ய முற்படும்போது கி.மு.6ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியினை அல்லது கி.மு. 5ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தினை மேல் எல்லையாகக் கொள்ளவேண்டியுள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கையின் கீழ்எல்லை கி.மு. 29000ஆம் ஆண்டுகள் வரை நீடித்துச் செல்வதனைக் காணலாம். இக்காலப் பரப்பில் இலங்கையின் சமூக, பொருளாதார, பண்பாட்டு முறைகள் பற்றி ஆய்வு செய்வோருக்கு தொல்லியல் அகழ்வாய்வுகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளே முக்கியமான ஆதாரங்களாகின்றன. குறுணிக்கற்காலப் பண்பாட்டிற்குரிய மண்படையடுக்குகளைக் கொண்ட இலங்கையின் இக்காலப் பரப்பானது தென்னிந்திய 'தேரி'ப் பண்பாட்டினைச் சிறப்பாக ஒத்துக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பழங்குடிகள் என்ற நிலையில் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட மக்களது இனம், வாழ்வு முறை, குடியிருப்பு மையங்களின் பரவல் போன்ற இன்னோரன்ன விடயங்கள் பற்றிய ஆய்விற்கு அண்மைக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியற் சான்றுகள் முதற்தரச் சான்றுகளாக உள்ளன. திட்டமிட்டவகையில் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலமையங்களைக் கண்டுபிடித்து ஆய்வு செய்யும் முயற்சிகள் இப்பொழுது குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் கண்டுவருகின்றது. தற்செயலாகக் கண்டு பிடிக்கப்பெற்று தொடர்ந்து ஆய்விற்குட்படுத்தப்பட்ட மையங்களிலிருந்து கிடைத்த சான்றுகளும் வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கை மக்கள் பற்றியும், அவர்களின் ஜீவனோபாயம் பற்றியுமான தகவல்களைத் தந்துதவுகின்றன.

இலங்கையில் மூன்று பிரதான வட்டாரங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட கால தொல்லியற் சான்றுகளை வழங்கும் பிராந்தியங்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

1. இரத்தினபுரி, பலாங்கொட உயர்நிலம் உள்ளிட்ட மத்திய மலைநாட்டுப் பரப்பு.
2. வட மேற்கிலங்கையின் கரையோரப் பரப்புடன் இணைந்த இரணைமடுப் பரப்பு.

3. வட கிழக்கிலங்கையின் நந்திக்கடல் - நாயாறுக்குக் கீழ் கொட்டியாரத்திற்கு மேல் உள்ள பரப்பு ஆகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பரப்பினுள் விசாலமான அகழ்வுகள் தற்போது மேற்கொள்ளப்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பொழுது முதன் முறையாக வரலாற்றுக்கு முந்தியகால யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலை பற்றியும் அறிந்துகொள்ளமுடிகின்றது. பொதுவாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வாழ்வு முறையானது பெருங்கற்காலப் பண்பாட்டுடனேயே ஆரம்பிப்பதனை தொல்லியலாளர்கள் எடுத்துக்காட்டியிருப்பினும் ஒரு புரட்சிகரமான மாற்றமாக HOMO ERECTUS மனிதன் வாழ்ந்த காலப் பகுதியாக பழங்கற்காலப்பரப்பு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தொல்லியலாய்வில் நிபுணத்துவம் பெற்றவரான சிரான் தெரணியாகல அதனை இப்பொழுது உறுதிப்படுத்தியுள்ளார். அந்தவகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வடமராட்சியில் மாயக்கைப் பிரதேசம் வரலாற்றுக்கு முற்பட்டகாலப்பரப்பாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. 1984 ஆம் ஆண்டில் இந்நூலாசிரியரினால் பருத்தித்துறைக்கு அண்மையிலுள்ள மாயக்கை எனத்தற்போது அழைக்கப் படும் குகைப்பிராந்தியத்திலிருந்து சேகரிக்கப்பட்ட சேர்ட் (Chert) வகையிலான பழங்கற்காலக்கருவிகளை அடிப்படையாகக் கொண்டே சிரான் தெரணியாகலவின் கருத்தினை இலங்கைத் தொல்லியற் திணைக்களம் 2011இல் பிரகடனப்படுத்தியுள்ளது.

இலங்கையின் மத்திய பாகத்தில் இருந்து இவ்வகையான சான்றுகளை தொல்லியலாளர் அகழ்ந்தெடுத்துள்ளனர். இரத்தினபுரியில் முதன்முதலாக மனித எழும்புக்கூடுகளுடன் இணைந்த வகையிலான எலும்பிலான ஆயுதங்கள், கற்கருவிகள், தோல்பதனிடும் கற்கருவிகள், மிருக உயிர்ச்சுவடுகள் போன்றன கண்டுபிடிக்கப்பட்டன. இதனை இரத்தினபுரிப் பண்பாடு எனத் தொல்லியலாளர் குறிப்பிட்டழைத்தனர். இதற்குப் பின்னர் பலாங்கொடையிலிருந்தும், பண்டாரவளை யிலிருந்தும் மனித எலும்புக்கூடுகளுடன் இணைந்த தொல்லியல் எச்சங்கள் பல பெறப்பட்டன. அதன் பின்னர் அது பலாங்கொடைப் பண்பாடு என பெயர் சூட்டி அழைக்கப்படலாயிற்று. இவ்வாறு இரத்தினபுரிப் பண்பாட்டு - பலாங்கொடைப் பண்பாட்டு தொல்லியல் எச்சங்களும் கிடைக்கப்பெற்ற ஒரு சில மண்டையோடு களை ஆராய்ந்தபோது அவற்றின் தோற்ற இயல்புகள் இரு பிரதான அடிப்படைகளில் காணப்பட்டன. அவையாவன,

1. நீக்கிரோ இன இயல்பு
2. ஆதி ஆஸ்திரேலிய இன இயல்பு என்பனவாகும்.

இவ்விரு இனங்களும் திராவிட இந்தோ - ஆரிய கலாச்சார மக்கள் இந்திய உபகண்டத்திலும், இலங்கையிலும் செல்வாக்கு நிலைகளை ஏற்படுத்து வதற்கு முன்னர் உயர்ந்த பீடபூமிகளில் வாழ்ந்தவர்களாக எடுத்துக் காட்டப பட்டுள்ளனர். இவ்வடிப்படையில் இலங்கைக்கும் இந்தியத் துணைக்கண்டத்தின்

தென்பிராந்தியத்திற்குமிடையே நெருங்கிய மக்கட் தொடர்பு இருந்து வந்துள்ளது. கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன் வட மேற்கிந்தியாவில் இந்துநதியை மையமாகக் கொண்டு பெருநகரங்களில் வாணிப நடவடிக்கைகள் சமுத்திரப் போக்குவரத்து முறையுடன் வளர்ச்சி கண்டிருந்தபோது தீபகற்ப இந்தியாவின் தென்பரப்பிலும் இலங்கையிலும் மக்கள் அலைந்து திரிந்து வேட்டையாடி உணவு சேகரித்து வாழும் முறையினைக் கொண்டிருந்தனர். இருந்தபோதிலும் வட மேற்கிலங்கையில் உள்ள மன்னார்க்குடாவிற்கும் மத்திய தீபகற்ப இந்தியாவில் வாழ்ந்த மக்களுக்கு இடையே வாணிபத் தொடர்பு இருந்திருக்கவேண்டும் என்பதனை இந்துநதிப் பள்ளத்தாக்கு நகரங்களில் கண்டெடுக்கப்பட்ட மன்னார் முத்துக்கள் ஊடாக அறியமுடிகிறது. அண்மைக்காலத்தில் தொல்லியல் அகழ்வுகளினூடாக சிந்துவெளிக்கும் மாலைதீவுகளிற்கும் இடையே இருந்த பண்பாட்டுத் தொடர்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இரத்தினக்கல் வாணிபத்தைப் போலன்றி முத்து வாணிபமானது ஆடை நெய்தல் தொழிலுடன் நெருங்கிய பிணைப்புடையதாகவும் இருந்தது. இலங்கையில் **ஆடை நெய்தல் தொழிலானது குவேனி வாழ்ந்த காலம** முதல் பழமை வாய்ந்ததாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. சிந்துவெளியூடாகவே இப்பிராந்தியங்களிற்கு ஆடை நெய்தற் தொழிநுட்பம் பரவியிருந்தது என இதுவரை காலமும் நம்பப் பட்டிருந்த பொழுதிலும், அண்மைக்காலத் தொல்லியல் அகழ்வுகளினூடாக **தென்கிழக்காசிய நாடுகளிலிருந்தே** அத்தொழிநுட்பமானது இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பரப்பப்பட்டது என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஆசியாவில் சிறந்த முத்துவாணிபம் மலேசியா, யாவாவிலேயே நடைபெற்றது என்பதனை சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை போன்ற தமிழ் இலக்கியங் களினூடாகவும் மலேமொழியில் எழுதப்பெற்ற **செஜாரா மிலாயு** என்ற இலக்கியத்தின் வாயிலாகவும் அறியமுடிகிறது. எனவே இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால சமூக இருப்பிற்கும் தென்கிழக்காசிய நாடுகளின் வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சமூக இருப்பிற்குமிடையே காணப்பட்ட நெருங்கிய தொடர்புகளை அண்மைக் காலங்களில் தொல்லியல் ஆசிரியர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். மத்தியகால இலங்கை வரலாற்றுடன் மலேசியா, யாவா போன்ற இந்தோனேசிய நாடுகள் கொண்டிருந்த அரசியல் கோட்பாட்டுத் தொடர்புகளுக்கும் இந்நாடு களிடையே காணப்பட்டிருந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தொடர்புகளும் காரணமாக அமைந்தன என்றால் அது மிகையாகாது.

இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட காலமே வரலாற்றிற்கு முற்பட்ட காலம் என்பதனை தொல்லியல் ஆய்வாளர் உறுதிப்படுத்தியுள்ளார். சிரான் தெரணியாகல என்பவரின் ஆய்வு முடிவுகளின்படி கி.மு. 29000 ஆண்டுகள் வரைக்கும் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பரப்பு விரிவடைந்து செல்கின்றது என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பொதுவாக வரலாற்றுக் காலத்திற்கும், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு என்னவெனில் இவ்விரு காலப்பரப்பிலும் வாழ்ந்த மக்களுடைய வாழ்க்கை பற்றி அறிய உதவும் மூலாதாரங்களின் தன்மையில்

உள்ள வேறுபாடகவே உள்ளது. வரலாற்றுக்காலப் பரப்பு சம்பவங்கள் பற்றி அறிவதற்கு பலவகையான வரலாற்று ஆவணங்கள் தோன்றியுள்ளன. ஆனால் வரலாற்றுக்கு முற்பட்டகால சமுதாய அபிவிருத்தி பற்றி அறிந்துகொள்வதற்கும் அதன் தொடர்ச்சியான சம்பவக்கோவைகளுக்குமான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இல்லாதிருப்பதாகும். பெருமளவுக்கு இத்தொடர்ச்சியை தொல்லியலாய்வின் முறைகள் மூலமே அறியப்படுவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. இவ்வறிவியல்துறை மூலமே இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால சமூக இருப்பின் தன்மையைப் பற்றி அறிந்துகொள்ளமுடிகிறது. அவ்வகையில் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இரு பிரதான கருவிப் புழக்க வேறுபாடு உடையவர்களாக வாழ்ந்த மக்கள் குழுமங்களாக இரத்தினபுரிப் பண்பாடும், பலாங்கொடைப் பண்பாடும் அமைந்தது. இரத்தினபுரிப் பண்பாடு குறுணிக்கற்கால வாழ்வியலையும் பலாங்கொடைப் பண்பாடு புதிய கற்கால வாழ்வியலையும் கொண்டிருந்தன என்பதை கருவிகளின் (Tools) வடிவமைப்பு உபயோகம் என்பவற்றினூடாக அறியமுடிகின்றது.

வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கைப் பண்பாடு:

வரலாற்றுக்கு முற்பட்ட கால தென்னாசியப் பண்பாட்டு ஆய்வுகள் முதன் முதலாக பிரித்தானிய குடியேற்றவாத நடவடிக்கைகளுடன் ஆரம்பிக்கப்பட்டமை போன்றே இலங்கையிலும் அத்துறை ஆய்வு நடவடிக்கைகளை பிரித்தானியர் ஆரம்பித்து வைத்தனர். தென்னாசியாவில் ஆங்கிலேயரது குடியேற்றவாத நடவடிக்கைகளை நிர்வாக அரசியல் ரீதியாக இலகுபடுத்தும் நோக்கோடு இப்பிராந்தியம் பற்றிய தொல்லியல், மானிடவியல், சமூகவியல், சாசனவியல் புகோளவியல் ஆய்வுகளை முன்னெடுத்துச் சென்றனர். உள்ளூர் கல்வியாளர்க்கு அவ்வத்துறைகள் பொறுத்த பயிற்சிகளை பிரித்தானிய நாட்டில் வழங்கி, அவர்களினூடாகவே தமது குடியேற்ற நாட்டு ஆதிபத்தியத்தை விசுவாசமாக முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு இப்பிராந்திய ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டனர். அவ்வகையில் இலங்கையிலும் பல்துறை ஆய்வுமுயற்சிகளை 19ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்து வைத்தமையின் பயனாக வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்று ஆய்வுத்துறை படிப்படியாக வளர்ச்சிபெற ஏதுவாயிற்று. அதுவே இலங்கையின் தொல்லியல் வளர்ச்சியின் முதற்படியாகவும் அமையக் காரணமாயிற்று.

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால ஆய்வு திட்டவட்டமாக எப்பொழுது ஆரம்பித்து வைக்கப்பட்டது என்பது பற்றித் தெளிவாகத் தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகாலப் பண்பாடு பற்றிய ஆய்வுகளில் எத்தகைய முறைகள் ஆரம்ப காலத்தில் பிரயோகிக்கப் பட்டிருந்தன என்பது பற்றியோ, அல்லது அதன் நோக்கங்கள் பற்றியோ எதுவும் குறிப்பிட முடியாதுள்ளது. கலாநிதி G.E. டானியல் என்ற பிரித்தானிய தொல்லியல் ஆய்வாளர் ஒருவர் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாடு பற்றிய வரைவிலக்கணத்தினை கொடுத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தொல்லியல் வரலாறானது ஒரு பிரதான ஆய்வின் படிநிலை எனினும் அவ்வாறான ஆய்வானது கிரேக்கர் காலத்திற்கும் பின்னோக்கி முன்னெடுத்துச் செல்ல ஏதுவானது."

இவரது குறிப்பின்படி கிரேக்கர் காலத்திற்கும் முற்பட்ட ஒரு நிலையே வரலாற்றுக்கு முற்பட்ட காலமாகும் என்ற கருத்து இழையோடுவதனைக் காணலாம். ஐரோப்பிய நோக்கில் ஒருவேளை அக்கருத்துச் சரியாக இருப்பினும் தென்னாசியாவைப் பொறுத்தவரையில் வரலாற்றுக்கு முற்பட்டகாலம் என்பது தனித்துவமானதாகவே அமைகின்றது. வட இந்தியாவைப் பொறுத்தவரையில் சிந்துநதி நாகரிக காலமும் தீபகற்ப இந்தியாவைப் பொறுத்த வரையில் பெருங்கற்காலப் பண்பாட்டுத் தொடக்கமும் வரலாற்றுக்காலத் தொடக்கமாகக் கொள்ளப்படுவதனைக் காணலாம்.

இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாடு பற்றிய ஆய்வினை ஆங்கிலேய நிபுணர்கள் தொடக்கி வைத்தாலும், அவர்கள் மத்தியில் ஐரோப்பாவை ஒத்த வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பண்பாடு இங்கு இருந்ததா என்பதையிட்டு பெரிதும் சந்தேகமே நிலவியது. எப்பொழுது இருந்து இலங்கை மக்கள் வசிப்பிடமாயிற்று என்பது ஒரு பெரும் கேள்விக்குறி யாகவே ஆங்கிலேயர் மத்தியில் இருந்து வந்தது. கி.மு. 100000 வருடங்களா அல்லது இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னரா இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாடு நிலவிற்று என்பதில் பெருமளவிற்கு ஐயப்பாடு நிலவியது. அவ்வாறாயின் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பரப்பில் எவ்வெவ் கட்டங்களினூடாக வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாட்டு வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டது என்பது பிரதான கேள்வியாகின்றது. இந்த இரண்டு வினாக்களுக்கும் திருப்திகரமாக விடையளிக்கக்கூடிய வகையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றி இலங்கையில் ஏதாவது ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டனவா என்பது சர்ச்சைக்குரியதாகின்றது.

அவ்வாறு நோக்கும்பொழுது (Pole) போல் என்ற ஆங்கிலேயர் ஒருவர் 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இருந்து மத்திய மலைநாட்டிலுள்ள ஆறரித்த சமவெளிகளில் இருந்து ஒருவகையான உபகரணங்களை அல்லது கருவிகளை (Tools) சேகரித்திருந்தார் என்பதனை அறியமுடிகின்றது. முதன்முதலாக இலங்கையின வரலாற்றுக்கு முற்பட்ட கால ஆய்வுமுயற்சியில் ஈடுபட்ட போல் மத்திய மலைநாட்டின் உயர்பீட பூமிகளில் இருந்தும், ஆற்றிடைகளிலிருந்தும் கற்காலக் கருவிகளைச் (Stone Age Tools) சேகரித்துப் பெயரிட்டிருந்தார். அத்தகைய கருவிகள் யாவும் குவாட்ஸ் (Quards, Cherts) சேட்ஸ் ஆகிய கல்வகைகளினால் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. போல் தான் சேகரித்த கருவிகளின் தன்மை பற்றிக் குறிப்பிட்டபொழுது Chert கற்கருவிகள் பழங்கற் காலத்தைச் சேர்ந்தவை என்றும், Quards கற்கருவிகள் புதிய கற்காலப் பண்பாட்டுக்கு உரியவை என்றும் வரையறை செய்திருந்தார். இவர் தான மேற்கொண்ட இவ்வாய்வின் முடிபுகளை சமகால ஐரோப்பிய முறைநிலைகளுக்கு

ஏற்ப உறுதிப்படுத்திக் கொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் ஐரோப்பியப் பாணியில் எடுத்த இம்முடிபுகள் எந்தளவிற்கு இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகாலப் பண்பாட்டு ஆய்விற்கு ஏற்புடமை கொண்டது என்பது ஒரு புறமிருக்க, மறுவளமாக எந்தவிதமான மண்படை அடுக்கியல் களினூடாகவும் இருந்து பெற்றுக்கொண்டிருக்காத அக்கற்கருவிகளை கற்காலக் கருவி எனப் பெயரிடலாமா என்பதும் கேள்விக்குரியதாகின்றது.

Sarasin Brothers இனுடைய கண்டுபிடிப்புக்கள் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாடு பொறுத்து முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றன. போலினுடைய கண்டுபிடிப்புக்களையும், இவர்கள் மீளாய்வுக்குட்படுத்தியதோடு, போல் முன்வைத்த கருத்துக்களைவிட ஒருபடி முன்னோக்கிய நிலையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கையர் பண்பாடு பற்றிய பல கருத்துக்களை அவர்கள் முன்வைத்துச் சென்றனர். போலினுடைய சேகரிப்புக்களை வகைப் படுத்திய பின் அவற்றில் பெரும்பாலான கருவிகளை (Magdalenian Phase) மக்டெலினியன் காலப் பிரிவிற்குரிய கற்காலக் கருவிகளாக அவற்றை வகையீடு செய்தனர். இவர்களது வகையீட்டின் முக்கியத்துவம் என்னவெனில், முதன் முதலாக ஐரோப்பியக் கற்காலப் பாகுபாட்டிற்கு ஒத்தவகையில் இலங்கையிலும் ஒரு கற்காலயுகத்தினை அடையாளம் கண்டுகொண்ட பெருமை சரஸின் சகோதரர்களையே சாரும்.

இதன் பின்னர் ஹென்றி செலிக்மன் (H.Selegmen) என்பவர் மேலே குறிப்பிடப்பட்டோரின் சேகரிப்புக்களையும் கருத்துக்களையும் நன்கு ஆராய்ந்து, தனித்துவமான வகையில் வகையீடு செய்ததோடு மட்டுமல்லாது, இலங்கையின் கற்காலப் பண்பாடு தொடர்பாக புதிய பல தகவல்களையும் முன்மொழிந்தார். அதாவது புவியின் மண்படை அடுக்கியல் ரீதியாகப் பெற்றுக்கொள்ளப்படாத எவ்வகையான கற்கருவிகளையும் கற்காலக்கருவி என அழைக்கப்பட முடியாதவை என்றும், அகழ்வுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுபவையே கற்காலப் பண்பாடுபற்றி அறிய உதவும் என முன்மொழிந்தார். இதனால் மத்திய மலைநாட்டிலுள்ள குகைகளை நன்கு ஆராய்ந்து அகழத் தொடங்கினார். முதன்முதலாக இலங்கையில் குகை (Cave) அகழ்வாய்வினை **ஹென்றி செலிக்மன்** தொடக்கி வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

செலிக்மனால் முதன்முதலாக அகழ்வு செய்யப்பட்ட குகையானது மூன்று முக்கிய மண்படை அடுக்குகளைக் கொண்டு விளங்கியது. இவற்றுள் மிகவும் கீழே காணப்பட்ட மண்படை அடுக்கில் தனியே **குவாட்ஸ் கல்லாயுத வகை** மட்டுமே காணப்பட்டன. அதற்கும் மேலேயுள்ள மண்படை அடுக்கில் குவாட்ஸ்சுடன் கலந்தவகையில் மட்பாண்டங்களும் காணப்பட்டிருந்தன. இவற்றிற்கும் மேலே உள்ள மண்படை அடுக்கானது மட்பாண்டங்களுடன் இணைந்த வகையிலான **சாம்பல் இரும்புக் கருவிகள்** என்பனவற்றுடன் கொண்டு விளங்கியது.

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் **காட்லி** என்பவர் (Hartley) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால அகழ்வுகளில் ஈடுபட்டமையைக் காணலாம். இவர் கற்கருவிகளில் ஒரு வகையான நுண்மையான ஒழுங்கிய சிறிய கருவிகளையே அகழ்வின்போது கண்டுபிடித்தார். (Microlithic) எனக் குறிக்கப்படும் இக்கற்கருவிகளின் பாவனையாக இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பண்பாட்டில் இன்றியமையாத ஒன்றாக விளங்கியது. அகழ்வுகளின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட இவ்விடைக் கற்காலக் கருவிகளை அடிப்படை யாகக் கொண்டு காட்லி நுண்கற்காலப் பண்பாடே இலங்கையினுடைய தொடக்ககாலக் கற்பண்பாடு ஆகும் எனக் குறிப்பிட்டிருந்தார். இவர் இக்கருத்தினை முன்வைக்கும்போது வெறும் ஊகத்தின் அடிப்படையிலேயே முன்வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காட்லியினது சமகாலத்தவராக விளங்கிய **வெய்லண்ட்** (Wayland) என்பவரும் வரலாற்றுக்கு முற்பட்டகால தொல்லியல் ஆய்வில் பெரிதும் அக்கறை உடையவராக விளங்கினார். இவர் பிரித்தானிய நிர்வாகத்தில் இலங்கையில் கனிப்பொருள் வல்லுனராக (Mineralogist) கடமையாற்றி இருந்தார். புவியடுக்கியலில் (Geology) விசேட பயிற்சி பெற்றிருந்த வெயிலண்ட் தனது கடமை நேரங்களில் வெளிக்கள வேலைகளின்போதே வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாட்டிற்குரிய கற்கருவிகளைச் சேகரித்துக் கொண்டார். பின்னர் சேகரித்த கற்கருவிகள் முழுவதையுமே ஆராய்ந்து அவற்றை இருபெரும் பிரிவுகளாக வகுத்தார். அவையாவன:

1. உயர்நிலப்பரப்பில் இருந்து சேகரிக்கப்பட்ட கற்கருவிகள் (Stone implements from the high mountain areas).
2. தாழ்நதிப் பள்ளத்தாக்குகளில் இருந்து சேகரிக்கப்பட்ட கற்கருவிகள் (Stone Implements from lower river – vallies) இரண்டாவது பிரிவில் வகுக்கப்பட்ட கற்கருவிகளை மேலும் அவர் இரண்டு உபபிரிவுகளாக வகுத்தார்.

அவையாவன:

1. **தாழ்நிலத்தில் உள்ள முற்பட்டகால கற்கருவிகள்**
2. **தாழ்நிலத்தில் உள்ள பிற்பட்ட கால கற்கருவிகள். இவற்றினை முறையே முற்பட்ட பழங்கற்காலக் கருவிகள் எனவும் பிற்பட்டகால பழங்கற்காலக் கருவிகள் எனவும் பாகுபாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.**

இவ்வாறு அவர் பழங்கற்காலக் கருவிகள் எனப் பெயரிட்டமைக்கான அடிப்படைக் காரணம் புரியவில்லை. ஆனால் அவர் கொண்டிருந்த ஒரே நோக்கமானது, தான் சேகரித்திருந்த கற்காலக் கருவிகளை பீடபூமிப் படிவு (Plate Deposit) க்குரியதான ஒன்றாகக் கொண்டமையாகும். மத்திய மலைநாட்டிலுள்ள ஆறரித்த சமவெளிகளில் இருந்து சேகரித்த இக்கல்லாயுதங்களைக் குறிப்பிட்டு தனிப்படுத்து வதற்கு இவ்வாறு ஒரு பதத்தினை அவர் தனித்துவமாகப் பயன்படுத்தியிருந்தார்.

அதுவும் ஆறரித்த சமவெளியிலிருந்து இவ்வாறான கல்லாயுதங்கள் கிடைத்திருந்தன என்பதனை வெளிப்படுத்துவதற்கேற்ற ஒரு முறையை இவ்வாறு குறிப்பிட்டிருக்கக்கூடும். அவருடைய குறிப்பின் அடிப்படையில் நோக்கும்போது, பனிக்கட்டியுகம் (Ice Age) என அழைக்கப்பட்ட பனித்தகட்டின் படர்ச்சிக்காலத்தில் இலங்கையும் கடுமையான மழைவீழ்ச்சிக்குட்பட்டிருந்த வேளையிலே இவ்வாறான ஆறரித்த சமவெளிகளில் கல்லாயுதங்களை புராதன மனிதன் பயன்படுத்தியிருக்க வேண்டுமென்பது அவரது நம்பிக்கையாகும். பனிக்கட்டியுகம் ஏற்பட்டபொழுது வெப்பவலய நாடுகளிலும், வெப்ப அயன எல்லை நாடுகளிலும் மிகக் கடுமையான மழைவீழ்ச்சி ஏற்பட்டு இருந்தது என்பதும், அதன் விளைவாக பெருவெள்ளம் ஏற்பட்டு மலைநாடுகளிலும் ஆறரித்த சமவெளிகள் உருவாகின என்றும், அதன் விளைவாக மிகப் பெரியளவிலான படிவுகள் (Deposit) மலைநாட்டை மையமாகக் கொண்ட தாழ்நிலங்களில் ஏற்பட்டது என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது. இந்த வகையிலேயே செலிக்மன் தனது கற்கருவிகள் யாவும் பனிக்கட்டி யுகத்திற்குரிய படிவுகளாக அமைந்தன என்ற கருத்தினை முன்வைத்தார். இதனாலேயே இலங்கையில் பழங்கற்காலப் படிவங்கள் என்ற கருத்து நிலையை செலிக்மன் முதன்முதலாக வெளிப்படுத்தினார். 1920ஆம் ஆண்டுகள் வரையும் செலிக்மனின் பழங்கற்காலக் கருவிகள் பற்றிய கருத்தோட்டம் இலங்கையில் நிலவியது. 1920க்குப் பின்னர் மெல்லமெல்ல மத்திய மலைநாட்டில் அகழ்வாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. அகழ்வுகள் இன்றியே மேற்பரப்பில் காணப்பட்ட கல்லாயுதங்களைச் சேகரிக்கின்ற முறைமையும் உருவானது. அவ்வாறு சேகரிக்கப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒருவகையான வகையிடல் முறை மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு மேற்கொள்ளப் பட்ட பகுப்புரீதியான முடிவுகள் ஐரோப்பாவில் பெற்றுக்கொள்ளப்பட்ட கற்காலக் கருவிகளினை ஒத்துக் காணப்பட்டமையைக் கண்டுகொள்ள முடிந்தது. வெயிலண்ட் என்பவரின் முயற்சியானது அவருடைய புவியடுக்கியல் ரீதியான தொழிற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால் அவரால் சேகரிக்கப்பட்ட கற்காலக் கருவிகள் பற்றிய பாகுபாடானது இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மட்பாண்டங்கள் பற்றிய செய்திகள் அறியப்படுவதற்கு முன்னர், அதாவது மட்பாண்ட உபயோகத்தினை இலங்கையில் வாழ்ந்த மனித சமூகம் அறிவதற்கு முன்னர் நிலவிய ஒரு பண்பாட்டிற்குரியதாகக் கொள்ளப் படுகின்றது. ஆனால் கற்காலத்திலிருந்து மட்பாண்டப் பண்பாட்டிற்குரிய சான்றுகள் தொடர்பாகவோ அல்லது அத்தகைய காலப்பாகுபாட்டினை வகுப்பதற்குரிய இடைமாறுகாலத் தடயங்களோ கிடைத்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. ஆனால் 1940இல் **கொகாட்** (Hocart) என்பவர் (முதலாவது இலங்கைத் தொல்லியல் ஆணையாளர்) தனது பதவியை ஏற்கும் வரைக்கும் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தொல்லியல் ஆய்வு தொடர்பான அறிவியற்றுறை தெளிவுபெறாது இருந்தமையைக் காணலாம்.

கொகாட் தனது ஆய்வுக் குறிப்புகளினூடாக இலங்கையின் கற்காலம தொடர்பாகப் பல தகவல்களை கொடுத்துள்ளார். இவரைத் தொடர்ந்து

தெரணியாகல என்பவர் இலங்கையின் தொல்லியற் திணைக்களத் தலைவராக நியமனம் பெற்ற காலகட்டத்தோடு வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தொல்லியல் ஆய்வுகள் புத்தூக்கம் பெறுவதனைக் காணலாம். இதே காலகட்டத்தில் நூல்ஸ் (Nooles) என்பவரும் கொழும்பு தேசிய நூதனசாலையுடன் இணைந்த வகையில் செயலாற்றிப் பல தனியாரது ஆய்வுச் சேகரிப்புக்கான நூதனசாலைக்கு வழங்கி உதவினார். தான் பண்டாரவளையிலிருந்து சேகரித்த கற்காலக் கருவிகளை வகையீடுசெய்து, குறுணிக்கற்காலப் பாகுபாடு பற்றிய செய்தியை முதன்முதலாக வெளியிடுவதனைக் காண்கின்றோம்.

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பண்பாடு ஆய்வியலில் தெரணியாகல என்பவரே மிகக்கூடுதலான அளவில் ஈடுபட்டிருந்தார். அவருடைய ஆய்வுகள் மண்படைகளைக் கொண்ட விஞ்ஞான ரீதியாக அமையாவிடினும் பிற்காலத்தில் அவ்வாறான விஞ்ஞான ஆய்வு முறையியலுக்கு அவருடைய ஆய்வு முடிபுகளே வித்திட்டு நின்றன. இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பெற்ற University History of Ceylon என்ற நூலில் தெரணியாகலவின் ஆய்வுகள் தொடர்பான மதிப்பீடுகள் இடம்பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையைப் பொறுத்தவரையில் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கும் முன்னர் உள்ள காலப்பகுதியே வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி எனலாம். பொதுவாக வரலாற்றுக் காலத்திற்கும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடானது அக்காலப் பரப்பின் வரலாற்று மூலாதாரங்கள் பற்றிய வேறுபாடாகும். அதாவது வரலாற்றுக் காலத்துச் சம்பவங்களை அறிந்துகொள்ள உதவும் எழுத்து மூலாதாரங்களைப்போல் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பரப்பிற்குரிய சம்பவங்களை அறிந்துகொள்வதற்கு எமக்கு மூலாதாரங்கள் கிடைப்பதில்லை. வரலாற்றுக் காலத்திற்கு எழுத்தாதாரங்கள் உண்டு. ஆனால் வரலாற்றிற்கு முற்பட்ட காலச் சமுதாய இயக்கவியலை அறிந்துகொள்வதற்கு தொல்லியல் ஆதாரங்கள் மட்டுமே எமக்கு உதவுகின்றன. இவ்விரு வேறு காலகட்டத்திற்குரிய தொடர்ச்சியான சமுதாய - அபிவிருத்தி முறைகளை அறிந்துகொள்வதில் உள்ள சிக்கல்கள் அவ்வக்கால மூலாதாரங்களின் தன்மையின் அடிப்படை வேறுபாட்டிலேயே உள்ளது. பெருமளவுக்கு இத்தொடர்ச்சியான வரலாற்றினைத் தொல்லியல் மூலாதாரங்களை விஞ்ஞான ரீதியில் பரிசீலிக்கும் முறையின் அடிப்படையில், அறிவியல் ரீதியாக பெற்றுக்கொள்ள முடியும். இவ்வடிப்படையில் வரலாற்றுக்கு முற்பட்டகால சமூக இயக்கவியலை வரலாற்றுக்காலச் சமூக முறைமையுடன் தொடர்புபடுத்த முடியும். இலங்கை வரலாற்றினைப் பொறுத்தவரையில் அதன் வரலாற்றிற்கும் முற்பட்ட காலத்தில் முன்னேற்றமடையாத சில மக்கள் குழுமங்கள் வாழ்ந்திருந்தன என்பதனை மகாவம்சத்தினூடாக மட்டுமல்லாது, தொல்லியல் ஆய்வுமுறை அடிப்படையிலும் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரிப் பண்பாடும், பலாங்கொடைப் பண்பாடும் முறையே பழங்கற்காலப் பண்பாடு எனவும், புதிய கற்காலப் பண்பாடு எனவும் கருதப்பட்டு வந்தபோதிலும் தற்போது விஞ்ஞான அறிவின் பின்னணியில்

அவை இரண்டுமே கி.மு. 29000 வருடங்கட்கு முந்திய குறுணிக்கற்காலப் பண்பாட்டுக்குரியவை எனத் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. சிரான் தெரணியாகல என்பவர் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள தேசிய அரும்பொருளக நூற்றாண்டு விழா மலரில் வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சேகரிப்புக்கள் பற்றி கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை இங்கு கொடுப்பது அப்பண்பாட்டினைப் பற்றி அறியப் பொருத்தமானது.

1. வரலாற்றுக்கு முற்பட்டவை

கல்லினாலான பல உபகரணங்களும் சீவுகற்களும் திருவாளர்கள் வெயிண்ட் டானியல், ஹாட்லி என்போரிடமிருந்து பெறப்பட்டன. ஆனால் தொல்லியற் திணைக்களம் 1939ஆம் ஆண்டிற்கான முதலாவது அகழ்வு வேலைகளை மேற்கொண்டது. இவ்வாண்டில் பலாங்கொடையிலும் குருவித்தையிலும் உள்ள சில குகைகளில் பரீட்சார்த்த குழிகளும் அகழிகளும் வெட்டப்பட்டன. அவற்றில் வரலாற்றிற்கு முற்பட்ட மனிதனின் கைவினைப் பொருட்கள் மட்டுமல்லாமல் அவனது உணவுப் பொருட்கள் பாகசாலைப் பொருட்கள் எலும்பினாலான பொருட்கள் போன்றனவும் அவனால் பயன்படுத்தப்பட்ட வண்ணப் பொருட்களும் கிடைக்கப்பெற்றன. அகழ்வு வேலைக்குள்ளான அத்தகைய குகைகளில் இரண்டு பணனெ கிராமத்திற்கு அணித்தாகவுள்ள லுன் கல்கேயும், தியதவின கிராமத்திற்கு அணித்தாகவுள்ள உடுப்பின் கல்கேயும் ஆகும். இக்குகைகளில் புதிய கற்காலப் படிகங்களும், சேட் கைப்புனைவுகளும், சீவுகற்கருவிகளும் ஐந்து அடி ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் பண்பாட்டு நிலைகளைப் புலப் படுத்தின. இவற்றுள் முன்னையது இரட்டைமுனை கொண்ட ஒரு துளையிடப்பட்ட பெரிய - கரடுமுரடான கைப்புனைவுகளை வெளிப்படுத்தியது. இவற்றுடன் இங்கு குகைவாசிகளின் உணவுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. அவை எப்படியெனில் நண்டுகள், உடும்புகள், பறவைகள் போன்றனவும் அணில்கள், குரங்குகள் உட்பட சிறு முலையூட்டிகளின் எச்சங்களாகக் காணப்பட்டன. குருவித்தையைச் சேர்ந்த பத்தெமலென என்னும் இடத்திலுள்ள புதிய கற்காலக் குகை ஒன்றும் 1949ஆம் ஆண்டில் பார்வையிடப்பட்டது. அங்கு கிட்டத்தட்ட 30 எலும்பினாலான துளையிகளும் இருபக்கங்களில் அரை அங்குல அகலத்தையும் கால் அங்குலம் ஆழத்தையுமுடைய பெருந்தொகையான சிறுச்சிறு குழிகள் வெட்டப்பட்ட மூன்று பெரிய கனைசுத் துண்டுகளும், 38 பருக்கைக் கற்களும் சேகரிக்கப்பட்டன. இங்கிருந்து ஒரு கற்பலகையும் சேகரிக்கப்பட்டது. இக்கற்பலகையானது 8½ × 11½ அளவினையுடையது. அதில் 6½ அங்குல நீளமும், 2½ அகலமுமுடைய ஆழமற்ற தவாளிப்பும் இருந்தது. இத்தவாளிப்பு கற்பலகை கற்கோடாரியை மெருகிடுவதற்கு அல்லது உணவை அரைப்பதற்கு அல்லது வண்ணம் கலப்பதற்கு பயன்படுத்தப்பட்டது என்பதனையே உய்த்துணர வைக்கின்றது. 1944ஆம் ஆண்டில் இரத்தினக்கல் தோண்டும் குழியில் பளிங்குக்கல் ஒன்று எடுக்கப்பட்டது. அது கோடரித்தலை உருவத்தில் அல்லது சுத்தியல் உருவத்தில்

அமைக்கப்பட்டது. கைப்பிடியை உறுதியாக இறுக்குவதன் பொருட்டுத் துளையிடப்பட்டிருந்தது.

மேலும் **இக்குற்கம** என்னும் கிராமத்திற்கு அணித்தாகவுள்ள ஒரு குகையில் இதேயாண்டில் பலாங்கொடக் கலாச்சார காலத்தைச் சேர்ந்த பல குழிபொறித்த பருக்கைக் கற்களினாலான கைவினைப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டன. 1945ஆம் ஆண்டில் எல்ல என்னுமிடத்தில் இராவண அல்ல குகையில் தொடக்கநிலை அகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு பெருந்தொகையான சேட் கைவினைப் பொருட்களும் ஓரளவு முழுநிறைவான மனித நெற்றி எலும்பும் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வெலும்பின் பெருமூளைப் பகுதியில் **எமொட்டயிற்** பூசப்பட்டிருந்தது. மேலும், எல்லாவெலவில் பொறேபவ என்னுமிடத்தில் இரத்தினக்கல் தோண்டிய மணலில் புதிய கற்காலத்தைச் சேர்ந்த குழிபொறித்த பருக்கைக் கற்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இரத்தினபுரி கலாச்சாரப் படிநிலை என்று அழைக்கப்படும் பழைய கற்காலப் பொருட்களையும், பலாங்கொடை கலாச்சாரப் படிநிலை என்று அழைக்கப்படும் புதிய கற்காலப் பொருட்களையும் காட்சிக்கு வைப்பதன் பொருட்டு 1947ஆம் ஆண்டில் நூதனசாலையில் நான்கு காட்சியறைகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

காட்சிக்கு வைக்கப்பட்ட பொருட்களில் பலாங்கொட மனிதனால் உபயோகிக்கப்பட்ட பெருங்கற்கருவி அல்லது பெரிய கைவினைப் பொருட்களும் அவன் உணவாகப் பயன்படுத்திய மிருகங்களின் எலும்புகளும், ஓடுகளும் அவன் வண்ணமாகப் பயன்படுத்திய பொருட்களும் அடங்கி இருந்தன. கிழக்கு மாகாணத்தில் **லெனம** என்னும் இடத்திலுள்ள குகைகளிற் பெறப்பட்ட சில கல்லினாலான கைவினைப் பொருட்களும் இங்கு பெறப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டன.

கலாநிதி தெரணியாகல அவர்களும் அவரது நூதனசாலை உத்தியோகத்தர் களும் 1949ஆம் ஆண்டில் **இராவண அல்ல** குகையில் மேலும் அகழ்வு வேலைகளை மேற்கொண்டனர். அவ்வகழ்வின்போது பல்வேறு வகையான மட்பாண்டங்களும் இவற்றுட் சில வேகவைக்கப்படாதனவாய் அல்லது வெயிலில் காயவைக்கப்பட்டனவாய் இருந்தன. வேறு சில மட்பாண்டம் மெருகிடப்பட்டனவாய் இருந்தன. அநேகமாக அட்டியலுக்கெனத் துளையிடப்பட்ட இரண்டு கடற்சிப்பி களும், இரு பக்கத்துளையுள்ள ஒரு மணியும், மாலையாக உபயோகிப்பதற்கெனத் துளையிடப்பட்ட 50 சிரிண்டி விதைகளும் பல உருண்டையான பருக்கைக்கற்களும் படிக உபகரணங்களும், கூழாங்கற்களும், கோளக வடிவுள்ள எலும்பினாலான பல ஊசிகளும், உளி வடிவில் அமைக்கப்பட்ட தனிமுனை, இரட்டை முனைகள் கொண்ட எலும்புத் துண்டுகளும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

கிழக்கு மாகாணத்தில் **சியம்பக அண்டுவ** என்னுமிடத்திற்கு அண்மையிலுள்ள மண்டு கல்கேயில் கற்கால மனிதனால் வரையப்பட்ட **யானை ஓவியங்கள** கண்டு பிடிக்கப்பட்டன. அவை கலாநிதி தெரணியாகல அவர்களினால் பிரதி செய்யப்பட்டன.

1951ஆம் ஆண்டில் ஆற்றுப் படிநிலைகள் (ஆறரித்த சமவெளிகள்) ஆய்விற்குட்படுத்தப்பட்டு, அவற்றில் அடித்தளத்திலிருந்து பருக்கைக்கற்கள் சில அகழ்ந்தெடுக்கப்பட்டன. அதேயாண்டில் மண்டகல்கே, இராவண அல்ல பட்டதெனலேன ஆகிய குகைகள் ஆய்வு செய்யப்பட்டு, கல்லினாலான செய்கருவிகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் குழிவெட்டப்பட்ட பருக்கைக் கற்களும், துளையிட்ட பட்டடைக் கற்களும், திரிகைக் கற்களும் அடங்கியிருந்தன. இவற்றுள் சிலவற்றிற்கு சிவந்த கழி பூசப்பட்டிருந்தன. பத்ததேமலென என்ற குகையில் ஓர் உடைந்த வட்டக்கல் பெறப்பட்டது. அது இலங்கையில் கற்கால மனிதன் உருளை வடிவான துளைகளை இட்டுள்ளான் என்பதற்கு முதற்சான்றாக அமைந்துள்ளது.

1952ஆம் ஆண்டில் பெல்மதுல்லவுக்கு அண்மையில் உள்ள புலத்வத்தை என்னும் இடத்திலும், மத்துகமைக்கு அண்மையிலுள்ள யக்கிரினாலவிலும் பரீட்சார்த்தமாக அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகழ்வுகளின்போது பலாங்கொடைக் கலாசாரப் படிநிலைக்குரிய கைவினைப் பொருட்கள் இருக்கக் காணப்பட்டன. இரண்டாவது குகையில் கடல்விலங்கு ஓடுகள், எச்சங்கள் ஆகியனவும் காணப்பட்டன. மரத்தினாலான தண்டுகளுடன் இணைப்பதற்கு இயைந்த எலும்பினாலான செய்கருவிகள் உள்ளிட்ட பல உபகரணங்கள் 1953ஆம் ஆண்டில் இராவண அல்ல குகையிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1956ஆம் ஆண்டில் பலாங்கொடை மாவட்டத்தில் **பெல்லன் பந்திபலஸ்ஸ** என்னும் இடத்தில் கற்கால **உண்ணைச்சமேடு** ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது முதன்மையான ஒரு கண்டுபிடிப்பாகும். அதில் பலாங்கொடைக் கால கோமோசெய்பியென்சுகள் புதைக்கப்பட்டு இருந்தன. இவற்றின் எலும்புக் கூடுகளுடன் அவை விழுங்கியதாகக் கருதப்படும் குரங்குமனிதர்கள், விலங்கு களினது முறிந்த எலும்புகளும், கல்லினாலான செய்கருவிகளும், ஊதிகளும் இருந்தன. 1957ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு வேலைகளின்போது இங்கு மனிதன் ஒருவனது வலது கன்ன எலும்பினையும், வலது அண்ண எலும்பின் ஒரு பகுதியையும், இவற்றிற்குரிய எலும்புக்கூட்டின் சில பகுதிகளையும் கண்டெடுத்தனர். ஆய்விற்காக இத்தொல்லியற் கருவூலங்கள் 1960ஆம் ஆண்டில் பிரித்தானிய நூதனசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

வரலாற்றுக்கு முற்பட்டகாலம் என்றால் என்ன?

கடந்தகால மனிதனைப் பற்றியதும் அவனது வாழ்வுப் பரிணாமத்தில் ஏற்பட்ட சிந்தனைகளின் மாற்றங்கள் பற்றியுமே ஆராய்வது வரலாறு என்ற அறிவியல் துறையாகும். வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட வாழ்வு மற்றும் சிந்தனை மாற்றங்களை அறிவதற்கு ஏராளமான எழுத்து மூலாதாரங்கள் கிடைக்கின்றன. வரலாற்றுக்கு முற்பட்டகால மனித வாழ்வுப் பரிமாணத்தினை அறிந்துகொள்வதற்கு தொல்லியல் எச்சங்கள் மட்டுமே கிடைக்கின்றன.

வரலாற்றிற்கு முற்பட்ட கால சமூகங்களின் சிந்தனை மாற்றத்தினை, அதன் வளர்ச்சியினை அக்கால மக்களது கருவிப் பயன்பாட்டில் காணலாம். (Prehistory and Morphology of the Tools) தொல்லியல் ஆய்வுகள்மூலம் பெறப்படும் வரலாற்றுக்கு முற்பட்டகாலக் கருவிகள் அவற்றின் வடிவங்கள், பன்முகப்படுத்தப் பட்ட கருவிப்பயன்பாட்டின் பிரயோகம் ஆகியன வரலாற்றிற்கு முற்பட்டகால சமூகக் கட்டமைப்பைப் பற்றியறிய உதவுகின்ற மூலாதாரங்களாகும். வரலாற்றுக் காலத்தில் உலோகக் கருவிகள் (Iron Tools, Bronze Tools, Copper Tools and Tools made out of Led) மற்றும் சமயத்தொடர்பான உலோகக்கலைப்பொருட்கள் பாவனையிலிருந்தன. வரலாற்றுக்காலம் இடத்திற்கிடம் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டுள்ளது. இதனால் எழுத்தின் பாவனையை அறிந்த மக்கள் வாழ்ந்த காலப்பகுதிகளும் வேறுபட்டமைகின்றன.

புராதன நதிக்கரை பள்ளத்தாக்குகளில் தோற்றம்பெற்ற நாகரிகங்கள் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னரிலிருந்து ஒலின்களை அடிப்படையாகக் கொண்ட வரிவடிவ முறையை அதாவது ஒரு குறியீட்டிற்கு ஓர் ஒலி என்ற அடிப்படையில் அறிமுகப்படுத்தியிருந்ததினால் அக்காலப்பரப்பிலிருந்தே புராதன சமுதாயத்தினது நாகரிக வாழ்க்கை முறையை **அரசியல் பொருளாதாரம் சமயம் அறிவியல் துறைகள** ஆகியவற்றிலே அவர்கள் ஈட்டிக்கொண்டிருந்த **சாதனைகள்** தொடர்பாக விரிவாக ஆராயமுடிகிறது. நைல்நதிப் பள்ளத்தாக்கில் படவரைகலை (pictographic) எழுத்தும் சுமேரிய நாகரிகத்தில் (cuniform) ஆப்பெழுத்தும் சீன நாகரிகத்தில் பட்டுத்துணியில் எழுதப்பெற்ற எழுத்தும், எலும்புகளில் எழுதப்பட்ட எழுத்தும் அந்தந்த நாகரிகங்கள் பற்றிய சமூக வரலாற்றை தருவதனைக் காணலாம். சிந்துவெளி நாகரிகத்தில் கூட **தனித்தனி ஒலியன்களுடனான வரிவடிவ முறையே** வழக்கிலிருந்த போதும் துரதிஷ்டவசமாக அவ்வெழுத்து இன்னும் இனங்காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முந்திய உலக சமூக வரலாற்றையே **வரலாற்றுக்கு முற்பட்டகால** வரலாறாக நாம் கொள்ளவேண்டியுள்ளது.

வரலாற்றுக்கு முற்பட்டகால சமூக பரிணாமத்தின் காலப்பாகுபாடு

வரலாற்றுக்கு முற்பட்ட ஒரு காலவரையறையின் கீழ் உலகிலே **ஒரே சமச்சீராக எல்லா மையங்களிலும் மக்கள் வாழ்ந்தனர் எனக்கூறமுடியாது.** உலகின் குறிப்பிட்ட பாகங்களிலேயே தொடக்ககால மக்கள் குடியிருப்புகள் அல்லது வாழ்க்கைமுறை அல்லது மக்களினத்தின் தோற்றம் நிகழ்ந்தது எனலாம். தொல்லியலாளர்களும் சமூக மானிடவியலாளர்களும் மனித இனத்தின் தோற்றத்தினை உலகில் ஒத்த இடங்களில் ஒத்த நேரத்தில் சமச்சீராக நிகழ்ந்ததாக எடுத்துக்காட்டவில்லை. கிழக்காபிரிக்காவின் தன்சானியா பிரதேசம் மனிதனுடைய தோற்ற **வரலாற்றின் தொட்டில்** எனக்குறிப்பிடப்படுகிறது. இங்கிருந்தே மனித இனம் முதன்முதல் தோற்றம்பெற்று ஐரோப்பிய நாடுகளுக்கும் அலாஸ்கா போன்ற துருவப்பிரதேச நாடுகளுடாக ஏனைய கண்டங்களுக்கும்

சென்று, பரந்து, விரிந்து மனித இனமாக பரிணமித்ததென சமூக மானிடவியலாளர் களால் எடுத்துக்காட்டப்படுகிறது. அவ்வாறாக நான்கு பிரதானமான மனித இனங்கள் உலகிலே வாழ்வதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

அவையாவன:

1) **காக்கசசியஸ்** (யூரல்மலை - யூரல்நதி ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த மனிதர்)
2) **நீக்கிரோயிட** என அழைக்கப்படும் ஆபிரிக்க மனிதர்கள்
3) **மொங்கலோயிட** என அழைக்கப்படும் சீன மனிதர்கள்
4) **ஒஸ்ரலோயிட** என அழைக்கப்படும் ஆசிய-அவுஸ்திரேலிய பிரதேசத்தைச் சேர்ந்த மனிதர்கள்.

என்பனவே அவையாகும். இந்த மனிதனுடைய தோற்றகாலம் இற்றையிலிருந்து **150 மில்லியன** வருடங்கள் முன்னாலே நிகழ்ந்ததென எடுத்துக்காட்டப்படுகிறது. ஆனால் இப்பூவுலகில் உயிரினங்களின் தோற்றம் **350 மில்லியன** வருடங்கள் முன்னே நிகழ்ததெனச் சொல்லப்படுகிறது. இந்தப்பூமி **450 மில்லியன்** வருடங்கள் முன்னே உருவாகியதெனச் சொல்லப்படுகிறது. இக்காலப் பாகுபாட்டின் அடிப்படையில் நோக்கும்பொழுது **நாகரிகமடைந்த மனிதன** இற்றையிலிருந்து **5000 வருடங்களுக்குட்பட்ட** சமூச அறிவியல் வரலாற்றையே கொண்டுள்ளான். ஆனால் வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதனோ இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னோக்கிய நிலையிலிருந்து 150 மில்லியன் வருடங்கள் எல்லை வரை உள்ள மிகப்பரந்த ஒரு கால இடைவெளியில் வாழ்ந்து வந்திருந்த வரலாற்றை கொண்டிருந்ததைக் காணலாம். இக்காலகட்டத்துக்குட்பட்ட வரலாற்றை தொல்லியலாளர்களும் மானிடவியலாளர்களும் அறிந்து கொள்ளக்கிடைக்கின்ற வரலாற்று மூலாதாரங்களாக **அம்மனித சமூதாயம் விட்டுச்சென்ற செய்பொருட்களினதும் அம்மனித இனத்தின் எச்சங்களுமே ஆகுமென்பதில் எவ்விதமான சந்தேகங்களும் எழமுடியாது. (செய்பொருட்கள்** - Artifacts **எச்சங்கள்** - Remains.)

இப்பரந்த காலப்பரப்புக்குள் வாழ்ந்த மனித சமுதாயத்தை ஆய்வாளர்கள் கருவிப்பாவனையின் அடிப்படையிலும், சமூகக்குழுமங்களின் அடிப்படையிலும், அக்குழுமங்களினுடைய ஜீவனோபாயத்தின் அடிப்படையிலும் பாகுபாடு செய்து ஆய்வுகளை முன்னெடுப்பதனைக் காண்கின்றோம். கருவிப்பாவனையின் அடிப்படையில் அம்மக்களை **கற்காலமக்களென்றும்** குழுமமுறையில் வாழ்ந்ததன் அடிப்படையில் **மிருகவாழ்க்கைச் சமூகம், தாய்வழிச்சமூகம், தந்தை வழிச்சமூகம், அடிமைச்சமூகம், முதலாளித்துவ சமூகம், சோசலிச சமூகம்** எனவும் ஜீவனோபாயத்தின் அடிப்படையில் **வேட்டையாடற்சமூகம், மந்தைமேய்தற்சமூகம், உணவுற்பத்திச்சமூகம், நாகரிக சமூகம் எனவும்** அச்சமுதாய வரலாறு பாகுபடுத்தப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்படுவதனைக் காண்கின்றோம். **மார்க்சீய கண்ணோட்டத்தின்** அடிப்படையிலும் புராதன

சமூகங்களின் இருப்புப்பற்றி நிலத்திற்கும் உற்பத்திக்கும, தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையிலான உறவுகளின் அடிப்படையில் ஆராயப்பட்டுக் கொண்டு வரப்படுவதனைக் காண்கின்றோம். ஆகவே வரலாற்றுக்கு முற்பட்ட கால சமூகக்கட்டமைப்பின் வரலாறானது நவீன விஞ்ஞானத்தின் பிற அறிவியல் துறைகளுடன் தொடர்புபடுத்தப்பட்ட வகையில் புராதன மனிதனால் விட்டுச்செல்லப்பட்ட செய்பொருட்களின் எச்சங்களினாலும் மனித எச்சங்களினாலும் விலங்குகளின் எச்சங்களினாலும் கட்டியெழுப்பப் படுகின்ற ஓர் அறிவியல் துறையாக-வரலாற்றிற்கு முற்பட்டகால வரலாறாக அமைவதனைக் காணலாம் (History of prehistoric period). அவ்வரலாறானது (1) Geological Eras என அழைக்கப்படும் புவியியல் யுகங்களுடனும், (2) உயிரினங்களின் தோற்றம் பற்றிய சார்ல்ஸ் டார்வினின் விளக்கங்களுடனும் (3) மனிதப்பரிணாமம் பற்றிய நவீன கருதுகோள்களுடனும் (4) புராதன மனிதச் சமுதாயத்தினுடைய பல்வேறுகாலகட்ட கருவிப்பயன்பாட்டுடனும் (morphology of Tools) (5) பண்பாட்டுவேறுபாடுகளுடனும் (cultural deviation) (6) மக்கள் அல்லது சமூக இடப்பெயர்வுகளுடனும் (migration) மிக நெருங்கிய வகையில் தொடர்புபட்டிருப்பதனைக் காண்கின்றோம்.

2. புவியியல் யுகங்கள் (Geological Eras)

ERA	PERIOD	EPOCH	APPROXIMATE TIME from Today
CENOZOIC	QUATERNARY	Recent (Holocene) Pleistocene	10000 3 MILLION
CENOZOIC	TERTIARY	Pliocene Miocene Oligocene Eocene Palaeocene	12 MILLION 25 MILLION 35 MILLION 55 MILLION 60 MILLION
MESOZOIC	CRETACEOUS JURRASSIC TRIASSIC		120 MILLION 180 MILLION 200 MILLION
PALAEOZOIC	PERMIAN CARBONIFEROU DEVONIAN SILURIAN ORDOVICIAN CAMBRIAN		285 MILLION 350 MILLION 400 MILLION 450 MILLION 500 MILLION 600 MILLION
PRE - CAMBRIAN	---------	----------	----------

புவியியல் யுகங்கள் பற்றிய அறிவு உயிரினங்களினதும் புராதன மனிதனதும் பரிணாம வரலாற்றினை வரைவதற்கு அடிப்படையாக உள்ளது. வரலாற்றிற்கு முற்பட்டகால சமுதாய வரலாற்றுப்போக்கும் வளர்ச்சியும் புவியியல் யுகங்களைத் தழுவிய வகையில் வரையப்பட்டிருப்பதனைக் காண்கின்றோம். அந்தவகையில் புவியியல் யுகங்களைப் பற்றிய குறிப்புக்கள் பின்வருமாறு:

கேம்பிரியன் காலம் (CAMBRIAN period)

Trilobite, Graphtolite என்னும் உயிரினங்களின் எச்சங்கள் (80 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டவை)

ஆர்ட்டோவிசியன் காலம் (ORDOVICIAN period)

கொண்டிருந்த காலப்பரப்பு - 6.5 கோடி ஆண்டுகள்
Brachiopod, Pelicepod போன்ற உயிரினங்கள் மற்றும் பவளங்கள் சங்குப்பூச்சிகள்

சைலூரியன் காலம் (SILURIAN period)

கொண்டிருந்த காலப்பரப்பு 4.8 கோடி ஆண்டுகள்
எலும்புள்ள மீனினத்தைச்சார்ந்த உயிரினம், புதிய மலைத்தொடர் மற்றும் புதிய நிலப்பரப்புக்களின் தோற்றம்

டிவோனியன் காலம் (DEVONIAN)

கொண்டிருந்த காலப்பரப்பு 4.2 கோடி ஆண்டுகள்
மீன் சகாப்தம் உறுதியான எலும்புகளையுடைய சுறா மீன்கள், தாவரங்களின் வளர்ச்சி, சங்குப்பூச்சிகள் பரவி வாழ்ந்தமை

கார்பனிபரஸ் காலம் (CARBONIFEROUS)

கொண்டிருந்த காலப்பரப்பு 5 கோடி ஆண்டுகள்
உலகின் பாரிய நிலக்கரிப்படிமங்கள் தோற்றம்பெற்ற காலம், கொண்டுவானா நிலப்பரப்பு (Gondwana), வெதுவெதுப்பான காலநிலை - பசுந்தழைக் காடுகள் - சதுப்பு நிலங்கள் - கடற்பாசிகளின் வளர்ச்சி - இரட்டைச்சிப்பிகளின் தோற்றம் - MOLASCA – BRACHIOPOD – SPONGE போன்ற உயிரினங்கள்

பெர்மியன் காலம் (PERMIAN)

கொண்டிருந்த காலப்பரப்பு
கடல் நீரில் உப்பு அதிகரித்திருத்தல் - படிவப்பாறைகள் சிவப்பு நிறமாதல்- கொண்டுவானா கண்டப்பரப்பில் (இந்தியா, தென்னாபிரிக்கா, மடகாஸ்கர், ஆஸ்திரேலியா, படகோனியா) பனிபடர்நிலை, எரிமலை கக்கல், வறட்சி நிலை ஏற்படல் - Eriopus என்ற விலங்கு, பெரிய பல்லியை ஒத்த ஊர்வன - பாலைவன உயிரினங்கள்

டிரையாசிக்காலம் (TRIASSIC)

கொண்டிருந்த காலப்பரப்பு 3.2 கோடி ஆண்டுகள்
கொண்டுவானா நிலப்பரப்பிலிருந்து பனிக்கவிழ்ப்பு நீக்கம். ரேதிஸ்க்கடலின்

தோற்றம், முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் ஊர்வன மற்றும் பிராணிகளின் தோற்றம், கூரிய கொம்புகளையும் முள்ளுகளையும் ஒத்த புடைப்புக்களையுடைய நீண்ட முதலைகளின் தோற்றம், மீனுண்ணும் உயிரினங்களின் தோற்றம், பாலூட்டிகளின் மூதாதையினங்களின் தோற்றம்

ஜுராசிக்காலம் (JURRASSIC)

கொண்டிருந்த காலப்பரப்பு 4.3 கோடியாண்டு

Wegener இன் கூற்றுப்படி ஒரே திணிவாகக் காணப்பட்ட கண்ட நிலப்பரப்பு பல துண்டுகளாகப் பிரிந்துசென்றது. **பாஞ்சியா** - கண்டம் துண்டாகமுன் இருந்த நிலை. மத்தியகோட்டுப் பிரதேசத்தில் காணப்பட்டிருந்த புவியோட்டு விசை மிகவும் சக்திவாய்ந்த பிளவு உந்துவிசை. றோக்கி, அந்தீஸ் மலைகளின் தோற்றம். ஆஸ்திரேலியா கிழக்காக நகர்ந்தது - அமெரிக்கா வடக்காக இழுபட்டுச் சென்றது.

கடல் அட்டைகளும் கடற்பஞ்சும் பல்கிப்பெருகின. Terebratulla, Rlynoonella, Isostrea போன்றவற்றின் பெருக்கம். பற்களையுடைய மீன்களின் தோற்றம். அசைபோடும் பிரமாண்டமான உயிரினங்களின் தோற்றம்.

கிரிடேசியஸ் காலம் (CRETACEOUS)

உள்ளடக்கப்பட்ட காலப்பரப்பு - 6.7 கோடி ஆண்டுகள்.

சுண்ணப்படிவுக்காலம். வெள்ளப்பெருக்குத் தோன்றிய காலம். செனமோனியன் கடல். இரட்டைச்சிப்பிகளின் தோற்றம். முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் டையினோசரஸ், டிராகோடான், இக்னோடான், திரிசாரப்ஸ் போன்றவற்றின் பெருக்கம். ஊசியிலைக் காடுகளின் தோற்றம். பூக்கும் தாவரங்களின் தோற்றம்.

ஊன் உண்ணும் விலங்குகளிடையேயும் அசைபோடும் விலங்குகளிடையேயும் ஏற்பட்ட வாழ்க்கைப் போராட்டம். பாலூட்டிகளின் கூர்ப்பு வேகமாக வளர்ச்சியடைந்தமை.

Table shows the date and the glaciations and Inter - glaciations

Appx.time in years FromB.P.Today	GLACIATIONS	FAUNA	DIVISION
100000	WURM RISS - WURM (Interglacial)	Eemain	UPPER PLEISTOCENE
200000	RISS MINDEL - RISS (Interglacial)	Hoxnian	MIDDLE PLEISTOCENE
400000	MINDEL GUNZ - MINDEL (Interglacial)	Cromerian	Lower PLEISTOCENE
600000 2800000			

Conventional system of nomenclature	Revised Terminology (Approximate Dates Before the Present) BP.

IRON AGE (HISTORICAL PERIOD) 2500 Years - இரும்புயுகம்		
BRONZE AGE (CIVILIZATIONS) 3500-2500 Years - வெண்கலயுகம் or செம்புயுகம்		
NEOLITHIC CULTURE 7500 – 3500 Years - புதிய கற்காலயுகம்		
MESOLITHIC CULTURE(Azilian, Tardenoisian, Capsian) 20000 – 7500 years குறுணிக்கற்கால யுகம்		
UPPRE PALAEOLITHIC CULTURE மேலைப்பழங்கற்காலம்	Magdalenian மக்டெலனியன்	Blade Industries: Magdalenian(35000 – 20000) பிளத்தற்கருவி
	Solitarian சொலிறேரியன்	
	Aurignacian ஒரிக்னேசியன்	Solitarian (40000 – 35000) Gravettian (50000 – 40000) Aurignacian (60000 – 5000) Chatelperronian (70000–60000)
MIDDLE PALAEOLITHIC மத்திய பழங்கற்காலம்	MOUSTERIAN மௌஸ்ரேறியன	CORE INDUSRIES FLAKE INDUSRIES சீவல் கருவி Mousterian (140000 – 70000)
LOWER PALAEOLOTHIC CULTURE கீழைப்பழங்கற்காலம்	ACHEULEAN ஆச்சூலியன்	Acheulean(430000 – 130000) ஆச்சூலியன் வகை
	CHELLEAN சேல்லியன்	Abbevillian (540000 – 450000) Clactonian (540000 – 240000) அபிவிலியன் கிளக்ரோனியன்
	PRE – CHELLEAN சேல்லியனுக்குமுன்	

EOLITHIC (?)		
The Prehistory of Western Europe. (After Garrod, Zeuner, Braidwood, and others.)		
HOLOCENE	1000 B.C. 4000 B.C. 8000 B.C. 10000 B.C.	Early Historic period Chalcolithic period Neolithic period Mesolithic period
PLEISTOCENE	WURM -111 WURM -11 IV WURM -1	UPPER PALAEOLITHIC CULTURE
	RISS – WURM (interglacial) III RISS Glaciation MINDEL – RISS(interglaciation)	MIDDLE PALAEOLITHIC CULTURE
	II MINDEL Glaciation GUNZ – MINDEL(interglaciation)	LOWER PALAEOLITHIC CULTURE
	I GUNZ Glaciations	600000 B.P.
BASAL Pleistocene	PRE – GLACIAL.	NO KNOWN HUMAN CULTURE 02 – 03 million years

குறுணிக்கற்காலம் - BP 29000 years

இப்பின்னணியில் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால சமூக அமைப்புப் பற்றியும், அதன் இயக்கவியல் பற்றியும் ஆய்வுசெய்ய முற்படும்போது கி.மு.6ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியினை அல்லது கி.மு. 5ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தினை மேல் எல்லையாகக் கொள்ளவேண்டியுள்ளது. வரலாற்றுக்கு முற்பட்டகால இலங்கையின் கீழ்எல்லை கி.மு. 29000ஆம் ஆண்டுகள் வரை நீடித்துச் செல்வதனைக் காணலாம். இக்காலப்பரப்பில் இலங்கையின் சமூக, பொருளாதார, பண்பாட்டு முறைகள் பற்றி ஆய்வு செய்வோருக்கு தொல்லியல் அகழ்வாய்வுகள்மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளே முக்கியமான ஆதாரங்களாகின்றன. குறுணிக்கற்காலப் பண்பாட்டிற்குரிய மண்பையடுக்குகளைக் கொண்ட இலங்கையின் இக்காலப் பரப்பானது தென்னிந்திய 'தேரி'ப் பண்பாட்டினைச் சிறப்பாக ஒத்துக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பழங்குடிகள் என்ற நிலையில் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட மக்களது இனம், வாழ்வுமுறை, குடியிருப்பு மையங்களின் பரவல் போன்ற இன்னோரன்ன விடயங்கள் பற்றிய ஆய்விற்கு அண்மைக்காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியற் சான்றுகள் முதற்தரச் சான்றுகளாக உள்ளன. திட்டமிட்டவகையில் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால மையங்களைக் கண்டுபிடித்து ஆய்வுசெய்யும் முயற்சிகள் இதுவரையில் மேற்கொள்ளப்படா விட்டாலும், தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பெற்று தொடர்ந்து ஆய்விற்குட்படுத்தப் பட்ட மையங்களில் இருந்து கிடைத்த சான்றுகள் வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கை மக்கள் பற்றியும், அவர்களின் ஜீவனோபாயம் பற்றியுமான தகவல்களைத் தந்துதவுகின்றன.

இலங்கையில் மூன்று பிரதான வட்டாரங்கள் வரலாற்றுக்கு முற்பட்டகால தொல்லியற் சான்றுகளை வழங்கும் பிராந்தியங்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

1. **இரத்தினபுரி, பலாங்கொட உயர்நிலம் உள்ளிட்ட மத்திய மலைநாட்டுப் பரப்பு.**
2. **வடமேற்கிலங்கையின் கரையோரப் பரப்புடன் இணைந்த இரணைமடுப் பரப்பு.**
3. **வடகிழக்கிலங்கையின் நந்திக்கடல் - நாயாறுக்குக் கீழ் கொட்டியாரத் திற்கு மேல் உள்ள பரப்பு ஆகும்.**

நாகதுவீபம் என அழைக்கப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பரப்பினுள் விசாலமான அகழ்வுகள் மேற்கொள்ளப்படாததினால் இன்னும் வரலாற்றுக்கு முந்திய கற்கால யாழ்ப்பாணக் குடாநாட்டின் மனித வாழ்வின் நிலை பற்றியும் கற்கருவிகளின் நிலைபற்றியும் அறிந்துகொள்ள முடியாதுள்ளது. பொதுவாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் **பெருங்கற்காலப் பண்பாட்டு வளர்ச்சியின் முடிவில் வரலாற்றுக்காலம் (கி.மு.5) ஆரம்பிப்பதனை எமது தொல்லியலாளர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.**

இந்தோ - திராவிட, இந்தோ - ஆரிய கலாச்சார மக்கள் இந்திய உபகண்டத்திலும் இலங்கையிலும் செல்வாக்கு நிலைகளை ஏற்படுத்துவதற்கு முன்னர் **உயர்ந்த பீடபூமிகளில** நீக்ரோ மற்றும் ஆதிஆஸ்திரேலிய இனவியல்புடைய மக்கள் வாழ்ந்தவர்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளனர். இவ்வடிப்படையில் இலங்கைக்கும் இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பிராந்தியத்திற்குமிடையே நெருங்கிய அதேயின மக்கட்தொடர்பு இருந்து வந்துள்ளது. கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன் வடமேற்கிந்தியாவில் இந்து நதியை மையமாகக்கொண்டு பெருநகரங்களில் வாணிப நடவடிக்கைகள் சமுத்திரப் போக்குவரத்து முறையுடன் வளர்ச்சி கண்டிருந்தபோது தீபகற்ப இந்தியாவின் தென்பரப்பிலும் இலங்கையிலும் அதேயின மக்கள் அலைந்து திரிந்து வேட்டையாடி உணவு சேகரித்து வாழும் முறையினைக் கொண்டிருந்தனர். இருந்தபோதிலும் வட மேற்கிலங்கையிலுள்ள மன்னார்க் குடாவிற்கும் மத்திய தீபகற்ப இந்தியாவில் வாழ்ந்த மக்களுக்கிடையே வாணிபத் தொடர்பு இருந்திருக்கவேண்டும் என்பதனை இந்துநதிப் பள்ளத்தாக்கு நகரங்களில் கண்டெடுக்கப்பட்ட மன்னார் முத்துக்கள் ஊடாக அறியமுடிகிறது. அண்மைக்கால தொல்லியல் அகழ்வுகளினூடாக சிந்துவெளிக்கும் மாலைதீவுகளிற்கும் இடையே இருந்த பண்பாட்டுத் தொடர்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இரத்தினக்கல் வாணிபத்தைப் போலன்றி முத்துவாணிபமானது ஆடை நெய்தல் தொழிலுடன் நெருங்கிய பிணைப்புடைய தாகவும் இருந்தது. இலங்கையில் ஆடை நெய்தல் தொழிலானது குவேனி வாழ்ந்த காலம்முதல் பழமைவாய்ந்ததாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. சிந்துவெளியூடாகவே இப்பிராந்தியங்களிற்கு ஆடை நெய்தற் தொழினுட்பம் பரவியிருந்தது என இதுவரை காலமும் நம்பப்பட்டிருந்த பொழுதிலும், **அண்மைக்காலத் தொல்லியல் அகழ்வுகளினூடாக தென்கிழக்காசிய நாடுகளிலிருந்தே அத்தொழினுட்பமானது இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பரப்பப்பட்டது என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.** ஆசியாவில் சிறந்த முத்துவாணிபம் மலேசியா, யாவாவிலேயே நடைபெற்றது என்பதனை சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை போன்ற தமிழ் இலக்கியங்களினூடாகவும் மலே மொழியில் எழுதப்பெற்ற இலக்கியங்கள் வாயிலாகவும் அறியமுடிகிறது. எனவே இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால சமூக இருப்பிற்கும் தென்கிழக்காசிய நாடுகளின் வரலாற்றுக்கு முற்பட்டகாலச் சமூக இருப்பிற்குமிடையே நிலவிய நெருங்கிய தொடர்புகள் அண்மைக்காலங்களில் வரலாற்றாசிரியர்களால் எடுத்துக்காட்டப்பட்டுக்கொண்டு வரப்படுகின்றது. **மத்திய கால இலங்கை வரலாற்றுடன் மலேசியா, யாவா போன்ற இந்தோனேசிய நாடுகள் கொண்டிருந்த அரசியல் கோட்பாட்டுத் தொடர்புகளுக்கும் இந்நாடுகளிடையே காணப்பட்டிருந்த வரலாற்றுக்கு முற்பட்டகாலத் தொடர்புகளும் காரணமாக அமைந்தன என்றால் அது மிகையாகாது.**

இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கும முற்பட்ட காலமே வரலாற்றிற்கு முற்பட்ட காலம் என்பதனை அண்மைக்காலங்களில்

தொல்லியல் ஆய்வாளர் உறுதிப்படுத்தியுள்ளார். சிரான் தெரணியாகல என்பவரின் ஆய்வு முடிவுகளின்படி கி.மு. 29000 ஆண்டுகள் வரைக்கும் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பரப்பு விரிவடைந்து செல்கின்றது என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பொதுவாக வரலாற்றுக் காலத்திற்கும், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு என்னவெனில் இவ்விரு காலப்பரப்பிலும் வாழ்ந்த மக்களுடைய வாழ்க்கைபற்றி அறிய உதவும் மூலாதாரங்களின் தன்மையில் உள்ள வேறுபாடகவே உள்ளது. வரலாற்றுக்காலப் பரப்பு சம்பவங்கள் பற்றி அறிவதற்கு பலவகையான வரலாற்று ஆவணங்கள் தோன்றியுள்ளன. ஆனால் வரலாற்றுக்கு முற்பட்டகால சமுதாய அபிவிருத்திபற்றி அறிந்துகொள்வதற்கும் அதன் தொடர்ச்சியான சம்பவக்கோவைகளுக்குமான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இல்லாதிருப்பதாகும். பெருமளவுக்கு இத்தொடர்ச்சியை தொல்லியலாய்வின் முறைகள் மூலமே அறியப்படுவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. இவ்வறிவியல்துறை மூலமே இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால சமூக இருப்பின் தன்மையைப் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. அவ்வகையில் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இரு பிரதான கருவிப் புழக்க வேறுபாடு உடையவர்களாக வாழ்ந்த மக்கள் குழுமங்களாக **இரத்தினபுரிப் பண்பாடும், பலாங்கொடைப் பண்பாடும** அமைந்தது. இரத்தினபுரிப் பண்பாடு குறுணிக்கற்கால வாழ்வியலையும் பலாங்கொடைப் பண்பாடு புதிய கற்கால வாழ்வியலையும் கொண்டிருந்தன என்பதை கருவிகளின் (Tools) வடிவமைப்பு உபயோகம் என்பவற்றினூடாக அறியமுடிகின்றது.

அத்தியாயம் : நான்கு

பெருங்கற்கால இலங்கையும் பண்பாடும்

வரலாற்றுக்கு முற்பட்ட பண்டைய உலகில் பழங்கற்காலம், இடைக்கற்காலம் (குறுணிக்கற்காலம்), புதிய கற்காலம் என்று **மானிடவியல் வரலாறு** வளர்ந்து வந்தவாற்றிலே **Megalithic Culture** எனப்படும் பெருங்கற்காலமும் **இறுதியாக** (அதனுடன் வரலாற்றுக்காலமும்) தொடங்குவதாக உள்ளது. வரலாற்றுக் காலத்திற்கான ஆக்க அடிப்படைகளை இட்டுக்கொடுத்த வகையில் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது வாழ்க்கை முறையானது சிறப்பானதாக ஆராயப்பட வேண்டியதாக அமைந்திருக்கிறது. கற்கால வாழ்விலிருந்து பெற்ற அனுபவங்களை அவர்கள் முற்பட்ட காலங்களிலிருந்து பெற்று தம்மை வளப்படுத்தி வளர்த்தெடுத்துக் கொண்டதன் அடிப்படையிலும் பிற்பட்ட கால வளர்ச்சிக்கு அடிப்படையமைத்துக் கொடுத்திருந்த வகையிலும் பல்வேறு வகைப்பட்ட உற்பத்திப் பொருட்களையும் செய்பொருட்களையும் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தியுள்ளதை நாம் காணலாம். இவற்றினூடே அவர்களது கலைமரபுகள், சமயஉணர்வு முதலியன வெளிப்படுவதைக் காண முடிகின்றது. இவர்கள் விட்டுச்சென்ற தடையங்களான **கல்லறைகள், ஈமத் தாழிகள், சுடுமண் பாவைகள், விளையாட்டுப் பொருட்கள், மட்பாண்டங்கள், நாணயங்கள், ஆயுதங்கள், பாறை ஓவியங்கள், அணிகலன்கள், மணிகள், முத்திரைகள், செம்பினால் செய்யப்பட்ட உருவங்கள்** போன்ற பலவும் இவர்களது **இருப்பை** மட்டுமல்லாது கலை மரபையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

பெருங்கற்காலப் பண்பாடு என்றால் என்ன?

பெருங்கற்காலப்பண்பாடு என்றால் என்ன என்று நோக்குதல் அவசியமான தாகும். இறந்தோரை அடக்கஞ் செய்வதற்குப் பெருங்கற்களாலான ஈமச்சின்னங் களை அமைத்ததால் இக்காலம் **பெருங்கற்காலக் கலாசாரம்** எனப்பெயர் பெற்றது. இச் சின்னங்களின் வெளித்தோற்றத்தினைக் கொண்டு இவை **கல்லறை, கல்மேசை, கற்திட்டை, நடுகல், கல்வட்டம்** போன்ற பெயர்களைப் பெற்றன. எனினும் இக்கால மக்கள் முழுக்கமுழுக்கக் கற்களால் மட்டும் தமது ஈமச்சன்னங் களை அமைக்கவில்லை. **தாழிகளிலும், குழிகளிலும்** இறந்தோரை அடக்கஞ் செய்தவர்களும் இவர்களேயாவர். இதனையே பண்டைய இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான **மணிமேகலை** பின்வருமாறு கூறுகிறது.

> **"சுடுவோர் இடுவோர்**
> தொடுகுழிப் படுவோர்
> தாழ்வயினடைப்போர்
> தாழியிற் கவிப்போர்" (மணிமேகலை, 6.11, 66-67)

எனினும், இக்காலச் சவஅடக்க மரபுகளில் பெருங்கற்களினாலான ஈமச்சின்னங்கள் காணப்பட்டதால், பெருங்கற்காலக் கலாசாரம் என்ற பெயரைப் பெற்றது.

பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் இறந்தவர்களின் எச்சங்களுடன் புதைக்கப்பட்ட பொருட்கள் இக்கலாசாரத்தின் ஒருமைப்பாட்டை மேலும் எடுத்துக்காட்டி நிற்கின்றன. ஈமச்சின்னங்களைக் கொண்டே இப்பண்பாடு இப்பெயரைப் பெற்றிருந்தாலும் அச்சின்னங்களைவிட முக்கியத்துவம் வாய்ந்த பல பண்பாட்டு அம்சங்களையும் இப்பண்பாடு குறித்து நிற்கிறது. தென்னிந்தியாவில் **இரும்பின் அறிமுகம், நீர்ப்பாசனத்துடன்கூடிய பயிர்ச்செய்கை, கறுப்பு-சிவப்பு மட்பாண்ட உபயோகம், கட்டமைப்புடைய சமூகத்தோற்றம், அரச அமைப்பு** என்பன இப்பண்பாட்டுடன் தோற்றம் பெறுகின்றன. பெருங்கற்கால ஈமச்சின்னங்களைத் தென்னிந்தியாவில் அமைத்தோர் தமது அன்றாட விவசாய வாழ்க்கையில் இரும்பினாலான கருவிப் பொருட்களையும் பிரதானமாக உபயோகித்ததால் இக்காலம், இரும்புக்காலம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இலங்கையிலும் அக்காலப் பரப்போடும், இடத்தோடும் இணைந்த வகையில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு அபிவிருத்தி நிலைகள் ஏற்பட்டிருந்தமையைத் தொல்லியற் சான்றுகள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது. இலங்கையில் அபிவிருத்தியடைந்த பெருங்கற்காலப் பண்பாட்டு வாழ்க்கை முறையுடன் இணைந்ததாகவே வரலாற்றுக்கால அரசியல், பொருளாதார, வர்த்தக, நீர்ப்பாசன நிறுவனங்களின் வளர்ச்சியும் காணப்பட்டிருந்தன. இத்தகைய சிறப்புக்குரிய பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது வாழ்வில் **வதிவிடப்பகுதி, இடுகாடு, குளம், வயற்பரப்பு எனும் 4 பிரதானமான அலகுகள்** சிறப்பிடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான அம்சங்களுடன் வரலாற்றுக் காலத்தை ஆரம்பித்து வைத்ததாகவும் பின்வந்த காலங்களுக்கு அடிப்படையான அம்சங்களைக் கொண்டதாகவும் பெருங்கற்காலப் பண்பாடு விளங்கியது.

பெருங்கற்காலப் பண்பாடு என்பது தென்னாசியாவில் மட்டுமல்லாது ஐரோப்பா, மத்தியதரைக் கடற் பிராந்தியம், மேற்காசியா, மத்திய ஆசியா, தென்கிழக்கு ஆசியா போன்ற பிரதேசங்களிலெல்லாம் பல்வேறு காலப்பகுதிகளில் நிலவி உள்ளதை நாம் காணலாம். ஐரோப்பாவைப் பொறுத்த வரையில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய காலவரையறையானது செம்புக் காலத்துடன் எடுத்துக் காட்டப்படுவதனைக் காண்கின்றோம். அவ்வடிப்படையில் மத்தியதரைக் கடற் பிராந்தியத்தில் கி.மு. 3200 - கி.மு. 1000 வரையுள்ள காலப்பகுதியை அப்பெருங் கற்காலப் பண்பாடு உள்ளடக்கி உள்ளதை அறியலாம். மேற்காசியாவை நோக்கின் பெருங்கற்காலப் பண்பாடானது தரை-கடல் வழிவந்த செல்வாக்கு நிலைகளுக்கு உட்பட்டிருந்தாலும் கூட அதன் காலவரையறையைப் பொறுத்தமட்டில் மேலே குறிக்கப்பட்ட காலத்தினையே கொள்வதனைக் காணலாம். இங்குகூட இரும்பின் உபயோகத்தினைக் கண்டறிவதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. பதிலாகச் செம்பினையே அம்மக்கள் கருவிப் பயன்பாட்டிற்காக உபயோகித்து வந்தமையைக் காணலாம். ஆனால் மிகவும் அண்மையில்

மத்தியாசியாவில் Hittites இன மக்கள் பயன்படுத்தியிருந்ததாகக் கொள்ளப்படும் Iron Smelting கண்டுபிடிக்கப்பட்டமையானது ஒரு முக்கிய திருப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இதற்குரிய காலம் கி.மு. 1800 என வரையறை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்த இன மக்கள் கி.மு 1800இல் வாழ்வில் வீழ்ச்சியடைந்த வரைக்கும் இரும்பின் உபயோகத்தினைக் கடைப்பிடித்திருந்தனர் எனவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அவ்வகையில் மத்தியாசியாவில் கி.மு. 1800ல் இருந்து கி.மு. 1000 வரைக்கும் இரும்பின் உபயோகம் நடைமுறையில் இருந்தது. தென்கிழக்கு ஆசியாவில் அதன் வாழ்வுக்காலமானது கி.பி. 400 வரைக்கும் இருந்ததாக அங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாதாரங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஆனால் தீபகற்ப இந்தியாவைப் பொறுத்த வரையில் இரும்பின் அறிமுகமும் உபயோகமும் கி.மு. 1000 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்தே எடுத்துக்காட்டப்படுவதனைக் காண்கிறோம்.

தீபகற்ப இந்தியாவினுள் பெருங்கற்காலப் பண்பாட்டு வாழ்வுமுறை மஹாராஷ்டிர மாநிலத்திலுள்ள **சானூர்** என்ற கிராமத்தில் தோற்றுவிக்கப் பட்டமையைத் தொல்லியல் அகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதன் காலம் கி.மு. 1300 என்பதாகும். பின்னர் வட கர்நாடக மாநிலத்திலுள்ள புதிய கற்காலத்துக்குரிய மையங்களில் பெருங்கற்காலப் பண்பாடு கி.மு. 1000 அளவில் பரவியது. தமிழகத்தில் இப்பண்பாட்டிற்குரிய காலப்பரப்பு கி.மு. 800ஆம் ஆண்டிலிருந்தே எடுத்துக்காட்டப்படுகின்றது. கேரள மாநிலம் தவிர்ந்த ஏனைய தென்னகப் பிரதேசங்களில் கி.மு. 800ஆம் ஆண்டிலிருந்தே இப்பண்பாடு பரவிக் கொள்வதனைக் காண்கிறோம். தமிழகத்தில் **தாமிரபரணி ஆற்றின்** முகத்துவாரப் பகுதியிலுள்ள **ஆதிச்சநல்லூரிற்** கிடைத்த வெண்கலத்தினாலான தாய்த்தெய்வ உருவமானது கி.மு. 800ஆம் ஆண்டிற்குரியதாகக் காலவரையறை செய்யப் பட்டுள்ளது.

இலங்கையிலும் **கந்தரோடை, புத்தளத்தில் பொம்பரிப்பு, அநுராதபுரத்தில் கெடிகே ஆகிய மையங்களில்** இருந்து பெறப்பட்ட விஞ்ஞானபூர்வமான காலக்கணிப்பீடு பெருங்கற்காலப் பண்பாடு கி.மு. 800இல் தோன்றிவிட்டதை எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையில் கி.மு. 800ஆம் ஆண்டிலிருந்து கி.பி 3ஆம் நூற்றாண்டு வரைக்கும் இப்பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சமூக-பொருளாதாரக் கட்டமைவுக்குரிய அம்சங்கள் வளர்ச்சி பெற்றுக்காணப்பட்டன.

பெருங்கற்காலப் பண்பாடு உலகின் பல்வேறு பிரதேசங்களிலிருப்பினும் இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாடானது தென்னிந்தியாவிலிருந்து மட்டுமல்லாது **தென்கிழக்காசியாவிலிந்தும்** பரவியதற்கான சான்றுகள் குறிப்பாக மானிடவியல், மரபணுவியல், தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. இலங்கை ஒரு தீவாக இருப்பது மட்டுமன்றி இந்து சமுத்திரத்தின் மத்தியில் கிழக்கு-மேற்கு வர்த்தகப் பாதையின் மையத்தில் அமைந்திருப்பதும் இதற்குரிய

காரணமாகும். இவ்வாறு இது தீவாக அமைந்திருப்பதாற் பல பண்டைய விழுமியங்கள் பாதுகாக்கப்படுவதற்கான வாய்ப்பும் வசதியும் இதற்கு அதிகமுண்டு என்பதுடன் பலதேசப் பண்பாட்டம்சங்களையும் உள்வாங்கிக்கொள்ளும் நிலையும் உருவாகிக்கொண்டது. குறிப்பாக தென்னிந்தியாவின் தெற்குப் பகுதிக்கருகில், மிகச்சிறிய தூரத்தில் அதாவது சுமார் 36 km தூரத்தில் இலங்கை அமைந்து உள்ளமையானது தென்னிந்தியாவில் ஏற்படும் பண்பாட்டு அலையானது உடனுக்குடன் இலங்கையிலும் பரவக் காரணமாயமைந்தது.

இந்தியாவினுடைய அமைவிடமானது, **பெருங்கற்காலப் பண்பாடு** வெளிப்பிரதேசத்திலிருந்து இந்தியாவிற்குள் நுழையக் காரணமானது. சிறப்பாக, இந்தப் பண்பாட்டினை மத்தியதரைக் கடற்பிரதேசங்களிற் பேணிய மக்கள் பலூசிஸ்தான், ஹரப்பா ஊடாக நகர்ந்து இந்தியாவில் மத்திய இந்தியா, மேற்கிந்தியப் பிரதேசங்களிற் பரவிக்கொண்டு, பின் வடமேற்கிந்திய மாநிலங் களினூடாக ஊடுருவி, தென்னகத்தை அதன் பண்பாட்டுக்களமாக மாற்றியமைத்து உள்ளது. இந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரவல் இடம்பெற்ற பிராந்தியங்களின் இயல்பினை நோக்கும் ஒருவர் இதற்கு தென்இந்தியாவின் புவியியல் அமைவிடம் சாதகமான காரணமாக அமைந்திருந்தமையைக் காண்பர். இங்கு **"ஆரிய சமூகம்"** எதுவும் உபயோகித்திருக்காத மட்பாண்ட அலகினை அதாவது கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களை (Blake & Red pottery) அடித்தளமாகக் கொண்டு தீபகற்ப இந்தியாவில் இப்பண்பாடு தோற்றம்பெற்றிருந்தமையே அதன் பிரதான இயல்பாக அமைகின்றது.

பெருங்கற்காலப் பண்பாட்டின் வளர்ச்சி, தோற்றம், அவற்றின் பிரதான அம்சங்கள் தொடர்பாக தீபகற்ப இந்தியாவைத் தொடர்புபடுத்தி பல்வேறுவகையான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். தீபகற்ப இந்தியாவைப் பொறுத்தவரையில் இரும்பினையும் செம்பினையும் ஒரே தளத்தில் சமகாலத்தில் இணைத்து உபயோகித்த ஒரு பண்பாட்டுக் கூறாகவே இப்பெருங்கற்காலம் அமைந்தது. இங்கு அது புதிய கற்காலப் பண்பாட்டின் வளர்ச்சியின் தொடர்ச்சி யாகவே தோற்றம் பெற்று, திட்டவட்டமான ஒரு சமூக, பொருளாதார, பண்பாட்டுக் கட்டமைவுக்குட்பட்ட வகையில் வளர்ச்சியடைந்திருந்தது.

தீபகற்ப இந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கியமானதொரு அம்சமாக சமுத்திரத்தோடு தொடர்பான பண்பாட்டுப் பிணைப்பு அமைகிறது. மத்திய தரைக்கடல் பிராந்தியத்துடன் தீபகற்ப இந்திய மக்களுக்கு இருந்திருக்கக்கூடிய காலத்தால் முற்பட்ட தொடர்புகளில் பெருங்கற்காலப் பண்பாட்டுத் தொடர்பே அநாதியானது. பக்கம் பக்கமாகத் தரைவழி வந்த செல்வாக்கு இப்பண்பாட்டில் நிலவிய போதிலும், சமுத்திர வழித் தொடர்புகளின் நிமித்தம் ஏற்பட்டிருந்த பண்பாட்டுக் கூறுகள் பெருங்கற்கால சவஅடக்க மையங்களில் இடம்பெற்றிருந்த மையைக் காண்கின்றோம். **ஈமப் படையல்களில் பரப்பப்பட்டிருந்த எச்சங்களுள் பெருமளவிலானவை கடல்படு திரவியங்களாகவே உள்ளமை** குறிப்பிடத தக்கவையாகும். எனவே சமுத்திரவழித் தொடர்புடன் இணைந்த வகையில்

இந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடு தோன்றியிருக்கவேண்டும். ஏனெனில் அடிப்படையில் தீபகற்ப இந்தியாவில் ஒரே சீராக கற்காலப் பண்பாடு நிலவி யிருக்காத ஒருநிலையில் இப்பெருங்கற்காலப் பண்பாட்டு அலையானது தீபகற்ப இந்தியா முழுவதையும் தனது செல்வாக்கிற்குள் நிலைநிறுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவில் இப்பெருங்கற்காலப் பண்பாட்டை உருவாக்கியவர்கள் எம்மொழியைப் பேசினார்கள் என்பதனையிட்டு நீண்டகாலமாக நிலவிவந்த பிரச்சினைக்கு வீலருடைய 1947/48ல் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப்பணி ஒரு தீர்வினைத் தந்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. வீலருடைய கருத்துப்படி வடமேற்கு இந்தியப் பரப்பில் ஆதித்திராவிடர்கள் வாழ்ந்திருந்தாலும் கூட, அதற்கு முன்னரே தென்னிந்தியாவில் அந்த இனம் வாழ்ந்திருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன என்பதனை அறியமுடிகிறது. ஆனாலும் முதன் முதலாகத் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டினை திராவிடர்களுக்குரிய ஒன்றாக ஆணித்தரமாக எடுத்துக்காட்டிய பெருமை Christoph Von Furer Haimendorf என்பவருக்கே உரியதாகும். இவருடைய கருத்தமைவை அடிப்படையாகக் கொண்டே **சேர் மோட்டிமர் வீலர் கர்நாடக மாநிலத்திலுள்ள பிரம்மகிரியில் தொல்லியல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அகழ்வை மேற்கொண் டிருந்தார்.** விஞ்ஞான அடிப்படையில் அமைந்த இந்த அகழ்வாய்வே முதன் முதலாகத் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய மக்கள் **ஆதித் திராவிடரே** என்பதனை உறுதிப்படுத்தியது. குறுணிக் கற்காலத்தையடுத்து வந்த புதிய கற்காலப் பண்பாட்டு வளர்ச்சியின் தொடர்ச்சியாகவே இப்பெருங் கற்காலப் பண்பாடு ரோமாபுரி வர்த்தகத்துடன் வளர்ச்சி அடைந்தது என்பதும் இங்கு உறுதிப்படுத்தப்பட்ட வரலாற்றுச் செய்திகளாகும்.

இலங்கையில் உருவாகிய தமிழ், சிங்களப் பண்பாடுகள் தென்னிந்திய தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாளப் பண்பாடுகளை ஒத்துள்ளமைக்கு தென்னிந்தியாவிற்கு மிகவும் அண்மையில் இலங்கை அமைந்திருப்பதே காரணமாகும். இதன் முக்கியத்துவம் பற்றி வரலாற்றாசிரியர் இந்திரபாலா கூறியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"புவிச்சரிதவியல் ரீதியாகவும், புவியியல் ரீதியாகவும் இலங்கையும் தென்னிந்தியாவும் நெருங்கிய தொடர்புடைய பிரதேசங்கள், புவி வரலாற்றிலே மையோசின் காலம் வரை இரு பிரதேசங்களும் ஒன்றாக இணைந்திருந்தன. அதன் பின்னரே இலங்கை ஒரு தனித்துவம் பெற்ற நிலப்பகுதியாக மாறியது. அப்படி மாறிய பொழுதிலும் இரண்டு பிரதேசங் களையும் பிரித்து நிற்கின்ற பாக்கு நீரிணை மிக ஒடுக்கமாக இருந்ததனால் இரு நாடுகளிற்கும் இடையிலான உறவு பிரிக்கப்படவில்லை"

இத்தகைய உறவினால் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இரு பிராந்தியங்களிற்கும் இடையே நெருங்கிய பண்பாட்டு உறவுகள் தொடர்ச்சியான

வகையில் நிலவி வந்துள்ளன என்பதனையும் பேராசிரியர் கா. இந்திரபாலா உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கையானது தென்னிந்தியாவிலிருந்து சற்று தள்ளி இருந்தமையும் இலங்கையில் தனித்துவமான பண்பாடு வளர உதவியது. இது பற்றி ஆய்வாளர் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் கூறியிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. "பொதுவான தென்னாசியப் பண்பாட்டு வட்டத்துக்குள் இலங்கையின் பண்பாடு அடங்கினாலும்கூட, பாக்குநீரிணையால் இரு பிராந்தியங்களும் பிரிக்கப் பட்டமையும் இலங்கை இதனால் ஒரு தனித்தீவாக மாறியமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தனித்துவமான பண்பாடொன்று வளர்ச்சி பெற இப்புவியியல் அமைவிடம் வழிவகுத்தது எனக் கொள்ளுதல் மிகையாகாது" இக்கருத்துக்கு வலுவூட்டுவதாக இலங்கைக்கே மட்டும் உரிய சிறப்பம்சமாகப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் சுற்றாமுள் மாலை, சிப்பி, லக்ஸ்மிநாணயங்கள், முருகைக் கற்களாலான ஈமக் கோபுரங்கள் என்பன அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை இன்னொருவகையில் இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாடானது கடல் அல்லது சமுத்திரத் தொடர்பு கொண்டுள்ளதையும் எடுத்துக்காட்டுகின்றன.

பண்பாட்டு வரலாற்றின் வரலாறு

தென்னிந்தியா, இலங்கை என்பவற்றில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாடு பற்றி ஐரோப்பியர், இந்தியர், இலங்கையர் என பல்வேறுபட்ட தேசத்தவரும் ஆய்வுகள் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாடு தொடர்பாக மானிடவியலாளர், வரலாற்றாசிரியர், தொல்லியலாளர், சமூகவியலாளர் எனப் பலவகையினரும் ஆராய்ந்து உள்ளனர். அந்தவகையில் இலங்கையின் தொல்லியல் வரலாற்றில் கி.பி. 1965இன் பின் ஒரு திருப்புமுனைக் காலமாக, அதாவது தொல்லியல் ஆய்வுகள் பல இடம்பெற்ற காலமாக அமைந்துள்ளது.

1969 - அநுராதபுரத்தில் அகழ்வாய்வு

1970 - கந்தரோடைமற்றும் பொம்பரிப்பு அகழ்வாய்வு (பென்சில்வேனியா)

1980 - மன்னாரில் தொல்பொருள் அகழ்வாய்வு (International Team)

1980 - 30 பெருங்கற்கால மையங்களை பேராசிரியர் சி.க சிற்றம்பலம் கண்டுபிடித்தல்

1980/81- ஆனைக்கோட்டை அகழ்வாய்வு (Rescue Excavation)

1993/94- பூநகரி தொல்பொருளாய்வு

1995 - கந்தரோடை அகழ்வாய்வு (Rescue Excavation)

2011 - கந்தரோடை அகழ்வாய்வு (இலங்கைத் தொல்லியல் திணைக்களம்)

எனப்பல தொல்பொருள் ஆய்வுகள் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், பேராசிரியர் கா. இந்திரபாலா, விமலா பெக்லி, பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், பேராசிரியர் ரகுபதி, சிரான் தெரணியாகல, பேராசிரியர் செ. கிருஷ்ணராசா போன்ற பலராலும் மேற்கொள்ளப்பட்டன.

ஈழத்தில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது வாழ்வு மற்றும் ஈமச்சடங்குகள் பற்றிப் பலஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது. பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் 'யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு', 'ஈழத்து இந்துசமய வரலாறு', 'பண்டைய ஈழத்தில் தமிழர் - ஒரு பன்முகப்பார்வை' போன்ற பல நூல்களிலும் பெருங்கற்காலப் பண்பாட்டு கலை மரபுகள் பற்றி எடுத்துக்காட்டியுள்ளார். **இவர் 30 பெருங்கற்காலத் தொல்லியல் மையங்களை ஆய்வு செய்ததன் அடிப்படையில் கூடியளவு தகவல்களை வெளிப்படுத்தி யுள்ளார்.** இவர் இலங்கையின் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது பல அம்சங்களைப் பற்றியும் ஆராய்ந்தபோது கலைமரபு பற்றியம் கருத்து வெளியிட்டுள்ளார். இலங்கை பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது கலைமரபை தென்னிந்திய பெருங்கற்காலக்கலை மரபுடன் தொடர்புபடுத்தியும், இலங்கைக்கே சிறப்பாக உரிய தனியம்சங்களை எடுத்துக்காட்டியும், மற்றும் கலைமரபுகளை இந்து, பௌத்த மதங்களுடன் தொடர்புபடுத்தியும் இவர் நோக்கியுள்ளார்.

கலாநிதி ப.புஷ்பரட்ணம் 'பூநகரி - தொல்பொருளாய்வு', 'தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டைய கால மதமும் கலையும்' போன்ற நூல்களில் இலங்கையில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது கலைமரபுகளைப் பற்றியும் கூறியுள்ளார். கலாநிதி பொ. ரகுபதி "Early Settlements in Jaffna - An Archaeological Survey" எனும் நூலிலும், இந்திரபாலா 'இலங்கையில் தமிழர்' மற்றும் இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை எனும் நூலிலும், S.U. தெரணியாகல 'The prehistory of Sri Lanka' எனும் நூலிலும், திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம் 'இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாச்சாரமும்' என்பதிலும், செ. பரணவிதானாவின் 'Sigiri Graffiti' என்பதிலும், போப்பியாராச்சி மற்றும் ராஜா ஆ. விக்கிரமசிங்கே இணைந்து 'Ruhuna An Ancient Civilization Re-visited' என்பதிலும், நவரட்ணம் 'இலங்கைக் கலைவளர்ச்சி' எனும் நூலும், திருநாவுக்கரசு 'இலங்கையில் தமிழர் பண்பாடு' எனும் நூலிலும் இலங்கையில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்கள் பற்றி மிகவிரிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

இவை மட்டுமன்றி தொழில்நுட்ப வளர்ச்சியால் இணையத்தளத்திலும் செய்திகள் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் S.U. தெரணியாகல 'Early Man and the Rise of Civilization in Sri Lanka: the Archaeological Evidence' என்ற தலைப்பில் இணையத்தளத்தில் கட்டுரை வெளியிட்டுள்ளார்.

தென்னிந்தியாவினது பெருங்கற்காலப் பண்பாடு, கலைமரபுகள் தொடர்பாகப் பல நூல்கள், சஞ்சிகைகள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிற்றம்பலம்

அவர்கள் 'பண்டைய தமிழகம்' எனும் நூலும், சு. தில்லைவானம் 'அரிக்கமேடு அகழ்வாய்வு (புதையுண்ட 'பொதுகே' நகரம்)' எனும் நூலும், மு.மு. பிள்ளை 'A Social History of the Tamils' எனும் நூலும், குருராஜாராவ் 'The Megalithic Culture in South India' எனும் நூலும், தமிழ் நாட்டு வரலாற்றுக்குழு 1983ல் வெளியிட்ட 'தமிழ் நாட்டு வரலாறு' எனும் நூலும், நடனகாசிநாதன் **'தமிழர் நாகரிகம்'** எனும் நூலும், அ. இராகவன் **'ஆதிச்ச நல்லூரும் பெருநைவெளி நாகரிகமும்'** எனும் நூலும், சிவராமமூர்த்தி 'The Art of India' எனும் நூலும் நவரடணம் 'தென்னிந்திய சிற்ப வடிவங்கள்' எனும் நூலும் ஏகாம்பரநாதன் 'தமிழக சிற்ப ஓவியக் கலைகள்' என்பதும், நாகசுவாமி 'ஓவியப்பாவை' என்பதிலும், R.S. உருக்குமினி 'இந்தியச் சிற்பங்கள்', சா. குருமூர்த்தியின் **'தொல்பொருளியல் ஆய்வும தமிழர் பண்பாடும்'** எனும் நூலும், தங்கவேலுவின் **'இந்தியக் கலைவரலாறு'** எனும் நூலும் இப்பெருங்கற்காலப் பண்பாட்டுக்கலை மரபுகள் தொடர்பான பல தகவல்களைக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சி.க.சிற்றம்பலம் **'பண்டைய தமிழகம** என்ற நூலில் பெருங்கற்கால ஈமச் சின்னங்கள், அகழ்வாராய்ச்சி தரும் சான்றுகள், பெருங்கற்கால மக்களின் வாழ்வும் வளமும், பெருங்கற்கால மக்கள், வரலாற்றுக்காலம் எனும் தலைப்புக்களில் பெருங்கற்காலப் பண்பாடு பற்றிக கூறியுள்ளார். அ. இராகவன் 'ஆதித்தநல்லூரும் பொருநைவெளி நாகரிகமும்' என்பதில் ஆதித்தநல்லூர் அகழ்வாய்வில் பெற்ற பொருட்கள் குறிப்பாக இரும்புப் பொருட்கள், வெண்கலப் பொருள்கள், மட்பாண்டங்கள், தாழிகள், பொற்பட்டங்கள் என்பவற்றைக் கூறியுள்ளார். இவற்றினூடாக பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது கலைமரபு களை இனம்கண்டுகொள்ள முடிகின்றது. குருராஜாராவ் தென்னிந்தியாவில் நடைபெற்ற அகழ்வுகள், ஆய்வுகள் என்பவற்றைத் தொகுத்து 'The Megalithic Culture in South India' எனும் நூலை எழுதியுள்ளார். அதில் தமிழ்நாட்டில் உள்ள பெருங்கற்கால மையங்கள் குறிப்பாக திருநெல்வேலி மாவட்டம், மதுரை மாவட்டம், பழனிமலை, புதுக்கோட்டை, சேலம் மாவட்டம், தென்ஆர்க்காடு மற்றும் வடஆர்க்காடு மாவட்டம் என தொகுதிகளாகப் பிரித்து நோக்கியுள்ளார். பெருங்கற்கால ஈமச்சின்ன வகைகள், கல்லறைப் பொருட்கள் குறிப்பாக மட்பாண்டம், இரும்பு பொருட்கள் செம்புப் பொருட்கள், பொன், மணிகள், கல்லாலான பொருட்கள் என்பன பற்றிக் கூறியுள்ளார். தென்னிந்திய பெருங் கற்கால உரிமையாளர்கள் பற்றியும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இரா. பவுன்துரை எழுதிய 'தமிழகப்பாறை ஓவியங்கள்' எனும் நூல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். இதில் தமிழகப் பாறை ஓவியங்களும் வடிவமைப்பும், பாறை ஓவியங்களில் விலங்கின வடிவங்கள், தமிழகப் பாறை ஓவியங்களின் சிறப்பியல்புகள் எனும் தலைப்புகளுடன் எழுதியுள்ளார். தில்லைவனம் 'அரிக்கமேடு அகழ்வாய்வு' என்பதில் அரிக்கமேட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள், கிடைத்த பொருட்கள், அரிக்கமேடு மணிவகைகள், அரிக்கமேடு மணிவகைகளுக்கு பெயர் பெற்றிருந்தமை, தொல்பொருட் சின்னங்கள், அரிக்க மேடு வெளிநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பு என்பன பற்றிக் கூறியுள்ளார்.

இவை மட்டுமன்றி இணையத்தளத்தில் ராமச்சந்திரராவ் என்பவரால் 'A note on Megaliths and Megalithic Culture of South India' எனும் கட்டுரை வெளியிடப் பட்டுள்ளது. அதில் மட்பாண்டங்கள், உலோகங்கள், பெருங்கற்கால பொருளாதாரம், இனத்துவ நோக்குகள், பெருங்கற்காலப் பண்பாடு பற்றிய சில முரண்பாட்டுக் கருத்துக்களும் அவற்றுக்கான துலங்கல்களும் என கூறியுள்ளார்.

பெருங்கற்காலம் பற்றிய ஆய்வில் (தென்னிந்தியா) முன்னணியில் நின்றோரில் கிருஷ்ணசுவாமி, பனர்ஜி, சவுந்தரராஜன், இராமச்சந்திரன், சுந்தர, லெஸ்னிக், குருராஜராவ் போன்றோரது பங்களிப்புக் கணிசமானது. 'தென்னகத்திலுள்ள ஈமச்சின்ன வகைகள்' எனும் தலைப்பில் கிருஷ்ணசுவாமி ஒரு கட்டுரையை 1949ல் வெளியிட்டிருந்தார். தீக்சித்தும் ஈமச்சின்ன வகைகள், அவற்றின் தோற்றம், அவை ஆக்கப்பட்ட விதம், பயன்பாடு ஆகிய தன்மைகளை மையமாக வைத்து விரிவாக ஆராய்ந்துள்ளார். 1975ல் லெஸ்னிக் இப்பெருங்கற்காலப் பண்பாட்டுக்கு 'பண்டுக்கல் கலாசாரம்' எனப் பெயரிட்டு இது பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார்.

தென்னிந்திய பெருங்கற்காலம் பற்றி ஆராய்ந்தவர்களாக வெளிநாட்டினரும் உள்ளனர். பிறீக்ஸ் (1837ல்) பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் பழங்குடி மக்கள் வாழ்வில் காணப்படும் பழக்கவழக்கங்களுக்கும் இடையே இழைவிட்டோடும் பல ஒற்றுமைகளை ஆராய்ந்தார். ஜெர்மனியரான யகோர் இந்தியாவிலே மிகப் பெரிய தாழிக்காடாகிய ஆதிச்சநல்லூரில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டிருந்தார். 1945ல் மோட்டிமர் வீலர் அரிக்க மேட்டில் அகழ்வாய்வு மேற்கொண்டிருந்தார். அல்சின் தம்பதியினரும் பெருங்கற்காலப் பண்பாடுபற்றி ஆராய்ந்துள்ளனர்.

இவ்வாறு பெருங்கற்காலப் பண்பாடு மக்களது கலை மரபுகள் தொடர்பாகப் பல ஆய்வுகள் இடம்பெற்றாலும், நூல்கள், கட்டுரைகள் வெளிவந்தாலும் கூட அவை போதுமானதாக இல்லை. ஆய்வுகள் பல இடம்பெற்றுள்ள போதும் சில சந்தர்ப்பங்களில் பக்கச்சார்பாகவே (இலங்கையில்) நோக்கப்பட்டு மூடிமறைக்கப் பட்டுள்ளன. உதாரணமாகக் கந்தரோடையில் பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்கள் பல இனம் காணப்பட்டபோதும் கூட அவை சிங்கள மக்களுக்குச் சார்பாக நோக்கப்பட்டன. அதாவது தமிழ்ப்பௌத்தம் நிலவியதற்கான சான்றுகளைச் சிங்கள பௌத்தச் சான்றுகளாகத் திரிபுபடுத்த முற்பட்டதுடன் அரசாங்கம் அம் மையங்களை ஆழத் தோண்டி ஆராயாமல் அகலமாக மேலோட்டமாக பௌத்த சார்புடைய மையங்கள் எனக்காட்டி நிலத்தைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளது. பிற்பட்ட காலத்தில் கட்டப்பட்ட தூபி அமைப்புக்களைத் தவிர்த்து கீழ்மட்டங்களை ஆழமாகத் தோண்டும்போது பல அரிய கண்டுபிடிப்புக்கள் கிடைக்கும். ஏனெனில் கந்தரோடை தூபிகளுள்ள பிரதான மையத்திற்கு அருகில் அண்மையில் வீடுகட்ட அத்திவாரம் தோண்டிய போது, கட்டிடத்திலிருந்து கீழே செல்வதற்குரிய படிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் கூட வீட்டு உரிமையாளர் காணி அரச உடமையாகிவிடும் எனப் பயந்து மூடி மறைத்துவிட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தொல்லியலாய்வுத் தரவுகள்

மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் கிடைக்கின்ற இலங்கைப் பெருங்கற்காலம் தொடர்பான நூல்கள், கட்டுரைகளும் குறிப்பிடத்தக்க அளவே உள்ளதால் ஆய்வுக்கான தரவுகள் போதாமலுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது கலைமரபுகள் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புற்றிருந்தாலும் கூடத் தனித்துவமானதாகவும் விளங்குகின்றது. தீவகப் பிராந்தியத்திற்கான இயல்புகளை இலங்கைப் பெருங்கற்காலக் கலை வடிவங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. உதாரணமாக முருகைக் கற்களாலான ஈமக் கோபுரங்கள், சிப்பியின் படையல், சுறாமுள்ளில் செய்யப்பட்ட மாலைகள், லக்ஷ்மி நாணயங்கள் முதலியன இலங்கைக்கே தனித்துவமானவை. மேற்கூறிய முருகைக்கல், சிப்பி, மீன்முள், சுறாமுள் மாலை, சங்கு வளையல்கள், முத்து என்பவற்றின் பாவனை பெருங்கற்காலப் பண்பாட்டில் இடம்பெற்றமை இலங்கையில் சமுத்திரவியல் பண்பாடு நிலவியதையும் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களின் பரவல்

பெருங்கற்காலப் பண்பாடானது உலகின் பல பாகங்களிலும் நிலவியதற்கான சான்றாதாரங்கள் கிடைக்கின்றன. இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களின் பரவலானது வடபகுதியிலிருந்து தென்பகுதி வரை காணப்படுகின்றது. ஏறத்தாழ 20 பெருங்கற்காலக் கலாசார மையங்கள் இலங்கையில் இனம் காணப்பட்டுள்ளன. அவை காரைநகர், ஆனைக்கோட்டை, கந்தரோடை, வல்லிபுரம், பூநகரி, மாந்தை, தெக்கம், பொம்பரிப்பு, அக்குறுகொட, பின்வேவ, கரம்பன் குளம், அலுத்பொம்புவ, மாமடுவ, தமவெல்ல கொடல்ல, வடிகவேவ, குருகல்கின்ன, கொக்கபே, திவுல்வேவ, ரம்பாவேவ, அனுராதபுரம், மச்சாகம, கதிரவெளி, மபகல, கதிர்காமம், கல்சுத்தார், மக்கேவிற்ற, பதவிகம்பொல, இபன்கட்டுவ, நல்லே, கலொதுவெவ என்பன. இவை மட்டுமன்றி கலாதித்த, பீமதித்த, ஜிம்கதித்த, மகாவலுகம, நில்வலதித்த, கொதபவட்ட, அம்பாந்தோட்ட போன்ற துறைமுகப் பிரதேசங்களும் பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சமான கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்கள் காணப்படும் இடங்களாகும். இத்தகைய பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் இப்பண்பாடு பரவியதைக் காட்டிநிற்கும் அதேவேளை இலங்கைக்கான தனித்துவமான அம்சங்களுடன் வளர்ந்ததையும் காட்டி நிற்கின்றன.

கந்தரோடை

இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள இப் பிரதேசம் குறிப்பிடத்தக்க பெருங்கற்காலப் பண்பாட்டு மையமாகும். வழுக்கையாற்றங்கரையிலுள்ள கந்தரோடை ஏறத்தாழ 3.2 சதுரகிலோ மீற்றர் விஸ்தீரணம் கொண்டது. இங்கு முதலில் போல் இ. பீரிஸ் 1917-1919 காலப்பகுதியில் ஆய்வை மேற்கொண்டார்.

1966ல் இலங்கைத் தொல்லியற் கழகத்தினர் ஆய்வினைச் செய்தனர். 1970ல் பென்சில்வேனியப் பல்கலைக்கழக தொல்லியல் ஆராய்ச்சியாளரான பெரேற்ப்ரென்சன், விமலாபேக்ளே ஆகியோர் ஆய்வினை மேற்கொண்டிருந்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளரான செ.கிருஷ்ணராசா கந்தரோடையில் ஆய்வுகளை மேற்கொண்டு பல பெருங்கற்கால தடயங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

கந்தரோடையில் பெருங்கற்காலப் பண்பாட்டுத் தடயங்கள் பல விமலாபேக்லே தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் கிடைத்தன. இங்கு காணப்படும் பௌத்தமத எச்சங்களை உள்ளடக்கிய மண்படைக்குக் கீழே மிகவும் வளர்ச்சி பெற்ற பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய மண்படை கண்டுபிடிக்கப்பட்டன. இப்பெருங்கற்கால மண்படையானது C_{14} காலக்கணிப்பின்படி கி.மு 1000 ஆண்டுகளுக்கும் முற்பட்டது. பெருங்கற்கால மக்கள் பிற்பட்ட காலத்தில் பௌத்தமத அறிமுகம் இலங்கையில் ஏற்பட்டபோது அதனையும் தழுவிக் கொண்டதை இங்கு கிடைத்த சான்றுகள் மூலம் அறியமுடிகிறது. கந்தரோடையில் வாழ்ந்த பெருங்கற்கால மக்கள் கி.மு 3ம் நூற்றாண்டில் அல்லது அற்குப் பின்னர் பௌத்த சமய அலையினுள் அகப்பட்ட நிலையிலிருந்த பிராமி எழுத்து வழக்கினை உபயோகித்து வந்திருந்தனர் என்பதனை இங்கிருந்து பெற்றுக்கொண்ட **'ததஹபத'** மற்றும் **'குணி'** என்ற வாசகங்களுடைய மட்பாண்டப் பிராமிச்சாசனம் எடுத்துக்காட்டுகின்றது.

கந்தரோடையில் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய இரும்பு, வெண்கலம் என்பவற்றாலான பலகருவிகள், ஆபரணங்கள், மணிவகைகள், சுடுமண் நாணயங்கள், இலட்சுமி நாணயங்கள், அச்சில் வார்க்கப்பட்ட நாணயம், உரோம மட்பாண்டங்கள், உரோம நாணயங்கள், அம்மிக் குழவிகள், சுடுமண் சிற்பங்கள், பறவை மீன் மிருக எலும்புகள், தூண்களுக்குரிய துளைகள், செங்கட்டிகள் போன்றன கிடைத்துள்ளன. சிறப்பாக ஒரு தேரோட்டியைச் சித்திரிக்கும் கார்னேலியன் கல்லிலமைந்த முத்திரை, குறியீடுகளுடனான மட்பாண்ட ஓடுகள், வெண்கலத் திரிசூலம் என்பனவும் கிடைத்துள்ளன. இவற்றுடன் 'கொல்ஸ்ரிக்' எனப்படும் வெண்கலத்தினாலான மைக்குச்சிகள் பலவும் கிடைத்துள்ளன. இவற்றில் ஒன்றில் நெல்உமியின் படிவம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளினதும் அகழ்வாய்வு களினதும் பயனாக அதிகளவில் பெறப்பட்ட தொல்பொருள் மணி வகைகளே ஆகும். பல வண்ணங்களில் பலவகை வடிவங்களில் அவை கிடைத்துள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள வேறு எந்தவொரு மையத்திலும் கிடைக்காத அளவிற்கு கந்தரோடையிலிருந்து பலவகையான மணிவகைகள் கிடைத்துள்ளன. பலவகை மணிவகைகளுள் கண்ணாடி, தந்தம், சங்கு, கார்னேலியன், பளிங்கு ஆகியவற்றினாலான மணிகளே அதிகமானவை. கார்னேலியன் மணி ஒன்றிலேயே பிராகிருத வாசகம் ஒன்று பொறிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. மணிவகைகளுள் பெரும்பாலானவை நீலம், பச்சை, செம்மஞ்சள், கருநீலம்

ஆகிய வண்ணங்களாலானவை. 1919ல் **போல் இ. பீரிஸ்** மேற்கொண்ட அகழ்வின்போது மட்டும் 26,000க்கு மேற்பட்ட மணிவகைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

கந்தரோடையில் காப்புக்கள், மோதிரங்கள், காதணிகள் என்பனவும் கண்டு பிடிக்கப்பட்டன. மோதிரங்கள் பெருமளவுக்கு உலோகத்தினால் செய்யப்பட்டவை. பெருமளவு வளையல்கள் கண்ணாடியில் உள்ளபோதும் சங்கினால் செய்யப்பட்ட வளையல்களும் கிடைத்துள்ளன. பௌத்த சிற்பங்கள் பல தலையற்ற நிலையில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வெண் வைரக்கல்லினாலான புத்தர் சிலைகள் அமராவதிக் கலைமரபின் கலைச் செழிப்பினை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. இச்சிற்பங்கள் யாவும் தென்னிந்திய சிற்பக்கலை மரபின் செல்வாக்கினை பிரதிபலித்து நிற்பதுடன் பௌத்த மதமானது தமிழ் நாட்டினூடாகவே இலங்கைக்கு பரப்பப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்ற சான்றாதாரங்களாகவும் அமைகின்றன.

இங்கு கிடைத்த மிருக எலும்புகளில் மாட்டின் எலும்பு முக்கியம் பெறுகின்றது. இதில் பல, கூரிய ஆயுதத்தினால் வரையப்பட்டும் வெட்டப்பட்டதற்குமான சான்றுகளுடன் காணப்படுவதானது மந்தைகள் வளர்த்து தமது விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திய இப்பகுதி மக்கள் இவற்றை உணவுக்காகவும் பயன்படுத்தியமையைத் தெளிவாக்குகின்றது.

ஆனைக்கோட்டை

இதுவும் யாழ்ப்பாணத்திலுள்ள குறிப்பிடத்தக்க பெருங்கற்கால மையமாகும். நாவாந்துறைப் பகுதியைச் சீர்செய்வதற்குரிய மண்ணைப் பெறுவதற்காகவே ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி மண்மேடு வெட்டப்பட்ட போது இதில் காணப்பட்ட பெருங்கற்கால பண்பாட்டு எச்சங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வுக் குழுவினரால் 1980இல் இனங்காணப்பட்டது. இதனால் பின் பேராசிரியர் க. இந்திரபாலா தலைமையில் அகழ்வு இடம்பெற்றது. மண்ணை அகழ்ந்தெடுக்கும் பணி நடைபெறும்போதே அகழ்வாராய்ச்சிப் பணியும் இடம்பெற்றதால், பல எச்சங்கள் மண்ணை அகழ்ந்தெடுக்கும்போது சிதைந்தும் குழம்பியும் காணப் படினும் ஓரளவுக்கு இக்குறைபாடுகளற்ற பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி இப்பகுதியின் பண்பாட்டு முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகிறது.

ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வில் பெருங்கற்காலப் பண்பாட்டு கறுப்புச் சிவப்பு மட்பாண்டப் பகுதிகள், உரோம ரவுலெற்றட் மட்பாண்டங்கள் கிடைத்தன. இவற்றில் ஒன்றில் இரு பிராமி எழுத்துக்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவை முறையே 'பி', 'யி' ஆகும். மேலும் சித்திர எழுத்துப் பொறித்த சில மட்பாண்ட ஓடுகளும் கிடைத்தன. இவை மட்டுமன்றி அம்மிக் குழவிகள், இரும்பினாலான ஈட்டி என்பனவும் இதன்போது கிடைத்தன.

ஆனைக்கோட்டையில் நீளக்கிடத்தி அடக்கஞ் செய்யப்பட்ட இரு மனிதச் சடலங்களும், வெண்கல முத்திரையொன்றும் கிடைத்தன. இவை மிக முக்கியத்துவமான சான்றுகளாகும். இச்சடலங்களில் ஒன்று புதைக்கப்பட்ட புதைகுழிமேலே கூரைஓடுகள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இவ்வோடுகள் சடலம் புதைக்கப்பட்ட காலத்திற்குரியனவா என்பது சந்தேகத்திற்கு உரியது என சிற்றம்பலம் கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனைக்கோட்டை ஈமச்சின்னங்களை உள்ளடக்கிய ஓர் ஈமக்காடாக இருப்பதுடன் இன்றுவரை இந்து, கிறிஸ்தவ ஈமக்காடுகளைத் தொடர்ந்து அருகில் கொண்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. குடாநாட்டைப் பொறுத்தவரையில் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட முதல் ஈமக்காடாக ஆனைக்கோட்டை விளங்குவது இதற்குரிய தனிச்சிறப்பாகும்.

ஆனைக்கோட்டை அகழ்வின்போது இலட்சுமி நாணயம், உரோமநாணயம், மணிவகைகள், மிருக எலும்புகள், மீன் எலும்புகள், சிப்பிகள், சுறா எலும்புகள், சங்குகள், ஓடுகள் ஆகியன கிடைத்தமையானது இப்பகுதியில் கி.பி 3ம், 4ம் நூற்றாண்டுவரை மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்களாக அமைகின்றன. அது மட்டுமன்றி சிப்பி, சுறா எலும்பு, மீன் எலும்பு, சங்கு என்பன இலங்கைக்கே சிறப்பான அம்சங்களாகவும் அதேசமயம் ஆனைக்கோட்டை மையம் கடலுடன் கொண்ட தொடர்பை காட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

ஆனைக்கோட்டையில் மீட்டெடுக்கப்பட்ட ஒரு எலும்புக்கூட்டின் தலைமாட்டருகில் பெறப்பட்ட வெண்கல முத்திரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இதில் இரு வரிவடிவங்கள் உள. (இவ்விருவடிவங்களும் இரு வரிகளாகக் காணப்படுகின்றன). முதலாவது வரியில் சிந்து வெளியிலும் பெருங்கற்கால மட்பாண்ட ஓடுகளிலும் காணப்படுங் குறியீடுகளை ஒத்த சித்திர எழுத்துக் காணப்பட்ட, இரண்டாவது வரியிற் பிராமி வரிவடிவம் காணப்படுகின்றது.

இதிலுள்ள சித்திர எழுத்து ஈழத்தில் பிராமி வரிவடிவம் அறிமுகப்படுத்தப்பட முன்னர் வரலாற்றுதய காலத்தில் இப்பகுதி மக்கள் இச்சித்திர வடிவத்தை அறிந்திருந்ததை எடுத்துக்காட்டுகின்றது எனலாம். இவ்விரு வடிவங்கள் இம் முத்திரையில் காணப்பட்டாலும் **கோவேந்த/ கோவேத்/ கோவேத/ கோவேதம** என்ற வாசகமே இவ்வாறு இரு வரிகளாக இரு வரிவடிவங்களில் எடுதப்பட்டுள்ளது என்று இனங்காணப்பட்டுள்ளது. எனினும் சிந்துவெளிக் குறியீடுகள் போன்று ஈழத்திலும் இத்தகைய குறியீடுகள் காணப்படுவதும் இத்தகைய முத்திரை அக்காலத் துறைமுகங்களிலொன்றாகிய நாவாந்துறைக்கருகில் காணப்படுவதும் அவதானிக்கத்தக்கது. இக்கப்பல் பயணத்தினை நிர்வகித்த ஒரு குறுநிலத் தலைவனால் அல்லது பிராந்தியத் தலைவனால் அணியப்பட்ட ஒரு மோதிரத்தின் எஞ்சிய பாகமாகவே இவ்வெண்கல முத்திரை அமைந்திருந்ததை இதன் எஞ்சிய பாகம் எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

இரு மனித எலும்புக்கூடுகள் மேற்கு - கிழக்காக புதைக்கப்பட்டிருந்தன. இரண்டாவது மனித எலும்புக்கூடு காலத்தால் பிந்தியது என்பதை இதன்

கால்மாட்டிற் கண்டெடுக்கப்பட்ட உரோம ரவுலெற்றெற் மட்பாண்டங்கள், ஒரு இலட்சுமி நாணயம், இரும்பினாலான அகல்விளக்கின் எஞ்சிய பாகங்கள் ஆகியன எடுத்துக்காட்டியுள்ளன. இவ்வெலும்புக்கூடுகள் யாழ் குடாவில் முதன் முதலாக அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளாயிருப்பதால் பெருங்கற்கால மனிதன் இங்கு வாழ்ந்ததை எடுத்தியம்புகின்றன. மேலும் ஆனைக்கோட்டை யின் முதலாவது மனித எலும்புக்கூடு மாந்தை எலும்புக்கூட்டை ஒத்துள்ளதும், மாந்தை எலும்புக்கூடு தென்னிந்திய மக்களது சடலம் என இனங்கண்டு கொள்ளப்பட்டதும் இத்தகைய கருத்தினை மேலும் உறுதிசெய்வதாக ஆனைக் கோட்டை முத்திரையின் வாசகம் அமைந்துள்ளதும் ஆகிய காரணங்களால் பெருங்கற்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த மக்களை ஒத்த மக்கட் கூட்டத்தினரே ஈழத்திலும் வாழ்ந்தனர் என்பது மேலும் உறுதியாகின்றது.

சத்திராந்தை

காரைநகரிலுள்ள சத்திரந்தையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இங்கு சி.க.சிற்றம்பலம், P.ரகுபதி ஆகியோர் ஆய்வினை மேற்கொண்டிருந்தனர். 1981ஆம் ஆண்டு ஜனவரி, ஒக்டோபர் மாதங்களில் இரு ஆய்வுக்குழிகள் இங்கு அமைக்கப்பட்டன. இதில் முதலாவது குழியில் இரண்டாவது படையில் நீளக்கிடத்தி அடக்கஞ்செய்யப்பட்ட நிலையில் இரு எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றைச்சுற்றி மீன், மிருகஎலும்புகள், நண்டுக்கோதுகள், மாட்டுப்பல், மணிகள், பூனை போன்ற மிருகங்களின் எலும்புகள், கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் என்பன காணப்பட்டன. இரண்டாவது குழியில் படை அமைப்புக் குழம்பிய நிலையில் காணப்பட்டாலும் கறுப்புச் சிவப்புநிற மட்பாண்டங்கள், மணிவகைகள் கிடைத்துள்ளன.

சத்திராந்தையில் கிடைத்த கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்களின் மண்சேர்க்கை யானது கரடுமுரடான மண்ணினால் ஆக்கப்பட்டுள்ளது. இது இங்கு குடியேறியவர்களின் ஆரம்ப நடவடிக்கைகளைச் சுட்டுவதாகலாம். இதனைப் போன்றே இங்குள்ள மட்பாண்டங்களின் குறியீடுகளும் காணப்படுகின்றன. இவற்றுள் பிராமி வரிவடிவமாகிய 'ம', இரு அடைப்புகளிலுள்ள ஆங்கில 'எக்ஸ்' போன்ற குறியீடு, திரிசூலங்கள் என்பவை குறிப்பிடத்தக்கன. வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே இத்தகைய குறியீடுகள் வழக்கிலிருந்தன என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. இதுமட்டுமன்றி வரலாற்றுக் காலத்தின் அடையாளமாகிய ரவுலெற்றெற் மட்பாண்டங்கள் அகழ்வுக்குழிகளிற் காணப்படாததும் இவ்விடத்தின் பழைமைக்குரிய மேலுமொரு சான்றாகும். எனினும் இத்தகைய மட்பாண்டங்கள் அகழ்வுக் குழிகளுக்கு வெளியே கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வன்னிப் பெருநிலப்பரப்பு

இங்கு பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய அம்சங்கள் பல கிடைத்துள்ளன. மாமடுவ, அக்கராயன், விசுவமடு, முள்ளியவளை போன்ற பிரதேசங்கள்

பெருங்கற்காலப் பண்பாட்டு தடயங்களைக் கொண்டுள்ளன. மாமடுவ பிரதேசத்தில் அரசாங்கத்தின் வனவிலங்குப் பகுதியினர் புதிதாக மரங்களை நாட்டும் முயற்சியை மேற்கொண்டதாற் பல ஈமச்சின்னங்கள் அழிந்துவிட்டன. எஞ்சியுள்ள சின்னங்களிற் கல்வட்டங்கள், கல்லறைகள் குறிப்பிடத்தக்கன. கல்வட்டங்கள் 3மீற்றர் நீளத்தில் பூரணமான தோற்றத்துடன் காணப்படுகின்றன. கல்லறைகள் பல பூரணமான முறையிற் காணப்படவில்லை. சிலவற்றின் பக்கக்கற்கள் அகற்றப்பட்டும் விட்டன. சராசரியாக இக்கற்கள் 1½ m நீளமும் 1m அகலமும் கொண்டவை. பூரணமான முறையில் காணப்பட்ட கல்லறையின் நீளம் 1.20 m, அகலம் 1.40 m. இவ்வீமச் சின்னங்களிற் கல்லறைகளில் இறந்தவரது எலும்புகளும் பிற நிவேதனப் பொருட்களும் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கலாம். இவற்றில் ஒன்றில் கிடைத்த மட்பாண்டங்கள் சில அரச தொல்பொருளியற் திணைக்களதிலுள்ளது. கல்வட்டங் களுள் சிலசமயம் முழுமனித உடலும் அடக்கஞ் செய்யப்படுவது உண்டு. எனினும் அகழ்வு மேற்கொள்ளப்படாதிருந்த நிலையில் இதுபற்றித் தெளிவாக நாம் ஒன்றும் கூறமுடியாது.

அக்கராயன் குளம், பழைய முறிகண்டி, கோணாவில், விசுவமடு, முள்ளியவளை பிரதேசங்களில் ஏராளமான லக்ஷ்மி நாணயங்கள், பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட கறுப்பு, சிவப்பு மட்பாண்ட ஓடுகள், சுடுமண் நாணயங்கள் பூநகரி, கந்தரோடையை ஒத்த வகையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் அச்சுக்குத்திய நாணயங்கள் லஷ்மி நாணயங்கள் என்பன கிடைத்துள்ளன. மாமடுவ, உருத்திரபுரம் போன்ற இடங்களில் சுடுமண் பாவைகள் கிடைத்துள்ளன. அக்கராயனில் உலோகத்தாலான மீன்சின்னம் பெறப்பட்டது. அது **நாகன்** என்ற தமிழ் பிராமி எழுத்துடன் காணப்பட்டது. இது குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. இவை பெருங்கற்காலப் பண்பாடு நிலவியதற்கான சான்றுகளாக அமைவதுடன் உலோகமீன் சின்னமானது தமிழ்மொழிவழிப் பண்பாடு நிலவியதையும் காட்டுகின்றது எனலாம்.

மாந்தை

தமிழகத்தின் தென்பகுதிக்கு எதிரே இலங்கையிலுள்ள ஒரு பரந்த பிரதேசமாக விளங்கும் இம்மையம் மிகநீண்ட கலாசாரப் பாரம்பரியத்தினையுடையது. பிரசித்திபெற்ற மாந்தை துறைமுகம் இங்குண்டு. பாளிநூல்கள் இதனை மாதோட்ட அல்லது மாதித்த என அழைக்கின்றன. மாந்தையில் மிகப்பழைய அகழ்வாய்வுகள் 1887இல் மேற்கொள்ளப்பட்டன. அதன்பின் காலத்துக்குக்காலம் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1954ல் தொல்லியற் திணைக்களத்தினைச் சேர்ந்த சண்முகநாதன் இங்கு அகழ்வை மேற்கொண்டார். இவர்மட்டுமன்றி கோகாட், **ஜோன்காஸ்வெல்** போன்றோரும் மாந்தையில் அகழ்வுகளை மேற்கொண்டவர்களாவர். 1980களில் இங்கு ஜோன்காஸ்வெல் தலைமையில் அகழ்வு நடைபெற்றபோது பெருங்கற்கால கறுப்புச் சிவப்பு நிற உள்நாட்டு மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும்கூட, அரசியற் காரணங்களால் 1984இல இவ் ஆய்வுகள் திடீரென்று முடிவுக்கு வந்தன.

மாந்தையில் கிடைத்த தொல்லியற் தடயங்களுள் சண்முகநாதனின் அகழ்வின் போது கண்டறியப்பட்ட மனித எலும்புக்கூடுமொன்று முக்கியமானது. இவ்வெலும்புக்கூடு மாந்தை நகர எல்லைக்கு வெளியே நிலத்திலிருந்து 4′ 8″ ஆழத்தில் மேற்கு - கிழக்கு திசைநோக்கி புதைக்கப்பட்டிருந்தது. அரையிற் கைகள் மடித்துக்காணப்பட்ட இது 5 அடி நீளமானது. கால்மாட்டின் இருகரையிலும் இரு சட்டிகள் காணப்பட்டன. இச்சடலம் கிடைத்த படைக்கு மேலே உரோம அரிற்றயின் மட்பாண்டங்களுடைய படை காணப்படுகிறது. இது கிறிஸ்தாப்த காலத்திற்குரியதனால், வரலாற்றுதய காலத்திற்குரியதாக இச்சடலத்தின் காலத்தை ஓரளவுக்கு நிர்ணயிக்கலாம். இச்சடலத்தினை ஆராய்ந்த அறிஞர்கள் இது தற்காலத் தென்னிந்திய மக்களுடைய தோற்றத்தையே ஒத்துக் காணப்படுகின்றது எனவும் எடுத்துக்காட்டியுள்ளனர். காஸ்வெல் தலைமையிலான அகழ்வு பணியின் போது பரிசோதனைக் குழியினுள் பெருங்கற்கால பண்பாட்டு முத்திரையாகிய கறுப்புச் சிவப்புநிற மட்பாண்டங்கள் கிடைத்தன.

பூநகரி

இம்மையமானது தமிழகத்திற்கு எதிரே இலங்கையில் தமிழகத்தின் தொடக்க வாயிலில் ஒன்றாக அமைந்திருப்பதால் அங்கிருந்து ஏற்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டின் முதலலைகளில் ஒன்று இப்பிராந்தியத்திலும் ஏற்பட்டதெனக் கூறமுடியும். இதனால் இலங்கையின் ஏனைய பிராந்தியங்களிற்குக்கூட இங்கிருந்தும் இப்பண்பாடு பரவியதெனக் கூறலாம். அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியரான ப. புஷ்பரட்ணத்தினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் பூநகரி பற்றிய பல தகவல்களைத் தந்துள்ளன. பூநகரிப் பிராந்தியத்திலே கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு, பள்ளிக்குடா, தியாகம், பல்லவராயன், ஈழவூர், குதிரைகட்டினதீவு போன்ற இடங்களிலே பெருங்கற்காலப் பண்பாட்டுத் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

வெட்டுக்காடு, மண்ணித்தலை போன்ற இடங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய தொல்லியல் மையங்கள். பூநகரியில் இவ்விரு இடங்களிலுமிருந்துதான் இப்பண்பாட்டிற்கே சிறப்பாயுரிய கறுப்பு சிவப்பு நிற மட்பாண்டங்கள் பெறப்பட்டது. இச்சான்றுகள் காணப்பட்ட இடங்களில் மேலும் கறுப்பு, சிவப்பு, நரை நிற மட்பாண்ட ஓடுகள், சிவப்புநிற முழுமையான இரு பானைகள், சுடுமண்பாவைகள், அகல்விளக்குகள், கெண்டிகள் என்பன பெறப்பட்டுள்ளன. பூநகரி பிராந்தியத்தில் பெருங்கற்கால பண்பாட்டு ஈமச்சின்னங்களை அமைக்கப் பெருங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் தாழிகளும் குழிகளும் பயன்படுத்தப்பட்டிருந்ததையும் காணலாம். பூநகரியில் இரும்புக்கொழு, கத்தி, மீன்பிடி ஊசிகள், மணிகள், கைவளையல்கள் எலும்பினால் செய்யப்பட்ட கழுத்து மாலைகள், அலங்காரப் பொருட்கள், கல்மோதிரங்கள் உலோகத்தினாலான காற்சலங்கைகள் என்பன கிடைத்துள்ளன.

ஆதிகால மக்கள் சுட்டமண்ணைக் கொண்டு கட்டிய கிணறுகளை பயன்படுத்தியுள்ளமை தெரிகிறது. இதனை தொல்லியலாளர் மண்வளையற்கிணறு (Ring well) என்பர். இது பூநகரியில் கிராஞ்சியில் காணப்பட்டதுடன் தனித்துவமான அம்சத்துடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மண்வளையற் கிணற்றில் மேற்பாகம் நட்சத்திர வடிவில் 2½ அடி விட்டத்தை உடையது. 3 அடி ஆழம் உடைய இதன் கீழ்ப்பாகம் 5 மண் வளையங்களை ஒன்றாகப் பொருத்தி வட்டவடிவிலே கட்டப்பட்டுள்ளது. இவ்வம்சம் முல்லைத்தீவு, மன்னார், வல்லிபுரம் மண்வளையற் கிணறுகளில் இல்லாதது கிராஞ்சி மண்வளையற் கிணறு கிறிஸ்து சகாப்த காலத்திற்குரியதாக பேராசிரியர் ப. புஷபரட்ணத்தினால் கருதப்படுகிறது.

பூநகரிப் பிராந்தியத்தில் கிடைத்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய மட்பாண்டங்களில் பலவகையான குறியீடுகள் காணப்படுகின்றன. மேலும் கிறிஸ்தாப்த காலத்திற்குரிய பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் மண்ணித்தலையில் கிடைத்த இரண்டு மட்பாண்ட சாசனங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. முதலாவது சாசனம் ஈல' /'ஈலெ' எனவும் இரண்டாவது சாசனம் 'ஈழ' எனவும் வாசிக்கத்தக்க எழுத்துக் களைக் கொண்டுள்ளன. இவ்விரு சாசனங்களும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திற்குரியவை என்பதை இவற்றின் எழுத்தமைதி கொண்டு கணிப்பிடலாம். பரமன்கிராயில் கிடைத்த 'லோமா' என்று வாசிக்கத்தக்க ஒலிப்பெறுமானம் கொண்ட சாசனமானது இலங்கையில் இதுவரை கிடைத்த சாசனங்களுள் ஒரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. பொதுவாக மட்பாண்டங்களில் எழுதப்பட்ட வரிவடிவங்கள் மட்பாண்ட மேற்பரப்பைவிடச் சற்றுப் பள்ளமாக உள்ளன. ஆனால் பரமன்கிராய் சாசனம் வேறுபட்டு மட்பாண்ட மேற்பரப்பைவிட எழுத்துக்கள் சற்று மேலே தெரியுமாறு அமைந்துள்ளது. இவ்வாறு எழுதும் பண்பு பிற்காலச் சாசனங்களிலே காணப்பட்டாலும் மட்பாண்டப் பிராமிச் சாசனங்களில் எழுதப்பட்டதற்கு ஏனைய இடங்களில் ஆதாரம் காணப்படவில்லை. இதனால் கி.மு 3ஆம் நூற்றாண்டுக்குரிய இச்சாசனம் தனித்துவமான முக்கியத்துவம் வாய்ந்தது.

அநுராதபுரம்

இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தமையமாகும். இங்கு இலங்கை - பிரித்தானியா தொல்லியலாளர் இணைந்தும், இலங்கை - ஜப்பானிய தொல்லியலாளர் இணைந்தும், அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தனர். 1969 தொடக்கம் இப்பகுதியில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொட்றிங்ரனும், கலாநிதி சிரான்தெரணியாகலவும் இணைந்து மேற்கொண்ட அகழ்வின்போது ஆதிக்குடியேற்ற வாசிகளின் படிமங்களாக 10அடி கனமுள்ள படிமங்கள் காணப்பட்டன. அத்துடன் இதில் 3 கலாச்சாரப் படைகளும் இனங்காணப்பட்டன. இதில் 3வது கலாச்சாரப் படையில் பெருங்கற்காலக்

கலாசாரப்படை காணப்படுகிறது. இது அ, ஆ என்ற இரு உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 4வது படையில் வரலாற்றுக் காலமாகிய எழுத்தாதாரம், நாகரிக அம்சங்கள் கொண்ட படையாக இனங்காணப்பட்டுள்ளது. 3வது படையின் 'ஆ' பிரிவு வரலாற்றுக்கால அம்சங்களையும் தன்னோடு கொண்டிருந்ததால் பெருங்கற்கால மக்களே தொடர்ச்சியாக இங்கு வாழ்ந்து ஈழத்து நாகரிகத்தை வளர்த்தெடுத்தனர் என்பது உறுதியாயிற்று. இதனால் கி.மு 400ஆம் ஆண்டளவில் பெருங்கற்காலக் கலாசாரம் இங்கு தோற்றம் பெற்றிருக்கலாம் எனக் கொள்ளப்பட்டாலும் அநுராதபுரத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் கெடிகேயில் கிடைத்த 3வது மண்படை தொல்லியல் எச்சங்களை விஞ்ஞானக்காலக் கணிப்புக்கு உட்படுத்தியபோது இதன் தோற்றம் கி.மு 800 ஆக இருக்கலாம் என உறுதிசெய்யப்பட்டுள்ளது. கி.மு 300/ 250இல் ஆரம்பமாகிய வரலாற்றுக்காலத்தில் வடஇந்தியாவுடன் கொண்டிருந்த தொடர்பினை எடுத்துக்காட்டும் ஒரு சில மட்பாண்ட ஓடுகளும், நாணயங்களும். எலும்பினாலான எழுத்தாணி ஆகியனவும் இனங்காணப்பட்டன. பௌத்த மதத்தின் வருகையும் இக்காலத்தில் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய நாணயங்களும் கண்டறியப்பட்டுள்ளன. அநுராதபுர சல்காவத்த அகழியில் பல நாணயங்கள் கிடைத்தன. இவற்றுள் மிகப்பழமையானது கி.மு 3ம் நூற்றாண்டின் நடுக்காலத்துக்கு உரியது. சதுரமாக செம்பைக் கொண்ட கலப்புலோகத்தாலானது. அநுராதபுர அரணின் தெற்கு வாயிலில் இலங்கை ஜப்பானிய அகழ்வுகளின் போது லஷமி நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன. அண்மையில் பிரித்தானிய, ஜெர்மன் ஆய்வுக்குழுவினர் இங்கு மேற்கொண்ட அகழ்வின்போது கி.மு 3ம் நூற்றாண்டுக்குரிய சங்ககால நாணயங்களையும், கடற்போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்ட கலம் ஒன்றின் உருவம் பொறித்த நரைநிற மட்பாண்ட ஓடு ஒன்றையும் கண்டுபிடித்துள்ளனர்.

அநுராதபுரத்தில் உள்ள பண்டெல்லவேவ பகுதியில் சுடுமண் சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் அழியாப் பொருட்களால் கட்டடங்களை ஆக்கும் கலைமரபு இருந்தது என்பதற்கு அநுராதபுரத்திலுள்ள இசுறுமுனிய கோமுகிகள் சிறந்த உதாரணமாக அமைகிறது. இது கி.மு 2, 1ம் நூற்றாண்டளவினதாகும். சாசனச் சான்றுகளின்படி, ஏறக்குறைய கி.மு 3-1ம் நூற்றாண்டுகளுக்குரியதும் தமிழ்க் குடும்பத்தினருக்குரியதுமான பொதுமக்களின் கூட்ட மண்டபமொன்று அநுராதபுரத்திலுள்ள இரத்தினப் பிரசாதம் எனும் இடத்துக்கு அண்மையில் காணப்படுகிறது. இங்கு ஒரு பாறையில் 5 படிகளை யுடைய தளம் அகழப்பட்டது. இதில் பல்வேறு தகுதியிலுள்ளவர்களுக்காக பல்வேறு மட்டங்களில் ஆசனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அநுராதபுரத்திலுள்ள ஜயசிரிமகா அரசமரத்திற்காக, ஒரு 'போதிகர' கி.மு 3ம் நூற்றாண்டிலே கட்டப்பட்டது. அநுராதபுர மாவட்டத்திலுள்ள பில்லாவேகலவிலிருந்து கிடைத்த கி.பி 1ம் நூற்றாண்டுச் சாசனமொன்றில் ஒரு சித்திரகாரர் (சித்தகர)

குறிப்பிடப்பட்டுள்ளார். அநுராதபுரத்து ருவான்வலிசாயாவின் வாசல் வழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட திருவாணநிலையிலுள்ள ஒரு பெண்ணின் வியக்கத்தக்க உருவம் யானைத்தந்தத்தால் செதுக்கப்பட்டுள்ளது. இது கிபி 2ம் நூற்றாண்டு காலத்தது. அநுராதபுரத்தில் கிடைத்த பெருங்கற்கால மட்பாண்டங்களில் முத்தலைச் சூலம் போன்ற உருவங்களும் பிறையின் வடிவங்களும் காணப்படு கின்றன. அநுராதபுரத்தில் சிங்க உருவம் பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ளன. இவை சதுர வடிவில் மட்டுமன்றி வட்ட வடிவிலும் வெளியிடப்பட்டுள்ளன. காளையின் உருவம் பொறித்த நாணயங்களும் அநுராதபுரத்தில் கிடைத்துள்ளன.

ரிதியாகம

இது வளவை கங்கையின் இடக்கரையில் அமைந்துள்ளது. இங்கு 1993லிருந்து 1996 வரை ரிதியாகமவில் ஒழுங்கமைக்கப்பட்ட தேடல்களையும் ஆய்வுகளையும் பொபியாராய்ச்சி, விக்கிரமசிங்கே இணைந்த குழவினரால் மேற்கொள்ளப்பட்டது. 1995ல் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு 6 படைகளை வெளிப்படுத்தியது. 3வது படையில் பெருங்கற்கால பண்பாட்டம்சமாகிய கறுப்புச் சிவப்பு மட்பாண்டத் துண்டுகள் எண்ணற்றனவாகக் கிடைத்துள்ளன. 4வது படையில் செப்புக்கழிவுகள் மைக்கா, முந்திய கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள், சுடுமண் பொருட்கள், மணிகள், எரிந்த கரிக்கட்டை என்பன காணப்பட்டன. இப்படை பரந்துபட்ட மனிதச் செயற்பாடுகளைக் காட்டுகிறது. மிகப் பழைய அடுக்கு சிறிய எண்ணிக்கையில் பானைத் துண்டுகளையும் செப்புக் கழிவுகளையும் வெளிப் படுத்தி மனிதக்குடியிருப்பை சுட்டியது. வெவ்வேறு காலகட்டக் குடியிருப்புகளின் அண்ணளவான காலம் கி.மு 4ம் நூற்றாண்டிலிருந்து கி.பி 7ம் நூற்றாண்டுவரை என்பதை ரோம நாணயங்கள், கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள், வேறு மட்பாண்டங்கள், இரும்புக்கழிவுகள், மணிகள் என்பவற்றால் கண்டுகொள்ளலாம்.

1996இல் இத்தாலிய, போர்த்துக்கேய, பிரான்சிய அகழ்வாராய்ச்சியாளர்களின் பங்குபற்றலில் 20க்கு மேற்பட்ட உலை அமைப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை இரும்பை உருக்க அல்லது பொடிதூவிச் சூடாக்கலுக்கு (Cementation) பயன்பட்டிருக்கலாம்.

ரிதியாகமவில் பொபியாராய்ச்சி, ராஜாவிக்கிரமசிங்கே குழுவினர் மேற்கொண்ட தேடலின்போது மேற்பரப்பில் கிடைத்த கலை வேலைப்பாடமைந்த பொருட்கள் பல பெறப்பட்டன. அவற்றுள் ஒன்று கண்ணைக் கவரும் ஒரு சிறிய காசுப் பெட்டியாகப் பயன்படுத்தப்பட்ட சுடுமண் சாடி போன்ற பொருளாகும். அதனைக் கண்டெடுத்த கிராமவாசியிடமிருந்து பெற்ற தகவலின்படி இப்பொருள் உரோம நாணயங்களால் நிரப்பப்பட்டிருந்தது. அதனை ஆராய்ச்சியாளர் பெற்றபோது அதன் உட்பரப்பில் 18 ரோம நாணயங்கள் காணப்பெற்றன. மேலும் காசுப் பெட்டியின் துவாரம் Roman Third Brass ஐ மட்டுமே உட்செலுத்தப் போதுமானதாக இருந்தது.

திஸ்ஸமகாராம

ருகுண பகுதியில் இப்பிரதேசம் அமைந்துள்ளது. இங்கு பெருங்கற்காலப் பண்பாட்டம்சங்கள் பல காணப்படுகின்றன. ருகுண ராச்சியத்தின் தலைநகராக மகாகம என அழைக்கப்பட்ட இன்றைய திஸ்ஸமகாராமவில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய அரியகல்மணிகள், மட்பாண்டங்கள், சுடுமண் உருவங்கள், அச்சுக்கள், அலங்கார மனித மிருக மற்றும் தாவரங்களுடன் கூடிய கல்மணிகள், பிராமிக் கல்வெட்டுக்கள், உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள் என்பன கிடைத்துள்ளன. இங்கு பொபி ஆராய்ச்சி, ராஜாவிக்கிரமசிங்கே இணைந்த குழுவினர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர். மற்றும் பரணவிதானா போன்றோர் திஸ்ஸமகாராம தொடர்பான ஆய்வுகளை செய்துள்ளனர். ஜேர்மனிய தொல்லியலாளர்கள் 1990களில் அக்குறுகொடவில் ஆய்வுகளை நடத்தி இம்மையம் பெருங்கற்கால மக்களின் குடியிருப்புமையமாக விளங்கியதை உறுதிப்படுத்தி உள்ளனர்.

அண்மையில் கி.மு 3-2ம் நூற்றாண்டுக்குரிய பிராமி எழுத்துப் பொறித்த பல நாணயங்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் இவை இலங்கையில் இதுவரை கிடைத்த காலத்தால் முந்திய எழுத்துப்பொறித்த நாணயங்களாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இவை இலங்கைக்கே சிறப்பான நாணயங்களையும் பெருமளவாகக் கொண்டுள்ளன. இந்நாணயங்கள் ஈயத்தாலானவை. இந்நாணயங்கள் எழுத்துப் பொறிப்புக்களையும், தனிப்பட்ட பெயர்களையும் கொண்டுள்ளன. புராதன இலங்கை நாணயங்கள் 'யானையும் ஸ்வஸ்திகாவும்', 'குதிரையும் ஸ்வஸ்திகாவும்', 'சிங்கமும் ஸ்வஸ்திகாவும்' என்பவற்றைக் கொண்டவை. ஆனால் அக்குறுகொட நாணய விலங்குகள் ஏற்கனவே அறியப்பட்ட வகையிலிருந்து வேறுபட்ட உருவங்களையும் கொண்டுள்ளன. குதிரை உருவ நாணயம் சில தனித்துவ அம்சங்களைக் கொண்டு இலங்கையில் ஏற்கனவே அறியப்பட்ட நாணயங்களிலிருந்து வேறுபட்டது. மேலும், பூவடிவங்கள், கேத்திர கணித வடிவங்கள், கழுதை, வலப்புறமாக ஓடும் சேவல், மீன்வகைகள் (சுறாக்கள் அல்லது டொல்பின்) எனும் வடிவங்கள் இதுவரை திஸமகாராம தவிர்ந்த ஏனைய இலங்கை நாணயங்களில் முத்திரை குத்தப்பட்டிருந்ததாக அறியப்படவில்லை. அக்குறுகொடவில் இடப்புறத்தில் இடக்கையை இடுப்பிலும் தூக்கிய வலக்கையில் கண்ணாடி போன்ற பொருளும் பிடித்தபடி நிற்கும் பெண்ணுருவம் கொண்ட பொறிக்கப்படாத நாணயம் கிடைத்துள்ளது. இது சிறப்பு வாய்ந்ததாகும்.

அக்குறுகொடவில் கிடைத்த நாணயங்கள் இரண்டில் தமிழ்ப் பிராமி எழுத்து இருப்பதாக, பொபி ஆராய்ச்சி சுட்டிக்காட்டி உள்ளார். அவை 'உதிரன்', 'தஸபிடன்' எனப் பெயர் கொண்டுள்ளதாக பேராசிரியர் ப. புஷபரட்ணம் கருதுகிறார். அவ்வாறே வேறு இரு நாணயங்களையும் தமிழ்ப் பிராமி எழுத்துக்கொண்ட நாணயங்களாகக் கருதுகிறார். அவற்றில் **'கபதிகஸபஅன்', 'மஹாசாத்அன்'** என்ற பெயர்கள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அக்குறுகொடவில் கண்டுபிடிக்கப்பட்ட காசுப்பெட்டி 367 பிந்திய ரோம வெண்கல நாணயங்களையும் அவற்றைப்போல உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நாணயங்களையும் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. திஸ்ஸமகாராமவில் களிமண் முத்திரைப் பொறிப்புகளுடன் களி, எலும்பு, கல், மரம் என்பவற்றாலான பெருமளவிலான பல்வேறுவகை முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அக்குறுகொடவிலிருந்து அரச முத்திரை அடையாளமிடப்பட்ட வெவ்வேறு நாணயங்களின் பதிவுகளைக் கொண்ட இரண்டு சுடுமண் தட்டுகள் (Disks) அறியப்பட்டுள்ளன. அக்குறுகொடவில் தங்க அல்லது வெள்ளி மணிகளை வார்க்கப் பயன்பட்ட அச்சுக்கள், மணி அச்சுக்கள், சிறிய வெண்கல மற்றும் சுடுமண் புடக்குகைகள் (terracotta crucibles) என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

திஸ்ஸமகாராமவில் பெருமளவிலான ஈமப்பொருட்களுடன், ஈய உலோகத்தாலான துண்டுகள் பல தனித்துவத்துடன் கிடைத்துள்ளன. சங்கு, மீன், மணி வடிவங்களிற் செய்யப்பட்டுள்ள ஈயப்பொருள்கள் பெரும்பாலும் காசாகப் பயன்பட்டிருக்கலாம். கி.மு 2ம் நூற்றாண்டுக்குரிய ஈயநாணயங்களும் கலைப் பொருள்களும் தாய்லாந்தில் ஆக்கப்பட்ட ஈயவார்ப்புக் கட்டிகளை அமைப்பிலும் வடிவிலும் ஒத்த ஈயவார்ப்புக் கட்டிகளும் திஸ்ஸமகாராமையில் கண்டுபிடிக்கப் பட்டமை ஆரம்ப காலங்களில் தாய்லாந்திலிருந்து இலங்கை பொருள்களை இறக்குமதி செய்ததற்கான வாய்ப்புக்களை ஆராய வற்புறுத்துகிறது. திஸ்ஸமகாராமவில் ரௌலற்றட் மட்பாண்டத் துண்டு ஒரு புறத்தில் புள்ளிகளின் வடிவங்களும் மறுபக்கம் ஒரு குரங்கையும் கொண்டுள்ளது. திஸ்ஸமகாராமவில் ரௌலற்றட் மட்பாண்ட துண்டுகள் மட்டுமன்றி முந்திய கறுப்புச் சிவப்பு மட்பாண்டத் துண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை தமிழகத்திலுள்ள ஆதிச்சநல்லூர், அமிர்தமங்கலம், சானூர், அரிக்கமேடு, கேரள மாநிலத்திலுள்ள போர்க்களம், கர்நாடக மாநிலத்திலுள்ள பிரமகிரி ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களை தோற்ற அமைப்பில் நினைவூட்டுகின்றன. இவ்வாறு ஒத்த அம்சமானது தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பெருங்கற்காலப் பண்பாடு வந்ததை மட்டுமல்ல, அக்குறுகொடவில் கிடைத்த தனித்துவமான அம்சங்களுடன் கூடிய பெருங்கற்காலப் பண்பாட்டுச் சான்றுகள் ஈழத்திலே தனித்துவமான வகையில் அப்பண்பாடு வளர்ந்தமையையும் காட்டுகின்றன எனலாம்.

பிலபிற்றி (Pilapitiya)

இம்மையம் களனி கங்கையின் கழிமுகத்திலிருந்து கிட்டத்தட்ட 7மஅ தூரத்தில் கெலனியவுக்குருகே உள்ளது. இங்கு 1997இல் தொல்லியலாராய்ச்சித் திணைக்களமும் பிரான்சிய தொல்பொருளியல் மிஷனும் ஆய்வுகளை நடத்தியுள்ளன. இதன்போது கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள் மட்டுமல்லாமல் இறக்குமதி செய்யப்பட்ட ரௌலற்றட் மட்பாண்டத் துண்டுகளும் பெறப்பட்டன. இம்மட்பாண்டங்கள் தென்னிந்தியக் கரைகளிற் பெறப்பட்டவற்றை ஒத்தவை. இந்தியக் கடற்றுறைமுகம் ஆலங்குலத்தை போலவே பிலபற்றிய

அகழ்வாய்வுகளும் 5 முக்கிய ரௌலற்றட் மட்பாண்ட வகைகளில் மூன்றை வெளிப்படுத்தின. அவையாவன:

1. சாம்பல் நிறம் சேர்ந்த மென்சிவப்பு பாண்டம்
   (Greyish Pink Ware - சாம்பல் Slip உட்புறம், கபிலத்திலிருந்து கறுப்பு வெளிப்புறம்)
2. நரைநிற மட்பாண்டம்
   (Grey ware - கறுப்பு Slip உட்புறமும் வெளிப்புறமும்)
3. சாம்பல்நிறம் சேர்ந்த மென்சிவப்பு பாண்டம்
   (Greyish Pink Ware - கறுப்பு Slip உட்புறம், Brown Slip வெளிப்புறம்)

பொம்பரிப்பு

மன்னார்க்குடாக் கரையோரத்திலமைந்துள்ள கலாஓயா நதிக்கரையில் இம்மையம் உள்ளது. இங்கு குறுணிக்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து பெருங்கற்காலப் பண்பாடும் அதனைத் தொடர்ந்து வரலாற்றுக்காலமும் நிலவியதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. 1921இல் கண்டுபிடிக்கப்பட்ட பொம்பரிப்பு பின்பு 1956இல் தொல்பொருள் திணைக்களத்தினால் அகழ்வாய்வுகள் செய்யப்பட்டு மேலும்பல தாழிகள் ஆராயப்பட்டன. 1970களில் இங்கு விமலா பேக்லே தலைமையில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்திரபாலாவின் ஆய்வும் ஆதித்திராவிடக் கலாச்சாரத்தின் குடியிருப்பாக இனங்காண உதவியது.

(பெருங்கற்காலப் பண்பாட்டில் ஈமச்சின்னங்களை அமைக்கப் பெருங்கற்களைப் பயன்படுத்தியிருந்தாலும் நாட்டின் பௌதிகச் சூழலுக்கேற்ப, தாழிகளும் குழிகளும் பயன்படுத்தப்பட்டதையும் காணமுடிகிறது. அந்தவகையில்) பொம்பரிப்பு பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய மிகப்பெரிய தாழிக்காடாக இனங்காணப் பட்டுள்ளது. இங்குள்ள தாழிகளின் உயரம் 3 அடியாகும். இவற்றில் இறந்தவர்களின் மண்டையோடுகளும், பிறமுக்கிய எலும்புகளும் மட்பாண்டங்களில் அடக்கம் செய்யப்பட்டிருந்ததோடு, இவர்கள் பயன்படுத்திய பொருட்கள் ஆகியனவும் இவற்றுடன் சேர்த்துப் புதைக்கப்பட்டிருந்தன. எல்லாமாக 8000க்கும் மேற்பட்ட தாழிகள் இத்தாழிக்காட்டில் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு இத்தாழிக் காட்டில் 10,000 - 12,000 வரையிலான மக்கட்கூட்டம் இங்கு வாழ்ந்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

பொம்பரிப்பிற் கிடைத்த எலும்புக் கூடுகளை ஆராய்ந்த மானிடவியலாளர்கள் தென்னிந்தியப் பெருங்கற்காலக் குடியிருப்புகளில் காணப்படும் எலும்புகளை இவை ஒத்துள்ளன என்று கூறியுள்ளனர். இத்தாழிக்காடு தமிழகத்திலுள்ள மிகப்பெரிய தாழிக்காடான ஆதிச்ச நல்லூருக்கு நேரெதிரே காணப்படுவதும், ஆதிச்சநல்லார் தாம்ரவர்ணி நதிக்கரையிலமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. பொம்பரிப்பு தாழிகளுக்கும், கிண்ணங்களுக்கும், வட்டில்களுக்கும், ஏனைய இரும்பு, வெண்கலப் பொருட்களுக்கும் ஆதிச்ச நல்லூரிற் கண்டெடுக்கப்பட்ட

தாழிகளுக்கும், கிண்ணங்களுக்கும், வட்டில்களுக்கும் பிற இரும்பு, வெண்கல பொருட்களுக்குமிடையே நெருங்கிய ஒன்றுமை உள்ளது. இதனால் வரலாற்றுதய காலத்தில் மன்னார்க் கரைக்குப் பாண்டி நாட்டிலிருந்தே பெருங்கற்காலக் கலாசாரத்தைப் பேணிய திராவிட மக்கள் புலம் பெயர்ந்திருப்பர் எனக் கொள்ளலாம்.

பொம்பரிப்பானது இலங்கையின் ஏனைய பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களுடனும் தொடர்புற்றிருந்ததைக் காணலாம். பொம்பரிப்பில் விமலாபேக்லே மேற்கொண்ட அகழ்வின்போது கிடைத்த தொல்லியற் சின்னங்களைக் கருத்திக் கொண்டு இப்பகுதி மாந்தையூடாகக் கந்தரோடையுடன் தொடர்பு கொண்டிருந்ததை எடுத்துக்காட்டியுள்ளார். இதேபோல பொம்பரிப்பு பகதியில் வாழ்ந்த மக்கள் அநுராதபுரத்தில் வாழ்ந்த இக்கலாசார மக்களுடனும் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதையும் இவர் எடுத்துக்காட்டியுள்ளார். பொம்பரிப்பு மையத்தில் கிடைத்த மட்பாண்டங்கள், பானை, கிண்ணங்கள், சிவப்புநிற மட்பாண்டங்கள் என்பவற்றை கந்தரோடை, அநுராதபுரம், ஆனைக்கோட்டை போன்ற இடங்களிற் கிடைத்துள்ள மட்பாண்டங்களும் ஒத்துள்ளன. மேலும் இவற்றிடையே மட்பாண்டக் குறியீடுகளிலும் ஒற்றுமை உள்ளது.

பொம்பரிப்பில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய இடுகாடுகளை அண்டிச் செறிவான மட்பாண்ட ஓடுகள் காணப்படுகின்றன. இவற்றில் குறியீடுகளும் காணப்படுகின்றன. பொம்பரிப்பிற் கிடைத்த பானை ஓடுகளில் மனித உருவத்தை உருவகப்படுத்திச் சித்திரிக்கப்பட்டிருப்பது போல நடுக்கோடும் மேலும் கீழுமாக இரு கோடுகளும் முறையே கை, கால் போன்றவற்றைச் சித்திரிப்பனவாய் அமைந்துள்ளன. சிலசமயம் இக்கோடுகள் நேர்கோடுகளாகவும் சிலசமயம் கை, கால்களின் மடிப்புத் தன்மையை எடுத்துக்காட்டும் விதமாகச் செங்குத்தாக நடுவில் வளைந்தும் காணப்படுகின்றன. பொம்பரிப்பில் கிடைத்த பானை ஓடொன்றில் மேடையின் மேலுள்ள விருட்சம் போன்ற குறியீடு காணப்படுகிறது.

பொம்பரிப்பின் பெருங்கற்காலப் பண்பாட்டு சவ அடக்கங்களில் கலப்பையின் ஒரு பகுதியான 'கொளு' காணப்படுகிறது. இது தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சவ அடக்கங்களில் காணப்படும் 'கொளு'க்களை ஒத்துள்ளன. பொம்பரிப்பில் சுடுமண் உருவங்களின் உடைந்த பாகங்கள், இலிங்க வடிவில் அமைந்த மண் உருவங்கள் போன்ற கலைச்சின்னங்கள் பல கிடைத்துள்ளன. மேலும் சுவஸ்திகா, இருதலை, முத்தலைச் சூலங்கள், வேல் என்பனவும் கிடைத்துள்ளன. இவை குறியீடாக வைத்து வணங்கப்பட்டதற்கு சான்றுகள் காணப்படுகின்றன. ஆனாலும் இரும்பினாலான வேல் கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பொம்பரிப்பில் பெருங்கற்காலப் பண்பாட்டு சவஅடக்க மையங்களில் செப்புப்பொருட்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு செப்பு மணி அட்டியல்கள், மெல்லிய வளையல் சுருள்கள் சிறிய காப்பு அல்லது மோதிரத்

துண்டுகள், செப்புக்கோல் துண்டுகள், மெல்லிய ஊசிகள் என்பன கிடைத்துள்ளன. இவை செப்புப் பொருட்களாக உள்ளன. இச் செப்புப்பொருட்கள் பல சந்தர்ப்பங்களில் ஈயத்தையும் சில சந்தர்ப்பங்களில் வெள்ளீயத்தையும் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொம்பரிப்பு பெருங்கற்கால சவஅடக்க மையங்களில் இவை மட்டுமன்றி சிக்கிமுக்கிக் கல் போன்ற படிகக்கல்லில் சீவப்பட்டதுண்டு, கண்ணாடியாலான போலி மணிக்கற்கள், படிகக்கல்லின் தாள் (Chert blade), துளையிடப்பட்ட தட்டுத்துண்டு, இரும்பலகு என்பனவும் பெறப்பட்டன. இங்கு பெறப்பட்ட மணிகள் செம்மஞ்சள், மஞ்சள், சிவப்பு, பச்சை, சாம்பல், கபிலம் எனப் பல நிறங்களிலும் காணப்பட்டன.

இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்கள் பெரும்பாலும் உலர்வலயப் பிரதேசத்தில் காணப்பட்டபோதும் ஈரவலயப் பிரதேசங்களிலும் சில மையங்கள் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். உலர்வலயப் பிரதேசமாயினும் ஈரவலயப் பிரதேசமாயினும் இலங்கையின் எப்பகுதியில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாடும் ஒத்த தன்மைகளைக் கொண்டிருந்தமை அதன் சிறப்பாகும். அதுமட்டுமன்றி தென்னிந்தியாவிலிருந்து பரவியதற்கான சான்றுகளைக் கொண்டிருப்பதுடன் தனித்துவமான வகையில் தமக்கேயுரித்தான அம்சங்களுடன் காணப்பட்டமையும் இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களின் சிறப்பாகும்.

பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரம்பல் - காலவரையறை

ஐரோப்பாவைப் பொறுத்தவரையில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கு உரிய காலவரையறையானது செம்புக்காலத்துடன் (Bronze Age) எடுத்துக் காட்டப்படுவதனைக் காண்கின்றோம். அவ்வடிப்படையில் மத்தியதரைக் கடற் பிராந்தியத்தில் கி.மு. 3200 தொடக்கம் கி.மு. 1000 வரையுமுள்ள காலப்பகுதியை அப்பெருங்கற்காலப் பண்பாடு உள்ளடக்கியிருப்பதனைக் காணலாம். மேற்காசியாவைப் பொறுத்தவரையில் பெருங்கற்காலப் பண்பாடானது தரை - கடல் வழிவந்த செல்வாக்கு நிலைகளுக்கு உட்பட்டிருந்தாலும்கூட அதன் காலவரையறையைப் பொறுத்தமட்டில் மேலே குறிக்கப்பட்ட காலத்தினையே கொள்வதனைக் காணலாம். இங்கு கூட இரும்பின் உபயோகத்தினைக் கண்டறிந்ததற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. பதிலாக **செம்பினையே** அம்மக்கள் கருவிப் பயன்பாட்டிற்காக உபயோகித்து வந்தமையைக் காணலாம். ஆனால் மிகவும் அண்மையில் மத்தியாசியாவில் Hittites இன மக்கள் பயன்படுத்தி இருந்ததாகக் கொள்ளப்படும் Iron Smelting கண்டு பிடிக்கப்பட்டமையானது ஒரு முக்கிய திருப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது. இதற்குரிய காலம் கி.மு. 1800 என வரையறை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்த இனமக்கள் கி.மு. 1800இல் இருந்து வாழ்வில் வீழ்ச்சியடைந்தது வரைக்கும் இரும்பின் உபயோகத்தினைக் கடைப்பிடித்திருந்தனர் எனவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வகையில் மத்தியாசியாவில் கி.மு. 1800இல் இருந்து கி.மு. 1000 வரைக்கும் இரும்பின் உபயோகம் நடைமுறையில் இருந்தது என அறியமுடிகின்றது. **ஆனால் தீபகற்ப இந்தியாவைப் பொறுத்தவரையில் இரும்பின் அறிமுகமும் உபயோகமும் கி.மு. 1000ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்தே எடுத்துக் காட்டப்படுவதனைக் காண்கின்றோம். தென்கிழக்கு ஆசியாவில் அதன் வாழ்வுக்காலமானது கி.பி. 400 வரைக்கும் இருந்ததாக அங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாதாரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.**

தீபகற்ப இந்தியாவினுள் பெருங்கற்காலப் பண்பாட்டு வாழ்வுமுறை மஹாராஷ்டிர மாநிலத்திலுள்ள சானூர் என்ற கிராமத்தில் தோற்றவிக்கப் பட்டமையை தொல்லியல் அகழ்வுகள் எடுத்து நிரூபிக்கின்றன. இதன் காலம் கி.மு. 1300 என்பதாகும். பின்னர் வட கர்நாடக மாநிலத்திலுள்ள புதிய கற்காலத்துக்குரிய மையங்களில் பெருங்கற்காலப் பண்பாடு கி.மு. 1000 அளவில் பரவியது. தமிழகத்தில் இப்பண்பாட்டுக்குரிய காலப்பரப்பு கி.மு. 800 ஆம் ஆண்டிலிருந்தே எடுத்துக்காட்டப்படுகின்றது. கேரள மாநிலம் தவிர்ந்த ஏனைய தென்னகப் பிரதேசங்களில் கி.மு. 800 ஆம் ஆண்டிலிருந்தே இப்பண்பாடு பரவிக் கொள்வதனைக் காண்கின்றோம். தமிழகத்தில் தாமிரபரணியாற்றின் முகத்துவாரப் பகுதியிலுள்ள ஆதிச்சநல்லூரிற் கிடைத்த வெண்கலத்தினாலான தாய்த்தெய்வ உருவமானது கி.மு. 800ஆம் ஆண்டிற்குரியதாக காலவரையறை செய்யப்பட்டுள்ளது. இலங்கையிலும் கந்தரோடை, புத்தளத்தில் பொன்பரிப்பு, அநுராதபுரத்தில் கெடிகே ஆகிய மையங்களில் இருந்து பெறப்பட்ட விஞ்ஞான பூர்வமான காலக் கணிப்பீடு கி.மு. 800 என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

ஈமப்புதைப்புக்களின் வடிவங்கள்

தீபகற்ப இந்தியாவினுள் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமப்புதையல் களின் பிரதான வகைகளைப் பற்றிய அறிவும் இங்கு இன்றியமையாததாகும். இலங்கையிலும் ஏறத்தாழ அதே மாதிரியான ஈமப்படையல்களே பின்பற்றப் பட்டிருக்கவேண்டும். நடுவில் மேசை போன்ற வடிவத்தில் அமைந்த வட்டமான மணற்குவியல் (Cist Box Shaped) மேலே குடைபோன்று அமைக்கப்பட்ட குடைக்கல் (Dolemenold Cist), சுடு மண்ணால் செய்யப்பட்ட நீண்ட கால்களையுடைய சுடுமண் பேழை (Sargophagas), வாய் அகன்ற நீண்ட கால்களையுடைய ஈமத் தாழிகள் என பல வகைகள் காணப்படுகின்றன. மிகப்பெரிய ஈமத்தாழி ஒன்றுக்குள் பல சிறுச்சிறு தாழிகள் உள்ளடக்கப்பட்ட வகையிலும் இணைக்கப்பட்ட ஈமத் தாழிகள் வழக்கில் இருந்திருக்கின்றன. ஈமத்தாழிகள் அவற்றின் அடிப்பாகத்தில் மூன்று கால்களை உடையனவாகவோ (Tripple Legs) அல்லது மிக ஒடுங்கிக் கூரான அமைப்பிலும் (Pointed Tip) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. **(கந்தரோடையில் அடிப்பாகம் ஒடுங்கிக் கூரான தோற்றத்தையுடைய தாழி இந்நூலாசிரியரி னால் 1995 இல் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது).**

கேரள மாநிலத்திலுள்ள போர்க்களம் என்ற மையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தரைக்குக் கீழ் உள்ள நில அறைகளை (Underground Rock-out Chambers)

பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய தனித்துவமான சவஅடக்க மையமாகும். வேறு எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத வகையில் கேரள மாநிலத்தில் தரைக்குக்கீழ் உள்ள நில அறைகள் காணப்படுகின்றன. இவற்றினை ஒத்த வகையில் மத்தியதரைக் கடற்பிராந்தியங்களிலும், எகிப்திலுமே நில அறைகள் சவஅடக்க முறைமைக்காகப் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. **ஆதலால் கேரள மாநிலத்திலுள்ள பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய நில அறைகள் கடல்வழி நேரடித் தொடர்பின் அடிப்படையில் மத்தியதரைக் கடற்பிராந்தியத் திலிருந்தே கொண்டுவரப்பட்டிருக்கலாம் என B.K. குருராஜராவ் என்ற தொல்லியலாளர் கருதுகின்றார்.**

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சிறப்பியல்புகளை புதுக்கோட்டை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகியவற்றிலிருந்து எடுத்துக்காட்டப்படுவதனைக் காணலாம். இவ்விரு மாவட்டங்களிலுமே பெருங்கற்காலப் பண்பாட்டின் தனித்துவமான இயல்புகளை தமிழ்நாடு பொறுத்துக் காணமுடிகின்றது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூரில் 114 ஏக்கர் விஸ்தீரணத்தில் பெருந்தொகையான தாழிகளினால் ஆன சவ அடக்கமுறை பின்பற்றப்பட்டிருந்தது. தாமிரபரணி ஆற்றன் முகத்துவாரத்தில் உள்ள ஆதிச்சநல்லூரில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் வாயிலாக தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டின் பிரதான தகவல்களையும் இயல்புகளையும் காண்கின்றோம். இங்கு கண்டுபிடிக்கப்பட்ட தாழிகள் சராசரியாக 5½ அடி உயரமும் 9 அடி சுற்றும் உள்ளவையாகக் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. இவ்வாறான இயல்புகளை நோக்கும்போது மட்பாண்டத் தொழில் மிகவும் உயர்தர நிலையில் ஒரு கைத்தொழில் முறையில் முன்னெடுத்துச் செல்லப்பட்டிருந்த முறைமை பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்வில் இடம்பெற்றிருந்தமையைக் காணமுடிகிறது. இறந்தோரைப் பேணுகின்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவர்களுடைய உடலங்களை பக்குவமாகப் பாதுகாத்து புதைத்து வைத்த முறைமையைப் பார்க்கும்போது பிதிரர் வழிபாட்டு நம்பிக்கை பெருங்கற்கால மாந்தர் வாழ்வில் இரண்டறக் கலந்திருந்தமையை எடுத்துக்காட்டுகின்றது.

பொதுவாகத் தமிழகத்து திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள **வாசுதேவ நல்லூர், உக்கிரான் கோட்டை, கீழ்நத்தம** ஆகிய மையங்களிலிருந்து ஏராளமான தாழிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. குற்றாலத்திற்கூட தாழி அடக்க முறைக்குரிய மையம் ஒன்று அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மதுரையில் நாகமலை என்னுமிடத்தில் தனித்துவமான தாழி அடக்கமுறை குடைக்கல் முறையுடன் (Cap Stone) இணைந்திருக்கக் கண்டுகொள்ளப்பட்டது. இவ்வாறு தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் தாழி அடக்கமுறை கண்டுபிடிக்கப் பட்டாலும்கூட **ஆதிச்சநல்லூரில்** இருந்து கண்டுபிடிக்கப்பட்டவையே தனித்துவ மானதும் புதுமைமிக்கதுமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒரு பெரும் தாழிக்காடு இங்கிருந்து வெளிப்படுத்தப்பட்ட முறையானது பெருங்கற்காலம்

தொடர்பான பல புதிய தகவல்களைப் பெற வாய்ப்பாயிற்று. திருநெல்வேலியில் இருந்து கிழக்காக 15 மைல் தொலைவிலும், கொற்கையிலிருந்து 9 மைல் தொலைவிலும் **ஆதிச்சநல்லூர் தாழிக்காடு** அமைந்துள்ளது. இங்கிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட பெரும் தாழிகளுக்குள்ளிருந்து செம்பினாலும், இரும்பினாலும் ஆன பல வகைப் பொருட்கள் எலும்புக்கூடுகளுடனும், மண்டையோடுகளுடனும் இணைந்திருந்த வகையில் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆதிச்சநல்லூரில் உள்ள ஈமங்கள் ஒரே காலகட்டத்தில் புதைக்கப்பட்டவை அல்ல. அங்கு ஒரு நீண்டகாலப் பரப்பில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களின் புதைக்கப்பட்ட ஈமங்களையே காண்கின்றோம்.

S.R. ராவ் என்பவர் ஆதிச்சநல்லூரில் மிகப்பரந்த அடிப்படையில் அகழ்வு முற்சியில் ஈடுபட்டு அதன் பரந்த விஸ்தீரணத்தினை வெளிப்படுத்தி உதவினார். இவரால் அகழ்ந்து வெளிப்படுத்திய தாழிகள் **4, 9, 12, 15 அடிச்சுற்றுளவு** உடையதாகக் காணப்பட்டது. **ராவ்** அவர்களுடைய அகழ்வின் பெறுபேறாக கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களின் பல்வேறு வகைகள், செம்பினாலான பெண் தெய்வம் ஒன்றின் பிரதிமை (Venus) இரும்பினாலான வேல் (Spear Heads) போன்ற வடிவங்கள் கருவிகள் எலும்பாயுதங்கள் ஆபரணங்கள், முடிக்குத்தூசிகள் (Hair pins) என்பன உள்ளடங்கின. செம்பினாலான பெண் தெய்வத்தின் பிரதிமை யானது சிற்பக்கலை வரலாற்றிலும் சமய நம்பிக்கைகள் தொடர்பான முறையிலும் மிக முக்கியத்துவம் வகிப்பதனைக் காணலாம். **தென்னிந்திய வெண்கல வார்ப்புக்கலை ஆதிச்சநல்லூரிலிருந்து ஆரம்பித்து விட்டமையை** அச்சான்று நிரூபித்துள்ளது. இந்த **வீனஸ் தெய்வம** இப்பொழுது சென்னை அருங்காட்சி யகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் **Symbol of Fertility** என்று குறிக்கப்படும் செழிப்புத் தெய்வமான அவ்வீனஸ் பெருங்கற்காலச் சமுதாயத்தில் பிரதானமான ஒரு தெய்வீக வடிவமாக இது விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதிச்சநல்லூரில் இருந்து வெளிப்படுத்தப்பட்ட இரும்பினாலான கருவிகளில் வேல் போன்ற வடிவங்கள் சிறப்பிடம் வகிக்கின்றன. Spear Head என்று குறிக்கப்படும் இவ்வேல் போன்ற வடிவங்களே பிற்காலத்தில் **முருக** வடிவத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்தது என தொல்லியலாளர் குறிப்பிடுகின்றனர். இந்தியாவில் ஆரியர் வருகைக்கு முன்னர் தீபகற்ப இந்தியாவில், சிறப்பாகத் தமிழகத்தில் **வேலன் வழிபாடு** நிலைபெற்று விட்டிருந்தமையை இவ்வேல் போன்ற கருவிகள் உணர்த்துகின்றன. சங்ககாலத் தமிழ் இலக்கியங்களிலும் முருகன் பற்றிய பல பாடல்களும், குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இலங்கையில் கதிர்காமம், கந்தரோடை, பூநகரி, பொம்பரிப்பு ஆகிய மையங்களில் வேல் வடிவம் நிறையவே கிடைத்துள்ளது. பூநகரியிலிருந்து வேலும் சேவலும் இணைந்த வடிவமும, கந்தரோடையிலிருந்து செம்பினாலான முச்சூலமும் கிடைத்துள்ளமை ஒப்புநோக்கத்தக்கது).

பெருங்கற்காலப் பொருளியல் சிந்தனை

பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களது வாழ்க்கை முறையில் அவர்கள் பின்பற்றியிருந்த பொருளாதார முறை பற்றியும் அவர்களது சிந்தனை பற்றியும் அறிந்துகொள்வதற்கு எமக்குப் போதியளவிற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. கி.மு.1000ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1ஆம் நூற்றாண்டு வரைக்கும் தீபகற்ப இந்தியாவில் பெருங்கற்கால மக்கள் பின்பற்றியிருந்த பொருளாதார நடைமுறை களை அகழ்வுகளினூடாகத் தொல்லியலாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். தீபகற்ப இந்தியாவின் கரையோர மையங்களில் அமைந்து காணப்பட்ட வியாபாரக் கிடங்குகள் (Trading Centres) அரிக்கமேடு முதலானவை வெளிநாட்டு வாணிப விருத்தியினை தெளிவாக எடுத்துப் பிரதிபலிக்கின்றன. ரோமன் றௌலட்டட் மட்பாண்டங்கள், கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், அம்போரா (Amphoreah) போன்றன பெருமளவில் அரிக்கமேட்டிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. **Roman Redware, Roman Rouleted Ware, Roman Rouleted Red Ware** போன்றன உள்ளூர் மக்களுடைய மட்பாண்டங்களான கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களுடன் இணைந்து காணப்படுவதிலிருந்து ரோமர்களது வாணிபம் பெருங்கற்கால மக்களின் பொருளியல் ஈட்டத்தில் பிரதான பங்கினை வகித்தது என்பதனை ஆதாரப்படுத்துகின்றன.

பெருந்தொகையாகக் கிடைக்கப்பெற்ற ரோம நாணய வெளியீடுகள் அவ்வாணிப நடவடிக்கையின் விஸ்தீரணத்தினை அடையாளம் காட்டிநிற்கின்றன. இவற்றுள் தங்கநாணய வெளியீடுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. **(அண்மையில் வரணியிலிருந்து 1000 க்கு மேற்பட்ட ரோம நாணயம் பெறப்பட்டது. கந்தரோடையிலிருந்தும் பூநகரியிலிருந்தும் தங்க ரோம நாணயங்கள் பெறப்பட்டன.)** உரோமானிய ஆபரணங்களும் இங்கு பெறப்பட்டமையை நோக்கும்போது பெருங்கற்கால மக்கள் அணிகலன்கள்மீது கொண்டிருந்த விருப்பும் அழகியல் நாட்டமும் நன்கு தெளிவாகின்றது. (கந்தரோடை யிலிருந்து செம்பினாலான **நாகமோதிரம்** கண்டெடுக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது).

அரிக்கமேட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின்போது Sir மோட்டிமர் வீலர் (1947/48) **திராட்சை மதுசாரத்துடன்** கூடிய **அப்போறா மட்பாண்டங் களையும்** மீட்டெடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. யவனபானமான திராட்சை மதுரசம் கூடியளவிற்கு தமிழ்நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டது மாத்திரமல்லாது யாழ்ப்பாணத்திலும் இறக்குமதி செய்யப்பட்டது என்பதனையே அதன் பெயர்த்தோற்றம் காட்டுகின்றது எனலாம். (யவனம்-ரோமர், யவனபானம்-யாழ்ப்பாணம்)

ஏற்றுமதி-இறக்குமதிப் பொருளாதார நடைமுறையின் தோற்றத்தினையும் வளர்ச்சியினையும் தீபகற்ப இந்திய பெருங்கற்காலப் பண்பாட்டு வாழ்வில் காணமுடிகிறது. ஆடை நெசவுக் கைத்தொழில் மட்பாண்டக் கைத்தொழில், சங்குக்காப்புக் கைத்தொழில், மணித்தொழில் (Beads Industry) போன்றன

இக்காலத்தில் சிறந்து விளங்கியிருந்தன. லினன் எனப்பட்ட ஒருவகைத் துகில் தமிழகத்திலிருந்து ரோமுக்கு ஏற்றிச்செல்லப்பட்டமை பற்றிய குறிப்புக்களை சங்கத்தமிழ் இலக்கியங்களிலிருந்து காண்கின்றோம். பெருங்கற்காலத்து துறைமுகப்பட்டினமாக விளங்கிய அரிக்கமேடு இலங்கையுடன் வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தது என்பதில் ஐயம் எழமுடியாது. ரோம வியாபாரிகள் நேரடியாகவோ அல்லது தமிழகத்து வியாபாரிகளூடாக இலங்கை யுடன் வாணிபத் தொடர்புகளை மேற்கொண்டிருந்தனர் என்பதற்கு அநுராதபுரத்தில் கிடைத்துள்ள (Terrace Inscription) **பிராமிக் கற்படுக்கைக் கல்வெட்டுக்கள்** சான்றாகின்றது. இதில் ஆறு வணிக வியாபாரிகளின் பெயர்கள் பொறிக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மாதோட்டம், கந்தரோடை, ஆனைக்கோட்டை, வல்லிபுரம், பூநகரி ஆகியன பெருங்கற்கால வர்த்தக நிலையங்களாக விளங்கி யிருக்கவேண்டும். ஆனைக்கோட்டை அகழ்வின்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட **யவன அகல் விளக்கு** இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே பெருங்கற்கால மக்கள் வாழ்வில் துறைமுகமும், கப்பல் வாணிபமும், கடற்போக்குவரத்துத் தொடர்புகளும் முக்கிய இடத்தினை வகித்துள்ளமையைக் காணலாம். எனவே தென்னிந்திய - இலங்கை வாணிபப் பரிவர்த்தனை ஊடகமாக ரோம நாணயங்களும் எண்ணெயும், முத்தும் முக்கிய பங்கு வகித்திருக்க வேண்டும்.

இத்தகைய ஒரு பண்பாட்டு பகைப்புலத்தின் அடிப்படையிலேயே பெருங்கற்காலச் சமூகத்தில் அரசியல், பொருளாதார, சமய நிறுவனங்கள் உருவாக்கம்பெற்று ஆங்காங்கு வளர்ச்சியடைந்திருந்தன. தக்கணத்தில் சதவாஹனரும், தமிழகத்தில் பாரி, வல்வில் ஓரி, வேளிர், சத்தியபுத்திரர் போன்ற வம்சங்களும், யாழ்ப்பாணத்தில் நாகர் வம்சமும் (ஆனைக்கோட்டை முத்திரைவாசகம் - கோவேதன்) தோற்றம் பெற்றன என்பதனை எவருமே மறுக்கமுடியாது. ஆந்திர மன்னர் வெளியிட்டிருந்த இரட்டைமொழி பொறித்த நாணய வெளியீடும், யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டையில் அகழ்ந்தெடுத்த இரட்டை வரிவடிவம் பொறிக்கப்பட்ட முத்திரை மோதிரமும் இணைத்து ஒப்பிட்டு நோக்கத்தக்கவையாகும். ஆந்திரர் தமது நாணய வெளியீடுகளின் இரு பக்கங் களிலும் பிராகிருத - தமிழ் மொழியினை உபயோகித்திருந்தமை போன்று, யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டை முத்திரையில் **ஸஸானிய-தமிழ்மொழிப** பிரயோகம் உபயோகிக்கப்பட்டிருந்தது எனக் கொள்ளலாம்.

இலங்கையில் பெருங்கற்கால மக்களினுடைய சமய நம்பிக்கைகளும் கலைகளும்

பெருங்கற்கால மக்களினுடைய பண்பாட்டின் அடித்தளமாக அவர்களுடைய சமய நம்பிக்கைகள் விளங்கின. இக்காலப் பகுதியில் இயற்கை வழிபாடு, உயிரற்ற பொருட்களுக்கு உயிர்த்தன்மை கொடுத்து வழிபடல், குலமரபுச் சின்னங்களை வழிபடல் ஆகியன முக்கியம் பெற்றிருந்தன.[1] இது மட்டுமன்றி முன்னோருக்கு சிலை வைத்து வழிபடும் மரபும் பெருங்கற்கால மக்களின் சமய நம்பிக்கையில் இடம்பெற்றிருந்தது.

இயற்கை வழிபாடு பொதுவாக சமயவளர்ச்சியில் இயற்கைக்குப் பயந்து அதை வழிபடும் ஆரம்ப நிலையையும், பழைய சமய நிலையையும் எடுத்துக் காட்டுவது வழக்கம். ஆரம்பத்தில் மக்கள் இந்த இயற்கைச் சக்திகளைத் 'தெய்வமுறை' இடங்களாகக் கொள்வது பண்டைய உலகசமய வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில் ஒன்று. ஆனால் இவ்வித வழிபாட்டுக்கும், ஆரிய இருக்கு வேதவழிபாட்டு முறைக்கும் வித்தியாசம் இருந்தது. இருக்கு வேதத்தில் அக்கினி, சூரியன், காற்று போன்ற இயற்கைச் சக்திகளை உயிருள்ள சக்திகளாக உருவகப்படுத்தி இச்செய்யுள்களை யாத்தவர் அவர்களை அழைத்துள்ளனர். ஆனால் இங்கு குறிப்பிடப்படும் இயற்கை வழிபாடு இயற்கைச் சக்திகளைத் தெய்வமுறை இடங்களாக உருவகப்படுத்தி வழிபட்ட வழிபாடேயாகும்.

இயற்கை வழிபாட்டில் மரம், மலை, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் எனப்பலவும் வழிபடப்பட்டிருந்தன. மரங்கள் இரு நிலையில் வழிபடப்பட்டிருக்கலாம். ஒன்று தெய்வத்தன்மையுள்ள மரங்கள். இவற்றுக்குத் தீமை செய்தால் மனிதனுக்கு ஆபத்தை உண்டுபண்ணும் என்ற நம்பிக்கையச்சம் காரணமாக வழிபடப்பட்டன. ஆல், அரசு, கொன்றை போன்றவை இதற்கு நல்ல உதாரணங்கள். அடுத்த நிலை இம் மரங்களைத் தெய்வமுறைக் கோயிலாகக் கருதப்பட்டு வழிபடல்.

பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களால் குலமரபுச் சின்னங்கள் வழிபடப்பட்டன எனும் போது குலமரபுச் சின்னங்கள் எவ்வாறு தோன்றின என்று முதலில் நோக்குதல் வேண்டும். தானியத்தையும் விலங்குகளையும் தேடி அலையும் மக்கள் குழுக்களின் வாழ்க்கையில் விலங்குகளும், செடி கொடிகளும் மரங்களும் முக்கியத்துவம் பெற்றன. அவர்களுடைய சிந்தனைகள் (இயற்கையைச்) இவற்றைச் சுற்றிச் சுழன்றிருக்கும். இதிலிருந்து சில நம்பிக்கைகள் பிறந்திருக்கும். சக்திமிக்க சில விலங்குகளோடு தாங்கள் தொடர்புடையவர்களானால் தங்களுக்கு வேட்டையாடும் சக்தி மிகுதிப்படும் என்பது அவ்வாறு பிறந்த நம்பிக்கை. இவ்வாறு நம்பிய சில குழுக்கள் கரடி, புலி, சிங்கம், யானை முதலியவற்றிலிருந்து தாங்கள் தோன்றியவர்கள் என்று நம்பினார்கள். ஒரு விலங்கைக் கொல்லாமல் விட்டுவிட்டால் அது வேட்டையில் துணைசெய்யும் என்று நம்பினார்கள். வலிமை புடைய விலங்குகளையும், கொல்லாமல் தவிர்க்கும் விலங்குகளையும் தமது குலக்குறியாகக் கொண்டார்கள். பொதுவாக ஒரு விலங்கு ஏதாவது ஒரு ஆற்றலைக் கொண்டிருந்தால் அந்த ஆற்றல் தங்களுக்கு வேண்டும் என்ற ஆசையால் அதனைக் குலக்குறியாகக் கொண்டார்கள்.

இக்குலக்குறி விலங்குகள், செடி கொடிகள் முதலியன குலமரபுச் சின்னங் களாகக் கொள்ளப்பட்டதுடன் மந்திர சக்தியுடையனவாக மட்டுமல்லாமல், இயற்கையைத் தாமே பாதிக்கக்கூடியவை என்ற நம்பிக்கை காரணமாக வணக்கத் திற்கும் உரியவையாயின. எனவே மந்திரசக்தியின் இருப்பிடமாயிருந்த இவை தெய்வங்களும் ஆகின. குழுக்கள் ஒன்றுசேரும்போது பெரிய குழுவின் குலக்குறி, பல குழுக்களின் வணக்கத்திற்குரியதாயிற்று. ஒரு குழுவின் குலக்குறி அக்குழு பெரிதாகிப் பல குழுக்களை வென்று அரசாக மாறியபொழுது அக்குலக்குறி

அவ்வம்சத்தின் கொடியாகிவிடுகிறது. குலக்குறி ஒரு அரசின் கொடியாக மாறிய பொழுது அது குலக்குறியாக இல்லை. அது பழமையின் எச்சமாக நின்றது. குலக்குறியின் அடையாளமாக அவ்வுருவின் பாகமும் பல தலைமுறைகளாக அதன் வம்சம் என்று கருதும் வழக்கம் மறந்து விட்டபடியால் மனித உருவமும் சேர்ந்து அமைந்த ஒரு உருவத்தை அக்கால மனிதன் படைத்தான். இவ்வாறு குலக்குறியான விலங்கு, குலங்கள் பெருகும்பொழுது விலங்கின் ஒரு உறுப்போடு மனித உடலோடும் ஒரு கற்பனைப் படைப்பாகி ஒரு பெரிய இனக்குழுக் கூட்டத்தின் தெய்வமாகி விடுகிறது. உதாரணமாக விநாயகர், நந்திதேவர் உருவ வழிபாட்டுத் தோற்றத்தைக் கூறலாம்.

பெருங்கற்கால மக்கள் செழிப்பு, இனவிருத்தி என்பவற்றை வேண்டியும் வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர். லிங்க உருவங்கள், பெண் உருவங்கள் இனவிருத்தி, செழிப்பு, அபிவிருத்தி ஆகியவற்றை வேண்டிச் செய்யப்படும் கிரியைகளில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என அறிஞர் கருதுவர்.

பெருங்கற்கால மக்களின் சமய நம்பிக்கைகளில் மிக முக்கியமானதாக இறந்தவர் பற்றிய நம்பிக்கை அமைகிறது. ஒருவர் இறந்தபோது அவரது உடல் அழிந்தாலும் ஆத்மா அழியாது என்று இம்மக்கள் கருதியுள்ளனர். இதனால்தான் இறந்தோரை வழிபட்டுள்ளனர். மேலும் இறந்தவரது ஆத்மாவுக்கு சாந்தியாக அவர் உண்ட, உடுத்த, பாவித்த பொருட்களையும் சேர்த்து அடக்கம் செய்தனர். ஆத்மாவின் சாந்திக்காகப் பலகிரியைகளைச் செய்ததுடன் படையல்களைப் படைத்தும் வழிபட்டுள்ளனர். இது நடுகல் வழிபாடாக மிளிர்ந்தது. இறந்தவரது ஆத்மா சாந்தியடையும்போது தன் சந்ததியினருக்கு நன்மைகளை வழங்கும் என நம்பினர். அமைதிபெறாத ஆன்மா தீமைகளைச் செய்யும் என்றும் கருதினர். இந்த நம்பிக்கையிலிருந்து தான் பேய், பூதங்கள் பற்றிய நம்பிக்கைகள் தோன்றின என்பர் அறிஞர்.

பெருங்கற்கால மக்களின் சமய நம்பிக்கைகளில் சொர்க்கம், நரகம், மறுமை, தேவர் போன்றன இடம்பெற்றுள்ளன. வடபகுதி தேவர் வாழும் இடமாகவும் தெற்குப்பகுதி இறந்தவரின் ஆத்மாக்கள் வாழும் இடமாகவும் இவர்களால் நம்பப்பட்டது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்ததே வடக்குத் தெற்காக நீளக்கிடத்தி அடக்கஞ்செய்யும் பெருங்கற்கால சவஅடக்க முறையாகும்.

பெருங்கற்கால மக்கள் இவைமட்டுமன்றி யக்ஸ, நாக வழிபாட்டையும் மேற்கொண்டிருந்தனர். இவ்வழிபாடுகள் இந்தியாவில் ஆரிய கலாசாரம் கால்கொள்ள முன்பே நிலைகொண்டிருந்தன. யக்ஸ வழிபாடு பற்றி ஆராய்ந்த ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் இது பண்டைய ஆரியர் அல்லாத மக்கட்கூட்டத்தினரின் சுதேச வழிபாட்டு முறைகள் என்றும் பிற்பட்ட இந்துமதக் கடவுள்களான சிவன், உமை, குபேரன் போன்றோரின் அம்சங்கள் பல மட்டுமன்றி, வழிபாட்டு முறைகள், பக்தி மார்க்கம் போன்ற பலவும் இதனின்று வளர்ச்சி பெற்றவையே எனவும் கூறியுள்ளார். இந்த யக்ஸ வழிபாட்டை பழைய ஒஸ்ரிக்

- திராவிட மக்களின் சமய நம்பிக்கைகள் கலந்த வழிபாடு என்று கருதுவது பொருத்தமானது. யக்ஸ, நாக வழிபாட்டு முறையானவை இயற்கை வழிபாட்டு முறையின் ஓரம்சமாகும். யக்ஸ, நாக தெய்வங்கள் நீர்நிலைகள், நகரங்களின் காவல் தெய்வங்களாக வழிபடப்பட்டுள்ளன.

பெருங்கற்கால மக்கள் லக்ஷ்மி, முருகன், மாயோன், சிவன், கணபதி போன்ற தெய்வங்களையும் வழிபட்டுள்ளனர். வேல், சேவல், உருவம், வேலியிடப்பட்ட கடம்பமரம் என்பன முருக வழிபாட்டையும் லக்ஷ்மி உருவம் பொறித்த நாணயங்கள் மட்பாண்டங்கள் லக்ஷ்மி வழிபாட்டையும் விநாயகர் உருவிலான சுடுமண் சிற்பங்கள் விநாயகர் வழிபாட்டையும் லிங்க வடிவங்கள், சிவ எனும் பெயர் கொண்ட மட்பாண்ட, பிராமி சாசனங்கள் சிவ வழிபாட்டையும், விஷ்ணு, ராம, நரய போன்ற பெயர்கள் விஷ்ணு வழிபாட்டையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

இவை மட்டுமன்றி பௌத்த மத அறிமுகத்துடன் இச்சமய நம்பிக்கைகளைப் பின்பற்றிய தென்னிந்திய, ஈழ பெருங்கற்கால மக்களில் ஒரு பகுதியினர் அதனையும் உள்வாங்கிக் கொண்டனர். இதனால் யக்ஸ, நாக வழிபாட்டு மரபுகள் மற்றும் ஏனைய சமயநம்பிக்கைகளும் பௌத்தத்துடன் இணைந்ததையும் முன்னைய சமயநம்பிக்கைகளில் பௌத்த சமய அம்சங்கள் இணைந்ததையும் காணமுடிகிறது.

பெருங்கற்கால மக்களின் இத்தகைய சமய நம்பிக்கைகளானவை உருவ வழிபாட்டுக்குக்காலாகி அதனால் உருவ வெளிப்பாடுகள் இடம்பெற, கலைவளரக் காரணமாகின. அதாவது மக்களது சமுதாய வளர்ச்சிக்கேற்ப நம்பிக்கைகள் தோன்றுகின்றன. நம்பிக்கைக் கேற்ப புறவெளிப்பாடு கொள்வது கலையுருவம். இறந்தவரது சவ அடக்கத்துடனும் கிரியை முறைகளுடனும் கட்டடக்கலை வளர்ச்சிபெற்றது. கல்லறைகள் கட்டடக்கலையை வெளிப்படுத்த தாழியடக்கம், நிவேதனப் பொருட்களின் படையல்முறை மட்பாண்ட உற்பத்திக்கலை வளர்ச்சிக்கு உதவியதுடன் உலோக்கலைகள், ஆபரணக்கலை, தொழில்நுட்பக்கலை என்பனவும் சிறந்து விளங்கவும் காரணமாகின.

ஆனந்தக்குமாரசுவாமி இந்தியச் சிற்பமும் ஓவியமும் பிதிர் வணக்கத்துடனும் வீரவழிபாட்டுடனும் ஆரம்பமாகியது எனக் கூறுகிறார். இந்த இரண்டு சமய நம்பிக்கைகளும் இப்பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய அம்சங்களாக நிலவியதாலே தமிழகத்தைப்போலவே இலங்கையிலும் சமயம்சார்ந்த கட்டிட, சிற்பக்கலைகள் இவற்றுடன் தோன்றின எனக்கூறலாம். நடுகற்களின் வரலாறு பற்றி ஆராய்ந்தால் சிற்பக்கலையின் தோற்றத்தை அறியலாம். முதலில் வெறும் கற்கள் இறந்தவரது அடையாளமாக நடப்பட்டன. பின்பு அவற்றில் அவரைக் கடவுளாக எழுதினார்கள். அதன்பின் வரலாற்றுக் காலத்தில் மனித உருவத்தில் படைப்புச் சிற்பங்கள் படைக்கப்பட்டன. இக்கால் அதன் பின்னர் கோயிற் சிற்பங்களாகத் தெய்வங்களைப் படைக்கப் பயன்பட்டன.

பெருங்கற்கால மக்களது சமய நம்பிக்கைகளால் கலைகள் வெளிப்படுத்தப் பட்டதுடன், வெளிப்படுத்தப்பட்ட பொருட்களிலும் சமய நம்பிக்கைகள் பிரதிபலிக்கப்பட்டன. குறிப்பாக மட்பாண்டக் குறியீடுகள், மட்பாண்ட, நாணய உருவங்கள் என்பவற்றைக் கூறலாம். இருதலைச்சூலம், முத்தலைச் சூலம், வேல், நட்சத்திரம், சுவஸ்திகா, நந்தி பாதம், மீன், பறவை, விலங்கு உருவங்கள், வேலியிடப்பட்ட கடம்பமரம், சேவல், லக்ஷ்மி, பெண், ஆண், லிங்க உருவங்கள், யக்ஸ, யக்ஸி உருவங்கள், நாக உருவங்கள், கும்பம் போன்ற குறியீடுகள், உருவங்கள் என்பன பெருங்கற்கால மக்களால் வெளிப்படுத்தப்பட்ட பொருட்களில் சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதாக உள்ளன. **நாக, வேல, வேலே, விணு, ராம, சிவ, சிவநே** போன்ற பிராமிச் சொற்களும் மட்பாண்ட, பிராமிச் சாஸனங்களில் இடம்பெற்று பெருங்கற்கால மக்களின் சமயநம்பிக்கைகளை வெளிப்படுத்துகின்றன. வேல், லிங்க, ஆண், பெண், லக்ஷ்மி சுடுமண், உலோக வடிவங்களும் பறவை, விலங்குகளின் சுடுமண் வடிவங்களும் பெருங்கற்கால மக்களது சமயநம்பிக்கைகளை வெளிப்படுத்தும் கலை வெளிப்பாடுகளாகும்.

இந்த வகையில் பெருங்கற்கால மக்களது சமய நம்பிக்கைகளும் கலைகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளதால் அவை பற்றிய நோக்கு பொருத்தமானதாக இங்கு அமைந்துள்ளது.

பெருங்கற்கால மக்களது கட்டிடக்கலை மரபு

பெருங்கற்கால மக்களது கட்டிடக்கலை முறையானது அவர்களது சமய நம்பிக்கையின் அடிப்படையினாலேயே வெளிப்படுத்தப்பட்டது. இறந்தவரது உடலைப் புதைத்து படையல்கள் வைக்கவேண்டும் என்ற சமய நம்பிக்கையினால் இறந்தவரது உடலை, எலும்புக்கூட்டைப் புதைக்கக் கட்டிடங்களைக் கட்ட முற்பட்டனர். ஏனெனில் பாதுகாப்பாக அவற்றை வைக்கவில்லையெனில் இறந்தவர் துன்புறுத்துவார் என்ற சமய நம்பிக்கை அவர்களிடையே காணப்பட்டது. இதனால் பௌதீகச் சூழலுக்கேற்ப **கல்லறைகள், கற்திட்டைகள், கல்மேசைகள், துளையுடைய கல்லறைகள், பலபிரிவுக் கல்லறைகள், தொப்பிக்கல், குடைக்கல், குடைவரைக்குகை, கற்குவைகள், குத்துக்கற்கள், நடுகற்கள்** எனப் பலவகையிலும் ஈமச்சின்னங்களை மேற்கொண்டனர். இவற்றின் அமைப்பின் போது கட்டடக்கலையானது வளர்ச்சிபெற்றது. அது பின்னர் வாழ்க்கைத் தேவைகளுக்கான மட்பாண்டங்கள், சாயத்தொட்டிகள், உறைகிணறுகள், கழிவு நீர்க்கால்வாய்கள், மதகுகள் என்பன அமைக்கவும் பின்பற்றப்பட்டது. சமூக வளர்ச்சிநிலையில் கோயில்கள், புத்த விகாரைகள் அமைக்கும் நிலைக்குக் கட்டடக்கலையும் வளர்ந்தது.

பெருங்கற்கால மக்களது கட்டடக்கலையை வெளிப்படுத்துவதாக அவர்களது கல்லறை வகைகள் அமைந்துள்ளன. இவை சமய நோக்கிற்காக அமைக்கப் பட்டிருந்தாலும் அமைக்கப்பட்ட பொறிமுறைகளில் கலை நுட்பங்களை வெளிப் படுத்துகின்றன. கல்லறைகள் என்பவை பொதுவாக நான்கு பெரியகற்களால்

அறைகள் போன்று அமைக்கப்படுபவையாகும். இக்கல்லறைகளின் பக்கக்கற்கள் நிலத்தின் கீழ் அமைய, இவற்றை மூடக் கல்லாலான மூடிகளும் காணப்படுவது வழங்கமாகும். சிலவற்றில் இவற்றிற்குக் கீழ்ப்பக்க மூடிகள் இல்லாமலிருக்கும். ஆனால் மேல் மூடிகள் எல்லாவற்றிலும் இருக்கும். இந்நான்கு கற்களிலமைந்த கல்லறைகள் நிலமட்டத்திற்குக் கீழே அமைந்து காணப்படும்போது இவற்றைச் சாதாரணமாகக் கல்லறைகள் (Cists) என அழைப்பர்.

பெருங்கற்கால மக்கள் சில கல்லறைகளை அரைவாசிப்பகுதி நிலமட்டத் திற்குக் கீழும் மிகுதி நிலமட்டத்திற்கு மேலும் இருக்கும் வகையிலும் அமைத்து உள்ளனர். இவை கல்திட்டைகள் (Dolmenoid Cists) என அழைக்கப்படும். சில கல்லறைகளை நிலமட்டத்திற்குமேலே மேசை வடிவமாகத் தோற்றமளிக்கும் வகையில் அமைத்துள்ளனர். இவை கல்மேசைகள் (Dolmens) என அழைக்கப்படு கின்றன. கல்லறைகளை அமைக்கும்போது சிலவற்றில் ஒரு பக்கக்கல்லில் துவாரம் விட்டுள்ளனர். இவ் வகைக்கல்லறைகள் துளையுடைய கல்லறைகள் (Port holed cists) எனப்பட்டன. சிலகல்லறைகள் இரண்டு அல்லது மூன்று பகுதி களாகவும் பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன. இவை பல பிரிவுக்கல்லறைகள் (Transepted cists) என அழைக்கப்படுகின்றன. இவை மட்டுமன்றி கல்லறைகளை வேறுவடிவங்களிலும் பெருங்கற்கால மக்கள் அமைத்துள்ளனர். சில நான்கு பக்கக் கற்களும் விழாதவாறு சுவஸ்திகா வடிவில் பொதுவாக வலஞ்சுழியாகவும் அருமையாக இடஞ்சுழியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டு அமைக்கப்பட்டிருக்க, இன்னும் சில சதுர, நீள்சதுர வடிவிலும் அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாகச் சதுரமாகக் காணப்படும் கல்லறைகள் 3அடி தொடக்கம், 7 அல்லது 8 அடி வரை நீளமுள்ள பக்கக் கற்களைக் கொண்டனவாக அமைந்துள்ளன. பெருங் கற்கால மக்கள் கல்லறைகளை மட்டுமன்றிக் கல்திட்டைகளையும் பலவிதமாக அமைத்துள்ளனர். இதில் சிலதை நுழைவாசல் வழி (Passage Chambers) கொண்டதாக அமைத்துள்ளனர்.

பெருங்கற்கால மக்கள் சில ஈமச்சின்னங்களை மூன்று அல்லது நான்கு கற்களால் தொப்பி வடிவிலே அமைத்துள்ளனர். இவை தொப்பிக்கல் என அழைக்கப்பட்டன. வேறு சில ஈமச்சின்னங்கள் பெரிய கல்லால் கவிந்து குடைபோல் தோற்றமளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வகை குடைக்கல் என அழைக்கப்படுகின்றது. குடைவரைக்குகை என்பதும் பெருங் கற்கால மக்களின் கட்டடக்கலையை வெளிப்படுத்தும் ஈமச்சின்னவகையாகும். குடைவரைக் குகைகள் கிட்டத்தட்ட சதுர அல்லது நீள்சதுர வடிவான திறந்த அறையைக் கொண்டிருக்கும். இவை பாறையில் நிலைக்குத்தாக கீழ் நோக்கி வெட்டப்பட்டு, கீழே இறங்குவதற்குப் படிகளும் அமைக்கப்பட்டிருக்கும். அறையின் நிலைக்குத்தான சுவர்களில் ஒன்றில் ஓர் வாசல் குடையப்பட்டிருக்கும். இவ்வாசல் அரைவட்ட அல்லது வட்ட அல்லது கிட்டத்தட்ட செவ்வக வடிவமான அறைக்கு இட்டுச்செல்லும். சில சமயங்களில் இவ் வாயில்கள் உள் ஒதுங்கிய முகப்புக்களை கொண்டிருக்கும். அறைகளில் வழமையாக ஆசனங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

சில குடைவரைக்குகைகள் மத்தியில் தூணைக் கொண்டிருக்கும். மற்றவை தூணுக்குப் பதிலாக கூரையில் வட்டமான துவாரத்தைக் கொண்டிருக்கும். கூரை பொதுவாக குவிமாடமாய் இருக்கும், தூணில் அல்லது மேலேயுள்ள துவாரத்தில், மேலே மையத்தை நோக்கிக் குவிந்திருக்கும். Eyyal, Eattakampla முதலிய இடங்களில் ஒரு தனித் திறந்த கிடங்கில் ஒன்றுக்கு மேற்பட்ட அறைகள் வாயிலுடன் குடையப்பட்டதாக குடைவரைக்குகைகள் உள்ளன. இத்தகைய ஈமச்சின்னங்களின் அமைப்பு முறைகளானவை பெருங்கற்கால மக்களது கட்டடக்கலை, தொழில்நுட்ப அறிவு என்பவற்றை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

பெருங்கற்காலப் பண்பாட்டில் இறந்தவருக்கான ஈமச்சின்னங்களை அமைப்பதில் தோன்றிய கட்டிடக்கலை முறையானது, சமய வழிபாட்டிடங்களை அமைப்பதிலும் பின்பற்றப்பட்டது. ஆனால் முதலில் கோயில்களை மரத்தினால் அமைக்கும் முறையே இருந்துள்ளது. இதற்குச் சான்று, பிற்காலத்தில் கல்லினால் அமைக்கப்பட்ட கோயில் கட்டிடங்களிலே, மரத்தைச் செதுக்கி அமைக்கப்பட்டது போன்ற அமைப்புக்கள் காணப்படுவதுதான் எனினும் மரத்தால் அமைக்கப்பட்ட கோயில் என்பதால் அதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் சங்க இலக்கியக் குறிப்புக்கள் கோயில்கள் செங்கல், மரம், சுண்ணாம்பு ஆகிய பொருள்களால் கட்டப்பட்டது எனக் கருதக்கூடிய விதத்தில் அமைந்து உள்ளன. ஈழத்துப் பூதந்தேவனாரின் பாடல் பொதியிலின் கீழமைந்த **கந்து** பற்றியும் கோயிலில் வழிபாடு நின்றமையால் கடவுள் இங்கு உறையவில்லை எனவும் கூறுகிறது.

'புற்றுடைச் சுவர புதலிவர் பொதியிற்
கடவுள் போகிய கருந்தாட்கந்தத்து'

(அகநானூறு 307. 11-12)

இப்பாடல் வரி மூலம் 'பொதியில்' வழிபாட்டிடமாகவும் 'கந்து' வழிபாட்டிற்குரிய சின்னமாக விளங்கியது பற்றியும் அறியமுடிகிறது.

'கந்து' என்பதுடன் தொடர்புடைய பெயராகக் **கந்தரோடையைக** கருத முடிகின்றது. **கந்து** + **அர்** + **ஓடை** என அப்பெயரைப் பகுத்து நோக்கலாம். தமிழில் உயர்வைக் காட்ட 'அர்' விகுதி சேர்க்கும் வழக்கம் உண்டு. அந்த வகையில் வழிபாட்டிற்குரிய சின்னமாகிய **'கந்து'** என்பதற்கு உயர்வு காட்ட **'அர்'** சேர்த்து **கந்தர்** + **ஓடை** என்ற பெயர் உருவாகியிருக்கலாம். அதாவது கந்து இருக்கும் இடம், அல்லது கந்து இருக்கும் இடத்திற்குச் செல்லும் ஓடை அல்லது கந்துக்குச் சொந்தமான இடம் எனக் கந்தரோடை என்ற இடப்பெயருக்கு பொருள் கொள்ளலாம். **எவ்வாறாயினும் 'கந்து' வழிபடப்பட்ட பொதியில்களே நாளடைவில் கோயில்கள் அமைந்து இடங்களாக விளங்கியுள்ள எனப் பொருள்கொள்வது மிகவும் பொருத்தமுடையதாகும்.**

பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய 'ஆலயம்' எவ்வாறு அமைந்திருந்தது என்பதை எடுத்துக்காட்டுவதாக கந்தரோடையிற் கிடைத்த கி.மு. 2ம் நூற்றாண்டிற்குரிய பாண்டிய நாணயங்கள் அமைந்துள்ளன. இத்தகைய நாணயங்களில் 3 குறிப்பிடத்தக்கன. முதலாவது வகையின் மேல்வரிசையில் மலையும், ஐந்து தூண்கள் தாங்கி நிற்கும் பிறை வடிவமுள்ள கோயிலும் இதன் அருகில் வேலியுடனான மரமும் காணப்படுகின்றன. கீழ்வரிசையில் கொடிமரம், யானைச் சின்னம், மழுவுடனான திரிசூலம் ஆகியன காணப்படுகின்றன. திரிசூலத்துடன் காணப்படும் சின்னம் அரிவாளாக இனம் காணப்பட்டாலும் இதனை மழுவாகக் கொள்வதே பொருத்தமென்கிறார் சிற்றம்பலம். இவ்வரிசையிற் காணப்படும் யானை திரிசூலத்தை நோக்கிய வண்ணம் காணப்படுகின்றது. இத்தகைய சின்னங்களே இரண்டாவது நாணயத்திலும் காணப்படுகின்றன. 3வது நாணயத்திலும் மேல் வரிசையில் வேலியுடனான மரம், ஆலயம், மலை ஆகியன காணப்படுகின்றன. ஆனால் இக்கோயிலின் கூரை மேற்கூறிய கோயிலைப் போலல்லாது முக்கோண வடிவிற் கூம்பிய நிலையிற் காணப்படுகின்றது. அது 4 தூண்களை மட்டுமுடையதாகவும் விளங்குகின்றது. இக்கோயில்கள் கூட ஆரம்பத்தில் பல்வேறு வடிவங்களில் அழியும் பொருட்களான மரம், ஓலை ஆகியனவற்றாலே அமைந்ததோடு கூரை அமைப்பும் பல்வேறு தோற்றமுடையன வாக விளங்கியதை மேற்காட்டிய கோயிற் சின்னங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ஆரம்பத்தில் மரம் பயன்படுத்தப்பட்டாலும் பின்னர் செங்கல்லும் சுண்ணாம்பும் பயன்படுத்தப்பட்டதை பெருங்கற்காலக் கட்டிடக்கலை மரபில் காணமுடிகிறது. இதற்கான சான்றாகப் பல செங்கல் கட்டிடங்களின் அழிபாடுகள் அகழ்வாராய்ச்சி களின்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளன. திருக்காம்புலியூரில் நடைபெற்ற அகழ்வுகளில் சுட்ட செங்கற்கட்டடம் ஒன்றும், சுடாத செங்கற்கட்டடம் ஒன்றும் கிடைத்துள்ளன. ஒரு முனையில் 1மீற்றர் அகலமும் மறுமுனையில் 53.5 cm அகலமும் உள்ள பச்சைக்கல் சுவரின் ஒரு பகுதி 61 cm உயரம் கிடைத்துள்ளது. அதில் 6 அல்லது 7 வரிசை செங்கற்கள் இருந்தன. செங்கல் அடுக்கியமுறை சிறப்பாக இருந்தது. அடிமட்டத்தில் 30 cm உயரத்திற்குக் கெட்டிப்படுத்தப்பட்ட மண்தளம் இருந்தது. சுவரின் அருகில் பந்தற்கால் துளைகள் காணப்பட்டன.

திருக்காம்புலியூரில் பெருங்கற்காலப் பண்பாட்டுக்காலப் பகுதிக்குரிய கண்டுபிடிக்கப்பட்ட சுட்ட செங்கற்கட்டடமொன்று களிமண் சாந்து பயன்படுத்தப் பட்டிருந்தது. இரண்டு அறைகளும் முன் தாழ்வாரமும் கொண்ட அங்குள்ள கட்டடம் 6.4 m நீளமும், 3.7 m அகலமும் கொண்டது. சுவரின் அடியில் கருங்கல் சல்லி, மண்ணுடன் கலந்து கெட்டிப்படுத்தபட்டு அடித்தளம் அமைக்கப் பட்டிருந்தது. சுமார் 16 வரிசைச் செங்கற்கள் அதில் இருந்தன. கிடைத்துள்ள கட்டடத்தின் பகுதி 1.06 m உயரமாகும்.

அரிக்கமேட்டிலும் செங்கற்கட்டிடங்கள் மற்றும் உறை கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு குயவர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டு அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தியுள்ள

கட்டிடப்பகுதிகளுள் 'பண்டசாலை' முதன்மையானது. செவ்வகவடிவம் கொண்ட இப்பண்டகசாலை 45 m நீளமும் 11 m அகலமும் உடையதாகும். இக்கட்டிடத்தின் வடபகுதியில் ஏறத்தாழ 18 m நீளமுள்ள மற்றொரு சிறு பொருட்கிடங்கு காணப்படுகிறது. இக்கட்டிடப் பகுதிகள் மிகவும் அகலமான சுவர்களால் ஆனவை. வலுவான சதுர வடிவமுள்ள பெரிய செங்கற்களால் இச்சுவர்கள் எழுப்பப் பட்டுள்ளன. கட்டிடச்சுவர்களில் செங்கற்களிடையில் மண்சாந்து இட்டுக் கட்டப்பெற்றுள்ளன. வெளிப்புறச்சுவர்களின்மீது சுண்ணாம்புக்காரை பூசப் பட்டுள்ளது. நான்குபக்கச் சுவர்களும் நன்கு ஆழமான அடித்தளம் அமைத்து எழுப்பப்பட்டுள்ளன. அடித்தளம் அமைப்பதற்கு முன் மணல் பரப்பி, செங்கற்களை அடுக்கி வலுப்படுத்திய பின்னர் அகலமான சுவர்களை எழுப்பியுள்ளனர். இக்கட்டிடத்தின் தரைப்பகுதி அடித்தளத்திலிருந்து 5 அடி உயரத்தில் அமைக்கப் பட்டுள்ளது. பண்டசாலை வாயிற்புறங்கள் சிதைவடைந்துவிட்டதால் அதைப்பற்றித் தெளிவாக அறியமுடியவில்லை. வீலரின் ஆய்வில் பழங்காலம், இடைக்காலம், பிற்காலம் ஆகிய மூன்று காலத்தைச் சேர்ந்த கட்டிடப்பகுதிகளும் ஒரே இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரிக்கமேட்டில் கசால் மேற்கொண்ட ஆய்வில் அரியாங்குப்பத்தாற்றின் கிழக்குப்பக்கமாக 27 m நீளமுள்ள சுவர் ஒன்று இனங்காணப்பட்டது. இச்சுவர் செயற்கை நீர்த்தேக்கத்திற்கு நீர் எடுத்துச்செல்லும் வாய்க்காலின் வெளிப்புறச் சுவராகக் கருதப்படுகிறது. இந்நீர்த்தேக்கம் அரிக்கமேட்டின் தென்பகுதியில் உள்ளது. இவ்வாய்க்காலின் சுவர்ப்பகுதி சுடுமண் உறைகிணற்றில் சென்று முடிவடைகின்றது. காவிரிப்பூம்பட்டினத்திலும் இதேபோன்று செயற்கை நீர்த்தேக்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரிக்கமேட்டு ஆய்வில் பெருங்கற்கால மக்களின் கட்டிடக்கலைச்சிறப்பின் தொழில்நுட்ப அறிவையும் வெளிப்படுத்தும் உறைகிணறுகள் பல கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இங்குள்ள உறைகிணறுகள் வெளிப்புறத்தைச் சுற்றிலும் செங்கற்கள் அடுக்கப்பட்டிருப்பதால் சிதைந்துவிடாமல் உள்ளன. **உறைகிணற்றுக்குள்** இறக்கப்பட்டிருந்த உறை ஒவ்வொன்றும் 50 cm உயரமும் 1 m 40 cm குறுக்களவும் கொண்டன. கைகளால் சுடுமண்ணில் இவ்வுறைகள் செய்யப்பட்டுள்ளன. உறைகிணறுகள் நீர்சேமித்து வைக்கும் செயற்கை நீர்த்தேக்கங்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வீலருடைய ஆய்வில் கண்டுபிடிக்கப் பெற்ற 2 உறை கிணறுகளில் ஒன்று கழிவுநீர் தேக்கி வைக்கும் தொட்டியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. காவிரிப்பூம்பட்டினத்திலும் பல உறைகிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அரிக்கமேட்டில் **வீலர், கசால், விமலாபேக்லே** ஆகியோர் அகழ்வாய்வை மேற்கொண்டு சாயத்தொட்டிகளையும் வெளிப்படுத்தியுள்ளனர். வீலரால் வெளிப்படுத்தப்பட்ட, யவனக் குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள கட்டிடப் பகுதிகள், இரண்டு சாயத்தொட்டிகள் என்பன துணிகளுக்கு சாயம் தோய்க்கும தொழிற்சாலையை உறுதிப்படுத்துவனவாய் உள்ளன. இதன் காலம் சுமார்

கி.மு முதல் நூற்றாண்டுக்கும் கி.பி முதல் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாகும் சாயத் தொட்டிகள் ஒவ்வொன்றும் 3 m அகலமும் 4 m நீளமும் உடையன. ஒரு தொட்டியின் தென்பகுதியில் அறை ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. மற்றொரு தொட்டியின் தென்பகுதியில் ஒரு நீள் முற்றம் அமைந்துள்ளது. இத்தொட்டிகள் இரண்டு செங்கற்களாலே அமைக்கப்பட்டுள்ளன. சாயத் தொட்டிகளில் நீர் வந்து விழுவதற்கு இரண்டு கால்வாய்ப்புழைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சாயத் தொட்டியின் வெளிப்புறத்தில் முற்றத்தின் சுற்றுச்சுவர் ஒன்றில் கதவு நிலைகள் பதிக்கப்பட்டதற்கான அடையாளக்குழிகள் காணப்படுகின்றன. சேற்றுகலவை பூசப்பட்டு நீர் வெளிப்புறம் கசியாதவாறு சாயத் தொட்டிகள் அமைக்கப்பட்டிருக்கும் தன்மை பெருங்கற்காலப் பண்பாட்டின் கட்டிடக்கலையின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும். சாயத்தொட்டிகளை ஒட்டிப் பெரிய திடல் போன்ற கட்டிடச் சிதைவுகள் காணப்படுகின்றன. இவை துணி உலர்த்தப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். உறையூரிலும் சாயத் தொட்டிகள் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

கழிவுநீர் வாய்க்காலும் அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. துணி களுக்குச் சாயம் தோய்க்கும் தொழிலகத்தை ஒட்டியும், கழிவுநீர் செல்ல சிறுசிறு வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல சிறிய சாக்கடை வாய்க் கால்கள் எல்லாம் கழிவுநீர்க் கால்வாயில் கலக்கும் வகையில் சிறப்பாகக் கட்டப்பட்டுள்ளன. நிலத்தின் மட்டத்திற்கேற்பக் கழிவு நீர்செல்லும் சாக்கடையின் வாட்டம் சாய்வாகவும் பொறியியலாளர்கள் வியக்கும் வகையிலும் அமைக்கப் பட்டுள்ளது. சாக்கடை வழியானது 38cm அகலமும் 45cm உயரமும் உடையதாகக் கட்டப்பட்டுள்ளது. வாய்க்காலின் பக்கவாட்டில் சிதைந்த செங்கற்களும், நயப்பான களிமண்ணும் சேர்ந்து காணப்படுவதால் நீள்சதுரச் செங்கற்களால், களிமண் சாந்து கொண்டு இவை அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அரிக்கமேட்டில் இனம் காணப்பட்ட சாக்கடை வாய்க்கால்களுள் மிகவும் தொன்மையாகவும், நீளமாகவும் அமைந்துள்ளது. 4.5m பக்க அளவுள்ள வாய்க்காலாகும். சிந்துவெளி நாகரீகத்தின் வெளிப்பாடான மொகஞ்சதாரோவில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் அமைப்புகளைப் போன்றே அரிக்கமேட்டிலும் ஒழுங்கான அளவுக்கு உட்பட்ட சாக்கடை வாய்க்கால்கள் என்று கிதார் நாத்பூரி என்பவர் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

காவிரிபூம்பட்டினத்திலும் செங்கற்கட்டிடங்கள் பல பெருங்கற்கால பண்பாட்டு எச்சங்களாக இனங்காணப்பட்டுள்ளன. அந்த வகையில் படகுத்துறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது கடலுக்கு 4 பர்லாங் தூரத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் அமைப்பு வியத்தக்க முறையில் அமைந்துள்ளது. இத்துறை சுமார் 60 அடி நீளத்தில் 25 அடி அகலத்தில் அமைந்துள்ளது. தென்னிந்தியாவிற் பெறப்பட்ட செங்கட்டிகளுள் கப்பற்துறை மேடையிற் பெறப்பட்டவையே மிகப்பெரியதானவையாக இருக்கவேண்டும். இதைக் கட்டுவதற்கு நல்ல ஒட்டுந்தன்மை வாய்ந்த களிமண்ணைச் சந்தனம் போல் குழைவாக அரைத்துக் கல்லைப் பொருத்தியிருக்கிறார்கள். இதன் இடையே

இணையாக மரத்தாலாஆன கம்பங்கள் புதைக்கப்பட்டுள்ளது. இதனை உருத்திராங்கண்ணனாரின் பட்டினப்பாலை வரிகளும் சிறப்புப்படுத்துகின்றன.

"வெள்ளை உப்பின் கொள்ளைச்சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் ப.்றி
பனைநிலைப் புரவியிள் அணைமுதல் பிணிக்கும்
கழிசூழ் படப்பை...."

என்ற வரியில் உப்பு விற்ற நெல்லைக் கொண்டுவந்த படகுகளைப் பந்தியிலே நிரல்படக் குதிரைகளைப் பிணிக்குமாறுபோல தறிகளிலே பிணித்துள்ளதாகக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியத் தொல்பொருள் ஆய்வாளர்கள் காவிரிபூம்பட்டினத்தில் நீர்ப்பாசனத்திற்கு பயன்பட்ட **மதகு** ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். இதன் அமைப்பு கண்டு பொறியியலாளர்கள் வியந்துள்ளனர். தண்ணீர் வெளிச்செல்லும் வழி அழகுற வளைவாக அமைக்கப்பட்டும், வளைவிற்கு ஏற்ப கற்களை வளைவாகச் செய்தும் மதகினை அமைத்திருக்கின்றனர். சுண்ணாம்புக் காரை கொண்டு கட்டப்பட்டுள்ளது. தண்ணீரின் வேகத்தைக் குறைக்கவும் மதகு சேதப்படாமல் இருக்கவும் படிப்படியாக அமைந்திருக்கின்ற கீழ் அமைப்பும் கொண்டுள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்தில் புத்தவிகாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. புத்தவிகாரம் பல்லவனீச்சரம் கோயிலுக்கு வடபுறத்தில் நகரத்தார் விடுதிக்குக் கீழ்ப்பக்கத்தில் தோண்டிக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது சதுர வடிவில் அமைந்த பல அறைகளைக் கொண்டது. முன்புறம் தாழ்வாரம் காணப்படுகிறது. தென்னகத்தில் முதன்முதலாக இங்கே தான் புத்தவிகாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் பாகங்கள் இரு வேறுகாலங்களில் கட்டப்பட்டு அழிந்துள்ளதை புதைபொருள் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். முதன்முதல் கட்டிய விகாரை கி.மு 300 ஐச் சேர்ந்தது என்பதற்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. கி.மு 2 அல்லது 1 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட "பரோத்" கல்வெட்டுகளில் காகண்டியில் உள்ள சொர்ணம் பெண் துறவியின் மானியத்தைப் பதிவு செய்துள்ளது. "காகந்தி பிட்சுணி" என்பதாலும் புகாருக்கு காகந்தி என்ற பெயர் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. காகத்தின்னித்திடல் என்றவொரு மையம் இலங்கையில் யாழ் மாவட்டத்தில் வியாபாரிமூலை எனும் இடத்தில் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இத்துறவி இங்கிருந்து சென்ற துறவி என்பதும் அக்காலத்தே புகாரில் விகாரம் இருந்தது என்பதும் தெளிவாகிறது. கி.மு 3 ஆம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தியின் உறவினரான மகிந்தன் (மஹா இந்திரன் என்னும் பெயர் பாலியில் மகிந்தன் என வழங்கும்) என்பவர் இலங்கை செல்லுமுன் காவிரிபூம்பட்டினத்தில் தங்கி அங்கு 7 புத்தவிகாரங்களைக் கட்டினார் என்றும், அதுவே இலக்கியத்தில் இந்திரன் கட்டியதாகக் கூறப்பட்டுள்ளது என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இதன் விகாரையின் தலைவராக அறவண அடிகள் எனும்

தேரர் இருந்தார் என்றும் மணிமேகலையும் பௌத்த துறவியாக இந்த விகாரையில் தங்கியிருந்தாள் என்றும் சாத்தனார் கூறுதல் உண்மையுடைய தாகிறது. எனவே இந்த விகாரை பெருங்கற் பண்பாட்டுக் காலத்தில் சிறப்புடன் விளங்கியது என்பதும் சிறந்த கட்டிடக்கலையை வெளிப்படுத்துகிறது என்பதும் புலப்படும்.

மணிமேகலையில் சிறப்பாக பாராட்டப்பட்டுள்ள **சம்பாபதி கோயில** இன்றும் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. கோயிலின் பக்கத்தில் மிகப்பெரிய, பழமையான ஆலமரம் உள்ளது. சுண்ணாம்புக்காரையால் செய்யப்பட்ட இரு பூத வடிவங்கள் ஆண், பெண்ணாக அமைக்கப்பட்டுள்ளன. இதுபோல் கோயில் உள்ளேயும் இரு உருவங்கள் ஆண், பெண் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் இதை புதைபொருள் ஆய்வாளர்கள் அகழ்ந்து பார்த்தனர். செங்கல்லால் கட்டப்பட்ட கோயில் சிதைந்த வடிவில் உள்ளது. இக்கோயிலும் இருவேறு காலங்களில் கட்டப்பட்டுள்ளதாகக் காணப்படுகிறது. இதன் வடக்கே சாய்க்காடு எனும் பழைய கோயில் உள்ளது.

கிறிஸ்தாப்தத் தொடக்கத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் பௌத்த துறவியர் மடங்கள் கட்டப் பயன்பட்ட செங்கட்டிகள் அலங்கார வேலைகளையும் நல்ல வேலைத்திறனையும் வெளிப்படுத்துகின்றன. அவை வைக்கப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமாக வெவ்வேறு அச்சுக்களிலும் வளைந்த அல்லது மட்டப்படுத்தப்பட்ட விளிம்புகளுடனும் (Chamfeved or lovelled edges) செங்கட்டிகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம் முதலிய முந்திய வரலாற்று அகழ்வு மையங்களில் செவ்வக கூரை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கூரைஓடுகள் செவ்வக வடிவாயும் தட்டையாகவும் கிட்டத்தட்ட 6″ நீளத்துடனும் 2″ அகலத்துடனும் முடிவில் ஒரு சிறிய கொளுவி போன்ற பகுதி நீட்டிக் கொண்டிருக்கத்தக்கதாக தயாரிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் ஒரே பருமனுடையவை. பெருமளவில் அச்சுக்களில் தயாரிக்கப்பட்டிருக்கலாம்.

அமராவதியில் இரு தூபிகள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றில் பிரதான தூபி கி.பி 170 காலத்தது. அலெக்சாண்டர் றீ அதற்கருகேயுள்ள சிறிய தூபி அதற்கு முந்திய காலத்தது எனக் கருதுகிறார். அருகில் கிறிஸ்துவுக்கு முந்திய காலத்துக்கு உரிய பொறிக்கப்பட்ட வேலியிடும் கற்கள் காணப்பட்டதே இதற்குக் காரணம்.

பழனிமலைப் பிரதேசத்தில் ஒரு புதுமையான அமைப்பு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது வெறும் பாறைமீது ஒழுங்கற்ற உருவத்துடன் உள்ளது. கீழ்ப்பகுதி வட்டமாகவும் மேற்பகுதி அகலம் குறைந்ததாகவும் செவ்வக வடிவுடனும் காணப்படுகிறது. மேற்பகுதி கிழேயுள்ள அரை வட்டத்தின் மட்டத்துக்கு மேலே எழுப்பப்பட்ட மேடைபோலத் தோன்றுகிறது. இன்னும் கூடிய ஒப்பமான தரையில் இன்னும் சிறியதாகவும் இன்னும் ஒழுங்காக நீள்வட்டமாகவும் (130′ × 93′) முற்றிலும் கற்பாளங்களால் (boulders) அமைந்த வட்டமொன்று உள்ளது. இதன் மத்தியில் (7′ × 2′ 11″ × 1′ 7″) கல் ஒன்று

நிமிர்ந்து நிற்கிறது. ஒரு புறத்தில் மேடை உள்ளது. ஒழுங்கற்ற பாறை மேற்பரப்பின் மீது மண்ணையும் சரளை கற்களையும் பரப்பி மட்டமான அல்லது சமப்படுத்தப்பட்ட மேடை செய்யப்பட்டுள்ளது. இங்கு மட்பாண்டங்களோ கருவிகளோ பெறப்படவில்லை. இது இடுகாடு அன்று எனத் தோன்றுகிறது. இது பெரும்பாலும் சமூக, சமய அல்லது ஏதோ பொது நிகழ்ச்சிக்குரிய மக்கள் கூடுமிடமாயிருக்கலாம். இது கற்களால் கட்டடம் அமைக்கும் கலை பெருங்கற்காலப் பண்பாட்டில் உருவாகியதை காட்டுவதாகலாம். ஏனெனில் மிக அண்மையில் சங்க காலத்துக்குரியதான கருங்கல்லான மனித உருவம் ஒன்று (Anthropomophic stone stab) நிலத்தின் அடியில் கண்டுபிடிக்கப்பட்டது. 3.5m உயரத்தினையும் 1.75m அகலத்தினையும் 16m - 22m வரையிலான தடிப்பினையும் கொண்டு காணப்படும் இக்கருங்கல்லினாலான மனித உருவம் முதன்முதலாக தமிழகத்தில் கிடைத்திருப்பது சங்ககாலத் தமிழக மக்களுக்கும் பெருங்கற்கால கட்டிட தொல்நுட்பத்திற்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பினை வலியுறுத்துவதாக உள்ளது. மேலும் இத்தகைய ஒரு நிலையானது கோட்டு வரைபு (Liner craft) முறையிலிருந்து ஒரு படி வளர்ச்சிகண்டு வளைகோட்டு வரைபுமுறைக்கு (Semicircular projection) மாற்றம் பெற்றிருந்தமையை உறுதிப் படுத்துவதாக உள்ளது.

பெருங்கற்கால ஈமச்சின்னங்களிலே காணப்படும் தாய்த்தெய்வம் செதுக்கப்பட்ட பெரிய கற்களும் கட்டிடக்கலையின் சிறப்பை, கலையானது சமயத்துடன் கொண்ட தொடர்பை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இத்தகையவை வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மோட்டூரிலும், தென்ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள உடையநத்தத் திலும் உள. பெண் சக்தியோடு இன்னொரு ஆண்சக்தியின் இணைப்பே உற்பத்தி, இனப்பெருக்கம் ஆகிய தேவைகளை நிறைவேற்ற வழிவகுத்தது. எனும் கருத்து அக்கால சமய நம்பிக்கை என்பதுடன் உடலியல் ரீதியாகவும் உணரப்பட்டது. அதனை பிரதிபலிக்கும் வகையில் மோட்டூர் தாய்த்தெய்வ உருவத்தை வடிவமைத்துள்ளனர். உடையநத்ததிலுள்ள இத்தகைய சிற்பத்தின் உயரம் 300 cm ஆகும் கீழ், மேல் பகுதிகளில் இதன் அகலம் முறையே 250, 270 cm ஆகும். இவை கட்டிடக்கலையை மட்டுமன்றி சிற்பக்கலையையும் வெளிப்படுத்துவனவாகும். ஒரே கல்லில் செய்யப்பட்டுள்ளமை மோட்டூர் தாய்த் தெய்வக்கல்லின் சிறந்த தொழில்நுட்ப முறையாகும்.

பூநகரியில் பெருங்கற்காலப் பண்பாட்டுக் கட்டிடக் கலையை வெளிப்படுத்தும் மண வளையற் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சுட்ட மண்ணைக் கொண்டு கிணறுகளை கட்டியமை பெருங்கற்கால மக்களின் சிறந்த, வளத்தைப் பயன்படுத்தி கட்டிடக்கலையை வளர்த்துச்சென்றதைக் காட்டுகின்றன. இக்கிணறுகள் நீராடலுக்கும் மற்றும் சமயத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கும் பூநகரியில் உள்ள மண்வளையற் கிணற்றில் (படம் 14) மேற்பாகம் நட்சத்திர வடிவில் 2½ அடி விட்டத்தை உடையது. 3 அடி ஆழமுடைய இதன் கீழ்பாகம் 5 மண் வளையங்களை ஒன்றாகப் பொருத்தி

வட்டவடிவிலே கட்டப்பட்டுள்ளது. இந்த அம்சத்தை முல்லைத்தீவு, மன்னார், வல்லிபுரம் ஆகிய இடங்களில் கண்டுபிடித்த மணவளையற் கிணற்றிற் காணமுடியாதது.

பொம்பரிப்புக்கு அண்மையில் Galge விகாரை உள்ளது. இது வரலாற்றுக் காலங்களில் ஆரம்ப பௌத்த நிறுவனவாகும். கலகே விகாரையின் இடத்தில் ஒரு குகைச்சுவரில் கி.பி 2 அல்லது 3 ஆம் நூற்றாண்டுக்குரியது போலத் தோன்றும் எழுத்துப்பொறிப்பு உள்ளமையால் Galge விகாரை கட்டிடம் இக்காலத்திலிருந்து அல்லது இதற்கு முந்திய காலத்திலிருந்து இருக்கவேண்டும். எனவே பெருங்கற்காலப் பண்பாட்டில் சமயத்துடன் தொடர்புபட்ட வகையில் கட்டிடக்கலை முறையானது வளர்ச்சியடைந்து சென்றுள்ளதை இங்கு காணமுடிகிறது.

அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிக்குக்களின் உறைவிடம், அரசமரமனைகள் (போதிகர), குளம், பொதுமக்களின் கூட்ட மண்டபம், கோமுகிகள் என்பன பெருங்கற்கால மக்கள் சமயத்தேவைகளுக்காகவும் சமூகத் தேவைகளுக் காகவும் கட்டிடக்கலையை நன்கு வளர்த்துச் சென்றுள்ளதை எடுத்துக் காட்டுகின்றன. **"தேமத ஓயா"** எனும் இடத்திலுள்ள ஏறத்தாழ கி.மு 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சாசனத்தில் செங்கற்களைப் பற்றிய குறிப்பு காணப்படு வதுடன், தூபாராமத்தின் தொடக்கக் கட்டிடத்தில் கி.மு 3 ஆம் நூற்றாண்டிலே செங்கற்கள் உபயோகிக்கப்பட்டனவென்றும் கூறப்படுகிறது. கி.மு 3 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 3 ஆம் நூற்றாண்டுக்குமிடைப்பட்ட காலத்தில், வீடுகளின் அமைப்புமுறை நிலவிய காலத்திலும், சில புத்தமதத் துறவிகள் குகைகளில் வாழ்ந்துள்ளனர். இவை இயற்கைக் குகைகளாக இருந்தபோதிலும், அபூர்வமாக அகழ்ந்து ஆழமாக்கப்பட்டு தண்ணீர் வடிவதற்குரிய கூரை விளிம்புகளோடு கூடியனவாகச் செய்யப்பட்டுள்ளன. இக்குகைகளின் முற்பகுதியில் நிறுவப்பட்டிருந்த மண் சுவர்கள் எல்லாம் பெரும்பாலும் அழிந்து போயின. சாசனச் சான்றுகளின் படி, ஏறக்குறைய கி.மு 3 - 01 நூற்றாண்டுக்குரியதும் தமிழ் குடும்பத்துக்குரியது மான பொதுமக்களின் கூட்ட மண்டபமொன்று அநுராதபுரத்திலுள்ள இரத்தினப் பிரசாதம் எனும் இடத்துக்கு அண்மையிற் காணப்படுகிறது. இங்கு ஒரு பாறையில் 5 படிகளையுடைய தளம் அகழப்பட்டது. சமூகத்தின் பல்வேறு தகுதியிலுள்ள மக்களுக்காக அல்லது வணிக கணத்தின் பல்வேறு தகுதியிலுள்ளவர்களுக்காகப் பல்வேறு மட்டங்களில் ஆசனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தூண்களுக்கான குழிப் பொருத்துகளிலிருந்து தீர்மானிப்பின், இத்தூண்கள் தாங்கிக்கொண்டிருந்த ஒரு கூரை இருந்தமை புலப்படும். அநுராதபுரத்திலுள்ள 'குட்டம்பொக்குண' (இரட்டைக்குளம்) செதுக்கற்கற்களை கொண்டு படிகள் அமைக்கப்பட்ட குளமாகும். இக்குளத்திற்கு ஏதோ ஒரு கால்வாயின்மூலம் தண்ணீர் ஊட்டப்பட்ட தெனினும் அக்கால்வாயின் இயல்பும், செயற்பாடும் எப்படிப்பட்டவையென்று கூற இப்பொழுது தெளிவில்லாதிருக்கிறது. இக்குளம் கி.பி 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

அநுராதபுரத்திலுள்ள **ஜயசிரிமகாபோதி அரசமரத்திற்காக**, ஒரு "**போதிகர**" கிமு 3ஆம் நூற்றாண்டிலே கட்டப்பட்டுள்ளது. அபயகிரிப் பகுதியிலுள்ள சமாதியில், ஒரு போதிகரவின் எஞ்சிய சின்னங்கள் காணப்படுகின்றன. இது மகாசேனன் (கி.பி 276 - 303) கட்டியதாக இருக்கலாம். அநுராதபுரத்தில் கி.பி 2 - 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு சிம்மக் கோமுகிகள் (படம் 36) காணப்படுகின்றன. டகி அவை சமகால இந்தியக்கலை மரபில் இருந்து மாறுபட்டிருப்பதையும், கால அடிப்படையில் அவை தென்கிழக்காசியாவில் உள்ள கோமுகிகளில் இருந்து வேறுபட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் தென்கோடிக்கரையிலுள்ள தேவேந்திர முனையிலுள்ளதும், "கலகே" என்று வழங்கப்படுவதுமான, **'உபுல்வன'** தெய்வத்தின் திருமனையின் அமைப்பிலிருந்து, இலங்கையிலே தனித்தன்மை பொருந்திய ஒரு கற்கட்டிக் கலையை ஆரம்பித்த முயற்சி புலப்படுகிறது. மூலஸ்தானத்தையும் வாயில் மண்டபத்தையும் அழகிய முறையிற் கொண்டமைந்த இக்கட்டிடத்தின் முழு நீளமும் 26அடி 5 அங்குலமேயாகும். இலங்கையில் எல்லா பண்டைய கட்டிடங் களிலும் காணப்படும் அலங்கார ஏறுபடிகள் இங்கு காணப்படவில்லை. தென்னிந்தியக் கட்டிடக்கலைக்கும் இதற்கும் ஒப்புமைகள் காணப்படாலும், சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. முன்னைக் கட்டிடக்கலை எதையும் பின்பற்றாமலும், பின்னைக் காலத்துக்கு ஒரு வழியாக அமையாமலும் ஒரு தனிப்பட்ட பரிசோதனையாக இது அமைந்திருக்கின்றது.

கந்தரோடையில் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய பௌத்த வழிபாட்டு மையங்களும், சில புதைகுழிக்குரிய அமைப்புக்களும் இங்கு கடற்பவளக் கல்லினால் அரிந்து அறுத்த கற்கள் போன்று உருவாக்கப்பட்டு, கட்டிடப்பொருளாக உபயோகப்படுத்தப்பட்டமையைக் காணலாம். தென்னிந்தியத் திராவிடக் கட்டிடக்கலையில் பெருஞ்செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்த ஆந்திர நாட்டிலுள்ள அமராவதியின் கட்டிடக்கலை மரபானது கந்தரோடையின் கட்டிடக்கலைக் கூறுகளிலும் பெருஞ்செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தமையைக் காணலாம். கந்தரோடையில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட கட்டிடப் பாகங்களுள் முக்கியமான தாகக் காணப்படுவது திராவிடக் கலைப்பாணியில் அமைந்த பௌத்த மதத்துடன் தொடர்பான தூபிகளின் அமைப்புக்கள் ஆகும். அகழ்ந்து வெளிப்படுத்தும்போது எந்தவிதமான மேற்கட்டுமானமும் இன்றிக் காணப்பட்ட இத்தகைய பௌத்த தூபிகளுக்குரிய அத்திவாரங்கள் ஒன்றுக்குள் ஒன்று செருகப்பட்ட நிலையில் காணப்படுவதிலிருந்து பல கருத்துக்கள் அவை தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. கந்தரோடையில் சுமார் இருபதிற்கும் மேற்பட்ட தூபிகளின் அத்திவாரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கந்தரோடையில் அகழ்ந்து வெளிப்படுத்திய அழிபாடுகளை நோக்கும்பொழுது, அவையெல்லாம் ஒரே சமகாலத்தில் அமைக்கப்பட்டன அல்ல என்பது புலனாகும். அத்திவாரங்களின் போக்குகளும் அமைப்புக்களும் ஒன்றன்பின்ஒன்றாக அமைந்துள்ளமை இக்கருத்தினைத் தெளிவாக்குகின்றதெனலாம். இந்துநதிப் பள்ளத்தாக்கில்

பலமுறை கட்டிடங்கள் ஒன்றுக்கு மேல் மற்றொன்று அமைக்கப்பட்ட தன்மையை யொத்து இங்கு கட்டிட அமைவு அமைக்கப்பட்டது என்று கருத இடமுண்டு. ஒரு பரந்த அடிப்படையிலான அகழ்வாராய்ச்சியைக் கந்தரோடையில் மேற்கொண்ட பின்னரே ஒன்றுக்குள் ஒன்று செருகியும், ஒன்றுக்குமேல் மற்றொன்று அமைக்கப்பட்டதற்குமான கட்டிடங்களில் அத்திவார அமைப்பின் தன்மையைக் கண்டு கொள்ளலாம்.

இவ்வாறு பெருங்கற்காலப் பண்பாட்டில் தோன்றிய கட்டிடக்கலை முறையே இங்கு பின்னய கட்டிடக்கலை முறை வளர்ச்சிக்கு வித்திட்டது. சமய நம்பிக்கை அடிப்படையில் தோன்றிய கட்டிக்கலை முறையானது பின் சமூகத்தேவைகள் யாவற்றுக்குமாக விரிந்தது.

மட்பாண்டக் கலைகள்

பெருங்கற்கால மக்கள் தமது ஜீவனோபாயத் தேவைகளுடன் சமய நம்பிக்கைச் சடங்குகளின் தேவைகளுக்காகவும் மட்பாண்டங்களை உருவாக்கி யுள்ளனர். சமயத் தேவை நிமித்தம் பௌதீக சூழலுக்கேற்ப தாழிகள், பேழைகள் என்பவற்றைச் செய்து இறந்தவரது உடலை அல்லது எலும்புகளைப் புதைத்தனர். இத்தாழிகள், ஈமப்பேழைகள் என்பவற்றை ஒரே மாதிரிச் செய்யாது பல வகை களிலும் செய்ய முற்பட்டதால் மட்பாண்டக்கலை மேன்மைபெற வனப்புற வழிவகுத்தது. மேலும் நிவேதனப் பொருட்களைப் படைப்பதற்கும் மட்பாண்டங்கள் செய்யப்பட்டன. இவ்வாறு சமயக் கிரியைகளுக்காகவும் மட்பாண்டக்கலை சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் மட்பாண்டங்களில் சமயசார்புடைய குறியீடு கள், ஓவியங்கள் என்பன வரையப்பட்டுள்ளமையும் மற்றும் மட்பாண்டங்களில் சமயத் தேவைகளுக்காக வழங்கப்பட்ட தானங்கள் பற்றிய செய்திகளும் பொறிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனாலும் மட்பாண்டக்கலை வேறு தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

பெருங்கற்காலப் பண்பாட்டு ஈமச்சின்னப்பொருட்களுள் மிக முக்கியமானவை மட்பாண்டங்களாகும். இம்மட்கலன்களை மணல், உமி, மைக்கா, களிமண் ஆகியவற்றைக் கலந்து செய்துவந்துள்ளனர். மட்கலங்கள் கையாலும், சக்கரத் தாலும் வனையப் பெற்றவைகளாக உள்ளன. குமிட்டி, அடுப்பு, கிணற்றுக்கான உறைகள், பெரிய தொட்டிகள், அடர்த்தியான சாடிகள் போன்றவற்றில் மண்துகள்கள் செங்குத்தாகக் காணப்படுவதால் இவை கைகளாலேயே செய்யப் பெற்றிருக்கவேண்டும். கையினால் செய்யப்பட்ட மட்கலனில் மண்துகள்கள் செங்குத்தாகவும் சக்கரத்தால் வனையப்பட்டிருந்தால் அதன் மண் துகள்கள் பக்கவாட்டிலும் அமைந்திருக்கும் என்று அகழ்வாய்வாளர்கள் கணித்துள்ளனர். மட்பாண்டங்கள் ஒழுங்காகச் சூளையிற் சுடப்பட்டும் சுடப்படாமலும் செய்யப் பட்டிருந்தன. தாழிகள், சுடுமண் பேழைகள் போன்றன கரடுமுரடான, ஒழுங்காகச் சுடப்படாத, மெருகிடப்படாத பெரிய பாத்திரங்கள் அல்லது மட்பாண்டங்களும்

பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் காணப்பட்டதுடன், நன்கு சுடப்பட்டு, பளபளப்பாக்கப்பட்ட சிறிய பாத்திரங்களும் காணப்பட்டுள்ளன.

பல்வேறு வண்ணம், வடிவம் கொண்ட மட்கலங்கள் இப்பெருங்கற்காலத்தில் செய்யப்பட்டிருக்கின்றன. இக்கால மக்கள் உருவாக்கிய மிகமுக்கியமான மட்பாண்ட வகையை அகழ்வாய்வாளர்கள் கறுப்புச் சிவப்புப் பானை ஓடு என்றழைக்கின்றனர். இதைத்தவிர சிவப்பு மட்பாண்டம், கறுப்பு மட்பாண்டம், செம்பழுப்பு வண்ணப்பூச்சு கொண்ட மட்கலம் (Russet coated ware), ஆம்போரா சாடிகளின் உள்ளூர் உற்பத்தி எனப்பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பொதுவாக மட்பாண்டங்களின் மண்ணின் தரம் உயர்வாயிருந்தது. கறுப்பு சிவப்பு மற்றும் தொடர்புள்ள பாத்திரங்களில் மேற்பரப்பு இலகுவில் உடைவதாயிருந்தது. மட்பாண்டங்கள் நல்ல lavigated களியால் நன்றாகச் செய்யப்பட்டு, நன்கு மெருகூட்டப்பட்டு, மூடிய சூளையில் தலைகீழாக வைக்கப்பட்டு தாழ்த்தல் நிபந்தனையில் (under reducing condition) நன்கு சுடப்பட்டுள்ளன. கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள் ஒட்சியேற்றும் நிபந்தனைகளில் (Under Oxidising conditions) சுடப்பட்டிருக்கின்றன. ஆனால் முழுக்கறுப்பு மட்பாண்டங்கள் மூடிய சூளையில் முற்றாகத் தாழ்ந்தும் நிபந்தனைகளில் (Under fully reducing conditions) சுடப் பட்டிருக்கின்றன. கறுப்புச் சிவப்பு மட்பாண்டத்தின் இன்னொரு வகை செம்பழுப்பு வண்ணப்பூச்சுக் கொண்ட மட்கலம் இவையும் கறுப்புச் சிவப்பு மட்பாண்டம் தயாரிக்கப்பட்ட அதே முறையில் தயாரிக்கப்பட்டன. அதையொத்த பளபளப்பான மேற்பரப்பை இவையும் கொண்டிருந்தன. மேற்பரப்பில் வெவ்வேறு அழகிய கோலங்களை இம்மட்பாண்டங்கள் கொண்டிருந்தன.

மேலும் உரோம வர்த்தகர்களால் கொண்டுவரப்பட்ட புதிய மட்பாண்ட மரபு பெருங்கற்கால மக்களது மட்பாண்டக்கலை மரபிலும், தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. நுண்ணிய களியினாலாக்கப்பட்ட ரௌலட்டட் மட்பாண்ட வகையானது ரோமரால் அறிமுகப்படுத்தப்பட்டாலும் விரைவில் அதனையொத்த மட்பாண்டங்கள் ஒத்த ரௌலட்டட் வடிவங்களுடன் பெருங்கற்கால மக்களால் உள்நாட்டிலே தயாரிக்கப்பட்டுள்ளன. இவை போன்றே உரோம மட்பாண்ட மரபின் பிறிதொரு வகையான ஆம்போரா (Ampharae) எனப்பட்ட பெரிய கூம்பு வடிவ வைன் சாடிகளின் மாதிரிகளைப் பின்பற்றி உள்ளூரிலும் தயாரிக்கப் பட்டுள்ளன. இறக்குமதி செய்யப்பட்ட மூல ஆம்போரா இளம் சிவப்புக்களி யாலும் உள்ளூர் தயாரிப்பு மங்கிய சிவப்பு நிறத்திலானதாகவும் செய்யப் பட்டிருந்தன.

ஆனால் தாழிகள் கரமுடுமுரடான களியால் செய்யப்பட்டனவாயிருந்தது. இவை அடிக்கடி பிணைக்கும் பொருளாக வைக்கோல் அல்லது உமி உடன் கலக்கப்பட்டு தடித்த பகுதிகள் உடைய பெரிய பாண்டங்களாகச் செய்யப் பட்டுள்ளன. இவை இறந்து போனவர்களது உடலைப் புதைக்கச் செய்யப்பட்டவை. இறந்துபோன மக்கள் பயன்படுத்திய படைக்கலங்களும், வெண்கலப் பாத்திரங் களும். மட்பாண்டங்களும் அவர்களுடன் புதைக்கப்பட்டுள்ளன. இறந்தவர்களது

உடலைப் புதைக்கும் தாழி என்பதற்காக அவற்றை ஒரே மாதிரிச் செய்யவில்லை. பல்வேறு வகைகளிலும் அலங்காரங்களுடனும் செய்துள்ளனர்.

தாழிகளுள் ஒரு வகை வாயகன்று அடி குவிந்து, நுனி மட்டும் தட்டையாக உள்ளது. இத்தாழிகள் ஏனைய கலன்களைவிட மிகக்கனத்தவையாகவும் குதிர்கள் போலவும் காணப்படுகின்றன. இன்னொரு வகைத் தாழிகள் வாய் சிறிது, உடல் நீளமானது, கழுத்து நீண்டது, புயம் கச்சிதமானது, அடிசிறுத்துப் புயம்வரை அகன்று உள்ளது. இன்னொரு வகைத் தாழி வட்டமான சிறிய தட்டையான நுனியை உடையது, அடிப்பாகம் வட்டமான நிலைச்சட்டத்தோடு அமைந்துள்ளது, கழுத்து சிறுத்து, தோள் பாகம் அகன்று வாய் சிறுத்துக் காணப்படுகிறது. இதன் அடிப்பகுதி வட்டவடிவமான நிலைச் சட்டத்தின் மீது தாழி சாய்ந்துவிடாதவாறு பொருத்தப்பட்டுள்ளது. இது பெரியகூஜா வடிவில் அழகாகச் செய்யப்பட்டுள்ளது. மேற்பகுதி கரடுமுரடாகவன்றி வழுவழுப்பாக மெருகூட்டப்பட்டுள்ளது. இன்னொருவிதத் தாழிவகை கழுத்தும் வாயும் சிறுத்துள்ளது, தாழி குறுகியது, தாழியை நிறுத்திவைக்க கால்கள் உள்ளன. இன்னொருவிதம் வாயும் கழுத்தும் தோளும் அழகாக அமைந்துள்ளன, கழுத்து சிறுத்து தோள் அகன்றுள்ளது, அடிப்பாகம் அகன்று சிறிய 3 குட்டையான கால்களை உடையனவாகத் திறமையுடன் செய்யப்பட்டுள்ளன. இத்தாழி செங்குத்தாக நிற்கவைத்து இறுதிச்சடங்குகள் செய்வதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது எனலாம். இது தவிர அகன்று நீண்ட பெரிய கால்களை யுடைய தாழியும் ஒரு காலையுடைய நிலைப் பேழைமீது, உருளைவடிவமான பானை போன்று வைக்கப்பெற்றுள்ளது. ஆனால் அதன் வாய் ஏனைய தாழிகளின் வாய்களைவிட மிகச்சிறியதாகச் செய்யப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவில் கறுப்பு வண்ணம் கொண்ட ஒருவகைத் தாழிகள் சென்னை மாநிலத்தில் அகழ்ந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிறிய கழுத்தும் அகலமான அடிப்பகுதியும் கொண்டவை. அடிப்பகுதி அகன்று நிலத்தில் வைத்தால் செங்குத்தாய் நன்கு நிற்பதற்கு ஏற்றதாக அமைக்கப்பட்டுள்ளது. இத்தாழிகள் மிக உறுதியாகச் செய்யப்பட்டுள்ளன. இன்னொருவகைத் தாழிகள் பெரிய குதிர்களின் வடிவமானவை வாய் சற்று அகலமாயும் உடல் நீளமாயும் உள்ளது. கழுத்துக் கட்டையாகக் காணப்படுகிறது. இது இறந்துபோன மக்களின் பிணங் களை நின்ற நிலையில் வைத்துப் புதைக்கக்கூடிய மாதிரிச் செய்யப்பட்டுள்ளது. இது படுக்கும் நிலையில் உடலை வைத்துச் சாடி வாயிலில் மூடியிட்டு புதைக்கும் நல்ல கல்லறைப் பெட்டி என்று கூறப்பட்டு வந்தது எனத்தெரிகிறது.

சமயத் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட தாழிகள் மட்டுமன்றிச் சுடுமண் பேழைகளும் மட்பாண்டக்கலை வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளன. சுடுமண் பேழை களும் பல்வேறு வடிவங்களில் செய்யப்பட்டுள்ளன. கால்களையுடைய சுடுமண் பேழைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுமட்டுமன்றி ஆந்திராவில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் பேழை மட்பாண்டக்கலையின் உச்சத்தைக காட்டுகின்றது.

இப்பேழை ஆட்டுக்கடா வடிவில் 6 கால்களுடன் அமைக்கப்பட்டுள்ளது முன் பக்கத்தில் ஆட்டுக்கடா போன்ற மிருகத்தின் வளைந்த கொம்புகளைக் கொண்ட தலை உள்ளது. மூடிகள் இருபிரிவாகவுள்ளன. இதில் கயிற்றுக் கோலம் இருக்கிறது. இது நீண்ட ஈமப்பேழையாக இருப்பதுடன் வித்தியாசமான தாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறந்தவரது உடலுடன் அவர் பயன்படுத்திய பொருட்களையும் புதைக்க வேண்டும் என்ற சமய நம்பிக்கை காரணமாகவும் சமயகிரியைகளுக்காகவும் மட்பாண்டக்கலை தாராளமாகவே வளர்ச்சியுற்றிருந்தது. சட்டிகள், பானைகள், குமிழ்வடிவப் பானைகள், கிண்ணங்கள், சும்பு வடிவப் பாத்திரங்கள், சாடிகள், குடுவைகள், மூடிகள், முக்காலிகள், வட்டில்கள், செம்பு, கெண்டி, கூசா, அகல்விளக்குகள், குடம், வளையந் தாங்கிகள், குவளை, தோசைக்கல், தட்டுக்கள், புரிகள் கொண்ட மட்பாண்டங்கள் எனப் பல்வேறு மட்பாண்டங்களையும் அமைத்துள்ளனர். பூநகரியில் மண்ணினால் செய்யப்பட்ட இருவேறுபட்ட வடிவங் களில் அமைந்த 3 அகல்விளக்குகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன (படம் 19). இவை இப்பிராந்தியத்தில் நிலவிய தொன்மையான வழிபாட்டுச் சின்னங்களென்று கருத இடமுள்ளதாக புஸ்பரட்ணம் கூறுகிறார். ஆதிச்ச நல்லூரில் அறிஞர் இரியா 600 க்கும் மேற்பட்ட மட்கலங்களை அகழ்ந்து கண்டுள்ளார். இவற்றில் பல இன்று வழக்கத்தில் இல்லாதவை. இவற்றின் அமைப்பு முறையானது மட்பாண்டத் தொழிலில்நுட்பத்தையும் கலைச்செழிப்பினையும் வெளிப்படுத்துவன வாக உள்ளன.

இவ்வாறு சமய நம்பிக்கை அடிப்படையில் மட்பாண்டக்கலை வெளிப்படுத்தப் பட்டதுடன் அவற்றில் சமய நம்பிக்கை சார்ந்த குறியீடுகளும் வெளிப்படுத்தப் பட்டுள்ளமையைக் காணலாம். குறியீடுகள் மட்பாண்டங்களில் இருவகைகளில் இடப்பட்டுள்ளன. ஒன்று சுடுவதற்கு முன் கூரிய ஆயுதத்தால் குறியீடு இடுவது, மற்றையது சுட்ட மட்பாண்டத்தில் குறியீடு இடுவது. மட்பாண்டங்களில் ஒருதலைச் சூலம், இருதலைச்சூலம், முத்தலைச்சூலம், சூரியன், விண்மீன், சுவஸ்திகா, மரம், மனித உருவத்தைக் குறிக்கும் குறியீடு, வேல், மேடையின் மேலுள்ள விருட்சம் (பொம்பரிப்பு) போன்ற பல சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் குறியீடுகளைப் பெருங்கற்கால மக்கள் இட்டுள்ளனர். இது மட்டுமன்றி சில மட்பாண்ட ஓடுகளில் சூலத்துடன் அதன் மையத்தில் சிறிய துவாரமும் காணப்படு கின்றமையானது அவை தாயத்துப் போலக் கருதி மட்பாண்டங்களில் செய்யப்பட்டு அணியப்பட்டிருக்கலாம் எனக் கருத வைக்கின்றன.

மேலும் மட்பாண்டங்கள் சமய நம்பிக்கைகள் பொறுத்து வழங்கப்பட்ட ஆட்பெயர்கள் பற்றி வெளிப்படுத்துகின்றமையும் நோக்கத்தக்கது. சிவ, சிவநெ, விஷ்ணு பூதிய, நாக, ததஹபத, வேலே, வேலா, ராம, நரய போன்ற சமய சார்பான பெயர்கள் மட்பாண்டங்களில் இடப்பட்டிருந்தமையானது பெருங்கற்கால மக்களது வாழ்வில் சமயம் வகித்த பங்கை வெளிப்படுத்துவதுடன் சமய

நம்பிக்கைகள் மட்பாண்டக் கலையுடன் கொண்ட தொடர்பையும் வெளிப் படுத்துவனவாக உள்ளன எனலாம்.

மட்பாண்டக் கலையானது பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களால் சமய சார்பற்ற தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. மட்கலங்கள் சாதாரணமான வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன், விசேடமாக மட்பாண்டக்கலையைப் பயன்படுத்தி சுடுமண் காசுப் பெட்டிகளையும் உருவாக்கி இருந்தமையைப் பெருங்கற்கால பண்பாட்டு எச்சங்கள் மூலம் அறியமுடிகிறது.

இலங்கையில் ரிதியாகம, அக்குறுகொடல்ல, நியடெல்ல, அக்குறுகொட எனும் இடங்களில் சுடுமண் நாணயப் பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ரிதியாகமவில் கிடைத்த சுடுமண் காசுப் பெட்டிகள் கண்ணை மிகவும் கவர்வதான ஒரு சிறிய சாடி போன்ற பொருளாகும். இவை தவிர முத்திரைகளும் மட்பாண்டக் கலையைப் பயன்படுத்தி செய்யப்பட்டுள்ளன. களிமண் பொறிப்புகளுடன் களியாற் செய்யப்பட்ட முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மற்றும் வெவ்வேறு நாணயங் களில் அச்சுக்களைச் செய்வதற்கும் மட்பாண்டக்கலை பயன்படுத்தப்பட்டுள்ளது. அகக்குறுகொடவிலிருந்து அரச முத்திரை அடையாளமிடப்பட்ட வெவ்வேறு நாணயங்களின் பதிவுகளைக் கொண்ட இரண்டு சுடுமண் தட்டுக்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்துகின்றது. இதன் மூலம் மட்பாண்டக்கலையானது சமூகத் தேவைகளை நிறைவுசெய்யும் நோக்கில் வளர்ச்சிப்படுத்தப்பட்டபோது சமயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் அதன் வேலையானதை உணரலாம்.

அத்தியாயம் : ஐந்து

புராதன நதிக்கரையோர நாகரிகங்களும் இலங்கையின் நீரியல் நாகரிகத்துடனான பண்பாட்டு வழித் தொடர்புகளும்

அ. நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படையாகவுள்ள காரணிகள்

மனிதன் தோன்றிய காலம் முதல் அவனது வாழ்வு பல மாறுதல்கட்கு உட்பட்டுச் சென்றது. அம்மாறுதல்கள் இறுதியில் அம்மனிதனை நாகரிக நிலையை அடையச்செய்தன. மனிதன் தனது வாழ்கையில் நாகரிக நிலையை அடையமுன் பல கட்டங்களைக் கடந்து வந்திருந்தான். அவை வேட்டையாடி, உணவு சேகரித்து பின்னர் மந்தை மேய்த்து, வாழ்ந்த வாழ்வு முறைகளைக் குறிப்பிடும். நிலையான ஓரிடத்தில் நிலையான வீடுகளை அமைத்து நிலையான பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வாழ்ந்த வாழ்வு முறையுடனேயே நாகரிக வாழ்வு ஆரம்பித்தது. எனவே நிலையான வாழ்க்கை முறையை **"நாகரிகம்"** எனவும் சமூகவியல் பண்பாட்டு வரலாற்று ஆசிரியர்கள் குறித்தனர். அடிப்படையில் பண்பாடு, நாகரிகம் ஆகிய இரு பதங்களும் இரு வெவ்வேறான நிலைகளைக் கொண்டு விளக்குவனவாகும். இந்த வெவ்வேறான நிலைகளை விபரிப்பதற்காக நாகரிக வளர்ச்சி பற்றிய அடிப்படைக் காரணிகளை சமூகவியல் ஆய்வாளர் எடுத்துக்காட்டுகின்றனர்.

"பல சமூகக் குழுக்களை ஒன்றிணைந்த வகையில் ஒரு சமுதாய மானது பல்வேறு தொழிற்பிரிவுகளை உடையதாய், தொழில்நுட்பத் திறனையும், அனுபவங்களையும், அநுஷ்டானங்களையும் தமது சந்ததி யினருக்கு வழங்கக்கூடிய நிலையில் ஓரிடத்தில் நெருக்கமாக வாழும் வாழ்க்கை முறையையே நாகரிக வாழ்வு" என வரையறை செய்கின்றனர். **கிளவுட் குளுக்கோன** என்ற சமூகவியல் விஞ்ஞானியே இத்தகைய ஒரு வரைவிலக்கத்தினை நாகரிகம் தொடர்பாகக் கொடுத்துள்ளார். அவர் ஓரிடத்தில் மக்கள் வாழும் வாழ்க்கையே நாகரிக வாழ்க்கை எனக் கண்டுகொள்வதற்கு மூன்று பிரதான அளவீடுகளையும் வகுத்துத் தந்துள்ளார். அவையாவன:

1. எழுத்து வழக்குடைய பேச்சுமொழி
2. 25000 எண்ணிக்கைக்குக் குறையாத ஜனத்தொகை (இதில் 25 சதவீதத்திற்கும் குறைவானவர்களே உழவுத்தொழில் ஈடுபடுபவர்களாக இருக்கவேண்டும்)
3. மக்கள் கூடும் ஒரு மையம்.

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று அளவுகோல்களில் ஏதாவது இரண்டினைக் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினரிடையே கண்டுகொள்ள முடியுமாயின் அதுவே நாகரிக வாழ்க்கையாகும் என **கிளவுட் குளுக்கோன** குறிப்பிடுகின்றார்.

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று அளவீடுகளில் முதலாவதாக எழுத்து வழக்குள்ள பேச்சுமொழியின் உபயோகமானது நாகரிக வாழ்வின் முதுகெலும்பு எனலாம். நாகரிக வாழ்வில் எழுத்து வழக்குடைய மொழியின் பாவனையானது பல நிலைகளில் அதன் வளர்ச்சிக்குதவுவதைக் காணலாம். **வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலம், விவசாயப் பருவக்காலக் குறிப்புக்கள், நகர வாழ்வின் தொழில்நுட்ப ரீதியான கண்டு பிடிப்புக்கள், அனுபவங்கள் என்பனவற்றின் திரட்சி என்பனவற்றை பேணிப்பாதுகாத்துத் தொடர்ந்து வரும் சந்ததி யினருக்கு வழங்கக்கூடிய ஒரு வசதியினை எழுத்தின் உபயோகம் சீர்செய்து** அமைக்கும். எனவே **பதிவுகள்** நாகரிக வாழ்விற்கு இன்றியமையாதன. ஓரிடத்தில் வளர்ச்சிபெற்ற நாகரிக வாழ்வு இன்னொரு இடத்திற்குப் பரந்து கொள்வதற்கு எழுத்துப் பதிவுகள் அடிப்படையாக உள்ளன. எனவே எழுத்து வழக்கில்லாத பேச்சுமொழி எந்நிலையிலும் நாகரிக வளர்ச்சிக்கு உதவமாட்டாது என்பது வெளிப்படை.

நாகரிக வாழ்வின் இரண்டாவது அளவுகோல் சனத்தொகையின் எண்ணிக்கை அடிப்படையில் கொள்ளப்படுவதனைக் காணலாம். இந்த எண்ணிக்கை முறையிலான அளவுகோல் **நகர** வாழ்க்கையைத் தீர்மானிப்பதற்கும் உதவு கின்றது. **நகரங்களில** வாழும் வாழ்க்கை முறையே **நாகரிக வாழ்வு** எனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. கிரேக்கத்தில் ஒரு நகரம் எனக் குறிப்பிடப் படுவது **ஒரு லட்சத்திற்கு** மேற்பட்ட ஜனத்தொகை உள்ள ஒரு மையாகும். இந்தியாவில் இது **பத்தாயிரத்திற்கும** மேற்பட்ட ஜனத்தொகையுள்ள மையத்தினைக் குறிக்கப் பயன்படுத்தப்படும். கிழக்கைரோப்பிய நாடுகளில் இந்நிலை **பத்து மில்லியனாக** வேறுபடும். எனவே நகரங்கள் பற்றிய அளவீடு களையும் ஜனத்தொகை பற்றிய அளவீடுகளையும் ஜனத்தொகைப் புவியியலாளர் களும் நகரப் புவியியலாளர்களும் **உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்காத** மக்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டே கையாளுவதனைக் காணலாம். ஆனால் கிளவுட் குளுக்கோன் 25000 எண்ணிக்கைக்குக் குறையாமல், அதிலும் **25 சதவீதத்திற்கும் குறைவான எண்ணிக்கையில் உழவுத் தொழிலைச் செய்கின்ற மக்கள் கூட்டம்** ஓரிடத்தில் குழுமி வாழ்க்கை நடாத்துகின்ற ஒரு மையத்தினை **நகரம** எனக் குறிப்பிடுகின்றார்.

நகரத்திற்கும் நாகரிக வாழ்க்கைக்குமிடையே மிக நெருங்கிய தொடர்புகள் இருப்பதனைக் காணலாம். ஆங்கிலத்தில் City என அழைக்கப்படுவது நகரத்தினைக் குறித்து நிற்கின்றது. இதேபோன்று ஆங்கிலத்தில் Civilization என அழைக்கப்படும் சொல் நாகரிகத்தினைக் குறித்து நிற்கின்றது.

இவ்விரண்டு பதங்களுமே Civitas என அழைக்கப்படும் **கிரேக்கச்** சொல்லின் அடியாகவே தோற்றம் பெற்றனவாகும். இவ்விரு பதங்களும் உணர்த்தும்

செயற்பாடுகளுக்குள் நெருங்கிய ஒற்றுமை காணப்படுவதனையும் அவதானிக்கலாம்.

நாகரிக வாழ்வின் **மூன்றாவது** அளவுகோல் **மக்கள் கூடும் ஒரு மையமாகும்**. இது ஒருவேளை சமய முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பாகவும் இருக்கலாம். ஏதோ வகையில் **ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட நிறுவனம** ஒன்று பல்வேறு **தொழிற் பிரிவுகளினாலும** (தொழில் தேர்ச்சி) வேறுபடுத்தப்பட்ட அல்லது பிளவுபடுத்தப்பட்ட மக்கள் கூட்டத்தினரை ஒன்றுபடுத்தும் ஊடகமாகத் தொழிற்படுவது ஆகும். சமயக் கோவில்கள் இத்தகைய தொழிற்பாட்டினை ஆற்றி வருகின்ற மையங்களாகும். நாகரிக வாழ்வின் சிறப்புத் தேர்ச்சிக்குரிய **தொழிற் பிரிவுகளினால** வேறுபடுத்தப்பட்ட நிலையில் அம்மக்களை ஒன்றிணைக்கும் தொழிற்பாட்டினை இக்கோவில்கள் ஆற்றி வருகின்றன. இதனால் இப்பொது மையங்கள் நாகரிக வாழ்க்கையின் குறிகாட்டிகளாகக் கொள்ளப்படுகின்றன.

நிலையான ஓரிடத்தில், நிலையான வீடுகளை அமைத்து நிலையான பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த வாழ்வு முறையுடன் ஆரம்பித்த நாகரிகமுறை உலகில் எல்லா இடங்களிலும் சமகாலத்தில் தோற்றம் பெற்றிருக்கவில்லை. குறிப்பிட்ட நதிக்கரையோரங்களிலேயே இவ்வாழ்வு முறை ஆரம்பித்திருந்தது. இவ்வாறு **குறிப்பிட்ட நதிப் பள்ளத்தாக்குகளில** மாத்திரம் நாகரிக வாழ்வு தோற்றம்பெற்றதற்குக் காரணம் இயற்கைமைப்பு, இயற்கையின் சவாலும், அதனை எதிர்நோக்கியிருந்த மனித வாழ்வுமே ஆகும். **ஆர்னல்ட் ரொயின்பீ** உருவாக்கிய **சவால் - ஏற்புக்கோட்பாடே** குறிப்பிட்ட பிராந்தியங்களில் - நதிப் பள்ளத்தாக்கு களில் நாகரிக வாழ்வு தோற்றம் பெறுவதற்கு காரணம் எனக் கொள்ளப்படு கின்றது.

சவால் - ஏற்புக் கோட்பாட்டினை மிகவும் இலகுபடுத்தி நோக்குவதனால் அது குறிப்பிட்ட நதியின் வருடாந்த வெள்ளப்பெருக்கு, அதற்கீடாக அதனை எதிர்நோக்கி மனிதன் மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகளையுமே குறிப்பிடும். எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத அளவில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற நதிப் பள்ளத்தாக்குகளில் நாகரிகம் தோற்றம் பெறவில்லை. ஆனால் ஒழுங்கான வருடாந்த வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற நதிப்படுக்கைகளிலேயே நாகரிகம் தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்தமையைக் காணலாம். அவ்வாறு புராதன நதிக்கரைகளில் நாகரிகம் தோற்றம் பெற்று வளர்ச்சி கண்ட வரன் முறையில் நோக்கும்பொழுது முதலில் **நைல் நதிப் பள்ளத்தாக்கு நாகரிகமும்,** பின்னர் **சுமேரிய நாகரிகம, சிந்துவெளி நாகரிகம, சீன நாகரிகம, கிரேக்க ரோம நாகரிகங்கள** எனவும் காணலாம். தனித்தனியாக இந்நாகரிகங்கள் ஒவ்வொன்றினதும் தனித்துவமான, பொதுமையானதுமான அம்சங்களை ஆராய்வோம்.

ஆ. நைல் பள்ளத்தாக்கு நாகரிகம்

நதிக்கரையோர நாகரிக வரிசையில் மிகவும் பழமையான அம்சங்களைக் கொண்டு வளர்ச்சி பெற்றிருந்த ஒரு நாகரிகமாக **நைல் நதிப் பள்ளத்தாக்கு நாகரிகம்** அமைந்தது. புராதன நாகரிகங்களுள் எல்லாம் இதுவேதான் அதன் நீண்ட போக்கில் நதியின் இரு புறத்திலும் நாகரிக அம்சங்களை வளர்த்தெடுத் திருந்தது. நைல்நதிப் பள்ளதாக்கின் புவியியல் மற்றும் தரைத்தோற்ற அமைப்பு இவ்வாறான ஒரு நாகரிகம் வளர்ச்சி பெறுவதற்குச் சாதகமாக அமைந்தது. நதியின் அமைதியான போக்கு, உரிய பருவகாலத்தில் மட்டும் நிகழும் வெள்ளப் பெருக்கு, அவ்வெள்ளப் பெருக்கினால் கொண்டுவரப்பட்டு, பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் படிய விடப்படும் வளமான வண்டல்மண் என்பன நாகரிக வளர்ச்சிக்குரிய சாதக நிலைகளாக அமைந்தன. **"எகிப்தின் தெய்வம்"** என்று அம்மக்களால் அன்புடன் அழைக்கப்படும் அளவிற்கு எகிப்தின் வாழ்வின் உயிரோட்டமாக நைல் அமைந்தது. அவ்வாறான ஓர் உயிரோட்டமான சூழல் ஏற்படுவதற்குரிய ஒரு காரணியாக **சகாராப் பாலைவனம** அமைந்துள்ளது எனலாம். நைல்நதிக்கு மேற்குத் திசையில் அமைந்து காணப்படும் **சகாராப் பாலைவனத்தின் படர்ச்சியே** எகிப்திய மக்கள் எதிர்நோக்கி யிருந்த உண்மையான சவாலாகும். அதனை எதிர்கொண்டு வெற்றிகரமாக, தமது அறைகூவலாக நைல்நதியின் துணையுடன் அம்மக்கள் தமது வாழ்வினை உயிரோட்டமுடையதாக மாற்றியிருந்தார்கள். இதுவே நைல் நதிப் பள்ளத்தாக்கு நாகரிகமாகப் பரிணமித்தது.

நாகரிகத்தைப் பற்றிய கண்டுபிடிப்பு

இந்நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்ட வரலாறானது மிகவும் சுவையானது. 1798ம் ஆண்டில் **பிரான்சிப் புரட்சியின் தந்தையான நெப்போலியன** எகிப்து மீது படையெடுத்துச் சென்றபோதே இந்நாகரிகத்தின் சுவடுகள் கண்டுபிடிக்கப்பெற்றன. எகிப்துக்குச் சென்ற நெப்போலியனுடைய படைவீரர்களுடன் பிரான்சினைச் சேர்ந்த **சம்போலியன்** (Champolian) என்பவரே நதியின் கழிமுகப் பரப்பில் **ரோசெட்டா** (Rosetta) என்ற இடத்தில் **ஒரு சாசனப் பதிவினைக** கண்டெடுத்தார். அச்சாசனப் பதிவானது மூன்று வரி வடிவங்களில் பொறிக்கப்பட்டிருந்தது, **கிரேக்கம், கொப்டிக** (Coptic) **எகிப்திய சித்திர எழுத்து** (Pictographic) என்பவையே அவையாகும். இவற்றில் நன்கு பரிட்ச்சியப்பட்ட எழுத்தான கிரேக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு ஏனைய வரிவடித்திலிருந்த செய்திகள் **சம்போலியனால** 1922 இல் வாசித்தறியப்பட்டது. இதன் விளைவாக எகிப்திய நாகரிக வரலாறு வெளியுலகிற்கு பரவுவதற்குக் காரணமாயிற்று. **இம்மும்மொழிக் கல்வெட்டே** இன்று எகிப்திய நாகரிகத்தின் **திறவுகோல்** எனவும் கொள்ளப்படுகின்றது.

1882 ஆம் ஆண்டில் **சேர் விலிண்டேஸ் பெற்றி** (Sir. Flinders Petrie) என்பவர் எகிப்தியப் பிராந்தியத்திற்கு அகழ்வாய்வுத் தலைவராக நியமிக்கப்

பெற்று அனுப்பப்பட்டார். 1942 ஆம் ஆண்டுவரை எகிப்தில் தங்கியிருந்து, எகிப்திய நாகரிகத்தின் முழுமையான அம்சங்களை எல்லாம் அகழ்ந்து, ஆய்வு செய்தார். பல பிரமிட்டுக்களைக் கண்டுபிடித்து அகழ்வாய்வு செய்தார். எகிப்திய மக்கள் பயன்படுத்தியிருந்த உயர்ந்தரக மட்பாண்டங்களை எல்லாம் அகழ்வாய்வின் அடிப்படையில் வெளிக்கொணர்ந்தது மட்டுமல்லாமல் அவற்றினை வகைப்படுத்தியும் அவற்றின்மீது பூசப்பட்டிருந்த வர்ண ஓவியங்களைப் பிரதி செய்தும் ஆராய்ந்தார். பிரமிட்டுக்களில் வைக்கப்பட்டிருந்த தேக்கமரத்தினாலான மரத் தளபாடக் கருவூலங்களின் சிறப்பியல்புகளையும் வெளிக்கொணர்ந்தார். **மேல் நதியின** (Upper Nile) பள்ளத்தாக்குப் பரப்பில் பல தேவாலயங்களைக் கண்டு பிடித்து, அந்நாகரிகத்துடனான அவற்றின் தொடர்புகளை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தினார். இவ்வாறு **சேர் விலிண்டேர்ஸ் பெற்றியினுடைய** 60 ஆண்டுகால அகழ்வாய்வின் பெறுபேறாக எகிப்திய நாகரிகத்தின் முழுமையான அம்சங்கள் வெளிக்கொணரப்பட்டன.

தொடர்ந்தும் நைல்நதிப் பள்ளத்தாக்கில் அகழ்வாய்வுகள் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. **ஸ்பென்சர்** என்பவர் இப்பொழுது எகிப்திய சவ அடக்க முறைகளைப் பற்றி விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து தனது புதிய முடிவுகளை **Death in Ancient Egypt** என்ற நூலினூடாக வெளிப்படுத்தி உள்ளார். மிகவும் அண்மையில் நைல்நதியின் கழிமுகப் பரப்பில் நிலத்திற்குக்கீழ் சுமார் 18அடி ஆழத்தில் தனிப்பாறைப் பரப்பினைக் குடைந்து, பாதுகாக்கப்பட்டு வைக்கப் பட்டிருந்த **ஒரு பெரிய படகு** (Boat) கண்டு பிடிக்கப்பட்டு வெளிக்கொணரப் பட்டுள்ளது. **100 அடி நீளமான** இப்படகினை எகிப்திய மக்கள் தமது உயிரோட்டமான வாழ்க்கையுடன் இணைத்து வழிபட்டிருந்தனர். **ஓஸ்றிஸ்(Osiris)** என்ற அவர்களது **பெண் கடவுளாரினால** எகிப்தில் ஒருவர் இறந்ததின் பின்னர் அவரது ஆன்மாவினை அப்படகில் ஏற்றிச் செல்வதாக அம்மக்களால் நம்பப்பட்டது. அதனாலேயே **எகிப்திய நாகரிகத்தில் படகு வழிபாட்டுச் சின்னமாக** வளர்ச்சி பெற்றிருந்தது. கண்டுபிடிக்கப்பட்டிருந்த அப்படகு வாயிலாக எகிப்திய நாகரிகத்தின் காலவரையறையானது சுமேரிய நாகரிகத்திலும் பார்க்க முற்பட்ட நிலையை அடைந்துள்ளது. அந்த வகையில் உலகின் **மூத்த நாகரிகம** என்ற நிலையையும் எகிப்திய நாகரிகம் பெற்றுக்கொண்டது.

நைல் நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் காலம்

நைல் நதிப் பள்ளத்தாக்கு மக்களின் நாகரிக வாழ்வு ஆரம்பமான கால நிர்ணயம் தொடர்பாக ஒரே கருத்து நிலவவில்லை. அம்மக்கள் மத்தியில் நிலவும் மரபுகள் அங்கு **மெனஸ் (menes)** என்ற மன்னனே மேல் எகிப்தினையும் கீழ் எகிப்தினையும் ஒன்றிணைத்து முதல்முதலில் பேரரசு ஒன்றினை உருவாக்கி, வம்ச ஆட்சிமுறையைத் தொடக்கி வைத்தான் எனக் குறிப்பிடுகின்றன. 31 வம்சங்களைச் சேர்ந்த மன்னர்கள் கி.மு.3100 தொடக்கம் கி.மு.332 வரையுள்ள காலப் பகுதியில் நாகரிக வாழ்வினை அரசமுறையாகச் செலுத்தியிருந்தனர். கி.மு.280 ஆம் ஆண்டில் எகிப்தில் வாழ்ந்த வரலாற்றாசிரியரான **மணிதோ (manetho)** என்பவரே எகிப்திய நாகரிக வரலாற்றினை 31 வம்சங்களாக வகுத்து, முதன்முதலில் வலாற்றினை எழுதியவர் ஆவர்.

ஆனாலும், எகிப்திலே நாகரிக வாழ்வுக்கான முதல் குடியிருப்புக்கள் கி.மு. 4500 ஆம் ஆண்டுக்கும் கி.மு. 4000 ஆம் ஆண்டுக்குமிடையே ஏற்பட்டிருந்ததனை தொல்லியல் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. மிக அண்மையில் எகிப்திலே மேற்கொள்ளப்பட்ட புதிய கண்டுபிடிப்பு ஒன்றுடன் அந்நாகரிக வரலாற்றின் காலப்பகுதியானது கி.மு.5000 ஆண்டு என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே உலகின் புராதன ஆற்றுப் பள்ளத்தாக்கு நாகரிகங்களின் வரிசையில் இன்று மூத்த நாகரிகமாக விளங்குவது நைல்நதிப் பள்ளத்தாக்கு நாகரிகமே. அவ்வகையில் எகிப்திய மக்களுடைய அறிவியல்துறைச் சாதனைகள் யாவும் முதற் கண்டுபிடிப்புக்கள் என்ற நிலையைப் பெற்றுள்ளன.

நைல்நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் பிரதான இயல்புகள்

உலகில் மூத்த நாகரிகமாக விளங்கும் எகிப்திய நாகரிகமானது நைல்நதிப் படுக்கையின் இருமருங்கிலும் பல நகரங்களைக் கொண்டு வளர்ச்சி பெற்றிருந்தது. **கீஸா, மெம்பிஸ், சாகுரா, அமர்ணா, தீப்ஸ்** என்பன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களாகும். இவற்றுள் **மெம்பிஸ்** என்பது தொடக்கத்தில் தலைநகராகவும் பின்னர் **தீப்ஸ்** அந்நிலையில் இருந்ததாகவும் கொள்ளலாம். மேல் எகிப்தில் காணப்பட்ட நகரங்களில் எகிப்திய தெய்வங்களுக்குரிய கோவில் களையும் காணலாம். இது எகிப்திய நாகரிகத்தின் சிறப்பான ஓர் இயல்பாகும். இம்மக்கள் தாம் வணங்கிய தெய்வங்கட்கு உயர்ந்த ஒரு நிலையைக் கொடுத்திருந்தனர் என்பதற்குச் சிறந்த சான்று இதுவாகும்.

நைல்நதிப் பள்ளத்தாக்கு வாழ்மக்கள் கட்டிடக் கலையில் ஈட்டியிருந்த சாதனையானது வியக்கத்தக்கதாகவுள்ளது. ஆழ்ந்த சமயப் பற்றினூடே விஞ்ஞானத்துறையில் ஈட்டிய சாதனைக்கு அவர்களது இக்கட்டிடப் பொறிமுறையியல் சான்றாகவுள்ளது. பிரமிட்டுக்களின் அமைப்பானது அவர்களது ஆழ்ந்த சமயப் பற்றினையும், நுண்ணிய அறிவியல் ஆற்றலினையும் ஒரே முறையில் பிரதிபலித்து நிற்கின்றது. இப்பிரமிட்டுக்களைக் கட்டிய காலப்பகுதியை **பழைய பேரரசுக்காலம்** (Old Kingdom) எனக் குறிப்பிடுவர். இக்காலத்தினை **பிரமிடுகளின் காலம்** (pyramid Age) எனவும் குறிப்பிடுவர். நான்காம், ஐந்தாம், ஆறாம் வம்சங்கள் ஆட்சிபுரிந்த காலம் **பிரமிட்டுக்கள்** கட்டப்பட்ட காலப் பகுதியாகும். எகிப்திய வரலாற்றில் கி.மு. 2613 தொடக்கம் கி.மு. 2118 வரையுள்ள காலப்பகுதியில் மிகப் பிரமாண்டமாக இப்பிரமிட்டுக்கள் கட்டப்பட்டன. (இப்பிரமிட்டுக்களை ஒத்தவகையில் இலங்கையில் கி.மு.3ஆம் நூற்றாண்டு களிலிருந்து **மிகப்பிரமாண்டமான ஸ்தூபிகள** கட்டப்பட்டிருந்தன என்பதும் இங்கு நினைவுறுத்திக் கொள்ளத்தக்கது.)

இப்பிரமிட்டுக்களின் இயல்புகள் நோக்கத்தக்கவை. இருவகையான பிரமிட்டுக்கள் அமைக்கப்பட்டன. படிமுறையில் அமைக்கப்பட்ட பிரமிட்டுக்கள் (Steped pyramid) முக்கோணப் பிரமிட்டுக்கள் (Triangular pyramid) என்பன அவையாகும். எகிப்தில் அமைக்கப்பட்ட பிரமிட்டுக்களில் மிகப் பிரமாண்டமான

தோற்றப்பாட்டினைக் கொண்டு விளங்குவது **க்கூவ்வூ** (Khufu) என்பதாகும். **கீஸா** என்ற இடத்தில் (நகரத்தில்) கி.மு.2600 ஆம் ஆண்டில் இது கட்டிமுடிக்கப் பட்டது. **இதன் அடித்தளப் பரப்பு 13 ஏக்கராகும். உயரம் 500 அடிகளாகும். இப்பிரமிட்டானது 200 லட்சம் கற்களினால் கட்டப்பட்டுள்ளது. என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்லினதும் நிறையானது 02 அந்தர் நிறையாகும். உலக ஏழு அதிசயங்களுள் இதுவும் ஒன்றாகும். 200000 அடிமைகள் 20 வருட காலமாக 200 லட்சம் கற்களைக் கொண்டு அமைத்த இப்படிக்கட்டுப் பிரமிட்டானது எகிப்திய மக்களின் கட்டிடப் பொறிமுறையின் உச்சமான சாதனையாகும்.**

எகிப்திய மக்கள் பிரமிட்டுக்களை அமைத்ததன் அடிப்படை அவர்கள் கொண்டிருந்த ஆழ்ந்த சமயப் பற்றுதலாகும். அதாவது உடலில் இருந்து உயிர் அல்லது ஆன்மா பிரிந்ததன் பின்னர் அது வானவெளியில் சிறிது காலம் சஞ்சரித்ததன் பின்னர் மீண்டும் இன்னொரு மனித உடலுக்குள் சென்று நிலையாக வாழ்ந்து வந்தது என நம்பப்பட்டது. இதனால் மக்கள் இறந்தோரது உடலைப் பாதுகாக்க முற்பட்டனர். அதாவது மனித உடல்களைத் தைலமிட்டு, மருந்துசாத்திக் கெடாமல் வைத்துப் பாதுகாக்க முற்பட்டனர். இவை மம்மிக்கள் எனப்பட்டன. மம்மிக்கள் பிரமிட்டுக்களின் உள்ளே தேக்க மரத்தினாலான மரப்பெட்டிகளுள் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. பிரமிட்டுக்களின் பாதுகாப்பினுள் அம்மனித உடல்கள் மம்மிக்களாக வாழ்ந்து கொண்டிருப்பதாக கருதப்பட்டதனால் பிரமிட்டுக்களின் கலை அடிப்படையிலான உயர்ந்த தொழில்நுட்பவியல் சாதனையை நிகழ்த்துவதற்குக் காரணமாயிற்று.

எகிப்தியரின் கட்டிடக்கலை வரலாற்றின் மற்றுமொரு முக்கியமான சாதனை **துட்டன்காமன** கல்லறையும் **பிரமிட்டும்** கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வாகும். 1922ஆம் ஆண்டில் **காவாட் காட்டார்** என்பவரால் **துட்டன்காமன் கல்லறை** கண்டுபிடிக்கப்பட்டமையைத் தொடர்ந்து நைல்நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தில் பல புதிய அம்சங்கள் வெளியுலகிற்குத் தெரியவந்தன. எகிப்திலே ஆட்சி செய்த மிகவும் இளம் வயதுடைய **பரோவா** ஆன துட்டன்காமனின் வடிவத்திலும் நிறையிலும் தனித்த **தங்கத்தினாலான** அவனது **பிரதிமை** அக்கல்லறையில் இருந்து வெளிப்படுத்தப்பட்டது. அதுமாத்திரமன்றி அவனால் செல்லமாக வளர்க்கப்பட்டிருந்த நாய், பறவைகள் ஆகியவற்றின் தங்கப் பிரதிமைகளும் வெளிக்கொணரப்பட்டன. மொத்தமாக **70 தொன் நிறையினையுடைய தங்க வேலைப்பாடுகள** அக்கல்லறைக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. எனவே பிரமிட்டுக்கள் எகிப்திய பண்பாட்டுக் கருவூலங்களைப் பாதுகாத்தும், ஒரு சிறப்பு நாகரிகத்தின் சின்னங்களைச் சிதைவுறாதபடிக்கும், பிறரால் அவை எடுத்துச்செல்ல முடியாதபடிக்கும் பாதுகாத்த பெருமை பிரமிட்டுக்களையே சாரும்.

சிற்பக் கலைத்துறையைப் பொறுத்தமட்டிலும் எகிப்திய மக்கள் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்திய பொழுதிலும், பெருமளவிலான கற்சிற்பங்களின்

உருவ அமைதியானது உருண்டு திரண்ட கைகள், பாதங்களின் மிகவும் இறுக்கமான நிலைபோன்ற இயல்புகளை வெளிப்படுத்தி நிற்கின்றது. எகிப்திய மன்னர்களுடையதும் பட்டத்து அரசிகளதும் சிற்பங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

ஸ்பிங்ஸ் (Sphings) எனக் குறிப்பிடப்படும் மிகப் பிரமாண்டமான சிற்ப உருவமானது எகிப்திய நாகரிகத்தின் குறியீடாக விளங்குவதனைக் காணலாம். **கீஸா** என்ற இடத்தில் காணப்படும் ஸ்பிங்ஸ் உருவ வரிசையானது எகிப்திய நாகரித்தின் சிற்பக்கலை வனப்பினை வெளிப்படுத்தி நிற்கின்றது. சிங்க உடல் அமைப்பில் மனிதத்தலையையுடைய தோற்றத்தினைக் கொண்ட இக்கூறானது சிற்பக்கலையில் தனித்துவமான கலைவடிவமாக மிளிர்கின்றது. சில பிரமிட்டுக் களின் முற்பக்கத்திலும்(Façade) இத்தகைய **ஸ்பிங்ஸ்** போன்ற பிரமாண்டமான உருவங்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையையும் காணலாம். **(சிங்கத்தினையொத்த அவ்வுருவங்கள் அரண்மனைக்குறியீடுகளாகவும், ஸத்திரிய மரபுகளுக்கு உரியனவாகவும் திகழ்ந்ததை இலங்கையில் சிகிரியாவிலும் காணமுடியும்.)**

நைல்நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் சிறப்பியல்புகளும் அம்மக்களது ஓவியக் கலைப்பணிகளும் மிகவும் பிரதானமானவையாகக் காணப்படுகின்றன. சிற்பக்கலையைப் போன்றல்லாது அம்மக்கள் வரைந்த ஓவியக்கலை யாவும் **அசையும் நிலையிலும**, மிகவும் மெருகூட்டப்பட்டனவாகவும் மிளிர்கின்றன. புராதன நாகரிகப் பரப்பின் முதலாவது ஓவியம் என்ற வகையில் எகிப்திய மக்களின் **ஓவியக்கலைப்பாணி** சிறப்பிடம் பெறுகின்றது.

எகிப்திய மக்களின் ஓவியக்கலைப் பராம்பரியத்தினை அவர்களது ஈமத்தாழிகளிலிருந்தும் கண்டுகொள்ளமுடிகின்றது. இம்மக்கள் தமது ஓவிய மரபில் சிவப்பு, கறுப்பு, நீலம், பச்சை ஆகிய வர்ணங்களை மிகக் கூடுதலாக உபயோகித்துள்ளனர். விலைமதிப்புமிக்க தேக்க மரத்தினாலான ஈமப் பெட்டிகளின் உள்ளும், புறமும் தீட்டப்பட்ட எகிப்திய பெண் கடவுள்களுடைய உருவங்கள் நோக்கத்தக்கன. **நட்** (Nut) என அழைக்கப்படும் பெண் கடவுளுடைய மூவர்ணத் தோற்றம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. சிதைவுறாது பாதுகாக்கப்பட்ட பபிரஸ் தாள்களிலிருந்து எகிப்திய ஓவியக்கலை மரபின் அசையும் தன்மை, பரோவாக்களின் உருவங்கள், எகிப்தியரின் வடிவங்கள், தலை முகமூடியணிந்து வைத்தியம் செய்யும் காட்சிகள், மம்மிக்களைச் செய்யும்முறை போன்றவற்றை அறியக்கூடியதாகவுள்ளது. துட்டன்காமன் கல்லறையிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட ஓவியக்கலைக் கருவூலங்கள் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. எனவே எகிப்திய மக்களின் கலை ரசனையையும், உயிரோட்டமான வாழ்க்கை யோட்டத்தினையும் அவர்களது ஓவிய மரபுகளில் இருந்தே கண்டு கொள்ள முடிகின்றது.

மதமும் வரிவடிவமும்

நைல்நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் சிறப்பியல்புகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக விளங்கிய அம்சங்கள் என்றால் அவை அம்மக்கள் கடைப் பிடித்திருந்த மதமும், அதனோடு இணைந்த வரிவடிவமுமேயாகும். மதத் துறையைப் பொறுத்தமட்டில் பல தெய்வ வழிபாட்டுமுறை அங்கு நீண்டகாலமாக நிலைபெற்றிருந்தது. இயற்கையில் காண்கின்ற ஒவ்வொரு சக்திக்கும் ஒவ்வொரு கடவுளரை உருவாக்கி வழிபடுகின்ற முறை காணப்பட்டிருந்தது. எகிப்தியருடைய கடவுளர் கோட்பாட்டின்படி **Ra** என்பவரே பிரதான கடவுளராக வணங்கப் பட்டவராவர் **(Ra)** என்ற பிரதான ஆண் கடவுளருடன் சேர்ந்து **(Ah)** என்ற பெண் கடவுளர் ஏனைய கடவுளர்களைத் தோற்றுவித்திருந்தார். இந்து சமயத்தில் ஒரு தத்துவமான புருஷ - பிரக்கிருதிக் கோட்பாட்டினை இது நினைவூட்டுகின்றது. காற்றின் தெய்வம் "ஹா" எனவும், ஈரத்தின் தெய்வமான **ரௌநட்** என்பதும் சூரியக் கடவுளான **அமொன்-ரா** வினால் உருவாக்கப்பட்டது என்பர். **கேல், நட், இஸிஸ்** என்ற பெண் கடவுளர் முறையே நிலம், ஆகாயம், இறப்பு என்பனவற்றைக் குறித்து நின்றனர். **ஒசுரிஸ்** கடவுளரே **நைல்நதியின் தேவதை** என எகிப்தியரால் கொள்ளப்பட்டது. இது ஒரு ஆண் தெய்வமாகும். **ஒசுரிஸ்** என்ற நீர்க்கடவுளருடைய தோற்றம் தொடர்பாக எகிப்தில் ஓர் ஐதீகம் நிலவு கின்றது. ஒசுரிஸ் ஆரம்பத்தில் **செத்** என்ற கடவுளரின் சகோதரியினால் கொலை செய்யப்பட்டதாகவும், பின்பு **இலிஸ்** (ஒசுரிஸ் மனைவி) வெட்டப்பட்ட உடற்துண்டுகளை ஒன்றாக்கியதால் **ஒசுரிஸ** மீண்டும் சாவாத நிலையை அடைந்ததென்றும் அக்கதை நிலவுகின்றது. எகிப்திய மக்களது மனதில் இச்சாவாத நிலை பற்றிய கருத்து வலுவாக நிலைத்திருந்தது. இச்சாவாத நிலையை **இஸிஸ்** என்ற பெண் கடவுளரே ஏற்படுத்துகின்றார் என்ற கருத்து எகிப்திய மக்களது வாழ்க்கைப் படகுடன் இணைந்ததாகவுள்ளது. இதனாலேயே பெரும்பாலான ஓவியங்களில் படகில் **இஸிஸ்** என்ற பெண்கடவுளர் பிரயாணம் செய்வது போல் தீட்டப்பட்டுள்ளது. ஓர் உடலில் இருந்து ஆன்மா வெளியேறி சிறிதுகாலம் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் என எகிப்தியரால் நம்பப்பட்டது. அந்நம்பிக்கையின் அடிப்படையில் ஆன்மா எடுத்துச்செல்லப்படும் நிலை "கா" (KA)எனவும் திரும்பவும் அந்த ஆன்மாவினை வேறொரு உடலுக்குள் புகுத்திய நிலையினை பா (Ba) எனவும் எகிப்திய மக்கள் அழைத்தனர். எனவே அம்மக் களின் நம்பிக்கைகளில் **"கூடு விட்டுக் கூடு பாய்கின்ற"** ஓரம்சமும் இடம் பெற்றிருந்தது என்பது புலனாகின்றது. இதனால்தான் உடல்களை அழியாது அல்லது அழிக்காது பாதுகாக்கின்ற முறையான **மம்மி** செய்யும் நுட்பம் ஆரம்பிக்கப்பட்டது. மம்மிகளுக்குள் உடல்கள் பழுதடையாது பல்லாயிரக் கணக்கான காலங்களுக்கு பாதுகாப்பாக உள்ளன.

நைல்நதிப் பள்ளத்தாக்கு மக்களின் சமய வாழ்வில் ஒரு பெரிய மாறுதலினை அதன் **18வது வம்ச ஆட்சியின** தொடக்கத்துடன் (புதிய வம்சத்தினரின் ஆட்சியின் தொடக்கத்துடன்) காணமுடிந்தது. அதாவது புதிய வம்ச காலத்தில்

ஆட்சிசெய்த **அக்நாட்டன்** (Akhenaten) என்பவன் எகிப்தில் இதுவரை பின்பற்றப்பட்டு வந்த பல தெய்வ வழிபாடுகளை எல்லாம் ஒழித்து ஒரு **தெய்வ வணக்க** முறையைக் கொணர்ந்திருந்தான். அவ்வணக்க முறையானது புதிய தலைநகராக அமைவுபெற்ற **எல்-அமரன** என்ற நகரக் கோவிலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. **அட்டன்** என அழைக்கப்பட்ட **சூரிய** (ஒளிவட்ட) வழிபாடு இதுவாகும். அந்நாட்களிலிருந்து **சூரிய வழிபாடே** எகிப்திய மக்களின் பிரதான சமயச் சின்னமாக அமைந்தது.

இவ்வரலாற்றினை எகிப்திய மக்கள் கோயிற் தூண்களிலும், ஓவியப் படிவங் களிலும் பபிரஸ் தாள்களிலும் எழுதி வைத்தனர். சாவா நிலையை அடையும் வழிமுறைகளைப் பற்றியே அதிகளவிலான எகிப்திய வரி வடிவங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. வரிவடிவத்தினைப் பொறுத்தமட்டில் ஆரம்பத்தில் படவரைகலை முறையே பின்பற்றப்பட்டிருந்தது. பபிரஸ் தாள்களிலும், பிரமிட்டுக்களினுள்ளும் இச்சித்திர எழுத்துமுறையே காணப்பட்டது. சித்திர எழுத்து முறையானது கால ஓட்டத்தில் வளர்ச்சிபெற்றுச் சென்று ஒலிக்குறிப்புடைய வரி வடிவமாக மாற்றம் பெற்றுக்கொண்டது. எனவே உலகின் முதல் கல்வெட்டுப் பதிவுகளை ஆக்கியவர்கள் என்ற வகையில் எகிப்தியர்களது முதற் கண்டுபிடிப்பாக **எழுத்து முறை** அமைந்தமையைக் காணலாம். பபிரஸ் தாள்களில் ஒருவகை மையைப் பாவித்தே இவர்கள் எழுத்துக்களை எழுதினர். இம்மக்களுக்கு முன்னர் உலகில் எந்த இடத்திலும் மையினைப் பாவித்து எழுத்துக்களை வரையும்முறை காணப் பட்டிருக்கவில்லை. எனவே எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் மையின் உபயோகத் தினை முதன்முதலில் கண்டுபிடித்ததன் அடிப்படையில் எகிப்திய மக்கள் சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

எகிப்திய மக்கள் பபிரஸ் தாள்களில் சிறுகதைகள், மந்திர உச்சாடனங்கள், பாடல்கள் போன்ற யாவற்றினையும் வரைந்துள்ளனர். **கப்பலுடைந்த பிரயாணி யின் கதை, பயணக்கதை, இரு சகோதரரின் கதை** என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. **களைத்த மனிதனுக்கும் ஆன்மாவிக்குமிடையான** சம்பாஷணைப் பகுதியும் அவற்றுள் குறிப்பிடத்தக்கது.

கப்பலோட்டுதலும் வர்த்தகமும்

நைல்நதிப் பள்ளத்தாக்கின் நாகரிகத்தின் சிறப்பியல்புகளுள் ஒன்று கப்பல் கட்டும் கலையும், கப்பலோட்டுதலும் ஒருங்கே பின்பற்றியிருந்தமையாகும். அமைதியான - ஆழமான நைல்நதியில் அதன் கழிமுகப் பரப்பில் இருந்து ஏறத்தாழ **அஸ்வான் அணைக்கட்டு வரைக்குமாவது** கப்பல் ஓட்டும் கலை நடாத்தப்பட்டது. பபிரஸ் தாளினால் உருவாக்கப்பட்ட பாய்களைக் கொண்டு கப்பல் ஓட்டப்பட்டது. அதன் பின்னணியில் வர்த்தகப் பொருட்கள் ஏற்றியிறக்கப் பட்டன. சினாய் குடாநாட்டுப் பரப்பிலிருந்து நைல்நதியூடாக செம்பு, தங்கம், வெள்ளி விலையுயர்ந்த கற்கள் என்பன எடுத்து வரப்பட்டன. தேக்க மரப்பொருட்கள் மத்தியதரைக் கடற்பிராந்தியத்திலிருந்து கப்பலில் ஏற்றிக்கொண்டு

வரப்பட்டன. இவையெல்லாம் பிரமிட்டுக்களின் உள்ளே வைத்துப் பாதுகாக்கப் பட்ட அரச செல்வங்களை உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டிருந்தன. விலை மதிக்கமுடியாத தேக்க மரத்தினாலான அரண்மனைத் தளபாடங்களை **துட்டன்காமன் கல்லறையிலிருந்து** மீட்கமுடிந்தது. எனவே கப்பலோட்டும் கலையை உலகில் நாகரிக வளர்ச்சி கண்ட முதல் சமூகத்தினர் என்ற வகையில் எகிப்திய மக்கள் கண்டறிந்திருந்தார்கள். இதனால் எகிப்திய நாகரிக அம்சங்கள் மற்றைய பிராந்தியங்களிலும் பரவுவதற்கு வழி செய்யப்பட்டது.

எகிப்தியர் தமது வர்த்தக நடவடிக்கைகளை மத்திய ஆசியா, தென் ஆசியப் பிரதேசங்கள் (தென் ஆசியாவின் மேற்குக் கடற்கரையோரங்கள், மன்னார் வளைகுடா உட்பட) சுமேரியா போன்ற பிரதேசங்களுடன் நடாத்தியிருந்தனர். இவர்களுடைய பாய்மரக் கப்பல்களில் வல்லூறும் பாம்புமே பிரதான சின்னங் களாக விளங்கின. இவை இரண்டு சின்னங்களும் முறையே **தெற்கு - வடக்கு அதாவது மேல், கீழ் எகிப்திய அரச சின்னங்களாகும்**. எகிப்தியரின் வட எல்லையில் அதாவது நைல்நதியின் கழிமுகப் பரப்பில் **நாக சின்னமே அரச சின்னமாக** இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இலங்கையின் வடபகுதி **நகதிவ** அல்லது **'நாகநாடு'** என்று அழைக்கப்பட்டு வருவதும் வழிபாட்டில் **நாகமரபு** இருந்துவருவதும் நோக்கத்தக்கது).

விவசாயமும் கலண்டர் முறையும்

நைல்நதிப் பள்ளத்தாக்கு நாகரிக மக்களின் வாழ்க்கையின் அடிப்படையை விவசாய உற்பத்திப் பொருட்களே ஈட்டிக் கொடுத்தன. நைல்நதியின் அமைதியான வெள்ளப்பெருக்குக் காலங்களில் அதன் பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் கொண்டு வந்து படியவிடப்பட்ட வளமான வண்டல் மண்ணே விவசாயத்தின் உயிர்நாடியாகத் திகழ்ந்தது. எனவே விவசாய உற்பத்திமுறை மூலம் **மிகை உற்பத்தி** பெறப்பட்டது. கோதுமை, வாற்கோதுமை என்பன பிரதான தானியப் பயிர்களாக விளங்கின. ஏர் மூலம் உழுது பயிரிடும் முறை இங்கு காணப்பட்டது. கற்சித்திரங்களிலும் ஓவியப் படிமங்களிலும் எருதுகள் ஏரினை இழுக்கின்ற காட்சி வரையப்பட்டுள்ளது. விவசாய முயற்சிகளான விதைத்தல், அறுவடை செய்தல், சூடுவைத்தல் - மிதித்தல், வண்டிலில் ஏற்றிச்செல்லுதல் போன்றன காட்சிகளாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு விவசாய வேளாண்மை வளர்ச்சி பெறுவதற்கு அடிப்படையாகவிருந்த காரணி **சூரிய முறையிலான கலண்டர் முறையாகும்** (Solar Calender System). இம்முறையின் அடிப்படையில் 365 நாட் களைக் கொண்ட காலப்பகுதியே ஒரு வருடமாகும் என்பதாம். நைல் நதியின் போக்கிலிருந்தே சூரிய முறையில் அமைந்த இக்கலண்டர் உருவாக்கப்பட்டது. **இக்கண்டுபிடிப்பானது எகிப்தில் மேலதிக உற்பத்திமுறை வளர்ச்சி பெறுவதற்கு காரணமாகியது. இது விசேட தொழிற்துறைகளில் ஈடுபட்டிருந்த தொழில் விற்பன்னர்களுக்கு உணவூட்டப்படுவதற்குக் காரண மாயிற்று. அதன் அடிப்படையிலேயே எகிப்திய கலைகளும், தொழில் நுட்பமும், அறிவியலும் அங்கு வளர்ச்சிபெறக் காரணமாயிற்று.**

எகிப்தியரின் அறிவியல்துறைச் சாதனைகள்

வைத்தியத்துறையில் எகிப்திய மக்கள் ஈட்டிக்கொண்ட சாதனையானது வியக்கத்தக்கதாகவுள்ளது. நோய்களுக்கு **ரண சிகிச்சை** மூலம் வைத்தியம் செய்தனர். சிலவேளைகளில் **தைலங்கள் தயாரிக்கப்பட்டு** அவற்றின்மூலம் நோய் தீர்க்கப்பட்டது. உடலில் இருந்து உயிர் பிரிந்ததன் பின்னர் அதனைப் பாதுகாப்பதற்காக மார்பினைப் பிளந்து உடலின் உள்ளே மருந்து சாத்தி, **தைலங்களை இட்டு,** அவ்வுடல் கெட்டுப்போகாதபடி பாதுகாத்தனர். பின்னர் உடலினைச் சுற்றி ஒருவகையான துணியினால் வரித்து மம்மிக்களாக ஆக்கினர். இவ்வைத்தியக் கிரியைகளுக்காக பல வகையான வைத்திய உபகரணங்களை ஆக்கியும் கொண்டனர். **ரணசிகிச்சை** நடாத்தப்படும்பொழுது வைத்தியர்கள் முகத்தில் பல்வேறு வகையான **முகமூடிகளை** அணிந்துகொண்டனர்.

உலகின் முதல் முதலாக **நெம்புகோலின** தத்துவத்தினைக் கண்டுபிடித்த மக்கள் எகிப்தியரே. இன்றைய கட்டிடக் கலையியலில் நெம்புகோலின் உபயோகமானது அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. அதி உயரமான பிரமிட்டுக்களின் உச்சிக்கு நெம்புகோலின் உதவியுடனேயே மிகப்பெரும் கற்களைக் கொண்டுசெல்ல எகிப்தியர் கற்றிருந்தனர். அதுமாத்திரமின்றி இப்பெரும் கற்களை வெளியில் இருந்தே கொண்டு வந்திருந்தனர் என்பதும் அவதானிக்கப்பட வேண்டும்.

எகிப்தியரது பொழுதுபோக்கு இசை, நடனம் என்பன

பரோவாக்களின் அரண்மனைகளில் நடனமும் இசையும் பொழுதுபோக்கு அம்சமாக இடம்பெற்றிருந்தமையினை வர்ண ஓவியம் எடுத்துக்காட்டி நிற்கின்றது. அரண்மனைகளில் நடனமாதர் இடுப்புக்கு மேல் ஆடைகள் ஏதும் அணிகின்ற வழக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. பரோவாக்கள் மது ஜாடிகளில் மதுவினை அருந்திய வண்ணம் இவ்விசை, நடனக் காட்சிகளைக் கண்டுகளிக்கின்ற மரபு ஓவியங்களில் அவ்வாறே தத்ரூபமாக்கப்பட்டுள்ளது. **யாழ்** போன்ற தந்திகளை உடைய இசைக் கருவிகளில் இருந்து இன்னிசை எழுப்பப்பட்டது. முரசுகள் தாள வாத்தியத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. (இசைக்கருவியான யாழுக்கும் இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணத்திற்கும் இருக்கும் உறவினைப்போன்று எகிப்திற்கும் நைனார்தீவிற்குமிடையே பண்பாட்டுத் தொடர்பு காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. **நாகமும் கருடனும்** எகிப்தினைப் போன்று நைனார்தீவிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.)

சமூக அமைப்பு

இறுதியாக நைல்நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தினை வளர்த்தெடுத்த மக்களின் சமூக அமைப்பினை நோக்குவது பொருத்தமாகும். சமூகத்தின் மேல் அமைப்பில் அரசன் அரண்மனைக் கூட்டமாகிய மந்திரி, பிரதானிகள் என்போர்கள் அமைய, அடுத்த நிலையில் வாணிபம் செய்வோர், கலைஞர்கள்

என்போர் உள்ளடங்குகின்றார்கள். மூன்றாவது நிலையில் விவசாய முயற்சிகளில் ஈடுபடும் குடியானவர்களைக் குறிப்பிடலாம். நான்காவது நிலையில் **அடிமைகளே** கூடுதலான எண்ணிக்கையை உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்கள் எவ்விதமான உரிமைகளையும் சலுகைகளையும் கொண்டிருக்கவில்லை. **அடிமைகள் தத்தம் எஜமான்களைத் திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் வாழ்ந்தனர்.** ஏனைய நிலையில் காணப்பட்ட மக்கள் கூட்டத்தினர் உரிமைகளுடனும், சலுகைகளுடனும் வாழ்ந்தனர். ஆனால் உழுது பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயப் பெருங்குடிமக்கள் அரசனது வயல் பரப்புக்களிலேயே தமது கடின உழைப்பினை மேற்கொண்டனர். **அரசன் நாட்டின் செழிப்பின் சின்னமாக கருதப்பட்டான்.** பிரதானிகள் சுகபோக வாழ்க்கையை அனுபவித்திருந்தார்கள்.

சுமேரிய நாகரிகம் அல்லது மெசெப்பட்டோமிய நாகரிகம்

மத்திய ஆசியாவில முதல் தோன்றிய நாகரிகம் என்ற வகையிலேயே சுமேரிய நாகரிகம் சிறப்புற்று விளங்கியது. இந்நாகரிகம் இரண்டு கிளை நதிகளுக்கு இடைப்பட்ட பரப்பில் தோற்றம்பெற்று வளர்ச்சி பெற்றிருந்தது. **யூப்பிரட்டீஸ், ரைகிறிஸ்** என்ற இரு நதிகளுக்கிடைப்பட்ட வளமான வண்டல் சமவெளியில் தோற்றம் பெற்றமையினாலேயே **மெசெப்பட்டேமியா** என்ற பெயரையும் இந்நாகரிகம் பெற்றுக்கொண்டது. (**மெசா** என்பது **இடைப்பட்ட** என்ற பொருள்) ஆசியாவில் தோன்றிய நாகரிகம் என்ற வகையில் அக்கண்டப் பரப்பில் ஒரு முன்னோடியான செல்வாக்கினையும், நாகரிக அம்சங்களையும் மக்கள் மத்தியில் சுமேரிய நாகரிகம் உருவாக்கி இருந்தது. இந்நாகரிகத்தின் பரவலுக்கான வழிகள் தரைமார்க்கமானதும், கடல்வழி சார்ந்ததுமான வர்த்தக மார்க்கங்களுக்கூடாக ஏற்பட்டிருந்தன. இதனாலேயே சமகாலத்தில் உலகின் வேறு பகுதிகளில் வளர்ச்சிபெற்றிருந்த நாகரிக வாழ்வில் சுமேரிய நாகரிகத்தின் சொல்வாக்கு ஏற்படக் காரணமாயிற்று. பெரும்பாலான வரலாற்றறிஞர்கள் சுமேரிய நாகரிகத்திற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்குமிடையிலான வர்த்தகத் தொடர்புகளை எடுத்துக்காட்டுவர்.

சுமேரிய நாகரிகத்தின் பரப்பானது நைல்நதிப் பள்ளத்தாக்குப் பரப்பினைப் போன்று நீண்டு இருக்கவில்லை. ஆனால் மிகவும் அகலமான பரப்பில் நகர அரசுகளின் தோற்றத்துடன் வளர்ச்சிபெற்ற ஒரு நாகரிகமாக உள்ளது. **"ஆசியப் பண்பாட்டின் தொட்டில்"** எனக் குறிப்பிடப்படும் மத்திய ஆசியாவில் தோற்றம் பெற்றமை காரணமாக சுமேரிய நாகரிகம் மிகவும் பரந்த அமைப்பில் செல்வாக்கினை ஏற்படுத்திநின்றது. அதுமாத்திரமின்றி ஏனைய நதிக்கரைப் பள்ளத்தாக்கு நாகரிகங்களுக்கு இல்லாத தனித்துவமான இயல்புகளைச் சுமேரிய நாகரிகத்தில் கண்டுகொள்ள முடிகின்றது. அவற்றில் ஒன்று மெசெப்பட்டோமியப் பரப்பில் **சுமேரிய, அகாடிய, பபிலோனிய, அஜைரிய** நாகரிகங்கள் தொடர்ச்சியாக வளர்ச்சிபெற்று வந்தமையாகும். அவ்வகையில் மெசெப்பட்டோமிய

நாகரிகமானது பல்வேறு இனக்குழுக்களுக்குரிய நாகரிகத் தன்மைகளை ஒருங்கே கொண்டமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நாகரிகத்தைப் பற்றிய கண்டுபிடிப்பு

சுமேரிய நாகரிகத்தின் கண்டுபிடிப்பிற்கும், அந்நாகரிகத்தின் சிறப்பியல்புகளின் வெளிப்பாட்டிற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர் **சேர் வியானார்ட்வூலி** என்ற முதுபெரும் தொல்லிய அறிஞர் ஆவர். இவர் 1926ம் ஆண்டில் மெசெப்பட்டோமிய நாகரிகத்தின் தலைநகராக விளங்கியிருந்த **"ஊர்"** என்னும் நகரத்தில் அகழ்வாய்வில் ஈடுபட்டு அந்நாகரிகத்தைப் பற்றிய அம்சங்களை வெளிக்கொணர்ந்தார். இவருக்கு முன்னரேயே ஊர் நகரத்தினை **ஜே.சீ.கெயிலா** என்பவர் கண்டுபிடித்திருந்தார். இதனைத் தொடர்ந்தே மெசெப்பட்டோமிய நாகரிகத்தின் ஏனைய நகரங்களான **எருது, நிப்பூர், லாகஷ், சிப்பூர், உமா** என்பன கண்டுபிடிக்கப்பட்டன. **களிமண் தகட்டு முத்திரைகளை** அடிப்படையாகக் கொண்டு 1939ம் ஆண்டில் **ஜெக்கப்ஸ்** என்ற வரலாற்றாசிரியர் மெசெப்பட்டோமிய நாகரிகத்தின் நகர அரசுகள் பற்றிய ஒரு தொகுப்பினை மேற்கொண்டிருந்தார். இது இந்நாகரிகத்தினைப் பற்றி விரிவாக அறிந்து கொள்வதற்கு பேருதவியாகவுள்ளது.

மெசெப்பட்டோமிய நாகரிகத்தின் கால எல்லை

இந்நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் கிராமிய விவசாயக் குடியிருப்புக் களையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இக்குடியிருப்புக்களின் தோற்றமானது மத்திய கிழக்கில் கி.மு. 4000 ஆண்டுகட்கு முற்பட்டதாகும். ஆனால் நாகரிக வாழ்வு என்ற முறையில் அங்கு நகரங்களின் தோற்றக் காலத்தினை கி.மு.4000 எனக்கொள்வர். **எருது** என்ற நகரம் மெசெப்பட்டோமியாவில் மிகப்பழமை வாய்ந்ததாகும். இந்நாகரிகத்தின் அடிப்படை அம்சங்கள் அத்தனையும் முதிர்ச்சி பெற்ற காலப்பகுதியாக கி.மு. 3800க்கும் கி.மு. 3200க்கும் இடைப்பட்ட காலம் விளங்கியது எனவும், கி.மு. 1800 வரைக்கும் இந்நாகரிகம் நிலைத்திருந்ததாகவும் எடுத்துக்காட்டப்படுகின்றது. இதற்குப் பின்னர் பாபிலோனிய, அசீரிய, ரோம நாகரிகங்கள் இப்பிராந்தியத்தில் வளர்ச்சிபெற்றுச் சென்றமையையும் காணலாம். **பபிலோனிய** இனத்தவர் சுமேரியரால் தோற்றுவிக்கப்பட்ட நாகரிக அம்சங்களை உலகறியப் பரப்பியவர்களாகக் காணப்பட்டனர்.

மெசெப்பட்டோமிய நாகரிகத்தினை சுமேரியர் தோற்றிவித்தவர்கள் என்ற வகையில் அவர்களது இரண்டுகட்ட வரலாறு முக்கியத்துவம் பெறுகின்றது. ஒன்று **உபயிட்** (Ubaid Cultural Period) **காலம்.** இது கி.மு. 4250க்கும் கி.மு. 3750க்கும் இடைப்பட்ட நிலையில் நகரங்களைத் தோற்றுவித்த காலப்பரப்பாகும். இரண்டு **உருக்காலம** (Uruk period) இது கி.மு. 3750க்கும் கி.மு. 3000க்கும் இடைப்பட்ட காலம் ஆகும். இக்கட்டத்தில் **ஆப்பெழுத்து**முறை கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. **சிகுரோட், செங்கல் அமைப்பு** முதலியவை

உருவாக்கப்பட்ட காலப்பரப்பு இதுவாகும். இரண்டாவது கட்டத்தில் **அக்காடியர்** என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் மெசெப்பட்டோமிய நாகரிகத்தினை கி.மு.2371 தொடக்கம் கி.மு. 2113 வரையுள்ள காலப்பகுதியில் வளர்த்தெடுத்திருந்தனர். இவர்களைத் தொடர்ந்து பபிலோனியர் இந்நாகரிகத்தினை உலகறியப் பரப்பினர். கி.மு. 1590 வரையுள்ள காலப்பகுதியில் **பாபிலோனியர்களது செல்வாக்கு மெசெப்பட்டோமியாவில் நீடித்திருந்தது. கி.மு. 1590 இல் கிறறைற்ஸ் மக்கள் பபிலோனியரை மெசெப்பட்டோமியாவில் வெற்றி கொண்டனர்.** இவ்வெற்றியுடன் மெசெப்பட்டோமிய நாகரிகம் வீழ்ச்சியடைந்தது.

சுமேரிய நாகரிகத்தின் பிரதான இயல்புகள்

சுமேர் என்ற பகுதியில் முதல் குடியேற்றங்களை நகர அமைப்பில் உருவாக்கியவர் என்ற வகையில் சுமேரியர்களது சாதனை அமைவதைக் காணலாம். ஆசியாவில் முதல்முதலாக நகரக் கட்டுமானங்களை அமைத்தவர்கள் சுமேரியர்களே. ஏறத்தாழ **12 நகர அரசுகளை** உருவாக்கியிருந்தனர். அவற்றுள் **ஊர்**(UR), எறெச்(Erech), **லாகாஸ்**(Lagash), **லார்சா**(Larsa) என்பவை பிரதான மானவை. இவற்றுள் UR என்ற நகரமே திரும்பத்திரும்ப தலைநகராக விளங்கி வந்தமையைக் காணமுடிகின்றது. இந்நகர அரசுகள் தமக்கிடையே போர் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தன. நாகரிக உலகில் **போரும் சமாதானமும** தவிர்க்க முடியாதவை என்பதற்கு சுமேரியாவின் அரசியல் அமைப்பு முறைகள் சிறந்த சான்றாகும்.

நகர அரசியல் முறையில் முதன்முதலாக ஆசியாவில் **தெய்வீகவுரிமைக் கோட்பாட்டினை** நிலைநிறுத்தியவர்களாக சுமேரியர்கள் காணப்பட்டனர். கடவுளருக்கும் மக்களுக்குமிடையே **மதகுரு** அல்லது **அரசனான மதகுரு** தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுத்தார். அவ்வடிப்படையில் கடவுளின் பிரதிநிதியாக நின்று **மதகுரு** நகர அரசுகளில் ஆட்சி புரிந்தமையை சுமேரிய நாகரிகத்தில் காணமுடிந்தது.

மதமும் வரிவடிவமும்

சுமேரியரது **நகர அரசியல் அமைப்பு முறையானது**· அவர்களது சாதனைகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இத்தகைய **நகர அரசியல** முறையானது **தெய்வீகக் கோட்பாட்டின** அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். இங்கு கடவுளால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் மக்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பினை ஏற்றிருந்தார் எனப் பார்த்தோம். அப்பிரதிநிதியை **மதகுரு** எனக் குறிப்பிடலாம். **சிகுராட்** என அழைக்கப்படும் கோயிலே மதகுருவின் கரும பீடமாகக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு நகரத்திலும் ஒன்றோ/அதற்கு மேற்பட்ட **சிகுராட்** கட்டப்பட்டிருந்தது. மக்கள் வாழும் பகுதியிலிருந்து மிகவும் உயர்ந்த செயற்கை மலைக்குன்றுகளிலேயே சிகுராட் கோயில்கள் கட்டப்பட்டிருந்தன. அவ்வாறு உயர்ந்த பிராந்தியங்களில் கட்டப்பட்ட கோயில்களில் உறையும்

கடவுள் மக்களை கீழே நோக்கி அருள்புரிக்னறார், பாதுகாக்கின்றார் என நம்பப்படுகின்றது. சுமேரியரது சமய நம்பிக்கையைப் பொறுத்தமட்டில் மனிதப் பிறப்பின் நோக்கம் கடவுளுக்கு சேவை புரிவதாகக் கொள்ளப்பட்டது. "**மனிதன் கடவுளரின் அடிமை**" என்ற கருத்து அங்கு மிகவும் இறுக்கமாக நிலவியது. ஆதனால் கடவுளின் பிரதிநிதியான மதகுருவின் ஆணைக்கு நகரமக்கள் எல்லோரும் கட்டுப்பட்டனர். மதகுரு விதித்த கோட்பாடுகளுக்கும் தண்டனை களுக்கும் மக்கள் ஆதரவு அளித்தனர். மக்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கின்ற தெய்வ அனுக்கிரகம் மதகுருவின் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையிலேயே கிடைக்கின்றது என நம்பப்பட்டது.

சுமேரியர் **ஆண் தெய்வங்களுக்கே** முக்கியத்துவத்தினைக் கொடுத்திருந் தனர். **சிகுராட்** என்ற கோவில்களில் வதியும் தெய்வங்கள் **ஆண் தெய்வங்கள** என நம்பப்பட்டது. ஒவ்வொரு நகரமும் ஒவ்வொரு ஆண் தெய்வத்தினால் பாதுகாக்கப்பட்டது எனவும், அத்தெய்வங்கள் தெய்வ சபையின் பிரதிநிதிகள் எனவும் நம்பப்பட்டது. ஊர் என்ற நகரத்தில் **லூனார்** என்ற **சந்திரக் கடவுளும**, சிப்பார் நகரத்தில் **உடு** என அழைக்கப்பட்ட **சூரியக் கடவுளும** முக்கியத்துவம் பெற்று விளங்கியதைக் காணலாம். சுமேரியரது நகரங்களுள் எல்லாம் **ஊர்** என்பது மிக நீண்டகாலம் தலைநகராக விளங்கியிருந்தமையால் ஊர் கடவுளான **லூனார** சுமேரியர் மத்தியில் தலையாய ஆண் கடவுளராக முக்கியத்துவம் பெற்றிருந்தமையைக் காணலாம்.

சுமேரியர் தமது போர்க்கடவுளராக **வினுர்த்த** வையும், மலைத்தெய்வமாக **இனான்** ஐயும் வணங்கினர். அவர்களால் வணங்கப்பெற்ற பெண் தெய்வங்களுள் **ஆன, எல்லில, என்கீ** என்பன முக்கியமானவையாகும். ஆன் என்ற பெண் தெய்வமானது உருக்கு நகரத்தின் காவல் தேவதையாகவும் **வின்** தெய்வமாகவும் வழங்கப்பட்டது. **எல்லில்** என்ற பெண் தெய்வம் **ஆனின்** கட்டளைகளை நிறைவேற்றுவதோடு, சுமேரிய மன்னனை நியமிக்கின்ற ஒரு பெரும் பணியினையும் ஆற்றியது. **என்கீ மண்** தெய்வமாக பிரபல்யம் பெற்றிருந்தது.

சுமேரியர் சமய நம்பிக்கைகளில் இயற்கை வழிபாடு முக்கிய இடம் பெற்றிருந்தது. பாம்பு, பறவைகள், விருட்சம் போன்றவற்றை வணங்கும் முறை காணப்பட்டிருந்தது. சுமேரியா தமது புதுவருட விழாவின்போது மதகுருவினையும் அவரது மனைவியினையும் **சிகுராட் கோயிலில** பலியிடுகின்ற வழக்கத்தினையும் கொண்டிருந்தனர். இது ஒருவேளை நாட்டின் செழிப்புத் தன்மையை வருடா வருடம் உறுதிசெய்வதற்காக நிகழ்த்தப்பட்டதாக இருக்கலாம் **(எகிப்தில் மன்னனை வயலுக்குக் கொண்டுசென்று பாம்பு ஒன்றினால் கடிக்க வைப்பதன்மூலம் சிந்தும் இரத்தத்தினைத் தெளிப்பதன் ஊடாக நாட்டின் வளம் உறுதிப்படுத்தப்பட்டது).**

சுமேரியர் இவ்வாறு தமது சமய நம்பிக்கைகளை களிமண் தகடுகளில் பொறித்து வைத்திருந்தனர். இவ்வாறான ஒரு தேவை அவர்களால் ஆப்பெழுத்து

முறையினைக் கண்டுபிடிக்கப்படுவதற்குக் காரணமாகியது எழுத்துக்களின் தலைப் பகுதியில் ஆப்பினைப்போன்று அமைந்திருப்பது அதன் சிறப்பாகும். ஓர் எழுத்துக்கு ஓர் ஒலிக்குறிப்புமுறை இங்கு பின்பற்றப்பட்டது. ஆசியாவில் தோற்றம்பெற்ற எழுத்து முறைகளுக்கெல்லாம் முன்னோடியாக இந்த **ஆப்பெழுத்து** (Cuneiform) முறை நிலவியது. ஈரமான களிமண் தகடுகளில் ஈரம் உலர்வதற்கு முன்னரே இவ்வெழுத்துக்கள் வெட்டப்பட்டு உலர வைக்கப்பட்டன. இவை பின்னர் களஞ்சியங்களில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. **நட்சத்திரங்களைப் பற்றிய மாற்றம், கணிப்பீடு, ஊழிப்பெருவெள்ளம் போன்ற ஐதீகங்கள், பருவகால வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலம், உழவு செய்தல், விதைத்தல், அறுவடை செய்தல், பருவகாலங்கள், சிகுராட்டில் சமயச் சடங்குகள** பற்றிய விதிகள் என்பன எல்லாம் இக்களிமண் தகடுகளில் பொறிக்கப்பட்டிருந்தன. எனவே சுமேரியரது ஆப்பெழுத்து முறையானது ஆசியாவைப் பொறுத்தமட்டில் ஏற்பட்ட பெருஞ்சாதனை எனலாம்.

கப்பலோட்டுதலும் வர்த்தகமும்

சுமேரியரது நாகரிக வாழ்வில் வர்த்தக நடவடிக்கைகள் மிகப் பிரதானமான தொழிலாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. **பாரசீக வளைகுடா** ஊடான கடற்பாதையானது சுமேரியரை ஆசிய நாடுகளுடனான வியாபாரத்தில் தொடர்பினை ஏற்படுத்தியது. சுமேரியர் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இடங்களாகக் காணப்படுபவை **மெலூக்கா, மக்ரான், தொல்மன்** என்பனவாகும். இவற்றுள் **மெலூக்கா** என்பது சிந்து சமவெளியையும், **மக்ரான** என்பது ஈரான் பகுதியையும், **தொல்மன** என்பது பேர்சிய வளைகுடாப் பகுதியையும் குறித்து நிற்கின்றது என்பர். சிந்துவெளி நாகரிக மக்களுக்கும் சுமேரியாவுக்கு மிடையே மிக நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் இருந்தன என்பதனைத் தொல்லியல் ஆதாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. சிந்துவெளி நாகரிக காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த **லோதால்** என்ற துறைமுக நகரினூடாக சுமேரியாவுக்கு வர்த்தகப் பொருட்கள் ஏற்றிச்செல்லப்பட்டு இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

சுமேரிய மக்கள் தமக்கு வேண்டியிருந்த **செம்பு, வெள்ளி, பொன்** போன்றவற்றினை கிழக்கு ஈரானிய பகுதியிலிருந்தும், **சின்னாசியா, சிரியா, ஈழம், பேர்சியா** ஆகிய இடங்களில் இருந்தும் எடுத்துச்சென்றிருந்தனர். பெருமளவுக்கு கப்பல் மார்க்கமான பாதைகளினூடாகவே இவை எடுத்துச் செல்லப்பட்டன. இத்தகைய மூலப்பொருட்களின் சேர்க்கையினால் உலோக வேலை அங்கு விருத்தியடைந்தது. **உலோக வார்ப்புக்கலை** தொடங்கப் பெற்றது. செம்பினால் பல உருவங்கள் செய்யப்பட்டன. அவை பின்னர் வர்த்தகப் பொருட்களாகவும் உபயோகிப்பட்டன. அதேநேரத்தில் வழிபாட்டிற்குரியவையாகவும் கொள்ளப்பட்டன.

விவசாயமும் கலண்டர் முறையும்

சுமேரியர் நீர்ப்பாசனவியற்துறை நுட்பங்களில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர். தமது பயிற்செய்கையின் நோக்கத்திற்காக பிரதான நதியில் இருந்து வாய்க்கால்கள் மூலமாக நீரைப் பாய்ச்சினர். கோதுமை, வாற்கோதுமை என்பவை நீர்ப்பாசனவியல் ரீதியாக அதிக விளைவினைக் கொடுத்தன. நீர்ப்பாசனவியல் ரீதியாக வளர்ச்சி பெற்ற பயிர்ச்செய்கை முறையானது மெசெப்பட்டோமியாவில் வளர்ச்சி பெற்றமைக்குக் காரணம் மிகவும் அகலமான பரப்பில் ஆற்றிடைவெளி அமைந்திருந்தமையே. எனவே ஒழுங்கான பருவகால குறிகாட்டி பற்றிய அறிவும் இந்நீர்ப்பாசனவியல் பயிர்ச்செய்கை முறையுடன் வளர்ச்சி பெற்றிருந்தது. சந்திரனை மையமாக வைத்து இங்கு கலண்டர் முறை உருவாக்கப்பட்டது. இக்கலண்டர் முறையின்படி ஒரு வருடத்தில் 360 நாட்கள் எனவும், அவை 12 மாதங்கள் எனவும் வகுக்கப்பட்டது. **பூமி தட்டையான பரப்பினைக் கொண்டுள்ளது எனவும் அதன் விளிம்பில் உயர்ந்த மலைகளால் சூழப்பட்டுள்ளது எனவும், அதற்குமப்பால் சமுத்திரம் அமைந்துள்ளது எனவும், சுமேரியர் நம்பியதன் அடிப்படையில் சந்திர கலண்டர் முறை உருவாக்கப்பட்டது.** நதியினுடைய பெருக்கு வற்று நிலைகள் சந்திரனுடைய அசைவினை மையமாகக் கொண்டு நிகழ்கின்றது எனவும் அவர்கள் கணக்கிட்டனர்.

சுமேரியரின் அறிவியல்துறைச் சாதனைகள்

சுமேரியரின் அறிவியல்துறைப் பங்களிப்புகளில் மிகவும் முக்கியமானது Sexagezhimal System என்பதாகும். அதாவது 60 ஆகப் பகுப்பது என்பது இதன் பொருளாகும். ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள் எனவும், ஒரு மணித்தியால 60 நிமிடம் ஒரு நிமிடம் 60 செக்கன் எனவும் பகுத்துத் தமது **நீர்க்கடிகார முறையினைக** கணக்கிட்டுக் கொண்டனர். **இது சந்திரனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கணிதமுறையாகும்.** சுமேரியரின் அறிவியல்துறைச் சாதனைகளில் **சக்கரத்தின்** உபயோகம் மிகமுக்கியமானதொன்றாகும். சக்கரத்தின் உதவியுடன் பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டுசெல்லக் கற்றுக்கொண்டனர். சக்கரத்தின் உதவியுடன் தரமான **மட்பாண்டங்களை வனையக்** கற்றுக்கொண்டனர். சக்கரத்தின் உதவியுடன் **தானியங்களிலிருந்து எண்ணெய், மா போன்றவற்றினைத் தயாரிக்கக்** கற்றுக்கொண்டிருந்தனர். எனவே சுமேரியர் முதன்முதலாகச் சக்கரத்தின் பாவனையை ஆசியாவில் அறிமுகம் செய்தமையானது தரைமார்க்கமாகப் போக்குவரத்துப் பாதைகள் உருவாவதற்கு வழி அமைக்கப்பட்டது. சுமேரியருடைய **சக்கர வண்டில்** அவர்களது முக்கியமான **தொழில்நுட்பப் புரட்சியின** சாதனையாகக் கொள்ளப்படுகின்றது.

மெசெப்பட்டோமிய நாகரிகமும் ஆக்காடியர்களும்

சுமேரியர் என்ற மக்கள் கூட்டத்தினரால் உருவாக்கப்பட்ட மெசெப்பட்டோமிய நாகரிகத்தின் முதலாவது கட்டம் சுமேரியர்களை **ஆக்காடியர்கள** வெற்றி

கொள்வதுடன் முடிவுபெற்றது. அதன்பின்னர் மெசெப்பட்டோமிய நாகரிகத்தின் **இரண்டாவது கட்டத்தினை** ஆக்காடியர்கள் தொடக்கி வைத்தனர். **மகா சார்கோன** என்ற ஆக்காடிய மன்னன் ஒருவன் கி.மு.2371இல் சுமேரியர் இனத்தினரை வெற்ற கொண்டு நகர அரசுகளைத் தமது கட்டுப்பாட்டிற்குக் கொணர்ந்தான். ஆக்காடிய இனத்தவர்கள் வட மெசெப்பட்டோமியாவில் **ஆக்காட்** என்ற இடத்தில் வாழ்ந்து வந்தவர்களாகும். மகா சார்கோனின் வெற்றியைத் தொடர்ந்து ஆக்காடியர்களுடைய செல்வாக்கு மெசெப்பட்டோமியாவில் அதிகரித்தது. 200 வருடங்களாக நீடித்திருந்த இவ்வரசில் **மொழியைத் தவிர** ஏனைய சுமேரிய நாகரிக அம்சங்கள் அவ்வாறே பின்பற்றப்பட்டிருந்தன. ஆக்காடியர்களுடைய இவ்வரசானது மெசெப்பட்டோமியாவில் **கூவ்வி** (Gufi) என்ற அநாகரிக இனத்தினரால் அழிக்கப்பட்டது. அவர்கள் கி.மு.2113 தொடக்கம் கி.மு.2006 வரைக்கும் ஊர் நகரை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்திருந்தனர். பின்னர் **வலாமைட்டுக்களினால** வெற்றிகொள்ளப்படும்வரை இந்நிலை நீடித்தது எனலாம்.

மெசெப்பட்டோமிய நாகரிகமும் பபிலோனியர்களும்

கி.மு. 2000ஆம் ஆண்டளவில் **அமோறைற்** என அழைக்கப்படும் **செமிற்றய** இனமக்கள் சிரியாவிலிருந்து படையெடுத்துச் சென்று **ஆக்காட்** பகுதியை வெற்றிகொண்டனர். அதன் பின்னர் நதிக்கரையோரத்தில் அமைந்த பபிலோனியாவைத் தலைநகராகக் கொண்டு அந்நகர அரசுகளைக் கட்டுப்படுத்தி யிருந்தனர். இவர்களுடைய காலத்தில் மீண்டும் சுமேர்கள் உருவாக்கியிருந்த நாகரிக வாழ்வு வளர்ச்சிபெற்றது மட்டுமன்றி, பபிலோனியர்களும் தமது பங்களிப்பை அந்நாகரிக வளர்ச்சிக்கு நல்கியிருந்தனர்.

அமொறைற் வம்சத்தில் வந்த ஆறாவது மன்னனாக **கமுரபி** (hammurabi) என்ற மன்னன் **சுமேர், ஆக்காட** ஆகிய பிரதேசங்களை ஒன்றிணைந்த நிலையில் தனது முதலாவது பபிலோனியப் பேரரசினை உருவாக்கினான். **கமுரபி** 43 வருடங்களாக ஆட்சியை நடாத்தினான் (கி.மு. 1792 - 1750).

பபிலோனியரது காலத்தில் மெசெப்பட்டோமிய நாகரிகத்தில் பல புதிய அம்சங்கள் சேர்ந்துகொண்டன. **முதன்முதலாகச் சட்ட நுணுக்கங்கள் வரையப்பட்ட சட்டத்தொகுப்பு கமுரயியினால்** உருவாக்கிக் கொடுக்கப்பட்டது. இது பிற்காலத்தில் **கமுரபி சட்டத்தொகுப்பு** என வழங்கலாயிற்று. கமுரபி சட்டதொகுப்பின் முக்கியத்துவத்தினைப் பற்றி நோக்குவது இந்நாகரிகத்தின் சிறப்பியல்புகளை இனங்காண்பதற்கு உதவும்.

"ஒரு சர்வதேச ரீதியான சட்டத்தொகுப்பு" முதன்முதலாக மெசெப்பட்டோமியாவில் உருவாக்கிக் கொடுக்கப்பட்டது என்ற வகையில் பபிலோனியரது நாகரிகம் முக்கியத்துவம் பெறுகின்றது. இச்சட்டத் தொகுப்பானது மனித சமூகத்திற்கு சமுதாய நலன்களைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே உருவாக்கப்பட்டது. அவ்வகையில் **"கண்ணுக்கு கண்"** என்ற நோக்கில் நீதி

நிலைப்படுத்தப்பட்ட தண்டனைகள், செய்யப்பட்ட குற்றங்களுக்காக வழங்கப்பட வேண்டும் எனவும், குடும்ப - உறவு - திருணங்கள், விவாகரத்துக்கள், சொத்துரிமை, பாரம்பரியச் சொத்துரிமை தொடர்பான கோட்பாடுகள் எனவும், தொழில் - வியாபாரி, பங்காளி, ஒப்பந்தம் - உயில் (Wills) போன்ற பத்திரங்கள் தொடர்பானதுமான சட்டங்கள், திட்டங்கள் என்பன கமுரபி சட்டத்தொகுப்பில் பதியப்பட்டன.

மேலும் கமுரபியின் சட்டத்தொகுப்பினுள் சமூக - வர்க்க நிலைப் பாட்டினைத் தழுவிய வகையில் அடிமைகளுக்குரிய உரிமைகள் - சலுகைகள் சம்பந்தமாக சில விதிமுறைகள் வகுக்கப்பட்டன. விசேடமாக பெண்களின் உரிமைகள் தொடர்பாக அவை குறிப்பிடுகின்றன. ஓர் அடிமை தனது நிலையிலிருந்து சுதந்திர நிலைக்கு வரவேண்டுமெனின் குறிப்பிட்டளவு தொகையான அபராதப் பணத்தைச் செலுத்தவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டது.

பபிலோனியரது நாகரிக அம்சங்களில் ஒன்று **கிக்காமெஸ்** பற்றிய **ஐதீக** மாகும். சாவா நிலையைப் பெறுவதற்கு **மூலிகை தேடி** அலைந்து திரிந்து பின்னர் இறுதியில் கடலில் அதனைப் பெற்றும்கூட, அதனைப் பயன்படுத்தாது மரணமடைந்த செய்தியைப் பற்றி **கில்காமஸ் பற்றிய ஐதீகம்** குறிப்பிடுகின்றது. **ஊழிப் பெருவெள்ளம** பற்றிய கதையாகவும் **கில்காமஸ் பற்றிய ஐதீகத்தினைக் கொள்வர்.**

பபிலோனியரது சாதனைகளுள் ஒன்றாகத் திகழ்வது **தொங்கு தோட்ட** மாகும். உலகத்தில் ஏழு அதிசயங்களுள் ஒன்றாகத் திகழும் **இத்தொங்கு தோட்டமானது** பபிலோனியாவில் அமைக்கப்பட்டது. பபிலோனியா மிகப் பிரமாண்டமான நகராக இக்காலத்தில் வளர்ச்சியடைந்தது.

பபிலோனியர்கள், சுமேரியர்களது Sexagesimal என்ற முறையைப் பின்பற்றி இருந்த அதேநேரத்தில் **அட்சர - கேத்திர அறிவியலுடனான புதிய கணித முறையையும்** அறிமுகப்படுத்தினர். **கேத்திரகணித படவரையியல** முறையை யும் ஆரம்பித்துவைத்தனர். எனவே **கணிதவியல்துறை** வளர்ச்சிக்கு பபிலோனியர் பெருந்தொண்டினை ஆற்றியுள்ளனர்.

வானியல் கண்டு பிடிப்புக்களை சிகுராட்டின் உதவியுடன் நிகழ்த்தியுள்ளார். **சிகுராட்டுக்கள் வானிலை அவதான மையங்களாகத் திகழ்ந்தன.** சுமேரியரது சந்திர முறையிலான **பருகவகாலக் கலண்டா** முறையை இவர்கள் உபயோகித்த நேரத்தில் 7 நாட்கள் ஒரு கிழமை என்பதனையும், புதிதாக இணைத்துக் கொண்டார்கள். **சதுர அமைப்பு, முக்கோண அமைப்பு, கனகூள அமைப்பு** போன்ற அளவியல் ஊடாக, சேக்கல், மீள அளவை முறைகளை உபயோகித் திருந்தனர். **60 சேக்கல் 1 மீள ஆகும். 60 மீள 1 ரலன்ட் ஆகும்.** முதன்முதலாகக் கட்டிடக்கலை அமைப்பில் **பாகை அமைப்பு** முறையைக கொண்டு கணிப்பிடும் வழக்கத்தினையும் இவர்களே ஏற்படுத்தினர்.

இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகம்

புராதன நதிப்பள்ளத்தாக்கு நாகரிக வரிசையில் இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகமானது தனித்துவமானதாகும். இந்திய உபகண்டத்தின் வடமேற்கே இந்து நதியின் இருமருங்கிலுள்ள அகன்ற பள்ளத்தாக்கில் இந்நாகரிகம் தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்தது. இந்நதியானது **இமாலயப் பகுதியில** இருந்து உருவாகிப் **பஞ்சாப், சிந்து** மாகாணப் பரப்பினூடாக குஜராத் பகுதியை அடைந்து அராபியக் கடலில் சங்கமாகின்றது. 1948 இல் ஏற்பட்ட இந்திய - பாகிஸ்தான் பிரிவினையின்போது இந்நதிப் படுக்கையானது பாக்கிஸ்தான் நாட்டுக்குள் அமைந்துவிட்டது.

இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் தனித்துவமான ஓரம்சம் என்னவெனில், உலகில் தோற்றம் பெற்றிருந்த புராதன நதிப்பள்ளத்தாக்கு நாகரிகங்களுள் பெரும்பாலானவை, அவை தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்த இடத்திலேயே அழிந்துவிட, இது மாத்திரம் தென்னாசியப் பண்பாட்டினூடாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது. எனவே **வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாகரிகம** என்ற வகையில் அதனைப் பற்றி ஆராய்வது சிறப்பானதாக அமையும்.

இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தைப் பற்றிய கண்டுபிடிப்பு

1856ம் ஆண்டில் பிரித்தானியரின் ஆட்சியின்போது இந்நாகரிகத்தைப் பற்றிய முதல் ஆதாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. **கராச்சி - லாகூர் புகையிரத வீதி** அமைப்பின்போது இரு சகோதரர்களான பொறியியல் விற்பன்னர்கள் இவ்வாதாரங்களைத் தமது கரங்களினால் எடுத்திருந்தனர். **ஜோன் பிரண்டர், வில்லியன் பிரண்டர்** என்ற அச்சகோதரர்களது பணியின்போது இந்துநதிப் பள்ளத்தாக்கு நகரங்களின் கட்டிடப் பகுதிகள் புகையிரத வீதி அமைப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து **ஜெனரல் கணிங்காம்ப்** என்பவர் இப்பள்ளத்தாக்கு நாகரித்திற்குரிய பல முத்திரைகளைத் தனது கைகளால் எடுத்து சேகரித்துக்கொண்டனர். இதன்பின்னர் 1921, 1922ம் ஆண்டுகளிலே **தயாரம் சாணி** கராப்பா நகர அழிபாடுகளையும் **பனேர்ஜி** மொகன்ஜதாரோ வினுடைய அழிபாடுகளையும் கண்டுபிடித்தனர். இதன் பின்னர் சேர்.ஜோன் மார்சல் என்பவர் இந்தியாவின் முதற் தொல்லியற்துறைத் தலைவ்ராக நியமனம் பெற்றமையைத் தொடர்ந்து மொகஞ்சதாரோ நகரத்தில் அகழ்வாய்வில் ஈடுபட்டார். 1922ம் ஆண்டு தொடங்கி 1931ம் ஆண்டு வரையும் அகழ்வாய்வில் ஈடுபட்டு இந்நாகரிகத்தைப் பற்றிய பல அம்சங்களை வெளிக்கொணர்ந்தார். 1945 - 48 காலப்பகுதியில் இங்கு மோட்டிமார் உலர் என்பவர் விஞ்ஞானபூர்வமாக அகழ்வு ஆய்வுகளை நடாத்தியிருந்தார். அதன் அடிப்படையில் சிந்துநதிப்பள்ளத்தாக்கு நாகரிகத்தைப் பற்றிய செய்திகள் அறிவியல் ரீதியாக வெளியிடப்படுவதற்கு வாய்ப்பாயிற்று. இவரைத் தொடர்ந்து இந்தியத் தொல்லியல் ஆய்வாளரான எஸ்.ஆர்.ராவ் என்பவர் **லோத்தால்** என்ற துறைமுக நகரை அகழ்வு செய்து, சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்துடனான அதன் தொடர்புகளையும், சிந்து

மக்கள் பயன்படுத்தியிருந்த வரிவடிங்களின் பொருளமைதியையும் விளக்கினார். பிரான்சிய செக்கோ - சிலாவாக்கிய, ரஸ்ய விஞ்ஞானிகள் பலர் **கணினிகள** மூலமாக சிந்துவெளி மக்கள் பயன்படுத்தியிருந்த வரிவடிவத்தினைப் பற்றியும், மொழியினைப் பற்றியும் ஆராய்ந்து வருகின்றனர். மிகவும் அண்மைக் காலங்களில் சேர் ஜராவதம் மகாதேவன் என்பவர் சிந்துவெளி எழுத்துக்களில் அகத்தியர் கதைகள் பதியப்பட்டிருப்பதனைக் கண்டுபிடித்து அவற்றைப் பற்றி விளக்கமும் அளித்துள்ளார்.

சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் காலம்

1931 வரை சிந்துவெளி நாகரிகத்தினைப் பற்றி ஆராய்ந்த **சேர் ஜோன் மார்ஷல்** என்பவர் இந்நாகரிகத்தின் காலப்பகுதியை **கி.மு.3250 கி.மு.2750** வரையாகும் எனக் குறிப்பிட்டார். இவர் மெசெப்பட்டோமியாவில் சிந்துவெளிப் பள்ளத்தாக்கு நாகரிகத்துக்குரியதாகக் கொள்ளப்படும் முத்திரைகளைக் கண்டுபிடித்ததன் அடிப்படையில் இம்முடிவுக்கு வந்திருந்தார். **மோட்டிமர் வீலா, பிக்கொட** போன்றோர் இந்நாகரிகத்தின் காலப்பகுதியை **கி.மு.2500க்கும் கி.மு.1500க்கும** இடைப்பட்டதாகக் கொள்வதனைக் காணலாம். இறுதியாக 1961ல் **அக்கிரவால** என்ற இந்திய அறிஞர் **சீ 14** காலக்கணிப்பு முறையில் இந்நாகரிக காலத்தினை **கி.மு.2300க்கும் கி.மு.1700க்கும** இடைப்பட்டது எனக் குறிப்பிட்டார். மிக அண்மையில் நாகரிகத்தின் முடிவுக் காலத்தினை **கி.மு.1760** ஆகக் கொள்ளமுடியும் என இந்தியத் தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் பிரதான இயல்புகள்

ஆரம்பத்தில் இப்பள்ளத்தாக்கில் ஏற்பட்ட நாகரிக வாழ்வு முறையானது மெசெப்பட்டோமியாவில் இருந்தே கொணரப்பட்டு வளர்த்து எடுக்கப்பட்டது என நம்பப்பட்டது. ஆனால் அண்மைக் காலங்களில் தொல்லியல் ஆய்வுகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் காரணமாக, இந்நாகரிகமானது இந்தியாவிலேயே தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே இந்திய உபகண்டத்தில் தோற்றம்பெற்று, வளர்ச்சிகண்ட ஒரு பள்ளத்தாக்கு நாகரிகம் என்ற வகையில் ஆசியாவில் இது சிறப்புப் பெறுகின்றது.

சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகமானது அதன் நாகரிகப் பரப்பினைக் கொண்டிருந்த வகையில் தனித்துவம் வாய்ந்ததாக அமைந்தது. சிந்து நதிப் பிராந்தியமான பஞ்சாப் மாநிலப் பரப்பிலிருந்து தெற்கே கத்தியவார் குடாநாட்டுப் பரப்பு வரை இந்நாகரிக அம்சங்கள் பரந்திருந்தது. ஆனால் அண்மைக்கால ஆய்வுகளின் முடிவுகளின்படி இப்பிராந்தியத்திற்கும் அப்பால் **மகாராஷ்டிர மாநிலத்தின் வடபகுதியிலும**, இந்தோ கங்கைச் சமவெளிப் பிராந்தியமான **மால்வா** பகுதிகளிலும் இந்நாகரிகச் சின்னங்கள் பரந்து காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. மிகவும் அண்மைக் காலத்தில் **மாலைதீவுக்**

கூட்டங்களிலும் இப்பள்ளத்தாக்கு நாகரிகத்தின் சுவடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. எனவே உலகின் ஏனைய பள்ளத்தாக்கு நாகரிகங்களின் பரப்புடன் ஒப்பிடும்போது, இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகமானது (நைல்நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தினைத் தவிர) பரப்பில் மிகக்கூடியதாகவும், செழிப்பான வளர்ச்சிப் போக்கினைக் கொண்டிருந்தமையையும் அவதானிக்கலாம்.

உலகின் ஏனைய நதிக்கரையோர நாகரிகங்களுக்கில்லாத இன்னொரு தனிச் சிறப்பியல்பு சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்திற்குண்டு. அதாவது வளர்ச்சி பெற்றிருந்த நகரங்கள் யாவும் பாதுகாப்பு அரண்களினால் சூழப் பட்டிருந்தமையாகும். அவற்றின் அடிப்படையில் உள்நகரப்பகுதி, புறநகரப்பகுதி, என்ற பிரிவுகளை முதன்முதலாக இப்பள்ளத்தாக்கில் வளர்ச்சிபெற்றிருந்த நகர நிர்மாணத்துடன் காணமுடிந்தது. நகரங்களும் பலமான அரண்களும் நதியின் வலப்புறமாகவே, அதாவது உயர் பள்ளத்தாக்குப் பரப்பில் அமைக்கப்பட்டமை குறிப்பிடக்கூடிய ஓர் அம்சமாகும். ஒருவேளை நதியின் வெள்ளப்பெருக்கில் இருந்து நகரங்களைப் பாதுகாக்க வேண்டியிருந்த ஒரு முன்னோடித் திட்டமாக இது இருந்தது எனலாம்.

சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் முக்கியமான இன்னொரு சிறப்பியல்பு ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு **பாரிய தானியக** களஞ்சியங்களை அமைத்திருந்தமையாகும். தானியக் களஞ்சியங்கள் நாகரிக வாழ்வின் உயிர் நாதமெனலாம். பஞ்சாப் மாநிலத்தில் அமைந்திருந்த நகரமான **மொகஞ்சதாரோவில** காணப்பட்ட பெரிய நீராடற் குளத்தின்கீழ் **தானியக் களஞ்சியம்** ஒன்று அமைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தானியம் கெட்டுப் போகாமல் நீண்ட காலம் பாவனையில் இருப்பதற்காகவே சிந்துவெளி மக்கள் அக்களஞ்சியத்தினை பெரிய நீராடற் குளத்தின் கீழ் அமைத்திருந்தனர் எனக் கொள்ளக்கிடக்கின்றது.

மதமும் வரிவடிவமும்

சிந்துவெளி மக்கள் பின்பற்றியிருந்த மத நம்பிக்கைகளையிட்டு தெளிவான இலக்கியச் சான்றுகள் இன்னும் கிடைக்கவில்லை. எகிப்திலும், மெசெப்பட்டோமியாவிலும் வளர்ச்சி பெற்றிருந்த இலக்கியங்களை ஒத்த எதுவும் சிந்துவெளியில் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. இதற்குக் காரணம் நீண்ட தெளிவான சாசனச் சான்றுகள் வாசிக்கக்கூடிய வகையில் இதுவரையும் கிடைக்காதுள்ளமையே. இருந்தபோதிலும் சிந்துவெளி முத்திரைகளில் (Seals) காணப்படுகின்ற வடிவங்களையும், இப்பள்ளத்தாக்குப் பரப்பில் கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள், மற்றும் தொல்பொருட் சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படைகளிலும் இருந்து அம்மக்களின் மத நம்பிக்கைகளை அறிந்துகொள்ள முடிகின்றது. ஏராளமான முத்திரைச் சாசனங்கள் கிடைத்திருந்தும், அவற்றினைத் திட்டவட்டமாக வாசிக்க முடியாதிருந்துவரும் சூழ்நிலையினால் சிந்துவெளி மக்களுடைய வரிவடிவமுறையூடாக அவர்களது சமய நம்பிக்கைகளை வெளிக்காட்ட முடியாதிருந்து வருவதும் இதில் குறிப்பிடத்தக்கது.

சிந்துநதிப் பள்ளத்தாக்கு மக்களின் சமயவாழ்க்கையில் தாய்த்தெய்வ வழிபாடு மேலோங்கியிருந்த தன்மையைக் காணலாம். ஏராளமான பெண் உருவங்கள் சுடுமண் சிற்பங்களாகக் கண்டு பிடிக்கப்பட்டிருந்தன. இவற்றுடன் சேர்த்து **லிங்க - யோனிக்** கற்கள் காணப்பட்டமையினால் இம்மக்கள் **புருஷ - பிரக்கிருதிக** கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதும் புலனாகின்றது. இந்த அம்சங்களைப் பொதுவாக செழிப்புத் தெய்வக் கோட்பாட்டின் ஓர் அம்சமாகக் கொள்ளலாம். எனவே சிந்துவெளி மக்களின் சமய நம்பிக்கை களில் தாய்த்தெய்வ வழிபாட்டுடன் தொடர்பான செழிப்புக் கோட்பாடு ஒன்று கலந்திருந்தமையைக் காணலாம்.

ஹரப்பாவில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முத்திரையில் இருந்து **ஆதி சிவனுடைய யோகநிலை** எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. **சிவன் தலையில் மூன்று கொம்புகளுடன் யோகநிலையில் வீற்றிருக்க, சுற்றிவர வரிப்புலி, காண்டாமிருகம், யானை, மீன், தாவரங்கள் போன்ற சேதனப்பொருட்கள் காணப்படுவதிலிருந்து அதனைப் பசுபதிக் கோட்பாட்டுடன் தொடர்பு படுத்துவர். பெரும்பாலான இந்திய வரலாற்றாசிரியர்கள் இப்பசுபதிக் கோட்பாட்டினை ஏற்றுக்கொண்டுள்ளனர்.** பிற்காலத்தில் இந்தியாவின் இந்து சமயக் கோட்பாட்டில் இப்பசுபதிக் கோட்பாடு பிரதானமான இடத்தினை இந்து தத்துவ அடிப்படையில் வகித்தது.

சேர் ஜோன் மார்சல் உட்பட பல தொல்லியலாளர்கள் சிந்துவெளி மக்களுடைய இந்து தத்துவக் கோட்பாட்டின் புராதன வடிவத்தினை ஏற்றுக் கொண்டுள்ளனர். பிற்கால இந்துசமயத் தத்துவத்தில் இடம்பெற்றிருந்த **மூர்த்தி, தலம், தீர்த்தம** என்ற கோட்பாட்டினுள் **தீர்த்தம்** என்பது சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தில் வலுப்பெற்றிருந்தமையை மொகஞ்சதாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட **பெரிய நீராடற் குளத்துடன** தொடர்புபடுத்திக் காட்டுவார். பெரிய படிக்கட்டு முறையில் அமைந்த இந்நீராடற் குளமானது தென்னாசியாவில் பிற்காலத்தில் தோற்றம் பெற்றிருந்த திருக்குளங்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கியது என்பர்.

சிந்துவெளி மக்கள் இயற்கை வழிபாட்டிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அரசமரம், நாணல் போன்றன வணங்கப் பட்டன. இதேபோன்று மிருகங்களையும் வணக்கத்திற்குரிய பொருட்களாகக் கொண்டிருந்தனர் என்பதற்கு எருது, காண்டாமிருகம் போன்றன சிறந்த சான்று களாகும். **ஏரி புடைத்த எருதின் உருவம** பொறித்த முத்திரைகள் பல சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்டமையில் இருந்து அதனை அம்மக்கள் வணங்கியிருந்தனர் எனக் கொள்ளக்கிடக்கின்றது. பிற்கால இந்தியச் சமயத்தில் எருது முக்கியத்துவம்வாய்ந்த ஒரு சின்னமாக விளங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது. பாரம் இழுப்பதற்குரிய சக்கர வண்டியினை எருதுகளே அங்கு இழுத்து வந்தமையினால் சிந்துவெளி மக்கள் எருதினை வணக்கப் பொருளாகக் கருதியிருக்க முடியும்.

சிந்துவெளி மக்கள் தாம் வாழ்ந்த இல்லங்களில் வழிபாட்டிற்குரிய ஓர் அறையை ஒதுக்கி, அதனைப் புனித மையமாகக் கொண்டிருந்ததிலிருந்து அம்மக்கள் மத்தியில் **"வழிபாடு"** பெற்றிருந்த முக்கியத்துவத்தினைக் காண முடிகின்றது. பிரதான இல்லங்களில் சமையல் அறைக்கு நேர் கோணத்தில் வழிபாட்டறைகள் அமைக்கப்பட்டிருந்த ஒரே சீரான தன்மையை அங்கு காண முடிகின்றது. வழிபாட்டுப் பொருட்களாக தாயத்துக்கள், லிங்கக் கற்கள், யோனிக் கற்கள் போன்றன வழிபாட்டறைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன.

சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய வரிவடிவங்களை நன்கு ஆராய்ந்த செர் ஐராவதம் மகாதேவன் என்பவர் இப்பொழுது அகத்தியர் கதைகளை அப்பதிவுகளிலிருந்து காணமுடிகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பிராந்திய நாகரிக வாழ்வில் அகத்தியர் கதைகள் கொண்டிருந்த தொடர்புகளை புராண ஐதீக மரபுகளுடன் தொடர்புபடுத்தி இவர் ஆராய்ந்துள்ளார். அவ்வடிப்படையில் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படுகின்ற பானை போன்ற சித்திர எழுத்துக் களை அடிப்படையாகக் கொண்டு அகத்தியர் கதை மரபுகளை சிந்துவெளி மக்களது ஐதீகமாக எடுத்துக்காட்டுகின்றார். எனவே சிந்து மக்கள் தமது சமய வாழ்வில் குறுமுனி அகத்தியனது பெருமைகளைப் போற்றியிருந்தனர் என்பது உருவம் ஒரு வேளை குறுமுனிவருடையதாக இருக்கலாமா என்பதும் ஆராயப்பட வேண்டியது.

கப்பலோட்டுதலும் வர்த்தக நடவடிக்கைகளும்

சிந்துவெளி மக்களால் உருவாக்கப்பட்ட முத்திரைகளில் மீன் வடிவங்களும் பிரதானமானவையாகக் காணப்படுகின்றன. மீன் இலச்சனைகள் பிற்கால தீபகற்ப இந்திய சமுத்திரவியல் வழிவந்த நாகரிகத்தின் குறியீடாகத் திகழ்ந்ததனையும் காணலாம். அவ்வகையில் சிந்துநதிப் பள்ளத்தாக்கு மக்களின் வாழ்வு முறையில் சமுத்திரவியல் தொடர்பான கப்பல் ஓட்டும் முயற்சியும் இடம்பெற்றிருக்க வேண்டுமென்பது புலானகிறது. குஜராத் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பெற்று அகழப்பட்ட லோத்தால் துறைமுக நகரானது சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளினது பிரதான மையமாகத் திகழ்ந்தது. இந்து நதியினூடாக பஞ்சாப் வரை கப்பல் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மொசெப்பட்டோமியா உடனான வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவுக்கு கப்பல் மார்க்கமாகவே **லோத்தால் துறைமுகத்தில்** இருந்து இடம்பெற்றிருக்க வேண்டுமென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விவசாயமும் கலண்டர் முறையும்

சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் தோற்றத்தினை விவசாயக் குடியிருப்புக்களின் தன்மையுடன் எடுத்துக்காட்டியுள்ளனர். இந்நாகரிகம் தோற்றம் பெறுவதற்கு முன்னர் **ஆப்கானிஸ்தானம், பலூச்சிஸ்தானம்** ஆகிய பகுதிகளில் பல விவசாயக் குடியிருப்புக்கள் தோற்றம்பெற்று வளர்ச்சி பெற்றிருந்தன என்பதும்

பின்னர் அவை இந்துநதிப் பள்ளத்தாக்கை நோக்கி நகர்ந்து வந்தன என்றும் அதன் முடிவில் **நகரக் குடியிருப்புகளாக** மாறி நாகரிக வாழ்க்கை நிலையைத் தோற்றுவித்திருந்தன என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது. எனவே அடிப்படையில் சிந்து பள்ளத்தாக்கு நாகரிகம் விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டது என்பது தெளிவாகின்றது. பஞ்சாப், சிந்து மாகாணங்களில் தோற்றம்பெற்று வளர்ச்சிகண்ட நகரங்களின் பின்னணி விவசாயமே. நீர்ப்பாசனவியல் கால்வாய் களை அமைத்து வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சி, அதிக விளைவு பெறப்பட்டது. எமது பிராந்திய நீர்ப்பாசனவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு சிந்துவெளி மக்களே அடிப்படைகளை இட்டிருந்தனர்.

எனவே விவசாய முயற்சியுடன் தொடர்புபட்டிருந்த பருவகாலக் கலண்டர் முறையையும் அவர்கள் உபயோகித்திருப்பர் என்பது தெளிவு. இருந்தும் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் எழுத்துக்களை வாசிக்க முடியாதிருக் கின்ற நிலையினால் அம்மக்கள் உபயோகித்திருந்த **கலண்டர் முறை** எது என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை. மிகவும் அண்மையில் ஜேர்மனிய அறிஞர்கள் சிந்துவெளி மக்கள் **வடதுருவ நட்சத்திரங்களின** மையமாகக் கொண்டு தமது நகர அமைப்பினைச் செய்திருந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். எனவே வட துருவ நட்சத்திரம் சிந்துவெளி மக்களின் வாழ்வில் முக்கியத்துவம் பெற்றிருந்தமையைக் காணமுடிகின்றது.

சிந்துநதிப் பள்ளத்தாக்கு மக்களின் அறிவியற்துறைச் சாதனைகள்

சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தில் நகர அமைப்பானது மிகவும் திட்டமிட்ட வகையில் உருவாக்கப்பட்டது. வட துருவ நட்சத்திரங்களின் நிலையைக் கணிப்பிட்டு நகர அமைப்பிற்குரிய பிரதான வீதிகள் அமைக்கப்பட்டன. இவ்வீதிகள் வடக்கு - தெற்கான போக்கினை உடையனவாகக் காணப்பட்டன. பிரதான வீதிகள் யாவும் 32 அடி அகலத்தினையுடையன. உப வீதிகள் யாவும் கிழக்கு - மேற்கான ஒழுங்கில் பிரதான வீதிகளை 90 பாகை நிலையில் சந்திப்பனாக அமைக்கப்பட்டன. நகரக் குடியிருப்புக்கள் யாவும் உப வீதிகளிடையே ஏற்படுத்தப் பட்டிருந்தன. எனவே திட்டமிட்ட வகையில் நகர அமைப்பு ஒன்று எங்கும் ஒரே சீரான முறையில் உருவாக்கப்பட்டமை இம்மக்களின் முதலாது அறிவியற்றுறை சாதனையாக உள்ளது.

சிந்துவெளி மக்களின் **நகரத் திட்டமிடலின்** இரண்டாவது பிரதான அம்சம் கழிவுநீர் வாய்க்கால்களை உருவாக்கியமையும் அக்கால்வாய்களைப் பராமரிப்பதற்காக **'மனித துவாரங்களை'** (Man Hole) குறிப்பிட்ட இடைத்தூரம் பிசகாது ஏற்படுத்தியமையாகும். நகரங்கள் யாவும் பிரதான நதியின் வலது புறமாக அமைந்திருந்தமை காரணமாக கழிவுநீர் வாய்க்கால்கள் உயரமான குடியிருப்புப் பகுதியினூடாக தாழ்நிலப் பகுதியைநோக்கி வந்து பிரதான நதியுள்ள கழிவுநீர்வாய்க்காலை சந்தித்திருப்பதைக் காணமுடிகின்றது. உபவீதிகளின் விளிம்போரங்களில் கழிவு நீர் வாய்க்கால் அமைக்கப்பட்டது. சாந்தினால்

மேற்பக்கம் மூடப்பட்டிருந்தது. இக்கழிவுநீர் வாய்க்கால்கள் பிரதான வீதியின் போக்கோடு வடக்கு - தெற்கான திசையில் சென்று நதியுடன் சங்கமமாயிற்று. புரதான நதிக்கரையோர நாகரிகங்களின் நகர அமைப்புத் தொடர்பான இவ்வம்சத்தினை வேறு பிரதேசங்களில் வளர்ச்சிபெற்ற நாகரிகங்களில் காண முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

சிந்துவெளி மக்களின் அறிவியற்துறைச் சாதனைகளுள் **பெரிய நீராடற் குளத்தின்** அமைப்பு முக்கியமான ஒன்றாக உள்ளது. மொஹஞ்சதாரோ நகரத்தின் மேலைப் பகுதியில் காணப்படும் இந்நீராடற் குளமானது நீள்சதுர அமைப்பில் படிக்கட்டு முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நீராடற் குளத்தின் அடித்தளம் முழுவதும் நீர் கசியாத மேற்பூச்சு பூசப்பெற்ற **சுட்ட செங்கற்களினால** (Kylin burnt brick) கட்டப்பட்டதைக் காணலாம். பொதுவாக **நீர் வெளியேறும், உட்செல்லும** பகுதிகள் வாய்க்கால்கள் யாவும் இவ்வாறு விசேடமாகத் தயாரிக்கப்பட்ட செங்கற்களினால் உருவாக்கப்பட்டன. பெரிய நீராடற் குளத்தில் இருந்து அசுத்தமடைந்த நீர் மிகவும் இலகுவாக குளத்தின் அடித்தள மட்டத்தில் அமைந்த சுரங்கக்கால்வாய் ஒன்றினூடாக கழிவுநீர் வாய்க்கால்களை சென்றடைவதற்கேற்ற வகையில் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதேபோன்று மறுபக்கத்தில் கிணறு ஒன்றிலிருந்து நீர் இக்குளத்திற்கு வந்து அடைவதற்கு ஏற்ப ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இத்தொழில்நுட்பமானது சிந்துவெளி மக்களின் பொறிமுறைச் சாதனைகளுள் ஒன்றாகக் கணிக்கப்படு கின்றது.

சிந்துவெளி மக்கள் தமது பரந்த நாகரிகப் பரப்பில் ஒரே தன்மைத்தான அளவுகளை, குறிப்பாக நிறுத்தல் அளவை, பரப்பளவை, கனவளவை போன்றவை அவர்களது வாழ்க்கைத் திறத்தினைச் சுட்டி நிற்கின்றது. செங்கட்டிகளுடைய அளவு என்றாலும், நிறுத்தல் அளவை தொடர்பான தாயக்கட்டைகளின் அளவென்றாலும் எங்கும் ஒரே சீரானதாக அமைந்திருந்தமை ஒரு சிறந்த **மாநகர அமைப்பு முறையைச** சுட்டி நின்றது.

கட்டிடக் கலையில் இம்மக்கள் பின்பற்றியிருந்த நுட்பங்கள் வியக்கத்தக்கதாய் உள்ளன. படிக்கட்டு வரிசைகளைக் கொண்ட மாடிவீடுகள், அவ்வீடுகளில் காணப்பட்ட குளியலறை, சமையல் அறை, விருந்தினர் அறை, பூசையறை என்பன அம்மக்களின் உயர்ந்த வாழ்க்கை முறைகளைக் காட்டி நிற்கின்றன. கிணறும், குளியலறையும் உபவீதியின் கழிவுநீர் வாய்க்காலுடன் இணைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. வீடுகளின் வாயில்கள் யாவும் உபவீதியை நோக்கியே அமைக்கப்பட்டுள்ளன. எனவே **'வாழ்தற்காகவே வீடுகள்'** என்ற அடிப்படையில் சிந்துவெளி மக்கள் தமது வதிவிடங்களை அமைத்திருந்தனர் என்பது புலனாகின்றது.

சிந்துநதிப் பள்ளத்தாக்கு மக்களால் உருவாக்கியிருந்த எருதுடன் இணைந்த வண்டி ஒன்றின் வடிவம் கண்டெடுக்கப்பட்டமையில் இருந்து சக்கரத்தின்

பாவனையை அவர்கள் அறிந்திருந்தனர் என்பது புலனாகின்றது. இது புராதன நதிக்கரையோர நாகரிகங்களின் பொதுவியல்பாகவும் காணப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. திட்டமிட்டு அமைக்கப்பட்ட அகலமான வீதிகள் ஊடாக இவண்டிகள் போக்குவரத்துச் சாதனங்களாக தொழிற்பட்டிருந்தன. இன்றும் அந்நிலை இப்பிராந்தியத்தில் தொடர்வதனைக் காணலாம்.

சிந்துவெளி மக்களின் அறிவியற் கலையில் உலோகப் பாவனையின் உபயோகத்தினையும் இங்கு குறிப்பிடலாம். உலோகங்களை உருக்கி உருவங்களை ஆக்குகின்ற தொழில்நுட்பத்தில் சிந்துளெி மக்கள் கைதேர்ந்தவர் களாக விளங்கியிருந்தனர். **வெண்கலத்தினால் செய்யப்பட்ட நடனமானது** ஒன்றின் உருவத்தினை இதற்குச் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிக மக்களது பொழுதுபோக்கு, கலைகள்

சமூகத்தில் உயர்நிலையில் வாழ்ந்த மக்கள் தமது பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக சொக்கட்டான் ஆடுவது, நீரில் நீந்துவது, விளையாட்டுப் பொம்மை செய்து, இசை, நடனத்துறைகளில் ஈடுபடுவது போன்றவற்றில் கவனம் செலுத்தியிருந்தனர். கலை ஆர்வம்மிக்க இம்மக்கள் இசையினையும், நடனத்தை யும் நன்கு பயின்றார்கள் என்பதற்கு வெண்கலத்திலான **நடன மாதின் சிற்பம** ஓர் உதாரணமாகும். இது மாத்திரமன்றி அழகியல் - ஆர்வம்மிக்க இம்மக்கள் பலவகையான மணிமாலைகளையும் அணிகலன்களையும் உருவாக்கி அணிந்துகொண்டனர் என்பதை அறியமுடிகின்றது. மன்னார் குடாவில் முத்துக்குளிப்பு நடைபெற்று அவை பின்னர் சிந்துவெளிப் பிராந்தியத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது என வரலாற்றாசிரியர்களால் கூறுப்படுகின்றது.

சமூக அமைப்பு

சிந்துவெளிப் பள்ளத்தாக்கு மக்களுடைய சமூக அமைப்பினை நோக்கும் போது அற்றின் நிலைகளைக் காணமுடிகின்றது. இருந்தும் மாடி வீடுகளில் வாழ்ந்த மக்கள் சமூகத்தில் உயர்நிலைகளில் இருந்தவர்கள் எனவும், நகரத்தின் கீழ்ப்பகுதியில் சிறிய இல்லங்களில் வாழ்ந்தோர் உழவர்களும், கைத்தொழிலாளர் களும் என்பதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பிரதான குடியிருப்புக்களுக்குக் கீழ்ப்பகுதிகில் காணப்பட்ட பட்டறைகளைக் கொண்டு இக்கருத்து முன்வைக்கப்பட்டுள்ளன.

சமூகத்தில் ஆண்கள் முக்கியத்தும் பெற்றிருந்தனர் என்பதற்குக் கண்டெடுக்கப்பட்ட **மதகுருவினுடைய சிற்பம** சிறந்த சான்றாகும். நெற்றிப்பட்டம் கட்டிய தாடியுடனான அம்மதகுருவின் தோற்றம் மிகவும் அலங்காரப் படுத்தப்பட்டிருந்தது. எனவே சுமேரியாவைப் போன்று சிந்துவெளியிலும் நகர அமைப்புமுறையில் மதகுருமார் அதிக செல்வாக்கு செலுத்தியிருந்தனரா என்பது இப்பொழுது கேள்வியாகின்றது.

பெண்களுக்குச் சமூகத்தில் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது அல்லது புனிதத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதற்குப் பல சான்றுகள் சிந்துவெளியில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. ஆடல் மகளிரின் சிற்பம் இதற்கு ஒரு சான்றாகும். மேலும் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான **சுடுமண் பாவைகள** பெண்களின் நிலையை புனிதத்துவம் வாய்ந்ததாகக் கொள்ள வைக்கின்றன. பெண்கள் உரிமைகளுடனும், தமது விருப்பினை நிறைவேற்றும் நிலையில் வாழ்ந்திருந்தனர் என்பதற்குப் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான பெண்களின் **சுடுமண்பாவைகள** சான்றாதாரங்களாகின்றன.

குவாங்கோ நதிப் பள்ளத்தாக்கு நாகரிகம் (சீன நாகரிகம்)

உலகில் முதன்முதலாக மனிதன் தோற்றம்பெற்ற பிரதேசங்களுள் சீனாவும் ஒன்றாகும். வடசீனாவிலுள்ள **லௌகக்ஸ்** என்றழைக்கப்படும் **குகை** ஒன்றினுள் இருந்து காலத்தால் முற்பட்ட **சீன மனிதனின் மண்டையோடு** ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. அது பின்னர் **'பீக்கிங்' மனிதன** என பெயர் குறிப்பிடப்பட்டு அழைக்கப்பட்டது. இவ்வாறு சீனாவில் தோற்றம்பெற்ற மனிதன் வெளியுலகத் தொடர்புகள் பெருமளவிற்குக் குறைந்த நிலைமையிலும் நாகரிக வாழ்வு முறையினை சீன மனிதன் உருவாக்கியிருந்தான். நாகரிக வாழ்வானது சீனாவில் **குவாங்கோ நதிப் பள்ளத்தாக்கில்** முதன்முதலாகத் தோற்றம்பெற்றது. **'சீனாவின் துயரம்'** என அழைக்கப்படும் இந்நதியின் இருமருங்கிலும் தோற்றம் பெற்ற நாகரிக வாழ்க்கைமுறையானது அதன் வளர்ச்சிக்காலகட்டத்திலும் வெளியுலகத் தொடர்புகள் குன்றியநிலையில் காணப்பட்டிருந்தது. **இதுவே சீன நாகரிகத்தின் சிறப்பியல்புமாகும்.**

சீன நாகரிகத்தின் மற்றொரு முக்கியத்துவம் அது தோற்றம்பெற்ற காலத்திலிருந்து இற்றைவரைக்கும் வளர்ச்சி பெற்றுக்கொண்டு வருதாகும். ஆசியாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாகரிகம் என்ற வகையில் சீன நாகரிகம் மக்கள் வாழ்க்கையில் பெருமளவு செல்வாக்கினை ஏற்படுத்திநின்றது. சீன நாகரிக வாழ்க்கையின்போது உருவாக்கப்பட்ட பல தத்துவக் கோட்பாடுகள் இன்று ஆசிய நாடுகள் முழுவதிலுமே செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளது.

சீன நாகரிகத்தின் அடுத்த முக்கியத்துவம் நீர்ப்பாசனவியல் ரீதியான தொழில்நுட்பமுறைகளையும் அதன் உச்ச வளர்ச்சிக் கட்டங்களையும் உருவாக்கிக் கொடுத்தமையாகும். பேராசிரியர் நீடம் (Needhem) என்பவர் உலகிலே **சீனாவே அதியுன்னதமான நீர்ப்பாசனவியல** நுட்பத்தினை உருவாக்கிக் கொடுத்த நாடு எனக் குறிப்பிடுகின்றார். அவ்வகையில் குவாங்கோ நதிப் பள்ளத்தாக்கும் அதன் வளர்ச்சிக்குச் சவாலாக விளங்கிய **மஞ்சூரியாப் பாலைவனமும** சீன மக்களுக்குக் கடின உழைப்பினைக் கற்றுக் கொடுத்திருந்தன. அக்கடின **உழைப்புத்தேர்ச்சியானது குவாங்கோ நதிப் பள்ளத்தாக்கில** பெருநகரங்களைக் கொண்ட வாழ்க்கைமுறையை உருவாக்கிக் கொடுத்தது.

நாகரிகத்தைப் பற்றிய கண்டுபிடிப்பு

பல ஆண்டுகளாக மேலைத்தேய வரலாற்றாசிரியர்களுக்கு சீன நாகரிகத்தைப் பற்றிய பலத்த ஒரு சந்தேகம் இருந்து வந்தது. அதாவது 3000 ஆண்டுகாலப் பகுதிக்கு மேலான காலஎல்லையை இந்நாகரிகம் கொண்டிருந்ததா என்பதே அது சந்தேகமாகும். இந்நிலையில் சீன மருத்துவ நம்பிக்கைகளின்படி சகல நோய்களையும் தீர்க்கும் மருந்தான **சிங்க மனிதனுடைய** (Dragon) **எலும்புத்தூள்** புராதன சீன வைத்தியர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதனை அவ்வரலாற்றாசிரியர்கள் சான்றுகள் வாயிலாக அறிந்துகொண்டனர். அம்மருத்துவப் பாரம்பரியப் பின்னணியினை **எழுத்துக்கள் வரையப்பட்ட ஆமை ஓடுகளிலிருந்தும் பட்டுத்துணிகளிலிருந்தும்** சேகரித்துக் கொண்டார்கள்.

இந்நிலையிலேயே 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சீன மக்கள் முன்பு பயன்படுத்தியிருந்ததாகக் கருதப்படும் **வரிவடிவமுறை** பற்றிய அறிவு அவ்வாராய்ச்சியாளர்களுக்குக் கிடைத்தது.

எலும்புத் துண்டுகளிலும் ஓடுகளிலும் பதியப்பட்ட குறியீடுகளையும், எழுத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு சீன மக்களுடைய 3000 ஆண்டுகளாகப் பழமைமிக்க நாகரிக வரலாற்றினை ஆய்வாளர்கள் கண்டு பிடித்தனர். அதன் அடிப்படையிலேயே சீனாவில் குவாங்கோ பள்ளத்தாக்கில் நாகரிக வாழ்வு முறையை நான்கு முக்கியமான வம்சங்கள் ஏற்படுத்திக் கொடுத்திருந்தன. அந்த வம்சங்களான:

1. **சாங்வம்சம்**
2. **சௌவம்சம்**
3. **சின்வம்சம்**
4. **கான்வம்சம**

இந்நான்கு வம்சங்களையும் உள்ளடக்கிய குவாங்கோ நதிப் பள்ளத்தாக்கு நாகரிக வாழ்க்கை முறையானது கி.மு. 1700 இல் ஆரம்பித்து கி.பி. 206 வரையுள்ள காலப்பகுதி வரை நீடித்திருந்தது. 1973 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞானபூர்வமான குகை அகழ்வாய்வுகளின் அடிப்படையில் இவ்வம்சங்களின் நாகரிக வரலாறு சீனாவில் மேலும் துலக்கமடைந்தது.

சீன நாகரிகத்தின் காலம்

பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வரிவடிம் பொறிக்கப்பட்ட எலும்புத் துண்டுகள் **அன்யாங்** மாகாணத்தில் மேற்கொண்ட அகழ்வாய்களின்போது கண்டுபிடிக்கப் பட்டன. இவற்றிலிருந்து **2500** தனித்துமான சீன வரிவடிவங்களை இனம்காண முடிந்தது. இவற்றின் அடிப்படையில் சீன நாகரிகத்தின் வரலாற்றுக் காலத்தினை 3,300 வருடங்கள் பின்னோக்கிப் பார்க்கமுடிந்தது. ஆனால் சீன ஐதீக மரபுகளின்படி

கசியா (Hsia) என்ற வம்சமே சாங் வம்ச காலத்திற்கும் முன்னர் அதாவது கி.மு. 2200 - கி.மு.1700 இடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்திருந்தது எனக் கொள்ளப்படுகின்றது. ஆனால் இதனை உறுதிப்படுத்துதற்கான எவ்விதமான தொல்லியல் ஆதாரங்களும் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. இருந்த போதிலும் சீனாவின் வரலாறானது தொடர்ச்சியானதும் முடிவுறாததும் என்பதனை மட்டும் ஏனைய நதிக்கரை நாகரிங்களுடனும் நாடுகளின் வரலாற்றுடனும் ஒப்பிடும்போது தெளிவாகின்றது. **மாசேதுங், சாங்-கை-சேக்** போன்ற தலைவர்கள் வரையுமான சீனாவின் வரலாறானது நாகரிக வாழ்வின் முன்னோடியான பழைய அம்சங்களை அடித்தளமாகக் கொண்டிருந்தது என்பதனை இங்கு அழுத்திக் கூற வேண்டியதில்லை.

நாகரிகத்தின் பிரதான இயல்புகள்

சாங்வம்ச காலம்

சீன நாகரிக வரலாற்றில் சாங்வம்சகாலம் வரலாற்றுக் காலமாகவும், ஆரம்பித்திருந்ததனைக் காணலாம். சாங்வம்சத்தில் மஞ்சள் ஆற்றுப் பள்ளத்தாக்கு நாகரிக வளர்ச்சியின்மையாகத் திகழ்ந்தது. இவ்வம்சத்தினர் அடிக்கடி தமது அயலவர்களாக அநாகரிக இனத்தவருடன் போரில் ஈடுபட்டிருந்தனர். அவ்வடிப் படையில் உண்மையான அரசியல் அடிப்படையிலான அல்லது கலாச்சார அடிப்படையிலான சிறப்புத் தேர்ச்சி நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டியவர்களாக இருந்தனர். ஆனால் திட்டவட்டமாக சாங்வம்சத்தினருடைய அரசியல் புலத்தின் எல்லை எவ்வாறு இருந்தது என்பதனைத் தெளிவாகக் கூறமுடியாதுள்ளது. ஆனால் சாங்வம்ச காலத்திற்கு எல்லாவகையான செம்பினாலும் செய்யப்பட்ட பாத்திரங்கள் மஞ்சள் ஆற்றுப்படுக்கையில் இருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டன.

சாங் வம்சகாலத்தில் தலைநகராக விளங்கிய எனியாங் (Anuang) பெருவெள்ளத்தினால் அழித்துச்செல்லப்பட்டதன் காரணமாக இவ்வம்ச மன்னர் களுடைய தொடர்ச்சியான அரசியல் நாகரிக வாழ்வு முறையைக் காட்ட முடியாதுள்ளது. இருந்தபோதிலும் சாங் வம்ச மன்னர்களுடைய ஆட்சிக் காலத்தின்போதே எழுத்துமுறையின் உபயோகமும் சீனாவுக்கு அறிமுகப் படுத்தப்பட்டது என்பது தெளிவாயிற்று.

சௌவம்ச காலம்

சாங்வம்ச காலத்திலிருந்து சௌவம்ச காலத்திற்கு நாகரிக வாழ் மாற்றம் பெற்றுக்கொண்டமையானது சீன மக்களது நாகரிக வாழ்வில் ஏற்பட்ட பெருமாற்றங்களைக் குறித்து நிற்கின்றது. சிலர் இத்தகைய ஒரு மாற்றத்தினை செப்பின் உபயோகத்திலிருந்து இரும்பின் உபயோகத்திற்கு சீனா மாற்றம் பெற்றுச் சென்றமையைக் குறிப்பிடும் என்பர்.

சௌவம்ச காலத்தில் ஏற்பட்ட புதிய பொருளாதார அமைப்பு முறையின் கீழ் சீனரின் ஆற்றுப்பள்ளத்தாக்கு நாகரீகம் பெருவளர்ச்சி கண்டது. சௌவம்ச

காலத்து புதிய பொருளாதார (மானிய) முறைக்கேற்ப சமூக நிலையிலும் உற்பத்தி முறைகளிலும், அரசியல் நடவடிக்கைகளிலும் பெரு மாற்றங்கள் ஏற்பட்டன. புதிய போர் உற்பத்திகளும் மேலதிக (போர்க்) கருவிகளும் உருவாக்கப்பட்ட காலப்பகுதி இதுவாகும். சாங்வம்ச காலத்தில் சீன மக்கள் தமது மூதாதையர்களின் வழிபாட்டில் பெருமளவிற்கு ஈடுபட்டிருந்தனர். ஆனால் சௌவம்ச காலத்திலோ சீன மக்கள் அவ்வாறின்றி மனிதன் பற்றிய நோக்கில் தனது கவனத்தினைச் செலுத்தினான். இதனால் மனித நடவடிக்கைகளுக்கு மிடையிலான தொடர்புகள் பற்றி மக்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். அதன் விளைவாக சீன தத்துவஞானக் கருத்துக்கள் பல உதயமாக்கின. இப்பின்னணியே சௌவம்ச கால சீன நாகரிகமானது பெருவளர்ச்சி கண்டிருந்தது.

சௌவம்சமானது சீன நாகரிகத்தில் 867 வருடங்களாக 34 பிரதான ஆட்சிகளைக் கொண்டு பங்களிப்பினை ஆற்றியிருந்தது. இவ்வம்சமே மிக நீண்டகாலப் பகுதியைக் கொண்டிருந்தமையால் இக்காலம் கலை வளர்ச்சி ஏற்பட்ட காலமாகவும் விளங்கியது. சௌவம்ச காலத்தில் 55 பெரிய அரசுகள் சீனாவில் காணப்பட்டது. அவை மேலும் சில பிரிவுகளாக பகுக்கப்பெற்று 1000க்கு மேற்பட்ட சிற்றரசுகளாக, அவை ஒவ்வொரு நகர அரசும் இயற்கையான மலையரனினால் அல்லது பயிர்ச்செய்கைக்குதவாத சதுப்பு நிலங்களினால் பிரிக்கப்பட்டிருந்தன. இவ்வாறான இயல்புகளைக் கொண்டிருந்தது இவ்வரச அமைப்புக்குள் மிகப்பெரிய அரசாக விளங்கிய யாங்சி நதிப் பள்ளத்தாக்கில் அமைந்த அரசாகும்.

சௌவம்ச காலத்தில் சீன நாகரிகப் பரப்பில் தோற்றம் பெற்ற தத்துவக் கருத்துக்கள்

சௌவம்ச காலத்து சீன மக்கள் மனிதனது நடவடிக்கைகள் பற்றிய சிந்தனையில் இயற்கை - மனிதன் - சமுதாயம் - அரசு என்ற நிலையில் பல கோட்பாடுகளை உருவாக்கியிருந்தனர். அவ்வாறான ஒரு மாமனிதராக விளங்கியோரில் கொன்வூஸியஸ் என்பவர் முக்கியம் பெற்றிருந்தார்.

கொன்வூஸியஸ் போதனைகள் சிலவற்றை இங்கே காணலாம். அவையாவன.

1) ஏதாவது ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டே ஒவ்வொருவரும் தமது நம்பிக்கைகளை அல்லது விளைவுகளை நோக்கவேண்டும். விளைவு களை அல்லது சம்பவங்களை அதற்குரிய காரணங்களின் அடிப்படையிலேயே நோக்கிப் புரிந்துகொள்ளவேண்டும்.

2) வெறுமையிலிருந்து ஒன்றையும் இவ்வுலகில் உருவாக்கமுடியாது. ஆனால் கட்டுப்பாடும் ஒழுங்கும் மிகமிக அவசியமாகும்.

3) இந்த உலகிலே தோன்றிய பின்னர் உலக விவகாரங்களில் ஈடுபடாமல் உலகை விட்டு ஓடுவதில் அர்த்தமொன்றுமில்லை. அதனால் மனிதனுடைய நலனைக் கவனிக்காமல் காணாத ஒரு பொருளுக்கு எவ்வாறு தொண்டு செய்யமுடியும்.

4) ஒரு குறிப்பிட்டளவு எண்ணிக்கையைக் கொண்ட குடும்பங்கள் ஒரு சமூகத்தினைத் தோற்றுவிக்கின்றன. இச்சமூகத்தின் அத்திவாரம் ஒவ்வொரு குடும்பத்தின் கட்டுப்பாடான, ஒழுங்கான தன்மையை அடிப்படையாகக் கொண்டது. எங்கே ஒரு கட்டுப்பாடான வாழ்வுநெறி இல்லையோ அங்கு ஓர் ஒழுங்கமைப்புக் கொண்ட குடும்ப அமைப்பும் இல்லை என்பது பொருள்.

5) அறிவு என்பது ஒரு மனிதனது பூரண தத்துவத்தினைக் குறிக்கும். பூரண தத்துவ மனிதன் ஒரு மகா மனிதன் (Super Man) ஆவான். மகா மனிதனின் மூன்று முக்கியமான குணஇயல்புகள் நுண்அறிவு, துணிவு/கருணை என்பனவாகும்.

சௌவம்ச கால சீன நாகரிகப் பரப்பில் உருவான இன்னொரு தத்துவஞானி மென்சியஸ் என்பவராவர். இவர் கொன்வூஸினால் போதிக்கப்பட்ட பல போதனைகளில் நேரடியாகப் பங்குகொண்டு, பின்பு அவர்களது கொள்கைகளைப் பரப்புவராகப் காணப்பட்டார். மென்சியஸ் போதித்த போதனைகளில் அழகு யாதெனில், நடைமுறையில் ஏற்படக்கூடிய சிறந்த சமூகமாற்றம் பற்றியும் ஆகும். இவரது கருத்துக்கள் ஒன்று திரட்டப்பட்ட வடிவத்தில் மென்சியஸின் புத்தகங்கள் (Book of Mencices) என அழைக்கப்படுகின்றது.

மென்சியஸின சில தத்துவக் கருத்துக்கள் பின்வருமாறு:

1. ஒரு சமுதாயத்தின் அடித்தளம் அதன் அங்கத்தினர்களின் நல்ல நடவடிக்கையிலேயே தங்கியுள்ளது. ஆதலால் எந்நேரமும் நல்ல நடவடிக்கைகளையே சமுதாயத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும்.
2. சிறந்த மனிதர்கள் சமுதாயத்தின் தூண்கள். எங்கே நல்ல சிறந்த மனிதர்கள் இல்லையோ அங்கேயுள்ள முழுச்சமுதாயமே சீரழிவு நிலைக்குட்பட்டு அழிந்துபோகும்.
3. சமூகத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஒழுக்கமான மனிதர்களின் நிறுவனமே ஓர் அரசாங்கமாகும்.
4. மனிதர்கள் இயற்கையாகவே மிகவும் நல்லவர்கள். ஆனால் அவர்களை சூழ்நிலையும், சந்தர்ப்பமும் கெட்டவர்களாக மாற்றுகின்றது.
5. மன்னர்கள் எல்லோரும் கட்டாயம் தத்துவஞானிகளாக இருக்கவேண்டும். தத்துவஞானிகள் அரசர்களாக மாற்றம்பெற வேண்டும்.
6. அலட்சியமும் வறுமையுமே உலகப் பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படை.
7. போர் என்பது மனித இனத்தின் அழிவு.

சௌவம்ச காலத்தில் தாவேயிஸம் என்ற தத்துவக் கோட்பாடு தோன்றி வளர்ச்சி பெற்றிருந்தது. இக்கோட்பாடானது மனிதர் மத்தியிலே தோற்றக் கூடிய பிரச்சினைகளையே உள்ளடக்கமாகக் கொண்டது. லாவோ - டஸ்,

ஸீவாங் - ட்ஸீ ஆகியோரால் உருவாக்கப்பட்ட இக்கோட்பாடானது பெருமளவுக்கு யதார்த்தமின்மைக்கும் மனித வாழ்வுக்குமிடையிலான தொடர்புகள் பற்றியதாகும். இவ்வகைத் தத்துவஞானிகள் சீனாவில் முதன்முதலாக இவ்வுலகம் அல்லாத மறு உலகக் கோட்பாடுகளுடன் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

சின்வம்சம்

சீனாவின் நாகரிக வரலாற்றில் சின்வம்ச காலத்தினை முதற்பேரரசுக் காலம் எனக் குறிப்பிடுவர். இக்காலத்திலிருந்தே உண்மையான குவாங்கோ நதிப் பள்ளத்தாக்கு நாகரிகம் உச்சநிலையை நோக்கி வளர்ச்சிபெறுவதனைக் காணலாம். சின்வம்சத்தினைச் சேர்ந்த பேரரசர்கள் முதன்முதலாக குவாங் தீ என்ற விருதுப் பெயரினை சூட்டிக் கொள்வதனையும் காணமுடிகிறது. சீன மொழியில் தீ என்பதன் கருத்து பேரரசன் என்பதாகும். சௌவம்ச காலத்திலிருந்து பல அரசுகள் என்ற நிலைமையானது இப்பொழுது ஒடுக்கப்பட்டு ஒற்றுமைப் படுத்தப்பட்ட ஒரு பெரும் பேரரசு என்ற நிலையில் சின்வம்ச ஆட்சியாளர்கள் அரசியல் அமைப்பினை உருவாக்கிக் கொண்டனர். இதுவே சீனாவின் நாகரிக வளர்ச்சியில், பௌத்த சமயம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் உள்ள நிலையில் கலை வெளிப்பாடுகளை உருவாக்குவதற்கும் அடிப்படையாயிற்று. கலாச்சாரப் புரட்சி ஒன்று இக்காலத்தில் தோற்றம் பெற்றதாகக் குறிப்பிடுவர். மறைந்த மா.ஒ - சேதுங் என்பவர்கூட தமது கலாச்சாரப் புரட்சியின் அடிப்படையின் முன்னோடியாக சின்வம்சத்தைச் சேர்ந்த பேரரசனான ஸியா - குவாங் - தீ என்பவனது நடவடிக்கைகளையே கொண்டிருந்தார்.

சின்வம்ச காலத்தில் ஏற்பட்ட முக்கியமான நாகரீக வளர்ச்சி நிலைகள் எழுத்துக்கலை, கட்டிடக்கலை, சிற்பக்கலை என்பவை தொடர்பாக அமைந்திருந்தன. எழுத்துக்கலை மறுசீரமைக்கப்பட்டு சீனாவின் எழுத்துக்கலை தொடர்பான பாரம்பரிய மானிய அமைப்புமுறைக் காலத்தில் ஒவ்வொரு அரச முறைக்கேற்ப வேறுபட்டுக் காணப்படுகின்றது. இதனால் வேறுபட்ட அல்லது பிரத்தியேகமான அட்சரங்கள் கூட ஒவ்வொரு அரசியலும் உபயோகிக்கப்பட்டது.

இப்பொழுது சின்வம்ச காலத்தில் பல அரசுகள் என்ற முறை ஒடுக்கப்பட்டு ஒரு பெரும் பேரரசு என்பது தோற்றுவிக்கப்பட்டிருந்தது. பேரரசு எங்குமே ஒரே சீரான எழுத்தின் உபயோகம் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்றைரைக்கும் சீனாவில் உபயோகத்தில் இருந்துவரும் எழுத்துக்களுக்குரிய இறுதி வடிவங்கள் சின்வம்ச காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டன.

சின்வம்ச காலத்தில் முதன்முதலாக எழுத்துக்கலை சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டபோது இதுவரை எழுத்துக்கலையைப் பயிற்றுதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த மூங்கில் கழிகள் கைவிடப்பட்டன. இதற்குப் பதிலாகக் கடதாசி அறிமுகமானது. சின்வம்ச காலத்தில் ஏற்பட்டிருந்த மாற்றங்களுக் கெல்லாம் இது அடிப்படையாயிற்று. மேலிருந்து கீழாகவே எழுத்துக்கலையைக கடதாசியில் சீனர் பயின்றனர். ஒரே அணிக்குள் கொண்டுவரப்பட்ட பேரரசில்

எழுத்துக்கலையை ஒரே சீராக வைத்திருப்பதற்காக வேண்டி, சின்வம்ச பேரரசர்கள் இரும்பு வளையங்களினால் உருவாக்கப்பட்ட வண்டிகளை உபயோகிக்கும் மரபினை ஆரம்பித்து வைத்தனர். எனவே பேரரசில் வண்டிகளின் உபயோகமானது மாகாணங்கள் எல்லாவற்றினையும் ஒன்றிணைப்பதற்காக அமைந்தது மட்டுமல்லாமல் ஒரே சீரான செய்திப் பரிமாற்றத்திற்கும் வழிவகுத்திருந்தது. அறிவியற்துறை சார்ந்த கண்டுபிடிப்புக்கள் பரந்த சீனாவில் ஒரே நேரத்தில் பரவிக் கொள்வதற்கும் வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டன.

சின்வம்ச காலத்து கட்டிடக் கலைத்துறை பொறுத்து பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. அவற்றுள் உலக அதியங்களுள் ஏழுள் ஒன்றாகத் திகழும் சீனப் பெருஞ்சுவரும் ஒன்றாகும். உலகின் மிகப்பெரிய வம்சத்தினைச் சேர்ந்த முதலாவது பேரரசினால் உருவாக்கப்பட்டது. சீனப் பெரும் பேரரசினை மொங்கோலியர்களுடைய படையெடுப்புக்களிலிருந்து பாதுகாப்பதற்காக சீனாவின் வடபகுதியிலுள்ள பாதுகாப்பு அரண்களை இணைக்கு முகமாக மலைத் தொடர்களின் ஊடாகப் இப்பெரிய சுவர் அமைக்கப்பட்டது. இப்பெருஞ்சுவரானது 2,250 கிலோமீற்றர் உயரத்தினையுடையது. இப்பூமியில் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு சந்திரனில் நின்று பார்க்கும்போது தெரிவதென்றால் அது இச்சீனப் பெருஞ்சுவரே என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

நீர்வள நாகரிகத்திற்கு இந்தோ-ஆரியரது பங்களிப்புக்கள்

தென்னாசிய வரலாற்றில் ஆரியர் வருகை அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு பண்பாட்டு நிகழ்ச்சியாகும். இந்தப் பிரதேச நாகரிக வளர்ச்சியில் சில முக்கிய மாறுதல்களையும் முன்னேற்றங்களையும் அது புகுத்தியது. எனவே, இலங்கைக்கும் ஆரியர் வந்து நீர்ப்பாசன நிறுவனங்களை நிறுவிய வரலாற்றை நீர்ப்பாசன நாகரிக வரலாற்றுடன் இணைந்து நோக்கவேண்டியுள்ளது. இலங்கைக்கு வந்த ஆரியமக்கள் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்தமை யினால், அங்கு காணப்பட்ட தொழினுட்பத்தினை இங்கு கொணர்ந்தனர் எனலாம். ஆரியர் வருமுன்னரே, இந்தியாவில் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் பிறிதொரு நீரியல் நாகரிகம் நிலவியமை குறிப்பிடத்தக்கது.

ஆரியர் வருகையுடனேயே, இந்தியாவிலும் முதன்முதலாக நீரியல் நாகரிக வளர்ச்சி ஏற்பட்டதாகவும் இன்றுள்ள இந்திய நீரியல் பண்பாட்டின் முக்கிய அம்சங்கள் ஆரியருடையவையென்றும் அண்மைக்காலம்வரை கருதப்பட்டு வந்தது. ஆனால் கடந்த ஒரு நூறு ஆண்டுகளுக்குமுன் மொஹஞ்சதரோவிலும் சிந்துவிலும், பஞ்சாபிலுள்ள ஹரப்பா முதலான இடங்களிலும் நடாத்தப்பட்ட தொல்பொருள் அகழ்வுகளால் மேலே கூறப்பட்ட கருத்துக்கள் தவறானவையென நிறுவப்பட்டன. ஆரியர் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, ஒரு பழம்பெரும் நாகரிகம் அப்பகுதிகளில் நிலவியதற்கான சான்றுகள் நிறையக் காணப்பட்டன. ஆரியரின் நாகரிகத்தினின்றும் வேறுபட்டதும், சில வகைகளில் மேம்பட்டதுமான அம்சங்களைக் கொண்ட நாகரிகம் மொஹஞ்சதரோ, ஹரப்பா ஆகிய இடங்களில்

நிலவியமையை நாம் ஏற்கனவே அறிந்துள்ளோம். ஆதிகாலத்தில் சுமேரியா, மெசொப்பத்தேமியா ஆகியவற்றில் காணப்பட்ட நாகரிகத்துக்கும் மொஹஞ்ச தரோ - ஹரப்பா நாகரிகத்துக்கும் பல ஒற்றுமைகள் காணப்பட்டன. எகிப்து, அசீரியா, பாபிலோனியா ஆகிய நாடுகளில் ஆதிகால நாகரிகங்கள் விளங்கிய அதே சமகாலத்தில், இந்தியாவில் சிந்துப் பள்ளத்தாக்கு நாகரிகமும் சிறப்புடன் நிலவியது. ஏறத்தாழ கி.மு. 3000 ஆண்டுக்கு முன்னரே அந்த நாகரிகம் இருந்ததெனலாம். எனவே, இன்றுள்ள இந்தியப் பண்பாடு, தனியே ஆரியரின் பண்பாட்டு அம்சங்களைக் கொண்டிராது, அவர்களுக்கு முந்திய சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் நீர்ப்பாசனவியல் அடிப்படைகளையும் கொண்டு கலந்துள்ளதென்றே கூறல்வேண்டும்.

மொஹஞ்சதரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வுகளால் இந்திய வரலாறு புரட்சிகர மாறுதலையடைந்து விட்டது. ஆனாலும் இவ்வாதாரங்களால் இந்த நாகரிகத்துக்குரிய மக்களின் இனம் தெளிவாகவில்லை. இவர்கள் திராவிடர்களே எனக் கருதுவோர் பல ஆதாரங்களைக் காட்டுவர். இக்கருத்து அண்மைக்காலத்தில் வலுப்பெற்றுவரினும், இதுபற்றிக் கருத்தொருமைப்பாடு இன்னும் ஏற்படவில்லை. சுமேரியா, மெசொப்பத்தேமியா என்பனவற்றைச் சேர்ந்த பழைய நாகரிகத்துடன் சிந்துப் பள்ளத்தாக்கு நாகரிகம் நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தல் வேண்டும் எனக்கூற, இவையிரண்டுக்குமிடையேயுள்ள ஒற்றுமைகள் சான்றாக உள்ளன. ஆயின், சுமேரியருடைய நாகரிகமே இந்தியாவுக்குப் பரவியது எனக் கூறுதற்குச் சான்றுகள் போதவில்லை. மொஹஞ்சதரோ மக்களின் மதம் பற்றியும் அதிக தெளிவு ஏற்படவில்லை. பிற்காலச் சிவ வழிபாட்டுடனும், சக்தி வழிபாட்டுடனும் தொடர்புடையதாக இவர்களுடைய மதம் காணப்படுகின்றது எனக்கருதப்படுகிறது. சைவசமயத்தில் இன்றுள்ள பண்புகள் சில மொஹஞ்சதரோ ஹரப்பா மக்களது மதத்திலும் வழிபாட்டு முறைகளிலும் காணப்படுகின்றன. ஆவி வழிபாடு வழக்கிலிருந்ததைக் காட்டும் சான்றுகளும் உள்ளன.

இம்மக்களின் அரசியல் வரலாற்றைப் பற்றிக் கூறுவதற்கு நேரடியான ஆதாரங்கள் இல்லை. ஆட்சிமுறையில் மதகுருவினதும் பிரபுத்துவத்தினதும் ஆதிக்கம் நிலவியதை மட்டும் சில சான்றுகள் அறிவுறுத்துகின்றன. வணிகத்தால் பெற்ற செல்வச் செழிப்புடன் மொஹஞ்சதரோ மக்கள் விளங்கியுள்ளனர். அரண்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு சிதைவுகள் கிடைத்துள்ளதால், மத்திய வல்லாட்சிமுறை இருந்திருத்தல்கூடும் என ஊகிக்கப் படுகின்றது. மொஹஞ்சதரோவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் (Seals) உள்ள குறியீடுகளை அல்லது எழுத்துக்களை விளங்கிக்கொண்டால் நிறுவனமயப்படுத்தப்பட்ட வாணிப முறையைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் சிறந்த நாகரிகத்தின் நிலைக்களனாக விளங்கிய ஒரு நகரே, 'இறந்தோர் மேடு' (மொஹஞ்சதரோ) என்ற ஒரு மேட்டினுள் மறைந்திருந்தது. சேர் ஜோன் மார்ஷல் முதலானோரால மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழ்வுகள் மறைந்த நகரின் சிறப்புக்களை

எல்லோரின் கவனத்துக்கும் வியப்புக்கும் உரியவையாக்கின. நன்கு நிருமாணிக்கப்பட்ட அழகிய கட்டிடங்களைக் கொண்ட நகர் ஒன்று மறைந்திருந்தமை தெரியவந்தது. சுமார் 30 அடி அகலமுடைய வீதிகளையும், திறமையுடன் அமைக்கப்பட்ட வடிகால் திட்டத்தையும் உடைய ஒரு சிறந்த நகராக அது தென்பட்டது. காற்றோட்ட வசதியும், முற்றம், பாவிய நிலத்தளம், குளிப்பறை என்பவற்றையுமுடைய, சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகள், வீதிகளின் இருமருங்கும் வரிசையாகக் காட்சி தந்தன. நகரிலுள்ள கட்டிடங்களுள் மிக முக்கியமானது பெருந்தொட்டி (Great Bath) எனப்படும். ஒருவித கேணியாகும். 180 அடி நீளம் 108 அடி அகலமுடைய பரந்த வெளியைக் கொண்ட உள் முற்றமும், முற்றத்தின் நடுவில் 39 அடி நீளம், 23 அடி அகலம், 8 அடி ஆழம் ஆகியவற்றையுடைய நீச்சல் கேணியும், இதைச் சுற்றிவர படியடுக்கும் அறைகளும் காணப்படுகின்றன. இக்கட்டிடத்தின் உறுதியும் அழகும் இன்றும் எம்மை வியப்பில் ஆழ்த்தவல்லவை. இக்கட்டிட அமைப்புக்களின் சிறப்பும் நிருமாணத் திறமையும் துப்புரவு விருப்பும் மொஹஞ்சதரோ நகரின் தனிச் சிறப்புக்களாகும். இவற்றால், இந்நகரில் செல்வச்செழிப்புடைய வணிக மக்களே வாழ்ந்திருத்தல் கூடும் எனவும், திறமையுடைய நகராண்மைக்கழகம் நகரின் ஆட்சியைக் கவனித்திருக்கும் எனவும் ஊகிக்கப்பட்டுள்ளன.

சூளைகளில் செங்கற்களைச் சுடுதல் போன்ற தொழில்நுட்பங்களையும், கட்டிட அமைப்பு, தொழில்வகைகள் வணிகம் யாவற்றையும் அறிந்து தேர்ச்சி பெற்றவர்களாக மொஹஞ்சதரோ மக்கள் விளங்கினர். பொதுவாகக் கூறுமிடத்து, நகர்களை மையமாகக்கொண்டு எழுந்த ஒரு நாகரிகமாக இந்த நாகரிகம் விளங்கியது. இந்த நாகரிகத்தின் அம்சங்கள் பின்னர் வந்த இந்தோ ஆரியரால் கைக்கொள்ளப்பட்டு, முழு இந்தியப் பண்பாட்டுடன் கலந்துவிட்டன. இலிங்க வழிபாடு, யோகமார்க்கம், பக்தி மார்க்கம், ஆவி வழிபாடு இவ்விரு நாகரிகங்களின் பொதுத் தன்மைகளாகும். எனவே இந்த அம்சங்களை ஆரியர், சிந்துப் பள்ளத்தாக்கு மக்களிடையே பெற்றிருத்தல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

கி.மு. 1500 அளவில் மேற்கு இந்தியாவூடாக வருகை தந்த இந்தோ-ஆரியர் சிந்துப்பள்ளத்தாக்கு மாந்தரின் வாழ்வியற் கோலங்களை தரைமட்டமாக்கி - அழித்து முன்னேறி வந்திருந்த போதிலும் அம்மக்களது நீர்ப்பாசன தொழினுட்பத்தினையும் ஜீவனோபாய உத்திகளையும் இந்தோ - கங்கைச் சமவெளிப் பள்ளத்தாக்கினூடாக தென்னாசியாவிற்கு பரப்பி வைத்தனர். அப்பரவலுக்கு குதிரையும் இரும்பு உலோகமும் அடிப்படைகளாயின.

அத்தியாயம் : ஆறு

விலங்குவேளாண்மைக் குதிரைக் (Horse riders as cattle keepers) குழுமங்களின் வருகையும் கீழைத்தேயத்தில் அவர்களது குடியேற்ற நடவடிக்கைகளும்

ஆரியர் வருகை பற்றிய மரபுகளும் அம்மக்கட்கூட்டத்தினரது குடிப்பரவல், குடிப்பண்புகள், சமய-நம்பிக்கைகள் மற்றும் வணக்க முறைகள் யாவும் அவர்களது பிரதான போக்குவரத்து ஊடகமாகத் திகழ்ந்த குதிரை என்ற அதிவேக விலங்கினையும் இரும்புருக்கினாலான மிகக்கூரிய கருவிப் பயன்பாட்டினையும் மையப்படுத்தியே உருவாக்கப்பட்டிருந்தமையைக் காணலாம். அதிவேகமாக ஓடக்கூடிய விலங்கான குதிரையானது அம்மக்கட் கூட்டத்தினருக்கான ஜீவனோபாயத்தின் மூலமாகத்திகழ்ந்த மாட்டுமந்தை விலங்குத்தொகுதியின் பராமரிப்பு, பாதுகாப்பு, மேய்த்தற் செயற்பாடு போன்றவற்றிற்கு பெரிதும் பயன்பட்டது. மந்தை மேய்த்தல் ஆரியமக்கட் தொகுதியின் மிகப்பிரதான தொழிலாக விளங்கியமையின் பின்னணியில் மேய்த்தற் தரவை அவர்களுக்கு இன்றியமையாத ஒரு தளமாயிற்று. வடஇந்தியாவிலுள்ள இந்தோ-கங்கைச் சமவெளியானது இம்மக்கட் கூட்டத்தினருக்கான அத்தேவையை மிகப்பொருத்தமான வகையில் நிறைவு செய்தது.

அந்த அடிப்படையில் கீழைத்தேயத்தில் இம்மக்களது முதற்குடியேற்றம் இந்தோ-கங்கைச்சமவெளியில் நிகழ்ந்தேறியது. இந்நிகழ்வு கி.மு. 1500 ஆம் ஆண்டிலிருந்து கி.மு. 600ஆம் ஆண்டுவரைக்கும் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. அக்காலகட்ட மக்கள் வாழ்வில் ஏற்பட்ட அபிவிருத்திகள் மற்றும் சமுதாய உருவாக்கங்கள், சமயங்களின் தோற்றங்கள் ஆகியன முதலில் வடஇந்தியாவிலுள்ள இந்தோ-கங்கைச் சமவெளியில் தோற்றம்பெற்று அங்கிருந்து படிப்படியாக இந்திய உபகண்டத்தின் தெற்கு நோக்கியும் தென்கிழக்கு நோக்கியும் பரவத் தொடங்கியமையின் பின்னணியில் வாணிபம் மிகப்பிரதானமான ஓர் ஊடகமாக தொழிற்பட்டிருந்தமையைக் கண்டுகொள்ளமுடியும்.

நிறுவனமயப்படுத்தப்பட்ட வாணிபக் கட்டமைப்பு இறுதியில் அரசநிறுவனங்களின் உருவாக்கத்திற்கு வழிவகுத்ததோடு வளமான நிலத்தொகுதியினை படிப்படியாக உருவாக்கப்பட்ட இராணுவ நிறுவனங்கள் கொண்டிருந்த பலத்தின் அடிப்படையில் கட்டுப்படுத்தவும் தொடங்கியிருந்தது. இதனால் ஆரியப்பேரரசுகள

தோற்றம்பெற்றன. முடியரசுகளும் குடியரசுகளுமாக அவை தோற்றுவிக்கப் பட்டிருந்தன. கி.மு.6ஆம் நூற்றாண்டில் அத்தகைய 16 அரசுகள் இந்தோ-கங்கைச் சமவெளிப் பள்ளத்தாக்கில் நிலைபெற்றிருந்து, இந்தோ-ஆரியப் பண்பாட்டின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பரவலுக்கும் வித்திட்டிருந்தமையைக் காண்கின்றோம். பிற்காலத்தில் இப்பிராந்தியம் ஆரியவர்த்தம் என அழைக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் வறாட்டித் தொழிலின் ஆரம்பம் (ஆரியர் வருகை)

இலங்கையிற் குடியேறிய ஆரியர் இந்தியாவிலிருந்தே வந்தனர் என முன்னர் நம்பப்பட்டது. ஆனால் இந்தியாவும் அவர்களது தாயகமன்று, இந்தியாவுக்கும் அவர்கள் ஒருகாலத்தில் குடியேறிகளாக மேற்கிலிருந்து வந்தவர்களே ஆவர். இலங்கைக்கு அவர்கள் வந்த காலத்துக்கும் (கி.மு. 500 அளவில்) ஏறத்தாழ இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், அவர்கள் வடமேற்கு இந்தியாவில் குடியேறலாயினர். வடஇந்தியாவில் இன்று வாழும் பெரும்பாலான மக்கள் அவ்வாறு குடியேறிய ஆரியக் கூட்டத்தினரின் வழிவந்தவர்களே என இதுவரையில் கூறப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது அக்கருத்துக்கள் மெல்லமெல்ல மறுதலிக்கப்படுகின்றன. இக்கூட்டத்தினர் தாம் புறப்பட்ட இடத்திலிருந்து **அக்கினியை** வறாட்டித் தொழிற்செயற்பாட்டின் (cow dung disk for fire/ fuel [Aghni] purpose) அடிப்படையில் நகர்த்தி வந்திருந்தமையையும் பேணி வந்திருந்தமையை யும் காணமுடிந்தது. இக்காரணத்தினாலேயே மந்தை மேய்த்தற்றொழில் இந்தோ-ஆரியரது வாழ்வின் உயிரோட்டமாக அமைந்து கொண்டமையைக் காணமுடிந்தது.

'ஆரியர்' என்ற சொல் ஓர் இனத்தைக் (Race) குறிப்பதற்குப் பொது வழக்கில் உபயோகிக்கப்படினும், உண்மையில் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பல மொழிகளைப் பேசும் மக்களைக் குறிக்கவே இன்று அது பயன்படு கின்றது. இந்தியாவுக்கு ஆரியர் வருவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் **ஒரு பொதுத் தாயகத்திலிருந்து (ஹங்கேரி, தெற்கு ரஷ்யா, மத்திய ஆசியா என்பவற்றுள் ஒன்று)** புறப்பட்ட ஆரியர் கூட்டத்தவர் மேற்கு நோக்கியும், கிழக்கு நோக்கியும் இரு பிரிவுகளாகப் புலம்பெயர்ந்து செல்லலாயினர். கிழக்கு நோக்கிய பிரிவினரே இந்தியாவினுள், கி.மு. 2500க்கும் 1500க்கும் இடைப்பட்ட ஒரு காலத்தில் புகுந்து, குடியேற்றங்களை நிறுவலாயினர். மேற்கு நோக்கிச் சென்றவர்கள் கிரேக்கம் முதலான பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றனர். இவ்வாறு **இந்தியாவிலும், ஐரோப்பாவிலும்** இம்மக்கள் பரந்து குடியேறியதால், இவர்களை **இந்தோ - ஐரோப்பியர்** என அழைப்பர். இந்தியாவுக்கு வந்தபின்னரே தம்மை எதிர்கொண்ட சுதேச மக்களை, **'தாஸ்யுக்கள்'** (அடிமைகள்) எனவும், தங்களை **'ஆரியர்'** (உயர்ந்தோர்) எனவும் தங்களைத் தாங்களே அழைக்கலா யினர். **இன்று சமஸ்கிருதம் (வடமொழி), பாரசீகம், கிரேக்கம், இலத்தீன், கொத்திக் போன்ற மொழிகளையோ அன்றி இவற்றின் வழிபிறந்த ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன், வங்காளி, குஜராத்தி, ஹிந்தி, சிங்களம் போன்ற மொழிகளையோ பேசும் மக்களைத் தொகுத்து 'ஆரியர்' என**

அழைப்பர். எனவே, இலங்கையில் உள்ள சிங்களவர்களைக்கூட ஆரிய இனத்தைச் சேர்ந்தவர் எனக் கூறுகின்றனர். ஆரியமொழிக் குடும்பத்தினர் பேசும் மொழிகளில் ஒன்றை இம்மக்கள் பேசுவதனால் சிங்களவரையும் ஆரிய இனத்தினராகச் சேர்த்துக் கொள்ளலாமேயன்றி, இன அடிப்படையில் அவர்களில் பல கலப்புக்கள் உண்டு என்பதனையும் நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். **(உண்மையில், இனத்தூய்மை என்பது இன்று எந்த நாட்டிலும் இல்லை என விஞ்ஞானரீதியாக நிறுவப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது).**

'ஆரியன்' என்னும் பதம், ஒரு மொழியியல் தோற்றப்பாட்டை, இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பத்தை, இந்திய வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட அமிசத்தை அதாவது இந்திய வரலாற்றையும், பண்பாட்டையும் உருவாக்குவதில் வேதகால ஆரியர்களின் பங்கை, இந்து பௌத்த சிந்தனையில் **'ஆரிய'** என்னும் எண்ணக் கருவை வெளிப்படுத்துவற்கு குறிக்கப்படுகின்றது. **இப்பதத்தின் பூரணமானதும் சரியானதுமான கருத்து ஏ.எல். பஷாம், றோமிலோ தாப்பர் ஆகியோரின் நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட விரிவான பகுதிகளின்மூலம் சிறப்பாகத் தெளிவாக்கப்பட்டுள்ளது.**

'ஆரியரும் திராவிடரும் பற்றிப் பேசும்போது என்ன கருதுகிறோம் என்பது பற்றி நாம் உறுதியாக இருத்தல்வேண்டும். இந்தியப் பின்னணியிலே **'ஆரியர்'** என்னும் பதம் மூலம் முதலாக கி.மு. இரண்டாயிரம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்தியாவை வந்தடைந்த உறவினரைக் கொண்ட குழுவின் பெயராயிருந்தது. இவர்களுள் சிலர் இருக்குவேதப் பாடல்களை யாத்துள்ளனர். இக்காலத்தில் அப்பதம் ஏறக்குறைய இனவாதக் கருத்தைக் கொண்டிருந்தது. பின்னர் இப்பதம் ஆரம்ப இந்துமதத்தோடு இணைந்த வகுப்புகளையும், ஆச்சிரம தர்மத்தையும் (வர்ணாச்சிரம தர்மம்) சிறப்பாகப் பின்பற்றி ஒழுகிய ஒருவனைக் குறித்தது. அவர் உபநயனச் சடங்கை (பூணூல் அணியும் விழாவை)ப் பூர்த்திசெய்த பிராமண, சைத்திரிய அல்லது வைசிய குலத்தைச் சேர்ந்தவராவர். கௌடில்ய அர்த்த சாஸ்திரம் (13) ஆகக் குறைந்தது ஒரு செய்யுளிலாயினும், சிறப்பாக மிகவுயர்ந்த சூத்திரனையும் இப்பதத்தினுள் அடங்கியுள்ளது. பௌத்தர்கள் ஆரிய என்னும் பதத்தை விரிவான கருத்தில் பயன்படுத்தினர். அவர்களுடைய இலக்கியங்களில் இப்பதம் பெரும்பாலும் 'அதி உத்தம' அல்லது 'மேன்மை மிக்க' என்ற கருத்தையே குறித்தது. உதாரணமாக **சத்தாரி ஆரிய சச்சானி** அதாவது **நான்கு 'மேன்மையான உண்மைகள்'** அவ்வாறான இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வழக்காற்றுக்கு இணங்க தமிழ்ப் பிராமணன் ஒரு ஆரியனே. மேலும் பொதுவாகத் தமிழில் அநேக பெயர்களுடன் இணைத்து வழங்கப்படுகின்ற **'ஐயர்'** என்னும் கௌரவச் சொல் உண்மையில் **ஆரிய** என்னும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து வந்ததாகும்.'

19-ம் நூற்றாண்டில் இந்தியவியல் ஆய்வுகள் மூலம் எழுந்த செல்வாக்குமிக்க கோட்பாடு ஆரிய இனம் பற்றிய கோட்பாடாகும். **ஈரானிய - அவேஸ்தான்** இலக்கியங்களிலும் வைதீக சமஸ்கிருத இலக்கியங்களிலும் ஆரிய என்னும

பதம் இனரீதியான கருத்தில் ஆரிய இனத்தைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆரியர் உடலமைப்பில் நாட்டு மக்களிலிருந்து வேறுபட்டவர்களாகவே வர்ணிக்கப்பட்டனர். அவர்கள் இந்தோ ஐரோப்பிய மொழியைப் பேசியதிலிருந்து அவர்களது பண்பாட்டுச் சிறப்பியல்பு கண்கூடாயிற்று. இந்தோ ஐரோப்பிய இனமொழிக் குழுவின் ஒரு பிரிவாகக் குறிப்பிடப்பட்ட பெருந்தொகையான ஆரியர் கி.மு. இரண்டாயிரம் ஆண்டிலே வட இந்தியாவை ஆக்கிரமித்து அப்பிரதேச மக்களை அடிமைப்படுத்தி இந்தியப் பண்பாட்டின் அடித்தளமாக மாறிய வேத ஆரிய பண்பாட்டை நிறுவினர்.

இக்கோட்பாட்டைத் தீவிரமாக முன்வைத்தவர்களுள் ஒருவரான **மாக்ஸ்முல்லர்** காலத்திலும் மொழியை இனத்துடன் இனங்காணுதல் ஒரு விதண்டாவாதமாகவே கருதப்பட்டது. **மாக்ஸ்முல்லா** தமது பிற்கால எழுத்துக்களில் இத்தகைய இனங்காணுதலை நிராகரித்தபோதும், அக்கருத்து வேரூன்றிவிட்டதால் அவரது நிராகரிப்பு காலங்கடந்தது ஆயிற்று. **'ஆரிய'** என்னும் பதம் இலக்கியங்களில் உயர்நிலையிலிருந்த கௌரவமான மனிதனையும், வேதப் பொருளடக்கத்தில் சாதிவிதிகளைக் கடைப்பிடித்ததோடு சமஸ்கிருத மொழியைப் பேசிய ஒருவனையும் குறிப்பிடுவதாயிருப்பதனால் அப்பதத்திற்கு இனத்துவப் பொருள்கொள்ள வேண்டு மென்பது விந்தையானது. **தாசர்** உடலமைப்பில் ஆரியரிலிருந்து வேறுபட்டவர் களாக வர்ணிக்கப்பட்டிருக்கும்போது இருக்குவேதத்தில் **'ஆரிய', தாச** என்னும் இரு பதங்களும் **எதிர்க்கருத்துள்ள பதங்களாகக** குறிப்பிட்டிருப்பதனால் அவற்றிற்கு இனத்துவக்கருத்து அளிக்கப்பட்டிருக்கலாம். இந்த இரண்டு பதங்களும் இரு இனவகைகளைக் குறிப்பதெனப் பொருள்கொள்ளப்பட்டது. ஆரியர் பிற்காலத்தில் மூன்று உயர்சாதிகளாக மாறினர். தாசர், 'சூத்திரர்' என்போர் கீழ்ச்சாதியாகவே இருந்தனர். இவை ஒவ்வொன்றினதும் இனத் தனித்துவம் சாதிகளிடையே கலப்புத் திருமணத்தைத் தடை செய்ததன்மூலம் பேணப்பட்டது. ஆரியரின் முதன்மைத்துவம் அவர்கள் தாசரை வெற்றிகரமாகத் தோற்கடித்ததன் காரணமாகக் கிடைக்கப்பெற்றதெனக் கூறப்பட்டது. வர்ண என்னும் பதம் சொல்லிலக்கண ரீதியாக நிறத்துடன் இணைத்து சமூகத்தின் சாதியமைப்பைக் குறிக்கின்ற கலைச்சொல்லாக வழங்கலாயிற்று. இது ஆரிய இனக்கோட்பாட்டை ஆதரிப்பதற்கு இன்னொரு நியாயவாதமாகப் பயன்படுத்தப் பட்டது. இதன் மூலம் சாதிபேதத்திற்கு ஒரு விஞ்ஞானபூர்வமான விளக்கமளிக்கப் பட்டதாக நம்பப்பட்டது. அதாவது நான்கு பிரதானமான சாதிகளும், முக்கியமான இனக்குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தின. இவ்வினக்குழுக்களின் தனித்துவம் கலப்புத் திருமணத்தைத் தடை செய்ததன் மூலமும், சாதித் தகுதிநிலைக்கு பிறப்பை ஒரே உரைகல்லாக ஆக்கியதன் மூலமும் பேணப்பட்டது. ஐரோப்பாவிலே 19-ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் கொபினோவின் (Gobineau) கோட்பாட்டு அடிப்படையில் இனம்பற்றிய உரையாடல்களிலும் சமூகப் பரிணாமத்தில் அதிகரித்துவந்த ஈடுபாட்டிலும் கவனம் செலுத்தப்பட்டது. இந்தியவியலாளரிற் சிலர் இதுபற்றி எதுவும் அறியாதிருந்தனர். இந்தியச் சூழ்நிலைக்கேற்ப அவர்களால் முன்வைக்கப்பட்ட ஆரியருக்கும் ஆரியரல்லாதோருக்கும் இடையிலான வேறுபாடும்,

ஆரியர் திராவிடர் என்னும் எதிர்முனைவுகளும் ஐரோப்பியப் பின்னணியில் மொழி, இனம் ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்த ஆரியர்- ஆரியரல்லாதோர் வேறுபாட்டிலும் ஆரிய-செமிட்டிக் இருமையிலும் ஓரளவு எதிரொலித்தது. இவை எவ்வகையிலும், யதேச்சையான இரு ஒத்த நிகழ்வுகள் எனக்கருதமுடியாது. கருதிய சமுகப்பிளவும் குறிப்பிடத்தக்களவு ஒத்தே இருந்தது. உயர் சாதியினர் ஆரியராயும், கீழ்ச்சாதியினர் ஆரியரல்லாதோராயுமிருந்தனர்"

இந்தியாவுக்கு வந்த ஆரியர் வடமேற்கு எல்லையிலுள்ள மலைத்தொடர்களான **போலன், கைபர்** முதலான கணவாய் களினூடாகக் கடந்து, இந்துச் சமவெளியிற் குடியேறலாயினர். **மொஹஞ்சதரோ, ஹரப்பா** ஆகிய இடங்களுக்கும் மேலேயுள்ள சமவெளியிலேயே ஆரியரின் முதற்குடியேற்றம் அமைந்தது. இவ்வாறு அவர்கள் குடியேறிய காலம் கி.மு. 1500க்கு முன்னரேயெனக் கணக்கிடப் பட்டுள்ளது. மேற்காசியாவில் **போகஸ் கோய** (Bogaz Keui) போன்ற இடங்களில் காணப்பட்ட கி.மு. 14ம் நூற்றாண்டைச் சேர்ந்த சில **கற்பொறிப்புக்களில** ஆரியப் பெயர்களும், **இந்திரன், மித்திரன், வருணன** போன்ற **ஆரியக் கடவுள்களைப** பற்றிய குறிப்புக்களும் இருப்பதைக் கொண்டே, ஆரியர் இந்தியா வுக்கு வந்த காலத்தை ஓரளவுக்குக் கூறமுடிகின்றது. **இருக்குவேத காலத்தில் ஆரியக் கூட்டத்தினர் காபுல் முதல் கங்கைவரை பரந்து வாழ்ந்தனர்.** ஆரியருடைய குடியிருப்புக்களினூடாக முதலில் தோன்றிய அரசுகள் படிப்படியாக வளர்ச்சிபெற்று அயலிலுள்ள அரசுகளைத் தோற்கடித்து, விசாலமடைந்தன. இதே வேளையில், ஆரியரின் அரசியல்மற்றும் கலை - பண்பாட்டு ஆதிக்கமானது, இந்திய உபகண்டத்தில் தெற்குநோக்கியும் கிழக்குநோக்கியும் விரிவடைய லாயிற்று. வேதகால இறுதிக்குள் **யமுனை, கங்கை, நர்மதா, தப்தி** ஆகிய நதிகளுக்கு இடைப்பட்ட சமவெளிகளில் அவர்களின் அரசுகள் வியாபித்திருந்தன. ஒரு சில மக்கள் கூட்டங்கள் **விந்தியமலைச் சாரலிலுள்ள காடுகளைக் கடந்து, தக்கணத்துட் புகுந்து, அங்கும் கோதாவரியாற்றுக்கு வடக்கே சில அரசுகளை நிறுவின.** மத்தியபகுதியில் கௌரவர், பாஞ்சாலர் முதலான ஆரியர் குழுமங்கள் ஆதிக்கம் செலுத்தின. கோசலர், விதேகர், விதர்ப்பர் முதலான குழுமங்கள் தெற்கிலும், கிழக்கிலும் உள்ள பகுதிகளில் அரசுகளை நிறுவின. இவ்வரசுகள் அவ்வக்குழுக்களின் பெயரையே பெற்றன. (எ-டு: கோசலர் நிறுவிய அரசு கோசலம் எனப்பட்டது) எனவே, ஆரியர் படிப்படியாக வடஇந்தியா முழுவதையும், தக்கணத்தில் ஒரு சில பகுதிகளையும் தமதாதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தனர். இவ்வாறு அவர்களின் ஆதிக்கம் முழு வடஇந்தியாவிலும் பரவச் சுமார் ஆயிரம் ஆண்டுகள்வரை சென்றன. ஆரியர் இவ்வாறு தமது ஆதிக்கத்தை விரிவுபெறச் செய்து வந்த காலத்திலேயே இலங்கைக்கும் அவர்கள் வரலாயினர்.

இதுவரை வரலாற்றுக்கு முற்பட்ட அபிவிருத்திகள் பற்றிய எமது பொருள் விளக்கத்தில் இரு பெரும் கருதுகோள்கள் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. முதலாவது, இலங்கைக்கு **'ஆரியர் வருகை'** என்னும் அலை. அவர்கள் வட

இந்தியாவின் மேற்கு, கிழக்குப் பிரதேசங்களிலிருந்து கடல் வழியாக இங்கு வந்து குடியமர்ந்தனர். அவர்கள் இங்கு வந்தபோது ஏர்முறைப் பயிர்ச்செய்கை, நீர்ப்பாசன முறை, இரும்பின் பயன்பாடு முதலியவை பற்றிய மூல அறிவையும் பிற்காலத்தில் சிங்கள மொழியாக்க விருத்தி பெற்றதின் அடிப்படைக் கூறுகளையும் தம்முடன் கொண்டுவந்தனர். அவர்கள் நதிக்கரையோரங்களில் குடியேறிப் பெரும்பாலும் இலங்கை பூராவும் தமது கிராமக் குடியிருப்புக்களை நிறுவினர். இரண்டாவது இந்த இரும்புக்காலக் குடியேற்றவாசிகள் இங்கிருந்த வரலாற்றுக்கு முற்பட்டகால இலங்கை பூர்வீகக் குடிகளின் இடத்தில் குடியமர்ந்தோ அல்லது அவர்களுடன் ஒன்றுகலந்தோ படிப்படியாக, ஆனால் விரைவாகத் தமது பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் வரலாற்றுக்கால நாகரிகமாக விருத்தி செய்தார்கள். இக்கருதுகோளமைப்பின் இன்னொரு அமிசமும், தரமான வரலாற்றுக் கட்டுரைகளில் பெரும்பாலும் குறிப்பிடப்படாத விடயமும் யாதெனில் 'அந்நிய' ஆக்கிரமிப்பாளராகவும் அநேகமாக சிறுபங்கு வகிப்பவர்களாகவும் காட்டப்படுகின்ற தென்னிந்தியர் அல்லது திராவிடர் இங்கு குடியேறி வாழ்தலாகும். இத்தவறான படத்தை விமர்சனரீதியாகத் திருத்தியமைத்தலானது 'புலம்பெயர்வுக்' கருதுகோளின் முக்கியத்துவம்பற்றி அடிப்படையாகக் கேள்வி எழுப்பாது தென்னிந்தியர்களை அதனிலும் பார்க்க முக்கிய பங்கு வகிப்பவர்களாகக் காட்டுவதிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இப்புலம்பெயர்வுவாத நோக்கின் முக்கிய மூலமும், இன்னும் பெருஞ்செல்வாக்குப் பெற்றுள்ள அதன் கருத்து வெளியீடும் யாதெனில் பாளி வரன்முறைக் குறிப்புகளில் குறிக்கப்பட்டுள்ள 'விஜயனின் வருகை பற்றிய கதையும் அது தொடர்பான நிகழ்ச்சிகள் பற்றிய விபரமுமாகும். வரலாற்று நிகழ்வுகளை எழுதும்போது வரன்முறைக் குறிப்புகளின் திட்பத்தைப் பொறுத்தவரையில் ஆதிவரலாற்று நிகழ்வுகளைப்பற்றிய விபரங்கள் பெருமளவு திட்பமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் விஜயனின் கதையைப் பொதுமக்களும் அரைகுறைப் படிப்பாளிகள் பலரும் ஏற்றுக்கொண்டபோதும் நவீன வரலாற்றியலாளர் அக்கதை புராதன இந்தியப் புராணக் கதைகளிலிருந்து தொகுத்து, ஆதாரம் ஏதுமின்றி முற்றிலும் புனைந்தெழுதப்பட்ட கட்டுக்கதை என்பதையும், அதை உண்மையான வரலாற்றுப் பதிவு என்று கருதாது வரன்முறைக் குறிப்பு எழுதியோரின் வரலாற்றுவரையியல் நோக்கங்களின் அடிப்படையிலேயே புரிந்துகொள்ள வேண்டுமென்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதே வரலாற்றியலாளர் இலங்கையின் நாகரிகமானது இந்தியாவிலிருந்து இங்கு புலம்பெயர்ந்தோரின் குடியிருப்பு, குடிப்பரம்பல் ஆகியவற்றிலே அதன் மூலத்தைக் கொண்டுள்ளது என்பதே விஜயனின் கதை கூறும் அடிப்படை உண்மையென இன்றும் நம்புகின்றனர்.

இப்பிரச்சினையைப் புதிதாக நோக்குவதற்கு ஆதி வரலாற்றுக்கால அபிவிருத்திகள், வரலாற்றின் தொடக்கம் என்பன பற்றிய எமது அறிவு, ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு மாத்திரமன்றிப் புரிந்துகொள்ளலின் ஆரம்ப நிலையைத் தானும் எய்துவதற்கே இன்னும் போதுமானதாயில்லை என்னும்

உண்மையிலிருந்தே ஆரம்பித்தல் வேண்டும். எமது இன்றைய கருத்துக்கள் இலக்கிய மரபுகளிலும், பிராமிக்கல்வெட்டுகளில் பொறித்துள்ள ஆதிச் சிங்களமொழி கூறுகின்ற மொழியியற் சான்றுகளிலுமே முற்றிலும் தங்கியுள்ளது. இன்று பயன்படுத்தப் படுகின்ற ஏனைய எல்லாவகைச் சான்றுகளும் ஐயத்துக்கிட மானவை. தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட கால, ஆதிவரலாற்றுக்கால பொருள் மீதிகளைக் கண்டுபிடித்தல், ஏற்றுக்கொள்ளத் தக்க நவீன முறைகளினால் இலக்கிய மொழியியல், மானிட இனவியற் சான்றுகளை மேலும் ஆராய்தல், இலங்கை, இந்திய தென்கிழக்காசிய சான்றுகள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வுகள் முதலியவை மாத்திரமே உண்மையான வரலாற்று அபிவிருத்திகளை நாம் நன்கு புரிந்துகொள்வதற்கு நம்மை வழிநடத்திச் செல்லக் கூடியனவாகும்.

இன்று, கற்றறிந்தோர் கையாளத் தொடங்கியுள்ள புதிய ஆய்வு முறைகளைப் பற்றிச் சுருக்கமாக ஆராய்வது பயனுள்ளது. ஏனெனில் வரலாற்று நம்பிக்கையின் இன்றைய கட்டமைப்புக்கு நாம் சவால்விடுவது நீதியானதென அவை காட்டுகின்றன. நாம் ஏற்கனவே வரலாற்றுக்கு முற்பட்ட நிலைமைகளின் விரிவான எல்லைக்கோடுகளைத் தொட்டுக் காட்டியுள்ளோம். மேலும், இடைக்கற்கால வேடர்-நாடோடிகளிற் சிலராவது புராதன உணவு உற்பத்தி முறைகளைக் கையாளத் தொடங்கினர் என்னும் எமது முன்னைய ஐயப்பாட்டை மிக அண்மைக் கால அகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன. இலங்கையில் இடைக்கற்கால அகழ்வாய்வு நடாத்தப்பட்ட முக்கியமான இடமொன்றில் கண்டெடுக்கப்பட்ட குடியிருப்புச் சிதைபொருள்களுள் அடங்கியிருந்த உணவுத் தானியங்களும், பெரும்பாலும வரலாற்றுக்கு முற்பட்டகாலச் சேனைப்பயிர் செய்கையின் விளைவாகச் சில பிரதேசங்களின் இயற்கைத் தாவர அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களும் இதை மேலும் உறுதிப்படுத்தியுள்ளன. இத்தீவின் வரலாற்றுக்கு முற்பட்டகால மக்கள் மத்தியில் அலைந்துதிரிந்து வேட்டையாடும் நிலையிலிருந்து நிலையான உற்பத்திமுறைக்கு மாறியமை ஆரம்ப காலத்திலாயினும் புலம்பெயர்வுத் தலையீடின்றி சுதந்திரமாக நடைபெற்றிருக்கச் சாத்தியம் உண்டென இவை சுட்டிக்காட்டுகின்றன.

ஆரியர் பண்பாடு:

ஆரியருடைய வரலாற்றையும், பண்பாட்டையும் பற்றி நாம் பெரும்பாலும் இலக்கிய ஆதாரங்களிலிருந்தே அறிகின்றோம். வேதங்கள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள், காவியங்கள் ஆகியவற்றில் இடையிடையே வரும் குறிப்புக்களைக் கொண்டு ஆரியர் பண்பாட்டு அம்சங்கள் பலவற்றை அறிந்து கொள்கின்றோம். வேதங்களுள், காலத்தால் முற்பட்டது இருக்கு வேதம் ஆகும். இவ்விலக்கியத்தில் கூறப்பட்டவற்றைக் கொண்டு அறியப்படும் காலத்தை இருக்குவேத காலம் எனவும், மற்றைய வேதங்கள் (யசுர், சாம, அதர்ணவம்) பிந்தியகால நிலமைகளைக் குறிப்பதால் இக்காலப் பகுதியைப் **பிந்திய வேதகாலம்** எனவும் பிரித்துக் கூறுவர்.

அரசியல் முறை:

தொடக்கத்திலிருந்து, **முடியாட்சி** முறைக்குரிய மன்னராட்சியே நடைபெற்று வந்திருக்கின்றது. மன்னர்கள் முதலில் தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும், காலப் போக்கில் பரம்பரை முடியாட்சியே நிலைபெற்றுவிட்டது. அரசர்கள் பெரும்பாலும் **ஷத்திரிய** குலத்தவர்களாகவேயிருந்தனர். 'நாட்டு மக்களினதும் சட்டங்களினதும் காவலர்' என்ற வகையில், மன்னர்கள் மட்டற்ற வலுக்களுடையவர்களாக விளங்கினர். அரசுகளின் எல்லைகள் விரிவடையவே மன்னர்களின் அதிகாரமும் வளர்ந்தது. **ராஜசூய(ம்), வாஜபேயம், அஸ்வமேத(ம்)** முதலான யாகங்களை நடத்துவதில் அரசர்கள் அதிக அக்கறைகாட்டினர். இவற்றுள் **ராஜசூய(ம்)** என்ற முடிசூட்டு வைபவத்தில், **அபிஷேக(ம்)** எனும் சடங்கும் இடம்பெறும். இவ்வகைக் கொண்டாட்டங்கள் அதிகமானபோது, **பிராமணர்களின** செல்வாக்கும் அதிகரித்து வந்தது. **புரோகிதர்** என்ற பதவியை அரசவையில் வகித்த பிராமணர், மன்னனுக்கு ஆலோசனைகளை வழங்கியதோடு, இவ்விழாக்களை நடத்துவதற்கும் ஒழுங்குகள் செய்தார்கள். **சேனானி** எனப்பட்ட படைத்தலைவன் மற்றொரு முக்கிய அதிகாரியாவான். **கிராமணி** என்ற அதிகாரி, கிராமத் தலைவனாக விளங்கி, அதன் பாலனத்துக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பாக இருந்தான். அரசனது அதிகாரங்களை ஓரளவுக்கு கட்டுப்படுத்தியவை அக்காலத்தில் நடைமுறையில் அவனுக்கு ஆலோசனை வழங்கிய சபைகளே ஆகும். **சமிதி, சபா**, என இருவகைச் சபைகளிருந்ததை நூல்கள் குறிப்பிடு கின்றன. இவற்றுள் **சபா** என்பது மூத்தோர் கழகமாகச் செயற்பட்டது. நிருவாகம், நீதித்துறைகளில் இவை முக்கிய பங்குகொண்டன. கிராம அலுவல்களில் கிராமணி முதலான அதிகாரிகளுக்கு உதவியாக கிராமச் சபைகளும் இருந்தன. இச்சபைகளின் விருப்பங்களை மன்னன் பெரும்பாலும் ஏற்று நடப்பான். நீதி வழங்குவதில் மன்னன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தான்.

சமுதாய அமைப்பு:

சமூக அமைப்பின் அலகாகக் குடும்பம் விளங்கியது. இச்சமூகத்தில் ஆண் களுக்கே முதன்மையளிக்கப்பட்டிருந்தது. பெண்களுக்குக் குறைந்த இடமளிக்கப் பட்டபோதும், கல்வி வாய்ப்புக்கள் அவர்களுக்கும் அளிக்கப்பட்டன. விவாகம் புனிதமுடையதும், மீறமுடியாததுமான ஒப்பந்தமாக மதிக்கப்பட்டது. விதவைகள் மறுமணஞ் செய்தல் வழக்கிலிருந்தது. குடும்பங்கள் இணைந்து உருவான பெரிய அலகுகள் வர்ணங்கள் அல்லது சாதிகளாகும். ஆரியர் வந்த காலத்திலிருந்து, 'இருண்ட நிறமுடைய மக்களான இந்தியச் சுதேச மக்கள் 'தாஸ்யு'க்கள் என அழைக்கப்பட்டனர். ஆரியரிடையே ஷத்திரியர், பிராமணர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வர்ணங்கள் நிலவின. முதலில் இப்பாகுபாடு தளர்ச்சியுடையதாயும், கலப்பு மணத்தை ஏற்கும் தன்மை கொண்டதாகவும் இருந்தது. பின்னர் ஒரு சாதி அல்லது வர்ணத்துக்கும் பிற சாதிகளுக்குமிடையே சமூக உறவுகள் இருக்கமுடியாத அளவுக்கு, சாதி முறை இறுக்கமடைந்தது. ஷத்திரியரும், பிராமணரும் பல சலுகைகளைத் தாம் அனுபவித்ததுமன்றி,

மற்றைய இரு வகுப்பினரைத் துன்புறுத்தவும் செய்தனர். இதனால், சாதிகளிடையே பகைமை உணர்வு வளரலாயிற்று.

பொருளியல் நிலைமைகள்:

ஆரியரின் பொருளியல் ஒழுங்குகளில் கிராமமே முக்கிய இடத்தைப பெற்றிருந்தது. கிராமணி என்ற அதிகாரியே அதன் பாலன, பாதுகாப்பு அலுவல்களுக்குப் பொறுப்பாகவிருந்தான். பயிர்செய்கையே கிராம மக்களின் முக்கிய தொழிலாகவிருந்தது. வயல் நிலங்களுக்கு நீரைப் பாய்ச்சுவதற்குக் கால்வாய்களை அமைத்திருந்தனர். கால்நடை வளர்ப்பிலும் அதிக கவனத்தை அவர்கள் செலுத்தினர். வணிகம், நெசவு தோலைப்பதனிடுதல் முதலான கைத்தொழில்கள் ஓரளவுக்கு விருத்திபெற்று இருந்தன. நாணயப் புழக்கம் அதிகமின்றி, பண்டமாற்று முறையே நடைமுறையிலிருந்தது. வாணிஜ(ர்) என்ற ஒரு பரம்பரைப் பிரிவினர் பிந்திய வேதகாலத்தில் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சமயம்:

இருக்குவேத காலத்து மக்கள், இயற்கைச் சக்திகளுக்கு கடவுள் உருவங் கொடுத்து வழிபட்டனர். ஆகாயக் கடவுளான வருணன், இடியின் கடவுளான இந்திரன், சூரியனது நன்மைச் சக்தியின் உருவமான மித்திரன் முந்திய வேத காலத்து கடவுள்களில் முக்கியமானவர்கள். முதலில் வருணனும் பின்னர் இந்திரனும் முதன்மைபெற்று விளங்கினர். யாகங்கள் வாயிலாக அக்கினிக் கடவுளும் ஓரளவு முக்கியம் பெற்றார். கடவுள் பலர் இருப்பினும், ஒரே கடவுட் கொள்கையே முந்திய வேதகாலத்தில் வலியுறுத்தப்பட்டது. 'ஒன்றாயுள்ள வனுக்குப் புலவர்கள் பல பெயர்களைச் சூட்டுகின்றனர்' என்ற கருத்து இருக்கு வேதப் பாடல்களில் இடையிடையே எதிரொலிக்கின்றது. கடவுள்களிலும், ஆண் கடவுள்களே முக்கியம் பெற்றுள்ளதைக் காணலாம். பிந்திய வேதகாலத்தில், பல புதிய விருத்திகளும், மாறுதல்களும் சமயத்துறையிலேற்பட்டன. ஒரு கடவுட் கொள்கையை வற்புறுத்தியோர், 'ஆன்மாக்களின் தலைவரானான பிரஜாபதியை வழிபடலாயினர். பொதுமக்கள் வழிபாட்டில், உருத்திரன் பெரிதும் முக்கியத்தைப் பெற்றார். அதுபோலவே, விஷ்ணுவும் பிந்திய வேதகாலத்திலேயே அதிக செல்வாக்குப் பெறக்காண்கிறோம். உருத்திரனை மகாதேவனாகவும், பசுபதியாகவும் வழிபட்டனர். விஷ்ணுவும் வாசுதேவராக மதிக்கப்படலானார். இருக்குவேத காலச் சடங்குகளில் இடம்பெற்ற வேள்விகள், பிந்திய காலத்தில் அதிமுக்கியம் பெற்று விரிவடையலாயின. இவற்றை நடத்துவதற்கான ஒழுங்கு விதிகளைப் பிராமணர்கள் வகுத்துக்கொடுத்தனர். உருவ வழிபாட்டுமுறை இக்காலத்தில் அதிகம் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

கலைகள்:

இருக்குவேத காலத்திலும், பின்னரும் கவிதைக்கலை நன்னிலை எய்தியிருந்தமைக்கு இருக்கு வேதப்பாடல்களே சான்று பகரும். இலக்கியத்தில்

மட்டுமன்றி, இலக்கணம், ஒலியியல், சொற்பிறப்பியல், கணிதம் முதலான பல கலைகளிலும் அக்கால அறிஞர் நாட்டங் கொண்டிருந்தனர். எழுதும் வித்தையை மொஹஞ்சதரோ மக்கள் அறிந்துள்ளமைக்குச் சான்றுகள் கிடைத்த அளவுக்கு ஆரியர் அதைப் பயின்றமைக்கு ஆதாரங்கள் இல்லை. ஆரியரின் ஆதிகால இலக்கியங்கள் வாய்மொழியாகவே பேணப்பட்டு வந்தன. வைத்தியக்கலை, கட்டிடக்கலை, வானநூல் முதலானனைவயும் ஓரளவு வளர்ச்சி பெற்றிருந்தன.

ஆரியரின் பண்பாடுபற்றி மேலே தரப்பட்ட சுருக்கமான விவரணையிலிருந்தே, இன்றைய இந்தியா இவர்களுக்கு எவ்வளவுக்குக் கடமைப்பட்டுள்ளதென்பதை உணரலாம். ஆரியர் இலங்கைக்கு வந்தமையால், அவர்களின் பண்பாட்டு அம்சங்கள் இலங்கையையும் பாதித்தன.

ஆரியரின் இலங்கை வருகையும், குடியேற்றங்களும்:

வடஇந்தியா முழுவதையும் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்த ஆரியரிற் சில பிரிவினர் இலங்கைக்கும் வந்து குடியேறினர். அவ்வாறு குடியேறியவர்களின் வழிவந்தவர்களே, இன்று இலங்கையின் பெரும்பான்மை யினரான சிங்களவர் ஆவர். ஆரியரின் இலங்கை வருகை பற்றிப் பல மரபுக் கதைகள் எழுந்துள்ளன. அவற்றை நாம் இரு வகைப்படுத்தலாம். இலங்கையிற் பேணப்பட்டு வந்த மரபுக்கதைகள் தீபவம்சம், மகாவம்சம் போன்ற காலவேடுகளிற் பதிவு செய்யப்பட்டுள்ளன. மகாவம்சத்தில் வரும் 'விஜயனது வருகை' என்ற ஆறாம் அத்தியாயமும் அதைத் தொடர்ந்துவரும் சில அத்தியாயங்களும் ஆரியரின் இலங்கைக் குடியேற்றத்தை விளக்க எழுந்த மரபுக்கதைகளின் அடிப்படையில் எழுதப்பட்டவையாகும். இம்மரபுகள், பௌத்தம் பரவுமுன் உள்ள நிலைமைகளைக் கூறுவதாலும், ஆயிரம் ஆண்டுகளாக வாய்மொழியாகப் பேணப்பட்ட பின்னரே எழுத்துருவம் பெற்றதாலும், இம் மரபுகளில் அதிக நம்பிக்கையை வைக்க இயலாது இருப்பினும், இம்மரபுகளில் பொதிந்துள்ள அடிப்படையுண்மைகளை ஆராய்ந்து அவை மூலம் ஆரியர் வருகை பற்றிய சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது.

இந்திய மரபுகள்:

வடஇந்தியாவிலும், குறிப்பாக பௌத்தத்தை தழுவிய வணிக மக்களிடையே, ஆரியரின் இலங்கைக் குடியேற்றம் பற்றிய மரபுகள் பேணப்பட்டன. இம் மரபுகள் **திவ்வியாவதான, வலாஹஸ்ஸ ஜாதக** போன்ற நூல்களிலும் **பாஹியன், ஹுவான் சாங** ஆகிய இரு சீன யாத்திரீகர்கள் எழுதிவைத்த நினைவுக் குறிப்புக்களிலும், அம்மரபுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் விஜயனுக்குப பதில் **சிங்ஹல**(ன்) என்பவனே, இரத்தினத்துவீபம் எனப்பட்ட இலங்கையில் சிங்கள அரசை நிறுவியதாகக் கூறப்படுகின்றது. ஹுவான் சாங் கூறும் மரபுக் கதைகளில் இரண்டாவது கதை வருமாறு:- இரத்தினத்துவீபத்தில் வாழ்ந்த இராக்கதப்பெண்கள், வணிக நோக்குடன் வந்த **சிங்ஹலவின** 500 தோழரை

வஞ்சித்துத் தங்கள் நாட்டில் வைத்திருந்தனர். தனது நாடு மீண்ட சிங்ஹலவைத் தேட வந்த இராக்கத அரசியின் சூழ்ச்சிகளுக்கு சிங்ஹல தப்பிவிட, அந்த நாட்டு மன்னன் அவளுக்கு அடிமையானான். இதுகண்ட அந்நாட்டு மக்கள் தம் மன்னனை நீக்கிச் சிங்ஹலனை அரசனாக்கியதும், அவன் இரத்தினத்துவீபம் சென்று அங்குள்ள இராட்சசிகளை வென்று, தன் தோழர்களையும் மீட்டு, அங்கேயே அரசனானான். வடஇந்திய மரபுகளின்படி, வணிகஞ்செய்த மக்களே இலங்கையுடன் உறவு வைத்துப் பின் இலங்கையின் இயற்கை வளத்தின் சிறப்புக்கண்டு, இங்கே குடியேறினர். ஆரியரின் குடியேற்றம் பற்றி எழுந்த இக்கதையைப் பொருத்தமான விளக்கமாகச் சிலர் கொள்கின்றனர்.

முதற் குடியேற்றம்:

வடஇந்தியாவிலிருந்தே ஆரியர் இலங்கைக்கு வந்தனர் என்பதும், கடல் வழியாகவே இலங்கையை வந்து அடைந்தனர் என்பதும் இலங்கை வரலாற்றில் உள்ள ஒரு **மாயத்தோற்றமாக உள்ளது.** ஆனால், இலங்கைக்கு **சிங்களம** அல்லது **சிங்களத்துவீபம்** என்ற பெயரும், இலங்கையிலுள்ள பெரும்பான்மை மக்களுக்குச் **சிங்களா** என்ற பெயரும் வரக் காரணமாகவிருந்த **முதற் குடியேறிகளான ஆரியா** இந்தியாவின் எப்பகுதியிலிருந்து வந்தனர் என்பதைத் தீர்மானிப்பது எளிதன்று. மகாவம்சத்தில் கூறப்படும் **விஜயனது கதையில்** வரும் இடப்பெயர்களைக் கொண்டு, முதற் குடியேறிகளின் தாயகம் எது என அறுதியிட்டுக் கூறவியலாது. **சுப்பாரக, பாருக்கச்ச** என்ற இடங்களிருப்பதைக் கொண்டு, இந்தியாவின் மேற்குப் பகுதியிலிருந்து ஆரியர் வந்தனர் எனக் கூறலாமெனின், வங்கம், கலிங்கம், மதகம் என்பன கிழக்கிலேயுள்ளதால், கிழக்குப் பகுதியிலேயே இலங்கை ஆரியரின் தாயகம் இருந்தது எனக் காட்டலாம். விஜயன் பிறந்த நாடான **லாள** (லாட)வும், அதன் தலைநகரான **சிங்கபுரமும**, இரு பகுதிகளுக்குப் பொருந்தும் பெயர்களாகும். இடப்பெயர்களையிட்டு, மொழியொற்றுமைகளை நோக்கினாலும், சிங்களத்துக்கும், இந்தியாவின் மேற்குப் பகுதியைச்சேர்ந்த மராட்டிய மொழிக்கும் அதிக ஒற்றுமைகள் இருப்பது போலவே, இந்தியாவின் கிழக்குப்பிராந்திய மொழிகளில் ஒன்றான **வங்காளியும், சிங்களமும** சில பொதுவியல்புகளைக் கொண்டவை என நிறுவப்பட்டுள்ளது. மொழியாராய்ச்சி யானது முடிவான பலனைத் தரத் தவறியதுபோல, இலங்கையின் மிகப் பழைய கல்வெட்டுக்களில் உள்ள மொழியையும் அதேகால இந்தியக் கிளை மொழிகளையும் ஒப்பீட்டு முறையில் ஆய்ந்தவர்களும், மொழியின் சொற்பொருள் மாறுபாடுகளை உற்று நோக்கியவர்களும் ஒன்றுக்கொன்று முரணான சான்றுகளைத் தந்து, பிரச்சினையைத் தீர்க்கத் தவறியுள்ளனர்.

இந்நிலையில், இலங்கையின் முதற் குடியேறிகளை மேற்குடன் தொடர்பு படுத்தும் வகையில் ஒரு புதிய கொள்கையைக் காலஞ்சென்ற பரணவிதான நிறுவியுள்ளார். லாட எனப்பட்ட இப்போதைய குஜராத் மாகாணத்திலிருந்தே ஆரியர் முதன்முதலில் இலங்கைக்கு வரலாயினர் என்ற முடிவுக்கு வரும இவர், காத்தியாவாரில் உள்ள சிகோர் என்பதே, மகாவம்சத்தில்

குறிப்பிடப்படும் சிங்கபுரமாகலாம் என்கின்றார். இப்பகுதிக்கு வடக்கே சிந்துவின் கழிமுகத்தில் ஹிங்கூர் என்ற மற்றோரிடமுண்டு. இப்பகுதியும் ஒரு காலத்தில் லாடவில் அடங்கியிருப்பின், ஹிங்கூர் பழைய சிங்கபுரமாதல் கூடுமென மேலும் அவர் ஊகிக்கின்றார். தமது கொள்கைக்கு ஆதாரமாக தொடக்ககால பிராமிக் கல்வெட்டுக்களில், கம்போஜர்களைப் பற்றிவரும் குறிப்புக்களைப் பயன்படுத்தி யுள்ளார். சிந்துநதிக்கு வடக்கேயுள்ள கந்தார என்ற பகுதிக்கு அண்மையில் வாழ்ந்ததாகக் கூறப்படும் **யோனர், கம்போஜர்** ஆகிய இரு கூட்டத்தவரும் ஆதிக் குடியேறிகளான சிங்களரைத் தொடர்ந்து இலங்கைக்கு வந்திருத்தல் கூடும். கம்போஜப் பகுதி வடமேற்கில் இருந்தமையால், ஆதிச் சிங்களக் குடியேறிகள் அப்பகுதிக்கண்மையிலிருந்தே வந்திருக்கவேண்டும். சிங்களரின் மூதாதையர் முதலில் கம்போஜவையடுத்துள்ள பகுதிகளில் வாழ்ந்து பின்னர் அங்கிருந்து குடிபெயர்ந்து லாடவில் தங்கியிருக்க முடியும். இவ்வாறு லாடவில் தங்கியிருந்தபோதே, அவர்கள் இலங்கை வந்திருக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. இக்கொள்கையை ஏற்பதானால், மகாவம்சக் கதையில் வரும் கிழக்குப் பகுதிகளின் பெயர்கள் (வங்கம், கலிங்கம், மகதம்) தடையாக விருக்கும் என்பதால், இதை நீக்குவதற்கு **'வங்கம்'** என்பது வடமேற்கிலிருந்த ஒரு பகுதியெனக்காட்டி, பிற்காலத்தில் இப்போதைய வங்காளத்தைக் குறிப்பதாகத தவறுதலாக நம்பப்பட்டதெனவும், அந்நேரத்தில் வங்காளத்துக் கண்மையிலுள்ள மகதம், கலிங்கம் என்பன சேர்க்கப்பட்டுவிட்டதெனவும் கூறப்பட்டுள்ளது. எனவே, இலங்கையிற் குடியேறிய ஆரியருள் முதலில் வந்த கூட்டத்தினர் வடமேற்கு இந்தியாவைச் சேர்ந்தவர்கள் எனக் கொள்ளப் பல சான்றுகள் காட்டப்பட்டுள்ளன.

இலங்கைக்கு முதலில் வந்த ஆரியக் கூட்டத்தவர் மேற்கிலிருந்து வந்திருப்பினும், பின்னர் வந்த குடியேறிகள் மேற்கு-கிழக்கு ஆகிய இரு பகுதிகளிலிருந்தும் **அலையலையாக** வந்து குடியேறினர் எனலாம். கிழக்குப் பகுதிகளுக்குரிய மொழியம்சங்கள் முதலானவையும் சிங்களத்திற் காணப்படுதலால், கிழக்கிலிருந்தும் குடியேற்றங்கள் நிகழ்ந்திருத்தல் வேண்டும். இதுபற்றிய சில குறிப்புக்களை காலவேடுகளிலும் வேறு ஆதாரங்களிலும் இடையிடையே காண்கின்றோம். கங்கை பள்ளத்தாக்கு மக்கள் இலங்கையில் குடியேறியதைக் குறிக்கும் மரபுகள் மகாவம்சத்தில் உள்ளன. **மகதத்தையாண்ட நந்தர்களின் அரசவைக்குச் சிங்களத் தூதுவர்கள் சென்றதாக வடமொழி இலக்கியங்கள் கூறும்.** இலங்கைக்குப் பௌத்தம் பரவிய காலத்தில், வட இலங்கையிலுள்ள துறைமுகமொன்றுக்கும், வங்காளத்திலுள்ள தாமிரலிப்திக்குமிடையே கடல்வழி வணிகத் தொடர்புகள் இருந்தன. பௌத்தம் இலங்கைக்குப் பரவியபோதும், மகதநாட்டு உயர் குடும்பங்கள் பல இலங்கையில் வந்து குடியேறின. இவ்வாறாக, கிழக்குப் பகுதியிலிருந்தும் குடியேற்றங்கள் நடைபெற்றுச் சிங்கள இனத்தினதும், பண்பாட்டினதும் வளர்ச்சிக்கு உதவியுள்ளன.

காலம்:

ஆரியரின் முதற்குடியேற்றம் நிகழ்ந்த காலத்தைத் தீர்மானிப்பதற்கு மகாவம்சம் எமக்கு உதவிபுரிகின்றது. விஜயனது வருகையைக் கூறும் ஆறாம் அத்தியாயத்து

47வது செய்யுள் பின்வருமாறு அமைந்துள்ளது: **'நிர்வாணத்தை எய்துவதற்காக இரு 'சால' மரங்களிடையே ததாகதர் படுத்திருந்த அதே நாளில் லங்காவில் தம்பபண்ணிப பகுதியில், வலிமிக்க விஜயன் என்ற இளவரசன் (வந்து) இறங்கினான்.''** புத்தர் பரிநிர்வாணம் எய்தியதையும் விஜயன் இலங்கைக்கு வந்ததையும் ஒரே நாளில் நிகழ்ந்ததாகக் கூறப்படுவதால், பிந்திய நிகழ்ச்சிக்குப் புனிதங்கொடுக்கும் நோக்கம் செயற்பட்டுள்ளதை நாம் எளிதிற் கண்டு கொள்ளலாம். ஆனாலும், புத்தர் பரிநிர்வாணமெய்திய காலத்திற்கும் (கி.மு. 483) ஆரியரின் முதல் வருகைக்கும் அதிக இடைவெளியிருக்கவில்லை. இலங்கையிற் கிடைத்துள்ள மிகப்பழைய (பிராமிக்) கல்வெட்டுக்கள் கி.மு. 3ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஆரியர் இலங்கையிற் குடியேறி நிலைகொண்ட பின்னரே கல்வெட்டுக்களைப் பொறித்திருப்பர். ஆகவே கி.மு. 6ம் அல்லது 5ம் நூற்றாண்டளவில் ஆரியர் இலங்கைக்கு முதலில் வந்திருப்பரெனக் கொள்வது நியாயமானது. மேலும், ஆரியர் வடமேற்கு இந்தியாவில் கி.மு. 1500 அளவிற் குடியேறி, சுமார் ஆயிரம் ஆண்டுகள் வரை தெற்கு நோக்கியும், கிழக்கு நோக்கியும் வடஇந்தியாவில் தமது ஆதிக்கத்தைப் பரப்பி வரலாயினர். எனவே, இதன் பின்னர் கி.மு. 6ம் நூற்றாண்டில் ஆரியர் இலங்கைக்கு வரத் தொடங்கினர் என்று கொள்ளுதலே பொருத்தமாகவுள்ளது.

முக்கிய குடியேற்றங்கள்:

இலங்கையில் ஆரியர் நிறுவிய குடியேற்றங்கள், ஏற்கனவே நாம் கவனித்தபடி, புவியியற் காரணிகளையொட்டியே அமைந்தன. விஜயன் வந்திறங்கியதாகக் கூறப்படும் **தம்பபண்ணி** (தம்மனா நுவரை)யில் அவன் தங்கி, அரசை நடத்திய தாக மகாவம்சம் கூறுகின்றது. **அனுராதகாம, உபதிசகாம, உஜ்ஜேனீ, உறுவெலா, விஜிதபுரம** முதலான குடியேற்றங்களை அவனது அமைச்சர்கள் அமைத்ததாகவும் அதே நூல் குறிப்பிடுகின்றது. முதலில் வந்த ஆரிய கூட்டத்தினர் இலங்கையின் மூத்த ஆதிக் குடிகளைப் புறங்கண்டு, பின்வாங்க வைத்துவிட்டு மல்வத்து ஓயாவுக்கு அண்மையிலுள்ள பிரதேசத்தில் தமது முக்கிய குடியேற்றத்தை நிறுவலாயினர். இதையே **விஜயன்-குவேனி** கதை புலப்படுத்துவ தாகக் கூறுவர். இம் முதற் குடியேற்றமானது பயிர்ச்செய்கைக்குரிய நிலவளம், மழைவீழ்ச்சி, காலநிலை, நிலஅமைப்பு முதலான அம்சங்களைக் கருத்திற் கொண்டே நடைபெற்றுள்ளது. மழைவீழ்ச்சி குறைவாக இருந்தமையால், காடுகள் அடர்த்தி குறைந்திருக்குமாதலால், அவற்றையழித்துப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும். ஆயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமான காலம், இப்பகுதி இலங்கையின் பொருளியல், அரசியல் துறைகளில் முதன்மை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தென்கிழக்கு இலங்கையிலுள்ள **வளவை கங்கை, கிரிண்டி ஓயா, மாணிக்ககங்கை, கும்புக்கன் ஓயா** ஆகிய நதிகளால் வளம்படுத்தப்பட்ட பகுதியிலேயே, ஆரியரின் அடுத்த முக்கிய குடியேற்றம் அமைந்தது. இப்பகுதியே **உருகுணையென** அழைக்கப்படலாயிற்று. இதுவும், பயிர்ச்செய்கைக்கு ஏற்ற பௌதிக உறுப்புக்களைக் கொண்ட வரண்ட

வலயப் பகுதியாகவேயிருந்தது. இதன் முக்கிய நகரமாகப் பின்னர் விளங்கியது **மகாகாம(ம்)** ஆகும். இவ்விருண்டு முக்கிய குடியேற்றங்களே நெடுங்காலம் குடிசனச் செறிவுமிக்க பகுதிகளாக விளங்களாயின. இவற்றைவிட, களனியை அடுத்தும் ஒரு சிறு குடியேற்றம் ஆதிகாலத்திலேயே அமைந்திருந்ததை அறிகின்றோம். இப்பகுதி ஈரலிப்பு வலயத்தில் இருந்தபோதும் இங்கும் பயிர்ச் செய்கையே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். கிழக்கிலங்கையில் அமைந்த உலகப் புகழ்வாய்ந்த இயற்கைத் துறைமுகமான திருகோணமலை வழியாக அயல்நாட்டுத் தொடர்புகள் நடைபெற்றன. விரைவில் இப்பகுதியிலும் ஒரு குடியேற்றம் அமையலாயிற்று. இவ்வாறு ஆரியர் இலங்கைக்கு வந்த இரு நூற்றாண்டுகளில், இலங்கையின் நாலா பக்கங்களிலும் தம் குடியேற்றங்களை நிறுவித் தமது எதிர்கால சுபீட்சத்துக்கு அடிகோலிக்கொண்டனர்.

'இலங்கைக்குப் புலம்பெயர்ந்தவர்களுடைய சொந்த இருப்பிடங்கள் பற்றிய குறிப்புகளை இலங்கை தொடர்பான ஐதீகங்களிற் காணப்படும் புவியியற் சான்றுகள் சுட்டுகின்றன. **பார்னற் இரு புலம்பெயர்வுத் தொடர்களை இவற்றில் காண்கிறார்.** ஒன்று வங்காளம், ஒரிசா ஆகிய இடங்களிலிருந்து வந்த திராவிடர்களின் புலம்பெயர்வு, மற்றது இதற்குப் பின்னர் இந்தியாவின் மேற்குப் பகுதியிலிருந்து வந்த 'பிரதானமாக ஆரியரின்' புலம்பெயர்வு 'வரலாற்று உண்மையின் கூற்றாக' விஜயனுடைய கதையைக் கொள்வதை ஏற்கமுடியாது என்று பசாம் வாதாடினார். ஆனால் அதுதொடர்பாக புவியியல் குறிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவராகத் தென்படுகிறார். **கலிங்கம், மதுரை பற்றிய குறிப்புகள் பிற்சேர்க்கைகள் என்று கூறும் அவர் இந்தியாவின் மேற்குப் பகுதியிலிருந்து முதலாவது புலம்பெயர்வும், கிழக்குப் பகுதியிலிருந்து இரண்டாவது புலம்பெயர்வும் ஏற்பட்டன என ஏனைய குறிப்புகளை ஆராய்ந்து கூறுகிறார்.** வங்கத்துக்கும் மகதத்துக்கும் இடையிலான ஒரு பகுதி **லாலா** நாடு என மகாவம்சம் கூற பார்னற், பசாம் உட்பட பல எழுத்தாளர்கள் அது இந்தியாவின் மேற்குக் கரையைச் சார்ந்த **லாடா நாடு** எனக் கூறுகின்றனர். இந்தியாவின் வடமேற்குப் பகுதியை 'ஆரியருடைய சொந்த இருப்பிடமாகக்' காண முயன்ற பரணவிதானவும் மேற்கூறிய கருத்தை ஏற்றுக் கொள்கிறார். இலங்கையின் குடித்தொகையில் பெரும்பான்மையினரின் **'குடியேற்ற மனோபாவம்'** என்று கூறக்கூடிய அம்சத்தையும், தாம் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்ற அவர்களது நம்பிக்கையையும் புவியியற் குறிப்புகளின் அடிப்படையில் 'சொந்த இருப்பிடத்தைக்' கண்டறியும் முயற்சியையும் இந்த ஐதீகத்தின் வெவ்வேறு பாடங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவை உண்மையான நிகழ்வுகள் பற்றிய குறிப்புகளைக் கருத்தமைவுக் கூற்றுடன் சேர்த்துக் குழப்பு வதற்கு வகைசெய்தன. ஐதீகங்களின் வெவ்வேறு பாடங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளும் எச்சரிக்கையைத் தூண்டுகின்றன. வங்கம், கலிங்கம், லாலா, மகதம், சுப்பரா, மதுரை போன்றவற்றை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. தீபவம்சம் மதுரையைக் குறிப்பிடவில்லை. விஜயன் இலங்கைக்கு வரும் வழியில் சென்ற ஒரு இடமாக **பாருகச்ச** என்ற இடமொன்றைக் குறிப்பிடுகிறது. ஹியன்சாங்கின்

முதற்கதை **சிம்களரின** சொந்த இடம் தென்னிந்தியாவில் இருந்தது என்று கூறுகிறது. திவ்யவதான, **சிம்கள** என்ற இராச்சியத்தைச் சேர்ந்த வியாபாரி என்றும், **சிம்மகல்ப ஜம்புதீபத்தில** உள்ளது என்றும் குறிக்கிறது. ஹியன் - சாங்கின் இரண்டாம் கதை இந்தியாவின் எப்பகுதியையும் சிறப்பாகக் குறிப்பிடவில்லை. ஆனால் **சிம்கள ஜம்புதுவீபத்தைச் சேர்ந்தவன் என்று மாத்திரம் கூறுகிறது.'**

'மெண்டிஸ் சரியாக ஆராய்ந்தபடி **'குடியேற்ற ஐதீகங்களின'** வெவ்வேறு பாடங்களின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்று சிங்கள என்ற பெயரின் மூலத்தை விளக்குவதுபோல் தோன்றுகிறது. சில பாடங்கள் இத்தீவு சிங்கள என்ற பெயரை எவ்வாறு பெற்றது என்று கூறமுயல்கின்றன. மகாவம்சம் இத்தீவு தம்பபண்ணை என்ற பெயரை எவ்வாறு பெற்றதென்பதையும் ஒரு குழு மக்கள் எவ்வாறு சிங்கள என்ற பெயரைப் பெற்றனர் என்பதையும் விளக்கமுயல்கின்றது. 'சிம்கள என்பது ஆரம்பத்தில் தீவின் பெயர் எனவும் மக்கள் பல நூற்றாண்டுகளின் பின்னரே இப்பெயரைப் பெற்றிருக்க வேண்டும்' என்றும் மெண்டிஸ் நம்பினார். மேற்படி மூல நூல்களிலிருந்து இத்தகைய ஒழுங்கான முடிவைப்பெறுதல் இயலாது. உண்மையில், தென்னிந்தியப் பிராமி சாசனங்களில் இடம்பெறும் தகவல்கள் இத்தகைய முடிவுக்கு வருவதைத் தடுக்கின்றன. இந்தியாவுக்கு அலெக்ஸாண்டருடன் சேர்ந்து வந்த ஒனிசிகிறிற்றோஸின் (Onesicritos) குறிப்புகளிலிருந்து இத்தீவின் பழைய வரலாற்றுப் பெயர் தப்ரபேன் அல்லது தம்பபண்ணை என்பது தெளிவாகிறது கி.பி. 2ம் நூற்றாண்டில் இத்தீவு சலிக என்ற பெயரால் அழைக்கப்பட்டதைக் குறித்தபோதும் தலமி இதனைத் தப்ரபேன் என்றே குறிப்பிட்டுள்ளார். (McCrindle 1885, 247-59) எனவே இத்தீவு தம்பபண்ணை எனவும், இங்கு வசித்த ஒருபகுதி மக்கள் சிம்கள எனவும் அழைக்கப்பட்ட காலத்திலேயே மகாவம்சம் கூறும் விஜயன் ஐதீகம் உருப்பெற்றிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.'

'சிங்கள என்ற சொல்லுக்கு இரு வேறுபொருள் கொள்ளப்பட்டது என்பது தெளிவாகிறது. அரச குடும்பத்தின் மூலம் பற்றிய ஐதீசம் தரும் நீண்ட விரிவான வர்ணனையானது, இந்த வம்சாவழியின் அங்கத்தவர்களே சிங்கத்தின் மக்கள் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது. சிங்கள என்ற சொல்லின் இக்கருத்து பிற்கால வரன்முறை ஏடான சூளவம்சத்திலும் இடம்பெறுகிறது. 4ம் மகிந்தன் கலிங்கத்துடன் செய்துகொண்ட திருமண ஒப்பந்தத்தையும் அவனது வம்சாவழி அங்கத்தவர்கள் அரசில் உயர்பதவிகள் பெற்றதையும் விவரித்தபின், அவன் சிங்கள வம்சாவழியைப் பலப்படுத்தினான் எனச் சூளவம்சம் கூறுகிறது. இங்கு இச்சொல் வம்சத்தைக் குறிக்கப் பயன்பட்டது என்பது தெளிவாகும்.'

'பசாமும் ஒபயசேகரவும் ஐதீகத்தில் காணப்படும் மிருகத்தனமான நடத்தை, தந்தைக்கொலை, முறைதகா நடத்தை என்பவற்றைச் சுட்டிக்காட்டியுள்ளனர். ஐதீகத்தின் சில பாடங்களில் மிருகத்தைப் பற்றிய குறிப்பு இல்லை. **சிம்க**

என்பது வெறும் பெயராகவே குறிக்கப்பட்டுள்ளது. **சிம்க** உண்மையில் சிங்கமாகவே காணப்படும் அப்பாடங்களில், சிங்கத்துக்கும் இனப்பெயர் மூதாதையருக்கும் இடையிலான உறவு இரட்டைப் பண்பு வாய்ந்ததாக உள்ளது. இம்மூதாதையர் **'சிங்கத்தின் வழித்தோன்றல்'** ஆகவும், **'சிங்கத்தை கொன்றவர்'** ஆகவும் கொள்ளப்படுகிறனர். இந்த உறவைக் குறிப்பதற்கு மகாவம்சம் **அதின்னவ** எனப்படும் அருஞ்சொல்லைப் பயன்படுத்துவது கவனிக்கத் தக்கது. இச்சொல்லை, ஆரம்பத்தைக் குறிக்கும் அதி என்ற சொல்லுடனும் அபகரித்தல் என்ற பொருள்படும் அதிபதி என்ற சொல்லுடனும் தொடர்புபடுத்தலாம். இந்த உறவின் இரட்டைப் பண்பை விளக்குவதற்காக வேண்டுமென்றே இச்சொல் பயன்படுத்தப்பட்டது எனக் கருதலாம். ஐதீகத்தின் இத்தகைய தன்மை ஆளும் வம்சத்திற்கு. அதனைப் பொதுமக்கள் திரளிலிருந்து வேறுபடுத்தும் உன்னதமான தோற்ற மூலத்தை அளித்துள்ளது. சிங்கத்தைக் கொன்றவனாகக் கதாநாயகனை வர்ணிப்பது **கில்காமேஷ்** காவியத்தில் சிங்கங்களை **கில்காமேஷ்** ஆண்மையுடன் எதிர்ப்பதுடன் ஒப்பிடத்தக்கது. இது பெருந்தொகையான சுமேரிய முத்திரைகளில் முக்கிய இடம்பெற்றுள்ளது. இத்துடன் ஐதீகத்தில் காணப்படும் அமைப்பியல் அம்சமான தந்தைக்கொலை, மிருக மூலங்களை மறுதலித்தலையும் ஒப்புக் கொள்ளலையும் பிரதிபலிப்பதாய் இருக்கலாம். பிற்காலத்தில் ஐதீகத்தில் காணப்படும் சிங்கத்தைக் கொல்லும் அம்சம் அதிகம் அழுத்தப்பட்டிருக்க வேண்டும். முன்பு பார்த்தவாறு ஹியன்சாங்கின் முதலாவது கதையின்படி இராச்சியத்தை உருவாக்கியவன் ஒரு சிங்கத்தைப் பிடித்தால் அப்பெயரைப் பெற்றான். 'சிங்கத்தைப் பிடித்தால்' **சிசுபாகு சிகல** என அழைக்கப்பட்டான் என்று வம்சத்தபாகாசினி கூறுகிறது ஏழாம் நூற்றாண்டளவில் சிங்கத்தின் மக்கள் தாம் சிங்கத்தின் வழித்தோன்றல்கள் என்பதை விட **சிங்கத்தைக கொன்றவர்கள** என அறியப்படவே விரும்பினர் என்பதை மேற்காட்டிய சான்றுகள் தெரிவிக்கின்றன. அதின்னவ என்ற சொல்லின், இவ்வாறான பிந்திய வியாக்கியானங்களே மகாவம்சத்தின் குறிப்பிட்ட செய்யுளை மேற்கூறியவாறு மொழிபெயர்க்கக் கைகரைத் தூண்டியிருக்க வேண்டும். மகாவம்சத்தில் காணப்படும் ஒரேதாய் வயிற்றில் பிறந்தோரின் முறைதகா உறவு ஹியன்-சாங்கின் ஐதீகம் பற்றிய முதலாவது கதையில் காணப்படவில்லை. தாப்பர் கூறியதுபோல இத்தகைய முறைதகாஉறவு ஒரு தாய் வயிற்றில் பிறந்த இருவர் எவ்வாறு ஒரு வம்சாவழியை நிறவலாம் என்பதையும் அதேசமயம் வம்ச மரபின் தூய்மையையும் விளக்குகிறது. பாளி சூத்திரத்தில் சாக்கியர் பற்றிய குறிப்புகளிலும், தசரத ஜாதகக்கதையிலும் ஒரே தாய் வயிற்றில் பிறந்தோரின் திருமணம் இடம்பெறுகிறது. விஜயன் கதையில் காணப்படும் **பதினாறு சோடி இரட்டையரின** கதை தாபர் குறிப்பிடும் இந்திய ஐதீகங்களை ஒத்துள்ளது.'

'விஜயன் பற்றிய ஐதீகத்தினுடைய சாரம் சிங்களவரது தனித்துவத்தின் அரசியல் வரைவிலக்கணத்தைத் தருகிறது என்று கூறலாம். மேன்மைதங்கிய **சீகலரை** அரசகுடும்பம் பிரதிநிதித்துவப்படுத்தியது. முதலாம் காசியப்பனால்

(கி.பி. 477 - 95) அமைக்கப்பட்ட சிகிரியா அதனது கட்டட இயல்புகளால் இத்தனித்துவத்தை வெளிக்காட்டுகிறது என்பதை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். இக்குகைக் கட்டிடத்தின் பிரதான அம்சம் அங்கு காணப்படும் மிகப் பெரிய **சிங்க உருவமாகும்.** அரச இல்லம் இக்குன்றின் உச்சியில் இருந்தது. அரசன் கீழிறங்கி வரும்போது **சிங்கத்தின் வயிற்றிலிருந்து வெளிவருவது** போன்ற தோற்றம் தருவதற்காக அதன் வாய்வழியாக நடந்து வெளியேறும் வகையில் இக்குன்றின் கட்டிட அமைப்பு உள்ளது. **அரச குடும்பத்தின் தோற்றமூலம் பற்றிய ஐதீகத்தை இது நினைவூட்டுகிறது.** இவை போன்ற கட்டிடங்களையும் சிற்பங்களையும் பயன்படுத்தி சிங்கள ஐதீகத்தைப் பிரசாரம் செய்து, அரசவம்சம் தனது அதிகாரத்தைப் பலப்படுத்த முனைந்தது. மறுபக்கத்தில் புத்தரின் வம்சாவழியுடன் உள்ள உறவைப்பற்றி அழுத்திக் கூறுவதன் மூலமும் தமது நிலையைப் பலப்படுத்த முனைந்தனர். ஐதீகத்தின்படி இராசகுடும்பத்தின் அங்கத்தினரல்லாத ஏனையோர், அரசனுடனுள்ள தொடர்பினால் அல்லது அத்தகைய தொடர்புள்ள குடும்பங்களிற் பிறந்ததனால் சிங்களவர் என்ற தனித்துவத்தைப பெற்றனர். விஜயனுடன் வந்த எழுநூறு ஆட்களும் அவனது பரிவாரங்கள் எனவும், குறிப்பாகச் சிலர் அரச பணியாட்கள் **(அமாச்ச)** எனவும் விவரிக்கப்பட்டுள்ளனர். பண்டைய இலங்கையில் சொத்துள்ள உயர் குடும்பங்களிலிருந்தே அரச அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். இதனால் சில குடும்பங்களுக்குத் தலைமுறை தலைமுறையாக அரசுடன் தொடர்பு வைத்திருக்கும் வாய்ப்பிருந்தது. வணிகர் சமூகத்தின் இன்னோர் முக்கிய பகுதியினராக இருந்தனர். ஐதீகத்தின் சில பாடங்களில் சிம்கள ஒரு வணிகன் எனக் குறிப்பிடும்போது இவர்களது முக்கியத்துவம் புலனாகிறது. எனவே சிங்களவர் என்ற தனித்துவ அடையாளத்தால் ஒன்றுபடுத்தப்பட்ட குழு, மிகுந்த செல்வாக்கும் பலமும் கொண்ட குடும்பங்கள் ஆகும். இவையே ஐதீகத்தில் **மஹாஜன** என்ற பதத்தால் குறிக்கப்படுபவை ஆகலாம். இச்சொல் அதனுடன் ஒலி ஒற்றுமையுடைய மஹாஜனய என்ற சொல் இன்று தரும் பொருளை அல்லாது, பண்டைய நூல்களில் 'மேன்மக்கள்' என்ற பொருளையே குறித்தது. எனவே சிங்கள உணர்வின் விருத்தியின் இக்கட்டத்தில், அது ஆளும் வர்க்கத்தின் உணர்வாகவே காணப்பட்டது. ஐதீகத்தின்படி சிகளரின் ஆரம்பக் குடியேற்றங்கள் **கதம்பஆறு** (மல்வத்து ஓயா) **கம்பீர ஆறு** (கணாதர?) ஆகியவற்றின் கரைகளிலும் அவற்றைச் சார்ந்த பகுதிகளிலும் அமைந்திருந்தன. என்பதால் ஆரம்பத்தில் தானும் சிங்கள உணர்வு பிரதேசப்பண்பு கொண்டிருந்தது எனலாம். இலங்கையின் கிழக்கு, தென்கிழக்குப் பிரதேசங்களில் இருந்த குடியிருப்புக்களின் வேறுபட்ட மூலத்தை வரன்முறை ஏடுகள் குறிப்படுவது கவனிக்கத்தக்கது.'

'புலிந்தர்களின நிலைமையையும், சிங்கள அரச வம்சத்துடனான அவர்களது உறவையும் வரையறுக்க விஜய ஐதீகம் முயல்கின்றது. அரசனுடைய அங்கீகாரத்துடன் புலிந்தர்கள் மலயபிரதேசத்தில் வாழ்ந்தனர். இதனால் இவர்கள் அரசனது மேலாட்சியை ஏற்றுக்கொண்டனர். ஐதீகத்தின் சில குறிப்பிட்ட அம்சங்கள்

அரசனுக்கும் 'மேன்மக்களுக்கும்' இடையே இருந்த உறவை விபரிக்கின்றன. இராச்சியத்தின் 'மேன்மக்களே' விஜயனுடைய வன்செயலையும், அடக்கு முறையையும் எதிர்த்தவர்கள். விஜயனுக்கு மரணதண்டனை வழங்கவேண்டும் என அவர்கள் நிர்ப்பந்தித்ததால் சிங்கபாகு அவனை நாடு கடத்த வேண்டிய தாயிற்று. திவ்வியவதானவும் ஹியன்-சாங்கினுடைய இரண்டாவது கதையும் சிம்கள ஒரு வணிகன் எனவும் அரசனாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் எனவும் கூறுகின்றான். திவ்வியவதானவின்படி தான் ஒரு வணிகனே எனக்கூறி சிம்கள அரச பதவியை ஏற்க மறுக்கிறான். ஆனால் மக்களோ அவனே தகுதி வாய்ந்தவன் என வற்புறுத்தியதனால், அவன் அதை ஏற்கிறான் (திவ்வியவதான, பக்: 527). **ஹியன்-சாங்கின் இரண்டாவது கதையின்படி சிம்கள தனது சமய அறிவு, திறமை, ஒழுக்கம், விசுவாசம் ஆகியவை காரணமாகவே தேர்ந்தெடுக்கப்பட்டான.** ஒரு நபரின் அரசாளும் தகைமையை அவரின் அந்தஸ்து அன்றி அவரது திறமை, ஒழுக்கம் ஆகியவையே நிர்ணயிக்கின்றன என்ற கருத்தை ஜதீகத்தின் இப்பாட வடிவங்கள் கூறுகின்றன. ஆனால் மகாவம்சம் இதற்கு முற்றிலும் வேறான ஒரு கருத்தைத் தருகிறது. அரச குடும்பத்தின் ஷத்திரிய அந்தஸ்து ஏனைய மக்கள் வகுப்பிடமிருந்து அவர்களை வேறுபடுத்துகின்றது என்ற கருத்தை இந்நூல் கூறுகின்றது. விஜயன் ஷத்திரிய இளவரசியை மணமுடிப்பதற்கு மதுரைக்குத் தூது அனுப்பியமையும், குவேனியை அவன் நடத்திய முறையும் ஷத்திரியப் பெண்ணைத் திருமணம் செய்த ஷத்திரிய அரசனே முடிசூடத் தகுதியானவன் என்ற கருத்தைத் தெரிவிக்கின்றன. ஏனையோர் அரசாள்வதற்கு சட்டரீதியான உரிமை அற்றோர் ஆவர். எனவே ஷத்திரியரல்லாத **'மேன்மக்கள்'** தம்மைத் தொல்லைப்படுத்தாமல் நீதியுடன் ஆளும்படி அரச குடும்பத்தை நிர்பந்தித்திருக்கலாம் எனவும் அவர்கள் அரசான அவாவவில்லை என்றும் கூறலாம். ஜதீகத்தின் வெவ்வேறு பாடவடிவங்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் அவற்றின் வேறுபட்ட சமூக மூலங்களைப் பிரதிபலிக்கின்றன. அத்துடன் இவை, அக்காலத்தில் பிரதான சமூகக் குழுக்களிடையே காணப்பட்ட இழுவை நிலையையும் நாட்டின் அரசியல் அதிகாரத்திலிருந்த பிரச்சினைகளையும் சுட்டுகின்றன.'

'விஜயனது ஜதீகத்தைச் சமய நம்பிக்கைகளுடைய வெளிப்பாடாகவும் பார்க்கமுடியும். இவ்ஜதீகத்தின் பல்வேறு பாடங்களிலும் இயக்கர்களும் இராட்சதர்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். விஜயனுடைய வார்த்தைகளின்படி **'மனிதர் அமானுஷ்யருக்கு நிரந்தரமாக அஞ்சுகின்றனர்.'** இயக்கர்களைச் சாந்தப்படுத்த **பலி** கொடுக்கப்பட்டது. இயக்கர்களிடமிருந்து பாதுகாப்பு அளிக்கவல்ல மந்திரிக்கப்பட்ட நூலின் முக்கியத்துவத்தை மகாவம்சம் எடுத்துக் கூறுகிறது. விஜயனுடைய ஆட்களின் உயிரை அந்நூல் காப்பாற்றியது. பௌத்த மத தெய்வங்களுள் ஒன்றாக **உப்பலவன்னன்** காட்டப்படுகிறான். விஜயனும், இலங்கைத்தீவும் பாதுகாக்கப்படவேண்டும் எனத் தாம் **இறந்து கொண்டிருக்கும் தறுவாயில் புத்தர் விரும்பியதால,** தெய்வங்களின் அரசரான சாக

உப்பலவன்னனை இங்கு அனுப்பினர். **புத்தரின் இறப்பும் விஜயனின் வருகையும் ஏககாலத்தில் நடந்ததாக ஐதீகம் கூறுகிறது.** மேலும் இது சில குறிப்பிட்ட பௌத்த தர்மங்களைக் குறிப்பிட்டு அவற்றைக் கடைப்பிடிப்பவர் பெறக்கூடிய **'வெகுமதிகளையும்'** கூறுகிறது. சிகபாகு காருண்ய உணர்வைக் கொண்டிருக்கும் வரையிலும் அவனால் எய்யப்பட்ட அம்புகள் சிங்கத்தைக் கொல்லவில்லை. ஆனால் அவனது இதயத்தில் ஆத்திரம் உண்டானபோது சிங்கம் கொல்லப்பட்டது. இதனைவிட அநுராதபுரத்தைத் தவிர்ந்த வேறு சில இடங்களையும் முக்கியமான அரசியல் மையங்களாக ஐதீகம் குறிப்பிடுகிறது. ஐதீகத்தில் வெவ்வேறு பாட வடிவங்கள் **சிங்கள** என்ற பெயரை விளக்க முயல்கின்றன. இது ஐதீகத்தின் அடிப்படைத் தொழிற்பாடுகளுள் ஒன்றாகும். இத்தகைய வெவ்வேறு மட்டங்களில் இவ்ஐதீகத்தை விளங்கிக்கொள்ள முடியுமாயினும் இதனது மகாவம்ச பாட வடிவத்தில், மலினோவ்ஸ்கி **'சாசனம்'** எனக் குறிப்பிட்ட அம்சத்தையும் காணமுடியும். இவ்வகையில் இது புத்தரின் வருகைபற்றிய ஐதீகத்துடன் ஒப்பிடத்தக்கது. இக்கட்டுரையாசிரியர் இன்னோரிடத்தில் இதனை ஆராய்ந்துள்ளமையை ஒப்பிடமுடியும். விஜயனது ஐதீகத்தில் பிரதான சமூகச் செயற்பாடுகளில் ஒன்று, குறிப்பிட்ட சமூக-அரசியல் ஒழுங்கினை ஏற்புடையது ஆக்கியமையாகும். அது குறிப்பிட்ட பிரதான சமூகக் குழுக்களை இனங்கண்டு சமூக ஒழுங்கமைப்பில் அவற்றின் இடத்தைக் காண முயற்சிக்கிறது. ஐதீகத்தில் காணப்படும் சிங்கள உணர்வு சாதிக் கருத்தமைவின் விளைவாகும். சேவை புரியும் சாதியினர் (குடிமைகள்) சிங்களக்குழுவில் சேர்க்கப்படவில்லை. மகாவம்சத்தில் உள்ள விஜயன் பற்றிய ஐதீகம், சமூகத்தில் காணப்பட்ட பிரதான அம்சங்களை ஒன்றுபடுத்தி அவற்றை அரச குடும்பத்துக்கு விசுவாசம் கொள்ளச் செய்யவேண்டும் என்ற அரசகோட்பாட்டையும் பிரதிபலிக்கிறது. **சிகலரின் தீவு அல்லது சிகலதீப என இத்தீவு அழைக்கப்பட்டபோது, இப்பெயர் அரச குடும்பத்தின் உரிமையையும் தீவு முழுவதிலும் இச் சமூகக்குழு அரசியல் பலத்தை நாடியதையும் பிரதிபலிக்கிறது.** இதன்மூலம் இக்கருத்தமைவு புலிந்தர்கள் சேவைபுரியும் சாதியினர் **(குடிமைகள்)** போன்ற ஏனைய சமூகக் குழுக்களை அடிமைநிலைக்குத் தள்ளியது. மகாவம்சம் போன்ற வரஞ்முறை ஏடுகள், இக்கருத்தமைவைப் பரவச்செய்யும் முக்கியமான ஊடகங்களாக இருந்தன என்பது தெளிவு.'

இலங்கையில் ஆரியரின் செல்வாக்கு

ஆரியர் இலங்கைக்கு வந்த காலத்தில், இலங்கையில் வாழ்ந்த மக்கள் புதிய கற்காலத்தின் இறுதிக் காலத்திலிருந்தனர். இரும்பின் உபயோகத்தை அறிந்தவர்களாகவோ, பயிர்ச்செய்கையை மேற்கொண்டவர்களாகவோ அவர்கள் இருக்கவில்லை. இத்தகைய நிலையிலிருந்த இலங்கையின் ஆதிக்குடிகளை, பண்பாட்டில் எவ்வளவோ மேம்பட்ட நிலையிலிருந்த ஆரியர் எளிதிற் புறங்கண்டு, தமது வாழ்க்கை முறையையும் சமுதாய ஒழுங்குகளையும் இங்கு புகுத்தினர். இதனால் இலங்கையின் நாகரிக வளர்ச்சியில் ஆரியரின் வருகை திடீரெனப்

பல முன்னேற்றங்களை ஏற்படுத்தியது. கற்காலத்தையடுத்து, செப்புக்காலம், வெண்கலக் காலம் என்ற பருவங்களைக் கடந்தே இரும்புக் காலத்திற் பல நாடுகள் பிரவேசித்துள்ளன. ஆனால், இலங்கை இவ்விடைப் பருவங்களை அடையாது திடீரென இரும்புக் காலத்தினுட் பிரவேசித்தது. இரும்பினால் ஆயுதங் களைச் செய்து உபயோகிக்கும் முறையை ஆரியர் இலங்கையிற் புகுத்தியமையே இதற்கு உதவியாக இருந்தது. மனித இனத்தின் வளர்ச்சியில் இரும்பின் உபயோகமானது எவ்வளவோ முன்னேற்றத்தையளித்தது. அதை பௌத்த மதத்தின் வருகைக்குச் சற்றுமுன்னர் இலங்கைக்குக் கொண்டு வந்தவர்கள் ஆரியரே. **ஆனால் கி.மு.1000 ஆண்டுகளுக்கு சற்றுப்பின்னர் இரும்பின் உபயோகம் இலங்கைக்கு தென்னிந்திய மக்களால் அறிமுகப்படுத்தப் பட்டுவிட்டதென்பது குறிப்படத்தக்கது.**

தொழில் முறையிலும், பயிர்ச்செய்கையை மேற்கொண்ட பின்னரே மனிதனது வளர்ச்சி துரிதமெய்தியது. பயிர்ச் செய்கையினால் மக்கள் பெறும் நிலையானதும் நிம்மதி உடையதுமான வாழ்வும், ஓய்வும் அவர்களின் முன்னேற்றத்துக்கு உதவின. புதிய கருவிகள், முறைகள் என்பனவற்றைச் சிந்தித்து ஆக்குந்திறன், இந்த ஓய்வு மூலமே செயற்படும். எனவே, இலங்கையின் நாகரிக வளர்ச்சியிலும், ஆரியர் பயிர்ச்செய்கையைப் புகுத்தியமையால், திடீரெனப் பெரும் முன்னேற்றமும், பண்பாட்டு வளர்ச்சியும் ஏற்படலாயின. உணவுக்காக அலைந்து அதைச் சேகரிக்கும் நிலையில் வாழ்ந்த இலங்கை மக்கள், ஆரியர் வருகைக்குப்பின் ஒரு சில மாத உழைப்பைக்கொண்டு ஆண்டு முழுவதும் இடரின்றி உணவருந்தக்கூடிய நிலையை அடைந்தனர். பயிர்ச்செய்கையின் அடிப்படையில் நாடெய்திய செழிப்போ, கலை வளர்ச்சிக்கும், சமய மேன்மைக்கும் அடிப்படையாக விளங்கியது. ஆரியர் ஏற்கெனவே அறிந்திருந்த முறைகளை இலங்கையின் தன்மைகளுக்கேற்ப மேலும் விருத்திசெய்து நாட்டின் வளத்தைப் பெருக்கி வரலாயினர்.

பயிர்ச்செய்கையை மேற்கொண்டிருந்த ஆரியக் குடியேறிகள ஆறுகளை யடுத்த பிரதேசங்களில் சிறு கிராமங்களாகவே தமது குடியிருப்புக்களை அமைத்தனர். இக்கிராமங்களைப் பாதுகாக்கவும் பரிபாலிக்கவும், ஒழுங்கு அமைதி ஆகியவற்றைப் பேணவும் சில **அதிகாரிகள்** இருந்தனர். **கிராமணீ** அல்லது **கமிக** என்ற அதிகாரி கிராமத் தலைவனாக விளங்கி இக்கடமைகளை ஆற்றினான். ஆதிகாலப் பிராமிக் கல்வெட்டுக்களில் **பருமகர்கள்** (பிரமுகர்கள்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளவர்களே **காட்டை அழித்துக் குடியேற்றங்களை நிறுவும் பணியில் முக்கிய பங்கை வகித்த ஒரு வகுப்பினராவர்.** கிராம நிருவாகத்தை நடத்துவதிலும், பொதுப்பணிகளை நிறைவேற்றுவதிலும் கிராமச்சபைகள் முக்கியமானவை (**கிராம சபா** அல்லது **காம்சபா** என்பதே **கன்சபாவ** எனச் சிங்களத்தில் வழங்கப்படுகின்றது).

இலங்கைக்கு அதன் பெயரையே **(சிங்ஹல, சிங்கஹலதுவீபம்)** கொடுத்து, அதன் பெரும்பான்மையினமாகவும் விளங்கி வந்த சிங்களர் என்ற இனம் உருவாக உதவியது ஆரியர் வருகையே. ஒரு காலத்தில் (400 அல்லது 500

ஆண்டுகளுக்கு முன்) ஆரியர் குடியேறியிருந்த மற்றெந்தப் பகுதியைக் காட்டிலும் கூடுதலாகத் தெற்கேயுள்ள ஆரியர் வாழும் நாடென்ற பெருமை இலங்கைக்கு இருந்தது. இலங்கையின் இன்றைய அரசகரும மொழியான சிங்களம் உருவாவதற்கு இவ்வாரியர் வருகையே வழிவகுத்தது. இலங்கையில் குடியேறிய ஆரியரின் சமயம் பற்றிய விவரங்கள் சரியாகத் தெரியாவிடினும், அக்காலத்தில் வடஇந்தியாவில் ஆரியர் பின்பற்றிய இந்து மதத்தையே இங்கும் தழுவியிருப்பர் என ஊகிக்க இடமுண்டு. இலங்கையிற் பௌத்தம் பரவிய பின்னும், மக்களிடையே நிலவிய முந்திய சமய நம்பிக்கைகள் அடிக்கடி அவர்களின் மத வழிபாடுகளைப் பாதிக்கலாயின. இவ்வாறு, ஆரியரின் பண்பாட்டு, அம்சங்கள் இலங்கையின் பொருளாதாரம், சமுதாய அமைப்பு, மொழி, மதம் முதலான பலதுறைகளைப் பாதித்து, இலங்கையை நாகரிகப் பாதையில் பல படிகள் முன்னேறச் செய்தன.

இப்பிரச்சினையைப் புதிதாக நோக்குவதற்கு ஆதி வரலாற்றுக்கால அபிவிருத்திகள், வரலாற்றின் தொடக்கம் என்பன பற்றிய எமது அறிவு, ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு மாத்திரமன்றிப் புரிந்துகொள்ளலின் ஆரம்ப நிலையைத்தானும் எய்துவதற்கே இன்னும் போதமானதாயில்லை என்னும் உண்மையிலிருந்தே ஆரம்பித்தல் வேண்டும். எமது இன்றைய கருத்துக்கள் இலக்கிய மரபுகளிலும், பிராமிக்கல்வெட்டுகளில் பொறித்துள்ள ஆதிச் சிங்களமொழி கூறுகின்ற மொழியியற் சான்றுகளிலுமே முற்றிலும் தங்கியுள்ளது. இன்று பயன்படுத்தப் படுகின்ற ஏனைய எல்லாவகைச் சான்றுகளும் ஐயத்துக்கிட மானவை. தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள்மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட கால, ஆதிவரலாற்றுக்கால பொருள் மீதிகளைக் கண்டுபிடித்தல், ஏற்றுக்கொள்ளத் தக்க நவீன முறைகளினால் இலக்கிய மொழியியல், மானிட இனவியற் சான்றுகளை மேலும் ஆராய்தல், இலங்கை, இந்திய தென்கிழக்காசிய சான்றுகள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வுகள் முதலியவை மாத்திரமே உண்மையான வரலாற்று அபிவிருத்திகளை நாம் நன்கு புரிந்துகொள்வதற்கு நம்மை வழிநடத்திச் செல்லக்கூடியனவாகும்.

இலங்கையில் இன உருவாக்க வரலாற்றை இவ்வாறு நோக்கும்போது அது ஒரு சிக்கலான செயன்முறை என்பதைக் காணமுடியும். இச்செயன்முறை யிலே பல மூலக்கூறுகள் (structures) அடங்கியுள்ளன. முதலாவது இலங்கையின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சியுடன் வரலாற்றுக்கு முற்பட்ட, ஆதிவரலாற்றுக்கால பல்வேறு அபிவிருத்திகளின் கூட்டிணைவானது **'சிங்களவர்'** என்னும் பெரியதொரு இனக்குழுவை உருவாக்கியமை, இரண்டாவது இவ் இனக்குழு உருவான அதேகாலத்தில் அல்லது அதற்குச் சற்றுப் பிந்திய வரலாற்றுக் காலங்களில் **ஏனைய பெரிதும் சிறிதுமான இனக்குழுக்கள்** முகிழ்ந்தமை, மூன்றாவதாக நவீன யுகத்திலே வரலாற்று ரீதியாகச் **சிக்கலான தோற்றங்களையுடைய இனக்குழுக்கள்,** சிக்கல் குறைந்த ஆனால் இன்னும் ஆரம்ப நிலையிலுள்ள 'இலங்கைத் தேசிய' மாக ஒருங்கிணைதல், நவீன இலங்கைச் சமூகத்திலும் பண்பாட்டிலும் மரபுமுறையான இன வேறுபடுத்துகையும்,

இனக்குழுக்களுக்கிடையே பிணக்குகளும், முரண்பாடுகளும் தொடர்ந்து நிலவிய போதும், பண்பாட்டுக் கோலங்களிலே பிரதேசத்துக்குப் பிரதேசம், குழுவுக்குக் குழு, இனத் தடைகளையும் மீறி பௌதிக ஆத்மீகத்துறைகள் இரண்டையும் உள்ளடக்கிய ஒரு தெளிவான ஒப்புடைமை காணப்படுகின்றது. தீவிர இனப் பிணக்குகளும், இன, சாதிப் போட்டா போட்டிகளும் ஆதிக்கம் பெற்றுள்ள ஒரு காலத்திலே நாம் வாழுகின்றபோதும் 21ஆம் நூற்றாண்டின் முற்கூற்றிலே இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கையில் நிலைநிறுத்தப் பட்டுள்ள ஒருமைப்பாடுகள் எதிர்காலத்துக்கான ஒரு பாதையைத் தெளிவாகக் காட்டுகின்றன. கட்டுக்கதைகளையும் திரிபுரைகளையும் புறந்தள்ளி, சகலவித இனவாதக் கண்ணோட்டத்திலிருந்தும் விடுபட்டு இலங்கை வரலாற்றைக் கற்பதன்மூலம் ஐக்கியம் கொண்ட நவீன பல்லினச் சமூகத்தை உருவாக்குகின்ற வரலாற்றுச் செயன்முறைக்கு நாம் பெரும் பங்களிப்புச் செய்யமுடியும்.

அத்தியாயம் : ஏழு

ஆக்ககால இலங்கையின் அரசியல், பண்பாடு

(பௌத்தமதத்துடன் இணைந்த பெருங்கற்காலம் - Buddhisized Megalithism)

வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கை, வரலாற்றுக்கால இலங்கை இவை இரண்டு காலப் பகுதிக்குமிடையே காணப்படும் ஒரு பிரிவாகவே **ஆக்ககாலப் பரப்பு** அமைந்து காணப்படுகின்றது. Proto - Historic Period என ஆங்கிலத்தில் குறிக்கப்படும் இக்காலப் பாகுபாட்டினை **வரலாற்று உதயகாலம** எனக்குறித்து அழைப்பர். இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் **கி.மு. 5ஆம் நூற்றாண்டில் இருந்தே வரலாற்றுக்காலம் ஆரம்பமாகின்றது.** ஏனெனில் பிராமி வரிவடிவங் களில் பொறிக்கப்பட்ட கற்சாசனங்கள் மட்பாண்டச் சாசனங்கள் இக்காலப் பரப்பிலிருந்தே இலங்கையில் கிடைக்க ஆரம்பித்துள்ளன. எனவே இவ்வெழுத்தாதாரங்கள் கிடைக்கப்பெறும் காலகட்டத்திற்கு முன்னர் உள்ள மக்கள் வாழ்க்கைமுறையில் ஒரு வகையான நீர்ப்பாசன விவசாயப் பயிர்ச்செய்கைப் பொருளாதார ஈட்டம் பிரதான பங்கினை வகித்திருந்தமையை அண்மைக்காலத் தொல்லியல் அகழ்வாய்வு முடிபுகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இக்குறிப்பிட்ட காலப்பரப்பில் இலங்கைவாழ் மக்களின் வாழ்வில் ஏற்பட்டிருந்த இம் முன்னேற்றங்களானவை சமகாலத் தென்னிந்தியத் தீபகற்ப இந்தியாவின் மக்கள் வாழ்வு முறையை ஒத்ததாகக் காணப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தென்னாசியப் பரப்பில் பிராமி வரிவடிவ உபயோகமானது அந்தந்தப் பிராந்திய மொழிகளில் தொடர்பாடலுக்கு உபயோகிக்கத் தொடங்கு முன்னரேயே தீபகற்ப இந்தியப் பரப்பிலும் இலங்கைத் தீவிலும் பயிர்ச்செய்கைப் பொருளாதாரச் சமூக அமைப்பு ஒன்று வளர்ச்சி பெற்றுவிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இச்சமூக அபிவிருத்தியானது தீபகற்ப இந்தியாவில் கி.மு. 1000ஆம் ஆண்டிலிருந்து தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்தது. இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் அக்காலப்பரப்பு **கி.மு.800ஆம் ஆண்டு** என விஞ்ஞானபூர்வமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அநுராதபுரத்திலுள்ள கெடிகே என்ற மையத்தில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞானபூர்வ அகழ்வு முறையிலிருந்தே அம்முடிபு வரையறை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் அபிவிருத்தியடைந்த பெருங்கற்காலப் பண்பாட்டு வாழ்க்கை முறையுடன் இணைந்ததாகவே **வரலாற்றுதயகால அரசியல், பொருளாதார, வர்த்தக, நீர்ப்பாசன நிறுவனங்களின் வளர்ச்சியும் பௌத்தத்துடன் இணைக்கப்பட்டுக் காணப்பட்டிருந்தன.** கி.மு. 800ஆம் ஆண்டிலிருந்து கி.பி.

3ஆம் நூற்றாண்டு வரைக்கும் இப்பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய சமூக-பொருளாதாரக் கட்டமைவுக்குரிய அம்சங்கள் வளர்ச்சிபெற்றுக் காணப்பட்டன. தென்னிந்தியாவில் தமிழகத்தில் கிறிஸ்தவ சகாப்தத்தின் முதன் மூன்று நூற்றாண்டுகளும் பெருங்கற்காலப் பண்பாட்டின் அதியுயர் வளர்ச்சி நிலையை வெளிப்படுத்தி இருந்தமையை ஒப்ப, இலங்கையிலும் அக்காலப் பரப்போடும், இடத்தோடும் பௌத்தமும் இணைந்த வகையில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு அபிவிருத்தி நிலைகள் ஏற்பட்டிருந்தமையைத் தொல்லியற் சான்றுகள் வாயிலாகக் கண்டுகொள்ளமுடிகிறது. வரலாற்றுதய காலமான இப்பெருங்கற்காலச் சமூகத்தின் முதலரைக் காலப்பகுதி (கி.மு. 1000 தொடக்கம் கி.மு. 500 வரை)யில் எழுத்தின் உபயோகத்தினைத் தவிர, ஏனைய கண்டுபிடிப்புக்களான **குயவ சக்கரம்** (Potter's Wheel), இரும்பின் உபயோகம் (Iron), **செயற்கையான குளக்கட்டுமான அமைப்பு** (Artificial Lake), **நெற்பயிர்ச்செய்கை**, குடியிருப்புப் பகுதி (Settlement Area), **சவஅடக்க மையங்கள** (Burial Sites) என்பன வாழ்வின் பிரதான அலகுகளாக வளர்ச்சி பெற்றிருந்தன. குயவ சக்கரத்தின் கண்டுபிடிப்பானது **மட்பாண்டங்களின் உற்பத்திக்கு** (கைத்தொழில் வளர்ச்சிக்கு) வழிகோலியது மட்டுமல்லாது மிகப் பரந்தளவில் காணப்பட்டிருந்த பெருங்கற்காலக் **குடியேற்றங்களினூடே போக்குவரத்துத தொடர்பினை ஏற்படுத்த உதவிய சாதனமாகவும் அமைந்தது** என்றால் அது மிகையாகாது.

கி.மு. 500ஆம் ஆண்டில் பிராகிருத மொழியின் உபயோகத்திற்கான பிராமி வரிவடிவம் அறிமுகமாவதற்கு முன்னர் தென்னிந்தியாவில் தமிழகத்திலும், இலங்கையின் வடபகுதியிலும் குறிப்பாக கந்தரோடையிலும் **பழந்தமிழ் மொழியின** உபயோகத்திற்கான பிராமி வரிவடிவம் உபயோகிக்கப் பட்டிருந்தமையை அண்மைக்காலத் தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்தி உள்ளன. வட கர்நாடக மாநிலத்திலுள்ள மாஸ்கி, பிரம்மகிரி ஆகிய மையங்களில் அசோகப் பேரரசனின் பிராமிச் சாசனங்கள் நிலைநாட்டப்படுவதற்கு முன்னரேயே தமிழகத்திலுள்ள குகைகளிலும் மட்பாண்டங்களிலும் திராவிட மொழிக்குரிய பிராமிச் சாசனங்கள் பொறிக்கப்பட்டு விட்டிருந்தன என்பதைத் தென்பிராமி வரிவடிவத்திற்குரிய சிறப்பு எழுத்துக்களான **ற, ழ, ன** என்பன எடுத்துக்காட்டி நிற்கின்றன. இச்சிறப்பு எழுத்துக்களை கந்தரோடையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மட்பாண்டச் சாசனங்களிலிருந்தும், பெரிய புளியங்குளத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பிராமிச் சாசனத்திலிருந்தும் பூநகரியிலிருந்து மீட்கப்பட்ட மட்பாண்ட பிராமிச் சாசனங்களிலிருந்தும் கண்டுகொள்ள முடிகிறது. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்தமானது தமிழ் நாட்டினூடாக வடஇந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டபோது பிராகிருத மொழியின் பாவனைக்கான பிராமி வரிவடிவமும் இங்கு கொண்டுவரப்பட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரைக்குமான ஆதிப் பிராமிச் சாசனங்கள் இலங்கையில் பெரும் எண்ணிக்கையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் பரவலைப் பார்க்கும்போது இலங்கையின் உலர்வலயப் பிரதேசத்தில் நீர்ப்பாசன நிறுவனங்களுடனும் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் பரவிக் காணப்படும

வலயத்துடனும் இணைந்தவகையில் சொருகப்பட்டிருப்பதனைக் காணலாம். **பௌத்த மதத்தின் அறிமுகமும், பரவலும் நிகழ்ந்த பிராந்தியமான மேலே குறிப்பிடப்பட்ட பண்பாட்டுப் பகைப்புலத்தினையே மையமாகக் கொண்டு பெருங்கற்காலத் தளம் காணப்பட்டிருந்தது** என்பதும் குறிப்பிடத் தக்கது. எனவே வரலாற்று உதய காலப்பகுதியான பெருங்கற்காலமானது அதன் பின்னரைக் காலப்பரப்பு முழுவதிலுமே பிராந்திய மொழிப் பாவனைக்குரிய வரிவடிவ வளர்ச்சியுடனும், மதநிறுவனங்களுடனும் இணைந்த நீர்ப்பாசனப் பொருளாதார வளத்துடன் மலர்ச்சி பெற்றிருந்தது என்பதனைக் கண்டுகொள்ளலாம். **அரசின் தோற்றத்தினையும் இங்கு நன்கு காணமுடிவதில் வியப்பு ஏதுமில்லை.**

வரலாற்று உதய காலமான இப்பெருங்கற்காலப் பண்பாடு பற்றி அறிந்து கொள்வதும் முக்கியமானதாகும். **Ethnicity and Social change in Sri Lanka** என்ற நூலில் கலாநிதி **சுசந்தா குணதிலகா** என்பவர் இக்காலப்பகுதி இலங்கையில் ஏற்பட்டிருந்த பண்பாட்டு உருவாக்கம் பற்றி சிறப்பாக ஆராய்ந்துள்ளார். **சுசந்தா குணதிலகா** தமது கட்டுரையில் சமீபகால தொல்பொருள் அகழ்வுகளை ஆராய்ந்து வரன்முறை ஏடுகளில் பண்டைய இலங்கைப் பண்பாடு தொடர்பாகக் காணப்படும் தகவல்களுக்கு மறுவிளக்கமளிக்க முனைகின்றார். வரலாற்றுக்கு முந்திய காலகட்டத்தில் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேவகையான பொருளாதார அமைப்பு, தொழினுட்ப அடிப்படை, கலாசாரம் ஆகியவற்றைக் கொண்ட நிலையான விவசாயத்தை வளர்த்தோராகவும் பிற்காலத்தில் மாபெரும் நீர்ப்பாசனத் திட்டங்களாக வளர்ச்சியடைந்த **நீர்ப்பானவியல் தொழினுட்பத்தின் முன்னோடிகள்** ஆகவும் விளங்கினர். இச்சமூகமானது தொடர்ந்து ஏற்பட்ட குடியேற்றங்களால் வளம் பெற்றது. வடஇந்தியாவைச் சேர்ந்த சமயமும், மொழியும் இங்கு குடியேறிய சில குழுவினரால் கொண்டுவரப்பட்டு, நாடு முழுவதும் நிலைநிறுத்தப்பட்டு சிங்களப் பண்பாட்டின் அடிப்படையாகின. இந்தச் சமயமான பௌத்தமே பின்னர் ஒரு குறிப்பிட்ட குழுவின் மேலாண்மை, அரசாட்சி முறைமைகளை ஏற்புடமை பெறச்செய்வதில் முக்கிய பங்கு வகித்தது. உண்மையில் இந்நாட்டில் **நிலையான பயிர்ச்செய்கையை** மேற்கொண்டிருந்த மக்கள் நீண்டகாலமாக வசித்துவந்தனர். இக்குடிமக்களதும், பின்வந்த குடியேற்றங் களதும் கலப்பும் இணைப்புமே இலங்கைச் சமூகத்திற்கு அடிப்படையாகின. எனவே எந்தவொரு குடியேற்றக் குழுவுக்கும் இலங்கைக்கு உரித்துடையவர் என்று முதன்மை கொடுப்பதற்குக் கால ஒழுங்கு முதன்மை இல்லை.

எனவே இலங்கைச் சமூக உருவாக்கத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய மக்களே அடித்தளமாக விளங்கியிருக்கின்றனர். அண்மைக்காலத் தொல்லியல் அகழ்வுகள் மூலம் இலங்கையில் செறிந்து காணப்பட்ட பெருங்கற்காலக் குடியிருப்புக்களையும், சவஅடக்க மையங்களையும் தனித்துவமாக இனங்காண முடிந்துள்ளது. **யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வெளியே பூநகரியிலிருந்து மேற்குக் கரையோரமாக மாந்தை - திருக்கேதீஸ்வரப் பரப்பு, மல்வத்து**

ஓயாவின் பள்ளத்தாக்கு, அதன் முகத்துவாரம், குதிரைமலைமுனை, புத்தளத்தில் பொன்பரிப்பு, களனிகங்கையின், முகத்துவாரம் ஆகியனவும், கிழக்கிலங்கையின் திகவாபி, கொட்டியாரப் பரப்பு, கதிரவெளி, குருக்கல்கின்ன, படியகம்பளை, வெல்லாவ நதிப்படுக்கை, கதிர்காமம், மகாகமை ஆகியனவும், அநுராதபுரத்தில் கெடிகே ஆகிய மையமும் பெருங்கற்கால சவஅடக்க மையங்களாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் கந்தரோடையானது பரந்த ஒரு பெருங் கற்காலக் குடியிருப்பாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. வல்லிபுரம், நாகர்கோயில், ஆனைக்கோட்டை, வரணி, காகந்தின்னித்திடல் ஆகியன பெருங்கற்கால சவஅடக்க மையங்களாகக் காணப்படுகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட மையங்கள் யாவும் உலர்வலயப் பகுதிக்குள்ளேயே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. களனி நதியின் முகத்துவாரம் மாத்திரமே ஈரவலயப் பிராந்தியத்திற்குள் காணப்படுவது அவதானிக்கத் தக்கது.

மகாவம்சமானது **விஜயனது வருகை** என்பது பற்றி குறிப்பிடும் நிகழ்ச்சிக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னரே இலங்கையில் இருந்த **உள்ளூர் அரசுகட்கு புத்தர் மும்முறை வந்தமை** பற்றிக் குறிப்பிடப்படுவதனை பல்வகையான இலக்கியச் சான்றுகள் வாயிலாக அறிகின்றோம். உள்ளூர் அரசுகளான மகியங்கணை, நாகதீபம், கல்யாணி ஆகியவற்றுள் முதலிரண்டும் உலர்வலயப் பரப்பினுள் அமைந்து காணப்பட்டது. அவ்வரசுகளுக்கான இருப்பும் வளர்ச்சியும் **உபரி உற்பத்தி** அடிப்படையிலேயே (மேலதிக உற்பத்தி) ஏற்பட்டிருக்க வேண்டும். வேட்டையாடி உணவு சேகரித்தல் தொழிற்பாட்டில் இவ்வாறான அரசிருக்கைகள் உருவாகமாட்டாது. அவ்வாறானால் மேலே சொல்லப்பட்ட மூன்று உள்ளூர் இராச்சியங்களுள் மகியங்கணை, நாகதீபம் இவை இரண்டும் உலர்வலயப் பரப்பினுள் நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கைப் பொருளாதார ஈட்டத்தினை அடிப்படையாகக் கொண்டே தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்திருந்தன என்பது தெளிவாகின்றது. **(மூன்றாவது இராச்சியமான கல்யாணி மழைவீழ்ச்சி கூடிய பிரதேசத்தில் அமைந்து காணப்படுகிறது)** ஆதலால் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய மக்களாலேயே அவ்வரசிருக்கைகள் வளர்த்தெடுக்கப் பட்டிருந்தன என்பதும் இங்கு தெளிவாகின்றது.

அநுராதபுரத்தில் கெடிகே என்ற மையத்தில் மேற்கொள்ளப்பட்ட மண்படை அடுக்கியல் அகழ்வாராய்ச்சியானது **இரண்டாம் மண்படை** குறிக்கின்ற காலம் முதலாக அநுராதபுரத்தில் **செயற்கையான நீர்த்தேக்கங்கள** இருந்தமையைச் சுட்டிக் காட்டுகின்றது. முதலாம் மண்படையானது கி.மு. 4500க்குரிய பலாங்கொடைப் பண்பாட்டுடனும், கற்காலச் செய்கருவிகளுடனும் இணைந்து காணப்பட்டது. **மூன்றாம் மண்படையானது கி.மு.800க்கும் கி.மு.100க்கும் இடைப்பட்ட காலத்திற்குரியனவகக் கொள்ளக்கூடிய தீபகற்ப இந்தியாவின் இரும்புக்காலப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடைய**

தாகக் காணப்படுகின்றது. இருந்தபோதிலும் **'தேமோலுமினசன்'** கால நிர்ணயமுறையின் அடிப்படையில் காலவரையறையை குளநீர்த் தேக்கத்திற்கு மேற்கொள்ள முடியாதுள்ளது. ஆனால் **மௌரியர் பாரம்பரியம** (பௌத்தம்) ஒன்று இங்கு வருமுன்னர் **மூன்றாவது மண்படை அடுக்கினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட காலத்தில் வாழ்ந்தோர் குளநீர்ப்பாசனம் மூலம் நெல்லைப் பயிரிட்டனர் என்றும் அவர்கள் மத்திய இந்தியா விற்கும், தென்னிந்தியாவிற்கும் உரிய முற்பட்ட இரும்புக்கால மக்களுடன் பண்பாட்டு ரீதியாகத் தொடர்புபட்டவர்கள் என்பதும் தெளிவாகியுள்ளது.**

இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் பொதுமையான இப்பெருங்கற்காலப் பண்பாட்டின் குணாதிசயங்கள் தனித்துவம் வாய்ந்தவையாகும். சவஅடக்க முறையும், ஈமச்சின்னங்களும் பலதரப்பட்டவையாக உள்ளன. அவையாவன: **டொல்மன், கற்குவியல்கள், கற்சதுக்கம், ஈமத்தாழிகள்** என்பன குறிப்பிடத் தக்கன. **இச்சவ அடக்க முறைக்குரிய பண்பாட்டு மக்கள் இரும்பு உலோகப் பாவனைக்குரியவர்களாகவும், கறுப்பு - சிவப்பு மண்பாண்ட உபயோகத்திற் குரியவர்களாகவும் காணப்பட்டனர்.** இம்மக்களுடைய வாழ்வில் நான்கு பிரதான அலகுகள் இடம்பெற்றிருந்தன. அவையாவன: **வதிவிடப் பகுதி, இடுகாடு, குளம், வயற்பரப்பு** என்பனவே அவையாகும். இவ்வாறான சிறப்பியல்பு களையுடைய மக்களே இலங்கையில் நீர்ப்பாசனப் பொறிமுறையுடன் இணைந்த தொழிநுட்பங்களை முதன்முதலாக அறிமுகப்படுத்தி வைத்தனர். பிற்காலத்தில் **தலம்-தீர்த்தம்** என அடையாளம் காணப்பட்ட இந்துமதக் குடியிருப்பும் கோயிலும் குளமும், பௌத்த மதத்தில் அடையாளம் காணப்பட்ட **ஸ்தூபி, குளம், குடியிருப்பு என்பனவும் இப்பெருங்கற்காலப் பண்பாட்டு வளர்ச்சி நிலையில் ஏற்பட்ட புதியதொரு படிநிலையாகும்.**

புராதன இலங்கைப் பண்பாட்டின் பிரதான நிறுவனங்களின் வளர்ச்சிநிலை யாவற்றிற்கும் அடித்தளமிடப்பட்ட ஒரு காலப் பகுதியாகவே இப்பெருங்காலப் பண்பாடு காணப்படுகின்றது. நீர்ப்பாசனவியல் நிறுவனங்களினூடாக கி.பி. 13ஆம் நூற்றாண்டு வரைக்கும் நாகரிக முறையினை நன்னிலைப்படுத்திய வகையில் அவற்றின் ஆக்ககாலப் பகுதியாக இப்பெருங்கற்கால மக்களது வாழ்வுமுறை அமைந்துகொண்டது. இந்து மதமும், பௌத்த மதமும் இக்காலத் தொடக்கத்திலிருந்தே இரு பண்பாட்டுக் கூறுகளாக கி.பி. 13ஆம் ஆண்டு வரைக்கும் வளர்ச்சிபெற்றுச் செல்வதனைக் காணமுடிகிறது. **அரசின் தோற்றம், அரசன், அரச குடும்பம், அரச மதம், தலைநகர், வெளிநாட்டு வர்த்தகம், தொடர்புகள்** போன்ற இன்னோரன்ன அம்சங்கள் ஆக்கம்பெற்ற ஒரு காலப் பகுதியாகவே இப்பெருங்கற்கால யுகம் விளங்கியது. கி.பி 13ஆம் நூற்றாண்டு வரையிலான நீர்ப்பாசனப் பொருளாதார நாகரிக அலகுகள் வளர்ச்சி அடைந்தமைக்கு அடித்தளம் இடப்பட்ட ஒரு காலப்பகுதியாகவே இப்பெருங்கற் காலம் அமைந்தது. தீபகற்ப இந்தியாவில் **சேர, சோட, பாட சத்தியபுத்திரோ, கேரள புத்திரோ, தம்ப்பபம்மி** என அசோகனுடைய 2ஆம் 13ஆம் கிர்னார்

சாசனப் பதிவுகளில் குறிப்பிடப்பட்ட அரச வம்சங்கள் யாவும் பெருங்கற்கால சமூக அமைப்புக்கள் என்பதில் சிறிதளவேனும் ஐயம் எழமுடியாது. இவ்வம்சக் குறிப்புகளில் **ஆந்திரா** பற்றிய குறிப்பு இடம்பெறாதது வியப்பாகவே உள்ளது. தீபகற்ப இந்தியாவினுள் பெருங்கற்கால சமூக அமைப்பினின்றும் முதன்முதலாக அரசவம்சமாக வளர்ச்சி கண்டிருந்ததாக **ஆந்திர வம்சம** அமைந்தது. இவ்வம்சத்தின் தோற்றம் கி.மு. 3ஆம் நூற்றாண்டின் நடுக்காற்பகுதியிலிருந்து ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது. பயிர்ச்செய்கை குள நீர்ப்பாசனப் பொறிமுறை வளர்ச்சியுடன் இணைந்த ரோமானிய வாணிபத் தொடர்புகளை வளர்த்தெடுத்த ஒரு வம்சமாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பெருங்கற்கால இலங்கைச் சமூகமும் தீபகற்ப இந்தியாவில் ஆந்திரருடன் அரசியல், பண்பாட்டு, வர்த்தகத் தொடர்புகள் பலவற்றைக் கொண்டிருந்தமையினை தொல்லியற் சான்றுகள் வாயிலாக உறுதிப்படுத்த முடிந்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் அதன் பாண்பாட்டுப் பௌதீக அடிப்படை யானது தீபகற்ப இந்தியப் பெருங்கற்காலப பண்பாட்டுடன் இணைந்த கிராமியக் குளங்களாகவே அமைந்தன. அடுத்து வந்த 1500 ஆண்டு காலப் பரப்பில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் நிறுனங்களின் வளர்ச்சியும், மாற்றங்களும் அவ்வகையான கிராமியக் குளங்களின் அடிப்படைகளிலிருந்து பெறப்பட்ட உபரி உற்பத்தியின் விகிதாசாரத்திலேயே தங்கியிருந்தது. இலங்கையில் கிடைத்த கி.மு. 3ஆம் 2ஆம் நூற்றாண்டுகளுக்குரிய ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களிலே மிகஅதிகளவில் பொறிக்கப்பட்டுக் காணப்படும் **வபிகமிக** என்ற பதமானது குளச்சொந்தக்காரரைக் குறிப்பிட்டு நிற்கின்றது. கிராமிய மட்டத்தில் மக்களுக்குரிய ஒரு சொத்துடமையாகக் காணப்பட்டு, பின்னர் பௌத்த சங்கத்துக்குரிய சொத்துக் களாக மாற்றப்பட்டு விட்ட தன்மையைச் சாசனங்கள் வாயிலாகக் காண்கின்றோம். இக்கால கட்டத்திலேயே இலங்கைத்தீவு முழுவதிலும் பரந்து காணப்பட்ட சிற்றரசுகள் யாவும் ஒன்றிணைக்கப்பட்ட வகையில் அநுராதபுரத்தினை தலைமையாக ஏற்றுக்கொண்டிருந்த நடைமுறையையும் காண்கின்றோம். **மகாகம, தீகவாபி, கல்யாணி, நாகதீபம்** ஆகிய சிற்றரசுகள் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த மன்னனை **மஹாராஜா** என்ற நிலையில் ஏற்றுக்கொண்டிருந்த செய்திகளை **கி.பி. 1ஆம் நூற்றாண்டுக்குரிய பிராமிச் சாசனப் பொறிப்புக்கள்** வாயிலாகக் கண்டுகொள்ளமுடிகின்றது. இப்போக்கினுடைய யதார்த்தமான தன்மை என்னவெனில், உபரி உற்பத்தியானது குளநீர்ப் பயிர்ச்செய்கைப் பொருளாதார வளத்தினை அடிப்படையாகக் கொண்டவகையில் நாகதீபம், தீகவாபி, மகாகம ஆகிய மையங்களைவிட அநுராதபுரத்தில் பன்மடங்காகக் காணப்பட்டமையே அநுராதபுரம் என்ற நகர் அரசியல், பண்பாட்டுக் கட்டுமான நிலைகளில் தலைமைத்துவத்தைப் பெறக் காரணமாயிற்று எனலாம்.

மிகப்பரந்த அடிப்படையிலான தொல்லியல் அகழ்வாராய்ச்சி இன்றி பெருங்கற்கால நீர்ப்பாசனத்தின் நாடளாவிய பரம்பல் எவ்வாறிருக்கும் எனக் குறிப்பிடமுடியாது. காலக்கணிப்பீடு செய்யக்கூடிய குளக்கட்டுக்களினுடைய

அகழ்வாய்வுகள் இல்லையெனில் கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட காலகட்டத்திலிருந்திருக்கக்கூடிய நீர்ப்பாசன முறையின் பரம்பல், அளவு பற்றிக் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய நேரடியான பௌதீகச் சுட்டுமானி எமக்கில்லை எனலாம். **(மகாவம்சத்தில் இடம்பெறுகின்ற சில முக்கியமான குளங்களினது நிர்மாணம் பற்றிய குறிப்புக்களானவை அவை (பெருங்கற்காலத்தில்) இருந்திருப்பதற்கான சான்றாதாரங்களாகும்)** இருந்தும் கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட காலத்திற்குரிய சாசனங்கள் நிலையான குளநீர்ப்பாசனம் நிலவியதனை பிரதிபலித்துக் காட்டுகின்றன. இவ்வாறு கருதுவதற்கு ஒரு நியாயமான அடிப்படையும் உண்டு. இலங்கைப் படத்தில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலச் சாசனங்களின் பரவலானது இலங்கையின் உலர்வலய செம்மண் பிரதேசத்தில் அமைந்து காணப்படுகின்றது. 19ஆம் நூற்றாண்டில் எஞ்சியிருந்த குளங்களினது வலைப் பின்னலும் இச்செம்மண் பகுதியையே உள்ளடக்கியிருந்தது. (இலங்கையின் சாசனப் பரம்பல் பற்றிய வரைபடத்தினையும், சி.ஆர்.பாணபொக்கே யினுடைய மண் அமைவு பற்றிய வரைபடத்தையும் ஒப்பிடும்போது இது புலனாகின்றது) கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்துடன் நாடு முழுவதிலும் இக்குளநீர்ப்பாசனப் பண்பாடு நன்கு பரவியிருந்தமைக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் கிராமக் குளங்களைவிட பெரிதற்றவையான நீர்ப்பாசன அமைப்புக்களின் தொகுப்பாகும். இத்தகைய பெரும்பாலான குளங்கள் யாவும் தென்னிந்தியப் பெருங்கற்கால பண்பாட்டுடன் இணைந்த தொழில்நுட்ப முறையின் அடிப்படையில் அமைந்திருந்தன எனக் கருதமுடியும்.'

'இலங்கையின் பல பாகங்களிலும் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டு எச்சங்களே நிலையான பயிர்ச்செய்கை பற்றி எமக்குக் கிடைக்கும் நேரடியான ஆதாரங்களாகும். கொழும்பு அரும்பொருளகத்திலுள்ள ஓர் இலங்கை புற உருவப்படத்திலே குறிப்பிடப்பட்டுள்ள சில பெருங் கற்காலத் தலங்களானவை **(பொம்பரிப்பு, குருகல்கின்ன, கதிரவெளி, படியகமபளை, வெல்லாவ நதிப்படுக்கை)** உலர்வலயப் பகுதிக்குரிய **செம்பழுப்பு மண் பகுதியிலேயே** அமைந்து காணப்படுகின்றன. அநுராதபுரத்தில் **கெடிகே** பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மண்படை அடுக்கியல் அகழ்வாராய்ச்சியானது இரண்டாம் மண்படை குறிக்கின்ற காலம் முதலாக அநுராதபுரத்தில் செயற்கையான நீர்த்தேக்கங்கள் இருந்தமையைச் சுட்டிக்காட்டுகின்றது. முதலாவது மண்படையானது கி.மு. 4500க்குரிய **'பலாங்கொடப் பண்பாட்டுடனும்'** கற்கால செய்கருவிகளுடனும் தொடர்புபட்டது. மூன்றாம் மண்படையானது கி.மு. 800க்கும் 100க்கும் இடைப்பட்ட காலத்திற்குரியனவாக கொள்ளக்கூடிய தீபகற்ப இந்தியாவின் **இரும்புக்கால பெருங்கற்கால** பண்பாட்டுடன் நெருங்கிய தொடர் புடைய செய்கருவிகளைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட இவ்விடத்தின் கால நிர்ணயமானது மண்படை அடுக்கிலே தங்கியுள்ளதன்றி பௌதீக சான்றுகளில் அன்று. குறிப்பிட்டுச் சொல்வதாயின் அவ்விடத்திலே கிடைக்கின்ற மட்பாண்டங் களுடைய **'தொமோலுமினசன'** கால நிர்ணய முறையின் அடிப்படையிலேயே கால வரையறை செய்யப்பட்டது. ஆகவேதான் பெருங்கற்கால பண்பாட்டுக்குரிய

மட்படைகளினது காலத்தையோ அல்லது நீர்த்தேக்கத்துடன் இணையப்பெற்ற அவ்விரண்டாம் மட்படையினது காலத்தையோ அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. ஆனால் குறிப்பிட்ட சில பண்பாட்டு சிறப்பியல்புகள் வட இந்தியத் தன்மைகளைக் கொண்டிருந்த போதிலும் கி.மு. 3ஆம் நூற்றாண்டளவில் 'மௌரிய பாரம்பரியம்' (பௌத்தம்) வருவதற்கு முன்னர் மூன்றாவது மண்படையினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட காலத்தில் வாழ்ந்தோர் குளநீர்ப்பாசனம் மூலம் நெல்லைப் பயிரிட்டனர் என்றும் அவர்கள் மத்திய இந்தியாவிற்கும் தென்னிந்தியாவிற்கும் உரிய முற்பட்ட இரும்புக்கால மனிதனுடன் பண்பாட்டு ரீதியாக நெருங்கிய தொடர்புடையவர்களாய் இருந்தார்களென்றும் தெரணியகல குறிப்பிடுவதனை நாமும் ஏற்றுக்கொள்ளலாம்.'

இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் பொதுவான இப்பெருங்கற்காலப் பண்பாட்டின் குணாதிசயங்கள் நன்கு பிரபல்யமானவையாகும். ஒருவகையில் வதிவிடங்களின் தன்மையைப் பொறுத்தமட்டில் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுகிறது, சவஅடக்க முறையும் ஈமச்சின்னங்களும் பலவிதப்பட்டனவாகும். இவ்வகைகளில் **டொல்மன், கற்குவியல்கள், கற்சதுக்கம், ஈமத்தாழிகள்** என்பன அடங்குகின்றன. மேலும் இப்பண்பாடு உலோக பாவனையுடைய தாகவும், கறுப்பு - சிவப்பு மட்பாண்டத்தைக் கொண்டதாகவும், **வதிவிடப்பகுதி, இடுகாடு, குளம், வயற்பரப்பு** ஆகிய நான்கு தனித்துவமான பகுதிகள் உள்ள குடியிருப் பினைக் கொண்டதாகவும் விளங்கியது. நீர்ப்பாசன முறையைக் கையாண்டதும், இப்பிரதேசங்கட்கு அதன் நுட்பங்களை அறிமுகப்படுத்தியதும் இவர்களே என்று இப்போது கருதப்படுகிறது. கிடைக்கின்ற பௌதீக ஆதாரங்களின்படி **'ஆரியர் வருகை'** என அழைக்கப்படும் நிகழ்விற்கு முன்னர் கையாளப்பட்ட நீர்ப்பாசன பயிர்ச்செய்கையை மேற்கொண்ட இத்தகைய குடியிருப்புகளிலேயே நீர்ப்பாசன வளர்ச்சியுடனும் அதன் பரம்பலுடனும் பிணைக்கப்பட்ட எமது பாரம்பரிய பண்பாட்டின் ஆரம்பத்தினை நாம் காணலாம். கிராமிய - குள அடிப்படையிலமைந்த நீர்ப்பாசனத்தோடு தொடர்புடையதும், நெய்தற்பண்பாட்டு, நெசவுடன் தொடர்பான செய்கருவிகள், அகப்பைகள், அம்மி - குழவி போன்ற அரைகற்கள், இரும்பு, மட்பாண்டங்கள் என்பனவற்றையும் கம்பு - களிமண்ணால் கட்டப்பட்ட வீடுகளையும் கொண்டிருந்தது. இப்பண்பாட்டின் நம்பிக்கை முறைகளைச் சுட்டும் முக்கிய அம்சமாக ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. இப்பெருங்கற் சின்னங்களோடு தொடர்புடைய பெரிய ஈமத்தாழிகள் உட்பட இறந்தோரது எச்சங்களும், அவற்றுடன் சேர்ந்து காணப்படும் சிறுச்சிறு கலங்களினாலான ஈமப்படையல்களும் கொண்ட தாழிக்காடுகள் அறியப்பட்டுள்ள சவஅடக்க முறைகளும் அவற்றுடன் தொடர்புள்ள பெருங்கற்களும் சமய முக்கியத்துவத்தினை கொண்டுள்ளமை தெளிவாகும். இதிலிருந்து சமயத் தலத்தினையும் நீர்ப்பாசனக் குளத்தினையும் நெருங்கிய வகையில் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது.

புராதன இலங்கைப் பண்பாட்டின் பௌதீக அடிப்படையானது தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் இணைந்த **கிராமிய குளங்களேயாகும்**. அடுத்து வந்த 1500 ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்ட பிரதான சமூக - பொருளாதார

மாற்றங்களானவை, அதிகரிக்கும் உபரி உற்பத்தியைத் தரக்கூடியதாக இருந்த ஆரம்ப நீர்ப்பாசன முறையின் விரிவுடனும், தொடர்புறுத்தலுடனும், உறுதிப் படுத்தலுடனுமே மிக நெருக்கமாக இணைக்கப்பட்டிருந்தன. இவ்வாறான நிறைந்த சான்றுகள் உள்ள (நீர்ப்பாசன முறையின்) உறுதிப்பாட்டின் வளர்ச்சிக்குள்ளேயே பாரம்பரிய இலங்கைப் பண்பாட்டின் தோற்றப்பாட்டினை நாம் நோக்குதல் வேண்டும்.

'மிகப் பரந்த அடிப்படையிலான தொல்லியல் அகழ்வாராய்ச்சியின்றி பெருங்கற்கால நீர்ப்பாசனத்தின் நாடளாவிய பரம்பல் எவ்வாறிருக்கும் என்று குறிப்பிடமுடியாது. காலக்கணிப்பீடு செய்யக்கூடிய குளக்கட்டுக்களினுடைய அகழ்வாய்வுகள் இல்லையெனில், கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட காலகட்டத்தில் இருக்கக்கூடிய நீர்ப்பாசன முறையின் **பரம்பல், அளவு** பற்றி குறிப்பிட்டுக் காட்டக்கூடிய நேரடியான **பௌதீக சுட்டுமானி** எமக்கில்லை எனலாம். (மகாவம்சத்தில் இடம்பெறுகின்ற சில முக்கியமான குளங்களினது நிர்மாணம் பற்றிய குறிப்புக்களானவை, அவை இருந்திருப்பதற்கான சான்றாதாரங்களாகும்). இருந்தும் **கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட காலத்திற்குரிய சாசனங்கள் நிலையான குள நீர்ப்பாசனம் நிலவியதனை பிரதிபலித்துக் காட்டுகின்றன.** இவ்வாறு கருதுவதற்கு ஒரு நியாயமான அடிப்படையும் உண்டு. இலங்கைப் படத்தில் **கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால சாசனங்களின் பரம்பலானது இலங்கையின் உலர்வலய செம்மண் பிரதேசத்தில் அமைந்து காணப்படு கின்றது. 19ஆம் நூற்றாண்டில் எஞ்சியிருந்த குளங்களினது வலைப் பின்னலும் இச்செம்மண் பகுதியையே உள்ளடக்கியிருந்தது.** (இலங்கையின் சாசனப் பரம்பல் பற்றிய வரைபடத்தையும், சி.ஆர். பானபொக்கேயுடைய மண் அமைவு பற்றிய வரைபடத்தையும் ஒப்பிடும்போது இது புலனாகிறது. 1975ஆம் ஆண்டிற்குரிய ஒக்டோபர் மாத வெளியீடான 'பொருளியல் நோக்கு' என்ற சஞ்சிகையில் இவ் ஒப்பீடானது இரு வரைபடங்களுடன் வெளியாகி உள்ளது). கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்துடன் நாடு முழுவதிலும் இக் குள நீர்ப்பாசனப் பண்பாடு நன்கு பரவியிருந்தமைக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் **'கிராமக் குளங்களைவிட பெரியதற்றவையான'** நீர்ப்பாசன அமைப்புக்களின் தொகுதியாகும. **இத்தகைய பெரும்பாலான குளங்கள் யாவும் தென்னிந்திய பெருங்கற்கால பண்பாட்டுடன் இணைந்த தொழில்நுட்ப முறையின் அடிப்படையில் அமைந்திருந்தன என்று கருதமுடியும்.'**

'காலப்போக்கில் இக் குளங்கள் பெரிதாக்கப்பட்டன. அருவிகள் அணைகளால் தடுத்துக் கட்டப்பட்டன. ஒரு நீர்ப்பாசன வலைப்பின்னலின் அமைப்பு வரண்ட வலயப் பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியது. முதலாம் நூற்றாண்டில் பெரும் குளங்களின் ஆரம்பத்தினையும் 30 மைல் நீளமான கால்வாய்களின் நிர்மாணத்தினையும் காணலாம். மகாசேன மன்னன் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் மிகப் பெரிய நீர்த்தேக்கங்களைக் கட்டினான். இந் நடவடிக்கைகள் 4ஆம், 5ஆம் நூற்றாண்டுகளிலும் தொடர்ந்தன. (3½ மைல் நீளமும் 40 அடி உயரமும் உடைய அணைக்கட்டைக் கொண்டிருந்த கலாவேவ 7000 ஏக்கர் நிலத்திற்கு

நீர் பாய்ச்சியது. 54 மைல் நீளமான கால்வாயான ஜயகங்கை அநுராதபுரத்திற்கு நீரை எடுத்துச்சென்றது). இந் நடிவடிக்கைகள் ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளிலும் தொடர்ச்சியாக இடம்பெற்றன. உதாரணமாக இரண்டாம் அக்ரபோதியினுடைய கட்டிட நிர்மாணத்துறை நடவடிக்கைகள் மகாசேன மன்னனுடைய ஆக்க நடவடிக்கைகளுடன் போட்டியிடக்கூடியனவாக அமைந்திருந்தன. 7ஆம் நூற்றாண்டில் அமையப்பெற்ற பிரதான கால்வாய்களின் மொத்த நீளம் 250 மைல்களுக்கும் மேலாக இருந்தது. கி.பி. 8ஆம், 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகள் செல்வச்செழிப்புமிக்க ஒரு காலமாக விளங்கியபோதும், புதிய நீர்ப்பாசன நிர்மாணங்கள் மிகக்குறைந்தளவிலேயே இடம்பெற்றிருந்தன. அடுத்து நீர்ப்பாசன நடவடிக்கையில் மிகவும் உச்சமாக 11ஆம் நூற்றாண்டில் மகாபராக்கிரமபாகுவின் நடவடிக்கைகள் அமைந்தன. இம் மன்னனுடைய ஆட்சிக்குப் பின்னர் போர்களி னாலும் வேறு காரணிகளினாலும் நீர்ப்பாசனவியல் முறைகள் மெதுவாகச் சீரழியத் தொடங்கின. 13ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து இத்தீவின் சமூக - பொருளாதார மையமானது தென்மேற்கு நோக்கி புலம்பெயர்ந்தது.'

13ஆம் நூற்றாண்டு வரையில் ஏறத்தாள 1500 ஆண்டுகளாக வளர்ந்த நீர்ப்பாசனவியல் நாகரிகம் இலங்கையின் பாரம்பரிய பண்பாட்டிற்கும் வளமூட்டியது. விளைச்சல் அதிகரித்தமையும் அதனால் **பட்டுவாடா** செய்யக்கூடிய **உபரி உற்பத்தி** ஏற்பட்டமையும் பரந்தளவில் வளர்ந்த இந்நீர்ப்பாசன முறையின் மிக முக்கியத்துவம் வாய்ந்த சமூக - பொருளாதார தாக்கமாகும். இவ் **உபரி உற்பத்தியானது** எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது பற்றி ஆய்வு அக்காலத்துச் சமூக - பொருளாதார முறைமை பற்றியும் சிறப்பாக அக்கால **வர்க்க உறவுகளின** தன்மை பற்றியும் அறிய உதவுகின்றது. விவசாயிகளினதும் ஏனையோர்களினதும் வாழ்க்கைத் தரங்கள்மூலம் எவ்வாறு இந்த உபரி உற்பத்தி உபயோகிக்கப்பட்டிருக்கலாம் என ஓரளவுக்கு அறிந்துகொள்ளலாம்.

'மிகச் சமீப காலம்வரையில் கூரை ஓடுகள், செங்கற்கள் என்பன அரண்மனை யினதும், ஆலயங்களினதும் உபயோகத்திற்கு உரியதாக மட்டுமே இருந்தன. எனவே குடியானவர்களின் வீடுகள் எல்லாம் கம்பும் களியும் கொண்டு கட்டப்பட்டன. இத்தகைய வதிவிடங்கள் ஒரு வகைப்பட்ட தொடக்க நிலையிலேயே இருந்து கொண்டிருந்தன. எமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களை நோக்குகையில் பெருங்கற்காலத்தில் கம்பும், களியும் கொண்டு அமைக்கப்பெற்ற வதிவிடங்களின் தன்மையிலிருந்து அவை பெரிதும் மாறுதடைந்திருந்தன எனக்கூறமுடியாது. இந்த அடிப்படையான அமைப்பு முறையானது இத்தீவின் பல பாகங்களில் இன்றும் நிலவுகின்றது.'

'புராதன இலங்கையின் வதிவிடங்கள் கம்பும் களியும் கொண்டு அமைந்திருந்தனவாயின் வாழ்வின் ஏனைய அடிப்படைத் தேவையான உடை, வீட்டுப்பாவனைப் பொருட்கள் எவ்வாறு இருந்தன? குவேனி பற்றிய கதையானது நம்பத்தகுந்ததாயிருப்பின் விஜயனது காலத்துக்கு முன்பிருந்தே இலங்கையில் பருத்தி பரவலாகப் பயிரிட்டமையை நாம் உணரலாம். உஷ்ணமான

காலநிலைக்கும் பொருந்தக்கூடிய இடுப்பினைச் சுற்றி அணியும் வேட்டி போன்ற குறைந்தளவிலான உடுதுணி வகைகளை அரசவையைச் சேர்ந்த அங்கத்தினர்கள் கூட உபயோகித்தமைக் கான சான்றினை மிகப் பரந்துபட்டளவில் தீட்டப்பெற்ற ஓவியங்களிலிருந்தும், சிற்பங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். சந்தேகமின்றி இவ்விவசாய மக்களும் இத்தகைய ஆடைகளையே, ஒருவேளை செப்பமாக நெய்யப்படாத துணிகளையே அணிந்தனர் எனக்கூறலாம். சராசரியான விவசாயிகள் ஓரிரு மாற்றுடைகளையே கொண்டிருந்திருப்பர். குடியானவர்களது இல்லங்களின் அமைப்புப் பற்றி விதிக்கப்பட்டிருந்த சமூகக் கட்டுப்பாடு போன்றே, அவர்கள் அணியும் ஆடை அணி பொறுத்தும் முற்பட்ட சில தசாப்தங்கள் வரைக்கும் இந்நாட்டில் கட்டுப்பாடுகள் நிலவின. (உதாரமணாகக் குறிப்பிடுவ தாயின் ஒரு குறிப்பிட்ட கீழ் வகுப்பைச் சேர்ந்த மக்கள் இடுப்புக்கு மேலுள்ள பாகத்தினை ஆடைகொண்டு மூடுதலாகாது என்பதாகும்.) **'விஜயனது'** காலத்துக்கு முன் பருத்தியை உபயோகித்தமைக்கு **குவேனியின் கதையினைச** சான்றாகக் கொண்டால், சிங்கள மக்களுக்கு முந்திய இலங்கையர் ஒருவேளை பிற்பட்ட சிங்களவர்களைப் போலவே அதே முறையான **ஆடையை அணிந்திருப்பா** எனக் கருதுவது ஏற்புடையதாகும்.'

'இன்றைய குடியானவனின் உடமைகளிலிருந்தும் மட்பாண்டங்கள் முதலான எச்சங்களிலிருந்தும் அன்று வீடுகளில் பாவனையிலிருந்த செய்கருவிகள் பற்றி மறுசீரமைக்க முடிகிறது. பண்டைக்கால மட்பாண்டங்களை வகைப்படுத்தி ஆராய்ந்தமையின் அடிப்படையில் அக்காலத்தில் பாவிக்கப்பட்டிருக்கக்கூடிய மட்பாண்டங்களுக்கும் இலங்கையில் தற்காலம்வரை பாவனையிலிருக்கும் பல்வேறு வகையான மட்பாண்டங்கட்கும் இடையே ஒற்றுமை இருப்பதனைக் காணலாம். இதனை நோக்கும்போது பெருங்கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த பொம்பரிப்புதவில் காணப்படுகின்ற மட்பாண்ட எச்சங்கள் உண்மையில் எமது சில பாரம்பரிய வகைகளை உறுதிப்படுத்துகின்றன.'

'வரலாற்றுக்காலத்திற்கு முற்பட்ட வாழ்க்கை முறையைக் காட்டும் நாளாந்த பாவனையிலிருந்த பொருட்களை உள்ளடக்கிய 'நாட்டார் வழக்கியல்' அரும் பொருளகம் ஒன்று அண்மைக் காலத்தில் அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டது. இக்காட்சிப் பொருட்களின் வகைப்பாடு வர்க்க அடிப்படையில் பாகுபடுத்தப் படவில்லை. மேல் வர்க்கத்தினர் மட்டும் உபயோகித்த சோறுண்ணும் வட்டிலைத் தாங்கும் சேரக்காலியானது ஏனைய செய்கருவிகளுடன் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளமையை உதாரணமாகக் குறிப்பிடலாம். தற்போதைய விவசாயிகளின் வாழ்க்கை முறையினை உற்றுநோக்கும்போது அவர்களுடைய பாவனையிலிருந்திருக்கக் கூடியதான பின்வரும் பொருட்களை அவ் அரும்பொருளகத்திலிருந்து கண்டுகொள்ள முடிகின்றது. அவையாவன: பானைகள், அகப்பைகள், தேங்காய் துருவலை, சுளகு, பாய்கள், பிரப்பம்கூடைகள், வெற்றிலை வல்லுவம், பாக்குவெட்டி, சுரைக்குடுகைகள், கத்திகள், மண்வெட்டிகள், கோடரி, அம்மி - குழவி - ஆட்டுக்கல் போன்ற அரைகற்கள், கயிறு போன்ற சிலவாகும். புராதண வரலாற்றுக் காலத்தைப் பற்றியதும் கிடைக்கக்கூடிய

இரும்பு - மட்பாண்ட மாதிரியிலான எச்சங்களைப் பற்றியதுமான விபரங்களை நோக்கும்போது புராதன வரலாற்றுக் காலத்து விவசாயிகளின் உடமைகள் இங்கு நிரப்படுத்திய வகையிலிருந்து அதிகம் வேறுபடவில்லை. சிலசமயம் இவை கூடியோ குறைந்தோ இருந்திருக்கமுடியும். இரும்பு - மட்கலங்கள், அம்மி- குழவி போன்ற செய்கருவிகள், பருத்தியுடை முதலியவற்றைப் பயன்படுத்திய பெருங்கற்கால மனிதனின் உடமைகள் முற்கூறியவற்றிலிருந்து பெரிதும் வேறுபட்டிருக்கவில்லை.'

'பெருங்கற்காலத்திலிருந்து (பௌத்தமயப்படுத்தப்பட்ட) சிங்கள **'நீர்ப்பாசனவியல'** காலம் ஊடாக விவசாயினுடைய உடமைகள் சிறிதளவிலன்றி அதிகரிக்கப்படவில்லையாயின், வளர்ச்சியடைந்த நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பத்தினால் பெறப்பட்ட உபரி உற்பத்தியானது எங்கு சென்றது என்ற கேள்வி எழுகின்றது. இதற்கொரு விடையாக, மக்கட் பெருக்கத்தினால் அது நுகர்ந்து கொள்ளப்பட்டுவிட்டது என்று கூறினாலும் அது திருப்தியற்ற தொன்றாகவே அமையும். ஏனெனில் தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்ட பாரிய அபிவிருத்தியும், விளைநிலத்தின் அளவு மிகத்துரிதமாக விரிவடைந்தமையும் நிச்சயமாக குடிப்பெருக்கத்தினையும் விஞ்சி நின்றதெனலாம்.'

'இந்த நாட்டிலுள்ள அனைவருமே விவசாயத்தில் ஈடுபட்டிருக்கவில்லை. அங்கு உலோகவிற்பன்னர், குயவர், ஓடு - செங்கல் தயாரிப்போர், கற்தொழிலாளர், தச்சர் முதலிய தொழிற்பிரிவினர் இருந்தனர். விவசாயிகட்குத் தேவையான பொருட்களை மேலே குறிப்பிட்ட கைவினைஞர்களுள் ஒரு பகுதியினர் மாத்திரம் செய்துகொடுத்தனர் என்பதனை விவசாயிகளின் உடமைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆகவேதான் ஓடு - செங்கல் தயாரிப்போரின் உழைப்பானது பெருமளவிட்கு கோயில்கட்கும் அரண்மனைகட்கும் பயன்படுத்தப்பட்டது. ஓவியர் களினதும், சிற்பிகளினதும் பெருமளவிலான உழைப்பும் இங்கு அமைந்திருந்தது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக உழவர்கள் அல்லாதவர்களையும் அரண்மனை வாழ் மக்களையும், உத்தியோகத்தர்களையும், **அநுராதபுரத்திலே வதியும ஆயிரக்கணக்கான சமயத்துறவிகளையும் பராமரிக்க இந்த உபரி உற்பத்தி பயன்பட்டது.**'

'உபரி உற்பத்தியின ஒரு குறிப்பிட்ட பாகமானது விசேடமாக அரண்மனை, கோயில்கள் முதலிய பெரும் கட்டிடங்களை நிர்மாணித்த கட்டிடக் கலைஞர்கட்கு மறைமுகமாகச் செலவழிக்கப்பட்டது. மகாவம்சமும் தற்போது காணப்படும் கட்டிட எச்சங்களும் இதற்குப் போதுமான சான்றுகளாகும்.'

'கி.மு. 3ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட 59 அடி தளவிட்டமுடைய தூபராம தாதுகோபமே இவ்வகையிலமைந்த முதலாவது கட்டிடமாகும். அடுத்து வந்த இரண்டு நூற்றாண்டு காலங்களில் ஸ்தூபியின் அமைப்பு முறையானது பாரிய பரிமாணத்தைப் பெற்றுக்கொண்டது. துட்டகைமுனு காலத்தில் 108 அடி தளவிட்டமுடைய **மிரிஸவெட்டி ஸ்தூதபியும** 289 அடி தளவிட்டமும் 300

அடி உயரமுமான ருவன்வலிசய ஸ்தூபியும் கட்டப்பட்டன. அடுத்து வந்த காலப்பகுதியில் **அபயகிரி, ஜேதவன** ஸ்தூபிகள் முறையே 355 அடி, 367 அடி தளவிட்டங்களையும் 350 அடி, 400 அடி உயரங்களையும் கொண்டு நிறுவப்பட்டன. இந்த ஸ்தூபிகள் திண்மையான செங்கற்களினால் கட்டப்பட்டவை யாகும். விவசாயிகள் அல்லாதவர்களுடைய வதிவிடங்கள் பெருமளவிற்கு மரத்தினால் அமைக்கப்பட்டிருந்தன. இத்தகைய கட்டிடங்களை இலக்கிய ஆதாரங்கள் **'அரசர்களதும், பிரபுக்களதும் பிரமிக்கத்தக்க மாளிகைகள'** என்று வர்ணிக்கின்றன. சமயத் துறவிகளது வதிவிடங்கள் கம்பீரமானவையாகவும் மரத்தினால் அமைந்தும் விளங்கின. இவற்றுள் மிகவும் பிரசித்தி வாய்ந்ததாக **ஒன்பது மாடிகளைக** கொண்டு அமைக்கப்பெற்ற **'லோவமகாபாய'** விளங்கு கிறது. மேலும் இக்கட்டிடங்கள் சிற்பங்களாலும் உயர்புடைச் சிற்பங்களாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தன. இவை பெருமளவிற்கு சமயச் சார்புடையன வாகவும் சில சமயங்களில் **அவுக்கண, பதுருவாகல, கல்விகாரை** போன்ற வற்றிலுள்ள பௌத்த சிற்பங்களின் பாரிய பரிணாமத்தினை எட்டுவனவாகவும் உள்ளன. இதனையொத்த தன்மையினதாகவே அரண்மனை மண்டபங்களும் கோயில்களும் மிகவும் அவதானத்துடன் தீட்டப்பெற்ற ஓவியங்களால் அலங்கரிக்கப்பெற்றன.'

'திருந்திய விவசாய அமைப்புமூலம் பெறப்பட்ட செல்வமானது இவ்வாறு பங்கிடப்பட்டமையிலிருந்து வர்க்க அமைப்பின் கூர்மையான பிரிவுகளைக் காண முடிகிறது. அநுராதபுரத்திலும் ஏனைய நகரங்களிலும் நீண்டகாலமாகச் சேமிக்கப் பெற்ற செல்வத்தினால் நன்மையடைந்தோர் பிரபுத்துவ நாகரீகத்தின் மேல்தட்டு மக்களேயாவார். ஆனால் குடியானவர்கள் ஒரே மாதிரியான வாழ்க்கைத் தரத்தினையே கொண்டிருந்தனர். இச்செல்வ நிலையானது, பௌத்த கோயில்களில் ஆயிரக் கணக்கிலிருந்த பரம்பரைச் சேவகர்களோ அல்லது அடிமைகளோ இன்றியும் ஒழுங்குபடுத்தப்பட்ட பலாத்காரத்தின் உபயோக மின்றியுமே திரட்டப்பட்டது. ஆனால் மொத்த குடித்தொகையை ஒப்பிடும்போது இச்செல்வம் திரட்டும் முறையிலே அது ஒரு சிறப்பான காரணியாக அமைய வில்லை என்பதனைக் காணலாம். சமூகத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் நுகர் பொருட்களிலும் பிரதிபலித்தன. இலங்கை இரத்தினக்கற்கள், சங்கு, ஆமைஓடு, யானைத்தந்தம் போன்ற ஆடம்பரப் பொருட்களை ஏற்றுமதிசெய்து தங்கம், வெள்ளி, கண்ணாடி, உயர்தர மண்பாண்டங்கள், பீங்கான் போன்றவற்றை இறக்குமதி செய்தது. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் இலங்கையின் உயர் வர்க்கத்தினரின் நுகர்பொருட் களுக்கும், வேற்று நாட்டு உயர்வர்க்கத்தினரின் நுகர்பொருட்களுக்கும் இடையே ஏற்பட்ட பண்டமாற்றாகவே அமைந்தது. இலக்கியக் குறிப்புகள் கூட இலங்கையின் பிரபுத்துவ நகரங்களில் வாழ்ந்தோரின் ஆடம்பரமும் வசதியும் நிறைந்த வாழ்க்கை பற்றிய தகவல்களைத் தருகின்றன.'

'உபரியான செல்வத்தின் முதன்மையான உற்பத்தியாளர்கள் விவசாயிகளே. இச்செல்வம் இவ்வாறு பல்வேறு வழிகளிலே செலவிடப்படுவதையும் சமூக

ஏற்றத்தாழ்வுகளையும் ஏற்றுக்கொள்ளும் ஒரு நிலைக்கு எவ்வாறு விவசாயிகள் தள்ளப்பட்டார்கள் என்பது இங்கு எழுப்பப்படவேண்டிய ஒரு கேள்வியாகும். நீர்ப்பாசனவியல் நாகரிகத்தின் பிற்பட்ட நூற்றாண்டுகளில் சமூக ஏற்றத்தாழ்வுகள் அரசமட்டத்தில் சட்டபூர்மாக்கப்பட்டமைக்குச் சான்றுகள் உண்டு. **அரசு பற்றீடுபாடு மூலம் இது சாத்தியமானது. அரசு பற்றிய கருத்தமைவாக போதிசத்துவர் வழிபாட்டுமுறை** வளர்ந்தமை பற்றி ஹோமாகுணதிலக ஆராய்ந்துள்ளார். இச்சமூக ஏற்றத்தாழ்வுகளின் கட்டுமானத்திற்குள்ளும், இம்முறைமையைப் பேணிய கலை போன்றவற்றை உள்ளடக்கிய குறியீடுகளின் பயன்பாடுகளிலுமிருந்தே எமது பாரம்பரியப் பண்பாட்டின் இயல்பினை அறிவதற்குதவும் தகவல்களைப் பெறவேண்டும்.'

வரலாற்று ஆக்ககால அரசியல் நிலை

மகாவம்சத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து (தேவநம்பியதீசன் காலந்தொட்டு) இலங்கையில் ஆட்சிபுரிந்த மன்னர் தொடர்பாக தெளிவான சான்றுகள் கிடைத்து உள்ளன. ஆனால் கி.மு.3ஆம் நூற்றாண்டிற்கும் முன் உள்ள காலப்பகுதியில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் பற்றிய விபரம் தெளிவற்றதாகவே உள்ளது. தேவநம்பியதீசனுக்கு முன்னர் மூத்தசிவ(ன்), பந்துகாபயன், பந்துவாசுதேவன் ஆகியோர் ஆட்சிபுரிந்துள்ளனர். கி.மு. 543இல் விஜயனின் இலங்கை வருகை அமைந்தது எனக் குறிப்படும் மகாவம்சம் அவன் வந்தபோது இங்கு காளிசேனன் (காலசேனன்) என்ற பெயருடைய இயக்கர் குலத்தைச்சேர்ந்த அரசன் ஆட்சி புரிந்தான் எனக் குறிப்பிடுகிறது. **இவ்வரசன் தொடர்பான செய்திகளை குவேனிமூலம் கேட்டறிந்து கொண்ட விஜயன் திருமண வைபவம் ஒன்றில் காலசேனன் கலந்து கொண்டிருந்த சமயத்தில் அவனைக் கொன்று, விஜயன் அரச பொறுப்பினைப் பெற்றுக்கொண்டான் எனவும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது.**

விஜயனுக்குப்பின் அவனது தம்பி மகனான பந்துகாபயனும், அபயனும், அதன் பின்னர் பந்துகாபயனும் ஆட்சி செய்தார்கள் என மகாவம்சம் குறிப்பிடு கின்றது. பந்துகாபயனுக்குப் பின்னர் இலங்கையின் ஆட்சிப் பொறிப்பினை மூத்தசிவன் என்பவன் பெற்றிரந்தான். பாளிமொழியில் எழுதப்பட்ட மகாவம்சத்தில் இப்பெயர் முட்டசீவ என்று குறிக்கப்பட்டுள்ளது. மகாவம்சத்தில் இடம்பெறும் இவ்வாறான அரசியற் செய்திகள் உண்மையிலேயே ஓர் ஆக்ககால இலங்கையில் ஒரு குறிக்கப்பட்ட பிராந்தியத்தில் ஏற்பட்ட மக்களின் சமூக, பொருளாதார, சமய நிறுவனங்களின் உயர்வான வளர்ச்சிநிலையை - சமூக உருவாக்கத் தினையே குறிப்பிட்டு நிற்பதாகக் கொள்ளமுடிகிறது. பந்துகாபயனின் கதைத் தொகுப்பிலிருந்து ஓரளவுக்கு நம்பகமான ஆக்ககால இலங்கையின் சமூக அபிவிருத்தி வரலாற்றை அறிந்துகொள்ள முடிகின்றது என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. இக்கதைத் தொகுப்பில் புராண - காவிய அம்சங்கள் அடங்கியுள்ளமை யையும் அவதானிக்கலாம்.

பந்துகாபய மன்னனைப் பற்றிய செய்திகள் தீபவம்சத்திலும் மகாவம்சத்திலும் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட, இரண்டிலும் வெவ்வேறு தகவல்கள் அம்மன்னன் தொடர்பாகக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் அடிப்படையில் பந்துகாபய மன்னன் பற்றிய செய்திகளில் வரலாற்றுத் தகவல்கள் நிறையவே உண்டு. அதாவது தேவநம்பியதீசனுக்கு முன் இங்கு ஆட்சிபுரிந்த பந்துகாபய மன்னன் மக்கள் மனதைக் கவரத்தக்க வகையில் சில முயற்சிகளில் ஈடுபட்டிருந்தான் என்பதாகும். ஏனெனில் மக்களால் பேணப்பட்ட முற்பட்டகால நாடோடிக்கதை மரபுகளில் பந்துகாபயனுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்த தன்மையைக் காணமுடிவதனாலாகும். இக்காரணத்தினால் இம்மன்னன் கால வரலாறு ஆக்ககால இலங்கையின் வளர்ச்சியில் தனித்துவமான இடத்தினை வகித்திருந்தது என்பது தெளிவாகின்றது.

பந்துகாபய மன்னன் பற்றி விரித்துக்கூறும் மகாவம்சம் அம்மன்னனை மகாபாரதத்தில் வரும் கிருஷ்ணன் பற்றிய கதை மரபுகளுடன் ஒத்தவகையில் எடுத்துக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. **மகாபாரதம்** அல்லது **ஹரிவங்ஸ** ஆகிய நூல்களைப் பயன்படுத்தி மகாவம்சத்தில் பந்துகாபயன் கதைத் தொகுப்பினை பூரணப்படுத்தியிருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது. இதனாலேயே பந்துகாபயனின் ஆட்சிச் சிறப்பு ஒரு புராண காவியத்தன்மையில் விபரிக்கப்பட்டிருப்பதனைக் காணமுடிகிறது.

பந்துகாபயனின் வரலாற்றை நான்கு பகுதிகளாக வகுத்து ஆராயலாம். அவையாவன:

1. பந்துகாபயனுடைய முற்சந்ததி பற்றிக் கூறப்படும் பாகம்
2. அவனது இளமைப் பருவம்
3. அவனுக்கும், மாமனுக்கும் இடையில் நிகழ்ந்த போராட்டம் பற்றிய பாகம்
4. அநுராதபுரத்தில் மன்னனாக முடிசூடிக்கொள்ளும் பகுதி

பொதுவாக இந்திய - இலங்கை வரலாற்று மரபில் ஒரு குறிப்பிட்ட மன்னன் சில சாதனைகளை ஈட்டி, சிறப்புப் பெற்றபின் அவனுடைய முற்சந்ததி பற்றிக் கூற முயற்சிக்கும் வரலாற்று ஆசிரியர்கள் அக்குறிப்பிட்ட மன்னனது முற்சந்ததியினரை மிகவும் உயர்ந்த நிலையில் வைத்திருந்து, புகழ்ந்து கூறுவது மரபாகிவிட்டது. அதனால் வேண்டுமென்றே முற்சந்ததி பற்றி வரலாற்றாதாரங்கள் எவையுமின்றி புனைந்துரையாக அவ்வரலாற்றுப் பகுதியினை அமைத்தும் கொள்கின்றனர். அவ்வகையில் பந்துகாபய மன்னனின் வரலாற்றைக் கூறும் மகாவம்சம் அதன் முதலாம் பிரிவில் அம்மன்னனின் பிறப்பிற்கு பின்னணியாக அமைந்த பல கதைகளை சமந்தபாசாதீகவின் முன்னுரையிலிருந்து எடுத்துக் கையாண்டிருப்பதனைக் காணமுடிகிறது. இம்முதலாம் பாகத்தில் வரலாற்றுண்மையைக் காணமுடியாவிட்டாலும் கூட அங்கு மிக முக்கியமான ஓர் அம்சமான வம்சத்தொடர்பு கொடுக்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

முதலாம் பாகத்திலிருந்து தொடர்ச்சியான வகையில் மகாவம்சத்திற்கும் பந்துகாபயன் கதைமரபிற்குமிடையே உள்ள ஒற்றுமையைக் கண்டுகொண்டு

செல்ல முடிகிறது. கிருஷ்ணன் கதையைப் போல் மகாவம்சத்தில் பந்துகாபயன் வாழ்க்கைவரலாறு எடுத்துக்காட்டப்பட்டிருப்பது ஒரு புராண காவிய மரபினைத்தழுவும் போக்கினையே சுட்டிநிற்கின்றது. இந்திய மரபில் **கிருஷ்ணனின் லீலைகள** எவ்வாறு மக்கள் மனதில் இருந்து மறக்கப்பட முடியாதனவாய் உள்ளனவோ அதேபோன்று இலங்கை மரபிலும் **பந்துகாபயனின் சாதனைகள** மக்கள் மனதைவிட்டு அகலமாட்டா என்பதனையே மகாவம்சத்தில் இக்குறிப்பிட்ட பாகம சுட்டி நிற்கின்றதெனலாம்.

மூன்றாம் பாகத்தில் இடம்பெற்ற பந்துகாபயன் பற்றிய செய்திகள் பெருமளவுக்கு வரலாற்றுத் தன்மையுடையனவாகக் காணப்படுகின்றன. இங்கு கூறப்பட்டுள்ள கதையானது பந்துகாபய மன்னன் அரசனாக வருவதற்கு முன் நடாத்திய போராட்டங்களும், அபிவிருத்திகள் பற்றிய விபரங்களுமாகும். இதே நேரத்தில் வேறுசில வரலாற்று மரபுகளின்படி கிடைத்த உண்மையான தகவல் களானவை **பந்துகாபயன் இலங்கையின் கீழ் மாகாணத்துடன் தொடர்புடையனவாகக் காணப்படுவது ஆகும்.** மகாவம்சத்தில் பந்துகாபயன் கதைத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள இடப்பெயர்களுள் **பெரும்பாலானவை கீழ் மாகாணத்திலேயே காணப்படுகின்றன.** இச்செய்தியிலிருந்து பெற்றுக் கொள்கின்ற வரலாற்றுத் தகவல் என்னவெனில் **இலங்கையின் கீழ் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு சிற்றரசுத் தலைவன் அநுராதபுரத்து அரச ஆட்சியாளருடன் மோதி, அதன் பின்னர் படிப்படியாக அநுராதபுர அரசைக் கைப்பற்றி ஓர் ஆட்சியாளனாகப் பிரகடனப்படுத்திய வரலாற்று வரன்முறையை அது குறித்துநிற்கின்றது.** பந்துகாபயனின் தந்தையின் பெயர் **தீகாமணி** ஆகும். இது கிழக்கு மாகாணத்திலுள்ள **தீகவாபியுடன்** நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. ஆக்ககால இலங்கையின் அரசியல் வரலாற்றில், **இலங்கையின் கரையோரப் பிராந்தியங் களில் காணப்பட்டிருந்த சிற்றரசுகள் ஒவ்வொன்றும் அநுராதபுர அரசினை தம்முள் அகப்படுத்திவிடுவதற்கு மேற்கொண்ட ஒரு வகையான மேலாதிக்க நடைமுறையே பந்துகாபயனுடைய இவ்வரலாற்றுப் பகுதி எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.**

பந்துகாபய மன்னனைப் பற்றிய நான்காவது பாகமே உண்மையான வரலாற்றினை தரிசிப்பதற்கேற்ற பாகமாக அமைக்கப்பட்டுள்ளது. அநுராதபுரத்தில் பெருநகரைத் தாபித்து அதன் முன்றலில் பெருங்குளங்களையும் அமைத்து, அவற்றோடு இணைந்த வகையில் சமய-சமூக நிறுவனங்களையும் உருவாக்கி ஒரு தலைநகர் என்ற முறையில் அநுராதபுர நகருக்குச் சிறப்புச் செய்த தன்மையை இப்பாகத்திலிருந்து அறிய முடிகின்றது. ஓர் ஆக்ககால இலங்கையின் அரசியல், பொருளாதார, சமய, சமூக நிறுவனங்களின் தோற்றத்திற்கு பந்துகாபய மன்னன் ஆற்றியிருந்த அரும்பணிகளை மகாவம்சத்தினூடே கண்டுகொள்ள முடிகிறது. அநுராதபுரத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டி எழுப்பப்பெற்ற முடியாட்சி அரசியலின் முதலாவது நிகழ்வினை ஆக்க காலப்பகுதியான

பந்துகாபயன் கால நடவடிக்கைகள் சுட்டிநிற்கின்றன. ஆனால் இந்த இடத்தில் மகாவம்சத்தில் சேர்க்கப்பட்டிருந்த தகவல்கள் முழுவதுமே பந்துகாபயன் காலத்துக்கு மட்டும் உரித்தானது எனக் கூறிவிடமுடியாதுள்ளது. சில பெறுபேறுகள் அவனது காலத்திற்குச் சற்று முற்பட்டவையாகவும், சில சற்றுப் பிற்பட்டவையாகவும் இருந்திருக்கவேண்டும்.

இம்மன்னனது ஆட்சிக்காலத்திற்குச் சற்று முன்னரும், பின்னரும், நிகழ்ந்த சம்பவங்கள் இவனது காலத்தய சம்பவங்களாகக் கோவைப் படுத்தப்பட்டு மகாவம்சத்தில் கொடுக்கப்பட்டுள்ளமையே உண்மையாகும்.

அநுராதபுரத்தில் **அபயவாவி** கட்டுவிக்கப்பட்டு, ஒரு **தலைநகரமாக அநுராதபுரத்தினை மாற்றிய பெருமை**, பந்துகாபய மன்னனுக்குரியதாக எடுத்துக்காட்டப்படுகிறது. சில முக்கிய மதங்களைச்சார்ந்த நிறுவனங்கள் அநுராதபுரத்தில் கட்டியெழுப்பப்பட்டமை, சில **நிருவாக நிறுவனங்கள** தாபிக்கப் பட்டமை **(நகரகுத்திகா)** போன்றமை மிக முக்கியமான அபிவிருத்திகளாகக் காணப்படுகின்றன. பந்துகாபயன் மன்னன் காலத்தில் **அநுராதபுரத்தில் பல இந்துக்கோவில்கள் கட்டப்பட்டமை** பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. **நகரத்தில், ஆஜீவக, பிராமண, சமண, நிக்கிரகம** போன்ற மதப்பிரிவினர் அநுராதபுரத்தில் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்த மத நிறுவனங்களாக விளங்கின. பந்துகாபய மன்னனால் அத்தனை மதப் பிரிவினரும் ஆதரிக்கப் பட்டிருக்கவேண்டும். தேவநம்பியதீசனுக்கு முன்னர் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த மன்னர்களுள் பந்துகாபய மன்னன் ஒருவனே மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்த நிலையில் அக்கால நாடோடிக் கதைகளில் அவனைப் பற்றிய வரலாற்று மரபு சிறப்பிடம் பெற்றுக்கொண்டது எனலாம். **பௌத்த மதத்தின் வருகைக்கு முற்பட்ட காலத்தில் காணப்பட்ட கோயில்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆரம்ப வரலாறு மறக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் அவையெல்லாம் முன்னர் சிறப்பாக ஆட்சிசெய்த மன்னனான பந்துகாபயன் காலத்தவை என நாடோடி மரபுகளில் கூறப்பட்டுவந்தன.** ஆனால் உண்மையில் அவை பந்துகாபய மன்னனின் ஆட்சிக்கு முற்பட்ட காலத்தவையாகும். சில அம்மன்னன் காலத்திற்குப் பிற்பட்டவையாகும்.

பந்துகாபயன் காலத்தினைத் தொடர்ந்து மகாவம்சத்தில் உண்மையான, ஆதாரங்களுடன் கூடிய வரலாற்றுக்காலச் செய்திகள் தேவநம்பியதீசன் காலத்திலிருந்து கொடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. கி.மு. 3ஆம், 2ஆம், 1ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் பரவலாக ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டன. மகாவம்சத்தில் 11ஆம் அத்தியாயம் தொடங்கி 20 ஆம் அத்தியாயம் வரை தேவநம்பியதீசன் கால வரலாறு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வரலாறானது பெருமளவிற்கு இலங்கையில் உத்தியோகபூர்வ பௌத்தமதப் பரப்பலின் வரலாறு விபரிக்கப்பட்டுள்ளது. தேவநம்பியதீசனின் அரசியல் நடவடிக்கைகள், பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் பௌத்தமத வருகைக்குள் உட்படுத்தி அவன் கால வரலாற்றை ஒரு மத வரலாறாக

மகாவம்ச ஆசிரியர் எடுத்துக்காட்டியிருப்பது நோக்கத்தக்கது. மகாவம்சத்தி பௌத்தமத வரலாறு பற்றி பல பாகங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு பாகத்தில் புத்தர் இலங்கைக்கு விஜயம் செய்தமை, அதற்குப் பின்னர் பௌத்த மதம் இந்தியாவில் வளர்ந்து பரவிய வரலாறு, சிறப்பாக வடஇந்தியாவில் மும்முறை நடாத்தப்பட்ட அகில (உலகம்) பௌத்த மாநாடுகள் பற்றிய வரலாற்றுச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. மூன்றாவது பௌத்த மகாசங்கம் கூட்டப் பட்டபோதே இலங்கைக்கும் பௌத்த மதத்தைப் பரப்பவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மௌரியப் பேரரசனான அசோகனின் மைந்தன் மகிந்ததேரரின் தலைமையில் பௌத்த தூதுக்குழு அனுப்பி வைக்கப்பட்ட வரலாற்றை மகாவம்சம் மிகவும் விரிவாகக் கூறுகின்றது. ஆக்ககால இலங்கையின் வரலாற்றுப் பரப்பிற்குள் தேரவாத பௌத்தமதத்தின் வருகையானது, சமூக, பொருளாதார, சமய நிறுவனங்களின் வரலாற்றில் மட்டுமல்லாது, இலங்கையின் அரசியற்கோட்பாட்டிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்தது.

உத்தியோகபூர்வ முறையிலான பௌத்தமத அறிமுகமானது இலங்கைக்கும் வடஇந்தியாவிற்குமிடையே நிலவிய அரசியல் அடிப்படையிலான பண்பாட்டுத் தொடர்புகளை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இவ்விரு நாடுகளுக்கு மிடையில் இருந்த தொடர்புகளின் தன்மையையும் இந்த அறிமுகத்திற்கு (பௌத்த மதத்தின் வருகைக்கு) வழிவகுத்த அம்சங்கள் பற்றி மகாவம்சம்மூலம் அறியலாம். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்த **புரவலர் - இரவலர்** உறவுமுறையை இச்சான்று உணர்த்துகின்றது எனலாம். தேவநம்பியதீசனது தூதுக்குழுக்கள் திறையாக இல்லாவிடினும் அசோகனுக்கு அரிய பரிசில்களை எடுத்துச்சென்றமை இலங்கையில் அசோகனது மேலாதிக்கத்தை வெளிப்படுத்தியது. அசோகனும் பதிலுக்கு பரிசில்களை அனுப்பி வைத்தான். பௌத்த அரசொன்றின் இயல்புகளை வெளிப்படுத்தும் அதேவேளை இப்பரிசில்கள் **'இளமையின் இதழ் விரியும் பருவத்துக் கன்னி ஒருத்தியும் அடங்கும்'** (மகாவம்சம் xi) அசோகனது பரிசில்களும் அரசன் ஒருவனுக்கு முடிசூட்டுவதற்குத் தேவையான அபிடேகப் பொருட்களெல்லாம் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தான் பௌத்த மதத்தை தழுவியமையும் கூறி, தீசனையும் அவ்வாறு செய்ய ஆலோசனை கூறிய அசோகன் **'எனது நண்பனை திரும்பவும் ஒருதரம் முடிசூட்டுங்கள்'** என்று தீசனின் அமைச்சர்களுக்குக் கூறினான். (மகாவம்சம் xi) பலம்வாய்ந்த தனது அயல்நாட்டு அரசனால் திரும்பவும் முடிசூட்டப்பட்ட தீசன், இதன்பின் தனது புரவலன் அசோகனைப் போல் **'தேவநம்பிய'** (கடவுளுடைய நண்பன்) என்று பட்டப்பெயரையும் சூட்டிக் கொண்டான். (மகாவம்சம் xi). மகாவம்சத்தில் அடங்கியுள்ள இந்த வரலாற்றை அவ்விடயம் தொடர்பாக எமக்கு கிடைத்த பிறசான்றுகளுடன் ஒப்பிடுமிடத்து மிகமுக்கியமான சில வரலாற்றுப் பிரச்சினைகள் எழுவதைக் காணலாம். முதலாவதாக மகாவம்சம் கூறுவதுபோல மூன்றாவது பௌத்த மகாசங்கத்தால் அனுப்பப்பட்ட இலங்கைக்கான தூதுக்குழு உண்மையில் அசோகனால அனுப்பப்பட்ட தூதுக்குழுவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் மகிந்ததேரரைத்

தலைமையாகக் கொண்ட பௌத்த தூது, மகாவம்சம் குறிப்பிடுவது போன்று அசோகனால் அனுப்பப்பட்டதாக அமையவில்லை. அத்தூதுக் குழுவின் நடவடிக்கைகளுக்கும் அசோகனுனக்குமிடையே எந்தவிதமான தொடர்புகளும் இருப்பதாகத் தெரியவில்லை. இதன் பின்னணியை அசோகனுடைய நடவடிக்கை களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம்.

அசோகன் தனது ஆட்சிக்காலத்தில் பௌத்த மதத்துடன் நெருங்கிய தொடர்புடையவனாக ஆட்சி புரிந்திருந்தான் என்பதனை அதிகம் மறுக்கமுடியாது. அவனால் வெளியிடப்பட்ட பெருந்தொகையான கல்வெட்டுக்களுள் ஒரு சிலவற்றிலாவது அவனது பௌத்தமதத் தொடர்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மகாவம்சம் குறிப்பிடுவதுபோல அசோகன் ஒரு பௌத்தனாக இருந்தான் என்பதனை மறுக்கமுடியாது. **அசோகனது 2ஆம் 13ஆம் கிர்னார் பாறைப் பிரகடனங்களில** அசோகனுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்த தொடர்பு குறிப்பிடப்பட்டுள்ளன. அவனுடைய தர்ம விஜயத்திற்குள் தென்னிந்திய இராச்சியங் களும் உட்பட்டிருந்தன என்பதனை **சேர, சோழ, பாடா, சத்திய புத்ரோ, கேரள புத்ரோ, தம்பப்பம்ணி** என குறிக்கப்பட்டுள்ள முறையில் இருந்து உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிறது. நிச்சயமாக அசோகன் இலங்கைக்கும் தூதுக்குழுவினை அனுப்பியிருந்தான் என்பது அவனது கல்வெட்டுக்களால் உறுதிப்படுத்தப்படுகின்றது. **இங்கு நாம் எதிர்நோக்கும் பிரச்சினை என்னவெனில் அசோகனால் அனுப்பப்பட்ட தூதுக்குழு மகிந்த மகாதேரரின் தலைமையில் இலங்கைக்கு வருகை தந்த குழு அல்ல என்பதேயாகும்.** ஏனெனில் மகாவம்சத்தில் மகிந்தருடைய தூதுக்குழுவின் வருகை பற்றி 13ஆம் அத்தியாயத்தில் கூறப்படுவதற்கு முன் 11ஆம் அத்தியாயத்தில் **அசோகனது தூதுக்குழு ஒன்றின் வருகை** பற்றிக் கூறப்படுவது குறிப்பிடத் தக்கது. அதுமட்டுமல்லாமல் இத்தூதுக்குழு இலங்கைக்கு வருகை தந்தமையின் விளைவாக பௌத்தம் பரப்பப்பட்டது என அங்கு கூறப்படாமல் விடப்பட்டமை முக்கியமான ஓர் அம்சமாகும். எனினும் தேவநம்பியதீசன் காலம் **இலங்கையின் ஆக்ககால வரலாற்றில** மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறிப்பிடத் தக்கது. இக்காலப் பகுதியில் அசோகப் பேரரசனது பல்வேறு நிலைகளினூடாக மௌரியப் பேரரசின் நேரடியானதும், மறைமுகமானதுமான அரசியல், பண்பாட்டுச் செல்வாக்கு நிலைகள் இலங்கையில் ஏற்பட்டிருந்தமை யினை மறைக்க முடியாது. **சுருங்கக் குறிப்பிடுவதாயின் அசோகப் பேரரசன் கடைப்பிடித்த திக்விஜயச் செயற்பாடும், தர்ம விஜயக் கோட்பாடும் இலங்கையின் வரலாற்றில் பெருந்தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன.**

அரசனும் அவனது அரண்மனையைச் சேர்ந்தோரும் மதமாற்றம் செய்யப்பட்டமை அரசனது எஜமானால் ஏற்படுத்தப்பட்ட **பண்பாட்டுத் திணிப்பு** எனல் மிக எளிமையான கூற்றாகும். இதனை நாம் ஜோசப் நீடம் என்பவரது புற இயக்கவிசை எனக்கொண்டாலும் அம்மதத்தை ஏற்றுக்கொண்டமைக்குரிய **உள் இயக்கவிசையும** அதற்குச் சமமானதாகத் தொழிற்பட்டமையைக்

காணலாம். நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருப்பது போன்று இக்காலத்தில்தான் அரச நிறுவனத்தின் உறுதிப்பாட்டிற்கு உதவும் உபரி உற்பத்தியை திரட்டும் வழியில் பங்காற்றிய நீர்ப்பாசனவியலினையும் அதன் தொழினுட்பத்தினையும் கொண்ட நாகரிகம் தோற்றம் பெற்றது. அசோனனுக்குப் பல பரிசுப் பொருட்களை (திறை எனக்கூறக்கூடிய) அனுப்பிய தேவநம்பியதீசன் ஏற்கனவே முடிசூடியிருந்தும், மீண்டும் ஒரு முறை முடிசூடும்படி அசோகனால் கட்டளையிடப்பட்டான் என்பதை நாம் அறிவோம். அத்துடன் **தேவநம்பிய** என்ற பெயரையும் தனது பெயரடையாக இணைத்துக்கொண்டான். இதையெல்லாம் தீசமன்னன் தனது ஆட்சிக்குச் சட்டபூர்வ அங்கீகாரத்தைத் தேடிக்கொண்டிருந்தான் என்பதையே காட்டுகின்றன. அதாவது அவன் இந்நாட்டில் தனது அதிகாரத்திற்கு வேண்டிய சாதனங்களை ஒரு கருத்தமைவு மட்டத்தில் தேடிக்கொண்டிருந்தான் என்பதாகும். **இத்தகைய சூழலிலேயே தீசன் தனது நம்பிக்கைக்குரிய அசோக மன்னனின் சிபார்சின்படி பௌத்த மதத்தைத் தழுவியமை பற்றி நோக்குதல் வேண்டும். இக்கருத்தின்படி பௌத்த மதத்தைத் தழுவியமை சமய உண்மைகளிலிருந்தும் அதன் உள்ளார்ந்த மேன்மைகளிலிருந்தும் வேறுபட்டதாகும். உண்மையில் மதச்சார்பற்ற அரச அதிகாரத்தை நியாயப்படுத்தும் வழியாக இது அமைந்தது. இவ்வாறு மதக்கோட்பாட்டுடன் அரசு என்ற நிறுவனத்தை இணைத்தமை தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளிலும் இடம்பெற்றது.**

சிங்கள மொழியினதும், பௌத்த மதத்தினதும் வருகைக் காலத்திலேயே கலை, கைப்பணி ஆகியவற்றுடன் தொடர்புடைய பாரம்பரியப் பண்பாடு ஆரம்பிக்கிறது என எண்ணுதல் வழக்கமாகும். அரசினுடைய உறுதிப்பாட்டுக்கு ஆதாரமான உபரி உற்பத்திக்கு வழிவகுத்த நீர்ப்பாசன முறைமை வலுவடைந்த போதே இவ்விரு நிகழ்வுகளும் இடம்பெற்றன என்பது கவனித்தற்குரியது. தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் மேலும் உறுதியடைந்த நீர்ப்பாசனத்தின் மூலம் திரட்டப்பட்ட உபரி உற்பத்தியின் குறியீடுகளாக பிரமாண்டமான கட்டிடங்களின் தோற்றம் அமைந்தது. ஒரு மத்திய அரசு தோற்றம் பெறுவதற்குத் தேவையான உபரி உற்பத்தியை நீர்ப்பாசன முறைமை ஈட்டிக்கொடுத்த காலத்துடன் இந்நாட்டின் பண்பாட்டு வரலாற்றினை இரு பெரும் நிகழ்வுகளான பௌத்தத்தினதும், சிங்கள மொழியினதும் அறிமுகமும் பரவலும் தொடர்புபட்டிருந்தன. மத்திய அரசமைப்புடன், பரந்துபட்ட இவ்விரு பண்பாட்டம்சங்கள் கொண்டிருந்த உறவின் தன்மைகள் யாவை? கி.மு. 3ம் நூற்றாண்டில் பௌத்தம் முறைப்படி அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்வினை ஆராய்தல் இக்கேள்விக்குரிய சுவையான விளக்கமாக அமையும். இதற்கு அதிக வரலாற்று ஆதாரங்கள் உண்டு.

தேவநம்பியதீசன் காலத்தில் இந்தியாவிலிருந்து அசோகனுடைய புதல்வனாகிய மகிந்தனால் பௌத்தமதம் உத்தியோக பூர்வமாக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விரு நாடுகளுக்கிடையில் இருந்த தொடர்புகளின் தன்மையையும் இந்த அறிமுகத்துக்கு வழிவகுத்த அம்சங்களையும் பற்றி

மகாவம்சம் மூலம் அறியலாம். இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே இருந்த **'புரவலர் - இரவலர்'** உறவுமுறையை இச்சான்று உணர்த்துகிறது எனலாம். தேவநம்பியதீசனது தூதுக்குழுக்கள் திறையாக இல்லாவிடினும் அசோகனுக்கு அரிய பரிசில்களை எடுத்துச்சென்றமை இலங்கையில் அசோகனது மேலாதிக்கத்தை வெளிப்படுத்தியது. அசோகனும் பதிலுக்குப் பரிசில்களை அனுப்பிவைத்தான். **(பௌத்த அரசொன்றின் இயல்புகளை வெளிப்படுத்தும் அதேவேளை இப்பரிசில்களுள் 'இளமையின் இதழ்விரியும் பருவத்துக் கன்னி ஒருத்தியும் அடங்கும்.'** மகாவம்சம் xi) அசோகனது பரிசில்களுள் 'அரசனொருவனுக்கு முடிசூட்டுவதற்குத் தேவையான அபிடேகப் பொருட்களெல்லாம்' அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தான் பௌத்த மதத்தைத் தழுவியமையைக் கூறி **திசனையும்** அவ்வாறு செய்ய ஆலோசனை கூறிய அசோகன் **'எனது நண்பனை திரும்பவும் ஒரு தரம் முடிசூட்டுங்கள்'** என்று **திசனின்** அமைச்சர்களுக்குக் கூறினான். பலம்வாய்ந்த தனது அயல்நாட்டு அரசனால் திரும்பவும் முடிசூட்டப்பட்ட **திசன்,** இதன்பின் தனது **புரவலன்** அசோகனைப்போல் **தேவநம்பிய (கடவுளுடைய நண்பன)** என்ற பட்டப் பெயரையும் சூட்டிக்கொண்டான்.

உத்தியோகபூர்வமாகப் பௌத்த மதத்தைக் கொணர்ந்த **மகிந்தன**, மத மாற்றத்தின் பொருட்டுத் தான் இலங்கைக்கு வரவேண்டியிருந்த அரிய சந்தர்ப்பம் பற்றிக் கலந்துரையாடும்போது, இந்த இரு பெரும் அரசர்களுக்குமிடையே நிலவியிருக்கக்கூடிய உறவுகள் பற்றி அறிவதற்கு உதவும் சான்றுகளை எமக்களித்தான் என்பதில் சந்தேகமில்லை. மேலும் மகிந்தன், **'எனது தந்தையினால் ஆணையிடப்பட்ட இந்த முடிசூட்டு வைபவத்தில் திசன் பங்கெடுக்க வேண்டும் என்றும், அவன் மூன்று பெரும் புனிதமான அம்சங்கள் பற்றி அறிந்திருத்தல் வேண்டுமென்றும் அதனை அவன் தூதுவர் மூலம் அறிவான் என்றும் சொல்கிறார்'** இதன்பின் இத்தகைய **அதீத சம்பவங்கள்** மூலம் **அரசனைப் பணியவைத்தமையும், அரசனது விவேகத்தைப் பரிசீலித்தமையும், அதனைத் தொடர்ந்து பிரபுக்களையும் அரண்மனை உத்தியோகத்தர்களையும் மதமாற்றியமையுமே** உண்மையில் மதமாற்றம் பற்றிய கதையாக அமைகிறது.

'அரசனும் அவனது அரண்மனையைச் சேர்ந்தோரும் மதமாற்றம் செய்யப் பட்டமை அரசனது எஜமானால் ஏற்படுத்தப்பட்ட பண்பாட்டுத் திணிப்பு எனல் மிகை எளிமையான கூற்றாகும். இதனை நாம் ஜோசப் நீடாம் என்பவரது புற இயக்கவிசை எனக்கொண்டாலும் அம்மதத்தினை ஏற்றுக்கொண்டமைக்குரிய உள் இயக்கவிசையும் அதற்குச் சமமானதாகத் தொழிற் பட்டமையைக் காணலாம். நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருப்பது போன்று இக்காலத்தில் தான் அரச நிறுவனத்தின் உறுதிப்பாட்டுக்கு உதவும் உபரி உற்பத்தியைத் திரட்டும் வழியில் பங்காற்றிய 'நீர்ப்பாசனவியல்' நாகரிகம் தோற்றம் பெற்றது. அசோகனுக்குப் பல பரிசுப் பொருட்களை **(திறை எனக் கூறக்கூடிய)** அனுப்பிய

தேவநம்பியதிசன் ஏற்கனவே முடிசூடியிருந்தும், மீண்டும் ஒரு முறை முடிசூடும்படி அசோகனால் **'கட்டளையிடப்பட்டான'** என்பதை நாம் அறிவோம். அத்துடன் **'தேவநம்பிய'** எனப் பெயரையும் மாற்றினான். இவையெல்லாம், திசமன்னன் தனது ஆட்சிக்குச் சட்டபூர்வ அங்கீகாரத்தைத் தேடிக்கொண்டிருந்தான் என்பதையே காட்டுகின்றன. அதாவது அவன் இந்நாட்டில் தனது அதிகாரத்துக்கு வேண்டிய சாதனங்களை ஒரு கருத்தமைவு மட்டத்தில் தேடிக் கொண்டிருந்தான் என்பதாகும். இத்தகைய சூழலிலேயே திசன் தனது நம்பிக்கைக்குரிய அசோகமன்னனின் சிபார்சின்படி பௌத்த மதத்தைத் தழுவியமை பற்றி நோக்குதல் வேண்டும். இக்கருத்தின்படி பௌத்த மதத்தைத் தழுவியமை சமய உண்மைகளிலிருந்தும், அதன் உள்ளார்ந்த மேன்மை களிலிருந்தும் வேறுபட்டதாகும். உண்மையில், மதச்சார்பற்ற அரச அதிகாரத்தை நியாயப்படுத்தும் வழியாக இது அமைந்தது. இவ்வாறு மதக்கோட்பாட்டுடன் அரசு என்ற நிறுவனத்தை இணைத்தமை தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளிலும் இடம் பெற்றது.'

'இந்த இணைப்பானது, சமயத்தின் உண்மைகளுடனோ அல்லது ஏனைய அம்சங்களுடனோ அரைகுறையாகவாவது தொடர்புபடவில்லை. பௌத்தமானது பலம்வாய்ந்த ஓர் அயல்நாட்டின் ஒன்றிணைக்கும் சாதனமாகவே தழுவப்பட்டது என்பதை 'பௌத்தம் அல்லாத' (அல்லது பௌத்தத்திற்கு எதிரான) அம்சங்கள் விளக்கியுள்ளன. எனவே பௌத்தம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டால் இலங்கையில் இருந்த பிரபுத்துவ சமூக நிறுவனங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. மறுபக்கத்தில், பௌத்தம் இலங்கையில் நிலவிய ஆட்சியை சட்டபூர்வமாக ஏற்றுக்கொண்டதால் அந்நிறுவனங்களைப் பேணவே செய்தது. ஆகையினால் தான் தூபராம கட்டிமுடிக்கப்பட்டபோது, 'அரசவைப் பெண்களும், பிரபுக்களும், அமைச்சர்களும், நகர மாந்தர்களும், கிராமமக்களும் தமது காணிக்கைகளைக் கொண்டு வந்தனர்' (மகாவம்சம் ஒஎனை) நடைமுறையில் இருந்த சமூகஅமைப்பு தொடர்வதற்கு மாத்திரமன்றி அது மேலும் வலுவடைவதற்கும் பௌத்தம் உதவியதென்பதை இது சுட்டுகிறது. உண்மையில், மதகுருமாரின் வதிவிடங்கள், விகாரைகள் கூட அவ்வவற்றின் சாதி, வர்க்கத் தொடர்புகளுக்கிணங்கவும் அவற்றின் சமூக அடிப்படைப் பொறுத்தும் பெயரிடப்பட்டன. இவ்வாறு, பிரபுத்துவ குடும்பங்களைச் சேர்ந்த மதகுருமாருக்கு **இஸ்ஸரசமனகவும, வைதுல்ய குலத்தைச** சேர்ந்தோருக்கு **வெஸ்ஸகிரி விகாரையும** அமைந்திருந்தன'

'இலங்கையில் அரசுக்கும் மதத்துக்குமிடையில் இருந்த உறவு, பௌத்த மதத்துடன் முக்கிய தொடர்புடைய பிரதான இந்திய அரசியல் நபர்களான அசோகனுக்கும் புத்தருக்கும் மாறுபட்டதாக அமைந்தது. **புத்தர் அரச அதிகாரங்களையும், சுகபோகங்களையும் துறந்து சென்றவராகவும், சாதியமைப்புப் போன்ற அக்காலச் சமுதாயத்தின் அடிக்கட்டுமானத்தையே தகர்ப்பதற்கு உதவியராகவும்** இருந்தார். அதுபோலவே **'திக்விஜயம்'** போன்ற கொடூரமான, மதச்சார்பற்ற அதிகார நிலையிலிருந்து அசோகன் **'தர்ம**

விஜயத்திற்கு' மாறினான். இந்த மாறுபாடு சிங்கள பௌத்தத்தை பொறுத்தவரையில், தேவநம்பியதிசனுக்குப் பின்னர் இரண்டாவது அரசநபரான துட்டகைமுனு காலத்தில் மேலும் வலுவடைந்தது. அசோகனைப் போலவே துட்டகைமுனு, போரில் தன்னால் கொல்லப்பட்டோரின் தொகையை எண்ணி மனம் வருந்தினான். ஆனால் உண்மையில் '**ஆயிரக்கணக்கானோர் கொல்லப் படவில்லை என்றும் ஒன்றரை மனிதர்கள் மட்டுமே இங்கு உன்னால் கொல்லப்பட்டனர். (அவர்களுள்) ஒருவர் மும்மணிகளைச் சரணடைந்து விட்டார், மற்றவர் பஞ்சசீலங்களை மேற்கொண்டுவிட்டார். கொல்லப்பட்ட மற்றவர்கள் எல்லாம் நமது மார்க்கத்தை நம்பாதவர்கள். தீய வாழ்வினை மேற்கொண்டவர்கள். ஆகவே மிருகங்களைவிட அவர்களை உயர்வாக மதிக்கக்கூடாது**' எனப் பௌத்த சங்கத்தினர் அம்மன்னனுக்கு ஆறுதல் கூறினர். மேலும் பௌத்தமதத்தின் அடிப்படைப் போதனைகளுக்கு நேரெதிரான வகையில், **புத்த நினைவுச்சின்னம்** ஒன்றினை **வேலில் ஏந்தி** துட்டகைமுனு போருக்குச் சென்றமை, **அரச அதிகாரத்தைப் பாதுகாக்க மதத்தைப் பயன்படுத்தும் குறியீட்டுச் செயலாக அமைந்தது.**'

'கூர்மையடைந்த சமூகப் பிளவினைக் கொண்ட அரசுக்கு ஆதரவாகப் பௌத்தத்தினைப் பயன்படுத்தியமை பின்வந்த நூற்றாண்டுகளிலும் எதிரொலித்தது. தொடர்ந்து எழுச்சிபெற்ற கலை, கட்டிடம், இலக்கியங்களைப் பற்றி இந்த அடிப்படையிலேயே நோக்குதல் வேண்டும். ஆனால் இவற்றைப் பற்றி மேலும் ஆராய முன்னர், இந்நாட்டின் மற்றைய கலாசார நிலைபற்றிக், குறிப்பாகச் சிங்களமொழி பற்றியும் அதன் அறிமுகம் பற்றியும் தெளிவாக நோக்க வேண்டும். பௌத்தத்தின் அறிமுகம் பற்றிய சான்றுகளைப் போலன்றி, சிங்கள மொழியின் அறிமுகம் பற்றி மிகக்குறைந்த சான்றுகளே உள்ளன. சிங்கள மொழியின் அறிமுகத்தை **பேராசிரியர் நீடம்** அவர்களுடைய **அக இயக்கவிசை, புற இயக்க விசை** வகைப்பாட்டின் வழிநின்றே நோக்குதல் வேண்டும்.'

மகாவம்சத்தில் 21ஆம் அத்தியாயத்தில் மீண்டும் **வம்ச வரலாறு** ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது. இவ்வத்தியாயத்தில் ஐந்து மன்னரின் வரலாறு சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்த ஐந்து மன்னர்களும் தேவநம்பியதீசனின் ஆட்சிக்குப் பின்னர் துட்டகாமணியின் ஆட்சிக்கு முன்னர் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த மன்னர்களைப் பற்றியதாக அமைந்துள்ளது. இவ்வத்தியாயத்தி லுள்ள 34 செய்யுட்களில் 22 செய்யுட்கள் **எல்லாள மன்னனின** ஆட்சிக்காலம் பற்றியதாக உள்ளது. மிகுதி 12 செய்யுட்களிலும் **நான்கு மன்னர்களின** வரலாறு கூறப்பட்டுள்ளது. இதற்கு அடுத்து 22ஆம் அத்தியாயத்திலிருந்து 32ஆம் அத்தியாயம் வரையுள்ள 11 அத்தியாயங்களில் தனித்துவமான வகையில் வம்ச வரலாற்றினின்றும் விலகி ஒரு சிறப்புப் பகுதியை மகாவம்ச ஆசிரியர் **இடைச்செருகலாக** இணைத்துள்ளமையைக் காணலாம். இதனையே **துட்டகாமணி காவியம்** எனப் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றது. மீண்டும் வம்ச வரலாற்றுப் பாகம் 33ஆம் அத்தியாயத்தில் ஆரம்பிக்கின்றது. 33ஆம்

அத்தியாயத்தில் 10 மன்னர்களின் வரலாறும், 34ஆம் அத்தியாயத்தில் 11 மன்னர் வரலாறும், 35ஆம் அத்தியாயத்தில் 12 மன்னர் வரலாறும், 36ஆம் அத்தியாயத்தில் 13 மன்னர் வரலாறும் கூறப்பட்டு, இறுதி அத்தியாயமாகிய 37ஆம் அத்தியாயத்தில் மகாசேன மன்னனின் வரலாறும் கூறப் படுவதனைக் காணலாம். இவ்வாறு துட்டகாமணி காலத்திற்குப் பின்னர் கூடியபாகம் மகாவம்சத்தில் வம்ச வரலாறாகவே இடம்பெற்றுள்ளமையைக் காணலாம். துட்டகாமணி காவியப்பகுதி மட்டும் **ஓர் இடைச்செருகலாக** - ஒரு பொருத்தமற்ற இணைப்பாக மகாவம்சத்தில் சேர்க்கப்பட்டமையினைக் காணலாம்.

இப்பொருத்தமற்ற இணைப்பின் தேவையானது மகாவம்சத்தைப் பொறுத்தவரையில் கூர்மையடைந்து வந்து சமூக அமைப்பிலுள்ள பிளவுகளினால் பாதிக்கப்பட்ட மகாநாம தேரரை ஓரளவுக்காவது திருப்திப்படுத்தும் போக்காகக்கூட அமையலாம். ஆக்ககால இலங்கையின் சமூக அமைப்பில் ஏற்பட்ட பிளவுகள் ஒன்றில் **ஆரியர் - ஆரியரல்லாதார்** அல்லது பிரபுக்கள் (நிலச் சுவாந்தர்) - தொழிலாளர் அல்லது உயர் சமூகம் - தாழ்ந்த சமூகம் இவற்றையும்விட **பௌத்த சிங்களவர் - பௌத்தரல்லாதவர்** என்றவோர் அடிப்படையிலேயே ஏற்பட்டிருக்கவேண்டும். அதிரித்து வந்த நீர்ப்பாசனவியற் குளங்களும், தொழில்நுட்ப முறைகளும் இவற்றின் பயனாக ஏற்பட்ட மிகை உற்பத்தியுமே திடீரென ஏற்பட்ட **சமூகப் பிளவிற்குரிய பொருளியல் காரணி** எனலாம். கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு. 1ஆம் நூற்றாண்டு வரைக்கும் இலங்கையில் பரவலாகக் கிடைத்த ஆதிப்பிராமிச் சாசனங்கள் பிராமணருக்கும், வணிகருக்கும் குடியானவருக்கும் கிராம மட்டத்தில் சொந்தமாக - சொத்துடமையாகவிருந்த கிராமக் குளங்களை பௌத்த சங்கத்திற்கு தானமாக வழங்கிய செய்திகளைப் பதிவுசெய்து வைத்துள்ளது. பல கால்வாய்கள்கூட இவ்வாறு பௌத்த சங்கத்திற்கு தானமாக வழங்கப்பட்ட செய்திகளை சாசனங்கள் தருகின்றன. இந்நிலையில் பௌத்த சங்கங்கள் சொத்துடைய நிறுவனமாக மாறிக்கொண்டு வந்த சந்தர்ப்பத்திலேயே சமூகப்பிளவு ஏற்படுவதற்குரிய நிலைமையும் உருவாகியது.

இந்நிலையில் இலங்கையில் அரசுக்கும் மதத்திற்கும் இடையில் இருந்த உறவு, பௌத்தமதத்துடன் முக்கிய தொடர்புடைய பிரதான இந்திய அரசியல் நபர்களான அசோகனுக்கும் புத்தருக்கும் மாறுபட்டதாக அமைந்தது. புத்தர் அரச அதிகாரங்களையும், சுகபோகங்களையும் துறந்து சென்றவராகவும், சாதி அமைப்புப்போன்ற அக்காலச் சமுதாயத்தின் அடிக்கட்டுமானத்தையே தகர்ப்பதற்கு உதவியவராகவும் இருந்தார். அதுபோலவே திக்விஜயம் போன்ற கொடூரமான மதச்சார்பற்ற அதிகார நிலையிலிருந்தும் அசோகன் தர்மவிஜயத்திற்கு மாறினான். இந்த மாறுபாடு சிங்கள பௌத்தத்தைப் பொறுத்தவரையில் தேவநம்பியதீசனுக்குப் பின்னர் இரண்டாவது அரச நபரான துட்டகைமுனு காலத்தில் மேலும் வலுவடைந்தது. அசோகனைப் போலவே துட்டகைமுனு போரில் தன்னால் கொல்லப்பட்டவர்களின் தொகையை எண்ணி மனம் வருந்தினான். மேலும் பௌத்த மதத்தின் அடிப்படைப் போதனைகளுக்கு நேரெதிரான வகையில்

புத்த நினைவுச் சின்னம் ஒன்றினை வேலில் ஏந்தி துட்டகைமுனு போருக்குச் சென்றமை, அரச அதிகாரத்தினைப் பாதுகாக்க மதத்தைப் பயன்படுத்தும் குறியீட்டுச் செயலாக அமைந்தது.

ஆக்க காலத்தில் ஓர் அரசியற்போர்

துட்டகாமணி காவியம் பற்றிய ஆய்வு:

இலங்கை வரலாற்றின் வளர்ச்சியில் எல்லாளன் - துட்டகாமணி மன்னர் களிடையே நிலவிய அரசியல் போராட்ட நிலையானது ஆக்ககாலப் பண்பாட்டில் ஓர் இன்றியமையாத அம்சமாக அமைந்தது. கி.மு. 161க்கும் கி.மு. 115க்கும் இடைப்பட்ட காலத்தில் அநுராதபுரத்தில் எல்லாள மஹாராஜாவினது ஆட்சி இடம்பெற்றிருந்தது. இம்மன்னனைத் தொடர்ந்து துட்டகாமணி மன்னது ஆட்சி இடம்பெற்றிருந்தது. புராதன இலங்கையில் அரசியல் வரலாற்றில இவ்விரு மன்னர்களதும் ஆட்சிக்காலமானது தனித்துவமானதாக அமைந்தமைக்குரிய அடிப்படையானது அவ்விரு மன்னர்களும் கொண்டிருந்த அரசியற் குலக்குழுமத்தைச் சார்ந்ததாக இருந்தது. மகாவம்சத்தின்படி எல்லாள மகாராஜா தென்னிந்தியாவினைப் பிறப்பிடமாகக் கொண்ட சோழ வம்சத்து மன்னனாவான் என்பதாகும். துட்டகாமணி (உருகுணையின் தலைநகரம்) ஆட்சிபுரிந்த சிற்றரச வம்சத்தைச் சேர்ந்த ஒருவனாவான் என்பதும் புலனாகின்றது. ஒரு பொதுவான அடிப்படையில் இவ்விரு மன்னர்களும் சிற்றரச மரபிற்குரிய பிரதிநிதிகள் என்பது புலனாகின்றது. இவ்விரு பிரதிநிதிகளுக்குமிடையே நிலவியிருந்த பகைமையுணர்வானது ஆக்ககால இலங்கையின் அரசியல் வரலாற்றில் முடியாட்சி முறைமையினது வளர்ச்சி நிலையை உறுதிப்படுத்தியது எனலாம்.

துட்டகாமணி காவியத்தை எடுத்து நோக்கும்போது மகாவம்ச ஆசிரியர் எந்தளவிற்கு தன் சொந்த முயற்சியினால் **தீபவங்ஸத்தில** 13 செய்யுட்களில் காணப்பட்ட அவ்வரலாற்றை 11 அத்தியாயங்கள் கொண்ட வரலாறாக மகாவங்ஸத்தில் இணைத்துள்ளார் என்பது தெரியவரும். காவியத்தில் இப்பகுதியில் மகாநாமதேரர் இதுவரையில் தான் பின்பற்றி ஒழுகிய மரபினை விட்டுவிட்டு, நாட்டார் வழக்கில் இருந்திருக்கக்கூடிய கதையொன்றினை எல்லாளன் - துட்டகாமணி வரலாறு தொடர்பாக இணைத்துள்ளமையைக் காண்கின்றோம். இக்காவியத்தின் பிற்பாகத்தில் மீண்டும் விகாரை மரபுகளைப் பின்பற்றி சங்கத்தார் மரபு பேணப்பட்டமையைக் காண்கின்றோம். இவ்விரு மரபுகளையும் மகாநாமதேரர் பயன்படுத்தியபோது தனது சொந்த விருப்பு வெறுப்புகளுக்குட்பட்ட வகையில் அக்காவியப் பாகத்தினை அமைத்துக்கொண்டதனால் மகாவம்சத்தில் இப்பாகம் பல குறைபாடுகளையுடையதாக அமையக் காரணமாயிற்று. இவ்விடத்தில் சிறப்பாக மகாநாமதேரர் சிங்களவராக இருந்த காரணத்தினாலும், மகாவிகாரையை ஆதரித்த தேரவாத பௌத்த சமயத்தைப் பின்பற்றியவராகவும் காணப்பட்டமையால் அப்பாதிப்புக்களை துட்டகாமணி காவிய மரபினுள் நிறையவே காணமுடிகிறது. **அதுமட்டுமல்லாது சிங்கள - தமிழ் மொழிகள் ரீதியில் தாதுசேனன காலத்தில் தோற்றம் பெற்றிருந்த சமூக எழுச்சியை எல்லாளன் -**

துட்டகாமணி காலத்தில் நிகழ்ந்ததாக மகாநாமதேரர் எடுத்துக் காட்டி யிருப்பது வரலாற்று எழுத்தியலில் பெரும் பாதிப்பினை உண்டுபண்ணு வதற்குக் காரணமாயிற்று. தாதுசேனன் காலத்தில் வாழ்ந்திருந்த மகாநாமதேரர் இயல்பாகவே அக்காலத்தில் ஏற்பட்ட இனரீதியான - மொழி ரீதியான சமூகக் கொந்தளிப்புக்களினால் பாதிப்படைந்த நிலையில் மகாவம்சத்தை எழுதியபோது துட்டகாமணி காவியப் பகுதியில் அவ்வினவேற்றுமையை எடுத்துக்காட்டி எல்லாளன் - துட்டகாமணி அரசியல் போராட்டத்தினை ஓர் இனப்போராட்டமாக மதப் போராட்டமாக சித்தரித்திருந்தார். இதேபோன்று மகாநாமதேரர் வாழ்ந்த கால இலக்கிய வளர்ச்சியின் பாதிப்பினையும், அதாவது சமஸ்கிருத காவிய இலக்கிய வளர்ச்சியின் செல்வாக்கினையும் மகாவம்சத்தில் அவர் கையாண்டிருப் பதனை துட்டகாமணி காவியப் பகுதி துல்லியப்படுத்தி நிற்கின்றது. குப்தர் காலத்தில் ஏற்பட்டிருந்த இக்காவிய வளர்ச்சியின் அலைகள் ஈழத்து இலக்கிய வளர்ச்சியிலும் பாதிப்பினை ஏற்படுத்தி நின்றமைக்கு மகாவம்சத்தில் இடம்பெற்று உள்ள துட்டகாமணி காவியம் சிறந்த ஓர் உரைக்கல்லாகும். இதுவரையில் ஈழத்தில் எவருமே சிருஷ்டித்திருக்காத காவியப்புனைவு ஒன்றினை வடமொழி இலக்கிய அலங்காரங்களுக்கேற்ப மகாநாமதேரர் உருவாக்கியமையை இங்கு காணமுடிகிறது. இவ்விடத்தில் ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு சிறப்பான காலமாக இக்காலப்பகுதி விளங்கியிருந்தாலும், அதன் விளைவாக வரலாற்றுச் சிறப்பு மங்கி மறைந்து போனமையை மகாவம்சத்திலுள்ள துட்டகாமணி காவியம் எடுத்துக்காட்டுகின்றது.

துட்டகாமணி காவியப் பகுதியை இருபெரும் பகுதிகளாக வகுத்து நோக்கலாம். அவையாவன : 1. **துட்டகாமணியின் முன்னோர் பற்றிய வரலாறு 2. அநுராதபுரத்தில மன்னனாக முடிசூடிய பின்னர் அவன் ஆற்றியிருந்த தொண்டுகள் பற்றியவை.** முதலாவது பாகத்தில் அவனது இளம்பிராய வரலாறு, அவனால் நடாத்தப்பட்ட போர், புரட்சிகள் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தகவல்கள் யாவும் உருகுணையை மையமாகக் கொண்டிருந்த மகாகமை என்ற நகரில் இடம்பெற்றவையாகக காணப்படுகின்றன. இரண்டாவது பாகத்தில் அநுராதபுரத்தில் முடிசூடியதைத் தொடர்ந்து மடுச்ச - பட்டி - விகாரை, லோஹாபாஸாத, மஹாதூபம், ரூவான்வலிசாய போன்றவை அமைக்கப்பட்ட நிகழ்வுகளைக் காணலாம்.

காவியத்தின் முதற்பகுதியில் துட்டகாமணியின் முன்னோர் சிறப்பாக சத்திரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பதனை எடுத்துக்காட்டுவதற்காக தேவநம்பிய தீசனின் வழிவந்த வம்ச இனத்தொடர்பு எடுத்துக்கூறப்பட்டுள்ளது. இங்கு கொடுக்கப்பட்ட வம்சாவழி பற்றிய தகவல்கள் உரோகணத்து விகாரைகளில் பேணப்பட்டிருந்த அம்மன்னனது வம்சாவழித் தொடர்புகளாகும். இதனை மகாநாமதேரர் எடுத்துக்காட்டும் முறையில் ரோகணவம்சத்திற்கும் அநுராதபுர வம்சத்திற்கும் இடையே இருந்திருக்கக் கூடிய தொடர்புகளை, உறவு நிலைகளை மட்டுமல்லாது, கல்யாணி வம்சத்திற்கும் அநுராதபுரத்திற்கும் இடையேயான

உறவுநிலை எடுத்துக்காட்டப்படுவதனைக் காணலாம். இவ்விடத்தில முதன்முறையாக அநுராதபுரத்திற்கு அப்பால் காணப்பட்ட இராச்சியங்கள், அரச வம்சங்கள் பற்றிய சில தகவல்களை மகாவம்சத்தில் காணமுடிகிறது. ஆனால் அடிப்படையில் காணப்படுகின்ற வம்சாவழி ஏற்றுக்கொள்ளக்கூடிய வம்சாவழியாக இருந்தும், அதனைக்கூட மகாநாமதேரர் சார்ந்து குறிப்பிடும் கதைகள் முற்றிலும் உண்மையானவை என்றோ, அல்லது அவை ஏற்றுக்கொள்ளக்கூடியவையும் இல்லை. தான் எடுத்துக்கொண்ட காவியத்தலைவன் ஒரு சிறப்பு வாய்ந்த வம்சத்தில் தோன்றியவன் என்பதனை எடுத்துக்காட்ட முன்னோர் பற்றிய அருஞ் செயல்கள் பலவற்றை மகாநாமதேரர் எடுத்துக் கூற முற்பட்டுள்ளார். அத்துடன் சிறப்பாக கல்யாணி இளவரசியான **விகாரமகாதேவி அற்புதமான முறையில் எவ்வாறு ரோகண இராச்சியத்தினை ஆட்சிசெய்த காக்கவண்ணதீசனை மணம் புரிந்தாள் என்றும் எத்தகைய அற்புதமான சூழ்நிலையில் துட்டகாமணி இளவரசன் அவளுக்கு மகனாகப் பிறக்கப் போகின்றான் என்பதனையும் மகாநாமதேரர் விரிவான முறையில் எடுத்துக் கூறியுள்ளார்.** இந்த இடத்தில் வம்சவரலாற்றுப் பாகத்தை உண்மை என ஏற்றுக்கொள்ளமுடியாத கற்பனைச் சம்பவம் நிறைந்த வரலாறாக இப்பாகம் திரிபுபடுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம்.

மகாநாமதேரர் துட்டகாமணியின் முன்னோர் பற்றிய வரலாற்று மரபில் பெருமளவிற்கு பொதுமக்களிடையே நிலவியிருந் திருக்கக்கூடிய நாடோடிக் கதைகள் பலவற்றை மகாவம்சத்தில் இணைத்தமையே அப்பாகம் வம்ச வரலாற்று மரபு முறைகளிலிருந்து வேறுபட்டு அமைவதற்குக் காரணம் ஆயிற்று. அதுமட்டுமன்றி, இவ்விடத்தில இரு தரப்பில் துட்டகாமணியின் தாயாகிய விகாரமகாதேவியின் தனிச்சிறப்புக்களைக் கூறும் அதேவேளையில் மறுவளத்தில் துட்டகாமணியுடன் சம்பந்தப்பட்ட இன்னொரு முக்கிய பாத்திரமான அவனது தந்தையான காக்கவண்ணதீசனின் சிறப்புக்கள் மறைக்கப்படுவதனைக் காணலாம். இப்பின்னணியில் விகாரமகாதேவியை காவியத் தலைவியாகக் கொண்டு இத்துட்டகாமணி காவியத்தை மகாவம்சத்தில் ஓர் இடைச்செருகலாக மகாநாமதேரர் புகுத்தியுள்ளார்.

மகாநாமதேரர் துட்டகாமணியை காவியத்தலைவனாகக் காட்டுவதற்குரிய ஒரு முயற்சியில் அவனை தன்னிகரில்லா வீரனாகவும், அவனது தந்தையான காக்கவண்ணதீசனை **ஒரு கோழையாகவும** காட்டுவதற்கு முயற்சித்திருப் பதனைக் காணலாம். காக்கவண்ணதீசனின் வெறும் கோழையாகக் காட்டுவதற்கு துட்டகாமணிக்கும் அவனுக்கும் இடையே நிகழ்ந்த சம்பாசணைகளையும், துட்டகாமணிக்கும் அவனது சகோதரன் சதாதீசனுக்குமிடையே நிகழ்ந்த சம்பவங்களையும் மகாநாமதேரர் முன்னிலைப்படுத்திக் காட்டுவதனைக் காணலாம். இருந்தும் மகாநாமதேரர் காட்டுவது போல் அல்லாமல் காக்கவண்ணதீசனின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள் மகாகமையில் மிகவும் ஸ்திரமாகவும், வலிமையாகவும் அமைந்திருந்தமையைக் காணமுடிகிறது.

ரோகணத்தின் வரலாற்றில் காக்கவண்ணதீசனின் காலம் அரசியல், பொருளாதார வலிமை பெற்றிருந்தமையினைச் சான்றுகள் வாயிலாகக் கண்டுகொள்ளமுடிகிறது. அநுராதபுர அரசுக்கு இணையாக ரோகண அரசினை வளர்த்தெடுத்த பெருமை காக்கைவண்ணதீசனையே சாரும். தனது குறுகியகால ஆட்சியின்போது மிகச் சிறு இராச்சியமாக இருந்த ரோகண அரசின் எல்லைகளை அயற்பிரதேசங்களுடாக விஸ்தரித்து ரோகணத்துடன் இணைத்துவந்துள்ளதோடு மட்டுமல்லாது வழமையாக அநுராதபுர அரசுடன் சேரவேண்டிய தீகவாபி போன்ற சிற்றரச ஆள்புலங்கையும் உரோகணத்துடன் இணைக்கப்பட்டமையைக் காண்கின்றோம். ஏற்கனவே கல்யாணி அரசு ரோகணத்தின் கட்டுப்பாட்டினுள் அமைந்திருந்தமை (திருமண உறவின் அடிப்படையில்) குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு மகாவலி கங்கைக்குக் கிழக்குப பாகம் அனைத்தும் ரோகணத்தின் ஆதிக்க விஸ்தரிப்பின் கீழ் கொணரப்பட்ட பெருமை காக்கவண்ணதீசனையே சாரும். இவ்வாறு இணைக்கப்பட்ட இராச்சியங்கள் எல்லாவற்றையும் எல்லாள மன்னனின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளாக முழுமையாக எடுப்பித்திருந்தான். தனது இரண்டாவது மகனான சதாதீசனை இளவரப் பட்டங் கட்டி தீகவாவிப் பிரதேசத்திற்குப் பொறுப்பாக அமர்த்தினான். உரோகணத்தின் வடஎல்லையாக விளங்கிய மகாவலிகங்கைப் பள்ளத்தாக்கு நெடுகிலும் பலம் பொருந்திய அரண்களை நிறுவி **எல்லாள மகாராசாவினது** ஆதிக்க விஸ்தரிப் பிலிருந்து தனது அரசினைக் காப்பதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தான். இது மட்டுமல்லாது சிறந்த ஒரு படையமைப்பினை உருவாக்கி, சிறந்த தளபதிகளின் தலைமையில் எல்லைப்புற இராச்சியத்தின் பாதுகாப்பு நிலைகளைப் பொறுப்புக் கொடுத்திருந்தான். இவ்வாறாக காக்கவண்ணதீசன் காலத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறந்த படையமைப்பே துட்டகாமணியின் இறுதி வெற்றிக்கும் வழிகோலியிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. துட்டகாமணி மிகவும் இலகுவாக எல்லாளனை படைபலத்தினால் முறியடிக்க முடிந்தமைக்குரிய மூல நடவடிக்கைகளை காக்கவண்ணதீசனே செய்துமுடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எல்லாளன் மீதான ரோகணத்தி லிருந்தான படையெடுப்பிற்கு காக்கவண்ணதீசன் எதிர்ப்புக்காட்டி வந்தமைக்கான காரணம் ரோகண அரசு பொருளாதார அடிப்படையிலும், படைபலத்தாலும் வலுப்பெற வேண்டும் என்பதற்காகவாகும். ரோகணவரசு வலுவுடையதாக எழுச்சி பெறும் வரைதான் காக்கவண்ணதீசனின் ஆவல் மேலோங்கியிருந்தது. அவன் தனது படை ஆயத்தங்களை மேற்கொண்டு வந்தமை அந்நியரை இத்தீவிலிருந்து வெளியேற்றி வைப்பது என்பதை மனதில் வைத்தேயாகும்.

இரண்டாவது பிரிவில் துட்டகாமணியின் இளம்பிராய வரலாறு கூறப்படுகின்றது. இவ்விடத்தில் துட்டகாமணி சிறு பையனாக இருந்த காலத்திலிருந்தே பெரு வீரனுக்குரிய குணாதிசயங்களைக் கொண்டிருந்தவனாக எடுத்துக்காட்டப்படுவது இங்கு நோக்கத் தக்கது. பல சம்பவங்களினூடாக துட்டகாமணியின் வீரத்தனம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான ஒரு சம்பவமாகவே காக்கவண்ணதீசனின் பேடித்தனத்தையும், துட்டகாமணியின் வீரத்தனத்தையும் வெளிப்படுத்தும் நிகழ்வு அமைந்தது.

மூன்றாவது பிரிவில், காக்கவண்ணதீசனின் மரணத்தின் பின்னர், ரோகணத்தின் மன்னனாக துட்டகாமணி ஆட்சி புரிந்தமை எடுத்துக்கூறப்பட்டுள்ளது. இப்பிரிவில் தான் துட்டகாமணிக்கும், தீகவாபியில் இளவரசனாகவிருந்த சதாதீசனுக்கும் இடையே நிகழ்ந்த போராட்டமும், பின்னர் எல்லாளனுடன் நடைபெற்ற போராட்டமும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

துட்டகாமணி காவியத்தின் முதலாம் பாகத்திலுள்ள 3ஆம் பிரிவில் துட்டகாமணி இளவரசன் ரோகண இராச்சியத்தின் மன்னனாகப் பதவியடைந்தது முதல் அவனுக்கும் அவனது சகோதரனாகிய சதாதீசனுக்குமிடையே நடைபெற்ற போரும் மிக விரிவாக எடுத்துக்கூறப்படுகின்றது. காக்கவண்ணதீச மன்னன் மரணமடைந்தபோது துட்டகாமணி மலையகப் பிரதேசத்தில் தங்கியிருந்ததாக அறிகின்றோம். அப்பொழுது தீகவாபியிலிருந்த அவனது சகோதரன் ரோகணத்தின் தலைநகரான மகாகமத்திற்குச் சென்று தன்னுடைய தாயாரான விகாரமகா தேவியையும், தந்தையான காக்கவண்ணதீசனின் யானையான கண்டுல என்பதனையும் அழைத்துச்சென்றான் என்றும், அதன்பின்னரே துட்டகாமணி மகாகமத்திற்குச் சென்று ரோகணத்தின் மன்னனாகப் பதவியைப் பெற்றுக் கொண்டான் என்றும் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. ரோகணத்தில் பதவியைப் பெற்றுக்கொண்ட துட்டகாமணி கண்டுல என்ற யானையைத் திரும்பப் பெறுவதற்கும், விகாரமகாதேவியை தன்னுடன் அழைத்து வருவதற்குமாகவே தன் சகோதரனுடன் துட்டகாமணி போர் தொடுத்தான் எனக் கூறப்பட்டுள்ளது. இவ்விடத்தில் இவ்விரு சகோதரர்களுக்கிடையே நடைபெற்ற போருக்குரிய உண்மைக் காரணம் வேண்டுமென்றே கூறாது மறைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். தீகவாபியில் பதவியேற்றிருந்த சதாதீசன் தன்னுடைய தந்தை இறந்தபோது மகாமகததிற்குச் சென்று, அரசரெவரும் இல்லாது காணப்பட்ட அந்த இடத்தில் தானே அரச பதவியைப் பெறாது கண்டுல யானையையும் தாயையும் அழைத்துச்செல்வதற்கு மட்டுமே அங்கு சென்றான் என்று மகாவம்சத்தில் கூறியிருப்பது பெருமளவுக்குச் சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது. மேலும் துட்டகாமணி மன்னன் இந்த யானையையும், தாயாரையும் திருப்திப் படுத்துவதற்காகத் தன்னுடைய சகோதரனுடன் போர் ஒன்றை நடாத்த வேண்டியேற்பட்டது எனவும் கூறியிருப்பது மகாநாமதேரரது உள்நோக்கத்தினைப் புலப்படுத்தி நிற்கின்றது. இதனாலேயே இக்கடும் போருக்கான காரணம் வேறொன்றாக இருக்கவேண்டும் என்பது தெளிவாகின்றது. இப்போர் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் சங்கத்தார் தலையீட்டால் சகோதரரிடையே ஒற்றுமை ஏற்படுத்தப்பட்டு, எல்லாளனுக்கெதிராக துட்டகாமணி நடாத்தவிருந்த போரில் சதாதீசமன்னன் தீகவாபியிலிருந்து உதவிபுரியச் சம்மதிக்க வைக்கப் பட்டதோடு முடிவடைவதனைக் காணலாம்.

துட்டகாமணி வாழ்க்கை வரலாறு **ரோகண இராச்சியத்தின் ஆதிக்கப் படர்ச்சியோடு** நெருங்கிய சம்பந்தமுடைய வரலாறாகும். அவனுடைய தந்தை யாகிய காக்கவண்ணதீசன் மகாகமத்தை தலைநகராகக் கொண்டிருந்த

சிறியதோர் இராச்சியத்தைப் படிப்படியாக தென்மாகாணம் முழுவதையும் உள்ளடக்கிய ஒரு பெரும் இராச்சியமாக மாற்றினான். துட்டகாமணியின் வாழ்க்கைப் போராட்டம் பெரும்பாலும் இந்த ரோகண இராச்சியத்தைப் பெருப்பித்து, இலங்கை முழுவதையும் தன் ஆதிக்கத்தினுள் கொண்டு வரமுயன்ற வாழ்க்கைப் போராட்டமாக அமைந்தது. காக்கவண்ணதீசன் இறந்தபோது **மகாகமத்தில்** பதவியைப் பெற்றுக்கொண்ட துட்டகாமணிக்கு தன்னுடைய பெருந்திட்டத்தை அமுல் நடத்துவதற்குத் தடையாக சதாதீச மன்னனும், தீகவாபி இராச்சியமும் காணப்பட்டன. அதனால் வட இலங்கை இராச்சியமான எல்லாளனின் அநுராதபுர இராச்சியத்தைத் தாக்கிக் கைப்பற்றுவதற்கு முன்னர் சதாதீசமன்னனை அடக்கி தீகவாபியைக் கைப்பற்ற வேண்டிய தேவை காணப்பட்டிருந்தது. அதனாலேதான் மகாகமத்தில் தனது அரச பதவியை உறுதிப்படுத்தியதன் பின்னர் தன்னுடைய முதலாவது நடவடிக்கையாக சதாதீசனை அடக்குவதற்கான போராட்டத்தில் துட்டகாமணி ஈடுபட்டான். சதாதீசமன்னன் அநுராதபுர இராச்சியத்தைக் கைப்பற்று வதற்கான உதவியைத் துட்டகாமணிக்கு கொடுக்கச் சம்மதித்ததோடு அவனது முதலாவது கட்ட ஆதிக்க விஸ்தரிப்பு முயற்சி முடிவடைகின்றது.

தீகவாபிப் பிரதேசத்திலிருந்து தனது படை நடவடிக்கைகளுக்கு உதவி கிடைப்பது நிச்சயமாக்கப்பட்டதுடன் துட்டகாமணி அநுராதபுரம் நோக்கிய தனது படை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதனைக் காணலாம். ரோகண இராச்சியத்தின் ஆதிக்கப் படர்ச்சிக்கு ஒரு தடையாக இருக்காத பட்சத்தில் **சதாதீச மன்னனுடைய ஆட்சிமுறை** அங்கு தொடர்ந்து கொண்டிருந்தமை யையும், துட்டகாமணியின் போர் நடவடிக்கைகளுக்கு வேண்டிய **உணவு உற்பத்திக்குத் தளம் அமைத்த பிராந்தியமாகவும்** விளங்கியமையையும் காணமுடிகிறது.

துட்டகாமணி காவியத்தின் முதலாம் பாகத்திலுள்ள நான்காம் பிரிவில் ரோகண இராச்சியத்தின் வளர்ச்சியின் இறுதிக் கட்டத்தினைக் காண்கின்றோம். இப்பிரிவில் துட்டகாமணி மன்னனுக்கும், அநுராதபுர மன்னனான எல்லாளனுக்கு மிடையில் நடைபெற்ற போராட்டம் மிக விரிவாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இங்கு மகாகமத்திலிருந்து வடக்கே விஜிதபுரவரை துட்டகாமணியின் படை எவ்வாறு படிப்படியாக பல கோட்டைகளைக் கைப்பற்றி, எல்லாளனின் அதிகாரிகளை வெற்றிகொண்டு முன்னேறிச்சென்று, இறுதியில் விஜிதபுரத்துக் கப்பால் அநுராதபுரத்தை அடைந்து, எல்லாளமன்னனுடைய படைகளுடன் போரிட்டது எனப் பல வர்ணனைகளுடன் மகாவம்சத்தில் கூறப்பட்டிருப்பதனைக் காணலாம். இப்போராட்ட வரலாற்றின் அடிப்படையில் காணப்படுகின்ற ரோகண படையின் முன்னேற்றம் பற்றிய வரலாறு உண்மையானதாக இருந்தாலும், அப்படை எழுச்சி பற்றி இங்கு கொடுக்கப்பட்டுள்ள விரிவான வர்ணனைகள் முற்றிலும் உண்மையானவை அல்ல. இவ்விடத்தில் மகாநாமதேரர் கொடுத்துள்ள கோட்டைகள் பற்றிய வர்ணனைகள், கடைப்பிடிக்கப்பட்ட போர் முறைகள் பற்றிய வர்ணனைகள் ஆகியவை அவர் வாழ்ந்த காலமான கி.பி. 6ஆம்

நூற்றாண்டில் காணப்பட்ட கோட்டைகள், கடைப்பிடிக்கப்பட்ட போராட்ட முறைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கொடுக்கப்பட்ட வர்ணனைகளாக உள்ளன. அவர் குறிப்பிடுவது போன்ற சிறந்த கோட்டையமைப்போ அல்லது முன்னேற்றமடைந்த போர் முறைகளோ துட்டகாமணி காலத்தில் இருந்தது என்றால் அக்கருத்து அவ்வளவுக்குப் பொருத்தமானதாக அமையமாட்டாது. இங்கு மகாநாமதேரரால் இந்தியக் காவியப் புலவரைப் போன்ற வர்ணனைகளுடன் தற்கால நடவடிக்கைகளை அவரது மனதில் உள்வாங்கிய நிலையில், அலங்கால இலக்கிய நடைமுறையைக் கடைப்பிடித்து, அக்காலத்திற்கு ஒவ்வாத பல நடைமுறைகளை துட்டகாமணி காவியத்தின் முதலாம் பாகத்தில் சேர்த்துள்ளமையைக் காணலாம். இதனால் அவரது காவியப் பகுதியின் வரலாற்றுத் தன்மை (Historicity) நலிந்து, இலக்கியச் சிறப்பு மட்டுமே மேலோங்கிக் காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

ஏறக்குறைய 6 அத்தியாயங்களை உள்ளடக்கிய வகையிலான துட்டகாமணி காவியப்பகுதியின் இரண்டாம் பாகத்தில் அநுராதபுரத்தில் போரில் வெற்றிபெற்றதன் பின்னர் பௌத்தமதத்திற்கு ஆற்றிய தொண்டு மிகவிரிவாக எடுத்துக் கூறப்படு கின்றது. இங்குதான் மகாநாமதேரர் இவ்வாறான ஒரு காவியத்தினை தன்னடைய நூலில் சேர்த்துக் கொண்டமைக்கான காரணத்தினை விளக்க முற்படுகின்றார். மகாவிகாரையின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு கூறப்பட்ட இலங்கை வரலாற்று நூலில் ஒரு தனிமன்னனின் வரலாற்றை இவ்வளவு விரிவாகக் கூறியதற்குரிய ஒரு சமாதானத்தை அவர் இப்பாகத்தில் குறிப்பிடுகின்றார். ஏனைய மன்னரின் வரலாற்றை இந்நூலில் எடுத்துக்கூறும்போது அவர்கள் காலத்து சமூக வரன்முறைகளுக்கும் அரசியல் பொருளாதார வரலாற்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்காது அவர்கள் காலத்துச் சமய வரலாற்றிற்கு மட்டுமே தனி முக்கியத்துவத்தை மகாநாமர் கொடுத்துள்ளார். இவ்வாறு அவர் நடந்து கொண்டமைக்கான காரணம் அது அவரது சமயநோக்கத்தை மட்டுமே புலப்படுத்துவதாகும். பெருமளவிற்கு மகாவிகாரை வரலாற்றை தேரவாத பௌத்த சமயத்தின் வளர்ச்சியுடன் இணைத்து எடுத்துக்கூறும் ஒரு நோக்கினை அடிப்படை யாகக் கொண்டே அவரால் இம் மகாவம்சம் ஆக்கப்பட்டது. அதுமாத்திரமன்றி, அவர் ஒரு பௌத்த சங்கத்தவராக இருந்ததோடு, சமயத்தோடு சம்பந்தமான வற்றை மட்டுமே எடுத்துக்கூறக் கூடியவராகவும், பிறவிடயங்களை எடுத்துக் கூறமாட்டாதவராகவும் மகாநாமதேரர் காணப்பட்டிருந்தார். அவ்வாறான பல கட்டுப்பாடுகளுக்குள் நின்று இந்நூலை எழுதிய மகாநாமதேரர், துட்டகாமணி காவியத்தைப் பொறுத்தமட்டில் அக்கட்டுப்பாட்டைக் கடந்த பல்வேறு அரசியல் வியடங்களையும், பிறவிடயங்களையும் வரலாற்று நிகழ்வுக்கு அப்பாற்பட்ட வகையில் வகுத்துக் கூறுபவராக மகாநாமதேரர் காணப்படுகின்றார். ஆதலால், அவ்வாறு ஒரு புதிய பிரிவினை (காவியத்தினை) மகாவம்சத்துடன் சேர்த்துக் கொண்டமைக்காக, அதனை நியாயப்படுத்தும் நோக்கில் தான் கூறவந்த முழுவரலாற்றையுமே சமய வரலாறாக மாற்றிவிடுவதனைக் காண்கின்றோம். இதனாலேயே பதினொரு அத்தியாயங்களை உள்ளடக்கிய இக்காவியப் பகுதியில்

ஆறு அத்தியாயங்கள் தேரவாத பௌத்த சமயத்திற்கு துட்டகாமணி ஆற்றிய பங்களிப்புக்களை வருணிப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. இதுமாத்திரமன்றி, இவ்வத்தியாயங்களுக்கு முன்னுள்ள ஐந்து அத்தியாயங்களிலும் தான்கூறும் வரலாற்றை ஈழத்துப் பௌத்தமத வரலாற்றின் ஒரு பாகமாகச் சித்தரித்துக்காட்டும் நோக்கில் பல வர்ணனைகளைச் சித்தரித்துள்ளார். இதனால் அவர் கூறவந்த வரலாறு முற்றியலும் திரிபடைந்து காணப்பட்டது.

மகாநாமதேரரால் சித்தரித்துக் காட்டப்பட்ட துட்டகாமணி தன் தந்தைக் கெதிராக கலகம் செய்த ஓர் இளவரசன் அல்லன். ஆதிக்கப் பேராசை பிடித்து இலங்கை முழுவதையும் தன் ஆதிக்கத்தினுள் கொண்டுவர முயன்ற ஒருவனுமல்ல. ஆனால் அவன் அநுராதபுர இராச்சியத்தில் அழியும் நிலையில் இருந்த தேரவாத பௌத்தமதத்தை மீண்டும் அங்கு ஸ்தாபித்துக்கொள்வதற்காக சிறு பராயத்தில் இருந்தே பல நடவடிக்கைகளை எடுத்து இறுதியில், பௌத்தனல்லாத எல்லாளனை அகற்றி, அநுராதபுரத்தில் மீண்டும் பௌத்தமதத்திற்கு உன்னத அந்தஸ்தினைப் பெற்றுக் கொடுத்தவனாவான். அதனை எவ்வாறு சாதித்தான் என்பதனை எடுத்துக்காட்டவே அவனது நடவடிக்கைகள் அத்தனையையும் மத அடிப்படையில் நின்று வருணித்துக் காட்டுபவராக மகாநாமதேரர் தன்னை ஆக்கிக்கொண்டார்.

துட்டகாமணி காவியத்தின் இரண்டாம் பாகத்தில் துட்டகாமணியினால் கட்டப்பட்டவையாகக் கருதப்படும் **மகாதூபம** அல்லது **ரூவான்வலிசாய, மடுச்சபட்டி விகாரை, லோகபாசாத** ஆகியவை எவ்வாறு கட்டப்பட்டன என விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இப்பாகத்தில் இதுவரையில் கடைப்பிடிக்கப்பட்ட காவியநடையில் ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதற்குக் காரணம் இந்தப் பாகத்தில் அடங்கிய வரலாற்றை எழுதுவதற்கு மகாநாமதேரர் முழுக்க முழுக்க விகாரைகளில் பேணப்பட்ட மரபில் தங்கியிருந்தமையாகும். மிகவும் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த பகுதியாகக் காணப்படும் இவ்விகாரைகளின் கட்டிடக்கலை வரலாற்றை மகாவம்சத்தில் உள்ளபடி தீபவங்ஸத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரண்டிற்குமிடையில் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுவதனை அவதானிக்கலாம். முதலில் குறிப்பிடப்பட்ட மூன்று விகாரைகளும் கட்டப்பட்ட வரலாறு மகாவம்சத்தில் துட்டகாமணியின் வரலாற்றோடு கொடுக்கப்பட தீபவங்ஸத்தில் அவை சதாதீச மன்னனுக்குரியவையாகக் கொடுக்கப் பட்டுள்ளமையைக் காணலாம். அதனால் இவ்விடத்தில் மகாநாமதேரரின் காவிய நோக்கத்தினால் துட்டகாமணியின் உடன் பிறப்பான சதாதீச மன்னனது **உண்மையான சிறப்புக்கள் பெருமளவிற்கு மறைக்கப்பட்டு** அம்மன்னனை ஒரு தரங்குறைந்த பாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். ஆகையால் மகாவம்சம் கூறுவதுபோல் மேலே குறிப்பிடப்பட்ட கட்டிடங்களைக் கட்டுவிப்பதில் பெரும்பங்கு கொண்டிருந்தவன் **துட்டகாமணியா** என்பது பிரச்சினைக்குரியதாகின்றது. தீபவங்ஸம் குறிப்பிடுவதுபோல் அந்த

ஸ்தூபிகளையும், விகாரைகளையும் அமைத்துக் கொண்டவன் துட்டகாமணி மன்னனின் தம்பி **சதாதீச** மன்னனேயாகும். அநுராதபுரத்தில் மகாதூபத்தினை கட்ட ஆரம்பித்தவன் துட்டகாமணியே என்பதனை இவ்விரு நூல்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. அதே கட்டிடத்தை கட்டிப் பூரணப்படுத்தியவன் சதாதீசன் என்பதையும் அவ்விரு நூல்களும் எற்றுள்ளன. ஆனால் மகாவங்ஸத்தில் சதாதீச மன்னனின் பங்கு இந்த மகாதூபத்தைக் கட்டி முடிப்பதில் ஒரு சிறிய அளவே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோலவே **லோகபாஸாத** என்ற கட்டிடத்தைக் கட்டுவதிலும் சதாதீசனின் பங்கு குறைந்தளவிலேயே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் தீபவங்ஸ வரலாற்றில் இக்கட்டிடத்தை அமைத்துக் கொள்வதில் சதாதீச மன்னனின் பங்கும் பணியும் குறிப்பிடத்தக்களவிற்கு இருந்தமையைக் காணலாம். இவை மட்டுமல்லாது பொதுப்பட தீபவம்ச வரலாற்றிலே துட்டகாமணியின் சமயத் தொண்டைவிட சதாதீசனின் சமயத் தொண்டு கூடியதாகக் கொள்ளத்தக்க வகையில் அவனது தொண்டுபற்றி பல தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விடத்தில் சதாதீசனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பெயரை நோக்கினால் அவன் காலத்தில் அம்மன்னன் சமயத்துறையில் மிகவும் சிறப்புப் பெற்றிருந்தான் என்பதனை அறிந்துகொள்ள முடிகிறது. **சதா** என்பதன் பொருள் **'நித்திய சமய நம்பிக்கை'** என்பது பொருளாகின்றது. ஆகவே இங்கு மகாவம்ச வரலாற்றில் இம்மன்னனுக்குரிய இடம் கொடுக்கப்படாது, அவனுக்குரிய சிறப்பான ஒரு பாகத்தினை எடுத்துத் துட்டகாமணிக்குக் கொடுத்திருப்பதனைக் கண்டுகொள்ள முடிகிறது.

மகாவம்சத்தில் மகாநாமதேரரினால் தெரிவுசெய்யப்பட்டிருந்த காவியத் தலைவன் எல்லாத்துறைகளிலும் ஏனைய பாத்திரங்களைவிட தன்னிகரற்றவனாக சித்தரிக்க வேண்டிய ஒருநிலை காணப்பட்டது. இதனால் ஏனைய மன்னர் களுடைய சமயத்துறைச் சாதனைகளையெல்லாம் துட்டகாமணியின் சாதனைகளாக மகாநாமதேரர் எடுத்துக் காட்டவேண்டிய நிலைக்குள்ளாக்கப்பட்டார். துட்டகாமணியை தன்னிகரற்ற ஒரு காவிய நாயகனாகக் கொள்வதற்காக அவனது தம்பியான சதாதீசனது ஆளுமையினையும், சாதனைகளையும் குறைத்துக் காட்டியதோடு மட்டுமன்றி, அவனை ஒரு தரங்குறைந்த பாத்திரமாகவும் ஆக்கிக் காட்டியுள்ளார். மகாநாமதேரர் இவ்வாறாக துட்டகாமணியின் வாழ்க்கை வரலாறானது மகாவம்சத்தில் பல குறைபாடுடையதாகக் காணப்படுகின்றது. மகாநாமதேரர் கூற எடுத்துக்கொண்ட இலங்கையின் வரலாற்றிற்கு கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்த மன்னர்களுள் துட்டகாமணி மன்னனை காவியத் தலைவனாக எடுத்துக்கொண்டமை பொருத்தமுடையதா என்ற ஒரு கேள்வியும் இங்கு எழுகின்றது. முற்பட்ட காலத்திலிருந்து மகாசேனன் காலம் வரைக்கும் அநுராதபுர இராட்சியத்தில் ஆட்சிபுரிந்த மன்னர்களுள் காலத்திற்குக்காலம் புகழ்பெற்ற மன்னர் சிலரும் ஆட்சி புரிந்துள்ளனர். பௌத்தத்தின் வருகைக்கு முன்னர் மக்கள் மனதில் நிறைந்திருந்த ஒரு மன்னனாக பந்துகாபயமன்னன் காணப்பட்டான். அவனுக்குப் பின்னர் சமய வரலாற்றைப் பொறுத்தவரையில பெரும்புகழ்பெற்ற மன்னனாக தேவநம்பியதீச மன்னன் காணப்பட்டான்.

துட்டகாமணிக்குப் பின்னர் சமயத்துறையிலும், புகழ்பெற்ற ஒரு மன்னனாக துட்டகாமணி அபய மன்னன் காணப்பட்டான். இம் மன்னனுக்குப் பின்னர் பொருளாதாரத்துறையிலும் ஒரு விதத்தில் மதத்துறையிலும் கூட புகழ்பெற்ற ஒரு மன்னனாக மகாசேனன் காணப்படுகின்றான். இவ்வாறான மன்னர்களுள் மகாநாமதேரர் துட்டகாமணி மன்னனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டமைக்குப் பல காரணங்கள் இருக்கின்றன எனக்கூறலாம். பந்துகாபய மன்னனைப் பொறுத்த வரையில் பௌத்தமத வரலாற்றோடு எவ்விதத்திலும் தொடர்பற்றவனாகவே காணப்பட்டான். அவ்வாறான ஒரு மன்னனை தனது காவியத் தலைவனாக்க முடியாமல் இருந்திருக்கக்கூடும். இதற்குப்பின் வந்த தேவநம்பியதீசன் இலங்கையின் பௌத்தமத வரலாற்றோடு மிகநெருங்கிய தொடர்புபட்டவன் என்ற நிலையில் காவியத்தலைவனாகும் தகைமையைப் பெற்றிருந்தும் கூட மகாநாமதேரர் அம்மன்னனை அவ்வாறு ஆக்கமுடியாதநிலையில் இருந்துள்ளார். இதற்குக் காரணம் பிறதுறைகளான ஸ்தூபி கட்டிட நிர்மாணத்திலோ அல்லது ஓரளவிற்கு அரசியல் துறையிலோ சாதனைகளை ஈட்டியவனாக அம்மன்னன் காணப்படாததே அவ்வாறான ஒரு நிலைக்குள் மகாநாமதேரரினால் வைத்து அளவீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். பின்னர் ஆட்சிக்குவந்த வட்டகாமணி அபயன் என்ற மன்னன் சமயத்துறையிலும், அரசியற்துறையிலும் சாதனைகளை ஈட்டிய ஒருவனாக இருந்தாலும் அவனுடைய அரசியல் வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்தில் சில மறக்கமுடியாத **தோல்விகளைத** தழுவிய ஒருவனாகக் காணப் பட்டான். அவனுக்கெதிராக ரோகணத்தில் இருந்து உருவான கலகத்தை அவனால் அடக்கமுடியாது இருந்த நிலைமையை மகாநாமதேரர் நன்கு அறிந்திருக்கவேண்டும். ஆனால் அதைவிடப் பெருந்தோல்வியை தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்த படையெடுப்பாளர்களிடம் எதிர்நோக்க வேண்டியநிலைக்கு வட்டகாமணி தள்ளப்பட்டிருந்தான். இந்நிலையினால் சிறிது காலம் அரசியலில் இருந்து ஒதுங்கி வனவாசம் செய்யவேண்டி யிருந்தநிலையும் வட்டகாமணிக்கு ஏற்பட்டிருந்தது. பௌத்த சமயத்தோடு தொடர்புபட்ட வகையில் இதுவரையில் வாய்மொழி மரபினடியாகப் பேணப்பட்டு வந்த **திரிபிடகம்** போன்றவை **வரிவடிவம** பெறுதற்கும், மகாதூபத்தோடு ஒப்பிடக்கூடியளவிற்கு **அபயகிரிதாது கர்ப்பத்தை** நிர்மாணித்திருந்தும், அவனுடைய சமயப்பணிகளில் அவனால் இழைக்கப்பட்ட **மாபெரும் பிளவுமே** பின்னர் மகாவிகாரையைப் பாதிக்கக்கூடிய வகையில் அமைந்தது. இலங்கையின் பௌத்த சமய வரலாற்றில் முதன்முதலாக இவனது ஆட்சிக்காலத்திலேயே **பௌத்த சங்கத்தில் முதல் பிளவு** ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மகாவிகாரைக்கெதிரான வகையில் **அபயகிரிவிகாரையை** நிறுவி மகாயான பௌத்த மதப் பிரிவினருக்குரிய உறைவிடமாக அதனை வழங்கியிருந்தமையை மகாவிகாரை வாசிகளால் விரும்பப்படாத ஒரு செயலாக அமைந்திருந்தது. இந்நிலையில் மகாநாமதேரர் தனது நூலுக்கான காவியத் தலைவனாக வட்டகாமணியைக் கொள்வாரா? என்ற வினா இயல்பாக அதற்குரிய விடையையும் பகரும்.

இறுதியாக ஆட்சிபுரிந்த மகாசேன மன்னன் அநுராதபுர அரசின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பெருமளவுக்குத் தொண்டாற்றியவனாகக் காணப்பட்டான்.

அநுராதபுரத்தில் இவனது ஆட்சிக்காலத்தில் பிரசைகள் கூடியளவிற்கு நன்மைகளைப் பெற்றிருந்தனர். **குளம் தொட்டு வளம் பெருக்கிய மன்னனாக, மின்னேரி தெய்வமாக** போற்றப்பட்ட இம் மன்னனை காவியத்தலைவனாக இடம்பெறச் செய்யக்கூடிய தகுதி இருந்தும் மகாநாமதேரர் ஏன் அவ்வாறு செய்யவில்லை என்பது புரியவில்லை. ஒருவேளை மகாநாமதேரர் எடுத்துக் கொண்ட வரலாற்று நோக்கத்திற்கு பொருளாதார வரலாறோ அல்லது சமய வரலாறோ முக்கியத்துவம் வகிக்கும் அம்சமாகக் கருதாமையினால் மகாசேன மன்னனை காவியத் தலைவனாக்கும் நோக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை எனலாம்.

மகாசேன மன்னன் சமயத்துறையில் குறிப்பிடத்தக்க பங்காற்றியிருந்தும், பல ஸ்தூபிகளை தனது ஆட்சிக்காலத்தில் அமைத்திருந்தும்கூட மகாநாமதேரரின் நோக்கில் தேரவாத பௌத்தமதத்தின் வளர்ச்சிக்கு மகாசேனன் பங்காற்றியிருக்க வில்லை என்றே உணரப்பட்டது எனலாம். துட்டகாமணியைப் போலவும், வட்டகாமணியைப் போலவும் இம்மன்னன் பெருந்தூபி ஒன்றை அமைத்திருந்தான். துட்டகாமணியைப் போலல்லாது இப்பெரும் தூபியை மகாசேனமன்னன் தனது ஆட்சிக் காலத்தினுள்ளேயே கட்டி முடித்திருந்தான். இருப்பினும் அம்மன்னன் மகாவிகாரைக்குப் பாதகமான முறையில் தேரவாதத்தினை எதிர்த்து மகாபாரதத்திற்கு நிகரற்ற புரவலனாக ஆட்சி புரிந்தமையை தேரவாதியாகிய மகாநாமதேரர், மகாவிகாரை வாசியாக இருந்து எழுதிய வரலாற்றில் ஒரு காவியத் தலைவனுக்குரிய அந்தஸ்தை மகாசேனன் எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்? இவ்வாறு பார்க்கும்போது துட்டகாமணி மன்னன் ஒருவனே எல்லாவிதத்திலும் காவியத் தலைவன் என்ற பங்கினைப் பெறுவதற்கு உரிமையுடையவனாகின்றான்.

இங்கு சிறப்பாக துட்டகாமணி அநுராதபுரத்தில் நடாத்திய போராட்டங்கள் ஓரளவிற்கு **இனப் போராட்டமாகவும்**, பெருமளவிற்கு ஒரு **சமயப் போராட்டமாகவும்** சித்தரிக்க மகாநாமர் முயன்றள்ளமையைக் காணலாம். ஆனால் உண்மையில் அவர் கூறுவதுபோல அது ஒரு பெருஞ் சமயப் போராட்டமாகவோ அல்லது இனப் போராட்டமாகவோ கொள்வது பொருத்தமற்றத. இங்குதான் காவிய ஆசிரியரின் தன்மையை மனதில்வைத்து எவ்வாறு அவர் இதனை இனப்போராட்டமாகக் காட்ட முயற்சி செய்தார் எனக் கண்டுகொள்ள முடியும். முன்பு குறிப்பிட்டது போன்று மகாநாமதேரர் வாழ்ந்த காலச் சூழ்நிலை அவர் கூறிச்சென்ற வரலாற்றைத் திட்டவட்டமாகப் பாதித்துள்ளது எனக் காணலாம். மகாநாமர் வாழ்ந்த காலம் **தாதுசேன மன்னனின இறுதிக்காலம** அல்லது சிறிது பிற்பட்ட காலம் எனலாம். தாதுசேன மன்னனின் ஆட்சியின் ஆரம்பத்தில் அநுராதபுரத்தில் குறிப்பிடத்தக்களவில் **இனக்கசப்பு** ஏற்பட்டிருந்த மையை உணரமுடிகிறது. தாதுசேன மன்னன் அநுராதபுரத்தில் ஆட்சிசெய்த தென்னிந்திய ஆட்சியாளருக்கெதிராக **கடும்போர் செய்து** தனது உரிமையைப் பெற்றிருந்தான். அப்போராட்டத்தின்போது தமிழர்களுக்கு ஆதரவு அளித்தவர் பல வழிகளிலும்

தாதுசேன மன்னனால் பின்னர் தண்டிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு **தமிழர்கள் மீது பழிவாங்கப்பட்ட சம்பவங்கள்** தொடர்பான செய்திகளை **சூளவம்சத்தின் முதலாம் பாகம** தெளிவாக எடுத்துக்கூறுகின்றது. இவ்வாறு தாதுசேன மன்னனின் ஆட்சிக்காலத்தில் தமிழ் சிங்கள இனங்கள் குறிப்பிடத்தக்களவில் பரஸ்பரம் மனக்கசப்பிற்குட்பட்ட நிலையில் வாழ்ந்திருந்தனர் எனலாம். இவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே மகாநாமதேரர் மகாவங்ஸத்தினை (இலங்கை வரலாற்றினை) எழுதியபோது அதேபோன்றதொரு இனப் பகைமையைத்தான் துட்டகாமணி காலத்திலும் காண்பதற்கு முற்பட்டிருந்தார். இதன் காரணமாக **துட்டகாமணிக்கும் எல்லாளனுக்கும்** இடையே நடைபெற்ற போர் அநுராதபுரத்தில் தமிழர் ஆட்சியை அகற்ற நடாத்தப்பட்ட ஒரு போர் என்று மகாநாமதேரரினால் சித்தரிக்கப்பட்டது. காவியப் பகுதியில் எல்லாளனின் ஆட்சி பற்றி மகாநாமர் கூறுகின்றபோது, அவனது ஆட்சியின்போது காணப்பட்ட கொடுமைகள் பற்றியும் அங்குமிங்குமாக மகாநாமதேரரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பின்பு முரண்பட்ட முறையில் எல்லாளனின் ஆட்சி பற்றி வேறாகக் கூறுமிடத்தில் காவியத்திற்கு முன்வரும் 21ஆம் அத்தியாயத்தில் **எல்லாள மன்னன் 44 ஆண்டுகள, பகைவனையும், நண்பனையும் சமனாகப் பாவித்து, எல்லோருக்கும் சமநீதி செலுத்தி இருந்தான** என்று மகாநாமதேரர் குறிப்பிட்டு உள்ளார். அது மட்டுமல்லாது துட்டகாமணி எல்லாளமன்னன் ஆகியோருக்கு மிடையில் நடைபெற்ற போராட்டம் உண்மையில் ஓர் இனப் போராட்டமாக இருந்திருந்தால், பின்னர் எல்லாளமன்னன் கொல்லப்பட்டபோது துட்டகாமணி அம்மன்னனுக்கு **மரியாதை செலுத்துவதற்காக சமாதி ஒன்றைக் கட்டியிருப்பான** என நினைக்கவேமுடியாது. அத்தகைய சமாதிக்கு மகாநாமர் கூறுவது போல, பிற்பட்ட காலம்வரைக்கும் **எல்லோராலும் மரியாதை செலுத்தப் பட்டிருக்கும்** எனவும் எதிர்பார்க்கமுடியாது. ஆகவே அடிப்படையில் அச்சம்பவங்களை நோக்கும்போது இந்தப் போராட்டமானது இனப்போராட்டமாக இல்லாது அல்லது ஒரு சமயப் போராட்டமாகவும் இல்லாது **ஒரு வெறும அரசியல் போராட்டம்தான் என்பதனை உறுதிப்படுத்தியுள்ளன.**

வரலாற்றுப்பார்வையில் மகாவம்சம்

இலங்கையின் மிகச் சிறப்புவாய்ந்த புராதன இலக்கியப் படைப்புகளிலே ஒன்றான மகாவம்சம், அரச அதிகாரத்தினதும் பௌத்தத்தினதும் இணைப்பின் நேரடி விளைபொருளாகவும், இவ்விரண்டினைப்பற்றி எடுத்துக்கூறுவதாகவும் உள்ளது. பிரமாண்டமான சிற்பங்கள், தாதுகோபங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியும், நீர்ப்பாசன வலைப்பின்னல் அமைப்பின் முதிர்ச்சியும் இடம்பெற்ற அதே காலத்திலேயே **தீபவம்சமும், மகாவம்சமும்** தோன்றியமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். **'புனிதமானோரின் புனித மகிழ்வுக்கும் உணர்ச்சிக்கும'** வேண்டிய அறிவுரைகளுடன் ஒவ்வொரு அத்தியாயத்தையும் முடிக்கும்போது மகாவம்சம் தனது கருத்தமைவு இறக்குமதி (பௌத்தம்) பற்றி எவ்வித சந்தேகங் களையும் விட்டுச்செல்லவில்லை. கௌடில்யரினதும் மாக்கியவல்லியினதும்

கருத்துக்களை எதிரொலிக்கும் வகையில் கொடூரமான போர்கள், வம்சப்பகைகள், மிகப் பெரியளவில் இரத்தம் சிந்தும் போர்கள் என்பன பற்றி உண்மையான அரசியல் தன்மையுடனும், ஒருபக்கப் பற்றுடனும் விபரிக்கும் சில அத்தியாயங் களின் பின் அமைந்துள்ள ஒரு அத்தியாயத்தின் முடிவிலேயே இந்த அறிவுரை அமைந்துள்ளது என்பது நோக்கத்தக்கது. மகாவிகாரையைச் சேர்ந்த மதகுருமாருடைய உலகியல் மனோபாவங்களை வெளிப்படுத்துவனவாக மகாவம்சத்தில் உள்ள சில குறிப்புக்களையும் அவதானிக்கவேண்டும். பேரவாவுடன் கட்டிடங்கள் அமைக்கப்பட்டமை, இப்பிரிவினருக்கு நிலங்களும் ஏனைய கொடைகளும் வழங்கப்பட்டமை பற்றி இக்குறிப்புக்கள் கூறும் அதேசமயம், இக்குருமாரின் ஆன்மீகப் பெறுபேறு பற்றி ஒப்பீட்டளவில் மௌனம் சாதிக்கின்றன. தனிப்பட்ட துன்பங்களின் மத்தியிலும் பௌத்த குருமாருக்குப் பிச்சை வழங்குதல் மிக உயர்வாகப் புகழப்படுகிறது. இது உலகியலுக்கும் மதத்துக்கும் இடையில் ஏற்பட்ட இணைப்பினைச் சுட்டுவதுடன் சராசரி கேட்போருக்கு (சராசரி விவசாயிக்கு) உலகியல் நடைமுறையை ஏற்றுக் கொள்ளுமாறு அறிவுரையும் வழங்குகிறது.

பண்பாடு பற்றிய இச்சுருக்கமான கூட்டுமொத்தமான நோக்கிலே பண்பாடு தொடர்பாக விவசாயி கொண்டிருந்த வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்களையே இங்கு நிரைப்படுத்தியதன்றி கலையின் பொருள், வடிவ மாறுபாடுகள், பௌத்தத்தின் பல்வேறு போக்குகளின் தாக்கம், கிராமிய மட்டத்தில் பண்பாட்டுச் செயல்முறையின் இயக்கவிசை ஆகியவற்றை நோக்கவில்லை. கிராமத்தினுடைய சமூக - பொருளாதார கலாசார வாழ்வை விபரிப்பதற்கு இன்று பயன்படும் பிரபலமான ஒரு உருவகம் குளம் தாதுகோபம் பற்றிய இரட்டைக் குறியீடு ஆகும். இவை எமது கருத்தில் முறையே கிராமத்தவர்களுக்கு கிராமியமட்டத்தில் வாழ்வாதாரவழிகள் (விவசாயிகள் அல்லாத வர்க்கத்தினருக்கு உபரி உற்பத்தி ஆக்கத்தினையும்) தகவல் கேந்திரநிலையம், பட்டுவாடா முறையின் குறியீடு ஆகியவற்றைக் குறிக்கின்றன. உபரி உற்பத்தியை அடையும் வாய்ப்புப் பெற்ற, மையத்தில் உள்ளோருக்கும், குறிப்பாக பிரபுத்துவ அரசவைக்கும் சயமத்துக்கும் இடையில் ஏற்பட்ட இணைப்பு ஆட்சியைச் சட்டபூர்வமாக்கும் முறையை எவ்வாறு ஏற்படுத்தியது என்பதை ஏற்கனவே பார்த்துள்ளோம். இந்நாட்டின் நிர்வாக மையத்திலுள்ள சில அம்சங்களுக்குக் கிராமிய மட்டத்திலும் சமாந்தரங்கள் காணப்பட்டன. உபரி உற்பத்தியினால் மிக உச்சப் பயனைப் பெறும் அரசனும், அவனது அவையும் வரி சேகரிக்கும் உத்தியோகத்தர்களைக் கிராமிய மட்டத்திலே உபரி உற்பத்தியை உறிஞ்சி எடுப்போராக வைத்துள்ளமையை அவதானிக்கலாம். இவ்வரி சேகரிப்போர் கிராமிய மட்டத்திலே மதசார்பற்ற விடயங்களில் மேலான அதிகாரத்தைக் கொண்டிருந்தனர். பிரதான சமயச் சங்கமும் அதனுடன் தொடர்புள்ள குறியீடுகளும் படிமங்களும் கிராமத்தில், உள்ளூர் பான்சாலையால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட எதிர் இணையைக் கொண்டிருந்தனர். இப் பான்சாலையானது மத்திய சமய நிறுவனத்தின இலக்கியம், கருத்து போன்றவற்றைக் கீழ்நோக்கிச் செலுத்தும் தொழிற்பாட்டினை

ஆற்றியது. இவ்வகையில் சிறப்பாக மதகுருமார்கள் சட்டபூர்வமாக்கப்பட்ட சமூக நிலையுடன் மக்களைப் பிணைத்துவைக்கும் பயனுள்ள பணியைச் செய்தனர். விவசாயிகளை நேருக்குநேர் சந்திக்கும் இத்தகைய மதகுரு ஒருவர்தான் பொதுமக்களிடமிருந்து எழும் **'சாது'** என்ற ஆர்ப்பரிப்பின் மத்தியிலே **'சமயப்பணி ஆர்வலருடைய புனிதமான மகிழ்வுக்கும் உணர்வுக்கும் எனத் தொகுக்கப் பட்ட'** அறிவுரைகளைக் கொண்டு முடியும் மகாவசம்சத்தின் சமூகம், வரலாறு பற்றிய கருத்தினை வாசிக்கிறார் எனக்கூறலாம்.

இந்த உள்ளூர் மதகுருவே 'சாது' என்ற ஆர்ப்பரிப்பின் மத்தியிலே, சீசருக்கும் கிறிஸ்துவுக்கும் (அரசுக்கும் மதத்துக்கும்) வழங்குவது தொடர்பாக சத்தம்மலங்கார, பூஜாவலிய ஆகிய நூல்களிலிருந்து பொருத்தமான பகுதிகளை வாசிக்கிறார். மையத்திலிருந்து எல்லைவரையுள்ள மக்கட்தொகை மீதான கருத்தமைவுக் கட்டுப்பாடு நிறைவடைந்ததாகத் தோன்றுகிறது. இந்த ஒளியில் நோக்கும்போது தாதுகோபத்தினதும் குளத்தினதும் பாத்திரமானது மேலுள்ளவர்களுக்கு உபரி உற்பத்தியைக்கொடுக்கும் சாதனமாகவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் சாதனமாகவும் காணப்படுகின்றது.

மேலும் ஒரு புறத்தில் மதச்சார்பற்ற அதிகாரத்திற்கும் மறுபுறத்தில் மதத்திற்குமிடையே அதிகரித்துவரும். இவ்வுலக பொருளாதார சமூகப் பிணைப்பினைக் காட்டும் வடிவங்களாக, நாட்டினுடைய மைய மட்டத்திலே மாடாலய நிலப்பிரபுத்துவமும் அது போன்றவையுமே அமைந்திருந்தமை மேலே எடுத்துக்காட்டியுள்ளோம். கிராமிய மட்டத்திலும் இதற்குச் சமாந்தர போக்குகள் காணப்பட்டன. இதனை பான்சாலையின் பிரதான தாயக்கர்கள் அரச வரி சேகரிப்பவராகவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுபவராகவும் விளங்கியதைக் காணலாம். நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போன்று கிராமிய மட்டத்தில் மதபீடத்திற்கும் குளத்திற்குமிடையே இருந்த உறவு, பௌத்தத்தினதும், சிங்களவரினதும் காலத்திற்கு அப்பால் பௌத்தத்திற்கு முற்பட்ட பெருங்கற்காலம் வரைக்கும் பின்னோக்கிச் செல்வதை அவதானிக்கலாம். பெருங்கற்காலப் பண்பாட்டுடன் இணைந்த, குறிப்பிட்ட சமய முக்கியத்துவத்தினைக் கொண்டிருந்த தாழிப் புதையல்கள் தாம் பேணிய குளங்களின் அருகாமையிலேயே அமைந்திருந்தன.

பண்பாடு உருவாக்கப்பட்ட, பரிமாற்றப்பட்ட, கடைப்பிடிக்கப்பட்ட வர்க்கச் சூழல் பற்றி நாம் சுருக்கமாக ஆராய்ந்துள்ளோம். எவ்வாறெனினும் பண்பாட்டின் பரந்த எல்லைகளை நிர்ணயித்த இலங்கையின் வர்க்கப் பின்னணி, வளர்ந்து வரும் அரசின் குறிப்பிட்ட தேவைகள் ஆகியவற்றுக்குள் ஒரு நிச்சயமான பொருளும் வடிவமும் பரிமாற்றப்பட்டும் உருவாக்கப்பட்டும் இருந்தன எனலாம். முதலில் சமயத்தை நோக்கினால் சமயச் சிந்தனையும் அதனுடன் இணைந்த தத்துவம் உளவியல் ஆகியனவும் இப்பண்பாட்டுத் கூட்டுத்தொகுதியில் உள்வாங்கப்பட்டதைக் காணலாம். நாம் பௌத்தத்தின் கருத்தமைவுப் பயன்பாடு பற்றியே கவனம் செலுத்தினோம். ஆனால் அதனுடைய அடிப்படை உண்மைகள்

பற்றியும், அடிப்படை நோக்கங்கள் பற்றியும், புத்தருடைய உண்மைத்தேடல் வழியிலே கவனம்செலுத்தியோரும் உள்ளனர். எனவே பௌத்தத்தில் விபரிக்கப்பட்ட உளவியல் தரிசனம், தியானபலம் ஆகியவற்றின் உச்சங்களை அடைந்த பல தனி மனிதர் இருந்திருப்பர். புத்தரினால் போதிக்கப்பட்ட உண்மையான நோக்கங்களால் உந்தப்பட்டவர்களும் புத்தரைப் பின்பற்றுவதன் மூலம் உண்மையின் காட்சியை அடைய முனைந்தவர்களும் இருந்திருப்பர். இத்தகைய மதகுருமார் சிறு குழுக்களாக அல்லது சில சமயங்களில் பிற்கால வனவாசிகள் போன்று ஒன்றாகச் சேர்ந்து இருந்திருக்கலாம். ஆனால் இலங்கையில் பௌத்தத்திற்கும் அரச அதிகாரத்திற்குமிடையே ஏற்பட்ட இணைப்பின் அடிப்படை அமைப்பு இலங்கை அரசின் சமயமான பௌத்தத்தின் முதன்மையான நோக்கங்களாக இத் தனிநபர்களின் நடவடிக்கைகள் இருக்கத் தேவையில்லை என்ற கருத்தை வெளிப்படுத்தியது. நிறுவனமயப்படுத்தப்பட்ட நோக்கங்கள் எமது முந்திய விபரணத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

மதம் வகித்த விதிமுறைப்படுத்திய அரச முறைமையானது அவைதீகப் பாரம்பரியம் என்று அழைக்கப்பட்டதன் தொழிற்பாட்டைப் பாதித்தது. வைதீகப் பாரம்பரியம் என அழைக்கப்படும் வகையைச் சேர்ந்த கட்டிடங்களைப் போன்று பெரிய அளவில் அபயகிரி இருந்தது என்பதை நாம் அறிவோம். மகாவிகாரையைப் பொறுத்தவரையிலும் பாகியான்கூட மதகுருமாரின் அதேவகையான எண்ணிக்கைகளைக் குறிப்பிடுவதைக் காணலாம். பிற்பட்ட நூற்றாண்டுகளில் இந்திய உபகண்டத்தில் மஹாயானத்தின் வளர்ச்சியுடன் இலங்கையிலுள்ள சமயநிலையங்கள் உபகண்டத்தைப் பொருத்தமான வகையில் பின்பற்றி சர்வதேச முக்கியத்துவத்தினைப் பெருமளவிற்கு வளர்த்தன. ஆகையினால் சீனச் சக்கரவர்த்தி ஏழாம் நூற்றாண்டில் 'அமோகவிக்ர' என்பவனை 500 'தாந்ராயன' சுவடிகளைச் சேகரிப்பதற்கு இலங்கைக்கு அனுப்பினான். இது ம'ாயானம் பல இடங்களில் பரவியிருந்தது என்பதைச் சுட்டுகிறது. தொடர்ந்து வந்த காலத்திலும் மஹாயானத்தின் செல்வாக்கு அரச சமயத்தில் பலமான தாக்கத்தைத் தொடர்ந்து ஏற்படுத்தியது என்பது பொலநறுவையிலுள்ள பிரதான சிற்புத் தொகுதியினால் குறிப்பாக கல்விகாரையினால் நன்கு உணர்த்தப்படுகிறது. பின்வந்த வருடங்களிலும் உத்தியோகபூர்வ இறையியலில் ஒருமித்த வளர்ச்சி காணப்பட்டது. எனினும் உத்தியோகபூர்வமான கருத்தமைவுச் சாதனங்கள் தேரவாதத்தின் நடைமுறைகளையும், கருத்துக்களையும் பின்பற்றுமாறு கூறின. ஆகவே தேரவாதமானது நடைமுறையில் 'அசலான' போதனைகளாக இல்லாது உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட, அதனது கருத்தமைவுப் பொருளமைதி களையும் விளக்கங்களையும் கொண்ட அரச மதத்தின் தொகுதியாக இருந்தது.

அத்தியாயம் : எட்டு

ஒரு மைய அரசின் பரிணாமமும் பன்மத சமூக நிறுவனங்களின் எழுச்சியும் ஆக்ககால வளர்ச்சி தொடர்பான சாசனவியல் மூலங்கள் ஊடான சிறப்பாய்வு

இலங்கை வரலாற்று வளர்ச்சியை ஆராய்ந்த வரலாற்றாசிரியர்கள் அதனை அநுராதபுரக் காலப்பகுதி, பொலனறுவைக் காலப்பகுதி, தம்பதெனியாக் காலப்பகுதி, பின்னர் யாப்பகூவ, கம்பளை, கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என வகுத்து நூல்கள் எழுதியுள்ளமையைக் காணலாம். இவ்வாறான காலப் பகுப்பானது தலைநகரங்களை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டனவாகும். தலைநகரங்களை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றுக்காலப் பகுப்பானது வரலாற்று எழுத்தியலில் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தாலும் கூட, இலங்கைத் தீவின் வரலாற்று வளர்ச்சிப் போக்கினை ஓர் ஒழுங்கில் அமைத்துக்கொள்வதற்கு அவை உதவுவதாகக் கொள்ளமுடியும். அநுராதபுரம் இலங்கையின் தலைநகரமாக முழுஅளவில் செயற்பட்டகாலம் கி.பி. 1ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து வந்த காலப் பகுதியாகும். கி.பி. 1ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட காலகட்டத்தில் இலங்கையின் வரலாற்று வளர்ச்சியானது இலங்கை முழுவதிலும் பரந்து காணப்பட்ட சிற்றரசுகளின் வரலாற்று வளர்ச்சிப் போக்கினை மிகத்துல்லியமாக எடுத்துக்காட்டும் வரலாற்று மூலாதாரமாக எமக்கு கிடைப்பவை ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்களாகும். இவை கி.மு.5 ஆம் நூற்றாண்டிலிருந்து உயர்வலயப் பிராந்தியம் முழுவதிலும் பரந்து காணப்படுகின்றன.

பொதுவாகச் சாசனமூலங்களானவை பிற எழுத்தாதாரங் களுக்கு இல்லாத சில முக்கிய பண்புகளைக் கொண்டு விளங்குவதனைக் காணலாம். இலக்கிய ஆதாரங்கள் அவை எழுதப்பட்ட காலத்திலிருந்து காலத்திற்குக்காலம் பிரதி செய்யப்படும்பொழுது மாற்றமடைந்து சென்று, புதிய அடைச்சொருகல்கள் பலவற்றையும் இணைத்துக் கொண்டு புதிய வடிவிலே நமக்குக் கிடைக்கின்றன. இவ்வாறு புதிய வடிவிலே கிடைக்கும் இலக்கிய மூலகங்களில் அவ்வாறே, அவை குறிப்பிடுகின்ற வகையிலே வரலாற்றைக் கொண்டிருக்கும் முறையில் ஏற்றுக்கொள்வது என்பது வரலாற்றுத்திரிபாக மாறிவிடும். அவ்வரலாற்றினை திரிபின்றி எடுத்துகாட்டுவது அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கமாட்டாது. ஆனால் சாசனவாதாரங்களோ அவை பொறிக்கப்பட்ட காலத்திலிருந்து அழிந்து, ஒழிந்து போனவற்றை விட, எஞ்சியவை இடைச் செருகலின்றி எமக்குக்

கிடைக்கின்றன. ஒரு காலத்துப் பண்பாட்டிற்குரிய மக்கள் வாழ்வில் புழக்கத்திலிருந்து வந்த வரிவடிவம், மொழி, பதவிநிலை, சமூக அந்தஸ்து, நிறுவனங்கள் போன்றவற்றைத் தாங்கிய வண்ணம் அச்சாசனங்கள் எமக்குக் கிடைப்பதனால் அவை அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றுக்குரிய மூலங்களாகத் திகழ்கின்றன. இவற்றிற்கும் மேலாக அச்சாசனங்கள் பொறிக்கப்பட்ட நோக்கம் பெருமளவுக்குச் சமய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட தானங்களைப் பதவுசெய்யும் நோக்கமாக அமைவதினால், சமகாலத்து சமய வளர்ச்சி நிலை பற்றியும், அவை சார்ந்த சமூக நிறுவனங்கள் பற்றியும் அறிந்து கொள்வதற்குச் சாசனங்கள் பெருமளவிற்கு உதவுகின்றன.

சாசன ஆதாரங்கள் (பெரும்பாலும்) பொறிக்கப்பட்டதன் நோக்கமானது பிற ஆதாரங்களின் நோக்கத்திலிருந்து வேறுபடுவதனைக் காணலாம். வரலாற்று இலக்கியங்களில் மன்னன் பற்றிக் கூறும் பாடல்கள் அவனுடைய நாடு, மதச்சிறப்பு, பொதுப்பணிகள் பற்றிக் குறிப்பிடும்போது எழுதுபவருடைய சார்புத் தன்மையின் நோக்கம் அத்தகைய இலக்கிய மூலத்தினது நோக்கத்தினையே மாற்றிவிடும். இதனால் அவற்றில் எழுதப்பட்டவை எப்பொழுதுமே சரியானவையாகவோ, உண்மையானவையாகவோ இடமபெறாது போகலாம். குறிப்பாக மன்னனுடைய புகழை எடுத்துக்கூறும் நோக்குடன் எழுந்த நூல்கள் மன்னனுடைய சிறப்பினை மிகைப்படுத்தி குறைகளை மறைத்து விடுவதோடு, பகைவரின் திறமைகளையும் மறைத்து விடுகின்ற தன்மையைக் காணலாம். ஆனால் சாசனங்களோ அவ்வாறான ஒரு நோக்குடன் பொறிக்கப்பட்டவை அல்ல. அவை பெரும்பாலும் தானமாக வழங்கப்பட்ட குறிப்புக்களைப் பதிவுசெய்யும் பொருட்டோ அல்லது சில நிகழ்வுகளைப் பொறிக்கும் பொருட்டோ உருவாக்கப்படுகின்றன. அவ்வாறான பதிவேடுகளை அவை பொறிக்கப்பட்டபொழுது தற்செயலாக அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு விடயதானங்களும் இணைக்கப்பட்டமையைக் காணலாம். சாசனங்கள் பொறித்து வைக்கப்பட்டதும் அத்தகைய தகவல்களை பிற்சந்ததியினருக்காக பொறித்து வைக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டு பொறிக்கப்பட்டனவாகக் காணப்படவில்லை. இவ்வாறு இருக்கையில் அரசியல் செய்திகள் மிகைப்படுத்தப்பட்டோ அல்லது நடைபெறாத ஒரு சம்பவத்தைச் சேர்ப்பதாகவோ அல்லது நீக்குவதாகவோ அச்சாசனப் பொறிப்பின் நோக்கம் அமைய முடியாது என்பது தெளிவாகின்றது. அந்தவிதத்தில் சாசன மூலங்கள் ஏனைய வரலாற்று மூலங்களைவிட மிகக்கூடுதலான நம்பகத் தன்மையைக் கொண்டிருப்பதனைக் காணலாம். எனினும் மத்தியகாலத்தில் எழுந்த பிரஸஸ்திசாசனங்கள் (மெய்க்கீர்த்திச் சாசனங்கள்) சற்று வேறுபட்ட ஒரு நோக்கவிதானததிலிருந்து பொறிக்கப்பட்டனவாகக் காணப்படுகின்றன. இலக்கிய மூலாதாரங்களில் இடம்பெறக்கூடிய சில குறைபாடுகள் இவ்வகையான மெய்க்கீர்த்திச் சாசனங்களிலும் இடம்பிடித்துக்கொள்வதனையும் காணலாம்.

பொதுவாக ஈழத்தில் கிடைக்கும் ஆதிப்பிராமிச் சாசனங்களை கால அடிப்படையில் ஒழுங்குபடுத்தி ஆராய்ந்தால் இத்தீவின் எல்லாத் துறைகளிலும்

ஒரு வகையான படிமுறை வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டு சென்றமையைக் காணலாம். அவ்வகையில் இலங்கைத்தீவின் ஆக்ககாலத் தொடக்கத்தில் அரசன், அரசு, அரசாட்சி போன்றனவற்றின் உருவாக்கத்தினை நாடளாவிய ரீதியில் கரையோர மாகாணங்களில் காணக்கூடியதாகவுள்ளது. இலங்கையின் வடக்கில், நாகதீபம், மேற்கில் கல்யாணி, தெற்கில் மகாகமை, கிழக்கில் தீகவாபி போன்றவை கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்தே சிற்றரசுகளாகப் பரிணமித்து, வளர்ச்சியடைந்து கொண்டு சென்றமையினையும், அவை பின்னர் கி.பி. 1ஆம் நூற்றாண்டளவில் அநுராதபுர இராச்சியத்துடன் இணைந்து கொண்ட தன்மையையும் காணலாம். ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு ஆராயும்போது கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட சாசனமொன்றில் மஹரஜ என்ற ஒரு சொல் காணப்படவதனை அறிய முடிகிறது. அவ்விருதினைத் தாங்கிய மன்னன் அநுராதபுரத்தில் இருந்து அரசு செய்தான் எனக் கொண்டாலும், அநுராதபுரத்திலிருந்து சிறிது தூரத்திலேயே ரஜ என்ற விருதினைத் தாங்கிய சிற்றரசர்கள் ஆட்சி புரிந்த அரசுகள் பல தோன்றி இருந்தமையை அப்பிராமிச் சாசனங்கள் ஊடாகவே அடையாளம் காணமுடிகிறது. அச் சிற்றரசுகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து கி.பி. 1ஆம் நூற்றாண்டளவில் அச்சிற்றரசுகள் பற்றிய குறிப்புக்கள் பிராமிக் கல்வெட்டுப் பொறிப்பினின்றும் மறைந்து விடுவதனைக் காண்கின்றோம். அவ்வாறே மற்றைய சிற்றரசுகள் பிரதான அரசுகளான அநுராதபுரம், ரோகணம், நாகதீபம் ஆகியனவற்றுள் உள் விழுங்கப்பட்டு, உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டினுள்ளும் அதன் விளிம்பான பூநகரியிலும் சிற்றரசுகள் இருந்த தன்மையை அண்மைக் காலங்களில் கிடைத்த தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் வாயிலாகவும், வேறு தொல்லியற் சின்னங்கள் வாயிலாகவும் உறுதிப்படுத்த முடிந்துள்ளது. கிறிஸ்தவ சகாப்தத்தின் முன்னரைக் காலப்பகுதியிலும், பின்பும் தமிழகத்தில் இருந்திருக்கக்கூடிய அரச குலங்களையொத்த வகையில், யாழ்ப்பாணக் குடாநாட்டினுள்ளும் அதற்கு வெளியேயும் வேளிர் நாகர் (குறுநாகர்), பூநாகர்) போன்ற வம்சங்களின் இருப்பிற்கான தமிழ்ப் பிராமி மட்பாண்டச் சாசனங்கள் கிடைத்துள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரையில் அதன் வறண்ட பிரதேசத்தின் தென்பகுதியில் பிராமி வரிவடிவில் பொறிக்கப்பட்டுக் கிடைத்த ஆதிச்சிங்கள மொழிக்குரிய கல்வெட்டுக்களும், வடபகுதியில் பிராமி வரிவடிவில் பொறிக்கப்பட்டுக் கிடைத்துக் கொண்டிருக்கும் ஆதித்தமிழ் மொழிக்குரிய மட்பாண்டச் சாசனங்களும், இருமொழிப் பிரயோகத்தில் வாழ்ந்த ஒரே பண்பாட்டுப் பகைப் புலத்திற்குட்பட்ட சமூக மக்களின் சமய, பொருளாதார நிறுவனங்கள் பற்றிய பல தகவல்களைத் தருபவையாகக் காணப்படுகின்றன. தமிழகத்திற்கு அண்மையில் யாழ்ப்பாணக் குடாநாடும், அருவியாற்றிற்கு வடக்கே இராமேஸ்வரம் - தலைமன்னார் நிலப்பரப்பும் அமைந்திருந்த புவியியல் நிலை காரணமாக இங்கு ஆதித்தமிழ்ப் பிராமி வரிவடிவ உபயோகத்தின் தொழிற்பாட்டினை மட்பாண்டச் சாசனங்கள் ஊடாகவே வெளிப்படுத்தப்பட்டிருந்தமையினை அப்பிரதேசங்களிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட

மட்பாண்டப் பொறிப்புக்களிலிருந்து காணமுடிகிறது. பூநகரி, ஆனைக்கோட்டை, கந்தரோடை, வரணி, வல்லிபுரம் ஆகியன அவ்வகையான பிராமிச் சாசனச் சான்றுகளை வழங்கியுள்ளன.

இலங்கையிற் கல்வி (Education in Ceylon) என்ற நூலின் முதலாம் பாகத்தில் இடம்பெற்றுள்ள பண்டைக்காலப் பொறிப்புக்கள் என்ற கட்டுரையில் பின்வருமாறு இடம்பெற்றுள்ள செய்தி வரலாற்று மாணவர்களுக்கும் இன்றியமையாததாகும். அது பின்வருமாறு:

இலங்கைத் தொல்பொருள் ஆய்வு, அகழ்வு ஆகியவற்றில் முன்னோடியும், இடையறா முயற்சியாளருமாயிருந்த பிரத்தானிய அறிஞர் H.C.P. பெல் என்பவர் இலங்கையிலேயே அந்நாள் வரையும் கவனிக்கப்படாது விடப்பட்ட இப்பண்டைக்கால கலாச்சார தேசிய சாதனைகளின் சின்னங்களில் அடங்கிய வரலாற்றுச் செல்வத்தின்பால் உலகத் தொல்பொருள் ஆய்வாளரின் கவனத்தை ஈர்த்தார். அவர் தொல்பொருள் ஆய்வு ஆணையாளர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற காலத்தளவில் நாடெங்கணும் பரந்து காணப்பட்ட ஈராயிரத்துக்கு மேற்பட்ட பொறிப்புக்களைப் பட்டியற்படுத்தி அவற்றின் பதிவுகளையும், கண்படிகளையும் (மைப் பிரதிகளையும்) பெற்றுக்கொண்டார். அவருக்குப் பின் பதவியேற்ற பரணவிதான இவ்வாறு புதைந்து மறைந்திருந்த மிகப் பல செல்வங்களை வெளிக்கொணர்ந்தார்.

இலங்கையில் பொறிப்புச் செல்வங்கள் மரபுவழிக் கதைகளை ஒட்டியவை எனவும் 2250 ஆண்டுகாலத்திற்குரியவை எனவும் கூறலாம். வடமத்திய, வடமேல், தென்மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு குகையும் பெரும்பாலும் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொறிப்புக்களைக் கொண்ட ஓர் அரும்பொருட் குகையாகும். இப்பொறிப்புக்களுட் பல பாதுகாப்பான நன்னிலையில் உள்ளன. காலம் புறங்கண்டு நிலைத்த இப்பொருட்கள், படையெடுப்பாளர், திரவியம் தேடுவோர், வீடு கட்டுவோர் ஆகியோரின் அழிவுவேலைக்குத் தப்பிப் பிழைத்தன என்பது குறிப்பிடத்தக்கது. கிறிஸ்துவின் காலத்திற்கு உடனடியாக முற்பட்டதும் உடனடியாகப் பிற்பட்டதுமான நூற்றாண்டுகளில் இலங்கைப் பொறிப்புக்கள் குகைகளின் வடிவிளிம்புகளில் செதுக்கப்பட்டன.

கல்வெட்டுப் பொறிப்புக்களைப் பற்றி ரொபேட் நொக்ஸ் என்பவர் குறிப்பிடுகையில் இங்கே பண்டைக்கால எழுத்துக்கள் சில பார்ப்போர் அனைவரும் கவனிக்கும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளன. வடபகுதிகளிலும் கந்த உடவின் பல்வேறு பகுதிகளிலும் பல பெரிய பாறைப் பொறிப்புக்கள் உள. அப்பாறைகளிலே சில யார் தூரத்திற்கு பெரிய எழுத்துக்கள் ஆழமாகச் செதுக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடுகின்றார்.

கி.பி. 4ஆம் நூற்றாண்டிலிருந்து வைரம் குறைந்த கற்களும், வைரக் கற்பாறைக் கற்களும் சில வேளைகளில் பளிங்குதன்மை கொண்ட கற்களும், சுண்ணாம்புக் கற்களும் கல்வெட்டுக்கள் பொறிக்கும் பொருட்டு

உபயோகிக்கப்பட்டன. இத்துடன் பொறிப்பு அமைப்பிலும் மாற்றம் ஏற்பட்டது. கல்வெட்டுவோர் கூடுதலாக பாறைகள், தூண்கள், துண்டங்கள், பீடங்கள், காப்புக்கற்கள், பாவுபடிகள், சந்திரவட்டக் கற்கள், முதலியனவற்றை பொறிப்புக்காகப் பயன்படுத்தினர். பொறிப்புக்கள் செதுக்குவதற்கு பயன்படுத்திய கருவிகள் செதுக்கப்படும் பொருளின் தன்மைக்கேற்ப வேறுபட்டன. அவற்றுட் பொதுவானது கூரிய அலகுள்ள ஒருவகை உளியாகும். பல சந்தர்ப்பங்களில் பொறிப்புக்கள் வைரமான பாறைகளில் கூரிய முனையுள்ள சுத்தியாலேயே தொடர்ச்சியாக அடித்துச் செதுக்கப்பட்டன என்பதனைக் காட்டுகின்றன. பண்டைப் பொறிப்புக்களில் பல மிக நுட்பமாக செதுக்கப்பட்டமைக்குச் சான்றாக அமைந்துள்ளன. பிற்காலப் பொறிப்புக்கள் கைதேர்ந்த கல்வெட்டுக்காரரினால் செதுக்கப்பட்டன என்பது தெளிவாகத் தெரிகின்றது. அமைப்பு முறையும் இடத்துக்கிடம் வேறுபட்டுள்ளன.

எமது வரலாற்றிற்குரிய பெறுமதிவாய்ந்த பெருந்தொகையான ஆதாரம் எமது கற்பதிவேடுகள் என்பதில் ஐயமில்லை. இந்தியப் பொறிப்புக்களை வெட்டுவித்தோர் மன்னராயிருக்க,இலங்கைப் பொறிப்புக்களை வெட்டுவித்தோர் பொதுமக்களாயிருந்தனர். இந்தியாவில் அசோகனின் கல்லாணைகளின் பொருளடக்கங்கள் புத்தர் விதித்தவாறு தருமத்தை நடைமுறையில் செயற்படுத்துதல் சம்பந்தமானவையே. புத்தரின் போதனையைப் போன்று மனித சமுதாயத்தில் மிகுதியான தாக்க விளைவுகளை உண்டாக்கிய வேறொன்றைக் காண்பதரிது. நற்காட்சி, நல்லூக்கம், நல்வாய்மை போன்ற எண்பெரும் கடமைகளையும் நிறைவேற்ற வழிகாட்டும் பழதிலா வாழ்க்கை நெறியினையும் அமைப்பது பற்றி அசோகன் தனது அரும்பெரும் கருத்தினை கற்பொறிப்புக்கள் மூலம் தன் குடியினருக்குப் பிரகடனம் செய்தான். இன்னும் சுருக்கிச் சொன்னால் நல்லுபதேசங்களைப் பொறிப்பித்தான் எனலாம். ஆனால் இலங்கைக் கல்வெட்டுப் பொறிப்புக்களை நோக்கம்போது அவை மிகவும் சுருக்கமாகக் காணப்படுவதோடு அவற்றுள், பெரும்பாலானவை சங்க உறுப்பினருக்கு உறையுள், நன்கொடை வழங்குவதாகவும் அமைந்துள்ளன. எனவே பொருளடக்கத்தைப் பொறுத்த வரையில் அசோகனது பொறிப்புக்களும் இலங்கைப் பொறிப்புக்களும் வேறுபடுகின்றன. ஆனால் மொழியைப் பொறுத்தவரையில் இரண்டும் ஒன்றாகவே காணப்படுகின்றது. பொறிப்புக்களிலுள்ள மொழியும் எழுத்துமுறையும் அசோகனின் பொறிப்பு மொழியை ஒத்தன. இக்காலத்து இலங்கையின் பிரச்சினைகள் இதே காலத்தில் இந்திய அரசர் எதிர்நோக்கிய பிரச்சினைகளைப் பெரிதும் ஒத்திருந்தன. ஆயினும் சில விடயங்களில் இவை வேறுபட்டன. அசோகனின் சமகாலத்தவனான தீசன், அசோகன் அனுப்பிய தருமப்போதனையை இலங்கையில் வரவேற்ற அரச குலத்தினன் ஆவான் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் வரலாற்றிலக்கியம் சார்பாக மட்டுமன்றி நாட்டின் பொறிப்புக்கள் சார்பாகவும் குகைகள் முக்கியம் பெறுகின்றன. மிகிந்தலையிலும், வெஸ்ஸகிரியிலும் உள்ள குகைகள் மிகப் பழங்காலத்திலேயே பௌத்த

சங்கத்திற்கு அர்ப்பணம் செய்யப்பட்டவை என்பது பொறிப்புக்களிலிருந்து தெரியவருகின்றது. மகிந்தரின் வருகையின் பின் தேவநம்பியதீசன் மிகிந்தலையில் மாத்திரம் 68 பாறை உறைவிடங்களை அமைத்தான் என அறியக்கூடியதாக உள்ளது.

இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களைப் பற்றிய ஓர் ஆய்வுக் கருத்தரங்கு தென்னிந்தியாவிலுள்ள தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் இந்திய கல்வெட்டியல் சங்கத்தின் 17ஆவது ஆண்டு மாநாட்டில் நடாத்தப்பட்டிருந்தது. அம் மாநாட்டில் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட பல கருத்துக்களையும் இங்கு மாணவர்களின் பயன் கருதி மிகவும் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டிய தேவை உள்ளது.

"இலங்கையும் இந்தியாவும், சிறு கடற்பரப்பால் பிரிக்கப்பட்டிருந்தாலும் தொடர்பறாத அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு உறவுகளால் பிணைக்கப்பட்டு இருந்து வருவது வரலாற்று உண்மையாகும். இந்தியாவைப் போலவே இலங்கையிலும் இதுவரையில் கண்டறியப்பட்ட சான்றுகள் அடிப்படையில் பிராமி எழுத்து வடிவமே தொடக்கத்திலிருந்து இருந்து வந்துள்ளது. இந்தியாவில் தெற்கு முதல் வடக்குவரை பிராமி எழுத்துமுறை பரவி நிலவியது. இருந்தாலும் தென்பாண்டி நாட்டுப் பிராமி காலத்தால் முந்தியது. இலங்கையில் தொடக்கத்தில் வழங்கிய பிராமி தென்பாண்டி நாட்டில் வழங்கிய பிராமி வரிவடிவமே ஆகும். அநுராதபுர உள்நகர அகழ்வாய்வில் கிடைத்த பிராமி வரிவடிவங்கள் மிகவும் பழமையானவை, தென்பாண்டி நாட்டுப் பிராமி வரிவடிவத்தினை ஒத்தவை, அசோக பிராமி வரிவடிவத்தினின்றும் வேறுபட்டவை. அவற்றின் காலத்தினை இலங்கையில் மிக அதிகமாக முற்படுத்திக் கூறினாலும், அவை கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட முடியாது. இலங்கையிடம் இந்த எழுத்துமுறையை தென்பாண்டி நாடு கடன் பெற்றதா அல்லது இலங்கை தென்பாண்டி நாட்டிடம் கடன்பெற்றதா என்ற வினா எழுகின்றது. இது மேலும் ஆய்வின் மூலம் தீர்க்கப்படவேண்டும் (ஆசிரியர் குறிப்பு: விஜயன் கதைபற்றிய ஐதீகத்தில் விஜயன் தென்பாண்டி நாட்டு இளவரசியை இலங்கைக்கு வருவித்து திருமணம் செய்துகொண்ட செய்தியும், அவனது தோழர்களும் அவ்வாறே தென்பாண்டி நாட்டிலிருந்து பெண்களைக் கொண்ட செய்தியும் குறிப்பிடப்படுவது இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகின்றது).

இலங்கை - தென்னிந்தியப் பிராமிக் கல்வெட்டுக்கள் வரிவடிவங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தில் காலஞ்சென்ற செ. பரணவிதானாவினால் 'ள' என்ற எழுத்து வரும் பிராமிக் கல்வெட்டுக்களில் அவர் 'லு' என்று படித்திருப்பது மிகப் பெரும் தவறாகும். இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் வேள் என்ற சொல்லைப் பரணவிதான வேலு என்று ஆட்பெயராக படித்திருக்கின்றார். இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் வேலு பற்றிய பரணவிதானாவின் வாசிப்பானது ஒரிடத்தில் ஒரு பெண்ணுக்குரியதாகவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. வேலு என்ற பெயர் ஒருபோதும் பெண்ணுக்குப் பொருந்தாது. அது வேளேயன்றி

வேறொரு பதத்தினையும் குறிக்கவில்லை. (வேள் என்ற சமூகக் குழுமப் பெயரானது கி.மு. 3ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணக் குடாநாடு, பூநகரி உள்ளிட்ட தென்னிந்தியப் பரப்பில் பிராமிச் சாசனங்களினூடாகவும், சங்க இலக்கியங் களினூடாகவும் பரவலாக அறியப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது) இந்த வேள் என்ற குழுமப் பெயர் கொண்டவர்களுக்கும், ஆய் என்ற குழுமப் பெயர் கொண்டவர்களுக்கும் நெருக்கமான உறவு இருந்திருக்கிறது. இவர்களைப் பற்றிய குறிப்புக்களும் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் உண்டு. இந்த இரண்டு குழுவினரும் கமத்தொழில் வளர்ச்சிக்கும், பொதுவாகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமுதாயத்தில் பெரும்பங்காற்றியுள்ளனர். வடமொழிச் சொல்லான ராஜ் என்பதற்கு பிரகாசித்தல் ஒளிர்தல் என்று பொருள். அதுபோல் திராவிட முன்னிலை மொழியிலும் வேள் என்றால் மூப்பன் நிலைக்கு உயர்ந்தவராவர். சமகாலத் தென்னிந்தியாவில் அவர்கள் அரசர்களாக, சிற்றரசர் களாக இருந்துள்ளனர். மகாவம்சமும், ஜனபத என்ற சொல்லைப் பாவித்துள்ளது. ஜனபத என்பது குழுமங்களின் நிலைக்களமாக விளங்குவதாக விளக்கம் தரப்பட்டுள்ளது. வேளிர் இலங்கையில் அரசியல் செல்வாக்குள்ள அதிகார நிலைக்கு உயர்ந்துள்ளனர். அவர்களது பங்கு பணிகளை இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களை விரிவாக ஆராய்வதன் மூலம் (வரலாற்று) வெளிச்சத்திற்குக் கொண்டுவரமுடியும்.

இலங்கையின் வட, வடமேற்குப் பகுதியில் மகாஓயா ஆற்றுக்கும் கலாஓயா ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியை எடுத்து வரலாற்று முன்னிலைக்கால வரலாற்று வளர்ச்சியை நோக்கும்போது குறுணிக்கற்காலத்திலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டிற்கு திடீரென (மக்கள் வாழ்வில்) மாற்றம் எற்பட்டதைக் காணமுடிகிறது. அதனால் சிறு பொருளாதார வலயங்களிலிருந்து பெரும் பொருளாதார வலயங்கள் உருவாகின. இங்குள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் பருமக என்ற பட்டம் பெற்றவர்களை பரணவிதானா இந்தோ - ஆரிய மூப்பன்கள் என்று குறிப்பிட்டமையானது தவறாகும். அதே சமூகநிலை தென்னிந்தியாவிலும் சமகாலத்தில் இருந்தமையைக் காணலாம். இவர்கள் தென்னிந்தியாவில் கரும் - செம்மட்பாண்டங்களைப் பயன்படுத்திய பெரும் கற்காலப் பண்பாட்டைக் கொண்டவர்களின் வழித்தொன்றல்களேயாவர். இவர்கள் இந்தோ - ஆரியச் செல்வாக்கு ஏற்படுவதற்கு முன்னரே இலங்கையில் வாழ்ந்திருக்கின்றார்கள் (இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படும்) பருமக பட்டம் சூடியவர்கள் இங்கு பரந்துபட்டு வாழ்ந்திருந்தனர். அவர்கள் சமுதாய பொருளாதார, முன்னேற்றத்திற்குப் பெரும்பங்காற்றியுள்ளனர். தென்னிந்தியாவில் செல்வாக்குடன் இருந்த சமூகக் குழுக்களான நாககுலத்தினர், பரதவர், வேள், ஆய் போன்றவர்கள் இலங்கையிலும் அதே செல்வாக்குடன் வாழ்ந்துள்ளனர். பௌத்தம் இலங்கைக்கு வருமுன் சமண - பௌத்த துறவிகளும் இலங்கையில் வாழ்ந்துள்ளனர். இந்தக் குழுக்களின் வழிவழி முன்னேற்றம் சமுதாய மாற்றத்திற்கும், அரச அமைப்பிற்கும் வழிவகுத்தது. இவர்களுடைய சமுதாயப் பங்கு - பணிபற்றி பிராமிக்கல் வெட்டுக்களின் ஊடாக பெருங்கற்றால மையங்களின் துணைகொண்டு விரிவாக ஆராயமுடியும்.

இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களின் மொழியில் வரும் சொற்கள் சில அழகாகப் பொருள்தரும் சங்க இலக்கியங்களிலும், ஏனைய இலக்கியங்களிலும் நிகண்டுகளிலும் இடம்பெற்றுள்ளன. சொற்கள் மட்டும் மொழியை நிர்ணயிக்க முடியாவிடினும், இந்தியாவில் சமகாலத்தில் தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பிராகிருதமே வழக்கிலிருந்தது. தமிழ்நாட்டில் தமிழ்மொழியே வழங்கியது. அதே காலகட்டத்தில் தென்னிந்தியாவிலும் இலங்கையிலம் பெருங்கற் பண்பாடே நிலவியது. இலங்கையில் தென்னிந்தியப் பிராமி எழுத்து முறையே இருந்தது. தொல்லியல் ரீதியாக இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியாகவே கொள்ளலாம். பல்துறைச் சான்றுகளின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தை எடுக்கும்போதுதான் அது வலுவாக விளங்குவதை - யதார்த்தமாக அமைவ தனைக் காணமுடியும். இந்த அடிப்படையில் தென்னிந்தியாவிற்கும், இலங்கைக்கும் ஒரு பொதுவான மொழியடித்தளம் இருந்ததாகக் கொள்ளலாம். அதாவது சமண, பௌத்த பிராகிருதங்களின் வருகைக்கு முன்பதாக அம்மொழியின் அடித்தளம் இருந்து வந்துள்ளது. இலங்கையின் தமிழ், சிங்கள மொழிகளில் அம்மொழியின் அடித்தளம் நின்று நீடித்து வருவதனையும் காணலாம். இதனைக் காண்பதற்கு இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் மிக அழமாக ஆராயப்பட வேண்டும்.

இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் சமண, பௌத்த மதச் செய்திகளுடன் நிற்கவில்லை, சங்க இலக்கியங்களில் காணப்படும் சமூகக் குழுக்கள் இலங்கைச் சமுதாய வளர்ச்சியில் பெற்றிருந்த நிலையையும் பங்களிப்பையும் கூடக் கூறுகின்றன. வழிவழி வளர்ந்து அரசு அமைத்த சமூகக் குழுமங்கள் பற்றியும், அரசு வளர்ச்சி பற்றியும், பிற வரலாற்று மூலங்களையும் தருகின்றன. இதே காலத்திய தமிழ் நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்களில் இத்தகைய செய்திகள் இல்லை. சங்க இலக்கியங்கள் கூறும் அரச பரம்பரைகளை உறுதிசெய்யும் அளவிற்கே அவை பயன்படுகின்றன. அந்தளவில் பார்க்கும்போது தமிழ்நாட்டுச் சமுதாய அரசு வளர்ச்சி பற்றிய சங்க இலக்கியக் கூற்றுக்களுக்கும், இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் ஆதாரம் கிடைப்பது தெளிவாகின்றது. இலங்கையின் தென்கோடியிலுள்ள தெய்வந்துறை முதல் இந்தியாவின் வடமேற்குக் கோடி முனைவரையுள்ள ஆப்பானிஸ்தான் எல்லைவரை பிராமி எழுத்து அக்கால கட்டத்தில் வழக்கில் இருந்துள்ளது. இதனால்தான் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பணப்புழக்கமும், பரந்தளவு வழக்கில் ஓர் எழுத்துமுறையும் இருந்ததால் விரிவுபட்ட வணிகத்திற்கு வழிவகுத்தது. செங்கடல் துறைமுகங்களிலிருந்து பருவக்காற்றின் உதவியுடன் அரபுக்கடலைத் தாண்டிச் சென்ற ரோமக் கப்பல்கள் தென்னிந்திய அரசுகளான சேர,சோழ, பாண்டிய அரசுகளின் துறைமுகங்களுக்கு கி.மு. 1ஆம் நூற்றாண்டு காலத்திலிருந்து சென்று வந்தன. இங்கு ரோமர்கள் வர்த்தக வலையங்களை அமைத்துக் கொண்டனர். வகைவகையான துணிகள், வாசனைப் பொருட்கள், இரத்தினக்கற்கள் முதலான பண்டங்கள் எகிப்திற்கு எற்றப்பட்டு பின்பு அங்கிருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்று ரோமிலா தாப்பரினால் குறிப்பிடப்பட்ட இச்செய்தியை சேர் ஜராவதம் மகாதேவன்

எகிப்திலிருந்து கண்டுபிடித்த தமிழ்ப் பிராமி மட்பாண்டச் சாசனங்கள் வாயிலாக மிக அண்மையில் நிரூபித்துள்ளார். இதேபோன்று தமிழ்நாட்டில் அரிக்க மேட்டுப் பரப்பிலிருந்து கண்டு கொள்ளப்பட்ட சிங்களப் பிராமிச் சாசனங்களைக் கொண்ட மட்பாண்டங்களை எடுத்துக்காட்டி எவ்வாறு ரோமாபுரி வர்த்தக வலைப்பின்னலின் பின்னணியில் பிராமி வரிவடிவ உபயோகத்துடன் தொடர்புபட்ட தென்னாசிய மொழி வழக்கு இப்பிராந்தியங்களில் பயன்படுத்தப்பட்டு இருந்தது என்பதனையும் ஐராவதம் மகாதேவன் நிறுவியுள்ளார்.

இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் கல்வெட்டியல் இயக்குனர் கலாநிதி மாலினி டயஸ் தனது இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களின் தன்மையும், பொருளடக்கமும், என்ற கட்டுரையில் பல புதிய தகவல்களை வழங்குவதனைக் காணலாம். இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களை மூன்று பிரிவுகளாக வகுத்து இவர் ஆராய்ந்துள்ளார். அவையாவன: 1) பழைய பிராமிக் கல்வெட்டுக்கள் 2) பிற்பட்ட காலத்தவை 3) நிலைமாறு காலத்திற்குரியவை என்பவையே அவையாகும். பழைய பிராமிக் கல்வெட்டுக்கள் அசோக பிராமி வரிவடிவத்தினைக் கொண்டவை. அவை மிக்க குறுகியவையுமாகும். அவை பௌத்த துறவி களுக்கான நன்கொடைகளைக் குறிப்பனவாகவேயுள்ளன. பிற்பட்டகாலத்து பிராமிச் சாசனங்கள் சற்று நீளமானவை. இந்திய செல்வாக்கிற்குட்பட்ட எழுத்து வடிவம், உறைவிடம், விகாரம், விகாரப்படிகள் கட்டுவது போன்ற செய்திகளைத் தருகின்றன. நிலைமாறு காலத்திற்குரிய பிராமிச் சாசனங்கள் மிக நீண்டிருப்பதுடன், செய்திகளைச் சற்று விரிவாகவும் தருகின்றன. அவற்றின் எழுத்தும் பல்லவகிரந்தச் செல்வாக்கிற்குட்பட்டு சிங்களமாக மாறும் நிலையைக் காட்டுவதையும், அமைந்துள்ளன. பல்லவ அரசர்களுடன் இலங்கை கொண்டிருந்த உறவால் இது ஏற்பட்டிருக்கலாம். பழைய இலங்கைப் பிராமி தென்னிந்தியப் பிராமியை ஒத்துள்ளவே தவிர அசோகப் பிராமியை அல்ல. பல்லவ கிரந்தச் செல்வாக்கிற்கு பல்லவர் காலத்தில் எழுந்த நாயன்மார் புரட்சியால் தமிழ்நாடு கேரளத்திலிருந்து சமணரும், பௌத்தர்களும் இலங்கையில் தஞ்சம் புகுந்ததும் முக்கிய காரணமாகும்.

பொதுவாக கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 4ஆம் நூற்றாண்டு வரைக்குமுள்ள காலப்பகுதியில் இலங்கையில் பிராமி வரிவடிவம் வழக்கிலிருந்தமையைக் காணமுடிகிறது. பொறிக்கப்பட்ட பிராமிச் சாசனங்களின் பொருள், அவை பொறிக்கப்பட்ட நோக்கம், அவை காணப்படும் பிரதேசம் அல்லது பிராந்தியம், அச்சாசனங்களின் உரிமம் (Authorship) போன்றன கிறிஸ்தவ சகாப்தத்திற்கும் பிற்பட்ட காலப்பகுதியில் பொறிக்கப்பட்ட பிராமி வரிவடிவ சாசனங்களிலிருந்து வேறுபடுகின்றன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியில் பௌத்தசமயம் இலங்கைக்கு அறிமுகமாகு முன்னர் சொத்து, உடமை, முதலியன தனியாள் குடும்பம் என்ற நிறுவனத்திற்கே உரித்தாக இருந்தமையை இப்பிராமிச் சாசனங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கிராமக் குளங்கள், நெல் வயல்கள், கால்வாய்கள், வழிபாட்டு மையங்கள் என்பன தனிப்பட்டோருடைய அல்லது

குடும்ப ரீதியான அலகின் உரிமமாக விளங்கி வந்துள்ளமையை அப்பிராமிச் சாசனங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பிராந்திய ரீதியில் 'வபிகமிக', 'அனிசக', 'மணிகர' என்று குறிப்பிடும் சொற்கள் முற்பட்டகாலப் பிராமிக் கல்வெட்டுக்களில் செறிந்து காணப்படுகின்றன. 'வபிஹமிக' எனப்படும் குளசசொந்தக்காரர் 'அனிசக' எனப்படும் கால்வாய் - வாய்க்கால் சொந்தக்காரர், 'மணிகர' எனப்படும் மணிவியாபாரி போன்றோர் அக்காலகட்டங்களில் பொருளியல் நிறுவனங்களுடன் இணைப்பினை ஏற்படுத்திய தனிநபர்களாகச் செயற்பட்டிருந்தனர். பௌத்தமதம் இலங்கைக்கு அறிமுகமான பின்னர் பௌத்த சங்கத்திற்கு தனிப்பட்டவர் பலரும் தமது சொத்து, உரிமம் முதலியனவற்றைத் தானமாக வழங்குவதனைக் காணலாம். பிராமண சமூகத்தினர், வணிக சமூகத்தினர், உழவர் சமூகம், பெண்கள் ஆகியோர் பௌத்த சங்கத்திற்கு பலவகையான தானங்களை வழங்கிய செய்திகளை கி.பி. 1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பிராமி வரிவடிவச் சாசனங்கள் பதிவு செய்துள்ளன. இக்காலகட்டத்தில் பப்ப்த, லேனக, கல்லக, கிரி எனக் குறிப்பிடப்பட்ட குகை வாழ்விடங்கள் பலவற்றையும் அம்மக்கள் குழுவினரே பௌத்த, சமண, ஆஜீவக மதத் துறவிகளுக்குத் தானமாக வழங்கிய செய்திகளையும் அப்பிராமிச் சாசனங்கள் பதிவு செய்துள்ளன. அவ்வகையான குகை வாழ்விடங்கள் மக்கள் பயிரிட்டு, வாழ்க்கை நடாத்தும் கிராமக் குடியிருப்புக்களிலிருந்து அப்பாலே, கிராமத்தின் முடிவில் காடு ஆரம்பிக்கும் பகுதியில் அமைந்திருந்தமையையும் அச்சாசனங்கள் எடுத்துக் காட்டுகின்றன. துறவிகள் மக்கள் வாழும் கிராமங்களில் நடமாடக்கூடாது என்ற ஒரு பொது விதி அக்காலகட்ட இலங்கை மக்கள் மத்தியில் இருந்திருக்க வேண்டும்.

கி. பி.1ஆம் நூற்றாண்டளவில் பிராமிவரிவடிவப் பொறிப்புக்கள் இன்னொரு வகையான படிநிலை வளர்ச்சியைத் தருவதனைக் காணலாம். அதாவது பௌத்த சங்கம் ஒரு சொத்துடைய நிறுவனமாக மாறிக்கொள்வதையும் சொத்துக்களைத தானமாக வழங்கும் நிலையில் மக்கள் தவிர்ந்த அரசநிறுவனமே ஈடுபட்டிருந்தமை யினையும் பதிவு செய்யப்பட்டிருந்தமையைக் காணமுடிகிறது. அதாவது அரச உருவாக்க முறைமை ஒன்று நிறுவனமாக வளர்ச்சிபெற்ற நிலையையும் மதம் அவ்வரசினது அரசணைப்புக்குள் அகப்பட்டு சுயபாதுகாப்பினை ஈட்டிக்கொண்ட ஒரு முறையினையுமே இக்காலப் பிராமிச் சாசனங்கள் எடுத்துக்காட்டுகின்றன. பிரதேச வாரியாகக் காணப்பட்ட ரஜ, நாகதீபராஜா போன்ற பெயர்கள் யாவும் வழக்கொழிந்து, மஹாராஜா என்ற பதம் மட்டுமே பரவலான உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்ட முறையையும் நன்கு காணமுடிகிறது. கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளில் காட்டுவாசிகளாக இதுவரையில் வாழ்ந்துவந்த மதத்துறவிகள் இப்பொழுது கிராமங்களையும் விட்டு, நகரங்களுக்குள் தத்தமது விகாரை களையும், குளங்களையும் ஸ்தூபங்களையும் அமைத்துக்கொண்டு நகரவாசி களாக மாற்றம்பெற்ற முறையை அப்பிராமிச் சாசனங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

நீர்ப்பாசன அடிப்படையிலமைந்த விவசாய அமைப்பின் படிப்படியான உறுதிப்பாட்டுடனும், மையப்படுத்தலுடனும், முற்கால இலங்கையின் அமைப்பு ஆரம்பித்தது. மையவாக்கம் காணப்பட்ட போதிலும், இறுதி அமைப்பில் பெருமளவு

பரவலாக்கமும், பிரதேச அலகுகளுக்குச் சுயாதிபத்தியமும் காணப்பட்டன. நில ஆட்சி, இறைவரி சேகரிப்பு, நீர்ப்பாசனத்திருத்த வேலைகள், பராமரிப்பு முறைகள் முதலியனவும் பரவலாக்கப்பட்டிருந்தன. எனினும் சிறப்பாகப் போர்க்கலங்களிலும் பாரிய வேலைகளிலும், மையமாக்கப்பட்ட கட்டுப்பாடும், ஒழுங்கமைப்பும் நிலவியது. அரசனையும் அவனது பிரதேச ஆளுநர்களையும் சுற்றி உருவாகிய பிரபுத்துவ வர்க்கத்திற்கும், விவசாயிகளின் பெருந்திரளுக்கும் இடையில் காணப்பட்ட பிரதான முரண்பாட்டைக் கொண்ட சமூக முரண்பாடுகள் நீர்ப்பாசன அடிப்படையைக் கொண்ட விவசாய அமைப்பில் காணப்பட்டன. மேலும் சாதியமைப்பின் சமூகப் பொறிமுறை, கைவினை, சேவைகள் ஆகியன வற்றின் மட்டத்தில் ஏனைய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிசமைத்ததோடு, உழைப்பில் சமூகப் பிரிவினையும் உருவாக இடமளித்தது. இவ்வமைப்பு வளர்ச்சிபெற்றபோது ஆளுவோருக்கும், நகரத்திற்கும், நாட்டுப் புறத்திற்கும் இடையிலான பிளவும் அதிகரித்தது. இதுவே கி.பி. 1ஆம் நூற்றாண்டிலிருந்து பௌத்த மதத்தில் ஏற்பட்ட புதிய பிரிவினைக்கும், அப்பிரிவினைச் சார்ந்த சமய, சமூக நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் வழிவகுத் திருந்தது எனலாம். மகாவிகாரை இடிக்கப்பட்டு, அபயகிரி விகாரை கட்டப்பட்டமை, கோக்கண்ணவில் (திருகோணமலையில்) சிவிசாலா இடித்தழிக்கப்பட்டமை போன்ற நிகழ்வுகளின் பின்னணியில் சமூகத்தில் காணப்பட்ட வர்க்க, நகர-கிராமிய ஆளுவோர்-ஆளப்படுவோர் என்ற கருத்துருவத்தின் தோற்றமே காரணமாக அமைந்தது. பௌத்தமத நிறுவனங்கள் சுதந்திரமாகவும், படிப்படியாகவும் வளர்ச்சியடைந்து வந்த நீர்ப்பாசன அலகுகளை தமது வளர்ச்சிக்கும், இருப்பிற்குமான கொழுகொம்பாகப் பற்றிக்கொண்டதன் விளைவாகவே அச்சமூக முரண்பாடு இவ்வாக்க கால இலங்கையின் இறுதிப்பகுதியில் தோற்றம பெற்றமைக்குக் காரணமாகலாம். (இதுவரை காலமும் பௌத்த மதமானது வட இந்தியாவிலும், தக்கணத்திலும் வளர்ச்சியும் செழிப்பும் கொண்டு விளங்கிய வாணிக மையங்களிலேயே வேரூன்றியிருந்தமையானது பின்னர் வாணிப மார்க்கங் களில் ஏற்பட்ட மந்தமும், வீழ்ச்சியும் காரணமுமாக பௌத்த மதமும் சீரழிந்து, வீழ்ச்சியடைய அடிப்படையாயிற்று. இந்த அனுபவநிலையே இலங்கையில் நீர்ப்பாசனப் பொருளாதாரத் தடத்தில் பௌத்தம் தன்னை இணைத்துக்கொண்டு, தனது வளர்ச்சி நிலையையும் உறுதிப்படுத்திக் கொண்டது, இதுவே. இலங்கையில் இச்சமூக முரண்பாடு தோற்றம் பெறுவதற்கு அடிப்படையாயிற்று).

நீர்ப்பாசன அடிப்படையிலமைந்த விவசாய அமைப்பின் படிப்படியான உறுதிப்பாட்டுடனும், மையப்படுத்தலுடனும் முற்கால இலங்கையின் அமைப்பு ஆரம்பித்தது. மையவாக்கம் காணப்பட்ட போதிலும் இறுதி அமைப்பில் பெருமளவு பரவலாக்கமும் பிரதேச அலகுகளுக்குச் சுயாதிபத்தியமும் காணப்பட்டன. நில ஆட்சி, இறைவரி சேகரிப்பு, நீர்ப்பாசனத் திருத்தவேலைகள், பராமரிப்பு முறைகள் முதலியனவும் பரவலாக்கப்பட்டிருந்தன. எனினும் சிறப்பாக போர்க்காலங்களிலும், பாரிய வேலைகளிலும் மையமாக்கப்பட்ட கட்டுப்பாடும், ஒழுங்கமைப்பும் நிலவியது. அரசனையும் அவனது பிரதேச ஆளுநர்களையும் சுற்றி உருவாகிய ஆளும்

'வர்க்கத்திற்கும்' விவசாயிகளின் பெருந்திரளுக்கும் இடையிலே காணப்பட்ட பிரதான முரண்பாட்டைக் கொண்ட சமூக முரண்பாடுகள் (மார்க்ஸிய ரீதியிலான) நீர்ப்பாசன அடிப்படை கொண்ட விவசாய அமைப்பில் காணப்பட்டன. மேலும் சாதி அமைப்பின் சமூகப் பொறிமுறை, கைவினை, சேவைகள் ஆகியவற்றின் மட்டத்தில் ஏனைய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழியமைத்து உழைப்பில் சமூகப்பிரிவினை உருவாக இடமளித்தது. இவ்வமைப்பு வளர்ந்தபோது ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும், நகரத்திற்கும் நாட்டுப் புறத்திற்கும் இடையிலான பிளவு அதிகரித்தது. அமைப்பில் உடைவையும் பிளவையும் ஏற்படுத்தும் அம்சங்கள் பலமாக நிர்வாகமுறையாலோ கொடுங்கோன்மை முறையாலோ தடுக்கப்படவில்லை. ஆனால் இவை பண்பாட்டு, கருத்தமைவுச் சாதனங்களாலேயே தடுக்கப்பட்டன. இக்கட்டுரையின் முற்பகுதியில் இக்கருத்தமைவு முறை எவ்வாறு மையத்திலும் (நகரம்) நாட்டுப் புறத்திலிருந்து கிராமம் வரையிலும் தொழிற்பட்டது என்பதை விரிவாக ஆராய்ந்துள்ளோம். மையவாக்க அமைப்பின் உருவாக்கத்திலும் அதனைப் பேணுதலிலும் எவ்வாறு கருத்தமைவுக் காரணிகள் முக்கியபங்கு வகித்தன என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளோம்.

நீர்ப்பாசன அமைப்பின் வளர்ச்சியும் உறுதிப்பாடும் மையவாக்க அரசின் வளர்ச்சிக்குச் சமாந்தரமாக அமைந்தது. மகாவம்சத்தின் வடிவிலுள்ள இலங்கை வரலாறு கி.மு. 3ம் நூற்றாண்டில் ஒருமைப்படுத்தப்பட்ட இராச்சியம் நிறுவப்பட்டது என்ற அபிப்பிராயத்தைத் தந்தபோதும் (மகாவம்சத்தின் நம்பகத்தன்மையை ஐதீக காலம்வரை விரிவாக்கினால் இது விஜயனது காலத்திற்குமுன்னர் ஆகலாம்) உண்மையில் அவ்வாறிருக்கவில்லை என்பதற்கு வலுவான சாசனச் சான்றுகள் உள்ளன. பிரதேச ஆட்சியாளர் பற்றிக் குறிப்பிடும் கி.மு. 1ம் நூற்றாண்டுவரையுள்ள சாசனங்கள் நாடு முழுவதிலும் பரந்துள்ளன. (ஹெட்டியாராச்சி, 1972, பக்: 144, 145) பிரதேச ஆட்சியாளர் பற்றி இலக்கியச் சான்றுகளும் இடைக்கிடை குறிப்பிடு கின்றன. (மேற்படி) இலங்கையின் அரசமுறை பற்றி ஆராய்ந்த ஹெட்டியாராச்சியின் கருத்துப்படி (மேற்படி, பக்: 152) தீவு முழுவதிலும் மைய அதிகாரத்தின் உறுதிப்பாடு வஸபமன்னன் காலத்தில் (கி.மு. 2ம் நூற்றாண்டு) மாத்திரமே வெளிப்படையாகவே வெற்றியடைந்தது. வஸப காலத்திலேயே பேரளவிலான முதலாவது நீர்ப்பாசன அமைப்பு நிர்மாணிக்கப்பட்டது என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும். (மேற்படி, பக்: 156) நீர்ப்பாசன அமைப்புக்கள் போதுமான அளவு பரிணாமத்தைப் பெற்று நாட்டின் பெருமளவு பாகங்களில் தமது கால்களைப் பரப்பியபோதே மையவாக்கம் இறுதியாக நிறைவடைந்தது என்ற முடிவை இவ்விவரங்கள் தருகின்றன.

எவ்வாறெனினும் மையக்கட்டுப்பாடு அனுராதபுரத்தில் (தேவநம்பியதிசன் காலத்தில்) வரலாற்று ரீதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டமை, ஆட்சியைச் சட்டபூர்வமாக்கும் கருத்தமைவு அரச பௌத்தத்தின் வடிவில் அறிமுகப்படுத்தப் பட்டமை ஆகியவற்றுக்கு நான்கு நூற்றாண்டுகள் பின்னரே மையக் கட்டுப்பாட்டின்

புரண உறுதிப்பாடு இடம்பெற்றது. அரச பௌத்தம் தீவின் எல்லைப் பகுதி களுக்குக் கசிந்து செல்வதன் மூலம் கிராமிய மட்டம் வரையிலும் பல பிரதேச அலகுகளுக்கும் கருத்தமைவு ஒட்டு இணைப்பு பரவுவதற்கு ஒரு சில நூற்றாண்டுகள் சென்றிருக்கும் எனலாம். இந்தக் காலஅளவே மையவாக்க ஆட்சியை உறுதிப்படுத்த எடுத்த கால அளவுமாகும்.

இதுவரை வரலாற்றுக்கு முற்பட்ட அபிவிருத்திகள் பற்றிய எமது பொருள் விளக்கத்தில் இரு பெரும் கருதுகோள்கள் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. முதலாவது, இலங்கைக்கு 'ஆரியர் வருகை' என்னும் அலை. அவர்கள் வட இந்தியாவின் மேற்கு, கிழக்குப் பிரதேசங்களிலிருந்து கடல் வழியாக இங்கு வந்து குடியமர்ந்தனர். அவர்கள் இங்கு வந்தபோது ஏர்முறைப் பயிர்ச்செய்கை, நீர்ப்பாசன முறை, இரும்பின் பயன்பாடு முதலியவை பற்றிய மூல அறிவையும் பிற்காலத்தில் சிங்களமொழியாக விருத்தி பெற்றதின் அடிப்படைக் கூறுகளையும் தம்முடன் கொண்டுவந்தனர். அவர்கள் நதிக்கரையோரங்களில் குடியேறிப் பெரும்பாலும் இலங்கை பூராவும் தமது கிராமக் குடியிருப்புக்களை நிறுவினர். இரண்டாவது இந்த இரும்புக்காலக் குடியேற்றவாசிகள் இங்கிருந்த வரலாற்றுக்கு முற்பட்டகால இலங்கை பூர்வீகக் குடிகளின் இடத்தில் குடியமர்ந்தோ அல்லது அவர்களுடன் ஒன்றுகலந்தோ படிப்படியாக, ஆனால் விரைவாகத் தமது பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் வரலாற்றுக்கால நாகரிகமாக விருத்தி செய்தார்கள். இக்கருதுகோளமைப்பின் இன்னொரு அமிசமும், தரமான வரலாற்றுக் கட்டுரைகளில் பெரும்பாலும் குறிப்பிடப்படாத விடயமும் யாதெனில் 'அந்நிய' ஆக்கிரமிப்பாளராகவும் அநேகமாக சிறுபங்கு வகிப்பவர்களாகவும் காட்டப்படுகின்ற தென்னிந்தியர் அல்லது திராவிடர் இங்கு குடியேறி வாழ்தலாகும். இத்தவறான படத்தை விமர்சனரீதியாகத் திருத்தியமைத்தலானது 'புலம்பெயர்வுக்' கருது கோளின் முக்கியத்துவம் பற்றி அடிப்படையாகக் கேள்வி எழுப்பாது தென்னிந்தியர் களை அதனிலும் பார்க்க முக்கியபங்கு வகிப்பவர்களாகக் காட்டுவதிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இப்புலம்பெயர்வுவாத நோக்கின் முக்கிய மூலமும், இன்னும் பெருஞ்செல்வாக்குப் பெற்றுள்ள அதன் கருத்து வெளியீடும் யாதெனில் பாளி வரன்முறைக் குறிப்புகளில் குறிக்கப்பட்டுள்ள 'விஜயனின் வருகை பற்றிய கதையும் அது தொடர்பான நிகழ்ச்சிகள் பற்றிய விபரமுமாகும். வரலாற்று நிகழ்வுகளை எழுதும்போது வரன்முறைக் குறிப்புகளின் திட்பத்தைப் பொறுத்த வரையில் ஆதிவரலாற்று நிகழ்வுகளைப்பற்றிய விபரங்கள் பெருமளவு திட்பமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் விஜயனின் கதையைப் பொதுமக்களும் அரைகுறைப் படிப்பாளிகள் பலரும் ஏற்றுக்கொண்டபோதும் நவீன வரலாற்றிய லாளர் அக்கதை புராதன இந்தியப் புராணக் கதைகளிலிருந்து தொகுத்து, ஆதாரம் ஏதுமின்றி முற்றிலும் புனைந்தெழுதப்பட்ட கட்டுக்கதை என்பதையும், அதை உண்மையான வரலாற்றுப் பதிவு என்று கருதாது வரன்முறைக் குறிப்பு எழுதியோரின் வரலாற்றுவரைபியல் நோக்கங்களின் அடிப்படையிலேயே புரிந்துகொள்ள வேண்டுமென்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதே வரலாற்றியலாளர் இலங்கையின் நாகரிகமானது இந்தியாவிலிருந்து இங்கு

புலம்பெயர்ந்தோரின் குடியிருப்பு, குடிப்பரம்பல் ஆகியவற்றிலே அதன் மூலத்தைக் கொண்டுள்ளது என்பதே விஜயனின் கதை கூறும் அடிப்படை உண்மையென இன்றும் நம்புகின்றனர்.

இப்பிரச்சினையைப் புதிதாக நோக்குவதற்கு ஆதிவரலாற்றுக்கால அபிவிருத்திகள், வரலாற்றின் தொடக்கம் என்பன பற்றிய எமது அறிவு, ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு மாத்திரமன்றிப் புரிந்துகொள்ளலின் ஆரம்ப நிலையைத்தானும் எய்துவதற்கே இன்னும் போதமானதாயில்லை என்னும் உண்மையிலிருந்தே ஆரம்பித்தல் வேண்டும். எமது இன்றைய கருத்துக்கள் இலக்கிய மரபுகளிலும், பிராமிக்கல்வெட்டுகளில் பொறித்துள்ள ஆதிச் சிங்கள மொழி கூறுகின்ற மொழியியற் சான்றுகளிலுமே முற்றிலும் தங்கியுள்ளது. இன்று பயன்படுத்தப்படுகின்ற ஏனைய எல்லாவகைச் சான்றுகளும் ஐயத்துக்கிட மானவை. தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட கால, ஆதிவரலாற்றுக்கால பொருள் மீதிகளைக் கண்டுபிடித்தல், ஏற்றுக்கொள்ளத் தக்க நவீன முறைகளினால் இலக்கிய மொழியியல், மானிட இனவியற் சான்றுகளை மேலும் ஆராய்தல், இலங்கை, இந்திய தென்கிழக்காசிய சான்றுகள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வுகள் முதலியவை மாத்திரமே உண்மையான வரலாற்று அபிவிருத்திகளை நாம் நன்கு புரிந்துகொள்வதற்கு நம்மை வழிநடத்திச் செல்லக் கூடியனவாகும்.

வரலாற்றுக் காலத்தின் (கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 1ஆம் நூற்றாண்டு வரை) அதி ஆரம்பக்கூற்றிலே ஆதிவரலாற்றிலிருந்து வரலாற்றுக் காலத்துக்கு நிகழ்ந்த பாய்ச்சல் பிராமிக் கல்வெட்டுகளின் தோற்றத்தினால் எல்லையிடப்படுகிறது. இவை ஒருபுறத்தில் ஆதிசிங்கள மொழியின் பரவல், புத்த மதத்தின் எழுச்சி போன்ற பண்பாட்டுத் தோற்றப்பாட்டுடனும் தொடர் புற்றுள்ளன. மறுபுறத்தில் சமூக பொருளாதார தொழில்நுட்ப விருத்திகளுடனும் அதாவது ஈர நெற்பயிர்ச் செய்கை, குள நீர்ப்பாசனம் ஆகியவற்றின் விரிவான புத்தமைப்புடனும் சமூக வேறுபாட்டின் பல்வேறு வடிவங்களின் தோற்றத்துடனும் தொடர்புற்றுள்ளன. பெரும்பான்மையான கல்வெட்டுக்கள் புதிதாகத் தோன்றிய உயர் குழாத்தின் வேலைபோல் தோன்றுகிறது. இந்த உயர் குழாம் செல்வத்தின் உரிமையாளராகவும், கட்டுப்பாட்டாளராகவும் இருந்தனர். அவர்கள் அரசியல் அதிகாரமுடையோராயும், மதமானியங்கள் வழங்குவோராயும் விளங்கினர் .இங்கே எமது கவனத்தை விசேடமாகக் கவருவது இலங்கையில் மக்கள் குடியமருதல், மக்கள் குடியிருப்பு, சிங்கள இனச் சிறப்பியல்புகளின் தோற்றம் முதலியன தொடர்பாக இவை கொண்டுள்ள முக்கியத்துவமாகும்.

இந்த ஆக்ககாலப்பரப்பிற்குள் உருவான பிராமிக் கல்வெட்டுக்கள் வரலாற்று அபிவிருத்தியின் சடுதியான எழுச்சியையும் பண்டைய சிங்கள மொழியுடைய பரவலான உபயோகத்தின் தெளிவான அமிசங்களைக் கொண்ட ஒருவகையான புரட்சிகர உருமாற்றத்தையும் சுட்டிக் காட்டுகின்றன. இந்தக் கல்வெட்டுக்களில காணப்பட்ட மொழியின் வியத்தகு ஓரினத்தன்மையும், அது இலங்கைத் தீவின்

விவசாயக் குடியிருப்புகள் பூராவும் விரிவாகப் பரவியிருந்தமையும், முதற் பார்வையில் அவை ஆகக்குறைந்தளவில் மொழியியல் ரீதியாக ஓரினப் பண்பாடுடைய குழுவினது புலம்பெயர்வின் திடீர் அலையின் விளைவென்னும் கருத்தை ஆதரிக்கின்றன. ஆனால் இன்னும் யதார்த்தபூர்வமாக நோக்குகையிலும், நாம் உரையாடுகின்ற வரலாற்றுக்கு முற்பட்டகால ஆதிவரலாற்றுக்கால அபிவிருத்தியின் அடிப்படையிலும் அது நாம் ஆராய்கின்ற ஆதிவரலாற்றுக்காலச் செயன்முறையின் உச்சநிலையாகவும் அல்லது திருப்பு முனை விளைவாகவும் நாம் கருதிக்கொள்ள முடியும்.

இக்கல்வெட்டுக்களில் காணப்படுகின்ற ஆதிச் சிங்கள மொழியானது இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் ஒரு கிளையான வடஇந்தியப் பிராகிருதத்தின் விரிந்த குழுவைச் சேர்ந்ததென்பது மிக முக்கியத்துவமானதும் அதேபோன்று புதிரானதுமாகும். மேலும் ஒத்த சிறப்பியல்புகளையும், வரன் முறையையுமுடைய மாலைதீவு மொழியுடன் மிக நெருங்கிய தொடர்புடைய மொழியுடன் சேர்ந்து இம்மொழியானது இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் தெற்கு நோக்கிய விரிவைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அவ்விரிவானது இந்தியத் தீபகற்பத்தின் தென்னரைப் பகுதியை உள்ளடக்கிய பெருந்திராவிட மொழி மாநிலத்தினால் அத்தகைய மொழிகள் வழங்கும் பிரதான பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது. இன்றைய மொழியியல் ஆய்வுகள் சிங்களமொழியானது அதனுடைய பரிணாம வளர்ச்சியில் ஆரம்ப கட்டத்திலும், பிற்கால கட்டத்திலும் விசேட சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளதெனச் சுட்டிக்காட்டுகின்றன. அம்மொழி மேற்கு, கிழக்கு, இந்திய பிராகிருத மொழிகளுடன் நெருங்கிய உறவு கொண்டிருக்கும் அதேவேளையில் அது தனது தனித்துவத்தையும் வேணி வருகின்றது. அதாவது அது ஒரு புறத்தில் இந்திய பிராகிருதமொழிகளுடன் தொடர்புற்றுள்ளது, ஆனால் அதேசமயம் அவற்றிலிருந்து வேறுபட்டுள்ளது. மறுபுறத்தில் அது திராவிட மொழிகளிலிருந்து வேறுபட்டதாயிருந்த போதும் அம்மொழிகளினால் நன்கு செல்வாக்கும் பெற்றுள்ளது. சுருக்கமாகக் கூறின், கி.மு.3ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயும் அதன் கூட்டிணைவுப்பான்மையும் தேசிய விசேடத்துவமும் உயர்ந்த அளவில் இருந்தன.

எனவே வேறு ஏதேனும் தொல்பொருட்சான்றுகள் இல்லாத போது இந்த அபிவிருத்திக்குக எவ்வாறு நாம் கருத்துக் கொள்வதென்பது நம்மை நாமே கேட்கவேண்டிய கேள்வியாகும். மேலும் நாம் தற்காலத்திலும், எதிர்காலத்திலும் நடத்தவிருக்கின்ற தொல்பொருள் ஆய்வுகளிலே எத்தகைய கேள்விகளை நாம் எழுப்புதல் வேண்டும்? இம்மொழி ஆதிவரலாற்றுத் தோற்றப்பாட்டின்போது ஓரினவியல்புடைய மொழியாகப் பரிணமித்த பிராகிருதத் துணைமொழிகளின் மூலக்கூறுகளைத் தம்முடன் கொண்டு இங்கு புலம்பெயர்ந்தோரின் ஒன்று அல்லது பல அலைகளின் விளைவா? அல்லது ஆதிவரலாற்று வளர்ச்சியின் பிற்காலப் பகுதிகளில் தோன்றிய ஆளும் வகுப்பினருடன் சரிநிகராக அல்லது ஏறக்குறையச் சரிநிகராக விளங்கிய புலம்பெயர்ந்தோர் உயர் குழாத்தினால் ஆக்கப்பட்ட ஓர்

மேலிடுகையா? முன்றாவது சாத்தியக்கூறும் உண்டு. அது தொகையளவில் முக்கியத்துவமற்ற ஆனால் மொழியியல் ரீதியாக முன்னேறிய புலம்பெயர்ந்தோரிட மிருந்து உள்வாரியாகவோ வெளிவாரியாகவோ பெற்றுக்கொண்ட ஆக்கக் கூறுகளைக் கூட்டிணைத்த ஒரு மொழியை அடிப்படையாகக் கொண்டு தோன்று கின்ற நாகரிகத் தலைமையினால் பெற்றுக்கொண்ட ஈட்டமா? அல்லது பெருக்க விருத்தியா? அது செய்தித்தொடர்புகளை முன்னேற்றும் பல்லினக்குழுக்களை ஒன்றிணைக்கும் ஓர் கருவியா? இந்த மொழியியற் செயன்முறையானது பௌதிகப் பண்பாடு, விவசாய உற்பத்திமுறைகள், சமூக உறவுகள், அரசியல் நிறுவனங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தியில் அதையொத்த ஓரினக் கூட்டிணைவு நிகழ்ந்த அதே காலத்திலோ அல்லது அதற்குச் சற்றுப் பிந்தியோ ஏற்பட்டதென்பதும் தெளிவு. மேலும் முன்னேறிய மதமான பௌத்தத்தை ஏற்றுக்கொண்டமையும் அதன் வளர்ச்சியும், அச்செயன்முறைக்கு இணைவான செயன்முறையென்பதும் தெளிவானது.

நாம் இங்கே எடுத்துக்கொண்ட பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்த அபிவிருத்திகளின் முக்கியத்துவம் யாதெனில் சிங்கள மக்களை ஒரு தனி இனமாக உருவாக்குவதில் ஆக்கக் கூறுகளாய் இணைந்த மூலங்கள் எவையாக இருப்பினும், இனக்குழுக்களும், பண்பாட்டுக் கூறுகளும் எவையாக இருப்பினும், அவர்கள் ஒரு தனி இனமாக உருவானதன் வரலாற்றுத் தொடக்கங்களை அவை குறித்து நிற்கின்றன என்பதாம். இந்த உருவாக்கம் நாம் அவதானித்ததைப் போன்று, புலம் பெயர்வானது நிச்சயமாக யாதாயினுமொரு பாத்திரம் வகித்திருக்கத்தக்க தென்னிந்திய பெருங்கற்பண்பாட்டையும் புலம் பெயர்வுடன் நேர்த் தொடர்பின்றி நிகழ்ந்திருக்க முடியாத வடஇந்திய மொழியியல் ஈடுபாடு களையும் உள்ளடக்கியிருக்கலாம். ஆனால் இந்த ஆக்கபூர்வக் கூட்டிணைவுக்கு இட்டுச்சென்ற இயக்க ஆற்றல் வாய்ந்த அகச் செயன்முறைகளைக் கண்டுபிடிக்கின்ற பணியே மூலங்களும் மூலாதாரங்களும் பற்றிய அக்கறையைப் பார்க்கிலும் அதிக முக்கியத்துவமானது. விஞ்ஞான அடிப்படையிலான தொல்பொருளாய்வு மாத்திரமே இப்பணியை நிறைவு செய்யமுடியும். ஏனெனில் அதன் மூலமே இச்செயன்முறை உள்ளடக்கிய பண்பாடுகளின் பொருள் எச்சங்களுக்கு மீள உயர்ப்பூட்டி அவற்றுக்குக் கருத்து விளக்கம் அளித்து உண்மையில் என்ன நிகழ்ந்ததெனக் கூறுகூறாகத்தானும் நிறுவமுடியும். இதேசமயம் சிங்கள இனத்தின் தோற்றம் பற்றிப் பேசுவதற்கு இரு முக்கிய தகைமைகள் தேவை. முதலாவது இது அடிப்படையில் இன சுய தனித்துவத்தைக் கருதவில்லை. இரண்டாவது இது சிங்கள மக்களின் சமூக, பண்பாட்டு உருவாக்கத்தின் ஆதி ஆரம்பங்களையன்றி பூர்த்தியைக் கருதவில்லை.

நிலப் பிரபுத்துவ சமூகமும், அரசின் மேனிலையாதிக்கமும்

(தேரவாத பௌத்த பீடங்களின் பண்பாட்டுச் செல்வாக்கு)

கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து உருவான ஒரு புதிய சமூக இயக்கமானது நிலத்தினையும் உற்பத்தியினையும் ஒன்றிணைத்த வகையில் இலங்கையின் குழும வாழ்வுமுறைக்கு முடிவு கட்டியதோடல்லாமல், தொழில்நுட்ப ரீதியானதும் பரந்துபட்டதும், நிறுவனமயப்பட்டதுமான மக்களின் வாழ்வியக்கத்திற்கும் வழிசமைத்துக் கொடுத்தது. செயற்கையாக அமைக்கப்பட்ட சிறு குளங்கள், வாய்க்கால்கள், புதைகுழிகள் என்பன மெல்ல மெல்ல மக்களது ஜீவனோபாய அடிப்படையின் ஆதாரங்களாக வலுவடைந்து சென்று, நீருடன் சம்பந்தமானதும், விளைச்சலுடனும் இறப்புடனும் சம்பந்தமானதுமான சடங்காசார நடைமுறைக்குள் மக்கள் வாழ்வினை இட்டுச் சென்றமையைக் காணமுடிகிறது. இப்பின்னணியிலேயே நிலப்பிரபுத்துவ அரசியல் அதிகாரப் போட்டியும் மெல்லமெல்ல வலுப்பெற்று, அரசுக்கும் நிலத்திற்கும், அரசிற்கும் மதத்திற்கு மிடையிலான தொடர்புகளும், உறவுகளும் வலுவடைந்தன. இப்பின்னணியில் அரசின் மேனிலையாதிக்கமானது உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நீர்ப்பாசன நிறுவனங்களையும, வருவாயை ஈட்டித்தரும் வாணிபக் கட்டமைப்புக் களையும, (தூதுக்குழுக்களையும்) மைய அரசினடிப்படுத்துவதாக அமைந்தது. இந்நிலையானது கி.பி. 13ஆம் நூற்றாண்டு வரைக்கும் இலங்கையின் சமுதாயத்தின் வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்தும் காணப்பட்டிருந்தது. இக்காரணத்தினாலேயே இலங்கையின் புராதன, மத்திய கால வரலாற்று வளர்ச்சியை நீர்ப்பாசனவியல் நாகரிகமாக எடுத்துக்காட்டும் பண்பு வரலாற்றாசிரியர்களிடையே காணப்படுகிறது. இவ்வாறான ஒரு சமுதாய வரலாற்றுப் போக்கினை கி.மு. 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட முற்பட்ட அநுராதபுரகாலம என்றும், கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட பிற்பட்ட அநுராதபுரக்காலம என்றும், கி.பி. 10ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரையுள்ள பொலனறுவைக் காலப் பகுதி என்றும் கால அடிப்படையிலும், தலைநகர்களின் அடிப்படையிலும் வகுத்து ஆராய்வது இலங்கை வரலாற்றாசிரியர்களின் மரபாக உள்ளது. இப்பின்னணியில் தேரவாத பௌத்தசமய நிறுவனங்கள் அனுராதபுரத்தினை மத்திய - மைய நடவடிக்கைத் தளமாகக் கொண்டு,

நிலப் பிரபுத்துவ சமூக வளர்ச்சி முறைமையின் கீழ் அரசின் மேனிலையாதிக்கத்தினை எவ்வாறு நடைமுறைப் படுத்தியிருந்தது என்பதனை பின்வரும் தலைப்புக்களில் வைத்து ஆராயமுடியும். அவையாவன:

1. அநுராதபுரகால அரசியல் வரலாறு
2. அநுராதபுரகால நீர்ப்பாசனவியலும் அதன் வளர்ச்சியும்
3. அநுராதபுலகால வெளிநாட்டு, உள்நாட்டு வாணிபம் - முற்பட்ட காலம்
4. அநுராதபுரகால வெளிநாட்டு, உள்நாட்டு வாணிபம் - பிற்பட்ட காலம்
5. பிற்பட்ட அநுராதபுல காலத்தில் தென்னிந்திய, தென்கிழக்காசிய, சீன வர்த்தகத் தொடர்புகள்.

அரசியல் வரலாறு

விஜயன் முதல் முடசிவன் வரை

இலங்கைத்தீவின் வரலாற்று வளர்ச்சியைக் காட்டும் மிக முக்கியமான பதிவேடான **மகாவம்சத்தில்** பௌத்தம் பரவ முன்னருள்ள இலங்கையின் வரலாற்றைக் கூறும் பகுதியை நோக்குபோது பௌத்த குருமார்கள் இலங்கைக்கு வருமுன் இடம்பெற்றிருந்த இலங்கை வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள், மற்றும் மக்களிடையே வழங்கிய செவிவழிக் கதைகளை அவர்கள் தாம் பேணிய மரபுகளுடன் உள்ளவாறு சேர்த்துக்கொள்ளப்பட்டமையைக் காண்கின்றோம். பௌத்தத்துடன் நேரடித் தொடர்புபெறாத இந்நிகழ்ச்சிகளைப் பற்றிய மரபுகளைப் பேணுவதில், விகாரைகளில் வாழ்ந்த குருமார்கள் அதிக அக்கறை கொண்டிருக்காவிடினும் பிற்கால நிகழ்ச்சிகளுடன் சம்பந்தப்படுத்தப் பட்டமுறையில் எடுத்துக்கூறப்பட்டுள்ள வகையைக் காண்கின்றோம். அம் மரபுகள் தோற்றம் பெற்ற காலத்திற்கும் அவை எழுத்து வடிவம் பெற்ற காலகட்டங் களுக்கிடையே நீண்டகால இடைவெளியிருந்ததால், பிற்காலச சேர்க்கைகள் பல அவற்றுள் இடம்பெறுவதற்கும் வாய்ப்பாயிற்று. இம்மரபுகள் வாயிலாகப் பெற்ற முக்கிய செய்திகளுடன் **ஜாதகக் கதைகள** முதலான பழைய கதைகளிலுள்ள புனைவுகளும் உண்மை நிகழ்ச்சிகளுடன் சேர்க்கப்பட்டன. எனவே, இக்காலப் பகுதியைக் கூறும் அத்தியாயங்களில் வரும் பல கதை நிகழ்ச்சிகள் **ஜாதகக் கதைகளிலிருந்து** எடுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மன்னர்களின் ஆட்சிக்கால வரையறைகளும் பெரும்பாலும் செயற்கைத்தன்மை கொண்டிருப்பது கண்கூடு. எடுத்துக்காட்டாக, **பண்டுகாபயன** முப்பத்தேழாவது வயதில் ஆட்சியைப பெற்று **70 ஆண்டுகள்** ஆட்சி நடத்தியதாகவும் அவனுக்குப் பின் அவனது மகனான **முடசிவன்** தந்தையைத் தொடர்ந்து **60 ஆண்டுகள** அரசனாக விளங்கியதாகவும், இதற்குப் பின் முடசிவனது மக்கள் தமக்கிடையே **80 ஆண்டுகள** ஆட்சியைக் கவனித்ததாகவும் வருகின்ற செய்திகளைப் பார்க்கும்போது இச்செயற்கைக் கால வரையறைகள் வேண்டுமென்றே புகுத்தப்பட்டமைக்கு **புத்தர் பரிநிர்வாண மெய்திய காலத்துடன ஆரியர் வருகையைத் தொடர்புபடுத்த வேண்டும** என்ற பெருவிருப்பமே காரணமாகும்.

இவ்வாறாக, இக்காலப் பகுதியின் வரலாறு பற்றிக் காலவேடுகளில் உள்ள விவரங்களிற் பலவற்றை நாம் **கட்டுக் கதைகளாகவே** கொள்ளவேண்டி யிருக்கின்றது. இக்குறிப்பட்ட ஆட்சிக்கால ஆட்சியாளரது எல்லைகளையும், சிலவேளைகளில் சில நிகழ்ச்சிகளையும், மன்னர்களின் பெயர்களையும், செயல்களையும் மிகுந்த அவதானத்துடனேயே எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

விஜயன்

மரபுக்கதைகளின்படி, இலங்கையின் முதல் அரசனாக விஜயன் மதிக்கப் படினும், **விஜயனை ஒரு வரலாற்று மனிதனாகக் கொள்வது தவறாகவே கொள்ளப்படுகின்றது.** இலங்கையின் முதற் குடியேற்ற நிகழ்ச்சியைப் பலப்படுத்த எழுந்த கதையின் பாத்திரமாகவே இவனைக் கருதுவர். (வேறு மரபுகளில், இவனது பெயரை **'சிங்ஹல'** என்றே வழங்குவர்) **தம்பபண்ணியைத** தன் தலைமைப் பீடமாகக் கொண்டு 38 ஆண்டுகள் ஆட்சி புரிந்தபின், தன் பாண்டிய இராணி வாயிலாகப் பிள்ளைகள் இல்லாமையால், அரசை வந்து ஏற்குமாறு அவன் தன் தம்பிக்கு அழைப்பு அனுப்பினான் எனவும் பின்னர் அவனது தம்பி சுமித்தனுக்குப் பதில், சுமித்தனது இளைய மகனான **பண்டுவாசுதேவன** இலங்கை வந்து ஆட்சியை ஏற்றான் எனவும் கூறப்படுகின்றது. **உபதிசகாம(ம்)** அரசிருக்கையாக அப்போது விளங்கியது. பண்டுவாசுதேவனுக்கும் அவனது முப்பத்திரண்டு தோழர்களுக்கும், விரைவில் **பத்தகச்சானாவும்** அவளது பணிப்பெண்கள் முப்பத்திரண்டு பேரும் கங்கைக் கரையிலிருந்து கப்பலேறி வந்து **மணப்பெண்களாக** வாய்த்தனர். பத்தகச்சானாவின் சகோதரர்கள் அறுவர் இலங்கை வந்து, தம் பெயர்களால் **ராமகொண, உறுவெல, அநுராதகாம, விஜிதகாம, தீகாயு ரோகண(ம்)** முதலான குடியேற்றங்களை நிறுவினர். இதன் மூலம் கிழக்கிலிருந்தும் குடியேற்றங்கள நடைபெற்றன என்ற கருத்தும் வலுப்பெறுகின்றது.

பண்டுகாபயன்

விஜயனுக்குப் பின் **பண்டுகாபயனது** வரலாறே முக்கியமானது மாகும். அதைக் கூறுதற்கேற்ற வகையிலேயே அவனுக்கு முந்தியகால நிகழ்ச்சிகளும் அமைக்கப்பட்டுள்ளன. **பத்தகச்சனாவுக்குப** பிறந்த மகளான **உம்மாத சித்தாவுக**குப் பிறக்கவிருந்த மகனால் **(பண்டுகாபயனால்),** சித்தாவின் சகோதரர்கள் பதின்மர் ஆபத்தையெதிர் நோக்கியிருப்பதாக முன்னரே அறிந்திருந்து, தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இருந்தும், சித்தா ஓர் ஆண் மகவைப் பெற்று, ஒரு பணிப்பெண்ணிடம் இரகசியமாக அம் மகவைக் கொடுத்து, அதைத் தலைமறைவாக வளரச்செய்தாள். **பண்டுகாபயன** என்ற அம்மகவு அதிசயமான முறையில், மாமன்மார் தன்னைக் கொல்லச்செய்த சதி முயற்சிகளிலிருந்து, **உயிர்தப்பி வளர்ந்து,** இறுதியில் பண்டுல(ன்) என்ற **பிராமணனிடம் கல்வி பயின்று** வந்தான். பிராமணன் அளித்த **பண உதவியுடன** போர்வீரரைத் திரட்டித் தன் மாமன்மாருடன் போர் தொடுத்து, நீண்டகாலப் போர்களின் பின் அவர்களை வென்று, ஈற்றில் அரசைப் பெற்றான்

என்பதே மகாவம்சக் கதையின் சுருக்கமாகும். **சேத்திய** என்ற பெண்குதிரை உருவில் வந்த ஒரு **இயக்கினியின்** உதவியாலேயே போர்களில் பண்டுகாபயன் வெற்றியீட்ட முடிந்ததென்பதாகவும் இக்கதையில் கூறப்பட்டுள்ளது. இவ்விதமான பல அதிசய நிகழ்ச்சிகள் கலந்திருப்பதால் பண்டுகாபயன் கதையை முற்றாகவே புனைகதையாக ஒதுக்கிவிடவும் சில வரலாற்றாசிரியர்கள் துணிகின்றனர். ஆனால் **பண்டுகாபயன் ஒரு வரலாற்று மனிதன** எனக்கொண்டு, கதையில் வரும் அதிசய நிகழ்ச்சிகளை நீக்கி, ஏனையவற்றை உண்மை நிகழ்ச்சிகளைக் குறிப்பனவாகச் சிலர் கொள்வர். பண்டுகாபயன் நிகழ்த்திய போர்களில் சடுதியாக வெற்றிபெறாது, பல ஆண்டுகள் வரை அவன் வெற்றியெய்தாதிருந்தான் எனக் கூறியிருப்பதனை உண்மை வரலாறு எனக் கொள்வதற்குச் சான்றாகும் என்பர். பண்டுகாபயன் அரசனானபின், அவன் மேற்கொண்ட நடவடிக்கைகளை உள்ளடக்கி பல வரலாற்றுச் செய்திகள் இலக்கிய மரபுகளுடன் இணைக்கப் பட்டிருந்தன.

அனுராதபுரம் தலைநகராதல்

பண்டுகாபயன் அரசனானதும் **அனுராதகாமாவுக்குச** சென்று, அங்கே **அனுராதபுரம** என்ற நகரை நிறுவி, அதைத் தன் தலைநகராக்கினான். தனக்கு உதவியாகவிருந்த மாமனான அபயனை **'நகரகுத்திக'** என்ற நகரக் காவலன் பதவிக்கும், தன் மனைவி **சுவர்ணபாலியின** தந்தையான **கிரிகண்ட சிவனை** கிரிகண்டப் பகுதியின் ஆட்சியாளனாகவும் பண்டுகாபயன் நியமித்தான். தனக்கு உதவியாகவிருந்த **காளவெல** முதலான இயக்கர்களை நகரின் வெவ்வேறு பகுதிகளில் காவலுக்கு அமர்த்தினான். நகருக்கண்மையில் **துணைநகர்கள் நான்கையும், அபயவாவியையும்** அவன் நிறுவினான். நகரின் நிருமாணததில் கவனம் செலுத்திய மன்னன், அதன் துப்புரவுக்கும் ஒழுங்குகள் செய்தான். **'சண்டாளர்'** என்ற குலத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோரை **நகரசுத்தியாளராக** நியமித்து, அவர்களுக்கு உறைவிடங்களையும் அளித்தான். வெவ்வேறு சமயப் பிரிவினர்க்கும் உறைவிடங்களையும், வழிபாட்டிடங் களையும் நிறுவிக்கொடுத்தான். இலங்கை முழுவதற்கும் உரிய கிராமங்களின் எல்லை களையும் பண்டுகாபயனே தன் **பத்தாவது ஆட்சியாண்டில்** வகுத்து வைத்தான் எனப்படுகின்றது. பண்டுகாபயனது ஆட்சிக்காலச் செயல்கள் பற்றிக் கூறப்பட்டவை அனைத்தும் அவனுடைய காலத்தில்தான் நடந்தன எனக் கொள்வதற்கு உறுதியான துணையாதாரங்கள் இல்லாவிடினும், அனுராதபுரத்தைத் தலைநகராக்கியமையாலேயே அவன் அதிக செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டுமெனக் கொள்ளலாம்.

முடசிவன்

பண்டுகாபயனது ஆட்சி முடிவுற்றபின், அவனுக்குச் **சுவர்ணபாலி** வாயிலாகப் பிறந்த மகனான **முடசிவன்** ஆட்சிக்கு வந்தான். இவன் ஆட்சி செய்ததாகக் கூறப்படும் அறுபது ஆண்டுகளில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி அனுராதபுரத்தில் **மஹாமேகவனம** என்ற **தோட்டம்** அமைக்கப்பட்டதாகும்.

இவனுடைய புதல்வர்களில ஐவர் வெவ்வேறு காலங்களில் ஆட்சி செய்ததாக அறிகின்றோம். முடசிவனது ஆட்சி கி.மு. 247இல் முடிவெய்த, அவனது **இரண்டாவது புதல்வனான தேவானம்பியதிசன்** அரசைப் பெற்றான்.

தேவநம்பியதிசனுக்கு முந்தியகால இலங்கையின் அரசியல் வரலாறு காலவேடுகளிலுள்ள செய்திகளையொட்டி, மேலே சுருக்கித் தரப்பட்டுள்ளது. கல்வெட்டுக்கள் முதலான பிற ஆதாரங்களால் இவ்விவரங்கள் உறுதிப்படுத்தப்பட வில்லை யென்பது மனங்கொளத்தக்கது. **உண்மையில், தேவநம்பிய திசனுடைய காலத்திலிருந்தே பிறநாட்டு ஆதாரங்களும், பொறிப்புக்களும் இலங்கைக் காலவேடுகளில் வரும் வரலாற்றுச் செய்திகளை உறுதிப் படுத்தவும், மறுக்கவும், இடைவெளிகளை நிரப்பவும் உதவுகின்றன.** அதிக உண்மையைக் கொண்டிராத மரபுக் கதைகளுடன், ஜாதகக் கதைகள், மகாபாரதம் முதலானவற்றில் எடுக்கப்பட்ட கதை நிகழ்ச்சிகள் உருமாற்றப்பட்டுச் சேர்க்கப்பட்டே இக்காலப்பகுதியின் வரலாறு அமைந்துள்ளதெனலாம். குறிப்பாக, பண்டுகாபயன் கதையில் வரும் நிகழ்ச்சிகள் பல. இந்தியக்கதைப் பாடல்களில் **(மகாபாரதம், ஹரிவம்சம்)** உள்ள கதை நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டுவருகின்றன. எனவே, ஆதிகாலத்தில் அதிக சிறப்புடைய தலைநகராகவும், பௌத்த மதத்திற்குரிய விகாரைகள் நிறுவப்பட்டிருந்த புனிதநகராகவும் விளங்கிய அனுராதபுரத்தை நிறுவிய பெருமையை மரபுகள் பண்டுகாபயனுக்கு அளித்துள்ளதே இப்பகுதியில் குறிப்பிடும் தகைமையுடைய விடயமாகும். இது பெரும்பாலும் உண்மை மரபாகவேயிருந்திருக்கும்.

சமயநிலை

பௌத்தம் இலங்கைக்குப பரவமுன் இலங்கையிலிருந்த சமயநிலையை அறிவதனால், அம்மதம் இலங்கையில் அதிக எதிர்ப்பின்றிப் பரவ முடிந்தமையை யும், முந்திய சமய நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளும் இலங்கையிற் பௌத்தத்தின் வளர்ச்சியைப் பாதித்த வகையினையும் நாம் விளங்கிக் கொள்ளலாம். ஆனால், அக்காலச் சமயநிலை பற்றி எமக்குத் தெரிந்த விவரங்கள் குறைவாதலால், அது பற்றி இங்கு மிகச்சுருக்கமாகவே கூறலாம். பொதுவாகக் கூறினால், **ஆரியர் இலங்கைக்கு வந்தபோது** இலங்கையிலிருந்த சில வழிபாட்டு முறைகளுடன் ஆரியரின் சமய முறைகளும் கலந்த ஒரு தெளிவற்ற நிலையிலேயே அக்காலச் சமயநிலையாக விளங்கியதெனலாம். **சமயம் ஓர் ஒழுங்கையோ, நிறுவன அமைப்பையோ கொண்டிருந்திருக்கவில்லை என்பதும் நோக்கத்தக்கதாகும்.**

இந்துமதம்

ஆரியர் இலங்கைக்கு வந்த தொடக்ககாலத்தில், இந்தியாவிலேயே பௌத்தம் பரவியிருக்கவில்லை. குறிப்பாக இலங்கை வந்த ஆரியக் குடியேறிகள் மேற்குப் பகுதியிலிருந்து இலங்கை வந்திருப்பின், அவர்கள் அப்பகுதியில் நிலவிய சமயக் கோட்பாடுகளையே இலங்கைக்கும் கொண்டு வந்திருப்பர்.

வடஇந்தியாவில், குறிப்பாக உயர் குடியினரால் **பின்பற்றப்பட்ட சமயத்தில் பிரமா, இந்திரன், வருணன், குபேரன், யமன் முதலான கடவுள்களே முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர்.** இக்கடவுள்களை இலங்கை வந்தபின் அவர்கள் வழிபட்டனர். இதை இலக்கிய ஆதாரங்களில் வரும் குறிப்புக்களால் அறியலாம். இலங்கையின் காவல் தெய்வங்களாகக் கருதப்பட்ட இந்திரன், யமன், வருணன், குபேரன் ஆகிய கடவுளர், சில வேளைகளில் வேறு பெயர் களாலும் அழைக்கப்பட்டனர். இந்திரனை **சக்க** என்ற கடவுளாகவும், விஷ்ணுவை **உபுல்வண்ணவாகவும** (உபுல்வன்) மக்கள் வழிபட்டதை மகாவம்சத்திலிருந்து அறியலாம். கல்வெட்டுக்களில் வரும் சில பெயர்களைக்கொண்டு, பலதேவன், இராமன், கர்ணன், **வாசுதேவர், சிவன் முதலான தெய்வங்களும் வழிபடப் பட்டனவெனத் தெரிகின்றது.** வழிபாட்டுக்குரிய தெய்வங்கள் பிராமணீயத்துக்கு உரியவையாக இருந்ததாலும் ஆட்சிமுறையிலும் பொதுவாழ்விலும் இடம்பெற்ற சடங்குகள் காரணமாகவும் பிராமணர்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். புரோகிதர்களாகவும், பதில் அரசர்களாகவும் (எ-டு: உபதிச என்ற பிராமணன்) பிராமணர்கள் விளங்கியுள்ளனர்.

பிற மதங்கள்

பிராமணீயம் அல்லது இந்துமதம் அல்லாத பிற மதங்களைச் சேர்ந்தவர்களும் அக்காலத்தில் வாழ்ந்ததைக் காலவேடுகள் அறியத்தருகின்றன. பண்டுகாபயன் ஆட்சியைப் பற்றிக் கூறும்போது, **நிகண்டர்கள்** எனப்பட்ட **சமணத்துறவிகள** வசிப்பதற்கென தலைநகரின் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்ததை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. **ஆஜீவகர்கள்** எனப்பட்ட ஒரு சமயப் பிரிவினர்க்கும், மற்றும் **'பரசமய'த்தவர்க்கும்** வெவ்வேறு உறைவிடங்கள் பண்டுகாபயனால் நிறுவப் பட்டிருந்ததையும் அந்நூல் குறிப்பிடுகின்றது. இக்குறிப்புக்களால், இலங்கையில் பௌத்தம் பரவமுன், சமண சமயம் ஓரளவுக்கு ஆதரவு பெற்றிருந்ததாகக் கூறலாம். தேவநம்பியதிசன் காலத்துக்கு முன்னதாகவே, பௌத்தத்தைத் தழுவிய அல்லது அம்மதத்தைப் பற்றியறிந்த ஒரு சிலராவது இலங்கைக்கு வந்திருக்க வேண்டுமெனவும் கூறப்படுகின்றது.

இயக்கர் வழிபாடு முதலியவை

பௌத்தம் பரவுமுன் இலங்கையிலிருந்த சமய நம்பிக்கைகளில் **இயக்கத் தெய்வங்களின்** வழிபாடு, இயற்கை வழிபாடு என்பவை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. பண்டுகாபயன் **காளவெல, சித்தராஜா** என்ற இயக்கர்களுக்கு நகரின் வெவ்வேறு எல்லைகளில் கோவில்களை அமைத்ததாக மகாவம்சம் தெரிவிக்கின்றது. அவனுக்கு மிகவும் உதவிய பெண்குதிரை உருவில் இருந்த **'செதிய'** என்ற யக்ஷிணிக்கு மாளிகையின் எல்லைக்குள்ளேயே மன்னன் இடமளித்தான். ஆவிகள் அல்லது பிதிரர்களும் அக்கால மக்களின் வழிபாட்டில் இடம்பெற்றன. **நீர்த்தேவதைகளான நாகர்களும** அவ்வாறே வழிபடப்பட்டன. **'மேற்கு இராணி'** என்ற தேவதைக்கும், தலைநகரின் காவல்தெய்வத்துக்கும்

தனிக்கோவில்கள் அமைக்கப்பட்டிருந்தன. **ஆலமரம்** போன்ற மரங்களும் இயற்கை வழிபாட்டு முறையில் இடம்பெற்றிருந்தன. இவ்வாறான வழிபாட்டு முறைகளை ஆரியர் இலங்கை வந்த பின்னர், இங்கிருந்த பெருங்கற்கால **ஆதிக்குடிகளிலிருந்தே** பெரும்பாலும் கைக்கொண்டனர் எனலாம். இவ்வாழிபாட்டு முறைகளும், சமய நம்பிக்கைகளும் **பௌத்தம் பரவிய பின்னரும்** தமதாதிக்கத்தைச் செலுத்தத் தவறவில்லை.

பௌத்தத்தின் தோற்றம்

இந்தியாவிற் கங்கைச்சமவெளியில் குடியேறி வாழ்ந்த ஆரியர் பின்பற்றிய வேதகாலச் சமயத்திலும் பார்க்க, பிந்திய காலமான காவியகால இந்துமதத்தில் பிராமணர்களின் ஆதிக்கம் அதிகமாயிருந்தமையைக் காணமுடிந்தது. இதனால், அக்கால **இந்துமதத்தை பிராமணீயம** எனக் குறிப்பிட்டனர். உபநிடதங்களில் தத்துவ விசாரங்கள் இடம்பெற்று வந்தன. அதேவேளையில், மிருகங்களைப் பலிசெய்யும் வேள்விகளும், கருத்தற்ற கிரியைகளும் பெருகிவந்தன. தெய்வங்கள் மனிதர்களைப் போன்ற உருவ அமைப்புக்களையும், உடை, பேச்சு ஆகியவற்றை யும் பெற்றதுமன்றி, அவற்றின் **உருவச்சிலைகளை** வைத்து வழிபடும் முறையும் அதிகமாக வழக்கிலிருந்தது. கோவில்களும் இக்காலத்திலேயே அநேகமாக நிறுவப்பட்டன. இவை எல்லாவற்றாலும், பிராமணர்களின் செல்வாக்கு எல்லை அற்றதாக வளர்ந்து வந்தது. இவ்வகையான **சமய விருத்திகளுக்கு மாறான இயக்கம** ஒன்று கி.மு. 6ம் நூற்றாண்டளவில் தோன்றலாயிற்று. சமயத் தத்துவங்கள் சாதாரண மக்களால் விளங்கமுடியாத அளவு சிக்கலுடையனவாகி யிருந்தன. தமது வாழ்க்கைக்கு நேரடியாகப் பயன்படாத ஒன்றாக மதம் மாறி வந்ததைக் கண்டனர். மிருகப்பலிகள் பெருகி வந்ததை இரக்க சிந்தை கொண்ட மனிதர்கள் வெறுத்தனர். **சிலைகளின் வழிபாடு அதிகரித்து, கிரியை முறைகள் பெருகி, பிராமணர்களின் செல்வாக்கு வளர்ந்து வந்ததை ஷத்திரியர்கள் உட்படப் பலர் எதிர்த்தனர்.** இவ்வாறு நடைமுறையிலிருந்த பிராமணீயத்தின் குறைபாடுகளுக்கெதிராகத் தோன்றிய எதிர்ப்பியக்கமே ஏறக்குறைய ஒரே காலத்தில் இரு புதிய மதங்களைத் தோற்றுவித்தது. **வர்த்தமான மகாவீரா** என்ற தீர்த்தங்கரருடன் தொடர்புடைய **சமண மதம** (அல்லது ஜைன மதம்) கௌதம புத்தரால் நிறுவப்பட்ட **பௌத்த மதம** ஆகிய இரண்டும் ஏறத்தாழ ஒரே காலத்தில் ஒரே சூழ்நிலையிலிருந்து, ஒரே நோக்குடன் தோற்றுவிக்கப்பட்டவையே. இவையிரண்டுமே **ஷத்திரிய குலத்தவர்களால** தோற்றுவிக்கப்பட்டன என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

வடபீகாரில் வைசாலிக்கு அண்மையிலுள்ள **குணபுரத்தைச** சேர்ந்த **ஞாத்திரிய** என்ற ஒரு ஷத்திரிய குலத்தில், சித்தார்த்தர் என்பவருக்கு மகனாகப் பிறந்தவரே **மகாவீரர்.** இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு சிறிது காலம சென்ற பின்னரே, அவ்வாழ்க்கையைத் துறந்து, கிழக்கு இந்தியாவிலுள்ள பகுதிகளில் அலைந்து திரிந்து, கடுந்தவங்களை மேற்கொண்டு, பன்னீராண்டுகளின் முடிவில் ஞானத்தைப் பெற்றார் இவ்வாறு ஞானத்தைப் பெற்ற பின்னரே,

அவருக்கு **மகாவீரர்** அல்லது **ஜீனா** (வெற்றிகொண்டவர்) என்ற பெயர்கள் ஏற்பட்டன. அவர் நிறுவிய சமயப்பிரிவினர் **நிர்க்கிரந்தர்கள** (தளைகளின் நீங்கியோர்) எனப் பெயர் பெற்றனர். **ஜீனரைப** பின்பற்றியமையால் அவர்களுக்கு **ஜைனர்** அல்லது **சமணர்** என்றும், அவர்களின் மதத்துக்கு **ஜைனம்** அல்லது **சமணம்** என்றும் பெயர்கள் ஏற்படலாயின. சமணர்கள் ஐந்து விரதங்களை அனுசரிக்குமாறு வற்புறுத்தப்பட்டுள்ளனர். அவையாவன, **கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பற்றின்மை, பிரமசரியம** என்பனவாகும். மூன்று செம்மையான வழிகளைக் கடைப்பிடித்து, ஆன்மாக்களுக்கு விடுதலையை அளிக்கலாமென அவர்கள் கருதுவர். **பரம்பொருள** என்ற ஒன்றுக்கு சமணம் இடமளிக்கவில்லை. சமணரிலும **ஸ்வெதாமபரர், திகம்பரர்** என்ற இரு பிரிவுகள் உண்டு.

மகாவீரர் வாழ்ந்த அதேகாலத்தில், **நேபாளத் தரையில் கபிலவஸ்து** என்னுமிடத்தைச் சேர்ந்த **சாக்கிய குலத்தில்** தோன்றிய **சித்தார்த்த கௌதமரும**, 'உண்மையைத் தேடி' அலைந்து வந்தார். **ரும்மிண்டீ** என்பதற்கு அண்மையிலுள்ள **லும்பினி** என்பதே இவர் பிறந்த கிராமமாகும். இவர் பிறந்த ஆண்டை கி.மு. 563 எனக் கொள்கின்றனர். கபிலவஸ்துவின் ஆட்சியாளராக இருந்த **சுத்தோதனருக்கும**, அவர் மனைவி **மாயாவுக்கும்** மகனாகவே **சித்தார்த்தர்** பிறந்தார். இளமையிலேயே தாயை இழந்த சித்தார்த்தர், தன் பதினாறாவது வயதில் **யசோதரை** என்பவளை மணஞ்செய்து கொண்டார். கவலைகளே அணுகாத அரண்மனைச் சூழலிலும், சித்தார்த்தரை விரைவிற் பல கவலைகள் ஆட்கொண்டன. **மூப்பு, பிணி, சாக்காடு** என்ற வாழ்வின் துன்பங்களை நேரிற் கண்டறிந்த அவர், இவற்றுக்கு முடிவுகட்ட உறுதிபூண்டு, இல்வாழ்க்கையைத் தமது இருபத்தொன்பதாவது வயதில் துறந்து காட்டுக்கேகினார். **இராகுலன** என்ற குழந்தை சித்தாத்தருக்குப் பிறந்தமையே அவரை இவ்வாறு செய்யத் தூண்டியதென்பர். துறவியாக மாறிய சித்தார்த்தர் ஆறு ஆண்டுகளாக **'உண்மையைத் தேடி'** அலைவாராயினார். சமயக் குருமார்களிடம் போதனை பெற்றும், கடுந்தவங்களை மேற்கொண்டுமிருந்தார். ஆனாலும் அவர் அடையவெண்ணிய இலக்கு எட்டிக்கொண்டே சென்றது. அவரை வருத்திய கேள்விகளுக்கு அவர் விடை காணாதவராகவே இருந்தார். ஈற்றில் நைரஞ்சனா ஆற்றினருகில் **புத்தகயா** என்ற இடத்திலுள்ள ஓர் அரசமரத்தின் கீழ் அமர்ந்து நிட்டையிலிருந்த போது, அவருக்கு **'ஞானஒளி'** உண்டாயிற்று. அன்றே அவர் **புத்தா** (ஞான ஒளி பெற்றவர்) ஆனார். **ததாகதா** (உண்மையை அடைந்தவர்) என்பதும், புத்தரையே குறிக்கும். சாக்கிய குலத்தைச் சேர்ந்த ஞானியென்பதால், **'சாக்கிய முனி'**யெனவும் புத்தர் அழைக்கப்படுவார்.

ஞானஒளி பெற்றபின், மன்னுயிரிடத்துள்ள பரிவால் தமக்கு வெளிச்சமான உண்மைகளை உலகோர்க்குரைக்க வெண்ணிய புத்தர் காசிக்கண்மையிலுள்ள **சார்நாத்தில** அமைந்த **மான் பூங்காவில** தமது முதல் அறவுரையை நிகழ்த்தினார். இவ்வறவுரை கேட்ட ஐவர் புத்தரின் சீடர்களாயினர். இவ்வாறே, துறவிகளின் கூட்டுக் குழுவான பௌத்த சங்க(ம்) தொடங்கியது. பௌத்தத துறவிகள்

கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை இக்காலத்திலேயே புத்தர் வகுத்தார். இவற்றை **'விநய'** விதிகள் என்பர். அயோத்தி, பீகார் முதலான பகுதிகளுக்குச் சென்று, ஓரிடத்திலேனும் தரித்திராது, தம் அறவுரைகளை மன்னருக்கும் மக்களுக்கும் நிகழ்த்தி வரலானார். இவ்வாறு **ஞானஒளி** பெற்றபின் பரிநிர்வாணம் எய்தும்வரை அவர் வாழ்ந்த நாற்பத்தைந்தாண்டுகளையும் **'அறவழி'யை** இயக்கு வதிலேயே செலவிட்டார். ததாகதரின் அறவுரை கேட்ட ஆயிரக்கணக்கானோர், புத்தரின் நெறிநின்றொழுகலாயினர். பௌத்தம் ஒரு மதமாக வளரத்தொடங்கியது. இதனிடையே, புத்தர் தமது எண்பதாவது வயதில் (கி.மு. 483ல்), **குஷீநகரம** (குஸிநாரா) என்னுமிடத்தில் பரிநிர்வாணமெய்தினார். (பரிவர்வாணமென்பது பிறப்பை அல்லது பிறப்புக்குக் காரணமான ஆசையை அழித்துப் **பிறவா யாக்கை** நிலையைப் பெறுதல் ஆகும்.) புத்தரின் பரிநிர்வாணத்துக்குப்பின் பௌத்தம் வளர்ச்சி பெற்று, அனைத்துலக சமயமாக விளங்கி வந்துள்ளது.

பௌத்த மாநாடுகளும், பௌத்தத்தின் வளர்ச்சியும்

பௌத்தமதம்

பிராமணீயத்தின் உலகியற்சார்பை வெறுத்தபோதும், சமணத்தின் கடுமையை பௌத்தம் கொண்டிருக்கவில்லை. பௌத்த மதத்துறவிகள் மிக முக்கிய தேவைகளை – உணவு, உடை ஒதுக்கிடம் என்பவற்றை - தமது உடல்வலி குன்றாதிருக்க வேண்டிய அளவுபெற அனுமதிக்கப்பட்டனர். பௌத்தத்தின் மிக முக்கிய கோட்பாடுகள் **'உயர்ந்த நான்கு உண்மைகள்'** என்பவையே துக்கம் அல்லது துன்பம் உலக முழுவதும் வியாபித்துள்ளது. இதற்குக் காரணமான ஆசையே மறுபிறப்புக்கும் துன்பத்துக்கும் காரணமாகின்றது. ஆசையை ஒழித்தாலே மீட்சியுண்டு. பற்றின்மையுடைய மனநிலையைப் பெறுதல் மூலமே ஆசையை ஒழிக்கலாம். இந்நிலையைப் பெறுவதற்கு செவ்விய நெறியான **எட்டங்கப்பாதையைக** கடைப் பிடிக்கவேண்டும் என்பனவே அந்நான்கு உயர்வான உண்மைகள் ஆகும். புத்தர் போதித்த 'செவ்விய எட்டங்கப்பாதை'யில் அவர் குறிப்பிட்டவை வருமாறு: செவ்விய எண்ணங்கள், நல்ல அவாக்கள், நன்மொழி, நன்னடத்தை, செம்மையான வாழ்க்கைத் தொழில், நல்ல முயற்சி, செவ்விய உளப்போக்கு, நற்சிந்தனை, இவ்வழியைக் கடைப்பிடிப்பதால், துன்பச் சூழலிலிருந்து விடுதலை பெற்று, பிறவித்துயர் நீங்கி, ஆசையினின்றும் தம்மை அகற்றி மிகமேலான நிர்வாணத்தை எய்தலாம். கடவுள் (பரமாத்மா) ஒருவர் உலகைப் படைத்து அதை இயக்குகின்றார் என்பதைப் புத்தர் ஏற்கவில்லை. பௌத்த மதத்தில் புத்தரே மிக முக்கிய கடவுளாகப் பின்னர் மதிக்கப்படலானார். பௌத்தமதக் கோட்பாடுகள், முந்திய பிராமணீயத்தினின்று பல வகைகளில் வேறுபட்டுள்ளன. சமணத்துக்கும் பௌத்தத்துக்கும் சில ஒற்றுமைகள் இருந்த போதும், முக்கிய வேறுபாடுகளும் அவற்றினிடையேயிருக்கக் காணலாம்.

முதற் பௌத்தமாநாடு

பௌத்தத்தின் வளர்ச்சியில், இடையிடையே கூட்டப்பட்ட பௌத்த மாநாடுகள் முக்கியமானவை. சமயக் கொள்கையில் திரிபுகள் அல்லது முரண்கள் இருப்பின்

அவற்றையகற்றி, புத்தரின் கோட்பாடுகளின் தூய்மையைப் பாதுகாத்தமை இம் மாநாடுகள் செய்த ஒரு முக்கிய பணியாகும். சமயக் கோட்பாடுகளைத தெளிவாக்கியதுமன்றி, ஒழுக்க விதிகளை மீறிய பிக்குகளைச் சங்கத்தினின்று நீக்கி, சங்கத்தின் நற்பெயரை அவை காப்பாற்றி இருக்கின்றன. இத்தகைய மாநாடுகளில் முதலாவது மாநாடு புத்தரின் மறைவு ஏற்பட்ட ஒரு சில நாட்களில் நடைபெற்றதாக மரபுகள் கூறுகின்றன. மகதத்தின் தலைநகராகவிருந்த **இராஜக்கிருகத்திலேயே** இம் முதற் பௌத்த பேரவை கூடிற்று. 500 தேரர்கள் கூடிய இப்பேரவைக்கு, **மகாகாசியப்பதேரா** தலைமை தாங்கினார். புத்தர் நிகழ்த்திய அறவுரைகள் ஓதப்பட்டு, பின்னர் **தர்மம், விநயம்** என்ற இரு பிரிவுகளாக அவை தொகுக்கப்பட்டன. இவற்றுள் தர்மம் என்பதே, பௌத்தமதக் கோட்பாடுகளைக் குறிப்பதாகும். விநய(ம்) என்பது, பௌத்த பிக்குகளுக்குரிய ஒழுக்க விதிகளைக் குறிக்கும் பகுதியாகும். தர்ம அறவுரைகள் ஐந்து பகுதிகளாகவும், விநய அறவுரைகள் ஒரு பகுதியாகவும் பாராயணஞ் செய்யப்பட்டு, பிற்காலத தலைமுறைகளுக்கு அளிக்கப்பட்டன. இதைவிட முக்கியமானது, இம்மாநாட்டிலேயே திரிபிடகம் எனப்படும் பௌத்த சடங்குமுறை தொகுக்கப் பட்டதாகும். புத்தரின் போதனைகளும் பொன்மொழிகளும் **சுதத-பிடக(ம்), விநய-பிடக(ம்), அபிதர்ம-பிடக(ம்)** என்கின்ற முப்பிரிவுகளாகத் தொகுக்கப் பட்டன. இவ்வாறு, இறுதி வடிவத்தைப் பெற்ற பௌத்தக்கோட்பாடுகள் தேரவாதப் பிரிவினரின் வேதமாக மதிக்கபட்டு வரலாயின.

இரண்டாம் பௌத்த மாநாடு

புத்தர் பரிநிர்வாணமெய்தியதிலிருந்து, மேலும் நூறாண்டுகாலம் கழிந்தபின், பௌத்த சங்கத்தில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டதால், அதன் ஒற்றுமை பாதிக்கப்பட்டது. வைசாலி என்ற இடத்தைச் சேர்ந்த கிழக்குப்பகுதிக் குருமார்கள், விநய விதிகள் பத்தைத் தளர்த்துமாறு கிளர்ச்சி செய்ததைத் தொடர்ந்தே, இதை வரவேற்காத மேற்குப்பகுதிக் (அவந்தி) குருமார்களால், மகத மன்னன் காலாசோகன் காலத்தில் இரண்டாவது பௌத்தக்கழகம் கூட்டப்பட்டது. எழுநூறு தேரர்கள் கூடி நடத்திய மாநாட்டுக்கு ரேவத-தேரர் தலைமை தாங்கியதாக இலங்கைக் காலவேடுகள் கூறும். மாநாடு விதிகளைத தளர்த்துவதைக் கண்டித்து முடிவுசெய்யவே, அம்முடிவை ஏற்காத வஜ்ஜி-பிரிவைச் சேர்ந்த **வைசாலிப் பிக்குகள்** தேரவாதப் பிரிவினின்றும் வெளியேறி, **மஹாசாங்கிகப் பிரிவை** அமைத்துக் கொண்டனர். இவ்வாறே, சங்கத்தில் முதன்முதலாகப் பிளவு உண்டாயிற்று. இவ்விரண்டாம் பௌத்தக்கழகம் சமயக் கோட்பாட்டு நூல்களை மீண்டும் ஆய்ந்து, சுத்த-பிடகத்திற்கு இறுதி உருவத்தைக் கொடுத்தது.

மூன்றாம், நான்காம் பௌத்த மாநாடு

இதன் பின்னர், மூன்றாம் பௌத்தக்கழகம் அசோகப் பெருமன்னன் காலத்தில் **பாடலிபுரத்தில்** கூட்டப்பெற்றது. இலங்கைக்குப் பௌத்தம் பரவியமைக்கும், அம்மாநாட்டுக்கும் நேரடித் தொடர்புண்டு. அசோகப் பேரரசன் காலத்திலேயே,

பௌத்தம் உலகச் சமயங்களுள் ஒன்றாக மாறியது என்பதையும் கனிஷ்ட மன்னன் காலத்தில் **பெஷாவாரில** நான்காம் மாநாடு நடைபெற்றகையோடு இதற்கும், இலங்கையில் மகாயானப் பிரிவைச் சேர்ந்த பௌத்தம் பரவியது என்பதனையும் பௌத்த சமய வரலாறுகூறும். இப்பௌத்த மாநாடுகள், சங்கத்தில் பிரிவுகள் வளராமல் தடுத்து, மதக்கோட்பாடுகளையும், குருமாருக்குரிய விநய விதிகளையும் வரையறுத்து வந்ததோடு, பிற நாடுகளுக்குத் தூதுக்குழுக்களை அனுப்ப முடிவுசெய்து பௌத்தத்தின் வளர்ச்சிக்கு உதவியுள்ளதையும் காணலாம்.

மௌரியப் பேரரசின் எழுச்சி

மகதப் பேரரசின் எழுச்சி: மகதப் பேரரசின் ஆட்சியாளராக விளங்கிய 'மௌரியர்' மரபில் வந்தவனே அசோகனாதலால், மகத அரசின் எழுச்சிபற்றி முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். வேதகால முடிவிற் பல சிறிய அரசுகளைக் கொண்டிருந்த வட இந்தியாவில், கி.மு. 6ஆம் நூற்றாண்டில் ஒரு புதிய அரசியல் விருத்தி ஏற்பட்டது. வலிமைமிக்க அரசுகள் தோன்றி, அயலிலுள்ள சிறிய அரசுகளைத் தம்முடன் இணைக்கலாயின. **'மகாஜனபத'** என அழைக்கப் பட்ட பதினாறு பெரிய அரசுகள் அந்த நூற்றாண்டில் ஏற்படலாயின. காசி, கோசலம், அவந்தி, அங்கம், வஜ்ஜிக்கூட்டணி, மகதம் என்பன இம் 'மகாஜன பத'க்களில் முக்கியமானவை. இவற்றுள், கங்கைக்குச் சிறிது தெற்கே அமைந்திருந்த மகதம், சிறிது சிறிதாக தன்வலியைப் பெருக்கி, வடஇந்தியாவின் பெரும் பகுதியின் மேலாணை செலுத்த முற்பட்டது. பிம்பிசாரன் என்பவனுடைய ஆட்சியின்போது (கி.மு. 540 - 490) வங்கம் முதலான அயல்நாடுகள் மகதத்துடன் இணைக்கப்பட்டதால், மகத அரசின் எல்லைகள் விரிவடைந்தன. இம்மன்னனின் காலத்தில், இராஜக்கிருகம் தலைநகராக்கப்பட்டது. மகாவீரர், புத்தர் ஆகிய இருவருமே, இவன் காலத்தில் வாழ்ந்து, தம் மதபோதனைகளை நிகழ்த்தினர் எனப்படுகின்றது. பிம்பிசாரன் மகனான அஜாதசத்துருவின் காலத்தில் (கி.மு. 490 - 459) வடக்கே கங்கைவரையும் கிழக்கே கந்தகி வரையும் மகதப் பேரரசு விரிவடைந்தது. இவனைத் தொடர்ந்து ஆட்சி செய்தவர்களும், குறிப்பாக சிசுநாகன், காலாசோகன் ஆகியோர் விரிவாக்கற் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரலாயினர். இவர்களில் ஒருவனுடைய காலத்திலேயே, **பாடலிபுரம்** (இப்போதைய பாட்னா) என்ற நகர் தலைநகராக்கப்பட்டது. இம்மன்னர்களுக்குப் பின் **மகாபத்மன் முதலான நந்தர்கள் மகத அரசர்களாக விளங்கினர். இவர்களுடைய ஆட்சி நடைபெற்றபோதே கிரேக்கப் பேரரசனான மகா அலெக்சாந்தரின் இந்தியப் படையெடுப்பு நிகழ்ந்தது.** வடமேற்கிந்தியாவில் பெற்ற வெற்றியுடன் முன்னேறிய அலெக்சாந்தர் மேலே கங்கைப் பள்ளத்தாக்கிற் புகாதவாறு மகாபத்மநந்தனின் வலியும், **அலெக்சாநதரின் படையில் உண்டான குழப்பமும** தடை செய்தன. விருப்பமின்றி அலெக்சாந்தர் பின்வாங்கியபோது, இந்தியாவில் தான் கைப்பற்றிய பகுதிகளைச் சில சத்திராப்பிகள் (Satrapys) என்ற மகாணங்களாகப் பிரித்து, அவற்றைப **பாரசீக, மசிடோனிய** ஆட்சியாளரிடம் ஒப்படைத்து மீண்டான்.

மௌரியப் பேரரசு

அலெக்சாந்தரின் படையெடுப்பு மறைமுகமாக மௌரியப் பேரரசின் எழுச்சிக்குத் துணை செய்தது. வடமேற்கிந்தியாவில் இராச்சியங்கள் வலியிழந்து, பிளவுபட்டு வந்ததைத் தடைசெய்து, மௌரியரின் கீழ் முழு வடஇந்தியாவும் ஒன்றுபட அது வழி திறந்தது. 'மௌரிய' அரச மரபின் முதல் மன்னனும், மௌரியப் பேரரசின் தாபகனுமான **சந்திரகுப்த மௌரியன்,** முதலில் ஒரு நந்தனின்கீழ்ப் பணியாற்றிய பின்னர் அவனுடைய சேனைத் தலைவனாக விளங்கினான். அலெக்சாந்தர் இந்தியாவினின்றும் வெளியேறியபோது இருந்த நிலையைச் சந்திரகுப்தன் உடன் பயன்படுத்தினான். சாணக்கியன் (கௌடில்யன் - இவனே, அர்த்த சாஸ்திரம் என்பதை எழுதியவன்) என்ற அரசியல் மதியூகியின் துணை யுடன் ஒரு பெரும் படையைத் திரட்டி முதலில் அலெக்சாந்தரின் அதிகாரிகளைத் (தலைமைப் பணியாளர்களை) தோற்கடித்து, பஞ்சாப் பகுதியைத் தனதாக்கினான். பின்னர், மகதத்துக்கெதிரே போர் தொடுத்து, அதன் அரசனாக விளங்கிய ஒரு நந்தனைப் புறங்கண்ட சந்திரகுப்தன், மகதப் பேரரசை இணைத்துக்கொண்டான். சந்திரகுப்தனது அதிகாரம் ஓங்குவதை அலெக்சாந்தரின் கீழைப் பேரரசின் ஆட்சியாளனாக விளங்கிய **செலியூக்கஸ் நிகேற்றா** பொறுக்காது போர்தொடுக்க ஆயத்தமானான். சந்திரகுப்தனுக்கும் இவனுக்குமிடையே நடைபெற்ற போரின் முடிவில், **செலியுக்கஸ்** தனது ஆளுகையின் கீழிருந்த மேற்கிந்தியாவின் பகுதிகளைச் சந்திரகுப்தனுக்குக கையளித்துவிட்டான். சந்திரகுப்தன ஆட்சியின் போது (கி.மு. 322 - 298), மௌரியப் பேரரசு மேற்கே காபுல் பள்ளத்தாக்கிலிருந்து கிழக்கே கங்கைக் கழிமுகம் வரை வியாபித்திருந்தது. சந்திரகுப்த மௌரியனால் எழுப்பப்பட்ட பேரரசு, பிந்துசாரன் என்ற அவனது மகன் காலத்தில் (கி.மு. 298 - 273) மேலும் விரிவடைந்தது. குறிப்பாக, தக்கணம் என்ற நிலப்பகுதி இவனாலேயே இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.

அசோகப் பேரரசன்

அசோகன் பட்டமெய்தல் : வரலாறு கண்ட பெருமன்னர்களில் ஒருவனும், இந்தியாவின் தலைசிறந்த பேரரசனுமான அசோகன் பிந்துசாரன் என்பவனுடைய மகனாவான். பிந்துசாரன் பேரரசனாக விளங்கிய காலத்தில், உச்சயினியில் பதிலரசனாக பணியாற்றி வந்தான். அசோகன் பிந்துசாரனுடைய மரணத்தைத் தொடர்ந்து கி.மு. 274இல் மௌரியப் பேரரசின் உரிமையை அசோகன் பெற்றுக் கொண்டான். இலங்கை மரபுகளின்படி, தன் சகோதரர்கள் பலரைக் கொன்று குவித்தபின்னரே, அசோகன் ஆட்சியைப் பெறமுடிந்ததெனப்படும். இம்மரபு உண்மையை ஆதாரமாகக் கொண்டிருக்கமுடியாது என வரலாற்றறிஞர் துணிகின்றனர். அசோகனுடைய முடிசூட்டு வைபவம் கி.மு. 269லேயே (அரசைப் பெற்றுச் சுமார் ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்னரே) நடைபெற்றுள்ளது. இதனால் அசோகன், தனது ஆட்சித் தொடக்கத்தில் தன் அரசுரிமையை உறுதிப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டிருத்தல் கூடுமெனலாம்.

கலிங்கப் போரும், பேரரசின் விரிவும் : அசோகன் ஆட்சியைப் பெற்ற பின்னர், தம் முன்னோரின் போர்க் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரலானான். முடிசூடிய எட்டாம் ஆண்டில் (கி.மு.261ல்) கலிங்கத்துக்கெதிரே போர் தொடுத்தான். இம் மாகாணம் முன்னர் மகத அரசுக்குட்பட்டிருந்தும், இவன் காலத்தில் மௌரியப் பேரரசுக்குள் அடங்காதிருந்தது. இப்போரில், கலிங்கப் படையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் கொலை வாளுக்கிரையாகி மடிந்தனர். மற்றும் பலர் கைதிகளாக்கப்பட்டனர். இப்போர் ஒன்றையே அசோகன் மேற்கொண்டபோதும், இதன் முடிவில் அசோகனுடைய பேரரசு மிகவும் விரிவுபெற்று விளங்கியது.

தெற்கு எல்லைப்புறத்தில் சோழர், பாண்டியர், சத்தியபுத்திரர், கேரளபுத்திரர் ஆகியோர் விளங்கியதாகவும், வடக்கே இமாலய மலையின் அடிவாரம் வரை அவனது ஆட்சி பரந்திருந்ததெனவும், அவனது அரசாணைகள் (கல்வெட்டுக்கள்) தெரிவிக்கின்றன. வடமேற்கு எல்லையில் வாழ்ந்த மக்களாகக் குறிப்பிடப்பட்டவர்கள் யவனர், கம்போஜர், காந்தாரர் ஆகியோர். மேற்கே பாரசீகம், சிரியாவரை மௌரியப் பேரரசு வியாபித்திருந்தது. ஆனாலும் அவனுடைய நேரடி ஆட்சி பாடலிபுரத்தை மையமாகக் கொண்ட மகத அரசிலும், அரசப்பதிலாளரின் ஆட்சியிலிருந்த தட்சசீலம், அவந்தி, உச்சயினி, கலிங்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசங்களிலும் மட்டுப்படுத்தப்பட்டிருந்திருக்கலாம். ஏனைய பகுதிகள் அசோகனுடைய மேலாணையை ஏற்றுக்கொண்டு அரசுகளாக விளங்கியிருத்தல் கூடும்.

பௌத்தத்தை தழுவல்: அசோகன், தந்தை பிந்துசாரனைப் போலப், பிராமணீயத்தை (இந்துமதத்தை)யே முதலில் பின்பற்றி வந்தானாயினும், ஆட்சியைப் பெற்ற சில ஆண்டுகளுக்குள் பௌத்தத்தைத் தழுவிக்கொண்டான். இலங்கை மரபுகளும், வட இந்திய மரபுகளும் இதுபற்றி வெவ்வேறான விளக்கங் களைத் தருகின்றன. இலங்கை ஆதாரங்களின்படி, பட்டமெய்திய நான்காவது ஆண்டில் மொகலி புத்திரதிசதேரர் என்ற பிக்குவால் அசோகன் மதமாற்றம் செய்யப்பட்டான். இதை ஏற்றுக்கொள்வதானால் பௌத்தத்தைத் தழுவிய பின்னரே அசோகன் கலிங்கப்போரை மேற்கொண்டதாகக் கொள்ளவேண்டும். தொடக்கத்தில் பௌத்தக் கேட்பாடுகளில் அக்கறை கொள்ளாதிருந்து, பின்னர் சங்கததினருடன் நெருங்கிய தொடர்புகிட்ட நேர்ந்ததனாலும், கலிங்கப் போரின்போது உண்டான கோர அழிவுகளைக் கண்ணுற்றதனால் உண்டான கழிவிரக்கத்தினாலும், பௌத்தக் கோட்பாடுகளில் - அதன் தருமத்தில் - அதிக ஈடுபாடு காட்டலானான். வட இந்திய மரபுகளிற் கூறப்படும் விளக்கத்திற்கே கூடுதலான வரவேற்பு உண்டு. அம்மரபுப்படி, கலிங்கப்போரின் நிகழ்ச்சிகளினால் மனமுடைந்த அசோகனை உபகுப்தர் என்ற பிக்கு பௌத்தத்திற்கு மதம் மாற்றினார். பௌத்தத்தை முன்னர் தழுவியிருந்தாலும் கலிங்கப்போரின் நிகழ்ச்சிகளே அசோகனுடைய கொள்கையில் ஒரு பெருந்திருப்பத்தை உண்டுபண்ணின. படுகொலைகளையும், உயர்ச் சேதத்தையும் நாடுகடத்தலையும் உண்டுபண்ணும்

போர்களை, நாடு கைப்பற்றுவதற்காக இனி மேற்கொள்வதில்லை என்ற முடிவுக்கு அசோகன் வந்தான். தன் அதிகாரத்தின் உச்சநிலையிலிருந்து கொண்டு இம்முடிவுக்கு வந்தமையே அசோகனுக்குத் தனிச் சிறப்பை அளிக்கிறது. இவ்வாறு பௌத்தத்தைப் பின்பற்றும் ஓர் 'உபாசக'ராக (இல்லறத்ததினின்று பௌத்தக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்) அசோகன் மாறியமை, பௌத்தத்தின் வரலாற்றிலும், அதேவேளையில் அவனுடைய அரசியற் கொள்கையிலும், பாலனத்திலும் பல திருப்பங்களை உண்டுபண்ணியது.

சமயக்கொள்கை: பௌத்த மதத்தின் வளர்ச்சியிலும், சங்கத்தினரின் நலனிலும் பெரும் அக்கறை கொண்டு அவற்றின் மேம்பாட்டிற்கு அசோகன் உழைக்கலானான். பௌத்தத்தையே தனது பேரரசின் **'அரச மத'** மாகக் கைக்கொண்டு அதற்கு மேன்மையளித்தான். பௌத்த விகாரைகள் அவனுடைய மட்டற்ற தாராண்மையை அனுபவித்தன. அவன் நிறுவியதாக மரபுகளிற் கூறப்படும் தூபிகள், விகாரைகள் முதலானவை எண்ணிலடங்காதவை. பௌத்தத் திருமறைகள் சிலவற்றைத் தெரிவுசெய்து, அவற்றை ஓதிவரும்படி சங்கத்தினருக்கு விதந்துரைத்தான். பௌத்த தருமத்தைப் பிறருக்கு விளக்கி வரும்படி பிக்குமார்களை வேண்டினான். அவர்களுக்கு உதவியாகச் சில அரச அலுவலரை நியமித்தான். சங்கத்திற் பிளவுகள் தோன்றாதிருக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டான். தானே பல புண்ணிய தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டு வந்தான். பௌத்தத்தின் வளர்ச்சியில் அசோகன் மிகுந்த அக்கறை காட்டிய போதும், ஏனைய சமயப்பிரிவினர்க்கும் அவன் உதவிகள் செய்து, தன் சமயப் பொறையை நிலைநாட்டினான் இக்கொள்கை புத்தர் பெருமானின் முன்மாதிரியை யும், போதனைகளையும் பின்பற்றியே உருவாக்கப்பட்டதென்பர். பிராமணர்கள், சமணர் ஆகிய பிறமதத்தவர்க்கு அசோகன் பொருளுதவியை அளித்ததுமன்றி, அவர்கள் தம் மதங்களைப் பின்பற்றி வளர்க்கவும் ஊக்கமளித்தான். ஒரு மதப்பிரிவினர் மற்றொரு மதப்பிரிவினரை நிந்தனை செய்வதை அறவே தவிர்க்கும்படி தன் ஆணைகளிற் போதித்துள்ளான்.

அசோகனது பாலனம்

பௌத்தத்தை அசோகன் தழுவிய பின் அவனுடைய சொந்த வாழ்விலும், பாலனக் கொள்கையிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. அரச குடும்பத்தினரின் தேவைக்குமே வனவிலங்குகளை வேட்டையாடுதலை நிறுத்திவைக்கவும், அவற்றின் பாதுகாப்புக்கெனச் சில காலங்களில் வேட்டையாடுதலை அறவே தடுத்துவைக்கவும் ஆணை பிறப்பித்தான். வேள்விகளில் மிருகங்கள் பலியிடப் படுவதை நிறுத்தி வைத்தான். மனிதருக்கும் மிருகங்களுக்கும் வைத்தியத்திற்குப பயன்படக்கூடிய மூலிவகைகள் கிடைத்தற்கு ஏற்பாடுகள் செய்தான். பிரயாணி களின் வசதிக்குப் பெருந்தெருக்களின் இரு மருங்கிலும் நிழல்தரு மரங்களை நாட்டுவித்ததோடு, ஆங்காங்கே மடங்களையும் கிணறுகளையும் நிறுவிக் கொடுத்தான். பலவிடங்களில் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டிருந்தன.

நிருவாகம் தண்ணளியுடையதாகவும், நீதிமுறை காருண்யம் கொண்டதாகவும் மாற்றியமைக்கப்பட்டன. தொலைமாகாணங்களில் குடிகளை அதிகாரிகள் வருத்தாது பார்ப்பதற்கு விசேட அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒழுக்கம் பற்றிய அறிவுரைகளைப் போதிப்பதற்குப் புதிதாக 'தர்ம மகா மாத்திரர்கள்' என்ற அலுவலரை நியமித்திருந்தான். இவ்வாறாக அசோகன் தன் பாலனக் கொள்கையிலும் தான் போதித்த தருமத்தையே வலியுறுத்தி வந்தான்.

அசோகனுடைய தருமம்

அசோகன் போதிதத 'தர்மம்' ஆனது தனியே பௌத்தத்திற்குச் சிறப்பானதாக இராது எல்லா மதங்களுக்கும் பொதுவான சில கோட்பாடுகளை வலியுறுத்துவ தாக விளங்கியது. புத்தர் வற்புறுத்திய அஹிம்சை, மைத்திரேய (நடுவழி) என்பன அவனுடைய தருமத்தின் அடிப்படைகளாகும். அன்பு, அருளாட்சி, தாராண்மை, பரிவு, கீழ்ப்படிவு முதலான பண்புகள் வற்புறுத்தப்பட்டன. கொல்லாமை, உண்மை பேசுதல், பெற்றோர்க்கும், மூத்தோர்க்கும் கீழ்ப்படிதல், பிராமணர்களுக்கும் துறவிகளுக்கும் உரிய மரியாதைகளைச் செலுத்துதல் போன்ற நல்லொழுக்கங்கள் போற்றப்பட்டன. இப்போதனைகளை மன்னன் தன் பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் குடிகள் அறிவதற்காக விசேடமாக நாட்டப்பட்ட கற்றூண்கள் (தர்ம ஸ்தம்பங்கள்), கற்பாறைகள் ஆகியவறறில் பொறிப்பித்தான். இந்தியாவின் பல பாகங்களிலும் இவை பரந்து காணப்படுவதால், இவற்றைக் கொண்டும் அசோகனுடைய அரசின் பரப்பைக் கணிக்க முடிகின்றது.

மூன்றாம் பௌத்த மாநாடும், மதம் பரப்புக் குழுக்களும்

பௌத்த சங்கத்தினர்க்கு அசோகன் வழங்கிய கொடைகளும், மானியங்களும், ஒரு வகையில் சங்கத்துக்கு இழுக்குத்தரு ஒரு விருத்தியை ஏற்படுத்தின. சமய ஆர்வத்தாலன்றி, வெறும் பொருள் வேட்கையால் சங்கத்தில் சேர்ந்த போலிக்குருமார் பலர் ஒழுக்கங் குறைந்தவர்களாகவும், முரண்பட்ட கோட்பாடு களைப் போதிப்பவர்களாகவும் விளங்கினர். இவர்களால் ஏனைய நல்லொழுக்கமுள்ள தேரர்களுக்கும அவமானம் உண்டாயிற்று. விரைவில் இப்பிரச்சினை அசோகப பெருமன்னனது கவனத்தைப் பெற்றது. தன் அமைச்சர் ஒருவர் மூலம் இதற்குப் தீர்வுகாண முற்பட்டு வெற்றி கிட்டாதுபோகவே, அசோகன் தன் மதிப்பிற்கும் மட்டற்ற நம்பிக்கைக்கும் உரிய மொகலிபுத்திரதிச தேரரைத் தலைநகர்க்கு வருவித்தான். முதலில், சங்கத்தினின்றும் போலிக் கொள்கையாளர் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். இதன் பின்னர் உபோசத விழா ஒழுங்காக நடாத்தப்பட்டது. மொகலிபுத்திரதிசதேரர் தலைமையில் பாடலிபுரத்தில் சுமார் ஆயிரம் பிக்குமார் கூடிச் சமயக் கோட்பாடுகளை மீண்டும் ஆராய்ந்தனர். இம்மாநாட்டிலேயே தேரவாத பௌத்தத்திற்குரிய திருநூல்கள் தம் இறுதிவடிவத்தைப் பெற்றதாகக கொள்வர். இம்மாநாட்டில் சங்கத்தினின்றும் வெளியேற்றப்பட்ட பலர் நாலந்தாவில் கூடி, 'மகாசாங்கிக' முதலான (தேரவாதமல்லாத) பிரிவுகளில் சேர்ந்துகொண்டனர்.

மூன்றாம் பௌத்தக்கழக முடிவில் மாநாட்டுத் தலைவரான மொகலிபுத்திர தேரரின் முயற்சியால், மௌரியப் பேரரசின் எல்லைப்புற அரசுகளுக்கும் அயல்நாடு களுக்கும் பௌத்தத்தைப் பரப்புவதற்குத் தூதுக்குழுக்களை அனுப்புவதாக முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு தூதுக்குழுவிலும் ஐந்து தேரர்களுக்குக் குறையாத தொகையினர் அங்கம் வகித்தனர். இக்குழுக்கள் செல்லும் நாடுகளில் பௌத்த மதத்திற்கு மக்களை மாற்றுவதோடு, அந்நாடுகளிற் **'சங்க'த்திற்கு** குருமார்களைச் சேர்க்கவும் திட்டம் இருந்தது. காஷ்மீரம், காந்தாரம் ஆகிய பகுதிகளுக்குச் சென்ற குழுவுக்கு **மஜ்ஜந்திக** என்ற தேரர் தலைவராக விளங்கினார். **ரக்கிதர்** என்பாரின் தலைமையில் வனவாசி என்ற மாகாணத் திற்கும், **மகாதேவர்** என்பாரின் தலைமையில் மகிஷமண்டலம் என அழைக்கப் பட்ட மைசூர் மாகாணத்திற்கும் மதம் பரப்புக் குழுக்கள் அனுப்பப்பட்டன. இந்தியாவின் மேலைக்கரையிலுள்ள **அபரந்த** என்ற பகுதிக்குச் சென்ற குழுவின் தலைவராக **தர்மரக்கிதா** என்பார் இருந்தார். **மகாரக்கிதா** என்ற மற்றொரு தேரரின் தலைமையிற் சென்ற குழு **யவனர்** (கிரேக்க) நாட்டிற்குச் சென்றது. இமாலயப் பிரதேசங்களில் மதம் பரப்பச் சென்ற குழுவிற்குப் பொறுப்பாக **மஜ்ஜிம** என்பாரும், **சுவர்ணணபூமி** (பர்மா) சென்ற குழுவிற்குப் பொறுப்பாக **சொணர், உத்தரா** ஆகியோரும் விளங்கலாயினர். இவை அனைத்திலும் மேலாக, இலங்கைக்கு அனுப்பப்படவிருந்த குழுவிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பேரரசன் அசோகனுடைய புதல்வரான **மகிந்த (மகேந்திர)** தேரரே இக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இக்குழுக்களின் முயற்சிகளால் பௌத்தமதமானது இந்தியாவின் பல பாகங்களுக்கும், பர்மா, இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கும் பரவியது. மூன்றாம் பௌத்தக்கழகமும், மொகலிபுத்திர திசதேரரும் பௌத்தத்தைப் பரப்ப எடுத்த முயற்சிகளாலும், இவற்றில் அசோகன் காட்டிய ஆர்வத்தினாலும் அசோகனது ஆட்சி, சமயத்துறையில் அதிக முக்கியத்தைப் பெற்றுவிட்டது. **அசோகனுடைய மதம்பரப்புக் குழுக்களின் வெற்றிக்கு தென்னாசிய வாணிக வழிகளே பெரிதும் சாதகமாக அமைந்திருந்தமையை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.**

அநுராதபுரகால உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளும் வாணிக வழிகளும் (முற்பட்டகாலம்)

இலங்கையின் மிகமுற்பட்ட காலவரலாற்றை ஆராயும்போது வர்த்தகம் எந்தளவிற்கு அக்காலகட்டத்தில் மிகவும் முக்கியத்துவம்வாய்ந்த தொழில் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டது என்பதை உணரலாம். இலங்கை வரலாற்றின் ஆரம்பம் இலங்கையின் நாகரிகமடைந்த குடியேற்றங்களின் ஆரம்பம், பின்னர் இராச்சியங்கள் என்று கூறத்தக்க வகையிலான அரசுகளின் ஆரம்பம், அரச வம்சங்களின் தோற்றம் போன்றன யாவும் **இந்நாட்டின் வர்த்தகத்தோடும் வாணிக மார்க்கங்களோடும** மிகநெருங்கிய தொடர்புகளையுடையதாக காணப்படுகின்றன. பொதுவாக, உலக வரலாற்றில் புதுப்புதுக் குடியேற்றங்களின் ஆரம்பமும், புதுப்புது இராச்சியங்களின் தோற்றமும் **பொருளாதாரக் காரணி களின் விளைவாகவே** ஏற்படுவதைக் காணமுடியும். அவ்விதத்தில் இலங்கையில்

கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் ஏற்பட்ட இந்தோ-ஆரியக் குடியேற்றங்கள், புதிய இராச்சியங்களின் தோற்றங்கள் ஆகியன **வர்த்தகக் காரணிகளாலேயே** உருவாக்கப்பட்டன. பொதுப்பட வடஇந்தியாவிலிருந்து தெற்குநோக்கிப் பரவிய ஆரியமயமாக்க இயக்கம் குறிப்பிடத்தக்களவிற்கு **வர்த்தகப் பொருளாதாரக** காரணிகளினால் பரவிக்கொண்ட ஒரு நடைமுறை யெனில் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதே. **இதனையொத்த நடைமுறையினை தெற்கே இலங்கையிலும், தென் கிழக்கே மலாயா, இந்தோனேசியத் தீவுகளிலும் இவ்வியக்கம் பரவிக்கொண்ட வரலாற்றைப் பார்க்குமிடத்து, கூடியளவிற்கு இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகக் காரணி களின் விளைவாகவே அவ்வாறு ஏற்பட்டுக் கொண்டமையினைக் காண முடிகிறது.**

பொதுப்பட இலங்கையில் ஏற்பட்ட ஆரியர் குடியேற்றம் சம்பந்தமாக தோன்றியுள்ள கதைத் தொகுப்பினையும் அதுபற்றிக் கூறுகின்ற இலக்கியச் சான்றுகளையும் ஆராய்கின்றபோதும் நம்பகமான அம்சங்களாக இடம்பெறுகின்ற சான்றுகள் இங்கு ஏற்பட்ட குடியேற்றங்கள் வர்த்தகத் தொடர்பின் விளைவாக ஏற்பட்டது என்பதனையே காட்டுகின்றன. வடஇந்திய சமஸ்கிருத நூல்கள் சில இவ்வுண்மையை மிக வெளிப்படையாகவே குறிப்பிட்டுள்ளன. ஜாதகக் கதைகள், ஸிங்கலாவதான என்ற நூல்கள் அவ்வாறான வர்த்தகத தொடர்பின் நிமித்தமாக ஏற்பட்ட குடியேற்றங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. வடஇந்தியாவிற்கும், ஈழத்திற்கும் இடையில் கி.முற்பட்ட நூற்றாண்டுகளல் ஏற்பட்டிருந்த வர்த்தகத தொடர்புகள் பற்றி இந்நூல்கள் பல தகவல்களைத் தருகின்றன. எனவே வர்த்தகத் தொடர்பின் நிமித்தமாக இலங்கையுடன் தொடர்பு கொண்டிருந்த இந்தோ-ஆரியர் பலர் காலப்போக்கில் படிப்படியாக இத்தீவிலே தங்கி, இங்கு குடியேற்ற முறைமைக்கு வழிவகுத்தனர் எனலாம். இதன் விளைவாக புதிய இராச்சியங்கள், புதிய அரச வம்சங்கள் தோன்றுவதற்கும் அவ்வர்த்தகத் தொடர்பின் அடியாகத் தோற்றம்பெற்ற குடியேற்றங்கள் வழிவகுத்துக் கொண்டன.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலே இலங்கையுடன் இடம்பெற்ற வர்த்தகம் பற்றி அறிந்துகொள்வதற்கு **இலக்கிய ஆதாரங்கள** குறிப்பிடத்தக்க அளவிற்கு உதவிபுரிகின்றன. எனினும் இலங்கை வரலாற்று நூல்களான **தீபவங்ஸம், மகாவங்ஸம்,** ஆகியனவற்றில் வர்த்தகம் பற்றிய குறிப்புக்கள் அரசியல் வரலாற்றோடு அல்லது சமய வரலாற்றோடு தொடர்பான முறையில் மட்டும் கொடுக்கப் பட்டிருப்பதினால் இவ்வாதாரங்களிலிருந்து பொதுப்பட இலங்கை வர்த்தகம் பற்றி அதிகம் அறிந்துகொள்ள முடியவில்லை. இருப்பினும் வர்த்தகம் தொடர்பாக இந்நூல்களிலிருந்து நாம் அறியும் தகவல்கள் வடஇந்தியாவில் மகதப் பேரரசு எழுச்சியுற்றதன் விளைவாக, அப்பேரரசு பல்வேறு நாடுகளுடன் தொடர்புகொண்டு **கடல் வாணிபத்தினை** வளர்த்திருந்தது என்பதாகும். அத்தகைய கடல் வாணிபத் தொடர்புகள் இலங்கையுடனும் ஏற்பட்டிருந்தது என்பதனை வடஇந்திய ஆதாரங்களிலிருந்தும், இலங்கையின் வரலாற்று நூல்களிலிருந்தும் தெரிந்துகொள்ள முடிகிறது.

வட கிழக்கு இந்தியத் துறைமுகமான **தாம்ரலிப்திக்கும்** வட இலங்கைத் துறைமுகமான **ஜம்புகோள அல்லது ஜம்புத்துறைக்குமிடையே** அடிக்கடி கப்பற் போக்குவரத்துக்கள் இடம்பெற்றிருப்பது பற்றி அறிகின்றோம். கௌடில்யன் அர்த்தசாஸ்திரத்தில் (கி.மு. 3ஆம் நூற்றாண்டில்) **ஈழத்து முத்துக்கள் மகதப் பேரரசுக்குக** கொண்டு செல்லப்பட்டமை பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. அண்மைக்காலத் தொல்லியல் அகழ்வாய்வின் விளைவாக **சிந்துவெளி நாகரிகம் எனக் கூறப்படும் ஹரப்பாப் பண்பாட்டின் பரந்த எச்சங்கள் குஜராத் மாநிலத்துக்குத் தெற்கே மாலைதீவுகளிலும்** ஆய்வாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். **மாந்தை உள்ளிட்ட மன்னார்குடாவில் விளைந்த முத்துக்களை அம்மக்கள் உபயோகித்திருந்தமையினை சிந்துவெளி அகழ்வின்போது ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.** எவ்வாறு சிந்துவெளி மாந்தர் தெற்கேயுள்ள தக்கணப் பகுதியிலிருந்து உலோகங் களைப் பெற்றுச் சென்றனரோ அதேபோன்று மன்னார்க்குடா விலிருந்து கடல் முத்துக்களையும் பெற்றுச்சென்று இருந்தனர் என்பது அண்மைக்கால ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

முற்பட்ட அநுராதபுர காலப்பகுதியில் பெருமளவிற்கு வடஇந்தியாவிலிருந்து ஏற்படுத்தப்பட்ட வர்த்தகத் தொடர்புகளை இலங்கையிலுள்ள ஆதாரங்கள் பதிவு செய்திருந்தாலும், ஓரளவிற்காவது தென்னிந்தியாவினின்றும் ஏற்படுத்தப்பட்ட வர்த்தகத் தொடர்புகளையும் அவை பதிவுசெய்யத் தவறவில்லை என்றே குறிப்பிடவேண்டும். தென்னிந்திய இராச்சியங்களுள் ஆந்திர இராச்சியத்திற்கும், தமிழ்நாட்டிற்குமிடையே இத்தகைய வர்த்தகத் தொடர்புகள் மிக நெருக்கமாகவே கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்திலிருந்து வந்திருக்கின்றன. மகாவம்சத்தின்படி கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்தில் **அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த முதலாவது தொகுதி தமிழ் மன்னர்களாகக் குறிப்பிடப்பட்ட மன்னர்கள் குதிரை வர்த்தகத்தின் பொருட்டு தமிழ்நாட்டிலிருந்து இங்கு வந்தவர்களாகவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளனர். தீபவம்சத்திலும் இச்செய்தி பதிவு செய்யப் பட்டுள்ளமையினைக் காண்கின்றோம்.**

இலக்கிய ஆதாரங்களைப் போன்று, உள்நாட்டு, வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகள் தொடர்பாக கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட பிராமிச் சாசனங்கள் உபயோகமான பல செய்திகளைப் பதிவுசெய்து வைத்துள்ளன. இச்சாசனங்களிலே திட்டவட்டமாக தமிழ்நாட்டிற்கும் ஈழத்திற்குமிடையேயான வாணிபத் தொடர்புகள் பற்றியே பெருமளவிற்கு குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கையில் கிடைத்த சில பிராமிக் கல்வெட்டுக்கள் சிறப்பாக அநுராதபுரத்தில் இருந்தும், வவுனியாவில் பெரிய புளியங்குளத்திலிருந்தும் கிடைத்த மூன்று பிராமிச்சாசனங்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இங்கிருந்த தமிழ் வர்த்தகர்களை தமிடவணிஜ எனக் குறித்துள்ளன. இவற்றுள்ளும் அநுராதபுரத்து கற்பீடக்கல்வெட்டு (Terrace Brahmi inscription) தனிப்பட்ட தமிழ் வர்த்தகரையல்லாது ஒரு வர்த்தகக் குழுவினையே குறிப்பிடுவதனைக் காணலாம்.

இக்கல்வெட்டின் சிறப்பு என்னவெனில் அவ்வணிகக் குழுவின் அதிகாரிகளின் பெயரை அவ்வதிகாரிகள் வகித்திருந்த பதவியின் படிமுறையில், ஒவ்வொரு படிக்கட்டிலும் பொறித்திருப்பதனையே காண்கின்றோம். இதேபோன்று தமிழ்நாட்டில் கிடைக்கப்பெற்ற சில தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களில் ஈழவாணியர் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக சித்தன்னவாசல் கல்வெட்டிலும், புகலூர், மாங்குளக் கல்வெட்டுக்களிலும் ஈழத்த வாணிபர் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இரண்டு அடிப்படைகளில் ஈழத்து வர்த்தகம் தொடர்பான சாசன, இலக்கியக் குறிப்புக்களை தமிழகத்தில் காண்கின்றோம். அவையாவன : 1) ஈழத்திலிருந்து தமிழகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்ட வர்த்தகப் பொருட்கள் பற்றிய பெயர்களைப் பதிவுசெய்து வைத்துள்ள ஆவணங்கள். 2) ஈழத்திலிருந்து தமிழகத்திற்கு வாணிப நோக்கத்தின் பொருட்டுச் சென்ற வணிகர்களைப் பற்றிய ஆவணங்கள் வணிகக்குழுக்கள் வணிஜ எனக் குறிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். **'புக', 'புகிய'** எனவும் வணிகக் கூட்டுக்கள் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. வணிகத் தலைவர்கள் **கணக - ஸெட்டி** எனவும் குறிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடத்தில் இவ்வாணிபம் தொடர்பாக மிக அண்மையில் தெரிவிக்கப்பட்ட ஒரு கருத்தினையும் இங்கு முன்வைக்கலாம். பொதுவாக ஈழத்து - தென்னிந்திய - வட இந்திய சாசன, இலக்கியச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலும், கிறிஸ்தவ சகாப்த காலங்களிலும் இலங்கையர் நடாத்திய பிறநாட்டு வர்த்தகமானது பெருமளவிற்கு வட இந்தியநாடுகளுடனும், தீபகற்ப இந்தியாவுடனும், தமிழகத்துடனுமே நடைபெற்றதாக அறிந்தோம். ஆனால் இதே ஆதாரங்களை அடிப்படையாக வைத்தும், புதிதாக கண்டுபிடிக்கப்பட்டவை என எடுத்துக்காட்டப்பட்ட ஆதாரங் களை அடிப்படையாக வைத்தும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இருந்து மிகநெருங்கிய வர்த்தகத் தொடர்பு இலங்கைக்கும் **தென்கிழக்காசிய நாடுகளுக்குமிடையே** ஏற்பட்டிருந்தன என்பது பற்றி பரணவிதான என்பவரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மலேசியாவில் கலிங்கமா அல்லது தீபகற்ப இந்தியாவில் கலிங்கமா என்றொரு பிரச்சினையை ஆய்வு செய்யும்போதே பரணவிதான இவ்வாறு மலேசியாவிற்கலிங்கம் என்பதனை வன்மைப் படுத்துவதற்காக ஈழத்திற்கும், தென்கிழக்காசிய நாடுகளுக்குமிடையிலான வாணிபத் தொடர்புகளை கிறிஸ்தவுக்கு முற்பட்ட சகாப்த காலத்திலிருந்து எடுத்துக்காட்ட முயன்றார். பிராமிக் கல்வெட்டுக்களில் அடிக்கடி குறிப்பிடுகின்ற **'வணிஜ'** என்ற வர்த்தகர்களுள் **'புக'** அல்லது **'புகிய'** என்ற வர்த்தகக் குழுக்கள் தென்கிழக்காசிய நாடுகளுடன் வாணிபம் நடாத்திய வணிக கணத்தினராகவே பரணவிதான எடுத்துக் காட்டுகின்றார். இது மட்டுமல்லாது மிகவும் முற்பட்ட காலத்தில் இலங்கை வர்த்தகர்களால் நடாத்தப்பட்ட பிறநாட்டு வர்த்தகம் பற்றி முற்பட்ட கால இலக்கியங்களில் சிறப்பாக **ராஸ - வாஹினி ஸீஹள - வத்து** ஆகிய நூல்களிலும், மலாய் மொழியில் எழுதப்பட்ட **பலம்**

- பாங் என்ற இலக்கியத்திலும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் மணிபல்லவத் திற்கும் (யாழ்ப்பாணத்திற்கும்) இடையே நடைபெற்ற வர்த்தகக் கப்பல் போக்குவரத்து பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளில் இலங்கைக்கும் பிறநாடுகளுக்கும் இடையே நடைபெற்ற வாணிபத் தொடர்புகளைப் பற்றி அறிந்துகொள்வதற்கு, கிரேக்க, உரோம நூல்கள் சில அரிய தகவல்களைத் தந்துதவுகின்றன. கி.பி. 1ஆம் நூற்றாண்டில் கிரேக்க, ரோம ராச்சியங்களுக்கும் தென்னிந்திய அரசுகளுக்கு மிடையே வாணிபத் தொடர்பு ஏற்பட்டிருந்தமையை உள்நாட்டு, வெளிநாட்டுச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. தீபகற்ப இந்தியாவில் கண்டுபிடிக்கப்பெற்றுள்ள பெருமளவிலான ரோமத்தங்க நாணயங்கள் இவ்வாணிபத் தொடர்பினை உறுதிப்படுத்தும் அகச்சான்றாக அமைகின்றன. தென்னிந்திய நூல்களில் குறிப்பாக சங்ககாலத்து தமிழ் இலக்கியங்களில் யவன தேசத்துக்கப்பல்கள் பற்றியும், வாணிபம் பற்றியும் விரிவான பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. தீபகற்ப இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் அமெரிக்கமேடு என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுச் சான்றுகள் ரோம வாணிபக் கிடங்கினை - மையத்தினை ஆவணமாகவே வெளிப்படுத்தி உதவியுள்ளன. இவ்வாறு ரோமுக்கும், தென் இந்தியாவிற்குமிடையே இடம்பெற்றிருந்த வாணிபத் தொடர்புகளில் வேறும் பல நாடுகள் பங்குகொண்டிருந்தன. அவற்றுள் இலங்கையும் சிறப்பான ஓரிடத்தினைப் பெற்றிருந்தது என்றால் அது மிகையாகாது. இந்நூற்றாண்டுகளில் கிரேக்க, ரோம வர்த்தகர்கள் தென்னிந்தியத் துறைமுகங் களுக்கு வந்து, வணிகப் பொருட்களைப் பெற்றுச் சென்றபோது தனிப்பட்ட தென்னிந்திய விளையாட்டுப் பொருட்களை மட்டும் ஏற்றிச்செல்லவில்லை. தென்னிந்தியத் துறைமுகங்களுக்கு வடக்கேயிருந்தும், தெற்கேயிருந்தும் குறிப்பாக இலங்கையிலிருந்தும் கொண்டுசென்று சேர்க்கப்பட்ட பொருட்களையும், அவர்கள் தம்முடன் எடுத்துச் சென்றார்கள். இவ்விடத்திலேயே இலங்கைக்கும், கிரேக்க, ரோம வியாபாரிகளுக்குமிடையே மறைமுகமான வாணிபத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன எனக்கூறலாம். அநுராதபுரம், புத்தளம், கந்தரோடை, ஆனைக்கோட்டை, வல்லிபுரம், பூநகரி, மாந்தை ஆகிய இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரோமநாணயங்களும், ரோம மட்பாண்டங்களும் அவ்வாணிபத் தொடர்புகளின் விஸ்தீரணத்தினை எடுத்துக்காட்டும் சான்றகள் ஆகும். பூநகரியிலிருந்தும், கந்தரோடையிலிருந்தும் அண்மைக் காலங்களில் வரணியிலிருந்தும் தங்கரோம நாணயங்கள் உட்பட ஏராளமான ரோமநாணயங்கள் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே ரோம வணிகர்களது மரக்கலங்கள் மாந்தை - பூநகரிப் பிரதேசத்திற்கும், வல்லிபுரம் - வரணிப் பிரதேசத்திற்கும், கச்சாய் - சாவகச்சேரிப் பிரதேசத்திற்கும், ஆனைக்கோட்டை - கந்தரோடைப் பிரதேசத்திற்கும் ஊடுருவி வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையை அண்மைக்காலங்களில் இங்கு பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியல் மூலாதாரங்கள் வாயிலாக உறுதிப்படுத்திக் கொள்ளமுடிகிறது. இப்பிராந்தியங்களிலிருந்து கடல முத்துக்கள், யானைத்தந்தங்கள், இரத்தினக்கற்கள், மெல்லிய நூலாடைகள்

(லினன் போன்றவை) என்பன வாணிபப் பொருட்களாக கைமாற்றப்பட்டன என அறியமுடிகிறது. கந்தரோடையிலிருந்து சங்கு வளையல்களும், கார்னேலியன் மணிகளும், மான் கொம்புகளும் ரோம வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தமையினைத் தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாறு அநுராதபுரகாலப் பரப்பின் முன்பாதியில் கூடியளவிற்கு இந்திய அரசுகளுடனும், குறைந்தளவில் பிறநாடுகளுடனும் இலங்கையின் வர்த்தகத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன என்பதனை எமக்குக்கிடைத்த வரலாற்று, தொல்லியல் ஆவணங்கள் வாயிலாக உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிறது. இதேகாலப் பகுதியில் உள்நாட்டில் நடைபெற்ற வர்த்தகம் பற்றிய செய்திகளையும் இதே அதாரங்கள் வாயிலாகவே ஒருசில தகவல்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளமுடிகிறது. மகாவம்சத்திலும், தீபவம்சத்திலும் இக்குறிப்புக்கள் காணப்படுகின்றன.

அநுராதபுர இராச்சியத்திற்கும் மலையகப் பகுதிக்குமிடையே நடைபெற்ற உள்நாட்டு வர்த்தகத்தைப் பற்றிய குறிப்புக்கள் சில இவ்விலக்கியங்களிலே கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விலக்கியங்களிலே காணப்படும் குறிப்புக்களைவிட சாசனங்களிலே உள்நாட்டில் நடைபெற்ற வர்த்தகம் பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. இச்சாசனங்களில் சிறப்பாக இங்கிருந்த வியாபார வர்த்தகக் குழுக்கள் பற்றியும், அவை இயங்கியமுறை பற்றியும் அறிந்துகொள்வதற்கேற்ற வகையில் அரிய சில செய்திகள் கிடைத்துள்ளன. இவற்றுள் சிறப்பாக கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தோணிகல கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட வர்த்தகக்குழு இயங்கிய முறைபற்றிய தகவல்கள் காணப்படுகின்றன. இவற்றை நோக்குமிடத்து வட இந்தியாவிலிருந்து வந்த வர்த்தகக் குழுக்கள் அமைக்கப் பட்டிருப்பது போலவும், இயங்கியது போலவும் ஈழத்து வர்த்தகக் குழுக்களும் அமைக்கப்பட்டு தொழிற்பட்டிருந்தன எனக்காணமுடிகிறது. இவ்வர்த்தகக் குழுக்கள் நியம என்ற பெயரைப் பெற்றிருந்தன. தமிழ் கல்வெட்டுக்களில் நியமத்தார் என வழங்கப்பட்டவை இவ்வகையான வணிகக் குழுக்களையே குறித்தது என்பது புலனாகிறது. தஷிண கைலாயமான்மியத்திலும், கோணேசர் கல்வெட்டிலும், நியமத்தார், வழப்பத்தார் போன்ற வணிகக் கூட்டுக்களைப் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. நிகம என்ற பதத்திலிருந்து திரிந்த ஒரு வடிவமாகவே நியம என்ற வணிகக் குழுவைக் குறிப்பிடும் பதம் தோற்றியிருக்க வேண்டும். இவ்வணிகக் குழுக்கள் தனிப்பட வர்த்தகத்தில் மட்டும் ஈடுபட்டவையாக அல்லாது வேறுவகையான பொருளாதார முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தன என்பது பற்றி இதே கல்வெட்டு வாயிலாக அறியமுடிகிறது. (பிற்காலங்களில் இப்பிராந்தியத்தில் வங்கிமுறை வளர்ச்சி பெற்றமைக்கான அடிப்படையை இவ்வாறான உள்நாட்டு வணிகக் குழுக்களின் செயற்பாடுகளே உருவாக்கிக் கொடுத்தன எனவும் கருதப்படுகிறது).

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் உள்ள கந்தரோடைக்கும், தென்னிலங்கையில் உரோகணையில் உள்ள மகாகமைக்கு மிடையே நெடுங்காலமாக உள்நாட்டு வாணிபத்தொடர்புகள் இருந்த வந்துள்ளமையை தொல்லியற் சான்றுகள்

உறுதிப்படுத்துகின்றன. மகாகமையிலிருந்தும் அயலிலுள்ள தீசமகரகமை (கதிர்காமம்) யிலிருந்தும் மிக அண்மைக் காலங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட நீள்சதுரமான லட்சுமி நாணயங்கள் (Luxmy Plaquel) கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டனவற்றுடன் ஒத்த தன்மையாகக் காணப்படுவதன் அடிப்படையில் இவ்வியாபாரத் தொடர்பினை உறுதிசெய்துகொள்ள முடிகிறது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து நிலவிவந்த வட இலங்கைக்கும தென்னிலங்கைக்குமிடையிலான வர்த்தகத் தொடர்பினை கி.பி. 14ஆம் நூற்றாண்டில் சிங்களமொழியில் எழுதப்பட்ட நம்பொத்த என்ற நூலில் உள்ள ஒரு சிறுகதை வாயிலாக அறிந்துகொள்ளமுடிகிறது. அச்சிறுகதையானது தெற்கில் மகாகமையில் வசித்து வந்த ஓர் ஆண் காக்கைக்கும், வடக்கில் கந்தரோடையில் வசித்து வந்த ஓர் பெண் காக்கைக்குமிடையே இடம்பெற்ற திருமணப் பற்றிய தாகும். இச்சான்றினைவிட, கௌதம புத்தர் இலங்கைக்கு மேற்கொண்ட மும்மறை விஜயங்கள் மகியங்கணைக்கும், நாகதீபத்திற்கும், கல்யாணிக்குமிடையே நிலவிய உள்நாட்டு வர்த்தகத்தொடர்பின் செழிப்பினையே காட்டுகின்றதெனலாம். கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்த காலங்களில் பௌத்த மதமும், அதன் பண்பாடும் வேரூன்றிய இடங்கள் யாவும் உள்நாட்டு, சர்வதேச வாணிப மையங்கள் என்பதனை மறுத்துவிடலாகாது.

உருகுணையின் எழுச்சி

ஆரியருடைய தொடக்க காலக் குடியேற்றங்களில் ஒன்றான உருகுணை, துட்டகாமணியின் வரலாற்றுடனேயே முதன் முதலாக அரசியல் முக்கியம் பெற்றுள்ளது. காமணியின் தந்தையான (காகவண்ண) திசன், பல சிற்றரசுகளைக் கொண்ட உருகுணையை ஒரு குடைக் கீழ்க் கொணர்ந்து, அதன் அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டினான். மகாவலிகங்கைக்கு அப்பால் ஆட்சிசெய்த தமிழரை எதிர்க்கும் சக்திகளிடையே இருந்த பிரிவினைகளையகற்றி அவர்களுடன் போர் செய்தற்கான ஆயத்தங்களைச செய்தான். இவ்வாறு உருகுணையில் தோன்றிய விடுதலையியக்கம், துட்டகாமணியின் காலத்தில் வெற்றியைப் பெற்றது. இலங்கையின் வரலாற்றில் உருகுணையாட்சியாளர் நாட்டின் விடுதலைக்கான இயக்கங்களை உருவாக்க உருகுணை பயன்பட்டமைக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

உருகுணையின் தொடக்ககால வரலாற்றைத் தனியே காலவேடுகளின் துணைகொண்டு கூறிவிடமுடியாது. உருகுணையின் பல்வேறு பகுதிகளிற் காணப்படும் கல்வெட்டுக்களாலும், சில செய்திகள் பெறப்பட்டுள்ளன. கதிர்காமத்திலிருந்த ஒரு ஷத்திரிய மரபினர் அப்பகுதியில் அதிகாரம் பெற்றிருந்தனர். தேவனம்பியதீசனது அழைப்புக்கிணங்க, போதிமர நாட்டு விழாவுக்கு அவர்கள் வந்திருந்தமையை மகாவம்சம் குறிப்பிட்டுள்ளது. இதைக் கொண்டும், பிற செய்திகளைக் கொண்டும், உருகுணையின் சில பகுதிகளில், அனுராதபுர ஆட்சியாளரின் மேலாணையை ஏற்காத சில பிரதானிகள் ஆட்சி நடத்தியதாகக் கொள்ளப்படுகின்றது. தேவானம்பிய திசனுடைய இளவலான

மகாநாக(ன்) என்பானுக்கு எதிராக ஒரு சூழ்ச்சியை இராணி மேற்கொண்டு, அது விபரீதத்தில் முடிவுற்ற கதையொன்று மகாவம்சத்திலுள்ளது. தன் மகனுக்கு ஆட்சியுரிமையைப் பெற்றுவிட உறுதிகொண்ட (திசனின்) இராணி, மகாநாகனுக்கு மாங்களிகொண்ட தட்டொன்றை அனுப்பி வைத்தாள். சூதேனும் அறியாத மகாநாகன், நஞ்சு கலந்திருந்த மேற்கனியைத் திசனது மகனிடம் கொடுக்கவே, அதையருந்திய சிறுவன் இறந்தான். இதன்பின், தலைநகரிலிருக்க விரும்பாத மகாநாகன், தன் மனைவியுடன் உருகுணைக்குத் தப்பியோடினான். உருகுணையில், கிரிண்டி ஓயாவுக்கு அருகாமையில் மகாகாமத்தை (மகாகமை - இப்போதைய திசமகாராமை) நிறுவினான். இவ்வாறு மகாகமையை நிறுவிய மகாநாகனது வழித்தோன்றலே துட்டகாமணியாவான். விஜயன் மரபில் வந்த தேவானம்பிய திசன் போன்ற அனுராதபுர அட்சியாளருடன், துட்டகாமணியின் மரபு இவ்வாறு தொடர்புபடுத்தப்பட்டுள்ளமை புலப்படும்.

மகாகமையாட்சியாளருக்கும், கதிர்காம ஷத்திரியர்களுக்குமட் (பத்துச் சோதர அரசர்கள்) விரைவில் தகராறு மூண்டு, பின்னவர் கொலையுண்டனரெனவும் ஓர் இலக்கிய மரபுவழிச் செய்தியுண்டு. இதைப் போவத்தகலையிலுள்ள ஒரு கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றது. இருந்தும், கல்வெட்டுக்கள் இவ்விரு மரபினருக்கும் விவாகத் தொடர்புகளும் ஏற்பட்டிருந்ததாக அறியவைக்கின்றன. மகாநாகனது மகனான (அல்லது பேரனான) கொடாபயன் மகனே 'காகவண்ண' திசன் ஆவான். காகவண்ண திசனுக்கும், விகாரதேவிக்கும் பிறந்த இரு புதல்வர்களே (துட்ட) காமணியும், (சத்தா) திசனுமாவார். விகாரதேவி என்பாள், களனியை (கல்யாணீ) ஆண்ட திசனின் மகள் எனப்படுகின்றது. இந்தக் களனி திசன், கதிர்காம ஷத்திரியர்களுடன் தொடர்புடையவனாகக் காணப்படுகின்றான். இத்தொடர்புகள் தெளிவாகப் புலப்படாதபோதிலும், காகவண்ணதிசன் ஆட்சியைப் பெற்றபோது, கல்யாணீ என்ற களனியிலும், சேருவிலவிலும் (சேருவில தாகபம் உள்ள பிரசித்திபெற்ற இடம்) கிரிநுவரை முதலான பிறவிடங்களிலும் பல சிற்றரசுகள் விளங்கின.

காகவண்ண திசன் பிறவுபட்டிருந்த உருகுணையின் ஒற்றுமையை நிலைநாட்டிய பெருமைக்குரியவன். தன் மகன் (துட்டகாமணி) புகழால், தன் புகழ் துலங்காது போன துர்ப்பாக்கியசாலி. பல சிற்றரசுகளைச் சிதறிக்கிடந்த உருகுணையை ஒன்றுபடுத்தினாலே வடஇலங்கையின் ஆட்சியாளரான தமிழரை வெல்லமுடியும் என்ற உறுதியுடன் அவன் செயலாற்றினான். போர்களை மட்டுமே ஆயுதமாகக் கொள்ளாது நட்பு, உறவுமுறை, மதியூகம் என்ற பல வழிகளைக் கடைப்பிடித்தே இவ்வொற்றுமையை நிலைநாட்டினான். காகவண்ணன் தங்கையான சோமாதேவி களனி ஆட்சியாளனாகவிருந்த சிவனது தம்பி அபயனுக்கு மணமுடித்து வைக்கப்பட்டதாக முன்னரே நிலவிய உறவு வலுப்படுத்தப்பட்டது. சேருச் சிற்றரசை வெல்ல ஓர் உபாயம் கடைப்பிடிக்கப்பட்டது. காகவண்ணனிடம் உள்ள ஒரு புத்ததாது சேருவில் நிறுவப்படவிருந்த தூபியில் வைத்துக் கட்டப்படுமென ஒரு வருவதுமொழிதலை, மதிப்புக்குரிய ஒரு பௌத்தகுரு

வாயிலாக சேருவில் தெரியப்படுத்தினான். காகவண்ணதிசன். இதன்பின், காகவண்ணன் தன் படையுடன் சேருவுக்குச் சென்றபோது, சமய நம்பிக்கையுடைய சேரு ஆட்சியாளன், காகவண்ணனை வரவேற்றான். இவ்வாறு அவனது மேலாணையை ஒப்புக்கொள்ள வேண்டியவனானான். சமய நம்பிக்கை மேலிட்டவர்கள் அரசியற் சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ளமாட்டார்கள் என்பதையும், சமயம் அரசியலதிகாரத்தைப் பெற உதவுமாற்றையும் இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டும்.

காகவண்ண திசன் ஒருவாறாக உருகுணையின் அரசியலொற்றுமையை நிலைநாட்டிக்கொண்ட பின், பயனுடைய பல ஆக்கப்பணிகளை மேற்கொண்டான். உண்மையில், துட்டகாமணியின் வெற்றிக்குரிய அத்திவாரத்தைத் தந்தை காகவண்ணனே நிறுவினான். உருகுணையின் வளங்களை விருத்திசெய்து, தன் மகன் திசனைத தீகவாபியிலிருத்தி, அவனது மேற்பார்வையில் அப்பகுதியில் நெல் விளைச்சலைப் பெருக்கும்படி செய்தான். பொருள்வளம் பெருக்குதலுடன், படைப்பலப் பெருக்கமும் மேற்கொள்ளப்பட்டது. படைக்கலங்களை ஆக்கும் சாலைகள் இயக்கப்பட்டன. படைப்பயிற்சியும் பலருக்கு அளிக்கப்பட்டது. இவையெல்லாம் துட்டகாமணியின் பணியைப் பின்னர் எளிதாக்கி வைத்தனவெனலாம். உருகுணையின் பாதுகாப்பையே நோக்கமாகக் கொண்ட காகவண்ணன், அதன் எல்லையில் மகாவலிகங்கைக் கரையில் பல காவல் அரண்களை நிறுவினான். பாதுகாப்புக் கொள்கையுடன் திருப்தியுற்ற காகவண்ணனைப் போலன்றி, எதிர்த் தாக்குதலை மேற்கொண்ட துட்டகாமணியின் வரலாற்றை இனிக் கவனிப்போம்.

துட்டகாமணி உருகுணைக்கரசனாதல்

துட்டகாமணியின் வரலாற்றை நாம் அறிதற்கு உதவும் பிரதான ஆதாரநூல் மகாவம்சமே. மகாவம்சத்தின் பாட்டுடைத் தலைவனாக விளங்குபவன் துட்டகாமணியென்பதில் ஐயமில்லை. மற்றைய அரசர்கள் எல்லோரிலும் (தேவானம்பியதிசன் உட்பட) மிகச் சிறப்பான இடத்தைத் துட்டகாமணியே பெற்றுள்ளான். மகாவம்ச ஆசிரியர் இவ்வாறு துட்டகாமணியில் ஈடுபாடு காட்டியமைக்கு, அவனுடைய அரசியற் சாதனையிலும் பார்க்க அவனுடைய சமயப் பணிகளே முக்கிய காரணமென்பதை நாம் உணரலாம். தமிழர் ஆட்சியில் போதிய அளவு வளர்க்கப்படாது, தன் பெருமையைச் சிறிது இழந்திருந்த பௌத்தத்தை அது முன்னெப்போதும் அடைந்திராத அளவுக்குச் சிறப்பெய்த வைத்தவன் துட்டகாமணி. இதனிலும் மேலாக, மகாவிகாரைக்குத் தனிச்சிறப்பை அளித்த மகாதூபமான ரூவன்வலி தாகபத்தையும், பிற கட்டிடங்களையும் நிறுவித் தேரவாத பௌத்தத்துக்கு அரும்பணியாற்றினான். இவ்வாறான சமயக் காரணங்களாலேயே, துட்டகாமணியை ஒரு காவியத் தலைவனாக்க மகாநாமதேரர் முனைந்துள்ளாரெனலாம்.

துட்டகாமணியின் வரலாற்றைக் கூறும் மகாவம்ச அத்தியாயங்களை நோக்குவோர்க்கு, மேலே கூறப்பட்ட உண்மை தெளிவாகும். காமணியின்

பிறப்பு, இளமை, உருகுணைக்கு அரசனாதல், தமிழருடன் நிகழ்த்திய போராட்டம் ஆகியவற்றைக் கொண்ட அவனது அரசியல் வாழ்வைக்கூற நான்கு அத்தியாயங்களை ஒதுக்கிய மகாவம்ச ஆசிரியர், அவனுடைய மதப்பணிகளை இயம்ப மீதியான ஏழு அத்தியாயங்களையும் பயன்படுத்தியுள்ளார். அவற்றுள்ளும் மகாதூபத்தை நிறுவிய வரலாறு நான்கு அத்தியாயங்களிற் கூறப்பட்டுள்ளமை மேலே கூறிய உண்மையை வலியுறுத்தும். அரசியற் காரணங்களால் மக்கள் உள்ளத்தில் நீங்கா இடம்பெற்று விடுதலை வீரனாகக் காட்சியளித்த காமணியை, சமய நோக்குடன் பார்த்த மகாவம்ச ஆசிரியர் ஒப்பற்ற காவியத் தலைவனாக்க முற்பட்டுள்ளார். இதனாலேயே, காமணியிடத்துக் காணப்பட்ட குறைகளை நாம் காணாதவாறு செய்யவும், சில சந்தர்ப்பங்களில் அவற்றுக்குச் சமதானம் கூறவும் முயன்றிருக்கின்றார். தன்னேரில்லாத் தகைமை காவியத்தலைவனிடம் இருக்கவேண்டுமென்பதால், காமணியின் பிறப்பு, இளமை, அவன் நிகழ்த்தும் போர்கள் முதலானவற்றைக் கூறும்போது பல அதிசயச் செய்திகளையும் செயற்கை யாகச் சேர்த்துள்ளார். மகாவம்ச ஆசிரியரின் நோக்கங்களை அறிந்துகொண்டால் அவர் கூறும் வரலாற்றினைச் சரிவரப் புரிந்துகொள்ளலாம்.

பிறப்பும் இளமையும்

காமணியின் பிறப்பைப் பற்றிக் கூறும் அத்தியாயம் முழுவதுமே, காவியத் தலைவனுக்கேற்றதாக ஆக்கப்பட்டுள்ளது. காமணியின் தாய் விகாரதேவி அவனைக் கருவுற்றமை, அவள் கர்ப்பிணியாயிருக்கும் போது அவளுக்குண்டான ஆசைகள், காமணி பிறந்தபோது தென்பட்ட நற்குணங்கள் முதலானவற்றை விபரிக்கும்போது, காமணி ஒரு வீரனாகவும், மதப்பற்று மிக்கவனாகவும் வளர்வான் என்பதை அடிக்கடி நினைவூட்ட ஆசிரியர் எத்தனிக்கின்றார். எடுத்துக்காட்டாக, காமணி பிறந்த அன்றே பலஇன மணிகள் (இரத்தினங்கள்) நிரம்பிய ஏழு கப்பல்கள் கரையை வந்தடைந்தன என்றும், 'சத்தந்த' யானைக் கன்றைக் (ஆறு தந்தங்களையுடையதாகக் கூறப்படும் உயர்ரக யானை) கண்டுலன் என்ற மீனவன் தான் கண்டதாக ரசனுக்குக் கூறினதாகவும், பொன்னாலான பாத்திரங்கள் நிறைந்துள்ள கப்பலொன்று வந்திருந்ததை அரசனுக்கு அறிவித்த தாகவும் பல நற்சகுணங்கள் தோன்றியமை கூறப்பட்டுள்ளது. காமணியின் பெயர் சூட்டுவிழாவிலும் இவைபோலவே, இவன் பிற்காலத்தில் இலங்கை முழுவதற்கும் அரசனாகி, புத்தரின் தர்மத்தை ஒளிவிடச் செய்வான் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. இந்த அறிகுறிகள் அனைத்தையும் கண்டு அகமகிழ்ந்த தந்தை, அங்கு கூடியிருந்த பன்னீராயிரம் குருமார்க்கும் அமுது வழங்கச்செய்து, காமணி அபய(ன்) என்ற பெயரையும் அவனுக்குச் சூட்டினான். காமணி, திசன் ஆகிய இரு சகோதரருக்கும் முதன் முதல் உணவு (சோறு) ஊட்டப்பட்டபோதும் புத்தரின் தருமத்தைக் கைவிடக்கூடாதெனத் தந்தையால் அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். இவ்வாறு தொடக்கத்திலிருந்தே காமணியின் வரலாற்றை காவியச்சுவை மிளிரும் வகையில் மகாவம்ச ஆசிரியர் அமைத்துள்ளதைக் காணலாம். இத்தகைய செய்திகளிலோ அல்லது கதைகளிலோ அதிக உணமையிருக்கும் என நம்பி நாம் மலைவடைதல் கூடாது.

தந்தையுடன் காமணி முரண்படுதல்

சிறுவனாக இருந்தபோதே காமணியின் விடுதலை ஆர்வத்தையும், நாட்டுப் பற்றையும் புலப்படுத்த மகாவம்சத்தில் சில கதைகள் கூறப்பட்டுள்ளன. காமணியையும் திசனையும் ஒருபோதும் தமக்குள் சண்டையிடக்கூடாது எனவும், சங்கத்தினர்க்கு எப்போதும் பணிவாக இருக்கவேண்டுமெனவும், தமிழர்களுடன் போருக்குப் போகக்கூடாதெனவும் மூன்று வாக்குறுதிகளையளிக்குமாறு தந்தை வேண்டியபோது, மூன்றாவது வாக்குறுதியை அளிக்க மறுத்த காமணி, தன் கால்களை முடக்கிக்கொண்டு படுத்திருந்தான். இதைக்கண்ட தாய் விகாரதேவி காமணியை அவ்வாறு படுத்திருந்தமைக்குக் காரணத்தை விசாரித்தபோது ஒரு புறம் சமுத்திரமும் மறுபுறம் தமிழரும் தனக்குத் தடையாகவிருக்க, கால்களை எவ்வாறு நீட்டுவதெனக் காமணி வினாவியதாக உள்ள கதை அனைவர்க்கும் தெரிந்ததே. இக்கதையை நாம் அப்படியே உணமையாகக் கொள்வதற்கில்லை. இதுபோலவே, படை வீரர்களைத் திரட்டிவந்த காமணி தமிழருக்கு எதிராகப் படையெடுக்கத் தந்தையை அனுமதி கேட்டபோது, அதற்குத் தந்தை மறுத்ததால் சீற்றங்கொண்ட காமணி, தன் தந்தையை அவமானப்படுத்த எண்ணிப் பெண்களுக்குரிய ஆபரணங்களை அனுப்பி வைத்துவிட்டு மலையகத்துக்கு ஓடினான் என வரும் கதையும் காமணியின் வீரத்தையும், அளவற்ற விடுதலை வேட்கையையும் புலப்படுத்த எழுந்ததே. காமணியின் வீரத்தைக் காட்டுதற்குக்காக வண்ணன் பேடியாகக் காட்டப் பட்டுள்ளானேயன்றி, உண்மையில் காகவண்ணனே பின்னர் ஏற்பட்ட காமணியின் புகழுக்கு உரிய ஆக்க வேலைகளைச் செய்திருந்தான் என்பதை நாம் உணர வேண்டும்.

சகோதரரிடையே போரும் அமைதியும்: மலையகம் சென்று சில ஆண்டுகள் கழியுமுன், காகவண்ணன் இறந்துவிட்டான். தீகவாபியில் இருந்த திசன் இச்செய்தி கேட்டு மகாகமை சென்று பட்டத்து யானையையும், தாய் விகாரதேவியையும் அழைத்துக்கொண்டு தீகவாபிக்கு மீண்டான். இது சகோதரரிடையே பகைமையைக் கொண்டுவரக்கூடிய செயலாகவிருந்தது. இதனிடையே துட்டகாமணியும் தந்தையிறந்த செய்தியை அவனது அமைச்சர்கள் கூறக்கேட்டு மகாகமைக்கு விரைந்தான். அங்கே தன்னை அரசனாகப் பிரகடனப்படுத்திவிட்டுத், தன் தம்பி திசன் கொண்டுசென்ற பட்டத்து யானையைத் திருப்பித் தருமாறும், தாய் விகாரதேவியை அனுப்பி வைக்குமாறும் அவனுக்கு வேண்டுகோள் அனுப்பினான். இதற்குத் திசன் இணங்காது போகவே, இருவருக்கும் போர் மூண்டது. உருகுணைப் படையினர் காகவண்ணனது வேண்டுதலுகமைய எப்பக்கமும் சாராதிருந்தனர். எனவே, இரு சகோதரர்களும் தமது சொந்தப் படைகளைக்கொண்டே போர்புரிய வேண்டியவர்களாகவிருந்தனர். சகோதரர்களிடையே நடைபெற்ற முதற் சண்டையில் (சுளங்கணிய - பிட்டி என்னுமிடத்தில் நடைபெற்றது) திசனே வெற்றியீட்டினான் எனப்படுகின்றது. புதிய படைகளைத் திரட்டி மீண்டும் சண்டையைத் தொடர்ந்து, இரண்டாவது சண்டையில் தன் குதிரையைச செலுத்திய திறமை காரணமாக

வெற்றியீட்டினான். இவ்வெற்றியின் பயனாக, பட்டத்துயானை (கண்டுல) காமணி வசமாயிற்று. விகாரதேவியும் காமணியுடன் மகாகமைக்குச் சென்று வாழ்ந்து வரலானாள். சகோதரரிடையே நடந்த போரின் முடிவில் சங்கத்தினர் தலையிட்டு இருவர்க்குமிடையே சந்து செய்துவைத்தனர். திசன் மீண்டும் தீகவாபிக்கே சென்று உணவுற்பத்தி வேலைகளைக் கவனிக்கலானான். எனவே உருகுணையின் அரசுரிமையைத் தன் தம்பியுடன் போரிட்டு நிலைநாட்டிக் கொண்டபின், தன வாழ்க்கைப் பணியாகக கருதிய இலங்கைக்கு விடுதலைபெறல் என்பதைத் தொடங்குவதற்கு ஆயத்தமானான்.

காமணியின் விடுதலைப் போரும், சமயப் பணிகளும்

தன் இளமைக்காலக் கனவை நனவாக்கும் வாய்ப்புக் கிடைத்ததும், காமணி தான் நிகழ்த்தவிருந்த பெரும்போருக்கான ஆயத்தங்களைப் பூர்த்திசெய்தான். படைவீரர் ஆயிரக்கணக்கில் திரட்டப்பெற்று பயிற்சியளிக்கப்படலாயினர். போர் முறையின் நுட்பங்கள் அவர்களுக்குப் புகட்டப்பெற்றன. வேண்டிய பகைக்கலங்களும் தயாராக்கப்பட்டன. படைக்கு வேண்டிய உணவைத் தீகவாவிப் பகுதியில் பெறுதற்கு இளவரசன் திசன் மேற்பார்வையில் ஒழுங்குகள் நடைபெற்றன. இவ்வாறான ஆயத்தங்கள் யாவும் பூர்த்தியானதும் தன் வாழ்வின் பெரும்பணியை நிறைவேற்றக் காமணி புறப்பட்டான். வெறும் அரசியல் வெற்றிக்காகவோ, அதிகார ஆசைக்காகவோ தான் போரை நடத்தவில்லையெனவும் பௌத்தத்தை மேனிலைப்படுத்தவே இவ்விடுதலைப் போரை மேற்கொண்டதாகவும் அவன் விளக்கம் கொடுத்தான். இவ்வாறான கருத்தை உண்மையில் கொண்டிருந்தானோ என்பது தெளிவில்லை. ஆனால், மகாவம்ச ஆசிரியர் தமது பாட்டுடைத் தலைவனை, மதத்துக்கே முதலிடத்தையளிக்கச் செய்ததன்மூலம், காமணியைக் காவியத்தலைவனாக்க எண்ணினார் என்பது மட்டும் உறுதி. தனியே தேசிய அல்லது இனவிடுதலை வீரனாகக் கொள்ளாது, மதப்பற்றின் அடிப்படையிற் செயலாற்றிய தேசிய வீரனாகக் காட்டுவதிலேயே மகாநாமதேரர் அக்கறை காட்டினார். எனவேதான், காமணி தன் படையெடுப்பைத தொடங்குமுன், திசமகாராமை (விகாரை)க்குச் சென்று, ஐந்நூறு பிக்குகளைத தன் படையுடன் வருமாறு அழைத்துச்சென்றான். துறவிகளின் தோற்றம் தம் படையினர்க்கு 'ஆசிர்வாதமும் ஆதரவும்' தரும் எனக் கூறினான். காமணியுடன் தாய் விகாரதேவியும் வேண்டிய இடத்து உற்சாகத்தையும் ஆலோசனைகளையும் வழங்க உடன்சென்றாள். இதனால் விகாரமகாதேவியும சிங்கள இனத்தின் பெருமதிப்புக்குரிய தலைவியானாள்.

காமணி தொடர்ந்த 'புனித'ப் போரின் நிகழ்ச்சிகளில் வரும் இடப்பெயர்வு களையும், படைத்தளபதிகளின் பெயர்களையும் பெரும்பாலும் உண்மை வரலாற்றுப் பெயர்களாகவே ஆராய்ச்சியாளர் கொள்கின்றனர். இடப்பெயர்களில் ஒரு சில இன்னும் அடையாளம் கண்டுகொள்ளப்படவில்லை. ஆனாலும், அவை மகாவலிகங்கையின் கிழக்குக் கரையில் அமைந்திருந்தனவாதல் வேண்டும். இவற்றிற் பல இன்று காடுகளால் மூடப்பட்டுவிட்டன. இடப்பெயர்களைப் போலவே

துட்டகாமணியின் பத்துத் தளபதிகளின் பெயர்களிற் சில (நந்திமித்த - அபயன், புஸ்ஸதேவ) கல்வெட்டுகளால் உறுதிப்படுத்தப்பட்டதைக் கொண்டு, இப்பெயர்கள் அனைத்துமே உண்மை மாந்தரின் பெயர்களென்பர். இனி நாம் பாமணியினது படையின் செலவைக் கவனிப்போம். மகாகமையிலிருந்தே இப்பெரும்படை புறப்பட்டது. மகாகமையிலிருந்து வடக்குநோக்கிச் சென்ற படையானது, மகாவலிகங்கைக் கரையிலுள்ள மகியங்கணையை அடையுமுன் களுவெல, குட்டஹால (புத்தள), கிரிகமை முதலான பல இடங்களில் தங்கிச்சென்றது. தமிழரின் படையரண்கள் மகாவலிக்கு அருகாமையிலே பெரும்பாலும் நிறுவப் பட்டிருந்தன. மகியங்கணையிலேயே முதன் முதலாகத தமிழ்ப் படையினர்க்கும் காமணியின் படைக்கும் சண்டை நிகழ்ந்தது. சத்தன் என்ற தளபதியின் தலைமையிலிருந்த படையை மகியங்கணையில் வென்று முன்னேறியது. படையானது, அடுத்து அம்பதீர்த்தம் என்ற இடத்தில் மீண்டும் தமிழரின் எதிர்ப்பைப் பெற்றது. நான்கு மாதங்கள் நீடித்த போருக்குப் பின் தித்தம்பன் என்ற தமிழ்த் தளபதியைக் காமணி சூழ்ச்சியைக் கொண்டு வென்றான். மகாவலிகங்கையின் வலதுபுறக் கரையால் முன்னேறிய விடுதலைப்படை அந்தரசொப்ப, நாளிசொப்ப, கச்சதீர்த்தம், கொட்டநகரம், நந்திக்கிராமம் முதலான பல இடங்களிற் சண்டை செய்தது. மகாவலிகங்கையை (கச்சதீர்த்தம் என்ற) மகாந்தோட்டைக்கு அண்மையிலுள்ள ஓரிடத்திற் கடந்து, விஜிதபுரம் என்ற அரணைக் கைப்பற்றுவதற்குக் கடும்போர் செய்தது. விஜிதபுரம் என்பது இப்போது பொலன்னறுவையுள்ள இடத்தில் அல்லது அதற்கு அண்மையில் அமைந்திருக்க வேண்டும். இங்கிருந்த அரண் உறுதியான மதிற்சுவர்களையும் இரும்பாலான கதவுகளையும் கொண்டிருந்தாலும், தமிழ்ப்படைகள் தம் முழுப்பலத்துடன் இவ்வரணைக்காத்து நின்றமையாலும் இந்த அரணைக் காமணியின் படை வெல்வதற்கெடுத்த பல முயற்சிகள் தோல்விகண்டன. இறுதியில் அரணைத் தகர்த்துத் தமிழ்ப்படையினர்க்கும் பல அழிவுகளையுண்டாக்கி அப்படை அனுராதபுரத்தை நோக்கிச்சென்றது. இடையே கிரிகல, மகிளநகரம் என்ற இடங்களில் தோன்றிய எதிர்ப்பை வென்றபின்னரும், காமணியின் படை அனுராதபுரத்துக்குச் செல்லாது, அதற்குத் தென்கிழக்கே பதினெட்டு மைல் தொலைவிலுள்ள காசபர்வதம் (கஹகலகம) என்ற இடத்தில் சிறிதுகாலம் தங்கியிருந்தது. மகாகமையிலிருந்து புறப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியிருந்தமை யாலும், படையிற் பல அழிவுகள் ஏற்பட்டிருந்தமையாலும் காமணி தன் படைக்கு ஆறுதலளிக்க எண்ணியே இவ்வாறு காசபர்வததில் தங்கினான் என்பர். உருகுணையிலிருந்து உதவிப் படைகளையும் உணவையும் பெற்று, இறுதித் தாக்குதலுக்கு எல்லா ஆயத்தங்களையும் செய்யப் போதிய அவகாசத்தை காமணி பெற்றிருப்பான்.

காசபர்வதத்திற் பல மாதங்கள் தரித்திருந்த சிங்களப்படையை எல்லாளனது படையினர் தாக்க முற்பட்டனர். எல்லாளனது படையின் முக்கிய தளபதியான தீகஜந்து தீவிரமாகப் போர் செய்து காமணியின் உருவங்களை வெவ்வேறு இடங்களிற் தாக்கி ஏமாந்தானெனப்படுகின்றது. இறுதியில் சூரநிமிலன் என்ற

சிங்களத் தளபதியால் தாக்கப்பட்டு அவன் கொலையுண்டபின், தமிழ்ப் படைகள் அனுராதபுரத்துக்கு பின்வாங்கலாயின. காமணியின் வீரர்கள் தமிழ்ப் படைகளைப் பின்தொடர்ந்து தாக்கித் தமிழ்வீரர் பலரைக் கொன்றனர். அனுராதபுரத்தை அடையுமுன் எல்லாளது படையைத் தாக்கி முறியடிக்க காமணியின் படை திட்டமிட்டிருந்தது. எல்லாளனைத் தானே பொருது வெல்லவேண்டுமென அறியப் படுத்திய காமணி, தமிழ் வேந்தனைத் தனிச் சமருக்கழைத்தான். அறைகூவலை ஏற்ற எல்லாளனுக்கும் காமணிக்கும் அனுராதபுரத்தில், நகரின் தெற்கு வாயிலுக்கு அண்மையில் கடுஞ்சமர் நிகழ்ந்தது. சமரின் முடிவில் எல்லாளன் கொலையுண்டு மடிந்தான். மகாவம்ச விபரங்களின்படி, போர் இவ்வாறு முடிவுற்றபின், இறந்துபட்ட தன் பகைவனது சடலத்தை உரிய மரியாதைகளுடன் அடக்கஞ்செய்வித்து, அவன் கொலையுண்ட இடத்தில் அவனது நினைவுச் சின்னமொன்றைக் காமணி எழுப்புவித்தான். இச் 'சைத்திய'த்துக்கு அருகாமையில் வரும் பவனிகள் வாத்திய ஒலியை நிறுத்திச் செல்லவேண்டும் என அவனால் இயற்றப்பட்ட கட்டளை நெடுங்காலம் பின்பற்றப்பட்டதாகத் தெரிகின்றது. துட்டகாமணி தான் அடைந்த வெற்றியின் பின் தலைநகருட் பிரவேசித்த ஒரு சில நாட்களில் எல்லாளனுக்குதவியாக தென்னிந்தியாவிலிருந்து வந்த படையொன்றைக் கொலம்பகாலக என்ற இடத்தில் முறியடித்தான். இதன்பின் இலங்கை முழுமைக்கும் அரசனாகத் துட்டகாமணி முடிசூடி இருபத்துநான்கு ஆண்டுகள் ஆட்சி செலுத்தினான்.

துட்டகாமணி தனது ஆட்சிக்காலத்தில், மதப்பணிகளுக்கு முதன்மையளித்தான் என்பதை முன்னரே கூறினோம். அப்பணிகளை இனிச் சுருக்கமாகக் கவனிப்போம். துட்டகாமணி நிறுவிய முதலாவது சமயக் கட்டிடம் மிரிசவட்டி தாகபமாகும். இது திசவாவிக்கண்மையில் நிறுவப்பட்டிருந்தது. ஒன்பது மாடிகளையுடைய உபோசத மண்டபமொன்றை மஹாவிகாரைக்கு நிறுவிக்கொடுத்தான். இதுவே லோவமகாபாய (லோகபாசாத) வாகும். இவையெல்லாவற்றையும்விட, மிகுந்த செலவில் மிகப் பெரிய அளவில் கட்டப்பட்டதே ருவன்வலிசயா எனப்படும் மகாதூபமாகும். இது போன்ற பாரிய கட்டிடம் இதற்குமுன் இலங்கையில் இருந்ததில்லை. அக்கால இந்தியப் தூபிகளும் ருவன்வலிசயாவைப் போன்ற அளவு பெரிதாக இருக்கவில்லை. பிற்காலத்தில் இந்தத் தாகபமே வழிபாட்டுக்குரிய மிக முக்கிய நிலையமாக விளங்கியதாலும், மகாவிகாரைக்குரிய தூபிகளில் இது முதன்மை பெற்றதாலும் இதை நிறுவியதால் துட்டகாமணிக்கு அளவற்ற பெருமையுண்டாயிற்று. விகாரைகளுக்கு அவன் வழங்கிய நன்கொடைகளாலும், அவன் ஆற்றிய பிற பணிகளாலும், காமணி பௌத்தத்தை மக்களின் பெருமைக்குரிய மதமாக்கினான்

சமயத்துறையில் அவனது மிகப்பெரிய சாதனையான மகாதூபம் முற்றுப்பெறுமுன், துட்டகாமணி காலமானான். துட்டகாமணி நாட்டுக்கும் இனத்துக்கும் மதத்துக்கும் ஆற்றிய பெரும் பணிகளால் இலங்கையை ஆண்ட பெருமன்னர்களுள் முன்னணியில் வைத்தெண்ணப்படுகின்றான். காமணியின் புகழ்மிகு வரலாற்றை மகாவம்சம் போன்ற காலவேடுகள் இன்றுவரையும பேணிக்காத்து வந்துள்ளன.

துட்டகாமணியின் பின்னோரும், சமய விருத்திகளும்

விஜயனுடைய அரசமரபில் வந்தவர்களாகக் கொள்ளப்படும் மன்னர்கள், துட்டகாமணிக்குப் பின்னர் மேலும் இரு நூற்றாண்டுகள் வரையில் ஆட்சி செலுத்தினர். யசலாலக திசன் ஆட்சியுடன் இம்மரபு கி.பி. 59 அளவில் முடிவெய்தியது. துட்டகாமணிக்குப் பின் சுமார் பத்தொன்பது மன்னர்கள் இருநூற்றாண்டுகளாக ஆட்சிசெய்தனர். துட்டகாமணியுடன் ஒப்பிடும்போது, இவர்களிற் பெரும்பாலானவர்களுடைய ஆட்சிக் காலங்கள் அவ்வளவு சிறப்புடையவையாக இருக்கவில்லை. வட்டகாமணி ஒருவனே இவர்களுள் ஓரளவு சிறப்புடைய ஆட்சியையுடையவனாவான். ஏனைய அரசர்கள் பற்றி நாம் மிகச்சுருக்கமாகத் தெரிந்துகொண்டாற் போதுமானது. இவ்வத்தியாயத்தில், துட்டகாமணிக்குப் பின் அரசைப் பெற்ற சத்தா திசன் முதல் சபா என்பவனது காலம வரையுள்ள அரசியல் வரலாற்றின் போக்கை முதலிற் சுருக்கமாகக கவனிப்போம். இதன்பின், பௌத்த மதத்தில் ஏற்பட்ட சில முக்கிய விருத்திகளை அறிவோம். இலங்கைப் பௌத்தத்தின் வரலாற்றில் மிகுந்த முக்கியத்தைப்பெறும் சில நிகழ்ச்சிகள் இக்காலப் பகுதியில் ஏற்பட்டதை நாம் காணலாம்.

அரசியல் வரலாறு - சத்தாதிசன் முதல் சபா வரை (கி.மு. 137 - கி.பி. 65)

துட்டகாமணியின் மிகப்பெரிய அரசியற் சாதனை நாட்டுக்கு விடுதலையளித்து, ஒற்றுமையை நாட்டியமையே எனப் படித்தோம். இவ்வொற்றுமையானது, பின்வந்த அரசர்களின் காலத்தில் போதிய அளவுக்குப பேணப்படவில்லை. அடிக்கடி அரசியற் குழப்பங்களும், சச்சரவுகளும் ஏற்பட்டு இந்த ஒற்றுமையைச் சிதறச் செய்தன. உரிமையுடையவர்கள் பலவீனமுள்ளவர்களாக இருந்தமையும், தன்னலங்கொண்டவர்களின் வேட்கைக்கு இந்நிலைமை வாய்ப்பளித்தமையும், இதன் விளைவாக அந்நியர் தலையீடு ஏற்பட்டமையும் இக்கால அரசியற் போக்கில் அடிக்கடி காணப்பட்ட சில தன்மைகளாகும். அரசியற் தகராறுகள் மலிந்திருந்ததால் நாட்டில் அமைதி குலைந்திருந்தது. சமயம் பெரிதும் பாதிக்கப் பட்டது. ஒரு சில மன்னர்கள் இப்பொதுவான அரசியற் போக்குக்கு விலக்காகவும் இருந்தனர். திறமையும், நாட்டுப்பற்றும், குடிகளின் நலனில் நாட்டமும், சமய முன்னேற்றத்தில் அக்கறையும் உடையவர்களாக இருந்து, நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, முன்னேற்றத்தை உறுதிப்படுத்தினர். இவர்களின் பணிகள், ஏனைய மன்னர்களின் ஆட்சிக்காலங்களில் இடம்பெற்ற குழப்பங்களும் பயனற்றவையாக்கப்பட்டன. இப்பகுதியில் நாம் இம்மன்னர்கள் பற்றிய சில முக்கிய செய்திகளைக் கவனிப்போம். (அத்தியாய முடிவில் தரப்படும் மன்னர்களின் மரபுவரிசையைக் காட்டும் நிரலைப் பார்க்கவும்).

சத்தாதிசன் (137 - 119 கி.மு.) துட்டகாமணியின் பணிகளைப் பல வகைகளில் நிறைவுபெறச் செய்தவன், அவனது தம்பி சத்தா திசன் ஆவான். பௌத்தமதப் பற்று மிக்கவனான இவன் சமயப் பணிகளிலேயே தனது அமைதி

நிறைந்த பதினெட்டாண்டு ஆட்சியைச் செலவிட்டான். சத்தா திசனுக்குப் பின், ஆட்சியுரிமை பற்றிய தகராறு தோன்றியது. இவனது புதல்வர்களில் மூத்தவனான லஞ்ச திசன் புறக்கணிக்கப்பட்டு தூலத்தனன் என்ற இளவல், அமைச்சர்கள் சிலராலும் சங்கத்தினராலும் அரசனாக்கப்பட்டான். உருகுணையிலிருந்த லஞ்ச திசன், தலைநகருக்கு விரைந்து தனதுரிமையை நிலைநாட்டிக்கொண்டான். லஞ்ச திசனது ஆட்சி முடிவெய்தியபோது, அவனது மற்றொரு தம்பியான கல்லாடநாகன் ஆட்சியைப் பெற்றான். இவனுடைய ஆட்சியை அபகரிக்க, மூன்று இளவர்கள் சூழ்ச்சிசெய்து தோல்விகண்டனர். ஆட்சிக்கெதிரே நடைபெற்ற சதிகளால், நாடு அமைதியை இழந்து நின்றது. மகாரத்தகன் என்ற படைத்தளபதி ஒருவன் கல்லாட நாகனை வென்று அரசைக் கைப்பற்றினான். இந்நிலையிலேயே, சத்தா திசனது புதல்வர்களில் ஆக இளையவனான வட்டகாமணி பாலியாளனைத் தோற்கடித்து, அரசைப் பெற்றுக் கொண்டான். (103 கி.மு.)

வட்டகாமணி 103 - 77 கி.மு.: வட்டகாமணி அபயனது ஆட்சி அரசியல், சமயம் ஆகிய இரு துறைகளிலும் முக்கியம் வாய்ந்தது. அவனது ஆட்சி தொடங்கியபோது, அரசியற்றொல்லைகள் மிகுந்து காணப்பட்டன. இவற்றால், தொடக்கத்திலேயே அவனுடைய ஆட்சிக்கு ஆபத்து நேரிட்டது. உருகுணையைச் சேர்ந்த திச(ன்) என்ற பிராமணன் கலகத்தைத் தொடக்கிவைத்தான். இதேவேளையில், ஒரு தென்னிந்தியப் படையெடுப்பும் இலங்கைமீது நடைபெற்றது. இலங்கையின் அரசியலில் அண்மையில் ஏற்பட்ட சீர்கேடுகள், ஏழு தமிழ்ப் பிரதானிகள் தலைமையில் ஒரு படையெடுப்பு நடைபெறத் தூண்டுதல் அளித்தன. இப்பிரதானிகள் பாண்டிநாட்டைச் சேர்ந்தவர்கள் எனப்படுகின்றது. புலஹத்தன், பாகியன், பனையமாறன், பிளையமாறன், தாடிகன் முதலான பெயர்களை அவர்கள் கொண்டிருந்தனர். மகாதீர்த்தத்தில் தமிழ்ப்படை இறங்கியதைக் கேள்வியுள்ள வட்டகாமணி, தன்னை எதிர்நோக்கிய இரு ஆபத்துக்களையும் சமாளிக்க வகைதெரியாது தவித்தான். தமிழரைத் தோற்கடித்தால் அவன் அரசைத் திசனிடம் ஒப்படைப்பதாக கூறவே, திசன் தமிழரை எதிர்த்துத் தோல்வி எய்தினான். விரைவில் அனுராதபுரத்தை நோக்கி முன்னேறிய தமிழ்ப் படைக்கும், வட்டகாமணியின் படைக்கும் அனுராதபுரத்துக்கண்மையிலுள்ள கொலம்பகாலகவிற் சண்டை நிகழ்ந்தது. வட்டகாமணியின் படை தோல்வியெய்தவே களத்தினின்றும் அவன் தப்பியோடினான். நகர்க்குள் விரைந்து தன் குடும்பத்தவருடன் ஓர் இரதத்தில் நகரைவிட்டு வெளியேறினான். களத்தினின்றும் தப்பியோடியதைப் பார்த்து, 'பெரிய கருஞ்சிங்கம் தப்பியோடுகின்றதே!' எனக் கிரி என்ற ஒரு சமணத்துறவி பரிகசித்தாராம். இதைக்கேட்ட வட்டகாமணி கிரியின் பள்ளியிருக்கும் இடத்தில் ஒரு பௌத்த விகாரையை நிறுவ உறுதிசெய்தானெனப்படும். வட்டகாமணியின் இராணியான சோமாதேவி தமிழ்ப் பிரதானி ஒருவனிடம் சிக்கினாள். மற்றொருவன் புத்தரின் ஐயக்கலத்தை அபகரித்துக்கொண்டான். இந்த இரு பிரதானிகளும் இந்தியா மீண்டனர். ஏனைய ஐவரும் அனுராதபுரத்தில் ஆட்சியை நடத்தி வந்தனர். இவர்களிடையேயும் ஒற்றமையில்லாததால், ஒருவனைக் கொன்றே மற்றவன் ஆட்சிசெய்ததாகக் கூறப்படுகின்றது. ஐபரும

பதினான்கு ஆண்டுகள் ஏழு மாதங்களாக ஆட்சிசெய்யலாயினர். இதன் முடிவிலேயே மீண்டும் வட்டகாமணி படை திரட்டிவந்து, தாடிகன் என்ற இறுதித் தமிழ் அரசனைத் தோற்கடித்து, அரசை மீண்டும் பெற்றுக்கொண்டான். வட்டகாமணி அரசையிழந்து, அனுராதபுரத்துக்குத் தெய்கேயிருந்த காடுகளிலும், மலையகத்திலும், பின்னர் உருகுணையிலும் சஞ்சரித்த பதினான்கு ஆண்டுகளில் நடைபெற்றதாகக் கூறப்படும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் அவனது சமயப்பற்றை விளக்கவே உதவுபவை. உருகுணையிலுள்ள ஆகாசசேதிய என்னுமிடத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியால், வட்டகாமணிக்கும், அவனது அமைச்சர்களுக்கும் பெரும் முரண்பாடு தோன்றியபோது, பௌத்த சங்கத்தைச் சேர்ந்த குருமார்களே தலையிட்டு இவர்களை ஒன்றுபட வைத்தனர். உருகுளையிலிருந்து ஒரு படையைத் திரட்டிச் சென்று தமிழருடன் பொருதி அரசை மீட்டுக்கொண்டான். இவனுடைய தளபதிகள் எழுவரும் பல தீரச்செயல்களை இச் சண்டையின்போது புரிந்ததாக நம்பப்படுகிறது. ஆட்சியை மீண்டும் பெற்ற வட்டகாமணி, பன்னிரண்டாண்டுகள் வரையில் ஆட்சிசெய்தபோது (38 - 77 கி.மு.) சமயப் பணிகளிலேயே அவன் முக்கியமாக ஈடுபட்டிருந்தான். இவற்றை நாம் அடுத்த பகுதியிற் காண்போம். அந்நியராட்சி நடைபெற்றபோது, பல சீர்கேடுகள் நாட்டில் ஏற்பட்டன. இவற்றுள் மிகக் கோரமான உணவுப் பஞ்சம் (பிராமண திசன் - பஞ்சம்) ஒன்று நாட்டில் தாண்டவமாடியதாகச் சில நூல்கள் கூறும். இதனால் பல இன்னல்களை மக்களும், மதகுருமார்களும் அடைந்ததாகத் தெரிகின்றது. (மகாவம்சம் இப் பிராமண திசன் - பஞ்சம் பற்றியெதுவும் கூறவில்லை.

அனுலா

வட்டகாமணிக்குப் பின் அரசெய்திய மகாசூளி மகாதிசன் (76 - 62 கி.மு.) காலத்தில், குறிப்பாக அவனது ஆட்சியின் பிற்பகுதியில், குழப்பம் ஏற்படலாயிற்று. இதற்குக் காரணமாக இருந்த சோரநாகன், அரச மரபைச் சேர்ந்தவனாவான். கலகக்காரனாகவும், கொள்ளைக்காரனாகவும் வாழ்ந்து பல அழிவுகளை இவன் நாட்டிற் செய்தான். சோரநாகன் அரசைப் பெற்ற பின்னரும், தனக்கு முன்னர் புகலிடம் அளிக்காத விகாரைகளைத் தரைமட்டமாக்கினான். இவனுடைய ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த அனுலா, திசன் என்பவனை அரசனாக்கிப் பின்னர் அவனையும் நஞ்சூட்டிக் கொன்றுவிட்டுத் தானே அரசையேற்று நடத்தினான். இலங்கையின் வரலாற்றில் முதல் இராணியாக விளங்கிய பெருமைக்குரியவளான இவளது நடவடிக்கைகள் யாவும் பெண் குலத்துக்கே மாசு கற்பிப்பவையாக இருந்தன.

அமைதியும் முன்னேற்றமும்

அனுலாவைக் கொன்று ஆட்சியைப் பெற்ற குடகண்ண அபயன் (41 - 19) முன்னர் பௌத்த துறவியாக இருந்தவன். இவனுடைய ஆட்சியுடன், முன்னர் நிலவிய கொந்தளிப்பு அடங்கி, நாடு நீண்டகாலம் அமைதியை அனுபவிக்கலாயிற்று. இவனும், இவனுக்குப் பின் அரசைப்பெற்ற பாதிக அபயன்,

மகாதாடிக மகாநாகன், ஆமண்டகாமணி அபயன் ஆகியோரும் ஆட்சிசெய்த சுமார் தொண்ணூறாண்டுக் காலத்தில் நாடு அமைதியையும் முன்னேற்றத்தையும் கண்டது. நாட்டுக்கு மிகவும் தேவைப்பட்ட நல்லாட்சியை இவர்கள் தொடர்ந்து நல்கினர். சமயப் பணிகளில் இவர்களும் அதிக நாட்டங்கொண்டு உழைத்தனர். பாதிக அபயன் காலத்திலேயே (கி.மு. 19 - 9) உரோமப் பேரரசுக்குத் தன் தூதுவர்களை அனுப்பி அங்கிருந்து பெற்ற பவளத்தை மகாதூபத்தை அணிசெய்யப் பயன்படுத்தினான்.

இள(ஈழ)நாகன் - இலம்பகர்ணர் முரண்பாடு

தன் தமையன் ஆமண்ட காமணியைக் கொன்று அரசைப்பெற்ற கணிரஜானு என்பானையும் அத்தகைய ஒரு கதியே காத்திரந்ததாயினும், அவன் அதிலிருந்து தப்பிக் கொண்டான். இவளுன்குப்பின், இவன் ஒன்றுவிட்ட மகன் சூளாபயன் ஓராண்டும், சீவலீ என்ற அவனது தங்கை ஒரு சில மாதங்களும் ஆட்சிசெய்த பின் ஆமண்டகாமணியின் மருமகனான இளநாயகன் அரசைப் பெற்றான்.

இவனுடைய ஆட்சியின்போதே 'இலம்பகர்ண' மரபினர் பற்றி முதன் முதலாகக் கேள்விப்படுகின்றோம். இம்மரபைச் சேர்ந்தவர்கள் பலர் தொடர்ச்சியாக இலங்கையை அனுராதபுர காலத்திலிருந்து ஆட்சி செய்துள்ளனர். இம்மரபின் ஆதிவரலாறு தெளிவாகத் தெரியவில்லை. ஆதிச்சிங்களரிடையே விளங்கிய குழுக்களுக்குரிய இலச்சினைகள் மூலம் பெறப்பட்ட பெயர்களில் 'லம்பகண்ண' (நீண்டகாது-முயல்) என்பதும் ஒன்று எனக்கொண்டு இலம்பகர்ணர் அவ்வகையான ஆதிமரபினர் என்பது ஒரு சாரார் கருத்தாகும். தேவானம்பிய திசன் காலத்தில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வெள்ளரசுக்கிளையுடன் இலங்கை வந்த அரச மரபினரிலிருந்தே இலம்பகர்ணர் தோன்றினர் என்ற கருத்தை வேறு சிலர் கொள்வர். இன்னும் சிலர், எழுத்தர் என்ற பொருளுடைய 'வேகக' என்பதற்குள்ள சிங்கள வடிவம் 'லரமணி'யாதலால், இவர்கள் முதலில் அரசவையிற் பணியாற்றிய எழுத்தராகவேயிருந்தனர் என்பர். இவர்களின் ஆதிவரலாறு எத்தகையதாக இருப்பினும், ஆதிகால இலங்கை அரசியலில் இவர்கள் முக்கிய பங்கை கொண்டிருந்தனரென்பதை நாம் உணர்தல் வேண்டும். இளநாகனுக்கும் இலம்ப கர்ணருக்கும் ஏற்பட்ட தகராறுக்கு, முடிசூட்டுவிழா ஊர்வலத்தில் இலம்பகர்ணர் தமக்குரிய இடத்தில் நின்று மரியாதை செலுத்தத் தவறியது காரணமாகியது. இளநாகன் இலம்பகர்ணரைத் தண்டிப்பதற்காக அவர்களைச் சண்டாளரின் கீழ் வேலைசெய்ய வைத்தான். இந்த அவமானத்தைப் பொறுக்காத இலம்பகர்ணர்கள், அரசனுக்கெதிராகக் கலகம்செய்து, ஆட்சியைப் பெற்று, இளநாகனைச் சிறையில் வைத்தனர் இளநாகன் இந்தியாவுக்குத் தப்பியோடி, அங்கு உதவிப் படைகளைப் பெற்றுவந்து, இழந்த தன் அரசை மீட்டுக்கொண்டான். இலம்பகர்ணர் மீது பழிவாங்க எண்ணி அவர்களின் தலைகளைக் கொய்துவிடக் கட்டளையிட்டான். பின்னர் தாயின் தலையீட்டால், அதை நிறைவேற்றாது, அவர்களை அவமானப்படுத்துவதுடன் திருப்தி பெற்றான். இளநாகன் இலம்பகர்ணரை வெற்றி கொண்டபோதும், விரைவில் அவர்களுக்கு நிலைமைகள் சாதகமாயின.

விஜயன் மரபு அற்றுப்போதல்

இந்தியாவிலிருந்து மீண்டு அரசைப் பெற்று, ஆறு ஆண்டுகள் ஆட்சிசெய்தபின் இளநாகன் இறந்துபோக, அவன் மகன் சந்தமுக சிவன் அரசைப் பெற்றான். இவனைக் கொன்று அரசனான இவன் தம்பி **யசலாலக திசனே** இவனது மரபின் (விஜயன் மரபின்) இறுதி மன்னனாவான். இம்மன்னன் தன் வாயில்காப்போனான சபா என்பவனுடன் கடைமாற்றம் செய்து வேடிக்கை பார்த்தான் எனவும் கூறப்படுகின்றது. போதி மரத்துடன் தொடர்புடைய ஒரு விழாவிலேயே இத்தகைய விளையாட்டில் மன்னன் ஈடுபட்டிருக்க வேண்டும். தத்த என்பவனது மகனான சபாவுக்குக் காலவேடுகளில் சுபா என்ற பெயரேயுண்டு. கல்வெட்டுக்கள் இவனைச் சபா என அழைக்கின்றன. அவனுடைய மரபைப் பற்றி எவ்வித விவரமும் எமக்குத் தெரியாது. சபா ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்யுமுன், இலம்பகர்ண மரபைச் சேர்ந்த வசபன் அவனை வென்று, புதிய மரபின் ஆட்சியை நிறுவினான்.

சமய வளர்ச்சி

துட்டகாமணியின் ஆட்சியின் முடிவில், மேனிலையெய்தியிருந்த பௌத்தம் அவன் பின்னோர் காலத்தில் அத்துணைச் சிறப்பைப் பெற்றதாகத் தெரியவில்லை. பெரும்பாலான மன்னர்கள் பௌத்தத்துக்கு ஆதரவையளித்திருந்தபோதும், அரசியலில் அடிக்கடி தோன்றிய சச்சரவுகளும், அமைதியின்மையும் பௌத்தத்தின் நிலையைப் பாதிக்கவே செய்தன. துட்டகாமணியின் தம்பி சத்தா திசன், சமய வளர்ச்சியில் தன் தமையனுக்குக் குறையாத ஆர்வங்கொண்டு பணியாற்றினான். துட்டகாமணி காலத்தில் முடிவுறாதிருந்த மகாதூபத்தை இவனே கட்டி முடித்தான். தக்கிணவிகாரை போன்ற பல புதிய விகாரைகளையும் இவன் நிறுவி, மத வளர்ச்சிக்குப் பல பணிகளையாற்றினான். ஆனால், சத்தா திசன் மகனான லஞ்ச திசன், தான் அரசைப் பெறுதற்குத் தடையாகவிருந்த சங்கத்தினர் மீது வெறுப்புற்றுத் தன் முதல் மூன்றாண்டு ஆட்சியின்போது பௌத்தத்தைப் புறக்கணித்தான். இவனைத் தொடர்ந்து அரசியலில் உண்டான குழப்பங்கள் பௌத்த வளர்ச்சியை மேலும் பாதித்தன. இதன்பின், வட்டகாமணியின் காலத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளே இக்காலத்துச் சமய வளர்ச்சியில் மிக முக்கியமானவை. இவற்றைச் சிறிது விரிவாக இனிக் கவனிப்போம்.

வட்டகாமணி காலத்தில் நடைபெற்ற தமிழர் படையெடுப்பின் விளைவாகவும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பஞ்சத்தின் பயனாகவும், அனுராதபுரத்திலும் மிகிந்தலையிலும் உள்ள விகாரைகளினின்றும் பிக்குகள் வெளியேறித் தென்னிலங்கைக்கும் இந்தியாவுக்கும் சென்றனர். உணவு கிடையாமையால் பலர் இறந்து போயினர். இந்நிலையில், அதுவரை வாய்மொழி மரபாக இருந்து வந்த திரிபிடக என்ற பௌத்தக்கோட்பாட்டு நூல்களை எழுத்திற் பொறித்திருக்க வேண்டியதன் அவசியம் புலப்பட்டது. மாத்தளையிலுள்ள அலுவிகாரையில் கூடிய பிக்குகள் அந்நூல்களை எழுத்திற் பொறித்தனர். புத்தரின் போதனைகள இவ்வாறு பிற்காலத்தவர்க்குப் பேணப்பட்டு வழங்கப்பட்டதால் பௌத்தத்தின்

வளர்ச்சிக்குப் பேருதவியாக இது அமைந்தது. வட்டகாமணி அரசை மீட்டுக் கொண்டபின், அவனும் அவனது அதிகாரிகளும் பல விகாரைகளைச் சங்கத்தினர்க்கு நிறுவிக்கொடுத்தனர். கிரியின் சமணப் பள்ளி தரைமட்ட மாக்கப்பட்டு, அது இருந்த இடத்தில் அபயகிரி விகாரையை அவன் நிறுவினான். இது அனுராதபுரத்தில் ஒரு முக்கிய விகாரையாக விளங்கியது. மகாவிகாரை தேரவாத மதக் கோட்பாடுகளைப் பேணுவதில் தலைசிறந்து விளங்கியதைப் போல, அபயகிரி விகாரை புதுமைக் கருத்துக்களையும், சீர்திருத்தங்களையும் வரவேற்பதில் கவனமெடுத்து வந்தது. தனக்கு முன்னர் இடுக்கண் ஏற்பட்டபோது உதவிய குபிக்கலை மகாதிச தேரருக்கு இவ்விகாரையை வட்டகாமணி வழங்கினான். இவ்வாறே, தளபதிகளால் நிறுவப்பட்ட விகாரைகள் திச என்ற தேரருக்கு வழங்கப்பட்டன. இவ்வாறு மன்னனும், அதிகாரிகளும் தம் நன்றிக் கடனைத் தமக்குதவிய இரு தேரர்களுக்கும் செலுத்தினர்.

மகாதிச தேரர் முன்னர் தலைநகருக்கு வெகுதொலைவில் வாழ்ந்து, வட்டகாமணியின் அழைப்பின்பேரில் தலைநகர் வந்து வாழ்ந்து வரலானார். இவ்வாறு மகாதிச தேரருக்கு அரசன் முக்கியமளித்ததை அவ்விகாரையினர் விரும்பியிருக்கமாட்டார்களெனவும், இதனால் அவர் மீது விரைவில் குறைகாண அவர்கள் முற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. காரணமெதுவாயினும், சாதாரண மக்களின் இல்லங்களுக்குச் சென்று வந்ததாக அப்பிக்கு குற்றஞ்சாட்டப்பட்டு மகாவிகாரையினின்றும் வெளியேற்றப்பட்டார். இத்தண்டனையை விரும்பாத அவரது சீடராக விளங்கிய மற்றொரு பிக்குவான 'பகல மசு' (நீண்ட தாடியுடைய) திசதேரரும் அவனது ஆதரவாளரூர் சிலரும் மகாவிகாரையினின்று வெளியேறி, அபயகிரிக்குச் சென்று ஒரு தனிப்பிரிவாக வாழ்ந்தனர். இவ்வாறு வட்டகாமணி அபயன் காலத்தில் இலங்கைப் பௌத்த சங்கத்தினரிடையே தோன்றிய முதற்பேதகம், கொள்கை வேறுபாடுகளைக் கொண்டு ஏற்படாது, ஒழுக்க விதிகள் பற்றியதாக இருந்தமை கவனிக்கற்பாலது. ஆனால், விரைவில் இந்தியாவில் வஜ்ஜிபுத்திர பிரிவைச் சேர்ந்த தர்மருசி என்பாரின் சீடர்களான பிக்குகள் இலங்கை வந்தபோது, அவர்கள் அபயகிரி விகாரையினரால் வரவேற்றப் பட்டதால் அபயகிரிக் குருமார்கள் தர்மருசிப் பிரிவினர் என அழைக்கப்படலாயினர். இவ்வாறான சமய விருத்திகளால், வட்டகாமணியின் ஆட்சிக்காலம் பௌத்தமத வரலாற்றில் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றுவிட்டது. இவன் ஆற்றிய மதப்பணிகளால் பொதுமக்களிடையே இவனுக்குண்டான செல்வாக்கு அளப்பரியது. தன அரசியல் வாழ்வில் இவன் அடைந்த இடர்களின்போதும், மதவளர்ச்சியிலே நாட்டம் மிக்கவனாக இருந்து, பின்னர் தான் நினைத்தவற்றைச் செயற்படுத்தியதாகக் கூறப்படுகின்றது. இதனாலேயே, தம்புளை முதலான பல இடங்களிலுள்ள குகைகள் இவனால் விகாரங்களாக்கப்பட்டன என்ற நம்பிக்கை பொதுமக்களிடையே வலுத்து வந்துவிட்டது.

வட்டகாமணியின் மகனான சோரநாதன் கலகக்காரனாக விளங்கிய காலத்தில் தனக்குப் புகலிடமளிக்காத விகாரைகள் பதினெட்டை, அரசனான பின் அழித்து விட்டதாகக் கூறப்படுகின்றது. இதன் பின்னர், பாதிக அபயன், மகாதாடிக

மகாநாகன், ஆமண்டகாமணி ஆகிய மன்னர்கள் பௌத்த வளர்ச்சிக்கு உழைத்தமையால், சமய நூல்களால் பாராட்டப்பட்டுள்ளனர். மகாதூபத்தினை நன்னிலைப்படுத்தவும் அழகுபடுத்தவும் பாதிக அபயன் பாடுபட்டதாகத் தெரிகின்றது. பிக்குகள் நூல்களைப் பயில்வதற்கான வசதிகளை இம்மன்னன் அளித்தான் என மகாவம்சம் குறிப்பிட்டுள்ளது. துட்டகாமணியின் முன்மாதிரியைப் பின்பற்றி, இருபத்தெட்டு வெசாக் பண்டிகைகளை இவன் நடத்தி வைத்ததாகவும், அதே நூல் அறியத்தருகின்றது. மகாநாகனும் மிக்க சமயப் பற்றுடையவனாக விளங்கி, பௌத்த நெறியின் வளர்ச்சிக்காகப பெரிதும் உழைத்தான். இவன் காலத்திலும் சமய விழாக்கள் பல இடம்பெற்றன. ஆமண்டகாமணி என்பானும், புத்தரின் போதனைகளில் ஈடுபட்டு அவற்றின்படியொழுகியவன். 'மாகாத' எனப்படும் உயிர்வதைத் தடையை இவன் விதித்தமையால், இவன் அசோகன் வழியைப் பின்பற்றியிருக்கலாம் என்பர். இம் மூவரின் ஆட்சிக்காலங்கள் வட்டகாமணிக்குப் பின் பௌத்தத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும உதவியவென்பது தெளிவு.

கணிரஜானு திசன் என்பவன் காலத்தில், மிகிந்தலை (சேதிய பர்வத) விகாரைக் குருமார்களிடையே ஏற்பட்ட ஒரு தகராறைத் தீர்க்க அரசன் அங்கு நேரிற் சென்று, விசாரணை நடத்தியபின் முறைப்படி தீர்ப்பு வழங்கினான். அரசன் முடிவை ஏற்காத குருமார்கள் சிலர் அரசனைச் சிறைப்பிடித்துக் கொல்ல முயன்றதாகவும் ஒருவாறு உயிர்பிழைத்த மன்னன், பின்னர் அவ்வாறு நடந்து கொண்ட குருமார்கள் அறுபதின்மரை கணிரா என்ற செங்குத்தான பாறையினின்றும் வீழ்த்திக் கொன்றதாகவும் கூறப்பட்டுள்ளது. (மன்னன் பெயரிலுள்ள கணிரானு என்பது இந்நிகழ்ச்சியாலேயே ஏற்பட்டது) குருமார்களிற் சிலர் நடத்தை கெட்டவர்களாகவும், சங்கத்தின் நற்பெயருக்கு இழுக்குத் தருபவர்களாகவும் இருந்தனர் என்பது இதனால் புலப்படும்.

அநுராதபுரகால வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தகத் தொடர்புகள் (பிற்பட்ட காலம்)

கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஆசியாவில் நடைபெற்ற வாணிப நடவடிக்கைகளில் இலங்கையும் ஒரு முக்கிய இடத்தினைப் பெறத் தொடங்கி யிருந்தது. இக்காலகட்ட வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கை கொண்டிருந்த பங்கு பற்றி அறிந்துகொள்வதற்கு ஒரு தரப்பில் இந்திய சீன இலக்கியங்களும் மறுவளத்தில் பாரசீக, அராபிய நூல்களும் தகவல் தருகின்றன. அத்துடன் இக்காலப் பகுதியில் ஈழத்திலும், தென்னிந்தியாவிலும் பொறிக்கப்பட்ட சில கல்வெட்டுக்களும் பிறநாட்டு வர்த்தகம் பற்றிய ஒரு சில தகவல்களைத் தந்துதவியுள்ளன. கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் மேலைத்தேயத்திற்கும், கீழைத்தேயத்திற்கும் இடையே நடைபெற்ற வர்த்தகத்தில் மிக முக்கியமான இடத்தினை தென்னிந்தியத் துறைமுகங்கள் பெற்றிருந்தன. ஈழத்து விளைபொருட்களும் தென்னிந்தியத் துறைமுகங்களுக்கு எடுத்துச் சென்றபின்தான் வேறுநாடுகளுக்கு ஏற்றமதியாகின. இதே போன்றதொரு நிலமையே கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரும், அதாவது அநுராதபுர

காலப்பகுதியின் இறுதிவரைக்கும் காணப்பட்டிருந்தது. இருப்பினும் முன்னரைவிட கூடியளவிற்கு முக்கியத்துவத்தினை ஈழத்துறைமுகங்களும் பெறத் தொடங்கின எனலாம். கிழக்காசியாவிலிருந்து தென்இந்தியத் துறைமுகங்களுக்குப் பொருட்கள் கொண்டுவரப்பட்டமை போன்று, இலங்கைக்கும் அவ்வாறு பொருட்கள் கொண்டுவரப்பட்டு, பின்னர் இங்கிருந்து மேற்காசிய நாடுகளுக்கு அப்பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டன. இச்செய்தியை கொஸ்மஸ் இந்திக் கோபியஸ்சஸ் என்ற நூலில் குறிக்கப்பட்டிருத்தலைக் காணலாம். இந்நூலின்படி கிழக்காசியாவில் இருந்து சீனக் கப்பல்களிலே பல பொருட்கள், குறிப்பாகப் பட்டுப் பொருட்கள், புடவைகள் இங்கு கொண்டு வரப்பட்டுப் பின்னர் இங்கிருந்து மேலைத்தேயத்திற்கு ஏற்றமதி செய்யப்பட்டன என்பதனை அறியமுடிகிறது. சீனப் பீங்கான் மட்பாத்திரங்கள் கூட இலங்கைக்கு, குறிப்பாக மாந்தை, மண்ணித்தலை, வெள்ளைக்கடற்கரைப் பகுதியிலுள்ள துறைமுகங்களுக்கு எடுத்துவரப்பட்டு, பின்னர் பாரசீகத்திற்கும், பைசாந்தியப் பேரரசிற்கும் கப்பல்கள் மூலமாகவே ஏற்றிச்செல்லப்பட்டமையைக் காணலாம். 1980ஆம் ஆண்டில் அமெரிக்க பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் ஜோன் காஸ்வெல் என்பவர் அல்லைப்பிட்டியில் மணலுக்குள் புதைத்து, மறைந்து போயிருந்த புராதன கப்பலொன்றிலிருந்த ஏராளமான சீனப் பீங்கான் பாத்திரங்களை அகழ்ந்து வெளிப்படுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கி.பி. 6ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து இலங்கையானது தென்ஆசியப் பிரதேசம், தென்கிழக்காசியப் பிரதேசங்கள் ஊடான வாணிப நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தமையையும் காண்கின்றோம். கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.9ஆம் நூற்றாண்டின் இறுதிவரைக்கும் தென்னிந்தியாவில் பேரரசொன்றினை அமைத்த பல்லவ வம்சத்தினர் தென்கிழக்காசிய அரசுகளுடன் வர்த்தகத்தொடர்புகளை மிகநெருக்கமாக ஏற்படுத்தியிருந்தனர். பல்லவப் பேரரசர் மேற்கொண்ட இவ்வர்த்தக நடவடிக்கை வலைப்பின்னலினுள் இலங்கையும் உட்படுத்தப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. வடஇலங்கையின் துறைகள் யாவும் பல்லவர் காலத்து வணிக கணங்களின் செல்வாக்கிற்குட்பட்டவையாகக் காணப்பட்ட அதேநேரத்தில் உள்நாட்டு வாணிப மையங்களிலும் அவ்வணிக கணங்களின் செல்வாக்கு நிறைந்து காணப்பட்டிருந்தது. பல்லவப் பேரரசின் ஆதரவில் நடைபெற்ற தென்கிழக்காசிய வர்த்தகம் இலங்கையின் கரையோரத் துறைமுகங்களையும் அரவணைத்த வண்ணமே தொழிற்பட்டிருந்தன. தென் இலங்கையிலுள்ள தொந்திரா எனப்படும் தெய்வேந்திர முனையில் காணப்படும் உபுல்வன் கோயிலும், மலாயா தீபகற்பத்தில் தகுவா-பா என்ற இடத்தில் காணப்படும் விஷ்ணு கோவிலும், மணிக்கிராமத்தார் கல்வெட்டும் பல்லவர்களது அரச ஆணையைப்பெற்ற வர்த்தக நடவடிக்கைகளுக்குரிய மையங்களாகக் காணப்படுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அநுராதபுரத்திலுள்ள இசுறுமுனிய பல்லவர் பண்பாட்டின் கற்குகைக் கட்டிடக்கலையின் வெளிப்பாடு என்பதனையும் மறந்துவிடலாகாது. எனவே தென்கிழக்காசியாவிலிருந்து தென்னிந்தியாவிற்குச் சென்ற வர்த்தகக் கப்பல்கள் இலங்கையிலுள்ள

துறைமுகங்களிலும் நங்கூரமிட்டுவிட்டுச் சென்றுள்ளன என்பதனை ஆதாரங்களுடன் காணமுடிகிறது. வட இலங்கையில், யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் கண் வியாபாரிமூலை - தம்பசெட்டிப் பகுதியில் பல்லவர்கால வர்த்தகச் செழிப்பினை வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கோலங்கள் இற்றைவரைக்கும் அங்கு காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பல்லவ சிற்பக்கலை முறையில் அமைந்த நாகதீப கலசங்கள் இற்றைவரைக்கும் அங்கு பாதுகாக்கப்பட்டுள்ளமை அக்கால வாணிபச் செழிப்பின் சின்னமென்று உணர வைத்துள்ளது.

இதே காலப்பரப்பில் முன்புபோல் தென்னிந்தியாவிற்கும், இலங்கைக்குமிடையே மிக நெருங்கிய வர்த்தகத்தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. இக்காலப்பகுதியில் பல்லப்பேரரசிலும், கர்நாடகப் பரப்பிலும் செல்வாக்குடன் எழுச்சிபெற்றிருந்த வணிகக் குழுக்கள் இலங்கைக்கும் வருகைதந்து, இங்குள்ள வர்த்தகத் தளங்களில் தங்கியிருந்து, வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன என்பதை உறுதிப்படுத்தும் சாசனச்சான்றுகள் கிடைத்துள்ளன. இதே காலப்பகுதியில் இலங்கை மன்னர்களும் இப்பிறநாட்டு வர்த்தக முயற்சிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, பிறநாட்டுப் பேரரசுகளுடன் இராஜதந்திரத் தொடர்புகளையும், வியாபாரத் தொடர்புகளையும் ஏற்படுத்தியிருந்தனர். இவ்வாறாக முக்கியத்துவம் பெற்ற இலங்கையின் பிறநாட்டு வர்த்தகத்தை நான்கு பெரும் பிரிவுகளாக வகுத்து ஆராயமுடியும். அவையாவன:

1. **மேலைத்தேயத்துடனான வர்த்தக நடவடிக்கைகள், இவ்வர்த்தக முயற்சியில் இலங்கையுடன் தொடர்புகொண்ட நாடுகளாக பைசாந்தியப் பேரரசு, பாரசீக, அராபியப் பேரரசுகள் அமைகின்றன.**
2. **தென்னிந்தியாவுடன் நடாத்தப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள்**
3. **தென்கிழக்காசிய நாடுகளுடனான வர்த்தக நடவடிக்கைகள்**
4. **கிழக்காசியா அல்லது சீனா, ஜப்பானுடன் மேற்கொண்ட வர்த்தக நடவடிக்கைகள்.**

கி.பிற்பட்ட நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிற்கும் தென்ஆசியாவிற்கும் இடையில் நடைபெற்ற வர்த்தகத்தில் அராபியர்களும், பாரசீகர்களும் இடைநிலை வர்த்தகர் களாகப் பங்குபெற்றிருந்தனர். இக்காலப்பகுதியில் சிறப்பாக கி.பி. 1ஆம், 2ஆம், 3ஆம் நூற்றாண்டுகளில் அராபியர், பாரசீகரின் பங்கினைப் பாதிக்கத்தக்க வகையில் கிரேக்க, உரோம வர்த்தகர்கள் தென்னாசிய வர்த்தகத்தில் ஈடுபடத் தொடங்கினர். கி.பி. 1ஆம் நூற்றாண்டில் தென்னாசியாவிற்கு செல்வதற்கான தரைமார்க்க வியாபாரப் பாதை அராபிய, பாரசீக நாடுகளுக்கூடாகச் சென்ற காரணத்தினால் அத்தரை மார்க்கத்தைக் கட்டுப்படுத்திய அராபியரும், பாரசீகரும் கிரேக்க, ரோமர்களுக்கு கிடைக்காத பல நன்மைகளை அவர்கள் பெற வாய்ப்பேற்பட்டிருந்தது. ஆனால் விரைவில் கி.பி. 1ஆம் நூற்றாண்டில் அந்நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. செங்கடலில் இருந்து தரை மார்க்கமாகவோ அல்லது கரையோர மார்க்கமாகவோ இந்தியாவிற்குச் செல்லாது

அராபியக் கடற்கரை வழியாக கடல்மார்க்கமாக வர்த்தகப் பாதை ஒன்றை கிரேக்க - ரோமர் கண்டுபிடித்தனர். அராபியக்கடலில் ஏற்படும் பருவக்காற்றின் இயக்கத்தைக் கண்டுகொண்டதன் வாயிலாக இக்கடல் மார்க்கத்தை சிறந்த முறையில் இந்தியாவுடனான வியாபாரத்திற்குப் பயன்படுத்த ஆரம்பித்திருந்தனர். இதனால் அராபிய, பாரசீக நாடுகளுக்குச் செல்லாமல் முன்னரைவிட விரைவான முறையில் தென்னிந்தியக் கரையை சென்றடைய கிரேக்கருக்கும் ரோமருக்கும் முடிந்தது.

இம்மாற்றமானது கிறிஸ்துவுக்கப் பிற்பட்ட முதல் நான்கு நூற்றாண்டுகள் வரையும் தென்னாசிய வாணிபத்துறையில் பெரும்பங்கு கொள்வதற்காக அராபிய - பாரசீகர் ஒருபுறமும் கிரேக்கரும் ரோமரும் மறுபுறமுமாகப் பெரும் போட்டியிட்டனர். கி.பி. 3ஆம் நூற்றாண்டில் பாரசீகத்தில் நடைபெற்ற ஒரு அரசியல் சம்பவம் இப்போட்டியை பாரசீகருக்கச் சார்பாகத் தீர்த்து வைத்தது. கி.பி. 3ஆம் நூற்றாண்டில் கிரேக்க - ரோமர்களின் எதிரியாகிய சஸ்ஸானிய வம்சம் பாரசீகத்தில் ஆதிக்கம் பெற்றதும் கிரேக்க - ரோமப் பயணமும் வியாபார நடவடிக்கைகளும் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது. அதேநேரத்தில் உரோமப் பேரரசு தளர்ச்சி யடைந்து, பலமிழந்து கொண்டிருந்த காரணத்தினாலும், கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தென்னாசிய வாணிபத்துறையில் அவர்களால் முன்புபோல் ஈடுபடமுடியவில்லை. பாரசீகத்தில் ஆதிக்கம் பெற்ற புதிய வம்சமானது அராபியக் கடல்வழியாகச் சென்ற கடல் மார்க்கங்கள் அனைத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்ததன் அடிப்படையில் தென்னாசியாவுடன் கிரேக்கரும் ரோமரும் கொண்டிருந்த வாணிபத் தொடர்புகளைப் பெரிதளவுக்கு கட்டுப்படுத்தி விட்டனர். அதன் பின்னர் கிரேக்கரும் ரோமரும் செங்கடல்வரை மட்டும் பயணம் செய்து, அங்குள்ள வாணிபச் சந்தையில் தென்னிந்தியப் பொருட்களை அதிகவிலை கொடுத்து வாங்கிச் செல்ல வேண்டியநிலைக்கு உட்படுத்தப்பட்டனர். இதனால் கி.பி. 6ஆம் நூற்றாண்டளவில் மீண்டும் பாரசீகர் ஐரோப்பிய - தென்னாசிய வர்த்தகத்தில் நடுநிலை வர்த்தகர்களாக இடம்பிடித்துக் கொண்டனர். இப்புதியதொரு வர்த்தகச் சூழ்நிலையாலேதான் பாரசீகர் இலங்கையுடன் தொடர்புகொண்டு இப்பிராந்தியத்தில் வர்த்தகக் குடியேற்றங்களை நிறுவினர். கி.பி. 6ஆம் நூற்றாண்டில் கொஸ்மஸ் தனது நூலை எழுதும்போது இலங்கையில் பாரசீகரின் குடியேற்றம் ஒன்று காணப்பட்டதாக எழுதியுள்ளார். அவ்வாறான பாரசீகத்தவரின் குடியேற்றம் ஒன்று அநுராதபுரத்தில் இருந்தமைக்கான தொல்லியல் ஆவணமாக எமக்கக் கிடைத்திருப்பது சிலுவைச் சின்னம் தாங்கிய ஒரு கற்சிற்பமாகும். நெஸ்ரோரிய கிறிஸ்தவர்களது வாணிகக்குழு ஒன்றின் குறியீடாகவெ அநுராதபுரத்தில் இச்சின்னம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். இதன் காலம் கி.பி. 4ஆம் நூற்றாண்டு ஆகும். இதே சிலுவைச் சின்னத்தினைத் தாங்கிய அச்சுக்கத்தப்பட்ட முறையிலான வெள்ளி நாணயம் ஒன்று வாசகம் பொறிக்கப்பட்ட முறையில் மிகவும் அண்மைக் காலத்தில் இந்நூலாசிரியரால் கந்தரோடையிலுள்ள மண்படைகளிலிருந்து மீட்கப்பட்டு ஆராயப்பட்டது. நீள்சதுரமான இவ்வெள்ளி நாணயத்தின் முற்பக்கத்தில் நடுவில் (மையப்

பகுதியில்) நெஸ்ரோறியச் சிலுவைச் சின்னமும், அதன்கீழ் பிராமி வடிவமும் சமஸ்கிருத வரிவடிவமும் கலந்தநிலையில் பொறிக்கப்பட்ட மாதிரேக்க காஸுஸ என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுக் காணப்படுகிறது. வரிவடிவ அமைதியில் கி.பி. 4ஆம் நூற்றாண்டுக்குரிய பண்பினைக் கொண்ட இந்நாணயமானது கந்தரோடையை மையமாகக் கொண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டின்கண் பாரசீகருக்கு முன்னோடியாக அமைந்த நெஸ்ரோறிய கிறிஸ்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட வாணிப நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் ஆவணமாக அமைந்துள்ளது.

கி.பிற்பட்ட 7ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஸ்லாம் மதம் ஆசியா மைனரில் (மத்தியாசியா) எழுச்சிபெற்றபோது பாரசீகரும் அம்மதத்தின் செல்வாக்கிற்குள் அகப்படவேண்டிய நிலைக்குள்ளாயினர். இதனால் பாரசீகர் அராபியரின் மதத்தையும் (குர்-ஆன்), மொழியையும் (உருது) ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்குள்ளானார்கள். இந்நிலையில் பாரசீகரின் தென்னாசிய வாணிபத்தில் அராபியரும் முதன்முதலாக பங்குகொள்ளத் தொடங்கினர். இவர்களோடு ஸ்லாம் மதத்தின் செல்வாக்கிற்குட்பட்ட கிழக்காசியாவிலுள்ள மக்கள் சிலரும் சிறப்பாக அபிசீனியரும் பாரசீகருடன் இவ்வர்த்தகத்தில் பங்குகொண்டனர். இதனால் கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தென்னாசிய-மேலைத்தேய வர்த்தகத்தில் நடுநிலை வர்த்தகர்களாக பாரசீகர் மட்டுமல்லாது பொதுவாக மேற்காசிய, கிழக்காபிரிக்க ஸ்லாமியரும் பங்கு கொண்டிருந்தமையைக் காணமுடிகிறது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டின் பின்னர் அராபியரின் வர்த்தகக் குடியேற்றங்கள் தென்னிந்தியத் துறைகளில் மட்டுமல்லாது இலங்கையின் முக்கிய துறைமுகங்களிலும் அக்குடியேற்றங்கள் ஏற்பட்டிருந்தன. கி.பி. 8ஆம், 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற இவ்வர்த்தகத்தைப் பற்றியும், தென்ஆசியத் துறைமுகங்களில் காணப்பட்ட ஸ்லாமிய வர்த்தகக் குடியேற்றங்கள் பற்றியும் அரபுநூல்கள் பலவற்றில் பல தகவல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தகவல்களைக் கொண்டு ஆராயும்போது மேலைத்தேயத்திற்கும், தென்னாசியாவிற்குமிடையே நடைபெற்று வந்த வாணிப நடவடிக்கைகளில் தொடர்ந்தும் தென்னிந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் அமைந்துள்ள துறைமுகங்களே முக்கிய பங்கு கொண்டிருந்தன என்பதை அறியமுடிகிறது. மேற்காசியாவிலிருந்து தென்னாசியாவிற்கு வருகை தந்த வாணிபக் கப்பல்கள் அனைத்தும் முதலில் கேரளத்திலுள்ள கொல்லம் துறைமுகத்திற்குச் சென்று, அதன் பின்னரே வேறு இடங்களுக்குச் சென்று வந்தன. கொல்லத்திலிருந்து அவ்வாணிபக் கப்பல்கள் இரு மார்க்கங்களில் பிரிந்து சென்றன. அவற்றுள் ஒரு மார்க்கம் மன்னார்க்குடா வழியாகவும், மற்றவழி இலங்கையின் தென்கரையோரத் துறைமுகங்களினூடாகவும் கங்கைச்சமவெளியின் முகத்துவாரத்திலுள்ள தாம்ரலிப்தித் துறையைச் சென்றடைந்தன. இங்கிருந்து இவ்வாணிபக் கலங்கள் தென்கிழக்காசிய நாடுகள் நோக்கி வாணிபத்தின் பொருட்டு சென்றுவந்தன. கால / கடா / காழகம் / கடாரம் என்று பாரசீக மொழியில் அழைக்கப்பட்ட

இடத்தினை அடைய உதவிய மார்க்கம் ஆரம்பத்தில் மேற்கூறிய இரு மார்க்கங்களும் அமைந்த இலங்கைக்கு மிக அருகாமையிலேயே காணப்பட்டிருந்தது. அக்குறிப்பிட்ட மார்க்கத்தில் கடாரத்திற்குச் சென்றுவந்த மேற்காசிய வர்த்தகக் கப்பல்கள் இலங்கையிலுள்ள துறைமுகங்களில் தரித்துச் சென்றமைக்காக எவ்வித ஆதாரங்களும் கிடைக்கவில்லை. இலங்கையில் ஏற்பட்டிருந்த ஸ்லாமிய வர்த்தகக் குடியேற்றங்களில் வாழ்ந்த வர்த்தகர்கள் இங்கிருந்து தனிப்பட்ட முறையில் ஈழத்துப் பொருட்களை கேரளத் துறைமுகங்களுக்குக் கொண்டு சென்று, அங்கிருந்தே அவற்றை மேற்காசிய வர்த்தகர்களுக்கு விற்றனர் என அறியமுடிகிறது. ஆனால் காலப்போக்கில் கி.பி. 10ஆம் நூற்றாண்டளவில் இலங்கையின் வர்த்தகத்தில் ஸ்லாமியர் மிகக்கூடிய கவனிப்பினைச் செலுத்தியதன் விளைவாக நேரடியாகவே மேற்காசியாவிலிருந்து அராபிய வர்த்தகக் கப்பல்களை இலங்கைக்கு வரவழைத்துக் கொண்டனர். ஸ்லாமியச் செல்வாக்கிற்குட்பட்ட பல துறைமுகநகர்களும் இலங்கையில் உருவாகின. ஹம்பாந்தோட்டை, சம்பாந்துறை, அம்பாறை, அம்பிலாந்தறை போன்றன ஸ்லாமிய வர்த்தகர்களது நேரடியான செல்வாக்கிற்குட்பட்ட துறைமுகங்களாக அமைந்தன.

கி.பி. 6ஆம், 7ஆம் நூற்றாண்டுகளில் மேற்காசிய வர்த்தகர்கள் தென்னாசியத் துறைமுகங்களிலே பெற்றுக்கொள்ள விரும்பிய மிக முக்கியமான வாணிபப் பொருள் சீனர்களின் பட்டுப்புடவை ஆகும். அத்தகைய பட்டுப்புடவைகள் சீனக் கப்பல்கள் கூடியளவிற்கு தென்இந்தியத் துறைமுகங்களுக்கும் கொண்டுவந்து இத்துறைகளில் வைத்து ஐரோப்பியருக்கு விற்றனர். இவ்வாறாகச் சீனர்களின் பட்டுவர்த்தகத்தில் இடைத்தரகர்களாக விளங்கிய அராபியர் இலங்கையுடன் தொடர்பு கொண்டபோது இலங்கையில் பெறத்தக்கதாகக் காணப்பட்ட இன்னொரு வாணிபப் பொருள் அவர்களது கவனத்தை ஈர்த்தது. மத்திய மலைநாட்டில் விளைந்த பொருளான இரத்தினக்கற்களே அவையாகும். இலங்கையில் அராபியரால் அதிகளவில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள் இரத்தினக்கற்களேயாகும். அராபிய இலக்கியங்கள் பலவற்றிலும் இலங்கையில் கிடைத்த இரத்தினக் கற்களின் வகைகள் பற்றி சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம். முற்பட்ட காலங்களில் இலங்கையிலிருந்து இரத்தினக் கற்களை கொள்வனவு செய்த வடஇந்தியர் இலங்கைக்கு இரத்தினதுவீபம் என்ற பெயரையுமிட்டிருந்தனர். அதேபோன்று அராபியரும் இலங்கைக்கு 'யலிரத்', 'அல்கபகுத்' என்ற பெயரை இட்டிருந்தனர். அராபிய இலக்கியங்களில் இலங்கையைப் பற்றிக் குறிப்பிடும்போது இங்கு பெறப்பட்ட இரத்தினக்கற்களின் பண்புகளைக் குறிப்பிட்டே, தாம் செல்லவந்த செய்திகளைப் பதிவு செய்துள்ளனர்.

ஸ்லாமிய வர்த்தகர்களால் இலங்கையிலிருந்து கொள்வனவு செய்து, எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களில் மன்னாரில் விளைந்த முத்துக்கள், மிளகு, கறுவாப் பட்டை போன்றனவும் அடங்கும். இக்காலப்பகுதியில் ஈழத்தில் ஆட்சியுரிமையில் இருந்த மன்னர்கள் இக்குறிப்பிட்ட வர்த்தகப் பொருட்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவ்வாறான வர்த்தகர்களுக்கு வேண்டிய உதவிகளையும், வரவேற்பினையும் அளித்ததோடு மட்டுமல்லாது அத்துறை தொடர்பான வாணிபம்

மேலும் வளர்வதற்காக அந்தந்த நாடுகளுக்கு வணிகத் தூதுக்குழுக்களையம் அனுப்பிவைத்தனர்.

அராபிய, சீன இலக்கியங்களில் இலங்கையுடனான ஸ்லாமியர்களது வர்த்தகம் தொடர்பாகவும், வர்த்தகக் குடியேற்றம் தொடர்பாகவும் விரிவான பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. கி.பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து அராபியப் பேரரசுடனான இராசதந்திரத் தொடர்புகளில் இலங்கை ஈடுபட்டு வந்தமை பற்றியும், அக்கால கட்டத்திலிருந்து இலங்கையின் மேற்கு, தென்மேற்கு, தென்கிழக்குக் கரையோரங் களில் ஸ்லாமிய வர்த்தகக் குடியேற்றவாசிகள் தத்தமது பண்டகசாலைகளை அமைத்து அந்தந்தத் துறைமுகங்களூடாக மேற்காசிய வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். தீபகற்ப இந்தியாவின் மேற்கு கரையோரத் துறைமுகங் களில் ஸ்லாமியர்களது வர்த்தக ஏகபோகமே இக்காலகட்டத்தில் காணப்பட்டது. லட்சத் தீவுகள் (பழந்தீவு பன்னீராயிரம்) மாலைதீவுகள் உட்பட குஜராத் மாநில கடற்கரைத் துறைமுகங்கள் யாவும் ஸ்லாமிய வர்த்தகர்களது கட்டுப்பாட்டுக்குள்ளேயே அமைந்து காணப்பட்டது. அராபியப் பேரரசின் கிழக்கு எல்லையில் அதன் விஸ்தரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சுல்தான் மெல்லமெல்ல வடமேற்கிந்தியா மீது காலத்துக்குக்காலம் படையெடுப்புக்களை நிகழ்த்தி அராபியரின் ஆதிக்கப் படர்ச்சியினை நிலைநிறுத்திய காலப்பகுதியாக இக்காலகட்டம் அமைந்ததினால், தென்னாசிய வாத்தக ஏகபோகம் முழுவதுமே ஸ்லாமியரது கைக்குள் அகப்பட்டுக்கொண்டது. இதற்கு மேலாக தென்கிழக்காசிய நாடுகளைப் பிணைத்திருந்த வர்த்தக மார்க்கங்களையும் ஸ்லாமியர் கைப்பற்றிக் கொள்ளத் தவறவில்லை. கி.பி. 10ஆம் நூற்றாண்டுகள் வரையும் இந்துமா சமுத்திரத்தின் மீதான சர்வதேச வாணிப மார்க்கங்களை அராபியப் பேரரசின் எழுச்சியின் பின்னணியில் ஸ்லாமியர் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு வகையான மரக்கலங்கள் தென்னாசிய வர்த்தக மார்க்கங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தன. பல்வகையிலும் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் இக்காலகட்டத்தில் நிகழ்த்தப்பட்டிருந்தன. மேலைத்தேய, கீழைத்தேய அறிவியல் பங்களிப்புக்கள் ஒரு மையத்தில் சங்கமமாவதற்கு அராபிய வர்த்தகர்களே அடிப்படையை இட்டுக் கொடுத்திருந்தனர். சீனாவின் வெடிமருந்து, திசையறிகருவி, இந்தியாவின் தசம முறையில் அமைந்த எண்முறை, வானியல் அறிவு, ரசவாதம் போன்றன அராபியர்களால் ஐரோப்பாவுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. இவற்றின் விளைவுகள் நவீன ஐரோப்பிய நாகரிக மொன்றின் தோற்றத்திற்கு வித்திட்டு நின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் நீர்ப்பாசனவியல் நுட்பத்துடன் தொடர்புபட்ட நீர்ப்பொறிமுறைநுட்பம் அராபியரால் ஐரோப்பாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது எனலாம். அராபியரால் இலங்கையில் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட துறைமுகமாக விளங்கியது மாந்தைத் துறைமுகமாகும். தென்கிழக்காசியாவுடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பின் காரணமாக அராபியர்கள் திருகோணமலைத் துறைமுகத்தினையும் ஓரளவிற்குப் பயன்படுத்தியிருந்தனர் எனக் கூறலாம்.

பிற்பட்ட அநுராதபுரக் காலத்தில் தென்னிந்திய, தென்கிழக்காசிய, சீன வர்த்தகத் தொடர்புகள்

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட வடஇந்திய சமஸ்கிருத நூல்களில் இலங்கையிலிருந்து சில விளைபொருட்கள் வடஇந்திய இராச்சியங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்ட செய்திகள் பொறிக்கப் பட்டுள்ளன. அசோகப் பேரரசனது 2ஆம் 13ஆம் கிர்னார் பாறைக் கல்வெட்டுக்களில் இலங்கை தம்பப்பண்ணி எனக் குறித்து அழைக்கப்பட்டிருப் பதனைக் காண்கின்றோம். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்திலும் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதத்திலும் லங்கா என்று இலங்கை குறிப்பிடப்பட்டு உள்ளமையையும் காண்கின்றோம். இவற்றைவிட வடஇந்தியாவிற்கும் அநுராதபுரகால இலங்கைக்குமிடையே இருந்த வாணிப - பண்பாட்டுத் தொடர்பினைப் பதிவுசெய்து வைத்துள்ள இன்னொரு சாசனச்சான்று குப்தர்காலப் பதிவேடாகும். இலங்கை மன்னனான ஸ்ரீமேகவண்ண அபயன் புத்தகாயாவில் இலங்கைப் பௌத்தகுருமார் சென்று தங்குவதற்காக கட்டுவித்த விகாரை பற்றிய செய்தியாக அது உள்ளது. இக்குறிப்புக்களைவிட இந்தியாவிற்கும், இலங்கைக்குமிடையே அநுராதபுரகாலப் பகுதியின் மத்தியில் இடம்பெற்ற வர்த்தகம் பற்றி ஆராய வேறு விரிவான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

வடஇந்தியா இலக்கியங்களில் குறிப்பாக கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட வாரஹமிகிரரின் மாளவிகாக்னிமித்திரம் என்ற வடமொழி நூலில் இலங்கையிலிருந்து முத்துக்கள் வடஇந்திய இராச்சியங்களுக்கு எடுத்துச் சென்றமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. காஷ்மீர் தேசத்து வரலாற்றைக் கூறும் நூலான இராசதரங்கிணியில் அதன் நூலாசிரியரான கல்கணர் (இந்நூல் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது) கி.பி. 5ஆம், 6ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையிலிருந்து பெறப்பட்ட சிறந்த பட்டுப் புடவைகள் லினன் ஆடைகள் காஷ்மீர தேசத்து உயர்குடும்பப் பெண்களால் விரும்பி அணியப்பெற்றமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பிற்பட்ட காலங்களில் ஏறக்குறைய கி.பி. 8ஆம் 9ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட இலக்கியங்களில் உள்ள குறிப்புக்கள் இலங்கையில் முத்துக்கள், இரத்தினக் கற்கள் போன்றன வடஇந்திய இராச்சியங் களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றித் தெரிவிக்கின்றன. இராஜ்சேகரப்புலவரால் எழுதப்பட்ட பால இராமாயணத்தில் இலங்கையிலிருந்து பெற்ற பொருட்களுள் முத்துக்களும், இரத்தினக் கற்களும் உள்ளடக்கிய குறிப்புக்கள் உள. இத்தகைய சான்றுகளைக் கொண்டு அநுராதபுரகாலத்திற்கு முற்பட்ட காலகட்டத்திலிருந்தே தொடர்ந்து பிற்கால கட்டத்திலும் வடஇந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான வாணிபத் தொடர்புகள் தொடர்ந்து வளர்ச்சிபெற்று வந்துள்ளன என அறிய முடிகிறது. அவ்வர்த்தகத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வாணிபப் பொருட்களாக விளங்கியவை முத்துக்களும், இரத்தினக் கற்களுமேயாகும். இவற்றிற்குப் பதிலாக வடஇந்தியாவிலிருந்து இலங்கை பெற்ற பொருட்களில் செம்புபோன்ற உலோகப் பொருட்கள், குதிரைகள் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

அநுராதபுர காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வடஇந்தியாவுடன் நடாத்தப்பட்ட வர்த்தகத்தைவிட மிகக்கூடிய விருத்திபெற்ற வர்த்தகமாக தென்னிந்தியாவுடன் இலங்கை மேற்கொண்ட வர்த்தகம் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பின்னர் தென்னிந்தியாவிற்கும் தென்கிழக்காசியா விற்குமிடையில் மிக நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தமைக்குரிய முக்கிய காரணி தமிழ்நாட்டில் தோற்றம் பெற்றிருந்த, காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு எழுச்சிபெற்ற பல்லவப் பேரரசு ஆகும். இப்பல்லவப் பேரரசின் எழுச்சியும், வளர்ச்சியுமே தென், தென்கிழக்காசிய நாடுகளில் வாணிக கூட்டுக்களின் வர்த்தகக் குடியேற்றங்களுக்கும், பரஸ்பர பண்பாட்டு பரிமாற்றத்திற்கும் வித்திட்டு நின்றது என்றால் அது மிகையாகாது. இதனால் 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகாலப் பகுதி முன்னொருபோதும் காணப்படாத அளவிலே தென்னிந்தியாவில் வர்த்தகக் குழுக்கள் தோற்றம் பெற்று, நிறுவனமயப்பட்ட ஓர் ஒழுங்குமுறையில் உள்நாட்டு வர்த்தகத்தை மட்டுமல்லாது, கடல் கடந்து வெளிநாட்டு வர்த்தகத்தை நடாத்துவதனைக் காண்கின்றோம். வடஇந்தியாவில் வணிகக் கூட்டமைப்புக்கள் இயங்கிய நடைமுறையை ஒத்தவகையில் தென்னிந்திய வணிக கணங்களும் இப்பிராந்தியத்தில் வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டன. இவ்வணிக கணங்களின் சிறப்பியல்பு என்னவெனில் இவை தென்னிந்திய இராச்சியத்தில் ஒரு குறிப்பிட்ட அரச வம்சத்திற்கோ அல்லது குறிப்பிட்ட ஒரு இராச்சியத்திற்கோ சொந்தமானதாக இருக்கவில்லை. கன்னட, கேரள, ஆந்திர, தமிழக அரசு களுக்குச் சொந்தமானவையாகவே தென்னிந்திய வணிககணங்கள் தொழிற் பட்டிருந்தன. இவற்றுள் மிகவும் செல்வாக்குப் பெற்ற வணிகக் குழுக்களாக கர்நாடகத்தில் தோற்றம் பெற்றவை தொழிற்பட்டிருந்தன. இதே வாணிகக் குழுக்கள் தமிழகத்திலும், இலங்கையிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் மிகப்பரவலாக வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. இவ்வாறான வணிக இயக்கம் பல்லவர் காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தாலும், அவற்றின் உச்சமான நடவடிக்கைகளை அடுத்து வருகின்ற சோழர் காலப்பகுதியிலேயே காணக்கூடியதாக அமைந்தது. இக்காலத்தில் குறிப்பிடத்தக்கவகையில் வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்ட வணிக கணங்களாக கர்நாடக மாநிலத்தில் தோற்றம்பெற்ற ஐநூற்றுவர், நானாதேசிகர், வீரவலஞ்சியர், நகரத்தார், நான்கு நாட்டார் போன்றவையும், இவற்றோடு மணிக் கிராமத்தார், அகம்படியார் போன்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த குழுக்களும் கடல் கடந்து வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வணிக கணங்களுடைய செல்வாக்கானது தென்இந்தியப் பிரதேசங்களில் பரந்திருந்தமையை ஏராளமான கல்வெட்டுக்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. கடல்கடந்த நாடுகளிலும், இலங்கையிலும் அவற்றின் செல்வாக்கினை சாசனங்கள் வாயிலாகவும், கட்டிட அழிபாடுகள் வாயிலாகவும் கண்டுகொள்ளமுடிகிறது. பல்வேறு இராச்சியங்களிலும் இவ்வணிக கணங்கள் தத்தம் செல்வாக்கினை ஏற்படுத்தி நின்றன, இலங்கையைப் பொறுத்தமட்டிலும் பல்வேறு

துறைமுகப்பட்டினங்கள், வர்த்தக மையங்கள் ஆகியனவற்றில் குடியேற்றங்களை நிறுவி, வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டமையைக் காண்கின்றோம். இலங்கையில் பொறிக்கப்பட்ட கி.பி. 9ஆம், 10ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ், சிங்கள கல்வெட்டுக்களில் இவ்வணிக கணங்களின் நடவடிக்கைகள், கடமைகள் போன்றன பொறிக்கப்பட்டுள்ளன. கி.பி. 9ஆம் நூற்றாண்டிற்குரிய அநுராதபுரத்திலுள்ள நான்கு நாட்டார் கல்வெட்டு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அநுராதபுரத்தில் கிடைத்துள்ள இத்தமிழ்க் கல்வெட்டானது எவ்வாறு அவ்வணிகக் குழு தொழிற்பட்டிருந்தது என்பதனையும், அவற்றிற்கு விதிக்கப்பட்ட கடமைகளையும் விரித்துரைக்கின்றது.

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் இலங்கையில் செல்வாக்குப் பெற்றிருந்த இன்னொரு வணிகக்குழுவான மணிக்கிராமத்தார் பற்றிய நடவடிக்கைகளை நான்காம் உதய மன்னனின் சிங்களக் கல்வெட்டு ஒன்று எடுத்தியம்புகின்றது. மணிக்கிராமத்தார் என்ற இவ்வணிக கணம் மஹியங்கணைப் பிரதேசத்தில் மிகவும் செல்வாக்குப்பெற்ற வணிக குழுக்களாக தொழிற்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மிகவும் அண்மைக்காலத்தில் அம்பாந்தோட்டையில் ஒரு நெல்வயல் பரப்பிலிருந்து 'நானாதேசிகன் சகை' எனத் தமிழ் மொழியில் பொறிக்கப்பட்ட வணிக கணம் ஒன்றினுடைய செம்பினாலான 'பதக்கம்' கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. **'நானாதேசிகன்'** என்ற வணிக கணம் இலங்கையின் தென்பகுதியில் கி.பி. 11ஆம் நூற்றாண்டளவில் தொழிற்பட்டிருந்தது. யாழ்ப்பாணக்குடாநாட்டின் கண் இரு மையங்களில் இருவேறு வணிக கணங்கள் குடியிருப்புக்களை ஏற்படுத்தி, செயற்பட்டிருந்தமைக்கான சான்றுகள் அண்மைக்காலத்தில் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் ஒன்று வடமராட்சி வதிரியிலுள்ள **கோட்டைத்தெரு** (கோட்டுத்தெரு) என்ற மையத்தில் கிடைக்கப்பெற்ற காளி தெய்வத்துடனான **நீள்சதுரமான ஐம்பொன் நாணயம்** ஒன்றாகும். மத்தியகால மட்பாண்டக் குவியல்களுக்குள்ளிருந்து மீட்கப்பட்ட அந்நாணயம் **நானாதேசிகளது வாணிப நடவடிக்கைகளுக்குரியது** என்பதனை **அம்பாந்தோட்டையிலிருந்து** பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டவடிவிலான **பதக்கத்தில் காணப்படும் காளியை ஒத்ததாக** இருப்பதிலிருந்து உணர்ந்துகொள்ளமுடிகிறது. இரண்டாவது சான்று யாழ்ப்பாணக் கோட்டைக்குச் சமீபமாக வடபுறத்தில் உள்ள நிலப்பரப்பு **ஐநூற்றுவன் வளவு** எனத் தற்காலம் வரைக்கும் குறிப்பிடப்படுவதிலிருந்து **'யாழ்ப்பாணாயன் பட்டினத்தில்' ஐநூற்றுவா** என்ற வணிகக் குழுவினர் செல்வாக்குச் செலுத்தியிருந்தனர் என்பதனை உணரமுடிகிறது. (ஒருவேளை யாழ்ப்பாணக் கோட்டையின் ஆரம்ப வடிவத்தினை சிறியளவிலாவது அமைத்தவர்களாக **ஐநூற்றவா** விளங்கியிருந்திருக்கக்கூடும். இது மேலும் ஆய்விற்குரியது.

தென்னிந்தியாவில் அதிக பிரசித்தி பெறாத வேறு வணிகக் குழுக்களும் பிற்பட்ட அநுராதபுரகால வடஇலங்கையில் மிகச் செல்வாக்குப்பெற்று விளங்கின. அவ்வாறான குழுக்களில் இரண்டு கிழக்கிலங்கையில் **திரியாய்** என்ற இடத்தில்

தொழிற்பட்டிருந்தன என்பதனை அறிந்துகொள்ளமுடிகிறது. அவ்வாறு குறிக்கப் பட்டுள்ள அவ்விரு வணிக குழுக்களின் பெயர்களான: 1) **திரிபுஸகர்** 2) **வல்லிகா** என்பவைகளாகும். திரியாய்க்கு அண்மித்தாகவுள்ள ஒரு துறைமுகம் பல்லவங்கம் எனப்படும் பல்லவர் கால இலக்கியங்களில் கிடைக்கும் குறிப்புக் களைக் கொண்டும், ஈழத்து மிக முக்கியமான துறைமுகமாகிய மாதோட்டம், கோகர்ணம் ஆகிய துறைமுகநகரங்களில் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய வர்த்தகக் குடியேற்றங்கள் பல காணப்பட்டிருந்தமையினை நன்கு அறியமுடிகிறது. சைவ நாயன்மார்களின் தேவாரங்களும் அச்செய்தியை நன்கு உறுதிப்படுத்தி உள்ளன. இவ்வாறாக அநுராதபுரக் காலப்பகுதியின் பிற்பட்ட பரப்பில் முன்னைவிட கூடியளவிற்கு தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே வாணிபத் தொடர்புகள் தொடர்ந்து நிலவின என்பதனையும் தென்னிந்திய வணிகக் குழுக்கள் இங்கு தத்தம் குடியேற்றங்களை ஸ்தாபித்து வாணிபத்தினை நடாத்தின என்பதனையும், இவ்வணிகக் குழுக்களுக்கும், சமகாலத்தில் தென்கிழக்காசிய வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த வணிகக் குழுக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருந்திருக்கவேண்டும் என்பதனையும் நன்கு கண்டுகொள்ளமுடிகிறது.

தென்கிழக்காசியாவிற்கும் இலங்கைக்குமிடையே நடைபெற்ற வாணிபத் தொடர்புகளை அறிவதற்கு இக்காலப்பகுதிக்குரிய நேரடியான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால் **கிழக்காசிய நாடான சீனாவுடன** இலங்கை கொண்டிருந்த வர்த்தகத் தொடர்புகளைக் கண்டுகொள்வதற்குரிய பதிவுகள் கிடைத்துள்ளன. கி.பி. 405க்கும் 762க்குமிடைப்பட்ட காலத்தில் இலங்கையிலிருந்து பல் தூதுக்குழுக்கள் சீனப் பேரரசின் எல்லையை அடைந்திருந்தன என்பதனை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இத்தூதுக் குழுக்கள் சீன மன்னனின் சபைக்கு எடுத்துச்சென்ற பொருட்கள் பற்றிய விபரங்களையும் இவ்விலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் **முத்துக்கள், இரத்தினங்கள், யானைத் தந்தங்கள்** என்பனவற்றின் குறிப்புக்கள் அடிக்கடி இடம்பெறுவதனையும் காண்கின்றோம். கி.பி. 5ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 8ஆம் நூற்றாண்டு வரைக்கும் சீனாவுக்கு அனுப்பப்பட்ட இத்தூதுக் குழுக்கள் கூடியளவிற்கு சமய நோக்கமுடையவையாக இருந்தாலும், ஓரளவிற்காவது வர்த்தகம் சம்பந்தமான விடயங்களையும் கவனத்தில் எடுத்து தொழிற்பட்டிருந்தன எனக் கூறலாம். இதே காலப்பகுதியில் சீன தேசத்து வர்த்தகக் கப்பல்கள் இலங்கைத் துறைமுக நகரங்களுக்கு வந்து சென்றமைக்கான குறிப்புக்களும் இலக்கியங் களில் காணப்படுகின்றன. சிறப்பாக சீன யாத்திரிகர்களுடைய குறிப்பில் அச்சான்றுகள் காணப்படுகின்றன. சீனவர்த்தகப் பொருட்களை பெரும்பாலும் மேற்கிலிருந்து வந்த **பாரசீக, அராபிய** வர்த்தகர்களுக்கு இலங்கைத் துறைமுகங் களில் வைத்து விற்கப்பட்டன. அவ்விதத்தில் இலங்கையானது கிழக்காசியாவுடன் நேரடியாக வர்த்தகம் செய்தது என்பதற்குப் பதிலாக இலங்கைத் துறைமுகங் களைப் பயன்படுத்தி மேற்காசியாவும் கிழக்காசியாவும் தம்முள் நேரடி வாத்தகத்தினை நடாத்தினர் என்பதே பொருத்தமாகும். கி.பி. 8ஆம நூற்றாண்டிற்குப் பின்னர் இலங்கையிலிருந்து சீனாவுக்குத் தூதுக்குழுக்கள்

சென்றுவந்தமை பற்றியோ அல்லது சீன வர்த்தகக் கப்பல் இலங்கைத் துறைமுகங்களுக்கு வந்தமை பற்றியோ மிகஅரிதாகவே குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் கி.பி. 8ஆம் நூற்றாண்டின் பின்னர் சீனாவிற்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையில் வர்த்தக நடவடிக்கைகள் மேலோங்கிய நிலையில் இடம்பெற்றிருந்தன. ஏனெனில் கி.பி. 8ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் **ஸ்ரீவிஜயப் பேரரசு தென்கிழக்காசியா வில் தோற்றம்பெற்று வளர்ச்சிபெறத் தொடங்கிய நிலையில் சீனாவிற்கும், தென்கிழக்காசியாவிற்குமிடைப்பட்ட கடல் வர்த்தகப் பாதைகளை ஸ்ரீவிஜயப் பேரரசு தனது கட்டுப்பாட்டுக்குள்** கொணர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் ஆரம்பகால பொருளாதாரம்

கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

இலங்கையைப் பொறுத்தவரையில் கி.மு.250 ஆம் ஆண்டளவில் இருந்து 19ம் நூற்றாண்டின் முதலரைப்பகுதியில் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரையிலான ஒரு நீண்டகால கட்டத்தை உள்ளடக்கிய எழுத்துமூலமான வரலாற்றுத் தகவல்கள் கிடைக்கக்கூடியதாக இருந்து வருகின்றது. இந்த எழுத்து மூலமான முக்கியமான பாரம்பரியத்தினை இரு பிரதான பிரிவுகளாக பிரிக்கமுடியும். இப்பாரம்பரியத்தில் மிகத் தொன்மையான பகுதி பாரிய கருங்கற் பாறைகளிலும் இயற்கைகுகைகளிலும் செதுக்கப்பட்டுள்ள கல் வெட்டுக்களினால் குறிக்கப் பட்டுள்ளது. கி.மு. முதலாவது ஆயிரமாவது ஆண்டின் இறுதி அரைப்பகுதியில் இலங்கையில் பௌத்தமதம் தோன்றியதன் பின்னர் துறவிகளாக இருந்த மதகுருமாரினால் இத்தகைய குகைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இக்கல் வெட்டுக்களை செதுக்குவதற்கான முக்கியமான நோக்கம் ஆட்சியாளர்கள் பௌத்த மத நிறுவனங்களுக்கு வழங்கிய நன்கொடைகளை பதிவு செய்வதாகும் எனினும் இப்பதிவுகளுக்கு மத்தியில் அரசியல் பொருளாதாரம் போன்ற அக்கால சமூகத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்த தகவல்களும் அடங்கியுள்ளன. இக்கட்டுரையின் முக்கிய நோக்கம் இலங்கையின் ஆரம்பகால பொருளாதார அபிவிருத்தியின் இயல்பினை கண்டறிந்து கொள்வதற்கு உதவுக்கூடிய தகவல்களை மதிப்பீட்டாய்வு செய்வதாகும்.

கால அட்டவணை

ஒரு பரந்த தளத்தில் இலங்கையின் ஆதிகால பொருளாதார வரலாற்றினை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் வரையில் பின்னோக்கி எடுத்துச்செல்ல முடியும் பல்வேறு அமைவிடங்களில் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்ட பல சூழல்பொருட்கள் அந்நடவடிக்கைகள் குறித்த தகவல்களைப் பெறுவதற்கான முக்கிய மூராதாரங்களாக இருந்து வருகின்றன ஈரத் தாழ்நிலப் பகுதியில் கித்துல்கலையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட கடல் சிப்பி ஓடுகளை ஒரு பாரிமாற்ற ஊடகமாக நாம் கருதமுடியும் அல்லது யாரோ ஒருவர் இரு வேறுபட்ட சூழல் வலயங்களுக்கு இடையே அவற்றை வேண்டுமென்றே எடுத்து சென்று இருக்கவேண்டும் அனேகமாக ஆதிகால சமூகங்களுக்கிடையிலான

ஒரு கொடுக்கல் வாங்கல் முறையாக இது இருந்திருக்கமுடியும் அதேபோல ஈரநிலப் பகுதிகளைச் சேர்ந்த பல சிப்பி ஓடுகள் உலர்வலயத்தைச் சேர்ந்த அலிகல என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆதிகால கொடுக்கல் வாங்கல் முறை தவிர இலங்கைச் சமூகம் கி.மு 900 தொடக்கம் பொருளாதார நடவடிக்கைகளில் மிகவும் ஈடுபட்டுவந்துள்ளது என்பதனை நிரூபிப்பதற்கு போதிய சான்று உள்ளது. கி.மு900க்கும் கி.மு 400 க்கும் இடைப்பட்ட காலத்தினை புதிய கலாச்சாரப்பரிமானம் கொண்ட ஒரு காலகட்டம் என அடையாளம் காணமுடியும் அதற்கு முற்பட்ட கல் தொழில்நுட்பம் பெருமளவுக்கு வளர்ச்சி அடைந்த உலோகத் தொழில்நுட்பம் ஒன்றாக அக்கால கட்டத்தில் நிலை மாற்றம் கண்டிருந்தது பிழைப்பூதிய மாதிரியில் வேட்டையாடுதல் உணவுசேகரித்தல் என்ற கட்டத்தில் இருந்து அடிப்படை விவசாயத்தை நோக்கி ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக குடியேற்ற விவசாய புராதனகுடியேற்றங்கள் வளர்ச்சிகண்டன.

இரும்பின் கண்டுபிடிப்பு உள்ளூர் சமூகத்தின் புராதான விவசாயத்தின் அறிமுகம் என்பவற்றின் பின்னர் அடிப்படை பொருளாதாரத்தின் பல்வேறு வழிமுறைகள் படிப்படியாக உருவாகின இரும்பு யுகத்தை சேர்ந்த இரு அமைவிடங் களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் இக்கூற்றினை உறுதிசெய்யக்கூடிய கலைப் பொருட்களை எடுத்து காட்டியுள்ளன. மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள இரும்பு யுகத்தைச் சேர்ந்த இப்பண்கட்டுவ மாயன அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் மிகவும் நுணுக்கமான முறையில் வடிவமைக்கப்பட்ட மாலை ஒன்றையும் உள்ளடக்கியிருந்தன.

இம்மாலை 300 க்கும் மேற்பட்ட மணிகளால் கோர்க்கப்பட்டிருந்ததுடன் இம்மணிகள் இலங்கையில் கிடைக்காத காணீலியன் ஓனிக்ஸ் போன்ற ஓரளவு பெறுமதிமிக்க கற்களினால் செய்யப்பட்டிருந்தது இப்பண்கட்டுவ பொருட்களில் இருந்து பெறப்பட்ட 14 முடிவுகளின் பிரகாரம் இத்தகைய விலை உயர்ந்த பொருட்கள் கி.மு 700 அளவில் இந்திய தீபகற்பத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்க முடியும் அக்கால கட்டம் தொடக்கம் எழுத்தறிவு தொடங்கிய கி.மு 750 ஆம் ஆண்டு வரையில் இலங்கைச் சமூகத்தின் பொருளாதாரம் அதிகளவுக்கு சிக்கலானதாக உருவாகிக்கொண்டு வந்தது.இலங்கையில் கிமு 250 க்கும் கி.பி 50 க்கும் இடைப்பட்ட காலப் பிரிவைச் சேர்ந்த 4000 க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் இயற்கை குகை மறைவிடங்களில் வாழ்ந்து வந்த பௌத்த குருமாருக்கு சமகால சமூகத்தைச் சேர்ந்த பல்தரப்பு மக்கள் வழங்கிய நன்கொடைகள் தொடர்பான சுருக்கக் குறிப்புக்களை கொண்டுள்ளன.

அக்கால கட்டத்தின்போது முழு நாட்டினதும் பொருளாதாரத்தினை கையான்டு கட்டுப்படுத்தும் அதிகாரம் பொருத்தமான விதத்தில் மத்திய மயப்படுத்தப் பட்டிருக்கவில்லை போல் தோன்றுகின்றது இக்கல்வெட்டுக்கள் பாருமக்க என்ற அதிகாரப் பெயரை அடிக்கடி பயன்படுத்துகின்றன உள்நாட்டு வரியைப் பெற்றுக்

கொள்ளும் அதிகாரத்தினை இந்த அதிகாரியே கொண்டிருந்தார் உதாரணமாக மாத்தளை மாவட்டத்தில் கண்டலம் குகை கல்வெட்டொன்றில் காணப்படும் உத்தர என்ற பாருமக்க அதிகாரி அயலில் உள்ள இறங்கு துறைக்கான வரி சேகரிப்பவராக குறிக்கப்படுகின்றார்

அக்கால சமூகமக்கள் வெவ்வேறு அமைவிடங்களில் சுதந்திரமான முறையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்கள் என்றும் அவர்களின் நிலச் சொந்தக்காரர்களாய் இருந்தே பருமக்க அதிகாரிகள் வந்தார்கள் என்றும் பரணவிதாரண குறிப்பிடு கின்றார் சுமார் 400 ஆட்கள் பாருமக்க பட்டத்தைப் பெற்றிருந்தவர்களாக இருந்து வந்துள்ளனர் மத்தியமயப்படுத்தப்பட்ட அரசு எழுச்சி அடைவதற்கு முன்னர் பாருமக்க அதிகாரிகள் பன்முகப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பில் பொருளாதார அதிகாரத்தை பெற்றிருந்தவர்கள் என குணவர்தன வாதிடுகின்றார்

இவர்கள் தவிர கமிக்காஸ் மற்றும் கஹபத்தி போன்ற பட்டப் பெயர்களையும் இக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன ஆனால் நாட்டின் பொளாதாரம் தொடர்பாக இத்தகைய ஆட்கள் வகித்து வந்த பங்கு எது என இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை இலம்பகர்ண வம்சத்தின் எழுச்சியை அடுத்து பொருளாதார அதிகாரம் மத்தியமயப்படுத்தப்பட்டது. மேலும் கிடைக்கக்கூடியதாக இருக்கும் தொல்லியல் வரலாற்றுந் சான்றுகளின்படி இக்காலத்திலேயே நாட்டின் அரசியல் அதிகாரமும் மத்தியப்படுத்தப்பட்ட ஒரு நிலைக்கு மாற்றப்பட்டது.

விவசாயம்

விவசாயம் மற்றும் வாணிபம் என்பனவே அக்கால இலங்கையின் பிரதான வருமான மூலகங்களாக இருந்து வந்தன. நீர்ப்பாசன விவசாயம் குறித்த தடயங்கள் சமகால கல்வெட்டுக்களுக்கு கூடாக மிக அரிதாகவே வெளிச்சத்துக்கு வந்துள்ளன. உலர்வலயம் முழுவதிலும் சிறு குளங்கள் ஆங்காங்கே பரவலாக அமைந்திருந்தன அக் குளங்களை பராமரிக்கும் அதிகாரம் சில சமயங்களில் தனியார் உரிமையாளர்களிடம் விடப்பட்டிருந்தது. தனியார் குளச் சொந்தக்காரர் களை குறிப்பதற்காக வப்பிஹாமிக என்ற பதம் பிரயோகிக்கப்படும் வந்தது. எனினும் குளங்களை நிர்மாணித்து அவற்றை பராமரித்து வரும் ஒட்டுமொத்த அதிகாரமும் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. என்பதனை இது குறிக்கவில்லை. நீர்ப்பாசன நோக்கங்களுக்காக கால்வாய் ஒன்றுக்குக் குறுக்கே அமைக்கப்பட்ட ஓர் அணைக்கட்டை குறிக்குமுகாமக 'அவரண' என்ற பதம் குருணாகல் மாவட்டத்தில் கல்லெனக் குகைக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

நிலப்பாவனை முறையும் விவசாய நடவடிக்கைகளில் உயர் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. தொடக்ககாலகட்டத்தில் விவசாய நோக்கங் களுக்காக இரண்டு விதமான முறையில் நிலம் பிரிக்கப்பட்டிருந்தது என்பனை கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. இதில் முதலாவது பிரிவு நிலத்தின் சாகுபடி செய்யும் நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட கல்லென விகாரக் கல்வெட்டு 'அடகரிகிபூமி' என்ற பதத்தைக்

கொண்டுள்ளது நிலத்தின் பாதியளவு கர்ஷா என்பது இதன் பொருளாகும். காண்யைப் பிரிக்கும் இராண்டாவது முறை நேரடியாக அவற்றை சிறு நில துண்டங்களாக உடைப்பதாகும். கேகாலை மாவட்டத்திலுள்ள லெனகல குகைக் கல்வெட்டு பத்தக்க என்று இழைக்கப்பட்ட பல்வேறு நில ஒதுக்கீடுகள் பற்றி குறிப்பிடுகின்றனது. ஈரநெல் சாகுபடி எப்பொழுதும் நெல் வயல்களுடன் சம்மந்தப் பட்டிருந்தது. தொடக்க வரலாற்றுக்கால கல்வெட்டுக்கள் இரு வகைகளைச் சேர்ந்த வயல்கள் குறித்து அடிக்கடி குறிப்பிடுகின்றன. முதலாவது வகையைச் சேர்ந்த வயல் நிலங்கள் கெத்த என்றழைக்கப்பட்டதுடன். அவை பெரிய வயல்வெளிகளாகவும் இருந்துவந்தன. சிறிய வயல்கள் 'கும்புர' என்றழைக்கப் பட்டன.

உள்நாட்டு விவசாயம் இரு முறைகளை உள்ளடக்கியிருந்தது. அதன்மிக ஆதிவடிவம் சுபதென் பயிர்ச்செய்கை முறையாகும். எனினும் துரதிர்ஷ்டவசமாக இப்பயிர்ச்செய்கை முறை குறித்து ஆரம்பகால கல்வெட்டுகளில் இருந்து எத்தகைய தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. கி.மு முதலாவது ஆயிராமாவது ஆண்டின் நடுப்பகுதி இந்திய குடிமக்களைப் பொறுத்த வரையில் ஈர நெல் பயிர்ச்செய்கைமுறை மிகவும் கவர்ச்சிகரமானதாக இருந்து வந்திருக்க முடியும். அது முதன்மைவாய்ந்ததாகவும் ஜனரஞ்சகத் தன்மை கொண்டதாகவும் உயர் விளித்திறனை எடுத்து வரக்கூடிய நம்பகத்தன்மை கொண்டதாகவும் இருந்து வந்தது. நாட்டின் உட்பகுதிகளில் வாழ்ந்து வந்த சமூகங்கள் ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்கு இனையான விதத்தில் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுவந்தார்கள் என்பதனை நாம் மறந்துவிட முடியாது. எனினும் அக்கால கட்டத்தில் எத்தகைய விலங்குகள் வளர்க்கப்பட்டு வந்தன என்பதனை அனுமானித்துக் கொள்வதற்கு கல்வெட்டுக்களில் இருந்து போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் விவசாயிகள் வளர்த்து வந்த பிராணிகளில் பசு மிக முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது என நியாயமாகவே நாம் கருதிக் கொள்ளமுடியும். அநுராதபுர மாவட்டத்தில் அவுக்கண என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு குகைக்கல்வெட்டு புல்வெளி மேச்சல் நிலம் போன்ற பொருள்களைத் தரும் தணபூமி என்ற பதத்தைக் கொண்டுள்ளது. இந்த மேச்சல் நிலங்கள் அநேகமாக கால்நடை வளர்ப்புக்காக உபயோகிக்கப்பட்டிருக்க முடியும்.

தொடக்கால கட்டத்தில் பிராந்திய பொருளாதாரங்களில் தோட்டப்பயிர்களைவ வளர்க்கும் கலையும் முக்கியமான ஒரு பங்கினை வகித்திருக்க முடியும் பிற்காலக் கல்வெட்டுகளில் 'கெபிம்' என்ற பதம் இடம்பெற்றுள்ளது. நெற் செய்கை மற்றும் உளுந்து, பயறு, எள் போன்ற ஏனைய தானியங்களின் பயிர்செய்கை தவிர தோட்டங்களில் வேறு சில தாவரங்களும் நடப்பட்டன உதாரணமாக டஹாநாக மன்னனின் மிகிந்தலை பாறைக்கல்வெட்டு அக்ணகம என்று அழைக்கப்பட்ட கிராமத்தில் அமைந்திருந்த தென்னந் தோட்டம் ஒன்று குறித்து குறிப்பிடுகிறது.

வாணிபம்

தொடக்ககால இலங்கைச் சமூகத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த வாணிபத்தின் இயல்பினைப் புரிந்துகொள்வதற்கு கல்வெட்டுக்களில் போதிய சான்றுகள் உள்ளன. வாணிபம் மக்களின் செல்வ வளத்துக்கான பிரதான மூலமாக இருந்துவந்தது. உள்நாட்டு வாணிபத்துக்கும் இடையிலான வேறுபாட்டினை மிகத்தெளிவாக காணமுடிந்தது. ஆரம்பகாலக் கல்வெட்டுக்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டுக்குள் வந்த வணிகர்களை குறிப்பதற்கு வாணிஜ என்ற பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. சீகிரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல்வெட்டில் அக்காலத்தில் புளி வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த வணிகர் ஒருவர் குறித்து கூறப்பட்டுள்ளது. நாட்டின் குறிப்பிட்ட சில மூலவளங்கள் கிடைக்காதிருந் தமையின் காரணமாக பல்வேறு காலநிலை வலயங்களுக்கிடையில் பிரதானமாக உள்நாட்டு வாணிப நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன. உதாரணமாக நாட்டின் இரத்தினக்கற்கள் கிடைக்கக்கூடியதாக இருந்த ஈரத்தாழ் நிலங்களில் இருந்தும் இடைத்தர வலயத்தில் இருந்தும் ஏனைய பிரதேசங்களுக்கு அவை எடுத்துச் செல்லப்பட்டன. அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின்போது அத்தகைய பெறுமதிக்க கற்களின் 15 க்கும் மேற்பட்ட வகைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன சிப்பி ஓடுகள் முத்துக்கள் மற்றும் உப்பு போன்ற பண்டங்கள் கடலோரப் பகுதிகளில் இருந்து நாட்டின் உட்பிரதேசங்களுக்கு எடுத்து வரப்பட்டன எனினும் இத்தகைய வகையைச் சேர்ந்த பண்டப்பரிமாற்றம் குறித்து கல்வெட்டுக்கள் போதிய அளவிலான சான்றுகளை முன்வைக்கவில்லை. இதற்கு மாறாக பின்னைய நூற்றாண்டுகளில் தொக்கப்பட்ட பொளத்த விதிமுறைகள் தொடர்பான விளக்க உரைகளான அட்டகதா போன்ற இலக்கிய மூலாதாரங்களில் இருந்து இது குறித்து அதிகளவில் தகல்வல்களைப் பெற்றுக்கொள்ளமுடிகிறது. தொலைதூர வர்த்தகம் பிரத்தியேகமாக வெளிநாட்டு வணிகர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுவந்தது. இங்கு வந்து குடியேறிய வணிகச் சமூகங்களைக் கொண்ட குடியிருப்புக்கள் நாட்டின் கரையோரப் பகுதிகளில் ஆங்காங்கே சிதறுண்டு காணப்பட்டன புறிப்பாக முக்கியமான நதிகளின் கழிமுகப் பகுதிகளிலும் கிளையாறுகளின் கழிமுகப் பகுதிகளிலும் இக்குடியிருப்புக்கள் அமைந்திருந்தன இந்த அன்னிய வணிகச் சமூகங்களின் குறித்த குறிப்புக்கள் அவர்களுக்கே உரிய இனத்துவ அடையாளங்களுடன் கல்வெட்டுக்களில் சேர்க்கப்பட்டுள்ளன அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள போவத்தகல கல்வெட்டு 'கல்போஜாஸ்' என்று அழைக்கப்பட்ட வணிகர் குழு ஒன்று குறித்து குறிப்பிடுகின்றது இந்த கம்போஜர்கள் இந்தியத் தீபகற்பத்தின் வடமேல் பகுதியிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறியவர்கள் என பரணவிதான அடையாளம் கண்டுள்ளார் வெளிநாட்டு வணிகர்களில் பெரும் பாலானவர்கள் தென்னிந்திய பிரதேசத்திலிருந்து வந்து இங்கு குடியேறிய தமிழ் வணிகர்களாக இருக்கமுடியும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரியபுளியங்குளம் குகைக்கல்வெட்டு மற்றும் நடுவில் குகைக் கல்வெட்டு என்பன இவர்களை தமிழ் வர்த்தகர்களின் ஒரு குழுவாக குறிப்பிடுகின்றன இவ் வணிகர்கள் தமது செயர்பாடுகளின்போது சிறுசிறு

கழகங்களாக தம்மை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர் என்பதனை அறிய முடிகின்றது. கல்வெட்டுக்களில் பல சந்தர்ப்பங்களில் புகா அல்லது புயா என்ற பதம் இடம்பெறுகின்றது இதன் பொருள் கழகம் அல்லது கூட்டமைப்பு என்பதாகும். வெஹரகம குகைக் கல்வெட்டு ஆடை நெய்பவர்களின் கூட்டமைப்புக்குச் சொந்தமான கழகம் ஒன்று குறித்து குறிப்பிடுகின்றது இத்தகைய வணிகர் கழகங்களில் ஒன்று தீகவாபி பிரதேசத்தில் செயற்ப்பட்டு வந்ததாக நடுவில் குகைக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

வெளிநாட்டு வணிகர்களுக்கும் உள்நாட்டு சமூகங்களுக்குமிடையில் பரிமாற்றம் கொள்ளப்பட்ட பண்டங்களின் இயல்பு குறித்து சமகால கல்வெட்டுக்கள் குறிப்பிடவில்லை. முன்னர் சுட்டிக் காட்டப்பட்டதுபோல பின்னைய நூற்றாண்டுகளில் தொகுக்கப்பட்ட இலக்கிய நூல்கள் அக்காலத்தில் பரிமாற்றிக்கொள்ளப்பட்ட வணிகப் பண்டங்கள் குறித்த போதிய தகவல்களை உள்ளடக்குகின்றன இவ்விதம் பரிமாற்றம் செய்துகொள்ளப்பட்ட பண்டங்கள் குறித்த எமது அறிவினை விரிவாக்கிக்கொள்வதற்கு போதுமான தகவல்களை தொல்லியல் அகழ்வுகளும் துன் வைத்துள்ளன. வாசனைத் திரவியங்கள் இரத்தினக்கற்கள் யானைத்தந்தம் மற்றும் முத்துக்கள் போன்ற பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் பிரதானமான மட்பாண்டங்கள் மட்பாண்ட வகைகள் மற்றும் பட்டு நறுமணப் பொருட்கள் போன்றவை நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் பெரேரா குறிப்பிட்டுள்ளார். சீகிரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி 6ஆம் நூற்றாண்டை சேர்ந்த ஒரு கவிதை சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பட்டுச்சேலைகள் குறித்து குறிப்பிடுகின்றது. சரந்தீவு அல்லது சைலான் தீப என்று அழைக்கப்பட்ட இந்நாட்டுடன் வெளிநாட்டினர் தெலைதூர வர்த்தகத்தில் ஈடுபட்டு இருந்தமைக்கான விரிவான இலக்கியச்சான்றுகளை வீரக்கொடி பிரசுரித்துள்ளார் அண்மையில் குணவர்தன மற்றும் பிரிக்கட் ஆகியோரும் இவ்விடத்தை கவனத்தில் எடுத்துள்ளனர். கண்டி மாவட்டத்தில் பக்கவலண என்ற இடத்தில் கண்டுபிடிக்கப் பட்ட ஒரு குகைக் கல்வெட்டு கடலோடி ஒருவர் இலங்கையிலிருந்து பாருக்காக்கக என்ற இடத்துக்கு கப்பலில் சென்றனர் என்ற அரிய தகவல்லைத் தருகின்றது. இக்கவ்வெட்டில் குறிக்கப்படும் போஜகாட்டக என்பது மேற்கிந்தியக் கரையில் அமைந்துள்ள ஒரு புகழ் பூத்த துறைமுகமாகும். இது இந்திய இலக்கியங்களில் போஜகாட்டக என்று காணப்படுவதுடன் தற்பொழுது போராக் என்று அழைக்கப் படுகின்றது.

கைவினைத் தொழில்கள்

விவசாயம் வாணிபம் தவிர கைவினைக் கலைகளில் சிறப்புத்தேர்ச்சி பெறுவது பொருளதாரத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமாகும். ஆரம்ப கட்டத்தில் **இலங்கைச் சமூகம் கைவினைப்பொருள் உற்பத்தியில் பலதரப்பட்ட சிறப்புத்** தேர்ச்சிகளைப் பெற்றிருந்தது. இது தொடர்பான முழுமையான தகல்களை சம காலக் கல்வெட்டுக்கல் கொண்டிருக்கவில்லை யாயினும்கூட அவற்றில் அவ்வப்போது சில குறிப்புகள் இடம்பெற்றுள்ளன

தொடக்ககால கல்வெட்டுக்களில் இருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ள தவல்களின் பிரகாரம் அக்காலகட்டத்தில் பிரதான கைவினைத் தொழில்கள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட இயற்கை மூல வளங்களுடன் சம்மந்தப்பட்டிருந்தன. என்பதைக் காணமுடிகின்றது. எனவே அக்காலப் பொருளாதாரத்தில் கனிப்பொருள்களின் அகழ்வு மிக முக்கியமான ஒரு பங்கினை வகித்து வந்திருக்கமுடியும். மதுகல்ல குகைக் கல்வெட்டில் காணப்படும் **'கபர'** என்ற பதம் இரும்புக் கொல்லர் ஒருவரைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

கைவினைத் தொழில்களுக்குப் பயன்படுத்தப்பட்ட உலோகப் பொருட்களில் இரும்பு மட்டும் அடங்கியிருக்கவில்லை. அக்காலத்தில் செம்பு இரும்புக்கான ஒரு துணை உலோகமாக இருந்து வந்தது. ஆரம்பகாலக் கல்வெட்டுக்களில் 'தம்பகார' என்ற பதம் பிரயோகிக்கப்பட்டிருப்பனைக் காணமுடிகின்றது. இது செம்புக் கொல்லர்களைக் குறிப்பிடுகின்றது. ஆரம்பகாலக் கல்வெட்டுக்களில் ஓரிரு சந்தர்ப்பங்களில் தகர வேலை செய்பவர்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. புராதன இலங்கையில் தங்கம் அகழ்வு தொடர்பாக ஒரு கல்வெட்டு மட்டுமே உள்ளது. தங்கம் இலங்கையில் அகழ்ந்தெடுக்கப்படவில்லையாயின் அது ஏனைய நாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கமுடியும். வரலாற்றின் பிற்காலத்தில் பல்வேறு நோக்கங்களுக்காகவும் தங்கம் பரவலாக பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதற்கான போதிய சான்றுகள் உள்ளன. மந்தகலையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு குகைக் கல்வெட்டு பொற்கொல்லர் ஒருவர் குறித்த குறிப்பொன்றினைக் கொண்டுள்ளது.

உலோகங்கள் தவிர இயற்கைப் பாறைக் கனிப்பொருட்களும் கணிசமான அளவில் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அவற்றுள் பெறுமதிமிக்க, ஓரளவு பெறுமதிமிக்க கற்கள் முக்கிய இடத்தைப்பெற்றன. இயற்கைப்பாறைகளிருந்து கனிப்பொருட்களை அகழ்ந்தெடுத்தோர் இரத்தினக்கல் கைத்தொழிலை மேற்கொண்டது மட்டுமின்றி கற்களுக்கு மெருகூட்டும் வேலைகளிலும் ஈடுபட்டு வந்தனர். இக்கலைஞர்கள் மணிகாரர்கள் என்று அழைக்கப்பட்டு வந்தனர் தந்தத்தில் இருந்து கலைப் பொருட்களை உருவாக்கும் தொழிலும் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. கி.மு முதலாவது ஆயிரமாவது ஆண்டின் தொடக்ககாலத்தில் இருந்தே இலங்கை அதன் தந்தத்துக்கென புகழ் வேகிரிய தேவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டு தந்தக் கலைஞர் ஒருவர் குறித்து குறிப்பிடு கின்றது. ஆரம்பகால இலங்கைச் சமூகத்தில் ஒரு கைவினைத்தொழில் என்ற முறையில் மட்பாண்டத்தொழில் இடம்பெற்று வந்தமைக்கான தகவல்கள் இல்லை. ஆனால் குயவர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்தனர் பெரும்பாலான வீட்டுப் பாத்திரங்கள் களிமண்ணால் செய்யப்பட்டிருக்கமுடியும்.

தொழில்கள்

அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழில்களை இரண்டு வகைகளாக பிரிக்கமுடியும். அவை நிறுவனமயப்படுத்தப்பட்ட தொழில்கள் தனியார் தொழில்கள்

என்பனவாகும். நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் இந்த இருவகைத் தொழில்களும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. கல்வெட்டுக் களில் காணப்படும் தகவல்களின் அடிப்படையில் நிறுவனமயப்படுத்தப்பட்ட தொழில்களின் விரிவான பட்டியல் ஒன்றைத் தாயரிக்கமுடியும். இத்தொழில்கள் அனைத்தையும் முழுமையாக, தனித்தனியாக எடுத்துவிளக்குவதற்கு இக்கட்டுரையில் போதிய இடவசதியில்லை. எனினும் நாளாந்த பொருளாதார நடவடிக்கைகளில் சம்மந்தப்பட்டிருந்த அதிகாரிகள் குறித்து சுருக்கமாக விளக்குவது இங்கு பொருத்தமாக இருக்கும்.

குருணாகல் மாவட்டத்தில் உள்ள பெரியகாடு விகாரக் குகைக் கல்வெட்டு நாணயம் உருக்கும் மிக முக்கியமான தொழில் குறித்து குறிப்பிடுகின்றது. இக் கல்வெட்டில் ரூபதாக்க என்ற பதத்தின் மூலம் இத்தொழில் குறிப்பிடுகின்றது. (நாணயம் செய்வதில் வல்லுனர் என்ற பொருள்படும் ரூபா-அத்தியக்'க என்ற இரு சமஸ்கிருதச் சொற்களில் இருந்து ரூபதக்க என்ற சொல் பெறப்பட்டுள்ளது). ஆரம்பகாலக் கல்வெட்டுக்களில் அக்கால பொருளாதார அமைப்பின் அத்தியாவசியப் பாகமொன்றாக இருந்து வந்த பல்வேறு தொழில்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தொழில்களில் படகாரிக்கா போன்ற தொழில்கள் மிக முக்கியமானவையாகும். சில சந்தர்ப்பங்களில் பாண்டாக்காரிக்கர்களுக்கும் மருமக்களுக்கும் குறிப்பிடத்தக்க நபர்களாக இருந்து வந்தனர். நாட்டின் உட்பிரதேசத்தில் விவசாய விளைபொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்து விநியோகம் செய்வதற்குப் பொறுப்பான முக்கிய அதிகாரிகளாக அவர்கள் இருந்து வந்திருக்கமுடியும். எனினும் அவர்கள் எந்த விதத்தில் ஒழுங்கமைந் திருந்தனர் என்பது குறித்தும் பொருட்களின் விநியோகத்தை எவ்விதம் கையாண்டு வந்தார்கள் என்பது குறித்தும் புரிந்துகொள்வதற்குப் போதுமான தவல்களை கல்வெட்டுக்கள் தரவில்லை. ஆரம்பகாலக் கல்வெட்டுக்களில் 'கணக்காஸ' என்ற அதிகாரிகள் குறித்தும் ஓரிரு சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.மு 250 க்கும் கி.மு10க்கும் இடைப்பட்ட காலத்தின்போது அத்தகைய எட்டு கணக்காளர்கள் இருந்து வந்துள்ளனர் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள சிலவக்கந்த குகைக் கல்வெட்டு இத்தகைய கணக்காளர்கள் சேர்ந்து பௌத்த மதகுருமாருக்கு வழங்கிய நன்கொடை ஒன்றை குறிப்பிடுகின்றது.

கி.மு 250 தொடக்கம் கி.பி 1ஆம் நூற்றாண்டு முடியும் வரையில் இலங்கையில் உள்நாட்டு வருமான முறையொன்றின் அபிவிருத்தியை மிகவும் தெளிவாகக் காணமுடிகிறது. நாட்டின் அரசியல் கட்டமைப்பு மத்தியமயப்படுத்தப்பட்டதுடன் இணைந்த விதத்தில் இந்த அபிவிருத்தி ஏற்பட்டு வந்துள்ளது. கி.மு 40 ஆம் வருடத்தின் பின்னர் வரி அறவிடும் முறையொன்று படிப்படியாக உருவாக்கி வந்துள்ளமையைக் காணமுடிகிறது. சமகாலக்கல்வெட்டுக்கள் மூன்று வகையான வரிகளை எடுத்துக்காட்டுகின்றன. இவற்றுள் போஜகப்பாட்டி என்ற வரி மிக முக்கியமானதாகும். நிலத்தைப் பயன்படுத்தியோரிடமிருந்து பெறப்பட்ட வரி என்பதே இதன் பொருளாகும். இது அரசாங்கத்தால் திரட்டப்பட்ட முக்கியமான

வரியாக இருந்து இது சொத்திலிருந்து பெறப்பட்ட முழுவருமானத்தின் **ஆறில் ஒரு பாகமாக** இருந்தது.

அக்காலக் கல்வெட்டுக்களில் அடிக்கடி குறிப்பிடப்படும் மற்றொரு வரி நீர் வரியாகும். கல்வெட்டுக்களில் இது தாக்கப்பத்தி என்ற பதத்தின் மூலம் குறிக்கப்படுகின்றது. இப்பதம் 'உதாக்க பிராப்த்தி' என்ற சமஸ்கிருத்த பதத்திலிருந்து பெறப்பட்டதாகும். அரசுக்குச் சொந்தமான நீர்த்தேக்கங்களில் இருந்து நீரைப் பயன்படுத்துவோரிடத்தில் இருந்து அறவிடப்பட்ட வரி என்பதே அதன் பொருளாகும். நீர்நிலைகளில் இருந்து மீன்களைப் பிடித்தோரிடத்தில் இருந்து அறவிடப்பட்ட வரி 'மாதத்தரமாஜி பாக்க' என்று குறிப்பிடப்படுள்ளது. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள கோடாபயக் குகைக் கல்வெட்டு **'சுக்கசரியயி'** என்ற சொல்லைக் கொண்டுள்ளது. அக்காலகட்டத்தில் அறவிடப்பட்டு வந்த மற்றொரு வகையான வரியை இது குறிப்பிடுகின்றது இப்பதத்தின் பொருள் சுங்கத்தீர்வை என்பதாகும் என பரணவிதா சுட்டிக் காட்டுகின்றார்.

நாணயம், செலாவணி மற்றும் வங்கித் தொழில்

பரிமாற்ற ஊடகம் அனைத்துப் பொருளாதாரங்களிலும் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இக்கட்டுரையில் இதுவரையில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நோக்கும்பொழுது ஆரம்பகால இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள் மிகச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன என்பதையும் அவை இயல்பில் சிக்கல் வாய்ந்ததாக இருந்து வந்துள்ளது என்பதனையும் காணமுடிகின்றது. முறையான ஊடக முறையைக் கவனத்தில் எடுக்காமல் இதனை நாம் புரிந்துகொள்ள முடியாது. ஆக்காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த பொருளாதாரப் பரிமாற்ற ஊடகத்தின் இயல்பினைப் புரிந்துகொள்வதற்கு போதிய அளவிலான எழுத்துமூலமான சான்றுகளும் உள்ளன. அவற்றின் பிரகாரம் ஆரம்பகால இலங்கையில் இடம்பெற்றுவந்த பொருளாதார பரிமாற்ற முறையை மூன்று வகைகளாக பிரித்துக் காட்டமுடியும்.

1. (கருத்துப்பட்ட பெறுமானங்களுடன்) உலோக நாணயங்களின் உபயோகம்
2. (நிறை மதிப்பிற்கான) உலோக நாணயங்களினதும் உலோக் கட்டிகளினதும் உபயோகம்.

ஆரம்பகால கல்வெட்டுகள் கஹபண என்ற பதத்தை கொண்டுள்ளன. இது இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வந்த மிகப் புராதனமான நாணய வகையாகும். இந்நாணயங்கள் முதலில் வடஇந்தியப் பிரதேசத்தில் வெளியிடப்பட்டன என்றும், அதனையடுத்து அவை தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் புழக்கத்துக்கு வந்தன என்றும் சில நாணயவியலாளர்கள் கருதுகின்றனர். இக்கருத்தை ஏற்க முடியுமாயின் தென் ஆசியாவின் தென்முனைப் பகுதியில் தொடர்ந்து செயற்பட்டு வந்த வணிகர்களால் இந்நாணயங்களின் புழக்கம் ஊக்குவிக்கப பட்டிருக்கமுடியும். தொடக்க காலத்தைச்சேர்ந்த 400 க்கும் மேற்பட்ட நாணயங்கள்

தீவின் பல பாகங்களில் இருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் முதலாவது உள்நாட்டு நாணயம் கி.பி1 ஆம் நூற்றாண்டு அல்லது இரண்டாம் நூற்றாண்டாம் அளவில் உருவாக்கியது. கருதப்பட்ட பெறுமதிகளுடன் கூடிய உலோக நாணயங்களைப் பயன்படுத்துவதிலும் பார்க்க நிறை அளவுகளுடன் கூடிய உலோக நாணயங்களைப் பயன்படுத்துதல் அதிக சிக்கல் வாய்ந்ததாக இருந்து வந்திருக்கமுடியும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 50,000 க்கும் மேற்பட்ட ரோமானிய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பண்டமாற்று முறை பிரதானமாக உள்ளூர் சமூகங்களிடையே இடம்பெற்றுவந்தது. உயிரினவியல் ரீதியில் வேறுபட்ட இடங்களில் குடியேறி வாழ்ந்துவந்த மக்கள் தமது வலயத்திற்குரிய பண்டங்களை ஏனைய வலயங்களைச் சேர்த்து பண்டங்களுடன் பரிமாற்றம் செய்துகொண்டனர். அன்னிய வணிகர்களுக்கும் உள்நாட்டு வணிகர்களுக்கும் இடையில் இடம்பெற்று வந்த இப்பண்டமாற்று முறை சில சந்தர்பங்களில் 'மௌளவர்த்தகம் என அழைக்கப்பட்டது. சுங்கத்தொழில் துறை குறித்த ஆரம்பகாலக் குறிப்புக்கள் கி.பி 4ஆம் நூற்றாண்டுக்கு உரியவை என கருதலாம். கீர்த்திசிரி மேகவநாபய மன்னனின் ரோனிகல பாறைக் கல்வெட்டு 'கலாஹீமணக்க' என்று அழைக்கப்பட்ட அத்தகைய வங்கி ஒன்று குறித்து குறிப்பிடுகின்றது. கலா சுமண என்ற வணிகர் கழகத்தின் வங்கி என இக்கல்வெட்டு இதனைக் குறிப்பிடுகின்றது. பகேஜா என்ற அரசரின் புதல்வரான தேவா என்பவர் கலாஹீமணக என்ற இந்த வர்த்தகர் கழகத்தின் தனது சொந்த அறுவடையை வைப்புச் செய்ததுடன், இந்த வைப்பின் வட்டி சமய நோக்கங் களுக்காக யஹிஷபர்வத என்ற மடாலயத்துக்கு வழங்கப்பட்டது. பின்னர் நூற்றாண்டுகளில் இந்த வங்கித் தொழில்முறையில் மேலும் அபிவிருத்திகள் ஏற்பட்டு வந்துள்ளது என்பதைக் காட்டுவதற்கு போதிய சான்றுகள் உள்ளன.

இலங்கையின் வரலாற்றுக் காலகட்டத்தின் தொடக்கத்தின்போது காணப்பட்ட பொருளாதாரத்தின் இயல்பினை எடுத்து விளக்குவதற்கு இங்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக கல்வெட்டுக்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் பொருளாதாரம் குறித்த முழுமையான வடிவம் ஒன்றை வழங்குவதற்குப் போதியதாக இல்லை; எனினும் இந்தத் தொலைதூர கால கட்டத்தின் பொருளாதாரம் குறித்த நம்பகரமான தகவல் மூலம் ஒன்றினை அவை வழங்குகின்றன.

அநுராதபுரக்கால நீர்ப்பாசனவியலும் அதன் வளர்ச்சியும்

புராதன இலங்கை நாகரிகத்தின் முக்கியமான அம்சமாகக் கருதக்கூடியது இந்நாட்டில் வளர்க்கப்பட்ட விவசாய முறையும், நீர்ப்பாசனப் பொறிமுறையுமாகும். பொதுவாக உலக நீர்ப்பாசனவியல் பொறிமுறையின் வலைப்பின்னலமைப்பு சிறந்த இடத்தினை வகிப்பதாக வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர். உலகிலே முதல்தரமான நீர்ப்பாசனவியல் பொறிமுறைநுட்பத்தில் சீனாவே சிறந்த பெறுபேற்றினை அடைந்திருந்தது. அதன் பின்னர் இரண்டாம் இடத்தில் இலங்கையே அச்சாதனை பொறுத்து சிறந்த பெறுபேற்றினைப் பெற்றிருந்தமையை

அறிஞர் எடுத்துக் காட்டியுள்ளனர். பேராசிரியர் நீடம் என்பவர் இலங்கையில் இராஜரட்டையில் வளர்ச்சி பெற்றிருந்த நீர்ப்பாசனவியல் தொழிநுட்பமுறையை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றின் விஞ்ஞான அம்சங்களை எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அநுராதபுர காலத்திலும், அதற்குப் பின்னரும் விவசாயத்துறையிலே குறிப்பிடத்தக்க முன்னேற்றமும், மேலதிக உற்பத்தி முறையும் ஈட்டப்படுவதற்கு இந்நீர்ப்பாசனவியல் நிறுவன அலகுகளே பங்காற்றி இருந்தன.

முற்பட்ட அநுராதபுர காலத்தின் பெரும்பாலான காலப்பகுதி முழுவதிலும் பன்மடங்கு உணவுப் பெருக்கம் ஏற்பட்டிருந்தமைக்கும், வானுயர ஓங்கி எழுப்பப்பட்டிருந்த பிரமிட்டுக்களை ஒத்த தாதுகோபுரங்களினது தோற்றத்திற்கும் இந்நீர்ப்பாசனவியல் அலகுகளே மூலங்களாக விளங்கின என்றால் அது மிகையான கூற்றாகிவிட முடியாது. இத்தோடு மட்டுமல்லாது உணவுப் பொருட்கள் சிற்சில சந்தர்ப்பங்களில் வெளிநாடுகட்கும் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தமை பற்றிய குறிப்புக்களும் சான்றுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். இவ்வாறு இலங்கையில் வளர்த்தெடுக்கப்பட்ட நீர்ப்பாசனவியல் வரலாற்றினையும் அத்தோடு தொடர்புடையதாகக் கருதப்படுகின்ற விவசாய முறைமைகள் பற்றிய வரலாற்றையும் அறிந்துகொள்வதற்கு மிக முக்கியமான இலக்கிய மூலாதாரமாக விளங்குவது மகாவம்சமாகும். முன்பு குறிப்பிடப்பட்டமை போன்று மகாவம்சமானது சிறப்பாக சமய வரலாற்றையும் அரசியல் வரலாற்றையும் கூறிச்செல்கின்ற போக்கினைக் கொண்டிருப்பதனால் அதிகளவில் பொருளாதார சமூகச் செய்திகளைத் தரவில்லை என்றே கூறவேண்டும். அதனால் அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்த இராசரட்டையில் விருத்தி அடைந்திருந்த நீர்ப்பாசன நிறுவனங்களைப் பற்றிய செய்திகள் பெருமளவிற்கு மகாவம்சத்தில் பேணப்பட்டிருக்கவில்லை. இவ்விடத்திலேயே அதிர்ஷ்டவசமாக ஆதிப் பிராமிச் சாசனங்கள் மிகப்பயனுள்ள தகவல்களை நீர்ப்பாசன நிறுவனங்களின் வளர்ச்சி தொடர்பாகத் தருவதனைக் காணலாம். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியிலிருந்து குறிப்பாக தேவநம்பியதீசன் காலத்திலிருந்து கிடைக்கும் சாசனச்சான்றுகள் பெருமளவிற்கு தொடர்ச்சியான வகையில் நீர்ப்பாசன அலகுகளின் பரிணாம வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன. கி.மு.1ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கைப் பிராமிச் சாசனங்களில் குளங்கள், கால்வாய்கள், வயல் நிலங்கள் பற்றிய செய்திகள் அதிகளவில் இடம்பெறத் தொடங்குகின்றன. மன்னராலும், தனிப்பட்ட மக்களினாலும் பௌத்த சங்கத்திற்கு வழங்கப்பட்ட தானங்களுள் பெரும்பாலானவை இக்குளங்களும், கால்வாய்களும், நெல் வயல்களுமாக இருப்பதனைக் காணலாம். பின்னர் காலம் செல்லச்செல்ல இத்தகைய குளங்களிலிருந்தும், கால்வாய்களிலிருந்தும் பெறப்பட்ட நீர்வரியின் ஒரு பாகம் பௌத்த சங்கத்தின் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்தமை பற்றி சாசனங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தான் புராதன இலங்கையின் நீர்ப்பாசனவியல் பொறிமுறையின் சிறப்பியல்புகளை வெளிக்கொணர முடிகின்றது.

இலங்கையில் நிரந்தரமான விவசாயக் குடியிருப்புக்களும், பயிர்ச் செய்கைக்கான நன்செய்நிலங்களின் தெரிவும் பயன்பாடும் கிறிஸ்துக்கு முற்பட்ட ஆயிரமாமாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பமானதெனக் கொள்ளமுடிந்தாலும், இக்காலப்பகுதிக்கு முன்பாகவே தக்கணத்திலும், தமிழகத்திலும் இரும்பின் உபயோகத்தினை பயிர்ச்செய்கை - நன்செய் நிலங்களின் பயன்பாட்டு முறைமை ஆகியனவற்றில் பிரயோகித்திருந்தவர்களாகப் பெருங்கற்கால மக்கள் காணப்படு கின்றனர். இவ்வாறான வாழ்வுமுறை கி.மு. 1000ஆம் ஆண்டிலேயே தீபகற்ப இந்தியாவில் தோற்றம்பெற்று விட்டிருந்தாலும், இலங்கையைப் பொறுத்து அந்நிலையானது கி.மு. 800ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தமையை அண்மைக் காலத் தொல்லியல் அகழ்வுகளின் முடிபுகள் எடுத்துக்காட்டுகின்றன. இங்கு தோன்றிய விவசாய முறைமையின் காலப்பகுப்பு எத்தகையதாக இருந்தாலும், கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் பயிர்ச்செய்கை அடிப்படையாகக் கொண்ட ஒரு வலுவான சமூக உருவாக்கம் ஏற்பட்டிருந்தது என்பதனை எவருமே மறுக்கமுடியாது. ஆனால் இலங்கையைப் பொறுத்தளவில் கி.முற்பட்ட நூற்றாண்டுகளில் விவசாய - நீர்ப்பாசன நிறுவனங்களின் சிறுச்சிறு பிரதேசங்களில், சிறுச்சிறு மக்கள் குழுவினரால் உருவாக்கப்பட்டு நிரந்தரமான - நிலத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு விவசாயச் சமூகக் கட்டமைப்புக்குரிய பண்பு தோற்றுவிக்கப்பட்டிருந்தது. வடகிழக்கிந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் சிறப்புப் பெற்றிருந்த பயிர்ச்செய்கையாகிய நெற்செய்கையே இங்கும் சிறப்புப் பெற்றிருந்தது என்பதை உறுதிப்படுத்தும் வகையிலான தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன. அநுராதபுரத்திலும், புத்தளத்திலுள்ள பொன்பரிப்பிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வுகளின் முடிபுகள் பெருங்கற்கால நெற்பயிர்ச்செய்கையின் சிறப்பியல்புகள், அணைக்கட்டுக்களின் தன்மைகள் போன்றவற்றை எடுத்துக் காட்டுகின்றன. யாழ்ப்பாணக்குடாநாட்டின் எல்லைக்குள் வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கின் இருமருங்கிலும், மற்றும் நாகர்கோயிற் பிரதேசத்திலும் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த நெற்பயிர்ச்செய்கைக்கான தொல்லியற் தடயங்கள் கிடைத்துள்ளன. வடமராட்சியில் உள்ள எள்ளன் குளம் என அழைக்கப்பட்டுவரும் எல்லாளன் குளம் பெருங்கற்காலத்தில் உருவாக்கப்பட்ட ஒரு நீர்ப்பாசன அலகு என்பதனை உறுதிப்படுத்தும் தொல்லியல் ஆவணங்களும் கிடைத்துள்ளன. மாயக்கை என அழைக்கப்பட்டுவரும் மாயக்குகை என்ற பழம்பெரும் நீர்ப்பரப்பு யாழ்ப்பாணக் குடாநாட்டின் கண் உள்ள மிகப் புராதனமான விவசாயக் குடியிருப்பு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதேபோன்று நந்தாவில் குளம் என்ற பழம்பெரும் நீர்ப்பாசன ஏரியும் பெருங்கற்காலத்திற்கும் முற்பட்டது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளமுடிகிறது. யாழ்ப்பாணத் தமிழ் மரபில் நாடு விளைந்தால் நந்தாவில் விளையாது. நந்தாவில் விளைந்தால் நாடு விளையாது என்றவொரு முதுமொழி வழங்கி வருவதிலிருந்து அவ்விவசாயக் குடியிருப்பினது பழமைத்தன்மை புலனாகிறது. கந்தரோடையில் உள்ள கற்பக்குணை என்றவொரு குறிச்சியிலிருந்து மிக அண்மையில் அம்மிபோன்று, கால்களையுடைய கருங்கல்லினாலான ஓர் அரைகல் பெருங்கற்கால மண்படைகளிலிருந்து

மீட்கப்பட்டமையானது வரலாற்றுச் சிறப்புமிக்கதாக உள்ளது. (இந்த அரைக்கல் முச்சூலத்துடனும் மீன்சின்னத்துடனும் காணப்படுவது சிவன்-மீனாட்சி சமேதர தெய்வங்களின் தோற்றத்தினைக் குறிக்கின்றதா என ஆராயஇடமுண்டு.) எவ்வாறெனினும் இவ் அரைக்கல்லானது நீர்ப்பாசனப் பொறிமுறைநுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பெருமக்களின் தொழிநுட்பத்தினையும் இருப்பினையும் உறுதிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இலங்கையிலிருந்து நீர்ப்பாசன அமைப்புக்கள் மிகச்சிலவே என்பதனை மகாவம்சமும் எடுத்துக்காட்டுகின்றது. இதேபோன்றுதான் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து ஒரு சில குளங்கள், கால்வாய்கள் பற்றிய குறிப்புக்களைச் சாசனங்களும் எடுத்துக்காட்டுகின்றன. எனினும் மகாவம்சத்தைவிட கூடியளவு எண்ணிக்கையான குளங்களையும், கால்வாய்களையும் அச்சாசனங்கள் வாயிலாகக் கண்டுகொள்ளமுடிகிறது. இங்கு குறிப்பிடக்கூடிய ஓரம்சமாக இருப்பது என்னவெனில் கி.முற்பட்ட காலத்துக் குளங்களும், கால்வாய்களும் அளவில் மிகச்சிறியனவாகவும், அவை ஊர்க் குளங்களாகவும், அதாவது சிறுச்சிறு ஊர்களில் குறைந்தளவிலான உணவு உற்பத்தித் தேவையை நிறைவு செய்வனவாகவும் காணப்பட்டிருந்தன. அவ்வகையில் கி.முற்பட்ட நூற்றாண்டுகளில் இலங்கையில் பெரும் நீர்ப்பாசன நிறுவன அமைப்புக்கள் ஆரம்பிக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. இக்குளங்களும், கால்வாய்களும் எவ்வளவு சிறியவையாக இருந்தனவோ அந்தளவிற்கு முக்கியத்துவமற்ற சொத்துக்களாகவும் இருந்தன என்பதையும் எமக்குக் கிடைத்த சாசனச்சான்றுகள் வாயிலாக உணர்ந்துகொள்ளமுடிகிறது. பொதுவாக இக்குளங்கள், கால்வாய்கள் ஊர்ப் பொதுச்சொத்தாகவே காணப் பட்டிருந்தன. ஆனால் பல சந்தர்ப்பங்களில் தனிப்பட்டவர்களின் சொத்தாகவே அவை விளங்கி வந்துள்ளன. பின்னர் நாம் காண்பதுபோல் எல்லாக் குளங்களும் மன்னனால் கட்டப்பட்டு மன்னரின் சொத்தாகச் செல்வதனைக் காணலாம். ஆரம்பத்தில் குளம் கட்டிய மன்னர் சிலர் தனிப்பட்டவர்களிடமிருந்து பணம் கொடுத்து விலைக்குப் பெற்ற குளங்களைப் புதுப்பித்தும் விசாலப்படுத்தியதன் பின்னர் பௌத்தசங்கத்திற்கு தானம் வழங்கிய முறையையும் காண்கின்றோம். முற்பட்ட காலங்களில் சாசனங்களில் குறிப்பிடப்பட்ட குளங்களும், கால்வாய்களும் இவ்வாறே கொள்விலையாகப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பௌத்த சங்கத்திற்குத் தானம் வழங்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன. பறங்கியாற்றின் குறுக்கே அணைகட்டப்பட்டு உருவாக்கப்பட்ட இராட்சதகுளம் அவ்வாறே கி.முற்பட்ட நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது.

கி.பிற்பட்ட முதலாம் நூற்றாண்டிலிருந்து நீர்ப்பாசனப் பொறிமுறையானது ஒரு திட்டமிட்ட வகையில் இலங்கையின் பல பாகங்களிலும் விரிந்து வளர்ச்சி பெற்றுச் சென்றமையைக் காணமுடிகிறது. இதுவரையில் ஊர்க் குளங்களாக இருந்தவை இக்காலகட்டத்திலிருந்து பெரும் பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன வசதியை அளிக்கும் பெருங்குளங்களாக மாற்றம் பெறுவதைக் காணமுடிகிறது.

இதுவரையில் ஊரவர்களாலும் தனிப்பட்டவர்களினாலும் கட்டிய குளங்களுக்குப் பதிலாக கி.பி. 1ஆம் நூற்றாண்டிலிருந்து மன்னர்களால் அவை உருவாக்கம் பெறுபவையாக மாற்றமுறுகின்றன. இத்தகைய முதலாவது பெரும்புரட்சியை நடைமுறைப்படுத்திய மன்னனாகக் காணப்படுபவன் வசப மன்னனாவான். மகாவம்சத்தில் அம்மன்னன் கட்டிய 11 குளங்களினதும், 12 கால்வாய்களினதும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை தற்காலத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதனால் இப்புதிய முயற்சியின் விளைவாகத் தோன்றிய நீர்ப்பாசன முறையின் தன்மையைப் பெருமளவிற்கு அறிந்துகொள்ளவும் முடிந்துள்ளது.

வசபமன்னன் கட்டுவித்த குளங்களானவை இதுவரை அமைக்கப்பட்டவற்றை விட பெரியளவிலானவையாகும். அதுமட்டுமல்ல இதுவரை பயன்படுத்தப்படாத தொழில்நுட்பம், நீர்ப்பொறிமுறைநுட்பம் என்பன முதன்முறையாக வசப மன்னன காலத்திலேயே பயன்படுத்தப்பட்டமையைக் காணலாம். கி.பி. 1ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் கட்டப்பட்ட குளங்கள் பல சாசனங்களிலும், மகாவம்சத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் மகாவம்சத்தில் குறிப்பிடப்படாத 150 குளங்களினதும், கால்வாய்களினதும் பெயர்களைச் சாசனச் சான்றுகள் தருகின்றன. இவ்வளவு பெருந்தொகையாக கி.பி. 3ஆம் நூற்றாண்டில் குளங்கள் கட்டப்பட்டிருந்தன என்பதனைக் காணும்போது எவ்வளவு விரைவான வளர்ச்சியை நீர்ப்பாசன நிறுவனங்கள் அடைந்திருந்தன என்பதனை உணரமுடிகிறது. அத்தோடு கி.பி. 1ஆம் நூற்றாண்டில் அடையப்பட்டிருந்த நீர்ப்பாசன பொறிமுறையறிவினைவிட கி.பி. 1ஆம் நூற்றாண்டில் மிகவும் உயர்ந்ததும், மிகப்பரந்த பரப்பளவில் அமைக்கப்பட்ட நீரியல் நுட்பங்களும் கையாளப்பட்டிருந்தன. வடஇலங்கையின் பல பாகங்களிலும் இத்தகைய பரப்பளவில் கூடிய நீர்ப்பாசன பொறிமுறையமைப்பு கையாளப்பட்டிருந்தன. இத்தகைய விசாலமான நீர்ப்பாசனப் பொறிமுறையமைப்பின் வலைப்பின்னலை முதன்முறையாக மகாசேன மன்னனே உருவாக்கினான். அவன் 16 பெருங்குளங்களையும் ஒரு பெருங்கால்வாயையும் அமைத்ததாக மகாவம்சத்தில் குறிக்கப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது. மணி கீரவாபி எனப்படும் மின்னேரிக்குளம் 4670 ஏக்கர் விஸ்தீரணத்துடன் இம்மன்னனால் அமைக்கப்பட்டது. இப்பரந்த வாபியிலிருந்து 4000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் அளிக்கப்படுகின்றது. ஆளிஸார் - அலகரக்கால்வாய் 25½ மைல் நீளத்திற்கு இம்மன்னனால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இம்மன்னனால் ஆக்கப்பட்ட இவ்வரம்பணிக்காக மக்கள் அவனை மின்னேரித் தெய்வம் என்று இற்றைநாள் வரைக்கும் போற்றி, மதித்து, வணங்கி வருவதனையும் காணமுடிகிறது. இவ்வகையில் இலங்கையின் நீர்ப்பாசனவியல் பொறிமுறை வரலாற்றில் கி.பி. 3ஆம் நூற்றாண்டு ஓர் மைல்கல் ஆக விளங்குவதனைக் காணமுடிகிறது.

பின்வந்த நூற்றாண்டுகளில் இப்பொழுது அடையப்பட்டிருந்த நீர்ப்பாசனம் பொறிமுறையறிவே தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தமையைக் காணமுடிகிறது.

இக்காலப் பகுதியில் மகாசேனமன்னனின் வழியைப் பின்பற்றி பல்வேறு மன்னர்களும் பெருங்குளங்களை அமைப்பதனைக் காணமுடிகிறது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் அவ்வாறான ஓர் அரும்பணியை ஆற்றியவனாக முதலாம் உபதீசன் என்ற மன்னனும், அதன் பின்னர் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் அத்துறை பொறுத்து தாதுசேன மன்னனும் அரும்பணியாற்றியவர்களாகக் கணிக்கப்பட்டுள்ளனர்.

தாதுசேன மன்னனுடைய ஆட்சிக்காலம் இலங்கையின் அரசியல் பண்பாட்டு, பொருளாதார வரலாற்றில் மிகமுக்கியமான ஒரு கட்டத்தினைக் குறித்து நின்றது. மகாசேன மன்னனால் அமைக்கப்பட்ட மின்னேரியாவை விட பெயரியதொரு நீர்ப்பாசனக்குளம் ஒன்று தாதுசேனனால் அமைக்கப்பட்டிருந்தது. அது கலாவாவி என அழைக்கப்பட்டது. இதன் விஸ்தீரணம் 6380 ஏக்கராகும். கலாவாவியையும் தீகவாபியையும் இணைத்து 54 மைல் நீளமான கால்வாய் ஒன்றும் (ஜயகங்கை) இம்மன்னனால் அமைக்கப்பட்டதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. சூளவம்சம் முதலாம் பாகத்தில் இம்மன்னனால் அமைக்கப் பட்டதாக 18 குளங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இவ்வாறான நீர்ப்பாசனவியல் நிறுவனங்களை அமைத்துக்கொடுத்த ஒரு மன்னனாகக் காணப்படுபவன் இரண்டாம் மகெல்லன் என்பவன் ஆவான். இவனால் அமைக்கப்பட்ட பெருங்குளங்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கது நாச்சடுவக்குளம் ஆகும். இதே நூற்றாண்டில் இன்னொரு மன்னனான முதலாம் அக்கிரபோதி என்பவன் கட்டிய குளங்களுள் குருந்துவாவி (தணிணிமுறிப்புக் குளம்) குறிப்பிடத்தக்கதொன்றாக விளங்குகின்றது. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் 2ஆம் அக்கிரபோதி மன்னனால் அமைக்கப்பட்ட பெருங்குளங்களுள் சிறப்புப்பெறுவது கங்காதடலவாவி ஆகும். இவ்வாபி இன்று கந்தளாய் என்ற பெயருடன் மிளிர்வதனைக் காணலாம். கந்தளாய் குளத்தின் தோற்றம், வரலாறு, அதன் சிறப்புக்கள் பற்றி தஷிண கைலாச மான்மியத்திலும் பல சுவையான செய்திகள் இடம்பெற்றுள்ளன. கண் + தளை என்ற இரு பதங்களின் இணைப்பே கண்தளாய் என்றாகி இன்று கந்தளாய் என வழங்குவதாக தஷிண கைலாசமான்மியத்தை ஆதாரம்காட்டிக் குறிப்பிடுவர். தமிழ் மரபில் கந்தளாய் குளத்தினைப் பற்றிய பல கதைமரபுகளும் நிலவிக் கொண்டிருக் கின்றன. இந்து மரபிலும் குறிப்பாக திருக்கோணேஸ்வரத்துடன் தொடர்புபடுத்தப் பட்ட வகையில் கந்தளாய் குளத்துடன் இருந்திருக்கக்கூடிய தொடர்புகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பல்லவர், சோழர் காலங்களில் இலங்கையில் ஏற்பட்டிருந்த அரசியல், பண்பாட்டுத் தொடர்புகளின் விளைவாக கந்தளாய் குளத்துடன் இந்துமரபுகளும் இணைந்து இலங்கைப் பண்பாட்டில் ஒரு தனித்துவமான இடத்தினைப் பெற்றிருக்கவேண்டும் எனத் தோன்றுகின்றது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்குமிடைப்பட்ட காலத்தில் இலங்கையின் புதிய நீர்ப்பாசன நிறுவனங்களை அமைப்பதனைவிட மன்னர்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த பெருங்குளங்களையும், நீர்ப்பாசனக் கால்வாய்களையும் புனரமைப்பதிலும் பராமரிப்பதிலுமே ஈடுபட்டிருந்தமையைக காணமுடிகிறது. இதற்கான காரணம் கி.பி. 7ஆம் நூற்றாண்டில்

குறிப்பிடத்தக்களவில் இலங்கையை நோக்கி ஏற்பட்ட அந்நியப் படையெடுப்புக் களாகும். இதனால் இலங்கையின் நீர்ப்பாசனவியல் பொறிமுறை வளர்ச்சியில் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டிருந்தமையைக் காண்கிறோம். கி.பி.7ஆம் நூற்றாண்டில் ஜடாவர்மன் மானவர்மன் காலத்திலிருந்து பல்லவப் படையெடுப்பு முதல் கி.பி. 11ஆம் நூற்றாண்டுவரை தொடர்ச்சியாக இலங்கை நோக்கி அரசியலடிப்படை யிலான படையெடுப்புக்கள் நிகழ்ந்தவண்ணம் இருந்தன. இந்நிலையில் புதிய நீர்ப்பாசன நிறுவனங்களை உருவாக்கி, பாசன மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனைவிட, ஏற்கனவே உருவாக்கப்பட்ட பெரும் திட்டங்களைப் பராமரிப்பதே பொருத்தமானதாக பிற்பட்ட அநுராதபுர ஆட்சிக்கால மன்னருக்குப் புலப்பட்டிருந்தமையினாலேயே புதிய நீர்ப்பாசனப் பொறிமுறை நிலையின் வளர்ச்சி இலங்கையின் தடைப்பட்டது எனலாம்.

பிற்பட்ட அநுராதபுரகாலத்தில் (கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதி) இராசரட்டையின் நீர்வள நாகரிகத்தில் ஒரு தேக்கநிலை காணப்பட்டதேயொழிய, அவற்றின் பொறிமுறைத் தொழில்நுட்பவியல் வளர்ச்சிபெற்றுச் சென்றுள்ளது என்றே குறிப்பிடவேண்டும். கி.பி. 11ஆம், 12ஆம் நூற்றாண்டுகளில் பொலனறுவையைத் தலைநகராகக் கொண்டு இராசரட்டையில் வளர்த்தெடுக்கப்பட்ட நீர்ப்பாசனப் பொறிமுறை அமைப்பின் அதியுச்ச வளர்ச்சிநிலைக்குப் பிற்பட்ட அநுராதபுர காலத்தினூடாக வழங்கப்பட்ட நீர்ப்பாசனப் பொறிமுறை அறிவின் அடிப்படைகளே காரணம் என்பதனை மறுக்கமுடியாது. இதனைவிட, நிலமானியச் சமூகமொன்றின் உச்சவளர்ச்சியை பொலனறுவைக்கால இலங்கை ஈட்டிக் கொண்டமைக்கும் அந்நீர்ப்பாசனவியல் பொறிமுறை அமைப்பின் உச்ச வளர்ச்சியே காரணமாகும். பல்வேறு வகையான வரலாற்று மூலங்களும் இதனை உறுதிப்படுத்தியுள்ளன.

நீர்ப்பாசனவியல் சமூகத்தில் பலதரப்பட்ட நிர்வாக அலகுகள் அதன் முகாமைத்துவ முறையினை நெறிப்படுத்தியிருந்தமை யினை பல மூலாதாரங் களின் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது. நில ஆட்சிமுறையைப் பொறுத்த மட்டில் நன்செய், புன்செய் நிலங்கள், காட்சி நிலங்கள் ஆகியன மன்னனின் சொத்துடமையாக இருந்த அதே நேரத்தில், மடாலயங்களுக்கும், தனியாருக்கும் உரியதாக நிலம் மீதான உரிமம் காணப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் மன்னர் நிலங்களைக் கொள்வனவுசெய்து நிலத்தின் மீதான தமது உரிமத்தை பலப்படுத்திக் கொண்டனர். நிலத்தின் மீதான பல்வகைப்பட்ட பயன்பாடும், பாவனையும் இருந்த காரணத்தினால் ஒருவகையான மானியமுறைச் சமூகத்துக்குரிய சேவைமுறைகள் கூடக் காணப்பட்டிருந்தன.

நிலத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக வருமானத்தினை கிராம அலுவலர்கள், மாகாண ஆளுநர்கள், இறுதியாக அரசனும் அமைச்சர்களும் எனப் பங்குபோட்டுக் கொண்டமையைக் காணலாம். வரிகள், சேவைக் கடமைப் பாடுகள் ஆகிய வழிகள் வாயிலாகவே அம்மேலதிக உற்பத்தியானது அரசின் மேல்மட்டத்தினைச் சென்றடைகின்றது. நெல்வயல்கள் சேனைகள், உள்நாட்டு-வெளிநாட்டு வர்த்தகம், பாசன நீர் போன்றவற்றிற்கு தனித்துவமான வகையில

வரிகள் அறவீடு செய்யப்பட்டன. வரிகளை அறவீடு செய்யும்பணி மாகாண ஆட்சியாளர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிர்வாகப் பரவலாக்கல் முறைமையானது பிரபுத்துவ அமைப்பு முறைக்கான தன்மைகளையே கொண்டு காணப்பட்டன.

சேவைக் கடமைப்பாடுகளால் உபரி உற்பத்தி உறிஞ்சப்படுதல் அரசனுக்குச் செய்யும் சேவையான ராஜகாரியம் எனப் பின்னர் அழைக்கப்பட்டது. இத்தகைய கோவி நடவடிக்கைகள், நீர்ப்பாசன வேலைகள் கட்டிட நிர்மாணம் ஆகிய பொது நடவடிக்கைகள் ஒவ்வொரு சாதாரண மனிதனையும் ஈடுபடவைத்தன. 2ஆம் நூற்றாண்டிற்குரிய மஹாதூப கட்டிடம்பற்றி மஹாவம்சம் தரும் விவரணம், சேவை, உழைப்பு, பொதுவேலைக்கு எவ்வாறு ஆட்கள் திரட்டப்பட்டது என்பதைக் காட்டுகின்றது. நாம் மேலே நோக்கியது போன்று இத்தகைய பொதுவேலைக்கு பெருமளவிலான உழைப்பினை நல்கியமை, உழைப்பாளர்களுக்கும் விவசாய உற்பத்தியில் நேரடியாக ஈடுபடாத கைப்பணியாளர்கள், மதகுருமார் போன்றோருக்கும் வழங்கக்கூடிய போதுமான அளவு உபரி உற்பத்தியை விவசாயமுறை ஈட்டியதைக் குறிக்கின்றது. இவ்வாறாக அநுராதபுரக்காலப் பகுதியில் தொடர்ச்சியான வகையில் பெருங்குளங்களும், கால்வாய்களும் அமைக்கப்பட்டு நீர்ப்பாசன பொறிமுறையமைப்பின் மூலம் மேலதிக விவசாய ஈட்டம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஒரு நிலையின் செழிப்பினை அநுராதபுரத்திலும் ராஜரட்டையின் பல்வேறு பிராந்தியங் களிலும் வானுயர அமைக்கப்பட்டிருக்கும் கட்டிடங்களின் மேற்கட்டுமானம் நன்கு துலாம்பரப்படுத்தியுள்ளன. இந்நிலையின் வளர்ச்சிக்கு விவசாய ஈட்டத்தோடு உள்நாட்டு வெளிநாட்டு வாணிபத் தேட்டமும் அடிப்படையாக அமைந்திருக்கும் என்பதனையும் மறுப்பதற்கில்லை.

இலங்கையின் புகழ்பூத்த பண்டைய செழிப்பு நிலைக்கு இரு காரணிகள் பொறுப்பாக இருந்து வந்துள்ளன. கடல் வாணிபம் மற்றும் வெற்றிகரமான வேளாண்மைத்தொழில் என்பனவே அவ்விரு காரணிகளுமாகும். இலங்கைத் தீவு இந்து சமுத்திரத்தின் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருந்தமை கடல் வாணிபம் செழித்தோங்குவதற்கு ஏதுவாயிற்று. மேலைத்தேய உலகிற்கும் கீழைத்தேய உலகிற்கும் இடையிலான கடல் வாணிபத்தின் மைய ஸ்தானத்தில் இலங்கை அமைந்திருந்ததுடன் முத்துக்கள், வாசனைத் திரவியங்கள், இரத்தினக் கற்கள் மற்றும் யானைகள் போன்ற மிக அருமையான மூலவளங்களுக்கும் நம் நாடு அக்காலத்தில் பிரசித்தி பெற்றிருந்தது. பண்டைய கலாச்சார மையங்களான ரோமப் பேரரசுக்கும் சீனாவுக்கும் இடையிலான சர்வதேச கடல் வாணிபத்தில் பாதுகாப்பான முறையில் நங்கூரமிடக் கூடிய ஓரிடம் என்ற முறையிலும் இலங்கையின் முக்கியத்துவம் அதிகரித்து காணப்பட்டது சிறப்பாக குறிப்பிடத்தக்க நீர்ப்பாசனக் கட்டமைப்பொன்றின் அபிவிருத்தி மற்றும் பரவல் என்பவற்றின் நேரடி விளைவாகவே வேளாண்மைத் துறையில் செழிப்பு நிலை தோன்றியது. இக்கட்டுரையின் பார்வை வீச்சில பண்டைய இலங்கையில் நீர்ப்பாசனம் வகித்து வந்திருக்கும் பங்கு மட்டுமே

கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தீவில் வாழ்ந்த வரலாற்று யுகத்துக்கு முற்பட்ட மக்களின் எச்சங்கள் தெரணியகல அவர்களால் சுமார் 28000 வருடங் களுக்கு முந்தியவை என ரேடியோ கார்பன் முறையின்மூலம் தேதி இடப்பட்டுள்ளது. இலங்கையின் பூர்வ வரலாற்றுக் குடிகள் அதற்கும் முந்திய காலத்தில் சுமார் 300000 அல்லது 500000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதற்கு ஆதாரமாக கல் ஆயுதங்கள். ஓடுகள் போன்ற உறுதியான தொல்லியல் சான்றுகள் இருந்து வருகின்றன. இலங்கையின் நன்கு தெளிவாகப் புலப்பட்ட பழைய கற்கால யுகம் புதிய கற்கால யுகமொன்றுக்கான சான்றுகள் இல்லாத நிலையில் கி.மு. சுமார் 1000 ஆவது ஆண்டளவில் வரலாற்று உதய இரும்பு யுகத்துக்குள் பிரவேசித்தது. விஜேபால அவர்களால் ஒரு குகை அமைவிடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் மட்டுமே புதிய கற்காலத்திற்கான ஒரே ஒருசான்றாக இருந்து வருகின்றது. (கல் ஆயுதத் தொழில்நுட்பங்களுடன் இணைந்த விதத்தில் மட்பாண்டங்களின் பாவனை மற்றும் விலங்குகள் தாவரங்கள் போன்றவற்றை வீட்டில் வளர்த்தல் ஆகியவை புதிய கற்காலத்திற்குரிய பண்புக் கூறுகளாகும்) இலங்கையில் இரும்பு உபயோகத்தின் ஆரம்பம் வேளாண்மைத் தொழில் ஆதிக்கம் பெறத் தொடங்கியதின் ஓர் அடையாளமென வாதிடமுடியும். நீர்பாசனத்தின் மூலமான வேளாண்மைத் தொழில் பிரதானமான ஈர நெல் உற்பத்தி கி.மு. 250 அளவில் தொடங்கும் இலங்கையின் ஆரம்ப வரலாற்றுக் காலத்தின் மிக முக்கியமானதொரு பண்புக் கூறாக இருந்து வந்ததுடன். அது அடுத்து வந்த பல நூற்றாண்டுகளுக்கு அவ்வாறே நீடித்தது. கி.பி.13 ஆம் நூற்றாண்டில் பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சி அடையும் வரையில் நீர்ப்பாசன விவசாயம் நாட்டில் தொடர்ந்து நிலை கொண்டிருந்தது. பண்டைக்கால வெட்டி எரித்து சாகுபடி செய்யும் விவசாய முறைக்குப் பதிலாக நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட பாரிய அளவிலான விவசாய முறை நாட்டில் செழித்தோங்குவதற்கு அரும்பு கருவிகளும் பொருத்தமான பண்பு வகைகளுடன். இணைந்த விதத்தில் பிற்காலத்தில் உருக்குக்கும் வழிகோலியிருந்தது. நிலத்தின் அதிகரித்த அளவிலான இந்த தாங்குதிறன் மறுபுறம் நாட்டின் வடமத்திய மற்றும் தென்கிழக்கு உலர் வலயப் பிரதேசங்களில் நகராக்கம் எழுச்சி அடைவதற்கு வாய்ப்பினை அளித்தது.

இலங்கையின் உலர்வலயத்தில் பிழைப்பூதிய விவசாய மட்டத்தை தாண்டிச் செல்வதற்கு நீர்பாசனம் ஓர் அத்தியாவசியத் தேவையாக இருந்து வருகின்றது. இந்த யதார்த்தநிலை ஒட்டுமொத்த மழைவீழ்ச்சிக் குறைபாட்டினை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக மழை வீழ்ச்சியில் குறிப்பிடதக்க அளவில் நிலவிவரும் பருவகால இயல்பினையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. வடகீழ் பருவப்பெயர்ச்சி காற்றின்போது, உலர் வலயத்தின் பெரும்பாலான பகுதிகளில் மிதமிஞ்சிய அளவில் மழைவீழ்ச்சி இடம்பெறுவதுடன். காலத்திற்கு காலம் வெள்ளப் பெருக்குகளும் ஏற்படுகின்றன. ஏனைய மாதங்களில் மழைவீழ்ச்சி மிகவும் குறைவானதாக அல்லது அறவே இடம்பெறாததாக உள்ளது. இந்த வானிலை வரையறைகளின் பின்னணியில் ஆண்டு முழுவதும விவசாய உபயோகத்துக்கு என நீரை சேமித்து வைப்பது ஓர் அத்தியாவசியத்

தேவையாக உள்ளது. இலங்கையின் நீர்பாசனத்தின் தோற்று வாய்கள் அந்த அளவுக்கு தெட்டத்தெளிவாக தென்படவில்லை. பண்டைய இலங்கையின் நீர்ப்பாசனமுறை தீவின் வரலாற்று உதயகால மக்களின் ஓர் உள்நாட்டு அபிவிருத்தியாக உள்ளது என சில அறிஞர்கள் வாதிடுகின்றனர். வேறு சிலர் அரிசி சாகுபடி செய்யும் குடியேற்ற வாசிகளுடன் இணைந்த விதத்தில் இது இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்ததென நம்புகின்றனர். பண்டைய நீர்பாசனக் கட்டமைப்புகளை தேதி இடுவ்தில் உள்ள சிரமம் பிரச்சனையை மேலும் சிக்கலாக்குகின்றது.

எவ்வாறிருப்பினும் இன்று வரையில் எமக்கு ஒரு விடயம் மிகத்தெளிவாக தெரிகிறது. நாட்டில் உள்ள பண்டைய நீர்ப்பாசன அமைப்புகளின் சிதிலங்கள் விவசாயத்திற்கான நீரைப் பயன்படுத்தி-கட்டுப்படுத்தி வந்த மக்கள் தொகுதியினர் குறித்த பரந்த சான்றினை வழங்குகின்றன. இந்த நடைமுறை கைத்தொழில் யுகத்திற்கும் அப்பாற்பட்ட உலகில் ஓர் அபார சாதனை என்று குறிப்பிட வேண்டும். ஆர்.எல் புரோகியர் 1934 இல் இலங்கையின் பண்டைய நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் வெளியிடப்பட்டு 63 ஆண்டுகள் கழிந்துவிட்ட பின்னரும்கூட நாட்டின் பண்டைய நீர்ப்பாசன அமைப்புக்கள் குறித்த இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துமடங்கிய ஒரு மதிப்பீடாக அது இன்னமும் இருந்து வருகின்றது. குறிப்பாக பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் மிக முக்கியமாக பிற்காலத்தில் சேதப்படுத்தப்பட்ட அல்லது முற்றிலும் அழிந்துபோன நீர்பாசன அமைப்புகளை இந்நூல் எடுத்துக்காட்டியது. எனினும் ஓர் ஆராய்ச்சி வழிமுறை என்ற வகையில் புரோகியரின் தரவுகளில் பல குறைபாடுகளும் புள்ளிவிவர ரீதியான பொருத்தமின்மைகளும் காணப்படுகின்றன. முற்கால நூலாசிரியர்களில் இருந்து இரண்டாம் நிலையிலான அறிவினை தொகுப்பதனாலும் அவர்கள் விட்ட தவறுகளை அறியாமலேயே விடுவதனாலுமே இந்நிலை பெரும்பாலும் ஏற்படுகின்றது. பிரதான நீர்ப்பாசன வலைப்பின்னல் அமைப்பின் முக்கியமான கூறுகள் நாட்டின் உலர்வலய மாவட்டங்களில் இன்னமும் ஆங்காங்கே சிதறுண்டு காணப்படுகின்றன. பல பாரிய குளங்களும் சில சிறுகுளங்களும் மிகப் பெரிய கால்வாய்களும் புனருத்தாரணம் செய்யப்பட்டிருப்பதுடன், இப்பிரதேசங்கள் முழுவதிலும் அவை மீண்டும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. பாரிய குளங்கள் மற்றும் கால்வாய்கள் என்பவற்றின் மிகப்பெரிய மண்ணினாலான கட்டுக்கள் நன்கு தெளிவாகப் புலப்படும் வரலாற்றின் எச்ச சொச்சங்களாக உள்ளன. ஒரு குளத்துடன் இணைந்த நீர்பாசனத்துடன் சம்மந்தப்பட்ட கூறுகளில் முதலில் வருவது கரை அல்லது அணையாகும். நீர் செல்லும் மதகுகள் இரண்டாவதாக வருகின்றன. கல்லணை அல்லது அணையுடன் இணைந்த இயற்கையான பாறை அமைப்பு மூன்றாவது இடத்தைப் பெறுகின்றது. அடுத்து நீரோடும் மதகுகளில் இருந்து கால்வாய்கள் பிரிந்து செல்கின்றன. புராதன இலங்கையின் மூன்று வகைளைக் சேர்ந்த குள மதகுகள் இருந்து வந்துள்ளன என்பதனை இலக்கியச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. இவை கொட்டுவ சொரவ்வ ராஜ்மொஹொல் சொரவவ மற்றும் கெட்ட சொராவ்வ என்பனவாகும். இறுதியாகக்

குறிப்பிடப்பட்ட கெட்ட சொரவ்வ வகையிலான மதகுகள் நாட்டின் ஒருசில வகையான சிறு குளங்கள் இன்னமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது ஒரு காலனித்துவ பிரிட்டிஷ் வடிவமைப்பு என நம்பப்பட்ட போதிலும் காலனித்துவ காலத்தின் நீர்பாசனத் தினைக்களம் புராதன மண்ணினாலான கெட்ட சொரவ்வ மதகினை கொங்கிரீட்டினால் பாரிய அளவில் உருவாக்கி வந்தன என்பதற்கான இலக்கிய மற்றும் பௌதீக சான்றகள் உள்ளன. ராஜ் மொஹல் சொரவ்வ என்ற 2ஆவது வகையைச் சேர்ந்த மதகு இந்திய உதாரணங்களில் அறியப் பட்டுள்ளது. அவை இலங்கையில் இருந்ததற்கான தொல்லியல் சான்றுகள் இன்னும் கிடைக்கவில்லை. குளத்து நீருக்குள் இந்த வகை மதகின் அமைவிடம் அதன் குறைந்த ஆயுளுக்குப் பங்களிப்புச் செய்திருக்கமுடியும். பலகை போன்ற அழியக்கூடிய பொருள்களைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு குழல் அச்சுத் தண்டுகூட தொல்லியல் சான்றுகள் காணப்படாமைக்குப் பங்களிப்புச் செய்திருக்கக் கூடும். முதலில் குறிப்பிடப்பட்ட பிசோக் கொட்டுவ என்று அழைக்கப்படும் மதகு புனருத்தாரணம் செய்யப்படாத பாரிய புராதனக் குளங்களிலும் சிலசந்தர்பங்களில் சிறு குளங்கரும் பல்வேறு கட்டங்களிலும் பாதுகாக்கப்பட்டு வந்திருப்பதனைக் காணமுடிகிறது. இது இதன் நீடிக்கும் ஆற்றலை எடுத்துக்காட்டுகின்றது. பிசோகொட்டுவ மதகுகள் புராதான இலங்கையின் நீரியல் பொறியியலாளர்களின் ஈடுணையற்ற சாதனைகளாக இருந்து வருகின்றன எனக்கூறமுடியும். இந்த பிசோகொட்டுவ அமைப்பு இலங்கையின் ஒரு கலன்டுபிடிப்பு என்பதற்கு இப்போது சான்றுகள் உள்ளன. இது பாரிய நீர்த்தேக்கங்களில் நீரை கட்டுப்படுத்தி உரியநேரத்தில் வெளியிடும் நவீன அலைதாங்கி இயக்கி ஒன்றைப் போல செயற்பட்டு வருகின்றது. அதே வேளையில் நீர் திடீரென பெரியளவில் பொங்கி எழுவனையும் இது தடுக்கின்றது. இத்தகைய மதகு அமைப்பு சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னரேயே எமது நாட்டில் உபயோகிக்கப்பட்டு வந்துள்ளன என சான்றுகளில் இருந்து அவதானிக்க முடியும். இத்தகைய ஒரு நீர்ப்பாசன அலகு ஐரொப்பியாவிலோ அல்லது வட அமெரிக்காவிலோ 18 ஆம் நூற்றாண்டு வரையில் உயோகிக்கப்பட்டு வரப்படவில்லை.

மறுபுறத்தில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள சிறிய கால்வாய்கள் பெருமளவுக்கு வெளியே புலப்படுவதில்லை. பாரிய கால்வாய்கள் அல்லது யோதஎல போன்ற கால்வாய்களே புலப்படக்கூடியவையாகும். இக்கால்வாய்களில் பெரும்பாலானவை இப்போது புனருத்தாரணம் செய்யப்பட்டு மீண்டும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. மத்திய மாகாணத்தின் கிழக்கு முனையில் உள்ள மினிப்பே கால்வாய் மற்றும் கலாவெவவுக்கும் அநுராதபுரத்திற்கும் இடையிலான ஜயகங்கை ஆகிய கால்வாய்கள் இதற்கான மிகச்சிறந்த உதாரணங் களாகும். புராதனக் கால்வாய்கள் பல வாய்க்கால்களைக் கொண்டுள்ளன. அவை ஒற்றை அல்லது இரட்டைக் கரையைக் கொண்டிருப்பதுடன் ஒரு நதிக்குக் குறுக்கே அமைக்கப்பட்ட அணைக்கட்டிலிருந்து ஆரம்பிக்கின்றன அல்லது ஒரு குளத்தில் இருந்து இன்னொரு குளத்திற்கு செல்கின்றன. இக்கால்வாய்கள் குளக்களுக்கு நீரை நிரப்புச்செய்யும் பணியை நிறைவுசெய்து வந்தன. அத்துடன வயல்களுக்கு நீரையும் வழங்கின. பெரிய கால்வாய்கள் சரக்குப்

போக்குவரத்துக்கும் பயணிகள் போக்குவரத்திற்கும் வசதிகளை வழங்கின. அவை வடிநிலங்களுக்கிடையிலும் நீரை விநியோகம் செய்தன. கால்வாய்கள் எங்குபோய் முடிந்தன என்பனவற்றை ஆராய்வது புராதன நீர்ப்பாசன வலைப் பின்னல் அமைப்பின் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட இயல்பினை புரிந்து கொள்வதற்கான திறவுகோலாக உள்ளது. ஒரு சில புராதனக் கால்வாய்கள் இப்பொழுது இயற்கை நீர் வழிகளாக மாறியுள்ளன வேறுசில மணல் காரண மாகவும் வண்டல் படிவு காரணமாகவும் அழிந்து போயுள்ளன. எனவே புராதனக் கால்வாய்கள் குறித்து ஆராய்வதற்கு மிகக்கடினமான நீண்ட நேரம் எடுக்கும் வெளிக்கள ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அமுனை என்று அழைக்கப்படும் அணைக்கட்டுகள் நிரந்தரமான அல்லது பருவகால நீர் வழிகளுக்குக் குறுக்கே அமைக்கப்படும் அணைகளாகும். பொலநறுவைக் காலத்தின்போது நாட்டின் பெரிய நதிகளுக்கு குறுக்கேயும் கூட அணைகள் அமைக்கப்பட்டன. பாரிய கருங்கற்கள் இக்கட்டுமான வேலை களில் பயன்படுத்தப்பட்டன. அணைக்கட்டுகளில் கரையோரப்பகுதிகளில் செங்கற் களும் பயன்படுத்தப்பட்டன. பிற்கால அணைக்கட்டுகளில் நீரரிப்பைத் தடுக்கக் கூடிய சுண்ணக்கற்களும் உபயோகிக்கப்பட்டன. ஓர் அணைக்கட்டின் வேலை ஒரு நதியில் இருந்து அல்லது நீரோடையில் இருந்து மனிதனால் உருவாக்கப் பட்ட கால்வாய்க்கூடாக நீரை எடுத்துச்செல்வதாகும். அணைக்கட்டு தனக்குப் பின்னால் உள்ள ஆற்றுக்குப் பக்க பலமாக இருந்து வருவதுடன் ஆற்றின் மட்டத்தையும் அது உயர்த்துகின்றது. அதன் காரணமாக ஆற்றின் இயல்பான நீரோட்ட மட்டம் குறைவாக இருந்து வரும் நிலையில்கூட செயற்கையாக உயர்த்தப்பட்டிருக்கும் நீர்மட்டம் காரணமாக கால்வாய்க்கு நீரைசெலுத்தமுடியும். ஓடும் நீரின் அரிப்புச்சக்தி காரணமாக பெரும்தொகையான புராதன அணைக் கட்டுகள் முற்றுமுழுதாக அல்லது ஓரளவுக்கு நீரினால் அடித்துச் செல்லப் பட்டுள்ளன. நன்கு பாதுகாக்கப்பட்டிருந்த ஓரிரு உதாரணங்களும் கூட கடந்த நூறு வருட காலத்தின் போது நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பொருத்தமான ஆய்வுகளோ அல்லது பதிவுகளோ மேற்கொள்ளப்படாமல் வெறுமனே அழிக்கப் பட்டுள்ளமை ஒரு கவலை தரும் விடயமாகும். இப்பொழுது அவற்றின் அமைவிடங்களில் நவீன கொங்கிரீட் அணைக்கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் பழைய அணைக்கட்டுக்கள் அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால் அதே புராதன அணைக்கட்டுகள் குறித்து போதிய அளவிலான பௌதீகச் சான்றுகள் நாடெங்கிலும் ஆங்காங்கே சிதறுண்டு காணப்படுகின்றன. இவை இலங்கையின் புராதன நீரியல் தொழில்நுட்பத்தின் வல்லமையை எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. அநுராதபுரத்தில் மல்வத்து ஓயா ஆற்றுக்கு குறுக்கே அமைக்கப்பட்ட கல்கடவெல அணைக்கட்டு மற்றும் வாரியப்பொலவில் தெதுறுஓயாவுக்கு குறுக்கே அமைக்கப்பட்ட இந்திபெதி எல அணைக்கட்டு என்பன இரு மிகச் சிறந்த உதாரணங்களாகும்.

நாட்டின் புராதன நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை ஆய்வு செய்யும் பொழுது அந்த அமைப்புக்களை நிறுவிய கட்டடக்கலை வல்லுனர்கள் மழைவீழ்ச்சிப்

போக்குகள். நில அமைப்பு மண்வளம் மற்றும் கட்டுமானப் பொருட்கள் என்பன குறித்து மிகச்சிறந்த அறிவைப் பெற்றிருந்தார்கள் என்பதனைக் காணமுடிகிறது. அனைத்துக்கும் மேலாக நீரியல் தொழிநுட்பம் குறித்த மாமேதைகளாக அவர்கள் இருந்து வந்துள்ளனர் என்பதனையும் அறியமுடிகிறது. இன்று தொழில்நுட்பம் பாரிய முன்னேற்றங்களை கண்டிருக்கும் அதிநவீன கம்பியூட்டர் யுகத்தில் வாழ்ந்து வருகின்றோம். இந்தப் பின்ணணியில் நாம் புராதன இலங்கையரின் சாதனைகளை குறைவாக மதிப்பிடக்கூடும். 1000 ஆண்டுகளுக்கு முன்னரேயே விஞ்ஞானம் மற்றும் பொறியியல் போன்ற வார்த்தைகள் உருவாக்கப்பட்டன என்பதனைக்காட்டும் சான்றுகள் உள்ளன. இலங்கையின் நீர்ப்பாசனத் துறை குறித்த ஒரு அறிவுத் தொகுதியினை உள்ளடக்கிய பல்வேறுபட்ட நூட்பங்களில் முறையான பயிற்சியை பெற்றிருக்கக்கூடிய பொறியியலாளர்களை அக்காலத்திலேயே நாடு கொண்டிருந்தது என்பது வியப்பூட்டும் ஒரு விடயமாகும்.

அதாவது கைத்தொழில் யுகத்துக்குப் பிற்பட்ட இன்றைய நவீன யுகத்தில் வாழும் எமக்கு பரிச்சியமாகியுள்ள விஞ்ஞானத் துறைகளை புரிந்துகொள்வதற்கு அவசியமான அறிவு நுட்பங்களை அவர்கள் அக்காலத்திலேயே பெற்றிருந்தனர். புராதன அறிவின் இழப்பும் புராதனபொருட்களின் இழப்பும் பண்டைய நீர்பாசனக் கட்டமைப்புக்கள் சில எவ்வாறு செயற்பட்டு வந்தன என்பதனை நாம் சரியாகப் புரிந்துகொள்வதற்கு தடையாக இருந்த வருகின்றது. கால்வாய் அமைப்புக்கள், பிசோகொட்டுவ மதகுகள் வைக்கப்பட்டுள்ள வாயில்கள், அணைக்கட்டுகளின் வாயில்கள் அனைத்துமே அக்கால மக்களின் பேராற்றல்களுக்கான அழியாச் சான்றுகளாக உள்ளன. ஆனால் அக்காலத்தில் உபயோகிக்கப்பட்ட பொருட்களின் அழியத்தக்க இயல்பு காரணமாக இப்பொழுது அப்பொறிமுறைகள் மட்டுமே எஞ்சியுள்ளன. புராதன நீர்பாசனக் கட்டமைப்புக்கள் பெரும்பாலனவற்றில் சரியான தேதிகள் குறிப்பிடப்படாமையால் ஒரு பரிணாம வளர்ச்சி ஒழுங்கில் அவற்றை வரிசைப்படுத்த முடியாதுள்ளது.

நீர்ப்பாசன விவசாயத்தின் வளர்ச்சி குறிப்பாக தானியக் களஞ்சியங்களின் உருவாக்கம் என்பன நிலத்தின் தாங்குதிறனை அதிகரிக்கக் கூடியாதாக இருந்து வந்துள்ளன எனக் கருதலாம். இது மறுபுறத்தில் ஆரம்பகால நகரமயமாக்கங்களுக்கு ஒரு தூண்டுகோலாக இருந்து வந்துள்ளதுடன் உலகளாவிய ஒரு போக்காகவும் உள்ளது. இலங்கையிலும் கூட நீர்ப்பாசனத்தின் வளர்ச்சியை நகரமயமாயக்கலின் எழுச்சியுடன் இணைப்பதற்கு ஆதாரம் உள்ளது. அநுராதபுரம் மற்றும் மஹம போன்ற ஆரம்ப கால மையங்கள் இதற்கான உதாரணங்களாகும். கி.பி மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 3ம் நூற்றாண்டு வரையிலான பிராமிக் கல்வெட்டுக்கள் ஆரம்ப கால நகரமயமாக்கல் குறித்து மட்டுமின்றி அக்கால சமூக அரசியல் குறித்தும் பௌத்தமத நடவடிக்கைகளில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் குறித்தும் எடுத்து விளக்குவனவாக உள்ளன. ஆரம்பகால பிராமிக் கல்வெட்டுகள் எளிமையாக உருவாக்கப்பட்ட பாறை ஒதுக்கிடங்களையும் அவற்றுக்கு நன்கொடை வழங்கியவாகளையும் பற்றி பிரதானமாகக் குறிப்பிடுகின்றன. பிற்கால பிராமிக் கல்வெட்டுக்கள் குளங்கள்

வயல்வெளிகள் என்பன நன்கொடையாக வழங்கப்பட்டமை குறித்தும் பௌத்த பிக்குகளுக்கான வருமானம் குறித்தும் பெருமளவுக்கு நன்கொடையில் இவ்விதம் ஏற்பட்டு வந்த அதிகரிப்பினை தொடக்க வரலாற்றுக் காலத்தில் மதகுருமாரிடையே பின்பற்றப்பட்ட பௌத்த மத நடைமுறைகளில் படிப்படியாக மாற்றம் ஏற்பட்டு வருகின்றது என்பதனை குறிப்பதாகக் கொள்ளலாம். பௌத்த மதத்தின் தூதுவரான அரகத் மாந்தர் துறவு நிலையையே பெருமளவுக்கு வலியுறுத்தினர். அதனையடுத்து பெருமளவுக்கு உலோகாயுதமான பௌத்த நடைமுறையொன்று தோன்றியது. இலங்கையில் பௌத்தமதம் பரவிய முதல் 150 வருடங்களில் மிகிந்தலை மற்றும் வெஜ்ஜகிரிய போன்ற காட்டுப் பிரதேசங்களில் அமைந்திருந்த துறவியர் மடங்களில் வாழ்ந்துவந்த விபஸ்னதூர பிக்குகளே ஆதிக்கம் பெற்றிருந்தனர் என வாதிடமுடியும். நீர்ப்பாசான விவசாயத்தின் படிப்படியான வளர்ச்சி, மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட செழிப்புநிலை என்பவற்றிலிருந்து மதகுருமாரே முக்கிய அனுகூலங்களைப் பெற்றுக்கொண்டார்கள் என்பதனைக் காணமுடிகின்றது.

பௌத்த மத நடைமுறையில் இவ்விதம் ஏற்பட்டு வந்த மாற்றம் காரணமாக காட்டுப் பகுதிகளில் அமைந்திருந்த துறவியர் மடங்கள் பாரிய அளவில் கைவிடப்பட்டதுடன் அநுராதபுரத்தின் மஹாவிஹார போன்ற பாரிய நகர மத வழிபாட்டுத் தலங்களின் எழுச்சி இடம்பெற்றது. அதேபோல சிறு கிராம கோயில்களும் பல்கிப் பெருகின. இந்தக் கிராமக் கோயில்கள் குடிமக்களுடன் இடையறாத தொடர்புகளை பராமரித்து வந்தன தியானத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வழக்கத்தில் இருந்து சடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வழக்கத்தை நோக்கி ஒரு மாற்றம் இவ்விதம் இடம்பெறலாயிற்று.

ஆரம்பகாலம் தொட்டே நீர் ஒரு பண்டமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களின் வடிவில் அது கொள்வனவு செய்யப்பட்டும், விற்பனை செய்யப்பட்டும், அன்பளிப்பாக வழங்கப்பட்டும் வந்துள்ளது. இலங்கையின் ஆரம்பகால சமூகத்தில் நீர்ப்பாசன அமைப்புகளை தமது கட்டுப்பட்டின் கீழ் வைத்திருந்தவர்களே உண்மையான அதிகாரத்தை வைத்திருந்தவர்களாகக் காணப்பட்டனர். அதிகரித்த அளவில் பல்வேறு அடுக்குகளைக் கொண்டதாக நீர்ப்பாசன அமைப்பு மாற்றமடைந்து வந்த சமூகத்தில் பரஸ்பர தொடர்புகள் தவிர்க்க முடியாதவையாகும். நீர்ப்பாசனக் கட்டமைப்பொன்றின் வளர்ச்சி, அதன் செயற்பாடுமுறை என்பனவற்றினால் இத்தொடர்புகள் மேலும் பலப்படுத்தப்பட்டன. புராதன நீர்பாசனக் கட்டமைப்பின் உயர்மட்டவளர்ச்சியில் பரஸ்பர பிணைப்பு நிலை என்பவற்றை நாம் கவனத்தில் எடுக்கும்பொழுது அக்காலத்தில் செயற்பட்டுவந்த நீர்ப்பாசன அமைப்புகளில் 75 சதவீதத்தையேனும் பராமரிப்பதற்கும் இயக்குவதற்கும் பயிற்றப்பட்ட தொழில்சார் வல்லுனர்களைக் கொண்ட ஒரு நிர்வாக அமைப்பும் ஒரு மத்திய கட்டுப்பாட்டமைப்பும் தேவையாக இருந்திருக்கும் என்று நாம் அனுமானிக்கலாம். நீர்ப்பாசன விவசாயம் என்ற ஆதாரத்தின் மீதே பண்பாடு எமது நாட்டில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத்தில் ஏற்பட்ட வெற்றி கலாச்சார துறையிலும் கட்டடக்கலையிலும் தொழிநுட்பமேன்மையில் ஒரு மறுமலர்ச்சி தோன்றுவதற்கு வழிகோலியது எனலாம். எனவே இப்பின்னணியில் நீர்ப்பாசனத்தினை சமூக பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சிக்கான ஒரு சக்தியாக நாம் நோக்கமுடியும். புராதன நீர்ப்பாசனம் மற்றும் அதன் சமூகவியல் தாக்கம் என்பனவற்றை முறையாக ஆராயாது இந்நாட்டு மக்களின் பண்பாடு குறித்தோ அல்லது சமூக வரலாறு குறித்தோ சரியான புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வது அனேகமாக சாத்தியமில்லை. அதே நேரத்தில் காலத்தால் அழியாதிருந்த பல நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களின் திடீர் அழிவுக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த நடவடிக்கைக்கு அடிப்படையாக இருந்து வந்தது என்பது மிகவும் துக்ககரமான ஒரு விடயமாகும்.

அத்தியாயம் : பத்து

நிலப்பிரபுத்துவ சமூகமும் அரசின் மேனிலை ஆதிக்கமும்

(இந்துமதம் மற்றும் மகாயான பௌத்தபீடங்களின் பண்பாட்டுச் செல்வாக்கு)

சோழப் பேரரசின் பண்பாடு

பொலன்னறுவையைச் சோழர் இராசதானியாக்கியதிலிருந்து, இரண்டரை நூற்றாண்டுகள் வரையில் அந்நகரே ஈழத்தின் இராசதானியாக விளங்கலாயிற்று. அனுராதபுரத்தைக் காட்டிலும் குறுகிய ஒரு காலப்பகுதியான பொலன்னறுவைக் காலத்தில் இயற்றப்பட்ட சாதனைகள் எமது வியப்பைத் தூண்டும் வகையில் உள்ளன. இங்கு இன்றும் நன்னிலையிலுள்ள அக்காலக் கட்டிடச் சிதைவுகளும் பிற இடிபாடுகளும் அக்காலத்தின் பெருமையையும் புகழையும் பறைசாற்றி நிற்கின்றன. அனுராதபுரகாலத்தில் இலங்கைபெற்ற வளர்ச்சியானது, சோழராட்சியென்ற இடையீட்டின் பின், பொலன்னறுவைக் காலத்தில் தொடர்ந்து நிலவியதை நாம் காண்கின்றோம். பொலன்னறுவைக்கால மன்னர்களின் சாதனைகளை அறியுமுன், சோழராட்சிக்கால இலங்கையின் நிலைமைகளை அறிந்துகொள்வோம்.

இராஜராஜன், இராஜேந்திரன் ஆகிய சோழப் பேரரசர்களின் காலத்தில் அவர்களின் பேரரசு எய்திய சிறப்பு விரைவில் மங்காதவாறு, அவர்களைத் தொடர்ந்து ஆண்ட சோழர்கள் பார்த்துக்கொண்டனர். 11ம் நூற்றாண்டு முழுவதும், அடுத்த நூற்றாண்டுத் தொடக்கத்திலும் பேரரசின் எல்லைகள் பெரும் மாறுதல்களை எய்தவில்லை. 1ம் இராஜேந்திரனுக்குப் பின், அவனது மூன்று புதல்வர்கள் (இராஜாதிராஜன, 2ம் இராஜேந்திரன், வீரராஜேந்திரன்) ஒரு கால் நூற்றாண்டு காலம் தொடர்ச்சியாக ஆட்சி நடத்தலாயினர். மேலைச் சாளுக்கிய வேந்தனொருவனுடன் (1ம் சோமேஸ்வரன்) அடிக்கடி இவர்கள் நடத்திய போர்களில் இவர்களுடைய போராற்றல் புலப்பட்டது. ஈழத்தில் நடைபெற்ற விடுதலை முயற்சிகளும் இவர்களால் பயனற்றவையாக்கப்பட்டன. 1070ல் பட்டமெய்திய அதிராஜேந்திரன் ஒரு சில திங்களுள் இறக்க நேர்ந்தமையால், சோழர் அரசியலில் ஒரு முக்கிய விருத்தியேற்பட்டது. அதிராஜேந்திரன் நேர் உரிமையாளனை விட்டுச்செல்லாததால், சோழ அரசைப் பெறுதற்குப் பலர் கங்கணங்கட்டி நின்றனர். குறிப்பாக, மேலைச் சாளுக்கிய இளவரசனான விக்கிரமாதித்தன் (6ம விக்கிரமாதித்தன்) தனது உறவினன் ஒருவனை அரசனாக்குவதில் முனைந்தான்.

இதற்கு முன்னதாக, 1ம் இராஜேந்திரச் சோழனது பேரனும், கீழைச் சாளுக்கிய (வேங்கி) மரபைச் சேர்ந்தவனுமான 2ம் இராஜேந்திரன் சோழர் தலைநகர்க்கு விரைந்து தனது உரிமையை நிலைநாட்டிக் கொண்டான். இவனே குலோத்துங்கன் என்ற பட்டப்பெயருடன், சோழப் பேரரசனாக நீண்டகாலம் (1070 - 1122) ஆட்சி புரிந்தவன். வேங்கியைச் சேர்ந்த ஒருவன் ஆட்சியைப் பெற்றதால், கீழைச் சாளுக்கிய அரசும் சோழப் பேரரசும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவரப்பட்டன. ஆட்சித் தொடக்கத்தில் இவன் சில முக்கிய போர்களில் ஈடுபடவேண்டி நேர்ந்தது. குறிப்பாக, விக்கிரமாதித்தனுடன் இவன் தொடுத்த போரில் அவனைப் புறங்கண்டு பின்வாங்க வைத்ததுமல்லாது, சில முக்கிய வெற்றிகளையும் குலோத்துங்கன் ஈட்டிக் கொண்டான். இவனது ஆட்சியின் இறுதியில் இடம்பெற்ற இரண்டாவது கலிங்கப் போரே 'கலிங்கத்துப்பரணி'யில் பாடப்பெற்றுள்ளது. தனது ஆட்சித் தொடக்கத்தில் ஈழத்தையும், முடிவில் வேங்கி நாட்டையும் இவன் இழந்தபோதும், சோழப் பேரரசின் சிறப்பு அதிகம் பாதிக்கப்படவில்லை. பொதுவாக இவனது நீண்ட ஆட்சிக்காலம் அமைதியுடையதாக இருந்தமையால், நாடு பலதுறைகளிலும் செழிப்புப்பெற்று விளங்கியது. இவன் காலத்திலும், இவனைத் தொடர்ந்து ஆட்சி செய்த விக்கிரமசோழன், 2ம் குலோத்துங்கன், 2ம் இராஜராஜன் ஆகியோரின் ஆட்சிக்காலங்களிலும் தமிழிலக்கியம் பெருவளர்ச்சி எய்திற்று.

2ம் இராஜராஜன் (1146 - 1163) காலத்திலிருந்தே, சோழப் பேரரசின் எல்லைப்புற நாடுகள் தமது சுயாதீனத்தை நிலைநாட்ட முற்பட்டு வந்தன. அக்கட்டத்தில் மத்திய அரசாங்கமும் பலவீன முற்றிருந்தது. அம்மன்னனுக்கு மக்களின்மையால், விக்கிரமசோழனது பெண்வழிப் பேரன் ஒருவன் இராஜாதிராஜன் என்ற பட்டப் பெயருடன் அரசைப் பெற்றான். இவனைத் தொடர்ந்து ஆட்சியைப் பெற்ற 3ம் குலோத்துங்கன் (1178 - 1218) **'இறுதிச் சோழப் பெருமன்னன'** என வருணிக்கப்பட்டுள்ளான். ஒருசில போர்களை இவன் மேற்கொண்டு தனது இராச்சியம் சிதைவு பெறாது பேணினானெனினும், இவனுடைய ஆட்சிக்காலம் பெரும்பாலும் அமைதிபெற்று விளங்கியது. இவனது காலக் கல்வெட்டுக்கள் காணப்பட்ட இடங்களைக் கொண்டு, **தெற்கே குமரிமுனையிலிருந்து வடக்கே வேங்கிநாடுவரை** சோழ அரசு இவன் காலத்தில் பரந்திருந்ததாகக் கூறுவர். ஆயினும், பேரரசின் மறைவு வெகு தொலைவிலிருக்கவில்லை. 13ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், சோழ அரசைச் சுற்றிலும் ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தன. குறிப்பாக, வடமேற்கே **ஹொய்சாளரும** (போசளர்), தெற்கே **பாண்டியரும** தத்தம் பேரரசுகளை நிறுவுவதில் முனைந்து நின்றனர். வடகிழக்கிலிருந்த **தெலுங்குச் சோழர்களும**, மற்றைய சிற்றரசர்களும் சுயாதீன ஆட்சியை ஏற்படுத்துவதில் ஈடுபட்டனர். இவ்வித சூழ்நிலையில், 3ம் இராஜராஜன் 1218ல் பட்டமெய்தினான். ஆற்றலிலும், வீரத்திலும் குறைந்தவனான இவனால் சோழ அரசைப் பாதுகாப்பது கடினமாயிற்று. **மாறவர்மன் சுந்தர பாண்டியன்** என்பவன் தனது இராச்சியத்தின் வலியைப் பெருக்கி, சோழ அரசை அதன் திறை நாடாக்கக் கருதியிருந்தான். 3ம் இராஜராஜன் அரசனான பின், சோழ அரசுமீது இரு முறை படையெழுச்சிகளை

மேற்கொண்டான். இருமுறையும் இராஜராஜன் பாண்டியப்படையிடம் தோல்விகண்டு அவமானமுற்றான். பாண்டிய அரசின் வலியோங்குவதை விரும்பாத ஹொய்சாள மன்னனின் தலையீட்டால், இராஜராஜன் மீண்டும் அரசைப் பெறமுடிந்தது. 3ம் இராஜராஜனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அவன் மகன் 3ம் இராஜேந்திரன், தந்தையைப் போலல்லாது, திறமையும் உறுதியும் உடையவனாக இருந்தான். தந்தையின் காலத்தில் நேர்ந்த அவமானத்தைப் போக்க எண்ணி, 2ம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் அரசைப் பெற்றபோது (1238/9) பாண்டிநாடு மீது ஒரு படையெழுச்சியை மேற்கொண்டான். இதில் இவன் வெற்றி பெற்றிருப்பினும், ஹொய்சாளரின் மேலாணைக்குட்பட்டே இவன் ஆட்சிசெய்ய வேண்டியிருந்தது. 1251ல் 1ம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் அரசைப் பெற்றபின், பாண்டியர் பெருவெற்றிகள் எய்தி, தென்னகத்தில் தனிச் சிறப்புடன் விளங்கலாயினர். 1257ல் சோழநாட்டின் மீதும் ஒரு படையெழுச்சியை மேற்கொண்ட அப்பெருமன்னன், 3ம் இராஜேந்திர சோழனை அடிமைப்படுத்தி, அவனைத் திறை செலுத்தும்படி பணித்தான். 1279ல் இராஜேந்திரன் இறந்த பின், **சோழ அரசு பாண்டியப் பேரரசில் இணைந்த ஒரு பகுதியாயிற்று.**

ஆட்சிமுறை : சோழராட்சி முறையில், மன்னராட்சியே முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. மன்னர்களின் தனிப் பண்புகளும் திறமைகளும், அவர்களது அரசின் வளர்ச்சியையும், தேய்வையும் தீர்மானிப்பவையாகவிருந்தன. சோழப் பெருமன்னர்கள் சிலரின் திறமையால், அவர்கள் ஆட்சிசெய்த நிலப்பரப்பின் எல்லைகள் விரிவெய்தியதைப் போலவே, அவர்களின் மதிப்பும் பெருமையும் பன்மடங்கு உயர்ந்து விளங்கலாயின. மன்னர்க்குக் கிடைத்த வருவாயும் பெருகியிருந்தது. தமது மூத்த புதல்வர்க்கே சோழர்கள் அரசுரிமையை வழங்கும் மரபு இருந்து வந்தது. பெரும்பாலானோர், தம் வாழ்நாளிலேயே தம் புதல்வர்க்கு இளவரசுப் பட்டங்கட்டி, ஆட்சியில் அவர்களைப் பங்குபெற வைத்தனர். அக்கால வழக்கையொட்டி, சோழவேந்தர் தனியரசு நடத்தியபோதும், 'உடன் கூட்டத்ததிகாரிகள்' என்பாரின் ஆதரவினைப் பெற்றனரெனலாம். இம் மன்னர்கள் **இராசகேசரி வர்மன், பரகேசரி வர்மன்** என்ற பட்டங்களை மாறிமாறிச் சூடிவந்ததையும் அறிகின்றோம். இராஜேந்திரசோழன் காலம்வரை தலைநகராக விளங்கிய **தஞ்சாவூர்,** இன்றும் தன் பழம்பெருமையை நினைவுபடுத்தும் பல சின்னங்களைக்கொண்டு விளங்குகின்றது. இராஜேந்திரனும் அவனுக்குப் பின் வந்தோரும் **கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து** ஆட்சி செலுத்தினர். **முடிகொண்ட சோழபுரம்** என்ற **பழையாறை நகரும், காஞ்சிபுரம்** இரண்டாம் தலைநகர்களாகக் கைக்கொள்ளப்பட்டன.

சோழப் பேரரசு விரிவடைந்தபின், அது ஒன்பது மண்டலங்களாக (மாகாணங்களாக)ப் பிரிக்கப்பட்டு ஆளப்பட்டது. இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரையுடைய மாகாணமாக விளங்கியது. ஒவ்வொரு மண்டலமும் வளநாடுகளாகவும், வளநாடுகள் கூற்றங்கள் அல்லது நாடுகளாகவும் மேலும் பிரிக்கப்பட்டிருந்தன. வளநாடு என்பது பெரும்பாலும் இரண்டு ஆறுகளுக்கு

இடைப்பட்ட பெரும் பிரிவாக இருந்ததெனக் கருத இடமுண்டு. நாடுகள் அல்லது கூற்றங்கள், அவற்றின்கண் விளங்கிய பேரூர்களின் பெயர்களைத் தாங்கி இருந்தமையையும் அறிகின்றோம். (எ-டு : திருவாரூர்க் கூற்றம், வெண்ணையூர் நாடு முதலானவை) சோழராட்சி முறையின் மிகச்சிறந்த அம்சம், அவர்கள் காலத்தில் நிலவிய உள்ளூராட்சி முறையாகும். நாடு அல்லது கூற்றம் என்ற பெரும் பிரிவும், பல ஊர்களையும் சதுர்வேலி மங்கலங்களையும் கொண்டிருந்தது. ஊர்கள் தோறும் விளங்கிய ஊராட்சி மன்றங்கள், கிராம நிர்வாகத்தைத் திறம்பட ஆற்றி, மக்களின் அமைதியான நல்வாழ்வுக்கு அடிகோலி வந்தன. நீதி வழங்குதல், ஏரி, குளம் முதலானவற்றைப் பாதுகாத்தல் (ஏரி வாரியம்), சாலைகளை அமைத்தல், அற நிலையங்களை நடத்துதல், அரசனுக்குச் சேரவேண்டிய அரசிறைகளை வசூலித்துக் கொடுத்தல் முதலான பல கடமைகளை அவையாற்றி வந்தன. இவ்விதமாகக் கடமைகள் அதிகமாகி வந்ததால், கிராம நிருவாகத்தைத் திறம்படக் கவனித்தற்கு, கிராம சபைகளிற் சில உட்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. வாரியங்கள் என்ற உட்கழகங்கள் குறிப்பிட்ட சில கடமைகளைப் பொறுப்பேற்று நடத்தி வந்தன. இவை பற்றிய பல விபரங்களை நாம் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியலாம்.

பொருளியல், சமூக நிலைகள்:- சோழ வளநாடு, நிலவளம், நீர் வளமிக்க நாடாதலால், அங்கு பயிர்ச்செய்கை நன்னிலையில் இருந்தது என்பதில் வியப்பில்லை. அரசிறையாகச் செலுத்தப்பட்ட வரிகளில், புரவுவரியென்ற நிலவரி மிக முக்கியமானதாக இருந்தது. நில வருவாயில் (பெரும்பாலும் நெல்லில்) ஆறிலொரு பங்கைக் கடமையாகச் செலுத்தினர். இவ்வரியைச் ஊர்ச்சபையார் சேகரித்து அரசனிடம் சேர்ப்பிப்பர். இயற்கையமைப்புக்கேற்ற வகையில் ஆறுகள், ஏரிகள் வெட்டியும், அணைகள் கட்டியும் நீர்ப்பாசனத்துக்கு அரும்பணிகள் ஆற்றினர் சோழமன்னர்கள். ஏரிவாரிய உறுப்பினரே இந்த ஏரிகளைப் பாதுகாத்து, ஊர் மக்களுக்குப் பயன் கிடைக்குமாறு பார்த்தவர்கள். பயிர்ச்செய்கையேயன்றி, பல கைத்தொழில்களும் நன்னிலையில் இருந்தன. உள்நாட்டு பிறநாட்டு வணிகமும் நன்கு இயங்கியமைக்குச் சான்றுகள் உண்டு. உள்நாட்டு வணிகத்தில் ஈடுபட்டிருந்த வணிகர்கள் பொதி மாடுகளிலும், வண்டிகளிலும் தம் பொருட்களை அக்காலத்திருந்த நெடுவழிகளால் பல ஊர்களுக்கும் கொண்டு சென்று விற்று வந்தனர். ஈழம், சுவர்ணபூமி, ஸ்ரீ விஜய அரசு, யாவா, சீனா போன்ற பிறநாடுகளுடன் கடல் வாணிபத்தை நடத்திவந்தனர். இவ்வாணிபத்தில் ஈடுபட்டவர்களுள் **நாநாதேச திசையாயிரத்தைஞ்ஞூற்றுவர் (நானாதேசிகள்) மணிக்கிராமத்தார், வளஞ்சியா** முதலான குழுக்கள் இருந்தன. பிறநாட்டு வாணிகத்துக்குப் பயன்பட்ட காவிரிப்பட்டினம், மாமல்லபுரம், நாகபட்டினம் மற்றும் பல துறைகளில் சுங்கவரி அறவிடப்பட்டது. இதன் மூலம் சோழ அரசிறைக்கு நிறையப்பணம் கிடைத்தது. முதலாம் குலோத்துங்க சோழன் இச்சுங்கவரியை நீக்கினான் என்பதால், **'சுங்கந் தவிர்த்த சோழன்'** எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளான்.

சாதி அல்லது குல அடிப்படையிலேயே பெரும்பாலான தொழில்கள நடைபெற்று வந்தன. சாதிமுறை இறுக்கமுடையதாக இருப்பினும், சாதிகளிடையே

மோதல்கள் ஏற்படாது ஒற்றுமை நிலவியமை குறிப்பிடத்தக்கது. பிராமணர்கள் புறம்பான பகுதிகளில் அரசன் அல்லது ஊர்மக்கள் வழங்கிய நிலங்களில் வாழ்ந்து வந்தனர். அரசனால் நியமனம் பெற்ற அதிகாரிகள், உயர் குடியினராகவே இருப்பர். பெண்கள் பல சிறப்புக்களைப்பெற்று வாழ்ந்தபோதும், சமத்துவ அடிப்படையில் அவர்களின் நிலை அமையவில்லை. பெண்கள் உடன்கட்டை யேறும் வழக்கம் ஓரளவுக்கு இருந்தது. ஆண்களும், பெண்களும் தம்மை விற்று அடிமைகளாக வாழந்தமையும் நாம் அறிகின்றோம்.

பல்லவர் காலத்திலேயே மறுமலர்ச்சி பெற்று வளர்ச்சியுற்ற சைவ, வைணவ மதங்கள், சோழப் பெருமன்னர்களின் பேராதரவைப் பெற்று மேன்மையெய்தின. சமணமதம் ஓரளவுக்கு இன்னும் பின்பற்றப்பட்டபோதும், பௌத்தம் அருகியிருந்தது எனலாம். சைவ, வைணவ மதங்களைப் பின்பற்றியவர்க் கிடையேயும் பூசல்கள் இடையிடையே தோன்றின. மன்னர்கள் பெரும்பாலும் சைவத்தையே சார்ந்து நின்றாலும், வைணவக் கோயில்களையும் அவர்கள் ஆதரித்தனர் எனலாம். கோயிற் கட்டிடக்கலையும், சிற்பக்கலையும் சோழர் காலத்திலேயே அதியுன்னத நிலையை எய்தின. இராசராசேச்சரம் எனப்படும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் முதலான கோயில்கள் இன்னும் சோழர்காலக் கட்டிடக்கலைச் சிறப்புக்களை எடுத்துக்காட்டி மிளிர்வதைக் காணலாம். கோயில்களை நிறுவுவதில் மட்டும் மன்னர்கள் கருத்தைச் செலுத்தினாரல்லர். அவற்றைப் பேணுவதற்கும், அவை நன்கு இயங்குவதற்கும், வேதங்கள் தேவாரங்கள் ஓதுவதற்கும் ஏற்பாடுகள் செய்திருந்தனர். இக்கோயில்களில் செதுக்கப்பெற்று வைக்கப்பட்டிருந்த வெண்கலச் சிலைகளும், கட்டிடங்களின் உறுப்புக்களாக அமைந்த சிற்ப வடிவங்களும் சிற்பக்கலையின் உன்னதத்தையெய்தி நின்றன. தஞ்சாவூரில் கட்டப்பெற்றிருந்த பெருவுடையார் கோயிலிற் பணிபுரிதற்கென இசையிலும் பரத நாட்டியத்திலும் வல்ல மகளிர், கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் இராஜராஜனால் குடியேற்றப்பட்டனர். இவர்கள் தேவாரடியார் (தேவதாஸிகள்) எனவும், தளிச்சேரிப் பெண்டுகள் எனவும் அழைக்கப்பட்டனர். பரதமும் கருநாடக சங்கீதமும் அந்நாளில் பெரிதும் பயிலப்பட்டமையால் அவை நன்னிலையில் இருந்தன. கோயில்களை மையமாகக் கொண்டே இவையும், பிறகலைகளும் வளர்ச்சிபெற்றன.

வடமொழியும், தமிழிலக்கியமும்

சைவ, வைணவக் கோயில்கள் நன்னிலையிலிருந்தமையால், அவற்றையண்டி வாழ்ந்த பிராமணர்களும் செல்வாக்குடன் விளங்கினர். மன்னர்களும் தமிழை மட்டும்மன்றி, வடமொழியையும் ஆதரிப்பவர்களாகவே இருந்தனர். 1ம் பராந்தகன் காலத்தில் வாழ்ந்த வேங்கட மாதவர் என்பார் வேதவிளக்க நூல்களை (இருக்கர்த்ததீபிகா) இயற்றினார். விக்கிரமசோழனது குருவாக விளங்கியவர் வடமொழியில் தேர்ச்சிபெற்ற ஓர் ஆசாரியாராவர். எண்ணாயிரம், திருமுக்கூடல், திருவொற்றியூர் ஆகிய இடங்களில் வேதங்கள், வேதாந்தங்கள் என்பவற்றைக் கற்பிக்கும் நிலையங்கள் மன்னர்களின் ஆதரவில் இயங்கி வந்தன. வேதங்களிலும்

சாத்திரங்களிலும் வல்ல பிராமணர்கள் அம்பலங்களில் அல்லது கோயில் மண்டபங்களில் வடமொழியிலுள்ள மகாபாரதம் புராணங்கள் முதலியவற்றை ஓதி, அங்கு கூடியிருந்த மக்களுக்கு அவற்றுக்கு விளக்கம் செய்வர். இதற்கெனப் பல நிலங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுமிருந்தன. வடமொழிக்கிருந்த செல்வாக்கால், அக்காலத்தில் எழுந்த தமிழ் நூல்களும் வடமொழிச் செல்வாக்கினைக் கொண்டிருத்தலைக் காணலாம்.

தமிழிலக்கிய வரலாற்றில், சோழப் பெருமன்னர் காலத்தைப் **'பொற்காலம்'** எனவும், **'காவிய காலம்'** எனவும் இலக்கிய ஆராய்ச்சியாளர் குறிப்பர். வடமொழியிலுள்ள காவியங்களைப் பின்பற்றித் தமிழிலும் இக்காலத்தில் பெருந்தொகையான காவியங்கள் எழுந்தன. **பரணி, உலா, பிள்ளைத்தமிழ்** முதலான பல பிரபந்தங்கள் இக்காலத்திலேயே இலக்கியப் பரப்பில் மலர்ந்து தமிழை வளம்படுத்தின. **திருத்தக்க தேவர், ஜயங்கொண்டார், தோலாமொழித் தேவர், கம்பன், சேக்கிழார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, நம்பியாண்டார் நம்பி, உமாபதி சிவாச்சாரியார்** முதலான பெரும்புலவர்கள் சோழப் பெருமன்னர் காலத்தவர்கள் என்பதையறிந்தால், அக்காலத்தின் இலக்கியச் சிறப்பை உய்த்துணரலாம். சோழர்காலத் தமிழ் இலக்கியங்களிலும் வடமொழியின் செல்வாக்கை அதிகளவில் கொண்டிருத்தலைக் காணலாம். யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், நேமிநாதம், வெண்பாப் பாட்டியல், நன்னூல், புறப்பொருள் வெண்பாமாலை என்பன இக்காலத்தெழுந்த இலக்கண நூல்களாகும். பிங்கலம் என்ற நிகண்டும், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் போன்ற சைவசித்தாந்த நூல்களும் இக்காலத்தவையாகும். இவ்வாறு சோழப் பேரரசு நிலவிய காலத்தில், அப்பேரரசில் வாழ்ந்த தமிழ்க் குடிகள் பெருஞ்சிறப்பு எய்தியதோடு, சமயமும், கலைகளும் உன்னத வளர்ச்சியடைந்திருந்தன என்பது தெளிவாகும்.

இலங்கையிற் சோழராட்சியும் அதன் விளைவுகளும்

சோழப் பேரரசுக்கும் ஈழத்துக்கும் நெடுங்காலமாகத் தொடர்புகள் இருந்து வந்தபோதும், கி.பி. 993ல் 1ம் இராஜராஜன் இராஜரட்டையைக் கைப்பற்றிய பின்னரே, சோழராட்சி இலங்கையில் தொடங்கியது எனலாம். இப்படையெழுச்சியின் போது தீவின் தலைநகராகப் பெருமையுடன் இதுகாறும் விளங்கி வந்த அநுராதபுரம் அழிவுற்றது. இராஜராஜன் தனது காலத்திலேயே இலங்கையில் தான் கைப்பற்றிய பகுதியான இராஜரட்டையை சோழப் பேரரசின் ஒரு மண்டலமாக (மாகாணமாக)ச் சேர்த்துக்கொண்டான். இராஜராஜன் காலத்திலேயே பொலன்னறுவை தலைநகராக்கப்பட்டது. இராஜராஜனுக்குப் பின் அரசெய்திய அவனது வீரப்புதல்வனான இராஜேந்திரன், தாமதமின்றி இலங்கைமீது மற்றொரு படையெழுச்சியை மேற்கொண்டு, உருகுணையையும் அடிமைப்படுத்தி இலங்கை முழுவதும் சோழராட்சியில் அமரும்படி செய்தான். முழு இலங்கையைச் சோழர் கைப்பற்றிய பின்னரும், அவர்களுடைய ஆட்சி செயலளவில் இராஜரட்டையில் மட்டுமே நடைபெறலாயிற்று. சூளவம்சத்திலுள்ள (அத். 55 செய்.22)

இராஜரட்டையில் மட்டுமே சோழராட்சி மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடப் பட்டுள்ளது. இலங்கையில் சோழராட்சியானது கி.பி. 993ல் தொடங்கி கி.பி. 1070ல் முடிவுற்றதாகக் கொள்ளப்படுகின்றது. 1070ல் விஜயபாகு சோழராட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தான். அதிராஜேந்திர சோழனது கல்வெட்டுக்களே இலங்கையிற் கிடைத்துள்ள சோழர் கல்வெட்டுக்களில் மிகவும் பிந்தியவை என்பதால், 1070 உடன் சோழராட்சி முடிவுக்கு வந்தமை உறுதி பெறுகின்றது. சுமார் 77 ஆண்டுகள் சோழராட்சியில் இலங்கை இருந்ததால், எமது நாட்டின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்படலாயின.

நிருவாகம்

1ம் இராஜராஜன் காலத்திலிருந்து **'மும்முடிச்சோழ மண்டலம்'** என்ற பெயருடன், பேரரசுடன் இணைக்கப்பட்டிருந்த ஈழ மண்டலத்தின் நிருவாகப் பொறுப்பை, இலங்கை வந்த சோழப் பிரதிநிதி (ஆள்பதி இலங்கேஸ்வரன்) வகித்து வந்தான். சோழரது நிருவாக முறையை இலங்கையில் அப்படியே அவர்கள் புகுத்தினார்கள் எனக் கருதுவதற்கான சான்றுகளை S.பத்மநாதன் ஆய்வு வெளியீடுகளின் வாயிலாக நிறுவியுள்ளார். உயர்பதவிகளுக்குச் சோழ நாட்டவரை நியமித்ததுடன், உள்ளூராட்சியைப் பெரும்பாலும் இந்நாட்டவரிடமே விட்டனரெனத் தோன்றுகின்றது. இலங்கையில் அவர்கள் நிறுவிய நிருவாகமுறை பற்றிய விபரங்கள் இங்குள்ள கல்வெட்டுக்களால் தற்போது அறியக் கிடைத்துள்ளன. தமது மாகாணங்களுள் ஒன்றான இலங்கையை, அங்குள்ளது போலவே வள நாடுகளாகவும், நாடுகளாகவும் பிரித்துள்ளனரென்பது கல்வெட்டுக்களால் தெரிகின்றது. தஞ்சைப் பெருங்கோயிலுக்கு இலங்கையிலுள்ள ஐந்து கிராமங்களைச் சேர்ந்த நன்செய் நிலங்கள் வழங்கப்பட்டதைக் கூறுவதுடன், அந்தக் கிராமங்கள் தமது வருவாயை (நெல், காசு, இலுப்பைப்பால் ஆகியவற்றை) அனுப்பிவைக்கக் கடமைப்பட்டிருத்தலையும், அக்கோவிலில் உள்ள ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இதில் அந்தக் கிராமங்கள் மும்முடிச் சோழ மண்டலத்திலுள்ள **இராஜராஜ வளநாடு, விக்கிரம சோழ வளநாடு** என்பவற்றில் இருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. வரிகளை அறவிடுவதிலும், அமைதியை நிலைநாட்டுவதிலும், உருகுணையில் உருவான விடுதலை இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் சோழ அதிகாரிகள் முக்கிய கவனம் செலுத்தியிருப்பர். பொருளியல் விருத்திக்கு அவர்கள் ஏதும் நடவடிக்கை மேற்கொண்டிருப்பினும், பின்னர் ஏற்பட்ட போர்களால் அது வீணடிக்கப்பட்டிருக்கும். சமய வளர்ச்சியில், குறிப்பாக சைவத்தின் வளர்ச்சியில் அவர்கள் அதிக அக்கறை கொண்டிருந்தனர் என்பது அவர்களுடைய ஆட்சியின்போது நிறுவப்பட்ட ஏராளமான கோவில்களால் தெரிய வருகின்றது.

தலைநகர்

சோழர் படையெழுச்சியின்போது பாழெய்திவிட்ட அனுராதபுரத்தைப் புதுப்பிக்க எண்ணாது, **புலஸ்தி நகரம** என்ற **பொலன்னறுவையை** அவர்கள்

இராசதானியாக்கினர். இதற்கு அவர்கள் இராஜராஜனது மற்றொரு பட்டப் பெயரைக்கொண்டு **ஜனநாத மங்களம** எனப் பெயர்சூட்டினர். அனுராதபுர காலத்து மன்னர்கள் சிலர் பொலன்னறுவையை ஓர் எல்லைப்புற இராணுவத் தளமாகக் கொண்டு, அங்கேயும் இடையிடையே தங்கி வரலாயினர். (4ம் அக்கிரபோதி என்ற மன்னனே முதன் முதலில் பொலன்னறுவையை அரசனது தற்காலிக உறைவிடமாகக் கொண்டவன். இதன்பின், 2ம் மகிந்தன் அங்கு இரு விகாரைகளை நிறுவியதாகவும், 1ம் உதயன் அங்கே சிறிது காலம் தன் படைகளுடன் தங்கியதாகவும் தெரிகின்றது.) இராஜரட்டையின் எல்லையில், மகாவலிகங்கையைக் கடந்து செல்வதற்குப் பயன்பட்ட துறையொன்று (மாகந்தோட்டை) பொலனறுவைக்கு மிக அண்மையில் அமைந்ததால், உருகுணையைக் கட்டுப்படுத்துவதற்கு பொலன்னறுவை மிகவும் ஏற்றதாகக் காணப்பட்டது. சோழரைப் பொறுத்தவரையில், தென்னிந்தியாவிலிருந்து எவ்வித ஆபத்தும் வராது என்ற துணிவு அவர்களுக்கு இருந்தது. உருகுணையைக் கட்டுப்படுத்தவும் அங்கிருந்து வரக்கூடிய படையெழுச்சியை முறியடிக்கவும் ஏற்ற நிலையமே அவர்களுக்குத் தேவைப்பட்டது. இதனாலேயே, அவர்கள் பொலன்னறுவையைத் தலைநகராக்கினர். பின்னர் வந்த சிங்கள மன்னரும் பொலன்னறுவையையே தொடர்ந்து தலைநகராகக் கொள்ளலாயினர்.

அரசியல், பொருளியல்

சோழராட்சியால் இலங்கையின் அரசியல் முறையிலும் பொருளியலமைப்பிலும் ஏற்பட்ட மாறுதல்கள், சமய, பண்பாட்டுத் துறைகளில் ஏற்பட்டவற்றைக் காட்டிலும் நிலையற்றவையென்பது கவனிக்கத்தக்கது. எல்லாத் துறைகளிலுமே தென்னிந்திய அல்லது திராவிடப் பண்புகள் பொலன்னறுவைக் காலத்தில் அதிகமாகக் காணப்பட்டன. இப்பண்புகள் முன்னரே புகுந்திருந்தாலும், சோழராட்சிக் காலத்திலேயே இவை வலுப்பெற்றிருத்தல் வேண்டும். ஆட்சிமுறைக் கோட்பாடுகளில், மன்னன் தன்னை ஒரு தெய்வமாகவே மதிக்கும் இயல்பு பொலன்னறுவைக் காலத்தின் போக்காக இருந்ததைக் காணலாம். சோழப் பெருமன்னர்கள் இவ்வகைக் கருத்துக்களைக் கொண்டவர்களாகவிருந்ததால், இலங்கை சோழர் ஆட்சியிலிருந்தபோதே இக்கருத்து இலங்கையிலும் வலுப்பெற்றிருக்க வேண்டும். ஆட்சியுடன் தொடர்பான வைபவங்களிலும், அரச குடும்பத்தவரின் சடங்குகளிலும், பிராமணர்களின் செல்வாக்கும் இந்துமதக் கிரியை முறைகளும் அதிகரித்திருந்தன. ஒரு பௌத்த மதத்தவனான 1ம் பராக்கிரமபாகு தன் இளமைக்காலத்தில் ஷத்திரிய குலத்தவர்களுக்குரிய பல சடங்குகளை அனுசரித்தமை பற்றிச் சூளவம்சம் குறிப்பிட்டுள்ளது. சோழ மன்னர்களின் முன்மாதிரியைப் பின்பற்றியே, தங்கள் பாதுகாப்புக்கு 'வேளைக்கார'ப் படையென்ற ஒரு பிரத்தியேகப் படையை பொலன்னறுவைக் காலச் சிங்கள மன்னர் நிறுவி வைத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மன்னனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான, பயிற்சிபெற்ற தெரிவுப் படையாக அது இருந்தது. மன்னனது மெய்காப்புப் படையாக மட்டும் அப்படையிருக்காது. தந்ததாதுவைப்

பாதுகாப்பது போன்ற பணிகளையும் அது பொறுப்பேற்றிருந்தது. பொருளியல் துறையில், குறிப்பாக நீர்ப்பாசனத் துறையில், சோழர் மேற்கொண்ட ஆக்கப் பணிகளைச் அறிவதற்கு போதிய சான்றுகள் உள்ளதாகத் தெரியவில்லை. அதேவேளையில் தாம் ஆட்சிசெய்த காலத்தின்போது, நீர்ப்பாசனங்களை அவர்கள் சிதைத்திருப்பர் என்பதும் பொருந்தாக் கூற்றாகும். படையெடுப்பாளராகவன்றி, ஆட்சியாளராக மாறியபின் இலங்கையிலிருந்து நீர்ப்பாசனங்களைப் பேணுதலே அவர்களுக்குப் பகுத்தறிவு புகட்டியிருக்கக்கூடிய நெறியாகும். தம் நாட்டில் பெரும் ஏரிகளையும், அணைகளையும் நிறுவியவர்களுக்கு இலங்கையில் அவற்றின் அருமை புலப்படாது போயிருக்கும் எனக் கருத இடமில்லை.

சமயம், பண்பாடு

பிந்திய அனுராதபுர காலத்திலிருந்தே, ஈழத்தின் வரலாற்றில் தென்னிந்தியா வினதும், தமிழர்களினதும் செல்வாக்கு வளர்ந்து வந்ததை அறிந்துள்ளோம். இதற்கு மகுடம் வைத்தது போலவே, சோழரின் ஆட்சி இலங்கையில் ஏற்பட்டமை அமைந்தது. சோழராட்சிக் காலத்தில், மேலும் பல தமிழ்க்குடிகளும் படைவீரரும் இலங்கையின் வடபகுதிகளில் குடியேறினர் எனலாம். பொலன்னறுவை, மாதோட்டம், கந்தளாய், பதவியா போன்ற இடங்களிலும் தமிழ்ச் சைவ மக்கள் வாழ்ந்தனர் என்பது அவ்விடங்களில் அக்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்தமையால் தெளிவாகின்றது. தமிழர் செல்வாக்கு வலுப்பெற்று வந்ததைப் போலவே, சோழராட்சியில் சைவமும் மேன்மை பெறலாயிற்று. சோழ மன்னர்கள் தமிழ் நாட்டில் சைவத்தை ஆதரித்தனராதலால், இலங்கையிற் பல இந்துக்கோவில்கள் நிறுவப்பட்டன. இலங்கையின் ஆட்சியாளராக விளங்கிய காலத்தில் சோழர்கள் பௌத்தமதம் மீது பகைமை பாராட்டாது சமயப் பொறையை அனுட்டித்தனர். தென்னிந்தியாவிலும், சோழ மன்னர்கள் பிற சமயங்களைப் பொறுத்தவரையில் சமயப்பொறையையே கடைப்பிடித்ததாக அறிகின்றோம். திருக்கோணமலைக்கு அண்மையில் உள்ள வெல்கம் வெஹர என்ற ஒரு விகாரை சோழரின் ஆதரவைப் பெற்று, அவர்களால் திருத்திக் கட்டப்பெற்று, 'இராஜராஜப் பெரும்பள்ளி' என அழைக்கப்பட்டதாக அங்குள்ள ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. இலங்கையில் சோழர் கடைப்பிடித்த சமயக் கொள்கையைப் புலப்படுத்த இக்கல்வெட்டில் வருஞ்செய்தி பயன்படுகின்றது. சோழராட்சியின்போது இலங்கையில் நிறுவப்பட்ட சைவக் கோவில்கள், தமிழ் நாட்டில் அதே காலத்தில் இருந்த கட்டிட முறையைப் பின்பற்றியே கட்டப்பெற்றன. பொலன்னறுவையில் இப்போதும் காட்சிதரும் 'இரண்டாம் சிவ தேவாலயம்' என்பதே, இராஜராஜசோழன் காலத்தில் கட்டப்பெற்ற வானவன் மாதேவி ஈச்சரம் ஆகும். இது, திருவாலீஸ்வரம் (திருநெல்வேலி மாவட்டம்) போன்ற இடங்களில் தமிழ் நாட்டில் நிறுவப்பட்ட நடுத்தர அல்லது சிறிய அளவினதான கோவில்களைப் போன்று அமைக்கப்பட்டது. கந்தளாய், மாதோட்டம் போன்ற பிற இடங்களிலும் கோவில்கள் பல அமைக்கப்பட்டிருந்தபோதும், அவற்றின் சிதைவுகள்தானும் இன்று எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அவ்வப்போது கண்டெடுக்கப்படும்

வெண்கலச் சிலைகள், கோவில்கள் ஆங்காங்கே இருந்ததை நினைவுக்குக் கொண்டு வருகின்றன. இவ்வாறு எடுக்கப்பெற்ற சிலைகள் நடராஜர், பார்வதி, நாயன்மார் ஆகியோரின் திருவுருவங்களாகவுள்ளன. கொழும்பு அரும்பொருளகத்தில் இவை வைக்கப்பட்டுள்ளன. வெண்கலத்தாலான இத்திருவுருவங்கள் (விக்கிரகங்கள்) சிற்பக் கலையின் மகோன்னத எடுத்துக்காட்டுகள் என கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியினால் பாராட்டப்பெற்றவையாகும். இவற்றுள் உண்மையில் இலங்கையிலும் செதுக்கப்பட்டன என்பது குறிப்பிடற்குரியது. இவையன்றி, கருங்கல் முதலான கற்களிலும் தென்னிந்திய சிற்ப முறையை அனுசரித்து இங்கு சிற்பங்கள் செதுக்கப்படலாயின. இச்சிற்ப முறைகள், பொலனறுவைக்கால பௌத்தக் கட்டிடங்களிலும் செல்வாக்கை ஏற்படுத்தின.

சமூகம் - சாதிமுறை

சோழப் பேரரசின் காலத்தில், தென்னிந்தியாவில் சாதி முறைமையானது இறுக்கமடைந்து வந்ததை முன்னரே கவனித்தோம். சோழர் இலங்கையை ஆட்சிசெய்த காலத்தில் இத்தன்மை இலங்கையிலுள்ள சாதி முறையையும் பாதித்திருக்க வேண்டும். சோழராட்சி முடிவெய்தியபின், இலங்கையை ஆண்ட விஜயபாகு ஸ்ரீபாத என்ற சிவனொளிபாதமலைக்குச் செல்லும் பாதையில் தாழ்ந்த வகுப்பினரின் வழிபாட்டுக்கென ஒரு மேல்தளம் அமைக்க உத்தரவிடப் பட்டதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு, சோழராட்சி முடிவுற்ற சிறிது காலத்தில் சாதிமுறை நெகிழ்ச்சியற்றிருந்தமைக்கு, அவர்களின் ஆட்சியின்போது ஏற்பட்ட செல்வாக்கே காரணமாகும். இவ்வாறு இலங்கையில் பல்வேறு துறைகளிலும் நிலையான சில மாறுதல்களைச் சோழராட்சி ஏற்படச்செய்தது. இவற்றுள் பண்பாட்டுத்துறை மாற்றங்களே அதிக நிலைபேறுடையன எனலாம்.

விஜயபாகுவும் விடுதலையியக்கமும

மகாயான பௌத்தமத பீடங்களின் செல்வாக்கு

சோழராட்சியில் இலங்கையமர்ந்திருந்த காலத்தில், நாட்டின் விடுதலையைப் பெறுதற்கான முயற்சிகள் அடிக்கடி எடுக்கப்பெற்றுவந்தன. ஆனால் இவை தோல்வியே கண்டன. இறுதியாக, விஜயபாகு நீண்டகாலமாக மேற்கொண்ட போராட்டம் வெற்றியை அளித்தது. சூளவம்சத்தில் விஜயபாகு அதிக முக்கியத்துவம் பெறாதபோதும் (அத். 56 - 60), அவனுடைய சாதனைகள் உண்மையில் பெரிதும் போற்றுதற்குரியவை. அவனுடைய வரலாற்றையறிய எமக்கு உறுதுணையாகவிருப்பது சூளவம்சமே. இதில் வரும் விபரங்கள் பெரும்பாலும் உண்மைச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டவையே. சோழர்காலத் தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் இவற்றுட் சிலவற்றை உறுதிப்படுத்து கின்றன. **'மெய்க்கீர்த்திகள்'** பலவற்றைச் சோழ மன்னர்கள் விட்டுச் சென்றுள்ளனர். இடையிடையே இவற்றிலுள்ள செய்திகளுக்கும் இலங்கை ஆதாரங்களில் வருவனவற்றிற்கும் முரண்பாடுகள் உண்டு. விஜயபாகுவின இரு பொறிப்புக்கள் எமது கவனத்தைச் சிறப்பாகப் பெறவேண்டியவை.

அம்பகமுவக் கல்வெட்டு திருப்பாதக்கோயிலுக்கு (ஸ்ரீ பாத) விஜயபாகு அளித்த மானியங்களையும், கொடைகளையும் எடுத்துக் கூறுகின்றது. இக்கல்வெட்டால், திருப்பாத வழிபாடு இவன் காலத்தில் பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றியும், ஆட்சிக்கொள்கை, வரி விதிப்பு முறை, சமூகநிலை என்பன பற்றியும் விபரங்களை உய்த்துணரக் கூடியதாகவுள்ளது. பனாகடுவச் செப்பேடு எனப்படும் இவனுடைய மற்றொரு முக்கிய பொறிப்பானது, செப்பேடுகளில் செய்யப்பட்ட இலங்கைப் பொறிப்புகளில் மிகவும் முற்பட்டது. 'புதலர் - நாவன்' (புத்தராஜா) என்ற பிரதானிக்கு விஜயபாகு வழங்கிய சலுகைகளைக் குறிப்பிட முற்பட்ட இப்பொறிப்பு விஜயபாகுவின் இளமைக்கால விவரங்களை அவனுடைய கூற்றுக்களாகவே கூறுகின்றது. விஜயபாகு அரசனாகும் வரையுள்ள செய்திகள் அவனது வரலாற்றைத் தெளிவுபடுத்த உதவுகின்றன.

விஜயபாகுவுக்கு முன் விடுதலை முயற்சிகள்

1070ல் விஜயபாகு தலைமையில் இலங்கைக்கு விடுதலை கிட்டியதை அறியுமுன், விஜயபாகுவுக்கு முந்திய காலத்து விடுதலை முயற்சிகளையும், அரசியற் போக்கையும் கவனிப்போம். அனுராதபுர கால இறுதி மன்னனான 5ம் மகிந்தன் சோழரின் கைதியாகத் தமிழ்நாட்டில் தன் இறுதி நாட்களைக் கழித்து, ஈற்றில் 1029ல் இறந்தான். அதுவரை இலங்கையில் (குறிப்பாக உருகுணையில்) விடுதலைக் கிளர்ச்சியானது போதிய உத்வேகம் பெறவில்லை. 5ம் மகிந்தன் கைதியாக்கப்பட்டபோது, அவன் மகனான காசியப்பன் தப்பியிருந்தான். சிறுவனான காசியப்பன் மிக்க பாதுகாப்புடன் மறைவாக உருகுணையில் வளர்க்கப்பட்டு வந்தான். தந்தை மகிந்தன் மறைந்தபின், உருகுணைப் பிரதானிகள் சிலர், இளவரசனான காசியப்பனைச் சார்ந்து நின்று, சோழரை எதிர்க்க ஆயத்தங்கள் செய்தனர். இதனிடையே, 5ம் மகிந்தனது அரசின் உரித்தாளியான காசியப்பனைக் கைப்பற்றச் சோழரும் முயற்சிகள் எடுத்தனர். உருகுணைக்குத் தம் படைகளை அனுப்பிக் காசியப்பனைக் கைதுசெய்ய எண்ணினர். சுமார் ஆறு மாதங்கள் வரை நடைபெற்ற இம்முயற்சிகள் பலனளிக்கவில்லை. **மகுல் மகா விகாரை**யென்பதற்கு அண்மையிலுள்ள **பலட்டுப்பாண (பலுட்டகிரி)** என்ற குன்றின் ஒதுக்கில் தம்மை அரண்செய்து கொண்ட சிங்களப் பிரதானிகள், சோழருக்குப் பெரும் அழிவுகளை உண்டுபண்ணி, அவர்களின் எண்ணத்தைக் கைகூடாதவாறு செய்தனர். இதன்பின், விக்கிரமபாகு என்ற பெயருடன் காசியப்பன் இலங்கை மன்னனாக முடிசூடிக் கொண்டான். ஆனால் உருகுணையில் மட்டுமே அவனது ஆணை ஒடுங்கியிருந்தது. சோழரிடமிருந்து இலங்கையை மீட்க அவன் விரும்பி, தன் படைப்பலத்தைத் திரட்டி வரலானான். சோழர் இம் முயற்சிகளை முறியடிக்க முன்வரவில்லை. இதற்குக் காரணம், இதே காலத்தில் தென்னிந்தியாவில் சுயேச்சைபெற எண்ணிய பாண்டியரும் சேரரும் நிகழ்த்திய கலகங்களை அடக்குவதில் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தமையாகும். இலங்கையில் நடைபெற்ற விடுதலை முயற்சிகளுக்கும், பாண்டிய, சேர இயக்கங்களுக்கும் ஒற்றுமையிருந்ததாகச் சிலர் கொள்கின்றனர்.

இராஜாதிராஜனது 27வது ஆண்டுக கல்வெட்டில் வரும் **'தென்னவர் மூவருள்'** என்பதைப் பாண்டிய இளவரசர்கள் மூவரைக் குறிப்பதாகவே சதாசிவப் பண்டாரத்தார் போன்ற அறிஞர்கள் கொள்கின்றனர். (பிற்காலச் சோழர் சரித்திரம் 1-207-8) இக்கொள்கை சரியாயின், இலங்கைக்கும் பாண்டிய, சேர அரசர்க்கு மிடையே கூட்டுறவு இருந்ததென்பதற்கு ஆதாரமில்லையெனல் வேண்டும். ஆனாலும், விக்கிரமபாகுவுக்கும் சோழருக்கும் இடையே போர் நிகழுமுன், அவன் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டான் எனச் சூளவம்சம் கூறுகின்றது (அத். 56 செய் 6). இதற்கு முரணாக, சோழர் தொடுத்த போரில், விக்கிரமபாகுவின் முடியும் பிற அரசச்சின்னங்களும் அபகரிக்கப்பட்டதுமன்றி, போர்க்களத்தில் அவன் உயிரிழந்ததாகவும் சோழர் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இவற்றுள் எது உண்மையாயிருப்பினும், 1041க்கு முன், வெற்றியேதும் காணாது விக்கிரமபாகு இறந்தான் என்பது உறுதி.

விக்கிரமபாகுவின் மரணத்தைத் தொடர்ந்து, உருகுணையில் உண்டான குழப்பநிலை சோழரிடமிருந்து இலங்கை விடுதலை பெறும் நாளைப் பின்போட வைத்தது. சிங்கள எதிர்ப்பியக்கம் தலைமைத்துவமின்றி தவிக்க நேர்ந்தது. சூளவம்ச விவரங்களின்படி, விக்கிரமபாகு மரணமெய்தியதும் கீர்த்தியென்ற ஒரு பிரதானி ஆட்சியைக் கைப்பற்ற, எட்டு நாட்களில் அவனைக் கொன்று **மகாலான கீர்த்தி** என்பான் அரசைப் பெற்று மூன்று ஆண்டுகள் ஆட்சி நடத்தினான். சோழருடன் நடைபெற்ற போரில் இவன் மடிந்துபோக, பாண்டி நாட்டிலிருந்து புகலிடந்தேடி வந்த விக்கிரமபாண்டியன் என்பான் களுத்துறையில் (காலதீர்த்த) இருந்து சிறிதுகாலம் ஆட்சி நடத்தினான். இதனிடையே, இந்தியாவிலுள்ள அயோத்தியைச் சேர்ந்த மற்றொரு இளவரசனான **ஜகதீபாலன** இலங்கை வந்து, விக்கிரம பாண்டியனை வென்று ஆட்சியைப் பெற்றான். நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தபின், இவனும் சோழருடன் நடந்த போரில் மடிந்தான். இதன்பின், உருகுணையின் அரசைப் பெற்றவன் **பராக்கிரம பாண்டியன** ஆவான். இவனும் ஈராண்டுகளுள் சோழரின் வாளுக்கு இரையானான். சூளவம்சத்தில் உள்ள இவ் விவரங்களில் வரும் சில பெயர்கள் (மகாலான கீர்த்தி, ஜகதீபால) சோழர் கல்வெட்டுக்களில் இடம்பெறவில்லை. இவற்றுக்குப் பதில் வேறு பெயர்கள் அவற்றில் கூறப்பட்டுள்ளன. இராஜாதிராஜனது 29ம் ஆண்டுக் கல்வெட்டில் வரும் மெய்க்கீர்த்தியில் குறிப்பிடப்பட்டுள்ள **வீரசலாமேகன், மதனராசன** ஆகியவர்களின் பெயர்கள் சூளவம்சத்தில் இடம்பெறவில்லை. வீரசலாமேகன் கன்யாகுப்ஜத்திலிருந்து (இப்போதைய கனோஜ்) வந்தவன் என்பதும், மதனராஜன் ஓர் இராஷ்டிர கூட இளவரசன் என்பதும் கவனிக்கத் தக்கவை. விக்கிரமபாகுவிற்குப் பின் ஏறத்தாழப் பத்தாண்டுகள் வரையில் (1029 - 1050) இவ்வகை நிகழ்ச்சிகளே உருகுணை அரசியலில் இடம்பெற்றன. உருகுணையில் சோழருக்கெதிரான இயக்கம் வலுப்பெறுவதை அவர்கள் வெற்றியுடன் தடைசெய்து வந்தனர். இவ்வாறான நிலையிலேயே, **விஜயபாகு** எனப் பின்னர் அழைக்கப்பட்ட **கீர்த்தி** வரலாற்றில் உதயமானான்.

சோழராட்சியிலிருந்து விடுதலை

கீர்த்தியின் இளமை: விஜயபாகுவின் இளமைக் காலப்பெயர் கீர்த்தி என்பதாகும். அனுராதபுர அரசமரபில் உள்ள மானவர்மன் வழிவந்த மொகல்லானனுனக்கும் தாடோபதிசன் வழிவந்த லோகிதாவுக்கும் மகனாகத் தோன்றியவன் இவன். அரச குடும்பத்தில் பிறந்த ஓர் இளவரசன் சாதாரணமாகத் தன் இளமைக்காலத்தைக் கழிக்கவேண்டிய முறையிலன்றி, காடுகளில் பலவகை இடர்களின் மத்தியிலும், பகைவர்களுக்கஞ்சிய வண்ணமும் கீர்த்தி தன் இளமைப் பருவத்தைக் கழித்தான். இவன் தந்தை ஓர் இளவரசனாகவிருந்தும், ஆட்சி அதிகாரமெதுவும் அற்றவனாகவேயிருந்தான். பராக்கிரம பாண்டியனுடைய மரணத்துக்குப்பின், **லோக** என்ற படைத்தலைவன், கதிர்காமத்தைத் தலைமைப் பீடமாகக் கொண்டு, உருகுணையின் ஆட்சியலுவல்களைக் கவனித்து வந்தான். அரச மரபில் வராத ஒருவனுக்கு உருகுணையில்தானும் பூரண ஆதரவு இருந்திருக்கமுடியாது. 2ம் இராஜேந்திரனுடைய மெய்க்கீர்த்தியொன்றில் அவன் இலங்கையின் மானாபரணன் புதல்வரிருவரையும், கலிங்கத்தைச் சேர்ந்த வீரசலாமேகனையும் வென்றதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இவர்களைப் பற்றிய குறிப்புக்கள் இலங்கை ஆதாரங்களில் இல்லை. லோக என்பவனை விட வேறும் ஆட்சியாளர் ஒரே காலத்தில் உருகுணையில் இருந்திருத்தல் கூடும்.

புத்தராஜனது பங்களிப்பு

மலைநாட்டில் ஓபநாகேக்கு அண்மையில் ஹுணுவலப் பகுதியில், லோகவுடன் முரண்பட்ட புத்தராஜன் என்ற மற்றொரு தலைவன் தனது அதிகாரத்தை நிலைநாட்டியிருந்தான். விஜயபாகுவின் பனாகடுவச் செப்பேட்டுப் பட்டயத்தில், தன் தந்தைக்கும் குடும்பத்தினர்க்கும் தனது இளமைக் காலத்தில் இந்தப் புத்தராஜனே பாதுகாப்பு நல்கி ஆதரவு தந்ததாக விஜயபாகு குறிப்பிட்டுள்ளான். மலையரட்டையின் எல்லைப் புறத்தில் கீர்த்தியும் அவன் தாய் தந்தையரும் வாழ்ந்து வரும் நாளில், அவன் வில்வித்தையிற் சிறந்து விளங்கியதாகக் கூறப்படுகின்றது. புத்தராஜன் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளிலும், கீர்த்தி பங்குகொண்டிருத்தல் கூடும். புத்தராஜனது ஆதிக்கம் பரவிவந்ததை லோக தடுக்க முயன்றும், வெற்றி காணவில்லை. புத்தராஜனுடன் இப்போது தேவமல்லன் என்ற மற்றொரு படைத்தலைவனும் சேர்ந்துகொண்டான். மலைநாட்டில் மட்டுமன்றி, பஸ்ச யோஜன (பஸ்துன் கோறளை) போன்ற பிற மாவட்டங்களிலும் புத்தராஜனுக்கும் கீர்த்திக்கும் ஆதரவு பெருகி வந்தது.

கீர்த்தி அரசனாதல்

லோக என்பவன் சில ஆண்டுகளின்பின் இறந்துபோக, **'கேசதாது' காசியப்பன்** என்பான் கதிர்காமத்தில் ஆட்சியாளனானான். பொலன்னறுவையில் இருந்த சோழப் பிரதிநிதி, புதிய ஆட்சியாளனுக்கெதிராகப் படைகளை அனுப்பி வைத்தான். இப்படைகளைக் காசியப்பன் தோற்கடித்தானெனக் கூறப்படுகின்றது. ஆனால், சோழருடன் நடைபெற்ற போர் முடிவுற்றதும், காசியப்பன்

புத்தராஜனுடைய படைகளை எதிர்நோக்கவேண்டியவனாக இருந்தான். கதிர்காமத்தை விட்டு வெளியேறிய காசியப்பன், **கதிரங்கணி** என்ற இடத்தில் தனது அரணை நிறுவி அதைத் தன் உறைவிடமாகக் கொண்டான். புத்தராஜனது படைகள் அங்கும் தொடர்ந்து, அவனை வாளுக்கிரையாக்கின. இவ்வாறாக, புத்தராஜனது உதவியுடன் கீர்த்தி காசியப்பனை அகற்றிவிட்டு, தனக்கு உருகுணையின் ஏனைய பகுதிகளில் இருந்த எதிர்ப்பையும் ஈராண்டுகளிற் புறங்கண்டு, உருகுணை முழுவதையும் தன் ஆணையை ஏற்கும்படி செய்தான். 1055 அளவில் விஜயபாகு என்ற பெயருடன் கதிர்காமத்திலிருந்து உருகுணையின் அரசனாகக் கீர்த்தி மகுடந்தரித்தான். அப்போது அவனுக்கு பதினெட்டு வயதே நிறைந்திருப்பினும், எதிர்காலத்தில் ஒரு சிறந்த அரசனாக விளங்கும் தன்மைகள் அவனிடத்தே காணப்பட்டன. தன் ஆதரவாளர்களை வசீகரிக்கும் இயல்பும், அல்லல்களை எளிதாக்கி அவற்றைத் தாங்கும் திறனும் நம்பிக்கை தரும் வகையில் தலைமைப் பதவியை வகிக்கும் ஆற்றலும் அவனிடத்தே அமைந்திருந்தன. சோழராட்சியினின்றும் ஈழத்தை விடுவிக்கும பெரும்பணி அவனைக் காத்திருந்தது.

சோழப்படை தாக்குதல்

விஜயபாகு கதிர்காமத்தில் முடிசூடிய செய்தியை அறிந்த சோழ அரசப் பிரதிநிதி, உடனே பொலன்னறுவையிலிருந்து ஒரு படைப் பிரிவை உருகுணைக்கு அனுப்பி வைத்தான். சோழப்படை கதிர்காமத்தை நோக்கி முன்னேறியபோது விஜயபாகு அதை எதிர்கொள்ளாது, கதிர்காமத்தை விட்டு வெளியேறினான். கதிர்காமத்துக்கு எதிர்ப்பின்றிச் சென்ற சோழபடை அங்கே பல அழிவுகளை உண்டுபண்ணிவிட்டுத் திரும்பியது. விஜயபாகு முதலில் மலையகத்தில் மறைந்து வாழ்ந்துவிட்டுப் பின்னர் சிப்பத்தலகவுக்குச் சென்று தங்கினான். உருகுணையில் தனது ஆட்சியை நிலைப்படுத்திக் கொண்ட விஜயபாகு, பொருளியல் வளத்தைப் பெருக்குவதிலும் ஈடுபட்டான். குறிப்பாக, அவனது கட்டளைப்படி 'ராமஞ்ஞ' எனப்பட்ட பர்மாவுக்கு வர்த்தகக் குழுவினர் ஏராளமான திரவியங்களுடன் சென்று அவற்றைக் கொடுத்து, அங்கிருந்து பல கப்பல்களில் வணிகப் பொருட்களைக் கொணர்ந்தனர். இதனால் விஜயபாகுவின் வருமானம் கணிசமான அளவு அதிகரித்ததாகக் கூறப்படுகின்றது. பொருளியலையும், படை வலியையும் பெருக்கி வந்த விஜயபாகு, தனது அரசிருக்கையை அம்பலாந்தோட்டைக்கு அணித்தாகவுள்ள **தம்பலகாமத்துக்கு** மாற்றிக்கொண்டான்.

இராஜரட்டையில் கலகம்

உருகுணையில் தனது ஆட்சியை நிறுவித் தன் பலத்தையும் வளர்த்துக் கொண்ட விஜயபாகு, சோழராட்சியில் இருந்த இராஜரட்டையையும் தனது ஆணையின் கீழ்க் கொண்டு வருவதற்கு ஏற்ற வாய்ப்புக்காகக் காத்திருந்தான். அவ்வேளையில் இராஜரட்டையில் சோழராட்சிக்கு எதிராக 1065 அளவில் கலகங்கள் மூண்டன. இவற்றுக்கான காரணங்கள் தெளிவாகவில்லை. விஜயபாகுவின் தூண்டுதலால் இவை நிகழ்ந்திருக்கலாம் : அன்றேல் இராஜரட்டை

மக்கள் அந்நியராட்சியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவேண்டும் என்ற வேணவாவால், விஜயபாகுவின் ஆயத்தங்களை அறிந்து கலகஞ் செய்திருக்க லாம். உணவுப் பஞ்சமோ, வறுமையோ காரணமல்ல என்பது தெளிவு. சோழ அதிகாரிகளுக்கு வரிகளைக் கொடுக்க மறுத்து மக்கள் பெருங் கலவரங்களைச் செய்யலாயினர். இராஜரட்டையில் உண்டான இக்கலவரங்களைப் பற்றிய செய்தி சோழப் பேரரசனுக்கு (வீரராஜேந்திரன்) எட்டியதும், அவன் ஒரு பெரும் படையை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். இராஜரட்டைக் கலகத்தை இரக்கமற்ற முறையில் அடக்கியபின், சோழப்படையானது உருகுணை சென்று விஜயபாகுவைச் சமருக்கழைத்தது. விஜயபாகு தனது இக்கட்டான நிலையை உணர்ந்து, பலட்டுபாணவில் உள்ள (இப்போது **மகுல் மகாவிகாரையென** வழங்கும்) ஒரு குன்றுத் தொடரில் தன் அரணை அமைத்து, சோழப் படையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். விஜயபாகுவை அடக்க முடிவுசெய்த சோழப் படை அவனை அங்கே சூழ்ந்து கொண்டது. குன்றுத் தொடரின் சிறப்பியல்புகளை வாய்ப்பாகக் கொண்ட போர் முறையை விஜயபாகு கையாண்டு, சோழப் படைக்குப் பெருஞ்சேதங்களை உண்டுபண்ணி, அதைப் பின்வாங்க வைத்தான். அதைப்பின் தொடர்ந்த விஜயபாகு அதன் தளபதியை தம்பவிட்டி எனும் இடத்திற் கொன்ற தாகக் கூறப்படுகின்றது. இவ்வெற்றியைத் தொடர்ந்து, பொலன்னறுவைக்குத் தன் படைகளுடன் விரைந்த விஜயபாகு அதைக் கைப்பற்றினான். ஆனால் தன் படையெய்திய தோல்வி பற்றிக் கேள்வியுற்றதும், வீரராஜேந்திரா சோழன் உடனே மேலும் பல படைப் பிரிவுகளைச் சேர்த்து தாமதமின்றி இலங்கைக்கு அனுப்பிவைத்தான். இப்படைகள் மாந்தையிலிருந்து அனுராதபுரத்துக்கு முன்னேறிச் சென்றபோது, விஜயபாகுவின் 'சேனாபதி' (படைத் தலைவன்) தலைமையில் முக்கிய படைப்பிரிவொன்று அதை முன்னேறவிடாது தடுக்க முயன்றது. ஆனால், சோழப் படையானது எதிர்கொண்ட சிங்களப் படையைப் படுதோல்வியுற வைத்து பொலன்னறுவை வரை சென்றது. இதற்கு முன்பாகவே, விஜயபாகு பொலன்னறுவையிலிருந்து, உருகுணை நோக்கித் தென் மேற்காகப் பின்வாங்கிச் சென்றான். சோழப்படையின் தலைவன் தன்னைப் பின்தொடர்வதை அறிந்து **வாகிரிகலை** (வாதகிரி) என்ற குன்றையடைந்து அதை அரணாக்கிக் கொண்டான். சுமார் மூன்று மாதங்கள் வரையில் சோழப்படை இவ்வரணை முற்றுகை செய்து, பின்னர் கைவிட்டதாகத் தெரிகின்றது. 1067ம் ஆண்டைச் சேர்ந்த வீரராஜேந்திரனது திருமுக்கூடற் கல்வெட்டில் அவன் எய்திய இலங்கை மீதான வெற்றி பற்றிக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

உருகுணையில் கலகம்

சோழரிடத்து விஜயபாகு எய்திய தோல்வி விஜயபாகுவுக்கெதிரான கலகங்களை உருகுணையிலும் தோற்றுவிக்கத் தூண்டுதல் அளித்தது. புத்தளைப் பகுதியில் கலகத்தைத் தொடக்கியவன், கேசதாது காசியப்பனது உடன் பிறந்தவனாவான். தன் தமையனைக் கொன்றமைக்காக விஜயபாகுவைப் பழிவாங்க எண்ணியே அவன் இக்கலகத்தைத் தொடக்கி வைத்தான். கலகம்

அம்மாவட்டம் முழுவதும் பரவி வந்தது. கலகத்தை அடக்க விஜயபாகு தன் படையைக் கொண்டு சென்றபோது, கலகத் தலைவர் விஜயபாகுவின் படைக்கு ஈடுநிற்க முடியாது, தப்பியோடினான். கலகத்தை அடக்கியபின் தம்பலகாமத்தில் ஓர் அரணை நிறுவி அங்கு சிறிது காலம் தங்கியிருந்தான். பின்னர் வளவை கங்கைக்கு அண்மையில் **மஹாநாகஹூல** என்ற நகரத்தைத் தன் புதிய தலைமைப்பீடமாகக் கொண்டான். அங்கிருந்து, தன் பாலன அமைப்பைச் சீர்ப்படுத்தி படைப் பலத்தையும் தன்னிலைக்குக் கொணர்ந்தான். வீரராஜேந்திர சோழன் 1067க்குப் பின் மேலைச் சாளுக்கியருடன் இடையறாப் போரில் ஈடுபட்டிருந்ததால், விஜயபாகு போர் ஆயத்தங்களைச் செய்வதற்கான அவகாசத்தைப் பெற்றான்.

சோழப் பேரரசில் நிலைமைகள்

வீரராஜேந்திரனது மரணத்தைத் தொடர்ந்து 1070ல் அரசனான அதிராஜேந்திரன் ஒரு சில மாதங்களுக்கே ஆட்சி செலுத்தியதையும், அவனுக்குப் பின் சோழ அரசைப்பெற நேர் உரிமையாளன் இல்லாதிருந்தமையால் வேங்கியைச் சேர்ந்த இளவரசனான இராஜேந்திரன், குலோத்துங்கன் என்ற பட்டப் பெயருடன் சோழ அரசனானான். சோழ அரசைக் குலோத்துங்கன் பெற்றதை விரும்பாத மேலைச் சாளுக்கியனான 6ம் விக்கிரமாதித்தன் குலோத்துங்கனைப் பகைத்துப் போர் தொடுக்க ஆயத்தமானான். குலோத்துங்கனும் போரில் வல்ல விக்கிரமாதித்தனை வெல்ல, வேண்டிய ஆயத்தங்களைச் செய்து வரலானான். இவ்வாறு உள்நாட்டில் அவன் சிரத்தை காட்டியதால், பேரரசின் தொலைப் பகுதிகளில் தன் கவனத்தைச் செலுத்த இயலாதவனாக இருந்தான். பேரரசின் ஒரு பகுதியான வேங்கியானது கேகய மன்னனொருவனது தாக்குதலுக்கு இலக்காகியது. இவ்வேளையிலேயே இலங்கையைச் சேர்ந்த விஜயபாகுவும் சோழராட்சியை முடிவுக்குக்கொண்டு வருவதில் வெற்றி பெறலானான்.

விஜயபாகுவின் படையெழுச்சி

விஜயபாகுவின் இறுதிப் பெரும் படையெழுச்சி, ஒரு திட்ட அமைப்பைக் கொண்டு நடத்தப்பெற்றதாகச் சூளவம்ச விவரங்கள் உணர்த்துகின்றன. முந்திய படையெடுப்புத் தந்த தோல்வியை மனதிற்கொண்டு, மிக்க பாதுகாப்புடன் தன் திட்டத்தைச் செயற்படுத்த அவன் முற்பட்டான். இருமுனைத் தாக்குதலை நிகழ்த்த, இரு படைப்பிரிவுகளைத் தகுதிவாய்ந்த தளபதிகளின் தலைமையில் அனுப்பினான். மேற்குப் புறமாக தக்கிணதேசத்தினூடாகச் சென்ற ஒரு படைவரிசை முகுன்னரு, படலத்தலை, வாபிநகர, பத்தகாமம், திருகுல்ல, மண்டகல்ல முதலான இடங்களிலுள்ள எதிர்ப்பைப் புறங்கண்டு, ஈற்றில் அனுராதபுரத்தையும் வென்றது. பின்னர், மாந்தை நோக்கி அப்படை முன்னேறியது. சோழரின் உதவிப்படை வரின், அதனைத் தடுப்பதே அவ்வாறு சென்றதற்கு நோக்கமாதல் வேண்டும். கிழக்குப் புறமாகச் சென்ற இரண்டாவது படை வரிசையானது, சங்காமத்திலும் மற்றும் இடங்களிலும் இருந்த படை முகாங்களை முறியடித்துப்

பொலன்னறுவையை நெருங்கியது. அப்போது, படைத்தளபதிகள் விஜயபாகுவை விரைவாக வந்து பொலன்னறுவையைத் தாக்கும்படி செய்தி அனுப்பினர். விஜயபாகு தன் படைவீரரின் தீரச் செயல்கள் பற்றி அறிந்ததும் அகமிக மகிழ்ந்து, சோழரை வெல்லும்வேளை வந்ததை உணர்ந்து தன் முழுப்படைப் பலத்துடனும் மகாநாகஹுலவிலிருந்து புறப்பட்டான். சமயப் பெருமையும் வரலாற்றுப் புகழும் படைத்த மஹியங்கணையை அடைந்ததும், அங்கே சிறிது காலம தரித்திருந்தபின் பொலன்னறுவையை நோக்கி விஜயபாகு தன்படையுடன் மஹாவலிகங்கையோரமாக முன்னேறினான். கிழக்குப் புறமாக சென்றிருந்த படையைப் பொலன்னறுவைக்கு அண்மையிற் சந்தித்து, பொலன்னறுவையைக் கைப்பற்ற ஆயத்தங்களைப் பூர்த்திசெய்தான். சோழப் படைவீரர்கள் முதலில் நகரின் வெளியே விஜயபாகுவின் படையினரை எதிர்த்துப் போரிட்டுத் தோல்வியெய்தியதும் நகரினுட் புகுந்து தம் பலங்கொண்ட மட்டும் நகரினைப் பாதுகாப்பதில் முனைந்தனர். ஒன்றரைத் திங்களாகப் பொலன்னறுவை முற்றுகை நீடித்தும் பொலன்னறுவையை அடிப்படுத்துவது விஜயபாகுவின் படைக்குச் சாத்தியமாகவில்லை. ஈற்றில் விஜயபாகுவின் தளபதிகள், நகர்ச்சுவர்களைத் தகர்த்து நகரினுட்புகுந்து சோழப்படையை அடிபணிய வைத்தனர். பொலன்னறுவையைக் கைப்பற்றியபின் விஜயபாகு தன் முன்னோரின் தலைநகரான அனுராதபுரத்தினுள் கழிபேருவகையுடன் புகுந்து, தன் வெற்றிப் பெருமிதத்தைக் கொண்டாடினான். 1073ல் இலங்கை வேந்தனாக அனுராதபுரத்திலேயே முடிசூடிக் கொண்டான். அதிராஜேந்திரனுடைய கல்வெட்டுக்களே இலங்கையிற் கண்டெடுக்கப்பட்ட மிகப் பிந்தியகாலச் சோழர் கல்வெட்டுக்கள் என்பதைக் கொண்டும், விஜயபாகு 1070 அளவில் ஆட்சிசெய்யத் தொடங்கியமை உறுதிப்படுகின்றது.

வெற்றிக்குக் காரணங்கள்

இலங்கைக்கு விடுதலையைத் தேடித்தந்த பெருமன்னர் வரிசையில் விஜயபாகுவும் இடம்பெற்று, இலங்கை மக்களால் என்னென்றும் போற்றப்படும் பெருமைக்குரிய மன்னன் ஆகியதில் ஐயமில்லை. அரச மரபில் வந்தவனாக இருந்தும், எந்த அரசுக்கும் உரிமை படைத்தவனாக அவன் பிறக்கவில்லை. பிளவுபட்டிருந்த உருகுணையைத் தன் முயற்சியாலும், சலியா உழைப்பாலும், வீரத்தாலும் ஒன்றுபட வைத்து, அதைத் தனது ஆணைக்குக்கீழ்க் கொண்டு வந்தான். நம்பிக்கையையும் தக்க தலைவனையும் இழந்து நின்ற சிங்கள விடுதலையியக்கத்துக்கு விஜயபாகு அவற்றை ஈந்து, நாட்டுக்கு விடுதலையைப் பெற்றுக்கொடுத்தான். தோல்விகள் எய்தியவிடத்தும் தளராது உழைத்தமையும், வாய்ப்புக்கள் கிடைத்தபோது தக்கவாறு பயன்படுத்தியமையும் அவனது வெற்றியை உறுதிப்படுத்தின. 1070ல் சோழ அரசியலில் ஏற்பட்ட விருத்திகளும் விஜயபாகுவுக்குச் சாதகமாக அமைந்தன. படையுதவி சோழ நாட்டிலிருந்து வரமுடியாதிருந்தமையும் முன்னர் நிகழ்ந்த சாளுக்கியப் போர்களில் சோழர் தம் படைபலத்தை விரயஞ் செய்யாதிருந்தமையும் விஜயபாகுவுக்கு உதவியாக

இருந்தன. படையெடுப்புத் திட்ட அமைப்புடன், தக்க பாதுகாப்புடன் மேற்கொண்டதும் விஜயபாகுவின் வெற்றிக்கு வழிகோலுவதாக அமைந்தது. ஒரு படைப்பிரிவை சோழரின் உதவிப் படையைத் தடைசெய்யவும், பொலன்னறுவையிலிருந்து பின்வாங்க முற்படுமுன் படையைத் தவிக்கச் செய்யவும் விஜயபாகு அனுப்பிவைத்தமை போர்த்தந்திரங்களை அவன் அறிந்திருந்தமையைக் காட்டுகின்றது. விஜயபாகு இலங்கை முழுவதற்கும் அரசனானதால், எழுபத்தேழு ஆண்டுகளாக நிலவிய சோழராட்சியிலிருந்து இலங்கை விடுதலைபெற்று, மேலும் சில நூற்றாண்டுகளுக்குச் சுதந்திர நாடாகத் திகழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

விஜயபாகுவின் ஆட்சியும் சாதனைகளும்

நாட்டுக்கு விடுதலையை அளித்தபின், விஜயபாகுவை எதிர்நோக்கிய பணிகள் மிகவும் கடினமாகவே இருந்தன. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இடம்பெற்ற உள்நாட்டுக் குழப்பங்கள், போர்கள் என்பவற்றைத் தொடர்ந்து எழுபத்தேழு ஆண்டுகள் அந்நியர் ஆட்சியும் இடம்பெற்றதால், நாட்டைப் பழைய சபீட்ச நிலைக்குக் கொண்டுவருதல் பகீரதப் பிரயத்தனமாகத் தென்பட்டது. முன்னர் இடம்பெற்ற படையெடுப்புக்களின்போதும், போர்களின்போதும் பொருளியல் வளர்ச்சியின் உயிர்நாடிகளாக விளங்கிய நீர்ப்பாசனங்கள் இயங்காது போயின. சமயத்துறையிலும் இதேபோன்ற நிலையே காணப்பட்டது. பெரும்பாலான விகாரைகளும், மற்றைய சமயக் கட்டிடங்களும் பாழெய்தியிருந்தன. அமைதியும், ஒழுங்கான ஆட்சியும் நிலவினாலே, பொருளியல், சமய, சமூக வளர்ச்சிகளில் மன்னர்கள் கவனம் செலுத்தமுடியும். உள்நாட்டில் நிலைபேறானதும் பலமுள்ளதுமான பாலனத்தை அமைப்பதும், நாட்டின் பாதுகாப்புக்கு உறுதி அளிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுதலும் விஜயபாகுவின் உடனடிக் கவனத்தைப் பெறவேண்டிய பெரும் பணிகளாக இருந்தன. தான் அரும்பாடுபட்டு நாட்டுக்குப் பெற்றுக்கொடுத்த சுதந்திரத்தைப் பேணிக்காத்து, பொருளியல், சமூக, சமயத் துறைகளில் முன்னேற்றங்களை உறுதிப்படுத்தி நாட்டின் பெருமைக்கும் சுபீட்சத்துக்கும் உழைத்து வெற்றிகண்டதால் விஜயபாகுவை ஒரு பெருமன்னனாக வரலாறு கணித்துள்ளது.

தலைநகர் தெரிவு

விஜயபாகு 1070ல் இலங்கை முழுவதையும் ஆளும் உரிமையைப் பெற்ற போதும் 1073 அளவிலேயே தனது முடிசூட்டு விழாவை நடத்தினான். அனுராதபுரம் பாழெய்தியிருந்ததால், தன் முடிசூட்டு விழாவை நடத்துவதற்குரிய கட்டிடங்களை அங்கே நிறுவச்செய்து, பின்னரே அவ்விழாவைப் பெருவிழாவாக நடத்தினான். முழுசூட்டுவிழா அனுராதபுரத்தில் நடாத்தப்பட்டபோதும், அவன் அங்கு அதிக காலம் தங்கியிருக்கவில்லை. சோழரால் தலைநகராக்கப்பட்ட பொலன்னறுவை யையே விஜயபாகுவும் இராசதானியாகக் கைக்கொண்டான். பழைய தலைநகர் பாழெய்தியமை மட்டும், பொலன்னறுவை தெரிவுசெய்யப்பட்டமைக்குக் காரண மாகாது. விஜயபாகுவின் தேவைகளுக்கும் பொலன்னறுவை ஏற்புடையதாகக்

காணப்பட்டது. பொலன்னறுவை மகாவலிகங்கைக்கு அண்மையில், அதன் பிரதான கடவையொன்றான மாகந்தோட்டவைக் கட்டுப்படுத்தும் வகையில் உபாயநிலையில் அமைந்திருந்தமையே, அதைத் தலைநகராகக் கொண்டமைக்கு முக்கிய காரணமாகும். தென்னிந்தியாவிலிருந்து படையெழுச்சி வரலாம் என்ற அச்சத்துடன் விஜயபாகு ஆட்சிசெலுத்தினான். அவ்வாறு நிகழின், அனுராதபுரத்தைக் காட்டிலும் பொலன்னறுவை போதிய பாதுகாப்பைத் தர ஏதுவாக அமைந்திருந்தது. மாந்தைக்கு வெகுதொலைவில் பொலன்னறுவை அமைந்திருந்ததால், தென்னிந்தியப் படைகள் இறங்கியதை அறிந்தபின், பாதுகாப்பைப் பலப்படுத்தவும், தேவையேற்படின் உருகுணைக்கு விஜயபாகு தப்பியோடவும் அது ஏற்றதாக விளங்கியது. விஜயபாகுவைப் பொறுத்தவரையில், இதுவே முக்கிய காரணமாக இருக்கவேண்டும். உருகுணை முதலான தொலைமாகாணங்களையும் மத்திய அரசின் நேர் அதிகாரத்தின்கீழ்க் கட்டுப்படுத்தப் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் கருதியமையும் பொலன்னறுவையின் தெரிவுக்கு ஒரு காரணமாகக் கூறப்படும். கலிங்கமாகனது படையெடுப்பைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல் வரலாற்றில் 13ம் நூற்றாண்டில் உண்டான புரட்சிகர மாறுதல்கள் வரை பொலன்னறுவை தலைநகராகத் திகழ்ந்து வரலாயிற்று.

வேளைக்காரர் கலகம்

விஜயபாகுவின் ஆட்சி நாற்பது ஆண்டுகள் வரை நிலவியது (1070 - 1110). உருகுணையின் ஆட்சியாளனான தொடக்க ஆண்டிலிருந்தே அவனது ஆட்சி யாண்டுகள் கணக்கிடப்பட்டுள்ளன. இவனுடைய நீண்ட ஆட்சிக் காலத்தின்போது பெரும்பாலும் அமைதியே நிலவியது. ஒரு சில கலகங்கள் நடைபெற்று அவை விஜயபாகுவால் அடக்கப்பட்டன. இலங்கை முழுவதற்கும் விஜயபாகு அரசனானபோது, ஆதிமலைய என்ற தளபதி பொலன்னறுவைக்கு அண்மையில் ஒரு கலகத்தைத் தொடக்கி வைத்தான். இக்கலகம் இலகுவில் அடக்கப்பட்டது. 1074 அளவில் மூண்ட மற்றொரு கலகத்தைத் தொடக்கியவர்கள் உயர் பதவிகளிலிருந்த மூன்று சகோதரர்களாவர். இந்தியாவுக்கு ஓடி, அங்கு ஆதரவைத் திரட்டிவந்து உருகுணை, மலையரட்டை, தக்கிணதேசம் ஆகிய மாகாணங்களில் கலகங்களைத் தொடக்கி வைத்தனர். இக்கலகமும் அடக்கப்பட்டு அதன் தலைவர்களும் தண்டிக்கப்பட்டனர். முதலிரு கலகங்களைப் போலன்றி, 1085ல் ஏற்பட்ட **வேளைக்காரா** கலகமானது, பாரதூரமான விளைவுகளை உடையதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். சூளவம்சத்தில் உள்ள விவரங்களை மட்டும்கொண்டே இக்கலகத்தைப் பற்றிய வரலாறு எழுதப்பட்டுள்ளது. இவ் விவரங்களை உறுதிப்படுத்தும் பிற சான்றுகள் இல்லாமை குறிப்பிடத்தக்கது. சூளவம்ச விவரப்படி, சாளுக்கிய மன்னனும், சோழ வேந்தனும் அனுப்பிய தூதுவர்கள் விலையுயர்ந்த வெகுமதிகளுடன் விஜயபாகுவைச் சந்தித்தபோது, அவன் பெரிதும் மகிழ்ந்து, முதலிற் சாளுக்கியனது தூதுவரை அனுப்பிவைத்தான். அவ்வாறு திரும்பிய தூதுவருடன் சிங்களத் தூதுவரும் தேர்ந்த பரிசுகளுடன் கூடிச் செல்லலாயினர். சோழ நாட்டினுள் சிங்களத் தூதுவர் புகுந்தபோது,

சோழர் அவர்களுடைய காதுகளையும், மூக்குகளையும் அறுத்துத் திருப்பி விட்டனர். இத்தண்டனைக்கு ஆளான சிங்களத் தூதுவர், தம்மன்னனிடம் சென்று தமக்கு நேர்ந்ததை எடுத்துரைத்தனர். சோழ அரசன்மீது தணியாத கோபங்கொண்ட விஜயபாகு, தமிழ்த் தூதுவரை தன் அவைக் களத்துக்கு அழைத்து, அவர்களுடைய அரசனுக்குக் கூறவேண்டிய வஞ்சினத்தை மொழிந்தான். தனிச் சமருக்கோ, அன்றி இருவருடைய படைப்பலத்துடன் நடைபெறும் போருக்கோ தான் ஆயத்தமாக இருப்பதைத் தூதுவர்க்குக் கூறி, அவர்களைப் பெண்களின் உடையைத் தரிக்கச்செய்து அனுப்பினான். பின்னர் தன் படையுடன் அனுராதபுரம் சென்று மட்டிகாவாட தீர்த்தத்துக்குக்கும் மகாதீர்த்தத்திற்கும் தன் தளபதிகள் இருவரை அனுப்பி, சோழநாட்டுக்கு ஒரு படையெடுப்பை மேற்கொள்வதற்கு ஆயத்தங்களை நிறைவேற்றும்படி பணித்தான். அவ்வேளையில், வேளைக்காரப் படைப்பிரிவைச் சேர்ந்த வீரர், படையெடுப்பிற் கலந்துகொள்ள மறுத்துக் கலகஞ் செய்தனர். சிங்களத் தளபதிகளிருவரைக் கொன்றது மன்றி, புலத்திநகரத்தை (பொலன்னறுவையை) அடுத்த பகுதியைச் சூறையாடினர். தலைநகரில் அரசனுடைய தங்கையையும் அவளுடைய மூன்று புதல்வர்களையும் கைப்பற்றி, அரசமாளிகையையும் தீக்கிரையாக்கினர். இவ்வாறான அழிவுவேலைகளில் வேளைக்காரப் படையினர் ஈடுபட்டபோது, விஜயபாகு தலைநகரை விடுத்து தக்கிணதேசத்துக்கு விரைந்து வாதகிரி (வாகிரிகலை) என்ற மலையரணில் தன் திரவியங்களை மறைத்துவிட்டு, ஒரு படையைத் திரட்டி உபராஜாவான வீரபாகுவுடன் பொலன்னறுவையை அடைந்தான். வேலைக்காரப் படையினர் விரைவில் விஜயபாகுவால் தோற்கடிக்கப்பட்டனர். வேளைக்காரத் தளபதிகள் கைப்பற்றப்பட்டுத் தீயிலிடப்பட்டனர். இவ்வாறு அடக்கப்பட்ட வேளைக்காரப் படைப்பிரிவு, பின்னர் அரசனுக்கு விசுவாசமாக நடந்துகொண்டது. சூளவம்ச விவரங்களில், சோழ அரசனான குலோத்துங்கன் இக் கலகத்தைத் தூண்டியதாக குறிப்பு எதுவும் இல்லை. விஜயபாகுவின் ஆட்சி முடிவெய்திய காலத்தைச் சேர்ந்த வேளைக்காரர் பொறிப்பு ஒன்றில் (பொலன்னறுவையிலுள்ள தமிழ்க் கல்வெட்டு ஒன்றில்), தந்ததாதுக் கோவிலைப் பாதுகாக்க வேளைக்காரப் படைப்பிரிவினர் செய்துகொண்ட உடன்படிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. கலகத்தின் பின்னரும், பொறுப்புள்ள கருமங்களையாற்ற வேளைக்காரப் பிரிவு விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அயல்நாட்டுத் தொடர்புகள்

விஜயபாகுவின் ஆட்சியில் ஏற்பட்ட உள்நாட்டு அபிவிருத்திகளை நோக்குமுன், அவனுடைய அயல்நாட்டுத் தொடர்புகளின் சில இயல்புகளைக் கவனிப்போம். சோழ அரசு இலங்கைமீது மீண்டும் ஒரு தாக்குதலை மேற்கொள்ளாது உறுதி செய்வதும், அவ்வாறு தாக்க நேர்ந்தால் இலங்கைக்கு உதவ முன்வரும் நட்பு நாடுகளை வைத்திருப்பதும் விஜயபாகுவின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். இதன் மூலமே இலங்கையின் சுதந்திரத்தைக் காக்க முடியுமென்பதை அவன் உணர்ந்திருந்தான். சோழரால் முன்னர் கைதுசெய்யப்பட்ட அயோத்தி

ஜகதீபாலனது மகளான லீலாவதியைத் தன் பட்டத்தரசியாக ஏற்றுக்கொண்ட விஜயபாகு, பின்னர் (ஸ்ரீவிஜய அரசைச் சேர்ந்த) கலிங்க இளவரசியான திரிலோகசுந்தரியைத் தன் இரண்டாவது மகிஷியாக்கினான். கலிங்கத்துக்கும் (ஸ்ரீவிஜய அரசுக்கும்) இலங்கைக்குமிடையே நிலவிய உறவுகள் பலமடைய இம் மணவினை உதவியதோடு, மன்னனது அவைக்களத்தில் கலிங்க ஆதரவாளர் பெருகவும் வழிகோலியது. விஜயபாகுவின் உடன்பிறந்தாளான மித்திராவை, சோழ அரசனுக்கு மணஞ்செய்து கொடுக்க மறுத்து, பாண்டிய இளவரசன் ஒருவனுக்கு இராணியாக்கினான். இவ்வாறு ஏற்பட்ட பாண்டியத் தொடர்பும் இலங்கையின் அரசியற் போக்கை நெடுங்காலம் பாதித்தது. சாளுக்கிய அரசன் 6ம் விக்கிரமாதித்தனும் விஜயபாகுவும் தூதுக்குழுக்களையும் வெகுமதிகளையும் தமக்குள் பரிமாறிக் கொண்டனர். அதேபோல, பர்மிய அரசனான அனுரத்தனுடன், விஜயபாகு உருகுணை அரசனான விளங்கிய காலத்திலிருந்தே நட்புறவை வளர்த்து வந்தான். இதனால் இரு நாடுகளுக்கிடையே வர்த்தகத் தொடர்புகள் வளர்ந்து வந்தன. விஜயபாகுவின் ஆட்சியின் இறுதிக் காலத்தில், சோழ அரசுக்கும் இலங்கைக்கும் சுமுக உறவுகள் நிலவியதாகக் கூறப்பட்டுள்ளது. குலோத்துங்கன் மகள் ஒருத்தியை இலங்கை இளவரசனான (மித்திராவின் மகனான) மானாபரணன் மணஞ்செய்ததால், 1ம் பராந்தகன் காலத்திலிருந்து இரு அரச குடும்பங்களிடையே நிலவி வந்த பகைமை முடிவெய்தியது. சோழப் பேரரசனான முதலாம் குலோத்துங்கனும் இலங்கையை மீட்பதில் அக்கறையற்றவனாகவே காணப்பட்டான். இவ்வாறாக விஜயபாகு தன் நாட்டின் சுதந்திரத்தைப் பேணுவதைக் குறிக்கோளாகக்கொண்ட அயல்நாட்டுக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தான். இக்கொள்கையின் விளைவாக, நாடு பெரும் அமைதியைப் பெற்று உள்நாட்டு அபிவிருத்தி வேகமாக ஏற்படலாயிற்று.

சமயப்பணி

விஜயபாகு ஆட்சியைப் பெறுமுன் இருந்த அரசியல் நிலைமைகள், நாட்டின் முன்னேற்றத்தைப் பல வழிகளிலும் தடைசெய்திருந்தன. 10ம், 11ம் நூற்றாண்டுகளில் இடம்பெற்ற அந்நியப் படையெழுச்சிகள், போர்கள், விடுதலையியக்கங்கள், முதலானவை சமய வளர்ச்சிக்குப் பெருந்தீங்கை உண்டுபண்ணின. சமயக் கட்டிடங்கள் பெரும்பாலும் அழிவுற்றும், சேதமடைந்தும் காணப்பட்டன. மன்னர்களினதும், உயர் அதிகாரிகளினதும் ஆதரவு குன்றிப் பின்னர் அற்றுப் போனமையால், சங்கத்தினரின் வருவாய் பாதிக்கப்பட்டது. அரசியல் நிலைமைகள் சீர்கெட்டிருந்தமையால் சங்கத்திலும் சீர்கேடுகள் மலிந்து காணப்பட்டன. 'உபசம்பத' என்ற குரு அபிஷேகச் சடங்கை நடத்தும் தகுதிவாய்ந்த குருமார்கள் விஜயபாகு அரசனானபோது இலங்கையில் இருக்கவில்லை. பௌத்தத்தை பழைய மேனிலைக்குக் கொண்டுவர உறுதிபூண்ட விஜயபாகு, பர்மாவுக்குத் தூதுவரை அனுப்பி அறிவாற்றலிலும், ஒழுக்கத்திலும் மேம்பட்ட தகுதியுடைய பௌத்த குருமார்களை அனுப்பியுதவுமாறு அந்நாட்டரசனுக்கு வேண்டுதல் விடுத்தான். அவ்வேண்டுதலுக்கமைய பர்மாவிலிருந்து வந்த குருமார்களைக்

கொண்டு, பல தடவைகள் உபசம்பதவை நடாத்தி, சங்கத்தில் பல குருமார்களைச் சேரும்படி செய்தான். பாழெய்திய சமயக் கட்டிடங்கள் பலவற்றைப் புதுப்பிக்கவும், புதியன சிலவற்றை நிறுவவும் ஒழுங்குகளை மேற்கொண்டான். அனுராதபுரத்தில் உள்ள போதிமரக் கோவிலையும், ஜம்புகோள, மகாகமை, தம்புல்லை, தேவுந்தர, மகியங்கணை, பண்டுவஸ்நுவர முதலான பல இடங்களைச் சேர்ந்த விகாரை களையும் விஜயபாகு புதுப்பித்ததாகத் தெரிகின்றது. புதிதாக இவன் கட்டியவற்றுள், பொலன்னறுவையில் அரச மாளிகைக்கு அணித்தாக நிறுவப்பட்ட தந்ததாதுக் கோவிலும், ஒரு விகாரையும் முக்கியமானவை. முப்பெரும் பிரிவுகளையும் சார்ந்த குருமார்களுக்கு விகாரைகளையும், அத்தியாவசிய தேவைகளுக்கான பொருட்களையும் வழங்கினான். தான் புதிதாக நிறுவிய விகாரைகளுக்கு மானியமாக வளமிக்க ஆளிசார மாவட்டத்தைச் சேர்ந்த கிராமங்களை வழங்கினான். இந்தியாவில் புத்தகயாவிலுள்ள புனித போதிமரத்துக்குத் தன் காணிக்கையாக மிகவும் விலையுயர்ந்த முத்துக்கள், மணிகள், இரத்தினங்கள் பலவற்றைத் தூதுவர் வாயிலாக அனுப்பிவைத்தான். ஸ்ரீபாத (அல்லது சமந்தகூட) எனப்படும் சிவனொளிபாதமலைக்குச் சென்ற பாதயாத்திரீகர்களுக்கும், குருமார்களுக்கும் உணவு அளிக்கவும் மடங்களை நிறுவவும், கிலீமலைய என்ற கிராமத்தின் வருவாயை ஒதுக்கியது மன்றி, அதற்குச் சென்ற முக்கிய பாதைகளில் தானே மடங்களை (தானசாலாக்கள்) நிறுவியிருந்தான். விஜயபாகுவின் அம்பகமுவக் கல்வெட்டு இச்செய்தியை உறுதிப்படுத்துவதுடன், மேலதிக விபரங்களையும் தருகின்றது. குறிப்பாக தாழ்ந்த வகுப்பினர் திருவடியைத் தரிசிப்பதற்கென ஒரு தனியான மடத்தினை அமைத்தமை பற்றி இக் கல்வெட்டே குறிப்பிடுகின்றது. அரசனைப் போலவே, அவனது குடும்பத்தினரும், முக்கிய அரசாங்க அதிகாரிகளும் சமயக் கட்டிடங்கள் நிறுவுவதிலும், மானியங்களை வழங்குவதிலும் ஈடுபட்டிருந்தனர்.

பொருளியற் பணிகள்

பொருளியல் துறையில் விஜயபாகு ஆற்றிய பெரும்பணி நாடு முழுவதிலும் செயலிழந்து காணப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களிற் பலவற்றை மீண்டும் இயங்க வைத்து, பயிர்ச்செய்கையின் விருத்திக்குத் தூண்டுதல் அளித்தமையே ஆகும். பண்டவாபி, மகாகணதராவ, நாச்சதூவ, வலாஹசவாபி முதலான பல குளங்கள் விஜயபாகுவின் முயற்சியால் புதுப்பிக்கப்பட்டன. ஆளிசாரக் கால்வாயின் இறுதிப் பகுதியைத் திருத்தி அக்கால்வாய் மூலம் மின்னேரியையும் தொழிற்படவைத்தான். பல ஆறுகளையும் சிற்றாறுகளையும் அவன் மறித்து, கால்வாய்களூடாக நீரை வயல்களுக்கு விநியோகித்தானெனச் சூளவம்சம் கூறுகின்றது. ஆனால் இவன் காலத்தில் ஒரு சிறுகுளம் மட்டுமே (பத்தகுண என்பது) நிறுவப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிதாக்கல், புனரமைப்பு, புனருத்தாரணம் என்பனவே விஜயபாகுவின் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் முக்கிய தன்மைகளாக இருந்தன. எனவே, இவனது பெயரை இன்றுவரை நிலைநாட்டுவதற்கு ஏற்ற ஒரு சமயக் கட்டிடமோ, குளமோ, கால்வாயோ இல்லாதபோதும், விஜயபாகுவின் சாதனைகளை நாம் குறைத்து மதிப்பிடலாகாது.

நூற்றாண்டுக் காலமாக பாழ்படுத்தப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் இருந்த சமயக் கட்டிடங்களையும், பாசனங்களையும் புதுக்கி நன்னிலைக்குக் கொண்டுவருதற்கு விஜயபாகு எடுத்தமுயற்சிகள் போற்றுதற்குரிய சாதனைகளே.

கலைகள், சமூகம் முதலியன

கலை, இலக்கியத்துறைகளிலும் விஜயபாகு நாட்டமுடையவனாக விளங்கினான். அவனையே பெருமைமிகு புலவனெனச் சூளவம்சம் போற்று கின்றது. புலவர்களுக்கும், அறிஞர்களுக்கும் அம்மன்னன் ஆதரவளித்து, இலக்கியவளர்ச்சியில் ஊக்கங்காட்டினான். இந்தியாவிலிருந்து வந்த அறிஞர்களும் இவனது ஆதரவைப் பெற்றனர். மன்னனுடைய கருணைக்கும் ஆதரவுக்கும் உரியவர்களாகக் குருடர், நொண்டிகள், வறியவர்கள், ஐயமேற்போர், ஆதரவற்ற பெண்கள் ஆகியோர் இருந்தனர். விலங்கினங்களும், மன்னனுடைய பாதுகாப்பைப் பெற்றன. விஜயபாகு அரசனானபோது, 'உபராஜா'வாக நியமிக்கப்பட்ட அவனது தம்பி வீரபாகு, விஜயபாகு உயிர் வாழும்போதே இறந்துவிட்டான். எனவே 'ஆதிபாத'வாக நியமனம் பெற்றிருந்த மற்றொரு தம்பியான ஜயபாகு உபராஜாவாக்கப்பட்டான். தனது கலிங்க இராணி (திரிலோகசுந்தரி) வாயிலாகப் பிறந்த மகனான விக்கிரமபாகுவை ஆதிபாதவாக விஜயபாகு நியமித்தான். உபராஜாவுக்குத் தக்கிண தேசமும், ஆதிபாதவுக்கு உருகுணையும் உரிய மாகாணங்களாக விளங்கின. விக்கிரமபாகு தன் மாகாணத்துக்கே சென்று, மகாநாகஹுலவில் தங்கி அதன் பரிபாலனத்தைக் கவனித்து வந்தான். விஜயபாகு 1110-ல் தன் எழுபதாவது வயதில் காலமானான்.

மகாபராக்கிரமபாகு

பொலன்னறுவையில் அரசோச்சிய மன்னர்களுள் தலையானவன், மகா பராக்கிரமபாகு எனச் சிறப்பிக்கப்பட்டுள்ள 1ம் பராக்கிரமபாகு ஆவான். பொலன்னறுவைக்குச் செல்பவர்களுக்கு அங்குள்ள அவனது கட்டிடங்களின் சிதைவுகளும், நினைவுச் சின்னங்களும், பரந்த பராக்கிரம சமுத்திரமும் அவனை நினைவுக்குக் கொண்டுவரும். பொலன்னறுவையை எழில்மிக்க நகராக ஆக்கிய பராக்கிரமபாகு, நாட்டு மக்களின் சுபீட்சத்துக்கும் சமய முன்னேற்றத்திற்கும் பெரும் பணிகளை ஆற்றி நாட்டுக்கும் பெருமை தேடினான். போர்த்திறமை மிக்க இம்மன்னன் தான் அரசனாதற்கு ஆற்றிய போர்களுக்குப் பின்னர், வெளிநாடுகளில் தன் புகழையும் மதிப்பையும் பரவச் செய்தற்குச் சில போர்களை மேற்கொண்டான். இத்தகைய பல வியத்தகு சாதனைகளை நிறுவிய பெருமன்னனான மகா பராக்கிரமபாகுவின் வரலாற்றை, வரலாற்றில் அவனுக்குள்ள இடத்தைத் தீர்மானிப்பதற்கு அவனுடைய வரலாற்றை முதலில் அறிய முற்படுவோம்.

சூளவம்சம் (1ம் பாகம்) மகாபராக்கிரமபாகுவின் காவியம்

சூளவசம்சத்தின் முதற்பாகம் 37ம் அத்தியாயத்தில் தொடங்கி 79ம் அத்தியாயத்துடன் முடிவடைகின்றது. இப்பாகத்தைப் பாடியவர் தர்மகீர்த்தி

தேரர் என்பது சிங்கள மரபு வழக்கு. இதைத் கைகரும் ஏற்றுள்ளார். ஆனால் மகாபராக்கிரமபாகுவின் காலத்தில் வாழ்ந்த மொகல்லான தேரரே இதன் ஆசிரியரென வேறொரு பௌத்த அறிஞர் கருதுகின்றார். சூளவம்சம் முதற்பாகம் முழுவதும் ஒரே ஆசிரியராற் பாடப்படாது, வெவ்வேறு காலங்களில் வாழ்ந்தவர்களாற் பாடப்பட்டுமிருக்கலாம். பராக்கிரமபாகுவைப் பற்றிப் பாடப்பட்ட பகுதி (62ம் அத். - 79ம் அத்.) ஒரே ஆசிரியரினுடையதென்பதில் ஐயமில்லை. மகாவம்ச ஆசிரியரைப் போலவே சூளவம்ச (முதற்பாகம்) ஆசிரியரும் வடமொழிக் காவியங்களை, காவிய இலக்கணங்களையும், அலங்கார விதிகளையும் கற்றுத் தேர்ந்தவராதலால், மகாபராக்கிரமபாகுவின் வரலாற்றைக்கூறும் பகுதியில் அவற்றின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுகின்றது. மகாவம்சத்தின் காவியத் தலைவனாகத் துட்டகாமணி விளங்கியதையொப்ப, சூளவம்ச முதற்பகுதியின் பாட்டுடைத் தலைவனாக மகாபராக்கிரமபாகு திகழ்கின்றான். இதை நாம் எளிதிற் கண்டுகொள்ளலாம். சூளவம்சத்தைப் பாடிய ஆசிரியர் மகா பராக்கிரமபாகு வின் சமகாலத்தவராக வாழ்ந்து, அவனுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை விரிவாக அறிந்ததுமன்றி, அவற்றில் பங்குகொண்ட பாத்திரங்களைச் சந்தித்தும், அரசனது அவைக்களத்திற் பேணப்பட்ட பதிவேடுகளைப் பார்வையிட்டும் மிகுதியான விவரங்களைத் திரட்டித் தந்துள்ளார். அதேவேளையில், மகாபராக்கிரமபாகுவின் வாண்மையைப்பெற்ற ஒரு பிக்குவாகவும் அவர் இருந்ததால், நன்றியுணர்வைக் காட்டும் வகையில் அவன் புகழைக் காவிய வடிவில் பாடிச் சென்றுள்ளார். காவியத் தலைவனுக்கு உரிய பல பண்புகள் பராக்கிரமபாகுவிடம் உண்டு என்பதும் மறுப்பதற்கில்லை.

பராக்கிரமபாகு ஒரு பெருமன்னன் என்பது உண்மையேயாயினும், அவனிடம் சில குறைகள் இருந்திருக்கக்கூடும். ஆனால் காவியத் தலைவன் தன்னேரில்லாத் தலைவனாக இருக்கவேண்டியது கட்டாயமாதலால், சகல நற்பண்புகளின் உறைவிடமாகப் பராக்கிரமபாகுவைச் சித்தரிப்பதில் சூளவம்ச ஆசிரியர் ஈடுபட்டுள்ளார். அவனை ஓர் ஒப்பற்ற வீரனாகவும், அறநெறியாளனாகவும் காட்ட அவர் முனைகின்றார். இவ்வாறான நோக்கங்களுக்கு, பராக்கிரமபாகு போர்களில் எய்திய தோல்விகளைக் குறிப்பிடுவதோ, அன்றி அவனது துரோகச் செயல்களை விவரிப்பதோ ஏற்புடையதாகாது. அவனது நற்பெயருக்கும், வீரத்திற்கும் மாசு கற்பிக்கும் செய்தி எதையும் சூளவம்ச ஆசிரியர் குறிப்பிடாது விட்டுள்ளார். சிலவற்றைக் குறிப்பிட நேர்ந்தால், அவற்றுக்கு ஆசிரியர் சமாதானமும் கூறியுள்ளார். சூளசம்சத்தில் வரும் பராக்கிரமபாகுவின் இளமைக்கால விவரங்களை நோக்கும்போது, ஆசிரியரின் இத்தகைய முயற்சிகள் பல எமக்குத் தெரியவரும். தனது கடமையைச் செய்யாத ஒரு தளபதியை பராக்கிரமபாகு வஞ்சித்துக் கொல்வதை நாங்கள் காணலாம். (65ம் அத். 35ம் தொடர் - செய்) தன்னை வளர்த்த சிறிய தந்தையை மீறுதல், விருந்தினனாகக் கஜபாகுவுடன் வாழ்ந்துகொண்டே அவனை வஞ்சிக்கத் திட்டமிடுதல் ஆதியன பெரும் அரச உபாயங்களாகக் கூறப்படுகின்றன. வீராவேசம் பொருந்திய வார்த்தைகளை யெல்லாம் அவன் பேசுவதாகக் கூறப்படினும், உண்மையான சண்டைகளை

நடத்தியவர்கள் அவனுடைய போர்வீரர்களே. சில நிகழ்ச்சிகள் ஆசிரியரின் கற்பனையில் உருவானவையே (67ம் அத். வரும் சில சண்டைகள்). பராக்கிரமபாகுவைச் சிறந்த வீரனாக்குவதற்கு, அவனது மாற்றாரைப் பேடிகளாகவும் குறைந்த போர்த்திறமையுடையவர்களாகவும் சூளவம்ச ஆசிரியர் சித்தரித்துள்ளார். கஜபாகுவோ, மானாபரணனோ பராக்கிரமபாகுவுக்குக் குறைவான ஆற்றலுடையவர் களாகக் காணப்படாவிடினும், அவர்களின் திறமையை நாம் கண்டுகொள்ள முடியாதவாறு பராக்கிரமபாகுவே பெரும் வீரனாகக் காட்டப்பட்டுள்ளான். கௌடில்யரது அர்த்த சாஸ்திரம்போன்ற வடமொழி நூல்களில், அரசர்கள் வளரும்முறை பற்றியும் அரச தந்திரங்கள் பற்றியும் அறிந்தவற்றைப் பராக்கிரமபாகு வின் வாழ்க்கை வரலாற்றுடன் இணைத்து விட்டதாகக் **கைகர்** முதலான அறிஞர் கருதுவர். குறிப்பாக, கஜபாகுவின் விருந்தினனாக வாழும்போது, இராஜரட்டையின் நிலைமைகளை உளவறிவதில் பராக்கிரமபாகு ஈடுபடுவதாகக் கூறப்படுதல் இதையே காட்டும் என்பர்.

சூளவம்ச ஆசிரியரை வழிநடத்திய எண்ணங்களையும் கொள்கைகளையும் நாம் அறிந்துகொண்டால், அந்நூலிலுள்ள விவரங்களிலிருந்து பராக்கிரமபாகுவின் உண்மை வரலாற்றை அறிந்துகொள்ளல் இலகுவாகவிருக்கும். அவனைப் பற்றிய விவரங்களைக் கூறுமிடத்து கற்பனையும் உண்மைச் செய்தியும் கலந்து விரவியிருப்பினும், பெரும்பாலும் உண்மைச் செய்திகளின் அடிப்படையிலேயே அவனுடைய வரலாறு சூளவம்சத்தில் கூறப்படுகின்றது. இதிலுள்ள சில முக்கிய செய்திகள், கல்வெட்டுக்கள் போன்ற பிற ஆதாரங்களாலும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. குருணாகலைக் கண்மையிலுள்ள சங்கமு-விகாரையிலும், தேவனகலையிலும் உள்ள இரு பொறிப்புக்கள் இவற்றுள் முக்கியமானவை. பராக்கிரமபாகுவின் பாண்டி நாட்டுப் படையெடுப்புப் பற்றிய முழுவிபரங்களைச் சூளவம்சத்திலிருந்து அறியமுடியவில்லை. அப்படையெடுப்புத் தோல்வியில் முடிவுற்றதால், சூளவம்சம் முடிவைக்கூறாது விட்டுள்ளது. தென்னிந்தியாவிலுள்ள சோழமன்னர்களின் சில கல்வெட்டுக்களால், சூளவம்ச விவரத்தைத் திருத்தவும் நிரப்பவும், மேலதிக விவரங்களைச் சேர்க்கவும் முடிகின்றது. துட்டகாமணியின் வரலாற்றை மகாவம்ச ஆசிரியர் பாடியுள்ள முறைக்கும், பராக்கிரமபாகுவின் வரலாற்றைச் சூளவம்ச ஆசிரியர் பாடிய முறைக்கும் சில முக்கிய வேறுபாடுகள் உண்டு. சூளவம்ச ஆசிரியர் ஏறத்தாழ பராக்கிரமபாகுவின் சமகாலத்தவராக வாழ்ந்து, நம்பிக்கை வாய்ந்த பல செய்திகளையும், குறிப்புக்களையும் துணையாகக் கொண்டு அவனது வரலாற்றைக் காவிய உருவத்தில் தந்துள்ளார். மகாவம்ச ஆசிரியர் துட்டகாமணியினது காலத்திலிருந்து சில நூற்றாண்டுகள் பிந்தி வாழ்ந்து, விகாரைகளிற் பேணப்பட்ட மரபுவழிச் செய்திகளையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு, அவனுடைய காவியத்தைப் பாடினார். மகாவம்ச ஆசிரியர் தனது மகாவிகாரைக்குப் பெருமை தந்த மகாதூபத்தைத் துட்டகாமணி நிறுவியமையாலேயே அவனுக்குக் கடமைப்பட்டு அவனுடைய சமயப் பணிகளைச் சிறப்பிக்கும் வகையில் அவனது வரலாற்றை அமைத்துள்ளமையை காணலாம். இதேபோன்று சூளவம்ச ஆசிரியர் பெரும்பாலும் பராக்கிரமபாகுவின் வாண்மையைப்

பெற்ற ஒருவராகக் கருதப்பட்டமையால், தன் சொந்த நன்றியறிதலையே தனது காவியத்தின் வாயிலாகத் தெரிவிக்கின்றார் எனல் வேண்டும். இதனால், பராக்கிரமபாகுவின் சமயப்பணிகளேயன்றி, போர்முயற்சிகளும், பிற சாதனைகளும் ஏறத்தாழ ஒரேயளவு கவனத்தைப் பெற்றுள்ளதைக் காணலாம்.

விஜயபாகுவின் மறைவிற்குப் பின்னரான அரசியல் நிலைமைகள்

விஜயபாகு தனது தம்பியான ஜயபாகுவை உபராஜாவாகவும் மகனான விக்கிரமபாகுவை (கலிங்கராணியின் வாயிலாகப் பிறந்தவன்) ஆதிபாதவாகவும் நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. விஜயபாகு இறந்தபோது, நெடுநாளைய வழமைப்படி, ஜயபாகு அரசனாக, விக்கிரமபாகு உபராஜாப் பதவியைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால், பாண்டிய இளவரசனை மணம் புரிந்திருந்த அவனது சகோதரியான மித்த இவ்வாறு நிகழவிடவில்லை. அரசவையின் முக்கியஸ்தர்களையும், பிரதான பிக்குத் தலைவர்களையும் கலந்து, ஜயபாகுவை அரசனாக்கவும், விக்கிரமபாகுவுக்குப் பதில் தன் மூத்த மகனான மானாபரணனை உபராஜாவாக்கி உரிமையாளனாக்கவும் சதிசெய்தாள். உருகுணையிலிருந்த விக்கிரமபாகுவுக்குத் தந்தையிறந்த செய்தியைத்தானும் தெரிவிக்காது இச்சதித்திட்டம் தலைநகரில் நிறைவேற்றப்பட்டது. ஜயபாகுவை ஒரு கைப்பாவையாக வைத்து ஆட்சியலுவல்களை மித்தாவின் புதல்வர்களே (மானாபரணன், கீர்த்தி ஸ்ரீமேகன், ஸ்ரீவல்லபன்) கவனிக்கவேண்டும் என்பதே மித்தாவின் உண்மையான கருத்தாகவிருந்தது. இச்சதித்திட்டம் பாரதூரமான விளைவுகளைக் கொண்டிருந்தது. கலிங்க மரபினரை அரசைப் பெறவிடாது தடுக்கவும், தென்னிந்தியாவில் உள்ள தாய்வழிக் கொள்கையை இலங்கையிற் புகுத்தவும் இத்திட்டம் முயன்றது. இத்திட்டத்தின் விளைவாக, இலங்கை அரை நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாகக் கோரமான உள்நாட்டுப் பூசல்களையும், போர்களையும், அழிவுகளையும் அனுபவிக்கலாயிற்று.

விக்கிரமபாகுவை உபராஜாப் பதவியைப் பெறாது தடுத்ததுடன் திருப்தி கொள்ளாது, மித்தாவின் ஆதரவாளர் அவனைக் கைதியாக்கவும் எண்ணங் கொண்டு, அவன் ஆட்சிசெய்து வந்த உருகுணை மீது ஒரு படையெடுப்பை மேற்கொண்டனர். விக்கிரமபாகுவும் இதையறிந்து தன் அரசிருக்கையான மகாநாகஹூலவிலிருந்து முன்னேறி, புத்தளைப் பகுதியில் மித்தாவின் புதல்வர்களது படைகளை எதிர்கொண்டு, பல்வேறு இடங்களில் நடைபெற்ற சண்டைகளில் அவர்களைப் புறங்கண்டான். இவ்வெற்றியைத் தொடர்ந்து பொலன்னறுவைக்கே சென்று, ஆட்சியைக் கைப்பற்றினான். மூன்று சகோதரர்களின் திட்டம் கைகூடாது போகவே, அவர்கள் தக்கிண தேசத்தையும், உருகுணையையும் தமக்குள் பங்கிட்டு ஆட்சியை நடத்தலாயினர். மூத்தவனான மானாபரணன் தக்கிணதேசத்தையும், கீர்த்தி ஸ்ரீமேகன் உருகுணையின் மேற்குப் பகுதியான துவாதச சகசவையும், ஸ்ரீபல்லவன் உருகுணையின் கிழக்குப் பகுதியான அட்டசகசவையும் ஆட்சி செய்யலாயினர். இவர்களின் தலைநகர்கள் முறையே புங்ககாமம் (டெடிகமை), மகாநாகஹூல, உடுந்தொர என்பனவாக அமைந்தன.

ஆனால் இந்த நிலைமையுடன் மூன்று சகோதரர்களும் திருப்தி கொள்வார்கள் என எதிர்பார்த்திருக்கமுடியாது. விக்கிரமபாகுவைத் தோற்கடிக்கப் படைகளைத் தக்கிண தேசத்திற் சேர்த்து வரலாயினர். இதையறிந்த விக்கிரமபாகு, தக்கிணதேசத்துக்கு முன்னேறி அவர்களின் படைகளை முறியடித்து அவர்களை 'பஞ்சயோஜன' என்ற பஸ்துன் கோறளைக்குப் பின்வாங்க வைத்தான். இதனிடையே, இந்தியாவிலிருந்து ஓர் அரசன் (பலந்தீபத்தின் தனியரசனான வீரதேவன் என இவனைச் சூளவம்சம் குறிப்பிடுகின்றது.) படையுடன் மகாதீர்த்தத்திலிறங்கிய செய்தி விக்கிரமபாகுவுக்கு எட்டவே, தன் போர் நடவடிக்கைகளை நிறுத்தி, புதிய பகைவனை எதிர்கொள்ள இராஜரட்டை மீண்டான். வீரதேவன் விக்கிரமபாகுவின் படைகளை முறியடித்து, சிங்களச் சேனாபதியையும் (ரக்கஹ) கைது செய்தான். கொட்டியர்ப்பற்று (கொட்டசார) வரை பின்வாங்கியோடிய சிங்களப் படையைப் பின்தொடர்ந்த படையெடுப்பாளன் அங்கு நடைபெற்ற இறுதிச் சமரில் தோல்வியெய்தியது மன்றி, களத்திலேயே உயிர் நீத்தான். இதன் பின் விக்கிரமபாகு பொலன்னறுவையை மீண்டு, இராஜரட்டையின் பரிபாலனத்தைக் கவனித்து வரலானான். பின்னர் விக்கிரமபாகுவும், அவனது பகைவர்களான மூன்று சகோதரர்களும் கடும் போர்களில் ஈடுபடாது, தத்தம் பகுதிகளைப் பரிபாலித்து வந்தனர். ஆனால், இவர்களுடைய ஆட்சியானது மக்களுக்கும், சமயத்துக்கும் நாட்டுக்கும் பெருந்தீங்கை உண்டுபண்ணியதாகச் சூளவம்சம் கூறுகின்றது. உயர்குடியினரை உதாசீனஞ்செய்து, தாம்சார்ந்த வகுப்பினர்க்கு முக்கிய பதவிகளை வழங்கியதாகவும், மிகுதியான மேலதிக வரிகளை மக்களிடம் வருத்திப் பெற்றதாகவும், பணவேட்கை அவர்களைப் பீடித்திருந்ததால் பௌத்தக் கோவில்களுக்குக் காணிக்கைகளாக வழங்கப்பட்ட இரத்தினங்கள் முதலானவற்றைச் சூறையாடியதாகவும் இவர்கள் மீது பழிகள் சுமத்தப்பட்டுள்ளன. உரியமுறையில் முடிசூடிய மன்னர்கள் ஆட்சி செலுத்தாமையாலும், ஆட்சியுரிமை பற்றி அடிக்கடி போர்கள் நிகழ்ந்தமையாலும், இலங்கையில் அந்நேரத்தில் ஆட்சியறவு நிலையே நிலவியதெனலாம். இதனிடையே, உருகுணையில் கீர்த்தி ஸ்ரீமேகனுடன் வாழ்ந்து வந்த அவனுடைய தாய் மித்தாவும், ஜயபாகுவும் மரணமெய்தினர். ஜயபாகுவின் மரணத்தின் பின், விக்கிரமபாகுவின் உரிமை மேலும் பலமடைந்ததால், இராஜரட்டையை அவன் உரிமையுடன் நிருவகித்து வரலானான்.

தக்கிணதேச அரசைப் பராக்கிரமபாகு பெறல்

பராக்கிரமபாகுவின் பிறப்பு, இளமை பற்றிய சூளவம்ச விவரங்கள் உண்மைச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் சாத்தியமில்லை. பெரும்பாலும் அவை பராக்கிரமபாகுவைச் சிறப்பிப்பதற்காகச் சேர்க்கப்பட்டவையென்பது கண்கூடு. விக்கிரமபாகுவால் தமக்கு உண்டான வடுவைப் போக்குதற்குத் தமக்கு ஓர் ஆண்மகவு இல்லாத குறையை எண்ணி மனாபரணன் வருந்திக் கடுந்தவமியற்றி, பல அறங்கள் செய்து, சமயப் பணிகள் செய்து பெரும் புண்ணியங்களைச் செய்ததன் பெறுபேறாகவே, **பராக்கிரமபாகு** அவனுக்குப் பிறந்ததாகக்

கூறப்பட்டுள்ளது. குழந்தை பிறந்ததை மனாபரணனும், நகரமாந்தரும், அமைச்சர்களும் ஆரவாரத்துடன் கொண்டாடி மகிழ்ந்தனர். வேதங்களில் விதிக்கப்பட்டதற்கமைய, பிறப்புக்குரிய கிரியைகளும் (ஜாதகர்மங்கள்) பிற வைபவங்களும் முறைப்படி மானாபரணனால் நடத்தப்பட்டன. இதுபோன்ற பிற கிரியைகளும், ஷத்திரிய குலத்து அரச குமாரர்களுக்கு வெவ்வேறு காலங்களில் நடைபெறும். இவையாவும் பராக்கிரமபாகுவுக்கும் நடைபெற்றதாகச் சூளவம்சம் நம்பவைக்கிறது. புரோகிதரும் ஏனைய பிராமணர்களும், எதிர்வு கூறுவோரும் பராக்கிரமபாகுவின் உடலிலுள்ள அறிகுறிகளைக் கண்ணுற்றதும், பின்வருமாறு கூறினர்: 'இலங்கைத் தீவை மட்டுமன்றி, ஜம்புத்துவீபத்தையுமே ஒரு குடைக்கீழ்க் கொணர்ந்து ஆளும் வன்மை இக்குழந்தையிடம் உண்டு'. விக்கிரமபாகுவிடம் தூதுவர்களை அனுப்பி, பராக்கிரமபாகு பிறந்த செய்தியைத் தெரிவித்தபோது, குழந்தைக்குப் பல ஆபரணங்களையும் வெகுமதிகளையும் அனுப்பித் தன் மகிழ்வைத் தெரியப்படுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது. மானாபரணனும், பராக்கிரமபாகு பிறந்த சில ஆண்டுகளில் இறந்துவிட்டான். இதன் பின் கீர்த்தி ஸ்ரீமேகன் தக்கிணதேச ஆட்சியாளனானான். அவன் ஸ்ரீவல்லபனை முழு உருகுணைக்கும் நிருவகிக்கும்படி விட்டான். இராஜரட்டையின் ஆட்சியாளனான விக்கிரமபாகுவும் விரைவில் இறந்துபோனான். அங்கே அவனது மகனான கஜபாகு ஆட்சியைப்பெற்றான். கஜபாகு ஆட்சியைப் பெற்றபோது, அவனை இலகுவில் புறங்கண்டுவிடலாம் என்ற நம்பிக்கையில், கீர்த்திஸ்ரீ மேகனும் அவன் தம்பி ஸ்ரீவல்லபனும் ஒரு படையெடுப்பை மேற்கொள்வதற்கு ஆயத்தமானார்கள். இராஜரட்டையில் கஜபாகுவுக்கு எதிராக அதிருப்தியை வளர்த்து, அவனது வேளைக்காரப் படைப் பிரிவினரையும் கையூட்டுக் கொடுத்து கட்சிமாற வைத்தனர். கஜபாகுவும் மிகவும் துணிகரமாகத் தன் படைகளுடன் முன்னேறி, ஸ்ரீபல்லவனையும், கீர்த்தி ஸ்ரீமேகனையும் தனித்தனியே அவர்களின் மாகாணங்களிலேயே தோற்கடித்து மீண்டான். பொலன்னறுவைக்குத் திரும்பியதும், தனக்கு எதிராக நடந்துகொண்ட தலைவர்களைத் தண்டித்தான். இதன்பின்னர், கஜபாகுவுக்கு எதிராகப் போரைத் தொடர்ந்து நடாத்தக் கீர்த்தி ஸ்ரீமேகனும், தம்பியும் துணியவில்லை.

பராக்கிரமபாகு இராஜரட்டைக்குச் செல்லல்

மானாபரணன் இறந்தபின், அவனுடைய விதவையும், பிள்ளைகளும் ஸ்ரீவல்லபனுடன் மகாநாகஹுலவிலேயே தங்கிவந்தனர். பராக்கிரமபாகுவுக்கு அங்குள்ள வாழ்க்கைமுறை திருப்தியைத் தராததால், தக்கிண தேசத்துக்குச் சென்று, கீர்த்தி ஸ்ரீமேகனுடைய தலைநகரான சங்கத்தலீயில் (இப்போதைய ஹத்னாகொடவில்) வாழலானான். குழந்தைகள் இல்லாத கீர்த்தி ஸ்ரீமேகன், தன் தமையனது பிள்ளையான பராக்கிரமபாகுவைத தன் பிள்ளையாகப் பாவித்து, பேரன்புடன் பேணி வளர்த்து வந்தான். ஷத்திரிய அரச குமாரர்கள் கற்கவேண்டிய சகல கலைகளையும் வித்தைகளையும் பராக்கிரமபாகு கற்றுத்தேறினான். அரசியற்கலைபற்றி கௌடில்யரின் நூலையும் கற்றிருந்தானெனக் குறிப்பிட்டிருத்தல்

கவனிக்கத்தக்கது. தன் (சிறிய) தந்தையுடன் தலைநகரை விட்டு, வெவ்வேறு பகுதிகளுக்குச் சுற்றுலாக்களிற் சென்று அனுபவம் பெற்றான். இதனிடையே, உருகுணையில் ஸ்ரீவல்லபன் இறந்துபோக, அவனது மகனான மானாபரணன் ஆட்சியைப் பெற்றுக்கொண்டான். நாட்டை ஒன்றுபடுத்தி ஒரு குடைக்கீழ் ஆளும் எண்ணங்கொண்ட பராக்கிரமபாகு, இராஜரட்டையின் நிலைமைகளைத் தானே நேரில் சென்று அறிய அவாக் கொண்டான். தன் சிறிய தந்தை தனது திட்டங்களுக்கு மறுப்புத் தெரிவிப்பாரென்பதை ஊகித்துக்கொண்டு, அவனுக்குத் தெரியாமலே இரகசியமாகத் தலைநகரை விட்டுப் புறப்பட்டான். பதலகொட என்ற எல்லைப்புறக் காவல் நிலையத்துக்குச் சமீபமாக பராக்கிரமபாகுவும் அவனது தோழர்கள் சிலரும் சென்றபோது, அந்நிலையத்தைக் காவல்செய்த சங்கா என்ற தளபதியிடம் சிக்கிக் கொண்டனர். பராக்கிரமபாகுவை அவன் முன்னதாகவே அறிவானாதலால், கீர்த்தி ஸ்ரீமேகனது அனுமதியைப் பெறாது அவர்கள் வெளியேற முற்படுவதையுணர்ந்து அவர்களை மறித்து வைத்தான். பராக்கிரமபாகுவை நல்லமுறையில் உபசரித்துக்கொண்டு, அதேவேளையில் தனது ஆட்கள்மூலம் கீர்த்தி ஸ்ரீமேகனுக்குச் செய்தியனுப்பினான். இதைக் குறிப்பாக அறிந்துகொண்ட பராக்கிரமபாகு, சேனாபதியைக் கொல்லுமாறு கட்டளையிட்டான். இக்கட்டளையை அவனது ஆட்களிலொருவன் நிறைவேற்றவே, அங்கு அமைதியற்ற ஒரு நிலை தோன்றியது. அதையும் சமாளித்துக்கொண்ட பராக்கிரமபாகு இராஜரட்டையை நோக்கித் தன் பயணத்தைத் தொடர்ந்தான். சேனாபதி சங்காவைக் கொன்றமை பராக்கிரமபாகுவின் பெயருக்கு இழுக்கையே தருவதாகும். ஆயின், இது உண்மை வரலாற்று நிகழ்ச்சியா என்பது ஐயத்துக்குரியது. பதலகொடவை விடுத்து, கிழக்குநோக்கிச் சென்று காலவாவி மாவட்டத்துக்கு அண்மையிலுள்ள புத்தகாம (மணிக்தெண) என்ற இடத்தை அடைந்த பராக்கிரமபாகு, காலவாவி அதிகாரியை அழைத்து உரையாடி அவனுக்கு வெகுமதிகளைக் கொடுத்தனுப்பினான். இதனிடையே, பராக்கிரமபாகுவின் நடவடிக்கைகளால் கஜபாகுவுக்கும் தனக்கும் வீணே போர் மூண்டுவிடும் என்ற அச்சத்தாற் பீடிக்கப்பட்ட கீர்த்தி ஸ்ரீமேகன், படைகளையனுப்பி பராக்கிரமபாகுவைக் கைப்பற்ற முயன்று தோல்வியடைந்தான். மாத்தளைப் பகுதியிலுள்ள மலைகளிலும் லக்கலை மலைகளிலும் மறைந்து வாழ்ந்து, கீர்த்தி ஸ்ரீமேகனது படைகளின் முயற்சிகளை வீணடித்தபின், கஜபாகுவின் பிரதேசமான ஜனபதவுக்குச் செல்லலானான். தனது பிரதேசத்துக்குள் பராக்கிரமபாகு வந்துள்ளதை அறிந்த கஜபாகு, பொலன்னறுவைக்கு அவனை வரும்படி அழைப்பு அனுப்பினான். பயத்தால் பீடிக்கப்பட்டே கஜபாகு இவ்வாறு அழைப்பை விடுத்தானெனச் சூளவம்சம் கூறுவதை நாம் ஏற்கவேண்டியதில்லை. பராக்கிரமபாகுவைப் பெருவீரனாகக் காட்டுதற்கு ஆசிரியர் கையாண்ட பல உத்தி முறைகளுக்கு இதையும் ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

கஜபாகுவின் அழைப்பையேற்றுப் பொலன்னறுவைக்குத் தன் தோழர்களுடன் சென்ற பராக்கிரமபாகு, அவனுடைய விருந்தாளியாகச் சில ஆண்டுகள வாழலானான். இந்நாட்களில் இராச்சிய நிலைமைகளை இரகசியமாக

அறிந்துகொள்வதிலும் கஜபாகுவின் அதிகாரிகளது அரச விசுவாசத்தைக் கெடுப்பதிலும் அவன் ஈடுபட்டதாகக் கூறப்பட்டுள்ளது. தனது கடைசிச் சகோதரியை அழைப்பித்து அவளைக் கஜபாகுவுக்கு மணம்முடித்து வைத்து அவனைத் திருப்திப்படுத்திக் கொண்டு, தனது உளவு வேலைகளையும் மிகத் திறமையாகச் செய்து முடித்ததாகக் கூறப்படுகின்றது. இவைபற்றிக் கூறப்படும் விவரங்கள் ஆசிரியரின் காவியப்புலமையைக் காட்டுகின்றனவேயன்றி, உண்மை நிகழ்ச்சிகளாக அவையிருக்குமெனக் கொள்ளத் தேவையில்லை. கஜபாகுவின் அதிகாரிகளையும், படைத் தலைவர்களையும் ஒரு வேளை தனக்கு ஆதரவு காட்டும்படி செய்தற்குப் பராக்கிரமபாகு முயன்றிருக்கலாம். ஆனால், இம்முயற்சிகள் பற்றி கஜபாகுவுக்குத் தகவல் கிடைக்கவே, இராஜரட்டையில் தொடர்ந்து வாழுதல் ஆபத்தானதென்பதை உணர்ந்து பராக்கிரமபாகு தன் பிறப்பிடமான தக்கிண தேசத்துக்கு மீண்டான். தக்கிண தேசத்திலும் சரக்காமத்தில் (செலகாமம்) தங்கியிருந்து கொண்டு தலைநகரான சங்கத்தலீக்குச் செல்ல மறுத்தான். பின்னர், பராக்கிரமபாகுவின் தாய் இரத்தினாவலி தலையிட்டு, கீர்த்தி ஸ்ரீமேகனையும் பராக்கிரமபாகுவையும் ஒற்றுமைப்படுத்தி வைத்தாள். பராக்கிரமபாகு தலைநகர்க்கு (சங்கததலீ) மீண்ட சிறிது காலத்தில் கீர்த்தி ஸ்ரீமேகன் காலமானான். இதைத் தொடர்ந்து, பராக்கிரமபாகு தக்கிணதேச ஆட்சியாளனாக 1140 அளவில் பதவியேற்றான். இச் செய்தியை உருகுணையின் ஆட்சியாளனான மானாபரணனுக்கும், இராஜரட்டையின் ஆட்சியாளனான கஜபாகுவுக்கும் தெரியப்படுத்தினான்.

தக்கிணதேச ஆட்சியாளனாகப் பராக்கிரமபாகு பதவியேற்றதும், தன்னை எதிர்நோக்கிய பல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முற்பட்டான். இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவர சிறு வயதிலேயே எண்ணங் கொண்டதாகக் கூறப்படும் பராக்கிரமபாகு, இப்போது ஒரு முக்கிய மாகாண, ஆட்சியாளனானதும், தன் இளமைக்கனவை நனவாக்குவதற்கு ஏற்ற ஆயத்தங் களைச் செய்யலானான். எல்லைப்புற காவலரண்களை நிறுவி அவற்றைப் பலப்படுத்திக்கொண்டு, தக்கிணதேசத்தின் வளங்களை விருத்தி செய்வதில் ஈடுபட்டான். தக்கிணதேசத்தின் ஒரு முக்கிய ஆறான தெதுறு ஓயாவில் (ஜஜ்ஜரநதி) சில பாசனத்திட்டங்களை ஏற்படுத்தியதுடன், பஸ்துன் கோறளையிலும் (பஞ்சயோஜன) பயிர்ச்செய்கையை விருத்தி செய்தற்கு வாய்ப்பான வகையில், அப்பகுதியிலுள்ள சகதியை அகற்றினான். அவன்க நிறுவிய தலைநகரான பராக்கிரமபுரத்திலும் (இப்போது அழிந்த நிலையில் உள்ள பண்டுவஸ்நுவரை) பராக்கிரம சமுத்திரம் போன்ற குளங்கள் வெட்டப்பட்டன. வியாபாரமும், சிறப்பாகப் பிறநாட்டு வணிகமும் இவன் கவனத்தைப் பெற்று விருத்தியடைந்தது. நாடு அபிவிருத்தியடைந்ததும், அதன் பலனை அரசாங்கம் பெறவியலாது நிருவாக அமைப்புத் தடைப்படுத்தலாம். எனவே, பாலன அமைப்பையுஞ் சீர்ப்படுத்தி, நிருவாகத்திறனை உறுதிப்படுத்தினான். நீண்ட காலமாக நடைபெற்ற உள்நாட்டுப் போர்களால் பாதிக்கப் பெற்றிருந்த நாட்டில், இந்த ஒழுங்குகளால் பெருமளவு நன்மையுண்டாயிருக்குமென எதிர்பார்க்கலாம்.

இவனுக்கு முன்னர் தக்கிணதேசத்தை ஆட்சிசெய்தவர்களுக்கும், இவனுக்கும் இடையேயுள்ள பெரும்வேறுபாடு இந்த ஒன்றிலிருந்தே புலப்படும். நாட்டின் வளங்களை விருத்தி பண்ணாது, வருவாயைத் தரும் மூலங்களைப் பெருக்காது, அநீதியான வரிமுறை, அரசாங்க அங்கீகாரத்துடன் நடைபெறும் கொள்ளை போன்றவற்றைப் பராக்கிரமபாகு கைக்கொள்ளாது, அபிவிருத்தியிலேயே தன் கவனத்தைச் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. அபிவிருத்தி வேலைகள் ஒரு புறம் நடைபெற்றபோது, மறுபுறம் இராணுவப் பயிற்சியும் ஒழுங்குகளும் நல்ல முறையில் நடைபெற்று வந்தன. படைப்பயிற்சியில், நுட்பமான போர்முறைகளும் சிறப்பான இடத்தைப் பெற்றன. மாகாணம் முழுவதிலுமுள்ள இளைஞர்கள் இராணுவப் பயிற்சி பெறுதற்குத் தூண்டுதலளிக்கப்பட்டு விசேட பிரிவுகளாக அவர்கள் அமைக்கப்பட்டிருந்தனர். அயல்நாடுகளிலிருந்து கூலிப்படைப் பிரிவுகள் சேவைக்கு அமர்த்தப்பட்டன. இவ்வாறான ஆயத்தங்கள் பூர்த்தியானதும், பராக்கிரமபாகு இராஜரட்டையைக் கைப்பற்றுதற்குத் தயாரானான்.

இலங்கை முழுவதற்கும் அரசனாதல், உருகுணையை அடிப்படுத்தல்

தக்கிண தேசத்துக்குப் பராக்கிரமபாகு அரசனானபோது, இராஜரட்டையில் கஜபாகுவும், உருகுணையில் மானாபரணனும் ஆட்சியாளர்களாக விளங்கினர். பராக்கிரமபாகு இராஜரட்டையையும், உருகுணையையும் கைப்பற்றி இலங்கை முழுவதற்கும் அரசனாக எண்ணி, இவ்விரு ஆட்சியாளருடன் நீண்ட போர்களை நடத்தலானான். இப்போர்களைப் பற்றிய வரலாறு மிக விபரமாகச் சூளவம்சத்தில் உள்ள ஓர் அத்தியாயத்தில் (அத். 70) கூறப்பட்டுள்ளது. பராக்கிரமபாகுவைத் தோல்வியே காணாத வீரனாகத் சித்தரிக்கும் நோக்கங்கொண்ட சூளவம்ச ஆசிரியர், அவன் எய்திய தோல்விகள் பற்றிக் குறிப்பிடாததில் வியப்பில்லை. நீண்ட காலமாக நடந்தேறிய போர்களின் பின்னரும், தொடர்ச்சியாகப் பராக்கிரமபாகு எய்திய வெற்றிகளின் முடிவிலும், பராக்கிரமபாகு தான் கருதியிருந்த இலக்கையடைந்து விட்டதாகத் தெரியவில்லை. சங்கத்தினர் தலையிட்டு, கஜபாகுவுடன் போர் செய்வதை நிறுத்தும்படி வற்புறுத்தி, அவனுக்குப்பின் பராக்கிரமபாகுவுக்கே உரிமை கிடைக்குமென்பதை கருத்திற் கொண்டு, அதுவரை பராக்கிரமபாகுவைத் தனது மாகாணத்துக்குத் திரும்பும்படி வேண்டி நின்றனர். 'எனவே, அரசனானவன் (பராக்கிரமபாகு), 'சங்கத்தினரின் ஆலோசனையை மதித்து, பெருமுயற்சியாற் பெற்ற இராச்சியத்தை மன்னனுக்குக் (கஜபாகு) கொடுத்து, தனது மாகாணத்துக்கே (தக்கிண தேசம்) மீண்டான். ஆ, அவன் கருணைதான் எத்துணைப்பெரியது!' (அத்.70 செய். 336). ஒரு பக்கச் சார்புடைய முறையில் அமைந்துள்ள இவ்வரலாற்றில் இவ்வாறு பராக்கிரமபாகு பெருந்தன்மையுடன் நடந்துகொள்வதாகக் கூறப்படினும், பிறிதோர் ஆதாரத்தால் (சங்கமுக்கல்வெட்டால்) இவ்விரு அரசகுமாரர்களும் தாம் நடத்திய போர்களில் வெற்றி தோல்வி காணமுடியாத நிலையிலேயே, சங்கத்தினர் தலையிட்டு இருவர்க்குமிடையே சமத்துவ அடிப்படையில் சமரசம்செய்து வைத்ததாக அறிகின்றோம். எனவே, பராக்கிரமபாகு நடத்திய போர்களில்

அவன் எய்திய தோல்விகள் சூளவம்சத்தில் குறிப்பிடப்படாததால், இவ்வரலாற்றை நாம் அப்படியே உண்மையாகக் கொள்வதற்கில்லை.

இராஜரட்டையை வெல்லப் பராக்கிரமபாகு நடத்திய போர்களைப் பற்றிய விவரங்களைத தவிர்த்து, அவற்றின் போக்கை மட்டும் சுருக்கமாக இங்கே நோக்கலாம். முதலில், பராக்கிரமபாகு மகாமலைய தேசம் என்ற பகுதியைக் (கஜபாகுதவின் ஆட்சிக்குட்பட்ட மலைநாட்டை) கைப்பற்றுவதில் கவனம் செலுத்தினான். இப்பகுதியைக் கைப்பற்றுவதன் மூலம், தக்கிணதேசத்தின் வலது புறத்திலிருந்து எவ்வகை ஆபத்தும் வராது தவிர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் அவனுக்கிருந்திருக்கலாம். கஜபாகுவின் ஒரு தண்டநாயகனான (தளபதி) ரக்கன் என்பவனைத் தன்பக்கத்துக்குச் சேரவைத்து, அப்பிரதேசத்தின் பகுதிகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றினான். இதை முடித்துக்கொண்டதும், இராஜரட்டையைத் தாக்குதற்குத் தன் திட்டங்களை வகுத்து, தன் அதிகாரி களுக்குத் தெரியப்படுத்தினான். அவற்றை நுணுக்கமாகப் பின்பற்றியே போரை நடாத்தவேண்டுமென அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். கரையோரமாக முத்துத் தளங்களை நோக்கியும், உள்நாட்டினூடாகக் காலவாவி நோக்கியும் இரு படைப்பிரிவுகள் முன்னேறின. இவற்றுள் முத்தாகர என்ற மாவட்டத்தில் வெற்றியீட்டின படைப்பிரிவு அங்கு ஓர் அரணை நிறுவியது. காலஓயாவைக் கடந்து முன்னேறிய மற்றப் படைப்பிரிவு, அம் மாவட்டத்தில் சில வெற்றிகளை அடைந்தும் மேலே முன்னேறாது தடுத்து நிறுத்தப்பட்டது. மற்றொரு படைப்பிரிவு நாலந்தாவுக்குச் சமீபமாக அம்பன் கங்கையைக கடந்து, கஜபாகுவின் பிரதேசங் களுக்குள் புகுந்தன. தன் படைப் பலத்தைக் கூட்டியபின், பொலன்னறுவையைத் தாக்குதற்குப் பராக்கிரமபாகு ஆயத்தமானான். தன் தலைநகரை நோக்கிப் பராக்கிரமபாகுவின் படைகள் வருவதையுணர்ந்த கஜபாகு, விரைவாக இரு படைப்பிரிவுகளை அனுப்பிப் பராக்கிரமபாகுவின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்துவதில் ஒன்றையும், முத்தாகர மாவட்டத்தில் நிறுவப்பட்ட அரணைத தாக்கிப் பராக்கிரமபாகுவின் கவனத்தைத் திசை திருப்புவதில் மற்றதையும் ஈடுபடுத்தினான். ஆனாலும் பராக்கிரமபாகுவின் படைகள் அளகார மாவட்டம் வரை முன்னேறி அங்கு கஜபாகுவின் படையை வென்றது. மேற்கு நேக்கிச் சென்ற படையுடன் பராக்கிரமபாகுவின் படைப்பிரிவு அநுராதபுரத்துக்கு அண்மையில் பொருதியது. இச்சண்டையில் பராக்கிரமபாகுவின் படை தோல்வியடையும் தறுவாயில், உதவிபெற்றுத் தப்பிக்கொண்டது. இதன் பின்னர், பொலன்னறுவையை நோக்கிய முன்னேற்றத்தைத் தொடர்வதற்கு மீண்டும் ஆயத்தமானான். நாலந்தாவில் தன் தலைமை நிலையத்தை அமைத்துக்கொண்டு, ஆளிசார மாவட்டத்தை அடிப்படுத்தினான். இதன்பின், பொலன்னறுவையைத் தாக்குவதற்கு உத்தரவு கொடுத்தான். இவ்வேளையில் உருகுணை ஆட்சியாளனான மானாபரணனும் தன் படைகளுடன் பராக்கிரமபாகுவைச் சார்ந்து பராக்கிரமபாகுவின் பலத்தை அதிகரிக்க வைத்ததாகச் சூளவம்சம் தெரிவிக்கின்றது. முன்னர் கஜபாகுவுடன் சேர்ந்து பராக்கிரமபாகுவுக்கு எதிராகச சண்டைசெய்து தோல்விகள் அடைந்த மானாபரணன், இராஜரட்டையைப்

பராக்கிரமபாகு வெல்வது உறுதியானதும், பின்னவனை ஆதரித்ததாகச் சூளவம்சம் கூறுகின்றது. பொலன்னறுவையைத் தாக்குவதற்கென மானாபரணன் படைகளை சொபரவில் (சொரபர) வைத்துக் கொண்டிருந்தான். பராக்கிரமபாகுவின் படைகள் இலங்காநாத, மகிந்தன் முதலான சிறந்த தளபதிகளின் தலைமையில் கண்டிகாமம் என்ற கணவாய் வரை முன்னேறிச்சென்றன. பொலன்னறுவையின் மேற்கேயிருந்த இக்கணவாயே, பொலன்னறுவையை அவ்வழியால் அடைவதற்கு உள்ள ஒரே வாயிலாகும். கஜபாகுவின் படைகள் அக்கணவாயைப் பாதுகாக்க எவ்வளவோ முயன்றும் தோல்விகண்டன. கணவாயைக் காக்கவியலாது போகவே, கஜபாகுவின் படைகள் பொலன்னறுவைக்கு விரைந்தன. அந்நேரத்தில் பெரும் குழப்பம் உண்டாயிற்று. இருப்பினும், கஜபாகு நிலைமையைச் சமாளித்து, படைகளைத் திரட்டி, பொலன்னறுவையை இயன்ற அளவுக்குப் பாதுகாப்பதற்கு, நகரின் வெளியே அணிவகுக்கச் செய்தான். கஜபாகுவின் சேனையைப் பின்தொடர்ந்து வந்த பராக்கிரமபாகுவின் படை, நகரின் வெளியே நிகழ்த்திய சண்டையில், மிகத் துரிதமான வகையில் வெற்றியை ஈட்டிக் கொண்டது. நகரினுட் புகுந்த பராக்கிரமபாகுவின் படைகள், கஜபாகுவைத் தேடிப்பிடித்து அவனைக் கைதியாக்கிக் கொண்டன.

பொலன்னறுவையைக் கைப்பற்றிய பராக்கிரமபாகுவின் படைகள், தமது அரசனுடைய எண்ணத்தையும் மிஞ்சி, கட்டுக்கடங்காது நடக்கத் தலைப்பட்டன. தலைநகரில் கொள்ளை, சூறையாடல் ஆகியவற்றைத் தொடர்ந்து கலவரமும் கொந்தளிப்பும் ஏற்பட்டன. போர் வீரர்களின் நடத்தைகளால் ஆத்திரமுற்ற மக்களின் தலைவர்களும் அதிகாரிகளும் கூடி, மானாபரணனைத் தமக்கு உதவுமாறு வேண்டிச் செய்தியனுப்பினர். சொபரவில் தங்கியிருந்த மானாபரணன், இந்த வாய்ப்பைத் தவறவிட விரும்பாது, தன் படைகளுடன் பொலன்னறுவையை நோக்கி விரைந்தான். தலைநகரில் உண்டான கலவர நிலைமையை அடக்கப் பராக்கிரமபாகு சேனாபதி தேவனது தலைமையில் ஒரு படையை அனுப்பி இருந்தான். ஆனால் அது தனது வேலையைத் தொடங்கு முன்னரே, மானாபரணனது படை பராக்கிரமபாகுவின் படைகளைத் தோற்கடித்து விரட்டியது. சேனாபதி தேவன் கைதியாக்கப்பட்டான்.

மானாபரணன் முதலில் அமைதியை நிலைநாட்டிக் கொண்டு, கஜபாகுவின் நம்பிக்கை வாய்ந்த அதிகாரிகளைக் கொன்று, இறுதியில் கஜபாகுவையும் ஒரு சுரங்க அறையில் கைதியாக வைத்தான். தனது முடிசூட்டு வைபவத்தை நடத்தவே இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வந்தான். கஜபாகுவுக்கு உணவைக் கொடாது, அவனைப் பல வழிகளில் துன்புறுத்தி வரலானான். இந்த இக்கட்டான நிலையில் பராக்கிரமபாகுவின் உதவியை நாடி, அவனிடம் ஒரு தூதுவனை கஜபாகு இரகசியமாக அனுப்பி வைத்தான். பராக்கிரமபாகு தாமதிக்காது பொலன்னறுவையை மீண்டும் தாக்கத் தன் படைகளை அனுப்பினான். உருகுணையிலிருந்து உதவிப் படைகள் வராது தடுக்கப்பட்டன. மானாபரணன் அப்படைகளிடம் தோல்வியெய்தி, உருகுணைக்குப் புனித சின்னங்களுடன்

தப்பியோடியதாகக் கூறப்பட்டுள்ளது. பராக்கிரமபாகுவின் படைகளால் விடுதலை செய்யப்பட்ட கஜபாகு கொட்டியர்ப்பற்றுக்கு (கொட்டசார) விரைந்து சென்று அங்கே தாக்கினான். இதன் பின்னரும் கஜபாகுவின் படைகளுக்கும் பராக்கிரமபாகுவின் படைகளுக்கும் சண்டைகள் நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. இச்சண்டைகளால் சலிப்பெய்திய கஜபாகு, சங்கத்தினரைத் தமது தகராற்றில் தலையிட்டுச் சமாதானத்தை ஏற்படுத்துமாறு வேண்டியதாகவும், இதற்கமைய சில பிக்குகள் கிரித்தனையில் தங்கியிருந்த பராக்கிரமபாகுவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி இருவர்க்குமிடையே போரை நிறுத்தி வைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தந்ததாது, ஐயக்கலம் ஆகிய இரு சின்னங்களும், முன்னர் விக்கிரமபாகு ஆட்சிசெய்தபோது, சில பௌத்த குருமார்களால் பாதுகாப்புக்காக உருகுணைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தன. அவற்றை மானாபரணன் பொலன்னறுவைக்குக் கொண்டு வந்திருந்தான்.

பௌத்த சங்கத்தினர் இரு தரப்பினருக்குமிடையே ஒரு சுமுகமான உடன்பாட்டை ஏற்படுத்தினர். இந்த உடன்பாடு மண்டலகிரி விகாரையில் பொறிக்கப் பட்டதாகக் கூறப்பட்டபோதும், அங்கு இப்போது அது காணப்படவில்லை. குருணாகலைக்கு அண்மையிலுள்ள சங்கமு விகாரையில் இவ்வுடன்பாடு பிரதிபண்ணப்பட்டுள்ளதைக் காணலாம். இருவரும் (கஜபாகுவும் பராக்கிரமபாகுவும்) தமக்குள் தமது ஆயுட்காலத்தில் இனிப் போர் செய்வதில்லை எனவும், இருவருள் எவர் முதலில் காலமாகின்றாரோ அவருக்குரிய பிரதேசங்கள் உயிர் வாழ்பவரான மற்றவருக்கே சேருமெனவும், இந்த இருவரில் எவருக்காயினும் பகை பூண்ட மன்னர்கள் இருப்பின் அம்மன்னர்கள் இருவருக்குமே பகைவர்களாவர் எனவும் இந்த உடன்பாடு கூறியது. சூளவம்சத்திற் குறிப்பிடப்பட்டுள்ள உடன்பாட்டுக்கும் இக்கல்வெட்டில் உள்ளதற்குமிடையே உள்ள வேறுபாடு முன்னரே காட்டப்பட்டுவிட்டது. மானாபரணன் கஜபாகுவுடன் நட்புறவை மீண்டும் ஏற்படுத்த முயன்றும், கஜபாகு இடமளிக்காததால் அம்முயற்சி தோல்வியில் முடிந்தது. உடன்பாடு எட்டப்பட்டபின், பராக்கிரமபாகு தனது பிரதேசமான தக்கிண தேசத்துக்குத் திரும்பிச் சிறிதுகாலம் அமைதியுடன் வாழ்ந்தான். இதனிடையே, கந்தளாயில் தன் இறுதிக் காலத்தைக் கழித்த கஜபாகு விரைவில் இறந்துபோனான். ஆனால், பராக்கிரமபாகு இப்போதும் இலகுவாக இராஜரட்டை அரசைப் பெறவியலாது சில நிகழ்ச்சிகள் தடைசெய்தன.

கஜபாகு இறந்தவுடன், அவனது அமைச்சர்கள் மன்னன் செய்திருந்த உடன்பாட்டைப் புறக்கணித்து, மானாபரணனைப் பொலன்னறுவைக்கு விரைந்து வந்து அரசையேற்கும்படி ஒரு வேண்டுதலை அனுப்பினர். பராக்கிரமபாகுவுக்கும் இச்செய்தி எட்டியதால், தன் படைகளை விரைவாக அனுப்பிப் பொலன்னறு வையைத் தன் வசமாக்கினான். கொட்டியார் வரை முன்னேறிய மானாபரணனது படைகள் மகாவலியைக் கடக்காதவாறு, அதன் கடவைகளை எல்லாம் பராக்கிரமபாகுவின் வீரர்கள் பாதுகாத்து நின்றனர். மானாபரணன் ஆற்றைக் கடக்க இயலாததால், போர் நிலைமையில் மந்தமேற்பட்டது. அவ்வேளையில்,

பராக்கிரமபாகுவின் ஒரு படைப்பிரிவு உருகுணையைத் தாக்க பஸ்துன் கோறளையிலிருந்து முன்னேறியது. இப்படைப்பிரிவு அங்கு அடைந்த வெற்றி களால், மானாபரணன் தன்படையின் சில பிரிவுகளை உருகுணைக்கே அனுப்ப வேண்டியவனானான். ஆனால், காவலற்ற ஒரு கடவையிருப்பதை மானாபரணன் அறிந்து அதனூடாகத தன் படைகளை அனுப்பி, விரைவில் பராக்கிரமபாகுவின் படைகளை நிலைகுலைய வைத்தான். பொலன்னறுவையை விட்டுப் பின்வாங்கி நாலந்தாவில் தங்கியபின், சிறிதுகால ஆறுதலுக்குப்பின் பராக்கிரமபாகுவின் படை போரைத் தொடர்ந்து நடாத்தியது. போர் நீண்டகாலமாக நடைபெற்றது. ஈற்றில் மானாபரணனது படை தோல்வி எய்தலாயிற்று. ஆனால், மானாபரணன் எதிரிகளிடம் சிக்காது உருகுணைக்குத் தப்பியோடினான்.

பராக்கிரமபாகு இத்துணை நீண்டகாலம், பொறுமையை இழக்காது, தன் இலக்கையடைதற்காக அயராது உழைத்து இப்போது வெற்றியைப் பெற்றான். பராக்கிரமபாகு 1153 அளவில் இலங்கை முழுவதற்கும அரசனாகப் பொலன்னறுவையில் முடிசூடிக் கொண்டான். தக்கிணதேச அரசனானபின், சுமார் பதின்மூன்று ஆண்டுகளின் பின்னரே இலங்கை முழுவதற்கும் அவன் அரசனாக முடிந்தது. உண்மையில், உருகுணையை அவன் அப்போதும் அடக்கிவிட்டதாகக் கூறவியலாது. பொலன்னறுவையில் அரசையேற்ற பின், உருகுணையை அடிப்படுத்தலே அவனை ஈடுபடுத்திய முக்கியமான உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்தது. இலங்கை முழுவதற்கும் அரசனாகப் பராக்கிரமபாகு முடிசூடிக்கொண்ட பின்னரும், சுமார் எட்டு ஆண்டுகள் வரையில் உருகுணை அவனது ஆணையை ஏற்காது இருந்து வந்தது. உருகுணையை அவன் அடிப்படுத்திய வரலாற்றையும் இங்கே மிகச் சுருக்கமாகக் கூறிவிடுவோம்.

உருகுணையை வெல்லல்

சூளவம்சத்தில் இரண்டு அத்தியாயங்களில் (அத்.74, 75) நானூற்றுக்கும் அதிகமான செய்யுள்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றை வாசிக்கும் போது, பராக்கிரமபாகு இலகுவாக உருகுணையை வென்றதாகத தென்படவில்லை. நீண்டகாலமாக, அவனது படைகள் கடுமையான சண்டைகள் நிகழ்த்தியே அதை வெல்லமுடிந்ததாகப்படுகின்றது. உருகுணையின் ஆட்சியாளனாகவிருந்த மானாபரணன் பொலன்னறுவையிலிருந்து தப்பி உருகுணைக்குச் சென்றதும், சிறிது காலத்தில் இறந்துபோகவே, அவனது தாயான சுகலா என்பவள் (ஸ்ரீவல்லபன் என்பானது இராணி) உருகுணையின் பரிபாலனத்தைக் கவனித்து வந்தாள். உருகுணையைநச் சேர்ந்த படைத்தலைவர்களும் பிரதானிகளும் சுகலாவை ஆதரித்து நின்றதோடு, பராக்கிரமபாகுவுக்கு எதிராகப் கலகஞ் செய்யவும் ஆயத்தங்கள் செய்யலாயினர். இவற்றையறிந்த பின்னரே, பராக்கிரமபாகு உருகுணைமீது படையெடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. மானாபரணன் முன்னர் கொண்டுசென்ற புனிதச் சின்னங்களைக் கைப்பற்றிப் பொலன்னறுவைக்குக் கொணர்வதே உருகுணைப் படையெடுப்பின் முக்கிய நோக்கமாகக் கொள்வர். ஏனெனில் இப்புனித சின்னங்கள் (தந்த தாது,

ஐயக்கலம்) பராக்கிரமபாகுவின் உடைமைகளாக வரும்வரை அவனுடைய இறைமை (ஆளும் உரிமை) நிறை பெறாததாகக் கருதப்பட்டது. (புனித சின்னங்களின் உடைமை அரசியலுரிமையை உறுதிப்படுத்தும் சின்னங்களாகவும் விளங்கி வந்தமை கவனிக்கத்தக்கது.) பராக்கிரமபாகு இந்த உருகுணைப் படையெடுப்புக்குப் பொறுப்பாகத் தனது சேனாபதி ரக்கனையே நியமித்து அவனுடன் ஒரு பெரும் படையை அனுப்பி வைத்தான். இவனுக்கு உதவியாக மூன்று அதிகாரிகளும் (படைத் தளபதிகளும்) அனுப்பப்பட்டிருந்தனர். அட்ட சகச என்ற கிழக்கு உருகுணையிலேயே பெரும்பாலான சண்டைகள் நிகழ்ந்தன. உடுந்தொரவில் தங்கியிருந்த இராணி சுகலா, பராக்கிரமபாகுவின் படைகள் நெருங்கிவந்தபோது, எற்றிமோலைக்குச் சென்று ஒளித்திருந்தாள். கடுஞ்சண்டை களுக்குப்பின், புனிதச் சின்னங்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால் இராணி சுகலா அகப்படாது தப்பிவிட்டாள். கடும் எதிர்ப்பினிடையே புனிதச் சின்னங்களை பொலன்னறுவைக்கு அனுப்பிவிட்டு, கிழக்கு உருகுணையில் தோன்றிய எதிர்ப்பை படிப்படியாக அடக்கி, ஈற்றில் தீகவாபி மாவட்டத்துக்குச் சுமார் ஐம்பது மைல் தொலைவிலுள்ள ஓர் அரணில் (ஹிந்தலவனகாமம்) சுகலாவின் படைகள் கூடியிருந்தன. அந்த அரணைப் பராக்கிரமபாகுவின் படைகள் தாக்கியும், அறுதியான வெற்றியை அவை எய்த முடியாது போயின.

மேற்கு உருகுணையை (துவாதச சகசவை) அடக்குவதில், இதே காலத்தில் பராக்கிரமபாகுவின் வேறு படைப்பிரிவுகள் ஈடுபட்டுவந்தன. மேற்கு, தெற்கு கரையோரங்களால் ஒரு படையும், இரத்தினபுரி மாவட்டம், மொறவக்க கோறளை என்பவற்றினூடாக மற்றொரு படையும் மகாநாகஹுலவை நோக்கிச் செல்லலாயின. இவற்றுள் இரண்டாவது படை தமிழாதிகாரி(ன்) ரக்கன் என்பவனது தலைமையில் இருந்தது. இவன் பல வெற்றிகளை எய்தியதுமன்றி, பகைவர்களின் போர் உபாயங்களை வெல்லுவதற்கு ஏற்ற தந்திரங்களைக் கையாண்டு, தன் மன்னனுக்கு வெற்றியை உறுதிப்படுத்தினான். இவ்விரு படைகளும் வெற்றிமேல் வெற்றியீட்டி, மகாநாகஹுலவில் சந்தித்து ஓய்வெடுத்தபின், ஏனைய பகுதி களையும் அடக்கி வந்தன. வளவை கங்கைப் பகுதியில் ஏற்பட்ட இறுதி எதிர்ப்பையும் தமிழாதிகாரி வென்று துவாதசகசவை (தொளஸ்தகஸ்-ரட்டை) முற்றாக அடக்கிக்கொண்டான். இராணி சுகலாவைக் கைப்பற்றுவதே பராக்கிரமபாகுவின் படைகளுக்கு எஞ்சியிருந்த வேலையாகும். அதை ஓரளவு இலகுவாக அவை நிறைவேற்றியபின், கலகத் தலைவர்களைக் கடுமையாகத் தண்டித்து, உருகுணை மக்களை அச்சுறுத்தி மீண்டன. மன்னனுடைய கட்டளைப்படி, பூதன் (Bhuta) என்ற அதிகாரி உருகுணையைப் பரிபாலிக்கலானான். ஏனைய படைத்தளபதிகள் கைதியான இராணி சுகலாவுடன் பொலன்னறுவைக்கு மீண்டனர்.

உருகுணையைப் பராக்கிரமபாகுவின் படைகள் வெல்லுவதில் எவ்வளவோ தொல்லைகளையடைந்தனர் என்பது சூளவம்சத்தில் உள்ள விவரங்களால் மிகவும் தெளிவாகின்றது உருகுணையில் கலகத்தை நிகழ்த்தியவர்கள் நேரடியாக

எதிர்த்துநின்று போர்புரிவதைக் காட்டிலும், மறைமுகமான எதிர்ப்பைக் காட்டுவதிலும் 'கொரில்லா'ப் போர்முறைகளைக் கையாள்வதிலும் கைதேர்ந்தவர்களாக விளங்கினர். இதனாலேயே பராக்கிரமபாகுவின் படைகள் உருகுணையை வெல்வதில் எவ்வளவோ சிரமப்பட்டனர். உண்மையில், இறுதியிலும் உருகுணை சரிவர அடக்கப்பட்டதாகக் கூறிவிடமுடியாது, ஏனெனில் இரண்டொரு ஆண்டுகளில் கலகம் மீண்டும் தொடங்கி, மீண்டும் இதேபோன்ற படையெடுப்புக்கள் நடைபெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, உருகுணையை வெல்லுதல் பராக்கிரமபாகுவுக்குமே கடினமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொருளியற் பணிகள் : நீர்ப்பாசனம்

விஜயபாகு, தனது ஆட்சியின்போது, நாட்டின் சீர்கேட்டை நீக்குவதற்கு மேற்கொண்ட பொருளியற் பணிகளை முன்னரே கவனித்தோம். ஆனால், விஜயபாகு மறைந்தவுடன் நாட்டில் தோன்றிய அரசியல் குழப்பங்களும் உள்நாட்டுப் போர்களும் நாடடைந்த சிறிதளவு முன்னேற்றத்தையும் கெடுத்து, விஜயபாகுவுக்கு முன்னிருந்ததிலும் மோசமான நிலைக்கு நாட்டை ஆழ்த்தின. அரசுரிமைக்காகப் போட்டியிட்டுப் போரிலீடுபட்ட இளவரசர்கள், வளங்களை விருத்தி செய்யவோ தொழில்களை ஊக்கவோ அவகாசமற்றிருந்தனர். போர்களின்போது நீர்ப்பாசனங்கள் வேண்டுமென்றே சிதைக்கப்பட்டன எனவும் கூறப்பட்டுள்ளது. மக்கள் தாமும் தம் தொழில்களை அமைதியாக நடத்தமுடியாது இடர்ப்பட்டனர். 'ஆலையில் கரும்பின் சாற்றைக் கசக்கிப் பிழிந்தெடுப்பதுபோல' மக்களிடம் கடுமையான வரிகள் கறந்தெடுக்கப்பட்டன. இவ்வாறான தொல்லைகளால் குடிகள் வருந்தியபோது, பராக்கிரமபாகு அரசைப் பெறுவதற்கு நடத்திய போர்கள் அவர்களின் இடர்களைப் பன்மடங்கு அதிகமாக்கின. ஆனாலும் பராக்கிரமபாகு அரசனானபின், பொருளியல் வளர்ச்சியில் நாட்டங்கொண்டு உழைத்தனாதலால், குடிகளின் நிலை பெரிதும் மாறுதலடைந்தது. அம்மாமன்னன் மேற்கொண்ட பொருளியற் பணிகளால், நாட்டின் வருவாய் பன்மடங்கு அதிகரித்து ஒரு சுபீட்ச நிலையை நாடு எய்தியது. அவனுடைய ஆட்சியின்போது எழுந்த பாரிய கட்டிடங்களும் பிற ஆக்கப் பணிகளுக்கும், பிற நாடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட படையெழுச்சிகளுக்கும் வேண்டிய பணத்தை அவன் மக்களிடம் அறவிடப்பட்ட வரிகளாலேயே பெறமுடிந்ததென்றால், அவ்வளவுக்கு மக்கள் சுபீட்சத்தை அனுபவித்தனர் எனலாம்.

பராக்கிரமபாகுவும் தன் வருவாயைப் பெருக்குதற்கு, விஜயபாகுவைப் போலவே, பிறநாடுகளுடன் வணிகத்தை வளர்த்து வந்தான். பின்னர் பர்மாமீது அவன் மேற்கொண்ட தாக்குதலுக்கு அந்நாட்டுடன் நடைபெற்ற வர்த்தகத்தைத் தடைப்படுத்தப் பர்மிய அரசன் எடுத்த நடவடிக்கைகளே காரணமாக இருந்தன. இவ்வியாபாரத்தைக் கட்டுப்படுத்தி அரசிறைக்கு அதிக வருவாயைப் பெறுதற்கென அவன் தக்கிணதேச அரசனாக இருந்தபோதே 'அந்தரங்க - துர' என்ற ஒரு தனிப்பகுதியை ஏற்படுத்தியிருந்தான். இப்பகுதியே, பிறநாடுகளுக்கு அனுப்பப்பட்ட வணிகப் பொருட்கள் உள்ள பகுதிகளுக்குப் பொறுப்பாக இருந்து அப்பொருட்களைச் சேகரித்துக் கொடுத்து வந்தது.

வணிகம் ஓரளவு முக்கியத்துவம் பெற்று வந்தபோதும், பயிர்ச்செய்கையே பராக்கிரமபாகுவின் காலத்திலும் அதி முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாக இருந்தது. பயிர்ச்செய்கையின் விருத்திக்காகப் பராக்கிரமபாகு எடுத்த நடவடிக்கைகளும், அவன் மேற்கொண்ட நீர்ப்பாசன வேலைகளும் பெரும் பாராட்டுதலுக்குரிய தன்மையன. அவற்றை நாம் பிறிதோரிடத்திற் பின்னரும் கூறுவோமெனினும், இங்கும் அவை பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. தக்கிணதேச அரசனாகப் பராக்கிரமபாகு இருந்தகாலத்திலேயே, அவன் அப்பிரதேசத்திற் பயிர்ச்செய்கையின் அபிவிருத்திக்காகப் பல திட்டங்களை மேற்கொண்டதை முன்னரே குறிப்பிட்டிருந்தோம். தக்கிண தேசத்தின் நிலவியல்புகளைப் பற்றிச் சிந்தித்த பராக்கிரமபாகு, 'இத்தகைய நாட்டில் (இராச்சியத்தில்) மழையால் வரும் நீரில் ஒரு சிறிதள வாயினும், மனிதத் தேவைக்குப் பயன்படாதவகையில் சமுத்திரத்திற் பாய்தலாகாது. இரத்தினக்கற்கள், தங்கம் முதலானவற்றையுடைய சுரங்கங்களுள்ள இடங்களிலேயன்றி ஏனைய இடங்களில் எல்லாம் வயல்கள் அமைக்கப்படல் வேண்டும்'. எனத் தனது அதிகாரிகளுக்குக் கூறியதாகச் சூளவம்சம் குறிப்பிட்டுள்ளது. (அத். 68, செய்.10-11) தக்கிணதேச நிலவியல்புகளை அறிந்து அவற்றிற்கேற்புடைத்தான திட்டங்களை வகுத்தான். முதலில் தெதுறு ஓயாவில் மூன்று அணைகளைக் கட்டி, மூன்று வெவ்வேறு பாசனத்திட்டங்களை இயங்கச் செய்தான். கொட்டபத்த அணைக்கட்டையும் கால்வாயையும் கொண்டு அமைக்கப்பட்ட முதலாவது திட்டத்தின் சிதைவுகள் தானும் இப்போது கிட்டவில்லை. எபவலப்பிட்டியிலுள்ள அணைக்கட்டிலிருந்து றிடி-பண்டி-எள எனப்படும் கால்வாய் மூலம் மாகல்லவாவிக்கு நீரைக் கொடுக்க வகை செய்தது இரண்டாவது திட்டம். மூன்றாவது திட்டத்தில், தெமோதரவில் நிறுவப்பட்ட அணையிலிருந்து, தலகல்ல வாவி என்ற ஒரு குளத்துக்குக் கால்வாய் மூலம் நீர் வசதியேற்படுத்தப் பட்டது. பாண சமுத்திரம் என்ற பெயராலும் வழங்கப்பட்ட பராக்கிரம சமுத்திரம், முன்னரே பராக்கிரமபுரத்திலிருந்து பண்டவாவி என்பதை விசாலித்து அமைக்கப் பெற்றதாகும். இக்குளம் விசாலிக்கப்பட்டதும், ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பைக் கொண்டு விளங்கிற்று. பழைய நீர்த்தேக்கங்கள் பலவற்றை அவன் தக்கிண தேசத்தில் புதுப்பித்து பெரும்பணி புரிந்தான். இவ்வாறு புதுப்பிக்கப் பட்டவற்றுள், முப்பத்தேழு குளங்களின் பெயர்களைச் சூளவம்சம் குறிப்பிட்டுள்ளது. ஒரு சில தவிர்ந்த ஏனையவற்றை அறிஞர்கள் இனங்கண்டுள்ளனர். இறுதியாக, மனித சஞ்சாரத்துக்கும், பயிர்ச்செய்கைக்கும் உதவாதவாறு சகதிகளையும், சதுப்பு நிலங்களையும் கொண்டு விளங்கிய பஸ்துன் கோறளையை (பஞ்சயோஜன) நீர்வற்றச் செய்து சகதியை நீக்கிப் பயிர்ச்செய்கைக்கேற்றதாக மாற்றியமை இவனுடைய பெரும் பணியாகும்.

தக்கிணதேச ஆட்சியாளனாக இருக்கும்போது, பராக்கிரமபாகு அடிக்கடி போர்களில் ஈடுபட்டும், இத்துணைப் பெரும் பணிகளை இயற்றி முடிந்தமை அவனது திறமையைக் காட்டுகின்றது. 'ஆற்றல் படைத்த மாந்தரால் ஆற்ற முடியாத ஒன்றும் இவ்வுலகில் உண்டோ?' பராக்கிரமபாகு இவ்வாறு வினாவியதாகக் கூறுவது ஒருவேளை சூளவம்ச ஆசிரியருடைய கற்பனையாக

இருக்கலாம். ஆனால் இவ்வினாவில் தொனிக்கும் வாழ்க்கைத் தத்துவம், பராக்கிரமபாகுவின் அரசியல் வாழ்வுக்குப் பெரிதும் பொருத்தமுடையதாகும். மற்றையோரால் எண்ணியும் பார்க்க முடியாதளவு பெருந்தொகையான பாசன வேலைகளை, இராஜரட்டையின் அரசைப் பெற்றபின் (1153) நிறைவேற்றியதாகச் சூளவம்சம் அறியத்தருகின்றது. 163 பெருங்குளங்களும் 2376 சிறுகுளங்களும் இவனால் புதிதாக அன்றேல் திருத்திக்கட்டப் பெற்றன என்கிறது சூளவம்சம். இவற்றுள் இரண்டாவதும் பெரியதுமான பராக்கிரமசமுத்திரம் பொலன்னறுவையில் நிறுவப்பட்டது. தோப்பவாவி, தம்புத்துலுவாவி என்பவற்றை உள்ளடக்கி நிறுவப்பட்ட ஒரு பெரும் நீர்ப்பாசனத் திட்டமே பராக்கிரம சமுத்திரமாகும். அம்பன் கங்கையில் அங்கமடில்ல என்ற இடத்தில் அணையைக்கட்டி அதிலிருந்து வெட்டப்பட்ட கால்வாயின் வழியே இக்குளத்துக்கு நீர் பெறப்பட்டது. இக்கால்வாய் 'ஆகாச கங்கை' எனச் சூளவம்சத்தில் அழைக்கப்படுவது. அம்பன் கங்கையை ஆதாரமாகக் கொண்டு முன்னரே இயங்கிய நீர்ப்பாசனத் தொடரான மின்னேரி - கிரித்தளை - கவுடுலு - கந்தளாய் என்பவற்றுடன் பராக்கிரம சமுத்திரத்தை இணைக்க உதவியது. இவன் கிரித்தளையுடன் அமைத்த ஒரு தொடுப்புக் கால்வாய். இக்கால்வாய் அமைக்கப்பட்டதால், பராக்கிரம சமுத்திரத்தின் நீர்வசதி மேலும் பெருகியது. இக்குளம் இன்றுள்ள நிலையில் 18,000 ஏக்கருக்கும் அதிகமான நிலத்துக்கு நீரைப் பாய்ச்ச உதவுகின்றது. இக்குளத்தைச் சுற்றியுள்ள நாற்பது அடிவரை உயரமுடைய கட்டு எட்டரைமைல் நீளமுடையதென்பதும், பொறிப்புக்களைக் கொண்ட கற்றூண்கள் இக்கட்டில் ஆங்காங்கே நாட்டப் பெற்றிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். பராக்கிரமபாகுவின் புகழை அமைதியான முறையில் என்றென்றும் பறைசாற்றி நிற்பது பராக்கிரம சமுத்திரம் என்பதில் ஐயமில்லை. இது தவிர பராக்கிரமத் தளாக(ம்), பராக்கிரம சாகர(ம்) என்ற மற்றிரு குளங்களும் அவனுடைய பெயரைத் தாங்கியிருந்தன. மகிந்த தளாக(ம்), எகாகவாபி என்பனவும் இவனால் புதிதாக நிறுவப்பட்டனவாகும்.

பராக்கிரமபாகுவால் திருத்தப்பெற்ற அல்லது விசாலிக்கப்பட்ட குளங்களே பெருந்தொகையின. அவற்றுள் மகாசேனனது மின்னேரி, மகாதாரகல்ல, கவுடுலு வாவிகளும், மற்றும் காலவாவி, கிரித்தளை, பதவியா, நச்சதூவ, இராட்சதக்குளம், என்பனவும் குறிப்பிடத்தக்கவையாகும். இவன் நிறுவியதாகக் கூறப்படும் கால்வாய்களுள் ஒன்றான அசிரவதீ என்பது, மகாவலிகங்கையிலிருந்து மேற்கே செல்லும் வகையில் வெட்டப்பட்டிருந்தது. இக்கால்வாய் தொடங்கிய அதேயிடத்தில் தொடங்கி மற்றொரு கால்வாயான கோமதி கால்வாயும் பராக்கிரமபாகுவாலேயே நிறுவப்பட்டது. தாதுசேனன் நிறுவிய ஜயகங்கை என்ற கால்வாயையும் பராக்கிரமபாகு புதுக்கினான்.

பாசனத்துறையில் பராக்கிரமபாகு ஆற்றிய பணிகள் அத்துறையின் வரலாற்றில் அவனுக்கு மிக உயர்வான இடத்தை அளிக்கும்படி செய்துள்ளன. அனுராதபுர காலத்தில் இத்துறையில் உழைத்த பெருமன்னனான மகாசேனனது புகழையும் மங்கவைக்கும் வகையில் மகா பராக்கிரமபாகுவின் பணிகள் அவனுக்குப்

பெருமையை அளித்துள்ளன. பராக்கிரமபாகுவின் பொருளியல் முயற்சிகளால் நாட்டில் பெரும் சுபீட்சநிலை ஏற்பட்டிருப்பினும், அவன் மேற்கொண்ட பாரிய கட்டிட வேளைகளுக்கும் அதிக செலவைத் தந்த யுத்தங்களுக்கும் நிறையப் பணம் செலவானதால், அச் செல்வநிலை அதிக காலம் நீடிக்காது போயிற்று. பராக்கிரமபாகுவுக்குப் பின்னரும் சிறிது காலத்தில் உள்நாட்டுப் போர்களும், பிறநாட்டார் படையெடுப்புக்களும் நிகழ்ந்ததால், பொருளியல் துறையில் பராக்கிரமபாகுவின் காலத்தில் உண்டான மேனிலை நிலைக்காது போயிற்று. இது பற்றிப் பின்னர் காண்போம்.

சமயமும் கலைகளும்

பௌத்த சாஸனத்தை (சமயத்தை) மேன்மைபெற வைப்பதற்காகவே, பராக்கிரமபாகு இலங்கை முழுவதற்கும் அரசனாக விரும்பியதாகச் சூளவம்சம் அடிக்கடி குறிப்பிட்டுள்ளது. அவனுடைய ஆட்சியின் முக்கிய குறிக்கோள்களில் சமய வளர்ச்சி முதன்மை பெற்றிருந்ததென்பதில் ஐயமில்லை. விஜயபாகுவின் உறுதிவாய்ந்த பணிகளால் சமயநிலை ஓரளவுக்கு உரம் பெற்றிருந்தது போலக் காணப்படினும், அவனுடைய ஆட்சியைத் தொடர்ந்து நாட்டில் உண்டான அரசியல் நிலைமைகளால் அது பெரிதும் பாதிக்கப்பட்டது. உறவினரிடையே ஏற்பட்ட சமர்களின் போக்கால், நாடு அமைதியையும் ஒழுங்கையும் இழந்து, சங்கத்துக்கு வேண்டிய பாதுகாப்பையும், பெறமுடியாத நிலையேற்பட்டது. விகாரை களுக்கும், தாதுக்களுக்கும் வழங்கப்பெற்றிருந்த திரவியங்களும், நன்கொடை களும் இப்போர்களின்போது அபகரிக்கப்பட்டன. விகாரைகள் பல சஞ்சாரமற்றுப் பாழெய்தலாயின. அரசியலில் தோன்றிய சீர்கேடுகள் சங்கத்தினரின் ஒழுக்கத்தை யும் பாதிக்கலாயின. ஒரு சிலரைத் தவிர, ஏனையோர் கூடாவொழுக்கமுடைய (துஸ்சீல) பிக்குகளாக வாழ்ந்தாரெனக் கூறப்பட்டுள்ளது. நல்லொழுக்கமுடைய (சுஸீல) பிக்குகளும் ஒற்றுமையின்றி வாழ்ந்து வரலாயினர். இவ்வாறு சமய வளர்ச்சிக்குத் தடைகளாகவிருந்த இடர்களைக் களைந்து, சங்கத்தில் புல்லுருவிகளாக வாழ்ந்த 'துஸ்ஸீல' பிக்குகளை வெளியேற்றி, அதன் புனிதத்தையும் ஒற்றுமையையும் நிலைநாட்ட வேண்டியது அவசியமாகியிருந்தது.

மகா பராக்கிரமபாகுவின் ஆட்சியின்போது, (1153 - 1186) அவன் மேற்கொண்ட சமயப் பணிகளுள் முக்கியமானது, சங்கத்தில் மிகுதியாக இருந்த கூடாவொழுக்க முடைய பிக்குகளைத் தண்டித்து அவர்களை வெளியேற்றியமையேயாகும். இதற்கெனச் சிறப்பாகக் கூட்டப்பெற்ற ஒரு சபை மன்றுக்குத் தலைமை தாங்கியவர் பேரறிஞரான திம்புலாகலை மகா காசியப்ப தேரராவார். பிடிவாதமும் மூர்க்க குணமும் படைத்த பல 'துஸ்ஸீல' பிக்குகள், சமயமன்றின் நடடிவக்கைகளை முறியடிக்க முனைந்தனர். ஆனால் பராக்கிரமபாகுவின் உறுதியும் மனோவலியும் அவர்களுடைய முயற்சிகளை வியர்த்தமாக்கின. பிளவுபட்ட நாட்டை ஒன்றுபடுத்தப் பராக்கிரமபாகு எடுத்த முயற்சிகளைக் காட்டிலும் கடினமான ஒரு பணியாகச் சங்கத்தினரிடையே ஒற்றமை ஏற்படச் செய்ததைக் குறிப்பிடுவர். வட்டகாமணியின் காலத்தில் சங்கத்தில் தோன்றிய சமயப் பிரிவினைகள் மகாபராக்கிரமபாகுவின்

காலம்வரை வளர்ந்து வந்துள்ளனவேயன்றி, அவற்றுக்கிடையே ஒற்றுமை ஏற்படவில்லை. மகாவிகாரை, அபயகிரி, ஜெதவன என்ற முப்பெரும் விகாரை களைச் சார்ந்த பிக்குகள் 12ம் நூற்றாண்டுவரை ஒற்றுமையடையாதிருந்தனர். முதலில் மகாவிகாரைக் குருமார்களிடையேயிருந்த சிறுபூசல்கள் நீக்கப்பட்டதும், ஜெதவன, அபயகிரி என்ற இரு விகாரையினர்க்கும், மகாவிகாரையினர்க்கு மிடையே இருந்த வேறுபாடுகள் அகற்றப்பட்டன. மகாசேனனுடைய காலத்தில் மகாயானப் பிரிவினர்க்கும், தேரவாதப் பிரிவினர்க்கும் காணப்பட்ட கொள்கை வேறுபாடுகள் காலவோட்டத்தில் குறைந்திருந்தமை இவ்வாறு சங்கப் பிரிவு களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த உதவியது. கூடாவொழுக்கமுடையவர்கள் சங்கத்தினின்றும் வெளியேற்றப்பட்டபின், சங்கத்தைச் சேர்ந்த முதிய குரவர்களைக் கொண்டு பிக்குகள் பின்பற்றுவதற்கு உரிய ஒழுக்க விதிகளை வரைவித்து, அவற்றைக் கல்விகாரையிலுள்ள பாறையொன்றிற் பொறிப்பித்தான். இவ்விதிகள் 'கதிகாவத' என அழைக்கப்பட்டன. இவ்வகையான விதிகள் பராக்கிரமபாகுவுக்கு முன்னரும் பின்னரும் உள்ள மன்னர்களால் வரைவிக்கப்பட்டு, பிக்குகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. பொலன்னறுவை யிலுள்ள பெரும்பாலான கட்டிடங்களை நிறுவியவன் மகாபராக்கிரமபாகு என்பதை விரைவிற் காண்போம். இவற்றுள் கிரிவிகாரை, இலங்காதிலக விகாரை, தமிழதூபம் முதலான சமயக் கட்டிடங்கள் முக்கியமானவை. இவற்றை நிறுவுவதிலும் விகாரைகளுக்கு நிறைய மானியங்களை வழங்குவதிலும் அவன் செய்த செலவுகளால் அவனுடைய காலத்தில் பொருளியல் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் புலப்படும். சமயத்துறையில் பராக்கிரமபாகு எடுத்த நடவடிக்கைகள் நாட்டுக்கும் சங்கத்துக்கும் பர்மா, கம்போடியா போன்ற பிற பௌத்த நாடுகளிடையே பெருமதிப்பை உண்டாக்கின. அந்நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையே சமயத் தொடர்புகள் ஏற்படலாயின.

இலக்கியம்

பராக்கிரமபாகுவின் பெருமுயற்சியால் பௌத்தம் மேன்மை பெற்றதால், இலக்கிய முயற்சிகளும் அவனது காலத்தில் பெருமளவில் நடைபெற்று வந்தன. திம்புலாகலை மகாகாசியப்ப மகாதேரர் சமயத்துறையில் பெற்ற புகழுக்கு இணையாக, இலக்கியத் துறையிலும் பல நூல்களை எழுதிப் பெருமதிப்பைப் பெற்றார். பாலி, சமஸ்கிருதம் முதலான மொழிகளில் தேர்ச்சி பெற்று விழுமிய அறிஞராகத் திகழ்ந்த மகாகாசியப்ப தேரர் சமந்த பாசாதிகாவுக்கு ஒரு சன்னவையும், அபிதம்மசங்கஹவுக்குப் பொராண - டீகாகவையும் எழுதியதாகப் போற்றப்படுகின்றார். மொகல்லான வியாகரணவின் ஆசிரியரான மூத்த மொகல்லானரும் (இவரையே வேளைக்காரக் கல்வெட்டும் குறிப்பிடுகின்றது), அபிதானப்ப தீபிகாவின் ஆசிரியரான மொகல்லான தேரரும் பராக்கிரமபாகுவின் காலத்திலேயே வாழ்ந்தனரென்பது தெளிவு. 'சாகர-மதி' யெனச் சிறப்பிக்கப்பெற்ற சாரிபுத்தர் என்பவரும் பராக்கிரமபாகுவின் காலத்தில் வாழ்ந்த அறிஞர்களுட் சிறந்து விளங்கினார். பர்மா முதலான பிறநாடுகளிலிருந்து வந்த நல்லறிஞர்களும்

பராக்கிரமபாகுவின் காலத்தில் இலங்கை வந்து நூல்கள் இயற்றுவதில் ஈடுபட்டதாகத் தெரிகின்றது. பெரும்பாலான பௌத்த அறிஞர்கள் சமஸ்கிருதப் பண்டிதர்களாகவும் விளங்கினர். அவர்கள் இயற்றிய நூல்களில் அம்மொழியின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படும். சமயத்துறையிலும், இலக்கித்துறையிலும் மகாபராக்கிரமபாகுவின் காலத்தில் இயற்றப்பட்ட சாதனைகளால், அவனுடைய ஆட்சி பொலன்னறுவைக் காலம் முழுவதிலும் தனிச்சிறப்பைப் பெற்று விளங்கு கின்றது. இதற்கு நிகராக மற்றெந்த மன்னனுடைய ஆட்சியும் இருக்கவில்லை. எனவேதான் பராக்கிரமபாகுவின் காலத்தை 'ஒகஸ்தஸின் காலம்' (Augustan Age) என ஓர் அறிஞர் வர்ணித்துள்ளார்.

அயல்நாட்டுக் கொள்கை

நாட்டில் நிறுவப்பட்ட அரசியல் ஒற்றுமையும், பொருளியல் விருத்தி, பிறநாட்டு வணிகம் முதலானவை ஏற்படுத்திய செழிப்பும், பயிற்சிபெற்ற பல்லாயிரக் கணக்கான வீரரைக் கொண்ட படையும் பராக்கிரமபாகுவுக்குப் பெரு வல்லமையைத் தந்தன. விஜயபாகு நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றபின், அதைப் பேணுவதற்கு அயல்நாடுகளுடன் நல்லுறவையும் அமைதியையும் நாடினான். மகாபராக்கிரமபாகு அற்ப காரணங்களுக்காகப் போரிலீடுபட்டுத் தன் வல்லமையைப் பறைசாற்ற முனைந்திருக்கலாம். இதற்காக அவன் கடல் கடந்து பர்மியருடனும், சோழருடனும் போரிட்டான். பராக்கிரமபாகு பர்மியப் படையெடுப்பில் வெற்றியடைந்தது உண்மை. ஆனால் சோழருடன் சண்டை நீடித்ததால், அவனால் அவர்களைச் சமாளிக்க முடியவில்லை.

பர்மா

பர்மாவின் ஆட்சியாளனாக அனோரத்தன் (1044 - 1077) விளங்கியபோது, இலங்கை வேந்தன் விஜயபாகுவுக்கும், பர்மிய அரசனுக்குமிடையே தூதுக் குழுக்களும் வெகுமதிகளும் பரிமாறப்பட்டு, நல்லுறவுகள் நிலைநாட்டப் பட்டிருந்தன. இரு நாடுகளும் தேரவாத பௌத்தத்தைக் கைக்கொண்டதால், சமயத்தொடர்புகளும் இருந்து வந்தன. சூளவம்ச விவரப்படி, இரு நாடுகளுக்கு மிடையே யானைகள் முதலானவற்றில் வணிகமும் நடைபெற்று வந்தது. இலங்கையிலிருந்து வெகுமதிகளுடன் செல்லும் கப்பல் ஒவ்வொன்றுக்கும் ஒரு யானையைத் தனது பரிசாக பர்மிய மன்னன் வழங்கி வருவது வழக்கம்.

ஆனால் 1112ல் ஆட்சிக்கு வந்த அலோங்சிது என்ற பர்மிய மன்னன், பல தொல்லைகளைச் சமாளிக்கவேண்டி நேர்ந்ததாலும், இயல்பாகவே மூர்க்க சுபாவமுடையவனாக இருந்ததாலும் இவ் வழக்கத்தை நிறுத்தி, மேலும் பல வகைகளில் இலங்கைக்குத் தீங்குகளை இழைத்தான். பிறநாடுகளுக்கு (இலங்கையுட்பட) யானைகளை வரையறையின்றி விற்பதை அவன் தடுத்ததுமன்றி அவற்றின் விலையை இரு அல்லது மும்மடங்காகக் கூட்டினான். பர்மிய மன்னனுக்கு பொற்றகட்டில் (இலை வடிவில்) பொறிக்கப்பட்ட ஒரு நிரூபத்தைக கொண்டு சென்ற சிங்களத் தூதுவரை, போலிக் காரணங்காட்டி

அவமதிக்கலானான். அவர்களிடம் உள்ள யானைகளையும், பணத்தையும், கப்பல்களையும் அபகரித்து, அங்குள்ள மலைநாட்டிலுள்ள ஓர் அரணில் அவர்களைச் சிறைவைத்துத் துன்புறுத்தினான். பின்னர் சிங்களத்தூதுவரை தனது அவைக்கு வருமாறுசெய்து, இலங்கையிலிருந்து இனிமேல் வணிகக் கப்பல்கள் வர அனுமதிக்கப்படமாட்டாதெனவும், தனது தடையை மீறிவரும் கப்பல்களில் வருபவர்களைக் கொல்ல நேர்ந்தால் அதற்குத் தான் பொறுப்பில்லை என்பதற்கு அவர்களை உறுதி தரும்படி பலவந்தப்படுத்தியும் ஒரு பிணைக்குக் கைச்சாத்திட வைத்தான். இதன்பின், பழுதடைந்த கலமொன்றில் சிங்களத் தூதுவர்கள் இருவரை விடுவித்து ஆழ்கடலில் செல்லவிட்டான். வேறொரு சந்தர்ப்பத்தில், இலங்கையிலிருந்து சென்ற தூதுவர்களிடம் அவர்கள் கொண்டு சென்ற வெகுமதிகளையும், பொருட்களையும் பெற்றுக்கொண்டு யானைகளைத தருவதாகக் கூறி ஏமாற்றினான். இலங்கை மன்னனால் அனுப்பப்பட்டு கம்போடியாவுக்குச் சென்று கொண்டிருந்த சிங்கள இளவரசியையும் அலோங்சிது சிறைபிடிக்கச் செய்தான். இவ்வாறு, அலோங்சிது இலங்கை அரசனுக்குப் பெருங்கோபத்தை உண்டாக்கத்தக்க செயல்களைப் புரிந்ததாகச் சூளவம்சம் கூறுகின்றது. இவற்றைத் தனது ஆட்கள் சொல்லக்கேட்ட பராக்கிரமபாகு, பர்மா மீது ஒரு படையெடுப்பை மேற்கொள்ள முடிவுசெய்து, வேண்டிய ஆயத்தங்களைச் செய்தான்.

படையெடுப்புக்கு வேண்டிய கப்பல்கள், படைவீரர்கள், போர்க்கருவிகள், உணவு, மருந்து வகைகள் போன்ற யாவும் ஆயத்தமானதும், படைக்கலங்கள் இலங்கையின் வடகிழக்குக் கரையிலுள்ள ஒரு துறையிலிருந்து (பல்லவவங்க அல்லது பல்வக்கி) புறப்பட்டன. தமிழ் அதிகாரி ஆதித்தன் (தமிழாதிகாரின் ஆதிச்ச) தலைமையில் இப்படை சென்றது. இப்படையெடுப்பிற் சேர்ந்த கலங்களில், நகரகிரி கீர்த்தி என்பவனது தலைமையிலிருந்த ஐந்து கப்பல்கள் தெற்குப் பர்மாவிலுள்ள குஸிமதீர்த்தம் என இலக்கியங்களில் அழைக்கப்பட்ட குசுமிய (இப்போதைய பசேன்) என்ற துறையை அடைந்தன. இலங்கைப்படை வீரர்கள் விரைவில் அத்துறைமுகத்தின் சுற்றுப் புறங்களைத் தாக்கி பல அழிவுகளைச் செய்து, அவர்களை எதிர்த்த பர்மியப் படைகளை இலகுவிற் புறங்கண்டனர். தமிழ் அதிகாரி ஆதித்தனது தலைமையிற் சென்ற வேறு சில கப்பல்கள் பப்பாலம் என்ற துறையை அடைந்ததும், அவற்றிற் சென்ற வீரர்கள் அப்பகுதியில் சமர்களை நிகழ்த்திப் பின் திடீரென உக்கம என்ற நகர்வரை முன்னேறி, அங்கு நடைபெற்ற கடுஞ்சமரில் பர்மிய மன்னனைக் கொன்றதாகவும் கூறப் பட்டுள்ளது. இவ்வெற்றிகளின் பின் சிங்களப்படைகள் இலங்கை மீண்டன. பர்மாவிலிருந்து இலங்கை வந்த தூதுவர்கள் சங்கத்தினரைத் தலையிடச்செய்து, பராக்கிரமபாகுவுடன் உடன்படிக்கை செய்து மீண்டனர். சிங்கள வர்த்தகர்களும் தூதுவர்களும் முன்னர் அனுபவித்த சலுகைகளையும், உரிமைகளையும் மீண்டும் பெறுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு இரு நாடுகளுக்கும் இடையே அமைதியேற்பட்டபின், வணிக உறவுகள் மட்டுமன்றி, சமய-பண்பாட்டுத தொடர்புகளும் மீண்டும் நடைபெற்று வரலாயின.

இலங்கையில் தேவனகலையில் உள்ள ஒரு கல்வெட்டு, சூளவம்ச விவரங்களைப் பெரிதும் உறுதிப்படுத்துவதாக உள்ளது. மகாபராக்கிரமபாகுவின் 12ம் ஆட்சியாண்டைச் சேர்ந்த இப்பொறிப்பில், பர்மியப் படையெடுப்பில் முக்கிய பங்குகொண்ட கீர்த்தி நுவரகல் என்ற தளபதிக்கு (நகரகிரி கீர்த்தி) நிலங்கள் மானியமாக மன்னனால் வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது. பர்மிய அரசன் அவனது பட்டப்பெயரான 'புவனாதித்த' என்றே இப்பொறிப்பில் குறிக்கப் பட்டுள்ளான். குசுமியத்துறை தாக்கப்பட்டதையும், பர்மிய (அரமன)த் தூதுவர்கள் உடன்படிக்கை செய்ய இலங்கை வந்ததையும் இக்கல்வெட்டு உறுதிப்படுத்து கின்றது. இப்படையெடுப்பின்போது, பர்மிய அரசன் கொல்லப்பட்டான் என்ற சூளவம்சக் கூற்றை அண்மைக்காலப் பர்மிய ஆராய்ச்சியாளர் ஏற்றுள்ளதாகத் தெரிகின்றது. இலங்கைப் படையெடுப்பு பராக்கிரமபாகுவின் 12வது ஆட்சியாண்டில் (1165ல்) மேற்கொள்ளப்பட்டமையால், 1165இல் அலோங்சிது இறந்தான் என அவர்கள் கொள்வது பொருத்தமாகக் காணப்படுகின்றது.

பாண்டியப் படையெடுப்பு

தென்னகத்தில் ஒரு வல்லரசு எழுச்சிபெற்றால் அதனால் வரக்கூடிய விளைவுகளை உணர்ந்து அதை எதிர்த்து அடக்குவதற்கு ஏனைய அரசுகளுடன் கூட்டுச் சேர்தல் இயற்கையாகி வந்தது. அவ்வாறே, சோழப் பேரரசு எழுச்சி பெற்றபோது அதை எதிர்த்த பிற தென்னக அரசுகளுடன், குறிப்பாகப் பாண்டிய அரசுடன் இலங்கை இணைந்து செயலாற்றியதை நாம் முன்னர் கண்டுள்ளோம். 1ம் குலோத்துங்கனது ஆட்சி முடிவுற்றபின், சோழப் பேரரசின் வலிமை குன்றி வரவே, பாண்டியர் தமது சுயாதீனத்தை நிறுவ முற்படலாயினர். பாண்டியரின் ஆதிக்கம் வளர்வதைத் தடுப்பதில் சோழர் அக்கறைகாட்டினர். எனவே, பாண்டியர் சோழரை எதிர்க்கப் பழைய நண்பர்களான இலங்கை மன்னர்களை நாடினர்.

1169 அளவில், மதுரையில் ஆட்சி செய்துகொண்டிருந்த பராக்கிரம பாண்டியனை, குலசேகர பாண்டியன் என்ற மற்றோர் இளவரசன் தாக்கி, மதுரையை முற்றுகையிடவே பராக்கிரம பாண்டியன் இலங்கை அரசனான மகா பராக்கிரமபாகுவிடம் உதவிகோரித் தூதுவர்களை அனுப்பினான். தன்னிடம் உதவி கோரிய பராக்கிரம பாண்டியனுக்கு உதவ முடிவுசெய்த பராக்கிரமபாகு உடனே இலங்காபுரன் என்ற படைத்தலைவனை (தண்டநாயகன்) ஒரு படையைக் கொண்டு சென்று பராக்கிரம பாண்டியனது உரிமையை நிலைநாட்டி வரும்படி பணித்தான். இலங்கைப் படை மகா தீர்த்தத்தினின்றும் புறப்படுமுன்னரே, பாண்டி நாட்டில் நிலைமை திடீரென மாற்றம் அடைந்துவிட்டது. உதவிவேண்டிய பராக்கிரம பாண்டியன், குலசேகரனால் தோற்கடிக்கப்பட்டது மன்றி, மனைவி மக்களுடன் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் எட்டின. இச் செய்திகளை அறிந்த பின்னரும், பராக்கிரம பாண்டியனது கட்சியையே ஆதரித்துப் போரை நடத்தும்படி இலங்காபுரனைப் பராக்கிரமபாகு பணித்ததாகக் கூறப்படுகின்றது. பராக்கிரமபாகுவின் பாண்டியப் படையெடுப்பு பேராசையின் விளைவாகவே நடைபெற்றதெனவும், தன் போர்ப் புகழை இந்திய மண்ணில் நிலைநாட்டும்

அவாவாலேயே இதை மேற்கொண்டான் எனவும் எண்ணுவதற்கு சான்றுகள் இடந்தருகின்றன.

இலங்காபுரனது தலைமையிற் சென்ற படை தலதில்ல என்ற துறையில் இறங்கி, இராமேஸ்வரத்தை அடைந்து பின்னர் குண்டுக்கல் சென்று அங்கு ஓர் அரணை நிறுவிப் பின்னர் மதுரையை நோக்கி முன்னேறியது. இடையே நிகழ்ந்த சண்டைகள் பற்றிய விவரங்கள், இலங்கைப் படைக்கு வெற்றிமேல் வெற்றி கிட்டியதாக நம்பும்படி சூளவம்சத்திற் கூறப்பட்டுள்ளன. இடையிடையே சிங்களப்படை பின்வாங்கியும் தோல்வியெய்தியும் இருத்தல் கூடுமெனினும் இவற்றைக் கூறாது விடப்பட்டிருத்தல் இவ்வரலாற்றைக் கூர்ந்து வாசிப்போருக்கு துலக்கமாகும். மதுரைக்குச் சில மைல்கள் தொலைவில் சிங்களப்படை முன்னேறிய போது, பராக்கிரம பாண்டியனது மகனான வீரபாண்டியன், உயிர்தப்பிப் பாண்டி நாட்டுக்கு மேற்கேயுள்ள மலைப்பகுதியில் கரந்து வாழ்வதாகச் செய்திகள் எட்டின. பராக்கிரமபாகுவின் கட்டளைப்படி, வீரபாண்டியன் அழைக்கப்பட்டுச் சிங்களப்படை முகாங்களில் பாதுகாப்பளிக்கப்பட்டான். நீண்டகாலமாக நடைபெற்ற சண்டைகளின் பின் மதுரையைத் தாக்கிக் குலசேகரனைத் தோற்கடித்துக் கலைத்தபின், வீரபாண்டியன் மதுரையில் சிங்களப்படைத் தலைவர்களால் (இலங்காபுரன், ஜகத்விஜயன்) முடிசூட்டப்பெற்றான். சிங்களப் படையும் மதுரையிலேயே தங்கியிருந்தது. சூளவம்ச விவரங்களால், இப் படையெடுப்பின் முழு வரலாறும் எமக்குத் தெரியவராது. குறிப்பாக படைத்தலைவர்களுக்கு என்ன நேர்ந்தது, வீரபாண்டியன் தொடர்ந்து ஆட்சி நடத்த முடிந்ததா போன்ற வினாக்களுக்குச் சோழர் கல்வெட்டுக்கள் மூலமே விடைகாணவேண்டும். இக்கல்வெட்டுக்கள் சூளவம்ச விவரங்கள் சிலவற்றை உறுதிப்படுத்துவதோடு, காலவேடு திடீரென நிறுத்திய கதையைத் தொடர்ந்து கூறுகின்றன. இக் கல்வெட்டுக்களில், 2ம் இராஜாதிராஜனது (5ம் ஆண்டைச் சேர்ந்த) ஆர்ப்பாக்கம் கல்வெட்டே, காலத்தால் முந்தியதாகும். பாண்டிநாட்டைச் சிங்களப்படை வென்று, தொண்டி, பாசி முதலான கிராமங்களை இராமநாதபுர மாவட்டத்தில் வெற்றி கொண்டதை இது உறுதிப்படுத்துகின்றது.

அதே சோழமன்னனது 8ம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டு, சிங்களப்படை குலசேகரனைத் தோற்கடித்துக் கலைத்துவிட்டு, வீரபாண்டியனை அரசனாக்கியபோது, குலசேகரன் சோழருடைய படை உதவியை வேண்டியதைக் குறிப்பிடுகின்றது. சோழவேந்தன் இவனது வேண்டுகோளுக்கு இணங்கி, திருச்சிற்றம்பலமுடைய பெருமான் நம்பியென்ற பல்லவராயனது தலைமையில் ஒரு படையை அனுப்பினான். சோழப் படைத்தலைவன் சிங்களப் படையைத் தோற்கடித்ததுமன்றி, தன் மன்னன் விடுத்த கட்டளையை நிறை வேற்றும் வகையில் இலங்காபுர தண்டநாயகன் முதலான படைத்தலைவர்களின் தலைகளைக் கொய்வித்து, மதுரையின் வாயிற் கதவில் அறைவித்தான். இதன்பின் குலசேகரன் மதுரையில் மீண்டும் ஆட்சி செலுத்தலானான் எனவும், இதனால் 'பாண்டி நாடு ஈழநாடாகாதபடி' பாதுகாக்கப்பட்டதாகவும் அக்கல்வெட்டுக்

கூறி முடிக்கின்றது. தலைகள் மதுரை வாயிலில் அறையப்பட்ட செய்தி உண்மையென்று கொள்ளவேண்டிய அவசியமில்லையெனினும், குலசேகரன் பின்னர் சோழப்படையின் உதவியுடன் வெற்றியீட்டினான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. குலசேகரனாற் பின்னர் இத்தலைகள் அகற்றப்பட்டதாகக் கூறப்பட்டிருத்தலாலும், சோழருக்குப் புகழ்தராத இச்செயலைக் கற்பனைசெய்து கூறவேண்டியதில்லையெனவும் காரணங்காட்டி, இச்செய்திகள் பெரும்பாலும் உண்மை விவரங்களாதல் வேண்டும் என ஓர் அறிஞர் கருதுகின்றார்.

இரண்டாம் இராஜாதிராஜனது மற்றொரு கல்வெட்டு (12ம் ஆண்டைச் சேர்ந்த திருவாலங்காட்டுப் பொறிப்பு), பாண்டியப படையெடுப்புப் பற்றிய வரலாற்றின் மற்றொரு கட்டத்தைக் கூறுகின்றது. குலசேகரன் அரசை மீண்டும் பெற்றதுவரை கூறியபின், பராக்கிரமபாகு சோழ அரசனுக்கும், குலசேகரனுக்கும் எதிராகப் புதியதொரு தாக்குதலை மேற்கொள்வதற்குப் படைகளைத் திரட்டி இலங்கையின் வடபகுதியில் ஊராத்துறை, புலைச்சேரி, மாதோட்டம், வலிக்காமம், மட்டிவாள் (மட்டுவில் அல்லது எழுதுமட்டுவாள்?) முதலான இடங்களில் அவற்றை நிறுத்தி, கப்பல்களைக் கட்டி ஆயத்தங்களைச் செய்து வருவதைச் சோழர் படைத்தலைவன் (அண்ணன் பல்லவராயன்) அறிந்து, அப்படையெடுப்பை முறியடிக்க உடனே நடவடிக்கைகள் எடுத்ததாக அக்கல்வெட்டுக் கூறுகின்றது. அந்நேரத்தில் சோழநாட்டில் தங்கியிருந்த சிங்கள இளவரசனான (மனாபரணனது மகனான) ஸ்ரீபல்லவன் தலைமையில், சோழப்படை இலங்கைக்கு அனுப்பப்பட்டது. இப்படையானது வடபகுதியில், புலைச்சேரி, மாதோட்டம் முதலான இடங்களிற் பல அழிவுகளைச் செய்து, பல பிரதானிகளைக் கொன்று, யானைகளைக் கைப்பற்றி, பல கைதிகளுடனும் கொள்ளைப் பொருள்களுடனும் மீண்டது. பராக்கிரமபாகு தன் படையெடுப்புத் திட்டத்தைக் கைவிட்டதுமன்றித் தன் கொள்கையையும் மாற்றிக் குலசேகரனையே உரிமையுள்ள பாண்டிய அரசனாக ஏற்று ஆதரித்தான். இதன்பின் குலசேகரன் சோழருக்கு எதிராக நடக்கத் தலைப்பட்டு, அவர்களுடைய சில திறையாளர்களைத் தாக்கினான். இதனால், சோழ மன்னன் வீரபாண்டியனையே ஆதரித்து, (அண்ணன்) பல்லவராயன் தலைமையில் மீண்டும் ஒரு படையை மதுரைக்கு அனுப்பினான். வீரபாண்டியன் இப்போது சோழப்படையின் உதவியுடன் பாண்டிய அரசனானான். இவ்வாறு 1169இல் தொடங்கிய பாண்டிய உள்நாட்டுப் போர் ஏறத்தாழ பத்து ஆண்டுகள் வரையில் நடைபெறலாயிற்று. இப்போரில் பராக்கிரமபாகு இறுதியில் தோல்வியே அடைந்தானென்பதும், சோழரால் ஆதரிக்கப்பட்டவர்களே வெற்றியீட்டினர் என்பதும் தெளிவு. பாண்டி நாட்டில் தனது செல்வாக்கை நிலைநாட்டவும், சோழருக்கெதிரே தனது ஆதரவுபெற்ற ஒரு பாண்டியனை அரசனாக்கவும் அவன் எண்ணியிருப்பின், அந்த எண்ணங்கள் கைகூடாது போயின. பாண்டி நாட்டுப் போர், பராக்கிரமபாகு எதிர்பார்த்திராத அளவுக்கு நீடித்ததால், இலங்கைக்குப் பெரு நட்டமேற்பட்டது. பராக்கிரமபாகு கடும் வரிகளை விதித்துக் குடிகளை வருத்தியதாகப் பின்னர் கூறப்பட்டதற்கு, பாண்டியப் படையெடுப்பால் அவனுக்குண்டான பெருஞ் செலவுகளே காரணமெனல் வேண்டும்.

மகாபராக்கிரமபாகுவின் வரலாற்றை முடிக்குமுன், வரலாற்றில் அவனுக்கு அளிக்கப்படவேண்டிய இடத்தைப்பற்றிக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். அவனுடைய வரலாற்றை இவ்வளவு விரிவாக அறியவும், எழுதவும் உதவியவர் அவனது புகழ்க் காவியத்தைப் பாடிய சூளவம்ச ஆசிரியரே. விஜயபாகுவின் ஆட்சியின் முடிவில் உண்டான குழப்ப நிலைமைகளிடையே பிளவுபட்டிருந்த நாட்டை ஒன்றுபடுத்தி ஆண்டமை அவனுடைய ஒரு சாதனையென்பதில் ஐயமில்லை. போர்களைத் திட்டமிடுவதிலும் நடத்துவதிலும் அவனது திறமை அடங்கியிருக்கவில்லை. பாசனங்கள் அமைப்பதிலும், கட்டிடங்கள் நிறுவுவதிலும் அவன் நிகழ்த்திய சாதனைகளை இலங்கை மன்னன் எவனும் விஞ்சியிருப்பான் எனக் கூறவியலாது. இவற்றாலும், இவனது மதப் பணிகளாலும் இலக்கிய, பண்பாட்டுத்துறை வளர்ச்சியில் அவன் காட்டிய ஆர்வத்தாலும் நாடு அவன் காலத்தில் எய்திய செழிப்பை அளவிடமுடியாது. அவனது அயல்நாட்டுக் கொள்கையால், அவன் புகழ் வெளிநாடுகளிலும் பரவ ஏதுவாகவிருந்ததுமன்றி, பிற நாடுகளுடன் உறவுகள் வளரவும், அது வழிவகுத்தது எனலாம். ஆனாலும் இப்போர்கள் அவனது பேராசையினால் உண்டானவையென்றும், இப்போர்களாலும் அவன் மேற்கொண்ட பாரிய கட்டிட வேலைகளாலும் குடிகளின் வரிப்பளு அதிகமானதெனவும், ஒரு தனி மனிதனது பேராசையைத் திருப்திப்படுத்தப் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர்த்தியாகஞ் செய்ய நேர்ந்ததெனவும் கண்டிக்கப்பட்டுள்ளன. எனவே, இலங்கை வரலாற்றில் அவனுக்கு அளிக்கப்பட வேண்டிய மிகஉயர்வான இடத்தை அவன் அடையாதவாறு அவன் நடத்திய அயல்நாட்டுப் போர்கள் தடை செய்கின்றன என்பதில் உண்மையிருப்பதாகவே தென்படுகின்றது.

மத்தியகாலத் தென்கிழக்காசியாவும் பொலன்னறுவையும்

முதலாம் பராக்கிரமபாகுவுக்குப் பிந்தியகால இலங்கை வரலாற்றைத் தொடர்ந்து படிக்குமுன், பர்மா, தாய்லாந்து (சீயம்), கம்போடியா, மலாயா, இந்தோனேஷியா முதலான தென்கிழக்காசிய நாடுகளின் ஆதிகால வரலாறு பற்றியும், அவற்றுக்கும் இலங்கைக்குமிடையே நிலவிய தொடர்புகள் பற்றியும் மிகச்சுருக்கமாக அறிந்துகொள்வோம். ஆதிகால இலங்கை வரலாற்றை இந்தியா மட்டுமே பாதித்ததென முடிவுக்கு வருதல் மிகவும் தவறானது. இலங்கையின் நிலையம் காரணமாக தென்கிழக்காசிய நாடுகள் பலவும் சீனாவும் இத்தீவுடன் மத, வணிக, பண்பாட்டு உறவுகளை மிகுதியாகவும், இடையிடையே அரசியற் றொடர்புகளையும் கொண்டிருந்தன. கடற்கரைகளைக் கொண்ட நாடுகளாக அவை பெரும்பாலும் இருப்பதால், அவற்றுக்கும் இலங்கைக்குத் தீவுக்கும் கடல்வழித் தொடர்புகள் இருந்ததில் வியப்பில்லை. இவ்வத்தியாயத்தைப் படிக்கும்போது, இரண்டு முக்கிய விடயங்களை நாம் அவதானிக்கவே செய்வோம். முதலாவதாக, இலங்கை வரலாற்றில் இந்தியா கொண்டிருந்த செல்வாக்குப் போலவே, பெரும்பாலான தென்கிழக்காசிய நாடுகளிலும் இந்தியாவின் செல்வாக்கு மிகுதியாக விளங்கியமைக்குச் சான்றுகள் இருப்பதைக் காண்போம்.

மதத்துறையிலும், பண்பாட்டுத் துறைகளிலும் இந்தியாவின் ஆதிகால வரலாற்றில் உண்டான இயக்கங்களும், பெரும் மாறுதல்களும் அந்நாடுகளையும் பாதித்துள்ளன. பௌத்தம் (தேரவாத, மஹாயானப் பிரிவுகள்) அந்நாடுகளிற் பரவுமுன், இந்து (சைவம், வைணவம்) மதம் அங்கே பரவியிருந்ததை அறியலாம். பண்பாட்டுத்துறைகளில் சமஸ்கிருதம், பாளி, தமிழ் ஆகிய மொழிகளும் அவற்றின் இலக்கியங்களும் கட்டிட, சிற்பக்கலைகளில் இந்தியாவில் உருவான பெரும்பாலான கலைமரபுகளும் அந்நாடுகளிற் பெரிதும் ஆதிக்கம் செலுத்தியதை அறியலாம். வணிகத் தொடர்புகளும் மிகவும் பலமாக அமைந்திருந்ததைப் பல ஆதாரங்கள் காட்டுகின்றன. இவ்வாறு இந்தியச் செல்வாக்கு மிகுதியாக அந்நாடுகளிற் காணப்பட்டதைக் கருத்திற்கொண்டு சில அறிஞர்கள், இந்தியாவின் 'குடியேற்ற நாடு'களாக அவற்றைக் கொண்டு, அவற்றைக் குறிக்க விரிவெய்திய இந்தியா, 'கடல் கடந்த இந்தியா (Greater India, Further India) முதலான பெயர் களையும் சூட்டினர். நாம் இவ்வாறு நோக்காது, அந்நாடுகளில் ஏற்பட்ட இந்தியச் செல்வாக்குக்குச் சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம். இரண்டாவதாக, தென்கிழக்காசிய நாடுகள் இலங்கையுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கத்தக்க நிலையத்திலும், தொலைவிலும் இருத்தலை தென்கிழக்காசிய நாடுகளின் படத்தை அவதானிக்கும்போது நாம் கண்டு கொள்ளலாம்.

கம்போடியா

∴பூனன் (Funan) அரசு : பொலன்னறுவைக் காலத்திலும், அதற்குப் பின்னருமே கம்போடியாவுக்கும் இலங்கைக்கும் தொடர்புகள் இருந்தமைக்குச் சான்றுகள் கிடைத்தபோதிலும், அதற்கு முன்னரும் தொடர்புகள் இருந்திருத்தல் கூடுமென நாம் நம்பலாம். கி.பி. 1ம் நூற்றாண்டிலிருந்து 16ம் நூற்றாண்டு வரை, பல அரசுகள் கம்போடியாவில் தோன்றிமறைந்தன. கிமர் (Khmer) என்ற இனமக்கள் வாழ்ந்த கம்போடியா நாட்டினை மேகொங் (Mekong) நதி வளம் படுத்தியது. கி.பி. 550 வரை கம்போடியாவை ஆண்ட அரசைச் சீன ஏடுகள் 'பூனன்' அரசு எனக் குறிப்பிட்டுள்ளன. கௌண்டின்யன் என்ற ஒரு பிராமணன் இதை நிறுவியதாக ஒரு கதை அந்நாட்டில் வழங்குகின்றது. இக்கதை பல்லவர் அரச மரபின் தோற்றத்தை விளக்க எழுந்த ஒரு கதையை நினைவூட்டும், பூனன் அரசின் துறைமுகப் பட்டினமொன்றில் (ஒக் இயோ என்பதில்) செய்யப்பட்ட அகழ்வுகள் பாரசீகம், இந்தியா முதலான நாடகளுடன் இருந்த தொடர்புகளைத் தெளிவாக்கும். பூனன் அரசின் மிகச் சிறந்த மன்னனது பெயரைச் சீன ஏடுகள் பான்-ஷி-மன் என்ற உருவத்திற் பேணியுள்ளன. பல நாடுகளை வென்று ஆட்சி நடத்தியதுடன், தன் கடற்படை தந்த வலியால் கடலாதிக்கஞ் செலுத்தி வந்தான். பிந்திய பூனன் அரச மரபினருள் கீர்த்தி பெற்றவன் ஜயவர்மன் ஆவான். பெரும்பாலான பூனன் மன்னர்கள் சைவத்தையே சார்ந்து நின்றதாகத் தெரிகின்றது. சமய வழிபாட்டில் இடம்பெற்ற சிலைகள் வாயிலாக ஹரிஹர வழிபாடு அதி முக்கியத்துவம் பெற்றிருந்தமை புலப்படுகின்றது. கம்போடியாவில் விளங்கிய மிகப் பழைய அரசான பூனன் அரசு 550இல் வீழ்ச்சியடைந்தது.

சென்-லா அரசு: பூனன் அரசினது வீழ்ச்சியைக் கொண்டுவரக் காரணமாக இருந்த பவவர்மன், சித்திரசேனன் என்ற இரு சகோதரர்கள் அதன் திறைநாடாக இருந்த சென்-லாவை (Chen-la) ஆட்சிசெய்தவர்கள். இவர்கள் நிறுவிய அரசானது 6ம் நூற்றாண்டிலிருந்து சில நூற்றாண்டுகள் வரை சிறப்புடன் திகழ்ந்தது. இவர்களது குடும்பப் பெயரான கம்பு-ஜ என்பதே, கம்போஜ என்ற சமஸ்கிருத வடிவம் பெற்று நாட்டுக்கும் பெயராயிற்று. சென-லா சகோதரர்களைத் தொடர்ந்து, நாட்டைச் சிறப்புடன் ஆட்சிசெய்த ஈசானவாமன், 1ம் ஜயவர்மன் ஆகியோரும் போர்களில் பெரும் வெற்றிகளை ஈட்டி, தமது அரசை வலிமைபெற வைத்தனர். இம்மன்னர்களால் நிறுவப்பட்ட கட்டிடங்களும், செங்கற்களாலான கோபுரங்களும், இந்தமதக் தகடவுளரின் உருவச்சிலைகளும், சமஸ்கிருதத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களும் இம்மன்னர்களின் ஆட்சிச் சிறப்பை எடுத்துரைக்கின்றன. சைவமே அங்கீகாரம் பெற்ற மதமாக விளங்கியபோதும், வைணவப் பிரிவும் இருந்ததை அறியமுடிகின்றது. சிவலிங்கவழிபாடு அதிக முக்கியத்தைப் பெற்றிருந்தது. அழகிய சமஸ்கிருத வாக்கியங்களைக் கொண்ட பல பொறிப்புக் களை இவர்கள் விட்டுச்சென்றுள்ளனர். வடமொழிக் காவியங்களும் புராணங்களும் அந்நாட்டில் தோன்றிய இலக்கியங்களுக்கு ஊட்டமளித்தன. பூனன் அரசின் சுவடுகளில் தோன்றிய சென்-லா அரசும், 8ம் நூற்றாண்டில் தோன்றிய உள்நாட்டுப் போர்களாலும், ஸ்ரீவிஜய அரசு முதலான அரசுகளின் தாக்குதல்களாலும் நிலைகுலைந்து அழியலாயிற்று. சென்-லா அரசன் ஒருவன், ஸ்ரீவிஜய அரசைச் சேர்ந்த படைகளால் சிறைப்பிடிக்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு சிரச்சேதம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஆங்கோர் (Angkor) அரசு

கம்போடியாவில் ஆதிக்கம் பெற்றிருந்த அரசுகளில் மிகவும் புகழ்வாய்ந்தது ஆங்கோர் அரசாகும். ஆங்கோர் என்ற நகர் அதன் தலைநகராகவும், பண்பாட்டு நிலைக்களனாகவும் விளங்கியது. ஆங்கோர் அரசை நிறுவியபெருமை 2ம் ஜயவர்மனைச் சார்ந்ததாகும். முன்னர் ஸ்ரீவிஜயவில் கைதியாக வாழ்ந்ததாகக் கூறப்படும் இவன், தனது நாடு மீண்டு, சுயாதீனமுடைய அரசை நிறுவுவதில் முக்கிய பங்கு கொண்டான். 'தேவராஜா' என்ற வழிபாட்டு முறை அந்நாட்டில் உருவாவதற்குக் காரணமாக இருந்தவனும் இவனே. அரசனைத் தெய்வ உருவிற் கண்டு, அதன் சின்னமான ஒரு லிங்கத்தை மக்கள் வழிபாட்டுக்கு அமைத்து விடுதல் இவ்வழிபாட்டு முறையின் முக்கிய அம்சமாக இருந்தது. இந்த லிங்கத்தின் நலனைப் பேணுவதிலேயே குடிகளின் நலனும் தங்கியிருந்ததாக நம்பும்படி செய்யப்பட்டது. இந்த லிங்க வழிபாட்டுக்கென எழுந்த கோவில்களில் மன்னர் களின் சடலங்கள் அடக்கஞ் செய்யப்பட்டன. ஜயவர்மனுக்குப் பின் வந்த மன்னர்கள் இம்முறையை மேலும் வளர்த்து, கலைநுட்பங்கள் கொண்ட பல கோவில்களை அமைத்தனர். பேகொங் என்ற அற்புதக்கோவிலை 1ம் இந்திரவர்மனும், பழைய அங்கோர் நகரான யசோதரபுரத்தை 1ம் யசோவர்மனும் நிறுவினர். சைவம், வைணவம், பௌத்தம் ஆகிய மதப்பிரிவினர்க்கான

நிறுவனங்கள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இம்மதங்களுள் அக்காலத்தில் சைவமே முதன்மைபெற்று விளங்கியது. 11ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆட்சியைப்பெற்ற 1ம் சூர்யவர்மன் அரசியற்றுறையிலும், சமயத்துறையிலும் பெரும்புகழைப் பெற்றவன். இவன் நிறுவிய இரு சமயக் கட்டிடங்களான தா-கியோ, பிமியனகாஸ் என்பவை அவனது புகழை நிலைக்க வைத்துள்ளன. அடுத்த நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சிசெய்த 2ம் சூர்யவர்மன் (1113 - 1150) பழம் பெருமை வாய்ந்த சம்பா அரசையும் (Champa) மேற்கேயிருந்த பல சிற்றரசுகளையும் அடிபணிய வைத்தவன். சீனாவுக்கு மும்முறை தூதுக் குழுக்களை அனுப்பி அந்நாட்டுடன் நல்லுறவுகளை வளர்த்தான். ஆங்கோர்-வாட் (Angkor-wat) என்ற மிகப்பெரிய சமயக் கட்டிடத்தை நிறுவியமை இவனது வியத்தகு சாதனையாகும். உலகிலேயே உள்ள சமயக் கட்டிடங்களில் முதன்மை பெறத்தக்கது இப்பிரமாண்டமான கட்டிடம். கருடவாகனத்தில் ஏறிய விஷ்ணுவின் தங்க விக்கிரகம் ஒன்று இக்கோவிலில் வைக்கப்பட்டிருந்தது. விழா நாட்களில் மட்டும் இவ்விக்கிரகம் வெளியே பவனிவரும். 12ஆம் நூற்றாண்டில் வைணவமே முதன்மை பெற்றிருப்பினும், சைவமும் பின்பற்றப்பட்டமைக்குச் சான்றுகள் உண்டு. 2ஆம் சூர்யவர்மனது மறைவுக்குப் பின், கமேர் அரசு மீண்டும் பல தொல்லைகளை எதிர்நோக்க வேண்டி நேர்ந்தது. 7ஆம் ஜயவர்மனே இந்த அரசுக்கு மீட்சியை அளித்து அதன் புகழ்கொடியை மிகவும் உயரப்பறக்க வைத்தவன். சம்பா அரசு மீது ஒரு படையெழுச்சியை மேற்கொண்டு, அதைத்தன் மேலாணைக்கு உட்படுத்தினான். இவன் அடைந்த போர் வெற்றிகளால், 2ஆம் சூர்யவர்மனுடையதைக் காட்டிலும் விரிவான அரசை ஆட்சி செய்தான். பழைய அங்கோர் நகருக்கு அண்மையில், புதுமையானதும் விசித்திர நிருமாண அமைப்பைக் கொண்டதுமான ஆங்கோர்-தொம் (Ankgor-thom) என்ற மற்றொரு நகரை நிறுவினான். இப்புதிய நகரின் நடுவே அமைக்கப்பட்ட பேயோன் (Bayon) என்ற விநோதக் கோவில் பெருங்கலை நுட்பம்வாய்ந்த அமர படைப்பாகும். 7ஆம் ஜயவர்மனுக்குப்பின், அவனுக்கு நிகரான ஆற்றல் படைத்த மன்னன் எவனும் ஆட்சிக்கு வராததால் கிமர் அரசும் அழிவுப் பாதையில் மெல்ல நகர்ந்தது. 1431இல் சீயப்படையெழுச்சியொன்று நடைபெற்றதோடு, அதன் பெருமை மறையலாயிற்று. ஆனால் அதன் சுதந்திரம் மேலும் ஒரு நூற்றாண்டு வரை பேணப்பட்டது. அதற்கு முன்பாகவே, அங்கோர் நகரை கிமர் மன்னர்கள் கைவிட்டு வேறு இடங்களைத் தலைநகராகக் கைக்கொள்ளலாயினர்.

கம்போடியாவும் இலங்கையும்

கம்போடியாவுடன் இலங்கை பொலன்னறுவைக் காலத்துக்கு முன் தொடர்புகள் கொண்டிருந்தமைக்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. பொலன்னறுவைக் காலத்திலும், மகாபராக்கிரமபாகுவின் பர்மியப் படையெடுப்புக்கான காரணங்களைக் கூறும்போது, (சூளவம்சம் அத். 76ம் செய். 35) 'மேலும், கம்போஜ நாட்டுக்கு லங்காவின் மன்னனால் அனுப்பப்பட்டிருந்த ஓர் இளவரசியை அவர்கள் பலவந்தமாகக் கைப்பற்றினர்' எனக் குறிப்பிட்டுள்ளதைக் கொண்டு, அந்நாட்டுக்கும்

இலங்கைக்குமிடையே நல்லுறவுகள் நிலைநாட்டப் பெற்றிருந்தமை பெறப்படும். சமய, பண்பாட்டு உறவுகள் 14ம் நூற்றாண்டுக்குப் பின்னரே ஏற்பட்டமைக்கக் காரணமுண்டு. நாம் மேலே கவனித்தவாறு, கம்போடியாவில் சைவம், வைணவம், மகாயான பௌத்தம் என்பனவே 14ம் நூற்றாண்டுவரை அங்கு முதன்மைபெற்று விளங்கி வந்துள்ளன. இதனால், தேரவாதப் பிரிவைச் சார்ந்த பௌத்தத்தைப் பின்பற்றிய இலங்கைக்கும் அந்நாட்டுக்கும் 14ம் நூற்றாண்டுவரை சமய உறவுகளோ, அதன் அடிப்படையில் ஏற்படும் பண்பாட்டுத் தொடர்புகளோ ஏற்பட ஏதுக்கள் இருக்கவில்லை. 14ம் நூற்றாண்டளவில் கம்போடிய தேரவாத பௌத்தத்தையே பின்பற்றுவதாயிற்று. இவ்வாறு கம்போடியா தேரவாத பௌத்த நாடாக மாறுவதற்கு இலங்கை மறைமுகமாக உதவியது. 12ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கை வந்து சங்கத்திற் சேர்ந்து பர்மாவுக்கத் திரும்பிய சப்பட என்ற சத்தம்ம ஜோதிபால தேரர், பின்னர் பர்மாவில் சிங்கள-சங்கமொன்றை (சீஹள-சங்க) நிறுவியதை விரைவில் அறிவோம். அவ்வாறு பர்மாவுக்குத் திரும்பிய பர்மியப் பிக்குவுடன் இலங்கையிலிருந்து கூடிச்சென்ற சமயத் தோழர் களுள் ஒருவர் கம்போடிய இளவரசராகவிருந்தவரெனப்படுகின்றது. பர்மாவிலிருந்து சீயத்துக்கும், கம்போடியாவுக்கும் தேரவாத பௌத்தக் கருத்துக்கள் பரவலாயின. அக்கருத்துக்கள் கம்போடிய மக்களைப் பெரிதும் கவர்ந்ததால், அவர்கள் அம்மதத்தைப் பெருந்தொகையினராகத் தழுவிக்கொண்டனர். இவ்வாறு கம்போடிய மக்கள் தேரவாத பௌத்தத்தைத் தழுவிக்கொண்டமை, முந்திய சமய-அரசியற் கோட்பாட்டைத் (தேவ-ராஜா வழிபாடு) தகர்த்து, அரசர்கள் குடிகளிடம் பெற்ற பக்தி கலந்த மதிப்பையும் செல்வாக்கையும் இழக்கவைத்து கிமர் அரசின் வீழ்ச்சிக்கு அடிகோலியதாக சோடேஸ் (Coedes) முதலான பேரறிஞர்கள் கருதுவர். இவ்வாறு இரு நாடுகளும் ஒரேமதத்தைத் தழுவியமையால், 14ம், 15ம் நூற்றாண்டு களில் இவற்றுக்கிடையே சமயத் தொடர்புகள் வலுப்பெற்று வரலாயின. கோட்டையில் ஆட்சிசெய்த 6ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் பர்மா, சீயம், கம்போடியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிக்குகள் இலங்கை வந்து (1425 அளவில்) திருநூல்களைக் கற்றுத் தேர்ந்து களனியில் புதிதாக குரு அபிடேகம் பெற்று தத்தம் நாடுகளுக்கு மீண்டனர். அங்கு இலங்கையில் உள்ளது போன்ற சங்கங்களை நிறுவியதாகவும் கூறப்பட்டுள்ளது. தேரவாத பௌத்த நூல்கள் பாலியிலுள்ளதால், அம்மொழியே இரு நாடுகளுக்கிடையேயும் கலாசாரப் பரிவர்த்தனை செய்ய உதவியிருக்கும். இலங்கையிலுள்ள நூல்களைக் கம்போடிய அறிஞர்கள் கற்று, தமது நாட்டில் இலக்கியங்களை எழுதவும் அவற்றை ஆதாரமாகக் கொண்டிருப்பர் என்பர். யாப்பாகுவவில் உள்ள அரண்மனையின் வாயிற்படிக்கட்டின் அமைப்பு கம்போடியாவிலுள்ள அக்காலக் கிமர் கட்டிடங்களுக்குள்ளதைப் போன்று அமைந்திருப்பதை அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். இதனால் கம்போடியாவின் கலை வளர்ச்சி இலங்கையிலும் செல்வாக்கையுண்டு பண்ணியதாகச் சிலர் கொள்கின்றனர்.

ஸ்ரீ விஜயப் பேரரசு

இப்போது இந்தோனேஷியா என அழைக்கப்படும் தீவுக்கூட்டத்தில் அங்கம் வகிக்கும் முக்கிய தீவுகளான சுமாத்திரா, ஜாவா ஆகியவற்றுக்கு மிகவும் புகழ்வாய்ந்த பழைமையான வரலாறு உண்டு. மலாயாத் தீபகற்பத்தின் தொடர்ச்சியாக இவை அமைந்திருப்பது போலக் காட்சியளிப்பது மட்டுமன்றி ஒரேயின மக்களைப் (மலாய்) பெரும்பாலும் இவை கொண்டிருந்தன. இவற்றுள், ஸ்ரீ விஜய அரசு என்பதே சுமார் 7ம் நூற்றாண்டு ஆட்சி முதல் 13ம் நூற்றாண்டு வரையில் அங்க நிலவியபோது, இலங்கையும் அதனுடன் தொடர்புகளைப் பூண்டிருந்தமையின், பின்னணியில் அதன் எழுச்சி பற்றியும், எமது தீவுக்கும் உள்ள தொடர்புகள் பற்றியும் சிறப்பாக இங்கு நோக்குவோம். சுமாத்திராத் தீவிலுள்ள பாளெம்பாங் (Palembang) என்பதை மையமாகக் கொண்டு எழுச்சி பெற்றதே இந்த அரசு ஆகும். யாத்திரிகர் முதலானோரின் பயணக்குறிப்புக் களாலும், பிறநாட்டு நூல்களாலுமே இப்பேரரசின் வரலாற்றை அறிய வேண்டியதாக உள்ளது. சீனாவுடன் நடைபெற்ற வணிகத்தில், சுமாத்திரா தன் புவியியல் அமைவு காரணமாக அது வகித்த கேந்திர நிலையால் அது அதிக முக்கியம் பெற்றிருந்தது. குறிப்பாக, சுமாத்திராவின் இரு புறமும் உள்ள தொடுகடல்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம், தென்கிழக்காசிய வணிகத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் அது இருந்தது. இவ்விதமாகவே, ஸ்ரீ விஜய அரசு எழுச்சி பெற்றதாகக் கொள்வர். ஸ்ரீவிஜய அரசின் கப்பல்கள் சீனாவிலுள்ள துறைமுகங்களுக்கச் சென்று அங்கிருந்து கொணர்ந்த பொருட்களைத் தமது துறைகளுக்கு வந்திருந்த கப்பல்களுக்கு விற்றுப் பெரும் லாபத்தைப் பெற்றனர். சுமாத்திராவிலும், பிறதீவுகளிலும் (கிழக்கிந்தியத் தீவுகள்) உற்பத்தியான பொருட்களையும் அக்கப்பல்களுக்கு விற்று வரலாயினர். ஸ்ரீ விஜய அரசின் கப்பல்கள் ஒரு புறம் இந்தியா வரையும், மறுபக்கத்திற் சீனாவரையும் சென்று அதன் வணிக ஆதிக்கத்தை நிலைநாட்டி வந்தன. தமது கடலாதிக்கத்தின் மூலம், தமது வணிக ஆதிக்கத்திற்குப் போட்டியேற்படாது பார்த்துக் கொண்டனர். மலாயாத் தீபகற்பத்தில் லிகோரில் 775ல் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டு, அத் தீபகற்பம் வரை அது அந்நேரத்தில் விரிவெய்தியிருந்ததை உறுதிப்படுத்து கின்றது.

சைலேந்திரர்கள்

'மலையரசன்' என்ற பொருளுடைய 'சைலேந்திரன்' என்பதைத் தம் மரபுப் பெயராகக் கொண்ட ஒரு பௌத்த அரசவமிசம் கி.பி. 8ம், 9ம் நூற்றாண்டுகளில் ஸ்ரீ விஜய அரசை ஆண்டதாகத் தெரிகின்றது. மலைகளிற் கோவில்களை நிறுவி அவற்றைத் தமது ஆட்சியின் ஓர் அங்கமாக இணைத்தல் மிகப்பழைய காலத்தில் மெசொப்பத்தேமியாவில் தொடக்கப் பெற்றிருந்தது. இம்முறையை இந்தியாவிலும் பல மன்னர்கள் கைக்கொண்டிருந்தனர். இந்தியாவிலிருந்தே இம் முறை தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பரவியிருத்தல் வேண்டும் என்பர். இம் மன்னர்கள் மகாயான பௌத்தத்தையாதரித்து, அம்மதப் பிரிவுக்குச்

சார்புடைய பல கட்டிடங்களை நிறுவியதாகத் தெரிகின்றது. சைலேந்திரர்களுடைய ஆட்சிக் காலத்தில் பௌத்தக் கலைகளை வளர்த்த ஒரு நிலையமாக பாளெம்பாங் திகழ்ந்தது. புதிய நாடுகளைக் கைப்பற்றியபோது, அங்கும் அவர்கள் மகாயான பௌத்தத்தைப் பரப்பி அதற்கான சமய நிறுவனங்களையும் கட்டிடங்களையும் அமைத்தனர். வடஇந்தியாவிலுள்ள நாலந்தாவில் சைலேந்திரனொருவன் ஒரு விகாரையை நிறுவி, யாத்திரிகர்கள் தங்கிக் கல்வி பயில்வதற்கு வாய்ப்பளித்ததாக அங்குள்ள ஒரு பொறிப்புத் தெரிவிக்கின்றது. வங்காளத்தில் ஆட்சிசெய்த ஒரு பால மன்னன் (தேவபாலன்) இந்நிறுவகத்துக்கு மானியமாக நிலங்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

சைலேந்திரர்கள் ஜாவாத் தீவிலும் மகாயான பௌத்தத்தைப் பரப்ப முற்பட்டபோது, மத்திய ஜாவாவிலுள்ள மாதரம் என்ற பகுதியில் மற்றொரு அரச மரபு அம்முயற்சியை எதிர்த்து வெற்றிகண்டது. சஞ்சயன் மரபினர் என்ற அம் மரபினர் சைவத்தையாதரித்து அதன் வளர்ச்சிக்கெனப் பல கோயில்களை நிறுவினர். சஞ்சய வம்சத்தில் வந்த ஒருவன் (கும்பயோனி) பால புத்திரதேவன் என்ற சைலேந்திரனைத் தோற்கடித்தபின் அவ்வெற்றியைக் கொண்டாடும் முறையில் ரத்துபக மேட்டுநிலத்தில், (பிரம்பாணனுக்குத் தெற்கேயுள்ளது) சிவலிங்கங்களை நாட்டி, பெரங் எனும்மிடத்தில் ஒரு சிவன் கோயிலை நிறுவியதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

சைலேந்திர மன்னர்கள் ஜாவாவில் நிறுவிய மகாயான பௌத்தக் கட்டிடங்கள் அவர்களுடைய சமய ஆர்வத்தைப் பிரதிபலிக்கின்றன. அதனிலும் மேலாக, கட்டிடத்துறையில் அவை பெருஞ்சாதனைகளாகவிருக்கின்றன. அவர்களுடைய கோவில்கள் 'சண்டி' என அழைக்கப்படுகின்றன. பொரபுதூரில் உள்ள சண்டி என்ற ஸ்தூபம் இயற்கைக் குன்றின் உச்சியில் அமைந்தது. அதையடையச் செல்லும் வழியெல்லாம், உயர்ந்து செல்லும் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சைலேந்திரர் ஆட்சிக்காலத்தில் கலைகள் எய்திய மிகப்பெரிய வெற்றியாக இதைக் குறிப்பிடுவர். மத்திய ஸ்தூபத்தை அடைவதற்குச் செல்லும் வழியில் உள்ள சுவர்களை அணிசெய்ய மகாயான நூல்களிலுள்ள கதைகளைச் சித்தரிக்கும் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சண்டி மெண்டத் என்ற மற்றொரு கோவில், பொரபுதூரையடுத்து நிறுவப்பட்டுள்ளது. இதன்கண், ஒரு புத்தர்சிலையும், அதன் இரு மருங்கும் அறவுரை நிகழ்த்தும் பாணியில் இரு போதிசத்துவர் சிலைகளும் செதுக்கப்பட்டுள்ளன. கோவிலின் வெளியேயும் ஒன்பது போதிசத்துவர் சிலைகள் காணப்படுகின்றன. சண்டி பேவொன், சண்டி பிளேசன் முதலான பௌத்தக் கோவில்களும் சைலேந்திரர் காலத்தைச் சேர்ந்தவையே. இவையனைத்திலும் இந்தியக் கலை மரபுகளின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுகின்றது.

சைலேந்திரர் மரபு ஒன்பதாம் நூற்றாண்டில் அருகிவிட்டபோதும், ஸ்ரீவிஜய அரசு ஒரு வர்த்தகப் பேரரசாகத் தொடர்ந்து நிலைபெற்றுள்ளது. அராபியரினதும், சீனரினதும் நூல்களில் இது பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அராபியர் 'ஸாபாக்'

(Zabag) என்ற பெயரால் குறிப்பிட்டுள்ள ஸ்ரீவிஜய அரசானது கி.பி. 10-ம், 11-ம் நூற்றாண்டுகளில் பெருவலியுடன் திகழ்ந்துள்ளது. இந்தியாவில் வங்காளத்துடனும், சோழமண்டலக் கரையுடனும், சீனாவுடனும் ஸ்ரீவிஜய அரசின் வணிகர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். கிழக்கு ஜாவாவைச் சேர்ந்த தர்மவம்ச என்ற மன்னனுடைய தாக்குதல்களை முறியடித்து, ஸ்ரீவிஜய அரசைப் பாதுகாத்தவன் ஸ்ரீசூளாமணி வர்மன் ஆவான். இவன் சீனருடனும், சோழருடனும் நட்புப் பூண்டிருந்தான். நாகபட்டினத்தில் இவன் ஒரு புத்த விகாரையை நிறுவியமையும், இதற்கு மானியமாக இராஜராஜசோழன் சில கிராமங்களை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கவை. சோழருடன் ஏற்பட்டிருந்த நல்லுறவு அதிககாலம் நீடிக்கவில்லை. கடற்படை வலிமையை வளர்த்து வந்த சோழர்க்கும், ஸ்ரீவிஜய அரசுக்கும் 1-ம் இராஜேந்திர சோழன் காலத்தில் முரண்பாடு தோன்றியது. பின்னவன் 1025-ல் தனது புகழ்பெற்ற கடற்படையெடுப்பை மேற்கொண்டு ஸ்ரீவிஜய அரசனைக் கைப்பற்றி அவனது அரசின் பகுதிகளை வெற்றிகொண்டான். இதன்பின், ஸ்ரீவிஜய அரசு சுமாத்திராவுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. வீரராஜேந்திர சோழன் காலத்தில், சுமாத்திராவின் மேலைக்கரையில் பொறிக்கப்பட்ட ஒரு தமிழ்க் கல்வெட்டு, தமிழ்வாணிகக் குழுவினரான 'திசையாயிரத் தைஞ்ஞூற்றுவர்' குறிக்கப்பட்டுள்ளனர். இதனால், சோழர்க்கும், ஸ்ரீவிஜயவுக்கும் அவன் காலத்தில் மீண்டும் நல்லுறவு நிலைநாட்டப் பெற்றிருத்தல் கண்கூடு. 1-ம் விஜயபாகுவின் சமகாலத்தவரான 1-ம் குலோத்துங்கச் சோழன் ஸ்ரீவிஜய அரசின் வேண்டுதலின் பேரில், நாகபட்டினத்திலுள்ள விகாரைக்கு மானியமளித்துள்ளான். 12-ம் நூற்றாண்டில், ஜாவாவில் ஒரு கடற்படை வணிக அரசு (கெடிரி அரசு) தோன்ற அதன் முக்கியத்துவம் குறைந்து வந்தது. 13ம் நூற்றாண்டில், பாளெம்பாங்குக்குப் பதில் மலாயு (ஜம்பி) தலைநகராக்கப் பட்டதாகத் தெரிகின்றது. மார்க்கோபோலோ 1292-ல் சுமாத்திராவுக்குச் சென்றபோது, மலாயுவே முக்கிய அரசாக அங்கு விளங்கியுள்ளது. சிங்கோசரி அரசும் மாஜாபாகித் அரசும் எழுச்சியுற்றபோது, ஸ்ரீவிஜய (மலாயு) அரசு தேய்வடையலாயிற்று. ஈற்றில் வடக்கே சீயத்தில் தோன்றிய தாய் அரசு, ஸ்ரீவிஜய அரசின் பழைய ஆணிலங்களைத் தனதாக்கிக் கொள்ளவே, அது வீழ்ச்சியெய்தலாயிற்று. 13-ம் நூற்றாண்டின் முடிவில் தென்கிழக்காசியாவில் இஸ்லாம் புகுந்து, காலப்போக்கில் வடக்குச் சுமாத்திராவுக்கும் பரவலாயிற்று.

ஸ்ரீ விஜயப் பேரரசும் இலங்கையும்

ஸ்ரீ விஜயப் பேரரசுக்கும் இலங்கைக்குமிடையே தொடர்புகள் இருந்திருத்தல் மிகவும் இயற்கையானதே எனினும், சூளவம்சத்திலும், பிற காலவேடுகளிலும் இத் தொடர்புகள் பற்றிய குறிப்புக்கள் இல்லை. 'காலிங்க' (கலிங்கம்) என்பதனுடன் இலங்கை வைத்திருந்த தொடர்புகள் (சூள. 54-ம் அத்.) ஸ்ரீ விஜயவுடனிருந்த தொடர்புகளையே குறிப்பதாகக் கொள்வர். பரணவிதான அண்மையில் (1966) வெளியிட்டுள்ள நூலொன்றில் (Ceylon and Malaysia) இலங்கையிலுள்ள சில கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு, 9-ம், 10 நூற்றாண்டுகளிலிருந்து

கோட்டை 6-ம் பராக்கிரமபாகுவின் காலம்வரை ஸ்ரீ விஜயவுக்கும் இலங்கைக்கு மிடையே நெருங்கிய தொடர்புகள் நிலவியதாக நிறுவ முயன்றுள்ளனர். கல்வெட்டுக்களில் வரும் கூற்றுக்களுக்குப் பரணவிதான கொடுக்கும் விளக்கங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக இல்லாவிடினும், இலங்கைக்கும் ஸ்ரீ விஜயவுக்கும் மிகவும் நெருக்கமான தொடர்புகள் இருந்தன என்பதை மறுக்க முடியாது. 4-ம் சேனனது காலத்திலிருந்தே தொடர்புகள் இருந்தமைக்கு எமக்கு உறுதியான சான்றுகள் கிட்டியுள்ளன. கம்போடிய அரசன் ஒருவனால் தோற்கடிக்கப்பட்ட ஸ்ரீ விஜய மன்னனொருவன் (குணார்ண்ணவ என்பான்) இலங்கைக்கு 4-ம் சேனன் காலத்தில் வந்து படையுதவி வேண்டியதாகவும், அப்போது யுவராஜனாகவிருந்த மகிந்தன் (4-ம் மகிந்தன் எனப் பின்னர் அரசைப் பெற்றவன்) பெரும் படையுடன் ஸ்ரீவிஜய சென்று அவ்வரசை ஸ்ரீவிஜய மன்னனுக்கு மீட்டுக் கொடுத்து, இளவரசி சுந்தரியை அங்கே மணஞ்செய்து மீண்டதாக ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. அக்காலத்திலிருந்து ஸ்ரீவிஜய அரசையாண்ட அரச குடும்பத்துக்கும், இலங்கை அரச மரபுக்கும் நெருங்கிய மணவினையறவுகள் இருந்து வந்ததாக நம்பக்கிடக்கின்றது. சோழ அரசை எதிர்த்துப் பாண்டியரும் சிங்களரும் அமைத்த கூட்டுறவில் ஸ்ரீவிஜய அரசும் முக்கிய பங்கை வகித்ததாகத் தெரிகின்றது. இலங்கையைச் சோழர் கைப்பற்றியபோது அதைப் பாதுகாப்பதற்கு ஸ்ரீவிஜய அரசின் மன்னனான சங்கிராம விஜயோத்துங்க வர்மனும், சோழருக்கு எதிராகச் சிங்களர் தொடுத்த போராட்டத்தில் சமர விஜயோத்துங்க வர்மனும் இலங்கைக்கு ஆதரவாக இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில், பரணவிதானவின் கொள்கைப்படி, விஜயபாகு இலங்கையரசனாதற்கு முன்னரே சோழரைத் தோற்கடித்த ஒரு இலங்கை மன்னனை (5-ம் மகிந்தன்) வென்றதாகக் கூறப்படுகின்றது. மகாபராக்கிரமபாகுவுக்குப் பின்னரும் கலிங்க மரபினரே ஆட்சிசெய்ததை சான்றுகள் காட்டுகின்றன. இவர்களும் ஸ்ரீவிஜய அரசைச் சேர்ந்த கலிங்க அரசமரபுடன் தொடர்புடையவர்கள் என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பொலன்னறுவைக் கால முடிவில் ஏற்பட்ட கலிங்க மாகனது படையெடுப்பும், அதனைத் தொடர்ந்து பின்னர் நடைபெற்ற சந்திரபானுவின் படையெடுப்பும் முந்திய நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையவை ஆகும். இவ்வாறு இலங்கை அரசில் வரலாற்றில், குறிப்பாகப் பொலன்னறுவைக் காலத்துக்குச் சற்று முன்னும் பின்னும் இலங்கையுடன் ஸ்ரீவிஜய அரசு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமை புலப்படும். இலங்கை மன்னர்களுக்கு ஆபத்துக்கள் நேர்ந்தபோது ஸ்ரீவிஜய உதவிக்கு வந்தது போலவே, இலங்கை மன்னர்களும் இளவரசர்களும் ஸ்ரீ விஜயவுக்கு உதவியுள்ளதையும் அறிகின்றோம். இலங்கைக்கும் சீனாவுக்குமிடையே உதவியுள்ளதையும் அறிகின்றோம். இலங்கைக்கும் சீனாவுக்குமிடையே நெடுங்காலமாக நடைபெற்று வந்த வணிகத் தொடர்புகள், ஸ்ரீவிஜயப் பேரரசு ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் தடைப் பட்டிருத்தல் இயல்பாயினும், சீனாவிலிருந்து பெறப்பட்ட பொருட்களை ஸ்ரீவிஜய மூலமாகவோ, கம்போடியா மூலமாகவோ இலங்கை பெறக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தது.

பர்மா

'பர்மா' என்ற பெயரை அந்நாட்டுக்கு அளிக்கக் காரணமாகவிருந்த பர்மியக் குடிகள், பர்மாவின் வடபுலத்திலிருந்தே அந்நாட்டுக்குக் குடியேறியவர்கள். ஆனால் அது நடைபெறுதற்கு முன்னரே அந்நாடு பல நூற்றாண்டுகளாக நாகரிகமெய்தியிருந்தது. அராபியப் புவியியலாளர் தாழ் பர்மாவை (Lower Burma) 'ராமஞ்ஞ தேச' என அழைத்தனர். இலங்கைக் காலவேடுகள் முழு பர்மாவையும் குறிக்க இப்பெயரையே பயன்படுத்தியுள்ளன. 'அரமண தேசம்' எனவும் இது குறிக்கப்பெற்றுள்ளது. ஜாதகக் கதைகள் முதலான பழைய இந்திய நூல்களில் சுவர்ண பூமி என்பதே இதைக் குறிக்கக் கையாளப்பட்டுள்ளது. பௌத்தம் இலங்கைக்குப் பரவிய காலத்திலேயே, அந்நாட்டுக்கும் அது பரவியிருத்தல் கூடுமெனினும், 5-ம் நூற்றாண்டளவில் அது நன்னிலை எய்தியிருந்தமைக்கே சான்றுகள் உண்டு. அங்கும் தேரவாதப் பிரிவுப் பௌத்தமே பின்பற்றப்பட்டமையால், இரு நாடுகளுக்கும் இடையே தொடர்புகள் வலுப்பெற்று வந்தன. வணிக உறவுகள் இருந்தமை பற்றியும் ஏற்கெனவே குறிப்பிடப் பெற்றுள்ளது.

பாகன் அரசுக்கு முன் பர்மா: 1044-ல் பாகன் (Pagan) அரசு நிறுவப்பட்டமை வரை, பர்மாவின் ஆதிகால வரலாறு பற்றி மிகச்சுருக்கமாக நோக்குவது பொருத்தமானது. மத்திய பர்மாவில் ஸ்ரீக்ஷேத்திரம் என்பதைத் தலைநகராகக் கொண்டு, பியூ அரசு 7-ம், 8-ம் நூற்றாண்டுகளில் சிறப்பெய்தியிருந்தது. ஹுவான் சுவாங், ஐ சிங் போன்ற சீன யாத்திரிகர்களின் குறிப்புகளால் அச்செய்தி உறுதிபெற்றுள்ளது. அந்நகரில் செய்யப்பட்ட அகழ்வுகள், அது ஒரு பெருநகராகத் திகழ்ந்ததை வலியுறுத்துகின்றன. பௌத்தத் தூபிகள், புடைப்பகழ்வுச் சிற்பங்கள் (குப்தர் கலை மரபைச் சார்ந்தவை), கல்லில் செதுக்கப்பட்ட விஷ்ணுவின் திருவுருவங்கள், அவலோகிதேஸ்வரரின் வெண்கல வடிவங்கள் ஆகியன வெளிக் கொணரப்பட்டுள்ளன. 9-ம் நூற்றாண்டளவில் தாய் (சீய) அரசொன்று, பர்மாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றி ஆட்சி செய்தது. பியு அரசும் அதற்கடங்கியதாகவே இருந்ததென்பர். பியூ அரசு விளங்கிய காலத்தில் ஐராவதி நதிக்குக் கிழக்கே, மொன் இனத்தவர்க்குரிய அரசுகள் இருந்துவந்தன. மொன் இனத்தவர் உயர்ந்த பண்பாடு உடையவர்களாக விளங்கி நீர்ப்பாசனங்கள் அமைப்பதில் சிறந்து விளங்கியவர்கள். ஹம்ஸாவதி என முன்பு அழைக்கப்பட்ட பெகுவே இவர் களுடைய தலைநகராக விளங்கியது. கி.பி. 9-ம் நூற்றாண்டு அளவில் பர்மாவுக்குள் புகுந்த பர்மியர், முதலில் மொன் இனத்தவரால் விருத்தி செய்யப்பட்ட கியோக்ஸி மாவட்டத்தைத் தமதாக்கிக் கொண்டனர். பின்னர், ஐராவதியைக் கடந்து அரக்கன் பிரதேசத்திலும் மலைச்சாரல்களிலும் குடியேறலாயினர். பிந்திய குடியேற்றங்கள் அவர்களை அந்நாட்டின் பல பகுதிகளுக்குப் பரவுமாறு வைத்தன.

பாகன் அரசு : பாகனும், பாகன் அரசும் முன்னரே நிறுவப்பட்டிருப்பினும், 11-ம் நூற்றாண்டிலிருந்தே அது மிகவும் பெருமையுடன், திறமைவாய்ந்த மன்னர்களின் ஆட்சியின் கீழ் விளங்கி வந்தது. இக்காலத்திலேயே இலங்கைக்கும்

பர்மாவுக்கும் தொடர்புகள் ஏற்பட்டதை அறிகின்றோம். அனாரத்தன் (1044 - 77) என்ற மன்னன் இப்பெருமைக்கு அடிகோலி, சிறப்புடன் ஆட்சி நடத்தினான். இவனுடைய சாதனைகளில், பர்மா முழுவதையும் ஒன்றுபடவைத்து ஆட்சி செய்தமை முக்கியமானதாகும். தாட்டனில் (Thaton) இருந்த மொன் அரசைக் கைப்பற்றி, தனது அரசில் இணைத்தமை ஒரு குறிப்பிடத்தக்க செயலாகும். இவ்வாறு மொன் அரசையவன் கைப்பற்றியதால், மொன் பண்பாடும், தேரவாத பௌத்தமும் பாகன் அரசில் பெருஞ்செல்வாக்குப் பெறலாயின. அந்நாட்டு மரபுப்படி, இலங்கையிலிருந்து புத்தகோசர் மூலமே தேரவாத பௌத்தம் அங்கு பரவியதெனக் கொள்ளப்பட்டது. இலங்கையை விடக் காஞ்சியே 5-ம் நூற்றாண்டில் பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்ததாக அறிஞர்கள் கொள்வர். இது எவ்வாறிருப் பினும், அனோரத் தனது முயற்சியால் தேரவாத பௌத்தம் பெருவளர்ச்சி எய்தியிருந்தது. இதன் பின், தேரவாத பௌத்தமே பர்மாவின் தேசிய மதமாக இருந்து வந்துள்ளது. இதனால், இலங்கைக்கும் அந்நாட்டுக்குமிடையே தொடர்புகள் வளர ஏதுக்கள் அதிகரித்திருந்தன. இவன் நிறுவிய சமயக் கட்டிடங்களில் சுவேஸிகன் பகோடா என்பது மிகவும் பிரசித்தி வாய்ந்தது. இவனுடைய புதல்வர்களில் ஒருவனான கியான்ஸித்த (1084 - 1112) மிக்க சிறப்புடன் ஆட்சி நடத்தி, பாகன் அரசுக்குப் பெருமை தேடியவன். இம்மன்னன் சீனாவுக்கு இரு முறை தூதுக்குழுக்களை அனுப்பி, சில வணிக உரிமைகளைப் பெற்றான். இந்தியாவில் புத்த காயாவிலுள்ள மகாபோதிக் கோவிலைத் திருத்துவதில் இவன் ஈடுபட்டமை ஒரு கல்வெட்டால் அறியப்படுகின்றது. இவனது அரசவைக்கு ஒரு சோழ இளவரசனும் வந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. இவன் நிறவிய கட்டிடங்களில் புகழ்வாய்ந்தது ஆனந்தா கோவில் என்பதாகும். இம் மன்னனைத் தொடர்ந்து ஆட்சியைப் பெற்ற அலோங்சிது (1112 - 1165) என்பானது காலத்தில் பாகன் அரசில் இருந்து வந்த மொன் பண்பாட்டுச் செல்வாக்குக் குன்றி வந்தது. இவன் நிறுவிய தத்பின்னியு கோவில், முந்திய ஆனந்தாக் கோவிலைப் பின்பற்றியது. இவனும் புத்தகயாவில் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது. அந்நாட்டுக் இலக்கியங்கள், இவன் தன் மகன் நரத்து என்பவனால் கொல்லப்பட்டானென்பதை ஆராய்ச்சியாளர் ஏற்கவில்லை. இலங்கை மூலாதாரங்களில் (பராக்கிரமபாகுவின் வரலாற்றில்) வரும் செய்திகளில் உண்மையிருப்பதாகக் கொள்வர். இவனுக்குப் பின், ஓர் ஆட்சியிடையறவு இருந்தபின், நரபதிசிது என்பான் ஆட்சியைப் பெற்றான். இவனுடைய காலத்திலிருந்தே இலங்கையுடன் சமயத் தொடர்புகள் அதிகரித்து வந்ததை அறிவோம். பிற்கால பேகன் மன்னர்களுள் திறமை மிக்கவனாக விளங்கிய கியாஸ்வா 13-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆட்சி செய்தவன். இவன் காலத்திலும் இலங்கைக்கும் பர்மாவுக்கும் இடையே சமயத்தொடர்புகள் நிலவின. 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பர்மாவை ஆட்சிசெய்த நரதிஹபதி என்பானது காலத்தில் (1256 - 1287) அந்நாடு மொங்கோலிய (சீனா) மன்னனான குப்ளாய் கானால் அடிப்படுத்தப்பட்டது. இதன் பின், பர்மிய இளவரசருள் ஒருவன், மொங்கோலிய அரசனது மேலாணையின் கீழ் அரசாண்டு வந்தான்.

மொங்கோலிய அரசின் கீழ் 1287ல் பர்மா கொண்டு வரப்பட்டபின், ஷான் சகோதரர்கள் எனக் குறிப்பிடப்பட்ட தென்பர்மாவைச் சேர்ந்த மொன் அரச குலத்தவர்களால் சுயாட்சியைப் பெறுதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வடபர்மாவில் ஆவா (Ava) எனும் இடத்திலும், தெற்கே பெகுவிலும் ஏறத்தாழ ஒரே காலத்தில் இரு அரசுகள் 14-ம், 15-ம் நூற்றாண்டுகளில் நிலவின. 15-ம் நூற்றாண்டில் பெகுவில் அரசாண்ட சில மன்னர்கள் பௌத்தமத வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டவர்களாக இலங்கைக்குப் பல தூதுக் குழுக்களை அனுப்பி வந்தனர். அந்நூற்றாண்டு முடிவதற்கிடையில், ஐரோப்பிய வணிகக் குழுக்கள் பெகுஅரசவைக்குச் சென்று வரலாயின. இவற்றின் விளைவுகள் அடுத்த சில நூற்றாண்டுகளில் புலனாகின.

பர்மாவும் இலங்கையும்

பர்மாவிலுள்ள சில மரபுகளின்படி புத்தகோசரே இலங்கையிலிருந்து தேரவாதப் பிரிவுப் பௌத்தம் அந்நாட்டுக்குப் பரவக் காரணமாக இருந்ததாகக் கொள்ளப்படு கின்றது. ஆனால் அத்துணைப் பழைய காலத்திலிருந்து இலங்கைக்கும் பர்மாவுக்கும் தொடர்புகள் இருந்தமைக்கு உறுதியான சான்றுகள் இல்லை. விஜயபாகுவின் காலத்திலிருந்தே, சூளவம்சத்தில் பர்மியத் தொடர்புகள் பற்றிய குறிப்புக்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. உருகுணை அரசனாக அவன் இருந்த காலத்திலேயே இரு நாடுகளுக்கிடையேயும் வணிகத்தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. விஜயபாகு சோழருக்கெதிராக பர்மிய (பாகன்) அரசனது உதவியை நாடியபோது அவன் (அனோரத்தன்) ஒரு விலையுயர்ந்த வெகுமதியை அளித்ததாகவும், பின்னர் சமயப் புனருத்தாரணத்தை மேற்கொள்கையில், விஜயபாகு மீண்டும் பர்மிய அரசனது உதவியை நாடவே, குருமார்களையும் திருநூல்களையும் இலங்கைக்கனுப்பியபோது, இலங்கை வேந்தன் தந்ததாதுவைப் போன்ற ஒன்றை அனுப்பியதாகவும் பர்மியக் வரன்முறைகள் கூறுகின்றன. விஜயபாகுவுக்குப் பின், அவனுடைய காலத்தில் நிலவிய சுமுக உறவுகளுக்குப் பதில், மகாபராக்கிரமபாகுவின் காலத்தில் பகைமை வளர்ந்து போரில் முடிவுற்றது. இப்போர் வியாபார உரிமைகளை நிலைநாட்ட எழுந்ததென்பது தெளிவு. எனவே, இவ்விரு நாடுகளிடையேயும் நிலவிய வணிக உறவுகள் பற்றி மேலும் அறியமுடிகின்றது.

சீஹள-சங்கம் நிறுவப்படல்

பர்மிய ஆதாரங்களின்படி, அலோங்சிதுவின் மரணத்துக்குக் காரணமாகவிருந்த அவனது மகன் நரத்து என்பான் அரசினைப்பெற்ற வகையினையும் நாட்டிலேற்பட்ட கலவர நிலைகளையும் கண்ட சமயத் தலைவர் ஒருவர் (பந்தகு என்பது அவர் பெயர்) இலங்கைக்கு 1167ல் வந்ததாகக் கூறப்படுகின்றது. சில ஆண்டுகளின்பின், உத்தரராஜீவ என்ற ஒரு பிக்குவும், இன்னும் சில பிக்குகளும், சப்பட என்ற சாமணேரரும் இலங்கை வரலாயினர். இவர்களை இலங்கையிலுள்ள சங்கத்தினர் நன்கு வரவேற்று உபசரித்தனர். சப்பட என்பார் சில ஆண்டுகள இலங்கையிலேயே திருநூல்களைப் பயில்வதிற் செலவிட்டு, பிக்குவாகக் குரு

அபிடேகத்தை இலங்கையிலேயே பெற்றார். இலங்கையில் பத்தாண்டுகள் தங்கியபின், சப்பட தேரரும், வேறு நான்கு பிக்குகளும் (இவர்களில் ஒருவர் கம்போடிய அரச மரபில் உள்ளவராகவும், மற்றொருவர் இலங்கையராகவும் இருந்தாரெனக் கூறப்பட்டுள்ளது) பர்மாவுக்குத் திரும்பினர். இவர்கள் பர்மாவில் சீஹள-சங்க என்ற ஒரு புதிய சங்கப்பிரிவை நிறுவினர். பர்மாவின் சமயவரலாற்றில் இப்பிரிவு முக்கியபாகத்தை வகித்ததாகக் கூறுவர். தாட்டன் (Thaton) பிரிவு என்ற பழைய அல்லது முந்திய பிரிவைக் காட்டிலும் சீஹள சங்கப் பிரிவுக்கு மன்னர்கள் கூடுதலான ஆதரவு தந்தனர். பர்மாவில் பெருந்தொகையினர் இப்பிரிவை ஆதரித்ததைப் போலவே, வேறு தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றிலும் இலங்கைத் தேரவாத பௌத்தம் மிக்கசெல்வாக்கைப் பெறலாயிற்று. மகாபராக்கிரமபாகுவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த 2-ம் விஜயபாகுவும் பர்மிய அரசனுடன் நட்புறவு பாராட்டி ஓர் ஒப்பந்தத்தை எழுதியதாகவும், பாளியில் எழுதப்பட்ட கடிதத்தை அவனுக்கு அனுப்பியதாகவும் சூளவம்சம் கூறுகின்றது (அத்.80). இலங்கைப் பிக்கு ஒருவர் பாடிய **மானாவுலு சந்தேசய** என்பதில் **அரிமத்தனபுரத்திலுள்ள** (பர்மாவிலுள்ள) சங்கத்தினர்க்கு இலங்கையிலிருந்து ஒரு தூது (சந்தேச) அனுப்பியதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது. நிஸங்க மல்லனும் பர்மா முதலான நாடுகளுடன் நட்புறவு கொண்டிருந்ததாக அவனது கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்வாறு பொலன்னறுவைக் காலத்தில் இரு நாடுகளுக்குமிடையே பெரும்பாலும் நல்லுறவுகளே நிலைபெற்றிருந்தன என்பது புலப்படும். நிஸங்க மல்லனும் அரமண (பர்மா) நாட்டுடனும், காம்போஜவுடனும் நட்புறவு கொண்டிருந்ததாக அவனுடைய கல்வெட்டுக்கள் குறிப்பிட்டுள்ளன.

பொலன்னறுவைக் காலத்தில் வலுப்பெற்ற பர்மியத் தொடர்புகள், பிந்திய காலப்பகுதிகளிலும் குறிப்பாக கோட்டைக்காலப் பகுதியிலும் நீடித்தன. இக்காலப் பகுதிகளில், தேரவாத பௌத்தத்தைப் புனிதத்துடன் பேணியநாடு என்பதாகப் பெருமதிப்பு இலங்கைக்குத் தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்டிருந்தது. உதும்பர-மகாசாமி எனச் சீய ஆதாரங்களில் அழைக்கப்பட்ட ஓர் இலங்கைப்பிக்கு பர்மாவிலும் சீயத்திலும், அந்நாடுகளில் இலங்கையிற் பின்பற்றப்பட்ட சங்க ஒழுக்க விதிகளைப் புகுத்துவதற்கு மூலகாரணராகவிருந்தார். சங்கராஜா மேதங்கர மகாதேரர் என்பவரும் இவராவர் எனக் கருதப்படுகின்றது. பெகு மன்னனொருவன் இலங்கையிலிருந்து தாதுக்களைப் பெற்றுத் தான் நிறுவிய ஸ்தூபமொன்றில் வைத்துக் கட்ட எண்ணித் தூதனுப்பினான். **ஆவாவிலிருந்து** 1430 அளவில் வந்த இரு பர்மியப் பிக்குகளும் இதேபோன்று தாதுக்களைப் பெற்று மீண்டனர். **ஆவா** அரசனொருவன் கோட்டையில் அப்போதிருந்த தந்ததாதுவுக்கு காணிக்கை களாகப் பொன்னும் மணிகளும் அனுப்பி வைத்தான். தர்மசேதி என்ற ஒரு மன்னன், இலங்கையிலுள்ள முறைப்படி தனது நாட்டுப் பௌத்த பிக்குகளைக் **குரு அபிஷேகம்** (உபசம்பத) பெறச் செய்வதற்காக, இலங்கைக்குத் தனது குருமார்களைக் கப்பல்களில் அனுப்பி வைத்ததாகவும், அவர்கள் இலங்கையில் நன்கு வரவேற்கப்பட்டு, கல்யாணி (களனி)யில் வந்து நின்ற கப்பல்களிலேயே அவர்கள் உபசம்பத என்ற **உயர்குரு** அபிஷேகத்தைப் பெற்றதாகவம்

கூறப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து பர்மா மீண்ட குருமார்கள் பின்னர் தமது நாட்டில் பெகுவுக்கண்மையில் கல்யாணி சீமா என அழைக்கப்பட்ட பரிசுத்த எல்லையுள் நடத்தி இலங்கை (மகாவிகாரை) முறைப்படி உபசம்பதவை நடாத்தினர். இவ்வாறு, வரலாற்றுக் காலப் பகுதியின் பிற்பகுதியில் பர்மாவுக்கும் இலங்கைக்குமிடையே மிக நெருங்கிய சமயத் தொடர்புகள் இருந்ததை நாம் உணரலாம்.

கலிங்கம் தொடர்பான வாதங்கள்

சாகஸ மல்லன் ஈராண்டுகளில் அரசையிழக்கக் காரணமாகவிருந்தவன் ஆயஸ்மந்த(ன்) என்ற மற்றொரு தளபதியாவான். நிஸங்க மல்லனது இரண்டாவது இராணியான கல்யாணவதி இப்போது அரசியாக்கப்பட்டாள். அவள் ஆறு ஆண்டுகளுக்கு ஆட்சி செலுத்த முடிந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால், ஆறாவது ஆண்டில் அவளை நீக்கியபின், தர்மாசோக(ன்) என்ற ஒரு குழந்தையைப் பெயரளவில் அரசனாக வைத்து, தளபதி ஆயஸ்மந்தன் ஆட்சியைத் தன் எண்ணப்படி கவனிக்கமுற்பட்டான். கல்யாணவதியின் ஆட்சியின்போது நடைபெற்ற ஒரு தமிழ்ப் படையெடுப்பே ஆயஸ்மந்தனுக்குக் கல்யாணவதியை அகற்ற வாய்ப்பளித்ததெனக் கருத இடமுண்டு. அனீகங்க(ன்) என்பவன் இந்தியாவிலிருந்து ஒரு படையைத் தருவித்து, ஆயஸ்மந்தனது பத்தாண்டு கால ஆதிக்கத்தை முடிவுக்கக் கொணர்ந்தான். இந்த அனீகங்கள் முன்னர் **மஹாதிபாதவாக** விளங்கி, அரசைப் பெறாது தடுக்கப்பட்டவன். தனது உரிமையை நிலைநாட்டவே சோழருடைய படையுதவியைப் பெற்று, தனது பகைவனான ஆயஸ்மந்தனைக் கொன்று, அவனது ஆதிக்கத்தை முடிவுக்குக் கொணர்ந்தான். அனீகங்கவும் நீண்டகாலம் ஆட்சிசெய்யமுடியாது மீண்டும் ஒரு தளபதியால் பதவி நீக்கப்பட்டான். இத்தளபதி (சமுனக்க) லீலாவதியை **இரண்டாம் தடைவை** அரசியாக்கி வைத்தான். ஆனாலும், கலிங்கக் குழுவினரின் ஆதிக்கம் இன்னும் குன்றிய பாடில்லை. லோகேஸ்வரன் என்ற கலிங்கன் ஒரு தமிழ்ப் படையுடன் வந்து, லீலாவதி ஓராண்டு ஆட்சி செய்யுமுன் அவளை நீக்கிவிட்டு அரசைக் கைப்பற்றினான். பராக்கிரம(ன்) என்ற தளபதியின் உதவியைப் பெற்று லீலாவதி **மூன்றாம் தடவையாக** அரசைக் கைப்பற்றினாள். லீலாவதி சில திங்கள் ஆளுமுன், ஒரு பாண்டியப் படையெடுப்பு நடைபெற்றது. பராக்கிரம பாண்டியன் என்பான் இலங்கை வந்து லீலாவதியை நீக்கிவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றினான். **இந்தப் பாண்டியன் ஆட்சி செய்தபோதே, கலிங்கமாகன் முக்கியம் வாய்ந்த தன் படையெடுப்பை நடாத்தினான் என்பது குறிப்பிடத்தக்கது.**

கலிங்க ஆட்சியாளருக்கும் இலங்கைப் பிரதானிகளுக்கும் இடையே நடை பெற்ற இப்போட்டியிற் பெரும்பாலும் **கலிங்கக் குழுவினரே வெற்றியீட்டியதைக** கண்டோம். ஆனாலும் அரசியற்றொல்லைகளும், சூழ்ச்சிகளும் மிகுந்திருந்ததால், எந்த ஒரு மன்னருமே நீண்டகாலம் ஆளமுடியவில்லை. ஆட்சியாளர் பெரும்பாலும் வலிமை வாய்ந்த தளபதிகளாலும் பிரதானிகளாலும் இயக்கப்பட்ட பாவைகளாகவே இருந்தனர். இவ்வகையான அரசியல் நிலைமைகள் நிலவியதால், நாட்டின்

முன்னேற்றம் இக்காலப் பகுதியில் (1196 - 1215) எவ்வளவுக்குத் தடைப்பட்டிருக்க வேண்டும் என்பதை நாம் உணரலாம்.

கலிங்கம் (இந்தியாவில்)

கலிங்கம் என்பது, வழமையான கருத்தின்படி, இந்தியாவின் கிழக்குப் பகுதியிலுள்ள இப்போதைய ஒரிஸா (Orissa) மாகாணதையே குறிக்கும். இலங்கைக்கும் இக்கலிங்கத்திற்கும் விஜயனது காலம் முதலாகத் தொடர்புகள் இருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக விஜயனது மரபுக்கதை சீஹள அட்டகதாவில் இடம்பெற்ற காலமான 1-ம் நூற்றாண்டு அளவில், கலிங்கம் பற்றி இலங்கை அறிந்திருந்தமை தெளிவு. இக்கலிங்கத்துக்கும் இலங்கைக்கும் இடையே பின்னரும் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. கலிங்கத்திலுள்ள தந்தபுரத்திலிருந்தே புத்தரின் புனிதப் பற்சின்னம் (தந்ததாது) இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. 4-ம் மகிந்தன், 1-ம் விஜயபாகு போன்றோரின் மணவினைறவு களும் இதே கலிங்கத்துடன் நடைபெற்றதாகவே இன்றும் சில அறிஞர்கள் கொள்கின்றனர். கீழைக் கங்கர்கள் இப்பகுதியை ஒரு காலத்தில் ஆண்டதாக அங்குள்ள சில சான்றுகள் தெரிவிப்பதைக் கொண்டு, இவர்கள் நம்புகின்றனர். (சோடகங்க என்பது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.) ஆனாலும் கலிங்கத்தில் ஆட்சிசெய்த மரபினராக இலங்கைக்கு வந்த கலிங்க மாகனது தந்தை (ஸ்ரீஜயகோப மகாராஜா)வின் பெயர் அங்குள்ள ஏடுகளில் இடம்பெற வில்லை. இதனால், இலங்கைக் கலிங்கர்கள் கலிங்கத்தையாண்ட கங்க வம்சத்தின் ஒரு கிளைவம்சத்தைச் சேர்ந்தவர்களாகவிருக்கலாம் என ஊகிக்கப்படு கின்றது. ஆனாலும் இப்போது கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு, இலங்கைக்கு வந்த கலிங்க மன்னர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என உறுதியுடன் கூறவியலாது.

மலேஷியாவில் கலிங்கம்

10-ம் நூற்றாண்டிலிருந்து இலங்கை கொண்டிருந்த தொடர்புகள் இந்தியாவிலுள்ள கலிங்கத்துடனன்றி, மலேஷியாவிலுள்ள கலிங்கத்துடன் என்பதாக ஒரு கொள்கையைப் பரணவிதான வெளியிட்டுள்ளார். 'இலங்கையும் மலேஷியாவும்' (Ceylon and Malaysia) என்ற அவருடைய நூலில், முன்னதாக அவர் ஆராய்ச்சிக் கட்டுரைகள், பேருரைகள் மூலம் வெளியிட்ட கருத்துக்களைத் தொகுத்துக் கூறியுள்ளார். அவருடைய கருத்துக்கு ஆதாரமாக, '10-ம் நூற்றாண்டிலிருந்து 18-ம் நூற்றாண்டு வரையுள்ள, இலக்கியங்களுடன் சமகாலப் பொறிப்புக்களும் ஒரு கலிங்க நாட்டுடன் நெருங்கிய உறவுகள் இருந்ததாகக் கூறும் அதேகாலப் பகுதியில், அக்காலத்தைச் சேர்ந்த சிங்கள இலக்கிய கர்த்தாக்கள் 'கலிங்க' எனும்போது கிழக்கிந்தியாவைக் குறியாது, மலேஷியாவிலுள்ள ஒரு பகுதியையே கருதியமைக்குச் சான்றுகள் இருக்கின்றன' எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் தரும் சான்றுகளை இங்குச் சுருக்கமாகவும் கூறுவதற்கியலாது. மலேஷியா (ஆதிகால வரலாற்றில், இது இப்போதைய

இந்தோனேஷியாவையும் உள்ளடக்கியது.) காலிங்க(ம்) அல்லது கலிங்க நாடு என்பது எங்கேயிருந்தது என்பது பற்றியும் தெளிவுஇல்லை. சீன ஆதாரங்கள் குறிப்பிடும் 'ஹொ-லிங்' என்பது கலிங்கத்தைக் குறிப்பதாகக் கொண்டால், அது மத்திய ஜாவாவில் அமைந்ததாகக் கொள்ளல்வேண்டும். வேறு ஆதாரங்கள் தாழ் பர்மாவிலும், மலாயாத் தீபகற்பததின் வெவ்வேறு பகுதிகளிலும் அது இருந்ததாகக் கொள்ளவைக்கின்றன. சிங்கோரா என்ற சிங்ஹபுரத்தைத் தலைநகராகக் கொண்ட கலிங்கத்திலிருந்தே நிஸங்கமல்லனும் அவனது மரபினரும் இலங்கை வந்தனர் என்பதே பரணவிதானவின் முடிபாகும். அவருடைய முடிவும் வரலாற்றறிஞரிடையே பெருமளவு வரவேற்பைப் பெறத் தவறியபோதும், தம் கொள்கையை நிறுவ அவர் காட்டும் சான்றுகளின் அடிப்படையில் அவருடைய வியத்தகு ஆற்றலைக் காணலாம்.

2-ம் விஜயபாகு

முதலாம் பராக்கிரமபாகு இறந்தபோது, அவனது 'பாகிநெய்ய' (மருமகன்) வான 2-ம் விஜயபாகு அரசனானான். இவன் பராக்கிரமபாகுவின் ஒரு சகோதரியின் மகன் என்பதும், கலிங்கத்தில் வளர்ந்து வந்தவன் என்பதும் ஆதாரங்களால் அறியும் செய்திகள் ஆகும். ஆயின், இவன் எந்தச் சகோதரியின் மகன் என்பது தெளிவாகவில்லை. எனவே, பராக்கிரமபாகுவுக்கிருந்த நான்காவது சகோதரியின் (இலக்கியங்களில் குறிப்பிடப்படாதவளின்) மகனாக இவன் இருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது. கலிங்கத்திலிருந்து விஜயபாகு அழைக்கப்பட்டு மாபா என்பதற்கு நிகரான ஹிமியா எனும் பதவியில் அமர்த்தப் பட்டிருந்தான். இவ்வாறு மகாபராக்கிரமபாகுவால் தெரிவு செய்யப்பட்ட வாரிசாக விஜயபாகு இருந்தபோதும், கலிங்க மன்னருள் முதல் மன்னனான இவனுக்கு உடனே பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. இவன் ஆட்சியைப்பெற்ற அன்றே, நாட்டில் குழப்பங்கள் மூண்டதாகத் தெரிகின்றது. 2-ம் விஜயபாகு அரசனாவதை ஏற்காத அமைச்சர்களும் அவைக்களத்து உறுப்பினர்களும் இக்கலவரத்தைத் தூண்டி விட்டிருத்தல் கூடும். கலவரங்கள் அடக்கப்பட்டு ஓராண்டுக்காலம் அவன் ஆட்சி நடத்தியபின், 'குலிங்க' மரபினனான ஆறாம் மகிந்தனாற் கொல்லப்பட்டான். இந்த மகிந்தனைப் பற்றியும் அதிகம் எமக்குத்தெரியாது. பெரும்பாலும் இவனுக்கு உரிமையில்லாதிருந்திருக்க வேண்டும். இதனால், உபராஜாவாக நியமிக்கப் பட்டிருந்த நிஸங்க மல்ல(ன்) ஆட்சியைப் பெறுவதில் அதிக சிரமமிருக்கவில்லை. மகிந்தனைக் கொன்று தனது உரிமையை ஒரு சில நாட்களில் நிஸங்கமல்லன நிலைநாட்டிக்கொண்டான்.

நிஸங்கமல்லனும், அவனது பின்னோரும்

நிஸங்கமல்ல(ன்) - (1187 - 1196)

'கலிங்க மன்னர்களுள் மிகவும் புகழ்வாய்ந்தவனும், பொலன்னறுவைக்கால மன்னர்களுள் இறுதிப் பெருமன்னனுமான நிஸங்கமல்லன் 1187ல் ஆட்சியைப் பெற்று **ஒன்பது ஆண்டுகள் மட்டுமே** ஆட்சி செலுத்தினானெனினும், பல

காரணங்களால் இவனுடைய ஆட்சிக்காலம் **வரலாற்று முக்கியத்துவம** பெற்றுள்ளது. இவனுடைய வரலாறு சூளவம்சத்தில் ஒரு சில செய்யுளில் (அத். 80 செய் 18 - 26) கூறப்பட்டுள்ளது. அச்செய்யுள்கள் தனியே அவனது சமயப்பணிகளை மட்டும் குறிப்பிட்டுள்ளன. ஆயின், நிஸங்கமல்லன் விட்டுச் சென்றுள்ள பெருந்தொகையான பொறிப்புக்களின் துணைகொண்டு, இலக்கியங் களில் கூறப்படாத பல விபரங்களைச் சேர்க்க முடிகின்றது. (கல்வெட்டுக்களில் வரும் விபரங்கள் உண்மைச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டிருப்பின், அச்செய்திகள் சூளவம்சத்தில் அச்செய்திகள் இடம்பெறாது போனமைக்குரிய காரணங்கள் புலப்படவில்லை.) மிகக்கூடுதலான பொறிப்புக்களை விட்டுச் சென்றுள்ள இலங்கை வேந்தன் நிஸங்கமல்லனென்பதை நாம் கருத்தில் இருத்தவேண்டும். பொறிப்புக்களில், அவை குறிப்பிடக் கருதிய செய்திகள் இரண்டொரு வாக்கியங்களிற் கூறப்பட்டுவிடும். அவற்றுக்கு முன் கூறப்படும் நீண்ட முன்னுரை (பிரஸஸ்தி அல்லது மெய்க்கீர்த்தி) போல அமைந்த பகுதிகள் விரிவாகவும், பலவற்றில் ஒரே தன்மையான செய்திகளைக் கொண்டவையாகவும் இருத்தலைக் காணலாம். மன்னனது புகழை எடுத்துரைத்தலே இப்பகுதிகளின் நோக்கமாதலின், இவை உண்மையே இல்லாத வெறும் புகழுரைகளாகவும் இருத்தல்கூடும். எனவே நிஸங்க மல்லனது பொறிப்புக் களில் வரும் செய்திகளை வரலாற்றுண்மைகளாகக் கொள்வதில் நாம் எச்சரிக்கை யாக இருத்தல் அவசியமாகின்றது.'

'இவனுடைய கல்வெட்டுக்களால், இவன் கலிங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஜயகோப மகாராஜா, பார்வதி மகாதேவி என்போர்க்குப் பிறந்த இளவரசன் என்பதும், கலிங்கத்திலுள்ள சிங்ஹபுரத்திலேயே இவன் பிறந்தான் என்பதும் அறியப்படு கின்றன. முந்திய அரசர்களுக்கும் இவனுக்கும் உள்ள உறவுகள் புலப்பட வில்லை. கலிங்கத்திலிருந்து வரவழைக்கப்பட்டு, **ஆபா, ஹிமியா, உபராஜா** பதவிகளைத் தொடர்ந்து வகித்து, ஈற்றில் அரசனானமை பொறிப்புக்களால் உணரப்படும். **கலிங்க மன்னர்களின் ஆட்சிக்கு நாட்டிற் பரவலான எதிர்ப்பியக்கம் இவன் ஆட்சியைப் பெற்றபோது இருந்தது.** இவ்வெதிர்ப்பை முறியடிக்க நிஸங்கமல்லன் மேற்கொண்ட நடவடிக்கைகள் கவனிக்கத்தக்கவை. தனது உரிமையை வலியுறுத்த, **தான் விஜயனது வமிசத்தில் தோன்றியவன** எனத் தன் கல்வெட்டுக்களிற் கூறியுள்ளான். சில கல்வெட்டுக்களில், **கொவிகுலத்தவர்கள்** அரசுரிமை கோரும்போது அவர்களையாதரிக்க வேண்டாம் எனவும், அவ்வாறு உரிமை கோரும் **கொவி குலத்தவர்கள** (அன்னங்களாகவும், சிங்கங்களாகவும் தம்மைப் பாவிக்க எண்ணும) **காகங்களையும், குள்ள நரி களையும** போல்வர் எனவும் குடிகள் அறிவுறுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளான். **மனித உருவிலுள்ள தெய்வங்களே மன்னர்கள்,** இதை உணராது அரசனுக்குத் துரோகம் இழைக்க முற்படுதல் மன்னித்தற்கியலாத பெரும் பாவச் செயலாகும். இவ்வாறு மற்றொரு கல்வெட்டில் எடுததுரைக்கும் நிஸங்கமல்லன், **கொவி குலத்தவரை ஆதரித்து அரசத்துரோகம் செய்பவர்களும் அவர்களுக்குரிய தண்டனையைப் பெறுவா** என அச்சுறுத்தினான். உள்நாட்டில் உண்டான

எதிர்பைவிட, அயல்நாட்டவரும் இலங்கையில் அரசுரிமை கோரியதாக அவனுடைய கல்பொத்த என்ற பிரசித்தி பெற்ற பொறிப்பும், பிற பொறிப்புக்களும் கூறுகின்றன. சோழ, பாண்டிய, சேர இளவரசர்கள் இலங்கையின் அரசைப் பெற உரிமை பாராட்டியதாக அவை குறிப்பிட்டு, அவர்கள் பௌத்தத்தைச் சாராத காரணத்தால் அவர்களுக்கு உரிமைகோர நியாயமில்லை எனவும் அவை வற்புறுத்துகின்றன. நிஸங்கமல்லன் காலத்தில் எழுதப்பட்ட ஒரு நூலிலும் **(சாது சரிதொதய)** அது எழுதப்பட்ட காலத்தில் நாட்டின் அரசியலில் ஒரு கொந்தளிப்பான நிலையிருந்ததை உணர்த்தும் குறிப்புக்கள் உண்டு. உருகுணையிலும் இவன் காலத்தில் அரசியற் குழப்பமேற்படக்கூடிய சூழ்நிலைகள் இருந்ததையும், அங்கு வெவ்வேறிடங்களில் நாட்டப்பெற்ற **கவுத்தூண்களில** (கவு என்ற நீளத்தைக் குறிக்க, நெடுஞ்சாலைகளில் நாட்டப்பெறும் கற்றூண்கள்) உருகுணை மக்களை, ஏனைய **(பீகிடி, மாயா) ரட்டைகளைச்** சேர்ந்த குடிகளின் பரிகாசத்துக்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ளும்படி அறிவுறுத்தி வைத்தான். இவ்வகையான பல ஆபத்துக்களுக்குமிடையே, தனது இராச்சியத்தை நிலைகுலையவிடாது பேணியதுமன்றி, தன் ஆணையை நாடு முழுவதும் ஏற்கும்படி செய்தான். இதில் அவன் வெற்றியெய்தியமைக்கு அவனுடைய குணாதிசயங்களும், கொள்கையும் உதவியாகவிருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஒழுங்காக அவன் **மேற்கொண்ட சுற்றுலாக்கள** மூலம் தனது இராச்சியத்தின் வெவ்வேறு பகுதிகளையும் தனது நேரடிக் கண்காணிப்பில் வைத்து **அதிருப்தி கொண்ட பிரதானிகளை நீக்கவும்** அவ்வாய்ப்புக்களைப் பயன்படுத்தினான்.'

'கலிங்க ஆட்சியில் மக்களையும், பிரதானிகளையும் திருப்தி பெற வைத்தற்கு அவன் மேற்கொண்ட மற்றொரு முக்கிய நடவடிக்கை அவர்களுக்குத் தாராளமாகக் கொடைகளை வழங்கியமையாகும். இவனது தாராண்மையைக் குறிக்கும் **'துலாபாரக்'** கொடைகளை (குறிப்பிட்ட ஒருவனது நிறைக்குச் சமமான கொடைகளை வழங்குதல்) இவன் ஆண்டுதோறும் நடத்தியதாக இவனுடைய கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இக்கொடைகளை இவன் வழங்கியமையை இவனது கல்வெட்டுக்கள் மட்டுமே குறிப்பிடுவதால், இவை வெறும் புனைவு எனத் தள்ளிவிட முடியும். ஆனால், இவனது கல்வெட்டுக்களில் இவை மிகவும் வற்புறுத்தப்பட்டும், அடிக்கடி கூறப்பட்டும் இருத்தலால் இவற்றில் ஓரளவு உண்மையிருத்தல் கூடும் என அறிஞர் கொள்கின்றனர். துலாபாரக் கொடைகளை விட, மக்களைச் செல்வந்தராக்கும் வகையில் பல வகையான பிற கொடை களையும் அவன் வழங்கினான். 'பராமரிப்பு, நிலங்கள், அடிமைகள், கால் நடை, நிலமானியங்கள், பரம்பரைச் சொத்துக்கள், வஸ்திரங்கள், ஆபரணங்கள் ஆகியவற்றைக் கொடுத்தான்' என்ற வாக்கியம் அவனது கல்வெட்டுக்களில் அடிக்கடி இடம்பெறும் தொடர்களாகும். இதைப்போலவே, **அனுராதபுரம், ஸ்ரீபுரம், புலஸ்திபுரம், இராமேஸ்வரம் முதலான இடங்களில் தானசாலைகளை நிறுவி, அறத்தை ஓம்பினான்** என்பதும் கல்வெட்டுக்களில் அடிக்கடி குறிப்பிடப பெற்றுள்ளது. இவற்றில் மிகைக்கூற்றுக்கள் அதிகமாக இடம்பெற்றிருத்தல்

எளிதிற் கண்டு கொள்ளக்கூடியது. இவையனைத்தாலும் மக்களின் பொருளியல் நிலை மேம்பாடு அடைந்திருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. தானசாலைகளில் ஏழைகள் மட்டுமன்றி, சங்கத்தினர், பிராமணர், குருடர், நொண்டிகள், குள்ளர், கூனர் முதலானோரும் அவனுடைய வாண்மையைப் பெற்றுவந்தனர். திருடர்களைத் திருந்தச் செய்வதற்கும் அவர்களுக்கு நிறையச் செல்வங்களை வழங்கியதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு பலதரப்பட்ட மக்களும் நிஸங்கமல்லனுடைய வாண்மையையும் தாராண்மையையும் அனுபவித்து வரலாயினர் என அவனது கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.'

'இவனுடைய **பொருளியற் பணிகள** பற்றியும் கல்வெட்டுக்களில் வரும் குறிப்புக்களில் மிகைக் கூற்றுக்கள் நிறைந்திருப்பதாகவே தோன்றுகின்றது. **'நிஸங்க சமுத்திரம்'** என்பதை இவன் நிறுவியதாகக் குறிப்பிடப்பெற்றுள்ள போதும், உண்மையில் முன்னர் இருந்த **பராக்கிரம சமுத்திரத்திற்குச** சில திருத்தங்களைச் செய்து தனது பெயரால் அதை அழைத்திருக்கக் கூடும் என்பர். பாண்டியநாடு மீது மன்னன் மேற்கொண்ட படையெடுப்பின் நினைவைக் கொண்டாடும் வகையில் அவன் நிறுவிய ஒரு குளம் **பாண்டி விஜயக்குளம** என்பதாகும். இதை ஒரேநாளில் அவன் நிறுவி முடித்தான் என அக்குளத்தின் கட்டில் உள்ள ஒரு பொறிப்புக் கூறுவதை நாம் அப்படியே உண்மையென ஏற்கத் தேவையில்லை. இப்போது **கல்மெடியான் வாவி** என இது வழங்கப்படு கின்றது. **பண்ட வாபி** என்ற மற்றொரு குளத்தையும் இவனே நிறுவியதாக அங்குள்ள ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. சூளவம்சத்தில், பராக்கிரமபாகுவே இதை விசாலித்தான் எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. கல்வெட்டில் உள்ள கூற்றே உண்மைச் செய்தியைக் கொண்டிருக்கலாம் எனத் துணியப்பெற்றுள்ளது. முந்திய மன்னரின் ஆட்சியின்போது மக்களுக்கேற்பட்டிருந்த வரிப்பளுவைக் குறைக்க எண்ணி நிஸங்கமல்லன் ஐந்தாண்டுகளுக்கு வரிகளை அறவிடாது விட்டதாகவும், வரிகளின் விகிதங்களைக் கட்டுப்படுத்தியதாகவும், அவனது கல்வெட்டுக்கள் கூறுகின்றன. வேறு சில வரிகளை முற்றாக நீக்கிவிட்டதாகவும், அவை மேலும் குறிப்பிடுகின்றன. இச்செய்திகள் உண்மையாயின், வேறொரு பலம் படைத்த அரசைச் சேர்ந்தவனாக நிஸங்கமல்லன் இருந்திருக்கவேண்டும். அது மலேஷியாவிலிருந்திருக்க வேண்டும் எனப் பரணவிதான தம் வாதத்தை நிறுவ இதைத் துணையாகக் கொள்கின்றார். ஏனெனில், நிஸங்கமல்லனது குறுகிய ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளங்களால் இத்துணைச் செழிப்பைப் பெற்றிருத்தல் இயலாது. பிறிதோர் இராச்சியம் அவனுக்குத் தந்த பொருளியல் உதவியினாலேயே இவ்வாறு அவன் செய்வதற்குத் துணிவு பெற்றிருப்பான் என்கிறார் பரணவிதான.'

'தான் பௌத்த மதத்தைச் சேர்ந்தவன் என்பதிற் பெருமை கொண்டவன் நிஸங்க மல்லன். பௌத்தர் அல்லாதவர் அரசுரிமை பாராட்டுவதைத் தடுக்க வேண்டுமென அவன் தன் குடிகளுக்குப் புகட்டினான். தன் குறுகிய ஆட்சிக் காலத்தில் சமயப் பணிகளை நிறைய ஆற்றியிருந்தான். சூளவம்சத்திலும்

இவனைப்பற்றியுள்ள செய்யுள்களில் இவை மட்டுமே இடம்பெற்றுள்ளன. இவனால் நிறுவப்பெற்றதாகக் கூறப்படும் பெருந்தொகையான சமயக் கட்டிடங்களுள், றன்கொத் தாகபம், ஹட்டதாகே, வட்டதாகே, நிஸங்க லதா மண்டபம் என்பன முக்கியமானவை. **றன்கொத் தாகபம** இன்றும் பொலன்னறுவையில் நன்னிலையில் உள்ளது. **ரூவான்வலி சேத்திய(ம்)** என்பதே இதன் உண்மையான பெயராகவிருந்தும் முந்திய பெயரே பொதுவழக்கில் நிலைத்து விட்டது. தம்புள (ஜம்புக்கோள)வில் உள்ள **விகாரையை அழகுபடுத்தி,** அதன்கண் **புத்தரின் தங்க உருவச்சிலைகளை வைத்ததாகவும** கூறப் பெற்றுள்ளது. பௌத்த சங்கத்தினரை ஒன்றுபடுத்தும் முயற்சியிலும் நிஸங்க மல்லன் ஈடுபட்டதாகக் கூறும் இவனது கல்வெட்டுக்கள், ஒழுக்கக்கேடான பிக்குகளைச் சங்கத்தினின்றும் வெளியேற்றியதையும் குறித்துள்ளன. பௌத்தமல்லாத பிற மதங்களுக்கும், குறிப்பாக **இந்து மதத்துக்கும், நிஸங்க மல்லன் ஆதரவைக் காட்டினான**. கந்தளாயிலிருந்த **'பார்வதி சத்திர'த்தில்** தானங்களை வழங்கியபோது, அங்கிருந்து ஆடல் பாடல்களை இரசித்து மகிழ்ந்தானெனப்படுகின்றது. **'நவக்கிரக சாந்தி'** போன்ற இந்துமதக் கிரயைகளில் கலந்தும், தனது தென்னிந்திய விஜயத்தின்போது இராமேஸ்வரத்தில் ஒரு தேவாலயத்தில் திருப்பணி மேற்கொண்டு அதற்கு **'நிஸங்கேஸ்வரம்'** என்ற பெயரைச் சூட்டியும் தன் சமயப் பொறையை வெளிக்காட்டியுள்ளான்.'

'நிஸங்க மல்லனது **அயல்நாட்டுத் தொடர்புகள்** பற்றிச் சூளவம்சம் எதுவும் குறிப்பிடாதபோதும், அவனது பொறிப்புக்கள் இவை பற்றி மிகுதியாகக் கூறுகின்றன. கல்வெட்டுக்களில் வரும் செய்திகளை வெற்றுப் புகழுரைகளாகத் தள்ளிவிடாது. அவற்றில் ஓரளவு உண்மையிருக்கலாம் என அறிஞர்கள் கொள்கின்றனர். அடிக்கடி இந்தியா சென்று, தன் படைவலிமையைக் காட்டி, **றன்-அங்கிலி'யையும் (தங்கக் கட்டிகள்) சோழ, பாண்டிய குலக் கன்னிகளையும் பரிசாகப் பெற்று மீண்டதாகக்** கூறப்பட்டுள்ளது. பாண்டிநாடு மீது இவன் மேற்கொண்ட வெற்றிப்பயணத்தின் நினைவாகவே, பாண்டி விஜயக் குளம் நிறுவப்பட்டதாகக் கல்மடியான் - வாவியிலுள்ள பொறிப்பும் கூறுகின்றது. பாண்டி நாட்டு வெற்றியின் பின்னரே, இராமேஸ்வரத்தில் **'நிஸங்கேஸ்வரம்'** என்ற ஒரு சிவாலயத்தைத் திருப்பிக் கட்டி, அங்கு **துலாபாரக் கொடைகளையும** வழங்கினான். இராமேஸ்வரத்திலேயே இச்செய்திகளைக் கூறும் இவனுடைய பொறிப்பொன்று காணப்படுகின்றது. இந்தியாவிலுள்ள பல அரசுகளுடனும் (கர்னாடக, நெல்லூர், கௌட, ஆந்திரா, குஜராத் முதலானவை) அரமணம், கம்போஜ நாடுகளுடனும் நிஸங்க மல்லன் நட்புறவுகள் கொண்டிருந்ததாகவும், இவற்றுள் கலிங்கம், வேங்கி, கர்நாட(கம்), நெல்லூர், குஜராத் அரசுகளுடன் மணவினைத் தொடர்புகளை வைத்திருந்ததாகவும் இவனுடைய கல்வெட்டுக்கள் கூறுகின்றன.'

'நிஸங்க மல்லனது ஆட்சி தண்ணளியுடையதாகவும் குடிகளின் நலனில் பெரும் நாட்டங்கொண்டதாகவும் விளங்கியது. நிருவாகத்தைச் சீர்ப்படுத்தி,

அலுவலரிடையே நிலவிய ஊழல்களையகற்றுவதிலும் அவன் அதிக கவனம் செலுத்தினான். கலிங்கராட்சியை நிலைப்படுத்துவதையும், ஈழத்தவர்க்கு ஏற்புடைத் தாக்குவதையும் தனது ஆட்சியின் நோக்கமாகக் கொண்டிருந்தான் என்பர். இந்நோக்கத்தில், தனது காலத்தில் ஓரளவுக்கு வெற்றி பெற்றானாயினும், பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இவ்வெற்றிக்கு ஊறு விளைத்தன. ஆனாலும் அரசியல் துறையில் அவன் காட்டிய சாதுர்யமும், நிர்வாகத்திறமையை நிலைநாட்டுவதில் அவன் எடுத்த அளவிறந்த அக்கறையும், சமயத்துறையில் அவன் ஆற்றிய பெரும்பணிகளும், அவன் பின்பற்றிய சமயப்பொறையும் அவனது ஏனைய சாதனைகளும் அவனுக்குப் பெருமை தருவனவாக உள்ளன. குறுகியதோர் ஆட்சிக்காலத்தில் இச்சாதனைகளை நிகழ்த்தியமை அவனுக்கு மேலும் உயர்வை அளிக்கின்றது.'

கலிங்கர் காலப் பொலனறுவையரசின் மேனிலையாதிக்கம்

முதலாம் பராக்கிரமபாகு கி.பி. 1186ஆம் ஆண்டில் மரணமடைந்த பின்னர் தொடங்கி கி.பி. 1235ஆம் ஆண்டு வரையுள்ள ஐம்பது ஆண்டுகள் உள்ளடக்கப் பட்ட பொலனறுவையரசின் வரலாறானது இலங்கை வரலாற்றில் தனித்துவமான ஓர் அலகாக இடம்பெறுவதனைக் காணலாம். பொலனறுவை அரசின் இறுதிக் காலகட்டமாக இக்காலப்பகுதி அமைவதோடு பொலனறுவைக் காலப் பண்பாட்டில் பல்வேறு சமூகத்தவர்கள் பங்களித்த ஒரு தனித்துவமான காலப் பகுதியாகவும் அமைவதனையும் காண்கின்றோம். பெருமளவிற்கு அரசியலில் குழப்பங்கள் நிறைந்த ஒரு காலப்பகுதியாக இக்காலம் விளங்கியமையால் பொலனறுவை இராசதானியின் தளம்பல் நிலைக்கும், படிப்படியாக அது வீழ்ச்சியடைந்து செல்வதற்கும் உரிய முன்னிகழ்வுகள் இடம்பெற்ற ஒரு காலகட்டமாகவும் இக்கலிங்கர் காலப்பகுதி விளங்கியது.

பொலனறுவையில் முதலாம் பராக்கிரமபாகுவிற்குப் பின்னர் (1186 - 1236) உள்ள ஐம்பது வருட காலங்களுள் ஆட்சிசெய்த 15 ஆட்சியாளர்களுள் 10 பேர் கலிங்கநாட்டுத் தொடர்புடையவர்களாக விளங்கினர். இலங்கை உடனான கலிங்கத் தொடர்பு மிகநீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. ஆனால் பொலனறுவைக் காலப்பகுதியில் கலிங்க மரபினைச் சேர்ந்த அல்லது கலிங்க வம்சமும், சிங்கள வம்சமும் இணைந்தமையால் உருவான ஆட்சியாளர்களது அரசியல் மேலாதிக்கம் பொலனறுவையில் கி.பி. 1186க்குப் பின்னர் ஏற்பட்டது. முதலாம் பராக்கிரமபாகுவிற்குப் பின்னர் அவனது சகோதரியின் மகனான 2ஆம் விஜயபாகு பொலனறுவையில் அரசனானான். இம்மன்னன் தனது அரசியலுரிமையை தாய்வழியே கோரியதாகத் தெரிகின்றது. மேலும் அவன் தான் விஜயன் மரபிலே வந்த ஒருவனாகவும் குறிப்பிட்டுக் கொள்வதனைக் காணமுடிகிறது. இம்மன்னன் ஓர் இணக்கக் கொள்கையை முன்வைத்து அரசனாகிய போதிலும், 6ஆம் மகிந்தன் இவனைக் கொன்று, பொலனறுவையில் தன்னை மன்னனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான். இம் மன்னனது ஐந்து நாட்கள் ஆட்சியின் பின் 1187இல் நிசங்கமல்லன் அரசைக் கைப்பற்றி ஒன்பது வருடங்களுக்கு ஆட்சி செய்தான் (1187 - 1196).

இலங்கையில் ஆட்சிசெய்த மன்னர்களுள் நிசங்கமல்லனும் முக்கியத்துவம் வாய்ந்த ஒருவனாவான். இவனுடைய வரலாறானது சூளவம்சத்தில் 9 செய்யுட் களில் மட்டும் மிகச்சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. கலிங்க மரபில் வந்த ஆட்சியாளர்களுள்ளே தலைசிறந்தவனாக விளங்கிய நிசங்கமல்லனின் வரலாற்றை விரிவாக அறிந்துகொள்வதற்கு பெருந்தொகையான சாசனச் சான்றுகள் கிடைத்துள்ளன. அவை யாவும் பெருமளவிற்கு மெய்க்கீர்த்திச் சாசனங்களாகவெ காணப்படுகின்றன. இச்சாசனங்களூடாக நிசங்கமல்லனுடைய வரலாற்றை நோக்கும்போது அக்காலத்தில் கலிங்கருக்கு இலங்கையில் இருந்த எதிர்ப்புணர்வுகள் தெளிவாகப் புலப்படுகின்றன. கலிங்க நாட்டவர்க்கிருந்த எதிர்ப்புணர்வுகளை நிசங்கமல்லன் தனதாக்கிக் கொள்வதனையும் அவனது சாசனங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

'கீர்த்தி நிசங்க மல்லன்' என்ற பெயருடன் கலிங்க நாட்டிலுள்ள சிங்கபுரம் என்ற இடத்திலிருந்து வந்தவனாக இம்மன்னன் காணப்பட்டான். இம் மன்னனது தகப்பனது பெயர் ஸ்ரீ ஜயகோபமஹாராஜா, தாய் பார்வதிதேவி ஆவர். நிசங்கமல்லன் கலிங்க நாட்டுப் பிரதான அரச வம்சத்தைச் சேர்ந்தவன் அல்லன் என்பதும், 2ஆம் விஜயபாகுவின் ஆட்சிக்காலத்தில் உபராஜனாக இருந்தவன் என்பதும் புலனாகிறது. இம்மன்னன் தனது கல்வெட்டுக்களில் தான் கலிங்க நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டதாகக் கூறிக்கொள்வதனையும் காண்கின்றோம். பொலனறுவையில் இவன் மன்னனாக முடிசூடுவதற்கு முன்னர் நிர்வாகத்தில் சில முக்கிய பதவிகளை வகித்து முடிக்குரிய இளவரசனாக விளங்கிப் பின்னர் மன்னனாக முடிசூடிக் கொண்டிருந்தான் என்பதும் புலனாகிறது.

அக்காலத்தில் இலங்கையில் கலிங்கவம்சத்தைச் சேர்ந்த ஆட்சியாளர் களையும், ஆட்சியையும் ஏனையோர் விரும்பவில்லை. ஒரு புறத்தில் சிங்கள அரசமரபைச் சேர்ந்தவர்கள் கலிங்கரை எதிர்த்தனர். அதேவேளையில் தென்னிந்திய பாண்டிய மரபினைச் சேர்ந்தவர்கள் தமது ஆட்சியுரிமையை பொலனறுவையில் நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தனர். இதனால் பிற்காலப் பொலனறுவை இராசதானியில் பாண்டியர் - கலிங்கர் - சிங்களவர் என்ற முத்தரப்பினரிடையேயும் ஆட்சியுரிமையைத் தக்கவைத்ததுக் கொள்வதற்கான வாரிசுரிமைப் போட்டி நிலவி வந்தமையை அவதானிக்க முடிந்தது. பொலனறுவை யரசின் ஸ்திரமற்ற தன்மைக்கும் இதுவே காரணமாகவும் அமைந்தது.

நிசங்கமல்லன் தன்னுடைய சாசனங்களில் தான் விஜயன் மரபினைச் சேர்ந்தவன் எனவும், அதனால் தனக்கு இலங்கையில் அரசவுரிமை உண்டென்றும், இலங்கையில் கலிங்க வம்சத்தவர்களை மக்கள் ஆதரிக்கவேண்டும் என்றும் வற்புறுத்திக் குறிப்பிடுவதனைக் காணலாம். 'இலங்கை எனப்படும் கன்னியினுடைய தலைவனாக வழிவழி உரிமை பெற்றவன் தானே' என்று தம்புள்ளக் கல்வெட்டில் நிசங்கமல்லன் குறிப்பிட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. இதே சாசனத்தில் நிசங்கமல்லன் 'தன்னுடைய குடிகள் கோவிக் குலத்தவர்களை ஆதரிக்க வேண்டாம்' எனவும் குறிப்பிட்டுள்ளான். கல்பொத்தச் சாசனத்தில் அரசர்கள் தெய்வம் என்றும், மனித வடிவில் தெய்வம் என்றும், அவர்களுக்கு எதிராகச்

செய்யப்படும் துரோகம் மன்னிக்கப்பட முடியாதவை எனவும் குறிப்பிடுகின்றான். மேலும் பௌத்தரானவர்களும், விஜயமரபைச் சேர்ந்தவர்களுமான கலிங்கருடைய உரிமை நியாயமானது என்றும், அவர்களையே மக்கள் ஆதரிக்கவேண்டும் என்றும், பௌத்தரல்லாத சோழரை ஆதரிக்கவேண்டாம் என்றும், மற்றவர்கள் சட்டபூர்வமான உரிமை அற்றவர் என்றும் அதே கல்வெட்டில் நிசங்கமல்லன் குறிப்பிடுவதைக் காணலாம்.

இவனுடைய ஆட்சிக்காலத்தில் உரோகணையில் குழப்பங்கள் நிகழ்ந்து வந்தன. அதேவேளையில் மன்னன் மக்களை கிளர்ச்சி செய்யவேண்டாம் என அறைகூவல் விடுத்ததையும் காண்கின்றோம். நிசங்கமல்லனது ஆட்சிக் காலத்தின் போது எழுதப்பட்ட சிங்கள நூலான சாதுசரிதோயம் என்னும் நூலின் முன்னுரையில் உலகில் பெரிய குழப்பங்கள் நிலவினாலும் தன்னுடைய நூலை தடையின்றி எழுதமுடிந்தது என ஆசிரியர் குறிப்பிட்டதிலிருந்து அக்காலத்தில் நிசங்கமல்லனுக்கு எதிராக நிகழ்ந்த குழப்பங்கள் அனுமானித்துக் கொள்ள முடிகிறது. நிசங்கமல்லன் எல்லா விதமான நெருக்கடி நிலைகளையும் சமாளித்த வண்ணம் இலங்கையின் முழுப் பகுதியையும் ஒன்றுபடுத்தி, ஆட்சி புரிந்தமையைச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. அவன் தனது இராச்சியத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சுற்றுலாச் சென்று, மக்கள் குறைநிறைகளைக் கேட்டறிந்து, மக்கள் சேவையை முன்னெடுத்துச் சென்றமையைக் காண்கிறோம். நாட்டின் பல பகுதிகளிலும் தர்மசாலைகளை நிறுவி யாத்திரிகர்களது தேவைகளை நிறைவுசெய்தான். மன்னன் தனது பிறந்த நாட்களின்போது துலாபாரக் கொடைகளை (மன்னனது எடைக்குச் சமமான திரவியக் கொடைகளை) புனித மையங்களில் வைத்து வழங்கியிருந்தான்.

சமயத்துறையிலும் மிகுந்த பற்றுள்ள வகையில் பல பணிகளை இம்மன்னன் ஆற்றினான். இவனால் அமைக்கப்பட்ட ரங்கொத் விகாரை பௌத்த கட்டிடக்கலை வரலாற்றில் தனித்துவம் மிக்கதாக இன்றுவரை மிளிர்கின்றது. தம்புள்ள குகையினுள் இம் மன்னனால் பல ஓவியங்கள் தீட்டுவிக்கப்பட்டன. ரத்னாவலீ சேத்தியமான மகாவிகாரையை புதுக்கியும், திருத்தியும் அமைத்தான். இவனது காலத்தில் அமைக்கப்பட்ட ஏனைய பௌத்த கட்டிடங்களுள் ஜம்புக்கோள விகாரை, வட்டதாகே ஹட்டதாகே என்பன மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். மன்னன் பௌத்த சங்கத்தில் வாழ்ந்த ஒழுக்கமற்ற மதகுருமாரை நீக்கியதுடன், பௌத்த சங்கத்தினைப் புனிதப்படுத்தும் சடங்குகளையும் ஆற்றுவித்தான்.

நிசங்கமல்லன் பௌத்த மதத்திற்கு மாத்திரமன்றி, இந்து மதத்திற்கும் ஆதரவு அளித்திருந்தான். இந்துசமய நிறுவனங்கள் பலவற்றிற்கு அவன் மானியங்களை வழங்கினான். கந்தளாயில் அமைக்கப்பட்டிருந்த பார்வதி சத்திரத்திற்கு பல வகையான தானங்களை வழங்கினான். அச்சத்திரத்தில் நிகழ்ந்த இசை-நடன நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான் எனவும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. கந்தளாய் சிவன்கோவிலில் நவக்கிரஹ சாந்தியையும் நிசங்கமல்லன் செய்வித்ததாக அறிகின்றோம். தென்னிந்தியாவில்

இராமேஸ்வரத்தில் இந்துக்கோயில் ஒன்றை அமைத்து அதற்கு நிசங்கேஸ்வரம் எனப் பெயரிடுவித்தான் எனவும் அறிகின்றோம். அண்மையில் கிடைக்கப்பெற்ற அல்லைச் செப்பேடுகளின்படி நிசங்கமல்லன் தென்னிந்தியா மீது படையெடுத்துச் சென்று போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தான் என அறிகின்றோம். ஆனால் சில கற்சாசனங்கள் தென்னிந்தியாவிற்கு இவன் பயணம் மேற்கொண்டதாகவே குறிப்பிடுகின்றன. இராமேஸ்வரத்தில் கிடைத்த இம்மன்னனது சிங்களக் கற்பீடச் சாசனம் அச்செய்தியை உறுதிப்படுத்துகின்றது.

சமனலைக்கு யாத்திரையாகச் சென்று அங்கு அமைக்கப்பட்ட புனித மேடையே (பாதத்தினை) தங்கததினாலும், பட்டுப் பதாகைகளினாலும் அலங்கரித்து, வெள்ளி, பொன் ஆகியவற்றைத் தானமாக நிசங்கமல்லன் அளித்தான். நிசங்கமல்லன் கண்டிய மன்னரைப் போன்றே முதலில் சைவனாக இருந்து பின்பு பௌத்தனாக மாறியிருந்தமையால் சூளவம்சம் அம் மன்னனைப் பற்றிச் சிறப்பாக எவற்றையும் குறிப்பிடவில்லை. சூளவம்சத்தின் 80ஆம் அத்தியாயத்திலுள்ள 18ஆம் செய்யுளில் அவனது பௌத்த சமயத் தொண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம்.

நிசங்கமல்லன் பொருளாதார, நிர்வாகத்துறைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தான். வருடாவருடம் பூரணை நாட்களில் மக்களுக்கு பல கொடைகளை வழங்கி, பொருளாதார ரீதியில் மக்களை தன் வசப்படுத்துவதற்குப் பல முயற்சிகளை இம்மன்னன் மேற்கொண்டிருந்தான். மக்கள் செலுத்திய வரிச் சுமையைக் குறைப்பதற்காக சில வரிகளை ஐந்து ஆண்டுகளுக்கு நீக்கி வைத்தான். தூர்ந்துபோன பல குளங்களையும், கால்வாய்களையும் திருத்தியமைத்து நீர்ப்பாசன பொருளியல் ஈட்டத்திற்குப் பெரும் பணியாற்றினான். பெருங்குளமொன்றைத் திருத்தியமைத்ததன் பின்னர் நிசங்க சமுத்திரம் என அதற்குப் பெயரிடுவித்தான். (இது பராக்கிரம சமுத்திரமாக இருக்கலாம் என வரலாற்றாசிரியர்களால் நம்பப்படுகிறது) பாண்டிவிஜயக்குளம் என்ற புதிய நீர்ப்பாசனக் குளம் நிசங்கமல்லன் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்டதாகும்.

நிசங்கமல்லனது ஆட்சிக்காலத்து பொருளாதார நிலையைப்பற்றி அவனது கல்வெட்டுக்கள் விபரிப்பதனையும் காணமுடிகின்றது. அநுராதபுரத்தில் ரூவான்வலிசாயவுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கல்வெட்டில் (EZ, Vol.I, No.3, 13வது கல்வெட்டு) மறைமுகமாக சமகாலத்து பொருளாதார நிலைபற்றிக் குறிப்பிடுவதனைக் காணலாம். முன்னே இருந்த பராக்கிரமபாகுவின் ஆட்சி முறையை நிசங்கமல்லன் கண்டிப்பதோடு, தற்காலப் பொருளாதார நிலையில் ஏற்பட்ட அவலத்திற்கு அவனே அடிப்படைக் காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளான். இக்கூற்றிலிருந்து மகாபராக்கிரமபாகு காலத்து பொருளியல் நிலமைகளிலிருந்து நிசங்கமல்லன் காலத்தில் பெரிதும் மாறுபட்ட ஒரு நிலையே காணப்பட்டிருந்தது என்பது உறுதியாகின்றது. அளவு கடந்து, சட்டத்திற்கு மாறாக, தண்டனைகள் பலவற்றை மக்களுக்கு வழங்கி, பொது மக்களைப் பெரிதும் கஷ்டநிலமைக்குள ஆக்கினான் என நிசங்கமல்லன் குறிப்பிடுவதிலிருந்து இக்காலத்தில் வறுமைநிலை

நீடித்திருந்தமையை நன்கு உணர்ந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. பொன், வெள்ளி, நாணயங்கள், உடுப்புக்கள், ஆபரணங்கள் போன்றவற்றைத் துலாபாரக் கொடைகளாக மக்களுக்கு நிசங்கமல்லன் வழங்கிய நிலையில் பின்னணியும் அதே வறுமை நிலைதான் என்பதனை நாம் உணர்ந்து கொள்ளலாம். வறுமைநிலை காரணமாக நாட்டில் களவு அதிகரித்திருந்தமையை நிசங்கமல்லன் குறிப்பிட்டிருப்பது இங்கு நோக்கத்தக்கது. நிசங்கமல்லனுடைய ஆட்சியானது வீழ்ச்சியடைந்து கொண்டு சென்ற பொலனறுவை இராச்சியத்தினைத் தடுத்து வைத்த ஒன்றாக அமைந்திருந்தாலும், பொலனறுவையின் வீழ்ச்சியைத் தவிர்க்க முடியாததாகவே அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வரிப் பழுவினால் மக்கள் மிகவும் துன்புற்றிருப்பதை இந்தக் கல்வெட்டு எடுத்துக்காட்டுகின்றது. இதனால் அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்கு மக்கள் வரி செலுத்தத் தேவையில்லை என நிசங்கமல்லன் பிரகடனம் செய்தான். முன்பு சேனைப்பயிர்ச்செய்கைக்குக்கூட பராக்கிரமபாகு வரிகளை அறவிட்டிருந்தான் என்பதனையும் இச்சாசனம் குறிப்பிட்டுள்ளது. எனவே பராக்கிரமபாகுவின் பல நடவடிக்கைகள் பொலனறுவையின் தளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் அடியிட்டுக் கொடுத்திருந்தன என்பதனை நிசங்கமல்லனது கல்வெட்டுக்களிலிருந்து அறிந்துகொள்ளமுடிகிறது.

நிசங்கமல்லனது ஆட்சிக்காலத்தில் வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தான். மைசூர், நெல்லூர், வங்காளம், கலிங்கம், பர்மா, கம்போடியா முதலிய நாடுகளுடன் நட்புறவு கொண்டிருந்தான். இலங்கைக்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்குமிடையிலான வர்த்தக நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமிருந்தன. ஜாவா, மலேசிய நாடுகளுடனான வர்த்தகம் வலுவடைந்து காணப்பட்டது. பிற்காலத்தில் ஜாவாவிலிருந்து எற்பட்ட சந்திரபானுவின் படையெடுப்புக்கள் அதே வர்த்தக மார்க்கங்களைப் பயன்படுத்தியே இலங்கையை வந்தடைந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. நிசங்கமல்லனது செப்பு நாணயங்கள் யாழ்ப்பாணக் குடாநாடு உள்ளிட்ட இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் நிசங்கமல்லனின் ஆட்சிக் காலத்தினை நோக்கும்போது இலங்கையை ஆண்ட பிரதானமான ஓர் அரசன் என்ற வகையிலும், இலங்கையின் பெருமன்னர் வரிசையில் நிசங்கமல்லனுக்கும் பங்குண்டு என்ற வகையிலும் பொலனறுவையின் இறுதிப் பெருமன்னனாக அவன் காணப்படுகின்றான்.

நிசங்கமல்லனுக்குப் பின்னர் இலங்கை அரசியலில் அடிக்கடி குழப்பம் ஏற்பட்டு வந்தமையினைக் காணமுடிந்தது. பிற்பட்ட காலத்தில் பொலனறுவையில் இருந்து ஆட்சிபுரிந்த ஆட்சியாளர்களுள் சில பெண் அரசிகளும் உள்ளடங்குவர். கல்யாணவதி, லீலாவதி என்போர் அவர்களுள் குறிப்பிடத்தக்கோராகும். கல்யாணவதி நிசங்கமல்லனது மனைவியாவார். லீலாவதி 2ஆம் பராக்கிரமபாகுவின் மனைவியாவார். கி.பி. 1215இல் ஏற்பட்ட மாகனது ஆட்சி மாற்றத்துடனும் பொலனறுவை இராசதானி வீழ்ச்சியடைந்தது எனலாம். 1236

வரை கலிங்க மாகனது ஆட்சி பொலனறுவையில் (21 ஆண்டுகள்) நீடித்திருந்தது. மாகனுடைய அடக்குமுறை பற்றி சூளவம்சம் மிகக்கடுமையாக விமர்சித்துள்ளது. இதுவரையில் இலங்கையில் ஏற்பட்ட அந்நியர் படையெடுப்புக்களின்போது பலவீனமடைந்த சிங்கள ஆட்சியாளர்கள், மன்னர்கள் இராசரட்டையிலிருந்து விலகிச்சென்று ரோகணையில் அடைக்கலம் புகுந்து, பின்னர் தம்மை வலுப்படுத்தியதன் பின்னர் மீண்டும் இராசரட்டைக்குச் சென்று தமது ஆட்சியுரிமையை நிலைநாட்டி வந்தமையைக் கண்டுள்ளோம். ஆனால் மாகன ஆட்சிக்காலத்தில் அது வாய்ப்பாக அமையவில்லை. அவ்வாறான சூழ்நிலை உருவாவதற்குச் சிறிதுகாலம் எடுத்தது. மாகனது இராணுவ அரண்கள் இராசரட்டையின் முக்கியத்துவம் வாய்ந்த மையங்களில் நிறுவப்பட்டிருந்தன. கதிர்காமம் உள்ளிட்ட ரோகணைப் பகுதியும் மாகனது இராணுவ கட்டுப் பாட்டுக்குள் இக்காலத்தில் கொண்டுவரப்பட்டிருந்தது. இதனால் இதுவரையில் சமூக, பொருளாதார, பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காத்து வந்திருந்த இராசரட்டைப் பிரதேசம் வளர்ச்சி குன்றி, வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. மக்களும் பல்வேறு காரணங்களுக்காக இராசரட்டைப் பிரதேசத்தை விட்டு இடம்பெயரத் தொடங்கினார்கள்.

நிஸங்க மல்லனது சாதனைகள்: பராக்கிரமபாகுவைத் தொடர்ந்து அரசைப் பெற்ற நிஸங்கமல்லன், தன் முன்னோரது கட்டிடத்துறைச் சாதனைகளை விஞ்சவேண்டும் என்ற நோக்குடன் செயலாற்றினான். தன் குறுகிய ஒன்பதாண்டு ஆட்சியில், இவனால் நிறுவப் பெற்றதாகக் கூறப்படும் கட்டிடங்கள் உண்மையி லேயே இவனது காலத்தில் முடிவுற்றனவெனின், இத்துறையில் இம் மன்னன் தனக்குரிய புகழுக்கு எல்லா வகைகளிலும் அருகதை பெற்றுள்ளான் எனலாம். கல்-பொத்த (கல்லாலான புத்தகம்), நிஸங்க லதா மண்டபம் போன்ற புதுமையான கட்டிட அமைப்புக்களும் நிஸங்கமல்லன் காலத்திலே வெற்றியுடன் உருவாக்கப் பட்டன. இம்மன்னன் தனக்கு நிறுவிய மாளிகையின் சிதைவுகள் இன்றும் உள்ளன. கட்டிடக்கலை அம்சங்கள் இவற்றில் குறைவாகவே உள்ளன. இதுவும் இரண்டு மாடிகளையாவது கொண்ட செங்கற் கட்டிடம் என்பது படிக்கட்டுக் களாலும், பிற அடிபாடுகளாலும் புலப்படும். நிஸங்க மல்லனது வேத்தவை மண்டபத்தில், அரசனது இருக்கையினைத் தாங்கிய கல்லாலான சிங்கமும், வேத்தவை உறுப்பினர்களின் இருக்கைகளைக் குறிப்பிடும் பொறிப்புக்களையுடைய தூண்களும் இப்போதும் பேணப்பட்டுள்ளன. தளதா மாளுவ என்ற பகுதியில் உள்ள மிகவும் குறிப்பிடத்தக்க கட்டிடம் வட்டதாகே யாகும். நிஸங்க மல்லனது ஒரு கல்வெட்டு இதை அவன் நிறுவியதாகக் கூறியபோதும், கட்டிட அமைப்பைக் கொண்டு அது அவனது காலத்துக்கு முந்தியதென்பர். உண்மையில், நிஸங்க மல்லன் இக்கட்டிடத்துக்கு ஒரு புதிய பகுதியைச் சேர்த்திருத்தல் கூடும். சத்மஹால் பிரசாத என அழைக்கப்படும் ஒரு புதுவகைக் கட்டிட அமைப்பும் நிஸங்க மல்லனுடையதாகக் கொள்ளப்படினும், அவனே நிறுவினான் என உறுதியாகக் கூறுதற்கு ஆதாரமில்லை. உயர்ந்து, படிப்படியாகக் குறைந்து செல்லும் ஒரு கோபுர அமைப்பைக் கொண்ட இவ்வுறுதியான கட்டிடம்

வடசீயத்திலுள்ள ஒரு கட்டிடத்தை நிகர்த்ததால், அங்குள்ள முறை இலங்கையைப் பாதித்திருக்கலாம் அல்லது இந்தியாவிலிருந்து பின்னர் அழிந்துபோன ஒரு கட்டிடத்தை அடியொற்றி இது நிறுவப்பெற்றிருக்கவும் கூடும். ஹட்டதாகே என்பதை இவனே நிறுவினான் என்பதற்கு ஆதாரமுண்டு. பற்சின்னத்தை வைத்தற்குக் கட்டப்பெற்ற இக்கட்டிடத்திலும் ஒரு மேல் மாடி இருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. சாகிரிய என்ற இடத்திலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு பெரும் பாறைக் கல்லை அழுத்தமாக்கி, அதில் இலங்கையிலுள்ள மிக நீண்ட கல்வெட்டை அவன் பொறிக்கச்செய்தான். இதுவே கல்பொத்த (Gal-Pota) என வழங்கப்படுகின்றது. சுமார் 27 அடி நீளமும், 5 அடி அகலமும், 2அடி உயரமும் கொண்ட இக்கல்லானது வரலாற்று முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. பொலன்னறுவையிலுள்ள மிகப்பெரிய (பூரணமான) தாகபம் றன்கொத் தாபகம் என வழங்கப்படும் ரூவான்வலி தாகபமாகும். 180 அடி உயரத்தையும், அடிப்பாகத்தில் 550 அடி சுற்றளவையுங் கொண்டது இக்கட்டிடம் ஆகும். நிஸங்கமல்லன் மறைந்ததைத் தொடர்ந்து உண்டான தகராறுகள், கட்டிடத்துறையில் மேலும் அபிவிருத்திகள் ஏற்படுவதைத் தடுத்தன. ஈற்றில் கலிங்கமாகனது ஆட்சியில் ஏற்பட்ட நிகழ்வுகள் இக்கட்டிடங்களிற் பல அழியவும் பாழெய்தவும் காரணமாயின. 13ம் நூற்றாண்டின் முடிவில் பொலன்னறுவையின் புகழை மீட்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், இவை எவ்வித பலனையும் தரவில்லை. ஆறு நூற்றாண்டுகளுக்கு மேற் காடுகளாற் சூழப்பெற்றிருந்த இப்பெருநகர் கடந்த அரைநூற்றாண்டுக் காலமாகத் தொல்பொருளாய்வுப் பகுதியினர் மேற்கொண்ட முயற்சிகளால் அங்குள்ள பழைய சின்னங்கள் இன்று நன்னிலையிற் பேணப்பட்டு வருகின்றன. இச்சின்னங்கள் பண்டைய ஈழத்தினதும், சிங்களப் பண்பாட்டினதும் பெருமைகளை நினைவுக்குக் கொண்டுவர உதவுகின்றன.

நிஸங்கமல்லனும், அவனது பின்னோரும்

பராக்கிரமபாகுவின் ஆட்சியின் முடிவில், இலங்கைப் பௌத்தமும், சங்கமும், பர்மா முதலான பிற பௌத்த நாடுகளிடையே அளவற்ற மதிப்பைப் பெற்றிருந்தன. ஆனாலும், அவனது பணிகளும் நிலையான பயனைத் தந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், பராக்கிரமபாகுவுக்குப் பின் ஓராண்டுக்குள் ஆட்சியைப் பெற்ற நிஸங்க மல்லனும், சங்கத்தில் கூடாவொழுக்கமுடையோர் இருப்பதை உணர்ந்து அவர்களைக் களைந்துவிட முற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அவனுடைய கல்வெட்டுக்களில், பிக்குமார்கள் பின்பற்றவேண்டிய விதிகள் பற்றித் தானே அறிவுறுத்தியுள்ளான். றனகொத் தாபகம முதலான அவனுடைய சமயக் கட்டிடங்கள், அவன் சமயத்திற் கொண்ட ஈடுபாட்டை இன்றும் பறைசாற்றி நிற்கும் சின்னங்களாகும். விஜயபாகு, பராக்கிரமபாகு, நிஸங்கமல்லன் ஆகிய மூவரும் பொலன்னறுவைக் கால மன்னருள் நாட்டபிவிருத்தியிலும், சமய வளர்ச்சியிலும் பெரும் அக்கறை காட்டியவர்கள் என்பது தெளிவு. இவர்களுக்குப் பின், பொலன்னறுவைக் காலப்பகுதியின் இறுதியில் ஆட்சி செய்தவர்கள்

இடையிடையே சமய அக்கறை காட்டியுள்ளனர். குறிப்பாக, லீலாவதியை அரசேற்றிய பராக்கிரமன், ஆயஸ்மந்தன் போன்ற தளபதிகள் சமயப் பணிகளாற்றியமைக்குச் சான்றுகள் உண்டு. ஆனால், இவர்களின் பணிகள் எவ்வித பயனையும் தராதவாறு, அந்நேரத்தில் நிலவிய சூழ்நிலைகள் தடுத்தன. இந்நிலையிலேயே, நாம் முன்னர் கவனித்தவாறு, மாகனுடைய படையெடுப்பு நிகழ்ந்து, பௌத்த மதத்துக்குப் பல அழிவுகளைச் செய்தது. சூளவம்ச விவரங்களில் மிகைக்கூற்றுகள் பல இருப்பினும், மாகனுடைய படைவீரர்கள் பௌத்த நிறுவனங்களுக்குப் பல சேதங்களை உண்டுபண்ணியிருந்தனர். மாகனுடைய ஆட்சியின்போது, ஒரு 'பொய்யான மத'த்தைப் புகுத்தப் பலவந்தமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இலக்கியங்களிற் குறிப்புக்கள் உண்டு. சமயத்துறையில் வேண்டுமென்றே ஓர் ஆட்சியாளன் கடைப்பிடிக்கக்கூடிய ஒறுத்தற் கொள்கையை கலிங்கமாகன் கடைப்பிடித்தான் என்பர். இத்தகைய ஒரு கொள்கை இலங்கை, இந்திய நாடுகளின் வரலாற்றில் மிக அரிதாகும். இவ்வாறாகப் பொலன்னறுவைக் கால முடிவில், பௌத்தத்தின் நிலை, அக்காலப் பகுதியின் தொடக்கத்திலிருந்ததைக் காட்டிலும் கீழ்நிலை அடையலாயிற்று எனலாம்.

பொலனறுவைக்காலப் பண்பாடு

வழிபாட்டு முறைகள்

பொலன்னறுவைக் காலத்தில் பௌத்தத்தின் பொதுவான வளர்ச்சியின் பின்னணியில் அமைந்த சில வழிபாட்டு முறைகள் பற்றிச் சிறப்பாக நோக்கலாம். புனிதப் பற்சின்ன (தந்த தாது) வழிபாட்டுமுறை பொலன்னறுவைக் காலத்தில் அதிக முக்கியம் பெற்றிருந்தது. விஜயபாகு இதற்கென ஒரு கோவில் நிறுவியதை காணமுடிந்தது. பின்னர் இக்கோவிலின் பாதுகாப்பு வேளைக்காரப் படைப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்படையினர் அதன் பராமரிப்புக்கென ஒரு வேலி நிலத்தை ஒதுக்கியதாக ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. இக்காலத்திலேயே, புனித பற்சின்னத்தை வைத்திருத்தல் ஆட்சியுரிமை வலுப்பெறுதற்கு இன்றியமையாததென்ற கொள்கை உருவாயிற்று. உருகுணைக்குப் பாதுகாப்புக்காகக் கொண்டு செல்லப்பட்ட பல் ஐயக்கலச் சின்னங்களைப் பராக்கிரமபாகு அங்கிருந்து மீட்டு தனதுரிமையை வலுப்பெறச் செய்ததை இங்கு நினைவுகூர வேண்டும். அவன் தந்ததாதுவுக்கு ஆண்டு தோறும் விழா எடுத்ததாகவும் கூறப்படுகின்றது. நிஸங்கமல்லனும், ஹட்டதாகே என அழைக்கப்படும் கட்டிடத்தை நிறுவி, புனிதப் பற்சின்னத்துக்கென அதை ஒதுக்கி விட்டான். 'பரித்த' (பிரித்) ஓதுதலும் இக்காலப்பகுதியிலேயே முக்கியமடைந்து, பெருவழக்கில் இருந்து வந்தது. ஸ்ரீபாத (சிவனொளிபாதமலை) மலைக்கு மக்கள் யாத்திரைகளைச் செய்யும் வழக்கமும் இக்காலத்திலேயே அதிகமாகப் பின்பற்றப்பட்டது. விஜயபாகுவின் அம்பகமுப் பொறிப்பு சமனொளிக் குன்றில் உள்ள திருப்பாதத்துக்குக் காணிக்கைகளைச் செலுத்தியமையும், அதைத் தரிசிக்க யாத்திரை செய்யும் அடியவர் கூட்டத்தினர் தங்குவதற்கும் அவர்களின்

பசியைப் போக்கவும் ஏற்பாடுகள் செய்ததையும் குறிப்பிட்டுள்ளது. நிஸங்க மல்லன் தானே நேரிற்சென்று திருவடியை வழிபட்டு, அதற்கென மானியங்களையும் வழங்கினான். உபுல்வன் (விஷ்ணு), சமன் (யமன்) வழிபாடுகளும் தேவுந்தர (தேவிநுவர), தம்புளை, அலுத்நுவரை முதலான இடங்களில் நடைபெற்றமைக்குச் சான்றுகள் உண்டு.

பிற பௌத்த நாடுகளுடன் தொடர்புகள்

பொலன்னறுவைக் காலத்திலும், இலங்கை இந்தியாவுடன் சமயத் தொடர்புகள் வைத்திருந்தபோதும், அவற்றால் இலங்கையின் சமயப்போக்கு அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. விஜயபாகு புத்தகயாவுக்கு அனுப்பிய தூதுக்குழுக்கள் மூலம், மகதத்தில் அதே காலத்திலிருந்த பௌத்தசமயப் பிரிவினருடன் தொடர்புகள் ஏற்பட வாய்ப்பிருந்தது. இலங்கையில் இத்தொடர்புகளின் செல்வாக்கைக் காட்டும் சிற்பங்கள் காணப்படுகின்றன. (எ-டு மஹியங்கணை தாகபத்தின் சின்ன-அறைச்சிற்பம்), எனினும் வட இந்தியச் னகசெல்வாக்கு விரைவில் அருகிவிடுகின்றது. ஏனெனில் அங்கு பௌத்தம் தேய்வு நிலையிலிருந்தது. தென்னிந்தியாவில் முக்கிய பௌத்த நிலையங்களாக விளங்கிய நாகபட்டினம், காஞ்சி ஆகிய இடங்களிலுள்ள நிறுவனங்களுக்கும் இலங்கைக்குமிடையே உறவுகள் நிலவின. இக்காலப் பகுதியில், தென் கிழக்காசிய நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையே தொடர்புகள் அதிகமாகி வந்தன. **முந்திய லிகோர்** (இப்போதைய தம்பரட்ட, மலேஷியாவில்) என்ற பகுதி, விஜயபாகுவின் காலத்திலும் அதற்குப் பின்னரும் **தேரவாத பௌத்த நிலையமாக** விளங்கியது. இலங்கையிலிருந்து சென்ற **ஆனந்த தேரா** அங்கு இம்மதத்தைப் பரப்புவதில் முக்கிய பங்கை வகித்ததாகக் கூறப்படுகின்றது. பர்மாவுடன் நிலவிய சமய உறவுகளால் இரு நாடுகளுமே பயனடைந்தன. கம்போடியாவுடன் சமயத் தொடர்புகள் பொலன்னறுவைக் காலத்தில் குறைவாகவே இருந்தன. கம்போடியா மகாயான பௌத்தத்தையே பின்பற்றியதால், அதற்குப் பின்னரே இரு நாடுகளுங்ககுமிடையே சமயத்தொடர்புகள் வளர்ந்தன. சீயத்துடன் இருந்த தொடர்புகளுக்கு அறிகுறியாகவே, வட சீயத்தில் **லும்பன்** என்னுமிடத்தில் உள்ள ஒரு தனிவகைக கட்டிடத்தை நினைவுகூரும் முறையில், பொலன்னறுவை யில் **சத்மஹால் பாசாத** என்பது உள்ளதாகக் கூறப்படும. **(இதனையொத்த ஒரு (பௌத்தக்) கட்டிடம் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள நெடுந்தீவில் காணப்படுவதும் அது தென்கிழக்காசிய கட்டிடக்கலைமரபினை வெளிப்படுத்தி நிற்பதும் நினைவு கூரத்தக்கது.)**

பொலன்னறுவைக் காலச் சமய விருத்திகளை நோக்கும்போது, நாம் சில முடிவுகளுக்கு வரலாம். அரசியற் காரணிகளால் பௌத்த சமயம் பெரிதும் பாதிக்கப்படும் என்பது அடிக்கடி நிரூபிக்கப்பட்டுள்ளது. அமைதியும் உறுதியும் நிலவிய காலங்களில் அது துரித வளர்ச்சியும், படையெடுப்புக்களும் உள்நாட்டுப் போர்களும் நடைபெற்ற காலங்களில் திடீரென வீழ்ச்சியும் எய்தியதைக் காணலாம். **பிற சமயங்களின், குறிப்பாக சைவ 'வைணவ சமயங்களின் பாதிப்பு**

இக்காலத்தில் மிகுதியாகக் காணப்பட்டது. மஹாயானப் பிரிவு முதலானவை இந்தியாவிலேயே வலுவிழந்திருந்தமையால் இலங்கையிலும் சமயப் பிரிவுகளிடையே அதிக முரண்பாடுகள இருக்கவில்லை. இதனாலேயே பராக்கிரமபாகு சங்கப் பிரிவுகளையொன்றுபடுத்த முடிந்தது. பௌத்தக் கோட்பாடு களில் புதிய விருத்திகள் மிகக்குறைவாகவே ஏற்பட்டன. நடைமுறைச் சமயம் (தேரவாதம்) மக்கள் வழிபாட்டுக்குரிய வகையில் மாறுதலடையலாயிற்று (மகாயான வழிபாட்டு முறையாகமாற்றம் அடைந்தது.) விஜயபாகு, பராக்கிரமபாகு போன்ற பெருமன்னர்கள் மட்டற்ற சமய ஆர்வத்துடன் பௌத்தசாஸனத்தை மேன்மைபெற வைத்தனரெனினும், மன்னர்களின் சக்தியையும் மிஞ்சிய காரணிகள் பொலன்னறுவைக்கால முடிவில் அதன் வரலாற்றிலுண்டான பெரும்வீழ்ச்சியைக் கொடுத்தன.

பொலனறுவைக்காலப் பொருளியல், சமூக நிலைமைகள்

பயிர்ச்செய்கையும் பாசனமும்

அனுராதபுர காலத்தில் இருந்தது போலவே, பொலன்னறுவைக்காலப் பகுதியிலும் பயிர்ச்செய்கையே மக்களின் முக்கிய தொழிலாக இருந்தது. வயல்களுக்குப் பசளையிடப்பட்டதொன்றைவிட, வேறுவிதமான புதிய முறைகள் எதுவும் புகுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. அரசாங்கத்துக்குக் கிடைத்த அரசிறைகளிலும் நிலவரியே இக்காலப் பகுதியிலும் முக்கியமானதாக இருந்தது. எனவே, அரசாங்கமும் பயிர்ச்செய்கையை ஊக்குவித்து, நில வருவாயை அதிகரிக்கச்செய்வதில் அக்கறை காட்டியது. 'கமநாயக'ர்கள் என்ற கிராம அதிகாரிகள் மூலமே (இவர்கள் 'குலீனர்' களாகயிருந்தமை குறிப்பிடத்தக்கது) மத்திய அரசு பயிர்ச் செய்கையை விருத்தி செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைக் கவனிக்கச் செய்தது. பயிர்ச்செய்கையைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் தலையீடு அதிகமின்றி, கிராம மக்கள் அதைக் கவனித்து வரலாயினர். பெரும் நீர்ப்பாசனங்களை அமைப்பது, காடுகளை அழித்துக் களனிகளாக்குவது, சகதிகளை நீர் வற்றவைத்து பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாக்குவது போன்ற பணிகளையே மத்திய அரசு கவனித்தது. நீர்ப்பாசனங்களை நன்னிலையில் வைத்திருத்தல், நீர் விநியோகஞ்செய்தல், கால்வாய்களைத் திருத்துதல் போன்ற கருமங்களை உள்ளூராட்சிக் குழுக்கள் (கன்சபாக்கள்) கவனித்து வரலாயின.

பொலன்னறுவைக் காலத்தில், நீர்பாசனத்துறையில் பெரும் பணிகள் ஆற்றிய மன்னர்கள் மிகக்குறை. விஜயபாகு, மகாபராக்கிரமபாகு ஆகியோருடன் நிஸங்கமல்லனையும் சேர்த்துக்கொள்ளலாம். இவர்களுள், மகாபராக்கிரம பாகுவுக்கு நிகராக எந்த (பொலன்னறுவைக்கால) மன்னனையும் குறிப்பிடவியலாது. இத்துறையில் அவனுடைய சாதனைகள் அம்மாமன்னனை ஒரு மேதையாக்கு கின்றன. எனவே அவனுடைய பாசனப்பணிகளே இங்கு சிறப்பான இடத்தைப் பெறும். மகாபராக்கிரமபாகுவிற்கு முன், 1ம் விஜயபாகு (1070 - 1110) இத்துறையில் குறிப்பிடத்தக்க பணிகளையாற்றியுள்ளான். சோழராட்சியை முடிவுக்குக்கொணர்ந்து

இலங்கை முழுவதற்கும் விஜயபாகு அரசனானபோது, பாசனங்கள் பலவும் பாழெய்தி, பழுதுற்றிருந்தன எனப்படுகின்றது. சோழராட்சி ஏற்படுவதற்கு முன்னிருந்த அரசியற் பிணக்குகளும் மன்னர்களின் நிருவாகச் சீர்கேடுகளும், சோழராட்சியை எதிர்த்து நடைபெற்ற போர்களின்போது உண்டான அழிவுகளும், நீர்ப்பாசனங்கள் இவ்வாறு பாழடைந்தமைக்குக் காரணங்களாக இருந்தன. சோழர் தமது ஆட்சியின்போது இவற்றை வேண்டுமென்றே பாழாக்கியிருப்பர் எனக் கருதுவதற்கு இடமேயில்லை. இது எவ்வாறிருப்பினும் விஜயபாகு அரசைப் பெற்றபோது, இராஜரட்டையில் முன்னர் (அனுராதபுர காலத்தில்) நிறுவப்பட்டிருந்த பெரும் பாசனங்கள் பலவும் அழிவுற்றிருந்தன. எனவே, நாட்டின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு உழைத்த விஜயபாகு, நீர்ப்பாசனங்களை நன்னிலைக்குக் கொணர்ந்து பயிர்ச்செய்கையை விருத்தி செய்யப்பாடுபட்டான். எனவே இவனுடைய பாசனப்பணிகள் பெரும்பாலும் புனரமைப்பு, திருத்த வேலைகளாகவேயிருப்பதில் வியப்பில்லை. இவன் பழைய நன்னிலைக்குக் கொணர்ந்த குளங்கள், கால்வாய்கள் பலவற்றின் பெயர்களைச் சூளவம்சம் குறிப்பிட்டுள்ளது. ஆளிசாரக் கால்வாயைத் திருத்தி, அதனால் நீரைப்பெற்று இயங்கிய மின்னேரி-கவுடுலு-கந்தளாய்க் குளங்களை மீண்டும் செயற்படுத்தினான். இதைத் தவிர அனுராதபுரத்தின் சுற்றுப்புறத்திலுள்ள நாச்சதுவ, மகாகணதராவ, மகாகல்கடவைள போன்ற குளங்களையும் திருத்தியமைத்து, அவற்றை மீண்டும் இயங்கவைத்தான். இவன் புதிதாக நிறுவிய குளங்கள் குறைவாகவிருந்தபோதும், விஜயபாகுவின் பாசனப் பணிகளை நாம் குறைத்து மதிப்பிடமுடியாது.

விஜயபாகுவின் ஆட்சியின் முடிவில் நாட்டில் உண்டான அரசியற் குழப்பங்களும், உள்நாட்டுப் போர்களும் பொருளியல் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி வைத்தன. இப்போர்களின்போது நீர்ப்பாசனங்கள் பல மீண்டும் சிதைவெய்தி, பாழடைந்தன. வேண்டுமென்றே சில குளங்களின் கட்டுக்கள் சிதைக்கப் பெற்றிருத்தல் கூடுமெனவும் கருதப்படுகின்றது. இப்போர்களின் பின், மகாபராக்கிரமபாகு ஆட்சியைப் பெற்றபோதே, நாடு மீண்டும் பொருளியற் சுபீட்சத்தைப் பெறமுடிந்தது. அனுராதபுரகால மன்னர்களின் சாதனைகளையும் விஞ்சும் அளவுக்கு மகாபராக்கிரமபாகுவின் பாசனப்பணிகள் அளவிலும் தரத்திலும் மேம்பட்டு விளங்கின. எவற்றையும் பெரிதாகத் திட்டமிட்டு, நிறைவேற்றும் இயல்பு படைத்தவன் பராக்கிரமபாகு, அவனது மற்றைய பணிகளுக்கும் இக்கூற்றுப் பொருந்துமாயினும், அவனது பாசனப் பணிகளை விவரிக்க இது மிகவும் ஏற்றது. 1140 அளவில் தக்கிணதேச ஆட்சியாளனான பராக்கிரமபாகு அப்பிரதேசத்தின் பொருளியல் வளங்களை விருத்திசெய்வதன் தேவையை உணர்ந்து பல திட்டங்களை நிறைவேற்றி வைத்தான். 'மழை நீரில் ஒரு சிறு துளியேனும் மனிதத் தேவைக்குப் பயன்படுமுன் கடலில் கலத்தல் சாலாது' என இக்காலத்திலேயே பராக்கிரமபாகு கூறியதாகச் சூளவம்சம் குறிப்பிட்டுள்ளது. தக்கிணதேச நிலவியல்புகளை அறிந்து அதன் தேவைகளைக் கவனித்து அவற்றுக்கு ஏற்புடைய திட்டங்களை வகுத்தான். தக்கிணதேச ஆட்சியாளனாக பராக்கிரமபாகு விளங்கிய காலத்து (1140 - 1153) அவன் நிறுவிய பாசனங்கள் பற்றி முதலில் நோக்குவது பொருத்தமாகும்.

முதலில், தெதுறுஓயாவை **(வஜ்ஜிர நதி)** ஆதாரமாகக்கொண்டு அவன் நிறுவிய மூன்று திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் ஒன்று **கொட்டபத்த அணைக்கட்டையும்** கால்வாயையும் கொண்டு அமைக்கப்பெற்றது. **செங்கல்ஓயா** எனப்படுவதே இக்கால்வாயாக இருக்கலாம் என்பர். இப்போதைய **எபவலப்பிட்டியிலுள்ள** அணைக்கட்டிலிருந்து நிடி-பண்டி-அள என்ற கால்வாய் மூலம் மாகல்லவாவி என்பதற்கு நீரைக்கொடுக்க அமைக்கப்பட்டது இரண்டாவது திட்டமாகும். மூன்றாவது திட்டத்துக்கு என அமைக்கப்பட்டது **தெமோதரவிலுள்ள அணைக்கட்டு ஆகும்.** தலகல்லவாவி என்ற குளத்துக்கே இவ்வணைக்கட்டில் இருந்து சென்ற கால்வாய் நீரைக் கொடுத்தது. இத்திட்டங்கள் நிறைவேறியபின் பராக்கிரமபுரம் என்ற தக்கிணதேச இராசதானியில் உள்ள பண்டவாவி என்ற பழைய குளத்தை ஆயிரம் ஏக்கருக்குமதிகமான பரப்பை உடையதாக விசாலித்து, பராக்கிரம சமுத்திரம் என்ற பெயரைச் சூட்டினான். இதுவே பிற்காலத்தில் **'பாண சமுத்திர'மென** வழங்கலாயிற்று. இவற்றைத் தவிர மேலும் 57 குளங்களை அவன் புதுப்பித்ததாகச் சூளவம்சம் கூறுகின்றது. இவற்றில் ஒரு சிலவற்றை ஆராய்ச்சியாளர் இனங்கண்டுள்ளனர். இறுதியாக, மனித சஞ்சாரத்துக்கும், பயிர்ச்செய்கைக்கும் உதவாதபடி சகதிகளையும், சதுப்பு நிலங்களையும் கொண்டிருந்த **பஸ்துன்கோறளையை நீர் வற்றும்படி செய்து** பயிர்ச்செய்கைக்கு அப்பிரதேசத்தை உகந்ததாக்கினான். இதனால் தக்கிண தேசத்தில் பயிர்ச்செய்கையில் இருந்த பிரதேசங்கள் அதிகமாயின.

1153ல் இலங்கை முழுவதற்கும் அரசனான பராக்கிரமபாகு, தனது நீண்ட கால ஆட்சியின்போது, ஏராளமான பாசனங்களை நிறுவுவதில் ஈடுபட்டான். சூளவம்சத்தில் தரப்பட்டுள்ள இவனது பாசன வேலைகளின் நிரல், மிக நீளமானதும், எமது வியப்பைத் தூண்டுவதுமாகும் (அத். 79) 163 பெருங்குளங் களும், 2376 சிறு குளங்களும் இவனால் புதிதாகக் கட்டப்பெற்றன அல்லது திருத்தப்பெற்றன எனச் சூளவம்சம் கூறியுள்ளது. 'காரகங்கையை குன்றுகளினிடையே ஒரு பெரிய அணையால் மறித்துக்கட்டி, ஆகாசகங்கை என்ற பிரம்மாண்டமான கால்வாய்மூலம் பெருவெள்ளமாகப் பாயும் அதன் நீரைக்கொண்டு, தொடர்ச்சியாக நீர்நிறைக்கப்பட்ட பராக்கிரம சமுத்திரம் எனப் பெயர்கொண்ட பொய்கைகளின் வேந்தை ஆட்சியாளன் நிறுவினான்.' (சூள. அத். 79 செய் 24 - 26). முன்னரே நிறுவப்பட்டிருந்த தோப்பவாவி, தம்புத்துலுவாவி என்ற இரு குளங்களையும் உள்ளடக்கிப் பொலன்னறுவையில் இப்போது அமைக்கப்பட்ட இப்பெரும் நீர்த்தேக்கமானது, பராக்கிரமபாகுவின் ஒப்பற்ற சாதனையாகும். இதற்கு நீர் வசதியை அளித்தற்கென வெட்டப்பெற்ற ஆகாச கங்கை என்ற கால்வாய் அம்பன் கங்கையில் (பின்னர் காரகங்கை எனப்பட்டது) **அங்கமெடில்ல அணையில** தொடங்கியது. கிரித்தளையைப் பராக்கிரம சமுத்திரத்துடன் தொடுப்பதற்கு இவன் நிறுவிய கால்வாய்மூலம், முன்னரே அம்பன் கங்கையை ஆதாரமாகக் கொண்டு இயங்கிய நீர்ப்பாசனத் தொடருடன் **(மின்னேரி - கவுடுலு - கிரத்தளை - கந்தளாய்)** இதை இணைக்க முடிந்தது. இக்குளம் மூலம், 18,000 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாய்ச்ச முடியும்.

பராக்கிரம சமுத்திரத்தைச் சுற்றியமைக்கப்பட்ட கட்டு சுமார் 40 அடி உயரத்தையும், 8½ மைல் நீளத்தையும் கொண்டதாகும். **பராக்கிரம தளாக(ம்), பராக்கிரம சாகர(ம்)** என்ற வேறிரு குளங்களும் பராக்கிரமபாகுவின் பெயரைத் தாங்கிய பெருங்குளங்களாகும். **மஹிந்த தளாக(ம்), ஏகாக வாபி** என்பனவும் இவனால் புதிதாக நிறுவப்பெற்ற மற்றிரு குளங்களாகும்.

பராக்கிரமபாகுவால் புதுப்பிக்கப்பெற்ற, விசாலிக்கப்பட்ட குளங்களும், கால்வாய்களுமே பெருந்தொகையினவாக உள்ளன. இவற்றுள் அனுராதபுர காலத்துப் பெருங்குளங்கள் பல குறிக்கப்பெற்றுள்ளன. மின்னேரி, கவுடுலு, மகாதாரகல்ல, காலவாவி, கிரித்தளை, பதவியா, நாச்சதூவ, மானாமடு முதலான முப்பது பெருங்குளங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. பராக்கிரமபாகு நிறுவிய முக்கிய கால்வாய்களில் ஒன்று அசிரவதீ (காலிங்க-யோத-அள) என்பதாகும். மகாவலிகங்கையிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லுமாறு அது வெட்டப்பட்டது. இக்கால்வாய் தொடங்கிய அதேயிடத்தில் தொடங்கி, கிழக்குப் புறமாகச் செல்லும்படி வெட்டப்பட்ட மற்றொரு கால்வாயான கோமதீ கால்வாய் இப்போது பாழெய்திய நிலையில் உள்ளது. பழைய கால்வாய்கள் பலவற்றையும் பராக்கிரமபாகு புதுக்கினான். தாதுசேனனது ஜயகங்கை இவ்வாறு புதுப்பிக்கப் பெற்றவற்றுள் ஒன்றாகும்.

பராக்கிரமபாகு இயற்றிய இத்துணை மகத்தான பாசனப் பணிகளால், அவன் காலத்தில் பாசன வேலைகள் முன்னெப்போதும் இல்லாத புகழ்நிலையை எய்தியிருக்கும் எனத் துணிந்து கூறலாம். பராக்கிரமபாகுவின் சலியாத உழைப்பாலும், குன்றாத ஆர்வத்தாலும் தக்கிணதேசத்திலும் இராஜரட்டையிலும் நன்முறையில் இயங்கிய பாசனத்திட்டங்கள், நாட்டின் பொருளியல் நிலையை எவ்வளவுக்கு மேம்படுத்தியிருக்கும் என நாம் உணரலாம். பொலன்னறுவைக் காலத்தில், இவனுடைய ஆட்சியுடன் இச்சுபீட்சநிலை ஏறத்தாழ முற்றுப் பெறுகின்ற தெனலாம். இவன் மறைந்த ஓராண்டுக்குள் ஆட்சியைப்பெற்ற நிஸங்கமல்லன் (1187 - 1196) தனது பொறிப்புக்களில் நிஸங்க சமுத்திரம், பாண்டிவிஜயக்குளம், பண்டவாபி போன்ற குளங்களைத் தானே நிறுவியதாகக் கூறியபோதும், அவனது கூற்றுக்களை மிகைக் கூற்றுக்களாகவே அறிஞர்கள் கொள்கின்றனர். முன்னர் நிறுவப்பட்டிருந்த குளங்களில் சில திருத்தங்களைச் செய்தபின், அவற்றைத் தனது பெயரால் அழைத்துவிடும் இயல்பு அவனிடம் உண்டு என்பர். நிஸங்க மல்லன் நீர்ப்பாசனத்துறையில் புதிய சாதனையாக எதையும் நிகழ்த்தாவிடினும், அத்துறையின் வளர்ச்சியில் ஓரளவு அக்கறை கொண்டிருந்தான் எனலாம்.

நிஸங்கமல்லனை அடுத்து இலங்கையில் ஏற்பட்ட அரசியற் குழப்பங்களின் விளைவுகளை பொலன்னறுவைக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் நாட்டின் பொருளியல்நிலை மற்றும் அரசியல் ஸ்திரமற்ற நிலையூடாக பாதிக்கப்பட்டிருந்த வாற்றைக் கண்டு கொள்ளமுடிந்தது. பொருளியல் வளர்ச்சியில அக்கறை காட்டுதற்கு வேண்டிய அமைதியையோ அவகாசத்தையோ எந்த ஒரு மன்னனும் பெற்றிருக்கவில்லை. **உண்மையில் அரசர்கள் வெறும் கைப்பாவைகளாக**

பிரதானிகள் என்ற சூத்திரதாரிகளால் முடுக்கப்பட்டனரேயன்றி, தம் எண்ணப்படி குடிகளின் நலனுக்கான பொருளியல் நடவடிக்கையேதும் எடுக்கும் நிலையில் அவர்கள் இருந்திலர். இவ்வாறான ஆட்சியாளரால் புறக்கணிக்கப்பட்டுப் பாழெய்தியிருந்த பாசனங்கள், கலிங்கமாகனது படையெடுப்பின்போது ஏற்பட்ட போர்களாலும் அவனது ஆட்சியின்போதும் முற்றாகச் செயலற்றிருக்கும் எனலாம். பண்டைச் சிங்கள மக்களினதும், மன்னர்களினதும் பெருமையின் சின்னங்களான நீர்ப்பாசனங்கள் அண்மைக் காலம்வரை கவனிப்பாரற்ற நிலையில், காடுகளாற் சூழப்பெற்று மறைந்தன.

சமூக நிலைகள்

சாதி முறை: பொலன்னறுவைக் காலச் சமுதாயத்தில் குலீனர் வகித்த முக்கியத்துவத்தைப் பற்றி முன்னரே கண்டுள்ளோம். இவர்களே, அரச குடும்பத்தினர்க்கும், பிராமணர்க்கும், பௌத்த சங்கத்தினர்க்கும் அடுத்த (சமுதாயத்) தளத்திலிருந்த உயர் வகுப்பினராவர். இவ்வகுப்பினர்க்கு, அவர்கள் அரசாங்கத்துக்கு ஆற்றும் சேவைக்கென வழங்கப்பட்ட நிலங்களின் வருவாய் களைப் பெறும் உரிமை உண்டு. இவ்வாறு வழங்கப்படும் நிலங்கள், **'பமுணு' அல்லது 'கம்வர'** நிலங்கள் எனவும், **பரபுரு** (பரம்பரை) நிலங்களெனவும், **ஜீவித** அல்லது **திவெல** நிலங்கள் எனவும் வெவ்வேறு பிரிவுகளைக் கொண்டிருந்தன. மன்னனது சேவையிலுள்ள முக்கிய பதவிகளில் **குலீனர்** அல்லது **கொவி குலத்தவரே** பெரும்பாலும் நியமிக்கப்பட்டிருந்தனர். உலோகத் தொழிலில் ஈடுபட்ட ஆசாரிகள் (சிற்பாசாரிகள், ஆயுதங்களை வடித்தவர்கள்) மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டிருந்தனர். மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் **'கெவுளு'** சாதியினராகவும், மேளமடிப்போர் **'பெராவா'க்கள** எனவும் வழங்கப் பட்டனர். சாதியினரிடையே அவர்களின் கடமைகள் பற்றிய சச்சரவுகளும் இடையிடையே தோன்றியுள்ளன. கலப்பு மணங்கள் பெருங்குற்றமாகக் கருதப்பட்டன.

அடிமை முறையும் பொலன்னறுவைக் காலத்தில் பெருவழக்கிலிருந்தது. ஏறத்தாழ ஒவ்வொரு உயர்குடியினர்க்கும் ஒன்று அல்லது இரண்டு அடிமைகள் இருப்பர். பிரதானிகள் முதலானவர்கள் இன்னும் அதிகமான அடிமைகளையும் வைத்திருந்தனர். இத்தகைய அடிமைகள் விகாரைகள் போன்ற நிறுவனங் களுக்கும் இருந்தனர். அடிமைகளைப் பரம்பரையாகப் பெற்றிருக்காவிடினும் அவர்களை விலைக்கு வாங்கமுடிந்தது. தானசாலைகள், சத்திரங்கள், வைத்திய சாலைகள் **(ஆதுலர்சாலை)** என்பனவும் அக்காலத்தில் பெருந்தொகையாக நிறுவப்பட்டு, வறியோர், ஆதரவற்றோர், நோயாளிகள் முதலானோருடைய தேவைகள் அரசர்களால் கவனிக்கப்பட்டன. **இத்தகைய பணிகளை ஆற்றியவர் களுள்ளும், பராக்கிரமபாகுவும், நிஸங்கமல்லனும் தனியிடத்தைப் பெற வேண்டியவர்கள்.**

சமய விருத்திகள்

விஜயபாகுவுக்கு முன் சமயநிலை

பொலன்னறுவைக் காலத் தொடக்கத்தில், பௌத்த மதத்தின் நிலையானது சோழரின் படையெழுச்சிகளால் பெரிதும் தளர்ச்சியெய்தியிருந்தது. உண்மையில், அனுராதபுர கால இறுதி நூற்றாண்டில் ஆட்சிசெய்த சில மன்னர்களின் நிருவாகத்தில் காணப்பட்ட ஊழல்களால், பௌத்தம் நலிவடைந்திருந்தது எனல் வேண்டும். உறுதியான ஆட்சியைப் பெற்றிராதமன்னர்கள் பௌத்தத்துக்கு ஏற்பட்ட ஆபத்துக்களை வெல்லுதற்கு இயலாதவர்களாகக் காணப்பட்டனர். சங்கத்தினரின் ஒழுக்கத்திலும் சீர்கேடுகள் மலிந்து, அவர்களிற் பலர் உலகியற் சார்புடையவர்களாக விளங்கினர். சங்கத்தில் முன்னரே தோன்றியிருந்த ஒற்றுமையின்மை, சோழர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முன்னதாகவே பெரிதும் வலுப்பெற்றிருந்தது. சோழப் படையினரின் அழிவுக்காளான விகாரைகள் பல, முன்பே பாழெய்திய நிலையில் இருந்ததாகச் சூளவம்சம் தெரிவிக்கின்றது (சூள. அத். 79, செய் 100 தொடர்). **எனவே, சோழப்படைகள் 993இலும் பின்னரும் இலங்கையில் நடத்திய போர்களின்போது, முன்னரே ஏற்பட்டு வந்த ஒரு போக்கைத் துரிதமடைய வைத்தனர். அனுராதபுரத்தில் பல அழிவுகளைச் செய்த அப்படையினர், அங்குள்ள விகாரைகளைத் தாக்கி அவற்றைச் சூறையாடினா. 'குருதியை உறிஞ்சும் இயக்க' ரென, விகாரை களின் செல்வங்களை அவர்கள் தமதாக்கிக் கொண்டனர். போர்க் காலத்தில் போர்வீரர்க்கு எக்காலத்திலும் இயல்பாக ஏற்படும் காட்டுமிராண்டித் தனத்துடன் சோழப் படைவீரரும் நடந்திருத்தல் கூடும்.** ஆனால் பௌத்தம் அடைந்த தாழ்வுக்கு, சோழப் படையெடுப்புக்கு முன்னரே நிலவிய அரசியற் போக்கும் பெருமளவு காரணமாகவிருந்ததை நாம் உணர்தல் வேண்டும்.

சோழர் இலங்கையைக் கைப்பற்றிய பின் (993) சுமார் **எழுபத்தேழு** ஆண்டுகள் வரை நாட்டைப் பரிபாலித்தனர். தமது ஆட்சியின்போது, **சைவத்துக்கு** முதன்மையை அளித்தனர். **வைஷ்ணவ** மதத்தையும் ஓரளவுக்கு ஆதரித்தனர். பௌத்தத்துக்கு எதிரான நடவடிக்கைகளை அவர்கள் எடுத்தமைக்குச் சான்றுகள் இல்லை. திருகோணமலைக்கு அண்மையில் இருந்த **'வெல்கம்-வெஹர'** (மகாயானம்) என்பதை அவர்கள் ஆதரித்தமைக்குச் சான்று (கல்வெட்டு) உண்டு. அதைத் திருத்திக்கட்டி **'இராஜராஜப் பெரும்பள்ள**ி'யென அழைத்தனர். சோழரின் கொள்கை சமயப் பொறையாக இருந்ததெனக் கொள்வதற்கே சான்றுகள் உண்டு. இருப்பினும், சில இலக்கியவேடுகளைப் பின்பற்றி இக்காலத்தில் வரலாறு எழுதுவோர், **பௌத்தத்தின் வீழ்ச்சிக்குச் சோழரே காரணமாக இருந்தனரெனக கொள்கின்றனர்.** கே.கே. பிள்ளை கூறியுள்ளது போன்று, **'பொதுவாகக் கூறுமிடத்து, சிங்களரும் சோழருக்குமிடையேயிருந்த பரஸ்பர உறவைத் தீர்மானிக்கும் முழுமுதற் காரணியாகச் சமயப் பகைமை இருந்திலது.'** சோழர் இலங்கையில் பல சிவாலயங்களையும், பிற

இந்துக்கோவில்களையும் நிறுவினர். பொலன்னறுவையிலேயே ஏராளமான கோவில்கள் எழுந்தன. இவற்றுள் பல இன்றும் அழிவுகளாகக் காணப்படுகின்றன. **வானவன்மாதேவி ஈஸ்வரம்,** பொலன்னறுவையிலும், **இராஜராஜேஸ்வரம்** என்பது மாதோட்டத்திலும், **விஜயராஜ ஈஸ்வரம** எனப் பின்னர் அழைக்கப்பட்ட கோவில் கந்தளாயிலும் சோழர் காலத்தில் நிறுவப்பட்டிருந்தன. இவ்வாறு சோழராட்சியின்போது இலங்கையில் இந்துமதம் பெரிதும் வளர்ச்சியெய்தியதால், அதன் செல்வாக்கு பௌத்தத்திலும் ஏற்படலாயிற்று. **பிராமணர்களின** முக்கியத்துவமும் அதிகரித்திருந்தது. **கந்தளாயில் பிராமணர்களின் குடியிருப்பு** ஒன்று ஏற்பட்டிருந்தது. பிராமணர்களின் விதிகளுக்கு அமைந்த கிரியைகளும் பௌத்த வழிபாட்டு முறைகளிலும், அரச வாழ்விலும் இடம்பெறலாயின.

விஜயபாகுவின் சமயப் பணிகள்

1ம் விஜயபாகு 1070ல் இலங்கைக்கு அரசனானபோது, பௌத்தத்தின் நிலை மிகவும் கவலைக்குரியதாகவே இருந்தது. பழைய தலைநகரான அனுராதபுரத்தில் இருந்த முக்கிய விகாரைகள், சஞ்சாரமற்றுப் பாழெய்தியிருந்தன. தாகபங்கள், பிரிவேனாக்கள் முதலான சமயக் கட்டிடங்கள் பல அழிவுற்று அல்லது பெருஞ்சேதமுற்றிருந்தன. பௌத்தக் குருமார்கள் உருகுணைக்கும், வெளிநாடுகளுக்கும் சென்று வாழலாயினர். இருந்தவர்களும் 'உபசம்பத' என்ற குரு அபிஷேகத்தை நடத்துவதற்குரிய தகுதியுடையவர்களாக இருக்கவில்லை. குருமாரிடையே உலகியற் பற்றும் ஊழல்களுமே மிகுதியாகக் காணப்பட்டன. எல்லா வகைகளிலும், பண்டைய பெருமையையும் பொலிவையும் இழந்து காணப்பட்ட **பௌத்த 'சாஸன'வைப** (சமயம்) பழையநிலைக்குக் கொண்டு வரவேண்டும் ன்ற உறுதியுடன் விஜயபாகு செயலாற்றினான். புதிய குருமார்களைச் **'சங்கத்திற் சேர்க்கும்' உபசம்பதா** வைபவத்தை மீண்டும் நடத்தும்படி செய்ததே இவனுடைய முதற்பணியாகும். பர்மிய அரசனான அனோரத்தனுடன் விஜயபாகு கொண்டிருந்த நல்லுறவைப் பயன்படுத்தி,இச்சடங்கை நடத்தும் தகுதிவாய்ந்த குருமாரை அந்நாட்டிலிருந்து தருவித்தான். அறிவாற்றலிலும் சமய ஒழுக்கத்திலும் மேம்பட்ட **பர்மியக் குருமார்கள்** ஈழத்துக்கு வந்து உபசம்பதாச் சடங்கை நடாத்திப் பலரைப் சங்கத்திற் சேர்த்தனர். இலங்கையில் இருந்து திரிபிடகப் பிரதிகளை அனோரத்தன் பெற்றுப் பர்மிய அறிஞர் ஒருவரிடம் கொடுத்து, **தாட்கானிலிருந்து** பெறப்பட்ட சமய நூல்களுடன் ஒப்புநோக்கச் செய்தான். பர்மியக் குருமார்களின் வருகையுடன் இலங்கையில் **பௌத்த மறுமலர்ச்சியும், இலக்கியப் புத்துயிர்ப்பும் இடம் பெறலாயின.**

அனுராதபுர காலத்தில் சங்கத்தில் காணப்பட்ட பிளவுகள், குறிப்பாக **மகாவிகாரை, அபயகிரி, ஜெதவன என்ற முப்பெரும் விகாரைகளைச் சார்ந்த பிரிவுகள்,** விஜயபாகுவின் காலத்திலும் ஒன்றுபடாது தனித்தனி இயங்கலாயின. எனினும் அவற்றினிடையே நிலவிய பகைமை பெரிதும் தணிந்திருக்கும் என நம்பலாம். விஜயபாகு நிறுவிய சமயக் கட்டிடங்களுள், பொலன்னறுவையில **தந்ததாதுவுக்கென** அமைக்கப்பட்ட கோவில்

முக்கியமானது. தந்ததாதுவுக்கென விழா நடாத்த ஏற்பாடு செய்ததுடன், அனுராதபுரத்துக்கு வெளியே **மகாகமை, மஹியங்கணை, மண்டலகிரி** முதலான இடங்களில் பாழெய்திய பல சமய நிறுவனங்களைத் திருத்திக் கட்டுவித்தான். ஸ்ரீபாதவுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் வழிகளில் தங்கிச் செல்வதற்குச் சில **தானசாலைகளை** அமைத்து, அவர்களுக்கு உணவு அளித்தற்காக இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள **கிலீமலை** எனும் கிராமத்தை **மானியமாக** வழங்கினான். **புத்தகயாவிலுள்ள** போதிமரக்கோவிலுக்கு விலையுயர்ந்த காணிக்கைகளைச் செலுத்தத் தன் தூதுவர்களைப் பலமுறை விஜயபாகு அனுப்பிவைத்தான். விஜயபாகுவின் பணிகளால், **பௌத்தம் மீண்டும் நன்னிலை** பெற்றதுடன், பௌத்த சங்கமும் பெரும்செல்வாக்கைப் பெறமுடிந்தது.

மகாபராக்கிரமபாகுவின் காலம்

விஜயபாகுவின் ஆட்சிக்குப்பின் நிகழ்ந்த அரசுரிமைத் தகராறுகளும் உள்நாட்டுப்போர்களும், மற்றைய துறைகளைப் பாதித்ததைப் போலவே, சமயத் துறையையும் பாதித்து, விஜயபாகுவின் ஆட்சியின்போது பௌத்தம் எய்திய முன்னேற்றத்தைக் கெடுத்தது. விஜயபாகுவால் தனது யுவராஜனாக நியமிக்கப் பட்டிருந்த விக்கிரமபாகுவுக்கு எதிராக நடைபெற்ற சதியில் சங்கப் பிரமுகர்களும் கலந்திருந்தமையால், ஆட்சியுரிமையை நிலைநாட்டியபின் அவன் அவர்கள் மீது வஞ்சந்தீர்த்தான். சுமார் நாற்பது ஆண்டுகள் நீடித்த உள்நாட்டுப் போர்களின் பின், பராக்கிரமபாகு ஆட்சியைப் பெற்றபோது, விஜயபாகு ஆட்சியைப் பெற்ற போதிருந்த நிலையிலேயே ஏறத்தாழ பௌத்தம் இருந்தது. பராக்கிரமபாகுவுக்கு முன் நிகழ்ந்த உள்நாட்டுப் போர்களின்போது, பொருள்வேட்கை கொண்ட சுதேச இளவரசர்கள் விகாரைகளுக்கும் தாதுக்களுக்கும் வழங்கப்பெற்றிருந்த திரவியங்களை அபகரித்தனர். சங்கத்தின் பெயருக்கு மாசு தரக்கூடிய முறையில் கூடாவொழுக்கமுடைய பிக்குகள் மலிந்திருந்தனர்.

பௌத்த சாஸனத்தை மேன்மைபெற வைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு இலங்கை முழுவதன் ஆட்சியைப் பெற்ற மகாபராக்கிரமபாகு சமயத் துறையில் ஆற்றிய பணிகளால், பௌத்த சாஸனம் உயர்வு பெற்றதோடு, சங்கமும் புனிதமும் ஒற்றுமையும் எய்திற்று. எவ்வளவோ எதிர்ப்பினிடையேயும், மகாபராக்கிரமபாகு தனது உறுதியைத் தளரவிடாது, சங்கத்தின் தூய்மையையும் ஒற்றுமையையும் நிலைநாட்டினான். திம்புலாகலை மகா காசியப்பதேரர் தலைமையிற் கூடிய சமய மன்று பற்றி முன்னரே கூறியுள்ளோம் (பக்.285) சங்கத்திலுள்ள முப்பிரிவுகளையும் ஒன்றுபடுத்தியதன் மூலம் வட்டகாமணியின் கால முதல் சங்கத்தில் ஏற்பட்டிருந்த பிளவுகள் நீக்கப்பட்டன. இதனைப் பராக்கிரமபாகுவின் ஒரு பெருஞ்சாதனையாகக் கொள்வர். சங்கத்தின் தூய்மைக்கும், ஒற்றுமைக்கும் குந்தகம் விளைத்த ஏராளமான 'துஸ்ஸீல' பிக்குகள் அதினின்றும் வெளியேற்றப்பட்டனர். இதன்பின், விநய (ஒழுக்க) விதிகள் பற்றிய கருத்து முரண்பாடுகள் அகற்றப்பட்டன. இதன் முடிவிலேயே, பொலன்னறு(வ) - கதிகாவத என்ற ஒழுக்க விதிகள் கல் விகாரையிற்

பொறிக்கப்பட்டன. திருநூல்களைக் குருமார்கள் பயிலுதல், குருமார்கள் வெளியே செல்லவேண்டிய இடங்களும் நேரமும், ஒரு சீடரைச் சங்கத்திற் சேர்க்கும்போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் இவ்விதிகளில் முக்கியமாக

தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இக்கல்விகாரைப் பொறிப்பின் மூலம், சங்கத்தினரிடையே ஒற்றுமையை ஏற்படுத்த ஆண்டு கி.பி. 1165 எனக் கணிக்கப்பட்டுள்ளது. இவன் நிறுவிய சமயக் கட்டிடங்கள் பற்றியும் இங்கு விரிவாகக் கூறவேண்டியதில்லை. பொலன்னறுவையில் இவனால் நிறுவப்பட்ட சமயக் கட்டிடங்களுள் கிரிவிகாரை, இலங்காதிலக விகாரை, தமிழதூபம், கல் விகாரை, திவங்க உருவீடு போன்றவை முக்கியமானவை.

பொலன்னறுவை சோழரால் தலைநகராக்கப்பட்டதிலிருந்து மகானது ஆட்சியில் அமர்ந்தது வரையுள்ள சுமார் இரண்டேகால் நூற்றாண்டுக் காலத்தையே (1017 - 1235), 'பொலன்னறுவைக் காலம்' என்ற பெயரால் நாம் குறிக்கின்றோம். இக்காலப் பகுதியின் அரசியல் பண்பாட்டு வரலாற்றை இதுவரை பார்த்தோம். சோழராட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெற்றபின், விஜயபாகு, மகாபராக்கிரமபாகு, நிஸங்க மல்லன் முதலானோரின் ஆட்சிக் காலங்களில் நாடு அரசியற் சிறப்பையும், பொருளியல், சமயம், கட்டிடம் முதலான துறைகளிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகளையீட்டியதால், அதற்கு மகத்தான புகழ் கிட்டியது. ஆனால் பொலன்னறுவைக்கால அரசியற் போக்கின் ஒரு தன்மை இவ்வெற்றிகளை நிலைக்காவண்ணம் செய்தது. ஒவ்வொரு முக்கிய அரசனும் நீண்டகால உள்நாட்டுப் போருக்கு அல்லது விடுதலைப் போருக்குப் பின்னரே அரசைப்பெற்று, புனருத்தாரண வேலைகளிலும் ஆக்கப் பணிகளிலும் ஈடுபடலானான். ஆனால், அம்மன்னன் மறைந்ததும், அவனுடைய சாதனைகளை வீணடிக்கும் வகையில் உடனே அரசியற் சச்சரவுகளும், போட்டிகளும், உள்நாட்டுப் போர்களும் தொடர்ந்தமையினால் மீண்டும் அரசைப் பெறுகின்ற முக்கிய மன்னன், எவ்வளவோ புனருத்தாரண வேலைகளைச் செய்யவேண்டி இருக்கும். அரசியலில் இவ்வாறு உறுதியின்மையும், குழப்பங்களும், உள்நாட்டுப் போர்களும் அடிக்கடி இடம்பெற்ற தால், பொருளியல் சமயம் முதலான துறைகள் பெரிதும் பாதிக்கப்பட்டதைக் காணலாம். கலிங்க மாகனது படையெடுப்பினைத் தொடர்ந்து இந்நிலை ஏற்பட்டமையைக் காண்கின்றோம்.

இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியும் தென்மேற்கு, வடக்கு, கிழக்கு நோக்கிய அரசியல் பண்பாட்டுப் புலப்பெயர்ச்சியும்

இராசரட்டை நாகரிகத்தின் வரலாறானது நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பத்துடன் வளர்த்தெடுக்கப்பட்ட பயிர்ச்செய்கைப் பொருளாதார முறைமையுடன் இணைந்து காணப்பட்ட வாழ்வுமுறையைப் பற்றியதாகும். அநுராதபுரம், பொலனறுவை ஆகிய அரசியல் பண்பாட்டு மையங்களின் முகாமைத்துவத்தின் தொழிற்பாட்டில் இந்நீர்ப்பாசனவியல் தொழில்நுட்ப முறையானது வளர்த்தெடுக்கப்பட்டது. ஆர்னல்ட் ரொயின்பீ (Arnold Toynbee), பேராசிரியர் ஜோசப் நீடம் (Prof Joseph Needham) ஆகியோர்களை ஒருங்கே ஈர்த்தெடுத்த வகையில் இலங்கையில் நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பமுறை வளர்ச்சிபெற்றிருந்தது என்றால் அது மிகையாகாது. உலக வரலாற்றிலே சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது நிலையில் இலங்கையில் வளர்ச்சி பெற்றிருந்த நீர்ப்பாசனப் பொறிமுறை நுட்பங்கள் அமைந்தன எனப் பேராசிரியர் ஜோசப் நீடம் தனது நூல்களிலே எடுத்துக்காட்டியுள்ளார். அந்த வகையில் தென்னாசியாவில் மிகப்பெரிய அளவிலான நீர்ப்பாசனப் பொறிமுறை நுட்பங்களுடன் இராசரட்டையில் அதன் வலைப்பின்னல் அமைக்கப்பட்டிருந்த தன்மையை பிரித்தானியத் தொல்லியலாளரும், இலங்கை வரலாற்றாசிரியர்களும் நன்கு எடுத்துக்காட்டியுள்ளனர். அவ்வகையான நீர்ப்பாசனவியல் வலைப்பின்னலின் அதிஉச்சமான வளர்ச்சி பொலனறுவைக் காலப்பகுதி இலங்கையிலேயே அமைந்து கொண்டிருந்தது என்றால் அதில் வியப்பேதும் இருக்கமுடியாது. தென்னிந்தியாவில் சோழப் பேரரசுகாலத்தில் அமைக்கப்பட்ட மிகப்பெரிய ஏரியாகிய வீராணம் ஏரி மனித உழைப்பின் திறனை, தொழில்நுட்பத்தை இற்றைவரைக்கும் பறைசாற்றி நிற்கின்றது. இதேபோன்றே இலங்கையிலும் சோழர்களுடைய மேலாதிக்கத்தினைத் தொடர்ந்து வளர்ச்சிபெற்றுச் சென்ற நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பத்தின் விளைவாக உருவான பராக்கிரம சமுத்திரம் இலங்கையின் தொழில்நுட்பத்திறனை இற்றைவரைக்கும் உலகிற்குப் பறைசாற்றிய வண்ணம் இருப்பதனைக் காணலாம். இந்தளவிற்கும் அடிப்படைக் காரணமாக இருந்தது இலங்கை மக்களின் நீர்ப்பாசனவியலைத் தழுவியெழுந்த பயிர்ச்செய்கையைக் கொழுகொம்பாகக் கொண்ட ஜீவனோபாய வாழ்வு முறையாகும். கி.மு. 800ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த வாழ்வுமுறை முதலில் அநுராதபுரத்தின் தலைமையின் கீழும், பின்னர் பொலனறுவையரசின் நிலமானியக் கட்டமைப்பின் கீழும் உன்னத நிலையை எய்தியவகையல் வளர்ச்சியடைந்து சென்று, பின்னர்

கி.பி. 1215க்கும் 1236க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மாகனின் கொடுங்கோல் ஆட்சியுடன் வீழ்ச்சியடைந்து மறைந்தொழிந்தது. 21 வருடகால மாகனின் கொடுங்கோலாட்சியின் விளைவாக இராசரட்டைப்பிரதேசமானது மக்களால் கைவிடப்பட்டு, காடடர்ந்த பூமியாக மாறிற்று எனச் சூளவம்சம் குறிப்பிடுகின்றது.

உலகில் பெருநதிப் பள்ளத்தாக்குகளை அண்டியே புராதன நாகரிக வாழ்வு பரிணமித்தமையை நாம் காண்கின்றோம். இவ்வாறு நதிப்பள்ளத்தாக்குகளை மருவிய வகையில் நாகரிக வாழ்க்கைமுறை உதயமானதற்கு அடிப்படைக் காரணியாக விளங்கியது மிகையுற்பத்தியை இலகுவாகக் கொடுக்கக்கூடிய வண்டல் மண்வளம் பரந்து காணப்பட்டமையே ஆகும். நைல்நதிப் பள்ளத்தாக்கின் மருங்கில் இன்று காணப்படும் பரந்த சகாராப் பாலைவனமானது நாகரிக காலத்தில் (கி.மு. 3000) வளம் கொழித்த பசும் வயல்களாகக் காணப்பட்டிருந்தன என்பது தொல்லியல் அகழ்வாய்வுகளினூடாகக் கண்டு கொள்ளப்பட்ட உண்மையாகும். யூப்பிரட்டீஸ் - ரைகிறிஸ் நதிகளுக்கிடைப்பட்ட பரந்த வளமான வண்டல்மண் பரப்பிலே உருவான மேலதிக உற்பத்தியின் (Surplus Production) விளைவாக 20க்கும் மேற்பட்ட நகரங்கள் உருவாக்கிக் கட்டப்பட்டன. (Urbanization) தென்னாசியப் பரப்பில் இந்துநதிப் பள்ளத்தில்கூட 10க்கும் மேற்பட்ட நகரங்களை அகழ்ந்து வெளிப்படுத்தியுள்ளனர் தொல்லியலாளர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் வரண்ட வலயத்தினுள் அமைந்து காணப்படும் இராசரட்டைப் பிரதேசமே இத்தகைய நீர்ப்பாசனவியல் தொழில்நுட்ப முறையுடன் கூடிய பயிர்ச்செய்கை வாழ்வுமுறையைத் தோற்றுவித்திருந்தது. மகாவலிகங்கை, மல்வத்துஓயா, வளவகங்கை, கிரிண்டிஓயா ஆகிய நதிப் படுக்கைகளை மையமாகக்கொண்டே இங்கு நீர்ப்பாசன நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டிருந்தன. இப்பிராந்தியத்தில் ஒரு பருவம் வரட்சியாகவும், ஒரு பருவம் மழைக்காலமாகவும் விளங்கிய தன்மையின் அடிப்படையில், கிராமியச் சிறுகுளங்களாக இருந்த சிறுநீர்த்தேக்கங்கள் காலப்போக்கில் பெருங்குளங்களாக மாறிப் பின்னர் பெருநீர்த்தேக்கங்களாகவே உருமாறிக் கொள்வதனையும் கண்டுகொள்ளமுடிந்தது. இலங்கையைப் பொறுத்தவரையில் அநுராதபுரம், பொலனறுவை என்பன வரண்ட வலயத்தினுள் அமைந்து காணப்பட்டதன் காரணமாகவே இப்பிரதான பண்பாட்டு நகரங்களில் பாரிய அளவிலான கட்டிடக்கலை மரபுகளும், பண்பாட்டு மரபுகளும் ஈட்டப்பட்ட மேலதிக உற்பத்தியை அடித்தளமாகக் கொண்டு மேலோங்கிய நிலையைப் பெற்றது எனலாம். விவசாயப் பொருளாதார நடவடிக்கைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக விளைச்சலின் ஒரு பாகம் நகர நிர்மாணம், நீர்ப்பாசன நிறுவனங்களின் பராமரிப்பு, கலையாக்கங்கள், விழாக்கள் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டது. இப்பின்னணியிலேயே இராசரட்டை நாகரிக வாழ்வு பரிணமித்திருந்தது. இத்தகைய மேலதிக உற்பத்தியானது (உபரி உற்பத்தியானது) எப்பொழுது முறிவடை கின்றதோ அன்றிலிருந்து நாகரிக வாழ்வில் தளர்ச்சி ஏற்பட்டு, வீழ்ச்சியடைவதைக் காணலாம். இயற்கையிலுள்ள வளங்கள், உறுப்புக்கள் என்பன மனிதனுடைய

தொழில்நுட்ப ஆற்றலின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்பட்டு, மனித வாழ்விற்கு பயன்படுத்தப்படும்போதே நாகரிகம் தோற்றம் பெறுகின்றது என ஆர்னல்ட் ரொயீன்பி குறிப்பிட்டிருந்தமையை (Challenge and Response Theory) இராசரட்டை நாகரிகத்துடன் தொடர்புபடுத்திப் பார்ப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

அநுராதபுர காலத்திலிருந்து அதிகரித்து வந்திருந்த குறைகள், கால்வாய்களின் எண்ணிக்கைக்கேற்ப நெல், மற்றும் தானிய உற்பத்திகளும் அதிகரித்து வந்தமையைக் கண்டுகொள்ளமுடிந்தது. நாட்டில் பஞ்சநிலைமை ஏற்படாமல் பாதுகாத்து வந்த இந்நீர்ப்பாசன நிறுவனங்கள் பொலனறுவைக் காலத்தில் மிகப் பாரிய அளவிலான தொழில்நுட்ப உதவியுடன் வளர்ச்சி பெற்றதோடு, நாட்டில் விவசாய - உணவு உற்பத்தியில் மிகப் பாரிய அளவிலான சாதனையை ஏற்படுத்துவதற்கேதுவாகவும் அமைந்தது எனலாம். இதனாலேயே பொலனறுவைக் காலமானது ஒரு குட்டிப் பேரரசாகத் திகழ்வதற்கேற்ற அரசியல், பொருளாதார, சமூகப் பலத்தினைப் பெற்றுக்கொண்டது எனலாம். பௌத்த இந்துப் பண்பாட்டினடியாகத் தோற்றம்பெற்ற எண்ணற்ற செம்பு விக்கிரஹங்களினதும், பஞ்சலோகத்திலான உலோகச் சிற்பங்களினதும் வெளிப்பாட்டினை இப் பொலனறுவைக் காலப்பகுதியிலேயே அதிகளவில் காண்கின்றோம். உலோக வார்ப்புத் தொழில்நுட்பமே இக்காலத்தில் மிகவும் உச்சமான நிலையில் வளர்ச்சி பெற்று விட்டிருந்தது. இதற்கான காரணம் நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பவியலின் அடியாக ஈட்டப்பட்ட மேலதிக உற்பத்தி விளைச்சலே எனில் அது மிகையான கூற்றாக அமையாது. இவ்வாறான நாகரீக வாழ்வு திடீரென வீழ்ச்சியடைந்து, மறைந்து போனமைக்குரிய காரணம் யாது? எவ்வாறு இந்த நாகரிகம் கட்டுப்படுத்தப்பட்டு, மனித செயற்பாடுகள், தொழில்நுட்ப நடைமுறைகள் விலக்கப்பட்டு, இயற்கையின் அறைகூவல் மேலோங்கக் காரணமாகியது? மல்வத்து ஓயா, மகாவலிகங்கை என்பன மனித தொழில்நுட்ப உத்திகளினால் கட்டுப்படுத்தப் பட்டு, நீர் தேக்கி, பசும் நீர்ப்பாசனம் செய்து, பேருற்பத்தியை ஈட்டிய இராசரட்டையின் சிறப்பினை தோப்பவாவி, பராக்கிரம சமுத்திரம், கந்தளாய்க்குளம், கட்டுக்கரைக்குளம் (இராட்சதக்குளம்) என்பன வெளிப்படுத்தியிருந்த நிலையை தலைகீழாக மாற்றிய சூழ்நிலை எவ்வாறு உருவாக்கப்பட்டது? ஏன் இராசரட்டைப் பிராந்தியம் கைவிடப்பட்டது? மக்களது வாழ்வினை அச்சுறுத்திய புதிய அபாயம் எவ்வாறு, ஏன், எப்போது தோற்றம் பெற்றது? அதாவது இராசரட்டையில் மனித முயற்சிகளைத் தளர்ச்சியடைய வைத்த காரணிகள் யாவை? மனித முயற்சிகள் தளர்ச்சியடைந்தமை காரணமாகவே மீண்டும் இயற்கை மக்களை வெற்றி கொண்டது எனலாம். இதுவே இராசரட்டை நாகரிகத்தின் சீர்குலைவிற்குரிய பிரதான காரணியாகும். ஏறத்தாழ 1500 வருடங்களுக்கு மேலாக வாழ்வுப் புலமாகக்கொண்டிருந்த இராசரட்டை மக்கள் கைவிட்டுச் சென்றார்கள். அவ்வாறு அவர்கள் தமது வாழ்வுப் புலத்தினைக் கைவிட்டுச் செல்கையில் தாம் வழிபட்ட பௌத்த, இந்துக்கோயில் விக்கிரஹங்களை நிலத்தின் கீழ் தலைகீழாக வைத்துப புதைத்துவிட்டே சென்றிருந்தார்கள் என்பதனை அண்மைக்கால அகழ்வாய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. பொலனறுவையில் அகழ்ந்து

கண்டுபிடிக்கப்பட்ட இந்து வெண்கல விக்கிரஹங்கள் யாவும் தலைகீழும், பீடம் மேலுமாக வைக்கப்பட்டுப் புதைக்கப்பட்ட நிலையைக் காட்டுகின்றன. எனவே மக்கள் அவ்விடப்பெயர்ச்சியை ஒரு தற்காலிக இடப்பெயர்ச்சியாகவே கருதியிருந்தனர் எனக் கொள்ளமுடிகிறது. ஆனால் அவ்விடப்பெயர்வினை நிலையான இடப்பெயர்வாக மாற்றிக்கொடுக்க உதவிய காரணிகள் யாவை? என ஆராயவேண்டும்.

கலிங்கமாகனுடைய ஆட்சியோடு பொலனறுவை வீழ்ச்சியடைந்தது. ஆனால் பொலனறுவையின் வீழ்ச்சிக்கு கலிங்கமாகனுடைய படையெடுப்பு மட்டும் காரணமாக இருந்திருக்கவில்லை என்பது தெளிவு. கலிங்கமாகனுடைய 21 வருடகால அடக்கு முறையாட்சியைப்பற்றி மிகவும் வன்மையாக சூளவம்ச ஆசிரியர் கண்டிக்கின்றார். ஒரு வேளை மாகன் பௌத்த சங்கத்தினரை நன்கு துன்புறுத்திய காரணத்தினால் சூளவம்ச ஆசிரியர் அவனை நன்கு வன்மையாகக் கண்டித்திருக்கக்கூடும். பொலனறுவையின் வீழ்ச்சியைப் பற்றியும் தம்பதெனியாவின் எழுச்சியைப் பற்றியும் ஆராய்ந்த வரலாற்றாசிரியரான லியனகமகே என்பவர் மாகனைப்பற்றி சூளவம்சம் கொண்டுள்ள கருத்துக்கள் தவறானவை என்றும், அவனைப் பற்றிய ஆய்வினை மறுமதிப்பீடு செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. மாகன் வீரசைவனாக இருந்துள்ளமையால் பௌத்த சங்கத்திற்கும் அவனுக்குமிடையே இயலபாகவே பகைமை உணர்வு இருந்திருக்கக்கூடும் என லியனகமகே கருதுகிறார். சூளவம்சம் குறிப்பிடுவது போல மாகன் கொடூர அரசியல்வாதியல்ல என்றும் லியனகமகே குறிப்பிடுகின்றார். எவ்வாறு மாகனுடைய ஆட்சி இருந்திருப்பினும், பொலனறுவையின் வீழ்ச்சியை முற்றுப்பெற வைத்த நிகழ்வாக அவனது படையெடுப்புக்கள் அமைந்திருந்தன என்றால் அதனை எவருமே மறுக்கமுடியாது. அவ்வாறாயின் பொலனறுவை இராசதானியின் சிதைவிற்கு வழிகோலியிருந்த காரணிகளையும் இங்கு ஆராய்வது பொருத்தமாகின்றது.

முதலாம் பராக்கிரமபாகுவின் அரசியல், பொருளாதார நடவடிக்கைகள் இலங்கையின் பெருமதிப்பினை உயர்த்தியதாக அமைந்திருந்தாலும், குறிப்பாக அவனால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் போர்களின் விளைவாக பொலனறுவையின் பொருளாதார வளம் பெருமளவிற்குப் பாதிப்புற்றிருந்தது. தென்னிந்தியாவில் அம்மன்னனால் மேற்கொள்ளப்பட்ட தொடர்போர்களினால் பெருந்தொகையான இலங்கை வீரர்கள் மடிந்தனர். பராக்கிரமபாகு தனக்கெற்பட்ட வெளிநாட்டுப் போர்ச் செலவுகளை ஈடுசெய்யும் வகையில் உள்நாட்டில் மக்கள் மீது விசேடமான பல வரிகளை விதித்தான். பராக்கிரமபாகுவின் காலத்தில் பொலனறுவை அரசு செல்வச்செழிப்புடன் விளங்கினாலும் வெளிநாட்டுப் போர்களினால் அச்செழிப்புநிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. விசேடமாக பர்மியப் போர் முறையில் கையாளப்பட்ட கடற்படைக் கட்டுமான நடவடிக்கைகளுக்காக ஏராளமான பொருள் விரயமானதாகக் கூறப்படுகிறது. ஒரு சிறிய (இலங்கைத்) தீவு அரசினால் கடற்படை நடவடிக்கைகள் கொண்டு வெளிநாடுகளில் போர்

முறைகளில் ஈடுபடுவது செல்வ விரயத்திற்கே வழிவகுக்கும் என்பதை பராக்கிரமபாகு காலப் பொருளியல்நிலை எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

முதலாம் பராக்கிரமபாகு தனது ஆட்சிக்காலத்தில் பின்பற்றிய நிர்வாக ஒருமுகப்படுத்தும் கொள்கையினால் இலங்கைத்தீவு முழுவதிலும் ஒருமைய ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டது என்பது உண்மையே. ஆனால் பராக்கிரமபாகுவின் பின் பொலனறுவையில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் அநேகமாகப் பலவீனர்களாகவே விளங்கியமையால் பராக்கிரமபாகு பின்பற்றியிருந்த நிர்வாக ஒருமுகப்படுத்தும் கொள்கை பெருமளவிற்குப் பலவீனமடைந்தே சென்றது எனலாம். நிசங்கமல்லன் காலத்தில் ஓரளவிற்கு இலங்கைத்தீவு முழுமைக்குமான நிர்வாக முறைமை அமுல் நடத்தப்பட்டிருப்பினும், ஏனையோரது ஆட்சிக்காலங்களில் நாடு பிளவுபட்டே காணப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. உள்நாட்டில் தோற்றம்பெறும் கலவரங்களையும், குழப்பங்களையும் அடக்கியாளும் திறமையுள்ள மன்னர் தோன்றாத காரணத்தினால் நாட்டில் சீர்குலைவு ஏற்பட வாய்ப்பாயிற்று. முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்திற்குப் பின்னர் மூன்று பிரதான குழப்பநிலைகள் ஏற்பட்டன. 1) சிங்களப் பிரதானிகளும் 2) தென்னிந்தியக் கட்சியினரும் 3) கலிங்க வம்சத்தினரும் தத்தம் ஆட்சி உரிமையை நிலைநாட்டுவதற்காக கலவரங்களிலும் குழப்பங்களிலும் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் தமக்குச் சார்பான அரசனையும், அரசாங்கத்தையும் அமைப்பாற்காக அடிக்கடி மோதல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். தத்தமக்கு சார்பான அரசனைப் பதவியில் அமர்த்துவதற்காக இக்குழுக்கள் அடிக்கடி மோதல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இக்குழுக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பொலனறுவையரசின் சிதைவிற்கும், ஸ்திரமற்ற நிலைக்கும் இட்டுச்சென்றது. பராக்கிரமபாகு, நிசங்கமல்லன் ஆகியோருக்குப் பின்னர் (1186 - 1236) உள்ள 50 ஆண்டு காலங்களாக இந்நிலையே பொலனறுவையரசில் நீடித்து வந்தது. இம்மூன்று குழுக்களும் பௌத்த சங்கத்தின் ஆதரவைப் பெற்றிருக்காத காரணத்தினால் மதவடிப்படையிலும் பல பிளவுகள் அங்கு தோற்றம் பெறுவதற்குக் காரணமாக விளங்கின.

வலிமையான மன்னர் ஆட்சிக்கு வருகை தரமுடியாதிருந்த காரணத்தினால் தளபதிகளே அடுத்த அரசியல் வாரிசுகளை நிர்ணயம் செய்யும் ஒரு போக்கு பொலனறுவையில் ஏற்பட்டிருந்தது. தளபதிகள் தத்தமது செல்வாக்கினை நன்கு மக்கள் மத்தியில் பிரயோகித்த வண்ணம் அரசாங்கத்தின் திறைசேரிப் பிரிவினைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்திருந்தனர். இதனால் படைவீரர் களுக்கும், அரச நிர்வாக உத்தியோகத்தர்களுக்குமான வேதனத்தை வழங்குவதில் பல இடர்கள் ஏற்பட்டிருந்தன. இவ்வாறு ஸ்திரமற்ற அரசியல்நிலை காரணமாகவும், பலவீனமான மன்னர்களுடைய நடவடிக்கைகள் காரணமாகவும் பொலனறுவையின் இறுதி ஐம்பது வருட காலங்கள் தலைநகரில் குழப்பங்களும், அரசியற் கொலைகளும் மலிந்து காணப்பட்டன.

'குலினர்கள்' என்றொரு வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தத்தமது கடமைகளைத் தொடர்ந்து ஆற்றுவதற்குரிய சாதகமானநிலை பொலனறுவையில்

காணப்படாததன் காரணத்தினால் எல்லா வகையான நீர்ப்பாசன நிறுவனங்களும் பராமரிப்பார் இன்றி செயலிழக்க ஆரம்பித்தது. கலிங்கு, துருசு, அணைக்கட்டு, சுருங்கை ஆகியனவற்றைக் கண்ணும் கருத்துமாகப் பராமரித்து வந்த இக்குலினர்களை வேதனம் கொடுத்து அவர்களது கடமைகளைச் சரிவர ஆற்றுவிக்கக்கூடிய சூழலை இறுதி ஐம்பது வருடகாலப் பொலனறுவை இழந்து விட்டது என்றே குறிப்பிடவேண்டும். இதனால் குளங்கள், கால்வாய்கள் என்பன நீர் விநியோகமின்றி, தாவரங்களினாலும், இயற்கைக் கழிவுப் பொருட்களினாலும் நிரம்பப்பெற்று செயலிழந்து நின்றன. இந்நிலையில் மலேரியா நோய் தீவிரமாக இராசரட்டையில் பரவி மக்களைப் பீடித்து வந்தது. இந்நிலையே இராசரட்டையை விட்டு மக்கள் இடம்பெயரக் காரணமாகியது எனலாம். ஆனால் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் மலேரியா நோய் மக்களின் இடப்பெயர்விற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்திருக்க முடியாது என்றே கொள்ளப்படுவதனைக் காணலாம். இக்குறிப்பிட்ட நோய் மிக நீண்ட காலமாக இராசரட்டையில் மக்களைப் பீடித்து வந்திருந்தாலும் சுகாதாரக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்தமையைக் காணமுடிந்தது. சுதேச வைத்திய மருத்துவ முறைகளும், வைத்தியர்களும் மக்களுக்காற்றிய சேவையிலிருந்து விடுபட்டமையாலுமே மலேரியா நோய் தனது தீவிரத்தை வெளிப்படுத்தி இருக்க வேண்டும் என வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். எனவே மக்கள் தமது வாழ்வு மையங்களை ஒரு நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் விரும்பியோ, விரும்பாமலோ, கைவிட்டு இடம்பெயர வேண்டிய ஒரு பேராபத்து நேர்ந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

இலங்கைக்குப் பௌத்தமதம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து ஏறத்தாழ 1200 வருடங்கட்கு மேலாக நாட்டின் பயன்தரு நிலங்கள், வளங்கள் என்பது பௌத்த சங்கத்தின் சொத்துக்களாக மாற்றமடைந்து வந்துள்ளன. விவசாய நீர்ப்பாசன ஈட்டத்தினை பெருமளவிற்கு உள்வாங்கும் (நுகரும்) ஒரு பிரதான நிறுவனமாக இப்பௌத்த சங்கம் தொடர்ந்தும் இயங்கி வந்துள்ளது. நிலமானியச் சமூக அமைப்பின் பிரதான ஓர் அங்கமாகக் காணப்பட்ட இப்பௌத்த சங்கத்தினது சமூகத்தன் மீதான ஆதிக்கம், கட்டுப்பாடுகள், அரசியல் செல்வாக்குகள், பொருளாதார அழுத்தங்கள் மதகுருமாரின் ஒழுக்கங்கள் - நடவடிக்கைகள் என்பன காரணமாக இராசரட்டை மக்களின் வாழ்வில் பிறிதொரு வாழ்க்கை மாற்றத்தினை ஏற்படுத்தத் தூண்டியிருந்தது என்றும் குறிப்பிடலாம். ஏனெனில் பொலனறுவை வீழ்ச்சியடைய முன்னரே பொலனறுவை இராசதானியில் கடும் பஞ்சம், வறுமை, களவு என்பன காணப்பட்டிருந்த தன்மையை நிசங்கமல்லனின் கல்வெட்டுக்கள் வாயிலாகக் கண்டுகொள்வதன் அடிப்படையில் பௌத்த சங்கமும் சொத்துடமையும் மக்களின் இவ்வாறான ஒரு வாழ்வியல் அவலத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கக்கூடும், இருந்திருக்க வேண்டும். ஆகையினாலேயே நீர்ப்பாசனத்துறைகள் வாயிலான உற்பத்தி முயற்றிகள் மக்களால் திடீரெனக் கைவிடப்படுவதனையும், நாட்டின் கடற்கரையோரப பிராந்தியங்களில் - துறைமுகங்களில் பெருகிவந்த வெளிநாட்டு வாணிபப்

பொருளாதார ஈட்டத்தில் - பௌத்த சங்கத்துடன் எவ்வித தொடர்புகளையும் கொண்டிருக்காத இப்பொருளியல் ஈட்டத்தில் மக்கள் படிப்படியாக நாட்டங்கொண்டு வந்தமையினையும் நிசங்கமல்லனது சாசனங்கள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது.

சிறப்பாக ஈரவலயத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு செய்கை பண்ணப்பட்ட தென்னைப் பயிர்ச்செய்கையானது கடற்கரையோர வாணிப நடவடிக்கைகளை ஒழுங்கமைக்க உதவியதோடு மட்டுமல்லாது, நீர்ப்பாசன விவசாயப் பொருளாதார ஈட்டத்தில் தன்னை இறுகப் பிணைத்திருந்த பௌத்தசங்கத்தின் மேலாதிக்கத்தில் இருந்து இராசரட்டை மக்கள் தன்மை விடுவித்துக்கொள்வதற்கேற்ற ஒரு சிறந்த தருணத்தையும் ஈந்ததாக இக்கால கட்டம் காணப்பட்டிருந்ததனால் வாணிபப் பொருளியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக ஒரு பகுதி மக்கள் தென்மேற்கு நோக்கியும், வடக்கு, வடகிழக்கு நோக்கியும் இடம்பெயர்ந்து சென்ற தன்மையைக் காண்கின்றோம். கடற்கரையோர வாணிபப் பெருக்கமும், தென்னைப் பயிர்ச்செய்கையின் செழிப்புமே இராசரட்டை மக்களைக் கவர்ந்து தன்பால் ஈர்த்திழுத்த புறவிசையாகத் தொழிற்பட்டிருந்த தன்மையைக் காணலாம். இராசரட்டை மக்களை அகவிசையாக நின்று தள்ளிவைத்த நிகழ்வாக அமைந்தது பௌத்த சங்கத்தினால் ஏற்பட்டிருந்த பெருஞ்சுமையும், கலிங்கமாகனது அமைதியற்ற கட்டாய மதமாற்றத்திற்குள் மக்களை உள்ளெடுத்த அரசியல் நடவடிக்கைகளுமே என்றால் அதனை ஏற்றுக்கொள்வதில் தவறேதும் இருக்க முடியாது. முன்னைய காலங்களில் நிகழ்ந்திருக்காதளவில் பொலனறுவைக் காலத்தில் இந்துமதம் அரச ஆதரவை (சோழர் காலத்தை விதிவிலக்காகக் கொண்டு) பெற்றிருந்தது என்றால் பௌத்த சாசனமும் சங்கமும் அவற்றிற்குரிய அடிப்படைக் கோட்பாடுகள் சிலவற்றிலிருந்து பிறழ்ந்து விட்டிருந்தன என்பதே அர்த்தமாகும். முன்னைய காலங்களிலும் பார்க்க பரந்த குழுவினரிடம் சிங்கள தனித்துவம் (இக்காலத்தில்) பரவியபோதும் குழுவின் அங்கத்தவர்கள் அனைவரும் பௌத்தர்களாக இருக்கவில்லை என்பதற்குச் சான்றுண்டு. சோழர் ஆட்சியைத் தொடர்ந்துவந்த காலத்திலும், சைவத்தின் செல்வாக்கு நீடித்திருந்தது. அடுத்தடுத்து ஆட்சிசெய்த முதலாம் விஜயபாகு, விக்கிரமபாகு, முதலாம் கஜபாகு ஆகியோரின் ஆதரவைச் சைவம் பெற்றிருந்தது. கஜபாகு வெளிநாட்டிலிருந்து 'முரண்பட்ட சமயவாதிகளைக் கொண்டுவந்தான்' எனவும், அவனது ஆட்சி. 'எதிர்சமயக் கருத்துக்களின் முட்புதர்களால் நிறைந்தது' எனவும் சூளவம்சம் கூறுகின்றது. (சூளவம்சம் 70:53-4) தமிழ் மரபு கஜபாகு சைவத்திற்கு மாறினான் எனத் தெரிவிக்கின்றது. விக்கிரமபாகுவும், கஜபாகுவும் சைவர்களென்றும் கூறப்படுகிறது. மாகனின் படையெடுப்பு பற்றி விபரிக்கும்போது சூளவம்சம் 'மேல் மக்களையெல்லாம்' அவன் தவறான நம்பிக்கைகளைத் தழுவ நிர்ப்பந்தித்தான் என்று கூறுகிறது. லியனகமகே, வீரசைவத்திற்கு மக்கள் மாற்றப்பட்டமைக்கு இது ஒரு சான்று எனத் தெரிவித்துள்ளார். 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புதுகுணலங்காரய என்ற நூலில் விதாகமமைத்திரேய சைவத்தையும், ஏனைய மதங்களையும் தாக்கும் வேகத்திலிருந்து சிங்களம் பேசும் மக்களிடையே இக்காலத்தில் இம்மதங்கள் செலுத்திய செல்வாக்கை அறியமுடியும்.

இந்தக் காலகட்டம், சிங்களவர் அல்லாதவர்கள் அரசராவதற்கு எதிரான சிங்கள உணர்வின் வளர்ச்சி பற்றி எதையும் தெரிவிக்கவில்லை. 12ஆம் நூற்றாண்டிற்கும் 18ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழரசர்களும், கலிங்க மன்னர்களும் இலங்கையில் பலமுறை ஆட்சியை ஸ்தாபித்தனர். 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சியைப்பெற்ற கலிங்க அரசகுலத்தைச் சேர்ந்த மன்னர்கள் தென்னிந்திய, சிங்கள மன்னர்களால் எதிர்க்கப்பட்டனர். பௌத்த சமய நம்பிக்கை, சத்திரிய அந்தஸ்து ஆகியவை அரசனாவதற்கு இன்றியமையாத தேவைகளாகும் என்ற கருத்தை கலிங்க அரசகுலத்தின் முதலாவது மன்னனாகிய நிசங்கமல்லன், கல்வெட்டுக்கள் மூலம் பிரச்சாரம் செய்தான். சாசனத்திற்குச் சொந்தமான இத்தீவை சோழ, கேரள மூலம் கொண்ட, பௌத்தர்கள் அல்லாதோர் ஆட்சி செய்வதற்கு தகுதியற்றோர் என்றும், கோவி சாதியைச் சேர்ந்த ஒருவர் அரச பதவியைடைய நினைப்பது மின்மினிப்பூச்சி சூரியனை வெற்றிகொள்ள நினைப்பதுபோல அபத்தமானது எனவும் இம்மன்னன் கூறினான். தீவின் அரசனாவதற்குரிய தகுதியை கரண அந்தஸ்துடனும் சமய இணைப்புடனும் தொடர்பான அளவு கோல்களே நிர்ணயிக்கின்றனவன்றி, சிங்களத் தனித்துவம் நிர்ணயிக்கவில்லை என்று நிசங்கமல்லன் வற்புறுத்திக் கூறியபோது அங்கு பௌத்த சங்கத்தாருடைய மரபு மீறப்படுவதை மக்கள் ஏற்றுள்ளனர் என்பது வெளிப்படையாகின்றது. அதாவது அதீத சொத்துடைய நிறுவனமான பௌத்த சங்கத்தினது மேலாண்மையை வெறுத்து மக்கள் பிறிதொரு மாற்றத்தினைக் கொண்ட, அரசியல், சமூக, பொருளாதார நிறுவனங்களைத் தழுவி தத்தமது வாழ்வினை முன்னெடுத்துச் செல்ல முயற்சித்தமையையே தென்மேற்கு - வடக்கு - வடகிழக்கு நோக்கிய மக்களிடப்பெயர்வுகள் சுட்டிக் காட்டுகின்றன எனலாம்.

பொலனறுவையரசின் வீழ்ச்சியை அடுத்து ஏற்பட்ட அரசியல் பிளவுகள் கொண்ட காலகட்டம் இலங்கையின் மக்கள் கூட்டமைவில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்குச் சான்று பகிர்கின்றது. இம்மாற்றங்கள் பற்றி வரன்முறை ஏடுகள் பல சான்றுகளை அளித்தபோதிலும், வரலாற்றாய்வாளர்களின் அக்கறைக்கு அதிகம் உட்படாத விற்றிபொட் (Vittipot) போன்ற நூல்களிலேயே இச்சம்பவங்கள் விவரமாகக் கூறப்பட்டுள்ளன. தென்னிந்தியாவைச் சேர்ந்த தமிழ், மலையாள, கன்னட, துளு, மொழிக்குழுக்கள் மாத்திரமன்றி, தென்கிழக்காசியாவிலிருந்து ஜாவகர் போன்ற குழுக்கள் வந்து குடியேறியமைக்கும் சான்றுகள் உண்டு. இக்காலத்து ஐதீகங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் இக்குடியேற்றங்கள் பரந்திருந்தமையைத் தெரிவிக்கின்றன. இலங்கையின் இரு பிரதான மொழிக்குழுக்கள் இத்தகைய வேறுபட்ட மொழிக்குழுக்களை நீண்டகாலச் செயற்பாட்டினூடாகவே உள்வாங்கி இருக்கக்கூடும். இக்காலத்தில் இங்கு தோன்றிய பல அரசியற் பிரிவுகளில் இரு இராச்சியங்களே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தன. ஈற்றில் மத்திய மலைப்பிரதேசத்தில் தனது இராசதானியை அமைக்கும் வரை, இவற்றுள் பிரதானமான அரசு அரசியல் அலைகளால உந்தப்பட்டு, தலைநகரத்தை அடிக்கடி இடம் மாற்றக் கொண்டிருந்தது. மற்றைய

முக்கிய அரசு யாழ்ப்பாண இராச்சியமாகும். இங்கு இடம்பெற்ற குடியேற்றங்கள் இப்பகுதி முதன்மையான தமிழ் பேசும் பிரதேசமாக மாறுவதற்கு உதவின

மாகனது படையெழுச்சியும் பொலன்னறுவையின் வீழ்ச்சியும்

பராக்கிரம பாண்டியன் இலங்கைப் பிரதானிகள் சிலரது உதவியுடன் சுமார் மூன்றாண்டுகள் வரையில் ஆட்சி நடாத்தியபோது, பொலன்னறுவையின் வீழ்ச்சிக்கு அடிகோலிய மிக முக்கிய நிகழ்ச்சி நடைபெற்றது. கலிங்கத்தைச் சேர்ந்த மாக(ன்) அல்லது காலிங்க விஜயபாகு என்பான் இலங்கைமீது படையெடுத்து வந்தான். 24,000 மல்ல வீரரைக் கொண்ட பெரும் படையுடன் அவன் இலங்கை வந்ததாகப் பூஜாவலீ என்ற காலவேடு (அத். 34) குறிப்பிட்டுள்ளது. மாகன் ஆட்சியைக் கைப்பற்றிய வரலாற்றையும், அவனுடைய நிருவாகத்தின் தன்மையையும் சூளவம்சம் சித்தரித்துள்ள முறையை நோக்கும்போது (அத். 80 செய். 54 - 79), மாகன் ஒரு கடுங்கோலனாகவே காட்சியளிக்கின்றான். 'தவறான மதக்கொள்கையைப் பின்பற்றியவன்', 'முறைகேடான அரசியல் நிருவாகத்தில் திளைப்பவன்', 'நன்மையென்ற காட்டினிடையே அழிவைச் செய்ய எழுந்த தீ', 'உண்மை மதமென்ற அல்லி மலர்களைக் கூம்பவைக்கும் பகலவன்', 'பகற்போதில் அலரும் தாமரை மலர்களை (அதாவது அமைதியை) வாட வைக்கும் சந்திரன்' போன்ற வர்ணனைகள் அவனைக் குறிக்கக் கையாளப் பட்டுள்ளன. அவன் நிகழ்த்தியதாகக் கூறப்படும் கொடுமைகள், அட்டூழியங்கள், அநீதிகள் யாவும் சூளவம்ச ஆசிரியரின் கண்டனத்தைப் பெற்றுள்ளன. உண்மையில் மாகனது படையெழுச்சிக்கு முன்னரே நடைபெற்ற பல அநீதியான செயல்களும் மாகனது காலத்தில் நடைபெற்றதாகச் சூளவம்சம் 2-ம் பாகத்தின் ஆசிரியர் தம கதாநாயகனாக 2-ம் பராக்கிரமபாகுவைச் சிறப்பிக்க எண்ணியதால், அவனது பகைவனான மாகனை இகழ்வதில் நிறைவு பெறுகின்றார். மேலும் சூளவம்சத்தின் 2-ம், 3-ம் பாகங்கள் வரலாற்றுக்கு இன்றியமையாத நம்பிக்கை வாய்ந்த ஆதாரமாகக் கொள்ளப்படுவதில்லை. நிகாய - சங்கிரஹ, சத்தர்ம ரதனாகர போன்ற பிற நூல்களில், இவனுடைய வரலாறும் செயல்களும் வேறு வகையாகச் சித்தரிக்கப்பட்டிருத்தலும் கவனித்திற்குரியது. மாகனது ஆட்சியின்போது நிகழ்ந்தனவாகக் கூறப்படும் அட்டூழியங்கள் அவனது வருகைக்கு முன்னதாக நிகழ்ந்தனவாகவே இந்நூல்கள் கூறுகின்றன.

பராக்கிரம பாண்டியனைக் கைப்பற்றி அவனைக் குருடாக்கியபின், நாட்டில் தோன்றிய எதிர்ப்பை மாகன் கடுமையாக அடக்கினான். அவனுடைய போர் வீரர்கள் அவனது அனுசரணையுடன் நிகழ்த்திய அட்டகாசங்கள் பற்றிச் சூளவம்சம் பல விபரங்களைக் கூறுகின்றது. மாகன் ஆட்சியைப் பெற்ற பின்னரும் பல அக்கிரமங்களை அவனது போர் வீரர் இழைத்ததாகவே கூறப்படுகின்றது. தனிப்பட்ட பலரின் உடைமைகள் பறிமுதலாக்கப்பட்டதாகவும், பலரைப் பௌத்தத்தினின்றும் மதமாற்ற முயற்சிகள் நடைபெற்றதாகவும், விகாரைகளிலுள்ள திரவியங்கள் முதலானவை அபகரிக்கப்பட்டதாகவும், நூல்களின் ஏட்டுச் சுவடிகள் பாழ்படுத்தப்பட்டதாகவும் விவரிக்கப்பட்டுள்ளன. கடுமையான தண்டனைகள்,

சித்திரவதைகள் போன்றவற்றால் குடிகள் வருத்தப்பெற்றனர். ஒரு 'பயங்கர ஆட்சி' நிலவியதாகக் கூறத்தக்க வகையில் மாகனது ஆட்சியமைந்தது. பரணவிதானவின் புதிய கொள்கைப்படி, கலிங்கம் என்பது ஸ்ரீவிஜய அல்லது மலேஷியாவில் இருப்பதாகக் கருதப்படுவதற்கமைய அவனுடன் இலங்கை வந்த படை வீரரும் மலாய்களே எனக்கொள்கின்றார். ஆயின், அவருடைய வாதம் அத்துணை நம்பகமானதாகவில்லை. சூளவம்சத்தில் 'பொய்யான மத நம்பிக்கையுடையவர்கள்' என்பதற்கு முன்னர் கைகர் முதலிய அறிஞர்கள் கொடுத்த விளக்கம் அவர்கள் இந்துக்கள் என்பதேயாகும். இதையேற்காத பரணவிதான, மலாயா, சுமாத்திரா ஆகிய நாடுகளில் அந்நேரத்தில் பின்பற்றப்பட்ட பௌத்தம், தூய்மைகெட்டுப் பலவகை ஊழல்களுடையதாக இருந்தமையினால் அவர்களைப் **'போலி மதத்தவர்கள்'** எனச் சூளவம்சம் குறிப்பிடுவது பொருந்தும் என்கின்றார். வழமையாக எழுதப்பட்டு வந்த வரலாற்றுப்படியும் கலிங்க மரபினர் பௌத்தர்களாகவே (எ-டு: நிஸங்கமல்லன்) இருந்து வந்தமையால், மாகன் அதே மரபில் வந்தவனாக இருப்பின் அவனை ஒரு விதிவிலக்காகவே கொள்ள வேண்டும். சமயத்துறையில் அடக்குமுறைகளைக் கையாண்டு, பலவந்தமாக மதமாற்ற முயற்சி நடைபெற்றமைக்கு மாகனது ஆட்சியின்போது நிகழ்ந்த முயற்சிகள் ஆதிகால இலங்கை வரலாற்றில் மிகவும் அருமையாகவே சந்திக்கக்கூடிய எடுத்துக்காட்டாகும்.

மாகன் முதலில் வெற்றியை ஈட்டினான் எனினும், நாடு முழுவதும் அவனுடைய ஆட்சியை ஏற்றதாகத் தெரியவில்லை. உண்மையில், இலங்கையின் வடபகுதியே (பழைய இராசரட்டை - இப்போது 'பிஹிடி' அல்லது பஹிட்ட ரட்டை) மாகனது ஆட்சியில் அமர்ந்திருந்தது. இவனது காலத்தில் இலங்கைக்கு (கோகர்ணவில் அதாவது திருகோணமலையில்) ஒரு படையுடன் வந்த சோடகங்க தேவன் என்பானும் ஒரு கலிங்கனாகவே இருந்ததால், மாகனுக்கு உதவி செய்யவே அவன் வந்திருத்தல் கூடும் என ஊகிக்கப்படுகின்றது. இதனிடையே சிங்களரின் எதிர்ப்பியக்கம் மிகவும் மெதுவாகவே மலைப்பகுதிகளில் வளர்ச்சி பெற்றுவந்தது. மாகன் இந்த எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக **வடபகுதியிலுள்ள புலத்தி நகரம், கொட்டசார, குருந்தி, மகாதீர்த்தம், மன்னார் முதலான பலவிடங்களில் அரண்களை நிறுவியிருந்தான**.

மாகனுடைய ஆட்சி முடிவுற்றதுடன், பொலன்னறுவை தலைநகராகக் கைக்கொள்ளப்படாது கைவிடப்பட்டது. தம்பதெனிய முதலான இடங்கள் இலங்கையின் தலைநகரங்களாகும் பெருமையைப் பெறலாயின. கலிங்கராட்சிக் காலம் சுமார் அரை நூற்றாண்டு காலத்தைக் கொண்டது (1187 - 1236). உண்மையில் எந்தக் கலிங்க மன்னனும் இந்த நாட்டுமக்களின் விசுவாசத்தைப் பெற்றதாகத் தெரியவில்லை. நிஸங்க மல்லனது கொள்கையுமே முழு வெற்றியை அளிக்கவில்லை. கலிங்கர்கள் அந்நியர்களாகவே இறுதிவரையும் கருதப்பட்டதால், சிங்களக் குடிகளின் நம்பிக்கையைப் பெற அவர்கள் தவறிவிட்டனர். இதனாற் பெரும்பாலான கலிங்க ஆட்சியாளர், குறிப்பாக நிஸங்க மல்லனுக்குப் பின்,

மிகக்குறைந்த ஆட்சிக்காலங்களை உடையவர்களாகவும், பலவீனர்களாகவும் தம் இலங்கை ஆதரவாளரின் தயவை நம்பியவர்களாகவும் விளங்கினர். கலிங்க ஆட்சியாளருக்கு எதிராக நடைபெற்ற கடும்போட்டியும், அதன் விளைவாக உண்டான அரசியற் சச்சரவுகளும், அந்நியரின் படையெடுப்புக்களும் நாட்டின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி வைத்தன. நாட்டு மக்களின் அமைதியான வாழ்க்கைமுறையும், சமய ஒழுங்குகளும் பல வழிகளில் பாதிக்கப்பெற்றிருந்தன. இவ்வகையான நிலையில் நாடு இருக்கும்போதே, கலிங்க மாகனது படையெடுப்பும் நடைபெற்றது. முன்னரே ஏற்பட்டிருந்த தேய்வையும், வீழ்ச்சியையும் அவனது படையினர் புரிந்த அட்டூழியங்களும், அவனுடைய பாலனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அநீதியான செயல்களும் பொலன்னறுவை அரசின் வீழ்ச்சியைக் கொணர்ந்தன.

பொலன்னறுவையரசின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்

மகாபராக்கிரமபாகுவின் ஆட்சியைத் தொடர்ந்து, நாட்டில் ஏற்பட்ட அரசியல் விருத்திகளைச் சுருக்கமாகக் கண்ட நாம், இனிப் பொலன்னறுவை அரசின் வீழ்ச்சிக்கு அடிகோலிய காரணிகளைத் தொகுத்துக் கவனிப்போம். பொலன்னறுவை அரசின் பெருமைக்கும் புகழுக்கும் மகாபராக்கிரமபாகு காரணமாகவிருந்தது போலவே, அதன் வீழ்ச்சியிலும் அவனுக்குப் பங்கு உண்டு. அவனுடைய அயல்நாட்டுப் போர்கள் நாட்டுக்கு அளித்த நன்மையிலும் தீமையே அதிகமானது. குறிப்பாக, தென்னிந்தியாவில் இவன் மேற்கொண்ட பாண்டி நாட்டுப்போர் பத்தாண்டுகள்வரை நீடித்ததால், இலங்கை எய்திய இழப்புக்களை மதிப்பிட முடியாது. மகாபராக்கிரமபாகுவுக்குப் பின் ஆட்சிசெய்த 2-ம் விஜயபாகு, நிஸங்கமல்லன் முதலானோரின் ஆட்சிக்காலப் பொறிப்புக்களாலும், பிற ஆதாரங்களாலும், பராக்கிரமபாகு இப்போர்களை நடத்துவதற்குக் கடுமையான வரிகளை விதித்தும் பிறவழிகளிலும் குடிகளை வருத்தியதை உணரமுடிகின்றது. மகா பராக்கிரமபாகுவின் பின்னோர் குடிகளின் வரிப்பளுவை இலகுவாக்க எடுத்த நடவடிக்கைகளை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். பராக்கிரமபாகுவின் காலத்தில் கடுமையான அடக்கு முறைகள் கையாளப்பட்டுப் பலர் சிறைகளிலும் தள்ளப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாயினர் (சூள. அத். 80 செய். 2, 3). புகழ் வேட்கையால் உந்தப்பெற்று அதைப் பெறுதற்குத் தனது குடிகளை வருத்தினான், எனவே பராக்கிரமபாகு கொடுமை நிறைந்தவனாக இல்லாவிடினும், அவன் மிகவும் கடுமையானவனாக இருந்திருக்கவேண்டும் எனக் கைகர் கருதுகின்றார் (சூள. மொழிப்பெயர்ப்பு II பக். 125 அடிக்குறிப்பு). பராக்கிரமபாகு நாட்டின் விருத்திக்கும் மேன்மைக்கும் உழைத்தான் என்பதற்கத் தடையில்லை, ஆயின் அவன் நடத்திய வெளிநாட்டுப் போர்கள், அந்தச் சுபீட்சத்தைக் காலப்போக்கில் மறையவைக்குந் தன்மையைப் பெற்றிருந்தன. அவற்றின் தாக்கம் உடனடியாகப் புலப்படாது, பின்னர் நிகழ்ந்த அரசியல் மாறுதல்களால் தெளிவாகப் புலப்படலாயிற்று.

நிருவாகத்துறையில் 1-ம் பராக்கிரமபாகு புகுத்திய மாறுதல் பற்றி அடுத்த அத்தியாயத்திற் படிப்போம். உருகுணை முதலான மாகாணங்கள் வகித்துவந்த

சுயாதீனத்தை முற்றாக நீக்கி, நேரடியாகத் தனது (அதாவது மத்திய அரசாங்கத்தின்) ஆட்சியில் அவற்றை வைத்தான். இம் மாற்றம் பராக்கிரமபாகு போன்ற வலிமை படைத்தவர்கள் மன்னர்களாக விளங்கும்போது வெற்றியைத் தந்தது. ஆனால், அம்மாற்றம், அவனைத் தொடர்ந்து ஆட்சியைப்பெற்ற பலவீனர் களின் காலத்தில் நிருவாகச் சீர்கேடுகள் அதிகரிக்கவும், திறமையின்மை வளரவும் ஏதுவாகவிருந்தது. பராக்கிரமபாகுவின் காலத்தில் நிறுவப்பெற்ற நீர்ப்பாசனங்களின் தொகையை நோக்கும்போது ஓர் உண்மை புலப்படும், இத்துணைப் பெருந்தொகையான பாசனத் திட்டங்களை நிறுவவும், பேணவும் மிகவும் திறமையான நிருவாக அமைப்பு இருந்திருத்தல் வேண்டும் என்பதே. ஆனால், பராக்கிரமபாகுவின் பின்னோர் காலத்தில இவ்வமைப்புக் குலைந்து செயலற்றிருந்தது. இதனால், பொருளியல்துறையில் முன்னர் ஏற்பட்ட வளர்ச்சிக்குப் பதில், தேய்வுநிலையே காணப்பட்டது. மேலும், இம் மன்னர்கள் தமது முடியைப் பாதுகாப்பதிலேயே கண்ணும் கருத்துமாக விருந்ததால், பாசனங்களைப் பழுது பார்க்கவோ, இதர பொருளியல் முயற்சிகளில் நாட்டம் கொள்ளவோ அவகாசமின்றி அவதிப்பட்டனர். கலிங்கக் குழுவினர்க்கும், சிங்க (அல்லது பாண்டிய)க் குழுவினர்க்கும் நிலவிய கடுமையான போட்டியும், இதன் விளைவாக உண்டான பூசல்களும் மத்திய அரசின் பலத்தைக் குன்றவைத்து அதன் பொறுப்பிலுள்ள நிருவாகத்தையும் சீர்குலையச் செய்தன. கலிங்கர்கள் அந்நியர்களாகவே இறுதிவரையும் இங்கு கருதப்பட்டமையம், அவாகளுடைய ஆட்சியில் மக்கள் அமைதிபெறுவதற்குத் தடையாயது. மேலும், படைத்தலைவர்கள் தாமே அரச நியாமகர்களாக இருக்கவெண்ணிக் கருமமாற்றியமையும், அந்நியப்படை வீரரை வருவித்து வந்தமையும் இவற்றின் விளைவாக அந்நியப் படையெடுப்புக்கள் நடைபெற்றமையும் பொலன்னறுவை அரசின் தேய்வுக்க வழிவகுத்தன. இவ்வகையான அரசியல், நிருவாகக் காரணிகள் மத்திய அரசின் செயல்திறனைப் பாதித்து, பொருளியல் சமூகத்துறைகளில் முன்னேற்றம் ஏற்படுவதையும் தடுத்து வைத்தன. இவை யாவும் பொலன்னறுவையின் வீழ்ச்சிக்கு அடிகோலிய காரணங்கள் என்பதில் ஐயமில்லை.

பொலன்னறுவை அரசின் மறைவை விளக்க முற்பட்ட சில அறிஞர்கள் வேறும் காரணங்களுக்கு முக்கியமளித்துள்ளனர். மலேரியாநோய் பரவியதன் விளைவாகவே, பொலன்னறுவையை மையமாகக் கொண்ட இராஜரட்டையை மக்கள் விடுத்து வேறு பகுதிகளுக்குச் சென்று வாழ்ந்ததாக அவர்கள் நம்பினர். ஆனால், முன்னர் பல நீர்ப்பாசனங்களைக் கொண்டிருந்த பகுதிகள் குடிசனமின்றிப் புறக்கணிக்கப்பட்ட பின்னரே, அப்பகுதிகளில் மலேரியா பரவியிருத்தல் கூடும் எனக் கருதவேண்டும். 16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிலான்சியஸ் என்பாருடைய தேசப்படத்தில் பதியப்பட்ட ஒரு குறிப்பைத் துணைகொண்டு கொட்றிங்டன் போன்ற அறிஞர்கள் இக்கருத்துக்கு முக்கியமளித்துள்ள போதும், இக்கருத்தை நிறுவப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

மாகனது படையெழுச்சியும் ஆட்சியும் முன்னரே நாடடைந்த திருந்த தேய்வு நிலையைத் துரிதப்படுத்தி, அழிவை உறுதிப்படுத்தின. உண்மையில் முன்னரே

குறிப்பிட்ட பல காரணிகளும், மாகனது படையெடுப்பின்போதும் பின்னரும் ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் ஒன்ற சேர்ந்தே பொலன்னறுவை அரசின் வீழ்ச்சியை ஏற்படுத்தின என்பதை நாம் உணர்தல் வேண்டும். மாகனது பெரும் படையைச் சேர்ந்த கூலிப்படையினர் தம் மனம் போனவாறு பல்வகை அட்டுழியங்களைச் செய்தமையாலும், சமய நிறுவன்களைப் பாழ்படுத்திய தாலும் பொலன்னறுவை அரசு நலிவெய்தலாயிற்று. அது மீட்சியே பெறாத வகையில் அழிவுற்றமைக்கு அவனது 'பயங்கர ஆட்சி'யின்போது இடம்பெற்ற ஒரு முக்கிய நடவடிக்கையைக் குறிப்பிடவர். நிருவாக அமைப்பிலும், பாசன அலுவல்களிலும், சமுதாயத்திலும் முக்கிய பங்குகொண்ட ஒரு வகுப்பினரையே ('குலீனர்' எனப்பட்டோர்) மாகனது வீரர்கள் கடுமையாகத் தண்டித்தனர். அக்காலச் சிங்கள சமூகத்தில் செல்வம் வடைத்தவர்களாக விளங்கியவர்கள் இவ்வகுப்பினராதலால், இவர்களைத் தண்டிப்பதில் பெரிதும் அக்கறை காட்டப்பட்டது. அவர்களைச் சிறைப்படுத்திச் சித்திரவதை செய்ததுமன்றி, அவர்களுடைய உடைமைகள் பறிமுதலாக்கப்பட்டன. (சூள. அத். 80 செய்.54, 76) இக்கொடுமைகளைத் தாங்காது, நற்பண்புடைய மக்கள் பலர் பல்வேறு மலைப்பகுதிகளில் குடியேறி வாழலாயினர். (அதே நூலில் - அத். 81, செய். 1,2) இவ்வாறு உள்ளூர் நிருவாக, நீர்ப்பாசன அமைப்புக்களின் முதுகெழும்பாக விளங்கிய இவ்வகுப்பினர் (குலீனர்) மாகனது ஆட்சியின்போது கடுமையாகத் தண்டிக்கப்பட்டுத் தம் செல்வாக்கையிழந்ததால், அவர்களுடைய திறமையாலும் வழி நடத்தலாலும் முன்னர் நல்ல முறையில் இயங்கிய உள்ளூராட்சியும், நீர்ப்பாசன முறையும், இவர்கள் அகற்றப்பட்டதிலிருந்து செயலிழக்கலாயின. பொலன்னறுவை அரசின் வீழ்ச்சிக்கும், பண்டைச் சிங்களப் பண்பாட்டின் தேய்வுக்கும் வழிகோலிய காரணிகளுள் இதற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இவ்வாறாக, மகாபராக்கிரமபாகுவின் காலத்தில் மேன்மையும் பெரும் புகழும் எய்தியிருந்த பொலன்னறுவை அரசு, அம்மாமன்னன் மாண்ட அரை நூற்றாண்டுக் காலத்தில் அழிவுற்று மறையலாயிற்று. பொலன்னறுவை அரசின் மறைவு சிங்களப் பண்பாட்டின் வரலாற்றில் ஒரு தேக்கநிலையை உருவாக்கியதை காணமுடிகின்றது.

மகா பராக்கிரமபாகுவின் ஆட்சியின்போது, நாடெய்தியிருந்த சிறப்பை, அவனுடைய பின்னோர்களின் காலத்தில் அது ஒருபோதும் பெற்றதில்லை. அப் பெருமன்னனது மறைவைத் தொடர்ந்து ஆட்சிசெய்த மன்னர்கள் பெரும்பாலும் பலவீனர்களாகவே காணப்பட்டனர். நிஸங்கமல்ல(ன்) ஒருவனைத் தவிர்ந்த ஏனையோர் மிகக் குறுகிய கால உறுதியற்ற ஆட்சிகளை நடத்தினர். கலிங்க மாகனது படையெழுச்சி வரையுள்ள முப்பது ஆண்டுகளில் (1186 - 1215) பத்து மன்னர்கள் வரையில் ஆட்சி நடத்தியுள்ளனர். கலிங்க ஆதரவாளருக்கும் பாண்டிய ஆதரவாளருக்குமிடையே தலைநகரிலுண்டான கடும் போட்டியே அடிக்கடி சச்சரவுகள் தோன்றக் காரணமாகவிருந்தது. இவ்வாறு அரசுரிமைபற்றி எழுந்த தகராறுகளில் தளபதிகள் முக்கிய பங்கை வகித்து, அரச நியாமகர்களாக விளங்கினர். தென்னிந்தியாவிலிருந்தும் படைகள் இவர்களால் வருவிக்கப்பட்டன. இத்தகைய நிலைமைகள் பிறநாட்டாரின் படையெடுப்புக்கள் நடைபெறத்

தூண்டுதல் அளித்தன. தென்னிந்தியாவைச் சேர்ந்த படையெடுப்பாளர் அடிக்கடி இலங்கை விவகாரங்களில் தலையிட்டு வரலாயினர். பராக்கிரமபாண்டியன் என்ற ஒரு பாண்டியன் அரசைக் கைப்பற்றியிருந்த வேளையிலேயே, கலிங்க மாகன் இலங்கைமீது படையெடுத்து வரலானான். இவனது படையெழுச்சி, இலங்கை வரலாற்றில ஒரு திருப்பமாக அமைந்து, பொலன்னறுவையரசின் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இவ்வாறான நிகழ்ச்சிகளைக் கொண்ட ஒரு காலப் பகுதியின் வரலாற்றையே இவ்வத்தியாயத்திற் கவனிக்க இருக்கின்றோம். நிஸங்க மல்லன் கலிங்க மன்னர்களுள் மிகவும் முக்கியம் வாய்ந்தவனாதலால் அவனைப் பற்றி ஓரளவு விரிவாகவும், ஏனைய கலிங்க மன்னர்கள் பற்றி மிகச் சுருக்கமாகவும் கவனிப்போம்.

கலிங்க மன்னர்கள்

மகா பராக்கிரமபாகுவுக்கு முன்னரும் சில இலங்கை மன்னர்கள், தம்மைக் கலிங்க மன்னர்களாகக் கூறிக்கோண்ட போதும், மகா பராக்கிரமபாகுவுக்குப் பின்னர் ஆட்சிசெய்து வந்தவர்களே அவ்வாறு அழைக்கப் பெறுதற்கு இருகதை பெற்றுள்ளனர். ஏனெனில், இம்மன்னர்கள் கலிங்கத்திலிருந்தே இலங்கை வந்து ஆட்சியை நடத்தலாயினர். முந்திய 'கலிங்க' மன்னர்கள், கலிங்கத்துடன் ஏற்பட்டிருந்த மணவினையுறகளின் விளைவாகக் கலிங்க வழித் தொடர்புகள் கொண்டவர்களே. நாம் முந்திய அத்தியாயங்களில் கண்டவாறு, 4-ம் மகிந்தனே கலிங்கத்துடன் முதன் முதல் மணவினைத் தொடர்புகளைக் கொண்டிருந்தான். (1-பக். 176, II பக். 306 தொடர்) திரிலோகசுந்தரீ என்ற கலிங்க இளவரசியை 1-ம் விஜயபாகு மணம் செய்தமை, கலிங்கக் குழுவினர் அரசவையிற் பலமடையவும் கலிங்க மன்னர் பின்னர் ஆட்சியைப் பெறவும் வழிகோலியதென்பர். சிங்கள அல்லது பாண்டியக் குழுவினர்க்கும், இந்தக் கலிங்க குழுவினர்க்கு மிடையே சச்சரவுகள் தோன்றலாயின. (விஜயபாகுதவின் சகோதரி மித்தா என்பவள் ஒரு பாண்டிய இளவரசனை மணஞ்செய்ததிலிருந்தே பாண்டியக் குழுவினர் முக்கியம்பெற்று வந்தனர்.) 1-ம் விஜயபாகு இறந்தபோது, அரசுரிமை பற்றி நடைபெற்ற தகராறு இவற்றுக்கு முன்னோடியாகவிருந்தது. 1-ம் பராக்கிரமபாகுவைத் தொடர்ந்து அரை நூற்றாண்டுக்கு மேல் கலிங்க மன்னர்கள பொலன்னறுவையிலிருந்து ஆட்சி புரிந்தனர்.

கலிங்க மாகனுடைய ஆட்சியைத் தொடர்ந்து இருபிரதான வரலாற்றுப் போக்கினை இலங்கையில் காணமுடிந்தது. 1. தென் மேற்கிலங்கைப் பிராந்தியத்தில் பொருளாதார, சமூக நிறுவனங்கள் படிப்படியாகத் தோற்றம் பெற்று, வன்மையடைந்து வந்திருந்த பின்னணியில் அரசியல், நிர்வாக முகாமைத்துவ மையமும் இராசரட்டையிலிருந்து தென்மேற்கு நோக்கிய இடப்பெயர்ச்சிக்குள்ளாகும் போக்கு 2. இலங்கையில் வடபகுதியில் தனித்துவமான அரசியல், நிர்வாக பண்பாட்டு மையம் ஒன்று வரலாற்று வெளிச்சத்திற்கு வரும்நிலை, கி.பி. 1236இல் கலிங்கமாகனுடைய தலைமையில் இராசரட்டையில் உள்ள பெரும்பாலான நிறுவனங்கள் யாவும் கட்டுப்படுத்தப்பட்டமையைத்

தொடர்ந்து அவனுடைய ஆட்சி வடஇலங்கையில் நீடித்திருந்ததாகக் கூறப்படு கிறது. இதே காலத்தில் சிங்கள அரச வம்சாவளியினர் தம்பதேனியா, யாப்பகூவ, குருநாகல், டெடிகமை, கம்பளை, கண்டி என்றவோர் ஒழுங்கில் தமது அரசாட்சியை முன்னெடுத்துச் சென்றமையைக் காணலாம். வடக்கே கலிங்கமாகனது ஆட்சியின் பினனணியில் வன்னிச் சிற்றரசுகள் பல தோற்றம் பெற்றிருந்த நிலையையும் காணமுடிந்தது. இவற்றுள் தமிழ் வன்னி, சிங்கள வன்னிச் சிற்றரசுகள் கலிங்கமானது மேலாண்மையை ஏற்றிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வரசியல் பின்னணியிலேயே வடஇலங்கையரசு தோற்றுவிக்கப்பட்டதாக இதுவரையில் தெரிவிக்கப்பட்டு வந்த கருதுகோள் அண்மைக் காலத் தொல்லிலயல் அகழ்வுச் சான்றுகளின் பின்னணியில் மறுசீரமைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நாகதீபராஜாவினுடைய அரசியல் - வரலாற்று வளர்ச்சியொன்றின் தொடர்ச்சியாகவே வடஇலங்கை இராச்சியம் வரலாற்று வெளிச்சத்திற்கு கொணரப்பட்டது என்பதனை ஆனைக்கோட்டை முத்திரையூடாகவும் (கோவேதன்) கந்தரோடையில் உள்ள சங்கம்புலவு என்ற மையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கலிங்க நாகரி வரிவடிவில் செகராஜசேகர என்ற விருதுப்பெயர் பொறித்த ரிஷப நாணயமொன்றும், சந்திரகாந்த மணிக்கல் ஒன்றில் புடைப்பு முறையில் செதுக்கப்பட்டு கிடைத்த சேது (ரிஷப) வடிவமும் யாழ்ப்பாண இராச்சியத்தின் தொடர்ச்சியை கந்தரோடையிலிருந்து நல்லூருக்கு நகர்த்தித் தருவதனைக் காட்டுகின்றன. (கந்தரோடையில் உள்ள நிலச்சுவாந்தர் குடும்பமொன்று இற்றைவரைக்கும் தமது மந்தைகளுக்கு குறிவைக்கும் முறையில் (சேது நாணயத்திலுள்ளது போன்று படுத்திருக்கும் ரிஷபத்தினுடைய வரிவினைக் கொள்வதனை இங்கு குறிப்பிடலாம்) எது எவ்வாறெனினும் அரசிருக்கை ஒன்று இடம் மாற்றப்பட்ட நிலையில் பேரரசிருக்கையாக (நல்லூர்) மாற்றம் அடைந்த நிகழ்வினை 1236இன் பின்னரே காணமுடிவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டானது இலங்கை வரலாற்றில் ஒரு திருப்பு முனையைக் குறித்து நிற்கும் காலமாகும். வடஇலங்கையில் மாகனுடைய ஆட்சிக்குப் பின்னர் சந்திரபானு என்றொருவன் மலாய் தீபகற்பத்திலிருந்து இலங்கைக்கு படையெடுத்து வந்து, பௌத்த சின்னங்களை அபகரித்துச் சென்றான். இந்நூற்றாண்டில் தென்னிந்தியாவில் இரண்டாம் பாண்டியப் பேரரசு எழுச்சிபெற்றது. இரண்டாம் பாண்டியப் பேரரசின் எழுச்சியானது தென்னிந்திய -இலங்கை வளர்ச்சியில் பல்வேறு வகையான அரசியல், பண்பாட்டு விளைவுகளை ஏற்படுத்தக் காரணமாகியது. முஸ்லிம்களினுடைய அரசியல், பண்பாட்டுச் செல்வாக்குகள் தமிழ்நாட்டில் வடஇந்தியாவிலிருந்து ஏற்படுத்தப்பட்ட ஒரு காலப்பகுதியாகவும் இக்காலம் அமைந்தது. மாலிக்கபூரின் படையெடுப்புக்களின் தென்னிந்தியா மீதான வருகையும், இரண்டாம் பாண்டியப் பேரரசு அப்படையெடுப்புக் களை வரவேற்று, அனுசரித்து தனது தனித்துவத்தினையும் பாதுகாத்து ஒரு பேரரசு முறையை உருவாக்கிய காலப்பகுதி யாகவும் இக்காலம் அமைந்தது. வட இலங்கை மீதான பாண்டியர்களுடைய படையெடுப்புக்களை

வழிநடத்தியோர்களாக முஸ்லிம் தளபதிகள் ஈடுபட்டிருந்த காலமாகவும் இக்காலப் பகுதி அமைந்தது. ஜடாவர்மன் சுந்தரபாண்டியனுடைய படைத் தளபதிகளில் ஒருவனான ஆரியச்சக்கரவர்த்தி என்பவன் வடஇலங்கை மீது படையெடுத்து வந்து தமிழ் இராச்சியமொன்றை நிறுவினான் என யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூல் குறிப்பிடுகின்றது. நல்லூரினைத் தலைநகராகக் கொண்டு அமைந்த இந்த யாழ்ப்பாண அரசானது முதலில் பாண்டியப் பேரரசின் கீழ் ஒரு பாதுகாப்பரசாக விளங்கியிருந்தது எனவும், அதன் பின்னர் மதுரை நாயக்கரின் செல்வாக்கினுள் அகப்பட்டிருந்தது. பின்னர் இராமநாதபுரம் சேதுபதிகளின் ஆட்சிப் பிரதேசத்தின் ஒரு பிரிவாக விளங்கி 15ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாண இராச்சியம் என்ற பெயரில் கி.பி. 1671 வரை (போர்த்துக்கேசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் வரைக்கும்) சுதந்திர அரசாக விளங்கியிருந்தது.

ஆரியச் சக்கரவர்த்தி என்பவனே முதன்முதலாக யாழ்ப்பாண இராச்சியத்தின் வம்ச ஆதிக்கத்தினைத் தொடக்கி வைத்தவன் என்று யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. இதனால் ஆரியச்சக்கரவர்த்தி என்ற பெயர் விருதுப் பெயராக நல்லூரை இராசதானியாகக் கொண்டு ஆட்சிசெய்த மன்னர் பரம்பரைக்கு இடப்பட்டு அழைக்கப்பட்டமையினை யாழ்ப்பாண வைபவமாலை எடுத்துக் கூறுகின்றது. கி.பி. 14ஆம், 16ஆம் நூற்றாண்டுக்கிடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் தனது ஆள்புலத்தினை நன்கு விஸ்தரித்திருந்தது என்பதனையும், இலங்கையின் வடமேற்குக் கரையோரப் பிராந்தியங்களில் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்தியின் வாணிபக் கப்பல்களை காலிவரைசென்று வியாபார நடவடிக்கை களில் ஈடுபட்டிருந்தன என்பதனையும் போர்த்துக்கேய ஆவணங்களிலிருந்தும், இபிள் - பட்டூட்டா என்ற அராபிய யாத்திரிகனது குறிப்புக்களிலிருந்தும் உறுதிப் படுத்திக் கொள்ளமுடிகிறது. இவ்வாறு வட இலங்கையில் இனம், பண்பாட்டு, மொழியடிப்படையில் தனித்துவமான அரசு ஒன்று, பேரரசு நிலையில் விளங்கியிருந்தது என்பதனைக் காணமுடிந்துள்ளது.

இதேகாலப் பகுதியில் (கி.பி. 13ஆம், 14ஆம் நூற்றாண்டுகளில்) தென்னிலங்கையின் அரசுகளை நோக்கும்போது ஓர் ஸ்திரமற்ற நிலையில் அவை இயங்கி வந்தமையைக் காணமுடிந்தது. தென்னிலங்கையரசுகளின் தலைநகரங்கள் அடிக்கடி மாற்றமடைந்து சென்றமையைக் காணமுடிந்தது. பொலனறுவையின் வீழ்ச்சிக்குப் பின் தம்பதெனியா தலைநகராகச் சிறிதுகாலம் விளங்கியது. பின்னர் மலையரணான யாப்பகூவ தலைநகரமாக்கப்பட்டது. யாப்பகூவவிலிருந்து குருநாகல், கம்பளை என்பனவும், அதன்பின்னர் றைகம, கோட்டை ஒருபுறமும், கண்டி மறுபுறமுமாக இலங்கையின் தலைநகர் அந்தஸ்தினைப் பெற்றிருந்தன. கி.பி. 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கண்டி தலைநகராக்கப்பட்டது. 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோட்டை தலைநகராக்கப்பட்டது. இவ்விரு அரசுகளும் அரசியலடிப்படையிலான ஸ்திரமின்மையைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி நின்றன. போர்த்துக்கீசர் இலங்கைக்கு வந்து, அதனைக் கைப்பற்றும் வரைக்கும் இந்நிலை நீடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தம்பதெனியாவில் ஆட்சிசெய்த மன்னர்களுள் புவனேகபாகு, 3ஆம் விஜயபாகு, 2ஆம் பராக்கிரமபாகு ஆகியோர் ஆளுமைமிக்க மன்னர்களாக விளங்கினார்கள். இராசரட்டையில் கலிங்கமாகனது அரசுக்கெதிராக சிங்கள மக்களை ஒன்று திரட்டி எதிர்ப்புக்களை உருவாக்குவதில் புவனேகபாகு ஓரளவிற்கு வெற்றியீட்டி இருந்தான். இதே காலப்பகுதியில் (கி.பி. 13ஆம் நூற்றாண்டில்) தென்னிந்தியாவில் 2ஆம் பாண்டியப் பேரரசு உச்சநிலையில் வளர்ச்சியடைந்திருந்தது. பாண்டியப் பேரரசர்கள் தமது முன்னோரைப் பின்பற்றி இலங்கை மீது படை நடாத்தி வந்தனர். ஜடாவர்மன் சுந்தரபாண்டியனும், மாறவன்மன் குலசேகர பாண்டியனும் இலங்கை மீதான படையெடுப்பு நடவடிக்கைகளில் மிகவும் வலுவுடன் செயற்பட்டிருந்தனர். இலங்கையில் இருந்த உள்நாட்டு அரசியல் ஸ்திரமின்மையை நன்கு பயன்படுத்திய வண்ணம் பாண்டியத் தளபதியான ஆரியச் சக்கரவர்த்தி என்பவன் இலங்கை மீது படையெடுத்து வந்து, பௌத்த தந்ததாதுவைக் கவர்ந்து சென்றான். இலங்கையில் இக்காலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் நிலவிக் கொண்டிருந்த ஒரு கருத்துருவமான 'யார் தந்ததாதுவை வைத்திருக்கின்றார்களோ அவர்களே சிம்மாசன உரிமையைப் பெற்றவராவர்' என்பது அரசியலில் அடுத்த வாரிசினைத் தீர்மானிக்கின்ற அம்சமாகக் காணப் பட்டது. இதனால் 2ஆம் பராக்கிரமபாகு என்பவன் இந்தியா சென்று அந்தத்தாதுவை மீட்டுவந்தான் என்று கருதப்படுகிறது. இம்மன்னன் முன்பு பொலனறுவையில் இருந்தும் ஆட்சிசெய்தவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. இம்மன்னனுக்கு 'கலிகால சாகித்திய சர்வஞ்ஞான பண்டிதர்' என்ற ஒரு பட்டப்பெயர் கூடக் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. கி.பி. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இம்மன்னன் ஆட்சிபுரியும்போதே சந்தரபானுவின் படையெடுப்பும் இலங்கை மீது நிகழ்ந்தது. ஒரு வேளை சந்திரபானுவுக்கு எதிராகவே இலங்கையரசன் பாண்டியப் பேரரசனுடைய உதவியைக் கோரியிருந்திருக்கக்கூடும். குடுமியாமலைக் கல்வெட்டின் படி சமகாலத்துப் பாண்டியப் பேரரசனான ஒருவன் (ஜடாவர்மன் வீரபாண்டியன்) இலங்கை மன்னனின் வேண்டுகோளின்படி அங்கு சென்றதாகவும், அங்கு ஒரு மன்னனைக்கொன்று இன்னொருவனை மன்னனாக்கிய தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமகாலத்தில் இந்து சமுத்திரத்தில் வெளிநாட்டு வர்த்தகம். மேலோங்கிக் காணப்பட்டிருந்தது. தம்பதெனியாவில் ஆட்சிசெய்த 2ஆம் புவனேகபாகு வெளிநாட்டு வர்த்தகத்தை ஊக்குவித்த ஒருவனாகக் காணப்பட்டான். இம்மன்னன் எதிப்திய சுல்தானுக்கு கி.பி. 1283இல் வாணிகத் தூதுக்குழு ஒன்றினை அனுப்பி வைத்ததாக அறிகின்றோம். ஐரோப்பாவில் சிலுவை யுத்தங்கள் முடிவுக்கு வந்த பின்னர் கீழைத்தேய வாசனைத் திரவியங்களுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டிருந்தது. கறுவா, ஏலம், மிளகு, சாதிக்காய் ஆகிய வாசனைப் பொருட் களுக்கு தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் பெரும் சந்தை வாய்ப்பு ஏற்பட்டிருந்தமையைத் தொடர்ந்து, ஈரவலய உற்பத்திப் பொருட்களான கறுவா, ஏலம், மிளகு, என்பன தென்மேற்கிலங்கைத் துறைமுகங்களினூடாகத் தென்னிந்தி யாவிற்கு எடுத்துச்செல்லப்பட்டன. இதனால் முன்னர் என்றுமில்லாதளவிற்கு

துறைமுகங்களினூடாக ஏற்றுமதி - இறக்குமதிப் பண்டமாற்று வியாபார முறைமை இலங்கையில் வளர்ச்சி கண்டிருந்தது. தென்மேற்கிலங்கையில் ஏற்பட்டிருந்த இவ்வர்த்தக விருத்தி தொடர்பாக வியாபாரக் குடியிருப்புக்களும், துறைமுகத் தொழிலாளர் குடியிருப்புக்களும் அப்பிரதேசத்தில் பல்கிப் பெருகின. அதன் பின்னணியில் அரசில், நிர்வாகமையமான தம்பதெனியாவும் செல்வாக்குப் பெறத் தொடங்கியது எனலாம். இதே காலப்பகுதியில், அதாவது கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முடிவில் 14ஆம் நூற்றாண்டாரம்பத்தில் தென்னிலங்கையரசின் அரசியல் ஸ்திரமற்றநிலை காரணமாக வடபகுதியிலிருந்து சிங்கையாரியச் சக்கரவர்த்தி தனது வெளிநாட்டு வர்த்தகத்தைப் பெருக்குமுகமாக இலங்கையின் மேற்குக் கரையோரமாகத் தெற்குநோக்கி தனது அரசியல் ஆதிக்கத்தினைப் பெருக்கி வைத்திருந்தான் எனவும், கி.பி. 1344 அளவில் இலங்கை வந்த இபின்-பட்டூட்டாதான் ஆரியச் சக்கரவர்த்தியின் கொடிகளைத் தாங்கிய வர்த்தகக் கப்பல்களை காலித் துறைமுகம்வரை கண்டதாகவும் குறிப்பிட்டுள்ளான்.

இபின் பட்டூட்டா தான் ஆரியச்சக்கரவர்த்தி மன்னனை **'வந்தள'** என்ற இடத்தில் சந்திக்க நேர்ந்ததாகவும், அம்மன்னன் தன்னுடன் பாரசீக மொழியிலேயே சம்பாஷித்ததாகவும் அவ்வாரியச் சக்கரவர்த்திக்கு பல மொழிகள் தெரிந்திருந்தது எனவும் தனது நாளேட்டில் குறிப்பிட்டுள்ளான். மேலும், யாழ்ப்பாணத்து சிங்கையாரியச் சக்கரவர்த்திகளின் வணிகக் கப்பல்கள் பல தென்னிந்தியாவில் பாண்டிய நாட்டுக் கரையோரமாகச் சென்று கொண்டிருந்ததையும் தான் கண்டதாக இபின்-பட்டூட்டா குறிப்பிட்டுள்ளான். தொந்திரா என்றழைக்கப்படும் தெய்வேந்திரமுனையிலுள்ள இந்துக்கோயில் ஒன்றில் 100க்கும் மேற்பட்ட பிராமணர்களையும், தேவரடியார்களையும் அவர்கள் கோவிலுக்குப் பணியாற்றிக் கொண்டிருந்ததையும் தான் நேரில் கண்டதாகவும் இபின் - பட்டூட்டா குறிப்பிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. குருநாகல் மாவட்டத்தில், தெற்கே கொட்டேகம என்ற இடத்தில் கிடைத்த ஒரு தமிழ் கல்வெட்டு வெண்பா வடிவில் சிங்கையாரியச் சக்கரவர்த்தியைப் பற்றிக் குறிப்பிடுவதனைக் காணலாம். இதுவே சிங்கையாரிய அரசரைப் பற்றிக் குறிப்பிடும் முதலாவது இலங்கைத் தமிழ்க் கல்வெட்டாகும். இக்கல்வெட்டானது கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முடிவில் பொறிக்கப் பட்டிருக்க வேண்டும். இம்மன்னனைப் பற்றிக் குறிப்பிடும் இரண்டாவது கல்வெட்டு ஒன்று யாழ்ப்பாணம் - நல்லூரில் நயன்மார்க்கட்டுப் பிள்ளையார் கோவில் திருக்குளத்தினின்றும் மீட்கப்பட்டதாக உள்ளது. இத்தமிழ்க் கல்வெட்டில் **'கலி 3025இல் தீர்த்தங்கொடுக்க, சிங்கையாரியனால் அமைகப்பெற்றது'** எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் வாசகம் உள்ளடக்கிய வரிவடிவத்தில் சில பண்புகள் கி.பி. 14ஆம், 15ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட வரிவடிவப் பண்புகளைக் கொண்டிருப்பதும் அவதானிக்கத்தக்கதாகும்.

றைகம என்ற இடத்தை மையமாகக் கொண்டு அழகேஸ்வரன் தலைமையில் ஆரியச் சக்கரவர்த்திக்கெதிரான இயக்கம் உருவாக்கப்பட்டு, தென்னிலங்கையில் யாழ்ப்பாண அரசிற்கிருந்த ஆதிக்கம் முறியடிக்கப்பட்டது. 1415இல் கோட்டை

இராச்சியம் முக்கியத்துவம் பெறத்தொடங்கியமையைக் காண்கின்றோம். பின்னர் அங்கு 6ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் அரசியல், பண்பாட்டு வரலாற்றில் மிகவும் உன்னதமான காலகட்டத்தினைக் குறித்து நின்றது. 6ஆம் பராக்கிரமபாகு காலத்தில் கோட்டையரசில் பல மொழிகளிலும் இலக்கிய வளர்ச்சி ஏற்பட்ட ஒரு நிலைமையைக் காணமுடிகிறது.

கி.பி. 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கை மீது **செங்கோ** என்ற சீனத் தளபதியொருவனின் தலைமையில் படையெடுப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது. அப்படையெடுப்பின்போது இலங்கையிலிருந்து அரச குடும்பத்தினர் கைதுசெய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டு, சீனாவிற்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறு கைதுசெய்யப்பட்ட அரச குடும்பத்தினைச் சேர்ந்த ஓர் இளவரசனே ஆறாம் பராக்கிரமபாகு எனக் கூறப்படுகிறது. இக்கால இந்துசமுத்திர வாணிபத்தில் பாரசீகர், சீனர் என்போர் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கு காலியில் கிடைத்த **மும்மொழிக்கல்வெட்டு** (தமிழ், பாரசீகம், சீனம்) இதற்குச் சிறந்த ஓர் ஆதாரமாக விளங்குகின்றது. இக்கல்வெட்டு கி.பி. 15ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டது எனக் கல்வெட்டு ஆய்வாளர்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது. **இம்மும்மொழிக் கல்வெட்டில் சீன தேசத்து மன்னன் ஒருவன் காலியில் உள்ள இந்துக் கோவில் ஒன்றுக்கு வழங்கிய தானத்தைப் பற்றி குறிப்பிடுகின்ற செய்தியைக் காணலாம்.** அக்கோவில் தெவிநுவரவில் உள்ள ஒரு **சிவன் கோவிலாக** இருக்கலாம் எனக்கருதப்படுகிறது.

இலங்கை முழுவதனையும் இறுதியாக ஆட்சிசெய்த சிங்கள மன்னனாக 6ஆம் பராக்கிரமபாகு கருதப்படுவதனைக் காணலாம். இம்மன்னருடைய ஆட்சிக்காலம் பற்றி அறிந்துகொள்வதற்கு ஏராளமான இலக்கியச் சான்றுகளும் சாசன மூலங்களும் உதவுகின்றன. போர்த்துக்கீச ஆவணங்களிலும் 6ஆம் பராக்கிரமபாகு பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. 6ஆம் பராக்கிரமபாகு காலத்தில் அரசியல் நிலையினை நோக்கும்போது **உடரட்ட** (கண்டி) உட்பட இலங்கை முழுவதனையும் ஒரு குடைக்கீழ் அரசியல் அடிப்படையில் ஒற்றுமைப் படுத்திய நிலை காணமுடிகிறது. யாழ்ப்பாண அரசினை வெற்றிகொள்ள வேண்டும் என்ற பெருநோக்கம் 6ஆம் பராக்கிரமபாகுவிற்கு தொடர்ந்து இருந்து வந்தது. இதற்காக வன்னிச் சிற்றரசுகளை தன்னடிப்படுத்துவதற்குரிய முயற்சிகளிலும் ஈடுபட்டான். **சப்புமால்குமாரையய்ன** (செண்பகப் பெருமாள்) என்ற படைத் தளபதியின் தலைமையில் வன்னிச் சிற்றரசுகளை வெற்றி கொள்வதற்காக வன்னிப் பிராந்தியம் நோக்கி படையெடுப்பினை நடாத்தினான். வன்னிச் சிற்றரசுகள் யாவும் 6ஆம் பராக்கிரமபாகுவின் அரசியல் மேலாதிக்கத்ததினை ஏற்றுக்கொண்ட பின்னர் தொடர்ந்தும் யாழ்ப்பாண இராச்சியம் நோக்கி அவனது படைகள் செண்பகப்பெருமாளின் தலைமையில் முன்னேறின. சமகாலத்து யாழ்ப்பாணத்து அரசனாக விளங்கிய கனகசூரிய சிங்கை ஆரியன் செண்பகப்பெருமாளின் படையெடுப்பிற்கு ஈடுகொடுக்கமுடியாது, அரச குடும்பத்தினருடன் தென்னிந்தியா விற்கு தப்பிச்சென்றான் என யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது.

செண்பகப் பெருமாளின் யாழ்ப்பாணப் படையெடுப்பு கி.பி. 1450இற்கும் 1467இற்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்திருக்கவேண்டும் என்று வரலாற்றறிஞர் கொள்கின்றனர். 6ஆம் பராக்கிரமபாகுவின் தமிழ்க்கல்வெட்டுக்கள் யாழ்ப்பாணத்திலும் முன்னேஸ்வரம், காலி ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமகாலத்தில் இவ்வரசன் தென்னிந்திய சோழமண்டல கடற்கரையில் அமைந்துள்ள அதிவீரராம் பட்டினத்தின் மீது படையெடுத்துச் சென்று அங்கு ஆதிக்கத்தில் இருந்த குறுநிலத் தலைவனை போரில் வென்றான். இதற்கான காரணம் 6ஆம் பராக்கிரமபாகுவின் வாணிப கப்பற் தலைவன் ஒருவனுடன் அதிவீரராம் பட்டினத்தின் குறுநிலத் தலைவன் பகை கொண்டமையே எனக் கூறப்படுகிறது. இக்காலத்தில் அதிவீரராம் பட்டினம் முஸ்லீம்களது பிரதான வர்த்தக குடியிருப்பாக மாற்றமுற்று வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒருவேளை அதிவீரராம் பட்டினத்திற்கும் யாழ்ப்பாண இராச்சியத்திற்குமிடையே இருந்திருக்கக் கூடிய வாணிப மற்றும் அரசியல் வலுவான பின்னணியே 6ஆம் பராக்கிரமபாகுவின் அப்படையெடுப்பிற்குக் காரணமாக இருந்திருக்குமோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்துடன் இணைத்துக் கூறப்படுகின்ற **அந்தகக் கவி வீரராகவனும** அதிவீரராம் பட்டினத்தைச் சேர்ந்தவனே என்பதும் குறிப்பிடத்தக்கது).

6ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் கோட்டை இராச்சியத்தில் இலக்கியமும், கலைகளும் மிகச்சிறந்த வளர்ச்சியை அடைந்திருந்தன. கோட்டையில் இக்காலத்தில் வாழ்ந்த மிகச்சிறந்த புலவர்களுள் தொடகமுவ என்ற இடத்தைச் சேர்ந்த ஸ்ரீராகுல என்பவர் குறிப்பிடத்தக்கவராவர். பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவராக ஸ்ரீராகுலர் விளங்கினார். கோட்டை அரசில் சிறப்புப்பெற்ற பிரவேனாக்களில் சிங்களம், தமிழ், பாளி, வடமொழி எனப் பல மொழிகளில் இலக்கிய ஆக்கங்கள் மேற்கொள்ளப் பட்டன. ஸ்ரீராகுலர் பரஷி சந்தேசய, சேலலிகினி சந்தேசய ஆகிய தூதுப் பிரபந்தங்களை ஆக்கினார். இவற்றுடன் காவியசேகரம் என்ற சிறப்பான நூல் ஒன்றையும் அவர் ஆக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதே காலப்பகுதியிலேயே கோகில சந்தேசய (குயில்விடு தூது) என்ற தூதுப் பிரபந்தம் சிங்கள மொழியில் இயற்றப்பட்டது. இந்நூலில் சப்புமால் குமாரையன்னின் யாழ்ப்பாணத்தின் மீதான படையெடுப்பின் வெற்றிச் சிறப்புக்கள் எடுத்துக் கூறப்படுகின்றன.

6ஆம் பராக்கிரமபாகு காலத்தில் கோட்டை அரசில் பௌத்தக் கட்டிடங்கள் பல உருவாக்கப்பட்டன. கோட்டையிலும், யாழ்ப்பாணத்திலும் பல இந்துக் கோயில்களும் அமைக்கப்பட்டன. யாழ்ப்பாண நல்லூரில் கந்தசுவாமி கோயிலை அமைத்தவராக பெருப்பித்தவனாக 6ஆம் பராக்கிரமபாகு வைத்து எண்ணப்படு கின்றான். நல்லூர் கோயிலில் திருவிழாக்காலங்களில் கூறப்படும் கட்டியத்தில் இன்றுவரை 6ஆம் பராக்கிரமபாகுவின் இயற்பெயர் கூறப்படுவதற்கும அதுவே அடிப்படைக் காரணமாகும். 6ஆம் பராக்கிரமபாகுவிற்குப் பின் இலங்கையில்

அரசியல் ஒற்றுமை விரைவாகச் சீர்குலைந்துவிட்டது. சப்புமால் குமாரையன் 6வது புவனேகபாகு என்ற பெயருடன் கோட்டை அரசனானான். இதன் பின்னர் யாழ்ப்பாண இராச்சியம் மிகவும் சுதந்திரமாக விளங்கியது. கனகசூரிய சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி இக்கால சுதந்திர யாழ்ப்பாணவரசில் அரசோச்சிய மன்னனாவான். கோட்டை அரசில் 9ஆம் பராக்கிரமபாகு ஆட்சிசெய்து கொண்டபோதே (1505) இலங்கைக்கும் போர்த்துக்கீசர் வியாபார நோக்கோடு காலித்துறைமுகத்தில் வந்திறங்கினர்.

அத்தியாயம் : பன்னிரண்டு

அரசியற் கோட்பாடுகளும் வெளிநாட்டுக் கொள்கைகளும்

(அநுராதபுரம், பொலனறுவைக் காலங்கள்)

இலங்கைத்தீவின் அரச முறைமை, நிர்வாக முறைமை, காலத்திற்குக் காலம் கடைப்பிடிக்கப்பட்ட வெளிநாட்டுக் கொள்கைகள் என்பன பற்றி அறிந்து கொள்வதற்கு எமக்கு பல்வேறுவகையான வரலாற்று மூலங்கள் கிடைத்திருப் பினும், அவ்விடயங்கள் தொடர்பான ஆய்வுகளோ, வெளியீடுகளோ மிகமிக அரிதாகவே காணப்படுகின்றன. Kingship in Ceylon என்ற நூலில் கலாநிதி ஹெட்டியராய்ச்சி கி.பி. 4ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிக்குரிய அரச முறைமை பற்றியும், வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றியுமே ஆராய்ந்துள்ளார். Society in Medieval Ceylon என்ற நூலில் கலாநிதி ஆரியபாலா கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரையிலான கோன்மை முறை, நிர்வாக முறை, வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார். இவற்றைத் தவிர ஏனைய நூல்களில் ஆங்காங்கே அநுராதபுரக்கால, பொலனறுவைக்கால, தம்பதெனியக்கால நிர்வாக முறைமைகளை இலங்கை வரலாற்று வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி மிகச்சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளமையையே காண்கின்றோம். இப்பின்னணியில் வரலாற்று மாணவர் களின் பயன்கருதி இவ்வத்தியாயத்தில் இலங்கையின் அரச முறைமையின் தோற்றம், வளர்ச்சி, நிர்வாக வலைப்பின்னல் அமைப்பு, வெளிநாட்டு அரசியற் தொடர்புகள் போன்ற விடயங்கள் தொடர்பாக சற்று விரிவாக எடுத்துக் கூறப்படு கின்றது. அண்மைக்காலங்களில் அவ்விடயங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப் பட்ட அரசமுறைமை, மற்றும் நிர்வாக முறைமைகள் பற்றி இங்கு எடுத்துக் காட்டப்படுவதும் அவசியமாகின்றது.

நாகவம்சமும் அரசபதமும்

அண்மைக்காலமாக வரலாற்றுக்கு முற்பட்ட ஆய்வின் முடிபுகள் இலங்கையில் அமானுஸ்யர்களாகக் கருதப்பட்டு வந்த நாகர்களை அரச வம்சத்தவர்களாகக் கொள்ள வைத்துள்ளது. சிரான் தெரணியாகலவின் வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கை பாகம் 1, பாகம் 2 என்ற நூல்களில் அக்கருத்து மிகவும் ஆணித்தரமாக தொல்லியல் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'இலங்கையில் குறுணிக்கற்கால யுகத்தினை முடித்து வைத்து, வரலாற்று யுகத்தினை ஆரம்பித்து வைத்த பெருமை நாகர்களுக்கே உரியது' என்று சிரான் தெரணியாகல தனது நூலில் குறிப்பிட்டிருப்பது இலங்கையின

கோன்மை பற்றிய வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தினையே ஏற்படுத்தியுள்ளது. கி.மு. 29000ஆம் ஆண்டு தொடக்கம் கி.மு. 800ஆம் ஆண்டுகள் வரை இலங்கையில் குறுணிக்கற்காலப் பண்பாடே நிலவியது. கி.மு. 800ஆம் ஆண்டிலிருந்தே பெருங்கற்கால யுகம் இலங்கையில் ஆரம்பமாகியதனை அநுராதபுரத்தில் உள்ள கெடிகே அகழ்வு முடிபுகளும் வட இலங்கையில் கந்தரோடை அகழ்வு ஆய்வு முடிபுகளும் (அமெரிக்கப் பென்சில்வேனியப் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வாளரான விமலா பெக்லியினது கந்தரோடை ஆய்வு முடிபுகளும்) கி.மு. 800ஆம் ஆண்டிலிருந்தே பெருங்கற்காலப் பண்பாடு தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந்தது என்பதனை உறுதிப்படுத்தி உள்ளன. கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்தே தென்னிந்தியாவில் தமிழகத்திலும் இலங்கையில் கந்தரோடை, அநுராதபுரம் ஆகிய மையங்களிலும் திராவிட(தாமிழி) பிராமிச் சாசனங்கள் வழக்கிலிருந்து வந்துள்ளன என்பதனை உறுதிப்படுத்தும் சாசனச் சான்றுகளும் கிடைத்துள்ளன. அண்மையில் தமிழகத்தில் கொடுமணல் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது கிடைத்த தமிழ்ப் பிராமிச் சாசனச் சான்றுகளைப்போன்று 1980ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டையிலுள்ள கரையாம்பிட்டி என்ற மையத்தில் அகழ்வு செய்தபோது தமிழ்ப் பிராமிச் சாசன முத்திரை (வெண்கலமுத்திரை) ஒன்று கிடைத்திருந்தது. அதில் இருமொழிகளுக்காக இரு வரைபுகள் கொண்ட வரிவடிவம் பொறிக்கப் பட்டுக் காணப்பட்டது. அவற்றுள் ஒன்று தமிழ்ப்பிராமி ஆகும். கோவேதன் அல்லது கோவேதம் எனப் பொறிக்கப்பட்டுள்ள அம்முத்திரை வாசகம் அரசமுறை ஒன்றின் எச்சமாகவே ஆய்வாளர்களினால் நோக்கப்படுகின்றது. தமிழகத்திலுள்ள புகலூர்ப் பிராமிச் சாசனமொன்றில் கோஆதன் செல்லிரும்பொறை மகன் எனக் குறிக்கப்பட்டுள்ளமையை ஒத்து ஆனைக்கோட்டை முத்திரைச் சாசனத்தில் கோவேதன் என்ற அரசமுறை பொறிக்கப்பட்ட தன்மையையே காணமுடிகின்றது. பெருங்கற்கால ஈமப்புதையல் மையமாக ஆனைக்கோட்டையில் இம்முத்திரை மோதிரம் மனித எலும்புக்கூடு ஒன்றின் தலைப்பாகத்திலிருந்தே மீட்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. பெருங்கற்கால யாழ்ப்பாணத்தின் குழுநிலத் தலைவன் ஒருவனுடையதாகவோ அல்லது (நாகதீபராஜா எனப் பிராமிச் சாசனங்களில் குறிக்கப்பட்டுள்ள) யாழ்ப்பாணத்து அரசனொருவனுடைய எலும்புக் கூடாகவோ அது இருந்திருக்க முடியும் என வரலாற்று ஆசிரியர்களினால் கருதப்படுகின்றது. எது எவ்வாறு இருப்பினும் தென்னிலங்கையில் இதுவரையில் இவ்வாறான செம்பினாலான ஒரு முத்திரை மோதிரம் (தமிழ்ப்) பிராமி வரிவடிவம் பொறிக்கப்பட்டுக் கிடைத்திருக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தொல்லியல் பின்னணியில் யாழ்ப்பாணத்தில் கிடைக்கப்பெற்ற இம் முதற்தரச் சான்றாதாரமானது ஈழத்தில் கோன்மையின் தொன்மையை கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கு இட்டுச் செல்வதாகக் காணப்படுகின்றது.

மகாவம்சத்திற்கூட புத்தருடைய இலங்கைக்கான மும்முறை விஜயம் என்ற அத்தியாயத்தில் இரண்டாவது முறையாக நாகதீபத்துக்கு வருகை தந்த செய்தி குறிப்பிடப்படுகின்றது. இச்செய்தியின் வரலாற்று உண்மைத் தன்மை பற்றிய

விடயம் ஒரு புறமிருக்க, புத்தரின் நாகதீப விஜயத்திற்கான காரணமாக இரு நாக அரசர்களான மகோதரன், குண்டோதரன் ஆகிய இருவரும் சிம்மாசன உரிமைக்காகப் பரஸ்பரம் சண்டையிட்டுக் கொண்டிருந்தபோதே கௌதம புத்தர் நாகதீபத்திற்கு விஜயம்செய்து, அவர்களது சண்டையைத் தடுத்து நிறுத்தியதாக மகாவம்சச் செய்தி காணப்படுகின்றது. கௌதம புத்தருடைய நாகதீபத்திற்கான வருகை பற்றிய செய்தியில் எவ்விதமான வரலாற்று உண்மை காணப்படவில்லை ஆயினும், நாகதீப அரசு, சிம்மாசனம் பற்றிய செய்திகளை மகாவம்சத்தினூடாக அறிய முடிவது என்பது வரலாற்றுண்மைமிக்கதாகும். நாகதீப அரசிருக்கை ஒன்று யாழ்ப்பாணக்குடாநாட்டினுள் வலிமைபெற்று வந்துள்ளமையையே இலக்கிய, சாசன செய்திகள் வலுப்படுத்தியுள்ளன. அதனை மேலும் வலப்படுத்துவ தாகவே ஆனைக்கோட்டையில் கிடைத்த செம்பினாலான முத்திரைச் சாசனம் காணப்படுகின்றது. எனவே நாகவம்சத்து அரசிருக்கையாகவே 'தீபராஜாவினது' பிரதேசம் (யாழ்ப்பாணக் குடாநாடு) விளங்கியது என எஸ். பரணவிதான, கா. இந்திரபாலா ஆகியோர் கருதியது யதார்த்தமானது ஆகும். ஆனால் நாக வம்சத்தினரைப் பொறுத்தமட்டில் வட இலங்கையிலும், தென்னிலங்கையிலும், கிழக்கிலங்கையிலும் தனித்துவமாக செல்வாக்குச் செலுத்தியிருந்த முறைமையை இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் ஊடாகக் காணமுடிவதும் குறிப்பிடத்தக்க தாகும்.

இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்தும் அரசமுறை, அரச விருதுகள், ஆட்சிப் புலங்கள்

கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 4ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில், பல பிராந்தியச் சிற்றரசுகள் அநுராதபுர அரசுக்குப் பக்கம் பக்கமாக ஒன்றில் அநுராதபுரவரசின் மேலாணைக்குட்பட்ட வகையிலோ அல்லது சுதந்திரமாகவோ இயங்கியிருந்தன. இத்தன்மையை இலங்கையிற் கிடைத்த ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. கண காம(ம்), தீபராஜா, மசுதிக்கராஜா, பொக்கணிராஜா, பாசினராஜா, பிட்ட மஹாராஜா போன்ற பெயர்கள் கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் பிராந்திய அரசர்களுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளன. கணகாம(ம்) என்பது வணிகக் குடியிருப்புக்களைக் கொண்ட (கொடிகாமம் போன்று) ஒரு கிராமத்தினையே குறிப்பிட்டுநின்றது. வணிகக்குழுக்களுக்குரிய தலைவன் ஒருவன் அப்பகுதியை நிர்வகித்து வந்தமையை மிகிந்தலையில் கிடைத்த (இல.14, 25 கல்வெட்டுக்கள்) பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. எஸ்.பரணவிதான 'கண' என்ற பதத்தினை 'கிருஷ்ணா' என்ற வடமொழிச் சொல்லின் அடியாக அடையாளம் கண்டுள்ள முறை தவறானது. 'கணதெய்யோ' என்ற சிங்களத்திலுள்ள பதம் இற்றைவரைக்கும் கணபதியைக் குறிக்கவே பயன்படுத்தப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பொக்கணி என்ற பதம் சிறுபாறைக் குன்றுகளினால் உயர்ந்த மேட்டுநிலப் பரப்பினைக் கொண்ட பிரதேசத்தினைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்லாகும்.

தமிழில் பொக்கணை என வழங்கும் பதத்திற்கு சமமானது, புளியம் பொக்கணை, கற்பொக்கணை (கந்தரோடை) போன்று இன்று வழங்கும் இடப்பெயர்கள் வரலாற்றுக் காலத்தில் அரச மையங்களாகத் திகழ்ந்துள்ளன. கந்தரோடையில் உள்ள கற்பொக்கணையில் அரச மாளிகைத்திடல் காணப்படுவதும் இங்கு நோக்கத்தக்கது. வன்னிப் பிராந்தியத்திலுள்ள பிரதேச ஆட்சியாளர்களை பொக்குணிராஜா அல்லது பொக்கணிராஜா என்று அழைக்கப்பட்ட முறையையே (No. 814) பிராமிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

பாசினராஜா என்ற பதம் மிகவும் பிரசித்தம் வாய்ந்த ஒரு பிராந்தியத்தினை இலங்கை வரலாற்றில் குறித்து நிற்பதனைக் காணலாம். பாசினதேசம் எனப் பிற்பட்ட அநுராதபுர காலத்தில் வளர்ச்சியடைந்து வந்த மாகாண நிர்வாக முறைக்கு பாசின ராஜாவினது ஆட்சிப்புலமே அடிப்படையை இட்டுக் கொடுத்திருந்தது. இலங்கையில் மிகப் புராதன காலத்திலிருந்து இங்கு அரசு முறையும், அரசியல் நிறுவனங்களும் தோற்றம் பெற்று வளர்ச்சிபெற்று வந்திருந்தமையை எஸ்.பரணவிதான குறிப்பிட்டு உள்ளார். பாசின ராஜாக்கள் தமது விருதுப் பெயர்களை 'அய' (ஐய்யன்) எனக் கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. தென்னிந்தியாவில் சோழ வம்சத்தவர்கள் 'முத்திரையர்' (முத்திர + ஐய்யர்) எனக் கொண்டிருந்தமை போன்றே பாசினராஜாக்களும் 'ஐய்யன்' என்ற விருதுப் பெயர்களைத் தாங்கி ஆட்சி புரிந்துள்ளமையை பிராமிக் கல்வெட்டுக்கள் (No.814, 832, 833) நன்கு தெளிவாக எடுத்துக் காட்டு கின்றன. லொணபிஜய(ன்) சிவ(ன்) என்ற ஓர் இளவரசன் (Inscription No.29) மிகிந்தலையில் லொணவாபி என்றவோரிடத்தின் ஆட்சியாளனாக விளங்கியுள்ளான். மகாவம்சம் குறிப்பிடும் கிரிகண்ட சிவனுடன் இவ்விளவரசனை எஸ்.பரணவிதான அடையாளம் கண்டுள்ளமை நோக்கத்தக்கது. லொணவாபிப் பிரதேசத்தின் ஆட்சியாளன் இளவரசன் ஐய(ன்) சிவ(ன்) போன்றே எள்ளன் குளத்து ஆட்சியாளனாக (எள்ளன் + குளம் - எல்லாளன் + குளம்) யாழ்ப்பாணக்குடா நாட்டினுள் எல்லாளன் (பாளி - எலாரா) விளங்கியிருந்திருக்க வேண்டும்.

பூநகரியிலிருந்தும், கந்தரோடையிலிருந்தும் மிக அண்மைக்காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட மட்பாண்ட பிராமிச் சாசனங்கள் இப்பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்தியிருந்த அரச குடும்பங்களைப்பற்றி அறிவதற்கு உதவுவதாக உள்ளன. பூநகரியிலிருந்து ப. புஸ்பரட்ணத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வின்போது வேள் என்று தென்பிராமி வரிவடிவில் பொறித்துக் காணப்பட்ட மட்பாண்டம் கிடைக்கப்பெற்றது. சங்ககாலத் தமிழகத்தில் வேளிர் மரபினர் அரசியலில் பெருஞ்செல்வாக்குச் செலுத்தியிருந்தமையை இலக்கிய, நாணயச் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. அதிகமான் இளந்திரையன், நெடுமான் அஞ்சி ஆகியோர் வேளிர் மரபில் வந்த சிற்றரசர்கள் ஆவர். இவ்வம்சத்தின் ஒருகிளை பூநகரியிலும் செல்வாக்குச் செலுத்தியிருந்தமைக்கான சான்றாக வேள் என்ற வாசகம் பொறித்த மட்பாண்டம் கிடைத்துள்ளது. இலங்கையின் ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்களில் பல 'வேலு' என்று பரணவிதானவினால்

படிக்கப்பட்டவையாவும் 'வேள் என்றே வாசிக்கப்பட வேண்டும் எனத் தற்காலத்தில் ஆய்வாளர்கள் வற்புறுத்தியுள்ளமையிலிருந்து இலங்கை அடங்கலாக வேளிர் பரம்பரை அரச அதிகாரம் செலுத்தியிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் இலக்கம் 354, 355, 356, 357, 358, 359, 360 ஆகியன வேள் பரம்பரை பற்றியே குறிப்பிடுகின்றன. 360ஆம் கல்வெட்டுப் பொறிப்பில் வேள் சுமண(ன்) பற்றிக் குறிக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும். மகாவம்சத்தில் துட்டகாமணி காவியத்தில் வேலு சுமணன் பற்றிக் குறிக்கப்படுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. (ஔவைக்கு நெல்லிக்கனி வழங்கிய வேளிர் பரம்பரை இலங்கைத் தீவிலும் அதிகாரம் செலுத்தியிருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்).

தென்பிராமி வரிவடிவில் பொறிக்கப்பட்டுக் கிடைத்த ஆபதி என்ற வாசகத் துடனான மட்பாண்டம் ஒன்று கந்தரோடையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டமை யானது இலங்கையின் அரசியல் வரலாற்றிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஆபதி என்ற வாசகத்தின் பொருள் தலைவன், பசுக்களுக்குத் தலைவன், அரசன் என விரிவடைந்து செல்வதனைக் காணலாம். புகலூர் சாசனத்தில் இடம்பெறும் கோ.ஆதன் என்பது போன்று கந்தரோடைச் சாசனத்தில் ஆபதி என இடம் பெற்றிருப்பது அரச-நிர்வாக முறைமையொன்றுடன் தொடர்புபட்ட வகையில் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது. சங்க இலக்கியங்களில் ஆபதி எனப் பல்வேறு பொருளில் அப்பதம் கையாளப்பட்டிருப்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும். (முதலாம் விஜயபாகுவைக் குறித்த தமிழ்நாட்டு சோழர் கல்வெட்டு ஒன்றில் அம்மன்னனை நரபதி என்று குறித்திரப்பதும் இங்கு எடுத்துக் காட்டத்தக்கது).

கேகாலை மாவட்டத்திலுள்ள யட்டஹலேன என்ற ஓரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சிங்கள பிராமிச்சாசனம் (கி.பி.792) ஒன்றில் உள்ளூர் ஆட்சியாளர் களின் நான்கு தலைமுறை களைக் குறித்த மன்னர்களின் பெயர்களைக் கண்டுகொள்ள முடிந்தது. ராஜாதுஷத(ர)ன் என்பவனே அவ்வரசவம்சத்தினை ஸ்தாபித்தவனாகக் காணப்படுகின்றான். இவனுடைய சகோதரரான ஒருவன் 'தேவனாம்பிரிய' என்ற விருதுப்பெயர் கொண்டவனாகக் காணப்பட்டிருந்தான். ராஜாதுஷதர(னி)ன் மகன் ஐயன் சிவ(ன்) ஆகும். ஐயன் சிவ(னு)டைய மகன் ஐயன் துஸதர(ன்) ஆவான். இம்மன்னனே அச்சாசனத்தில் குறிப்பிட்ட குகையைத் தானம செய்த கமணி சிவனுடைய தகப்பனாவான். 786 இலக்கமுடைய வேறொரு சாசனத்தில் இவ்வரச குடும்ப ஸ்தாபகரை ஐய(ன்) துஷதர(ன்) என்றே குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் முதற்சாசனத்தில் (No.792) அப்பெயரையுடையவன் 'ராஜா' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு சாசனங்களின்படி நோக்குகையில் இவ்வரச குடும்பமானது அரச அந்தஸ்திற்குரிய முதன்மையான அதிகாரங்களையும், சலுகைகளையும் (Prerogatives of Royalty) கொண்டிருந்தமை நன்கு தெளிவா கின்றது. இரண்டாம் பிராமிச்சாசனத்தில் உபாஸிகா வேலு (வேள்?) என்பவன் ஐயன்துஷதர(னி)ன் மகனான ஐய(ன்) சிவ(னி)ன் மகனாவான் என அறிய முடிகிறது. இவ்விரு சாசனங்களின் அரசியல் வரலாறு முக்கியத்துவமானது

இரு அடிப்படைகளைக் கொண்டுள்ளது. 1. ராஜாதிராஜ(னி)ன் பெயர் இலங்கையின் பாளிமொழி இலக்கியச் சான்றுகள் எவற்றிலுமே இடம்பெற்றிருக்காத நிலையில் இவ்விரு சாசனப் பொறிப்புக்களில் மட்டுமே இடம்பெற்றிருப்பது. 2. 'தேவநாம்பிரிய' என்று இச்சாசனத்திலும், அதிக எண்ணிக்கையிலான வேறுசாசனங் களிலும் அவ்விருதுப் பெயர் இடம்பெற்றிருக்கும்போது பாளிமொழி வரலாற்று நூலான மகாவம்சத்தில் திஸனுக்கு மட்டுமுரிய விருதுப் பெயராக 'தேவனாம்பிரிய' அமைந்திருப்பது. இதனை நன்கு அவதானித்த எஸ்.பரணவிதான தேவநாம்பிரிய என்று இச்சாசனத்தில் வரும் விருதுப் பெயருக்குரிய மன்னனான தேவநம்பியதிஸனையும் அடுத்த சாசனத்தில் இடம்பெறும் கமணி என்ற விருதுப் பெயருக்குரிய மன்னனாக துட்டகாமணி மன்னனையும் அடையாளம் கண்டு, சமகால அநுராதபுரி நகரில் எல்லாள மன்னனுடைய ஆட்சியையும் எடுத்துக் காட்டுகின்றார். எல்லாள மன்னன் 44 வருடங்கள் அநுராதபுரத்தினை நிர்வகித்த போது 'கமணி' விருதிற்குரிய துட்டகாமணி மன்னன் கோகாலைப் பகுதியில் ஆட்சி புரிந்திருக்கவேண்டும் என்ற வரலாற்றுச் செய்தியையே அவ்விரு சாசனங்களும் தெளிவுபடுத்துவதாக எஸ்.பரணவிதான குறிப்பிடுகின்றார். இவ்விரு சாசனங்களின் வரலாற்று முக்கியத்துவத்தின் இன்னொரு அம்சம் என்னவெனில் எல்லாள மன்னனுடைய சமகாலத்தவனான (துட்ட) காமணியின் குடும்பத்துடன் வேலு(ள்) குடும்பம் ராஜீயத தொடர்புகளையும், உறவினையும் கொண்டிருந்தமை யாகும். (துட்ட) காமணியின் கொள்ளுப்பேரான மூத்த சிவனுடைய வம்சாவழியில் வேளிர் குலமரபு நன்கு இணைந்து காணப்பட்டிருந்தமையை இவ்விரு சாசனங் களும் எடுத்தியம்புகின்றன. அநுராதபுர அரசின் கீழ் ஏனைய சிற்றரசுகள் இணைவதற்கு முன்னுள்ள காலப்பகுதியில் வேளிர் அரச குடும்பத்தினர் தமிழ் நாட்டைப் போன்று இலங்கையிலம் நன்கு செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பதே வரலாற்றுச் சிறப்பு ஆகும்.

கீரன் வம்சத்தைச் சேர்ந்த உள்ளூர் ஆட்சியாளர்களும் அரச வம்ச ஆதிக்கத்தில் இலங்கையின் தென்பகுதியில் இருந்தமைக்கான பிராமிச் சாசனங்கள் கிடைத்துள்ளன. உரோகணப் பிரதேசத்திலுள்ள கிரிமகுல் கொல்ல(லை) என்ற மையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிராமிச் சாசனம் ஒன்று (No.768) அச்செய்தியைத் தருகின்றது. இச்சாசனத்தில் ஐய(ன்) மகாசிவன் என்பவன் ஐயன் சேரன் (கீரன்) என்பவனுடைய மகனாகக் காட்டப்பட்டுள்ளான். எஸ்.பரணவிதான கீரன் என்ற பெயரையே கேர (Kera) என எடுத்துக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்ட மகாசிவனே இச்சாசனத்திலும் குறிப்பிடப்பட்ட ஐயன் மகாசிவன் ஆவான். ஆனால் அவன் அநுராதபுரத்து ஆட்சியாளனாக வருவதற்கு முன்னர் அவனுடைய பெயரும் விருதும் இப்பிராமிச்சாசனத்தில் பொறிக்கப்பட்டதாக எஸ்.பரணவிதான குறிப்பிடுகின்றார். மகாசிவனுடைய தந்தையாக இச்சாசனத்தில் குறிப்பிடப்படும் ஐய(ன்) கேர(ன்) என்பவனுடைய பெயர் தீபவம்சத்தில் கீர(ன்) என்றே காணப்படுவதாக எஸ்.பரணவிதான உறுதிப்படுத்தி யுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (தீபவங்ஸ: Chap.XI. 6-7) தீபவங்ஸத்தில் கீரன் மூத்த

சிவனுடைய மகனாகக் காட்டப்பட்டுள்ளான். தமிழகத்தில் சமகாலத்தில் ஆட்சியில் விளங்கிய இளங்கீரன், நெடுங்கீரன் போன்றோருடைய சங்ககாலப் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவர்களாக மூத்த சிவனுடைய வம்சாவழித் தொடர்புகள் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. கீரன் என்ற உள்ளூர் ஆட்சியாளனின் பெயர் தோற்றமும் அதனையே உறுதிப்படுத்தியுள்ளது.

பிராமிச்சாசனம் இல. 37 முதன்முறையாக தீபராஜா பற்றி அறிமுகப்படுத்துகின்றது. தீபராஜாவினுடைய மகனான மகாம்பி(ை)கா? மிகிந்தலையில் ஒரு குகையைத் தானம் செய்ததாக இச்சாசனம் பதிவுசெய்துள்ளது. எஸ்.பரணவிதானவின் கருத்துப்படி தீபராஜா என்ற பதத்தின் பொருளானது தீவினுடைய அரசன் என்பதாகும். இப்பொருளில் இலங்கைத் தீவினது அரசன் என்றும் பொருள் கொள்ளமுடியும். ஆனால் சமோக விநோதினி என்ற சிங்கள உரைநூல் ஒன்றில் தீபராஜா என்ற விருதானது நாகதீப ஆட்சியாளனையே சுட்டி நிற்பதனைக் காணலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பரப்பினையே நாகதீபம் என்ற பதம் குறித்து நிற்கின்றது.

எஸ்.பரணவிதான நாகதீப அரசினுடைய கோன்மை தொடர்பாக பின்வரும் ஐதீகம் ஒன்றினைக் குறிப்பிட்டுள்ளார். அவ் ஐதீகம் இவ்வாறுள்ளது:-

'அநுராதபுரியை ஆட்சிசெய்து கொண்டிருந்த மன்னன் ஒருவன் தனது மனைவிமார்களில் ஒருத்திக்கு அவளுடைய மூத்த மகனுக்கு இந்நாட்டின் அரச பதவியை தனக்குப் பின் தருவதாக வாக்குறுதியளித்திருந்தான். ஆனால் அவ்விளவரசன் கோழிச்சண்டை ஒன்றை போட்டி நிகழ்வொன்றில் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் ஒரு கண்ணின் பார்வையை இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய சம்பவம் இடம்பெற்றது. ஆனால் அவ்விளவரசனுடைய தாயார் மன்னன் வாக்குறுதியளித்தபடி தனது மகனுக்கு அரசுப்பட்டம் தரவேண்டும் என வற்புறுத்தினான். இதனால் அங்கயீனமான இளவரசனை நாட்டின் மன்னனாக நியமிப்பதில் உள்ள சிக்கலை அவன் தனது மனைவிக்கு எடுத்துக் கூறியிருந்தும் அவள் அதனை ஏற்க மறுத்து நின்றதோடு, அரசனை கொடுத்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்துமாறும் வற்புறுத்தி வந்தாள். இதனால் அவளை ஓரளிற்கேனும் திருப்திப்படுத்து முகமாக நாகதீபத்திற்கு ஆள்பாதியாக அவ்விளவரசனை மன்னன் நியமித்தான். இம் மன்னனையே தீபராஜா என வரலாற்று வரன்முறைகள் குறிப்பிடுகின்றன'. துரதிஷ்டவசமாக அவ்வரன்முறை நூல்களில் அந்த அநுராதபுர ஆட்சியாளனது பெயரோ அல்லது ஒற்றைக் கண்ணையுடைய நாகதீப ஆட்சியாளனது பெயரையோ அல்லது தீபராஜா என்ற நிர்வாகப் பதவி அவ்வொற்றைக் கண்ணையுடைய இளவரசனுக்காக மட்டும் உருவாக்கப்பட்டதா அல்லது புராதன காலம்தொட்டே அத்தகைய ஓர் ஆட்சிமுறை நிலவி வந்ததா போன்ற வினாக்களையிட்டு தரவுகள் எவையும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் மிகிந்தலைக் கல்வெட்டின் வரிவடிவ அமைப்பினைக் கொண்டு கி.மு. 2ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கும் கி.பி. 1ஆம் நூற்றாண்டின இறுதிவரைக்குமுள்ள காலப்பகுதிக்குரியதென எஸ்.பரணவிதான கருதுகின்றார்.

பெரிய புளியங்குளத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிராமிக் கல்வெட்டானது (No. 338) இரு அரசகுடும்ப திருமணத் தொடர்புகளின் விபரங்களையும் பேரரசனின் பட்டத்து ராணியினுடைய தகப்பனாரது அரசவம்சத் தொடர்புகளையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ராஜா உதியினுடைய மனைவியான அபிஅனுரதி என்பவள் ராஜாநாகனுடைய மகளாவாள் என்பதும், தீசன் ஐயனுடைய மனைவியான அபி சவேரா என்பவள் மஹாதீசன் ஐயன் என்பவனுடைய மகளாவாள் என்பதும் (No 556 - 560) அப்பிராமிக் கல்வெட்டுக்களினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதேநேரத்தில் பம்பரஹல என்ற மையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிராமிக் கல்வெட்டொன்றில் (No 814) உபாஸிக தத்த என்பவள் ஒரு பிராமணனுடைய மகளாவாள் என்பதும், அவன் பொக்கணி ராஜா நாகையாவை திருமணம் செய்திருந்தான் என்பதும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. எனவே கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்த காலங்களிலிருந்தே பிராமண - சத்திரிய திருமணத் தொடர்புகள் இலங்கையில் ஏற்பட்டிருந்தன என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளமுடிகிறது.

பிராமிக் கல்வெட்டுக்களினூடாக இலங்கையின் கோன்மையுடன் இணைந்த வகையில் தொழிற்பட்டிருந்த நிர்வாகிகளுடன் விருதுப்பெயர்களையும், நிறுவனங் களையும் அடையாளம் காணமுடிவதும் குறிப்பிடத்தக்கது. பிராமிக் கல்வெட்டுக் களில் இடம்பெறும் தனிப்பட்டோருடையதும், நிர்வாகிகளதும் பெயர்கள் அவரவர்கள் வகித்திருந்த பதவிப் பெயருடன் இணைத்துக் குறிக்கப்பட்டமை யிலிருந்தே அத்தகைய நிர்வாக நிறுவனங்களைப் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பாயிற்று. இவற்றுள் மிகவும் உச்சமானதும் அடிக்கடி இடம்பெறும் பதவிப் பெயராகவும் அமைவது சேனாதிபதி என்பதாகும். செனபதி அல்லது செனபிதி என்ற பதங்களே சேனாதிபதியைக் குறிப்பதற்கு பிராமிக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட சொற்களாகும். கல்வெட்டு இலக்கம் 1161இல் தானம் வழங்கியவரான மஹரக அபய(ன்) என்பவர் செனபதி அசேலய்ய(ன்) என்பவருடைய பேரனாகும் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பாளிமொழி வரலாற்று நூல்களில் மஹரக அபய(ன்) செனபதி அசேலய்ய(ன்) ஆகிய இருவரினதும் பெயர்கள் எந்த ஒரு வடிவத்திலும் இடம் பெற்றிருக்காதமையினால் இவ்விருவர்களையும் அடையாளம் காணமுடியவில்லை என எஸ்.பரணவிதான குறிப்பிட்டுள்ளார். பிராமிச் சாசனம் இலக்கம் 1013இல் பெயர் குறிப்பிடப்படாத சேனாதிபதி ஒருவனுடைய மகனாக படும பத்ம(ன்) என்பவன் குறிப்பிடப் பட்டுள்ளான். இலங்கையைப் பொறுத்தவரையில் சேனாதிபதி பதவியானது சத்திரிய வம்ச பாரம்பரியம் கொண்டதாகவோ அல்லது மரபுரீதியான வம்சத் தொடராகவோ நிலவிவந்ததாக எண்ணுவதற்கு எத்தகைய சான்றுகளும் கிடைக்கவில்லை. விதிவிலக்காக துட்டகாமணி காலத்துச் சேனாதிபதி பதவியைக் கொள்ளவேண்டிய ஒரு நிலையும் காணப்படுகின்றது. மஹாசேனாதிபதி என்ற விருதில் துட்டகாமணி மன்னனுடைய தளபதி விருது அழைக்கப்பட்டது. மகாவம்சடீகா என்ற பாளி உரை நூலின்படி அக்கருத்தினை உறுதிப்படுத்திக கொள்ள முடிகிறது. ஆனால் பிராமிக்கல்வெட்டு இலக்கம் 251இல் திஸ -

மஹராஜாவின் ஆட்சிக்காலத்தில் மஹாசேனாதிபதி ஒருவனுக்கு அம்மன்னன் வழங்கியிருந்த தானக் கொடை பற்றிப் பொறிக்கப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். ஆனால் அச்சேனாதிபதி அரச விருதுகளோ அல்லது அரசவம்சத்துடனான தொடர்புகளோ அச்சாசனத்தில் எடுத்துக் குறிக்கப்பட்டிருக்க வில்லை. இதனால் அந்த திஸ-மஹாராஜாவிற்கு முன்னிருந்தே இம் மஹாசேனாதிபதி என்றநிலை காணப்பட்டிருக்கவேண்டும் என வரலாற்று ஆசிரியர்களால் கருதப்படுகிறது. எஸ்.பரணவிதான இச்சாசனத்தில் இடம்பெறும் மஹா சேனாதிபதியை துட்டகாமணி மன்னனுடன் அடையாளம் கண்டுள்ளார். துட்டகாமணி மன்னன் அநுராதபுர ஆட்சியாளனாக விளங்கிய எல்லாளனுக்கு எதிராக பல சேனாதிபதிகளின் தலைமையில் பல படைப்பிரிவுகளைக் கையாண்டமையின் பின்னணியில் துட்டகாமணியே மகாசேனாதிபதியாக விளங்கினான் என பரணவிதான விளக்குவதனைக் காண்கிறோம்.

கதிர்காமத்துக்கு அண்மையிலுள்ள போவத்தெகல என்ற இடத்திலிருந்து மீட்கப்பட்ட பிராமிச்சாசனங்கள் (இல. 549, 550, 551) பத்து சகோதர அரசர்கள் (Ten brothers kings) பற்றிய முக்கியமான செய்தியைத தருகின்றன. இச்சாசனங் களில் பயன்படுத்தப்பட்ட ஜாவஹ-நாய(ர்) என்ற விருதுப் பெயரானது மலேசியாவிலிருந்து தருவிக்கப்பட்ட /வருவிக்கப்பட்ட படைத்தளபதிகளைக் குறிப்பிடுவதாக பரணவிதான கருதுகின்றார். உரோகண ஆட்சியாளர்கள் மலேசியாவைச் சேர்ந்த படைப்பிரிவுகளைப் பெற்று தம்நாட்டு பாதுகாப்புக் கடமைகளில் அவற்றை ஈடுபடுத்தியிருக்கவேண்டும். என அவர் மேலும் வற்புறுத்துகின்றார். எனவே புராதன இலங்கையில் சேனாதிபதி பதவி என்பது மரபுரிமை சார்ந்ததாகவோ அல்லது ஸத்திரிய கோத்திரத்தைத் தழுவியதாகவோ அமையவில்லை என்பது தெளிவாகின்றது.

பிராமிக்கல்வெட்டுக்களில் காணப்படும் இலங்கையின் நிர்வாக நிறுவனங்களில் இரண்டாவது பாண்டகாரிகா எனக் குறிக்கப்படும் பண்டகசாலைக் காப்பாளர் / பொறுப்பாளர் பதவி என்பதாகும். பருமகர்கள் என்றழைக்கப்பட்ட பெருமக்களும், ´மிகர்கள் என்றழைக்கப்பட்ட குளச்சொந்தக்காரர்களுமே பாண்டகாரிகா பதவியைப் பெருமளவிற்கு வகித்தவர்களாக உள்ளனர். பிராமிக் கல்வெட்டு இல.621இல் மன்னனுக்குக் கீழ் திறைசேரிக் காப்பாளனாக படகாரிகராக நியமிக்கப்பட்ட செய்தி குறிப்பிடப்படுவதனைக் காணலாம். இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்ட பாண்டகாரிகா எல்லோரும் அந்நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய உத்தியோகத்தவர்கள் அல்லர். பிராமிச்சாசன இலக்கம் 22இல் பண்டகசாலைப் பொறுப்பதிகாரியாக விளங்கிய அவ்வுத்தியோகத்தர் அதே நிறுவனத்தில் கடமை புரிந்த ஒருவருடைய மகனாவார் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இந்த ஒரேயொரு கல்வெட்டில் மட்டும் இவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது. ஏனைய கல்வெட்டுக்களைப் பார்க்கும்போது இப்பதவியானது மரபுவழிவந்ததாக அமைந்திருக்கவில்லை என்பது புலனாகின்றது. பிராமிச்சாசன இலக்கம் 1192இல் படகாரிக (பண்டகசாலைக் காப்பாளர்) அமாத்திய எனக் குறிக்கப்பட்டுள்ளமையைக்

காணலாம். சாசன இலக்கம் 1035இல் படகாரிக என்ற பதவியானது பணித்த (Pranihita) என்ற நிலையினூடாக (வைப்புப்பணம் செலுத்தியதன் ஊடாக) தொழிற்பட்டிருந்தமையைக் கண்டுகொள்ளமுடிகிறது. இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவமானது இரு அடிப்படைகளில் இலங்கை வரலாற்றிற்கு உதவுவதாக உள்ளது. அதாவது மன்னனுடைய திறைசேரி இருப்புகளில் இரண்டு வகையான குகைகளின் ஈட்டம் காணப்பட்டது என்பதாகும். 1. நாளாந்த அரசியல்-வாழ்வு நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்கு உதவுவதற்கான ஒரு நிதியீட்டம், 2. அவசரகால நடவடிக்கைகளுக்கான பிறிதொரு நிதியீட்டம். இவை இரண்டும் புராதன இலங்கையின் நிர்வாக நிதிமுகாமைத்துவத்தில் பேணப்பட்டிருந்தன என்பது தெளிவாகின்றது. இந்தியாவில் விஜயநகரப் பேரரசிலும் இவ்வகையான நிதி நிர்வாகம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

புராதன இலங்கையின் நிர்வாக நிறுவனங்களுள் 'மஹாமாத்ர' என்ற பதவிப் பெயரும் ஒன்றாகும். பிராமிக்கல்வெட்டு இலக்கம் 268, 269 ஆகியனவற்றில் மஹத்த பாமதத்த(ன்) என்று இடம்பெற்றிருப்பதானது மஹாதிமத்ர(ர்) என்ற பிராகிருதப் பதத்தின் திரிந்து வடிவமே என எஸ்.பரணவிதான கருதுகின்றார். விநயபிடக என்ற பௌத்த குருமாருக்குரிய ஒழுக்கவிதி பற்றிக் குறிப்பிடும் பாளிநூலில் 'மஹாமத்த' என்ற நிர்வாக நிறுவனம் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மௌரியப் பேரரசில் சிறப்பாக அசோகனது நிர்வாகமுறையில் மஹாமாத்திரர்கள் பிரதான நிர்வாகிகளாக விளங்கியிருந்தமையை கிர்னார் பாறைக்கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. மூன்று அடிப்படையிலான மகாமாத்திரர்கள் அங்கு கடமையில் இருந்தனர். அவையாவன : 1. சப்பத்திக்க (Sabbattthika) என்றழைக்கப்படும் சிவில் நிர்வாகத் தொடர்பாளர்கள் 2. வொகாகரிகள் (Voharikas) என்றழைக்கப்படும் நீதி - நிர்வாகத் தொடர்பாளர்கள் 3. சேனானாயக்கர்கள் (Senanayakas) என்றழைக்கப்படும் இராணுவ உத்தியோகத் தொடர்பாளர்கள் என்பவையே அவையாகும். இவற்றுள் புராதன இலங்கையில் இருந்த பிரிவு சேனானாயக்கர் என்பதேயாகும்.

புராதன இலங்கையின் நிர்வாக நிறுவனங்களுள் அடுத்து பிராமிச்சாசனங் களால் அறியப்படுவது அமாத்திய என்பதாகும். இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக் களில் அவை அமத்த (Amatta) என்றே பொறிக்கப்பட்டுள்ளன. பிராமிச்சாசன இலக்கம் 161இல் பெருமகன் ஸகய(ன்) என்பவன் அமாத்தியன் எனக் குறிக்கப் பட்டுள்ளான். சாசனம் 797இல் படகு - அமாத்திய என்பவன் தானம் வழங்கியவனாகக் குறிக்கப்பட்டுள்ளான். சாசன இலக்கம் 1202இல் மந்திரியான வஹித்தி (வயித்தி?) என்பவனுடைய மகன், பேரன் ஆகியோர் அமாத்தியர் எனக் குறிக்கப்பட்டுள்ளனர். சாசன இலக்கம் 1064இல் அய(இளவரசன், அவனது பெயர் : மகாசேன) ஒருவன் ஓர் உபராஜாவினுடைய மந்திரியாகக் கடமை ஆற்றினான் எனக் குறிக்கப்பட்டுள்ளது. சாசன இலக்கம் 1192இல் அமாத்திய அஹலிய(ன்) என்பவன் பண்டகசாலைப் பொறுப்பதிகாரியாக விளங்கினான் எனக் குறிக்கப்பட்டுள்ளது. வடமொழியில் அமாத்திய எனவும் பாளியில் அமெச்செ

(அமைச்சு) எனவும் பழைய சிங்களமொழியில் ஆமதி எனவும் தமிழில் அமைச்சர் எனவும் குறிக்கப்படும் பதங்கள் ஒரே பொருளையுடைய பல சொற்பிரயோகங்களாகும். யாழ்ப்பாணக்குடாநாட்டினுள் வல்லிபுரக் கோவிலில் கிடைத்த கி.பி.4ஆம் நூற்றாண்டுக்குரிய பொற்பிராமிச் சாசனத்தில் அமெச்சே எனக் குறிக்கப்பட்டிருப்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

ஆதி இலங்கையின் இன்னோர் நிர்வாகத்துறையாக விளங்கிய அம்சம் நகர- குத்தியா (Nagara Gutiya) என்பதாகும். சாசன இலக்கம் 1219இல் தானம் வழங்கிய நபரின் பெயர் இல்லாது அவரது உத்தியோகபூர்வ நிறுவனமான நகர-குட்ட எனப் பொறிக்கப்பட்டுள்ளது. சாசன இலக்கம் 230இல் தானம் வழங்கியவரான பெருமகன் தத்த(ன்) என்பவர் நகர-குட்டிய உத்தியோகத்தர் ஆவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர-குட்டிய என்ற பதவிப பெயரானது பாளிமொழி இலக்கியங்களில் நகர-குட்டிக என இடம்பெற்றுள்ளமையும் நோக்கத்தக்கது. மகாவம்ச நூலின்படி, அநுராதபுரத்தை உருவாக்கி பண்டுகாபயனேநகர - குட்டிக என்று அழைக்கப்பட்ட நகர பாதுகாவலர் பதவியையும் உருவாக்கி வைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவம்சத்தின்படி அநுராதபுர தலைநகரின் மெய்ப்பாதுகாவலனாகவே நகர-குட்டிக என்ற நிர்வாகி தொழிற்பட்டிருந்தார் என அறியமுடிகிறது. ஜாதகக் கதைகளிலும் நகர-குட்டிக என்ற பெயர் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தில் தலைநகரைப் பாதுகாக்கின்ற வீரனை நாகரசு என்றும், அவனுடைய மேற்பார்வையின் கீழ் ஸ்தானிகர் என்று அழைக்கப்படும் நகரத்தின் நான்கு மூலைகளிலும் கடமைபுரியம் உத்தியோகத்தர்களும் கடமை புரிந்ததாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரகால நிர்வாகமுறை

அநுராதபுரகால சிங்கள மன்னர்களுள் பெரும்பாலானோர் இலங்கை முழுவதனையும் தமது ஆளுமைக்குள் கொண்டுவருவதற்கு முயற்சித்திருந்த போதிலும், அம்முயற்சியானது பெருமளவிற்கு கொள்கையளவிலே இருந்த தொழிய, நடைமுறையில் காணப்பட்டிருக்கவில்லை. மிகவும் பலம்வாய்ந்த - ஆளுமைமிக்க ஆட்சியாளர் காலத்தில் மட்டும், ஒரு குறிப்பிட்ட காலகட்டப் பரப்பிற்குள்ளேயே இலங்கை முழுவதும் ஓராணைக்குள் உட்படுத்தப்பட்டிருந்தாலும் அவ்வாறான நிகழ்வுகள் மிகவும் அரிதாகவே காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அநுராதபுர அரசியல் வரலாற்றில் வம்ச-வாரிசுரிமைப் பிரச்சினைகள் அடிக்கடி நிகழ்ந்ததன் பின்னணியில் அக்காலத்தில் வலுவான அரசியல் நிறுவனங்கள் வளர்ச்சிபெற்றிருக்க முடியாத ஒரு சூழ்நிலையும் காணப்பட்டது.

வரலாற்றுக்கால வளர்ச்சியுடன் அநுராதபுரத்தில் காலப்போக்கில் குறிப்பிடத்தக்களவில் நிர்வாக அலகுகள் பல தோற்றம்பெற்று, படிப்படியான பரிணாம வளர்ச்சிப் பாதையில் வலுவடைந்து சென்றிருந்தமையைச் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. கி.பி. 6ஆம் நூற்றாண்டின் முதற்காற்பகுதியில் அவ்வாறான நிர்வாக அலகுகளில் மூன்று தனித்துவமான வளர்ச்சியைக் கண்டிருந்தன. சிலாகால மன்னன் (கி.பி. 518 - 31) தனது மூத்த இரு புதல்வர்களது

பொறுப்பில் இரண்டு பிரதான மாகாணங்களை அவரவர் நிர்வாக ஆளுகைக்குக் கீழ் ஒப்படைத்துவிட்டு, எஞ்சிய மூன்றாவது அலகினை தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் வைத்திருந்தமையை சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன.

முதன்முதலாக சிலாகாலன் தனது மூத்த மகனான மொகல்லானனின் பொறுப்பில் தலைநகருக்குக் கிழக்கே காணப்பட்ட பரப்பினையும், இரண்டாவது மகனின் பொறுப்பில் தலைநகருக்குத் தெற்கே காணப்பட்ட தக்கணதேசத்தையும் ஒப்படைந்திருந்தமையைக் காணமுடிகிறது. சிலாகால மன்னன் இறந்து இரு தசாப்த கால எல்லைக்குள் மேலும் நான்கு நிர்வாக அலகுகள் புதிதாகத் தோற்றம் கண்டிருந்தன. உத்தர தேசம் (வடக்கு), பச்சிம தேசம் (மேற்கு), பாசின தேசம் (கிழக்குப் பகுதி), தக்கிண தேசம் என்பவையே அவையாகும். இவை நான்கினுள் தக்கண தேசம் பரப்பால் மிகவும் பெரியதாகும. முதலாம் அக்கிரபோதி மன்னனின் காலத்திலிருந்து தக்கணசேத்தின் நிர்வாகப் பொறுப்புக்கள் மாபா அல்லது மாயா என்பவனிடம் ஒப்படைக்கப்பட்டது. 'மாயா'வின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசமாகையால் அப்பகுதி பின்னர் மாபா மஹபா அல்லது மாயா (மஹயா)ரட்ட என அழைக்கப்பட்டது. இந்நிர்வாகப் (பதவியானது) பிரிவானது அநுராதபுர மன்னனுடைய நேரடி நிர்வாக ஆளுகைக்கு உட்பட்டிருந்த இராசரட்டைக்கு நேரெதிராக அமைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து இராசரட்டை நிர்வாகப் பிரசேத்திற்கு இணையாக உரோகண(ம்) என்ற தனித்துவமான நிர்வாகப் பிரதேசமும் உருவாக்கப்பட்டது. புராதன இலங்கையின் முப்பெரும் நிர்வாகப் பிரிவுகளில் உரோகணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிர்வாக - அரசிருக்கையாகத் திகழ்வதற்குரிய வாய்ப்பும் ஏற்பட்டிருந்தது.

இலங்கைத்தீவு முழுவதன் நிர்வாக ஒருங்கமைப்புக்கான அரசியல் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக அநுராதபுரகால மன்னர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் குறிப்பாக வலுவடைந்திருந்த உள்ளூர்ப் பிராந்திய ஆட்சியாளர்களுடன் கடுமையாக மோதவேண்டியிருந்தது. ஆனால் உரோகணத்தைப் பொறுத்தவரையில் அப்பிரதேச ஆட்சியாளரின் நடவடிக்கைகள் ஏனைய பிராந்திய ஆட்சியாளரின் நடவடிக்கைகளைவிட, தனித்துவமானதும், சுயவிருப்பு- வெறுப்புக்களைத் தனித்துவமாக இனங்காட்டக் கூடிய வகையில் அமைந்திருந்தமையையும் கண்டுகொள்ள முடிந்தது. வம்சாவழி அடிப்படையிலான முரண்பாடுகளும், அரச வாரிசுரிமை முரண்பாடுகளும், தென்னிந்தியாவிலிருந்து ஏற்பட்ட படையெடுப்புக்களும் அநுராதபுர மைய அரசினை அச்சுறுத்தியிரந்த வேளைகளில் ரோகண நிர்வாக ஆள்புலமே அதற்கான தாக்கத்தணிப்புப் பிராந்தியமாக விளங்கி வந்துள்ளது. அநுராதபுர அரச நிர்வாக, அதிகாரவரம்பினைக் குன்றாது தொடர்ந்து பாதுகாத்து - நிலைகொள்ள வைத்த ஒரு பிராந்தியமாக உரோகணம் தொழிற்பட்டிருந்தமையை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

உரோகணப் பிரதேசமானது இலங்கையாட்சியாளர்களின் குறிப்பாக அநுராதபுர கால ஆட்சியாளர்களின் முகப்புப்பாலமாக (Bridge Head) விளங்கியிருந்தமையைக்

காண்கின்றோம். வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களினால் கவிழ்க்கப்பட்ட அநுராதபுர ஆட்சியாளருக்கும், அரச குடும்பத்தினருக்கும் புகலிடம் வழங்கும் சிறப்புப் பிரதேசமாகவும், அந்நியர் ஆளுகைக்குட்பட்டிருந்த வேளைகளில் அநுராதபுரத்தை மீட்டெடுப்பதற்கு உதவும் முகப்புத்தளமாகவும் அநுராதபுர ஆளுமையில் ஏற்படும் இன-மத முரண்பாடுகளுக்கு தீர்வுகாணப்படும் மையமாகவும் உரோகணம் விளங்கி வந்துள்ளது. இலங்கையின் வரலாற்று வளர்ச்சியின் மிகக்கூடுதலான காலப் பகுதியில் உரோகணத்தின் பங்கு - பணியும் காலத்துக்குக்காலம் வேறுபட்டுக் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதாவது பிரதான ஆளுகைப் பிரதேசமான அநுராதபுரம் மிகச்சுதந்திரமான நிலையில் இயங்கியபோது உரோகணத்தின் செயற்பாடு ஒருவிதமாகவும், அநுராதபுர அரசு இன்னொரு வம்சததினதோ அல்லது ஆக்கிரமிப்பாளரது மேலாதிக்கத்தின் கீழ் விளங்கியிருந்த சமயத்தில் உரோகணத்தின் செயற்பாடு வேறொருவிதமாகவும் அமைந்து கொண்டிருந்த மையைக் காணமுடிந்தது.

உரோக இராச்சியத்தின் தனித்துவமான செயற்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கு சிலாகாலனது ஆட்சிக்கால நிர்வாக நடவடிக்கைகளை உதாரணமாகக் கொள்ளலாம். அதாவது சிலாகாலனது (கி.பி. 518 - 31) ஆட்சிக்காலம் முழுவதிலும், பின்னர் அவனது வாரிசுகளின் ஆட்சிக்காலங்களிலும் மகாநாகன் என்பவன் உரோகணப் பகுதியின் மேலாண்மையைப் பெற்று விளங்கியிருந்தான். அம்மேலாண்மையானது ரோகணத்தில் முதலில் (Rebel) கிளர்ச்சிக் கலகக்காரன் என்ற அடிப்படையிலும், பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள்பதி என்றவோர் அடிப்படையிலம் மகாநாகனுக்கு கிடைத்திருந்தது. ஆனால் அநுராதபுரத்தில் மகாநாகன் தன்னை மன்னனாகப் பிரகடனம் செய்த கையோடு (கி.பி. 569 - 71) உரோகண்ம உட்பட இலங்கையின் முழுப்பரப்பினையும் தனது நேரடியாளுகைக்கு உட்படுத்தி இருந்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இம் மன்னனைத் தொடர்ந்து ஆட்சிக்குவந்த முதலாம், இரண்டாம் அக்கிரபோதி மன்னர்களின் ஆட்சிக்காலங்களிலும் உரோகணம் நேரடியாக அநுராதபுரத்துடன் இணைக்கப்பட்டிருந்தமையைக் காணலாம். ஆனால் அநுராதபுரத்தில் ஆட்சி அதிகாரத்திற்காக கலகங்கள் ஆரம்பிததவுடன் உரோகணம் தனது கட்டுப்பாட்டை அநுராதபுரத்திலிருந்து விடுவித்துக்கொண்டு, சுதந்திரமான உள்ளூர் ஆட்சியாளரின் தலைமையில் தன்னை நிர்வகித்துக் கொண்டு சென்றமையைக் காணலாம்.

முற்பட்ட அநுராதபுரகால அரசியல் முறையில் இராணுவக் கட்டமைப்பு முறை நடைமுறையில் இருந்தமைக்கான சான்றுகளைக் காண்பது மிக அரிதாக உள்ளது. விதிவிலக்காக ஒரு சிறிய இராணுவக் குழுவினரே மன்னனையும், அரச குடும்பத்தையும், அரண்மனையையும் பாதுகாப்பதற்காக கடமையில் ஈடுபட்டிருந்தனர் எனப் புலப்படுகின்றது. ஆனால் காலப்போக்கில் வெளிநாட்டு வர்த்தக - அரசியல் தொடர்புகளின் நிமித்தமாக, சிறப்பாகத் தென்னிந்தியத் தொடர்புகளின் விளைவாக அநுராதபுர அரசில் கூலிக்குப் போர்வீரர்களை ஈடுபடுத்தும் வழக்கம் உருவாகியிருந்தது. அநுராதபுரத்தில் ஒரு நிலையான படைக் கட்டமைப்பு கி.பி. 6ஆம் நூற்றாண்டளவிலேயே உருவாகியிருந்தது

எனக் குறிப்பிடமுடியும். தலைநகரில் மத்திய அரசினது ஆணைகளை நடைமுறைப் படுத்தக்கூடிய வகையில் அமைந்த 'இருப்பான படையமைப்பு' நடவடிக்கைகளில் இருந்தும் அவை நிலைகொண்டுள்ள தளத்திலிருந்தும் வெகுதொலைவில் உள்ள மாகாண ஆட்சியாளர்களின் விளிம்போரங்களிலேயே கூலிப்படைகள் நிலைகொண்டிருந்த முறையினைக் காணமுடிந்தது. அதேநேரத்தில் அநுராதபுரத்திலிருந்து தொலைவில் அமைந்துள்ள மாகாணங்களில் அவற்றின் நிர்வாக முறைகளை நிரைப்படுத்துவதற்கேற்ற, கட்டுப்படுவதற்கேற்ற பரிபாலன நிறுவனங்கள் எவையும் இக்காலத்தில் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அநுராதபுர காலத்திற்குரியதான சாசனங்கள் வாயிலாக சபா அல்லது மந்திரி சபை எனப்படும் ஒரு நிறவனம் இருந்தமையைப் பற்றி அறிய முடிகின்றது. இச்சபையினது தோற்றத்திற்கு இக்காலத்திற்கு முன்னர் இருந்த ஒரு வகையான நிர்வாக நிறுவன அமைப்புத்தான் அடிப்படையாக விளங்கியிருந்திருக்க வேண்டும் என்ற கருத்தினை ஏற்றுக்கொள்ளமுடியாதுள்ளது. முற்பட்டகாலக் கல்வெட்டுக் களில் இடம்பெற்றுள்ள ஆமத்தி மஹஜ (Amati Mahaja) என்று குறிப்பிடப்பட்ட ஓர் அலகே சபா என்ற அமைச்சரவை உருவாவதற்கு அடிப்படையாக அமைந்தது என்று குறிப்பிடுவதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. முற்பட்ட அநுராதபுர காலத்தில் சபா என்ற நிறுவனம் இயங்கிய முறை பற்றியறிய எமக்கு எவ்வகையான ஆதாரங்களும் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் வேறு மூன்று வகையான நிர்வாக நிறுவனங்கள் இயங்கியிருந்த முறையைப் பற்றி அறிந்துகொள்ளக் கூடிய வகையிலான வரலாற்று மூலங்கள் கிடைத்துள்ளமையை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அந்நிறுனங்களானவை: 1) சேனாதிபதி 2) பண்டகசாலைக் காப்பாளர் 3) அத்தியட்சர் / மஹாமாத்திரர் ஆகியனவாகும்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்தே இலங்கையில் திட்டமிட்ட ஒழுங்கான கட்டுக்கோப்புக்குட்பட்ட வகையில் படிமுறையதிகாரங்களை உடைய நிர்வாக உத்தியோகத்தர்முறை உருவாக்கப்பட்டது. இந்நிர்வாக வலைப்பின்னல் முறையானது மிகவும் விசாலமானதாகவும், இலங்கையின் கடற்கரையோர மாகாணங்களை உள்ளடக்கியவகையில், அவற்றின் முக்கியத்துவத்தினை மைய அரசுடன் இணைத்தவகையில் திட்டமிடப்பட்டு உருவாக்கி, நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்நிர்வாக வலைப்பின்னல் கட்டமைவுக்குள் பல்வேறு விருதுகளைத் தாங்கிய உத்தியோகத்தர் முறையும் உருவாக்கப்பட்டது. நிர்வாக முகாமைத்துவத்திறன் உருவாக்கப்பட்ட காலமும் இக்காலமே. குறிப்பாக நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட அலுவலர்கள் நியமனமும், அவர்களது சிறப்புத் தொழிற்பிரிவிற்குரிய தொழிற்பாடும் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பூரண வளர்ச்சியடைந்திருந்தது. இருந்தும் இராசரட்டைக்கு வெளியே இவ்வகையான உத்தியோகத்தவர்களுடைய உண்மையான தொழிற்பாடுகள் நடைமுறைகள் - இயக்கம் தொடர்பாக எத்தகையவொரு சான்றாதாரங்களையும் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறப்பாக மணிபல்லவம் அல்லது நாகதீபம் என்றழைக்கப்பட்டு வந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின்கண் கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து எத்தகைய நீர்ப்பாசனவயில் தொழில்நுட்பமுறை வளர்ச்சி பெற்றிருந்தது என்பதனைப் பற்றி அறிந்துகொள்வதற்கு எவ்வகையான சான்றுகளும் கிட்டவில்லை. இதேபோன்று அநுராதபுரத்திற்கும், உரோகணத்திற்குமிடையே இருந்திருக்கக் கூடிய உறவுத் தொடர்புநிலைகளை மரபுரீதியான எத்தகையவொரு நிறுவனங்களும் நிர்வகித்திருந்ததாகத் தெரியவில்லை. இதற்குப் பதிலாக பரவலர் - இரவலர் முறையிலான உறவுத்தொடர் முறைகளை அவ்விரண்டு பிராந்தியங்களிடையேயும் பாதுகாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதாவது ஒரு முக்கியமான கருத்து இவ்வகை உறவின் அடிப்படையிலிருந்து தெளிவாகின்றது. என்னவெனில், பொதுப்படையாக மத்திய அரசோ அல்லது மாகாண ஆட்சியமைப்போ பலஹீனப்படும்போது பரஸ்பரம் அவ்வாறான இரு பிராந்தியங்களுக்குமிடையே தொடர்புகள் பாதிக்கப்பட்டும், துண்டிக்கப்பட்டுமிருந்தன என்பதாகும். ஆகவே அநுராதபுலகால சிங்களப் பேரரசின் அமைப்பானது மத்திய மயப்படுத்தப்பட்ட, ஏதேச்சாதிகாரம்மிக்க, ஓர் உயர்ந்த தனியாண்மைமிக்க அரசியல் நிறுவனம் அல்ல என்பது தெளிவாகின்றது. அதற்குப் பதிலாக அநுராதபுரகால அரசானது சமச்சீர்ப்படுத்தப்பட்ட அரசியல் சக்திகளை உள்ளடக்கிய வகையிலானஈ ஒரு சகிப்புத்தன்மைமிக்க, பல் அலகுகளைக் கொண்ட (Particularism) பண்பினை உடைய நிலமானிய அரசியல் முறையைச் சார்ந்ததாகவே காணப்பட்டது. அநுராதபுரகால இலங்கையின் வரலாறு முழுவதிலுமே இத்தன்மை நன்கு முழுமையாக விரவிக் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரகாலச் சிங்களச் சமூகத்தில் பெருமகன் அல்லது பிரமுகர் அல்லது பரமுகர் என அழைக்கப்பட்ட மக்களின் உபகுழுக்களும், குலீனர் என்போரும் பிரத்தியேகமான கௌரவத்திற்கு உரியவர்களாக வாழ்ந்த முறையைச் சாசன ஆதாரங்கள் எடுத்தியம்புகின்றன. இத்தகைய உபகுழுக்களைச் சேர்ந்தோர் சாதாரண கிராமிய மக்களைவிட கல்வியறிவு, எழுத்தறிவு, முகாமைத்துவப் பண்பு முகிர்ந்தவர்களாகக் காணப்பட்டிருந்தனர். கிராமியத் தலைமகனான ஹமிகா (Gamika) என்போரை விஞ்சிய வகையில் பெருமகன், குலீனர் ஆகியோர் உயர்ந்தோர் குழாமாக வாழ்ந்திருந்தனர். இவ் உபகுழுக்களுக்கும், அதிகாரத்திலிருந்து கொண்டிருந்த ஆட்சியாளர்களது குடும்பங்களுக்குமிடையே ஏற்பட்ட திருமணஹவம்சத் தொடர்புகளையும் காணமுடிகிறது.

அரசவைகளிலும் நியாயஸ்தலங்களிலும் பெருமகன்களும், குலீனர்களும் அங்கம் வகித்திருந்தனர். இதனால் ஒருவேளை நிலச்சொத்துடமை, நீர்ப்பாசன மேலாண்மை போன்ற உரிமங்களில் அவர்களுக்கு விசேட அந்தஸ்தும், அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன எனலாம். கல்வெட்டுச் சான்றுகள் இத்தகைய செய்திகளை உறுதிப்படுததி நிற்கின்றன. அநுராதபுரப் பேரரசுக் காலத்திலும், பொலனறுவை இலங்கையின் தலைநகர் ஆக்கப்பட்ட காலத்திலும் இவ்விரு சமூகத்தவர்களும் உள்நாட்டு - வெளிநாட்டு ஆட்சியாளர்களாலும், மதப் பிரமுகர்களாலும் கௌரவமாக நன்கு மதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து

வந்துள்ளனர். அநுராதபுரப் பேரரசுக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட வம்சவாரிசுரிமைப் போராட்ட காலங்களிலும், அரசியல் ஆட்சி மாற்ற காலங்களிலும் மிகக் கூடுதலாக நன்மையைப் பெற்ற உபகுழுக்களாக இவ்விரு வர்க்கத்தினரும் காணப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இவர்களது சமூகத்தின் மீதான செல்வாக்குநிலையும், பேரம் பேசும் சக்தியுமானது ஆட்சியிலிருந்த அதிகார வர்க்கத்தினருக்கெதிராக இராணுவ வலத்தினை பிரயோகிக்கக் கூடியளவிற்கு மேலோங்கியிருந்தமையினையும் கண்டு கொள்ள முடிந்தது.

நிலக்கொள்கையும் வரி வசூலிப்பு முறையும்

K.M.de சில்வாவினுடைய இலங்கை வரலாறு பற்றிய அண்மைக்கால வெளியீட்டில் அநுராதபுரகால மன்னர் பின்பற்றியிருந்த நிலக்கொள்கையை ஐரோப்பிய மானிய சமூக காலத்தில் அம்மன்னர் பின்பற்றியிருந்த நிலமானிய அமைப்பு முறையுடன் ஒப்புநோக்கி எடுத்துக்காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க தாகும். W.I. சிறீவீர என்பவர் மேற்கொண்ட இலங்கை வரலாறு பற்றிய ஆய்வு முடிவுகளின்படி அநுராதபுரகால, பொலனறுவைக்கால ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த நிலக்கொள்கையானது அப்பேரரச அமைப்புக்குள் அகப்பட்ட நிலம் முழுவதற்கும் ஒரே நிலவுடமையாளனாக மன்னனே விளங்கினான் என்பதாகும். K.M.de சில்வாவும் அவரது கூற்றினை ஏற்றுக்கொண்டு, பேரரசின் எல்லைக்குள் அகப்பட்ட வகையில் காணப்பட்ட நிலங்களுக்கு மன்னனே 'உரித்தாளனாக' விளங்கினான் எனக் குறிப்பிட்டுள்ள மையைக் காண்கின்றோம். 'அரசின் நிலத்தானங்கள்' பற்றிய உத்தியோகபூர்வப் பிரகடனங்கள் திட்டவட்டமாக தனிமனிதருடைய நிலத்தின் மீதான உரிமத்தினை, சொத்துடமையைக் கொண்டிருந்ததையே வெளிப்படுத்தி நின்றன. எந்தவொரு சாசனப் பட்டயத்திலும் தனிமனிதன் ஒருவனுக்கு நிலத்தைப் பராதீனப்படுத்த வேண்டி, அரசனுடைய ஆணையை முதலில் பெற்றிருக்கவேண்டும் என்றோ எவ்விடத்திலும் குறிப்பிட்டிருக்கவில்லை. இதற்கு முரணான வகையில் மன்னனானவன் படிப்படியாகத் தானம் வழங்குவதற்காக 'சொத்துக்களை' தனியாரிடமிருந்து விலைக்குப் பெற்றுக்கொண்டிருந்த செய்திகளையே பல சாசனங்கள் குறிப்பிட்டுள்ளன.

புராதன இலங்கையில் மன்னன் மேற்கொண்ட தனது மக்களுடைய பாதுகாப்புக்கும், பின்னர் விதித்திருந்த வரிமுறைகளுக்குமிடையே எவ்விதமான தொடர்புகளையும் ஏற்படுத்தியிருந்ததாகத் தெரியவில்லை. வரிவிதிப்பு முறையானது பேரரசினுடைய நன்செய் நிலங்களிலிருந்து உற்பத்தியை மேற்கொள்ளுமுகமாகவும், நிலத்தின் மீதான தனது கட்டுப்பாட்டினை மன்னன் இழந்துவிடாதபடி வைத்திருப்பதற்காகவுமே மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பேரரசினுடைய மரபுகளுக்கும் வழமைகளுக்கும் மேலாக, மன்னனுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களே நிலத்தின் மீதான வரிவிதிப்பு முறையின் அளவினையும் காலத்தினையும் தீர்மானித்த காரணிகளாக அமைந்தன.

போஜகபதி (Bojakapathi) என்று சாசனங்களில் குறிப்பிடப்பட்ட வரி முறையானது நீர்பாசனக் குளங்களிலிருந்தும் நீர்ப்பாசனக் கால்வாய்களில் இருந்தும் நெல் வயற்பரப்பிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட வரிகளாக அமைந்தன. அவை பெருமளவிற்குப் பண்டமாகவே அறவீடு செய்யப்பட்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஒரு நிலையானது சிலவேளைகளில் அரசுக்கு ஆற்றிய சேவையின் நிமித்தம் ஒரு கைம்மாறாக தனிமனிதன் ஒருவனுக்கு மன்னனால் வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இக்கைமாறு தானமாகவும் வழங்கப்பட்டது. பௌத்த சங்கங்களுக்கும் இவ்வகைப்பட்ட தானங்கள் மன்னனால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டமையைச் சான்றுகள் உறுதிப் படுத்துகின்றன. நீர்ப்பாசன அமைப்புக்கள் பெரிதும் வளர்ச்சியடைந்திருக்காத ஒரு நிலையிலுள்ள அநுராதபுர காலச் சமூகமொன்றில் தண்ணீரானது மிகவும் பெறுமதிமிக்க 'ஒரு பண்டப் பொருளாக' கருதப்பட்டிருக்கும் என்பதில் எவ்விதச் சந்தேகமும் எழமுடியாது. வபி-கமிஹா (Vapi-Hamika) என்ற குளச்சொந்தக்காரருடைய குளத்திலிருந்து கால்வாய் நோக்கி விடப்படும் நீர் பிறிதொருவரால் வாங்கி விற்கப்பட்ட நடைமுறைகளையும், பின்னர் நெல்வயற் செய்கையாளன் நீர்வரியையும், நிலவாடகையையும் பற்றிய செய்திகளைச் சாசனங்கள் தருகின்றன. பிற்பட்ட மிகப்பெரிய நீர்ப்பாசன நிறுவனங்களினதும், கால்வாய்கள் பலவற்றினதும் பராமரிப்பாளன், அதிபதி, புனரமைப்பாளன் என்ற வகையில் மன்னன் அந்நீரைப் பயன்படுத்துவோரிடமிருந்து லெவி (Levy) யாக வரிகளைப் பெற்றுக்கொண்டிருந்தான். இவ்வகையான வரிமுறைகள் கி.பி. 7ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரைக்கும் டகபதி (Dakapathi) எனச் சாசனங்களில் குறிப்பிடப் பட்டமையைக் காண்கின்றோம். நீர்வரி என்ற வகையில் விவசாயிகளிடமிருந்தும், நீரைப் பல்நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியவர்களிட மிருந்தும் சேகரிக்கப்பட்டு மன்னனுக்கும், சிறுகுளச் சொந்தக்காரருக்கும் வழங்கப்பட்ட அவ்வரியையே டகபதி என்ற சொற்பிரயோகம் குறித்துநின்றது. கி.பி. 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளில் இத்தகைய கொடுப்பனவுகள் இலங்கையில் உள்ள சாசனங்களில் தீயதேதம் (Diyadedum) எனவும் பொலனறுவைக் காலத்தில் அது தியட்ட(ம்) எனவும் குறிப்பிடப்பட்டமையைக் காண்கின்றோம். பிற்காலச் சோழர் சாசனங்களில் பூச்சி, அட்டம் எனக் குறிக்கப்பட்ட பதங்கள் வரிமுறையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டவை என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

டகபதி என்ற வரிமுறைக்கும் மேலதிகமாக, குடியிருக்கும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படும் நிலங்கள் யாவற்றிலிருந்தும் மன்னன் வரி ஒன்றினை அறவிட்டிருந்தான். மக்கள் குடியிருப்புக்கு உதவாத சதுப்புநிலங்கள், காடடர்ந்த பகுதிகள் போன்றன மன்னனது சொத்துடமை எனப் பிரகடனம் செய்யப் பட்டிருந்தன. அவ்வாறான நிலங்கள் மக்கள் வாழ்க்கைக்கோ அல்லது பயிர்ச்செய்கைக்கோ ஏற்ற இடமாக ஆக்கப்பட்ட பின்னர் தனிப்பட்டோருக்கும், சமய நிறுவனங்களுக்கும் தானமாகப் பிரகடனம் செய்வித்து அவை மன்னனால் அவனுடைய சொந்த விருப்பு வெறுப்புக்கேற்ப தனிப்பட்டோருடைய சொத்துடமையாக மாற்றப்பட்டன. அரசினால் புனருத்தாரணம் செய்யப்பட்டு மீள்விக்கப்பட்ட சதுப்பு நிலங்கள், உப்புத்தரவைகள், காடடர்ந்த நிலங்கள்

யாவும் மன்னனுடைய ஏகபோக சொத்துடமையாக விளங்கின. இவை பல சந்தர்ப்பங்களில் பன்முக நோக்கில் மன்னனுக்கும் அரசுக்கும் பயன்பட்டிருப்பதனை யும் சாசன ஆதாரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. புதிய அபிவிருத்தித் திட்டங்களை அரசு புதிய நிலங்களில் மேற்கொள்ளும்போதும், தனது குடிகளினுடைய நெருக்கமான குடியிருப்புக்களை மேலும் விஸ்தரித்துச் செல்லும்போதும், உள்நாட்டு, அந்நிய, இயற்கைப் போராட்டங்கள், அழிவுகள், வெள்ளப் பெருக்குகள், படையெடுப்புக்கள் காரணமாக மக்கள் இடப்பெயர்வுகள் ஏற்பட்ட போதும் அவ்வாறான புதிய நிலங்கள் மக்களது பயன்பாட்டிற்காகவும், அரசினது நகரக்கட்டுமானங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டமையைக் காண்கின்றோம். கைவிடப்பட்ட நிலங்கள், சொந்தக்காரர் அற்ற நிலங்கள் போன்றவை மைய அரசினுடைய அல்லது அரசனுடைய சொத்துக்களாகக் கருதப்பட்டன. அதாவது பேரரசின் எப்பாகத்திலும், எங்கெங்கே நிலம் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப் படவில்லையோ அல்லது நிலம் பயன்படுத்தப்படவில்லையோ அங்கெல்லாம் மன்னனால் காடு வளர்க்கவும், மிருகங்களை வளர்க்கவும், சுரங்கங்களான தங்கம், இரத்தினக்கல், உப்பு போன்றவற்றை வெட்டவும் அதிகாரம் வழங்கப் பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் மக்கள் தமது குடியிருப்புக் களையும், பயிர்ச்செய்கைத் தொழிலையும் ஆரம்பிப்பதற்காக நிலத்தினை மன்னனிடமிருந்து கொள்வனவு செய்யவேண்டும் என்ற பொருளாக அமைந்து விடாது.

நீர்ப்பாசனவியல் தொழில்நுட்ப முறையின் அதீத வளர்ச்சியுடன் இலங்கையில் 'தனியார் சொத்துடமை' முறையானது நன்கு வளர்ச்சிபெற்று வந்தமை கவனத்தை ஈர்க்கின்ற ஒரு பிரதான அம்சமாக மாறிற்று. கி.பி. 9ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட சாசன மூலங்களில் அடிக்கடி குறிப்பிடப்படும் பமுனு (Pamunu) அல்லது பரவெணி (பரவணி) ஆகிய பதங்கள் பரம்பரை பரம்பரையாகப் பெற்றுவந்த சொத்துடமைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. சமய நிறுவனங் களும், புனித மையங்களும் அரச பீடங்களிலிருந்து பெற்றுக்கொண்ட நன்கொடைக்குரிய சொத்துக்களே பமுனு என்ற பதத்தினால் குறிக்கப்பட்டது. தனிப்பட்ட மக்கள் இச்சொத்துடமையை மூன்று வழிகளினால் ஈட்டியிருந்தார்கள். அவையாவன : 1. அரச கொடைகள் 2) கொள்வனவு 3) பரம்பரையாகப் பெற்ற சொத்துடமை ஆகியவையாகும்.

அநுராதபுரகாலத்தில், இலங்கையில் அரச சேவையில் கடமையாற்றியிருந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் எவ்வடிவில், எவ்வாறு வழங்கப்பட்டிருந்தன என்பதனையிட்டு தெளிவான ஆதாரங்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை. இருந்தும் அவ்வுத்தியோகத்தர்கள் தங்கள் துறைகளில் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் சேகரித்த வருமானத்தின் ஒரு பகுதியை தங்கள் தங்கள் ஊதியத்திற்காக எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பது மட்டும் புலப்படுகின்றது. ஆனால் அவர்கள் இவ்வாறு தொழிற்பட்டமை யிலிருந்து அவர்களை வருமானவரி சேகரிக்கும் உத்தியோகத்தர்கள் என நாம் கருதிவிட முடியாது. ஆனால் இந்த வருமானவரி சேகரிப்பு முறையானது பெருந்தொகையான பணப்புழக்கம் மக்கள் மத்தியில் ஏற்படுவதனைத் தடுக்கக்

காரணமாகியது எனலாம், அல்லது உடமைபுரிந்தமைக்கான மாத வேதனத்தை பெருந்தொகையான காசாக பண்டங்களின் உற்பத்தி மிகவும் அரிதாகக் காணப்பட்ட பருவ காலங்களிலேயே அரசாங்க சேவைக்கான ஊழியத்தினை அரசு பணமாக கொடுக்க வேண்டியநிலை ஏற்பட்டிருந்தது. அநுராதபுர கால ஆட்சியாளர்களின் நிர்வாக அலகுகளில் கடமைபுரிந்த உத்தியோகத்தர்களது அரசபணிக்கும், சேகரிக்கப்படுகின்ற வருமான வரிமுறைக்கும், அதன் திரட்சிக்கு மிடையே எவ்விதமான தொடர்புகளும் இருந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஏனெனில் அநுராதபுர அரசுக்காலம் முழுவதிலுமே அரசாங்க சேவையிலும், அரண்மனையிலும் அதிகரித்தநிலையில் சேவையில் அமர்த்தப்பட்டு வந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையானது தம்மை பிரபுக்கள் சமூகமாக உருவாக்கிக் கொண்டிருக்கவில்லை என்பதனாலாகும்.

கி.பி. 9ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து அநுராதபுரகால அரசியல், நிர்வாக முறைகளிலும், நிலைகளிலும் பலமாற்றங்கள் உருவாகின. அரசாங்க சமய நிறுவனங்களிலும், அரச நிர்வாக சேவைகளிலும் கடமையாற்றிய உத்தியோகத்தர் களுக்கு திவெல் (Divel) என்று குறிப்பிடப்படும் சொத்துடமை மானியமாக / தானமாக / ஜீவிதமாக வழங்கப்பட்டமையை சாசனவாதாரங்கள் குறிப்பிட்டுள்ளன. திவெல் என்ற சொத்துடமை முறையானது வழங்கப்பட்ட சேவைக்காக, அக்குறிக்கப்பட்ட உத்தியோகத்தர் இறக்கும் வரைக்கும் அல்லது அவரது சேவையைப் பெற்றிருந்த நிறுவனத்தால் செய்துகொள்ளப்பட்ட உறதி ஒப்பந்தம் (Will) வரைக்கும் அக்குறிப்பிட்ட சொத்துடமையை வாழ்க்கை ஜீவனோபாயத்துக்காக பயன்படுத்தமுடியும் என்பதனைக் குறித்துநின்றது. அதாவது திவெல் என்ற இச்சொத்துடமையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தை முன்பு வேறொருவர் அனுபவித்திருந்தார் என்பதாகும்.

அரசாங்க நிறுவனங்களில் கடமைபுரிந்த உத்தியோகத்தர் களது அந்தஸ்தின் ஏற்றத்தாழ்வுகளுக்கேற்ப வழங்கப்பட்ட திவெல் சொத்து உடமையின் மதிப்பும் கூடிக் குறைந்திருந்தது. மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் கடமைபுரிந்த உத்தியோகத்தர்கள் மிகவும் பெறுமதிமிக்க திவெல் அளவினைக் கொண்டு ஜீவித்திருந்தனர். இவ்வாறு வருமான ஈட்டம் தரக்கூடிய சொத்துக்களை சொத்துடமையாகப் பெற்ற முறையானது இரண்டு அடிப்படைகளில் முக்கியத்துவம் பெறுகின்றது. 1) கடமைபுரிந்த உத்தியோகத்தர்களுக்கான ஊதியக் கொடுப்பனவு களின் நிமித்தம் திவெல் வழங்கப்படடமை 2) நிலத்திலிருந்து ஈட்டப்பட்ட வருமானத்தை உற்பத்தியாளர்களின் கைகளிலிருந்து அரச உத்தியோகத்தர் களது கைக்கு மாற்றுவது என்பது. இந்நிகழ்வு கிராமிய தோட்டத்துறைகளை மறைமுகமாக மைய அரசுடன் இணைத்து வைக்கின்ற ஒரு புராதன நிர்வாகச் செயற்பாடாகவும் அமைந்தது என்றால் அதில் வியப்பேதுமில்லை. இவ்வாறு நிலத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமான ஈட்டம் அரச உத்தியோகத்தர் களது கைக்கு மாற்றப்பட்டு அரசனது திறைசேரிக்கு நிதி வலுவூட்டப்பட்டமையைக் காணலாம். இதனைவிட மேலும் தனித்தனியான ஒவ்வொருவரிடமிருந்தும் நேரடி வரியையும் அரசு பெற்றிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பொலனறுவைக்கால அரசியல் முறைகள்

அநுராதபுரகால அரசியல், நிர்வாக முறைகளின் வளர்ச்சியின் தொடர்ச்சியாகவே பொலனறுவைக்கால அரசியல் முறைகள் அமைந்திருந்தாலும், அநுராதபுர காலக் கோன்மையின் பின்னணியில் பௌத்த மதம் மட்டுமே செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதனை மறந்துவிடலாகாது. அநுராதபுர காலப் பிற்பகுதியில் பௌத்த மதத் தலங்களின் கீழ் ஏராளமான நன்செய், புன்செய் நிலங்கள் தேவாலகமாகவும், நிந்தகமாகவும் சென்றடைந்தமை காரணமாக உற்பத்தி முறையில் பல மாற்றங்கள் நிகழ்ந்தேறின. பௌத்த மடாலயங்களின் மேற்பார்வையில் நிலத்தை உழுது பயிரிடுவோர் திருப்திகரமான வாழ்க்கையை ஓட்ட முடியாத ஒரு சூழ்நிலை உருவாகி இருந்தமையையே பிற்பட்ட அநுராதபுர காலத்தில் ஏற்பட்டுக்கொண்ட விவசாயிகளின் குழப்பங்கள் எடுத்துக்காட்டின. இலங்கையின் அரசியல், நிர்வாக முறைகளைப் பிற்பட்ட அநுராதபுர காலத்தில் சீர்குலைவடையச் செய்யுமளவிற்கு விவசாயிகளினுடைய குழப்பங்கள், கலவரங்கள் நிகழ்ந்திருந்தன. இதுவே இன்னொரு விதத்தில் அநுராதபுரகால அரசியல், நிர்வாக, பண்பாட்டு வாழ்க்கைமுறைக்கும் ஒரு முடிவினைத் தேடிக் கொடுத்திருந்தது எனக் குறிப்பிடலாம். விவசாயிகளினுடைய இந்தக் கிளர்ச்சியின் நேரடி விளைவானது அநுராதபுரத்தில் தங்கியிருந்த கூலிப்படைகளினுடைய மாபெரும் கிளர்ச்சிக்கும் வழிவகுத்துத தந்திருந்தது. இதனால் ஐந்தாம் மகிந்தன் தலைநகரான அநுராதபுரத்தை கைவிட்டு ஓடவேண்டிய ஒரு நிலையும் உருவாகியது. எது எவ்வாறெனினும் மன்னர் பிரதானி களிடையே காணப்பட்ட முரண்பாடுகளும், இக்கலவரங்களும் இலங்கை மீதான சோழ மன்னனுடைய படையெடுப்புக்களை தடுத்து நிறுத்துவதற்குப் பதிலாக, மேலும் சாதகமான பல சூழ்நிலைகளையே உருவாக்கிக் கொடுத்திருந்தமையைக் காண்கின்றோம்.

பொலனறுவைக்கால அரசியல்முறை, நிர்வாக முறைகள் பற்றிப் படிப்பதற்கு எமக்கு ஏராளமான சாசனச் சான்றுகள் கிடைத்துள்ளன. இக்கால கட்டத்திற்கு உரியதாகக் கிடைக்கப்பெற்ற சாசனப்பதிவுகளில் பொலனறுவைக் காலப் பகுதிக்குரிய நிர்வாகிகள் பற்றிய சிறப்புத் தகவல்கள் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ளன. மன்னனாலும் சமய நிறுவனங்களினாலும் வழங்கப்பெற்ற கொடைகள் பற்றிய சாசனங்களில் பொறிக்கப்பட்ட விதிகள் இக்காலகட்ட சமூகவழமை, அந்தஸ்து, பதவிநிலைகள் போன்றவற்றை வெளிப்படுத்துவனவாக உள்ளன. பிரதான அரச கருமவினை புரியும் உத்தியோகத்தர் (செயலாளர்) அரசனுக்கு உடனுதவும் மெய்ப்பாதுகாவலர் களின் தளபதி ஆகியோரது பெயர்கள் இவ்வகையான சாசனங்களில் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இவ்வகையான அரச உயர் உத்தியோகத்தர்களது அந்தஸ்தினைக் காணும்போது இக்காலத்தில் அரச பிரபுக்கள் பெற்ற அதீத முக்கியத்துவத்தினை அச்சாசனங்கள் வெளிப்படுத்தி நிற்பதனையே காண்கின்றோம்.

பொலனறுவைக்கால அரச உயர் உத்தியோகத்தர்களது விருதுப் பெயர்கள் யாவும் 'ராஜா' என்ற விகுதியுடன் முடிவடைகின்ற முறையைக் காண்கின்றோம். இது பொலனறுவைக் கால கட்டத்திற்கு மட்டுமுரியதான ஒரு சிறப்பம்சமாகும்.

கல்வெட்டுச் சான்றுகளில் பிரித்திரதன் (Pririttiradun) மங்குள்ராட், பாண்டிராட் என்ற உதாரணங்களைக் காண்கின்றோம். பாளிமொழி இலக்கியங்களில் சோழராஜா போன்ற உதாரணங்களைக் காண்கின்றோம். எனவே அரச உத்தியோகத்தர்களது பெயர்களுடன் 'ராஜா' என்று முடிவில் இடம்பெறும் வழக்கமானது பொலனறுவைக்காலர பிரபுக்களின் உயர் அந்தஸ்தினையே எடுத்துக்காட்டுகின்றன. பின்னர் உபராஜா, யுவராஜா என அரச குடும்பத்தவர்கள் அழைக்கப்பட்ட முறைமையிலிருந்து பிற்பட்ட பொலனறுவைக் காலத்தில் இப்பிரபுக்கள் சமூகம் வளர்ச்சிபெற்றுச் சென்ற முறையையே கண்டுகொள்ள முடிகின்றது.

பொலனறுவைக்கால அரச பதவிகளிலும், நிர்வாக முறைகளிலும் பிரபுக்களுக்கிருந்த செல்வாக்குநிலை அதிகாரம் என்பன அதிகரித்துக் காணப் பட்டிருந்தன. பமுணு என்றழைக்கப்பட்ட பரம்பரை பரம்பரையாகக் கொண்டிருந்த ஏராளமான நிலச்சொத்துக்களுக்கு உடமையாளன் என்ற வகையிலும் அப்பிரபுக்கள் சமூக அந்தஸ்த்தில் கூடிக்காணப்பட்டிருந்தனர். இரு பிரபுக்களான கித்தி (முவைவை) புத்த (Buddha) ஆகியோர் யுவராஜா கஸ்ஸியப்பனுக்கு உரிய நேரத்தில் வழங்கிய உதவிக்காக இரு கிராமங்களையே அவ்விளவரசன் மானியமாக வழங்கிய செய்தியை கல்வெட்டு ஒன்று தருகின்றது. மேலும் இக்காலத்தில் பிரபுக்கள் பிரவேனாக்கள் (கல்விச்சாலை) அமைக்கும்போது அரசு பல நிலத்தானங்களை அப்பிரவேனாக்களுக்கு வழங்கி நிதிவளமூட்டு வதனையும் காண்கின்றோம்.

பொலனறுவைக் காலத்தில் பிரபுக்களுக்கும் நிலவருமான முறைகளுக்கு மிடையே மிக நெருங்கிய தொடர்புகள் இருந்தமையைச் சாசன சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. பிம் (Bim) என்று குறிப்பிடப்படும் பதமானது சித்தறு பிம், கலுன்னறு பிம் என்று குறிப்பிடப்படுவது போன்று நிலவருமான ஈட்டத்தைச் சேகரிக்கும் முறைக்குள்ள நிர்வாக முறையையே எடுத்துக்காட்டுகின்றது. இராணி லீலாவதியுடன் இணைந்து தளபதி பராக்கிரம என்பவன் அரசு நடாத்திய போது, தளபதி கலுன்னறு வம்சத்தைச் சேர்ந்தவன் என ததாவம்சம் என்ற நூல் குறிப்பிடுகின்றது. அதேநேரத்தில் முதலாம் விஜயபாகுவின் அம்பகமுக கல்வெட்டில் கலுன்னறு பிம்ஜயன் நடவன்எனக் குறிப்பிடப்படுவதனையும் காணலாம். ஆதலால் ததாவம்சம் குறிப்பிட்ட கலுன்னறு வம்சமும் இச்சாசனம் குறிப்பிட்ட கலுன்னறுபிம்மும் ஒரே பொருள் குறித்தவை என்பது புலனாகின்றது. கல்யாணவதியின் ரூவான்வலிசாயவிலுள்ள கற்பலகைச் சாசனம் ஒன்றில் பிரிவத்து பிம் விஜயணவன் எனக் குறிக்கப்பட்டுள்ளது. தலதாபூஜாவலிய என்ற நூலில் அதேபெயர் பிரவத்துகண எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆதலால் பிம் என இங்கு குறிக்கப்பட்ட பதமானது வம்சம் என்ற பொருளை உணர்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது என்பது தெளிவாகின்றது. இவை யாவும் பொலனறுவைக்கால நிலப்பிரபுத்துவக் குடும்பங்களின் இருப்பினையே உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

சோழப்படையெடுப்பினைத் தொடர்ந்து வந்த பொலனறுவைக்காலப் பகுதியின் அரசியல் நிலையானது முடியரசாட்சி என்ற முறையிலிருந்து நீங்கி,

ஏதேச்சாதிகாரம்மிக்க தனியாட்சி யுரிமையுடைய அரசமைப்பாக மாற்றம் பெற்றுக் கொண்டது. சோழருடைய ஆதிக்கத்துக்கெதிராக பொலனறுவைக்கால பகுதியில் இலங்கையில் எழுச்சிபெற்ற எதிர்ப்பியக்கங்களின் தன்மையானது இதற்கு முன்னர் தோற்றம் பெற்றவற்றிலிருந்து முற்றிலுமே மாறுபட்டதாக அமைந்தது. இராசரட்டை முன்பு படையெடுப்பாளர்களுடைய கையில் இருந்த சமயங்களில், அநுராதபுர மன்னன் பிறிதோரிடத்திலிருந்து தனது ஆட்சியுரிமையை நிலைநாட்டி நகர்த்திச் சென்றமையைக் காண்கின்றோம். ஆனால் பொலனறுவைக் காலத்தில் அரசியல் நிலை அவ்வாறிருக்கவில்லை. கி.பி. 1017இன் பின் சிவில் நிர்வாக உத்தியோகத்தர்கள் அதிகாரங்களைத தங்கள் கைகளுக்குள் எடுத்துக்கொண்டது மாத்திரமல்லாது அவர்கள் ஒருவருக்கொருவர் அதிகாரத்திற்காக சண்டையிட்டும் கொண்டனர். சேனாபதிகித்தி, மகாலனகித்தி, லோக, கேசதாது கஸ்யப்ப ஆகியோர் இவ்வாறு பொலனறுவைக்காலத்தில் அரசியல் அதிகாரங்களைத் தங்கள் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டோராவர். இவர்களைவிட வேறும்பலரும் உதாரணமாக ரவிதேவ, காலபுத்தராஜ, மக்காகூட்றுறவின், கித்தி ஆகியோர் இளவரசன் கித்திக்கு (கீர்த்திக்கு) அந்நியர் ஆட்சியை நாட்டிலிருந்து வேரறுப்பதற்குரிய ஆதரவை வழங்கியவர்களாகத் தொழிற்பட்டிருந்தமையைக் காண்கின்றோம். முதலாம் விஜயபாகு இலங்கையிலிருந்து சோழருடைய மேலாண்மையை நீக்குவதற்கு உதவிய இரு பிரபுக்களாகக் காணப்பட்டவர்கள் புத்தராஜாவும், தேவமல்லனுமாவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இறுதியாக சோழரை பல பிரச்சினைகளின் மத்தியிலும் நாட்டிலிருந்து அப்புறப்படுத்திய கையோடு மன்னன் எதிர்நோக்கிய முக்கியமான பிரச்சினை நிர்வாக முறைகளை திருப்பி ஒழுங்கமைக்கும் முறையில் ஏற்பட்ட சிக்கல்களாகும். சோழர் இலங்கையை வெற்றிகொள்ள முன் இருந்த காலகட்டத்தில் இருந்தே சீர்குலைவுற்றிருந்த இந்த நிர்வாகப் பின்னடைவினைச் சீர்திருத்தி அமைப்பது என்பது ஒரு மாபெரும் சவாலாக மன்னனுக்குப்பட்டது. உருகுணையிற் கூட நிர்வாக முறைமைகள் தளர்வடைந்து காணப்பட்டன. அங்குகூட பிரபுக்களின் செல்வாக்கும் மிதமிஞ்சிக் காணப்பட்டது. எனவே பிரபுக்களின் நிர்வாகமும், செல்வாக்குமே பொலனறுவைக்கால அரசியலில் காணப்பட்ட சிறப்பம்சமாகும். மன்னன் பிரபுக்களின் தயவில் தங்கியிருக்க வேண்டியிருந்த சூழ்நிலை பொலனறுவைக்காலப் பகுதியில் மேலோங்கிக் காணப்பட்டிருந்தது.

இராசரட்டையிலிருந்து சோழருடைய மேலாணை நீக்கப்பட்ட காலத்திலிருந்தே முதலாம் விஜயபாகு மன்னன் இலங்கையரசின் நிர்வாக முறைகளைச் சீர்திருத்தியமைக்க முயன்றிருக்கக் கூடும். ஏறத்தாழ 77 ஆண்டுகள் இலங்கையின் நிர்வாக யந்திர அமைப்பானது இந்துமதக் கோட்பாட்டின் பின்னணியில் அமைந்த மனுதர்ம முறைப்படி சோழப் பேரரசர்களால் நிர்வகிக்கப்பட்ட முறையிலிருந்து திடீரென புராதன பௌத்த சிங்கள நிர்வாகக் கட்டமைப்புக்குள் இலங்கையை உட்படுத்த வேண்டிய ஒரு முகாமைத்துவ நோக்கு முதலாம் விஜயபாகுவின் மனதில் தோற்றம் பெற்றிருக்கக்கூடும். இதனால் ஏராளமான புதிய நிர்வாக உத்தியோகத்தர்களை மத்திய அரசு பொறுத்தும், மாகாண ஆட்சியமைப்பும்

பொறுத்தும் நியமித்திருக்க வேண்டிய சூழ்நிலைக்குட்பட வேண்டியிருந்தநிலை முதலாம் விஜயபாகுவிற்கு ஏற்பட்டது. இந்நிலையில் புதிய நிர்வாகிகளைத் தெரிவுசெய்யும்போது அவர்களது தகைமை, முகாமைத்துவத்திறன், ஒழுக்கம் போன்ற இன்னோரன்ன விடயங்களில் விஜயபாகு மிகவும் அக்கறையுடன் கவனம் செலுத்தினான். அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடம் நாட்டு மக்களிடமிருந்தும், நன்செய் நிலங்களிலிருந்தும் நாட்டுச் சூழ்நிலை, வாழ்க்கைச் சூழ்நிலை ஆகியனவற்றுக்கேற்ப வரிகளைச் சேகரிக்குமாறு விஜயபாகு ஆணையிட்டிருந்தான். துரதிஷ்டவசமாக சூளவம்சத்தில் இத்தகைய குறிப்புக்கள் இடம்பெற்றிருக்காததும் கவனத்திற்கு உரியது. விதிவிலக்காக சூளவம்சத்தில் அவனது தீவிர கட்டுப்பாட்டிற்குள் நீதி பரிபாலன விடயங்களைக் கொண்டுவந்த விபரங்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். விஜயபாகுவின் அம்பகமுவக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள அரச உத்தியோகத்தர், பிரபுக்கள், மற்றும் குறிப்பிட்ட பதவிநிலைகள் போன்றன பற்றிய விபரங்களின் முன் தொடர்ச்சியை பிற்பட்ட அநுராதபுர காலத் தூண்கல்வெட்டொன்றில் காணமுடிவதிலிருந்து எவ்வாறு விஜயபாகு காலத்தில் பொலனறுவையில் புராதன அநுராதபுரகால சிங்கள நிர்வாக முறை மீண்டும் அறிமுகப்பட்டது என்பதனைக் கண்டுகொள்ளமுடியும். (இருப்பினும் சோழர்கால மத்திய உள்ளூராட்சி நிர்வாக முறைகளில் சிலவற்றை இலங்கையில் அவர்களது மேலாதிக்கம் அற்றுப் போன நிலையிலும் செல்வாக்குச் செலுத்திவந்த முறையினை சாசன மூலங்கள் பிரதிபலிக்கின்றன)

அதிகரித்து வந்த பிரபுத்துவ மேலாதிக்கத்தின் நன்மதிப்பினையும், அரசியல் அதிகாரத்தினையும் வீழ்ச்சியடைந்து வந்த அநுராதபுர இறுதிக்கால முடியரசமைப்பு முறை பெறத்தவறிவிட்டிருந்த காரணத்தினால், சோழரது மேலாதிக்கத்தின் கீழ் பொலனறுவையில் தனித்துவமான முறையில் முடியாட்சி அமைப்புமுறை அதிசக்தி வாய்ந்ததாக மாற வாய்ப்பாயிற்று. இந்நிலையில் சோழ வல்லரசாதிக்கத்தினை எதிர்த்து நிற்குமளவிற்கு இராசரட்டையில் பிரபுத்துவ முறை அதிக சக்தி வாய்ந்ததாக வளர்ச்சி பெற்றிருக்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. இந்நிலையில் இலங்கையில் சோழர்கால அரசியல், நிர்வாக முகாமைத்துவ நடவடிக்கைகளில் பிரபுக்கள் இணைந்து செயற்பட்டிருந்திருக்கக் கூடிய சூழ்நிலை அருகிப் போயிருந்திருக்கும் என்பது வெளிப்படை. கலிங்கநாட்டு வம்சத் தொடர்புகளின் அனுபவநிலை கூட பிரபுக்களின் அதிகாரத்தை அரசியலில் இருந்து கட்டுப்படுத்தி வைத்திருக்கும் முறையை விஜயபாகுவிற்கு பெற்றுக் கொடுத்திருக்கும் என்பதும் தெளிவாகின்றது. இதனால் இராசரட்டை தவிர்ந்த உரோகணை, மலையரட்ட, தக்கிண தேசங்களில் விஜயபாகுவிற்கு எதிராக எழுச்சிபெற்ற பிரபுக்களின் கிளர்ச்சியை அவனால் எளிதில் அடக்கி வெல்ல முடிந்தது. இராசரட்டையில் சோழராட்சிக் காலத்திலேயே பிரபுக்கள் நன்கு கட்டுப்படுத்தப்பட்டு, அவர்களது அரசியற் தலையீடுகள் வரையறை செய்யப்பட்டிருந்தமையினால் விஜயபாகுவிற்கு இராசரட்டையிலிருந்து பிரபுக்களின் எதிர்ப்புக்கள் தோற்றம் பெறுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படவில்லை.

முதலாம் விஜயபாகுவின் மரணத்திற்குப் பின் இலங்கையின் கோன்மை முறையில் பக்கம்பக்கமாக இரு நிறுவனங்கள் தொழிற்பட்டுச் சென்றிருந்த முறையினைக் காணலாம். அதாவது இரட்டைத் தன்மையுள்ள கோன்மை முறை இரு அரசியற் தலைநகரங்களிலிருந்து தொழிற்பட்டிருந்த முறையையே காண்கின்றோம். இவ்வாறான கோன்மை முறைக்கு பௌத்த, இந்து மதங்கள் பின்னணியாக இருந்து செல்வாக்குச் செலுத்தியிருந்தன. ஒரு புறத்தில் பௌத்த சங்கத்தினரது பேராதரவைப் பெற்று, ஒரு மன்னன் உத்தியோகபூர்வமாக முடிசூட்டப்பட்டு ஆள்பதியாக பிரகடனப்படுத்தப்படும் அதே நேரத்தில், பௌத்த சங்கத்தின் ஆதரவற்ற நிலையில் இந்துமதச் செல்வாக்கினுள் அகப்பட்ட முறையில் முடிசூடாமலேயே பிறிதோரிடத்திலிருந்து நாட்டினை நிர்வகிக்கின்ற முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டமையைக் காண்கின்றோம். இக்கால கட்டத்தில் பொறிக்கப்பட்டுக் கிடைத்த ஏராளமான சிங்கள, தமிழ்க் கல்வெட்டுக்கள் அத்தன்மையைத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன. ஆட்சியாண்டு (Reginald Year) பொறித்த கல்வெட்டுக்கள், ஆட்சியாண்டு பொறிக்கப்படாத கல்வெட்டுக்கள் என்ற இருவகைச் சாசனப் பதிவுகள் மேற்குறிப்பிடப்பட்ட இரட்டைத் தன்மையைத் தெளிவாக்கியுள்ளன. சிங்களமுறையில் அமைந்த கோன்மையின், பிரதானமானவோர் அம்சம் என்னவெனில் சகோதர வழிவந்த வாரிசுரிளைக் கோட்பாடு ஆகும். அநுராதபுரகால அரசியலில் இத்தகைய கோன்மை முறையே கடைப்பிடிக்கப் பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் பொலனறுவைக் காலத்தில் சோழப் பேரரசின் கீழ் 77 ஆண்டுகள் இலங்கை அதன் மேலாண்மையை ஏற்றிருந்ததன் விளைவாக கோன்மை முறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தமை தவிர்க்க முடியாததாயிற்று. 'தந்தைக்குப் பின் மூத்த தனயன்' என்ற கோட்பாடே சோழராட்சிக் காலக்கோன்மை முறையாக விளங்கியது. அந்நிலையானது பொலனறுவையில் சிங்கள மன்னராட்சிக் காலத்திலும் செல்வாக்குப்பெற்ற ஓரம்சமாகவே காணப்பட்டிருந்தது என்பதனை முடியாட்சி முறைமையின் அவ்விரட்டைத் தன்மை எடுத்துக்காட்டுகின்றது.

முதலாம் விஜயபாகு இறந்தவுடன் மைய அரசின் உயர் நிர்வாகிகளும், பௌத்த சங்கமும் இணைந்து விஜயபாகுவின் சகோதரரான ஜயபாகுவை நாட்டின் இறைமைமிக்க மன்னனாக நியமித்திருந்தனர். ஆனால் விஜயபாகு உயிரோடு இருந்த காலத்தில் அவனால் 'உபராஜா' வாக நியமிக்கப்பட்டிருந்த மானாபர்ணனை (முதலாம் விஜயபாகுவிற்கும் சிங்கள இளவரசியான மித்தாவிற்கும் பிறந்தவன்) நாட்டின் ஆள்பதியாக நியமிக்கவேண்டும் என்று உயர் பிரபுக்கள் குழாம் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. மானாபர்ணனின் மூத்த சகோதரரான விக்கிரமபாகுவை உயர் பிரபுக்கள் நாட்டின் ஆள்பதியாக நியமனம்செய்வதற்கு விரும்பாதிருந்துள்ளமைக்கான ஒரே காரணம் அவன் முதலாம் விஜயபாகுவிற்கும் கலிங்க இளவரசி ஒருத்திக்கும் பிறந்தவன் எனக் கருதப்பட்டமையினாலாகும். உண்மையில் தாய்வழி வந்த மரபுரிமையின் அடியாகவே சகோதர வாரிசுரிமை முறை இதற்கு முன்னர் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருந்தாலும் கூட, பொலனறுவைக்கால சிங்கள மன்னர்கள் கடைப்பிடித்த கோன்மைக் கோட்பாடானது வழமையிலிருந்து மாறுபட்டதாகவே அமைந்திருந்தது.

கலிங்கநாட்டுத் தொடர்புகள் இலங்கையில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு விடயங்களில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தமைக்கு பொலனறுவைக்கால அரசியல் நிகழ்வுகள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். (பொலனறுவைக்கால இலங்கையின் கோன்மைக் கோட்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள், அக்காலத்தைத் தொடர்ந்து வந்த இலங்கையின் அரசியல், நிர்வாகப் பண்பாட்டு விடயங்களில் அதிகளவு தாக்கத்தினை ஏற்படுத்தத் தவறவில்லை. அவ்வழியே யாழ்ப்பாண இராச்சியத்திற்கும் கலிங்கத்திற்கும் இடையிலான தொடர்புகளை தொல்லியற் சான்றுகளும் உறுதிப்படுத்தி உள்ளன) பொலனறுவைக்கால அரசியலில் சிறப்பாக அரசவை நடவடிக்கைகளில் கலிங்கநாட்டுப் பிரபுக்களின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்பட்ட வகையில் விக்கிரமபாகுவிற்கான ஆதரவு அங்கு கூடிக் காணப் பட்டிருந்தது. இப்பின்னணியே பௌத்த சங்கத்தாரது ஆதரவை விக்கிரமபாகு இழந்துவிடக் காரணமாக அமைந்திருந்தது. விக்கிரமபாகுவிற்கு ஏற்பட்ட இதே நிலைதான் பின்னர் கஜபாகுவிற்கும் ஏற்பட்டது, சூளவம்சம் கஜபாகுவை ஒரு 'பிறழ்நெறிக்காரன்' என்றும், இராசரட்டையை 'இந்துமதத்தினால் நிறைத்து வைத்திருந்தான்' என்றும் குறிப்பிடுவதிலிருந்து பௌத்தமதமும், இந்துமதமும் தத்தம் அடிப்படைகளில் நின்று நிலைபெற்று, இரட்டை முடியாட்சி முறையை பொலனறுவைக்கால இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கு பிரயத்தனம் செய்திருந்தமையை நாம் காணலாம். சிங்களப் பிரதானிகளும், கலிங்கப் பிரதானிகளும் முறையே பௌத்த சங்கத்தினதும், இந்துமத நிறுவனங்களினதும் அரசியல் வாண்மையை நிலைநிறுத்துவதற்காக பொலனறுவைக்காலத்தில் போட்டியிட்டுக் கொண்ட முறைமையே இவ்விரட்டை முடியாட்சிமுறை எடுத்துக் காட்டுகின்றது. முதலாம் மகாபராக்கிரமபாகுவின் சிம்மாசனத்துக்கான (ஆட்சிக்கான) வருகையுடன் ஒரளவிற்கு அக்கோன்மையின் அவ்விரட்டைத் தன்மையானது செயழிலந்து போனது எனலாம். இந்துமதத்தினை விட அரசாங்க மதமாக பௌத்தமதம் மீண்டும் புத்துயிர்ப்புப் பெற்று ஒரு காலமாகவும் பொலனறுவையில் மகாபராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் அமைந்தது எனலாம்.

மகாபராக்கிரமபாகுவின் அரசியல் பூட்கைகள் அம்மன்னனுக்கு முற்பட்ட காலத்தில் பின்பற்றப்பட்டிருந்த பூட்கைகளிலிருந்து முழுவதுமாக மாற்றியமைக்கப் பட்டது. சிறப்பாக நாட்டிலுள்ள பிரபுக்களின் நிலை தொடர்பாக மகாபராக்கிரமபாகு மன்னன் கடைப்பிடித்திருந்த கொள்கைகள் யாவும் இதற்கு முன்னர் அவர்களால் அரசியலில் ஏற்பட்ட தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மறுசீரமைக்கப் பட்டவையாகக் காணப்பட்டன. சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த அப்பிரபுக்களை முற்றுமுழுதாக நசுக்கிவிடாமல், அரச நிறுவனங்கள் மீதும், நிர்வாக அலகுகள் மீதும் அப்பிரபுக்களுக்கிருந்த வரம்பற்ற அதிகாரங்களை மிகவும் இராசதந்திரமாக மகாபராக்கிரமபாகு மன்னன் நீக்கிவிட்டிருந்தான். இதே நேரத்தில் இலங்கை முழுவதனையும் ஓராணைக்குட்படுத்தப்பட வேண்டிய தனது நீண்ட நாள் அபிலாஷை நிறைவேறும் பட்சத்தில் அப்பிரபுக்களினுடைய ஆதரவு என்றும் தேவை என்பதனையும் மகாபராக்கிரமபாகு மன்னன் உணர்ந்திருந்தான். அதேநேரத்தில் அவன் தனது காலம், சக்தி, மூலவளம் முதலியனவற்றை சிறிதுசிறிதாக இலட்சியப்படுத்தப்பட்ட தனது அரசியல்

நோக்கினை எய்துவதற்காக செலவு செய்யும் வழிகளில் தனக்கு ஆதரவாக பிரபுக்கள் இருந்து கொள்வதற்கேற்ற வழிவகைகளையும் ஏற்படுத்தியிருந்தான். சூளவம்சம் அவனது அரசியல் சானாக்கியத்தினை 69ஆவது அதிகாரத்தின் தொடக்கத்தில் புகழ்ந்து குறிப்பிடுவதனைக் காணலாம். தக்கிண தேசத்தின் ஆட்சியாளனாக அம்மன்னன் இருந்த வேளையில் தனது அரசியல் நோக்கினை எய்துவதற்குத் தேவையான படையணிகளையும், பொருளாதார ஈட்டத்தினையும் அடைவதில் பிரபுக்களை நன்கு பயன்படுத்திக் கொண்டான் எனச் சூளவம்சம் புகழ்ந்துரைக்கின்றது. சூளவம்சம் இம்மன்னனைப் பற்றி புகழ்ந்துரைப்பது போன்று, பொலனறுவைக்கால ஆரம்ப மன்னர்களைப் போன்றில்லாமல் பராக்கிரமபாகு தனது அரசியல் பகுப்பு முறையில் திடமானதும், மிகுந்த விழிப்புடனும், எதிர்பார்க்கைகளுடனும் செயலாற்றியிருந்த முறையினைக் கண்டுகொள்ள முடிகிறது. அந்நோக்கத்தினை அடைவதற்காக பொலனறுவைக்காலப் பிரபுக்கள் சமூகம் முழுவதனையும் நன்முறையில் பயன்படுத்திக் கொண்ட பெருமையும் அம்மன்னனனையே சாரும். சூளவம்சம் மேலும் குறிப்பிடுவது போன்று 'பேரரசன் தனது அரண்மனை வளாகத்தினுள் தனது (அரசியலில்) பல மக்களையும் (Sons) சகோதரர்களையும், பேரன்மார்களையும் (Grandsons) சிறப்பு வாய்ந்த மேன்மக்கள் குடும்பங்களிலிருந்து தெரிந்தெடுத்து வளர்த்தான்' என்ற வாசகத்தினை நோக்கும்போது மகாபராக்கிரமபாகுவின் நிர்வாக முகாமைத்துவம் எளிதில் தெளிவாகின்றது. மேலும் சூளவம்சம் குறிப்பிடுகையில் 'அவர் (பராக்கிரமபாகு) தன்னளவில் தனது அரசாங்கத்தில் கடமைபுரியும் எல்லா ஊழியர்களினதும் உள்ளத்துணர்வை தனது மேன்மைமிக்க கம்பீரமான, முழுமையான ஆளுமையினால் கொள்கைகொண்டு விட்டார்' என்று வியந்து சொல்வதிலிருந்து அம்மன்னனுடைய அரசியல், நிருவாக ஆளுமைத்திறன் தெளிவாகின்றது. இம்மன்னனுடைய ஆளுகைக்குப் பின்னர் பொலனறுவைக்கால மானவம்ம வம்சத்தின் ஆட்சியும் தர்க்கரீதியான ஒரு முடிவினை அடைந்து கொண்டது. வளர்ச்சிபெற்று வந்த பிரபுத்துவநிலையின் செல்வாக்கினைக் கட்டுப்படுத்தி, நாட்டைப் பரிபாலிக்கின்ற நிர்வாகத்திறனை அம்மன்னனுக்குப் பின்னர் எவருமே பெற்றிருக்கவில்லை. ஆனால் கலிங்கத் தொடர்பின் விளைவாய் ஏற்பட்ட அரசியல் வாரிசாக வந்த நிசங்கமல்லன் என்பவன் பொலனறுவையரசின் கோன்மை முறையைச் சிறிதுகாலம் நெறிப்படுத்தியவனாகக் காணப்பட்டான். இம்மன்னனது ஆட்சிக்காலத்தில் கோன்மை தொடர்பாக பல கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. 'கோவி' குலத்தினர் அரசபதவியை அடைய எடுத்த முயற்சிகளுக்கு இம்மன்னன் ஆப்பு வைத்தான். நிசங்கமன்னனின் கல்லாணைகள் முழுவதிலுமே அக்கால அரச கோட்பாடுகளைப் பொறித்து வைத்து மக்களை அரசியலில் 'சாந்தப்படுத்துகின்ற' வழிமுறைகளைக் கையாண்ட வகையையே நாம் காண்கின்றோம். அவ்வழியே புராதன இலங்கையில் பௌத்தசங்கத்துடன் இணைந்திருந்த அரசபதமானது நீர்ப்பாசனவயில் பயிர்ச்செய்கைப் பொருளாதார ஈட்டத்தினை படிப்படியாக இழந்து வந்து, இறுதியில் இராசரட்டையில் வாழ்ந்திருந்த மக்களுடைய நன்மதிப்பினையும், ஆதரவினையும் முற்றுமுழுதாக இழந்த நிலையில் அம்மக்கட் கூட்டத்திலிருந்தே அந்நியப்படுத்தப்பட்டு தனித்து

விடப்படுவதனைக் காண்கின்றோம். தென்மேற்கு- வடக்கு, கிழக்கு நோக்கிய மக்களிடப் பெயர்வுகள் நீர்ப்பாசன ஈட்டத்தினடியான பௌத்த சங்கத்தின் மேலாண்மையை அம்மக்கள் கைவிட்டுச் சென்றமையையே எடுத்துக் காட்டுகின்றது எனலாம். புராதன இலங்கையின் கோன்மை முறையும் அந்நிகழ்வுடன் வீழ்ச்சியுறுவதனைக் காணலாம்.

இலங்கையின் அரச பதத்தின் தோற்றம் பற்றி ஆராய்ந்த எஸ்.பரணவிதான முதலில் காமணி என்ற விருதுப் பெயருடனேயே இலங்கையின் அரசபதம் தோற்றுவிக்கப்பட்டது என்று குறிப்பிட்டிருந்தார். இக்கருத்தினை நிலைநிறுத்தும் வகையில் வடஇந்தியாவுடன் இலங்கை கொண்டிருந்த அரசியல் உறவுகளின் நிமித்தம் அசோகப் பேரரசனது இலங்கையின் அரசபதத்தினை ஆரம்பித்து வைத்தான் என அவர் சாசன, இலக்கிய மூலங்களை ஆதாரம் காட்டி உறுதிப் படுத்தியுள்ளமையைக் காணலாம். தீசனான இலங்கை மன்னனுக்கு அசோகன் தேவானம்பிய என்ற விருதுப் பெயரினைச் சூடுமாறு அனுப்பிவைத்த நிகழ்வு இந்திய அரசொன்றினால் இலங்கையரசு வலுவூட்டப்பட்ட முறையையே எடுத்துக் காட்டுகின்றனது என்பது அவரது வாதமாகும்.

இந்தக் கால கட்டத்திலிருந்து கி.பி. 13ஆம் நூற்றாண்டு வரைக்கும் இலங்கையில் பல்வேறு தகைமையையும் வேறுபட்ட வம்சப் பாரம்பரியமுடைய மன்னர்கள் சிம்மாசன உரிமையைப் பெற்று அரசாங்கத்தினை நிறுவிச் சென்றிருப்பதனைக் காணலாம். கி.பி. 5ஆம் நூற்றாண்டின் முடிவு வரைக்கும் மோரிய லம்பகண்ண வம்சாவழிகளுக்கிடையே நிலவிய அரச அதிகாரத்திற்கான போட்டியுணர்வினைக் கண்டுகொள்ள முடிந்தது. இதன் பின்னர் உள்ள காலத்தில் சிங்கள மன்னர்களுக்கும் கலிங்க வம்சத்தைச் சேர்ந்த மன்னர்களுக்குமிடையே அரச அதிகாரம், அரச கோட்பாடு தொடர்பான உரிமப் பிரச்சினைகள் நிலவின. கலிங்க மன்னனான நிசங்கமல்லனது ஆட்சியின் இறுதியில், அதாவது 12ஆம் நூற்றாண்டின் முடிவில் கலிங்க - பாண்டிய தேச திருமணத்தொடர்புகள் இலங்கையுடன் மிகநெருக்கமான வகையில் காணப்பட்டதன் நிமித்தம் இலங்கையின் அரசபதம் தொடர்பாக வாரிசுரிமை அடிப்படையிலும், அரச கோட்பாடுகளின் அடிப்படையிலும் கருத்து மோதல்கள் நிகழ்ந்திருந்தன. பொலனறுவைக் கால சிங்கள மன்னர்களதும், சிங்களப் பிரதானிகளதும் அரசியல் வாழ்வில் இந்திய இளவரசர்களும், இளவரசிகளும் பெரும் பங்கெடுத்துக் கொண்டமையைக் காணமுடிந்தது. ஆனால் முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்திருந்த அரச குடும்பங்களினதும், அரச பிரதானிகளதும் மனநிலையானது அரசபதம் என்ற கோட்பாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் வேறுபட்டதாகவே காணப்பட்டது. இவர்களில் பெரும்பாலானோர் துடுக்கான, தேசிய உணர்வு மிகுந்தோராகக் காணப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்து வந்ததோடு, இலங்கையின் செங்கோலை தமது தலைவர்களின் கையில் திணித்ததோடு, இலங்கையைத் தமது வம்ச வாரிசுகளுக்கான (அரசியல்) வேட்டையாடும் தளமாகவும் பயன்படுத்தினர். லீலாவதி இராணியின் கற்பலகைச்

சாசனமொன்றைப் பற்றி விளக்குகையிலேயே எஸ்.பரணவிதான இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் அச்சாசனம் பற்றிக் குறிப்பிடுகையில் கி.பி. 1186இல் முதலாம் பராக்கிரமபாகு இறந்தவுடனேயே பொலனறுவையில் கலிங்க வம்சாவழியினருக்கும் சிங்கள வம்சாவழியினருக்குமிடையே ஓயாத போராட்ட அலைகள் சிம்மாசன உரிமைக்காக எழுந்தன. சூளவம்சம்கூட அப்போராட்டம் தொடர்பாகப் பல செய்திகளைத் தந்துள்ளது. முதலாம் பராக்கிரமபாகுவின் தாயாரான இராணி ரத்னாவலீ தனது மகளான மித்தாவை தனது மைத்துனனான ஸ்ரீபல்லவனுடைய மகனான மானாபர்ணனுக்கு திருமணம் செய்துகொடுக்க மறுத்துவிட்டார். காரணம் மானாபர்ணன் முதலாம் விஜயபாகுவின் வழிவந்த பாண்டு மன்னன் பரம்பரையினன் என்பதற்காகவாகும். இந்நிலையே தலைநகரில் அரசியற் கொலைகளுக்கும், அரண்மனைப் புரட்சிகளுக்கும் வித்திட்டன. கி.பி. 13ஆம் நூற்றாண்டு பொலனறுவையில் நிசங்கமல்லனுடைய சகோதரரான சாஹஸமல்லனுடைய ஆட்சி தொடங்கியதும் கி.பி. 1200 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் நாள் புதன்கிழமையன்று சாஹஸமல்லன் சிம்மாசனமேற்றப் பட்டான். கித்தி என்ற சேனாதிபதி லீலாவதி என்ற இராணியின் ஆட்சியை இடைநிறுத்தியே சாஹஸமல்லனை அரியாணை ஏற்றினான். சிறிது காலத்தில் சேனாதிபதி ஆயஸ் மன்த(ன்) என்பவன் அம்மன்னனை அரியணையினின்றும் இறக்கி இராணி கல்யாணவதியை சிம்மாசன மேற்றினான். இந்நிலையானது பொலனறுவையில் சங்கபோதி வழிவந்த லம்பகண்ண மரபினனான மூன்றாம் விஜயபாகு ஆட்சிக்கு வரும் வரைக்கும் தொடர்ந்தது.

G.C. மென்டிஸின் கருத்துப்படி கி.பி. 4க்கும் 11ஆம் நூற்றாண்டிற்குமிடையே இலங்கையின் அரசபதம் பற்றிய கோட்பாட்டில் மாற்றங்கள் நிகழ்ந்திருந்தன என எடுத்துக் காட்டப்படுகின்றது. அதாவது இக்காலகட்டத்தினுள் மன்னர் சாதாரண மக்களைப் போன்றவர்களாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கவில்லை. பதிலாக அரசர்கள் போதிசத்துவர்கள் ஆவர் எனப்பட்டது. நான்காம் மகிந்தனுடைய ஜெதவனராமா கற்பலகைச் சாசனமானது 'செல்வம் மிகுந்த லங்கா தீபத்தின் மன்னர்களாக வருபவர்கள் போதிசத்துவர்களே' எனக் குறிப்பிடுவதனை அவர் எடுத்துக்காட்டியுள்ளார். இதே அரசபதம் பற்றிய கொள்கையை கி.பி. 12ஆம் நூற்றாண்டின் முடிவில் ஆட்சிக்குவந்த நிசங்கமல்லனுடைய பிரத்தானக மண்டப (Pritidanaka mandapa) கற்பலைகைச் சாசனத்திலும் எடுத்துக் கூறப்பட்டிருப்பதனை மென்டிஸ் எடுத்துக் காட்டியுள்ளார். அக்கல்வெட்டில் நிசங்கமல்லன் குறிப்பிடுவதாக, 'இவ்வுலகையும் மதத்தினையும் தன்பிள்ளையைப் பாதுகாக்கும் பெற்றோர் போன்று பாதுகாக்கின்ற மன்னர் தம் உள்ளத்தினையும், உடலினையும் அப்புனிதமான காரியத்திற்காக வழங்கியிருப்பதானது போதிசதத்துவரைப் போன்றது என நான் என்னுள் உணர்கின்றேன்'. கல்பொத்த விகாரைக் கல்வெட்டில் நிசங்கமல்லன் மேலுமொருபடி முன்சென்று அரசபதத்தினைப் பற்றிக் குறிப்பிட்டிருப்ப தாவது சமத்துவ நோக்குக்கொண்டு ஒழுகுகின்ற மன்னன் ஒருவனை (மக்கள்) புத்தரை வரவேற்பது போல் (பக்தி சிரத்தையுடன்) நோக்கவேண்டும். எனவே

இலங்கைக் கோன்மைக் கோட்பாடானது கி.பி. 4ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13ஆம் நூற்றாண்டு வரைக்கும் புத்தருடைய அல்லது போதிசத்துவருடைய புனித நிலைக்கு ஈடாக வைத்து எண்ணப்பட்டிருந்தது என்பது தெளிவாகின்றது. அதாவது மன்னர்கள் மிகவும் நல்லொழுக்கம் நிரம்பியவர்களாகவும் 'புனிதம்' மிக்கவர்களாகவும், மக்களைப் 'பாதுகாக்கும்' உளநலமும் உடல்நலமும் உடையவர்களாகவும் கருணையுள்ளம் கொண்டோராகவும் விளங்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தனர்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியிலும் மேலே கூறப்பட்ட அரசபதம் பற்றிய கோட்பாடே கடைப்பிடிக்கப்பட்டிருந்தமையைக் காணலாம். சூளவம்சம் (8835), ராஜ ரட்னாகரய (P.47), நிக்காய சங்கிரஹ ஆகிய பாளி இலக்கிய நூல்களில் இதே அரசபதம் பற்றிய கோட்பாடு எடுத்துச் சொல்லப்பட்டுள்ளமையைக் காணலாம். இந்நூல்களில் ஒரு மன்னன் போதிசத் விஜயபாகு என விளித்துக் கூறப்பட்டமையிலிருந்து அக்கோட்பாடு நன்கு தெளிவாகின்றது. சூளவம்சம் அதிகாரம் 86இல் 7ஆம் செய்யுளில் நான் ஒரு புத்தராக இருப்பேன் (I will be Buddha) என இரண்டாம் பராக்கிரமபாகு விளித்துக் கூறியதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் தொடக்ககால அரசியலில் மன்னன் சாதாரண பிரஜைகளுள் ஒருவனாக வைத்து எண்ணப் பட்டிருந்தான். பின்னர் அரசபதம் பற்றிய தோற்ற எண்ணக்கருக்கள் நீண்ட காலமாக மறக்கப்பட்ட ஒரு நிலையில் மன்னனுக்கு மிகவும் கூடுதலான அதிகாரங்களும், செல்வாக்குகளும் கூடிக் காணப்பட்டிருந்த வேளையிலேயே அரசபதம் பற்றிய பல்வேறு வகையான கருதுகோள்கள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இதனாலேதான், மென்டிஸின் கூற்றுப்படி, மன்னனை கடவுளாகக் காண்கின்ற ஒரு மரபு இக்காலத்தில் உருவாக்கப்பட்டது. 'மனித வடிவில் நடமாடும் தெய்வமாக மன்னன் காணப்படுகின்றான்' என இந்துக் கோட்பாடுகளில் கூறப்படுகின்ற முறையைப் பின்பற்றியே கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரும் அரசபதம் பற்றிய கோட்பாடு அமைந்துகொண்டது. நிசங்கமல்லனுடைய வடவாயில் கற்பலகைச் சாசனம் ஒன்றில் உலகில் மனித வடிவில் பெற்றோர் (கடவுளர்கள்) பிள்ளைகளுக்கு எப்படியோ அவ்வாறே மன்னர்களும் மனித வடிவில் காணப்படும் (மக்களுடைய கடவுளர்கள் என்று கூறப்பட்டுள்ளமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். அம்மன்னனது இன்னொரு கற்பலகைச் சாசனத்தில் (கல்பொத்த) அம்மன்னன் குறிப்பிடுவதாவது 'மன்னர்கள் மனிதர் வடிவில் தோற்றமளித்தாலும் கூட அவர்கள் மனிதவடிவிலுள்ள தெய்வீக வடிவங்கள், ஆதலால் மன்னர்களை கடவுளர்களாக மதிக்க வேண்டும்' என்று திரும்பத் திரும்ப மன்னனையும் கடவுளையும் ஒப்பிட்டு இணைத்துக்கூறி மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்து வதனைக் காணும்போது, ஒரு புதிய (அரசபதம் பற்றிய) சிந்தனையை மக்கள் மத்தியில் வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்பதனை நன்கு கண்டுகொள்ளமுடிகிறது. பொலனறுவைக் காலத்தில் இந்துமதமும் மகாயன மதமும் செலுத்தியிருந்த செல்வாக்கின் ஒரு விளைவே இத்தகைய தெய்வீக கோட்பாட்டின் பிறப்பும், வளர்ச்சியுமாகும்.

'மக்களுடைய நலன்களையும், செழிப்பு நிலைகளையும் பாதுகாக்கின்ற அத்தியாவசியமான பொறுப்பு மன்னனுக்குரியது' எனக் கருதப்பட்டது. சாஹஸ மல்லனுடைய கற்பலகைச் சாசனமொன்றில் அக்கருத்து வலியுறுத்தப்பட்டு உள்ளமையைக் காணலாம். 'ஒரு பேரரசன் இல்லாத பேரரசானது மாலுமியில்லாத நாவாய் ஒன்றினைப் போலவும், சூரியன் இல்லாத பகல் பொழுதைப் போலவும் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது' என்று அச்சாசனத்தில் கூறப்பட்டிருப்பதனை நோக்கும்போது அக்கருத்து நன்கு புலனாகின்றது. நிசங்கமல்லன் சாஹஸ மல்லனுக்கு முன்னரே அக்கருத்தினை தனது சாசனமொன்றில் வலியுறுத்தி உள்ளமையும் காண்கின்றோம். அரசன் இன்றி (ஒரு நாட்டில் பிரஜைகள்) வாழ முடியாது (உரிமையில்லை). அவ்வாறு அரசன் இல்லாதபட்சத்தில் அவனால் நியமிக்கப்பட்ட ஒருவன், அவனும் இல்லாதபட்சத்தில் ஓர் இளவரசனோ, அதுவும் தவறும்பட்சத்தில் ஓர் இளவரசியோ கட்டாயமாக அப்பேரரசுக்கு நியமிக்கப்பட வேண்டும். பௌத்தமதம் சாராத சோழ, கேரள மற்றும் நாடுகளைச் சேர்ந்தவர் களை அப்பதவிக்குத் தெரிவுசெய்யக்கூடாது'. இவ்வாறு நிசங்கமல்லன் தனது வடக்கு வாயில் கற்பலகைச் சாசனத்தில் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். மேலும் அச்சாசனத்தில் நிசங்கமல்லன் 'நாட்டுக்கு ஒரு மன்னனுடைய அதிமுக்கிய தேவையை' விபரிக்கும்போது 'மக்கள் குறைந்தபட்சமாக ஒரு பேரரசனுடையதோ அல்லது மன்னனுடையதான பாதக்குறட்டினையாவது அரசனின் குறியீடு ஆக வைத்துமதிக்கவேண்டும்' என்று கூறியிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. மேலும் அம்மன்னன் 'கொவி குலத்தவர்கள் அரச பதவியை விரும்புவது ஒரு (கறுப்புக்) காகம் ஒரு (வெள்ளை) அன்னத்தினைப் போன்றும், ஒரு கழுதை குதிரையைப் போன்றும், ஒரு மின்மினிப்பூச்சி சூரியனைப் போன்றும் பிரகாசிக்க முயற்சிப் பதனையே ஒக்கும்' என அச்சாசனத்திலேயே குறிப்பிடப்பட்டிருப்பதும் நோக்கத் தக்கது. இக்கூற்றானது எஸ்.பரணவிதான கருதுவது போன்று தென்னிந்தியாவில் இருந்து வந்து பொலனறுவைக்கால இலங்கையில செல்வாக்கு செலுத்தியிருந்த அரச வம்சத்தினர்க்கும், சிங்கள (கொவிக்குல) அரச வம்சத்தினருக்குமிடையே நிகழ்ந்த அரசபதவிக்கான அரச அதிகாரத்திற்கான உட்பகையையே பிரதிபலிக் கின்றது எனலாம்.

அநுராதபுரகால, பொலனறுவைக்கால இலங்கையைப் பொறுத்தவரையில் ஓர் அரசனுடைய பிரதான கடமையாக கருதப்பட்ட அம்சமானது புத்தசாசனததைப் பாதுகாப்பதாகும். அதற்காக மன்னன் கௌதமபுத்தர் பரிந்துரைத்த நற்குணங்களை யுடையவனாக அர்த்த சௌஷமும் ஆத்ம சௌஷமும் நிரம்பப் பெற்றவனாக விளங்க வேண்டும் எனவும் கற்பிக்கப்பட்டான். இதனால் மன்னர்கள் தஸராஜ மார்க்கத்தைத் தழுவி ஒழுகவேண்டியவர்களானார்கள். பொலனறுவையில் உள்ள வேளைக்காரரின் கற்பலகைச் சாசனத்தில் புத்தசாசனத்தைப் பாதுகாப்பதற்காக தம்மை மன்னன் நியமித்ததாக அவ்வணிக கணத்தினர் குறிப்பிட்டுள்ளமையை இங்கு நினைவுகூரல் பொருத்தமானதாகும். 'மன்னன் அகில உலகின் பாதுகாவலனாகவும், பெற்றோராகவும் கருதப்பட்டான். ஆதலால் சமூக நலன்களை விருத்திசெய்வதற்கும், உலக மக்களை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதற்கும் உரிய பொறுப்பினை மன்னன் கொண்டுள்ளான். மன்னன் சட்டங்களையும்,

அதிகாரங்களையும் பாதுகாப்பவன் மாத்திரமல்லாமல், இயற்கை அழிவுகளுக்கும், துன்பகரமான நிகழ்வுகளுக்கும் அவனே பொறுப்பாளியாவான்'. இதனாற் போலும் அநுராதபுரகால முடிமன்னர்களுள் ஒருவனான சங்கபோ என்பவன் 'வானத்திலிருந்து பூமியைநோக்கி மழையைப் பொழிவிததான்' என்ற ஓர் ஐதீகம் இற்றைவரை நிலவுகின்றமையைக் காணலாம்.

கோன்மையின் கோத்திரம் (Descent of Kingship)

முற்பட்ட அநுராதபுர மன்னர் பரம்பரையானது இந்தியாவில் பேரரசர்கள் கோரியது போன்று சூரியவம்சம், சந்திரவம்சம் (Solar Dynasty, Lunar Dynasty) என்று ஒரு போதும் குறிப்பிட்டுக் கூறிக்கொண்டதில்லை என மென்டிஸ் கருதுகின்றார். ஆனால் கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து பிற்பட்ட அநுராதபுரகால இறுதி மன்னர்களும், பொலனறுவைக்கால மன்னர்களும் தம்மை, சூரிய, சந்திர கோத்திர வழிவந்தவர்கள் எனக் குறிப்பிட்டுக்கொள்வதனைக் காண்கின்றோம். கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்தே இலங்கை மன்னர் படிப்படியாக சூரிய வம்சத்திலிருந்து தனது பரம்பரை தோற்றுவிக்கப்பட்டது என்பதனை வெளிப்படுத்தி வந்தமையினை மென்டிஸ் எடுத்துக்காட்டியுள்ளார். இது ஒரு வேளை இந்தியப் புராணமரபின் செல்வாக்கினால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதனையும் மென்டிஸ் அவதானித்துள்ளார். ஐந்தாம் கஸ்ஸபன் தன்னுடைய கல்வெட்டு ஒன்றில் ஷத்திரிய பரம்பரையில் மிகவும் சிறப்பு வாய்ந்ததான ஒக்காகா (Okkaka) வம்சத்தில் தான் தோன்றியவன் எனக் குறிப்பிட்டுள்ளான். நான்காம் மகிந்தன்கூட தன்னுடைய கற்பலகைச் சாசனத்தில் அவ்வாறே குறிப்பிட்டுள்ளான். கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்கு அப்பாலும் இதேதன்மை தொடர்வதனை இலக்கிய மூலங்களும் எடுத்துக்காட்டுகின்றன. இரண்டாம் பராக்கிரமபாகு தான் எழுதிய காவிய சிலுமின (Kaviya - Silumina) என்ற நூலில் தன்னை சந்திர குலத்து வழித்தோன்றல் எனக் குறிப்பிட்டுள்ளான். ஆனால் ஆய்வாளர் இரண்டாம் பராக்கிரமபாகு சூரியகுல வழித்தோன்றல் என்பதனால் அவனை காவிய சிலுமின என்ற நூலில் ஆசிரியராகக் கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். எது எவ்வாறெனினும், இக்காலப் பரப்பில் இலங்கையில் ஆட்சிசெய்த மன்னர்கள் தம்மை ஒன்றில் சூரிய வம்சத்தவராகவோ அல்லது சந்திர குலத்தவராகவோ கொள்வதனைக் காண்கின்றோம்.

மகாவம்சத்தில் மானவர்வமனே (கி.பி. 676) முதன்முதலாக மஹாசமமத வம்சத்தைச் சேர்ந்தவன் என்று கோரியிருப்பதனைப் போன்று சூளவம்சத்தில் இரண்டாம் கஸ்ஸபன் அதே வம்சத்தைச் சேர்ந்தவனாகக் குறிப்பிடுவதனையும் காண்கின்றோம். ஆறாம் புவனேகபாகுவின் கற்பலகைச் சாசனமொன்றில் (கி.பி. 15ஆம் நூற்றாண்டு) அவன் தன்னைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது தான் மகாபராக்கிரமபாகுவின் மகன் ஆவன் எனவும் தனது தந்தை சூரிய குலத்திலுதித்த மஹாசாமத்த என்ற பெருமை வாய்ந்த குலத்தினன் எனவும் குறிப்பிட்டுள்ளமையைக் காண்கின்றோம். கி.பி. 14ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சித்தாமலங்காரய என்ற நூலில் மஹாசாமத்த தொடர்பான ஐதீகம் ஒன்றைப் பற்றிக் குறிப்பிடும்போது சூரிய கடவுளருடைய மகனாக மஹாசாமத்த எடுத்துக்

கூறப்படுவதனைக் காணலாம். இந்த ஐதீகமானது பௌத்தமல்லாத ஒரு மரபிலிருந்து தோற்றம் பெற்றிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரச வாரிசுரிமைக் கோட்பாடு

புராதன இலங்கையில் அரசமரபு கண்ட வாரிசு உரிமை திட்டவட்டமான விதிகளைக் கொண்டிருந்திருக்கவில்லை என்பது புலனாகின்றது. ஓர் அரசனின் ஆட்சியுரிமமானது திடீர் திடீர் என முற்றுவிக்கப்பட்டதாகவே அநுராதபுர அரசியலில் காண முடிந்தது. பெருமளவிலான மன்னர்கள் தமது ஆட்சியுரிமத்தினை சேனாதிபதிகளிடம் இழந்திருந்த வரலாற்றையே அநுராதபுரகால அரசியல் வரலாற்று அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இருந்தும் இதற்கு விதிவிலக்கான சில சம்பவங்களும் அநுராதபுரகால, பொலனறுவைக்கால அரசியல் நடவடிக்கைகளின் போது இடம்பெற்றிருந்தமையைக் காணமுடிகிறது.

வில்லியம் கைகர் அவதானித்துள்ளதன்படி அரசுக்கு அடுத்து வரவேண்டிய வாரிசு நாட்டை ஆட்சிசெய்யும் மன்னனிடமிருந்து அவனது அடுத்த சகோதரனுக்கே உரியது எனக் காணலாம். துரதிஷ்டவசமாக அம்மன்னனுக்கு உடன்பிறந்த சகோதரன் ஒருவன் இல்லையாயின் மட்டுமே அரச ஆட்சியுரிமமானது இன்னொரு பரம்பரையைச் சென்றடையும். கைகர் குறிப்பிட்டுள்ள இந்த உதாரணங்கள் யாவும் மூன்றாம் மகிந்தனது ஆட்சிக்காலத்திற்கும் நான்காம் மகிந்தனது ஆட்சிக் காலத்திற்கும் (கி.பி. 797 - கி.பி. 956) இடைப்பட்ட கால அரசியல் சம்பவங்களாக உள்ளன.

ஆனால் அநுராதபுரகால மன்னர்கள் சில சந்தர்ப்பங்களில் தத்தமது ஆண் மக்களினதும், ஏனைய தம் உறவினரதும் உதவியையும், நம்பிக்கையையும் அடுத்து வரவேண்டிய அரசியல் வாரிசுரிமை தொடர்பாக நாடியிருந்தமைக்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. சாசனப் பதிவுகளில் இக்குறிப்பிட்ட அம்சத்தைக் காட்டும் தகவல்கள் பதியப்பட்டிருக்காவிடினும், பெருமளவிலான இலக்கியங்களில் அச்செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளமையினைக் காண்கின்றோம். பொலனறுவைக் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் பெருமளவிற்கு அரச வாரிசுரிமை நடைமுறையானது தகப்பனிடமிருந்து (மூத்த) மகனுக்குச் சென்றதாகவே உள்ளது. இதற்கான ஒரு பின்னணியாகவும், வலுவாகவும் அமைந்த அரச முகாமைத்துவ முறையை இலங்கையில் சோழப் பேரரசர்கள் ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் அரசியல், நிர்வாக முகாமைத்துவக் கொள்கைகளில் அவர்களது செல்வாக்கு நிலைத்து விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேர்வு முறையும் அரசபதமும்

அநுராதபுர, பொலனறுவைக்கால முடியாட்சி முறையானது பெருமளவுக்கு வம்ச பாரம்பரியத்தைக் கொண்டிருந்திருப்பினும், சில சந்தர்ப்பங்களில் தேர்வுமுறை மூலமோ அல்லது நியமன முறைமூலமோ அரச முறையை ஏற்படுத்தி இருந்தமைக்கான சான்றுகளையும் காணமுடிந்தது. சிறப்பாக பௌத்த சங்கத்தினரான பௌத்தப் பிக்குமாரும் பிரபுக்களும், உயர் நிர்வாகிகளும் ஒன்றுகூடி, ஆலோசித்து மன்னனைத் தெரிவு செய்த சம்பவங்களும் இலங்கை

வரலாற்றுப் போக்கில் காணப்படுகின்றன. மகாவம்சத்தில் அரசன் தூலாதன(ன்) என்பவனை சதாதிஸ்ஸ மன்னன் இறந்தபோது, பேரவை உறுப்பினர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து தூபராமாவைச் சேர்ந்த பிக்குமார்களுடைய அனுசரணையுடன் அரசனாகத் தெரிந்தெடுத்து, அபிடேகம் நடாத்தி சிம்மாசனத்தில் ஏற்றி வைத்தனர். (MV 333, 17) இவ்வம்சமானது மூத்தமகன் லாஞ்சதிஸன் இருக்கத்தக்கதாக இவனுடைய இளைய சகோதரனான தூலாதனனை தெரிவுசெய்து ஒரு முறையை எடுத்துக்காட்டுகின்றது. தூலாதனனைப் பொறுத்தவரையில் அரச நிர்வாக முகாமைத்துவத்திற்கேற்ற தகைமை காணப்பட்டிருக்காவிடினும், பௌத்த சங்கத்தாரதும், பிரபுக்களதும் ஏகோபித்த செல்வாக்கினுள் அகப்பட்டநிலையில் அவனுக்கு மன்னனாகும் வாய்ப்பு தெரிவுமூலம் எட்டியது என்பது குறிப்பிடத் தக்கது. கி.பி. 12ஆம் நூற்றாண்டிற்கூட இவ்வகையான சம்பவங்கள் பொலனறுவை யில் நிகழ்ந்துள்ளன. சூளவம்சத்தில் இத்தெரிவு தொடர்பான விபரங்கள் கூறப்பட்டுள்ளன. கி.பி. 1114இல் முதலாம் ஜெயபாகு பேரவை உறுப்பினர்களாலும், பௌத்த சங்க உறுப்பினர்களாலும் ஒன்றுகூடி, ஏகமனதாக, உரோகணத்தில் நிர்வாகப் பொறுப்பில அமர்த்தப்பட்டிருந்த 'ஆதிபாதா'வுக்கு தலைநகரில் மன்னன் காலமான செய்தி தெரிவிக்கப்படாமலேயே யுவராஜாவிற்கு லங்காவின் பேரரசனாகப் பட்டங்கட்டி, முடிசூட்டியும் வைத்தனர் (CV 61.1) நிசங்கமல்லனுடைய கல்பொத்தச் சாசனம் கூட 'மன்னனது தெரிவு' பற்றியே குறிப்பிடுகின்றது. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் பௌத்த சங்க உறுப்பினர்களாலேயே தெரிவுசெய்யப்பட்டிருந்தான். எனவே மன்னனைத் தேர்ந்து எடுப்பதில் பௌத்தசங்க அங்கத்தவர்களுக்கு அதிகாரமும், செல்வாக்கும் மிதமிஞ்சி இருந்த சம்பவங்கள் இலங்கை வரலாற்றில் காண்கின்றோம். 'புத்த சாசனத்தை பாதுகாப்பவன் மன்னன்' என்ற ஓர் அடிப்படைக் கொள்கையின் பயனாகவே மன்னனுடைய தெரிவு விடயத்தில் பௌத்த சங்கமானது பெரிதும் அக்கறை காட்டியிருந்தது என கொட்றிங்ரன் குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கது.

அபிடேகம் :அநுராதபுர, பொலனறுவைக்கால முடியாட்சி முறைமையின் ஓர் அம்சமாகவே அபிடேக முறையும் விளங்கியது. பட்டாபிடேகம் எனவும் குறிப்பிடப்படும் இச்சடங்கானது சத்திரிய வம்சத்தினரின் மரபுகளுள் மிகவும் முக்கியமானதாகக் கொள்ளப்பட்டது. அபிடேகம் பற்றிய முதலாவது தெளிவான வரலாற்றாதாரத்தினை அசோகப் பேரரசன் இலங்கை மன்னனான தீசனுக்கு அனுப்பிவைத்த பட்டாபிடேகத்திற்கான அன்பளிப்புப் பொருட்கள் பற்றி மகாவம்சம் குறிப்பிடுவதிலிருந்தும், 'தேவநம்பிய' என்ற விருதினை அவ்வபிடேகத்தின்போது சூடிக்கொண்ட முறைமையிருந்தும் பெற்றுக்கொள்கின்றோம். வம்சத்தபாஹாசினி என்ற பாளிமொழி உரை நூலில் பட்டாபிடேகம் பற்றிய மிக விரிவான செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். கங்கையிலிருந்து மூன்று பொற்சங்கு களுக்குள் நிரப்பிக் கொண்டுவரப்பட்ட புனித நீரினால் சத்திரிய வம்சத்தைச் சேர்ந்த புனித கன்னிப் பெண் ஒருத்தி மன்னனாக முடிசூட நியமனம் பெற்ற அல்லது உத்தேசிக்கப்பட்டவருக்கு நீராட்டி விடுவதுடன் ஆரம்பிக்கும் இவ்வைபவம் பிராமணிய புரோகிதர்களினால் விதிப்படி நடாத்தி முடிக்கப்பட்டது. மகாவம்சத்தில்

மிகவும் சுருக்கமான முறையில் அபிடேகத்திற்குத் தேவையான பொருட்கள் பற்றிய விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 'ஒரு சாமரை, அரசசின்னம், ஒரு வாள், நிழற்குடை(a Parasol), காற்குறடு ஒரு சோடி, ஒரு தலைப்பாகை, காதுக் குண்டலங்கள் ஒரு சோடி, கழுத்து மாலைகள், ஒருகெண்டி, மஞ்சள் சந்தணக் கட்டை, பட்டுத்துண்டு, அத்தர் வாசைன எண்ணெய் (Unguent), சிவந்தமண் / புற்றுமண், கங்கையிலிருந்து கொணரப்பட்ட புனிதநீர்/அனோதத்த ஏரிநீர், புனித ஒலியைத்தரும் மங்களகரமான வெண்சங்கு, அன்றலர்ந்த செந்தாமரையை ஒத்து, அளமை இதழ் விரியும் கன்னிகை ஒருத்தி, தங்கத் தாம்பாளங்கள், திரைபோட்ட (a litter) அரசகட்டில், திவ்விய மூலிகைகளினால் தயாரிக்கப்பட்ட நைவேத்தியம், 6000 பாரம் மலையரிசி (இது பஞ்சவர்ணக் கிளிமூலமாக வருவிக்கப்பட்டது) என்பன அவ் அபிடேகப் பொருட்களாகும். பொலனறுவைக் காலத்திலும் முதலாம் விக்கிரமபாகு அவ்வகையான பொருட்களை முடிசூட்டு வைபவத்திற்காகக் கொண்டிருந்தான் என சூளவம்சம் குறிப்பிடுகின்றது. வெண்கொற்றக்குடை ஜாதகங்கள் எழுதப்பட்ட காலத்திலிருந்தே பட்டாபிடேக வைபவங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தமையைக் காண்கின்றோம். பொலனறுவைக் காலத்தில் முடிசூட்டு வைபவத்திற்கென அரண்மனைத் தொகுதியில் தனித்துவமான ஒரு மண்டபம் (பாசாத) கட்டப்பட்டிருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. முதலாம் விஜயபாகு அவ்வாறு முடிசூட்டு வைபவத்திற்கென ஒரு பாசாதத்தினை (மண்டபத்தினை) கட்டியிருந்தான். அத்தோடு விஜயபாகு தன்னளவில் பட்டாபிடேக மரபுகள், முறைகள் போன்றவற்றை நன்கு தெரிந்திருந்த ஒரு மன்னனாவான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பட்டாபிடேகமானது கோன்மைக் கோட்பாட்டில் இரு வழிகளில் முக்கியத்துவம் பெறுகின்றது. அவையாவன ஒன்று : உத்தியோகபூர்வ அரசாங்க முத்திரையைப் பொறிப்பிப்பதற்கும், மன்னனுடைய பெயரைத் தீட்டுவதற்குமான அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்வது, இரண்டு : மக்களின் மேலாணையை மன்னனும், அரச குடும்பமும் பெற்றுக்கொண்டதற்கான அளவீடு என்பவையே அவையாகும். ஒரு வம்சத்தினுடைய ஆட்சியுரிமை மற்றொரு வம்சத்திற்கு மாற்றமடையும்போது அரச சின்னங்கள், வம்சப்பொக்கிஷங்கள் ஆகியனவும் அபிடேக நிகழ்வு ஒன்றினூடாகவே கைமாற்றமடைவதும் குறிப்பிடத்தக்கது. பொலனறுவைக்கால இலங்கையரசியலில் நிலவியிருந்த இரு மன்னர் முடியாட்சி முறை ஏக காலத்தில் இருந்தபோது அபிடேகச் சடங்கு பெற்றிருந்த முக்கியத்முவத்தின் விளைவு களையும் நன்கு கண்டுகொள்ளமுடிந்திருந்தது. குறிப்பாக ஆட்சியாண்டு பொறித்த கட்வெட்டுக்கள் யாவும் பட்டாபிடேகம் பூண்ட மன்னனது பெயரிலும் ஆட்சியாண்டு குறிப்பிடப்படாத சாசனப் பொறிப்புக்கள் சமகாலத்தில் அவ்வரசனுக்கு இணையாக ஆட்சிப்பொறுப்பில் இருந்த மற்றொருவனுடையதாக இருந்ததனையும் கண்டு கொள்ளமுடிந்தது.

அநுராதபுர, பொலனறுவைக்கால மன்னர் கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கைகள்

இலங்கைத்தீவின் புராதன வரலாற்று வளர்ச்சியில் மிகவும் தாக்கத்தினையும், செல்வாக்கினையும் ஏற்படுத்தி நின்ற ஓர் அம்சம் இராச்சியத்திற்கு இராச்சியம்

கடைப்பிடித்த கொள்கைகளே யாகும். வெளிநாட்டுக்கொள்கை என்ற பதமானது புராதன காலத்தில் ஒரே நாட்டுக்குள்ளேயே காணப்பட்டிருந்த பல்வேறு தனித்துவமான அரச குடும்ப ஆட்சியாளர்களுக்கிடையே கடைப்பிடிக்கப்பட்ட அரசியற் கோட்பாடுகளாகும். தீபகற்ப இந்தியாவில் பெருநதிகள் எவ்வாறு பல வெளிநாடுகளை உருவாக்கியிருந்ததோ அதேபோன்றே இலங்கைத் தீவிலும் பெருநதிகளால் பல வெளிநாடுகள் உருவாக்கப்பட்டிருந்தன. வடஇந்தியாவில் ஆட்சிசெய்த அசோகப் பேரரசன் தனது அயல்நாடுகளாகக் குறிப்பிட்டிருந்த வெளிநாடுகளின் வரிசையில் 'சேர, சோட, பாடா, சத்தியபுத்திரோ, கேரள புத்திரோ, தம்பப்பம்மி' என தனது 2ஆம் 13ஆம் கிர்னார் பாறைப் பிரகடனத்தில் பொறிப்பித்திருந்தமை குறிப்பிடதக்கது. கி.பி. 4ஆம் நூற்றாண்டுக்குரிய சமுத்திரகுப்தனின் அலாஹபாத்தூண் பிரஸஸ்திச் சாசனத்திலும் குப்தப் பேரரசிற்கு வெளியே காணப்பட்ட நாடுகளின் பெயர்கள் தீட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையைப் பொறுத்தவரையில் நாகதீபமும், பின்னர் யாழ்ப்பாண இராச்சியமும் ஒரு வெளிநாடு என்ற அடிப்படையிலேயே தென்னிலங்கை ஆட்சியாளர்களால் தமது ஆட்சிக்காலம் முழுவதிலுமே வைத்து எண்ணப்பட்டு, ஆட்சிக் கொள்கைகள் வகுக்கப்பட்டிருந்தமையை சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

மத்தியகாலத்து சிங்கள மன்னர் தம்மை பெருமளவிற்குத் 'தென்னிலங்கைக் கோன்' என்றே சாசனங்களில் பதிவுசெய்து குறிப்பிட்டிருந்தமையைக் காண்கின்றோம். யாழ்ப்பாணத்து அரசர் பெருமளவிற்கு வடவாரியார் கோன் என்றே இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டு, அழைக்கப்பட்டிருந்தமையையும் காணலாம். 'வடவாரியார் கோன் யாழ்ப்பிரமதத்தன்' என்றொரு மன்னன் சங்க காலத் தமிழகத்திற்கு விஜயம்செய்து, தமிழ்ப் பாக்கள் பலவற்றை யாத்திருந்தான் என்பதற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன. (குறுந்தொகை - 184ஆம் பாடல்) கம்பளை ஆட்சியாளன் அழகக்கோனார் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்தி களின் சரக்குக் கப்பல்கள் புத்தளத்திலிருந்து காலித்துறை முகத்திற்கு வருவதனைத் தடுக்கமுயற்சிகள் மேற்கொண்டிருந்தான் எனவும் அறிகின்றோம். இச்சம்பவங்கள் யாவும் இலங்கைத் தீவிற்குள்ளேயே புராதன காலத்திலிருந்து வெளிநாடுகள் / அயல்நாடுகள் இருந்து வந்துள்ளன என்பதனையே வலியுறுத்திக் காட்டுகின்றன. இந்நிலையானது ஓரிரு சந்தர்ப்பங்களிலேயே மாற்றமடைந்து மிகவும் வலிமையான மன்னர்களின் ஆளுகையின் கீழ் ஓரணிப்படுத்தப்பட்டதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. தீபகற்ப இந்திய வரலாற்று அனுபவங்களையொத்து இலங்கையிலும் அந்நிலை காணப்பட்டிருந்தது எனலாம்.

புராதன இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புகள் இரண்டு அடிப்படைகளில் உருவாகியிருந்தன எனலாம். அவையாவன: 1) வர்த்தகத்திற்கான தரை கடந்தும், கடல் கடந்தும் தொடர்புகளை ஏற்படுத்தி இருந்தமை, 2) இழந்த சிம்மாசன உரிமையை மீட்டெடுப்பதற்காக அல்லது வம்சத்தகராறு தீர்ப்பதற்காக தரை கடந்தும், கடல் கடந்தும் சென்று நட்பு நாடுகளிடம் படையதவி கோரியிருந்தமை என்பனவாகும். இத்தன்மைகள் பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரிமாற்றம் தொடங்கி பாதுகாப்பரசாக பிற வலிமைமிக்க ஆட்சியாளர்களின் உதவிகளைக்

கோரியிருந்தமை வரைக்கும் இலங்கையின் புராதன சமூக – அரசியல், பண்பாட்டு அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

கதிர்காமத்தினை (மகாகமை) தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த ஆட்சியாளர்கள் மலேசியா, ஜாவா ஆகிய கடல் கடந்த வெளிநாடுகளிலிருந்து படையுதவியைப் பெற்றிருந்தார்கள் என்பதனை பிராமிச்சாசனங்கள் உறுதிப்படுத்தி புள்ளன. கதிர்காமத்தில் பஞ்சவர் ஆட்சிமரபு ஒன்று புராதன காலத்திலிருந்து மத்திய காலத்தின் இறுதிவரைக்கும் நின்று நிலத்திருந்தமையை சான்றுகளுடன் தென்னிந்தியப் பாண்டியர் அரச மரபுடன் ஒப்புநோக்க முடிகிறது. கதிர்காமம், கந்தரோடை இவை இரண்டு மையங்களும் பெருங்கற் பண்பாட்டின் வளர்ச்சியின் பின்னணியில் உருவாகி வளர்ச்சிபெற்ற ஆதித்திராவிட அரசியல் பண்பாட்டுத் தொன்மைகளை பிறபண்பாட்டு வெளிப்பாடுகளுடன் ஒருங்கே கொண்டிருப்பதனையும் காண முடிகின்றது.

அநுராதபுரகால மன்னர்கள் அரசியல் அடிப்படையில் எத்தகைய வெளிநாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடித்திருந்தனர் என்பது பற்றித் தெளிவாக அறிந்து கொள்வதற்கு நம்பகமான சாசனச்சான்றுகள் எவையும் கிடைத்திருக்கவில்லை. கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் அநுராதபுர ஆட்சியாளர்கள் பொதுவாக வட இந்தியாவுடன், கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் அவர்கள் தீபகற்ப இந்தியாவுடனுமே தமது தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர் எனக் கொள்ளமுடிகிறது. கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கு முன் அம்மன்னர்கள் ஏற்படுத்தியிருந்த தொடர்புகள் பெருமளவிற்கு வர்த்தக-மத அடிப்படையிலானவையாகவும், கி.பி. 6ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து ஏற்படுத்திக்கொண்டவை, அரசியல் அடிப்படையில் ஆனவையாகவும் அமைந்திருந்தன எனக் குறிப்பிடலாம்.

வர்த்தகத் தொடர்பின் நிமித்தமாக ஏற்பட்ட உறவுகள் தற்செயலாக அரசியலாதிக்கத் தினையும் பெற்று இருந்திருக்கக் கூடிய சம்பவங்களும் அநுராதபுரத்தில் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதிகமா ஆராயப்படாத அநுராதபுரத்து ஆட்சியாளர்களது வரலாற்றுப் பரப்பாகக் காணப்படும் சேன(ன்), குட்டக(ன்), அசேல(ன்), எல்லாள(ன்) போன்றோரை பெருமளவிற்குக் குதிரை வியாபாரிகளாகக் கொள்ளும் முறையே வரலாற்றாசிரியர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இவர்களுடைய தாயகபூமி அநுராதபுரத்திற்கு அருகில் உள்ள அயல்நாடு ஒன்றாகத்தான் விளங்கியிருந்தது என்பது தெளிவாக இருந்தபோதும், பலர் அதனைத் தீபகற்ப இந்தியப்பரப்பினுள் வைத்து நோக்குகின்றார்கள். உண்மையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் புராதன வடிவமான நாகதீபம் அல்லது மணிபல்லவமே அம்மன்னர்களுடைய தாயக இருக்கையாகும் என்பது அண்மைக்காலத் தொல்லியல் கண்டுபிடிப்புக்களின் பெறுபேறுகள் உறுதிப்படுத்தியுள்ளன. குதிரை முகம் நீங்கிய மையமான மாவிட்டபுரமும், கீரிமலையும் இணைந்த அரசிருக்கையே சேன(ன்), குட்ட(ன்) ஆகியோரின் தாயகம் என்பது தற்போது தெளிவாகின்றது. 'சேந்தான்' குளம் எனத் தற்போது அழைக்கப்படும் மையமே சேனன் என்பவனின் அரசிருக்கை என்பது இன்னும உறுதிப்படுத்தப்படாத செய்தியாக உள்ளது. எல்லாளனின் தாயகம் வடமராட்சி,

உடுப்பிட்டியிலுள்ள 'எள்ளன் குளம்' என்ற மையமாகும். இப்பின்னணியில் பார்க்கும்போது நாகதீபத்திலிருந்தே இவ்வரசர்கள்சென்று, அநுராதபுர இராச்சியத்தில் அரசியல் அதிகாரத்தினைப்பெற்று, ஆட்சியமைத்திருந்தார்கள் எனலாம்.

கி.பி. 6ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து இலங்கையின் தலைநகரான அநுராதபுரத்திற்கு மிகவும் அண்மித்தவகையில், தென்னிந்தியாவில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவர்கள் பேரரச அமைப்பொன்றை ஏற்படுத்தினார்கள். முதன் முறையாகப் பேரரச அமைப்பு ஒன்று தமிழ்நாட்டில் உருவாக்கப் பட்டவுடன் தவிர்க்க முடியாதபடி அநுராதபுரகால இலங்கையும் காஞ்சியுடன் நேரடியான அரசியற் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டியேற்பட்டது. மானவர்மனடைய ஆட்சி யுடன் ஆரம்பிக்கப்பட்ட அத்தொடர்புகள் அரசியலடிப்படையில் வளர்ந்து சென்று, பின்னர் தென்னிந்தியப் பேரரசு ஒன்றின் மேலாதிக்கத்தினுள் இலங்கையையும் தவிர்க்க முடியாதபடி இணைத்து விட்டிருந்தமையைக் காண்கின்றோம். சோழர்கால இலங்கை வரலாறு அதனையே எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. சோழர்களது 77 ஆண்டுகால அரசியல் மேலாதிக்கமானது இலங்கை அரசியல், நிர்வாக, பண்பாட்டு வரலாற்றில் பல மாற்றங்களை ஏற்படுத்திவிட்டிருந்தமையை நாம் ஏற்கனவே படித்துள்ளோம். சோழராட்சிக்குப் பின் பொலனறுவையிலிருந்து ஆட்சிசெய்த சிங்கள மன்னர்கள் தவிர்க்கமுடியாதபடி கன்னட, கலிங்க, பாண்டியத் தொடர்புகளின் நிமித்தமாக அரசியலில் தத்தம், ஆதிக்கவுரிமையை நிலைநாட்டு வதற்கு தென்னிந்திய அரசியற் கோட்பாடுகளையே நடைமுறையில் பின்பற்றி இருந்தமையைக் காண்கின்றோம். 1236இல் ஏற்பட்ட கலிங்கமாகனின் படையெடுப்பானது அத்தகைய அரசியற் தொடர்புகளின் ஓர் உச்சமான கட்டத்தினையே குறிப்பிட்டு நின்றதெனலாம்.

பொலன்னறுவை சோழரால் தலைநகராக்கப்பட்டதிலிருந்து மகானது ஆட்சியில் அமர்ந்தது வரையுள்ள சுமார் இரண்டேகால் நூற்றாண்டுக் காலத்தையே (1017 - 1235), 'பொலன்னறுவைக் காலம்' என்ற பெயரால் நாம் குறிக்கின்றோம். இக்காலப் பகுதியின் அரசியல் வரலாற்றை இதுவரை கூறிவந்தோம். சோழராட்சி யிலிருந்து இலங்கை விடுதலை பெற்றபின், விஜயபாகு, மகாபராக்கிரமபாகு, நிஸங்க மல்லன் முதலானோரின் ஆட்சிக் காலங்களில் நாடு அரசியற் சிறப்பையும், பொருளியல், சமயம், கட்டிடம் முதலான துறைகளிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகளையீட்டியதால், அதற்கு மகத்தான புகழ்கிட்டியது. ஆனால் பொலன்னறுவைக்கால அரசியற் போக்கின் ஒரு தன்மை இவ்வெற்றிகளை நிலைக்காவண்ணம் செய்தது. ஒவ்வொரு முக்கிய அரசனும் நீண்டகால உள்நாட்டுப் போருக்கு அல்லது விடுதலைப் போருக்குப் பின்னரே அரசைப்பெற்று, புனருத்தாரண வேலைகளிலும் ஆக்கப் பணிகளிலும் ஈடுபடலானான். ஆனால், அம்மன்னன் மறைந்ததும், அவனுடைய சாதனைகளை வீணடிக்கும் வகையில் உடனே அரசியற் சச்சரவு களும், போட்டிகளும், உள்நாட்டுப் போர்களும் தொடரும். இதனால் மீண்டும் அரசைப் பெறுகின்ற முக்கிய மன்னன், எவ்வளவோ புனருத்தாரண வேலைகளைச் செய்யவேண்டி இருக்கும். அரசியலில் இவ்வாறு உறுதியின்மையும், குழப்பங்களும், உள்நாட்டுப் போர்களும் அடிக்கடி

இடம்பெற்றதால், பொருளியல் சமயம் முதலான துறைகள் பெரிதும் பாதிக்கப் பட்டதைக் காணலாம். இருப்பினும், இவ்வகையான சூழ்நிலையில் பொலன்னறுவைக்கால மன்னர்கள் ஈட்டிய பல்துறை வெற்றிகள் உண்மையிலேயே பெரும் சாதனைகளாக மதிக்கத்தக்கவையென்பதைக் காண்போம். பொலன்னறுவைக் காலத்தில் சிங்களப் பண்பாடு பல வழிகளிலும் ஏற்றம் பெற்றிருந்தமை இந்த அத்தியாயத்தைப் படிக்கும்போது எளிதிற் புலனாகும்.

அரசியல் முறையில் மாறுதல்கள்

பொலன்னறுவைக் கால அரசியல்முறை, அனுராதபுர காலத்தினுடையதைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்ட ஒன்றாக இருந்ததாக நாம் எண்ணக்கூடாது. உண்மையில், அனுராதபுரகால முறையில் முக்கிய அம்சங்களையே, சோழரை வெளியேற்றியபின், விஜயபாகு மீண்டும் ஏற்படுத்தினான். ஆனாலும் எந்த ஒரு முறையும் எக்காலமும் ஒரே தன்மையதாகவிருக்குமெனவும் நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே, பொலன்னறுவைக் கால அரசியல் முறையானது, முந்திய கால (அதாவது அனுராதபுரகால) ஆட்சிமுறை அம்சங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்த தாயினும், பிந்திய காலப் பகுதியில் அது சில மாறுதல்களைப் பெற்றிருந்தது.இங்கு நாம் பொலன்னறுவைக் காலத்தில் ஏற்பட்ட சில முக்கிய மாறுதல்களை மட்டும் கவனிப்போம்.

மன்னனும் அரசுரிமையும்

குடிகளின் விசுவாசத்தையும் மதிப்பையும் பெறுதற்கு மன்னர்கள் வெவ்வேறு பட்டங்களைச் சூடுதல் முன்னரே வழக்கிலிருந்தது. பொலன்னறுவைக் காலத்தில் அவர்கள் 'சக்கரவர்த்தி' என்ற பட்டத்தைச் சூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சூளவம்சத்தில் மகா பராக்கிரமபாகுவும், கல்வெட்டுக்களில் நிஸங்கமல்லனும் அவனது பின்னோரும் இப்பட்டத்தால் அழைக்கப்பட்டிருத்தலைக் காணலாம். அரசுரிமை பழைய முறைப்படியே விஜயபாகு போன்ற மன்னர்களின் காலத்தில் சென்றதெனினும் கலிங்க மன்னர்கள் அதைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை. 'பாகிநெய்ய' எனப்பட்ட மருமகனும் உரிமை பெறுதற்குத் தகுதி பெற்றுள்ளான். அரசனாக விருப்பவன் தனக்குப்பின் உரிமை பெற வேண்டியவனை (உபராஜா) நியமிக்கும் வலுவையுடையவனாக இருந்தான். ஆனால், அரசனுடைய முடிவை அரசவை உறுப்பினர்கள் ஏற்காதுவிடின், அவன் அரசைப் பெறுதல் கடினமாகவிருந்தது. அரசன் ஷத்திரிய (அரச) குலத்தவனாகவும், பௌத்த மதத்தவனாகவும், இருவழியிலும் (தந்தை, தாய்) ஒத்த மரபைச் சேர்ந்தவனாகவும் இருத்தல் அவசியமாகக் கருதப்பட்டது. 'கொவி' குலத்தவர்கள் அரசைப் பெற எண்ணியதை நிஸங்கமல்லன் ஏளனஞ்செய்ததை முன்னர் கண்டோம். அரசகுலத்து ஆண்வாரிசுகள் அரசைப் பெறுதற்கு இல்லாதவிடத்து, அரசகுலப் பெண்களும் உரிமையைப் பெறலாம் என்ற கருத்தை நிஸங்கமல்லன் ஒரு கல்வெட்டில் வலியுறுத்தியுள்ளான். மூன்று மாதக் குழந்தையைக்கூட அரசைப் பெயரளவில் ஏற்க வைத்து, அமைச்சர்களும் பிரதானிகளும் அதிகாரத்தைச் செலுத்தினார்களேயன்றி, தாமே அரசைப் பெறத் துணியவில்லை. முடிசூட்டு

வைபவத்தை நடத்துவதன்மூலம் சில தெய்வீக வலுக்களை மன்னர்கள் பெறுவதாக நம்பப்பட்டது. மன்னர்களுக்குத் தெய்வ வழியுரிமையிருப்பதாக அவர்களின் பொறிப்புக்களும் அக்காலத்தெழுந்த நூல்களும் வலியுறுத்தியுள்ளன. மன்னர்கள் மனித உருவிற் காட்சியளிப்பினும் அவர்கள் உண்மையில் தெய்வங்களே: எனவே அவர்களைத் தெய்வங்களாகவே மதிக்க வேண்டும். இவ்வாறு நிஸங்கமல்லனது கல்பொத்த பொறிப்புக் கூறியுள்ளமை நினைவு கூரத்தக்கது.

அரசர்களின் கடமைகள் முதலியன

குடிகளின் நலனைப் பேணல் என்பதையே தமது முக்கிய இலக்காகக் கொண்டு, பொலன்னறுவைக்கால மன்னர்களும் ஆட்சிநடத்தினர். பராக்கிரம பாகுவின் கூற்றாகச் சூளவம்சத்தில் உள்ள ஒரு வாக்கியம் இது : 'என் போன்ற ஒருவனுக்கு, மக்கள் நலனைப் பேணாது எனது உடைமைகளைத் துய்த்துக் காலத்தைக் கழிப்பது எவ்வகையிலும் ஒவ்வாது.' அரசர்கள் நன்னெறியிற் செல்லும்போது, நாடும் முன்னேற்றத்தை அடையும். அரசர்கள் நெறிதவறாது நடப்பின், கோளங்களும் தம் வழியே தவறாமற் செல்லும். மன்னுயிரெல்லாவற்றையும் பரமாத்மா காப்பது போல, அரசர்களே எல்லா மனிதர்களினதும் காவலர்கள். தாராண்மை, வாய்மை, வீரம் என்ற பண்புகளுக்கே, தமது உயிரிலும் மேலான இடத்தை மன்னர்கள் அளிப்பர். நல்லாரைப் பாதுகாக்கத் தீயோரை அவர்கள் ஒறுக்கின்றனர். இத்தகைய கருத்துக்கள் 12ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு நூலில் (புத்சரண) குறிப்பிடப்பெற்றுள்ளன. நற்பண்புகளைச் சிதைக்காது அரசர்கள் பொருள் விருத்தியை ஏற்படுத்தினார்கள் என்பது அவர்களுடைய கல்வெட்டுக்களில் அடிக்கடி வலியுறுத்தப்பெற்றுள்ளது. 'அர்த்த'த்திற்கும் (பொருள் விருத்திக்கும்) 'தர்ம' த்திற்கும் (நற்பண்புகள்) இடையே அவர்கள் சமநிலையைக் கண்டதாகக் கூறலாம் எனப் பரணவிதான தெரிவிக்கின்றார். இவ்வித ஒரு மன்னனையே பொத்கல் விகாரைக்கு முன்னுள்ள சிலை சித்தரிப்பதாக அவர் மேலும் கருதுகின்றார். இளவரசர்களுக்குப் பல வித்தைகளிலும் பயிற்சியளிக்கப்பட்டது. குறிப்பாக, போர்ப்பயிற்சி, சமயம், கலைகள், சாத்திரங்கள் என்பவற்றில் அவர்கள் தேர்ச்சி பெற்றனர். விஜயபாகு சமஸ்கிருத, பாலி இலக்கியங்களைப் பயின்று, புலமை பெற்றிருந்ததாகத் தெரிகின்றது. மகாபராக்கிரமபாகு வடமொழியிலுள்ள 'அர்த்தசாஸ்திரம்' போன்ற நூல்களைப் பயின்றிருந்ததாகச் சூளவம்சம் கூறியுள்ளது. இந்தியாவில் பின்பற்றப்பட்டதைப் போலவே, இலங்கை மன்னர்களும் ஜாதகர்ம, நாமகர்ண, உபநயன முதலான கருமங்களை அல்லது கிரியைகளைப் பிராமணர்களைக் கொண்டு ஒழுங்காக நடத்தி வந்துள்ளனர். பரித்த (பிரித்) ஓதுதல் போன்ற பௌத்தக் கிரியைகளும் இடம்பெற்றன. மனுதர்ம சாஸ்திரம் முதலான வடமொழி நூல்களின் செல்வாக்கு ஆட்சிமுறையில் காணப்பட்டது. பொதுவாக நோக்கு மிடத்து, பொலன்னறுவைக் காலத்தில் மன்னன் தெய்வீகத் தன்மை வாய்ந்தவ னாகவும், மிகவும் உயர்ந்த நிலையிலுமே மதிக்கப் பெற்றிருந்தான் எனலாம்.

மாகாண நிருவாகம் ஒருமுகமாக்கப்பட்டமை

அனுராதபுரகாலத்தில் அரசன் தலைநகரிலிருந்து இராசரட்டையை நிருவகிக்க, தக்கிணதேசம், உருகுணை ஆகிய மாகாணங்களின் நிருவாகப் பொறுப்பு இளவரசர்களிடம் விடப் பட்டிருந்தது. இதனால் மாகாணங்கள் பெருமளவு சுயாதீனத்தைப் பெற்றிருந்தன. இடையிடையே மாகாண ஆட்சியாளர்கள் கலகஞ் செய்யவும் முற்பட்டனர். பொலன்னறுவைக் காலத்தில் இந்த ஒழுங்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. மத்திய அரசுக்குப் பொறுப்பான மன்னனே, மாகாணங்களின நிருவாகத்தையும் தனது நேரடியான கண்காணிப்பிற் கவனித்து வரலானான். மாகாண சுயாதீனத்தை அறவே நீக்கி, பொலன்னறுவை அரசின் வலுவை அதிகப்படுத்துவதே இதன் நோக்கமாக இருந்திருக்கவேண்டும். பொலன்னறுவை தலைநகராகத் தெரிவு செய்யப்பட்டமை இந்த நோக்கத்தை நிறைவேற்ற மிகவும் ஏற்றதாகவிருந்தது. மகாபராக்கிரமபாகுவே இம் மாற்றத்தை முதலிற் கொண்டுவரக் காரணமாகவிருந்தவன் எனலாம். (பராக்கிரமபாகு தொடக்கி வைத்த இம் மாற்றத்தின் சில விளைவுகளை முந்திய அத்தியாயத்திற் கவனித்தோம்.) பராக்கிரமபாகுவின் நிர்வாக ஒழுங்குகளும், அர்த்த சாஸ்திரத்தின் செல்வாக்கைப் புலப்படுத்துவதாகக் கைகர் முதலான அறிஞர்கள் கொள்வர். அந்நூரைப் பின்பற்றியே, பராக்கிரமபாகு தக்கிணதேச ஆட்சியாளனாக இருந்த போது, அந்தரங்க துர என்ற ஒரு தனிப்பகுதியை நிறுவி, கடற்கரைப் பிரதேசம், இரத்தினங்கள் தரும் மாவட்டங்கள், மலைநாட்டுப் பகுதிகள் முதலியவற்றிலிருந்து பெறப்படும் வருவாயைப் பெறுதற்குப் பொறுப்பாக அதை விட்டான். சுரங்கங் களுக்கு மட்டுமன்றி, யானைகள், முத்துக்கள் என்பவற்றையும் கவனிக்கும் ஒரு வணிகப்பகுதியாக இது விளங்கியது.

அரசர்களின் மெய்க்காப்புப் படையினர்

விஜயபாகு, பராக்கிரமபாகு போன்ற பொலன்னறுவை மன்னர்கள் உயர் குடியிற் பிறந்த பல இளைஞர்களைத் தெரிவுசெய்து, அரண்மனையின் அலுவலராக அவர்களை நியமித்திருந்தனர். இவ்வாறு நிறுவப்பட்ட 'சந்திகாவசரா' என்பது சோழருடைய உடன் கூட்டத்தைப் போன்றிருப்பதால், இது சோழரின் செல்வாக்கால் ஏற்பட்டதாகவிருக்கலாம். சோழ முன் மாதிரியைப் பின்பற்றி ஏற்படுத்தப்பட்ட வேளைக்காரப் படைப்பிரிவு பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம் (257ம் பக். பார்க்க). இது அரசனது மெய்க்காப்புக்கெனவே நிறுவப்பட்டதாக விருப்பினும், தந்ததாதுவைப் பாதுகாக்கும் பொறுப்பும் இதனிடமே விடப் பட்டிருந்ததையும் கவனித்தோம். அந்நியப் படையினரான இவர்கள் அரசனுக்கு விசுவாசமாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சில சந்தர்ப்பங் களில், அரசனுக்கெதிராகவே அவர்கள் கலகஞ்செய்ததையும் அறிந்து கொண்டோம். இருந்தும், ஒரு நூற்றாண்டுக்கு மேல் இந்தப் படையின் சேவையும் பொலன்னறுவைக்கால மன்னர்கள் பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

வேத்தவையும், உயர் அரச அலுவலரும்

அரசன் முக்கி தீர்மானங்களைச் செய்யும்போது, தனது சபை (வேத்தவை அல்லது அரசசபை) யைக கலந்து ஆலோசித்தான் என நம்ப ஆதாரமுண்டு.

இச்சபை 'ரஜ-கணா', 'அமத்தி-கணா', அமாத்திய மண்டல என வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன. இந்த அவையில், அரசனது கட்டளை பிறப்பிக்கப்படுமுன் அவ்விடயத்தை இரு முக்கிய உறுப்பினர் எடுத்தாளுவதே மரபு, அதன்பின் கட்டளை நிறைவேற்றப்படும். அரசன் தன் கட்டளையைக் கூறும்போது, அரச சின்னமொன்று (யlள என்பதை)க் கையில் எந்திய வண்ணமிருப்பான். நிஸங்க மல்லனது புகழ்வாய்ந்த தொரடியாவ சன்னஸ (பொறிப்பு) என்பது, தனது மாளிகையைக் கட்டிடத் தந்த ஓர் அலுவலனுக்கு வழங்கப்பட்ட நன்கொடையைக் குறித்துள்ளது. இக்கட்டளையைத் தனது அபிஷேக மண்டபத்திலிருந்தவாறு, அமாத்திய மண்டலத்தில் (சபையில்) நிறைவேற்றினான். நிஸங்கமல்லனது சபை மண்டபத்தில் காணப்படும் கற்றூண்களில் உள்ள பொறிப்புக்களைக்கொண்டு அவனது காலத்தில், வேத்தவை உறுப்பினராகப் பணிபுரிந்தவர் களை அறிய முடிகின்றது. யுவராஜாவும் ஏனைய இளவரசர்களும், சேனாபதி, பிரதானிகள், காயஸ்தர்கள் (பதிவாளர், எழுத்தாளர்கள்), பொதவருன் (கணக்காளர்கள்) அகம்படிக்குப் பொறுப்பான மண்டலிகர்கள் (இராணுவக் கடமைகளைக் கொண்ட மாவட்ட அதிகாரிகள்) சௌராஸி-வருன் எனப்பட்ட வேறும் பிரதேச அல்லது பெரும்பிரிவு அதிகாரிகள், கடகோஷ்டியே - அட்டவுன் எனப்பட்ட வணிகக் குழுவினர் ஆகியோரும் நிஸங்கமல்லனது சபையில் உறுப்பினராகவிருந்தனர். நிஸங்கமல்லனது இராணிகள் இருவர் இச்சபையிலிருந்தமை பற்றி தொரடினாவ சன்னஸ (பொறிப்பு) கூறுகின்றது. பிரதானிகள் என்பதில் தலைமைநீதி அலுவலர் (சபாபதி - நாயக) உட்பட்ட முக்கிய அதிகாரிகள் அடங்குவர். 'நிகாய-சங்கிரஹ'வில் மகாபராக்கிரமபாகுவின் காலத்தில் இருந்த முக்கிய அரசாங்கப் பதவிகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அதிகார (முதல் அமைச்சர்), சேனவிரத் (சேனாபதி), அனுநா (உதவிப்படைத் தளபதி), ஆபா, மாபா, மஹலேனா (பிரதம செயலாளர்), மஹறட்டி-நா (பிரதான மாநில அதிகாரி), சபாபதி-நா (பிரதான நீதியலுவலர்), சிட்டு-நா (வணிகக் குழுத்தலைவர்), சிரித்-லே-நா (சட்டத்துறைத் தலைவர்), து-லே-நா (அயல் நாட்டலுவலர்), வியத்-நா (கல்வியலுவலர்), மஹவெத-நா (பிரதான வைத்தியர்), மஹநாதி-நா (பிரதான வானவியலாளர்), தஹம்-பசக்-நா (தருமகருத்தா) முதலான பதவிகள் அந்நூலிற் குறிக்கப்பெற்றுள்ளன. இவை தவிர, திறைசேரிக்குப் பொறுப்பாகவிருந்த 'பண்டாரப் பொத்தகின்', போக்குவரத்து அதிகாரியான 'வாஹன-நாயக' ஆகிய பதவிகளும் இருந்தன. சமய நிறுவனங்களின் பராமரிப்பாளராக, சிற்பாகப் போதிமரக் காவலராக இருந்த அதிகாரி 'அரக்மேனா' எனப்பட்டார். லெய்-தரு எனப்பட்ட எழுத்தாளர் பலர் கடமையாற்றினர். 1ம் விஜயபாகுவின் பனாகடுவப் பொறிப்பில், தமிழ் எழுத்தரின் பதிவேடு குறிப்பிடப் பெற்றிருத்தலைக் கொண்டு, அக்காலத்தில் தமிழிலும் அரசாங்க அலுவல்கள் நடைபெற்றதையறிய முடிகின்றது.

இராணுவ அமைப்பு

பொலன்னறுவைக் காலத்தில ஆட்சிசெய்த மன்னர்கள் சிலர், பெரும் போர்ப்புகழ் படைத்தவர்களாதலின், திறமை படைத்த படைகளை அம்மன்னர்கள் வைத்திருந்திருப்பர் என நாம் கொள்ளலாம். சூளவம்சம், நிகாய சங்கிர' போன்ற இலக்கிய ஆதாரங்களில் உள்ள குறிப்புக்களைக் கொண்டே

படையமைப்புப் பற்றிய சில விடயங்களைக் கூறலாம். இவற்றில் மிகைக் கூற்றுக்கள், புனைவுகள் இருக்கமாட்டா என உறுதிகூற முடியாது. மன்னர்களிடம் வழமையான நாற்படைகளும் இருந்ததாகவே கூறப்படினும், காலாட்படையே மிக முக்கிய படைப்பிரிவாக இருந்தது எனலாம். ஒருவேளை குதிரைப் படையும் இருந்திருத்தல்கூடும். யானைகளும், ஓரளவுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்க முடியும். பராக்கிரமபாகு மட்டுமன்றி, விஜயபாகுவும், நிஸங்கமல்லனும் கடற்படைகளை வைத்திருந்திருப்பர் எனக் கருதப்படுகின்றது. இலங்கையின் கரையோரங்களைப் பாதுகாப்பதிலும் கடற்படை ஈடுபட்டிருந்தது. படை வீரர்களை முதலில் 'குலீனர்' வகுப்பிலிருந்தே தெரிவுசெய்தனர். ஆயின், பராக்கிரமபாகு போன்ற மன்னர்களுக்குப் பெருந்தொகையான படைவீரர்கள் தேவைப்பட்டதால், வேறு (குறைந்த) வகுப்புக்களிலிருந்தும் வீரர்கள் சேர்க்கப்பட்டனர். நாட்டின் வெவ்வேறு பிரிவுகளும் குறிப்பிடப்பட்ட ஒரு தொகைப் படைவீரர்களை மன்னனது சேவைக்கு அனுப்ப வேண்டியதாக இருந்திருக்க வேண்டும் என எண்ணும்படி தோன்றுகின்றது. அட்டசகச (எண்ணாயிரம்), தவாதசகஸ (பன்னீராயிரம்) போன்ற உருகுணைப் பிரிவுகள் இவ்வாறே ஏற்பட்டிருக்கலாம் என்பர். போர்வீரர்கள் பலவித போர் முறைகளிலும் பயிற்சிபெற்றனர். படைக்கலங்களும், போருக்கு வேண்டிய ஏனைய கருவிகளும் விசேட தொழிலாளரால் ஆக்கப்பட்டன. அம்பு-வில், வால், ஈட்டிகள் என்பன முக்கிய போர்க்கருவிகளாக விளங்கின. பாலங்களை அமைத்தற்குத் தெரிந்த பொறியியலாளரும் படைகளுடன் இந்தியா சென்று, அங்கு பராக்கிரமபாகு மேற்கொண்ட பாண்டிநாட்டுப் படையெடுபின்போது, நதிகளுக்குமேல் பாலங்களை அமைத்தனர். பராக்கிரமபாகுவிடம் இருந்த படைகளின் திறமையும் பலமுமே அவனை அயல்நாட்டுப் போர்களை மேற்கொள்ளுவதற்குத் தூண்டின என்பதை முன்னர் கவனித்தோம். உதவிப் படைகளைத் தொடர்ந்து இந்தியாவுக்கு அனுப்பி பத்தாண்டுகள் வரை போரை அங்கு நடத்தினான் என்பதிலிருந்து அவனுடைய படைப்பலத்தை உணரலாம். இராணுவத்தினர் உள்நாட்டில் நிகழ்ந்த உரிமைப்போட்டிகளிலும் தலையிடலாயினர்.

அரசிறையும், வணிகமும்

அரசிறை: நிலவரியே இக்காலப்பகுதியிலும், அரசிறையைத் தந்த முக்கிய வரியாகும். இவ்வரி சாதாரணமாக விளைச்சலில் (வருவாயில்) ஆறில் ஒரு பகுதியாகவே அறவிடப்பட்டது. ஆனால், போர்க்காலங்களில் மன்னர்களுக்குப் பணம் அதிகமாகத் தேவைப்படுமாதலால், அக்காலங்களில் அவர்கள் இவ்விகிதத்தைக் கூட்டியிருப்பர். பராக்கிரமபாகுவின் போர்களுக்கு வேண்டிய பணத்தை அறவிட அவன் தன் குடிகள்மீது வரிகளையும், வரிவிகிதங்களையும் கூட்டியிருந்தான் என்பதை அவனது பின்னோர்களின் செயல்களால் உணர முடிகின்றது. குறிப்பாக, நிஸங்கமல்லன் 'முந்திய மன்னர்கள் விதித்த கடும் வரிகளால் அவதிக்குள்ளான' குடிகளுக்கு நிவாரணமளிக்கக் கருதி, ஐந்தாண்டு களுக்கு வரிகளை அறவிடாது விட்டதாகவும், பின்னரும் வரிவிகிதங்களைக் குறைத்து சில வரிகளை நீக்கியதாகவும் அவனுடைய பொறிப்புக்கள் கூறுகின்றன. நிலவரியின் ஒரு பகுதி தானியமாகவும், ஒரு பகுதி காசாகவும் கொடுக்கப்பட்டது. சேனைப் பயிர்ச்செய்கையிலிருந்த நிலங்களும் வரிகளுக்கு உள்ளாகின.

நீர்த்தேக்கங்களில் பிடிக்கப்பட்ட மீனுக்கும் ஒரு வரி செலுத்த வேண்டியிருந்தது (பிசம்புரு-வத). தோட்டங்களுக்கும் ஒரு வரி செலுத்தப்பட்டதாகத் தெரிகின்றது. அனுராதபுர நகரின் வாயில்களில் லீலாவதி காலத்தில் அங்கு கொண்டுவரப்பட்ட வணிகப் பொருட்கள் மீதும் ஒரு வரிகள் அறவிடப்பட்டன. 12ஆம் நூற்றாண்டின் பாக்கு அரசனது தனியுரிமையாக விளங்கி அவனுக்கு வரிவாய் தந்ததாகத் தெரிகின்றது. இவை தவிர அனுராதபுர காலத்தில் இருந்த வரிகளே தொடர்ந்தும் அறவிடப்பட்டன எனலாம்.

வணிகம்: பொலன்னறுவைக்கால மன்னர்கள், பிறநாட்டு வணிகத்தால் கிடைக்கக்கூடிய வருவாயை அதிகரிக்கச் செய்தற்குப் பல நடவடிக்கைகளை எடுத்தனர். சோழருடன் போரைத் தொடுப்பதற்கு முன்னரே, பர்மிய வணிகத்தில் விஜயபாகு அக்கறை கொண்டான். உருகுணையில் பெறப்பட்ட பொருட்களை அந் நாட்டுக்கு அனுப்பி, அந்நாட்டிலிருந்து உயர்ந்த ரகத் துணி வகைகளையும், சந்தனமரம், கர்ப்பூரம் முதலான பொருள்களைக் கப்பலில் இறக்குமதி செய்தான். பராக்கிரமபாகுவும் அவ்வாறே தக்கிணதேச ஆட்சியாளனாக விருந்தபோதே, பிறநாட்டு வணிகத்திற் கவனஞ் செலுத்தலானான். 'அந்தரங்க-துர' என்ற ஒரு தனிப்பகுதி நிறுவப்பட்டு, பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய முத்துக்கள், இரத்தினக்கற்கள், யானைகள் முதலானவை கிடைக்கும் பகுதிகளைக் கட்டுப் படுத்தும்படி விடப்பட்டது. ஏற்றுமதி வணிகத்துக்கெனச் சேகரிக்கப்பட்ட பொருட்கள் பர்மா முதலான பிறநாடுகளுக்கு அனுப்பப்பட்டதால், பராக்கிரமபாகுவுக்கு நிறைய இலாபம் கிடைத்திருக்கும். இத்துணைச் சிறப்பான வணிகத்தைத் தடைப் படுத்தியமையாலேயே, பின்னர் பராக்கிரமபாகு பர்மிய மன்னனுடன் போர் தொடுக்கலானான். முந்திய காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி வணிகப் பொருட்களாக இருந்தவையே பெரும்பாலும் இக்காலப்பகுதியிலும் இருந்தன. நுட்பமான ஒருவகை நெசவுத் துணியொன்று இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியானமை பற்றி ஆதாரங்களில் குறிப்புக்கள் உண்டு. இந்தியாவிலிருந்து பிறநாடுகளில் வணிகஞ் செய்தற்குச் சென்ற வலஞ்சியர், நானாதேசிகள் போன்ற தொகுப்பகங்கள் (குழுமங்கள்) இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் தமது வணிக நிலையங்களை நிறுவி, எமது தீவின் வணிகத்தில் மிகவும் முக்கிய பங்கை வகிக்கலாயின. வலஞ்சியர் என்ற கூட்டத்தினர் இலங்கையின் பல இடங்களில் தமிழ்ப் பொறிப்புக்களை விட்டுச்சென்றுள்ளனர். எருதுகளால் இழுக்கப் பெற்ற பொதிவண்டிகளைக் கொண்டு சென்ற வியாபாரிகள் கூட்டம் கூட்டமாகச் சென்று உள்நாட்டு வணிகத்தை நடத்தி வந்தனர். ஐதிரீசீ, கஸ்வீனீ முதலான புகழ்வாய்ந்த அரபுப் புவியியலாளர்கள், இலங்கைக்கும் சினா முதலான நாடுகளுக்குமிடையே நடைபெற்ற வணிகத்தை உறுதிப்படுத்துவதுடன், இலங்கை யிலிருந்து ஏற்றுமதியான பொருள்களையும் குறிப்பிட்டுள்ளனர். பட்டாடைகள், பலநிற இரத்தினக் கற்கள், வைரங்கள், வாசனைப் பொருட்கள், மூலிவகைகள், விலையுயர்ந்த மரவினங்கள், முத்துக்கள் முதலானவற்றை அவர்கள் குறிப்பிட்டு ள்ளனர். பொலன்னறுவையில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான சீன நாணயங்கள், அந்நாட்டுடன் நடைபெற்ற வணிகத் தொடர்பை உறுதி செய்வனவாகவுள்ளன.

இதேகாலத்து அராபிய, தென்னிந்திய நாணயங்களும் கண்டெடுக்கப் பெற்றுள்ளதால் அந்நாடுகளுடன் நிலவிய வணிக உறவும் நிறுவப்பெற்றுள்ளது. 1ம் பராக்கிரமபாகுவின் காலத் தமிழ்க் கல்வெட்டொன்று நயினாதீவில் காணப் பட்டுள்ளது. இதனால், ஊராத்துறை (ஊர்காவற்றுறை)யின் வணிக முக்கியத்துவம் புலப்படுவதுடன், அங்கு வரும் பிறநாட்டு வணிகர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்புக்களையும் அறித்தக்கதாக உள்ளது.

அத்தியாயம் : பதின்மூன்று

அரசியற்கோட்பாடுகளும் வெளிநாட்டுக் கொள்கைகளும்

(தென்மேற்கு - வடகிழக்கு இடப்பெயர்வுக் காலங்கள்) - (1236 - 1505)

இலங்கைத்தீவின் அரசியல், பண்பாட்டு வரலாற்றில் கி.பி. 1236 க்குப்பிற்பட்ட காலம் தனித்துவமான ஒருகாலப்பகுதியாக விளங்கியமையைச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. இக்காலப்பரப்பில் இனத்தனித்துவ உணர்வுகள் மொழி, மத, பண்பாட்டுச் சூழலியல் தொடர்பில் பண்பாட்டு வெளிப்பாடுகள் மேலோங்கி யிருந்தன. அவற்றின் அடிப்படையில், இலங்கைப் பண்பாட்டுச் சமூகங்கள் அந்நியசக்தி ஒன்றின் அழிப்பிலிருந்தும் தாக்கத்திலிருந்தும் தத்தம் இனங்களைப் பாதுகாப்பதற்காக தமக்கு வாய்ப்பாகக் கண்டுகொண்ட பிரதேசங்களை நோக்கித் தத்தமது பண்பாட்டு இருப்பினையும் வளங்களையும் நகர்த்திச் சென்றிருந்த வரலாற்றைக் காண்கின்றோம். இதனை சிங்கள வரலாற்றாசிரியர்கள் தென்மேற்கு இடப்பெயர்வு என்ற பதத்தினால் குறிப்பிடுகின்றனர். ஆனால் வடகீழ்திசையில் நிகழ்ந்த இடப்பெயர்வு தொடர்பாக எவருமே வரலாற்றுக்கணிப்பில் எடுத்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

தம்பதெனிய அரசு

பாண்டியர் செல்வாக்குப் பரவல்

இலங்கை வரலாற்றில், சிங்கள நாகரிகத்தின் புகழ்பூத்த காலங்களான அனுராதபுர, பொலன்னறுவைக் காலங்களைத் தொடர்ந்து, சிங்களப் பண்பாடும் இலங்கை அரசியலும் அடைந்த வளர்ச்சியில் ஒரு தேய்வுநிலை ஏற்பட்டதாகத் தோன்றுகின்றது. பொலன்னறுவைக்குப் பின் தம்பதெனிய, குருணாகலை, கம்பளை, ரயிகமை, கோட்டை என்பன இலங்கையின் இராசதானிகளாகத் தொடர்ந்து கைக்கொள்ளப்பட்டன. இவற்றுள் பெரும்பாலானவை தென்மேற்கு இலங்கையில் அமைந்துள்ளதால் இக்காலப்பகுதியைத் 'தென் மேற்கு நோக்கிய பெயர்வுக் காலம்' என அழைப்பர். 'இடைக்காலம்' அல்லது 'மத்திய காலம்' இலங்கை வரலாற்றைப் பொறுத்தமட்டில் மாகனது படையெழுச்சியோடு தொடர் புடைய நிகழ்ச்சிகளுடன் தொடங்குவதாகவும் கொள்வர். இக்காலப் பகுதியில் தென்னிந்தியாவில் ஆதிக்கம்பெற்ற பாண்டிய, விஜயநகரப் பேரரசுகள் இலங்கையின் அரசியற் போக்கையும், பண்பாட்டையும் பாதிக்கலாயின. தம்பதெனிய இராசதானியாக விளங்கிய காலத்தின் முக்கிய அரசியல்

நிகழ்ச்சிகளையும் இதே காலத்தில் (13ம் நூற்.) தென்னிந்தியாவில் விளங்கிய பாண்டியப் பேரரசு இலங்கையைப் பாதித்த வகையையும் பின்னர் குருணாகலை, கம்பளை போன்ற இடங்கள் இராசதானிகளாக விளங்கிய காலத்து இலங்கைப் பண்பாட்டினையும் விரிவாக இங்கு ஆராயலாம்.

இரண்டாம் பாண்டியப் பேரரசு

கி.பி. 13ம் நூற்றாண்டின் முற்பகுதியில் 3ம் இராஜராஜன், 3ம் இராஜேந்திரன் ஆகியோரின் ஆட்சிக்காலங்களின்போது, சோழப்பேரரசு பலவகை இடையூறுகளின் மத்தியில் வீழ்ச்சியெய்தியதை அடுத்து, அதே காலப்பகுதியில், பாண்டிய அரசு தன் வலியைப் பெருக்கி, சோழப்பேரரசு முன்னர் எய்தியிருந்த மேன்மையைத் தனதாக்கியது. 13ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இவ்வாறு எழுச்சிபெற்ற இரண்டாம் பாண்டியப் பேரரசு தென்னிந்தியாவில் ஆதிக்கம் செலுத்தியதுமன்றி, இலங்கைமீதும் தன் செல்வாக்கைப் பரப்பிவந்தது. 1216ல் அரசெய்திய மாறவர்மன் சுந்தர பாண்டியன் என்பன், பாண்டியப் பேரரசின் எழுச்சிக்கு அடிகோலியவன் ஆவான். 3ம் குலோத்துங்கனால் பாண்டிய அரச மரபெய்திய அவமானத்தைத் துடைக்கவெண்ணி, மூப்பெய்திய சோழமன்னனையும் அவனது பட்டத்திளவரச னையும் (3ம் இராஜராஜன்) கலைத்து, ஆயிரத்தளியில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் வீராபிஷேகம் நடாத்தி மீண்டான். ஹொய்சள மன்னனது உதவியுட னேயே, சோழன் தன் உரிமையை நிலைநாட்ட முடிந்தது. 3ம் இராஜராஜன் பட்டமெய்திய பின், பாண்டியருக்குத் திறைகொடுக்க மறுத்து, பாண்டி நாட்டுக்கு ஒரு படையையும் அவன் அனுப்பி வைத்தான். **காடவா** குலத்தவனான **கோப்பெருஞ்சிங்கன்** என்பவனும் இப்போது பாண்டிய நட்பாளனாக இருந்து, 3ம் இராஜராஜனுக்குத் தோல்வியை ஏற்படுத்தியதுமன்றி, அவனைத் **தெள்ளாறுப** போரின் பின் கைதியாக்கிச் **சேந்தமங்கலம்** என்ற இடத்திலுள்ள அரணில் வைத்திருந்தான். ஹொய்சள மன்னனது தலையீட்டாலேயே, இம்முறையும் சோழன் விடுதலை பெறவும், அரசுரிமையை மீட்கவும் முடிந்தது. ஹொய்சளப்படை கோப்பெருஞ்சிங்கனுக்கெதிரே படையெடுத்துச் சென்றபோது, அவனுடன் சார்ந்து நின்று சோழருக்கெதிராகப் போர் புரிந்தவர்களுள் இலங்கையைச் சேர்ந்த பராக்கிரமபாகு என்ற இளவரசனும் குறிப்பிடப் பெற்றுள்ளான். ஹொய்சள மன்னனால் (2ம் நரசிம்மன்) பாண்டிய அரசன் தோற்கடிக்கப்பட்டான். இப்போருக்குப் பின், சோழர், பாண்டியர், ஹொய்சாளர் ஆகியோரிடையே அமைதி நிலவி வரலாயிற்று. ஹொய்சள மன்னனாகப் பின்னர் விளங்கிய சோமேஸ்வரன், சோழ இளவரசனான 3ம் இராஜேந்திரனுக்கு உதவியதால், பாண்டிய இளவரசர்கள் போரில் தோற்கடிக்கப்பட்டனர். ஆனாலும், சோழ அரசு மீட்சிபெறவோ அன்றி பாண்டிய அரசு வீழ்ச்சியெய்தவோ இச்சண்டை வழிகோலவில்லை.

ஜடாவர்மன் சுந்தர பாண்டியன (1251 - 1268) என்பவனுடைய ஆட்சியின் போது, பாண்டியப் பேரரசு தன் புகழின் உச்சநிலையை எய்தியது. இவன் பல போர்களை நடாத்திப் பேரரசின் எல்லைகளை விரிவடையச் செய்தான். சேர, சோழ, ஈழ, ஹொய்சள மன்னர்களுடன் பொருதி, அவர்களை அடிபணிய

வைத்ததுமன்றி, திறை செலுத்தும்படியும் செய்தான். பாண, கொங்கு நாடுகளையும் தன் பேரரசுடன் இணைத்து, காகதீய அரசனான கணபதியையும், அவனது சிற்றரசர்களையும் புறங்கண்டான். நெல்லூர் வரை பாண்டியப் பேரரசு வடக்கே விரிவடைந்தது. இலங்கை அமைச்சன் ஒருவனது வேண்டுதலின் பேரில், பாண்டிய மன்னனது தம்பியான ஜடாவர்மன் வீரபாண்டியன் ஒரு படையுடன் இலங்கை வந்தான். இலங்கை மீது நடைபெற்ற பாண்டியப் படையெழுச்சிகள் பற்றியும் இவற்றின் முக்கியத்துவம் பற்றியும் இனிவரும் அத்தியாயங்களில் ஆராய்வது பொருத்தமானது. சுந்தரபாண்டியனது போர்ச் சாதனைகள் அவனை ஒரு தலைசிறந்த தென்னிந்திய மன்னன் ஆக்குகின்றன. அவனைப்போலவே அவனுடன் சமகால அரசனாகத் (1253 இலிருந்து) திகழ்ந்த ஜடாவர்மன் வீரபாண்டியனும் போர் வெற்றிகள் பல ஈட்டியவன். இலங்கையில் ஒரு படையெழுச்சியை மேற்கொண்டு இலங்கை அரசியலிற் சில மாறுதல்களை இவன் நிகழ்த்தியதை வரலாறு பொறித்து வைத்துள்ளது.

1ம் மாறவர்மன் குலசேகரன (1268 - 1308) சுந்தர பாண்டியனைத் தொடர்ந்து ஆட்சியை நடாத்தி, தன் முன்னோரின் வழி சென்று, பாண்டியப் பேரரசின் புகழை நிலை நிறுத்தினான். இவனுடைய காலத்தில், ஹொய்சாளரின் ஆதிக்கத்தில் தமிழ் நாட்டிலிருந்த பகுதிகள் யாவும் பாண்டியப் பேரரசின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. இந்தப் பாண்டியனும் இலங்கையின் விவகாரங்களில் தலையிட்டான். யாப்பாகுவில் பாதுகாக்கப்பெற்று வந்த புனிதப் பல், சின்னம் முதலானவை இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், அவற்றை மீட்ட பின்னரே இலங்கை சுதந்திரம் எய்தியதாகவும் கூறப்படுகின்றது. மாறவர்மன் குலசேகரன் காலம்வரை ஒற்றுமையுடனும் சிறப்புடனும் விளங்கி வந்த பாண்டிய அரச மரபு, அவன் இறந்தபோது பிளவுபட்டுப் பெருமையை இழக்கலாயிற்று. அவனுடைய இரு புதல்வர்களான சுந்தர பாண்டியனும், வீரபாண்டியனும் தந்தையின் மறைவைத் தொடர்ந்து தமக்குள் பிணக்குற்றுச் சண்டையிட்டனர். தோல்வி கண்ட சுந்தரபாண்டியன், மாலிக் கபூர் என்ற முஸ்லீம் படைவீரனது தயவை நாடினான். இதன் விளைவாகப் பாண்டியப் பேரரசு விரைவில் மறையலாயிற்று. 'மாபார்' என அழைக்கப்பட்ட ஒரு மாகாணமாகத் தமிழ் நாட்டின் ஒரு பகுதி டில்லியில் ஆட்சிசெய்த சுல்தானின் (முகம்மது பின் துக்ளக்) பரந்த அரசின் ஒரு மாகாணமாகச் சேர்க்கப்பட்டது. மதுரையும் அதனைச் சார்ந்த சில பகுதிகளும் அவ்வாறான ஒரு கதிக்குள்ளாகாது சிறிது காலத்திற்குத் தப்பின.

ii. தம்பதெனிய அரசின் தோற்றம் : 3ம் விஜயபாகு

கலிங்கமாகனது ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டுக்கு விடுதலை பெறும் இயக்கம் வளர்ச்சி பெற்றபோதே தம்பதெனியவும், அதைத் தலைநகராகக் கொண்ட அரச மரபும் முக்கியம் பெற்றுள்ளன. மாகனது ஆட்சி இராஜரட்டையில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தபோதும், ஒரு சில இளவரசர்களும், படைத் தலைவர்களும் மாயாரட்டையிலும் உருகுணையிலும் ஆங்காங்கே எதேச்சையாகக் குறுகிய

மாநிலங்களில் ஆட்சிநடத்தி வந்தனர். உருகுணையில் ஆட்சி நடத்திய ஆதிபாத புவனேகபாகு, மாகனது அரசின் எல்லைப்புற மாவட்டமொன்றில் (மினிப்பே) ஆதிக்கஞ் செலுத்திய தளபதி சங்கா, யாப்பகுவில் தங்கிய மற்றொரு தளபதியான சுபா, குருணாகலை மாவட்டத்திலுள்ள தம்பதெனியவைச் சேர்ந்த விஜயபாகு ஆகியோரிடையே ஒற்றுமையோ, பொதுப் பகைவனான மாகனை விரட்டும் பொது நோக்கோ இருக்கவில்லை. தம்பதெனியவைச் சேர்ந்த விஜயபாகு, மாகனை விரட்டி, நாட்டுக்கு விடுதலையை அளிப்பதில் ஓரளவுக்கு வெற்றி கண்டான். குறுகிய ஒரு மாநில ஆட்சியாளனாகத் தொடங்கிய இந்த விஜயபாகு, 2ம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்களை நாட்டுக்குத் தந்த ஒரு மரபையே தோற்றுவித்த பெருமைக்குரியவன். சங்கபோதியுடனும், கலிங்க மரபினருடனும், பாண்டிய மரபுடனும் இந்த விஜயபாகுவைத் தொடர்புபடுத்த வெவ்வேறு ஆதாரங்கள் முற்பட்டுள்ளபோதும், உண்மையில் விஜயபாகுவின் மரபுக்கும், அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய இராசதானிகளில் அரசோச்சிய மரபுகளுக்கும் எதுவிததொடர்பும் இருக்குமென நம்புதற்கில்லை. அரச மரபெதையும் உண்மையில் சேராதவனாக விஜயபாகு இருந்தும், அவன் மகன் 2ம் பராக்கிரமபாகுவின் புகழைப்பாடிய கவிஞர்கள் தமது பாட்டுடைத் தலைவனுக்கு உயர்வு தரக் கருதியே இவ்வாறு கற்பனை செய்திருப்பர் எனக் கருதுவர்.

விஜயபாகு முதலில் ஒரு 'வன்னிராஜா' வானமை அவனது அரசியல் வாழ்வின் முக்கியபடியாகக் கருதப்படும். 'வன்னிராஜா' என்பது, காட்டுப் பகுதிகளாக இருந்த நிலங்களுக்குரிய தலைவர்களுக்கு வழங்கப்பெற்ற பெயராகும். பளாபத்கல (இரத்தினபுரி மாவட்டத்திலுள்ளது) என்ற இடத்திலேயே இவ்வாறாகத் தன் வாழ்வை அவன் தொடங்கியிருத்தல் வேண்டும். விஜயபாகு பின்னர் படிப்படியாக தன் அதிகாரத்தை வளர்த்து, ஈற்றில் மாயாரட்டை முழுவதும் தனது ஆட்சியை ஏற்குமாறு செய்தான். அவனது இளமைக்காலப் போராட்டங்கள் பற்றிய விவரங்கள் எமது ஆதாரங்களில் கூறப்படவில்லை. படைப்பலம் மூடமும், யுக்திகள், சூழியல் மூலமும் இதைக் கைகூடச் செய்திருப்பான் எனலாம். மாயாரட்டையில் இருந்த தமிழரையும் இவன் வென்றதாகக் காலவேடுகள் அறியத்தருகின்றன. மாயாரட்டையின் ஆட்சியை விஜயபாகு பெற்றபோதே, தம்பதெனியவையும் அதன் இராசதானியாக்கினான். குருணாகலைக்குச் சில மைல்கள் தென்மேற்கேயுள்ள இந்நகர், இயற்கையாக உயர்ந்த ஒரு பகுதியில் நிறுவப்பட்டது. மாகனது தலைநகரான பொலன்னறுவைக்கும் இதற்குமிடையே பல மைல்கள் இடைவெளியிருந்தமையும், அவனுடன் பின்னர் போர் தொடுக்கும் போது போரை நடத்த ஏதுவான ஒரு நிலையமாக அது இருந்தமையும், அவன் விஜயபாகுவை எதிர்த்துத் தாக்கமுற்பட்டால் பாதுகாப்பைத் தரவல்லதாக இருந்தமையும் தம்பதெனியவைத் தலைநகராக்கியமைக்குக் காரணங்கள் எனக் கொள்ளலாம். அக்கால அரசியல் நிலையைச் சமாளித்தற்கேற்புடைய உபாய நிலையில் தம்பதெனிதயிருந்தமை அதன் தெரிவைத் தீர்மானித்தது என்பது தெளிவு. விஜயபாகு அதை மேலும் பலமடையச் செய்வதற்காக பல அரண்களையும், மதிற் சுவர்களையும் அமைத்தான் எனச் சூளவம்சம் கூறுகின்றது.

முன்னர் தக்கிணதேசம் எனப்பட்ட பகுதியே, இப்போது மேலதிக மாவட்டங்களைக் கொண்டு மாயாரட்டை என்ற பெயரில் தம்பதெனியக் காலத்தில் முக்கியம் பெற்றுள்ளது. மாயா (மாபா அல்லது மாஹாதிபாத) என்பவன் நிருவகித்ததென்ற பொருளிலேயே இதற்கு மாயாரட்டை என்ற பெயர் ஏற்பட்டது. அனுராதபுர, பொலன்னறுவைக் காலங்களில் முக்கியம் பெற்றிருந்த உருகுணை இப்போது அதன் முதன்மையை இழக்கலாயிற்று. தொடக்கத்தில் (13ம் நூற்றாண்டுக்கு முன்) இராஜரட்டைக்குக் குறைந்த நிலையிலேயே அது இருந்த தெனினும் 13ம் நூற்றாண்டிலிருந்த இராசதானிகள் பெரும்பாலும் அப்பிரதேசத்தி லேயே அமைக்கப்பட்டு வந்ததால், அதுவே முதன்மை பெறுவதாயிற்று. நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள ஓரளவுக்கு அது இடம் தந்ததெனினும், அங்கு பெறக்கூடிய வணிகப்பொருட்களாலும் (இரத்தினக் கற்கள் தெங்குப் பொருட்கள் (முதலானவை) துறைகளாலும் அது பொருளியல் துறையிலும் அதிக முக்கியத்துவம் பெற்றது.

மாகனது படைகளின் கண்ணிற் சிக்காவண்ணம் வாசிஸ்ஸர தேரர் முதலான குருமார்கள் புனிதப்பல், ஐயக்கலச் சின்னங்களைக் கொத்மலையில் புதைத்து விட்டு, தென்னிந்தியாவுக்கு ஓடியதாக ஆதாரங்கள் கூறுகின்றன. விஜயபாகு மாயாரட்டைக்கு அரசனானதும், இக்குருமார்களை அங்கிருந்து வரவழைத்து, புதைக்கப்பெற்ற புனிதச் சின்னங்களை, தன் தலைநகரான தம்பதெனியவுக்குக் கொண்டுவரச் செய்தான். பின்னர் தன் தலைநகரில் அவற்றுக்குக் கோவிலை நிறுவாது கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகலவில் அமைத்தான். மாகனது படைகளிலிருந்து வரக்கூடிய ஆபத்திலிருந்து கூடிய பாதுகாப்பை இப்புனிதச் சின்னங்களுக்கு அளிக்கவே இவ்வாறு தொலைவில் உள்ள பெலிகலவில் இக்கோவிலை எடுத்தான் எனக் கூறப்படுகிறது. இவ்வாறு புனிதச் சின்னங்களைத் தன் பாதுகாப்பில் வைத்தமையால், பௌத்தத்துக்குப் பணியாற்றியதுடன், தனது உரிமையையும் பலமடையச் செய்தான். சங்கத்தினர் விஜயபாகுவின் பக்கத்தைச் சார்ந்த அவனுக்கு ஆதரவைப் பெருக வைத்தனர். சங்கரக்கித தேரர், திம்புலாகலை மெங்கர தேரர் போன்ற பிக்குத் தலைவர்களின் உதவியுடன் சங்கத்தைப் புனிதப்படுத்தி அதன் ஒற்றுமையை நிலைநாட்டியதுமன்றி, பாழடைந்த பழைய விகாரைகளைப் புதுக்கியும், புதியவற்றை நிறுவியும், பௌத்தத் திரிபிடக நூல்களைச் சங்கத்தினர் பயில்வதற்கு ஒழுங்குகள் செய்தும் சங்கத்தின் உயர்வுக்காகவும், சாஸனத்தின் வளர்ச்சிக்காகவும் உழைத்தான். 3ம் விஜயபாகு நான்கு ஆண்டுகள் மட்டுமே (1232 - 36) ஆட்சிசெய்தான். முதுமை எய்திய பின்னரே அவன் ஆட்சியைப் பெற்றிருந்ததால், விரைவில் அவனது ஆட்சி முடிவெய்தியிருத்தல் வேண்டும். இவனுடைய ஆட்சி மாயாரட்டையில் மட்டுமே ஒடுங்கியிருந்தது. அங்கும் அவன் உறுதியுடன் ஆட்சி நடத்தவில்லை. இருப்பினும், இவனது மகன் 2ம் பராக்கிரமபாகு போன்றவர்கள் இவன் தொடங்கிய பணியையே ஓரளவுக்கு நிறைவேற்றி வைத்தனர்.

iii. 2ம் பராக்கிரமபாகு : அவனது சாதனைகள்

பராக்கிரமபாகுவின் இளமை : தம்பதெனிய மரபின் தலைசிறந்த மன்னனான 2-ம் பராக்கிரமபாகு, பொலன்னறுவைக் காலத்துக்குப் பிந்திய காலச் சிங்கள மன்னர்களுள் குறிப்பிடத்தக்கவன். இவனைப் பற்றி அறிய உதவும் நூல்களுள் முக்கியமானவை சூளவம்சம் (2-ம் பாகம்), பூஜாவலிய என்பன. இவற்றின் ஆசிரியர்கள் இவன் மீது தமது புகழ் அஞ்சலிகளை மிக்க நன்றியுணர்வுடன் பாடியுள்ளதாகக் கூறுவர். சூளவம்சத்தில் எட்டு அத்தியாயங்களில் இம்மன்னனது வரலாற்றைப் பல வழிகளில் எடுத்துக்கூறிய போதும், சில முக்கிய விபரங்களைக் கூறாமலும் விட்டுள்ளது. 2-ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் நடைபெற்ற பாண்டியப் படையெடுப்புக்கள் பற்றி எவ்வித குறிப்பும் இதில் இல்லை. பூஜாவலியவில் உள்ள 34 அத்தியாயங்களில், கடைசி இரு அத்தியாயங்களிலுமே வரலாற்று நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன. சிங்கள மொழியிலுள்ள நூலை எழுதிய வாகிரிகலை மயூரபாததேரர் 2-ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் வாழ்ந்தவர். நூலில் வரும் ஒரு குறிப்பால், 1266-ல் அது எழுதப்பட்டு முடிந்ததாக நிறுவப் பெற்றுள்ளது. 3-ம் விஜயபாகு, 2ம் பராக்கிரமபாகு, 1-ம் புவனேகபாகு ஆகியோரின் சமகாலத்தவராக ஆசிரியர் வாழ்ந்தமை இந்நூலுக்குச் சிறப்பைத் தருகின்றது. இருப்பினும், தமது புரவலனான 2-ம் பராக்கிரமபாகுவுக்குப் பெருமையைத் தராத பாண்டியப் படையெடுப்புக்கள் பற்றி இந்நூலாசிரியரும் எதுவும் கூறாது விட்டுள்ள போதும் உண்மையில், 2-ம் பராக்கிரமபாகுவின் அமைச்சன் ஒருவனது வேண்டுகோளுக்கிணங்க இந்நூலை எழுதிய மயூரபாததேரர், பின்னர் அதை அரசனிடம் சமர்ப்பித்தாரெனவும், அரசன் பெரிதும் மகிழ்வெய்தி அந்நூலுக்குப் பெரும் மரியாதைகளைச் செய்ததாகவும் கூறப்பெற்றுள்ளது. சூளவம்ச விவரங்களும், இந்நூலில் வரும் விவரங்களும் பெரிதும் ஒற்றுமையுடையனவாக இருத்தலும் குறிப்பிடத்தக்கது. ஆனாலும், இவனது இளமைக்கால நிகழ்ச்சிகள் மிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. இவனுடைய தந்தையான 3-ம் விஜயபாகு தனக்குப்பின் அரசைப்பெறத் தகுதியுடையவனாகப் பராக்கிரமபாகுவையே தெரிவு செய்தமைக்கு, நிமித்தங்கூறுவோரின் கருத்துக்களை நம்பியமை ஒரு காரணமாகக் கூறப்பெற்றுள்ளது. இலங்கை முழுவதையுமன்றி, ஜம்புத்துவீபத்தையுமே (இந்தியாவையும்) ஒரு குடைக்கீழ்க் கொண்டுவர வல்லவன் என அவர்கள் கூறினராம். சங்கத்தினரிடம் தன் மகனை விஜயபாகு ஒப்படைத்ததாகவும், சங்கத்தின் பாதுகாப்பைத் தன் மகனிடம் விட்டதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளது. தன் இளமைப் பருவத்தில் பராக்கிரமபாகு பல கலைகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்றான் என எமது ஆதாரங்கள் மேலும் குறிப்பிடுகின்றன. தமிழ், சமஸ்கிருதம், சிங்களம், பாளி ஆகிய மொழிகளிலும், புத்த தர்மத்திலும் அவன் எய்திய புலமை காரணமாகவே அவனுக்குக் 'கலிகால சாஹித்திய சர்வஞ்ஞ பண்டித'னென்ற அடைமொழியும் வழங்கப்பட்டது. (கவிசிலுமின, விசுத்தி மார்க்க சன்னய முதலான நூல்களின் ஆசிரியனாகவும் இவன் விளங்கினான்.)

மாயாரட்டைக்கு அரசனாதல் : 3-ம் விஜயபாகுவின் மரணத்தைத் தொடர்ந்து, அரசைப்பெற்ற 2-ம் பராக்கிரமபாகு 1236ல் தனது முடிசூட்டு விழாவை

முதன்முதலில் நடத்தினான். இவ்வாறு அரசைப்பெற்ற பராக்கிரமபாகுவை எதிர் நோக்கிய பெரும்பணி, இராஜரட்டையில் அப்போது ஆட்சியை நடத்தி வந்த கலிங்க மாகனை முறியடித்து, இப்பகுதியையும் தனது ஆணையின் கீழ்க் கொண்டுவருவதேயாகும். பெரும் படைப்பலத்தைக் கொண்டிருந்த கலிங்க மாகனைத் தோல்விகாண வைப்பது எளிதாக நிறைவேறும் என எதிர்பார்க்க முடியாது. எனவே, பராக்கிரமபாகு படைப்பலத்தைத் திரட்டுவதிலேயே தன் கவனத்தை ஈடுபடுத்தினான். ஆயினும், இவ்வாயத்தங்கள் பற்றிய விபரங்கள் எமக்குக் கிடைக்கவில்லை. 'இலங்கை என்ற மடந்தையை என்னுடையவள் ஆக்குவேன்' என அவன் உறுதிபூண்டான் என்பதாகவும், துட்டகாமணி, தாதுசேன், 1-ம் விஜயபாகு போன்ற விடுதலை வீரர்களின் அடிச்சுவடுகளில் அவன் செல்ல எண்ணியதாகவும் காலவேடுகள் கூறுகின்றனவேயன்றி, அவன் எடுத்த நடவடிக்கைகளின் விபரங்களை அவை தரவில்லை. சங்கத்தினர்க்கும், பராக்கிரமபாகுவுக்குமிடையே நிலவிய நல்லுறவை மேலும் வளர்க்க எண்ணிப் போலும், தந்த தாதுவுக்கெனத் தம்பதெனியில் ஒரு கோயிலை நிறுவி, முன்னர் பெலிகலவில் வைக்கப்பட்ட அப்புனித சின்னத்தைத் தருவித்து, அதன்கண் வைத்து, அதன் பெயரில் பெருவிழா எடுத்தான். சங்கத்தினரும் பல வன்னித் தலைவர்களைப் பராக்கிரமபாகுவை ஆதரிக்கச் செய்தனர். இராஜரட்டையிலுள்ள வேறும் சில வன்னித் தலைவர்களை பராக்கிரமபாகுவின் தம்பியும் யுவராஜனுமான புவனேகபாகு (குருணாகலையின் தங்கியவன்) பராக்கிரமபாகுவின் ஆணையை ஏற்குமாறு செய்தனர்.

கலிங்க மாகனது ஆட்சி முடிவுறல்: பராக்கிரமபாகுவின காலத்திலேயே மாகனது ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதென்பது தெளிவு ஆயின், அதில் அவன் வகித்த பங்கு தெளிவாக அறியப்படவில்லை. இலக்கிய ஆதாரங்கள் இதைப் பற்றி கூறுவதை அப்படியே ஏற்க முடியவில்லை. ஏனெனில், அவை முழு விவரங்களையும் கூறுவதாகப்படவில்லை. பொலன்னறுவை, கொட்டியாரம், கந்தளாய், கவுடுலு, பதவியா, குருந்தன்குளம், மாணாமடு, புலச்சேரி, வலிக்காமம், திருகோணமலை, ஊராத்துறை, இலுப்பைக்கடவை முதலான பல இடங்களில் உள்ள இராணுவ அரண்களில் மாகனது காவற்படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். மாகனும், அவனுடைய உபராஜாவாக விளங்கிய ஜயபாகுவும் தமது ஆட்சியின் பிற்பகுதியில் குடிகளின் மதிப்பைப் பெறத்தக்க வகையில் நடந்துகொண்டனர். போர்ப் பயிற்சியும், அனுபவமும் படைத்த (அவனுடைய) தமிழ், மலையாள வீரர்களைப் பராக்கிரமபாகுவின் படைவீரர்கள் வெல்லுதற்குரிய தகுதிகளையோ, பக்குவத்தையோ அடைந்தமைக்குச் சான்றேதும் இல்லை. அப்படையிருக்கவும், மாகனது போர்வீரர்கள் தமக்குள் ஆலோசனை செய்துவிட்டுத் தாமாகவே பயந்து நாட்டைவிட்டு வெறியேறியதாகக் காலவேடுகள் கூறுகின்றன. பொலன்னறுவையைக் கைவிட்டு வெளியேறிய அவனது படைவீரர்கள், அவசரத்திலும் தடுமாற்றத்திலும் மேற்குப் புறமாகவே பின்வாங்கி, காலவாவிப்பகுதியில் தங்கியிருந்த சிங்களப் படையினரிடம் சிக்கிப் படுதோல்வி எய்தியதாக அவை மேலும் கூறுகின்றன. மாகனது ஆட்சி பொலன்னறுவையில்

இருந்து நாற்பது ஆண்டுகள் நடைபெற்றதாகக் கூறப்படுவதாலும், வேறும் காரணங்களைக் கொண்டும் அது 1255இல் முடிவுற்றதெனக் கொள்வர்.

பாண்டியப் படையெழுச்சியும், மாகனது தோல்வியும : 2-ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் நடைபெற்றனவாகத் தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் பாண்டியப் படையெழுச்சிகளுக்கும், மாகனது தோல்விக்கும், மலேஷியாவிலுள்ள தாம்பரலிங்கத்திலிருந்து இலங்கைமீது நடைபெற்ற சந்திரபானுவின் படையெடுப்புக்களுக்கும் இடையே உள்ள தொடர்புகள் இன்னும் தெளிவாகவில்லை. இலக்கியங்களிலோ இவை ஒவ்வொன்றும் தெளிவாகக் கூறப்படவில்லை. 1251-ல் பட்டமெய்திய ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் 1253-ல் அரசுக்கு வந்த ஜடாவர்மன் வீரபாண்டியன் ஆகிய இரு மன்னர்களுடைய (இருவரும் ஏறத்தாழ ஒரே காலத்தில் ஆட்சி நடத்தியதால், இவர்களில் ஒருவர் நடத்திய படையெடுப்பையே இருவரின் கல்வெட்டுகளும் குறிப்பிட்டிருக்க லாம் என்பதும் கவனிக்கத்தக்கது) பொறிப்புக்களிலும் இலங்கைமீது இவர்களின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள் பற்றிய குறிப்புக்கள் உண்டு. சுந்தர பாண்டியனது 7-ம் ஆட்சியாண்டிலிருந்து அவனது கல்வெட்டுக்கள் இலங்கையை வென்றதையும் திறை பெற்றதையும் குறிப்பிட்டுள்ளன. ('துலங்கொளி மணியுஞ்சிலி வேழமும் இலங்கைக் காவலனையிறை கொண்டருளி' என வரும் பகுதி நோக்கற்பாலது) சுந்தரபாண்டியனது இப்படையெடுப்புக்களுஞ்சியே, மாகனது படைகள் பொலன்னறுவையிலிருந்து சிதறியோடியிருத்தல் வேண்டும் எனக் கொள்ளப்படுகின்றது. பாண்டியப்படைகளும், சிங்களப்படைகளும் இணைந்து செயலாற்றியிருத்தல் கூடுமென மேலும் ஊகிக்கப்படுகின்றது. பராக்கிரமபாகு பாண்டிய உதவியை மாகனுக்கு எதிராக வேண்டியிருத்தல் சாத்தியமெனக் கூறுவர். மாகனது படைகளின் தோல்வியைச் சிங்கள நூல்கள் தமது மன்னனுக்குச் சார்பாகவும், பாண்டியக் கல்வெட்டுக்கள் பாண்டிய மன்னனது பெருமைக்குரியதாகவும் கொண்டிருக்க வேண்டும். இக்கருத்தை அண்மைக்கால வரலாற்று ஆராய்ச்சியாளர் பெருமளவில் ஏற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. பாண்டியரின் மற்றொரு படையெடுப்பு மலேசியப் பகுதியிலிருந்து இலங்கைக்கு ஏற்பட்ட படையெடுப்புப் பற்றியும் குறிப்பிடவேண்டும்.

சந்திரபானுவின் படையெடுப்பு : பராக்கிரமபாகுவின் பதினோராம் ஆட்சியாண்டில் (1247) சந்திரபானு என்ற ஜாவகன் தன் படையுடன் இலங்கையின் பல துறைகளில் வந்திறங்கிப் பல அழிவுகளைச் செய்ததாகவும், அரசனுடைய மருகனான வீரபாகு இப்படையை எதிர்கொண்டு, கடுஞ்சமரின் பின் புறங்கண்ட தாகவும் கூறப்படுகின்றது. தென்மேற்குக் கரைகளிலேயே இப்படை வந்திறங்கிய தாகக் கொள்வதற்கு வீரபாகு இவ்வெற்றியின் பின் தேவுந்தரவுக்குச் சென்றதாகக் கூறப்படுவதை ஆதாரமாகக் கொள்வர். மலாயாத் தீபகற்பத்திலுள்ள ஜாயாவில் காணப்பட்ட 1230ஐச் சேர்ந்த ஒரு கல்வெட்டின் மூலம் சந்திரபானு தாம்பரலிங்கத்தைச் சேர்ந்த பௌத்தன் என்பதும், அவனது பெயர் ஸ்ரீதர்மராஜா என்பதும் சந்திரபானு என்பது அவனுடைய ஒரு சிறப்புப்பெயர் என்பதும்

பெறப்பட்டுள்ளன. இலங்கையில் இருந்ததாக நம்பப்பட்ட புத்தரின் அற்புதச் சிலையொன்றைக் கவர்ந்து செல்வதே சந்திரபானுவின் படையெடுப்பின் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் சந்திரபானு தனது முதற் படையெடுப்பில் தோல்வியடைந்தபோதும், விரைவில் மீண்டும் ஒரு படையெடுப்பை நிகழ்த்தியிருத்தல்வேண்டும். அல்லது வீரபாகுவால் தோற்கடிக்கப்பட்டதும், அவன் வடஇலங்கைக்குச் சென்று, அங்கு தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி யிருத்தல் வேண்டும். 1262 அளவில் தந்தை பராக்கிரமபாகு இராச்சிய அலுவல் களைக் கவனிக்க முடியாதவாறு நோயினால் பீடிக்கப்பட்டிருந்தபோது, மூத்த புதல்வனான விஜயபாகுவும், மருகனான வீரபாகுவுமே அவற்றைக் கவனித்து வந்தனர். இவ்விருவரும் யாப்பாகுவில் இருக்கும்போது, மகா தீர்த்தத்தில் வந்திறங்கிய சந்திரபானு தன் படையுடன் இராஜரட்டையிலிருந்து முன்னேறி இவர்களைச் சமரில் நேர்கொண்டான். யாப்பாகுவை முற்றுகையிட்ட சந்திரபானு, புத்தரின் புனிதச் சின்னங்களைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி கேட்டதுமன்றி, இலங்கையின் இறைமையையும் அளிக்கும்படி வற்புறுத்தியதாகவும் கூறப் பட்டுள்ளது. சந்திரபானுவின் இரண்டாம் படையெடுப்பு மிக விரிவாகத் திட்டமிடப்பட்டுத் தகுந்த ஆயத்தங்களுடன் நடைபெற்றுள்ளது. சீயத்திலுள்ள தாய் அரசான சுகோதய அரசு மேலும் விரிவெய்தியபோது, முன்னர் நட்பு நாடாக இருந்த தாம்பரலிங்கத்தையும் அது சேர்த்துக்கொள்ளலாயிற்று. இதனால், தாம்பரலிங்க ஆட்சியாளனான சந்திரபானு இலங்கையின் ஆட்சியைப்பெற எண்ணியே இப்படையெடுப்பை நடத்தியிருக்கவேண்டும். சந்திரபானுவின் படையெடுப்பை விஜயபாகுவும், வீரபாகுவும் தாமாகவே புறங்கண்டு, சந்திரபானுவை உயிரிழக்க வைத்ததாகச் சிங்கள ஆதாரங்கள் கூறுகின்றன. ஆனால், வேறு ஆதாரங்கள் பாண்டியப் படையே சந்திரபானுவின் தோல்விக்கும் மறைவுக்கும் காரணமாக இருந்ததென உணர்த்தும். அவற்றை நோக்கும்போது ஏறத்தாழ இதே காலத்தில் (1262ல்) பாண்டியப் படையெடுப்பொன்று நிகழ்ந்ததை உணரலாம்.

ஜடாவர்மன் வீரபாண்டியனது படையெடுப்பு: வீரபாண்டியனது பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் இலங்கையில் அவன் எய்திய வெற்றிகளைக் குறிப்பிட்டுள்ளன. 'சோனாடும் ஈழமும் சாவகன் முடியும் முடித்தலையும் கொண்டருளிய ஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 10-வது' எனவரும் கல்வெட்டுப் பகுதியில், 'சாவகன் முடியும் முடித்தலையும்' என்பதால் வீரபாண்டியனது படையெடுப்பின்போது, சந்திரபானு தோல்வியடைந்ததுமன்றி, உயிரிழந்ததாகவும் நம்பப்படுகின்றது. வீரபாண்டியனது பிந்திய கல்வெட்டுக்களில், குறிப்பாக அவனது 11-ம் ஆண்டைச் சேர்ந்த குடுமியாமலைக் கல்வெட்டில் உள்ள பிரஸஸ்தியில், இப்படையெடுப்புப் பற்றிய மேலதிக விவரங்கள் தரப்பட்டுள்ளன. ஓர் இலங்கை அமைச்சனது வேண்டுதலுக்கமையவே "அரசியல் வழக்கம் நெறிப்பட நாட்டும் குறிப்புடன், வீரபாண்டியன் இப்படையெடுப்பை மேற்கொண்டானெனவும், இங்கு நிகழ்ந்த சண்டையின்போது (இலங்கை) அரசர்களில் இருவரில் ஒருவன மாண்டானெனவும், சண்டையின் முடிவில் படைப்புரவியும், கனகமணித்தேரும்,

சீனவடம், நாமத்தோடு, நவமணிக்குவை முதலான பலவற்றை அபகரித்ததுமன்றி, கோமலை, திரிகூடகிரி ஆகிய இடங்களில் பாண்டியர் கொடியை உயர்த்தினான் எனவும், தந்தையாண்ட தடங்கடல் ஈழத்தைச் சாவகன் மைந்தனிடம் கையளித்து மீண்டதாகவும்", மற்றைய வேந்தனிடம் ஆனைத்திறை கொண்டு திரும்பியதாகவும் இக்கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு, நடந்தவற்றை நிதானிப்பதில் ஈடுபட்டுள்ள வரலாற்று அறிஞரிடையே முரண்பாடுகள் இருப்பினும், பொதுவாக அவர்கள் பாண்டியப் படைகளின் வெற்றியை உறுதிப்படுத்தியுள்ளனர். சந்திரபானுவின் படைகள் இராஜரட்டையிலிருந்து படையெடுத்து வரும்போதே, பராக்கிரமபாகுவின் அமைச்சனொருவன் பாண்டியருதவி பெறச் சென்றிருந்தான் எனவும் இவனது வேண்டுதலுக் கிணங்க வீரபாண்டியன் படைதிரட்டி வருமுன், சந்திரபானுவின் படைகள் யாப்பாகு வரை சென்றன எனவும் பின்னர் சந்திரபானுவுக்கும் வீரபாண்டியனுக்குமிடையே நடைபெற்ற கடுஞ்சமரில் சந்திரபானுவின் படைகள் தோல்வியெய்தியதுமன்றி, சந்திரபானுவும் உயிரிழந்தான் எனவும் குறிப்பிட்டுள்ளனர். சந்திரபானுவின் பல உடைமைகள் பாண்டியனால் அபகரிக்கப்பட்டன. ஈற்றில், சந்திரபானுவின் மகனையே தனக்குத் திறை செலுத்துமாறு பணித்து தந்தையின் அரசைப்பெற வைத்தான். 2-ம் பராக்கிரமபாகுவும் பாண்டிய மன்னனுடன் நட்புரிமை பாராட்டி வெகுமதிகளையளித்ததால், அவனும் திறை செலுத்தியதாகப் பாண்டியர் கல்வெட்டுக்கள் குறிப்பிட்டுள்ளன. இலங்கை ஆதாரங்களும் இதை ஓரளவுக்கு உறுதிப்படுத்துகின்றன.

சமயப்பணிகள் முதலியன : 2-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தின் பெரும் பகுதியில் அந்நியரே இராஜரட்டையில் ஆதிக்கஞ் செலுத்தியதால் அவனுடைய சமய நடவடிக்கைகள் மாயரட்டையிலுள்ள இடங்களிலேயே நடைபெற்றன. மாகனும், பின்னர் சந்திரபானுவும் (பாண்டியருதவியுடன்) தோற்கடிக்கப்பட்டதும், 1260க்குப் பின்னர் பராக்கிரமபாகு இராஜரட்டையில் சில சமய நடவடிக்கைகளைத் தன் மகன் விஜயபாகுவை மேற்கொள்ளச் செய்தான். 1258 அளவில் பராக்கிரமபாகு தீராத நோயினாற் பீடிக்கப்பட்டிருந்தமையால், முதலில் தனது அமைச்சன் ஒருவனிடமும் (தேவபதிராஜா), பின்னர் 1262 அளவில் தனது மூத்த புதல்வனான விஜயபாகுவிடமும் நிருவாகப் பொறுப்புக்களை ஒப்படைத்திருந்தான். விஜயபாகு 1262 அளவில் அனுராதபுரத்திற்கும், பொலன்னறுவைக்கும் சென்றபோது அங்கே வன்னித்தலைவர்கள் அவனைச் சந்தித்து தமது விசுவாசத்தைச் செலுத்தினர். அனுராதபுரத்திலுள்ள ரூவான்வலி தாகபத்தை அவர்களையே திருத்தும்படி பணித்துவிட்டு, விஜயபாகு தன் மைத்துனன் வீரபாகுவுடன் பொலன்னறுவை சென்று நகரின் பாதுகாப்புக்களைப் பலப்படுத்தினான். குளங்களைத் திருத்திப் பயிர்ச்செய்கையை விருத்திசெய்யவும் ஏற்பாடுகள் எடுத்தான். பின்னர் தந்தை பராக்கிரமபாகுவைப் பொலன்னறுவைக்கே வரும்படி செய்து அங்கு அவனுக்கு முடிசூட்டு விழாவை நடத்தி வைத்தான். இதன்பின் புனித பற்சின்னத்தையும் பொலன்னறுவையில் முன்னர் அதற்கென நிறுவப்பட்டிருந்த கோவிலில் வைக்கச்செய்து தன் தந்தையின் நெடுநாளைய விருப்பத்தை நிறைவேற்றினான். பராக்கிரமபாகுவின் ஆட்சியின் இறுதியாண்டில்

(1270) மற்றொரு சமய முக்கியம்வாய்ந்த நிகழ்ச்சி இடம்பெற்றது. சகஸ தீர்த்தத்தில் (தாஸ்தொட்ட)வில் உபசம்பத வைபவம் ஒன்றை நடாத்த விஜயபாகு ஏற்பாடு செய்திருந்தான். பொலன்னறுவைக் காலத்தில் அந்நகரின் தெற்கேயுள்ள அந்த இடத்திலேயே உபசம்பதா வைபவம் நடைபெற்று வந்தது. 2-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் இதற்கு முன்பாகவும் பல தடவைகள் உபசம்பதா நடத்தப்பட்டிருந்தபோதும் பழைய இடத்திலும் (தாஸ்தொட்ட) அதை 2-ம் பராக்கிரமபாகு நடத்த வேண்டுமென விரும்பியமையாலேயே இவ்வாறு நடைபெற்றது. சங்கத்தில் தூய்மையை ஏற்படுத்த 2-ம் பராக்கிரமபாகு எடுத்த முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. இவன் காலத்தில் பிக்குகளை வழிநடத்துவதற்கென வெளியிட்ட விதிகள் தம்பதெனி கடிகாவத என்ற சாஸனத்தில் கூறப்பட்டுள்ளன.

இலக்கியப்பண : தம்பதெனியக் கால இலக்கிய வளர்ச்சி பற்றி மிகச் சுருக்கமாக இங்கு நோக்கலாம். அவ்வகையில் 2-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் கால இலக்கிய முயற்சிகள் சிலவற்றை இப்போது குறிப்பிடுதல் பொருத்தமாகும். பராக்கிரமபாகு ஆற்றிய சமயப் பணிகளால், பௌத்தக் கோட்பாடுகளைக் கூறும் திரிபிடக நூல்களும் அவற்றின் விளக்கங்களும் நன்கு பயிலப்பட்டன. துணை விளக்கங்களும் அரும்பத விளக்கங்களும் (கடபத) எழுதப்படலாயின. 2-ம் பராக்கிரமபாகுவே ஒரு சிறந்த கல்விமானாக விளங்கியதுமல்லாது, சில முக்கிய நூல்களையும் எழுதினான். விசுத்தி மார்க்க, மகா சன்னய, வனவினிச சன்னய, கவ்சிளுமின (காவியம்) என்பவற்றை இவனே எழுதியதாகக் கொள்வர். இந்நூல்களால் அவனது புலமையை மட்டுமன்றி, அவனது பன்மொழிப் பாண்டியத்தையும் சமய விளக்க ஆற்றலையும் அறியமுடிகின்றது. மயூரபாத தேரரின் பூஜாவலிய, தர்மசேனரின் சத்தர்மரத்தனாவலிய, வெதெ தேரரின் ரஸவாஹினீ, தித்தவன கல்ல விகாரவங்ஸ போன்ற நூல்கள் யாவும் பராக்கிரமபாகுவின் காலத்தவையாகும். ஒரு சில வைத்திய, சோதிட நூல்களும், சிதத்சங்கராவ என்ற பிரசித்திபெற்ற இலக்கண நூலும் இவனது காலத்தவை யாகும். அரசியல் நிலைமை அத்துணை வாய்ப்பாக இல்லாதிருந்தபோதும், பௌத்த அறிஞர்கள் கல்வியை வளர்த்து, இவ்வாறான அரிய நூல்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்துறையில் 'கலிகால சாஹித்ய சர்வஞ்ஞ பண்டிதனான 2-ம் பராக்கிரமபாகுவே வழிகாட்டியாக விளங்கினான் எனக் கொள்ளலாம்.

இலக்கியத்துறையிலேயே அவனது பெருஞ்சாதனைகள் இருப்பதாகக் கொள்ளப்படினும், அரசியல் முதலான துறைகளிலும் அவனது சாதனைகளைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. அந்நியரின் அரசியல் ஆக்கிரமிப்பு அதிகமாக இருந்த ஒரு காலப்பகுதியில், இலங்கையின் சுதந்திரத்தைப் பெருமளவு பேணினான் எனலாம். தானே நேரில் போர்களிற் பங்குகொண்டு அவற்றை நடத்தாவிடினும், தனது புதல்வர்களையும், மருமகனையும் இந்நிலைமைகளைச் சமாளிக்கும்படிசெய்து, அவர்களுக்குப் பக்கபலமாகவிருந்தான். 2-ம பராக்கிரமபாகுவின் ஆணை நாடு முழுவதும் பரந்திருந்தமைக்குச் சான்றுகள்

இல்லையெனினும், பெரும்பகுதி இவனது ஆட்சியை ஏற்றிருந்தமை தெளிவு. மாகனது ஆட்சியை முடிவுக்குக்கொண்டு வந்ததும், சந்திரபானுவின் அச்சுறுத்தலி னின்றும் நாட்டைக் காப்பாற்றியதும், பாண்டியரின் கீழ் ஆட்சியின் இலங்கை அமராதவாறு செய்ததும், இம் மன்னனது அருஞ்சாதனைகளே. சமய வளர்ச்சியில் மட்டற்ற ஆர்வங்கொண்டிருந்த இம்மன்னனது சமய நடவடிக்கைகள் நிலையான பயனைத் தரவிடினும், அவற்றால் சங்கத்தினரிடையேயும் மக்களிடையேயும் ஒரு புத்துயிர்ப்புத் தோன்றியமை உணரற்பாலது. கட்டிடங்களை அவன் அவ்வளவாக நிறுவவில்லை. பழைய நகர்களிலுள்ள ஒரு சில முக்கிய கட்டிடங்களைப் பேணியதோடு, தம்பதெனியிலும் தந்ததாதுவுக்கென ஒரு கோவிலை நிறுவினான். எனவே, லியனகமகே கூறுவதுபோல, 'அவன் (2ம் பராக்கிரமபாகு) வாழ்ந்த காலத்தையும் அவனை எதிர்நோக்கிய நெடுக்கடிகளையும் நோக்கும்போது, அவனுடைய சாதனையைக் குறைத்து மதிப்பிடுதல் அவனுக்கு நியாயம் வழங்கத்தவறுவதாக முடியலாம்.' தனியே அவனது இலக்கியச் சாதனைகளை எடுத்துரைத்து, அரசியல் சாதனைகளைக் கூறாதுவிடுதல் அம்மன்னனைப் பொறுத்தமட்டில் அவனுடைய முழுமையை உணர்த்துவதாக இருக்காது என்பர். ஓர் இக்கட்டான காலகட்டத்தில், 2ம் பராக்கிரமபாகு குறிப்பிடத்தக்களவு சிறப்புடன் இலங்கையின் ஆட்சியை நடத்தியுள்ளான் எனலாம்.

iv. தம்பதெனிய அரசின் வீழ்ச்சியும், அதன் காரணங்களும்

2-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சி 1270ல் முடிவெய்தியதும், முன்னமே இராச்சிய நிருவாகப் பொறுப்பைக் கவனித்து வந்த அவனுடைய மூத்த புதல்வனான விஜயபாகு (4ம் விஜயபாகு) அரசைப் பெற்றான். 'போதிசத்துவ'னெனவும் அழைக்கப்பட்ட இவன், மக்களிடையே தனது நற்பண்புகள் காரணமாக நற்பெயரைப் பெற்றிருந்தான். ஆனால், படைத்தலைவனான மித்திரன் விஜயபாகு அரசைப்பெற்ற ஈராண்டுகளில் அவனைக் கொல்லுவித்தான். விஜயபாகுவின் தம்பியான புவனேகபாகு கொலைகாரரிடம் சிக்காது தப்பியோடினான். அவனைக் கைப்பற்றுதற்கு எடுக்கப்பட்ட முயற்சியும் பலிக்கவில்லை. மித்திரன் தானே அரசனாக முற்பட்டபோது இலங்கையில் அப்போது அரச சேவையிலிருந்த 'ஆர்ய' (இராஜ புத்தான) படைவீரர்கள் கலகஞ்செய்து அவனைக்கொன்று, புவனேகபாகு அரசைப் பெறுதற்கு உதவினர். யாப்பகுவிலிருந்த புவனேகபாகு, தம்பதெனிய சென்று முடிசூடிக்கொண்டான். சிங்கள வன்னித் தலைவர்கள் சிலர் இவனை எதிர்த்துக் கலகஞ் செய்தனர். தென்னிந்தியாவிலிருந்தும் தமிழ்ப் படைகள் இலங்கைமீது தாக்குதல்களை மேற்கொண்டன. இவையெல்லாம் ஒரு திட்டப்படி நடைபெற்றனவா என்பதை அறியமுடியவில்லை. ஒருவேளை மித்திரனது உறவினரின் சூழ்ச்சியால் இவை நடைபெற்றிருத்தல் கூடும். இருப்பினும் புவனேகபாகு கலகங்களையும் அந்நியர் தாக்குதல்களையும் புறங்கண்டு, தனது ஆட்சியை நிலைப்படுத்தினான். சிறிது காலத்துக்குத் தம்பதெனியவில் இருந்தபின் யாப்பாகுவுக்குச் சென்று அங்கே தங்கினான். தன் தந்தையைப் போலவே, இவனும் சமயப்பணிகளை மேற்கொண்டு சங்கத்தினரைத் திருப்திபெற

வைத்தான். இவனுடைய காலத்தில் எகிப்திய சுல்தானுக்கு அனுப்பப்பட்ட தூதுக்குழு கெய்ரோவை 1283ல் அடைந்தது. புவனேகபாகுவும் 1284 அளவில் இறந்துபோனான்.

புவனேகபாகுவின் மரணத்தைத் தொடர்ந்து, நாட்டில் ஏதோ குழப்பம் மூண்டதாகத் தெரிகின்றது. சூளவம்சத்திலும் ஓர் இடவெளி இவ்விடத்தில் இருக்கின்றது. புவனேகபாகுவுக்குப் பின், ஓர் ஆட்சியிடையறவு (ராஜ்யாந்தர) ஏற்பட்டதாகத் தளதாசிரிதா என்ற நூல் குறிப்பிட்டுள்ளது. இதே காலத்திலேயே ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் ஒரு படையை (ஆரியசக்கரவர்த்தி என்பானது தலைமையில்) இலங்கைக்கு அனுப்பினான். இப்படையெடுப்பு 1284 அளவில் நடைபெற்றபோது இலங்கையில் உணவுப் பஞ்சமொன்று நடைபெற்றதாகவும் கூறப்படுகின்றது. இப்படையெடுப்பின்போது புனித சின்னங்களையும், மற்றும் விலையுயர்ந்த திரவியங்களையும் ஆரியச்சக்கரவர்த்தி கைப்பற்றிச் சென்று, பாண்டிய மன்னனிடம் ஒப்படைத்தான். வடபகுதியில் ஆட்சி செலுத்திய 'சாவகன் மைந்தன்' (சந்திரபானுவின் மகன்) இச்சந்தர்ப்பத்தில் யாப்பாகுவைக் கைப்பற்றி யிருக்க, பாண்டியனது படைத்தலைவன் அவனைத் தாக்கித் தோற்கடித்து புனிதச் சின்னங்களையும் மீட்டுச் சென்றிருக்கலாம் எனப்படுகின்றது. இது எவ்வாறாயினும், அடுத்த அரசனான 3-ம் பராக்கிரமபாகு (4-ம் விஜயபாகுவின் மகன்) பாண்டிய நாட்டுக்கே சென்று, பாண்டிய மன்னனிடம் பரிந்துபேசிப் புனிதச்சின்னங்களைத் திருப்பிப்பெற்று வந்தான். புனிதச்சின்னங்களைப் பெற்றுவந்த பின்னரே 3-ம் பராக்கிரமபாகு அரசனாயிருக்கலாம் என்பதால், இவன் 1287 அளவிலேயே அரசாளத் தொடங்கியிருப்பான் என நிறுவப்பட்டுள்ளது. பாண்டியராதிக்கம் 3-ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இலங்கையில் வலுப்பெற லாயிற்று. இதை விருப்பாத பிரதானிகள் புவனேகபாகு என்ற இளவரசனைச் சார்ந்து நிற்கலாயினர். குருணாகலையில் தங்கியிருந்த இப் புவனேகபாகு, பொலன்னறுவையிலிருந்து ஆட்சி நடத்திய 3-ம் பராக்கிரமபாகுவைத் தாக்க ஒரு படையைக் கொண்டுசென்றான். அங்கே பராக்கிரமபாகுவைப் பணிய வைத்து, தந்ததாதுவைக் கைப்பற்றிக் குருணாகலை மீண்டு அங்கே தன்னை 1293 அளவில் அரசனாகப் பிரகடனஞ் செய்தான்.

2-ம் புவனேகபாகுவால் இராசதானியாக்கப்பட்ட குருணாகலை இப்போது முக்கியத்துவம் பெற்றது. இவனுடைய ஆட்சி ஒன்பதாண்டுகள் வரை நீடித்திருந்தது. இம் மன்னன் ஆண்டு தோறும் தனது முடிசூட்டு விழாவையடுத்து, உபசம்பதா வைபவத்தையும் நடத்தி வந்துள்ளதைத் தவிர இவனது ஆட்சியில் வேறு முக்கிய நிகழ்ச்சியேதும் இடம்பெறவில்லை. இவனது மகனான 4-ம் பராக்கிரமபாகுவும் குருணாகலையிலிருந்தே ஆட்சி செலுத்தினானெனினும், 'தம்பையின் காவல்'னாக இவன் போற்றப்பட்டதைக் கொண்டு, தம்பதெனியவுடன் இம்மன்னனும் தொடர்பை வைத்திருந்தமை உணரப்படும். இவனுடைய காலத்திலும் (2-ம் பராக்கிரமபாகுவின் காலத்தைப் போன்று) ஏராளமான நூல்கள் எழுதப்பெற்றன. இவனுக்கும் 'பண்டித' பராக்கிரமபாகு என்ற பெயர் உண்டு. இதனால் இவனும் ஒரு கல்விமானாகத் திகழ்ந்தான் எனலாம். இலக்கிய

வளர்ச்சிக்கு இவன் உறுதுணையாக விளங்கினான். புலவர்கள் பலரை இவன் ஆதரித்துப் போற்றினான். இவர்களும் தம்மையாதரித்த மன்னனைப் பற்றிய புகழ்மாலைகளைத் தமது நூல்களில் சேர்த்துள்ளனர். நாரன்பத்தக் கல்வெட்டைக் கொண்டு, இவனுடைய காலத்திலும் தென்னிந்தியப் படையெடுப்பு நிகழ்ந்ததாகக் கூறுவர். இவனுடைய சமய நடவடிக்கைகள் முதலானவை மாயரட்டையிலேயே இடம்பெற்றதால், இவனுடைய ஆட்சிப் பரப்பு அதன் எல்லைகளுக்குள் அடங்கியிருந்ததெனலாம். இவன் 1302ல் அரசைப்பெற்று 1326 வரையாவது ஆட்சிசெலுத்தியதாகக் கூறுவர். இவனது ஆட்சி முடிவில் உண்டான கலகத்தில் இம்மன்னன் இறந்திருத்தல் கூடும். 4-ம் பராக்கிரமபாகுவுடன் தம்பதெனிய மரபும் முடிவுக்கு வரலாயிற்று. ஆனால், அவனுடைய மறைவுக்குப்பின், சுமார் அரை நூற்றாண்டு காலத்தில் தம்பதெனிய மரபும் முடிவெய்தலாயிற்று.

தம்பதெனியரசின் வீழ்ச்சிக்கு வழிகோலிய காரணிகளை இனிச் சுருக்கமாக நோக்குவோம். மாகனது படையெடுப்பின் விளைவாகவும், அதற்கு முந்திய நிகழ்ச்சிகளின் பயனாகவும் பழைய சிங்கள அரச மரபு ஏறத்தாழ அற்றுவிட்டது. தம்பதெனியவில் தோன்றிய மரபு, முந்திய மரபு வழிவந்ததாகக் கூறப்பட்டபோதும் உண்மையில் அதை ஒரு புதிய மரபாகவே கருதவேண்டும். புதிய மரபைச் சேர்ந்த மன்னர்கள் தமது திறமையைக் கொண்டே தமது ஆட்சியை நிலைப்படுத்த வேண்டும். தம்பதெனிய மரபைச் சேர்ந்தவர்களிற் பெரும்பாலானோர் திறமைசாலி களாக இருக்கவில்லை. பலவீனர்களும், சமய ஈடுபாடு கொண்டவர்களும், இலக்கியப் புலமை படைத்தவர்களுமே ஆட்சியாளராக இருந்தனரன்றி, போர்த்திறமை நிருவாக வலிமை முதலானவற்றில் அவர்கள் சிறந்து விளங்கவில்லை. உறுதிபெறாத ஒரு மரபில் திறமை குறைந்தவர்கள் ஆட்சிக்கு வந்ததால், அம் மரபு நீடித்துப் புகழ்பெற முடியாது போய்விட்டது. 2-ம் பராக்கிரமபாகுவின் புதல்வனான புவனேகபாகுவும், மருமகனான வீரபாகுவும் இப்பொதுவிதிக்கு மாறாக, ஓரளவு போர்த்திறமை கொண்டவர்களாக விளங்கினர். 2-ம் பராக்கிரமபாகுவுக்குப் பின், அரசுரிமைத் தகராறுகளும் அடிக்கடி இடம் பெற்றதைக்கண்டோம். 2-ம் பராக்கிரமபாகுவின் மகனான 4-ம் விஜயபாகுவைத் தளபதியொருவன் கொன்று அரசைப் பெற்றதையும், அத்தளபதியைக் கொன்று ஆட்சியைமீட்ட 1-ம் புவனேகபாகு பலவகை இடையூறுகளை . எதிர்கொள்ள வேண்டியிருந்ததையும் காணமுடிந்தது. பின்னர் 1-ம் புவனேகபாகுவின் மரணத்தின் பின்னரும் உள்நாட்டில் ஒருவகை ஆட்சியிடையறவும், ஒரு பஞ்சமும் ஏற்பட்டன. இவை போதாவென்று ஒரு பாண்டியப் படையெடுப்பும் நிகழ்ந்தது. 3-ம் பராக்கிரமபாகுவுக்குப் போட்டியாக 2-ம் புவனேகபாகு இருந்தமையும் முன்னரே குறிப்பிடப்பட்டது. தம்பதெனி மன்னர்களுள் ஒருவனாவது, இலங்கை முழுவதையும் ஆட்சி நடத்தியதாகக் கூறமுடியாது. மாயாரட்டையையும் மத்திய மலைநாட்டின் சில மாவட்டங்களையுமே உண்மையில் அவர்கள் தமது நிருவாகத்தில் வைத்திருந்தனர். 2-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் இறுதிப் பகுதியிலேயே பொலன்னறுவை, அனுராதபுரம் முதலான இடங்களில நடவடிக்கைகள் மேற்கொண்டமை பற்றிய குறிப்புகள்க வருகின்றன. வடபகுதியில்

முதலில் கலிங்கமாகனும், பின்னர் சந்திரபானுவும், இவர்களைத் தொடர்ந்து இவர்களில் ஒருவனுடைய மகனும் ஆட்சிசெய்ததை நாம் முன்னர் குறிப்பிட்டுள்ளோம். யாழ்ப்பாணத்திலும் இதே காலத்தில் ஒரு தமிழ் அரசு நிலவிவந்தது. இவையெல்லாவற்றையும்விட பிறநாட்டுப் படையெடுப்புக்கள் தம்பதெனியரசின் நலிவுக்கு மிகமுக்கிய காரணியாக விளங்கின எனலாம். சந்திரபானுவின் தாக்குதல்கள், பாண்டியப் படையெடுப்புக்கள் முதலானவை நாட்டைப் பெரிதும் பாதிக்கலாயின. உள்நாட்டில் உண்டான தொல்லைகளை இப்பிறநாட்டுப் படையெடுப்புக்கள் மேலும் அதிகமாக்கின. பொலன்னறுவைக் காலத்தைப் போன்ற பொருளியல் சிறப்பை, தம்பதெனியக் காலத்தில் நாடு பெறவில்லை. நாடு எய்திய ஒரு சிறிதளவு முன்னேற்றத்தையும் இவ்வரசியல் தொல்லைகள் பாழ்படுத்தின. இவ்வாறான காரணிகள் அனைத்தும் ஒருங்குசேர்ந்து தம்பதெனிய அரசை நிலைக்கவிடாது, விரைவிற் சீர்குலைய வைத்தன.

யாழ்ப்பாண அரசும், கம்பளை ஆட்சியாளரும்

தம்பதெனிய மரபின் இறுதி மன்னர்கள் குருணாகலையில் இராசதானியை அமைத்ததை கவனித்தோம். ஆனால், குருணாகலையும் விரைவில் அப்பெருமையை இழந்துவிடுகின்றது. கம்பளை (கங்காசிறிபுரம்) விரைவில் சிங்கள அரசமரபினரின் இராசதானியாக்கப் பெறுகின்றது. மலைநாட்டிலுள்ள இந்நகரை இராசதானியாக்கிய அரசமரபுக்கும், முந்திய அரசமரபுக்கும் எவ்வித தொடர்பும் இருந்தமை புலப்படவில்லை. கம்பளையை இராசதானியாகக் கொண்ட சிங்கள மன்னர்கள் தம்மை 'திரிசிங்கள' அதிபதிகளாகக் கூறிக்கொண்டபோதும், அவர்களுடைய ஆதிக்கம் தென்னிலங்கையிலேயே மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாகத் தெரிகின்றது. வடபகுதியில் இதே காலத்தில் 'ஆரியச் சக்கரவர்த்திகள்' எனத் தம்மை அழைத்த தமிழ் அரச மரபினர் தனியரசை நடத்தி வரலாயினர். ஆரியச் சக்கரவர்த்திகளில் சிலர், அக்காலத்து அரசியல் நிலைமைகளைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, தென்னிலங்கை ஆட்சியாளரையும் தமது ஆணையை ஏற்கவைத்து சில ஆண்டுகளில் தமக்குத் திறை செலுத்தவும் வைத்தனர். இராஜாவலீ, நியாய சங்கிரஹ போன்ற நூல்களும், சில பொறிப்புக்களும், பிற நாட்டு யாத்திரிகர்களின் குறிப்புக்களும் இதை உறுதிப்படுத்துகின்றன. எமக்குள்ள ஆதாரங்கள் இக்காலப் பகுதியின் வரலாற்றைத் தெளிவாக அறிய உதவவில்லை. இதனால், அறிஞர்களிடையே கருத்து முரண்பாடுகள் பல நிலவுவதற்கு இது காரணமாகின்றது. இருப்பினும், எமது நூலின் இயல்புக்கு ஏற்ப, பொதுவாக ஏற்கப்பட்ட முடிபுகளையும், கருத்தொற்றுமை நிலவாத இடங்களில் இரு சாராரின் வாதங்களின் முக்கிய அப்படைகளையும் இங்கு எடுத்துக்காட்டுவது பொருத்தமாகின்றது.

இந்தியாவில் முஸ்லீம்களின் ஆதிக்கம் வளர்தல்

இந்திய வரலாற்றில், புராதன காலப்பகுதியில் (ஆதிகாலம்) ஏற்பட்ட முக்கிய அரசியல், பண்பாட்டு விருத்திகள் இது தீவின் வரலாற்றுப் போக்கை பெரிதும்

பாதித்து வந்துள்ளதை கவனித்து வந்துள்ளோம். அதேவேளையில், பெருநிலத்தினின்றும் எமது நாடு ஒரு தொடுகடலாற் பிரிக்கப்பட்டுள்ளமை சில வேளைகளில் அவற்றின் பாதிப்பிலிருந்து எமது தீவைத் தப்ப வைத்துள்ளதாகக் கருதமுடியும். வடஇந்தியாவில் 10-ம் நூற்றாண்டிலிருந்து முஸ்லீம் படையெழுச்சிகள் வடமேற்கிலுள்ள கணவாய்களூடாக நடைபெற்று, படிப்படியாக வடஇந்தியாவில் அவர்களின் ஆதிக்கமும் ஆளுகையும் பரவலாயின. பின்னர் தக்கணம் மீதும், தென்னிந்தியா மீதும் அவர்களின் கவனம்சென்றது. இவ்வாறு நடைபெற்ற ஒரு படையெடுப்புப் பற்றி முந்திய அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தோம். மாலிக் கபூரின் அப்படையெடுப்பு பாண்டியப் பேரரசின் சீர்குலைவிற்குக் காரணமாயிற்று. பின்னர், தென்னிந்தியாவுமே சிறிதுகாலத்துக்கு முஸ்லீம் ஆட்சியில் அமரலாயிற்று. இவ்வாறு, இந்திய வரலாற்றில் உண்டான மகத்தான அரசியல் விருத்திகள் இலங்கையை நேரடியாகப் பாதிக்காது போனமை குறிப்பிடத்தக்கது. இந்திய வரலாற்றின் ஒரு பெரும்பிரிவு முஸ்லீம் ஆதிக்ககாலமாக விளங்கியதுபோல, இலங்கை வரலாற்றிலும் ஒரு காலப்பகுதி அவ்வித தன்மைகளைக் கொண்டு விளங்கவில்லையெனினும், மறைமுகமான சில தாக்கங்களை அவ்விருத்திகள் ஏற்படுத்தத்தவறவில்லை. இரண்டாம் பாண்டியப் பேரரசின் சீர்குலைவின் விளைவாக, இலங்கை அரசியலில் அப்பேரரசு செலுத்திய ஆதிக்கம் மறையலாயிற்று. 14-ம் நூற்றாண்டில் இலங்கையில் நிலவிய அரசுகள், தென்னிந்திய அரசியல் தலையீடின்றிச் சுயாதீனத்துடன் இயங்கலாயின. முஸ்லீம் ஆதிக்க வளர்ச்சியால் செயலிழந்த தென்னிந்தியத் தலைவர்கள் இலங்கை வந்து இங்கு நடைபெற்ற அரசியல் விருத்திகளில் பங்கு வகிக்கலாயினர். யாழ்ப்பாண அரசின் வளர்ச்சியை இவ்விதமான வரலாற்று அடிப்படைகொண்டே சிலர் விளங்குவர். யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் கரையோரங்களிலும் நடைபெற்ற முஸ்லீம் குடியேற்றங்களையும் இந்திய வரலாற்று விருத்திகளின் நேரான விளைவுகளாகவேகொள்வர். எனவே, இலங்கை வரலாற்றை மறைமுகமாகப் பாதித்த (இந்தியாவில்) முஸ்லீம் ஆதிக்கவளர்ச்சியின் சில முக்கிய கட்டங்களை மிகச்சுருக்கமாக அவதானிக்கவேண்டியதாகின்றது.

வடமேற்கு இந்தியாமீது நடைபெற்ற முதல் முஸ்லீம் தாக்குதல் 8-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்றது. சிந்து மாகாணத்துக்கண்மையில் இலங்கைக்கு வெகுமதிகளைக் கொண்டுசென்ற சில அராபியக் கப்பல்கள் கடலிற் கொள்ளையிடப்பட்டமைக்காக அராபியக் 'கலிபா' வினால் அனுப்பப்பட்ட முகம்மது இபின்காசிம் என்பான் பஞ்சாப்வரை படையெடுத்துச் சென்று வெற்றியீட்டினான். சிந்துவைக் கைப்பற்றிய பின், அம் மாகாணத்தை அராபிய இராணுவத் தலைவர்கள் ஆட்சிசெய்தனர். எனினும், அராபியர்களின் இவ்வெற்றி நிலையான அரசியல் மாறுதலெதையும் ஏற்படுத்தவில்லை. அரசியல் பண்பாட்டு அம்சங்கள் இந்தியாவுக்குப் பரவ இது ஏதுவாகவிருந்ததெனக் கூறுவர். இஸ்லாம் மதம் துருக்கிக்குப் பரவியபின், அந்நாட்டைச் சேர்ந்த படை வீரர்கள் கலீபாக்களின் துணைவர்களாக விளங்கி, பின்னர் பாரசீகம், ஆப்கானிஸ்தானம் முதலான

நாடுகளில் தமது ஆதிக்கத்தை நிறுவலாயினர். இவ்வாறு முக்கியம் பெற்றவர் களில், கஸ்னி (Ghazni) என்ற இடத்தைச் சேர்ந்த யாமினி குடும்பத்தவர்கள் முதன்மைபெற்றனர். முன்னர் அடிமையாக 10-ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த ஒரு கஸ்னி மன்னன் இந்தியாமீது படையெடுத்தான். அவனுடைய மகனான முகம்மது காசிம், பல தடவைகள் இந்தியா மீது படையெடுத்து வடஇந்தியாவில் பஞ்சாப் முதலான பகுதிகளைவென்று, அப்பகுதிகளை நிருவகிக்கலானான். இவன் மேற்கே கஸ்பியன் கடல்வரை பரந்திருந்த மிகப் பெரியதொரு பேரரசுக்கு மன்னனாக விளங்கினான். அவனுடைய அவைக் களத்தைப் ∴பிர்தோஸி முதலான பெரும் புலவர்கள் அணி செய்தனர். கலைகளில் நாட்டமுடைய இம்மன்னன் ஒரு பல்கலைக்கழகத்தைக் கஸ்னியில் நிறுவி வளர்த்தான். முகம்மது காசிமுக்குப் பின், அவனுடைய பேரரசு அதிககாலம் நிலைக்கவில்லை.

குர்மரபினர்: கஸ்னி மரபின் பின் எழுச்சிபெற்ற குர் (Ghur) மரபின் சிறப்புக்கு அடிகோலியவன் முகம்மது குர் ஆவான். ஒரு சிறிய பிரதேச ஆட்சியாளனாகத் தொடங்கிய இவன், பின்னர் இறுதிக் கஸ்னி மன்னனைவென்று தனது ஆட்சியை சிந்துப் பள்ளத்தாக்கில் நிறுவினான். 12-ம் நூற்றாண்டின் முடிவில், வட இந்தியாவில் நிலவிய இந்து அரசுகளான இராஜபுத்தான அரசுகளைவென்று, வாரணாசிவரை தன் படைகளைச்செலுத்தி வெற்றியீட்டினான். இவனுக்குப்பின், முன்னர் அடிமையாகவிருந்த ஒரு சிறந்த படைத்தலைவனான குத்ப்-உத்-தீன் கீழ், இந்தியாவில் இருந்த பிரதேசங்களை டில்லியில், இவன் தான் நிறுவிய சுல்தான் ஆட்சியின் கீழ்க்கொணர்ந்தான். இவன் மேலும் பல வெற்றிகளையீட்டி, வடஇந்தியாவின் பெரும்பரப்பைத் தனது ஆட்சிக்குட்படுத்தினான். இவனே உண்மையில் இந்தியாவில் முஸ்லீம் பேரரசை நிறுவினான் எனக் கொள்வர். நிருவாகத்தை நல்லமுறையில் நடத்தித் தனது பேரரசில் மக்கள் அமைதியுடன் வாழவகை செய்தான். டில்லியிலும், ஆஜ்மீரிலும் இவன் பெரும் மசூதிகளை நிறுவியதுமன்றி, இந்துக்களையும் பெரும் தன்மையுடன் நடத்தினான். இவனைப் போலவே, இவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த இல்துத்மிஷ் (1211 - 36), பல்பன் (1265 - 87) மிகச்சிறந்த ஆட்சியாளராக விளங்கலாயினர். இல்துத்மிஷ் என்பானே அவனது மரபின் தலைசிறந்த ஆட்சியாளனாக மதிக்கப்படுபவன். அவன் பெற்ற பேரரசை உள்நாட்டுக் கலகங்களும், பிறநாட்டு (மொங்கோலிய) தாக்குதல்களும் சிதைக்காது பேணியதுமன்றி, அதை மேலும் பலமெய்த வைத்தான். பல்பனும் (Balban) மொங்கோலிய தாக்குதல்களினின்று இந்தியாவைப் பாதுகாத்தான். உள்நாட்டிலும் தோன்றிய கலகங்களை அடக்கி, தன் பேரரசில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டி அதை வலுவடைய வைத்தான். ஆனாலும், இவனைத் தொடர்ந்து அரசைப்பெற்ற பலவீனர்கள் தமது அரசைப் பேணமுடியாது போகவே, 'அடிமை மரபு' என அழைக்கப்படும் இம்மரபுக்குப் பதில் ஒரு புதிய மரபு (கில்ஜிகள்) அதிகாரத்தைப் பெற்றது.

அலாவுத்தீன் கில்ஜி: கில்ஜி என்ற புதிய மரபின் தலையாய சுல்தான் அலாவுத்தின் கில்ஜி ஆவன். இம் மரபின் முதல் மன்னனான ஜலாலுத்தின்

என்பானது மருமகனான அலாவுத்தினே, விந்தியமலைத் தொடரைத் தாண்டித் தக்கணத்துக்கும் படையெடுத்துச்சென்று அங்கு முதன்முதலில் முஸ்லிம் ஆட்சி பரவக் காரணமாகவிருந்தவன். தன் மாமனைக்கொன்று, 1296-ல் அரசைப் பெற்ற அவனுக்கு எதிராக உள்நாட்டில் விளங்கிய பகைவர்களை அடக்குவதில் முதலில் ஈடுபட்டான். எல்லைப்புற காவல்களையும் பலப்படுத்திவிட்டு, நாடு கைப்பற்றுவதில் ஈடுபடலானான். 1305 அளவில், வடஇந்தியா முழுவதும் அவனது ஆணையை ஏற்கலாயிற்று. இதன்பின் மீண்டும் விந்தியமலைக்கு அப்பாலுள்ள தக்கணத்திலேயே அவனது கவனஞ்சென்றது. தேவகிரி யாயதவர், வாரங்கலைச் சேர்ந்த காகதீயர், ஹொய்சளர் ஆகியோர் தக்கணத்திலும், தென்னிந்தியாவில் பாண்டியரும் ஆட்சிநடத்தினர். 1306லிருந்து மாலிக் கபூர் பன்முறை படையெடுத்துச் சென்று இவ்வாட்சியாளரை அடிபணிய வைத்துத் திறையும் பெற்றுச்சென்றான்.

பாண்டியப் பேரரசின் சீர்குலைவு: ஹொய்சளரைவென்று, 1311-ல் பாண்டி நாடுமீது தன் தாக்குதலை மேற்கொண்டான். மாறவர்மன் குலசேகர பாண்டியன் தனக்குப்பின் பாண்டிய அரசைப்பெறுதற்கு, தன் இளைய புதல்வனான வீரபாண்டி யனையே உரித்தாளியாக நியமித்திருந்தான், இதை விரும்பாத சுந்தரபாண்டியன், தன் தந்தையைக் கொன்று (சிலர் கருத்துப்படி) தனதுரிமையை நிலைநாட்ட முற்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனால் உண்டான உரிமைத்தகராறில், வீரபாண்டியனே வெற்றிபெற்றான். அவ்வேளையில் சுந்தரபாண்டியன், தக்கணத்தில் படையெடுப்பை மேற்கொண்டிருந்த மாலிக்கபூரைத் தனக்கு உதவவேண்டினான். வீரபாண்டியன் கொய்சள மன்னனுக்கு முன்னர் உதவியமையும், மாலிக்கபூரின் பகைமையைச் சம்பாதிக்கக் காரணமாகவிருந்திருக்கும். பாண்டிநாடு மீது படையெடுப்பை நடத்திய கபூர், ஜயங்கொண்ட சோழபுரம், கண்ணனூர், சிதம்பரம், ஸ்ரீரங்கம் முதலான இடங்களைத்தாக்கி கொள்ளையடித்தான். மதுரையை முற்றுகையிட்டு வென்றபின் அங்குள்ள கோவில்களையும் கொள்ளையிட்டுப் பின்னர் இராமேஸ்வரம் வரை முன்னேறி, அங்கு ஒரு பள்ளிவாசலை அமைத்த தாகவும் கூறப்பட்டுள்ளது. மதுரையில் ஒரு படையை நிறுத்திவிட்டு, காபூர் தலைநகர்க்கு ஏராளமான கொள்ளையுடன் மீண்டான். காபூர் திரும்பிய பின்னரும், பாண்டிய உள்நாட்டுப் போர் முடிவுறவில்லை. கேரள ஆட்சியாளனான ரவிவர்மன் குலசேகரன் பாண்டி நாட்டின் குழப்பநிலையைச் சாதகமாகக்கொண்டு, அந்நாடு மீது படையெடுப்பை மேற்கொண்டு காஞ்சிவரை முன்னேறினான். சுந்தரபாண்டியன் வேண்டுதலுக்கிணங்க காகதீய மன்னனது பிரதிநிதியொருவன் (முப்பிடி நாயக்கன்) படையுடன்சென்று, 1317-ல் வீரபாண்டியனையும் கேரள மன்னனையும் தோற்கடித்து, சுந்தரபாண்டியனுக்கு அரசைப் பெற்றுக்கொடுத்தான். அடுத்த ஆண்டில், குஸ்ருகான் மீண்டும் ஒரு தாக்குதலை மேற்கொண்டும், அதிக நன்மையை அடையவில்லை. ஈற்றில் முகம்மது பின் துக்ளக் என்ற அடுத்த டில்லி சுல்தான் 1327க்குப் பின் 'மாபார்' நாடு என முஸ்லீம் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும் தமிழ்நாடு மீது பல தாக்குதல்களை மேற்கொண்டு, தனது 33 மாகாணங்களில் ஒன்றாக அதைச் சேர்த்துக்கொண்டான். பாண்டிய அரசின் சீர்குலைவு இலங்கை வரலாற்றைப் பாதித்தமையால், வடஇந்திய முஸ்லீம் ஆட்சியாளர்களால் இலங்கையில் மறைமுகமான விளைவுகள் நிகழ்ந்தன.

முக்மது பின் துக்ளக்கின் ஆட்சி: அலாவுத்தீனினது ஆட்சியின்போது, வடஇந்தியாவும், துக்ளக் அரசுகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு, நீண்டகாலம் நாடு பெறாத அரசியல் ஒற்றுமையை இப்போது கண்டது. பேரரசு பல மாகாணங் களாகப் பிரிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டது. அலாவுத்தீனினது வரி விதிப்புக் கொள்கையும், சமயக் கொள்கையும் பேரரசில் மக்கள் அமைதிபெற வழிசெய்யத் தவறின. இவனுடைய ஆட்சி 1315-ல் முடிவுற்றது. இவன் இறந்த ஐந்தாண்டுகளில் கில்ஜிகளின் ஆட்சியும் முடிவுக்குவந்தது. கில்ஜி மரபின் முடிவுக்குக் காலாக இருந்த கியாஸ்-உத்தீன் துக்ளக் என்பவனது மகனான முகம்மது துக்ளக் (1326 -1351) ஒன்றுக்கொன்று முரணான குணாதிசயங்களையுடையவன். அறிவாற்றலும், பெருந்திட்டங்களைத் தீட்டும் திறனும், சமயப் பொறையும் உடைய துக்ளக், மூர்க்க சுபாவம் படைத்தவனாகவும் விளங்கினான். தலைநகரை டில்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றி அதற்கு **தௌலதாபாத** எனப் பெயர் சூட்டினான். ஆனால் விரைவில் டில்லிக்கே மீண்டும் தலைநகரை மாற்றலானான். இவன் காலத்தில் தோன்றிய பல கலகங்களை அடக்குவதில் கடுமையைக் கைக்கொண்டான். இவ்வாறு ஏற்பட்ட கலவர நிலைமைகளைப் பயன்படுத்தி விஜயநகர பேரரசு எழுச்சியுற்றதை வரலாறு பதிவுசெய்துள்ளது. 1351-ல் திடீரென அவன் இறந்தபோது, அவனதுகுடிகள் பெரும் ஆறுதலைப் பெற்றனர். அவனுக்குப் பின் ஆட்சியைப்பெற்ற .'.பிரோஸ்ஸா துக்ளக், தன் முன்னோன் இழந்த ஆணிலங்களை மீட்க முயன்றானெனினும், மொங்கோலியப் படையெழுச்சிகளால் டில்லி சுல்தானியராட்சியும் விரைவில் முடிவடையலாயிற்று. விந்தியமலைக்குத் தெற்கே, தக்கணத்தில் தேவகிரியில் தங்கி முஸ்லிம் பிரதானிகள் முகம்மது துக்ளக்கின் காலத்தில் நிறுவிய பாமினி அரசு தொடர்ந்து நிலைபெற்று வரலாயிற்று.

மொகலாயப் பேரரசு தோன்றுமுன் இந்தியாவில் ஆதிக்கம்பெற்ற முஸ்லிம் ஆட்சியாளரின் முக்கிய அரசியல் நடவடிக்கைகள் காரணமாக நேரடியான விளைவுகள் இலங்கைக்கு ஏற்படவில்லை. ஆகையால் துருக்கிய, ஆப்கானிஸ் தானிய முஸ்லிங்களான இவர்களின் சாதனைகள் பற்றியோ, அல்லது அவர்களின் அரசுகள் நிலையாமைக்கு உரிய காரணங்கள் பற்றியோ இங்கு குறிப்பிட வேண்டிய தேவையுமில்லை. இந்நிகழ்ச்சிகளின் ஒரு விளைவு, இந்தியச் செல்வாக்கு இலங்கை வரலாற்றில் குறைந்தமையாகும். மறைமுகமான தாக்கங்கள் பற்றி தொடக்கத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் முஸ்லிம் படையெழுச்சிகளோ, அரசியலாதிக்க முயற்சிகளோ நடைபெறவில்லை. ஆனாலும் அராபிய, இந்திய முஸ்லிம்கள் இலங்கையுடன் நெடுங்காலம் வணிகத்தை நடத்திப் பின்னர் தீவின் கரையோரங்களில் குறிப்பிடத்தக்க அளவில் குடியேறலாயினர். இதனால், இலங்கையிலுள்ள குடிகளில் கணிசமான ஒரு தொகையினராக இன்று அவர்கள் விளங்கி வருவதுடன், தமது தனித் தன்மைவாய்ந்த பண்பாட்டு அம்சங்களைப் போற்றி வளர்த்தும் வருகின்றனர்.

யாழ்ப்பாண அரசின் தோற்றம்

தமிழ்க் குடிகள் வடஇலங்கையில் நெடுங்காலம் வாழ்ந்து வந்தமை பற்றி நாம் துணிவதற்கு தொல்லியல் ஆதாரங்களிற் பல கிடைத்துள்ளபோதும்,

வடபகுதியில் ஒரு தமிழ் அரசு தோன்றிய காலத்தையிட்டு அறுதியிட்டுக் கூறுதற்குப் போதிய சான்றுகள் நேரடியாக எமக்குக் கிடைக்கவில்லை. யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, வையாபாடல், தக்ஷிண கைலாசபுராணம் போன்ற ஆதாரங்களில் உள்ள மரபுகளில் பொதிந்துள்ள செய்திகளை, மட்டுமே கொண்டு நடுநிலையாக நின்று ஆய்ந்து, உண்மைகளை நிறுவும் பணியில் ஆய்வாளர் முயற்சி செய்துள்ளனர். சுமார் முக்கால் நூற்றாண்டுக்கு முன் யாழ்ப்பாண வரலாற்றை ஆராய்ச்சி முறையில் அணுகித் தம்முடிவுகளை நூல்கள் வடிவில் தந்த முதலியார் செ.இராசநாயகம், நல்லூர் வண. சுவாமி ஞானப்பிரகாசர் போன்றாரின் அரிய முயற்சிகள் இத்துறையில் முன்னோடிகளாக அமைந்தன. ஏறத்தாழ இவர்கள் கொண்டிருந்த முடிபுகளைத் தழுவி அண்மைக் காலத்தில் வித்தியாரத்னம் சி.எஸ். நவரத்தினம் (Tamils & Ceylon), சு.நடேசன் (The Northern Kingdom in Univ. of Cey. Hist. of Cey. Vol.I, Pt.II) டாக்டர் கே.கே.பிள்ளை (The Jaffna Kingdom – Ch. ix of South India & Ceylon) போன்றவர்கள் யாழ்ப்பாண அரசின் வரலாறுபற்றி எழுதியுள்ளனர். தகுதி வாய்ந்த அறிஞர்களாக இவர்கள் இருப்பினும், இவர்களின் கருத்துக்கள் பொதுவாகத் தொடர்ந்து வந்த ஆய்வாளருக்கு உதவியாக அமைந்தமையை மறுப்பதற்கில்லை. சி.பத்மநாதனின் யாழ்ப்பாண இராச்சியம் போன்ற ஆய்வுகள் பொதுவான வரவேற்பைப் பெறத்தக்கனவாக வெளிவந்திருப்பினும், மத்திய காலப்பகுதியின் வரலாற்றுப் பிரச்சினைகள் மேலதிகமாக இன்னும் அதிக தெளிவைப்பெறவேண்டுமென ஆய்வாளர் உலகம் எதிர்பார்க்கின்றது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே, யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பரப்பில் நாகர் வம்ச அரசு நிலவியது. நாகர் வம்ச அரசு தொடர்பாக கிடைத்துள்ள போதிய சான்றுகள் குறிப்பாக தொல்லியல் சான்றுகள் இம்முயற்சியில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பாக உள்ளது. மேலும் மகாவம்சம், சூளவம்சம் போன்ற நூல்களில் வடபகுதியில் இருந்த அரசைப் பற்றிய நேரடியான குறிப்பேதும் இடம்பெற்றிருக்காமை நோக்கற்பாலது. கி.பி. 18-ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட (மயில்வாகனப் புலவரின்) யாழ்ப்பாண வைபவமாலையில் யாழ்ப்பாண அரசின் தோற்றம், வளர்ச்சி பற்றி வரும் கருத்துக்கள் பயனுடையவை. (கி.பி. 795க்குச் சமமான) சலிவாஹன சகாப்தம் 715-ல் விஜயனது சகோதரனால் நிறுவப்பட்ட மரபில்வந்த ஓர் இளவரசனான உக்கிரசிங்கன், வடதேசத்திலிருந்து ஒரு பெரும் படையுடன் இலங்கையில் வந்திறங்கி, அம் மரபினர் நெடுங்காலம் இழந்திருந்த உரிமையை மீட்கும் வகையில், கடும்போரின் பின் நாட்டின் ஒரு பகுதியைப் பெற்றுக்கொண்டான் எனவும், இவன் கதிரமலையில் ஆட்சி நடத்தியபோது, தெற்கே மற்றொரு மன்னன் அரசாண்டான் எனவும் அது கூறுகின்றது. விஜயனுடைய உறவினனான பண்டு வாசுதேவனது மரபிலேயே உக்கிரசிங்கன் வந்ததாகக் கொள்வதன்மூலம், உக்கிரசிங்கன் கலிங்கத்தைச் சேர்ந்தவனென நிறுவுகின்றனர். அதே நூலில் வரும் பிறிதொரு கூற்று அவனைச் சோழ நாட்டவனாக்குகின்றது. திசை உக்கிர சோழனது மகனான சிங்ககேதுவின மகனான யாழ்ப்பாண அரசின் முதல் மன்னனைக் குறிப்பிட்டுள்ளது.

கைலாயமலையின் கூற்றுப்படி, பாண்டிமழவன் என்ற வேளாளத் தலைவனால் அழைக்கப்பட்டுவந்த ஒருவனே (செகராஜசேகரன், சிங்கை ஆரியன் என அழைக்கப்பெற்றவன்) யாழ்ப்பாணத்தின் முதல் அரசன் எனக் கொள்ளவேண்டும். இவனே பின்னர் விஜய கூழங்கைச் சக்கரவர்த்தியென அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இம்மாறுபட்ட கூற்றுக்களை நோக்கும்போது, சில வரலாற்று மரபுகளுடன் பல ஐதிகங்களும் கலந்து, நிகழ்வுகளை மறைத்துள்ளன எனத் தோன்றுகின்றது. இவற்றிலுள்ள வரலாற்று உண்மைகளை நிதானிக்கப் பிற ஆதாரங்கள் குறிப்பாக சாசன மூலங்கள் கிடையாமை வருந்தத்தக்கது. ஏறத்தாழ பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை, யாழ்ப்பாண அரசு நிலவியதைக் கூறும் நம்பிக்கை வாய்ந்த தொல்லியல் ஆதாரங்கள் தற்போது கிடைத்தவண்ணம் உள்ளன. எனினும் யாழ்ப்பாண வைபவமாலை முதலான நூல்களில் வரும் வரலாற்றுச் செய்திகள் உண்மை நிகழ்ச்சிகளையே குறிப்பன எனவும் உறுதி கூறமுடியாது. ஒன்றுக்கொன்று முரணான செய்திகளையும், தெளிவாக அறியப்பட்ட வற்றையும் தவறுதலாகவே சில இடங்களில் அந்நூல்கள் கொண்டிருப்பதாலும், அவற்றை முற்றாக நம்பி யாழ்ப்பாண அரசின் வரலாற்றை எழுதுதல் வரலாற்றாசிரியர்க்கு சிக்கலை ஏற்படுத்துவதாக உள்ளது.

யாழ்ப்பாண அரசின் முதல் மன்னனாக மரபுகள் கூறும் உக்கிரசிங்கன் கலிங்கநாட்டைச் சேர்ந்தவன் எனவும், யாழ்ப்பாண மன்னர்களை (கலிங்க நாட்டு) கங்கை மரபினரென இலக்கிய ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன எனவும், கலிங்க மன்னர்களான கங்கர்கள் தமது நாணயங்களிற் பொறித்த படுத்திருக்கும் எருதையே யாழ்ப்பாண மன்னர்களும் தமது நாணயத்திற் பொறித்தனர் எனவும் பல காரணங்களைக் காட்டி யாழ்ப்பாணத்தில் ஆட்சியை நடத்திய மன்னர்கள் கலிங்க நாட்டவர்கள் எனச் சில அறிஞர்கள் முடிவுகட்டியுள்ளனர். தமது நாட்டில் உள்ள சிங்ஹபுரம் என்ற பெயரையே இங்கும் 'சிங்கை நகர்' என மாற்றி வழங்கினர் என்பர். கலிங்கச் சக்கரவர்த்தி மரபினர் எனச் சூளவம்சத்தில் வரும் தொடர்கள் யாழ்ப்பாண மன்னர்களின் மரபையே குறித்திருக்கும் என இவர்கள் மேலும் துணிந்துள்ளனர். 4-ம் மகிந்தன் கலிங்க அரசமரபில் வந்த இளவரசியொருத்தியையும், 1-ம் விஜயபாகு 'கலிங்க அரச குடும்பத்தைச் சேர்ந்த 'திரிலொக சுந்தரீ' என்ற பெயரையுடைய யௌவனமும் எழிலும் பொருந்திய இளவரசியையும்' மணஞ்செய்தனர் எனச் சூளவம்சத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. இம் மணவினையுறவுகள் இந்தியாவிலுள்ள கலிங்கநாட்டு மரபுடனா அல்லது ஸ்ரீ விஜய அரசைச்சேர்ந்த ஓர் அரச மரபுடனா நடைபெற்றன என்பது இன்னும் தெளிவாகவில்லை. யாழ்ப்பாண அரசின் வரலாற்றைச் சிறப்பாக ஆராய்ந்த சில அறிஞர்கள், சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கலிங்க மரபு வடஇலங்கையில் ஆட்சி செய்த 'கலிங்க' மரபையே குறிக்கும் எனக் கொள்கின்றனர். (C.S. Navaratnam: Tamils & Ceylon, P.97). பிற நாட்டைச் சேர்ந்த கலிங்கமாயின், அவ்வாறு சூளவம்சம் குறிப்பிடாமல் விடக்காரணம் இல்லை. எனவே, இலங்கையைச் சேர்ந்த ஓர் அரச மரபையே அது குறிப்பதாக இவர்கள வாதிக்கின்றனர். யாழ்ப்பாணப் பேரரச மரபை நிறுவியவர்கள் கலிங்க நாட்டவர்களே

என்ற கொள்கை பொதுவாக ஏற்புடையதெனக் கொள்ளலாம் என டாக்டர் கே.கே. பிள்ளை கருத்துத் தெரிவிக்கின்றார்.

யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த பேரரச மரபினர்க்கு ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பெயர் வழங்கப்பட்டு வந்தமைக்குரிய காரணங்கள் பற்றியும் பலவித கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. செகராசசேகரமாலையில் உள்ள சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்று, யாழ்ப்பாண மன்னர்களைக் கங்கர்கள் எனக் குறிப்பிட்டு உள்ளதைக்கொண்டு, சோழருடன் மணவுறவுகள் கொண்டிருந்த கீழைக்கங்கர்கள் (சோடகங்கர்கள்) இராமேஸ்வரத்துக்குச் சென்று குடியேறி அங்குள்ள பிராமணர் களுடன் விவாகத் தொடர்புகள் வைத்திருக்க வேண்டுமென்பதாலேயே, இவர்களுக்கு 'ஆர்ய'ச் சக்கரவர்த்திகள் என்ற பெயர் ஏற்பட்டிருத்தல் வேண்டுமென பத்மநாதன் கருதுகின்றார். அதே நூலில், அம் மன்னர்கள் பாண்டிய அரசனுக்குக் கட்டுப்பட்டே ஆட்சி நடத்தியமை குறிப்பிடப்பட்டுள்ளது. 'அவர்கள் (சிங்கை நகரரசர்கள்) இராமேச்சரத்துப் பிராமணவரச குடியிற் சம்பந்தஞ் செய்தபின், உபவீதம் (பூணூல்) அணிந்து, ஆரியவரசர் என நாமம் புனைந்து, இராமேச்சரத்தைத் தந்தேயத்தினாளுகைக்குட் படுத்தி, அதனால் 'சேதுகாவலன்' எனப் புதுப்பெயர் புனைந்து, விடைக் கொடியுஞ் சேது லாஞ்சனையும் பொறித்து, ஒருவர்பின் ஒருவராக பரராசசேகரன், செகராசசேகரன் எனச் சிங்காசனப் பெயர்கள் பூண்டு உலகம்போற்ற அரசு செலுத்தி வந்தார்கள்.' இவ்வாறு முதலியார் இராசநாயகம் தமது 'யாழ்ப்பாணச் சரித்திரம்' எனும் நூலில் கூறுவர். தமது நாணயங்களிலும், கல்வெட்டுக்களிலும் தமது இராமேஸ்வரத் தொடர்பை நினைவூட்டும் வகையில் 'சேது' என்பதைப் பொறித்துள்ளமையும், தம்மை சேதுகாவலர்கள் எனக் கூறியிருப்பதையும் நோக்கும்போது, இராமேஸ்வரத்துடன் இவர்களுக்கிருந்த தொடர்பு உறுதிபெறுகின்றது. 12-ம் நூற்றாண்டளவில் அல்லது அதற்கு முன்பாகவே இம்மரபினர் தம்மை 'ஆரியச்சக்கரவர்த்திகள்' என அழைக்கத் தொடங்கியிருத்தல் வேண்டும் என்பர். 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழேந்திப் புலவர் ஒரு சிங்கை ஆரியசேகரன் மீது அவன் வண்மையைப் போற்றும் பாடலைப் பாடியுள்ளார். இதைக்கொண்டு 12-ம் நூற்றாண்டிலோ, அதற்கு முன்பாகவோ யாழ்ப்பாண மன்னர்கள் 'ஆரியச் சக்கரவர்த்திகள்' எனத் தம்மை அழைத்திருப்பர் என முடிவுசெய்துள்ளனர்.

பொதுவான இலங்கை வரலாற்று நூல்களில், யாழ்ப்பாண அரசு 13-ம் நூற்றாண்டில் கலிங்கமானுடைய படையெடுப்பின் விளைவாகவே தோன்றியதாகக் கொள்ளப்படும். யாழ்ப்பாண வைபவமாலையில் உள்ள மரபுச் செய்திகளை அப்படியே உண்மையென ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன் 1344ல் இலங்கை வந்து சென்றுள்ள முஸ்லிம் யாத்திரிகரான இபின் பட்டூட்டாவின் குறிப்புக்களிலேயே யாழ்ப்பாண அரசு பற்றிய மிகப்பழைய சமகாலக்குறிப்பு இடம்பெற்றுள்ளதெனவும் கூறுவர். யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சில நூல்களைத் தவிர, சாசனப் பொறிப்புக் களிலோ, பாளி, சிங்களக் இலக்கியங்களிலோ 13-ம் நூற்றாண்டுக்கு முன்னரும் யாழ்ப்பாண அரசு பற்றிய தெளிவான குறிப்பேதும் இருக்கவில்லையென்பதையும்

சுட்டிக்காட்டுவர். யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்களில், யாழ்ப்பாண அரசு பற்றி வரும் மரபுச்செய்திகளை உறுதிப்படுத்தும் பிற ஆதாரங்கள் இன்மையால் அவற்றுக்கு முக்கியம் அளிக்கத் தயங்குவர். எனவே 13-ம் நூற்றாண்டுக்குச் சற்று முன்பாக யாழ்ப்பாண அரசு தோன்றியிருத்தல் கூடுமாயினும், 13-ம் நூற்றாண்டிலேயே அது கவனத்தைப் பெறும் வகையில் முக்கியத்தைப் பெறுகின்றது எனலாம். கலிங்கமாகனைத் தமிழ் அரசனாகச் சிங்கள நூல்களுமே குறிப்பிடுவதால், அவனால் அல்லது அவனது உபராசாவாக விளங்கிய ஜயபாகுவால் யாழ்ப்பாணத்தில் ஒரு தனியரசு தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பர். மாகனுக்குக் கலிங்க விஜயபாகு என்ற பெயர் இருந்தமை இலக்கிய ஆதாரங்கள் வாயிலாக அறியப்படுவதால், விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி என்பது மாகனையே குறிக்கும் என (கூழங்கை என்பது கலிங்க என்பதன் திரிபாகக் கொண்டு) முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோர் மேற்படி கருத்தினைத் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றிய முரண்பட்ட கொள்கைகளினால் உண்டாகும் குழப்பத்தை அதிகமாக்குவதற்கு பரணவிதான வெளியிட்ட ஒரு கருத்தும் உதவியுள்ளது. 'கலிங்கம்' என்பது மலேஷியாவிலுள்ளதென்ற அவருடைய புதுக்கொள்கையின் தொடர்ச்சியாகவே இது உள்ளது. (கீழைக்கங்கர்கள் என்ற இந்தியக்கலிங்க மரபினர் சோழ அரச மரபுடன் மணவுறவுகள் கொண்டு தமிழர்களாக மதிக்கப்பட்டமையாயின், இத்தொடர்பை மறுக்கவே, கலிங்கத்தை மலேஷியாவிற் காண்பதற்கு அவர் முற்பட்டுள்ளார் எனக் கருதுவாரும் உளர்.) 1264 அளவில் கலிங்க (மலாய் நாட்டு) மாகன் வடஇலங்கையில் ஒரு சாவக அரசை நிறுவினான் எனவும், இவனையே வீரபாண்டியன் கொன்று பின்னர் அவனுடைய மகனுக்கு அவ்வரசைக் கொடுத்து மீண்டதாகவும் பரணவிதான கூறுகின்றார். கலிங்கமாகனையே உக்கிரசிங்கன் எனவும், விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி எனவும் யாழ்ப்பாண வைபவமாலை முதலான நூல்கள் குறிப்பிடுவதாக அவர் மேலும் கூறுவர். யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் அயலிலுமுள்ள இடப்பெயர்களைத் (சாவகச்சேரி, சாவன்கோட்டை, சாவகக்கோட்டை) தமது கருத்துக்கு ஆதாரமாகக் கொள்கின்றார். யாழ்ப்பாண நகருக்குச் சிங்களத்தில் வழங்கும் 'யாப்பனே' என்பதும் (இலக்கியங்களில், யாப்பா-பட்டுண) சாவகர் தொடர்பைப் புலப்படுத்துவதாக அவர் (ஜாவக ஸ்ரீ யாவக, யாவா ஸ்ரீ யாபா + பட்டுண) நிறுவ முயன்றுள்ளார். யாழ்ப்பாண அரசைச் குறித்தற்குச் 'சாவகம்' (ஜாவாகம) என்பது கையாளப்பட்டிருப்பதாகவம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இன்றுள்ள நிலையில் யாழ்ப்பாண அரசு தோன்றியகாலம் பற்றி எவ்விதமான தெளிவான முடிவுக்கும் உறுதியுடன்வர முடியாதுள்ளது. 13-ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பேரரசு இருந்தமைக்கு உறுதியான சான்றுகள் உண்டு. ஆனால், அந்நூற்றாண்டுக்கு முன்னரே (நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர்) அது தோன்றியிருத்தல் கூடும். குறிப்பாக, 11-ம் நூற்றாண்டில் வாழ்ந்த

புகழேந்திப் புலவரின் புகழ்ச்சிக்கு ஓர் ஆரியச்சக்கரவர்த்தி ஆளானமை, 11-ம் நூற்றாண்டிலிருந்தாவது ஆரியச் சக்கரவர்த்திகள் வட இலங்கையை ஆண்டிருக்கலாம் எனக்கொள்ள வைக்கின்றது.

ஆரியச் சக்கரவர்த்திகள்: யாழ்ப்பாண அரசு வலுப்பெறல்

13-ம், 14-ம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்கள் தம்மை ஆரியச் சக்கரவர்த்திகள் எனக் குறிப்பிட்டதை இலக்கியங்கள் எடுத்துக் காட்டியுள்ளன. இலங்கைக் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் இப்பெயர் இடம்பெற்றுள்ளது. தமது இராசதானியாக இவர்கள் கொண்டிருந்த சிங்கநகர் என்பது, இப்போதைய நல்லூர் என்பதற்கு முன்னர் வழங்கப்பட்ட பெயரா என்பது தெளிவாகவில்லை. சிங்கை நகர் இப்போதைய வல்லிபுரம் இருக்கும் பகுதிக்கு அண்மையில் இருந்திருத்தல் வேண்டும் என அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். வல்லிபுரம் ஒரு காலத்தில் ஒரு சிறந்த கடற்கரைப் பட்டினமாகவும், ஒருவேளை தலைநகராகவும் இருந்திருக்கக்கூடுமெனப் பொதுவாகக் கூறப்படினும், தொல்பொருளாய்வுகள் சரிவர மேற்கொள்ளப்பட்டாலே இவைபற்றிய உறுதிவாய்ந்த முடிபுகள் ஏற்படலாம். சிங்கை நகரை இராசதானியாகக் கொண்டிருந்தமையால், ஆரியச் சக்கரவர்த்திகள் 'சிங்கையாரியர்கள்' எனவும் அழைக்கப்பட்டனர். செகராசசேகரன், பரராசசேகரன் என்ற பட்டப்பெயர்களை அவர்கள் மாறிமாறிச் சூடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஆரியச் சக்கரவர்த்திகளின் கீழ், யாழ்ப்பாண அரசானது 13-ம் நூற்றாண்டில் வலிமையெய்தி, அடுத்த நூற்றாண்டில் அதியுன்னத நிலையைப்பெற்றது. 14-ம் நூற்றாண்டிலேயே ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆணை தென்னிலங்கை ஆட்சியாளர்களாலும் ஏற்கப்பட்டிருந்தது. இவ்வாறு யாழ்ப்பாண அரசு சிறப்புற விளங்கிய இரு நூற்றாண்டுகளின் (13-ம், 14-ம் நூற்.) வரலாற்றை நோக்குவதும் அவசியமானது.

யாழ்ப்பாண வைபவமாலை முதலான ஆதாரங்களில் வரும் செய்திகளை அறிஞர்கள் ஆராய்ந்து, கொள்ளத்தக்கவற்றைத் தெளிவுபடுத்தியுள்ளனர். ஓர் அரசனுடைய காலத்து நிகழ்ச்சிகளை இன்னோர் அரசன் காலத்தவையாகத் தவறாக எமது ஆதாரங்கள் குறிப்பிட்டிருத்தலை நடேசன் போன்ற அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். முதல் ஆரியச் சக்கரவர்த்தியான விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி (சிங்கையாரியன் 1215 - 40) பற்றி வைபவமாலையில் உள்ள செய்திகள் உண்மையில் முந்திய மன்னர்கள் காலத்துக்கு உரியவையாகும். அடுத்த ஆரியச் சக்கரவர்த்தி (குலசேகர சிங்கையாரியன் 1240 - 56) அமைதியான ஆட்சியை நடத்தினானெனினும், இவனையே ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் கைப்பற்றிச் சென்றதாக நவரத்தினம் கருதுகின்றார். இவனுக்குப் பின் அரசைப் பெற்ற குலோத்துங்க சிங்கையாரியன் (1256 - 79) தன்காலத்துத் தலையாய போர்வீரனும், யாழ்ப்பாண மன்னர்களுள் தலைசிறந்த ஒருவனுமாக விளங்கியதாக நவரத்தினம் குறிப்பிட்டுள்ளார். இவன் பாண்டிய அரசமரபின் நட்பாளனாக விளங்கி, ஹொய்சள (போசள) மன்னனுக்கெதிராக ஜடாவர்மன சுந்தரபாண்டியன் அடைந்த போர்வெற்றிக்கு உதவியவனாகக்கொள்வர். இவன் காலத்தில்

யாப்பகூவில் தங்கியிருந்த 1-ம் புவனேகபாகுவுக்கும், இவனுக்கும் முத்துத் தளங்களின் உரிமை குறித்துத் தகராறு எழுந்திருக்கவேண்டும். இவனுக்குப் பின் ஆட்சியைப்பெற்ற விக்கிரம சிங்கையாரியன் (1279 - 1302) காலத்திலேயே பாண்டியப் படையொன்று இலங்கை வந்தது. மார்க்கோ போலோ என்ற பிரசித்திபெற்ற வெனிஸ் பிரயாணி இலங்கை வந்ததும் (1292ல்) இவன் காலத்தேயாகும். இவனுடைய ஆட்சியிலிருந்த சிங்கள, தமிழ்க் குடிகளிடையே கலகம் எழுந்தபோது அதை அடக்கியபின், அதில் முக்கிய பங்குகொண்ட சிலரை அரசன் கடுமையாகத் தண்டித்தானெனப்படுகின்றது. இவ்வாறாக 13-ம் நூற்றாண்டின் முடிவில், யாழ்ப்பாண மன்னர்கள் இலங்கையில் அரசியற் சிறப்புடையவர்களாக விளங்கி வந்ததை உணரலாம். பாண்டியப் பேரரசு இதே காலத்தில் தென்னிந்தியாவில் முதன்மை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. பாண்டியப் பேரரசுக்குப் பணிவாக யாழ்ப்பாண மன்னர்கள் விளங்கி, பின்னர் அப்பேரரசு வீழ்ச்சியெய்தியபோது மிகவும் முக்கியத்துவம் பெற்றனர் எனலாம்.

14-ம் நூற்றாண்டில் ஆட்சி செலுத்திய ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாண அரசின் வலிமையைப் பெருக்கி அதன் ஆதிக்கத்தை வளர்த்தனர். அரசியல் துறைகளில் மட்டுமன்றி, சமய (சைவம்) வளர்ச்சியிலும், தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் பெரும் ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கினர். தமிழ்ச்சங்கம் ஒன்று இம்மன்னர்களின் காலத்தில் நிறுவப்பெற்று அவர்களால் ஆதரிக்கப்பட்டது. இபின் பட்டூட்டா முதலான பிறநாட்டு யாத்திரிகர்கள் இலங்கை வந்து ஆரியச் சக்கரவர்த்திகளின் பெருமையை நாம் உணரத்தக்க வகையிலான பயன்தரு குறிப்புக்களையும் விட்டுச்சென்றுள்ளனர். **வரோதய சிங்கையாரியன** 1302 - 25, 'செகராசசேகரன்' என்ற பட்டப்பெயரைச் சூடியவன். அமைதியும் முன்னேற்றமும் கண்ட இவனுடைய ஆட்சியில் பல குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவன் காலத்தில் எழுந்ததாகக் கருதப்படும் செகராசசேகரம் என்ற வைத்திய நூலில், சர்ப்ப சாஸ்திரம் என்ற பகுதியில் வரும் ஒரு செய்யுள் அக்காலத்தில் தென்னிலங்கை வேந்தர்களும் ஆரியச் சக்கரவர்த்திக்குத் திறையளித்ததை உணர்த்தும். இம்மன்னன் நிறுவிய தமிழ்ச்சங்கத்தில் அங்கம் வகித்த யாழ்ப்பாணப் புலவர்கள் மட்டுமன்றி, இந்தியாவிலிருந்து வந்த புலவர்களும் நன்கு ஆதரிக்கப் பட்டனர். குலசேகர பாண்டியனது ஆட்சி முடிவுற்றபோது, மதுரையில் மூண்ட அரசுரிமைத் தகராறில் சுந்தர பாண்டியனது கட்சியை ஆதரித்து, ஒரு படையுடன் வரோதயன் இங்கிருந்து சென்று அவனுக்கு அரசுரிமையை மீட்டுக் கொடுத்த தாகவும் கூறப்படுகின்றது. அவ்வாறு வரோதயன் இந்தியா சென்ற வேளையில் இங்குள்ள வன்னித்தலைவர்கள் சிலர் சிங்கள அரசரின் உதவியை நாடிக் கலகஞ்செய்ய முற்பட்டதாகவும், அவ்வுதவி கிட்டாமையால் அம்முயற்சியைக் கைவிட்டதாகவும் இந்தியாவிலிருந்து மீண்ட வரோதயன் அவர்களை விசாரித்தபின் மன்னித்துவிட்டதாகவும், விசுவாசமாகவிருந்த ஓமந்தைத் தலைவனுக்கு வெகுமதிகளை வழங்கியதாகவும் கூறப்பட்டுள்ளது. இவனுடைய காலத்தில் கச்சாய்த்துறையில் நடைபெற்ற ஒரு சண்டையில் வரோதயனது படைகள பெருவெற்றியெய்தியதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அங்கு அவன் தோற்கடித்த

பகைவர்கள் வன்னியர் படையா அன்றி அவர்களுக்கு உதவ வந்த வடகர் (தெலுங்கர்) படையா என்பது தெளிவில்லை. கச்சாய்ப் போர்களத்திலேயே சடலங்களைப் பரிசோதனைசெய்து தமது வைத்திய நூலுக்குதவும் குறிப்புக்களை செகராசசேகர ஆசிரியர் திரட்டியதாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக வரோதய சிங்கை ஆரியன் அரசியல், போர்த்துறைகளில் மட்டுமன்றி, பொருளியல், சமயம், இலக்கியம் முதலான பிறதுறைகளிலும் தனது அரசைச் சிறப்புடன் திகழச் செய்தமை போற்றுதற்குரியது.

மார்த்தாண்ட சிங்கையாரியன (1325 - 1348) பரராஜசேகரன் என்ற பட்டப் பெயரைச் சூடி, சுமார் கால் நூற்றாண்டு காலம் ஆட்சி செய்தவன். இவனும், கல்வி பயிர்ச்செய்கை முதலான துறைகளில் ஊக்கங்கொண்டு பணியாற்றினான். இவன் காலத்திலேயே (1344-ல்) இபின் பட்டூட்டா என்ற மொறக்கோ நாட்டு யாத்திரிகன் ஆதாம் மலையை (ஸ்ரீபாத) த்தரிசிக்க இலங்கை வந்தான். இவன் விட்டுச் சென்றுள்ள பிரயாணக் குறிப்புக்களில் இலங்கை பற்றியும் சிறப்பாக யாழ்ப்பாண அரசின் சிறப்புக்கள் பற்றியும் சில முக்கிய தகவல்கள் கிடைத்து உள்ளன. யாழ்ப்பாண அரசு இருந்தமையைக் குறிப்பிடும் உறுதிவாய்ந்த முதல் சமகாலக்குறிப்பு இதுவேயெனச் கொள்வதைக்காணலாம். அவன் இலங்கையில் ஒரு துறையில் (பத்தால என அவனால் குறிக்கப்பெற்றது. பட்டினத்துறையைக் குறிப்பதாகச் சிலரும், புத்தளத்தைக் குறிப்பதாகப் பிறரும் கருதுவர்) இறங்கிப் பின்னர் யாழ்ப்பாண மன்னனை அடைந்தபோது அவன் அங்கு நன்கு உபசரிக்கப் பட்டான். (இபின்பட்டூட்டா யாழ்ப்பாணப்பட்டினத்துறையில் வந்து இறங்கியமைக்கான தொல்லியல் சான்று ஒன்றும் கிடைத்துள்ளது.) பின்னர், மன்னன் உதவிய யோகிகள், பிராமணர் ஆகியோருடனும் சிவிகையாளருடனும் புறப்பட்டு முதலில் ஓர் ஆற்றைக் கடந்து பின் மன்னார் மண்டலத்தையும், சிலாபத் துறையையும் தாண்டி, கோனாரின் ஆளுகையிலிருந்த கோநகரை அடைந்து, அங்கிருந்து இரத்தினபுரி மார்க்கமாகச் சென்று ஆதாம் மலையை அடைந்து திருப்பாதத்தை வழிபட்டதாகத தன் குறிப்புக்களில் எழுதியுள்ளான். இக்குறிப்புக்களும் சிங்கை நகர் எது என்பது தெளிவாக்கப்படவில்லை. ஆரியச் சக்கரவர்த்தியை இபின் பட்டூட்டா 'இலங்கைச் சுல்தான்' எனக் குறித்துள்ளதைக் கொண்டு ஆரியச் சக்கரவர்த்தி அக்கால இலங்கையில் முதன்மை பெற்றிருந்தமை தெளிவாக்கப் பட்டதாகக் கூறுவர். ஆயினும், கோனாரும் இலங்கைச் சக்கரவர்த்தி என்றே குறிக்கப் பெற்றுள்ளதால், இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டிய தில்லை. ஆரியச் சக்கரவர்த்தியின் பொருளியற் சிறப்பை இபின் பட்டூட்டா கூறும் விபரங்கள் தெளிவாக்குகின்றன எனலாம். ஆரியச்சக்கரவர்த்தியின் நூறு கப்பல்கள் ஒரே நாளில் சோழமண்டலக் கரையில் கறுவா, அகில் முதலான வணிக (ஏற்றுமதி)ப் பொருள்களுடன் நின்றதைக் கண்டதாக அவன் கூறியுள்ளான். முத்துத்தளங்களும் ஆரியச்சக்கரவர்த்தியின் பொறுப்பிலேயே இருந்தன என்பதும் அவனது குறிப்புக்களால் தெளிவாகின்றது. ஆரியச்சக்கரவர்த்தி பாரசீக மொழியை அறிந்திருந்தான் எனவும், கல்விமானாகக் காணப்பட்டான் எனவும் பட்டூட்டா மேலும் குறிப்பிட்டுள்ளான்.

மார்த்தாண்ட சிங்கையாரியனுக்குப்பின் யாழ்ப்பாண அரசைப்பெற்ற குணபூஷண சிங்கை ஆரியன் (1348-71) விரோதய சிங்கை ஆரியன் (1371 - 80) போன்றவர் களின் ஆட்சிக்காலங்களில் மார்த்தாண்டனது காலச் செழிப்பும், சிறப்பும் நிலவின. குணபூஷணன் காலத்தில் நெசவாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்டு வண்ணார்பண்ணையில் குடியேற்றப்பட்டுட்டதாகக் கூறப்பெற்றுள்ளது. இம் மன்னன் இளவரசனாக இருந்தகாலத்தில் இவனது தாய் ஆட்சியைக் கவனித்து இருத்தல் கூடுமென்பர். இவனுடைய ஆட்சியின்போதே தென்னிந்தியாவிலிருந்து வேளாளத் தலைவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பல கிராமங்களில் குடியேறலாயினர். இக் குடியேற்றங்கள் பற்றி வைபவமாலையும், கையாலமாலையும் சில விபரங்களைக் கூறுகின்றன. 14-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டிய அரசு முஸ்லிம் தாக்குதலுக்கு இலக்காகிப் பின்னர் மதுரையில் ஒரு முஸ்லிம் சுல்தானது ஆட்சி சிறிதுகாலம் நடைபெற்றது. பின்னர் விஜயநகரப் பேரரசு எழுச்சியுற்றபோது மதுரை சுல்தானாட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அதற்குப் பதில் தெலுங்கு மொழி பேசும் அதிகாரிகளின் பொறுப்பில் தமிழ் நாட்டின் நிருவாகம் விடப்பட்டது. இத்தகைய பெரும்மாற்றங்களே ஆளும் வகுப்பினராக இருந்த வேளாளரைத் தம் நாட்டைவிட்டு புதிய நாடான ஈழத்துக்கு வரச்செய்தன என நவரத்தினம் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய ஒரு குடியேற்றம் நடந்தமை பற்றிய மரபு, உண்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தது எனப் பெரும்பாலான அறிஞர்கள் கருதுவர்.

ஜெயவீரசிங்கை ஆரியன் 1380 - 1410 சிறுவயதிலேயே, தந்தை விரோதய சிங்கையாரியனது திடீர் மரணத்தைத் தொடர்ந்து அரசைப்பெற்றான். இவன் ஆட்சி நடத்திய காலத்தில் தென்னிலங்கையில் யாழ்ப்பாண அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் அளகக்கோனார் ஈடுபட்டதன் விளைவாக, ஒரு படையெடுப்பை அங்கு மேற்கொள்ளலானான். இன்னும் இவனைத்தொடர்ந்து ஆட்சியைப் பெற்று குணவீரசிங்கையாரியனும் (1410 - 40) சைவசமய வளர்ச்சிக்குப் பெரும் பணிகள் ஆற்றினர். ஜெயவீரன் 'சைவந் தோன்றிடத் தோன்றினான்' எனச் சிறப்பிக்கப் பட்டவன். குணவீரன் இராமேஸ்வரத்திலுள்ள கோயிலில் திருப்பணியை மேற்கொண்டிருந்தான். இதற்குத் திருகோணமலையிலிருந்து கற்களைக் கொண்டு சென்றான் எனப்படுகின்றது. தமிழ் வளர்க்கச்சங்கம் அமைத்த மன்னர்களில் இவனும் குறிப்பிடத்தக்கவனாவான். 'பரராஜசேகரம்' எனப்படும் ஒரு வைத்தியநூல் இவன் காலத்திலேயே எழுதப்பெற்றது. இம்மன்னன் காலத்து யாழ்ப்பாண அரசின் வரலாற்றை கம்பளையிலிருந்த சிங்கள மரபினர்பற்றி அவன் கொண்டிருந்த பகைமையுறவின் அடிப்படையில் ஆராயமுடியும். இங்கு அவர்களுக்கும் ஆரியச் சக்கரவர்த்திக்குமிடையே ஏற்பட்ட முரண்கள் பற்றியும் அறிதல் அவசியமாகும்.

கம்பளை ஆட்சியாளரும், அளகக்கோனாரும்

கம்பளை அரசமரபு: தம்பதெனிய அரசமரபைச்சேர்ந்த 4-ம் பராக்கிரமபாகு போன்ற இறுதிக்கால மன்னர்கள் 14-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் குருணாகலையைத் தலைநகராகக் கொண்டிருந்தனர். அதே நூற்றாண்டின்

முற்பகுதியின் முடிவில் (1341க்குப் பின்) கம்பளை சிங்கள அரசின் இராசதானி ஆக்கப்பட்டது. இதனிடையே தம்பதெனிய அரச மரபு முடிவெய்தி, புதியதொரு மரபும் தோன்றலாயிற்று. இம்மரபின் தொடக்ககால மன்னர்களில் ஒருவனான 5-ம் விஜயபாகுவுக்கு வழங்கப்பட்ட 'சவுளு' என்பதை 'சாவக' என்பதிலிருந்து வந்ததாகக்கொண்டு, இப்புதிய மரபை இலங்கையை முந்திய நூற்றாண்டில் ஆட்சிசெய்த சாவக (மலாய்) ஆட்சியாளருடன் தொடர்புபடுத்த பரணவிதான முயன்றுள்ளார். வடபகுதியில் நிலவியதாக அவர் கொள்ளும் ஜாவக அரச மரபு, ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆதிக்கம் வளர்ச்சியெய்தியபோது தெற்கு நோக்கிப்பெயர்ந்து 1330க்குச் சற்றுப்பின்னர், தென்னிலங்கையில் முன்னர் இருந்த அரச மரபு வகித்த நிலையைத் தனதாக்கிக் கொண்டதாக அவர் கொள்கின்றார். இது எவ்வாறிருப்பினும், ஒரு நூற்றாண்டுக்குக் குறைவாக கம்பளையில் ஆட்சி செலுத்திய இப்புதிய மரபு அத்துணைச் சிறப்புடைய மன்னர்களைக் கொண்டிருக்க வில்லை. அக்காலத்தில் நிலவிய அரசியல் நிலைமைகளைத் தமது வலிமையைக் கொண்டு நாடு முழுவதையும் தமது ஆட்சியில் நிலை குலையாது வைத்திருக்கும் ஆற்றல் பெற்றவர்களாக அவர்கள் இருக்கவில்லை. உண்மையில் இம்மன்னர்கள் குறுகிய ஆணிலங்களையே ஆட்சி செய்தனராயினும், 'திரிசிங்கள' அதிபதிகளாகத் தம்மைக் குறிப்பிட்டு வந்தனர். கம்பளையில் சில மன்னர்கள் ஆட்சிசெய்யும்போது, அதே காலத்தில் சிலர் டெடிகமையில் இணையரசர்களாகவும் இருந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அளகக்கோனார்கள்: கம்பளை அரச மரபினர் பலவீனர்களாக இருந்ததையும், அவர்களை எதிர்நோக்கிய இடர்கள் மிகப்பெரிதாக இருந்ததையும் பயன்படுத்தி இரு பிரதானி குடும்பங்கள், குறிப்பாக அளகக்கோனார் குடும்பம், கம்பளைக் கால அரசியலில் மிகமுக்கிய பங்கை வகிக்கலாயின. கம்பளைக் காலத்தின் பிற்பகுதியில், இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களே ரயிகமையிலிருந்து ஆட்சியலுவல்களைக் கவனித்தனர். தென்னிந்தியாவிலுள்ள சேர (கேரள) நாட்டின் தலைநகரான வஞ்சி (கரூர்)யிலிருந்து ஒரு பிரதானி குடும்பத் தலைவர்களான இவர்கள், இலங்கை வந்து இங்குள்ள மன்னர்களின் சேவையில் அமைச்சர்களாக விளங்கி, காலப்போக்கில் அவர்களே செயலளவிலான ஆட்சியாளர்களாகவும் விளங்கினர். தொடக்கத்தில் இவர்கள் வணிகர்களாக இருந்திருக்கலாம் என கருதுவதற்கு இவர்களைப் பற்றிய சிலகுறிப்புக்கள் ஆதாரமாகவுள்ளன. இலங்கையிற் குடியேறி இங்கு பல தலைமுறைகள் காலமாக வாழ்ந்துவந்த பின்னரே இவ்வாறு அரசியல் முக்கியத்துவம் பெற்றனர். இவர்கள் இலங்கையில் உள்ள அரச குடும்பங்களுடன் மணவுறவுகள் கொண்டிருந்தனர் என்பதால், இவர்களுடைய முக்கியத்துவமும் மதிப்பும் புலனாகலாம். 'பிரபு ராஜா' என்றே தம்மை அழைத்தபோதும், உண்மையில் 14ம் நூற்றாண்டின் இறுதியில் இவர்களே வலிமைமிக்க ஆட்சியாளராகத் தென்னிலங்கையில் விளங்கினர். 'அளகக்கோனார்' என்ற பெயரைத் தாங்கியவர்கள் வெவ்வேறு காலத்தில் பிரபு ராஜாக்களாக இருந்துள்ளனர். இவர்களுள் மிகவும் புகழ் பெற்றவன 14-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி செலுத்தியவன் இராஜவாலீ முதலான

சிங்கள இலக்கியத்தில் பாராட்டைப் பெற்றவனும் இவனே. வரலாற்றில் இடம்பெற்ற மூன்றாம் அளகக்கோனாரும் இவனே, அளகக்கோனார்கள் சிங்கள நூல்களில் அளகேஸ்வரர்களெனக் குறிக்கப்பெற்றுள்ளனர்.

5-ம் விஜயபாகுவும் பின்னோரும்: அளகக்கோனார்களின் அரசியல் நடவடிக்கைகள் பற்றியறியுமுன், 5-ம் விஜயபாகுவினால் நிறுவப்பட்ட புதிய வம்ச மரபைச்சேர்ந்த சில மன்னர்கள்பற்றி அறிவது பொருத்தமானது. இவர்களைப் பற்றி ஏற்கனவே கூறியதுபோல, இவர்கள் எவ்வகையிலும் அரசியல் முக்கியம் பெறத்தக்கவர்கள் அல்லர். இவர்களைப்பற்றி அறியப்பட்ட செய்திகளும் வரையறுக்கப்பட்டனவாக உள்ளன. 5-ம் விஜயபாகுவின் புதல்வர்களான 4-ம் புவனேகபாகு (1341 - 51)வும் 5-ம் பராக்கிரமபாகு (1344 - 59)வும் ஒரே காலத்தில் ஆட்சியாளர்களாக இருந்துள்ளனர். பின்னவன் டெடிகமையை இராசதானியாகக் கொண்டிருந்தான். இவர்களுடைய காலத்தில், வேறொரு பிரபுக்குடும்பம் முக்கியம் பெற்றிருந்தது. சேனா லங்காதிகார என்ற இப்பிரபுவின் குடும்பமும் மலையாள தேசத்தைச்சேர்ந்த மரபில் வந்ததாகவே கொள்ளப்படும். இக்குடும்பத்திற்கும், அளகக்கோனார் குடும்பத்திற்கும் பெரும்போட்டி நிலவியதில் வியப்பிருக்கமுடியாது. 4-ம் புவனேகபாகுவும் 'திரிசிங்களாதீஸ்வரன்' எனத் தன்னை அழைத்துக் கொண்டபோதும், தென்னிலங்கையிலேயே சில பகுதிகள் இவனுடைய ஆட்சியில் இருந்ததாகக் கூறுவதற்கில்லை. வடஇலங்கையில் ஆரியச் சக்கரவர்த்தியும் தென்னிலங்கையில் ரயிகமையில் அளகக்கோனாரும் இதே காலத்தில் அதிகாரத்தைப் பெருக்கி வந்தனர் என்பதை நாம் உணர்தல் வேண்டும். ரயிகமையில் நிகழ்ந்த ஒரு புரட்சியால் அளகக்கோனாரின் அதிகாரம் சிறிது தடைப்பட்டபோது, கம்பளை சிறிது காலம் செல்வாக்குப் பெறலாயிற்று. 5-ம் பராக்கிரமபாகுவும் அவனது அமைச்சனான சேனாலங்காதிகாரனும் முக்கியம் பெறலாயினர். ஆனால் விரைவில் 5-ம் பராக்கிரமபாகு உருகுணைக்குத் துரத்தப் பட்டதாக அறிகிறோம். ஆரியச்சக்கரவர்த்தியின் ஒரு படையெடுப்பாலேயே இவ்வாறு நேர்ந்ததாகக் கூறுவர். 5-ம் பராக்கிரமபாகுவுக்குப் பின் ஆட்சியைப் பெற்ற 3-ம் விக்கிரமபாகு (1357 - 74) முந்திய இரு அரசர்களின் மருமகனாகக் கருதப்படுகின்றான். இவனுடைய காலத்தில் அளக்ககோனார் ஒருவன் கம்பளை அரசியலில் அதிக செல்வாக்கைப் பெற்றான். இவனே அளகக்கோனார்களுள் மிகவும் புகழ்பெற்றவன். இவ்வாறு அளகக்கோனார் கம்பளையிலும் செல்வாக்கு எய்தியமையால், சேனாலங்காதிகாரனது முக்கியத்துவம் அருகி மறையலாயிற்று. 3-ம் விக்கிரமபாகு ஆரியச்சக்கரவர்த்திக்குத் திறைசெலுத்தி வந்தமை குறிப்பிடத் தக்கது. கம்பளை மன்னனது சார்பிலேயே, அளகக்கோனார் ஆரியச் சக்கரவர்த்தியின் ஆதிக்கத்துக்கு முடிவைக்காண முற்பட்டு 1389 அளவில் வெற்றி பெற்றதாகத் தெரிகின்றது. 3-ம் விக்கிரமபாகு பதினெட்டு ஆண்டுகள் வரையில் அரசனாகவிருந்தான். இவனும், இவனைத் தொடர்ந்து ஆட்சியைப் பெற்ற 5-ம் புவனேகபாகு (1372 - 1408)வும் பெயரளவில் மட்டுமே ஆட்சியாளராக இருந்தனர். இவர்கள் காலத்தில் அளகக்கோனாரே உண்மையான ஆட்சியாளராக விளங்கலாயினர். (5-ம் புவனேகபாகு ஓர் அளகக்கோனாரின் மகனாவான்.

ஆனால் அளகக்கோனார்களிடையே உரிமை பெண்வழி மருமகனுக்கே செல்வதாகக் கருதப்பட்டது. 5-ம் புவனேகபாகுவுக்குப் பின் கோட்டை 6-ம் பராக்கிரமபாகுவே முறைப்படி அரசைப்பெற்ற மன்னனாவான்.

5-ம் விஜயபாகுவின் ஆட்சிக் காலத்தின்போது, பெரும் அதிகாரத்தை வகித்த அமைச்சனும் ஆட்சியாளனுமான அளக்கோனார், நிஸங்க அளகக்கோனார் என்பானது வழியில் வந்த பத்தாவது அளகக்கோனாரெனக் குறிப்பிடப் பெற்றுள்ள போதும், இவனே முதன்முதலில் எமது கவனத்துக்குள்ளாகும் அளகக்கோனார் ஆவன். கீர்த்திசிறீமேவன் என்பவனால் - களனியில் சமயக் கட்டிடங்கள் நிறுவப்பட்டதற்கு இந்த அளகக்கோனார் உதவியளித்ததாக 1344-ம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. அதே ஆண்டில் இலங்கை வந்த இபின் பட்டூட்டாவும் இவனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளான். 1344-ல் வடஇலங்கையில் வந்திறங்கிய இபின் பட்டூட்டா பின்னர் ஆரியச்சக்கரவர்த்தியின் உதவியுடன் ஆதாம் மலைக்குச் செல்லுகையில், 'கோநகர்' என்ற இடத்தில் தங்கியதாகக் கூறியுள்ளான். 'அல்கொனா'ரின் (அளகக்கோனாரின்) பீடமாக இதைக் குறிப்பிட்டிருப்பதோடு, வெள்ளை யானை முதலான அரசச் சின்னங்களை அளகக்கோனார் வைத்திருந்ததையும் அவன் அறியத்தருகின்றான். கோநகர் என்பதை குருணாகலையாகவும், ரயிகமையாகவும் இரத்தினபுரியாகவும் பலவாறாக இனங்கண்டுள்ளனர் ஆய்வாளர். அது எவ்வாறிருப்பினும், கம்பளை மன்னனுக்குப் பணிவாக இல்லாது, சுயாதீனத்துடன் அளகக்கோனார் ஆட்சி செலுத்தினான் என்பது இபின் பட்டூட்டாவின் குறிப்புக்களால் தெளிவாகின்றது. ஆயின், மொறக்கோ யாத்திரீகன் இலங்கையை விட்டு புறப்படுமுன்னரே, இந்த முதல் அளகக் கோனாருக்கெதிரான ஒரு புரட்சி நடைபெற்றதாக அவன் குறிப்பிடுகின்றான். 'அவனது (அளகக்கோனாரது) பேரரசில் உள்ள பிரமுகர்கள் அவனுக்கெதிராகக் கலகஞ்செய்து, அவனைக் குருடாக்கிவிட்டு, அவன் மகனை அரசனாக்கினர்.' என பட்டூட்டா எழுதியுள்ளான். ஆட்சியுரிமை அளகக்கோனாரிடையேயுள்ள (மலையாள) வழமைப்படி மருமகனுக்கே சேரவேண்டுமாதலால் இக்கலகத்தின் நோக்கம் அவ்வாறு சேர்வதைத் தடைசெய்தற்காக இருக்கலாம். இதில் கம்பளை ஆட்சியாளரும் குறிப்பாக சேனாலங்காதிகாரனும் அக்கறை கொண்டிருக்கலாம். அவர்கள் இக்கலகத்தின் விளைவாகத் தமது அதிகாரத்தை வளர்க்க முடிந்தமை தெளிவு. இக்கலகத்தின்போது பதவியில் அமர்த்தப்பட்டவனும் அளக்கோனாராகவே இருந்திருப்பானெனக் கொண்டு, அவனை இரண்டாம் அளகக்கோனார் என்பர். இவன் மிகவும் சொற்பமான காலமே பதவிவகிக்க முடிந்தது.

பெரிய அளகேஸ்வரன்: கம்பளைக் காலப் பகுதியில் மிகவும் குறிப்பிடத்தக்க ஆட்சியாளன் இவன் என்பதில் ஐயமில்லை. முதல் அளகக்கோனாரின் சகோதரி பத்மாவதியின் மகனாக இவன் இருத்தல்கூடும். இவன் காலத்து எழுந்த நூல்களிலும் (நிகாயசங்கிர', எளுஅத்தனகலு வங்ஸ முதலானவை), சில கல்வெட்டுக்களிலும் இவனைப் பற்றிய விபரங்கள் உள்ளன. முன்னர் நடைபெற்ற அரசியற் புரட்சியால் நலிவெய்திய அளகக்கோனார்கள் மீண்டும் வலிமைபெற

உதவிய நிகழ்ச்சிகளை இனிக்கூறுவோம். 5-ம் பராக்கிரமபாகு தமிழ்ப் படைகளினால் துரத்தப்பட்டு உருகுணைக்குச் சென்று வாழ்ந்ததை அங்குள்ள ஒரு கல்வெட்டுக் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு 5-ம் பராக்கிரமபாகு உருகுணைக்குக் கலைக்கப் பட்டமைக்குக் காரணமாகவிருந்தவன் ஓர் ஆரியச்சக்கரவர்த்தியெனக் கூறுவர். டெடிகமைக்குப் பதின்மூன்றுமைல் தொலைவிலுள்ள கொட்டகமவில் பொறிக்கப் பட்ட ஒரு தமிழ்க் கல்வெட்டை இதற்கு ஆதாரமாகக்கொள்வர். 5-ம் பராக்கிரம பாகுவும், 3-ம் விக்கிரமபாகுவும் முறையே டெடிகமையிலும், கம்பளையிலும் போட்டியாக ஆட்சி நடத்தி வந்ததாகவும், விக்கிரமபாகுவே ஆரியச்சக்கரவர்த்தியின் துணையை வேண்டி 5-ம் பராக்கிரமபாகுவைக் கலைக்கத் தூண்டுதலாக இருந்திருக்கலாம் எனவும் பரணவிதான விளக்கந்தருகின்றார். இதேவேளையில், அளகக்கோனார் ஒருவனும் (பெரிய அளகேஸ்வரன் எனப்படும் 3-ம் அளகக்கோனார்) தன் குடும்பத்தினர் முன்னர் இழந்த செல்வாக்கை நிலைநாட்டு வதில் வெற்றி பெற்றுள்ளான். இவனும், இவனது உடன்பிறந்தாரும் 3-ம் விக்கிரமபாகுவின் அரச குடும்பத்துடன் நெருங்கிய உறவு பூண்டனர். 3-ம் விக்கிரமபாகு தன் நிலையை உறுதிப்படுத்தத் தன் உடன் பிறந்தாளான ஜயஸ்ரீ என்பாளை இவர்களுக்கு மனஞ்செய்து வைத்தான். 3-ம் அளகக்கோனாரும், அவனது தம்பிமாரும் முன்னர் நடந்த புரட்சியினால் உரிமையிழந்தமையால், தமக்கு உதவிபெறுவதற்காக ஆரியச்சக்கரவர்த்தியிடம் சென்று முறையிட்டு அவனுடைய படையுதவியைப் பெற்றிருக்கலாம். இது எவ்வாறாயினும், ஆரியச் சக்கரவர்த்தி மேற்கொண்ட படையெடுப்பின் விளைவாக 3-ம் விக்கிரமபாகுவும், அவனிலும் மேலாக அளகக்கோனாரும் நன்மை பெற்றனர். ஆயின், இரு பகுதியினரும் ஆரியச்சக்கர வர்த்திக்குத் திறை செலுத்தும் நிலையில் இருக்க நேர்ந்தனர். வரிகளைப் பெறுதற்கான ஆட்களை நிறுத்திவிட்டு, ஆரியச்சக்கரவர்த்தி யாழ்ப்பாணம் மீண்டதாக கூறப்பட்டுள்ளது.

ஆரியச்சக்கரவர்த்தியின் படையெடுப்புக்கள்: ஆரியச்சக்கரவர்த்தி தனது இராசதானிக்குத் திரும்பியதும், தென்னிலங்கையில் அவனது ஆதிக்கத்திலிருந்து கம்பளை அரசின் சுதந்திரத்தை நிலைநாட்டுவதில் விக்கிரமபாகுவும், அளகக்கோனாரும் ஈடபடலாயினர். ஆரியச்சக்கரவர்த்தியை எதிர்ப்பதற்கென ஒரு கூட்டுறவை விக்கிரமபாகு அமைத்ததாக ஒரு கல்வெட்டுக் குறிப்பிட்டுள்ளது. அளகக்கோனார் 'கோட்டை'யெனப் பின்னர் அழைக்கப்பட்டு வந்த ஜயவர்த்தனக் கோட்டையில் ஒரு பலம்வாய்ந்த அரணை அமைத்து, தன் படைப்பலத்தையும் பெருக்கி வந்தான். தனது ஆயத்தங்களைப் பூர்த்தியாக்கியதும், வரிகளை அறவிட ஆரியச்சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்டவர்களை அவன் தூக்கிலிட்டதாக இராஜாவலீ கூறுகின்றது. ஆரியச்சக்கரவர்த்தி உடனே தென்னிலங்கை ஆட்சியாளரைத் தண்டிக்கக் கடல்வழியாலும் தரைவழியாலும் தன் படைகளை அனுப்பி வைத்தான். கடல்வழியாக வந்த படைகள் கொழும்பு, வத்தளை, சிலாபம் முதலான இடங்களில் தங்கியிருந்தன. அளகேஸ்வரன் தன் படைகளை ஏவி, ஆரியச்சக்கரவர்த்தியின் படைகளைத் தாக்கி அவர்களுக்குப் பெருஞ் சேதங்களை உண்டுபண்ணியதுமன்றி, அவர்களைத் தோற்கடித்துப் பின்வாங்கச்

செய்ததாகவும், நிகாய சங்கிர கூறுகின்றது. இராஜாவாஹலீ என்ற நூல் இதிலிருந்து வேறுபட்ட விபரத்தைக் கூறுவதால், ஆரியச்சக்கரவர்த்தி முதலில் எய்திய தோல்வியுடன் திருப்தியடையாது, மீண்டும் ஒரு படையெடுப்பை தென்னிந்தியப் படையுதவியுடன் மேற்கொண்டதாகக் கூறுவர். இராஜாவலீயில் குறிப்பிடப்படும் ஆரியச்சக்கரவர்த்தியின் படையெடுப்பும் முந்திய படையெடுப்பைப் போன்றே நடைபெற்றது. தெமட்டகொடை, கொரகான போன்ற இடங்களில் கடல்வழி வந்த படைகள் அலகேஸ்வரனது படைகளாலும், மலையகம் வந்த படைகள் கம்பளைப்படையால் மாத்தளையிலும் தோற்கடிக்கப்பட்டன. பாணந்துறையில் விடப்பட்டிருந்த யாழ்ப்பாணக் கப்பல்களும் நிர்மூலமாக்கப் பட்டதால் பின்வாங்கிய ஆரியச்சக்கரவர்த்தியின் படைகள் திரும்பவும் தடைப் பட்டது. பெரிய அளகேஸ்வரனது போர்த்திறமையைப் புகழும் நோக்கங்கொண்ட நூல்களில் ஒரு பக்கச்சார்பாக இவ்வாறு எழுதப்பெற்றுள்ளது. இவ் விபரங்கள் முற்றிலும் உண்மையாகவிருக்கும் எனக் கொள்ளவேண்டியதில்லை. எனினும், அளகேஸ்வரனது முயற்சியால் ஆரியச்சக்கரவர்த்தியின் ஆதிக்கம் தென்னிலங்கை யில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது உண்மையெனக் கொள்ளலாம். இவ்வெற்றி அவனுடைய மதிப்பையும், அதிகாரத்தையும் பன்மடங்கு அதிகரிக்க வைத்தது. இவன் 1159இலிருந்து இருபதாண்டுக்குமேல் இலங்கை அரசியலில் பெரும் முக்கியத்துவம்பெற்று விளங்கினான். எளு அத்தனகலு வங்ஸவில் இவன் 'ஸ்ரீ லங்காதீஸ்வர'னெனப் போற்றப்பட்டுள்ளான். சமய இலக்கியத்துறைகளில் அளகேஸ்வரன் காட்டிய பேராதரவு அரசியல், இராணுவச் சாதனைகளால் அவனுக்குண்டான புகழை நிலைக்கவைத்தது.

வீர அளகேஸ்வரன்: பெரிய அளகேஸ்வரன் 1392க்கு முன்பாக இறந்துபோக, அவனது மகனான குமார அளகேஸ்வரன் 'தபிரபுராஜா' ஆனான். இவனது ஆட்சி சிறிதுகாலமே நடைபெற்றது. பெரிய அளகேஸ்வரனது மருமகனான வீர அளகேஸ்வரன் குமார அளகேஸ்வரனைக் கலைத்து அதிகாரத்தைத் தனதாக்கினான். ஆனால், சிறிது காலத்தில் வீர அளகேஸ்வரனது தம்பியான மற்றோர் அளகேஸ்வரன் (வீரபாகு ஆதிபாத என நூல்கள் இவன் பெயரைக் குறிப்பிடுகின்றன) அதிகாரத்தைப் பெறுதற்குப் போட்டியிடலானான். ரயிகமையில் இரு சகோதரர்க்குமிடையில் மூண்ட சண்டையில் வீர அளகேஸ்வரன் தோல்வி கண்டு, நாட்டை விட்டே வெளியேறினான். இதன் பின், தென்னிலங்கையின் (செயலளவிலான) ஆட்சியாளனாக வீரபாகு ஆதிபாத விளங்கலானான். இவனும் தன் மாமனான பெரிய அளகேஸ்வரனைப் போன்ற ஒரு திறமைசாலியாக விருந்தான் என இலக்கிய ஆதாரங்கள் நம்பவைக்கின்றன. படைகளை நல்ல முறையில் நிருமாணித்து வைத்திருந்தான் எனவும், சிங்கள அரசுக்குப் பகைவர் களால் நேர்ந்த ஆபத்துக்களினின்றும் அதைக் காப்பாற்றினான் எனவும் இவனது புகழை நிகாய சங்கிரஹ பாடுகின்றது. இலக்கிய கர்த்தாக்கள் பலர் இவன் வண்மையைப்பெற்று மகிழ்ந்தனர். சமய நடவடிக்கைகள் சிலவற்றுக்கும் இவன் தன் ஆதரவைக் கொடுத்தான். வீரபாகு 1396 அளவில் இறந்துபோக அவனது இரு புதல்வர்கள் சிறிதுகாலம் ஆட்சி நடத்தினர். இதனிடையே, வீர அளகேஸ்வரன்

இலங்கை திரும்பி அதிகாரத்தைத் தனக்கு மீட்டுக்கொண்டபின் பன்னீராண்டுகள் ஆட்சி நடத்தினான். ஈற்றில், சீனாவிலிருந்து இலங்கை வந்த ஒரு படையிடம் சிக்கி அந்நாட்டுக்குக் கைதியாகக் கொண்டுசெல்லப்பட்டான். இது 1411 அளவில் நடைபெற்றது. சீனத்தாக்குதல் பற்றிய விபரங்கள் பெரும்பாலும் சீன ஆதாரங்களாலேயே அறியப்படுவன: இலங்கை நூல்கள் இந்நிகழ்ச்சி பற்றிய விபரங்களைக் கூறாமல் விட்டிருப்பது வியப்புக்குரியதன்று. நாட்டுக்கும், தமது ஆதரவாளரான ஆட்சியாளருக்கும் பெருமைதராத இந்நிகழ்ச்சியை அவை விவரித்துக் கூற விரும்பாதது இயல்பானதே.

செங் ஹொவின் (சீனத்) தாக்குதல்: 1403-ல் பட்டத்துக்கு வந்த யுங்-லோ என்ற சீனச் (மிங் வம்சத்தவன்) சக்கரவர்த்தி செங்ஹோ என்பானது தலைமையில் ஒரு கப்பற்படையை தென்பிரதேசங்களைத் துருவியாராய அனுப்பி வைத்தான். செங் ஹோ இப்படையுடன் பல நாடுகளுக்கு (அராபியா வரை) வெவ்வேறு தடவைகளில் சென்றான். தன் முதற் பயணத்திலேயே அவன் இலங்கை வந்தபோது வீர அளகேஸ்வரனது எதிர்ப்பைப் பெற்று மீண்டான். இவனை (வீர அளகேஸ்வரனை) ஒரு கொடுங் கோலனாகச் சீன ஆதாரங்கள் குறிப்பிட்டுள்ளன. 1411 அளவில், செங்ஹோ மீண்டும் இலங்கைக்கு வந்தான். சீனப் பேரரசன் இலங்கை அரசனுக்கு அனுப்பிய வெகுமதிகளுடன் வந்த செங் ஹோவை இம்முறையும் வீர அளகேஸ்வரன் எதிர்க்கமுற்பட்டான். அளகேஸ்வரன் காட்டிய எதிர்ப்புக்கு, தன் நிலைமை பற்றியோ கவலையோ அன்றி அவனது கொடுங்கோன்மையின் தன்மையோ காரணமென்பது தெளிவில்லை. பல்லாயிரக் கணக்கான தன் படைவீரரை இராசதானிக்கும் துறைமுகத்துக்கும் (ரயிகமைக்கும் பாணந்துறைக்கும்?) இடையேயுள்ள பாதையைத் தடுக்கும்படி பணித்தான். வேறொரு படைப்பிரிவு கப்பல்களைத் தாக்கமுற்பட்டது. அளகேஸ்வரனது இரகசியத்திட்டங்களை பற்றிய சில செய்திகளை அவனுடைய ஆட்களிற் சிலர் செங் ஹோவுக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து, செங் ஹோ தன் கப்பல் களுக்கு மீளமுற்பட்டான். ஆனால் அவனது வழி தடைப்படுத்தப்பட்டிருந்தது. தனது ஆட்களுக்கு இரகசியமாகச் செய்தியனுப்பி, சிங்கள வீரருடன் போர் நிகழ்த்தும்படி கூறிவிட்டு, செங் ஹோ 3000 போர்வீரருடன் முன்னேறி அளகேஸ்வரனது தலைநகரைச் சூழ்ந்து வெற்றிகொண்டான். பின்னர் அர-சனை (அளகேஸ்வரனை)யும் குடும்பத்தினரையும் கைதிகளாக்கிக் கொண்டு, கடும் எதிர்ப்பினிடையே கப்பல்களை அடைந்து சீனாவுக்குச் செங் ஹோ திரும்பினான். சீன அரசவையை 1412-ல் அடைந்த அவன், தன் சிங்களக் கைதிகளைப் பேரரசனிடம் ஒப்படைத்தான். பேரரசன் யுங்லோ அளகேஸ்வரன் இடத்தில் பரிவுகாட்டி அவனுக்கு விடுதலையளித்து, தகுதியான ஒருவனை அரசனாகத் தெரிவுசெய்யும்படி சீனாவுக்குச் சென்றிருந்த பிற சிங்களக் கைதி களைக் கேட்டுக்கொண்டான். அப்போது அவர்கள் சிறுவனாக இருந்த பராக்கிரம பாகுவைத் தெரிவுசெய்தனர். இவனே பின்னர் கோட்டையரசின் சிறந்த மன்னனாக விளங்கிய 6-ம் பராக்கிரமபாகு ஆவான். செங் ஹோ பின்னரும் ஒருமுறை (1459-ல்) இலங்கை வந்தான். செங் ஹோவின் (முந்திய) இலங்கைத் தாக்குதல்

இலங்கை வரலாற்றில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியதை நாம் உணரலாம். கம்பளை அரசும் அதனிலும் மேலாக அளகக்கோனாரின் ஆட்சியும் முற்றுப் பெறுவதற்கு அது வழிகோலியது.

கோட்டை அரசின் எழுச்சி: 6-ம் பராக்கிரமபாகு

தம்பதெனிய, கம்பளைக் காலப்பகுதிகளின் வரலாற்றைத் தொடர்ந்து சிங்கள மன்னர்கள் பண்பாட்டுத் துறைகளில், சிறப்பாகச் சிங்கள இலக்கியத்துறையில் குறிப்பிடத்தக்க அளவு சாதனைகளை நிகழ்த்திய காலப்பரப்பாக கோட்டை அரசின் எழுச்சியை, குறிப்பாக அதன் தலைசிறந்த மன்னனான 6-ம் பராக்கிரம பாகுவின் ஆட்சிக்கால வரலாற்றைக் குறிப்பிடமுடியும். பண்பாட்டுத் துறைகளில் மட்டுமன்றி அரசியல் துறையிலும் மிகவும் சிறப்புடைய ஒரு காலமாக அவனுடைய ஆட்சிக்காலம் விளங்கியமையால், அதை 'சிங்கள நாகரிகத்தின் இறுதிப் புகழ்பூத்த காலப்பகுதி' என வரலாற்றாசிரியர் அழைப்பர். வடஇலங்கையில் மிகவும் பலத்துடனும், சிறப்புடனும் விளங்கிவந்த யாழ்பாண அரசை அடக்கி அதைத் தனது ஆணையை ஏற்க வைத்தமை 6-ம் பராக்கிரமபாகுவின் மிகப் பெரிய சாதனையென்பதில் ஐயமில்லை. இச்சாதனையையே இவனது காலத்து எழுந்த இலக்கியங்களும் போற்றுகின்றன. எனவே, யாழ்ப்பாண அரசுக்கும் கோட்டையரசுக்குமிடையே 15-ம் நூற்றாண்டில் நிலவிய உறவுகளையும் நாம் கவனித்தல் வேண்டும். யாழ்ப்பாண அரசின் இராசதானியாக நல்லூர் இதே காலத்திலேயே விளங்கத் தொடங்கியதென உறுதியுடன் கூறக்கூடியதாகவும் உள்ளது. கண்டியரசு என்பது ஒரு தனியரசாக விளங்கத் தொடங்கியதும் இதே நூற்றாண்டின் இறுதியில் ஆகும். இந்நூற்றாண்டுகளில் இலங்கையை அரசியல், பண்பாட்டுத்துறைகளில் அதிகம் பாதித்த இந்துப் பேரரசான விஜயநகரப் பேரரசின் எழுச்சியும் இங்கு நோக்கப்படவேண்டியது.

விஜயநகரப் பேரரசின் எழுச்சி

வடஇந்தியாவில் பேரரசுகளை நிறுவிய முஸ்லிம் ஆட்சியாளர்கள் காலவோட்டத்தில் தக்கணத்தையும், பின்னர் தென்இந்தியாவையும் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்து, அப்பகுதியைத் தம் பேரரசிற் சேர்த்துக் கொண்டதை முந்திய அத்தியாயத்திற் கவனித்தோம். தக்கணத்திலும், தென்னிந்தியாவிலும் நடைபெற்ற முஸ்லிம் படையெழுச்சிகளும், ஆட்சியும் இந்து அரசுகளாக அப்பகுதிகளில் விளங்கிய ஹொய்சள, காகதீய முதலான அரசுகளை வீழ்ச்சி பெறவைத்ததுடன், மக்களின் அமைதியான வாழ்வையும் பங்கமுற வைத்தன. சத்தியநாதய்யர் கூறுவது போல, 'நாடுகளும் நகரங்களும் கொள்ளையிடப்பட்டன. சமய நிலையங்களாகவும் கல்விக் கூடங்களாகவும் இருந்த கோயில்களும், மடங்களும் தாக்கி அழிக்கப்பட்டன. பெரும்பான்மையும் மக்கள் தாழ்ந்த நிலையில் வைக்கப்பெற்றனர். முகமதியமதம் சில நிலைகளில் மக்களின் மீது திணிக்கப்பெற்றது. இதனால் அரசியல், பொருளாதார சமய ஆன்மீக, கலைப்பண்புத்துறைகளில் அழிவும் குழப்பமும் ஏற்பட்டன.' இவ்வாறான

நிலைமைகள், முகம்மது பின் துக்ளக் நிறுவிய ஆட்சிமுறையின் தன்மைகள் மாபார் கலகம் முதலான பல கலகங்களை உண்டுபண்ணின. ஆனால், இக்கலகங்கள் திறமை படைத்த முஸ்லிம் படைகளால் கடுமையாக அடக்கப் பட்டன. 'மிலேச்சத்தனமும் குருதி வெறியும் தொடர்ந்து வந்தனவே அன்றிக் குறையவில்லை.' இத்தகைய ஒரு நிலையிலேயே சிதறுண்டு, சிறுமையுற்றுப் பொறுமையுடன் வாழ்ந்த தென்னிந்தியச் சிற்றரசர்கள், தம் பொறுமையைக் கைவிட்டு ஒற்றுமை பூண்டு முஸ்லிம்களை எதிர்க்க முற்பட்டனர். இதன் விளைவாகவே, விஜயநகரப் பேரரசு தோன்றலாயிற்று. இந்து இந்தியப் பண்பாட்டின் இறுதிப் புகலிடமாக விளங்கியது இப்பேரரசு என்பர். முஸ்லிம் ஆதிக்க வளர்ச்சியினைத் தடைப்படுத்தும் நோக்குடன் 14-ம் நூற்றாண்டில் எழுச்சியெய்திய விஜயநகரப் பேரரசு தென்னிந்தியாவில் 15-ம், 16-ம் நூற்றாண்டுகளில் மிகவும் பொலிவுடன் விளங்கி 17-ம் நூற்றாண்டில் வீழ்ச்சியெய்தியது. இப்பகுதியில் நாம் அதன் தோற்றம் பற்றியும், 15-ம் நூற்றாண்டில் அது எய்திய வளர்ச்சி பற்றியும் சுருக்கமாகக் கூறியபின், அப்பேரரசுக்கும் இலங்கைக்கும் நிலவிய தொடர்புகள் பற்றியும் நோக்கலாம்.

விஜயநகரின் தோற்றம்பற்றி பல்வேறு கொள்கைகள் நிலவுகின்றன. அயல்நாட்டு முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் கூறுபவற்றுக்கும், இந்திய மரபுரை களுக்கும் வேறுபாடு உண்டு. சங்கம சகோதரர்கள் ஐவரில் இருவரான ஹரிஹரனும், புக்கனும் துங்கபத்திரை நதியின் தீரத்தில் விஜயநகரை (வெற்றி நகர்) நிறுவியதாக இந்திய மரபுகள் கூறுகின்றன. ஹொய்சாள மன்னன் 3-ம் வல்லாளன் (Ballala- III) வடக்கிலிருந்து நிகழக்கூடிய முஸ்லிம் படையெழுச்சியில் இருந்து தன் நாட்டைக் காப்பாற்றும் நோக்குடன் விஜயநகரை நிறுவினான் என வேறு சில ஆதாரங்களைக் கொண்டு கூறுவர். மற்றொரு கருத்துப்படி, டில்லிக்கு முன்னர் கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்ட சங்கம சகோதரர்களான புக்கனும் ஹரிஹரனும் அங்கு இஸ்லாத்தைத் தழுவியிருந்தபோது, தக்கணத்தில் உண்டான கலவர நிலைமையை அடக்குதற்கு கம்பிலி ஆட்சியாளனுக்கு உதவியாக அவ்விருவரும் அனுப்பப்பட்டனர். அவர்கள் தக்கணத்துக்கு வந்தபோது, முஸ்லிங்களுக்கெதிரான மத, அரசியல் இயக்கம் வலுப்பெற்று வந்தது. வித்யாரண்யர் என்ற (இந்து) முனிவரை அவர்கள் சந்தித்து, இந்து மதத்தை மீண்டும்தழுவி சுல்தானுக்குரிய தம் பற்றுறுதியை விடுத்து ஓர் இந்து அரசை விஜயநகரில் நிறுவினர். இக்கருத்தை நீலகண்ட சாஸ்திரி பின்வருமாறு சுருக்கிக் கூறுவர்: 'இவ்வாறாகத் தன் அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு தக்கணத்துக்கு டில்லி சுல்தானால் அனுப்பப்பட்ட நம்பிக்கை வாய்ந்த அவனது பிரதிநிதிகள் இஸ்லாத்தின் தாக்கங்களினின்றும் புராதன இந்துப் பண்பாட்டைப் பாதுகாப்பதில் பின்னர் முதன்மை பெற்றுத் திகழ்ந்து வரலாறு கண்ட தலைசிறந்த இந்து அரசுகளில் ஒன்றின் தாபர்களாக மாறலாயினர்'.

1336-ல் நிறுவப்பட்ட விஜயநகர அரசு, சங்கம மரபினரின் ஆட்சியில் துரிதமாக விரிவடைந்து வந்தது. 2-ம் கரிகரன் என்பானது ஆட்சியின்போது (1379 - 1406)

தென்னிந்தியா முழுவதும் அவனுடைய ஆணைக்குட்பட்டது. விஜயநகரப் பேரரசின் வடஎல்லையில் நிலவிய பாமனி அரசு என்ற தக்கண (முஸ்லிம்) அரசுக்கும், விஜயநகரப் பேரரசுக்குமிடையே பெரும்போட்டியும், போர்களும் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. 1-ம் தேவராயன் காலத்தில் பாமனி சுல்தானது படைகள் விஜயநகரப் பேரரசின் படைகளைத் தோல்விகாண வைத்தன. அடுத்த பேரரசனான 2-ம் தேவராயன் (1422 - 46) 15-ம் நூற்றாண்டின் தலையாய விஜயநகர மன்னன் ஆவன். ஆனாலும், இவனுடைய காலத்தில் விஜயநகரப் படைகள் பலமுறை பாமனி அரசின் படைகளிடம் தோல்வியை ஒப்புக்கொள்ளலாயின. தன் படைவலியைப் பெருக்க முஸ்லிம்களைத் தன் படைகளிற் சேர்த்தும் பாதுகாப்பு அரண்களைப் பலப்படுத்தியும், நிர்வாகத்தைச் சீர்படுத்தியும் பல திருத்தங்களை மேற்கொண்டான். ஆனாலும் பாமனிப்படைகள் மீண்டும் ஒருமுறை இவனது படைகளை அறுதியாகத் தோற்கடித்தன. முஸ்லிம்களிடம் தேவராஜன் தோல்வி எய்தியமையால், பாமனி சுல்தானுக்குத் திறை செலுத்தவேண்டியும் நேர்ந்தது. ஆனாலும், கலிங்கத்திலும், கேரளத்திலும் மற்றும் இடங்களிலும் 2-ம் தேவராஜன் வெற்றிமேல் வெற்றியீட்டினான். இவனது ஆட்சியில் பேரரசு பெருஞ்செழிப்புடனும் முன்னேற்றத்துடனும் காணப்பட்டதை இவன் காலத்தில் வந்த அப்துல்-ரசாக் போன்ற பிறநாட்டாசிரியர்கள் எழுதியுள்ள குறிப்புக்கள் உணர்த்துகின்றன. இலங்கையின் வடபகுதியுட்பட, தென்னிந்தியா முழுவதும் இவனது ஆட்சி பரந்திருந்ததாக இவர்கள் அறியத்தருகின்றனர். நூனிஸ் என்ற முஸ்லிம் வரலாற்றறிஞன், இலங்கை, குவிலோன், பழவேற்காடு, பெகு, தெனஸெரிம் முதலானவற்றின் ஆட்சியாளர்கள் 2-ம் தேவராஜனுக்குத் திறை செலுத்தியதாகக் கூறுகின்றான். ஒரு பெருங் கடற்படையை வைத்திருந்ததுடன், பிறநாட்டு வணிகத்தையும் நல்லமுறையிற் கட்டுப்படுத்தி அரசிறையைப் பெருக்கினான் எனவும் கூறப்பட்டுள்ளது. தானே சிறந்த அறிஞனாக விளங்கி, கலை இலக்கியத்துறைகளில் பேரூக்கங்காட்டி, கலைஞர்களையும், கவிஞர்களையும் ஆதரித்தான். தேவராயனது நீண்ட ஆட்சி 1446-ல் முடிவுற்றதும், அவன் காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியும், செழிப்பும் அவனது பின்னோர் காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் பாதிக்கப்பட்டன.

2-ம் தேவராயன் இறந்த ஓராண்டின் பின், அவன் மகன் மல்லிகார்ஜுனன் ஆட்சியைப் பெற்றான். இவனது ஆட்சியுடன் 'பிளவு, தேய்வு, குழப்பம்' என்பவற்றைக் கொண்ட ஒரு காலப்பகுதி தொடங்கியதென்பர். சுமார் நாற்பதாண்டுகள் வரை இந்நிலைமை நீடித்தது. மல்லிகார்ஜுனன் பலவீனனாகவும் திறமை குறைந்தவனாகவும் இருந்தமையால், பேரரசுக்குத் திறை கொடுக்காது மாகாண ஆட்சியாளர் பலர் சுயாதீன ஆட்சியை நிறுவ முற்பட்டனர். பாமனி சுல்தானும், ஒரிசா மன்னனும் விஜயநகரப் பேரரசின் பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றலாயினர். இந்நிலையில், சாளுவத் தலைவனான நரசிம்மன் ஆட்சியைக் கைப்பற்றி, சாளுவமரபை நிறுவினான். நரசிம்மன் மாகாணங்களில் மூண்ட கலகங்களையடக்கி, விஜயநகரப் பேரரசுக்கு அச்சுறுத்தலை தந்த பாமனி சுல்தானையும் ஒரிஸ்ஸா மன்னனையும் கட்டுப்படுத்துவதில் வெற்றிபெற்றான்.

நரசிம்மன் ஆறு ஆண்டுகள் ஆட்சி நடத்திய பின் இறக்க, அவனது புதல்வர்கள் அரசைப் பெற்றபோதும், படைத்தலைவனான நரச நாயக்கனே உண்மையான ஆட்சியாளனாக விளங்கினான். சாளுவ மரபு அடுத்த நூற்றாண்டு தொடங்கும்போது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பின் அரசைப் பெற்ற மரபு (துளுவ மரபு) சுமார் எழுபது ஆண்டுகள் பதவியில் இருந்தது. இதன் தாபகனான வீர நரசிம்மனுக்குப் பின் அரசனான கிருஷ்ணதேவராயன் (1509 - 1530) விஜயநகரப் பேரரசின் தலைசிறந்த மன்னனாகப் போற்றப்படுபவன். இவன் காலத்திலேயே அப் பேரரசு மிகவும் விரிவெய்திப் பெரும் புகழுமெய்தலாயிற்று. இவனது மரணத்துடன், விஜயநகரப் பேரரசின் சீர்குலைவு தொடங்கிவிட்டது எனலாம். மாகாண ஆட்சியாளராக நியமிக்கப் பெற்ற நாயக்கர்கள் தனியாட்சி செலுத்தி வரலாயினர். 1565-ல் நிகழ்ந்த தலைக்கோட்டைச் சண்டையில் விஜயநகரப் படைகள் முஸ்லிம் படைகளிடம் தோற்கவே, பேரரசும் வீழ்ச்சியடையலாயிற்று. ஆரவீடு மரபென்ற ஒரு மரபு விஜயநகர அரசின் எஞ்சிய பகுதிகளை 17-ம் நூற்றாண்டுவரை ஆண்டுவந்தபோதும், பெருமைக்குரிய இந்துப் பேரரசின் தன்மை சிறிது தானும் இப்பிராந்திய மரபினரின் காலத்தில் அதற்கு இருக்கவில்லை.

விஜயநகரப் பேரரசும் இலங்கையும்: தென்னிந்தியாவில் மிகவும் பலம் பெற்று விளங்கிய விஜயநகரப் பேரரசுக்கும் இலங்கைக்கும் அரசியல், கலைத் துறைகளில் தொடர்புகளும், பாதிப்புக்களும் நிறையவே ஏற்பட்டிருந்தது. 1-ம் புக்கனது காலத்தில் (1356 - 77) தென்னிந்தியாவில் பல சண்டைகளை வெற்றியுடன் நடத்திய அவனது மகன் குமார கம்பணன் இலங்கையுடனும் போர் நிகழ்த்தியிருக்கலாம் என்பர். ∴பெரிஷ்டா என்பான் 1378-ல் இருந்த விஜயநகர் பற்றிக் குறிப்பிடுகையில், இலங்கையுட்படப் பல நாடுகளின் அரசர்கள் தம் தூதுவர்களை விஜயநகர்க்கு அனுப்பியதுமல்லாது, 'வெகுமதி'களையும வழங்கியதாகக் கூறியுள்ளான். இவ்'வெகுமதி'கள் திறைகளையே குறிக்குமெனக் கொண்டு, இலங்கை அந்நேரத்தில் வெற்றிகொள்ளப்பட்டிருக்கலாம் என்பர். K.K. பிள்ளை எடுத்துக்காட்டியிருப்பதுபோல், இத்தகைய முடிபுக்கு உள்ள ஆதாரங்கள் மிகவும் பலவீனமானவையாகும். 2-ம் ஹரிஹரன் (1377 - 1404) காலத்தில் இலங்கைக்கும் விஜயநகரப் பேரரசுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் இருந்தமைக்குச் சான்றுகள் இருக்கின்றன. விஜயநகரின் ஆணையை முன்னர் மீறிய சோழ, பாண்டிய, கேந்திர நாடுகளுக்கெதிரே அவனது மகன் விரூபாக்ஷன் படையெடுத்தபோது இலங்கைமீதும் ஒரு படையெடுப்பை அவன் மேற்கொண்டதாகவும், இலங்கையில் ஜயஸ்தம்பம் (வெற்றித் தூண்) ஒன்றை நாட்டியதாகவும் அவனது அரியூர்ச் செப்பேடுகள் குறிப்பிட்டுள்ளன. தன் நிறைக்குச் சமமான பொன்னை இராமேஸ்வரத்தில் வழங்கியமை இலங்கை வெற்றியின் நினைவாக இருக்கலாம். 2-ம் ஹரிஹரன் காலத்திலிருந்து விஜயநகர அரசர்கள் இலங்கையிலிருந்து திறைபெற்றிருக்கலாம் எனவும் கருதக்கூடியதாகவுள்ளது. ஆனால் K.K. பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளது போன்று, இம்முடிபுகள் மிக அற்பமான ஆதாரங்களையும் ஊகங்களையுமே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

கோட்டை 6-ம் பராக்கிரமபாகுவின் சமகாலத்தவனாக விளங்கிய விஜயநகரப் பேரரசன் 2-ம் தேவராயன் (1422 - 46) ஆவன். இவனது போர் வெற்றிகள் இலங்கையையும் பாதித்தது. கி.பி. 1435ஐச் சேர்ந்த ஒரு பொறிப்பில் லக்கண்ண தண்டநாயக்கன் என்ற மதுரை ஆள்பதி ஒரு குதிரைப் படையுடன் யாழ்ப்பாணம், நாகபட்ட(ம)னம், ஈழம் ஆகியவற்றை அழித்தற்குப் புறப்பட்ட செய்தியும், இவன் வெற்றியுடன் மீண்டதற்கு அறிகுறியான ஒரு தானமும் குறிப்பிடப்பட்டுள்ளன. 1440ஐச் சேர்ந்த 2-ம் தேவராயனது கல்வெட்டால் 'ஈழம் திறைகொண்ட' என்ற பட்டத்தை அவன் சூடியிருந்தமை தெரிய வருகிறது. நூனிஸின் கூற்றும் இதை வலியுறுத்தும். பிற ஆதாரங்களும் ஒரு விஜயநகரப் படையெடுப்பு இதே காலத்தில் நடைபெற்றதை உறுதிப்படுத்துகின்றன. 6-ம் பராக்கிரமபாகுவும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அதிராம்பட்டினம் என்ற துறைக்கு ஒரு கடற்படை யெடுப்பை நடத்தியதாகக் கூறப்பட்டுள்ளது. இதற்கும், முந்திய விஜயநகரப் படையெழுச்சிக்கும் தொடர்பிருத்தல் கூடும். 2-ம் தேவராயனுக்குப் பின் மல்லிகார்ஜுனனுடன் தொடங்கிய சீர்குலைவுக்கும் இலங்கை வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் தொடர்பு இருக்கவேண்டுமெனக் கொள்வர். குறிப்பாக வட பகுதியில் விளங்கிய யாழ்ப்பாண அரசைக் கோட்டை மன்னன் 6-ம் பராக்கிரமபாகு கைப்பற்றுதற்கு ஒரு படையெடுப்பை மேற்கொள்ளத் துணிந்தமைக்கு, விஜய நகரின் மேலாணை 1450-க்குப்பின் யாழ்ப்பாணத்தில் தளர்ந்தமை தூண்டுதலாக இருந்திருக்கலாம் என்பர். இவ்வாறு 14-ம், 15-ம் நூற்றாண்டுகளில் எழுச்சி பெற்ற விஜயநகரப் பேரரசு, அயலில் உள்ள இலங்கையையும் அரசியல் துறையில் பாதிக்கலாயிற்று.

6-ம் பராக்கிரமபாகு கோட்டை அரசைப் பெறல்

6-ம் பராக்கிரமபாகு கோட்டை அரசின் தலைசிறந்த மன்னனாக மட்டுமன்றி, பொலன்னறுவைக் காலத்துக்குப் பிந்திய காலங்களில் ஆட்சி செய்தவர்களுள் எல்லாம் மிகவும் கீர்த்தி பெற்றவன் எனவும் கொள்ளப்படுகின்றான். இவன் அண்மைக் காலத்திலேயே ஆட்சி செய்துள்ளான் எனினும், இவன் ஆட்சியைப் பெற்ற செய்திகள், இவனுடைய மரபுவழி போன்ற செய்திகள் ஆதாரங்களில் தெளிவாகக் கூறப்படவில்லை. இலங்கை வரலாற்று ஆதார நூல்களில் ஒன்றான இராஜாவலியிலும், போர்த்துக்கேய ஆசிரியன் (டி கூற்றோ) ஒருவனுடைய நூலிலும் வரும் செய்திகளை நாம் உண்மையெனக் கொள்வதற்கில்லை. இவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகள் வருமாறு: சீனரால் கைதியாக்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட ஒரு விஜயபாகுவின் குழந்தையான பராக்கிரமபாகுவை, அவனது தாயான இராணி சீனரிடம் சிக்கிவிடாது தப்பவைத்தது மன்றி, தன் குழந்தைகளுடன் தப்பியோடி வீதாகம என்ற இடத்துக்குச் சென்றாள். அங்குள்ள விகாரையின் மகாதேரர் (பிக்கு) பராக்கிரமபாகுவுக்கு பாதுகாப்பளித்து, ஆட்சியை அவ்வேளையில் அபகரித்திருந்த அளகேஸ்வரனது சூழ்ச்சிவலையில் அகப்படா வண்ணம் கூடுதலான பாதுகாப்பையுடைய பொல்வத்தையென்ற இடத்துக்கு (கேகாலை மாவட்டம்) அனுப்பி அங்கு ஒரு பிரதானியின் பொறுப்பில்

பராக்கிரமபாகுவை வளரவிட்டார். பதினாறு வயதைப் பராக்கிரமபாகு எய்தியதும், வீதாகமமகாதேரர் இளவரசனை படைத்தலைவர்களிடம் ஒப்படைத்தபின், அவர்களும் மகாதேரரும் செய்த கூட்டுமுயற்சியால், அளகேஸ்வரன் தோற்கடிக்கப் பட்டு, பராக்கிரமபாகு அரசைப் பெறமுடிந்தது. இச்செய்திகளை நோக்கும்போது, வீதாகம தேரரே பராக்கிரமபாகு அரசைப் பெறுவதில் முக்கிய பங்கை வகித்துள்ளமை புலப்படும். ஆயின், இச் செய்திகள் நம்பிக்கை வாய்ந்தவையாகத் தோன்றவில்லை. இந் நிகழ்ச்சிகள் நடைபெற்றதற்குப் பல ஆண்டுகளின் பின் (17-ம் நூற்.) தோன்றிய இராஜாவலியில் புனைகதைகளோ என எண்ணத்தக்க கதைகள் புகுந்து வரலாற்றைச் செய்திகளுடன் கலந்துவிட்டமை புலப்படும். பொது மக்களிடையே பெருமதிப்பையும், புலவர்களின் கற்பனாசக்திக்கு இடமளிக்கத்தக்க தன்மைகளையும் கொண்ட 6-ம் பராக்கிரமபாகு பற்றி இவ்வகையான கற்பனைகள் தோன்றியதில் வியப்பில்லை. ஆனால் வியப்பென்ன எனில், ஓரளவு அண்மைக் காலத்தில் வாழ்ந்த இம்மன்னன் பற்றிய உண்மைச் செய்திகள் விரைவில் மறக்கப்பட்டதேயாகும்.

பராக்கிரமபாகுவின் சமகாலத்து இலக்கியங்களில் இடையிடையே வரும் குறிப்புக்களால் இவனது மரபுவழி பற்றியும் சீன ஆதாரங்களால் இவன் ஆட்சியைப் பெற்ற வரலாறு பற்றியும் நாம் வேறு வகையான செய்திகளை அறிய முடிவதையும் இச் செய்திகள் அதிக நம்பிக்கைக்குரியவை எனவும் பரணவிதான சுட்டிக் காட்டியுள்ளார். 'சவுளு' (5-ம்) விஜயபாகுவின் வழிவந்தவனாக இவ்வாதாரங்கள் கொள்ளவைக்கின்றன. 5-ம் விஜயபாகுவின் புதல்வனான 5-ம் பராக்கிரமபாகுவுக்குப் பிறந்த ஓர் இளவரசியை, 'ஜயமகாலான' எனப்படும் ஒரு பதவியை (எழுத்தர்லேக்க என்பதற்குச் சமமானது) வகித்தவதன் மணஞ் செய்திருந்தான். இவர்களுடைய மகனான ஒரு ஜயமகாலான (லமனிஜயமகாலான)வே, பராக்கிரமபாகுவின் தந்தை என்பதும், சுனித்திராதேவி என்ற ஒரு கலிங்க (மலாய்?) இளவரசி என்பதும் இச்சமகால இலக்கியங்களிலுள்ள குறிப்புக்களால் பெறப்படும். அளகக்கோனார் குடும்பத்தின் எழுச்சியால் தாழ்வுற்றிருந்த கம்பளை அரச மரபு வழியில் வந்த பராக்கிரமபாகு இப்போது தனது குடும்பத்தினது உரிமையை நிலைநாட்டினான். சீனத் தாக்குதல் அளகக்கோனார் குடும்பத்துக்குப் பேரிடியாகவிருந்த தென்றால், பராக்கிரமபாகுவின் குடும்பத்தினர்க்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்ததாகக் கொள்ளலாம்.

பராக்கிரமபாகு அரசைப் பெற்ற வரலாறு பற்றிய உண்மைச் செய்திகளை (சீன ஆதாரங்களில் உள்ளபடி) இனிக் கூறுவோம். முன்னரே நாம் குறிப்பிட்டவாறு, செய்-ஷோவின் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு சீனாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட வீர அளகேஸ்வரனையும், அவனது அவைக்களத்தைவரையும் சீனப் பேரரசன் (ஓர் அமைச்சன் இவர்களைக் கொல்லும்படி ஆலோசனை கூறியதையும் புறக்கணித்து) கொல்லாது விடுதலை செய்தான். அதே வேளையில், அங்கு சென்றிருந்த அரச குடும்பத்தவரை மிகவும் தகுதிவாய்ந்த ஒருவனை அரசனாகத் தெரிவுசெய்யும்படி கேட்க, அவர்கள் 'யெ-ப-நய்-ன' எனச்

சீனமொழியில் எழுதப்பட்டவனைத் (சிங்களத்தில் 'ஆபாண' என்பதற்குச் சமமானது) ஒருமனதாகத் தெரிவுசெய்தனர். இத்தெரிவைச் சீனப் பேரரசன் ஏற்றதோடு, அவனை இலங்கைக்கு அனுப்பி அரசனாகப் பிரகடனஞ் செய்வித்தான். இவன் அரசனான பின்னர் 'பு-ல-கொ-ம-பா-ஸய்-ல-ச' (பராக்கிரமபாகு ராஜா) என்ற பெயரைத் தாங்கியதாகவும் சீன ஆதாரங்கள் குறித்துள்ளன. இவற்றை நுனித்து ஆராய்ந்த பரணவிதான இவற்றுக்குத் தரும் விளக்கம் வருமாறு : 'செங்ஹோவினால் சீனாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட கைதிகளில் ஒருவனாக 6-ம் பராக்கிரமபாகு எனப் பின்னர் அழைக்கப்பட்ட இளவரசன் இருந்திருக்க முடியாது. ஆகவே நிகழ்ந்திருக்கக்கூடியது என்னவெனின், இளவரசனோ, அவனுடைய சார்பில் வேறுசிலரோ செங்ஹோவின் முதற் படையெழுச்சியின்போது அவனது உதவியை நாடிப்பெற்றனர் என்பதும், ஏற்கெனவே இவ்விளவரசனுக்கே உதவியளிப்பதாக முடிவு செய்திருந்ததால், வீர அளகேஸ்வரனிடத்து அவன் பகைமை பராட்டினான் என்பதும் ஆகும். சீனக் கடற்படையின் துணையும், வீர அளகேஸ்வரனைச் சீனர் கைப்பற்றியமையால் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த சிங்களருக்குண்டான அதிர்ச்சியும், பராக்கிரமபாகுவைக் கோட்டை, ரயிகமையைச் சேர்ந்த மாவட்டங்கள் அரசனாக ஏற்றுக்கொள்ளவைத்தன. பரணவிதான இப்போது தம் புதிய கொள்கைக்கேற்ப, 6-ம் பராக்கிரமபாகுவையும் ஒரு மலாய்த் தொடர்புடைய மன்னனாகவே கொள்கின்றார். அது பற்றி நாம் இங்கு எதுவும் கூறவேண்டியதில்லை. பொதுவாக நோக்குமிடத்து, சீன ஆதாரங்கள் தரும் செய்திகளே உண்மையென்பது புலப்படும். இவன் அரசனான பின்னர் சீனப் பேரரசனுக்குத் திறைசெலுத்தி வந்தமையும் சீன ஆதாரங்கள் குறிப்பிட்டுள்ளன. இவன் ஆட்சியைப் பெற்ற ஆண்டும் பல வகையாகக் கணக்கிடப் பெற்றுள்ளது. சீனாவிலிருந்து திரும்பி அரசையேற்ற ஆண்டு 1412ஆக இருக்கலாம். எனவே இந்த ஆண்டிலிருந்தே இவனது ஆட்சி தொடங்கியதென்பர். 1425 இலேயே இவனது முடிசூட்டுவிழா நடைபெற்றிருத்தல் வேண்டும்.

ரயிகமையிலேயே இவனது ஆட்சி தொடங்கியது. விரைவில் 'ஜயவர்த்தனபுரம்' என்ற கோட்டைக்குத் தன் தலைநகரைப் பராக்கிரமபாகு மாற்றிக்கொண்டான். அங்கு தனக்கென ஒரு புதிய மாளிகையையும், தந்ததாதுக் கோவிலையும் அமைத்து, புதிய நகருக்குப் பொலிவையும் புகழையும் அளித்தான். கீரவல்ல அளவரசியை இவன் திருமணம் செய்து, பல்வகைச் சிறப்புக்களுடன் ஆட்சி செய்யலானான். ஆட்சித் தொடக்கத்தில் இவனது ஆணையை ஏற்கமறுத்த மலைநாட்டு ஆட்சியாளனுடன் (சேனா லங்காதிகாரவின் பேரனான பராக்கிரமபாகு ஆபா) சமர்செய்து வென்றமை கடலாதெணியக் கோவில் தூணொன்றில் உள்ள பொறிப்பால் உறுதிபெறுகின்றது. இதன்பின் கம்பளை அரச மரபினர் பராக்கிரமபாகுவின் ஆணைக்குக் கட்டுப்பட்டே அதிகாரம் செலுத்தி வந்தனர். 6-ம் பராக்கிரமபாகு கோட்டை அரசைப் பெற்ற வரலாற்றை இதுவரை கூறினோம். இனி அவனது ஆட்சிக்கால நிகழ்ச்சிகளையும் அவனது முக்கிய சாதனைகளையும் கவனிக்கத் தொடங்குவோம்.

6-ம் பராக்கிரமபாகுவின் சாதனைகள்

ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சி 1412-ல் தொடங்கியதாகக் கொண்டால், அவன் ஐம்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி செலுத்தியதை (1412 - 67) உணரலாம். சீனப் பேரரசனது திறையாளனாகவே முதலில் அவனிருந்தபோதும், விரைவில் தன் சுயாதீனத்தை நிலைநாட்டிக் கொண்டான். நாட்டின் ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் யாழ்ப்பாண அரசையும், வன்னித் தலைவர்களையும் தனக்குப் பணிய வைத்தான். தென்னிந்தியாவில் விளங்கிய விஜயநகரப் பேரரசின் தாக்குதல்களைச் சமாளித்து அதன் (கன்னடப்) படைகளைப் பின்வாங்க வைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. தானே ஒரு கடற் படையெடுப்பை மேற்கொண்டு, தென்னிந்தியாவிலிருந்து ஒரு சிற்றரசனைத் தண்டித்ததாகவும் இலங்கை நூல்கள் குறிப்பிட்டுள்ளன. இவ்வாறு பல போர்ச் சாதனைகளை நிலைநாட்டியுள்ளதையே இலக்கியங்கள் பெரிதும் போற்றியுள்ளன. அமைதிக்கால சாதனைகள் பலவற்றை அவன் நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கதே. பொருளியல் துறையில், குறிப்பாகப் பிறநாட்டு வணிகத்துறையில் நாடு பெரும் முன்னேற்றமெய்தியது. கலைத் துறைகள் பெருவளர்ச்சியெய்தின. இலக்கிய விற்பன்னர்கள் பலர் ஆதரிக்கப்பட்டு வந்தமையால், இக்காலத்தில் ஏற்பட்ட இலக்கிய அறுவடைகள் போற்றத்தக்கவை யாகவிருந்தன. பௌத்தமும் நன்னிலையை எய்தியிருந்தது. இவ்வாறு இதரதுறை களிலும், போர்த்துறை - அரசியல்துறைகளிலும் குறிப்பிடத்தக்க பல அரிய செயல்களை 6-ம் பராக்கிரமபாகு புரிந்துள்ளதைக் காணலாம்.

சீன ஏடுகளில் பராக்கிரமபாகுவிடமிருந்து அல்லது அவனது ஆட்சிக்கால இலங்கையிலிருந்து திறை கிடைத்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதைக் கொண்டு சில ஆண்டுகளில் 6-ம் பராக்கிரமபாகு சீனாவுக்குத் திறையனுப்பியதை அறியலாம். சீனரின் உதவியுடன் அவன் அரசைப் பெற்றிருப்பின், இவ்வாறு அவன் திறையனுப்பியதில் வியப்பில்லை. இருப்பினும் சில ஆண்டுகளில் (1412 - 1432) அவன் திறையனுப்பியதை நிறுத்தியிருக்கவேண்டும். செங்ஹோ மீண்டும் ஒருமுறை இலங்கை வந்தமைக்கு இலங்கையிலிருந்து திறை வராமையே காரணமாகலாம். இது எவ்வாறாயினும, இலங்கையிலிருந்து இடையிடையே சில வெகுமதிகளுடன் தூதுவர்களைச் சீனாவுக்கு அனுப்பியதில் 6-ம் பராக்கிரமபாகுவுக்கு அதிக நட்டம் ஏற்பட்டிருக்கமுடியாது. 1459க்குப் பின், இவ்வெகுமதிகள் அனுப்புவதை அவன் நிறுத்தியிருத்தல் வேண்டும். இதன் பின், 6-ம் பராக்கிரமபாகு முழுச்சுயாதீனத்துடன் ஆட்சிசெய்து வரலானான்.

விஜயநகரப் பேரரசுக்கும் இலங்கைக்குமிடையே நிலவிய அரசியற்றொடர்புகள் பற்றி முதற் பகுதியிலேயே குறிப்பிட்டிருந்தோம். 6-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் முற்பகுதியில் ஒரு விஜயநகரப் படையெழுச்சி நடைபெற்றதாக நம்பப்படுகிறது. 2-ம் தேவராயனது ஆட்சிக்காலத்தில் (1422 - 46) மதுரை நாயக்கனாக நியமிக்கப்பட்டிருந்த லக்கண்ண-தண்ட நாயக்கன் 1435க்கு முன்பாக இலங்கைமீது ஒரு படையெடுப்பை மேற்கொண்டிருந்தான். இதன் பின்னரே, அவன 'தக்ஷிணசமுத்திராபதி' என்ற பட்டத்தைச் சூடியதாகத் தெரிகின்றது. 1440க்குரிய

ஒரு பொறிப்பில் 'ஈழம் திறைகொண்ட' என்ற பட்டத்தை 2-ம் தேவராயன் சூடியுள்ளதையும் குறிப்பிட்டிருந்தோம். லக்கண்ண தண்டநாயகனது படையெடுப்பின் விளைவுபற்றி டாக்டர் பிள்ளை கூறுவது இது : 'யாழ்ப்பாணம் மட்டுமோ அன்றி முழு இலங்கையுமே லக்கண்ண தண்டநாயகனால் வெற்றி கொள்ளப்பட்டது என்பதில் ஐயத்துக்கிடமேயில்லை.' யாழ்ப்பாண மன்னனான கனகசூரிய சிங்கையாரியனும் கோட்டையரசனான 6-ம் பராக்கிரமபாகுவும் திறை செலுத்தியிருப்பரென அவர் மேலும் கருதுவர். இலங்கையாதாரங்களில், இப்படையெடுப்பு நிகழ்ந்தபோது பராக்கிரமபாகு விரைவில் கன்னடப் பகைளைத் தோற்கடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. விஜயநகரப்படை தொடக்கத்தில் வெற்றியீட்டியிருப்பினும் கோட்டையரசன் அந்நியப் படைகளை விரைவில் விரட்டியிருப்பான் என்பதே உண்மையாகவிருக்கலாம் எனப் பரணவிதான கொள்வர் லக்கண்ண தண்ட நாயகன் மீண்டும்ஒருமுறை (1445) 'இலங்கையின் எல்லைப்புறம் வரை கடற்பயணஞ் செய்தான்' என அப்துர் ராஸாக் கூறியுள்ளதைக்கொண்டு, மீண்டும் ஒரு படையெடுப்பை அவன் மேற்கொண்டிருத்தல் கூடும் என்பர். முன்னரே அவன் வெற்றியெய்தியிருப்பின், இரண்டாம் படையெடுப்புக்குரிய காரணம் புலப்படவில்லை. விஜயநகரின் மேலாணையிலிருந்த தமிழ்நாட்டில் உள்ள தஞ்சாவூர்ப் பிரதானியொருவனுடன் பராக்கிரமபாகுவுக்கு அவனது ஆட்சியின் பிற்பகுதியில் ஒரு தகராறு மூண்டது. 'வரகூர் உடையன்' என்ற பட்டத்தைச் சூடியிருந்த மழவராயன் என்கின்ற இத்தலைவன் கறுவா ஏற்றிச் சென்ற பராக்கிரமபாகுவின் கப்பல்களைச் சூறையாடியமையாலேயே இத்தகராறு மூண்டதாகக் கூறப்பட்டுள்ளது. பராக்கிரமபாகு ஒரு படையை அதிவீரராம பட்டினம் என்ற துறைக்கு அனுப்பினான். அங்கு பலரைக் கொன்று, கொள்ளை யடித்து மழவராயனைக் கொன்றுவிட்டு, மகுடங்கோட்டையெனப்பட்ட பகுதியில் உள்ள நான்கு கிராமங்களை மானியமாகப்பெற்று அது திரும்பியது. இக் கிராமங்கள் தொடர்ந்து சில ஆண்டுகளாக இலங்கைக்குத் திறையனுப்பி வந்ததாகத் தெரிகின்றது.

6-ம் பராக்கிரமபாகுவின் சாதனைகளில் அதிகம் புகழ்ச்சியைப் பெற்றது. யாழ்ப்பாணத்தில் விளங்கிய ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசை அடிப்படுத்தி இலங்கை முழுவதையும் தனது ஆட்சிக்குட்படுத்தியமை ஆகும். கம்பளை மன்னர்களின் காலத்தில் சிங்கள அரசு வலிகுன்றியபோது ஆரியச்சக்கரவர்த்திகள் தமது ஆட்சிப் பரப்பை விரிவுபெறவைத்து, தமது ஆதிக்கத்தை மேலோங்கச் செய்ததுமன்றி, சிங்கள அரச மரபை நிலைகுலைய வைத்தனர். விஜயநகரப் பேரரசு வலிமை பெற்றபோது, அதன் தாக்குதல்களுக்கு யாழ்ப்பாண அரசும் இலக்காகி, அப்பேரரசுக்குத் திறை செலுத்தி வரலாயிற்று. கன்னடப் படைகள் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் உள்ள சில இடங்களில் நிறத்தப்பட்டுமிருந்தன. 6-ம் பராக்கிரமபாகு ஆட்சியைப் பெற்ற பின்னரும் யாழ்ப்பாண மன்னனுடைய வலிமைக்கும் அதனிலும் மேலாக விஜயநகரப் பேரரசின் வலிமைக்கும் ஈடுநிற்க முடியாதென அவன் அஞ்சி யாழ்ப்பாண மன்னனுடன் போர்தொடுக்க 1450 வரை அவன் துணியவில்லை. விஜயநகரப் பேரரசில் 2-ம் தேவராயனது

ஆட்சிமுடிவில் தோன்றிய குழப்பநிலைமைகளும், மல்லிகார்ஜுனன் போன்ற திறமை குறைந்தவர்கள் ஆட்சியைப் பெற்றதனால் உண்டான சீர்குலையும் அப்பேரரசின் வலிகுன்றுவதற்குக்காளாயின. இந்நிலைமைகள் இலங்கையின் அரசியற் போக்கையும் பாதிக்கலாயின. வட இலங்கையில் விஜயநகரப் பேரரசுக்கு இருந்த ஆதிக்கம் சிறிது தளர்ந்திருத்தல் வேண்டும். இதைப் பயன்படுத்திய பராக்கிரமபாகு யாழ்ப்பாணப் படையெழுச்சிக்கு வேண்டிய ஆயத்தங்களில் ஈடுபடலானான். இதற்கு முன்பாக, வன்னிப் பகுதியில் ஏறத்தாழ சுயாதீனத்துடன் ஆட்சி செலுத்திய வன்னித் தலைவர்களை அடக்குவதில் முனைந்தான். இதையும் அவன் இலகுவாகச் சாதித்திருந்தான் எனக் கூறிவிடமுடியாது. 'கிரா சந்தேசய' முதலான அவன் காலத்துச் சிங்கள இலக்கியங்களில் வரும் குறிப்புக்களை நோக்குமிடத்து, பராக்கிரமபாகு கடுஞ்சமர் புரிந்தே அவர்களை அடக்க முடிந்ததென்பது புலப்படும். இதைச் சாதித்து முடிந்ததும், பராக்கிரமபாகுவின் படைகள் தடையின்றி யாழ்ப்பாணத்துக்கு முன்னேறலாம் என்ற சாதகநிலை ஏற்பட்டது.

யாழ்ப்பாணப் படையெழுச்சிக்குப் பொறுப்பாகப் பராக்கிரமபாகு வால் நியமிக்கப்பட்ட செண்பகப்பெருமாள் என்பவன், (சபுமால் குமாரய எனச் சிங்களத்தில் குறிப்பிடப்படுபவன்) பராக்கிரமபாகு போற்றப்பட்ட அளவுக்குச் சிங்கள இலக்கியங்களில் புகழப் பெற்றுள்ளான். இவனுடைய தந்தையான பணிக்கன் இந்தியாவிலிருந்து (மலையாளம்?) இலங்கை வந்து பராக்கிரமபாகுவின் சேவையில் பணியாற்றிய உயர்குடியாளனெனத் தெரிகின்றது. அவனது திறமை, ஆற்றல், மதியூகம் என்பவற்றை மதித்த பராக்கிரமபாகு அவனுக்குச் சிங்களப் பிரதானி குடும்பத்தில் மணமுடித்து வைத்தான். அவனுடைய இரு புதல்வர்களும் அரசகுமாரனுடன் (பராக்கிரமபாகுவின் மகள் உலகுடையதேவியின் புதல்வன்) வளர்ந்து வந்ததாகவும், இவர்களில் சபுமாலின் போர்த்திறமை கண்டு பெரிதும் வியந்து அவனையே தன் யாழ்ப்பாணப் படையெடுப்புக்குத் தளபதியாக நியமிக்க முடிவு செய்ததாகவும் கூறப்படுகின்றது. மரபுரையொன்றின்படி, பராக்கிரமபாகு தன் பேரனுக்கு அரசுரிமையை உறுதிப்படுத்துவதற்காகத் தன் வளர்ப்புப் புதல்வனான சபுமால் குமாரயவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியதாகக் கூறப்படு கின்றது. ஆயின், இது உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக நம்புதற் கில்லை. இது எவ்வாறாயினும், யாழ்ப்பாண படையெடுப்பில் சபுமால் எய்திய வெற்றி அவனுக்குப் பெரும் புகழை அளித்ததுமன்றி, கோட்டையின் அரசுரிமையை யும் அவனுக்குக் கிட்டவைத்ததெனலாம். யாழ்ப்பாணத்துக்குக் கோட்டைப் படையின் முக்கிய பிரிவு செல்லுமுன், தீபகற்பத்தில் அயலிலுள்ள சில கிராமங்கள் தாக்கப்பட்டு, அங்கிருந்த கைதிகள் கோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டதாக இராஜாவலி குறிப்பிட்டுள்ளது. இதைக் கொண்டு, பகைவனது நாட்டுச் செய்திகளை அறிதற்கு ஒரு படை முன்னதாகச் சென்று திரும்பியிருக்கலாம் என ஊகிப்பர். பராக்கிரமபாகுவின் பிரதான படைப்பிரிவின் செலவு பெரும்பாலும் தரை வழியாகவே நடைபெற்றிருத்தல் வேண்டும். 'கோகில சந்தேசய'வில் கூறப்படும் விபரங்களைக கொண்டு அப்படை மன்னார் வரை கரையோரமாகவே சென்றிருத்தல் கூடுமெனக்

கொள்ளலாம். மன்னாரிலிருந்து முன்னேறிய படை தீபகற்பத்தை அடையுமுன், ஜாவகக் கோட்டையில் தங்கியிருந்த கன்னட (விஜயநகர)ப் படையினர் அதைத் தடுத்துச் சமர்புரிந்தனர். இருதரப்பினர்க்கும் கடுஞ்சண்டை நிகழ்ந்தபின் சபுமாலின் படைகள் வெற்றியெய்தி தீபகற்பத்தினுள் புகுந்தன. இதன் பின் அதிக எதிர்ப்பின்றி யாழ்ப்பாணம் (யாப்பாபட்டுண)வரை அவை முன்னேறலாயின. யாழ்ப்பாண அரசின் தலைநகர் மிகவும் தீவிரமாகக் காவல் செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டபோதும், சபுமாலின் தீரச் செயல்களாலும், அவனது தலைமையில் போராடிய கோட்டை வீரர்களாலும் இக்கடும் எதிர்ப்புப் புறங்காணப்பட்டதாக அவனது புகழ்பாடும் இலக்கியங்கள் கூறுகின்றன. குறிப்பாக, தனது குதிரையை அவன் செலுத்திப் போராடிய விதம் அவனது வெற்றியினை உறுதிப்படுத்தியதாக அவை கூறுகின்றன. ஆரியச் சக்கரவர்த்தி (கனகசூரிய சிங்கை ஆரியன்) இந்தியாவுக்கோடிவிடவே, யாழ்ப்பாண அரசு கோட்டை மன்னனது வசமாக்கப்பட்டது. யாழ்ப்பாண அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் கோட்டைக்குக் கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். யாழ்ப்பாண அரசை வெற்றிகொண்ட சபுமாலுக்கு மன்னனால் மிகுந்த மரியாதைகள் செய்யப்பட்டு பின்னர் அதன் ஆட்சியாளனாகவும் அவன் நியமிக்கப்பட்டான். சபுமால் யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து ஆட்சி நடத்தி வரலானான். 'சிறீசங்கபோதி புவனேகபாகு' என்ற பெயரைச்சூடி, செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்தை சுமார் பதினேழு ஆண்டுகள் ஆட்சிசெய்து வரலானான். இவனே நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைக் கட்டியதாகவும் கூறப்படுகிறது.

பராக்கிரமபாகுவின் நீண்டகால ஆட்சியில் நாடு பெரும்பாலும் அமைதியையே பெற்றிருந்தது. அவனது ஆட்சி முடியுந்தறுவாயில் ஜோதிய-சிடான என்ற கம்பளை அரசகுமாரன் கலகஞ்செய்தபோது, அம்புலுகல குமாரன் அங்கு படையுடன் அனுப்பப்பட்டு அக்கலகம் அடக்கப்பட்டது. நாடு பெரிதும் அமைதியுடன் விளங்கிய தால், பொருளியல், சமயம், கலை முதலாய துறைகள் வளர்ச்சியெய்தலாயின. பராக்கிரமபாகுவின் கப்பல்கள் வணிகப் பொருட்களுடன் தென்னிந்தியக்கரைக்குச் சென்றதை முன்னரே குறிப்பிட்டிருந்தோம். இக்காலத்தில் அராபியரும் இலங்கை வந்து தீவின் ஏற்றுமதி வியாபாரத்தில் பெரும்பங்கு கொள்ளலாயினர். கொழும்புத் துறைமுகத்தூடாக நடைபெற்ற வணிகத்தைக் கட்டுப்படுத்தவே கோட்டை இராசதானியாக்கப்பட்டதென்பர். பௌத்தம் இவன் காலத்தில் எய்திய வளர்ச்சி பற்றியும் இவனது சமயப்பொறை பற்றியும் பின்னர் குறிப்பிடுவோம். இலக்கியத் துறையிலேயே மிகவும் செழிப்பு வாய்ந்த காலமாகக் கோட்டைப் பராக்கிரமபாகு வின் காலம் விளங்கியது இவன் காலத்தில் வாழ்ந்த பல கவிஞர்களுக்கும் தன் ஆதரவை நல்கியதுமன்றி, பராக்கிரமபாகு தானே ஒரு நிகண்டைச் சிங்களத்தில் இயற்றியதாகவும் தெரிகின்றது. இலங்கையில் தேரவாத பௌத்தமும் சங்கமும் இவன் காலத்தில் மிகவும் நன்னிலையில் இருந்ததால் இவற்றுக்குப் பிற நாடுகளில் பெருமதிப்பு ஏற்பட்டது. 6-ம் பராக்கிரமபாகுவின் இச்சாதனைகள் அவன் புகழைப் பிறநாடுகளிலும் பரவச் செய்தன. 'இடைக்கால ஈழத்தின் தலைசிறந்த மன்னன்' என வரலாற்றறிஞர்கள் இவனைக் குறிப்பிடுவது முற்றிலும் பொருந்தும். இலங்கை முழுவதும் தனது ஆட்சியைப் பரப்பி, சிங்கள அரச மரபுக்கும் நாட்டுக்கும் உயர்வைத் தந்தவன் 6-ம் பராக்கிரமபாகு எனலாம்.

யாழ்ப்பாண அரசும் கோட்டையும்

யாழ்ப்பாண அரசைச் சபுமால் குமாரய அடிப்படுத்தியதையும், நல்லூரை இராசதானியாகக் கைக்கொண்டு 'ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு' என்ற பெயருடன் அவன் ஆட்சி செய்ததையும் அதன் பின்னர் இப்பகுதியில் யாழ்ப்பாண அரசு மீண்டும் சுதந்திரமெய்தித் தனியரசான வரலாற்றையும், 6-ம் பராக்கிரமபாகுவுக்குப் பிந்திய கோட்டை வரலாற்றையும் நோக்குவது பொருத்தமானது. 6-ம் பராக்கிரமபாகு தனக்குப்பின் அரசைப் பெறுதற்கு தன் மகள் (உலகுடையதேவி) வழிப்பேரனையே நியமித்திருந்தான். இவன் அரசைப் பெற்றபோது 2-ம் ஜயபாகு (அல்லது ஜயவீர பராக்கிரமபாகு) என்ற பெயரைச் சூடியதாக எமது ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் இவனது ஆட்சி திடீர் முடிவை எய்தியது. சபுமாலே இவனுடைய ஆட்சியை விரைவில் முடிவுக்குக் கொண்டு வரக்காரணமாகவிருந்தவன் என இராஜாவலீ கூறியபோதும், கூற்றோ என்ற போர்த்துக்கேய ஆசிரியன் இக்கால நிகழ்ச்சிகள் பற்றி பல்வேறு வகையாகக் கூறுகின்றான். இது எவ்வாறிருப்பினும், யாழ்பபாண வெற்றியாளன் என்ற முறையில் சபுமாலுக்குண்டான பெரும் புகழ் அவன் கோட்டை அரசையும், பெற உதவியிருக்கலாம். ஆனால் 6-ம் புவனேகபாகுவின் ஆட்சியின்போது, அவனுடைய பரந்த அரசின் வெவ்வேறு பகுதிகளில் கலகங்களும் சச்சரவுகளும் மிகுதியாகத் தோன்றலாயின. சிங்கள பெரளிய (சிங்களப் புரட்சி) எனப்படும் ஒரு கலகத்தை, களுகங்கைக்கும் வளவை கங்கைக்கும் இடைப்பட்ட பஸ்துன் கோறளை முதலான பகுதிகளைச்சேர்ந்த சில பிரதானிகள் நடத்தினர். இக்கலகத்தை அடக்க அனுப்பப்பட்ட அரசனது சகோதரன் அம்புலுகல குமாரய தனது ஏழுகோறளை (சத்தர கோறளை)ப் படையுடன் பஸ்துன் கோறளைக்குச் சென்று அப்பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டினான். இதனிடையே ஏழு கோறளையிலும் கலகம்மூண்டது. இக்கலகத்தையடக்க புவனேகபாகுவே நேரிற் சென்றான். அவனுடைய படையைக் கண்டு கலகத்தலைவர்கள் அஞ்சிப் பணிந்ததாகவும் புவனேகபாகு அவர்களுக்கு மன்னிப்பை வழங்கியதாகவும் அவனுடைய **டெடிகமைக** கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

6-ம் புவனேகபாகுவின் காலத்திலேயே 'உடரட்ட' என்ற மலைநாடும் தனியிராச்சியமாகப் பிரிந்துகொண்டது. செங்கடகலவை (கண்டி) நிறுவியவனாகச் சூளவம்சம் குறிப்பிடும் விக்கிரமபாகுவும் உடரட்டையில் தனியரசைத் தோற்றுவித்த சேனாசம்மத விக்கிரமபாகுவும் ஒருவனாகவே இருக்கலாம் என்பர். 6-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் இறுதியில் மலையக மக்கள் கலகஞ்செய்து தோல்வியுற்றமைபற்றி முன்னர் கவனித்துள்ளோம். அக்கலகம் அடக்கப்பட்டபின், அப்பகுதியின் பாலனத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட கம்பளை இளவரசனே பின்னர் தோன்றிய கலகத்துக்குத் தலைவனாகவிருந்தான் என உறுதி கூறமுடியாது. அதே இளவரசனாக இல்லாவிடினும், அதே மரபில் வந்தவன் என ஓர் இலக்கிய ஆதாரம் அவனைக் கொள்ள வைக்கின்றது. 'சேனாசம்மத' என்ற அடைமொழியைக்கொண்டு படையின் இசைவு பெற்று அவன் அதிகாரத்தைப்

பெற்றிருப்பான் என்பர். இந்த விக்கிரமபாகு மலையகத்தின் ஆட்சியாளனாக இருப்பதுடன் திருப்தி பெற்றிருப்பான் எனக் கொள்ள முடியாது. 'சிரிசிங்களாதீஸ்வர' 'சக்கரவர்த்தி' போன்ற பட்டங்களை இவன் சூடியமை இவனுடைய நோக்கங்களைப் புலப்படுத்தும். கோட்டை மன்னனுக்கு எதிராக முன்னர் கலகஞ்செய்த ஏழு கோறளைப் பிரதானிகள் பின்னர் இவனுக்கு விசுவாசம் தெரிவித்தமை பற்றி இவனுடைய ஒரு கல்வெட்டுக் குறிப்பிட்டுள்ளது. ஆயினும், ஏழு கோறளையைப் புவனேகபாகு மீண்டும் தனக்கு விசுவாசமாக இருக்கவைத்து அதன் பாலனத்துக்குப் பொறுப்பாகத் தன் தம்பியை அனுப்பிவைத்தான். இருப்பினும், உடரட்டை தனியரசாகவே திகழ்ந்து வரலாயிற்று. அதை அடக்குவதில் புவனேகபாகு வெற்றியெய்தவில்லை என்பது உறுதி.

யாழ்ப்பாண இராச்சியமும் கோட்டையில் ஏற்பட்ட குழப்பங்களைப் பயன்படுத்திச் சுதந்திரம் அடையலாயிற்று. 'யாழ்ப்பாண வைபவமாலை'யின் கூற்றுப்படி, பதினேழு ஆண்டுகளே யாழ்ப்பாணக் கோட்டையரசின் கீழமர்ந்தது. சபுமால் கோட்டையரசைப் பெற்றபின், யாழ்ப்பாணத்தைப் பரிபாலித்ததற்கு அனுப்பிய விஜயபாகு மக்களுக்குப் பல கொடுமைகளைப் புரிந்து வருத்தியதாகவும் இதனால் கோட்டையரசனது ஆணையிலிருந்து தம்மை விடுவிக்க அவர்கள் காத்திருந்தரெனவும் கூறப்படு கின்றது. இதனிடையே முன்னர் இந்தியாவுக்கோடிய கனகசூரிய சிங்கையாரியன் அங்கு தலயாத்திரை செய்து, தன் பிள்ளைகளைத் திருக்கோவிலில் படிக்க வைத்தபின், தென்னிந்தியச் சிற்றரசர்களின் படைத்துணைபெற்று 1467ல் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்து வந்தான். நல்லூரில் ஆண்ட சிங்கள ஆட்சியாளன் எதிர்பார்த்திருக்காத வகையில் இப்படையெழுச்சி நடைபெற்ற போதும், அவன் உடனே தன் படைகளைத் திரட்டிப் போர்தொடுத்தான். இப்போரில் கனகசூரியன் வெற்றிபெற்றதால், யாழ்ப்பாண அரசை அவன் மீட்டு மேலும் சில ஆண்டுகள் நல்லூரிலிருந்தே ஆட்சி நடத்தலானான். பின்னர் தன் மூத்த புதல்வனான பரராஜசேகரனிடம் ஆட்சியை ஒப்படைத்து அரசியல் வாழ்விலிருந்து ஓய்வுபெற்றுக் கொண்டான். இப் பரராஜசேகரனே (1478 - 1519) நல்லூரில் பல கோவில்களை எடுப்பித்தான் எனப் போற்றப்படுபவன். கைலாசநாதர் கோவில், சட்டநாதர் கோவில், வீரமாகாளி அம்மன் கோவில், வெயிலுகந்தப் பிள்ளையார் கோவில் என்பவற்றை இவனே நிறுவித் தன் சமயப் பற்றுக்குச் சான்றுகளாக விட்டுச் சென்றான். 'யமுனாரி' என இப்போது வழங்கும் யமுனா எரியையும் இவனே அமைப்பித்தான் என்பர். தன்காலத்தில் ஒரு தமிழ்ச்சங்கத்தை நிறுவி, தமிழ்மொழியில் புலமைபெற்ற வித்துவான்களையும் புலவர்களையும் சேரவைத்து அவர்களின் முயற்சிகளுக்கு ஊக்கம் அளித்துச் சன்மானங்களும் பரிசில்களும் வழங்கினான். இவ்வேந்தனுடைய மைத்துனனான அரசகேசரி என்பான், காளிதாசருடைய இரகுவம்சத்தைத் தமிழிற் பாடினான். 'பரராஜசேகரன் உலா' என்ற நூலும் இதேகாலத்திலேயே ஆக்கப்பட்டிருத்தல் கூடும். இவ்வாறு, சிங்கைப் பரராஜசேகரன் காலத்தில் சைவமும், தமிழும் நன்னிலையெய்தியிருந்தமை புலப்படும்.

கோட்டையரசின் மன்னனாக விளங்கிய 6-ம் புவனேகபாகுவின் ஆட்சி ஏழாண்டுகளில் (1476ல்) முடிவெய்தவே, அவனுடைய மகனான (வளர்ப்புமகன்?) ஒருவன் (ஏழாம்) பண்டித பராக்கிரமபாகு என்ற பெயருடன் பட்டத்துக்கு வந்தான். பின்னர் அம்புலுகலகுமாரன் என்ற இளவரசன் (சபுமாலின் தம்பி) புதிய அரசனை எதிர்த்துப் படையெடுத்துக் கோட்டைக்குச் சென்றான். அரசனையெளிதிற் புறங்கண்டு அவனைக் கொன்றபின், ஆட்சியை ஏற்று (எட்டாம்) வீர பராக்கிரமபாகு என்ற பெயரைச் சூடிக்கொண்டான். இவனுடைய ஆட்சி 1508 வரை நீடிக்கலாயிற்று (1454 - 1503). இவன் அரசனாக விளங்கிய காலத்திலேயே போர்த்துக்கேயர் முதன் முதல் 1505ல் இலங்கைக்கு வரலாயினர். எனவே, போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது, இலங்கையில் தனியே கோட்டையரசு மட்டுமன்றி, யாழ்ப்பாண அரசும், கண்டி அரசும் சுயாதீனமுடைய தனியரசுகளாகத் திகழ்ந்தன.

அத்தியாயம் : பதின்நான்கு

இலங்கையின் கலை மற்றும் இலக்கிய வளர்ச்சிப் பாரம்பரியம்

(சிங்களப் பௌத்தப் பண்பாடு)

இலங்கையின் கலை வரலாறு பற்றிய பொது இயல்புகள்

உலக நாடுகளின் கலை வரலாற்றை எடுத்துக்கொண்டால் மிகவும் தனித்துவமான, மிக நீண்ட காலப்பாரம்பரிய பின்னணியில், தொடர்ச்சியான வகையில் கலைகள் வளர்த்தெடுக்கப்பட்ட பிரதேசங்களுள் இலங்கையும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. **Petro locky** என்ற வரலாற்றாசிரியர் குறிப்பிட்டதன் பிரகாரம் இலங்கைத் தீவானது பண்டுதொட்டு இடையாறாத மக்கள் வசிப்பிடமாக இருந்து வந்ததன் பின்னணியில் ஒரு தொடர்ச்சியான இலக்கிய பாரம்பரிய சூழலைக் காணமுடிகின்றது எனக் குறிப்பிட்டிருப்பது எமது கலை வரலாற்றுப் பாரம்பரியத்தை அறிவதற்கு ஏற்ற மிகச் சாதகமான ஒரு சூழ்நிலை நிலவுவதை எடுத்துக்காட்டுனின்றது. இலங்கையின் அமைவிடமானது இந்து சமுத்திரத்தின் மத்தியிலே இந்திய உபகண்டத்தின் தென்பகுதியில் **ஒரு மிதிகல** போன்று அமைந்திருப்பதனாலும் சமுத்திரவியல் பண்பாட்டு முகப்புக்களை அதிகளவு கொண்டிருப்பதாலும் இத்தீவு தொடர்ச்சியானதும் இடையீடற்ற பண்பாட்டு வளர்ச்சிக்குரிய வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

மேற்கு ஐரோப்பாவில் இருந்து வருகின்ற வாணிப மார்க்கங்களும் தென்கிழக்காசியாவில் இருந்து வருகின்ற வர்த்தக மார்க்கங்களும் இந்திய உபகண்டத்தை இணைக்கின்ற உபமார்க்கங்களும் சந்திக்கின்ற ஓர் இடத்திலே **இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப்படும் இலங்கையில** கலை பண்பாட்டு வளர்ச்சியானது பல்லின, பலமொழி, பலமதபண்பாட்டு கூறுகளுடன் இணைந்த ஒரு சர்வதேச வியாபகம் வாய்ந்த பண்பாட்டுத் தோற்றப்பாடாக வளர்வதற்குரிய சூழலைப் பெற்றுக்கொண்டது. உரோமானியர்கள், கிரேக்கர்கள், மாசிடோனியர்கள், தென் கிழக்காசிய வணிகர்கள், வட இந்தியர்கள், தக்கணத்து மக்கள் மற்றும் தென்னிந்திய வணிகர் குழவினர் ஆகியோர் காலத்துக்குக்காலம் இலங்கைத் தீவின்மீது நாட்டங்கொண்டு வருகை தந்து கடல் முகப்புத்தளங்களின் ஊடாகப் பண்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையை காணுகின்றோம். உரோமானிய வர்த்தக கிடங்குகள், அராபிய வர்த்தகக் கிடங்கு, மாசிடோனிய வாத்தக சங்கங்கள், **யாவாநாயர்களுடைய** வர்த்தக மையங்கள் போன்றன இலங்கையினுடைய கரையோர மையங்களில் காணப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் அண்மைகாகாலங்களில் கிடைத்துள்ளன.

இதன் பின்னணியில் மகாவம்சத்தில் குறிப்பிட்டிருந்ததன் பிரகாரம் இலங்கைக்கு பௌத்தம் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் கௌதமபுத்தர் ஆகாயமார்க்கமாக இலங்கைத் தீவிற்கு **மும்முறை விஜயம செய்தார** எனவும் அதில் 1வது விஜயம் தென்னிலங்கையில் உள்ள மகியங்கணைக்கு உரியதாகவும், 2வது விஜயம் யாழ்குடாநாட்டில் உள்ள **நாகதீபத்திற்குரியதாகவும,** 3வது விஜயம் மேற்கிலங்கையிலுள்ள களனி கங்கை முகத்துவாரத்தில் காணப்பட்ட **கல்யாணி** நகருக்கு உரியதாகவும் குறிப்பிடப்பட்டமையைக் காண்கின்றோம். அந்த வகையில் இந்த மூன்று களங்களுமே பிரதான கடல் முகப்பு தளங்களாக உள்நாட்டு வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகளை பரிமாற்றம் செய்த தளங்களாக விளங்கியிருந்தன என்பதை எவருமே மறுக்கமுடியாது.

தென்னிலங்கையில் காணப்பட்ட மகியங்கணைக்கும் யாவா தீவிற்கும் இடையே மிக நெருங்கிய வாணிப அடிப்படையிலான கலை பண்பாட்டு உறவுகள் ஏற்பட்டு இருந்ததுக்கான சான்றுகள் எஸ்.பரணவிதான என்போர் பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது

இதே போன்று நாகதீபம் அல்லது நாகதுவீபம் என அழைக்கப்பட்ட மையம் ஆனது நாகர் என்ற அரச குலத்தவர்களால் காலங்காலமாக பரிபாலிக்கப்பட்டு வந்தது என்பதையும் நாகர் பண்பாடு கடல் முகப்பு தளத்தின் ஊடாக உள்ளும் வெளியும் எடுத்துச்செல்லப்பட்ட வகையை தொல்லியல் ஆய்வுகளின் ஊடாகவும் அறிஞர்கள் எடுத்துக்காட்டுவது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று களனி நதியின் முகத்துவாரத்தில் காணப்படுகின்ற கல்யாணியின் இன்னொருவகையான நாகவம்சத்தினர் ஆட்சி நடைபெற்றதற்கான சான்றினை மகாவம்சம் போன்ற இலக்கியங்களில் இருந்து உறுதிப்படுத்த முடிகின்றது. இலங்கையில் தொடக்ககால சமுத்திரவியல் முகப்புத் தளங்கள் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்த முறையினை அவதானிக்கமுடிகின்றது. குறிப்பாக உள்நாட்டு முறையில் வாணிப அடிப்படையிலலோ or சமய அடிப்படையிலோ or பண்பாட்டு அடிப்படையிலோ மக்கள் ஒன்று கூடும் மையங்கள் உருவாவதற்கு முன்னர் கடற்கரையோரங்கள் பிராந்தியங்களில் 1வது வர்த்தக மையங்களும் பண்பாட்டுத் தொடர்புகள், சமயம் சார்ந்த கட்டிடங்கள், கோயில்களும், வர்த்தகக் கிடங்கக்களும் தோற்றம் பெற்று விட்டமையை அவதானிக்கமுடிகின்றது. புத்தளத்தில் உள்ள பொன்பரிப்பு உன்று அழைக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான பரப்பளவில் அமைந்த பெருங் கற்கால மக்களுடைய ஈமக்காடும் மட்டக்களப்பில் **கதிரவெளி** என்ற மையத்தில் காணப்படுகின்ற **குரங்குப்படை வீடுகள** என்று அழைக்கப்படுகின்ற பெருங்கற்காலப்பண்பாட்டு மக்களுக்குரிய **கற்சமாதிகள்** திசமகராமையில் இருந்து அகழ்ந்தப்படுக்கப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களுடைய வாழ்விடத்தொகுதிகளும் எமக்கு உணர்த்துகின்ற ஓர் உண்மையென்னவெனில் கடல்முகப்புத்தளங்களே மிகப்பெரும் பண்பாட்டு மையங்களாக விளங்கி இருந்தது என்பதாகும். இலங்கையின் கலை மரபு பற்றி ஆராயப்புகும்பொழுது இலங்கையின்

அமைவிடமானது அங்கு பிரதான செல்வாக்குச் செலுத்தியதை எவரும் உணரலாம். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் ஆட்சிசெய்த பிற்கால அரச வம்சங்கள் வளர்த்தெடுத்த நாகர்களது பண்பாட்டு முறைகள் யாவும் நீரோடு தொடர்பான வாழ்வுமுறையை இணைத் திருந்தமையை இக்கடல் முகப்புத் தளங்களில் காணலாம்.

வம்சங்களின்விருதுப்பெயர்களே அந்நீர்பண்பாட்டினை எமக்கு உணர்த்தியிருக் கின்றமையைக் காணலாம். **துவிசமுத்திராதிபதிகள** என அழைக்கப்பட்டவர்கள் சதவாகனர்களாகவும் **துவாரசமுத்திரத்தை** ஆண்டு வந்தவர்கள் ஹொய்சாளர்கள் எனவும் பராக்கிரம சமுத்திரத்தை அமைத்தவன் பராக்கிரமபாகு எனவும், **தேடிய அந்நாட்டின் செல்வம் இதுதான்** என காலவாவியை கட்டியவன் தாதுசேனன் எனவும் நீர்ப்பண்பாட்டு வரன்முறை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கைப் பண்பாட்டின் அடிப்படையாக நீரியல் பண்பாட்டை அதாவது சமுத்திரவியல் பண்பாட்டை அடித்தளமாக கொண்டிருந்ததனை மறந்திடலாகாது. இற்றை வரைக்கும் பௌத்த ஸ்தூபி வழிபாட்டு முறையிலும் சரி, இந்துக்கோவில் வழிபாட்டு மரபுகளிலும் சரி **Water cutting Ceremoney** இடம்பெற்றுக் கொண்டிருப்பது இந்த நீரியல் பண்பாட்டு வளர்ச்சியை பொதுமையான அடிப்படையில் சுட்டுவதாக அமைகின்றது.

தென்னாசிய வாழ்க்கை முறையானது நீர்பாசனவியல் தொழில் நுட்பவியலுடன் மிகநெருங்கிய தொடர்பினை கொண்டிருந்ததன் அடிப்படையில் சமுதாயத்தில் கலை பற்றிய சிந்தனைகளம் அவற்றின் தோற்றப்பாடும் நீருடன் சம்பந்தப் பட்டவையாக அவற்றின் பகைப் புலத்தினைக் கொண்டிருந்தமையைக் காணலாம். இப்பிராந்தியத்தில் தோற்றம்பெற்ற இந்து, சமண, ஆஜிவீக சமயங்கள் என்ற 3 நிறுவனங்களைத் தாங்கிய ஒரு சிறப்பான வாழ்வியல் தளத்தின் பின்னணியில் கலை வளர்ச்சிக்க அடித்தளம் இட்டுக் கொடுத்தமையைக் காணலாம். இலங்கைத் தீவில் கலை வளர்ச்சியை எடுத்தக் கொண்டால் அத்தகைய ஒரு சிறப்பியல்பை இங்கு காணமுடியாத ஒரு முக்கிய விடயமாகும். தீபகற்பம் இற்தியாவை மிகவும் அண்மித்த நிலையில் இலங்கையின் கலைவளர்ச்சிக்கான ஊக்குவிப்புக்கள் பரஸ்பரம் ஒன்றிலிருந்து மற்றொன்று பெற்றிந்தமைக்கான சான்றுகளை நாம் பல்வேறு அடிப்படைகளில் காணலாம். இல்ங்கைத்தீவினது ஆதி வரலாற்றை கூறிக்செல்கின்ற இலக்கியங்களான மகாவம்சம், திபவம்சம், மகாவம்ச பீகா, வம்சத்தபகாசினி போன்றவையும் இடைக்காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களான **சலலினிகினிசந்தேசய, குமார சந்தேசய, கோகில சந்தேசய** போன்ற இலக்கியங்களும் தமிழர் தோற்றுவித்த இடைக்கால இலக்கியங்களும் இலங்கைத்தீவில் கட்டிட சிற்ப ஓவியக்கலைகள் வளர்ச்சி பெற்றுச் சென்றிருந்ததற்கான சமூக பொருளாதார தடையங்களைத் தருவதனைக் காண்கின்றோம்.

இவற்றை விட கட்டிடம் மற்றும் வாஸ்து சாஸ்திரங்கள் தொடர்பாக பாளியிலும், சிங்களத்திலும் தோற்றம்பெற்ற இலக்கியங்களை ஈழத்து அறிஞர்கள் ஆய்வு

செய்து வெளியிட்டனர். இலங்கைத்தீவிற்கு எனத் **தனித்துவமான கலை மரபு** ஒன்று மிகநெடுங்காலமாக பேணப்பட்டிருந்ததற்கான சான்றுகளாக அவை விளங்குகின்றன. Sinhala Manastic Architecture என்ற நூலை எழுதிய கலாநிதி சேனக்க பண்டாரநாயக்கா என்பவர் சிங்கள மொழியில் எழுதப்பட்ட silpa நூல் ஒன்றை அண்மைக்காலங்களில் வெளியிட்டுள்ளார்.

தென்னிந்தியாவைப் போலவே இலங்கையிலும் வாஸ்து சாஸ்திரங்கள், சில்ப நூல்கள் தோற்றம் பெற்றதன் பின்னணியில் இத்தீவிற்கான தனித்துவமான கலை மரபு ஒன்று வரலாற்று தொடக்ககாலத்தில் இருந்து பேணப்பட்டது. என்பதில் சந்தேகம் எழமுடியாது. கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி, கொட்றிங்டன், வின்சன் ஸ்மித், கொன்றிச் ஸிம்மர் ஆகியோர் இலங்கையில் தோற்றம் பெற்ற சில்ப நூல் பற்றி விளக்கி இருக்கின்றமையைக் காணலாம்.

இலங்கையில் கலை வரலாற்று வளர்ச்சியில் வாணிப நடவடிக்கைகள் முக்கிய பங்கு வகித்திருந்தன என்பதில் தெளிவான ஒரு பார்வை உண்டு. இலங்கைக்கு பௌத்தமதம் அறிமுகமாவதற்கு முன்னர் இத்தீவில் வாழ்ந்திருந்த மக்கள் உருவாக்கி வளர்த்தெடுக்கக்கூடிய கலை மரபுகள் பெருமளவிற்கு கடற்கரையோர பிரதேசங்களை தழுவி அமைந்ததைக் காணலாம். பாளி இலக்கியங்களிலும், கிடைத்த காலத்தால் முற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களிலும் கடற்கரையோர பிராந்தியங்களின் இடப்பெயர்கள், அங்கு வாழ்ந்த சமூக குழுவின் பெயர்கள் வாழ்வாதாரத்திற்காக அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி பற்றிய தகவல்கள் நிறையவே கிடைக்கின்றன.

இலங்கையில் காலத்தால் முற்பட்ட ஆதித் துறைமுகங்களாக விளக்கியவை அவ்வாறான உள்வரவு வெளிப்போக்கு வாணிப நடவடிக்கைகளை நிரைப்படுத்திய மையங்களாக அமைந்தமையைக் காணலாம். இலங்கையின் மேற்குப் புறத்தில் **மாதோட்டமும** கிழக்குப்புறத்தில் திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் அண்மையில் அமைந்துள்ள **சம்மாந்துறையும** இவ்வாறான கலைவளர்ச்சிக்கு உதவிய வாணிப நடவடிக்கைகளினை மையப்படுத்திய துறைமுகங்களாக அமைந்து கொண்டமையினைக் காணலாம். கிழக்கிலங்கைத் துறைமுகத்தில் அமைந்துள்ள துறைமுகங்கள் வங்காள விரிகுடாவில் உள்ள தாமிரலிப்தி துறைமுகத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட வாணிப நடவடிக்கைகளை மிகத் தொடக்க காலத்தில் உள்வாங்கியவைகளாக அமைந்திருந்த அதேவேளையில் யாழ்குடாநாட்டில் காலத்தால் முற்பட்ட துறைமுகங்களாக விளங்கியவை தென்னிந்திய கிழக்கு கரையோரதுறைமுகங்களுடன் மிக நீண்டகால வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்தி கொண்டிருந்தமைக்கான சான்றுகளை சிலப்பதிகாரம் மணிமேகலை காலத்திற்கும் **முற்பட்ட பிராமிக்வெட்டுக்களில** இருந்து உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது. அமராவதி, நாகார்ச்சுன கொண்டா ஆகிய மையங்களில் இருந்து யாழ்ப்பாணக்குடாநாட்டின் கிழக்குகரையோர துறைமுக வாணிப நடவடிக்கை ஊடாக கலை செல்வாக்கினை நிறையவே பெற்றிருந்தது என்பதற்கு தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன.

பௌத்த மதத்தின் வருகைக்குப் பின்னர் இலங்கையின் கலைவளர்ச்சியில் இன்னொரு புதிய உத்வேகத்தை இந்நாடு பெற்றுக்கொண்டது. பௌத்தமதம் உத்தியோகபூர்வமாக அறிமுகமாவதற்கு முன்னர் இங்கு காணப்பட்டிருந்த பிராமணீயம் சார்ந்த or பிராமணீயம் சாராத இயற்கை வழிபாட்டில் நின்று மாற்றம் அடைந்து, ஓர் அரசவம்சத்தின் செல்வாக்கின்கீழ் கலைகள் வளர்த்தெடுக்கப்படுகின்ற, **ஒரு நிறுவனமையப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில** புதிய கலை வடிவங்கள் தோற்றுவிக்கப்படுவதற்கான சம்பவங்கள் நிகழ்ந்ததை பௌத்தமதத்தின் அறிமுகத்துடன் காணமுடிந்தது. பௌத்த சங்கத்தின் **விகாரை, பிரிவேனா** கல்வித்துறையூடாக சமுகத்தின் அடித்தட்டு நிலையில் வாழ்ந்த மக்களது அடிப்படைகளில் இருந்து ஒரு புதிய கலை உருவாக்கற் சிந்தனையானது புதிய சமூக பொருளாதார விழுமியங்களுக்கு ஏற்ப வளர்த்தெடுக்கப்பட்டமைக் காணலாம்.

ஆனாலும் இங்கு பௌத்தமதம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் இந்திய பௌத்த நிறுவனங்களால் வளர்த்தெடுக்கப்பட்ட கலைகள் பெருமளவிற்கு வணிப வழிகளினூடாக அவற்றினை மைப்படுத்தி பரந்துகொண்டு அமைந்ததைக் காணலாம். உள்நாட்டு நீர் வழிகள் வந்து சந்தித்த மையம் அல்லது உள்ளாட்டு தரை வழிகள் சந்தித்த மையம் அல்லது புனித பிரதேசம் என மையப்படுத்தபட்ட இடம் தென்னாசியாவில் கலைமரபின் கேந்திரமையமாக அமைந்து கொண்டன. ஆனால் இலங்கைத்தீவிற்கு பௌத்தமதம் கி.மு. 3ம் நூற்றாண்டில் அறிமுகமாவ தற்கு வாணிப மார்க்கமே அடிப்படையாக இருந்ததெனினும் உள்நாட்டு நீர்ப்பாசனவியல் மற்றும் முக்கிய பயிர்ச்செய்கையுடன் தொடர்புபட்ட நடவடிக்கை மையங்களே **கலாச்சார கேந்திரநிலையங்களாக** மாற்றம் பெற்றுக்கொண்டன. அதாவது இலங்கையில் பௌத்தமதமானது நீர்ப்பாசன நிறுவனங்களையும், அத்தோடு தொடர்புபட்ட பயிர்ச்செய்கை பொருளாதார நிறுவனங்களையும் **ஜீவவாழ்வாதாரமாகக** கொண்டு அது தனது இருப்பினை நிலைநிறுத்திக் கொண்டது. இத்தகைய மையத்தில் வாணிப மார்க்கம் முக்கியம் பெறுவதற்கு பதிலாக பயிர்செய்கை பொருளாதாரத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்களே கலை வளர்ச்சிக்குரிய மையமாக மாற்றம் பெற்றுக்கொண்டமையைக் காணலாம். **ஸ்தூபி, தாமரைக்குளம், வயல், இடுகாடு** ஆகியன இலங்கையின் புராதன காலக் குடியிருப்புக்களுகளுக்குரிய மிகப்பிரதான உறுப்புக்களாக அமைந்து கொண்டமையைக் காணலாம். இலங்கையின் கலைவளர்ச்சியின் ஊக்கமும் வளர்ச்சியும் ஒரு தனித்துவமான போக்கில் காணப்பட்டதற்கு மேற்கூறப்பட்டவை அடிப்படைக் காரணமாக அமைந்தன. இப்பின்னணியில் பெருங்கற்காலப் பண்பாட்டின் வாழ்வு **பௌத்தத்துடன் கலந்து** ஒரு புதிய கலை மரபிற்குரிய பரிணாமத்தை எட்டுவதற்கு உதவியிருந்தமையை காணலாம். அக்கலைப் பரிணாமத் தொடர்ச்சியாக புராதன இலங்கையின் கலை மரபுகளின் வளர்ச்சியில் இந்து சமுத்திர வாணிப மார்க்கங்களினால் வழங்கப்பட்ட செல்வாக்கினையும் காண்கின்றோம். இந்து சமுத்திரத்தின் அமைவிடமானது ஆசியாவின் தனித்துவமான கலைமரபுகள் தோற்றம் பெறுவதற்கு அடிப்படையாக

அமைந்திருந்ததோடு இந்து சமுத்திரத்தினை நடுவண்ணாகக் கொண்ட பதினெண் கரையோர நாடுகளும் தனித்துவமான கலைகளை வளர்த்தெடுத்து செல்ல அடிப்படையாய் அமைந்தது. அந்த வகையில் இலங்கையையும் அதனை மையமாகக்கொண்ட இந்து சமுத்திர நாடுகளும் **பருவகாற்றுக் காலநிலையின்** வழிவந்த ஒரு கலைவாழ்வியலுக்கு அப்பால், இந்து சமுத்திரத்தில் வாணிப வலைப்பின்னலால் பின்னப்பட்ட வாணிப மார்க்கங்களுடன் மிகநெருங்கிய வகையில் பிணைக்கப்பட்டதன் அடிப்படையில் புராதன இலங்கையில் கலைகள் வளர்த்தெடுக்கப்பட்டன என்பதே உண்மையாகும்.

அனுராதபுர காலப் பண்பாடு

சமய, இலக்கிய, கலை வளர்ச்சிகள்

'அனுராதபுர காலத்தின் அரசியல், பொருளியல் நிலைமைகள் பெருமளவிற்கு மக்கள் அமைதியையும், முன்னேற்றத்தையும் அனுபவிக்க உதவின. இத்தகைய நிலைமைகளையுடைய அனுராதபுர காலத்தில், மக்களின் அகவாழ்வை மலரவைக்கும் சமயம், கலை, என்பன பெருவளர்ச்சியடைந்ததில் வியப்பில்லை. இலங்கையின் கலை வளர்ச்சியை - குறிப்பாகப் பண்டைய காலத்து வளர்ச்சியை நோக்குவோர்க்கு, அவ்வளர்ச்சிகள் **தேரவாத பௌத்த** சமயத்துடன் **மிக நெருங்கிய தொடர்பைக்** கொண்டிருந்தமை புலனாகும். அனுராதபுர காலத்தில் கட்டிடக்கலை, சிற்பக்கலைகள், ஓவியம் சிறந்திருந்தனவென்றால், அதனால் அக்காலத்தில் கைதேர்ந்த கட்டிடச் சிற்பிகள், ஓவியர்கள் வாழ்ந்தனர் என்பது மட்டும் புலனாகின்றது என்பதில்லை. அழகியற் கலைகளை அனுபவிக்கவும் ஊக்குவிக்கவும் வல்ல ஆதரவாளர்கள், காப்பாளர்கள் இருந்தனர் என்பதும், சமய, கலைச் சாதனைகளை நிகழ்த்துவதில் ஈடுபடக்கூடிய அரசியல் அமைதியும் பொருளியற் செழிப்பும் நாட்டில் நிலவின என்பதும் எமக்குப் புலனாகின்றது. எனவே **பௌத்தக் கலைவளர்ச்சியைப் பொறுத்தவரையில** அனுராதபுர காலத்தை **'புகழ்பூத்த ஒரு காலப்பகுதி'** யாகக் கொள்ளவேண்டும்.'

சமய விருத்திகள்

பௌத்தம் இந்நாட்டுக்குப் பரவியமை எத்துணை முக்கிய நிகழ்ச்சியென்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளமையின் அடிப்படையில் இலக்கிய வளர்ச்சியும், கலை வளர்ச்சியும் உண்மையில் பௌத்தத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்பதை நாம் உணர்தல்வேண்டும். பௌத்தம் இலங்கையில் எய்திய வளர்ச்சியின் அம்சமாகவே இவற்றை நாம் நோக்கவேண்டும். பௌத்த பிக்குகளால், பௌத்த மத விடயங்கள் பற்றி எழுதப்பட்டனவாகவே அனுராதபுரகால இலக்கியங்கள் இருந்தன. கட்டிட, சிற்பக்கலைகளின் வளர்ச்சியின் பௌத்தமதத் தொடர்புடைய தாகவே பெரும்பாலும் அமைந்தமை கவனிக்கத்தக்கது.

இலங்கையில் அனுராதபுர காலத்தில் ஆட்சி செய்த மன்னர்கள் பெரும்பாலும் பௌத்தர்களாகவேயிருந்தனர். தமிழர் இடையிடையே ஆட்சியைப் பெற்றபோதும்,

பௌத்த மத வளர்ச்சிக்கு இடையூறு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. குறிப்பாக, தாதுசேனனுக்கு முன் ஆட்சிசெய்த **தமிழர் பௌத்தர்களாகவேயிருந்திருக்க வேண்டும** என்பது, அவர்கள் அம்மத வளர்ச்சிக்காகச் செய்த நன்கொடைகளில் இருந்து புலனாகின்றது. மன்னர்கள் செய்த சமயப்பணிகளையே காலவேடுகளும், கல்வெட்டுக்களும் மிகுதியாகக் கூறுகின்றன. குருமார்களுக்கான அத்தியாவசிய மான **நான்கு** தேவைகளான **குறைவிலாது வழங்குதல், வருவாய் தரும் கிராமங்களை விகாரைகளுக்கு மானியமாக அளித்தல், பலவகைச் சமயக் கட்டிடங்களை அவற்றுக்கு நிறுவுதல், பழைய கட்டிடங்களைப் புதுக்கி மெருகூட்டுதல்** போன்ற பணிகளை அக்கால மன்னர்கள் வெகுசிரத்தை யுடன் ஆற்றினர். சங்கத்தினரிடையே தூய்மையையும் ஒழுக்கத்தையும் பேணுவதற்காக, மன்னர்கள் இடையிடையே கூடா ஒழுக்கமுடையோரைச் சங்கத்தினின்றும் நீக்கியுள்ளனர். சங்கத்தில் பிளவுகள் தோன்றியபோது பிளவுகளை அகற்றவும், பௌத்தக்கோட்பாடுகள் பற்றிய கருத்து வேறுபாடுகள் எழும்போது உண்மைக் கோட்பாடுகள் எவையென்பதைத் தீர்மானிக்கவும் அவர்கள் முயன்றுள்ளனர். இவ்வாறு அனுராதபுரகால மன்னர்கள் பௌத்தத்தைத் தழுவியாதரித்து, அதன் வளர்ச்சியிற் பெரும்பங்கு கொண்டமையினாலேயே பௌத்தம் மிகவும் சிறப்பெய்தி வளரலாயிற்று.

சங்கத்திற் பிளவுகள்

மகாயான பௌத்தத்தின் வளர்ச்சி

மகாசேனன் காலம் வரைக்குமான முந்திய அனுராதபுர கால முடிவில், **மகாவிகாரை, அபயகிரிவிகாரை, ஜெதவனாராம** என்ற முப்பெரும் விகாரைகள் தலைநகரில் உன்னதநிலையில் இருந்தன. மகிந்தரால் இலங்கையிற் புகுத்தப்பட்ட **தேரவாத பௌத்தக் கோட்பாடுகளைச** சிறிதும் மாற்றமின்றிப் பேணும் ஒரு போக்கு மகாவிகாரையினடையதாகவிருந்தது. அபயகிரிப் பிரிவினர், தொடக்கத்திலிருந்து கொள்கை வேறுபாடுகளை அதிகம் கொண்டிருக்காவிடினும் காலப் போக்கில் இந்தியாவில் மகாயான பௌத்தம் வளர்ச்சியெய்திய காலங்களில் அதன் செல்வாக்கால், அப்பிரிவுக்குரிய கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுவாராயினர். **மகாவிகாரையைப் போலவே, இவ்விகாரையும் புறம்பான விளக்க நூல்களையும், சமயநூல்களில் வேறான பாடபேதங்களுள்ள பிரதிகளையும் கொண்டிருந்தது.** புதுமைக் கருத்துக்களை வரவேற்பவர்களாக அவர்கள் இருந்தமையினாலேயே, மகாயானத்தின் ஆதரவாளர்களாகவும் மாறினர். மகாவிகாரையின் எல்லைக்குள்ளாக மகாசேனனால் நிறுவப்பட்ட ஜெதவன விகாரை, சாகாலியப் பிரிவைச்சேர்ந்த ஒரு குருவுக்கே கொடுக்கப்பட்டதென அறிந்துள்ளோம். இப்புதிய விகாரை மகாவிகாரையின் கட்டுப்பாட்டையேற்காது, தனியாக இயங்கிவரலாயிற்று. இவ்வாறு அனுராதபுரத்திலிருந்த **முப்பெரும் விகாரைகளும** மூன்று பௌத்தப் பிரிவுகளுக்குரியனவாக, மகாபராக்கிரமபாகு காலம் (12ம் நூற்.) வரை தனித்தியங்கி வரலாயின.

பிந்திய அனுராதபுர காலத்திலும், இடையிடையே மகாயானத்தின் செல்வாக்கு இலங்கையிற் பரவலாயிற்று. **சிலாகாலனது** ஆட்சியின்போது (6ம் நூற்.)

இந்தியா சென்ற பூர்ண என்ற வணிகன் அங்கிருந்து **தர்மதாது** என்ற மகாயான நூலைக் கொணர்ந்தமை பற்றியும் முன்னர் குறிப்பிட்டிருந்தோம். இந்நூலானது, வழிபாட்டுக்குரிய ஒன்றாக மகாயானப் பிரிவினரால் மதிக்கப்பட்டதெனத் தெரிகின்றது. இந்நூலை வெகு மரியாதையுடன் வரவேற்ற **சிலாகாலன**, ஆண்டுதோறும் அதற்கு விழாவெடுத்து, **ஜெதவன விகாரைக்குக** கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்தான். அதே நூற்றாண்டில், **1ம் அக்கிரபோதியின** காலத்திலும் (575 - 608), மகாயான பௌத்தம் பரவியிருந்ததைக் கண்டு, மகாவிகாரையின் சார்பாகச் சிறந்த இந்திய அறிஞரான **ஜோதிபால** தேரர், வைதுல்ய வாதிகளைப் பகிரங்க விவாதத்துக்கு அழைத்துத் தோல்வி காண வைத்தார். **தாடாபபூதி** என்ற இளவரசனே, மகாயானர்களின் கட்சியை ஆதரித்து உதவிசெய்தான் என்பர். இருப்பினும் மன்னன் மகாவிகாரையை ஆதரித்தமையினால், அவ்விகாரையே இறுதியில் வெற்றி கண்டது. **சிலாமேகவண்ணன** (623 - 632) ஆட்சி செய்தபோது, அபயகிரி விகாரையில் ஒழுக்கங் குறைந்தவர்களைத் தண்டித்து நாடு கடத்தியபின், சங்கத்தில் இருந்த பிரிவினையை அகற்ற அவன் ஒரு முயற்சியை மேற்கொண்டும் அது பயனற்றதாயிற்று. மகாவிகாரைப் பிக்குகளே இவனது முயற்சிக்குத் தடையாகவிருந்தனர். இந்தியாவைச் சேர்ந்த புகழ்பெற்ற மகாயான அறிஞர்கள் சிலர் இக்காலப்பகுதியில் இலங்கை வந்து, அபயகிரி விகாரையில் மகாயான பௌத்தப் பிரிவுக்கு ஊக்கமளித்தனர். அவ்வாறு வருகை தந்த அறிஞர்களில் காஷ்மீர் அரச குடும்பத்தைச் சேர்ந்த **குணவர்மன**, சீனாவுக்குப் பின்னர் சென்ற வஜ்ரபோதி என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். **சாகாலியப** பிரிவுக்குரிய அறிஞர்கள் சிலரும் **'விநய'** பற்றி நூல்கள் எழுதினர். **வாஜிரியவாதப் பிரிவு** என்ற புதுப்பிரிவொன்று 9ம் நூற்றாண்டில் இலங்கையிற் பரவியதாகத் தெரிகின்றது. **1ம் சேனன** என்ற மன்னனே இப்பிரிவை ஆதரித்ததாகவும் கூறப்படுகின்றது. **'பங்ககூளிகர்'** என்ற ஒரு புதுப்பிரிவும் 9ம் நூற்றாண்டிலேயே அபயகிரி விகாரையிலிருந்து பிரிந்து கொண்டது. **வெலிகமையிலும், புதுருவெகலையிலும் உள்ள மகாயான உருவச்சிலைகள், நாகரி வரிவடிவத்தில் உள்ள இதே காலக் கல்வெட்டுக்களும் அனுராதபுர காலத்தில் மகாயானம் முதலான பிற பௌத்தப்பிரிவுகள், இலங்கையிற் பரவியிருந்ததை மேலும் உறதிப்படுத்துவனவாகவுள்ளன.**

சீன யாத்திரீகர்களும் இலங்கையும்

கி.பி.5ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியா வுக்கும் இலங்கைக்கும் வந்த **பாஹியன**, 7ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் பல தலங்களுக்கு வருகை தந்த **ஹுவான் சுவாங** ஆகிய இரு சீன யாத்திரீகர்களும் இலங்கையிற் பௌத்தத்தின் நிலை பற்றிய சில முக்கிய விவரங்களைத் தமது குறிப்புக்களிற் சேர்த்துள்ளனர். இலங்கை வந்த பாஹியன் அனுராதபுரத்தில் அபயகிரி விகாரையிலேயே தங்கியிருந்தான். அனுராதபுரத்தில் இருந்த மிக முக்கிய மத நிறுவனம் என அவ்விகாரையைச் சிறப்பித்துக் கூறியுள்ள பாஹியன்,

அபயகிரி தாகபம் புத்தரின் பாதங்களின் சுவடுகள்மீது எழுப்பப் பெற்றதாகவும் அவ்வாறான ஒரு நம்பிக்கையிருந்ததாகவும், அபயகிரி விகாரைக்கண்மையில் போதிமரத்தின் பிறிதொரு கிளை நாட்டப்பட்டிருந்ததாகவும் குறித்துள்ளான். **அபயகிரியில் 5,000 பிக்குகள் வரையிலும், மகாவிகாரையில் 3,000 பிக்குகளுமே வாழ்ந்ததாக அவர் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.** இலங்கையின் புனித இடங்களை வழிபடப் பல நாட்டுத் யாத்திரீகர் இங்கு வந்ததையும் பாஹியன் அறியத் தருகின்றார். தேரவாதம் அல்லாத பிற பிரிவுகளின் திருநூல்களும் இலங்கையிற் கிடைத்ததையும் அவர் எடுத்துரைத்துள்ளார். தந்ததாதுவின் விழா பற்றியும் மற்றும் எவ்வளவோ பயனள்ள விவரங்களையும் பாஹியனுடைய குறிப்புக்கள் கொண்டிருத்தலால் அவை எமது காலப்பகுதியின் சமயநிலையை அறியப் பெரிதும் துணை நிற்கின்றன. பிற நாட்டவர் என்ற அடிப்படையில் அவருக்கேற்பட்ட அனுபவங்களை ஆவலுடன் அவர் இக்குறிப்புக்களுடாக எழுதியுள்ளார் என்பது தெளிவு. ஹுவான் சுவாங் தென்னிந்தியாவில் (காஞ்சியில்) இருக்கும்போது அங்கு அவருக்கு எட்டிய செய்திகளையே இலங்கை பற்றிக் குறித்திருக்கின்றார். இவருடைய குறிப்புக்கள் அத்துணை பயனுள்ளவையாக இல்லாவிடினும், இரு நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் அபயகிரி விகாரை மிக்க புகழோடு விளங்கியதை அவருடைய குறிப்புக்கள் தெளிவுபடுத்துகின்றன:

சமய வழிபாடும், விழாக்களும்

பௌத்தம் புகுத்தப்பட்ட காலத்தில் இல்லாத வழிபாட்டு முறைகளும், சடங்குகளும், விழாக்களும் அம்மதத்தில் இடம்பெறலாயின. இவை புத்தரின் போதனைகளுக்கோ, கொள்கைகளுக்கோ உடன்பாடில்லாமல் இருக்கலாம் ஆனால் இவையின்றி, பௌத்தம் ஒரு சமயமாகப் பொதுமக்களாற் பின்பற்றப்பட்டிருக்கவும் முடியாது. இந்தியாவிலேயே ஏற்பட்டிருந்த **'ஸ்தூபி'** (தாகப) வழிபாடு இவ்வித நோக்கத்தாலேயே எழுந்தது. பாளி நூல்களிலிருந்து சில பகுதிகளை ஓதுதல் ('பிரித்' ஓதல்) மூலம் தீமையணுகாவாறு செய்யலாம் என்ற நம்பிக்கையால், அம்முறை முந்திய அனுராதபுர காலத்திலிருந்து தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தது. போதிமர வழிபாடும், ஸ்தூபி வழிபாட்டைப் போலவே, தொடக்கத்திலிருந்து பின்பற்றப்பட்டு வரலாயிற்று. இவற்றுக்குச் சில விழாக்களை மன்னர்களே ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடத்த ஏற்பாடுகள் செய்து வந்தனர். போதி மரத்துக்கு நடத்தப்பட்ட ஒரு விழா **'ஸ்நானபூஜா'** எனக் குறிப்பிடப்பட்டது. மன்னர்களின் சமயப் பணிகளில் இவ்விழாக்களை நடத்துதல், போதி மரத்துக்கான கட்டிடத்தை **(போதிகர)** நிறுவுதல் முதலானவை சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பிந்திய அனுராதபுர காலத்தில், தந்ததாது (தலதா)வுக்கான விழாக்களே அதிக முக்கியத்தைப் பெற்றிருந்தன. **தள** அல்லது **தடா** (பல்) என்ற தொடக்கத்தையுடைய பெயர்களை இக் காலப்பகுதியில் மன்னர்கள் பலர் சூடியமையும் இதை வலியுறுத்தும். தந்ததாதுவின் புகழ் பிற பௌத்த நாடுகளுக்கும் பரவியிருந்தது. மகிந்தரின் போதனையை நினைவுபடுத்தும்

போசன் பண்டிகையும், புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய வெசாக் முதலான விழாக்களும் ஒழுங்காகக் கொண்டாடப்பட்டன. இவ்வாறு ஏராளமான சமயச் சடங்குகளும் விழாக்களும் பௌத்தர்களின் வழிபாட்டு முறைகளில் இடம்பெற்று, பௌத்தம் இலங்கையில் வளர்ச்சி பெறலாயிற்று.

இலக்கிய வளர்ச்சி

பௌத்தமும், கலை வளர்ச்சியும் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக இருந்தன என்பதை இலக்கியத்துறையில் உண்டான வளர்ச்சிகள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. அனுராதபுர காலத்தில் இலக்கியத்துறையில் முன்னின்று உழைத்தவர்கள் பௌத்த குருமார்களே. கல்வி பயிலும் வாய்ப்பும், நூல்களை எழுதும் நாட்டமும் அவகாசமும் அவர்களுக்கேயிருந்தன. பௌத்தத்துடன் தொடர்புடைய நூல்களையே அவர்கள் எழுதினர். விருத்தியடையாத நிலையிலேயே சிங்களமொழி இன்னும் இருந்ததால், நூல்கள் பாளி மொழியிலேயே எழதப்பட்டன. குப்தர் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட சமஸ்கிருத இலக்கிய வளர்ச்சியும் இலங்கையைப் பாதித்ததால், அம்மொழியிலும் மிகக் குறைவான இலக்கிய முயற்சிகள் நடைபெற்றன.

பாளி: பௌத்த மதத்தின் அறிமுகத்தோடு **எழுத்துக் கலைமரபில** ஒரு புதிய மாற்றத்தினை **பௌத்த குருமார்கள** இலங்கையிற் புகுத்தியிருந்தபோதும், **விநய திரிபிடகம்** முதலான பௌத்த நூல்கள் எழுதாமறைகளாக இருந்து வந்தன. **வட்டகாமணியினது காலத்தில் அவை எழுதப்பட்டதும், இலக்கிய முயற்சிகள் நடைபெறக் கூடிய சூழ்நிலைகள் இலங்கையில் ஏற்படத் தொடங்கின.** சமய நூல்களையொட்டி வியாக்கியானங்களும், சமய வளர்ச்சி பற்றிய மரபுகளும் வளர்ந்து வரலாயின. இவற்றினிடையே வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றிய கதைகளும் சேர்ந்திருந்தன. இவற்றை **மகாவிகாரை** போன்ற விகாரைகள் பேணி வந்தன. இவ்வித மரபுக் கதைகளை யொட்டியே, தீபவம்சம் எழதப்படலாயிற்று. பாளிமொழியில் எமது நாட்டில் எழுதப்பட்ட மிகப் பழைய நூலாக இதைக் கருதலாம்.

இந்தியப் பேரறிஞரும், பௌத்த மதகுருவுமான **புத்தகோசரது** வருகையால் ஈழத்து இலக்கிய வளர்ச்சி புதியதோர் ஊக்கத்தைப் பெற்றது. பௌத்த நூல்களுக்கு **வியாக்கியானங்கள** அல்லது **விளக்கங்கள** எழுதியவர்களுள் தலையானவர் புத்தகோசர். இவர் இலங்கையில் பௌத்த இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பெரும் பணிகளால், இவரது வாழ்க்கை பற்றிப் பல ஐதிகங்கள் உருவானதில் வியப்பில்லை. பாளியில் பௌத்த நூல்களுக்கு வியாக்கியானங்களை எழுதவும், கௌதமபுத்தரின் போதனைகளை உள்ளவாறு பேணவுமே இவர் அவதரித்தார் எனக் கூறப்பட்டது. பாளியில் எழுதப்பட்ட வியாக்கியானங்களில் அரைப் பங்குக்கு மேல் இவரே எழுதினார் எனவும் கூறுவர். மகாநாமன் ஆட்சி செய்தபோது (கி.பி. 409 - 431) இலங்கைக்கு வந்த புத்தகோசருக்குப் புதிய நூல்களை எழுதும் அவா இருந்ததில்லை. ஏற்கெனவே

இலங்கையிலிருந்த பல்வேறு சிங்கள விளக்க நூல்களின் உட்பொருளைப் பாளியில் ஒழுங்குபட நல்ல முறையில் எழுதுவதையே தமது நோக்கமாகக் கொண்டிருந்தார். **விசுத்தி மார்க்கம்** என்ற நூல் வாயிலாக, புத்தரின் போதனை களைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் அவர் தொகுத்துதவினார். **'விநயபிடக'வின** விளக்க நூலாக **'சமந்தபாசாதிகா'** என்பதை எழுதினார். புத்தகோசர் எழுதிய பெரும்பாலான நூல்களில் அக்கால அரசியல் சமய, சமூக வரலாற்றைப் பிரதிபலிக்கும் குறிப்புக்களும் உள. இவர் எழுதிய வியாக்கியானங்கள் முற்றுப்பெறுமுன், புத்தகோசர் இந்தியா மீண்டமைக்கு இலங்கையில் தோன்றிய அரசியலில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலைமைகளே காரணமென்பர்.

பிந்திய அனுராதபுரகாலத்தில் தோன்றிய நூல்களில் சமஸ்கிருத மொழியின் செல்வாக்கை மிகுதியாகக் காணலாம். சமஸ்கிருதச் செல்வாக்குக்கேற்பட்ட, மகாயான பௌத்தம் பரவியமையும், குப்தப் பேரரசுடன் நிலவிய தொடர்புகளும் முக்கிய காரணங்களாம். இக்காரணங்களால் வடமொழி இலக்கியங்களை இலங்கைக் குருமார்கள் பயின்று வந்தனர். சமயக் கருத்துக்களைக் கொண்ட நூல்களை எழுதவேண்டியிருந்த பிக்குகள் வடமொழி இலக்கியங்களில் தாம் நயந்த பகுதிகளைத் தாம் எழுதிய நூல்களில் புகுத்தினர். இதனாலேயே, மகாவம்சம் போன்ற பிந்திய அனுராதபுரகால நூல்களில் வடமொழி இலக்கியச் சாயல்கள் அதிகமாகக் காணப்படலாயின. புத்தகோசரால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் சில நூல்கள் உண்மையில் கி.பி. 5ம் நூற்றாண்டுக்குப் பின் எழுதப் பட்டனவாகச் சிலர் கருதுவர். பாளி மொழியில் இலக்கிய முயற்சிகளை ஆதரித்த பிந்தியகால மன்னர்களுள் 5ம் காசியப்பன் குறிப்பிடத்தக்கவன். அனுராதபுரத்திலுள்ள போதிமரத்தின் வரலாற்றைக் கூறும் **மகாபோதிவம்சம** என்ற மற்றொரு காவியம் அலங்கார நடையில் 10ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. அபயகிரி விகாரையில் எழுதப்பட்ட **'சத்தம்மோபாயன'** என்ற கவிதை நூல், பௌத்தக் கொள்கைகள் பற்றிப் பொதுவாகக் கூறும். இந்த ஒன்றைத் தவிர அவ்விகாரையைச் சேர்ந்த பிறநூல்கள் எதுவும் எமக்குக் கிட்டாமை குறிப்பிடத் தக்கது.

சமஸ்கிருதம்: கி.பி.7ம், 8ம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த சில பொறிப்புக்கள் வடமொழியிலேயே எழுதப்பட்டன. இதனால் இலங்கையில் அம்மொழியின் செல்வாக்குப் பரவியிருந்தமை புலனாகும். ஆனாலும் குறிப்பிடத்தக்கதான ஒரு நூல் மட்டுமே, அம்மொழியில் எழுதப்பட்டு எமக்குக் கிட்டியுள்ளது. **குமாரதாசன** எழுதிய **ஜானகீஹரண** என்பது, காளிதாசனது **இரகுவம்சத்தை அடியொற்றி** எழுதப்பட்டது. குமார தாதுசேனன் (512 - 520) என்பானே, இந்நூலின் ஆசிரியர் என முன்னர் கருதினர். 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த **மான(ன)** என்பவனது மகனே இக்குமாரதாசன் என இப்போது சிலர் கருதுவர்.

சிங்களம்: பழைய சிங்களமொழியான **'எலு பாசா'** மிகக் கடினமான சொற்பிரயோகங்களைக் கொண்டது எனக்குறிப்பிடுவர். கல்வெட்டுக்களை அம்மொழியிலேயே கி.பி. 3ம் நூற்றாண்டிலிருந்து சில நூற்றாண்டுகளாகப்

பொறித்து வந்தனர். ஆதிச் சிங்கள மொழியில் மிகக்குறைவாகவே இலக்கிய முயற்சிகள் நடைபெற்றன. கவிதைகள் சிலவும் அம்மொழியில் எழுதப்பெற்றன. **பல் எச்சம்** பற்றியொரு **கவிதைநூல** சிறீமேகவண்ணனது காலத்தில் எழுந்தது. பாளி மொழியிலுள்ள சில நூல்களுக்கு ஆதிச் சிங்கள மொழியிலேயே ஆதார நூல்கள் இருந்தன. வேறும் சில வசன இலக்கியங்களும் ஆதிச்சிங்களத்தில் இருந்திருக்கவேண்டும். ஆனால் அவற்றில் பெரும்பாலானவை எமக்குக் கிட்ட வில்லை. 4ம் சேனன் எழுதிய **சியபஸ்லகர** என்பது மட்டுமே எமக்குக் கிடைத்த ஒரே நூலாகும். 5ம் காசியப்பனால் இயற்றப்பட்ட **ஓர் அரும்பத விளக்கம** பற்றி அறியப்பட்டிருந்தது. **சீகிரியாச் சுவரொன்றில் 8ம், 9ம், 10ம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்ட சிங்களக் கவிதைகள், அக்காலக் கவிதையமைப்புப் பற்றியும், வரிவடிவ வளர்ச்சி பற்றியும், அறிய உதவும் கருவூலங்களாக அறிஞர் குறிப்பிடுவர். அவற்றுடன் தழிழ்ச்செய்யுட்கள் சிலவும் காணப்படுவதாக வரலாற்றாசிரியர்களால் எடுத்துக்காட்டப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

அனுராதபுரகால இலக்கிய வளர்ச்சி அத்துணை வேகமோ, செழிப்போ கொண்டதாகக் கூறுவதற்கில்லை. சமயக் கொள்கைகளும், பாளிமொழியும் இவ்விலக்கிய வளர்ச்சிக்குத் தடையாகவிருந்தன. இருப்பினும், அனுராதபுர காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு மன்னர்கள் அளித்த ஆதரவும், காட்டிய அக்கறையும் முக்கியமாக ஊக்கமளித்தன எனல் வேண்டும். சில மன்னர்கள் தாமே கல்விமான்களாகவும் விளங்கி, இலக்கிய விற்பன்னர்களுக்கும், புலவர் களுக்கும் தம் வாண்மையைக் காட்டினர். அவ்வகையில், அனுராதபுர கால இலங்கையும் அறிஞர்களைப் போற்றிச் சிறந்த பண்பாட்டுடன் திகழ்ந்தது.

கலைவளர்ச்சி

அனுராதபுரக் கால இலங்கையின் கலை வளர்ச்சி

அறிமுகம்

இலங்கையின் கலை வரலாற்றினைக் கற்கின்ற மாணவர்களும் சரி, ஆசிரியர்களும் சரி இற்றைவரைக்கும் அதனை ஒரினத்தினதும், ஒரு மதத்தினதும் வெளிப்பாடாகவே நோக்க வருவதனைக் காண்கின்றோம். இதற்கான காரணம் இற்றைவரைக்கும் இலங்கையின் கரைவரலாறு பற்றிய வரைபுகளானவை இன்னும் இத்தீவிற்குரிய பொதுமையான அடிப்படையில் குறிப்பாக **பலமொழி, பல்லினம்** என்ற சமூக நோக்கில் நின்று அமைக்கப்படாமையே ஆகும். **இதுவரைகாலமும் இலங்கையிலுள்ள கலை வரலாற்றாசிரியர்களால் எழுதி வெளியிடப்பட்ட நூல்களானவை மகாவம்ச காலத்திலிருந்து கைக்கொள்ளப்பட்டு வந்திருக்கக்கூடிய இன, மத நோக்குகளின் அடிப்படையில் எழுந்தவை யாகவே காணப்படுகின்றன.** அனுராதபுரக் காலக் கலைகள் என்று காலவரையறை வகுக்கப்பட்டு, எழுதப்பட்ட கலைவரலாறானது **ஓரின, ஒரு மதச் சார்பானதாகவே** அமைந்துள்ளமையை இங்கு சுட்டிக் காட்டலாம்.

கலைமரபுகள்

கலையின் நோக்கம், **அழகியல் சார்ந்ததாகவும** (Aesthetics) **ஒழுக்கவியல் சார்ந்ததாகவும்** (Ethical) பொதுவாக அமைந்து விடுகிறது. கலை பற்றிய கோட்பாடுகள் கால ஒட்டத்தில் விரிவடைந்து சென்றதற்கமைய **கலாசரனையும்** பொருத்தமான கருத்தமைவுடன் மாற்றமடைந்து சென்றமையைக் காணமுடிகிறது. **Art** என்பது **லத்தின் மொழியில** உள்ள **Ars** என்ற பதத்திலிருந்து பிறந்ததாகும். அப்பதத்தின் உட்பொருள் **திறமை, சாதுரியம** என்னும் நிலைகளில் கைவினைத் தொழிலுடன் தொடர்புபட்டுக் காணப்பட்டது. ஆனால் கலை வெளிப்பாடானது எவ்விடத்திலும் ஒரே நோக்கத்திற்காகவோ அல்லது குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டதாகவோ உருவகிக்கப்பட்டது என்று கூறிவிடமுடியாது. ஏனெனில் அக்கலைகள் தோற்றம்பெற்ற பிராந்தியத்தில் வாழ்ந்த மக்களது வாழ்வு முறையின் அடியாகவே அவை ஊற்றெடுத்து வளர்ச்சி பெற்றிருந்தன என்பதனா லாகும். இவ்வடிப்படையே உலகியல் சார்ந்த கலைகளும், ஆத்மீகம் சார்ந்த கலைகளும் வளர்ச்சிபெறுவதற்கு ஏதவாயிற்று. **கீழைத்தேயத்தைப் பொறுத்த வரையில் ஆத்மீகம் வயப்பட்ட கலைகளும் மேலைத்தேயத்தைப் பொறுத்த மட்டில் பெருமளவிற்கு உலோகாயுதக் கலைகளும் வளர்ச்சி பெற்றமைக்கு இதுவே அடிப்படையாக அமைந்தது.**

தென்னாசியாவைப் பொறுத்தவரையில் சமய அடிப்படையிலான கலை மரபுகளே பெரிதும் வளர்ச்சிபெற்று, மக்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ள மையைக் காணலாம். இந்தியாவை எடுத்துக்கொண்டாற் கூட கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், இசை, நடனம் போன்றவை யாவும் மக்களுடைய வாழ்க்கை முறையை - சமய வாழ்வின் இயல்பினை வெளிப்படுத்துவதாகவே வளர்ச்சி பெற்றிருந்தன. உலகியல் ரீதியான கலைவடிவங்கள் அங்கு தோற்றுவிக்கப் பட்டிருந்தாலும்கூட அவை தொடர்ச்சியாக மக்களால் பாதுகாக்கப்பட்டிருக்காத ஒரு நிலையில் அழிவுற்றுவிட்டன எனக் கூறப்படுகின்றது. **இங்கு சாஸ்திரீய கலைமரபுகள், கிராமியக் கலைமரபுகள் என்று இரு வழிகளில் சமயம் சார்ந்த கலைப் பணிகள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டன.** சாஸ்திரீயக் கலைகளை (Classical Art) அரண்மனைகளும், கிராமியக் கலைகளை (Folk (lore) Art) மக்கள் மன்றங்களும் வளர்த்தெடுத்திருந்தன என்றால் அது தவறாகாது. இங்கு தனிநபர் ஒருவருடைய ஆளுமையின்கண் வயப்பட்ட கலைவடிவங்கள் எவையும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதும் நோக்கத்தக்கது. இக் கோட்பாடானது பெருமளவிற்கு கி.பி. 17ஆம் நூற்றாண்டு வரையிலான இந்திய கலைமரபுகள் பற்றிய கோட்பாட்டிற்கே ஏற்றதாகும். அதன் பின்னர் (கி.பி 18ஆம் நூற்றாண்டிலிருந்து) ஏற்பட்ட பொருளாதார வாழ்க்கை மாற்றங்கள் இந்திய, இலங்கைக் கலை மரபுகளின் வளர்ச்சியைப் பாதித்துச் சென்றமையைக் காணலாம்.

இலங்கைத்தீவில் வளர்த்தெடுக்கப்பட்ட கலைமரபுகள் கூட இந்தியப் பெருநிலப்பரப்பில் வளர்ச்சி பெற்றிருந்த கலைக்கோலங்களுடனேயே

மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தன. இந்தியப் பெருநிலப் பரப்பில் சமயக் கோட்பாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியை மையமாகக் கொண்டே கலைவளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கைத் தீவினையும் பாதித்துச் சென்றிருந்ததனைக் காணலாம். இதனால் தென்னிந்தியப் பெருநிலப் பரப்பினை அண்மித்திருந்த இலங்கையில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட வம்ச அரசியல் மாற்றங்களினூடாக கலைவளர்ச்சி வெளிப்பாட்டு முறைகளிலும் இந்தியப் பண்புகள் வெளிப்படுத்தப்பட்டுச் சென்றிருப்பதனைக் காண்கின்றோம்.

இலங்கைத்தீவின் கலைமரபுகள் யாவும் இந்து, பௌத்த மதங்களின் செல்வாக்கிற்குள் கையகப்படுத்தப்பட்ட நிலையில் வளர்த்தெடுக்கப்பட்டிருந்திருப் பினும், தனித்துவம் வாய்ந்த கலைமரபுகள் சிலவும் இங்கு தோற்றுவிக்கப் பட்டிருந்தமையைக் காணலாம். இந்தியப் பெருநிலப் பரப்பினின்றும் இலங்கையானது ஒரு தனித்தீவாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையிலும், சர்வதேச, இந்து சமுத்திர வணிக மார்க்கங்களில் இலங்கைத் தீவானது தனித்துவமான வகையில் பங்கெடுத்திருந்துள்ள நிலையிலுமே அதன் தனித்துவமான கலையம்சங்களின் வளர்ச்சிக்கு அதன் பாதுகாப்பான வியாபாரச் செழிப்பின் பின்னணி அதற்கு வலுவூட்டியிருந்தது.

இலங்கையின் கலை வரலாற்றுத் தொடக்கம்

இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் தீபகற்ப இந்தியாவிற்கு மிகவும் அண்மித்த நிலையில் அதன் அமைவிடம் உள்ளமையால் அங்கு ஏற்பட்ட கலைவளர்ச்சியின் அலகுகளே இலங்கைத் தீவிலும் ஒத்த தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தமையைக் காணலாம். குறிப்பாக **வரலாற்று உதயகால கலைக்கோலங்கள்** யாவும் (Protohistoric Artistic develoipments) **ஒரே தளத்திலுள்ள** சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பின்னணியில் தோற்றுவிக்கப் பட்டனவாகவே தென்னிந்திய, இலங்கைப் பரப்புக்களில் காணப்படுகின்றன. கி.மு. 1000 ஆம் ஆண்டிலிருந்து கி.பி 3ஆம் நூற்றாண்டு வரைக்கும் இவ்விரு நிலப்பிராந்தியங்களிலும் சமத்துவமான, ஒரே சீரான சமூக, பொருளாதார உற்பத்தி முறைகளுக்குரிய நிறுவனங்களைக் கொண்டிருந்ததன் அடிப்படையில் இவ்விரு பிராந்தியங்களிலும் ஒரே சீரான பண்பாட்டு உருவாக்கம் தோற்றம் பெற்றமையைக் காண்கின்றோம். அக்காலத் தோற்றப்பாடுகளானவை பெருங்கற்கால விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வியலினூடே பரிணமித்த கலையின் தோற்றப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப் பட்டிருந்தன. கோவில்களின் தோற்றத்திற்கும், பௌத்த ஸ்தூபிகளின் தோற்றத் திற்கும் அடிப்படையாக இப்பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் விளங்கியிருந்த முறையை எஸ்.பரணவிதான உட்பட ஏனைய கலை வரலாற்றாசிரியர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் கி.மு 800 ஆம் ஆண்டுகளிலிருந்தே பெருங்கற்கால விவசாயப் பெருங்குடி மக்களின் இரும்பு உலோக உபயோகம்,

குயவ சக்கரத்தினைப் பயன்படுத்தி மட்பாண்டங்களைச் செய்யும் முறை, மட்பாண்டங்களை சூளையில் இட்டுக்கட்டி, வன்மைப்படுத்தும் முறை, மட்பாண்டங்களின் மீதான வரைபு, வண்ண ஒவியங்களைத் தீட்டும் முறை, மட்பாண்டங்களின் மீது கிராபிடிக் குறியீடுகளை வரையும் முறை, மதத்தோடு தொடர்பான வரைபுமுறைகள், குறிப்பாக **ஸ்வஸ்திகா, நந்திபாதம், முச்சூலக் குறியீடுகள், நாற்சூலக் குறியீடுகள, வேல்வடிவம** போன்ற இக்காலகட்டத்தில் தீபகற்ப இந்திய - இலங்கைத் தீவுப் பரப்பில் வாழ்ந்த விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வு முறையோடு ஒன்றித்துவிட்ட அம்சங்களாக மாறியிருந்தன. இறந்தோர் கிரியை முறைகள், சவஅடக்க முறைகள் போன்ற விடயங்களில் இம்மக்களே முதன்முதலாக ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றியவர்களாகக் காணப்பட்டமையிலிருந்து இப்பிராந்தியத்தில் கலைவாழ்வு தொடர்பான ஒரு தொடக்க நிலையைப் பிற்பட்டகால கலைவளர்ச்சியுடன் தொடர்புபடுத்தப்பட்ட நிலையில் காணமுடிகிறது. **அதாவது கி.பி 13ஆம் நூற்றாண்டு வரைக்கும் இலங்கைத்தீவில் வளர்ச்சி பெற்ற நீர்ப்பாசனவியல் வாழ்வுடன் இணைக்கப் பட்ட வகையில் கலைவளர்ச்சி தோற்றுவிக்கப்பட்டது எனில் அது இப்பெருங்கற்காலச் சமூக வளர்ச்சியுடனேயே என்று குறிப்பிடமுடியும்.**

இலங்கையின் பெருங்கற்காலக் கலைமரபு

இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் பெருங்கற்காலக் கற்சமாதி களையும், சுடுமண் பேழையிலான சவப்பெட்டி வடிவங்களையும் காணமுடிவது கலை வரலாற்றின் தொடக்க நிலையாக உள்ளது. **ஈமக் கலைப் பொருட்களில் இருந்தும், சடங்குகளிலிருந்துமே ஈழத்தின் கலைவரலாறு தோற்றம் பெற்றது என்றால் அது மிகையாகாது.** சுடுமண்ணாலான சவப்பேழைகள் பெருங்கற் பண்பாட்டுச் சமூகத்தில் பல வடிவங்களில் பேணப்பட்டு வந்தன. அவற்றுள் மயில்வடிவம், அன்னவடிவம், பன்றிவடிவம், நாய் வடிவம், முதலைவடிவம், சிங்க வடிவம் போன்றன பிரதானமானவையாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் **வரணியில் மயில் அல்லது அன்ன வடிவத்தினாலான சுடுமண் பேழை** புதைந்த நிலையில் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. கந்தரோடையிலிருந்து **பன்றி வடிவத்தினையுடையதான** சாணைக்கல் அம்மி இரண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் **படியகம்பொளை** என்னுமிடத்தில் காணப்படுகின்ற கற்பலகை களினால் உருவாக்கப்பட்ட **கற்சமாதியானது** இலங்கையின் கற்கட்டிடக் கலை மரபின் தொடக்கமாகக் காணப்படுகின்றது. இதனையொத்த பல **கற்சமாதிகள** தற்போது தென்கிழக்காசிய நாடுகளில் கண்டுபிடிக்கப்பெற்று வெளிப்படுத்தப் பட்டுள்ளன. தனிநின்ற ஒற்றைக்கல்லினாலான பிரமாண்டமான சிற்பங்கள், கூரையுடன் இணைந்த குடிசையமைப்புக்கள் (Monolithic Sculptures & huts) போன்றவற்றை ஆக்குகின்ற திறனை இப்பெருங்கற்கால மக்கள பொற்றிருந்தனர் என்பதனையும் இத்தென்கிழக்காசிய நாடுகளுக்குரிய கூரை அமைப்பின் முதல் வடிவத்தினையும் இப்பெருங்கற்காலச் சமூகத்தினரே உருவாக்கித் தந்தனர்

என்பதனையும் உறுதிப்படுத்தக்கூடிய கலைச் சான்றுகளும் தற்போது கிடைத்துள்ளன. தென்கிழக்காசியாவில் இக்காலத்துச் சமூக மக்களால் உருவாக்கப்பட்ட கற்கூரையமைப்பினை ஒத்த வகையிலேயே பிற்காலத்தில் தமிழகத்திலுள்ள மாமல்லபுரத்தில் திரௌபதி ரதம் எனப்படும் புராதன நாட்டார் வழக்கியலைப் பின்னணியாகக் கொண்டமைந்த கலையுருவின் தோற்றப்பாடு அமைந்து கொண்டது எனலாம். தனிக்கல்லில் ரதங்கள் செய்யும் முறையை முதன் முதலாக ஏற்படுத்தித் தந்தவர்கள் **இப்பெருங்கற்காலச் சமூக மக்களே** எனக்காணும்போது இலங்கையிலும் அவர்களது பங்கும் பணியும் பற்றிக் கலைத்துறை பொறுத்து அமைந்திருந்தவற்றை மீளாய்வு செய்ய வேண்டியுள்ளது.

வரலாற்றுக் காலத்திற்குச் சற்றுமுற்பட்ட சுடுமண் கலைவடிவங்கள்

இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் வரலாற்றுதயகால வரலாற்றுக் காலத் தொடக்கத்திற்குமிடைப்பட்ட காலப்பகுதிக்கு உரியதான ஏராளமான சுடுமண் சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கிளிநொச்சியில் உள்ள **உருத்திரபுரத்திலிருந்தும், வட்டக்கச்சி-மல்வில் பரப்பிலிருந்தும், சீகிரிக்கு** அண்மையிலுள்ள **இலக்குவேவ, இரணைமடுப பரப்பிலிருந்தும், பூநகரிப்பரப்பிலிருந்தும்** இச்சுடுமண் சிற்பங்களை செ.கிருஷ்ணராசா, ப.புஷ்பரட்ணம், **தெரணியாகல** என்போர் சேகரித்திருந்தனர். **(திருகோணமலையிலுள்ள நிலாவெளியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஒரு பெண் வடிவத்திற்குரிய சுடுமண் சிற்பமானது சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட சுடுமண் பாவையையொத்துக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.)** இச்சுடுமண் சிற்பங்களுள் இலிங்க வடிவங்கள், யானைத் தலைகள், மனித வடிவங்களுள் பெரும்பாலானவை பெண் உருவங்கள், மற்றும் சில விலங்குருவங்கள் போன்று காணப்படுவதும் குறிப்பிடத்தக்கவை. இவை பொதுவாக நாற்றிசைக் கடவுளர் களாகவோ அல்லது எண்திசைத் தெய்வங்களாகவோ கருதப்படக் கூடியன வாயினும், **அடிப்படையில் அவை செழிப்புத் தெய்வ வடிவங்களாகவே அமைந்துள்ளன.**

இவ்வகையான குறிப்பிடத்தக்க சுடுமண் சிற்பங்கள் யாழ்ப்பாணத்தில் தீவுப் பகுதியில் உள்ள **நாராந்தனையிலிருந்தும** கந்தரோடையிலிருந்தும் மீட்டெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. மிகவும் அண்மையில் **வரணியில** மேற்கொள்ளப் பட்ட தொல்லியல் ஆய்வுகளின்போது **யக்ஷ** வடிவமொன்றுக்குரிய சுடுமண் சிற்பமொன்றின் பாகங்கள் கிடைத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவை யாவும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்து **மக்கள் வாழ்வின் செழிப்புத்தெய்வ வடிவங்களாக லிங்க வழிபாட்டோடு தொடர்புபட்ட நிலையில** வழிபடப் பட்டிருந்தன என்பதில் எவ்வித ஐயமும் ஏற்படமுடியாது. எனவே இலங்கையின் கலைவரலாற்றிற்கு மெருகு சேர்க்கும் ஒரு காலகட்டத்தின் மூலமாக இச்சுடுமண் சிற்பங்கள் அமைந்து கொண்டனவென்றால் அது மிகையாகாது. இச்சுடுமண் சிற்பங்கள் கிடைத்திருந்த பிராந்திய சமூகச் சூழலை நோக்கும் போது உள்நாட்டு விவசாயமும் உள்நாட்டு வாணிபமும் சந்திக்கும் மையங்களிலேயே அவை புழக்கதில் இருந்தமையைக் காணமுடிகிறது.

பௌத்தத்தின் வருகைக்கு முற்பட்டகால இலங்கையின் கலைமரபுகள்

இலங்கையின் வரலாற்றுக்காலப் பகுதி கி.மு. 5ம் நூற்றாண்டிலிருந்தே ஆரம்பிப்பதனை அண்மைக்காலத் தொல்லியற் சான்றுகள் எமக்கு எடுத்துணர்த்து கின்றன. **இலங்கையில் மிகவும் அண்மைக்காலங்களாக கிடைத்துவரும் எழுத்துப்பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகளின் மீதாகக் காணப்படும் பிராமி வரி வடிவங்களானவை வட இந்திய அசோக பிராமியின் வரிவடிவ உபயோகம் இலங்கையில் அறியப்படுமுன் தென்னிந்திய பிராமி வரிவடிவத்தின் செல்வாக்கினை இனங்காட்டி உள்ளன.** தென்பிராமி வரிவடிவக் கலைமரபு கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்தே இலங்கை மக்களின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தமையிலிருந்து பௌத்த மதத்தின் வருகைக்கு முற்பட்டகால இலங்கையின் வாழ்வியலில் தீபகற்ப இந்தியக் கலைமரபும் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தி இருந்தமையைக் காண்கின்றோம். இப்பின்னணியில் பௌத்தமதத்தின் இலங்கை வருகைக்கு முற்பட்டகாலக் கலைமரபுகளை நோக்கும்போது இங்கு **இலவம்பஞ்சிலிருந்து** நூல் இழையம் தயாரிக்கும் கலை **(நூல் நூற்றல்) ஆடை நெய்யும்** தொழிற்கலை, சாய வண்ணம் தயாரிக்கும் கலை மரபு, கிணறு தோண்டும் கலை, உழண்டி மூலம் நீரை கிணற்றில் இருந்து வெளியேற்றும் தொழில்நுட்பம், **கமுக மடலில் இருந்து வன்ன வேலைகள் செய்யும் மரபு**, தரைக்குக் கீழ் நிலவறைகளை வெட்டி உருவாக்கும் கலைமரபுகள், போன்ற தொழில் சார்ந்த கலைவேலைப் பாடுகள் இக்கால இலங்கையில் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தமையைக் காணலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டுப்பரப்பினை பொறுத்தவரையிலும் மேலே கூறப்பட்ட அம்சங்கள் வளர்ச்சி அடைந்திருந்தன எனலாம்.

பௌத்தமும் குகைவரைக் கட்டிடக் கலைமரபும்

அனுராதபுரத்தில் தேவநம்பியதீசன் ஆட்சி செய்து கொண்டிருந்தபோது மகிந்தனது தலைமையில் இலங்கைக்கு வந்த பௌத்தசமயத் தூதுக் குழுவினராலேயே இத்தீவில் பௌத்த மதம் அரச ஆணையுடன் பரப்பப்பட்டதாக மகாவம்சம் என்ற பாளி நூல்வாயிலாக அறிகின்றோம். அனுராதபுரத்திலுள்ள மிகிந்தலை என்ற மையம் குடைவரைக் கோயில் ஒன்றினைக் கொண்டிருப்பதோடு, அக்குகையினுள்ளே கல்லினாலான கற்படுக்கை ஒன்றும், தலையணை ஒன்றுமாக மகிந்தனது பெயரை பிராமிவரிவடிவில் தாங்கிய வண்ணம் அமைந்துள்ளமையை இன்றுவரைக் காணக்கூடியதாகவுள்ளது. மகிந்தனது பெயரை மிகிந்தலை இற்றைவரைக்கும் தாங்கிக் கொண்டிருக்கின்ற முறையும் வெசாக்பௌத்த நிகழ்வு மிகிந்தலையில் இடம்பெற்று வருகின்ற முறைமையும் பௌத்தப் பண்பாட்டோடு அம்மையம் கொண்டிருக்கின்ற கலாசார முக்கியத்துவத்தினையே எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

வட இந்தியாவில் அசோகப் பேரரசன் காலத்தில் உருவாக்கப்பட்ட குடைவரைக் குகைகளை ஒத்தவகையில் இலங்கையிலும் பௌத்தமத்தின்

அறிமுகத்தோடு ஏராளமான குடைவரைக் குகைகள் தோற்றுவிக்கப்பட்டு, **பௌத்த, அஜீவிக சமண** சமயத் துறவிகளுக்குத் தானமாக வழங்கப்பட்டன. இச்செய்தி யினை அவ்வக்குகைகளின் முகப்பின் மேல்விளிம்பில் பொறிக்கப்பட்ட பிராமிச் சாசனங்கள் வாயிலாக உறுதிப்படுத்திக்கொள்ள முடிந்தமை குறிப்பிடத்தக்கது. சமகாலத் தமிழகத்திலும், கேரளத்திலும் இத்தகைய குடைவரைக் குகைகள் காணப்பட்டாலும் அவை பிறிதொரு கலைமரபின் உந்துதலினால் உருவாக்கப் பட்டவையாகவே தமிழகக் கலை வல்லுனர்களால் குறிப்பிடப்படுவதனைக் காணலாம். பழந்தமிழ்ப் பாண்டிநாட்டில் காணப்படும் நிலத்திற்கு கீழான **குகையரண்கள்** யாவும் பௌத்தத்திற்கு முந்தியவையாக எடுத்துக் காட்டப் படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. **தென்னிந்தியாவில் பல்லவருக்கு முன்னரே குடைவரைக்கோயில் அமைப்பு உருவாக்கப்பட்டு விட்டமைக்கான தொல்லியற் தடையங்களைப் பாண்டிய நாட்டில் காண்பது போல் இலங்கை யிலும் அவ்வாறான தரைக்கீழ் குகைகள் பௌத்தத்தின் வருகைக்கு முன் அமைக்கப்பட்டமைக்கான சான்றுகளை ஆய்வாளர் இன்னும் தெளிவுபடுத்தவில்லை.**

குகைவரை, குடைவரைக் கோயில்கள்

இலங்கையைத் பொறுத்தவரையில் பௌத்த மதத்துடன் குறிப்பாக **மகாயான பௌத்த மதத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட பல குகைவரை, குடைவரைக் கோயில்களை** அடையாளம் கண்டுகொள்ள முடிந்துள்ளது. **இசுருமுனிய குகைக்கோயில், சிகிரியக் ககைக்கோயில், தம்புல்ல குகைக்கோயில் மகாயான பௌத்தமத வழிபாடுகளுடன் தொடர்புபட்ட வகையில் பல்லவப் பண்பாட்டு குகைவரைக் கட்டிடக்கலை மரபினை பிரதிபலிப்பனவாக உள்ளன.** இசுறுமுனிய குகைக்கோயிலின் அமைப்பானது மாமல்லபுரம் கலைநகரின் பண்பாட்டுத் தொடர்பினை நேரிடையாக, பிரதிபலிக்கும் நிலையில் உள்ளது. பல்லவர்கால குகைக்கோயில் மரபு ஒன்று இலங்கையில் பௌத்த மரபிற்கு முற்றாக மாற்றப்பட்டமைக்கான ஓர் உதாரணமாக இசுறுமுனிய குகைக் கோயில் காணப்படுகிறது. M.D. இராகவன் என்பவரது கருத்துப்படி **முன்னீஸ்வரம்** என்று வழங்கப்பட்டிருக்கக்கூடிய சிவனது குகைக்கோயில் அமைப்பானது பின்னர் மகாயான பௌத்தமத செல்வாக்கினால் பௌத்த குகைக்கோயிலாக உருமாற்றப் பட்டு, **ஈஸ்வரமுனி** குகைக்கோயிலாக உருமாற்றப்பட்டு, **ஈஸ்வரமுனி** என்று நாமமிடப்பட்டு வந்த மரபின் வளர்ச்சியே இன்று **இசுருமுனி** என்றாயிற்று எனக் கொள்ளப்படுகின்றது. அவரது இக்கருத்தினை நிறுவதற்கு ஏற்ற வகையிலான தொல்லியல் எச்சங்களை இசுருமுனியில் உள்ள குகையில் இருந்து ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. **காதலர் சிற்பம** என தவறாக நாமம் இடப்பட்ட **பரமசிவன் பார்வதியினுடைய சிற்பத்தொகுதியும் தாமரைக்குளத்தில் நுழைந்த யானையின் சிற்ப வடிவமும** அக்குகையினது தோற்றம், வளர்ச்சி பற்றி அறிவதற்கு ஏற்ற சான்றுகளாகும். கூடவே பல்லவ பண்பாட்டினுடைய இலங்கை மீதான

செல்வாக்கினை வெளிப்படுத்தும் ஓர் ஊடகமாகவும் அச்சிற்பத் அச்தொகுதி விளங்குகிறது என்றால் அது மிகையாகாது.

சிகிரிய குகை - குடைவரைக் கோயிலானது இலங்கையின் கட்டிடக்கலை வரலாற்றில் தனித்துவமான ஒரு கூறாக அமைந்துகொண்டது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் சிகிரிய அரண்மனைக்குத் தனித்துவமான இடம் கொடுக்கப் பட்டு இருப்பினும் **குடைவரைக் கட்டிட கலையமைப்பின் முழுமையான ஓர் உதாரணமாக பார்க்கும்போது சீகிரிய குகைக்கோயில் அமைப்பானது முற்றிலுமே பெருங்கற்கால மக்களின் தொழில்நுட்ப உத்தியின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட ஓர் உறைவிடம்** என்பது தெளிவாகின்றது. செயற்கையான முறையில் குன்றின் உச்சியில் மழைநீரைத் தேக்கிவைத்து மனிததேவையின் பாவனைக்கு பயன்படுத்தும் முறையை இலங்கையில் முதன் முதலில் கண்டறிந்தவர்கள் பெருங்கற்கால மனிதர்களே என்றால் அது மிகையாகாது, சீகிரியின் உச்சியில் காணப்படுகின்ற நீர்த்தேக்கத்தின் அமைப்பும் நீர் வெளிச்செல்லும் வழியும் (Outlet) அதனையே வலியுறுத்துகின்றது. பிற்பட்ட காலத்தில் அத்தகைய ஒரு வாழ்வுமையம் பல்வேறு செதுக்கல் களுக்கும், மாற்றங்களுக்கும் உட்பட்டு சென்றிருக்கும் என்பதும் வெளிப்படையா கின்றது. சிகிரிக் குகையில் பெண்களின் ஓவியங்கள் மட்டும் தீட்டப்பட்டமைக்கும் அப்பெருங்கற்கால செழிப்புத் தெய்வக் கோட்பாடே (Fertility Cult) அடிப்படையாக அமைந்தது என்றால் மிகையாகாது. தென்னிந்தியாவில் தாமிரலிப்தி நதியின் முகத்துவாரப் பகுதியான **ஆதிச்ச நல்லூரில்** மேற்கொண்ட அகழ்வின்போது கிடைத்த வெண்கலத்தாலான பெண்தெய்வத்தின் உருவாக்கத்தின் பின்னணியில் காணப்பட்ட **அப்பொருங்கற்காலச் செழிப்பு தெய்வக்கோட்பாட்டுடன்** ஒப்பிட்டு பார்க்கும்போது சீகிரிய குகைக்கோயிலில் காணப்படும் ஓவியங்களும் அதே கோட்பாட்டால் உந்தப்பட்டவையாக விளங்குவதைக் காணலாம். மேலும் பல்வேறு **விலங்குருவங்களில் ஈமப்பேழைகளைப** பேணி வந்த பெருங்கற்காலத்து மக்களின் ஓர் ஈட்டமாகவே சீகிரிய சிங்க பாத வடிவம் அமைந்து கொண்டது எனலாம். சுடுமண்ணால் செய்யப்படும் ஈமப்பேழையை ஒத்து கல்லியே செதுக்கி வடிவமைக்கப்பட்டவையாகவே சீகிரிக்குன்றின் தோற்றத்தை நாம் கொள்ள வேண்டும். தென்கிழக்காசியாவில் கிடைத்த பெருங்கற்கால மக்களின் கட்டிடக் கலை உதாரணங்கள் பல இக்கருதுகோளை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே அடிப்படையில் பெருங்கற்கால விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வு மையமாக அல்லது (குகைக்) கோயிலாக அமைந்திருந்த சீகிரியா குன்றும் கால ஓட்டத்தில் பண்பாட்டு செல்வாக்கிற்குட்பட்டு வந்தமையே உண்மையாகும்.

அனுராதபுரகால நாகதுவார பாலகர் வடிவங்கள்

இலங்கையின் சிற்பக்கலை வரலாற்றிலும், பௌத்தசமய கட்டிடக்கலை வரலாற்றிலும் இடம்பெறும் பிரதான வாயிலில் அதன் இருமருங்கிலும் காணப்படும்

இரு பிரதான அலங்காரச் சிற்பங்களாக காட்சி அளிப்பவை நாகதுவாரபாலகர் வடிவங்கள் ஆகும். இலங்கையின் கலை மரபிலே தனித்துவமாக அமைந்த இந்த நாகதுவாரபாலகர்களின் தோற்றமானது திரிபங்க நிலையில் தலையில் மூன்று அல்லது ஐந்து நாகத்தலைகள் குடைவிரித்த நிலையில் சித்தரிக்கப் பட்டிருப்பதனைக் காணலாம். துவாரபாலகர் இருமருங்கிலும் முறையே இடது வலது கரங்களில் **நிறைகுடத்தினை** (Full pot) அல்லது **நீர்க்கலசத்தினை** தாங்கிய வகையில் சித்தரிக்கப்பட்டிருப்பதும் செழிப்புத் தெய்வக் கொள்கை யினையே மீண்டும் பிரதிபலிக்கின்றது எனலாம். இச்சிற்பத்தொகுதி வெளிப்படுத்தப் பட்ட சட்டகத் தொகுதியைப் பார்க்கும்போது தென்னிந்தியாவில் நடுகற்கள் நாட்டியுள்ள முறைமையை எமக்குப் படம்பிடித்து காட்டுவதாக கொள்ளலாம். நாகதுவாரபாலகர்கள் செதுக்கப்பட்ட சட்டத்தொகுதி மேலே அரைவட்ட வளைவுடையதாகவும் அடியில் தட்டையான தன்மையைக் கொண்டும் உருவாக்கப்பட்டமையை நாம் காண்கின்றோம். தென்கிழக்காசிய நாடுகளில் அண்மையில் கிடைத்த உதாரணங்களை அடிப்படையாகக் கொண்டு இவற்றை நோக்கும்போது அவை வெறுமனே பௌத்தக் கலைமரபுப்பிற்குரியது என்று மட்டும் ஒரு முடிவுக்கு வருவது தவறு என சுட்டிக்காட்டுகின்றது. **பெருங்கற்கால சிந்தனை மரபிலிருந்து உருவாக்கம் பெற்றவொரு ஆலவா** ஆக இவ்வடிவம் தென், தென்னிழக்காசிய நாடுகளில் வளர்ச்சி பெற்றுச் சென்றிருப்பதனைக் காணலாம். பௌத்தமத மரபிற்கும் இச்சிற்பத் தொகுதி விளக்கும் பொருளுக்கும் எவ்வித தொடர்புகளும் காணப்படாதிருக்கும் போது, இலங்கையின் கலை வரலாற்றாசிரியர்கள் அதனை சிங்கள - பௌத்த சிற்பக் கலை அமைதியுடன் அடையாளம் கண்டுகொண்டிருப்பது பெரு வியப்பினைத் தருகின்றது.

உண்மையில் பௌத்த ஸ்தூபிகளின் பிரதான வாயிலில் **சந்திர வட்டக்கல்லினை** அடுத்து, இரு மருங்கிலும் உள்ள **பிட்டித்திண்ணையில** (உயர்ந்து ஓடுங்கிய சமபரப்பில்) வைக்கப்பட்டிருக்கும் நாகதுவாரபாலகர்களது தொழிற்பாடு எவ்வாறு கருதப்பட்டதென்பது இங்கு ஆய்விற்குரியதாகின்றது. **நாக பாலகர்களது** முதல் தோற்றத்தினை எகிப்பதிய நாகரிகத்து சமய வடிவங்களில் இருந்தே நாம் முதலில் காண்கின்றோம். எகிப்திய பிரமிட்டுக்களுள் மம்மியை வைத்திருக்கும் சுரங்க அறையின் வாசலின் இரு மருங்கிலும் **இந்நாகபாலகர்களை** ஒத்தவடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். **மத்திய தரைக்கடல் நாகரிகத்து** ஓர் அம்சமாகவே அங்கு நாகபாலர் வடிவங்கள் எகிப்திய சிற்பங்கலை மரபுடன் இணைந்து கொண்டிருந்தன. அவையே பின்னர் கிரேக்க உரோமானிய வாணிப மார்க்கங்களின் ஊடாக தென் ஆசியாவை வந்தடைந் திருந்தன. **யவன வாணிபர்களினால** தென்னிந்தியாவிற்கு எடுத்துவரப்பட்ட கலை வடிவங்களுள் **பாவை விளக்கும், பறக்கும் நாகபாலர் வடிங்களும்** உள்ளடங்கும். கி.மு. 5ஆம் நூற்றாண்டளவில் இவ்விரு கலைவடிவங்களும் தென்னாசியாவை வந்தடைந்திருந்தன. அவையே பின்னர் **பௌத்த வாணிப மையங்களான காந்தாரம், மதுரா, நாகர்கன கொண்டா - அமராவதிப்பகுதி, காஞ்சி** போன்ற மையங்களை யவன

வாணிப கலங்களினூடாகச் சென்றடைந்து கொண்டன. அவ்வழியே **அமராவதி - இலங்கை** வாணிப மார்க்கங்களினூடாக **கந்தரோடை, அனுராதபுரம்** போன்ற சர்வதேச வாணிப மையங்களையும் சென்றடைந்தன. அதன் விளைவே இலங்கையில் நாம் காணும் **நாகதுவாரபாலகர் வடிவங்களாக** அமைந்தன. குறியீட்டளவில் செழிப்புத் தெய்வ வடிவமாகவும், தூய்மையின் மையமாகவும் விளங்கும் இச்சிற்பங்கள் **இலங்கைக்கே உரிய தனித்துவமான அலங்காரச் சிற்பங்கலை வனப்பிற்குரிய ஓர் ஊடகமாகவும** மாற்றம் பெற்றுக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ஆரம்பகால நாகதுவாரபாலகர்களினது வடிவங்கள் யாவும் நீர் நிறுவனங்களின் அயலிலேயே நாட்டப் பெற்றிருந்தன. அவையாவும் ஐந்து தலை நாகபாம்பொன்றின் விரிந்த தலையினுள் அமைக்கப்பட்டவையாகக் காணப்பட்டன. அங்கு பாம்பின் தலை மிகப் பெரியதாகவும், மனித உருவம் மிகச்சிறியதாகவுமே சித்தரிக்கப்பட்டது. பௌத்த சமயத்தின் வருகையின் பின்னர் பௌத்த ஸ்தூபிகளின் முகப்பில் செதுக்கப்பட்ட நாக துவாரபாலகர் வடிவங்களில் மனித உருவம் மிகப் பெரியதாகவும், பாம்பின் தலை மிகச் சிறியதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். **பௌத்தமும் பெருங்கற் பண்பாடும், வாணிபமும் ஒன்றிணைக்கப்பட்டதன் விளைவையே இந்நாக துவாரபாலகர் சிற்பம் பிரதிபலிக்கின்றது** எனலாம்.

இலங்கையின் பௌத்தக் கலைவளர்ச்சி: ஸ்தூபிகள்

பொதுவாகத் தென்னாசியாவில் ஸ்தூபிகளின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆராய்ந்த கலைவல்லுனர்கள் அதனைப் பௌத்த மதத்தின் தோற்றத்திற்கு முற்பட்ட கால எல்லைக்கு எடுத்துச் செல்வதனை அவதானிக்க முடிகிறது. புராதன புதைகுழி முறையிலிருந்தே இத்தகைய ஸ்தூபிகள் உருவாக்கம் பெற்று பிற்காலத்தில் வணக்கத்திற்குரிய கூறுகளாகப் பரிணாமம் பெற்றுக் கொண்டன என்பது பரணவிதானாவின் கருத்தாகும். சாதாரண மக்களது வாழ்வில் புதைகுழிகள் அல்லது 'நடுகல்' வழக்கம் இருந்து வந்தமையை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து தொல்லியல் ஆய்வுகள் நன்கு நிறுவும். தென்னாசியாவைப் பொறுத்தவரையில் பெருங்கற்காலப் பண்பாட்டுக்கு முன்னர் புதைகுழிகளும், நடுகற்களும் வழக்கத்தில் இருந்திருப்பினும், பெருங்கற்காலத்தினைத் தொடர்ந்தே அவற்றின் அம்சங்கள் பிரபல்யமடைந்து வந்திருக்க வேண்டும். இந்நிலையில் புத்தர் இறந்தவுடன் அவருடைய காலத்திலும் அதற்கு முன்னர் நிலவிய புதைகுழியின் மேல் நடுகல் முறை அவருடைய புனிதத் தன்மை காரணமாக வணக்கத்திற்குரிய ஞாபச் சின்னமாக உருவாக்கப் பட்டிருக்க வேண்டும். இந்நிலையில் இருந்தே ஸ்தூபிகள் தோற்றம் பெற்றன. புத்தர் இறந்தவுடன் அவருடைய காறை எலும்பு, தந்ததூது (பல்), கேசதாது (தலைமயிர்) போன்றவற்றை மையத்தில் பதிட்டம் செய்து ஸ்தூபிகளை உருவாக்குகின்ற முறை உருவாக்கப்பட்டது. அவ்வகையில் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் ஸ்தூபிகள் என்ற வணக்க ஸ்தலங்கள் தோற்றுவிக்கப் பட்டன. வட இந்தியாவில் **'சாம்ராட்' அசோகன்** 84,000 ஸ்தூபிகளை அமைத்தான் எனவும் பௌத்த

மரபுகள் வாயிலாக அறிகின்றோம் இவ்வாறு கி.மு 3ம் நூற்றாண்டில் ஸ்தூபிகள் தென்னாசியாவில் தோற்றம் பெற்று, வளர்ச்சியடைய ஆரம்பித்திருக்க வேண்டும்.

இலங்கையில் வளர்ச்சி கண்ட ஸ்தூபிகளின் அமைப்பு முறையானது ஓரளவுக்கு தமிழ் நாடு - கேரளப் பிரதேசங்களை ஒத்தும், இத்தீவிற்குரிய தனித்துவம் வாய்ந் வகையிலும் அமைந்திருந்தமையினைக் கலை வரலாற்றாசிரியர் எடுத்துக் காட்டுவர். **அவ்வடிப்படையில் இலங்கைக்குப் பௌத்த சமயம் மகிந்ததேரர் என்ற தலைமைப் பிக்குவினைக் கொண்டு தூதுக் குழுவினால் பரப்பப்படுவதற்கு முன்னரேயே ஸ்தூபி களின் தோற்றம் ஏற்பட்டு விட்டதென வரலாற்றாசிரியர்களால் குறிக்கப்படுவது இங்கு அவதானிக்கத்தக்கது. மகியங்கணை, களனி, நாகதீப** ஆகிய இடங்களில் காணப்படும் காலத்தால் முற்பட்ட ஸ்தூபிகளின் அமைப்பு இலங்கைக்குரிய தனித்துவமான கலைப்பாரம்பரியத்தினையே காட்டும். அனுராதபுரத்தில் சிறப்பாக மிகிந்தலையில் உள்ள கண்டக சேத்திய **கி.மு 4ம் நூற்றாண்டுக்குரியது** என்பது தொல்லியலாளரது துணிபு, இத்தகைய தொல்லியல் ஆதாரங்களைப் பின்னணியாகக் கொண்டு நோக்கும் பொழுது இலங்கையில் தோற்றம் பெற்று வளர்ச்சி கண்ட ஸ்தூபியமைப்பு முறையின் தனித்துவம் வாய்ந்த இயல்புகள் புலப்படுகின்றன.

பௌத்தப் பொதுமக்களின் பக்தியைத் தூண்டவல்ல புனித சின்னக் கோயில்கள், பக்தியுணர்வை எழச்செய்து நிலைபெற வைக்கக்கூடிய வழிபாட்டு நிலையங்கள் என்பனவே, பௌத்தம் பரவியதனால் நிறுவப்பட்ட இரண்டாவது வகைக் கட்டிடங்களாகும். இக்கட்டிடங்களுள் முக்கியமானதை **ஸ்தூப** அல்லது **தாகபம** என அழைப்பர். தூபி என இதைத் தமிழில் வழங்குவர். புத்தருடைய காலத்துக்கு முன்பே, அரசர்கள் முதலான உயர் குடும்பத்தவர்களின் எச்சங்களை வைத்து, அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பும் வழக்கமிருந்தது. இவ்வாறு முன்னரே ஏற்பட்டிருந்த வழக்கத்தைப் பின்பற்றியே, பௌத்தர்கள் தமது மதவழிபாட்டுக்குரிய ஸ்தூபத்தை இந்தியாவில் அமைக்கலாயினர். புத்தருடைய எச்சங்களை வைத்து, அசோகன் காலத்தில் **சாஞ்சி, பாரூட** முதலான இடங்களில் எண்ணற்ற ஸ்தூபங்கள் எழுந்தமை பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தோம். இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பௌத்தம் பரவவே அங்குள்ள ஸ்தூபங்களைப் பின்பற்றி இங்கும் தாகபங்கள் கட்டப்பெற்றன. மௌரியப் பண்பாட்டின் தாக்கத்துக்கு இதுவே சிறந்த எடுததுக்காட்டாகும். தாகபங்களின் அமைப்பில், மூன்று பகுதிகள் அல்லது கூறுகள் முக்கியமானவை: அவையாவன:- i. **தளம்** ii. **கும்மட்டம் (வில்மாடம்)** iii. **மேற்கோப்பு (தூபி).** தளத்தில் ஒன்றின்மேல் ஒன்றாக உயர்ந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்ட மேடைகள் அல்லது படி வரிசைகள் (Terraces) இருந்தன. தளத்தின் மேலேயுள்ள கும்மட்டம் என்ற பகுதி குமிழி அல்லது நெற்போர் வடிவில் அமைக்கப்பட்டிருந்தது. இதையே தாகபத்தின் முக்கிய பாகம் என்பர். இதன் வெளிப்பக்கம் செங்கற்கள் பதிக்கப்பட்டு, பின் சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது.

வில்மாடத்துக்கு மேலுள்ள மேற்கோப்பு ஐந்து பகுதிகளைக் கொண்டது. இவை முறையே, 'தரஸ்-கொட்டுவ (சதரகோட்டம்), தேவதா கொட்டுவ, கோட்ட, சத்த (குடை), கறல்ல (முடி) என்ற பெயர்களைக் கொண்டவை. தள அமைப்பும், மேற்கோப்புமே காலத்துக்குக் காலம் மாறுதல்கள் அடைந்துவந்தன. தொடக்க காலத்துத் தாகபங்களில் ஒன்றேனும், அதன் உருவ அமைப்பில் எதுவித மாறுதல்களும் அடையாது இன்றுவரை பேணப்படவில்லை. சாஞ்சி ஸ்தூபங்களின் அடித்தளங்கள் தனிமேடை (மேதி) அல்லது படி வரிசையைக் கொண்டிருந்தன. ஆனால், இலங்கைத் தாகபங்கள் மூன்றடுக்குடைய அடித்தளங்களைக் கொண்டிருந்தன என மேலே கூறினோம். கும்மட்டத்தக்கு மேலேயும், அடித்தளத்தைச் சுற்றியும் மரத்தாலான அளிச்சல்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவை பின்னர் செங்கல், கல் ஆகியவற்றால் அமைக்கப்படலாயின. மரத்தாலான அளிச்சல்கள் அழிந்துபோய்விட்டன. சாஞ்சித் தாகபங்களுக்குரிய அடித்தளத்தின் சுற்றுப் புறங்களில் குறிப்பாக நான்கு வாயில்களிலும், அலங்கார வேலையுடன் கூடிய **தோரணங்கள** எனப்பட்ட அமைப்புக்கள் இடம் பெற்றிருந்தன. இலங்கையில் **'வாகல்கட'க்கள்** என்ற அமைப்புக்கள் இடம் பெற்றதை அறிகின்றோம். தோரணங்கள் இருந்திருப்பினும், அவற்றின் சிதைவுகள்தாமும் எமக்குக் கிடைக்கவில்லை. இவை சிற்ப வேலைப்பாடுகளுக்கு இடமளித்தன எனலாம் இவ் வாகல்கடக்கள் தாகபத்தினைச் சுற்றியுள்ள நான்கு முக்கிய திசைகளிலும் அமைக்கப்பட்டன. தாகபங்களின் நான்கு புறங்களிலும் மேடைக்கு ஏறி வருவதற்கெனக் கட்டப்பட்ட வாயில்களும் உண்டு. இவ்வாயில்களும் சிற்பக்கலையின் வளர்ச்சிக்குதவிய பல அங்கங்களைக் கொண்டு விளங்கின. இவ்வாறு, இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இக்கட்டிட முறை சில வேறுபாடுகளுடன் இலங்கையில் மேலும் வளர்ச்சிபெற்று வரலாயிற்று. **அனுராதபுரம், மிகிந்தலை, மகாகமை** முதலான இடங்களில் இன்றும் அனுராதபுர காலத்தைச் சேர்ந்த தாகபங்களைக் காணலாம்.

இனி, அனுராதபுர காலத்தில் கட்டப்பெற்ற சில முக்கிய தாகபங்கள் பற்றிக் கவனிப்போம். மன்னர்களின் வரலாறு, சமய வளர்ச்சி என்பவற்றைக் கூறும்போதே இவை பற்றிக் கூறப்பட்டுள்ளபோதும், அவற்றை இங்கே தொகுத்துக் காண்போம். தேவானம்பிய திசன் (கி.பி. 250 - 210) காலத்திலேயே முதன் முதலாகத் தாகபங்கள் அமைக்கப்பட்டன. அவ்வாற அமைக்கப்பட்ட தூபாராம தாகபமே இலங்கையில் தோன்றிய முதல் தாகபமாகும். இன்று காணப்படுவது, பன்முறை செய்யப்பட்ட திருத்தலங்களின் பின்னர் ஏற்பட்ட உருவமே. ம'யங்கணையிலும் இவனால் நிறுவப்பட்டதாகக் கூறப்படும் ஒரு தாகபம் இருந்தது. **இசரசமண, வெசகிரி** என்பவையும் இவன் காலத்தில் எற்பட்டவையே. ஏறத்தாழ இதேகாலத்தில், மகாகமையில் **திசமகாசேத்திய** நிறுவப்பட்டது. தூபாராம இன்றுள்ள நிலையிலும், அதன் அடித்தளத்தின் விட்டம் 60 அடிக்கு மேலிராது. துட்டகாமணி (கி.மு. 161 - 137) பாரிய தாகபங்கள் சிலவற்றை நிறுவி, அவற்றின் வளர்ச்சியில் ஒரு திருப்பத்தையுண்டு பண்ணினான். இவன் நிறுவிய **மிரிசவட்டி தாகபமே** அடிப்பாகத்தில் 168 அடி விட்டத்தைக் கொண்டுள்ளது.

இதைவிடப் பன்மடங்கு பெரியது. காமணியின் தலையாய சாதனையான மகாதூப(ம்) எனப்பட்ட **ருவன்வலிசய** ஆகும். அதன் தளவிட்டம் 294 அடியாகவும், உயரம் சுமார் 300 அடியாகவும் இருந்தன. துட்டகாமணியின் இவ்விரு பாரிய தாகபங்களைத் தொடர்ந்து, வட்டகாமணியும் (கி.மு. 99 - 77) சில முக்கிய தாகபங்களை நிறுவினான். தலைநகரில அபயகிரி தாகபம் (உத்தர - சேத்திய எனவே இது பொதுவழக்கில் அழைக்கப்படும்). தக்கிண தூபம் என்ற இரண்டையும் நிறுவினான். இவ்விரு தாகபங்களும், பின்னர் முறையே கஜபாகுவாலும், கனிட்டதிசனாலும் விசாலிக்கப் பட்டமையால் இவை பழைய நிலையில் இப்போது இல்லை. திருத்தப்பட்ட நிலையில், அபயகிரி தாகபம் (325 அடி விட்டம்), மகாதூபத்தையும் விஞ்சி நின்றது. மிகிந்தலையில் மகாதாடிக மகாநாகனால் மகாதூபமும் மற்றொரு மன்னனால் கண்டக சேத்தியமும் கட்டப் பட்டன. பௌத்த உலகின் மிகப்பெரிய தாகபமான **ஜெதவன தாகபம** மகாசேனனால் (கி.பி. 276 - 403) நிறுவப்பட்டது. இதன் அடிப்பாக விட்டம், 367 அடியாகவுள்ளது. இதன் உயரம் 400 அடிவரையில் இருந்திருக்கவேண்டும். லஞ்சதிசன் காலத்தில் ருவன் வலியிலும், கண்டக சேத்தியத்திலும் அடித்தள அலங்கார வரிசைகள் சுண்ணாம்புக் கற்கள் பொருத்தப்பட்டு அலங்கரிக்கப் பெற்றன. **வாகல்கடக்கள** என்ற முகப்புக்கள் அல்லது விமானங்கள் 2ம் நூற்றாண்டளவிலேயே தாகபங்கள் சிலவற்றுக்கு அமைக்கப்பட்டன. சில சிறிய ஸ்தூபங்களை உள்ளடக்கிப் பின்னர் வட்டவடிவினதான கட்டிடங்கள் எழுந்தன. முதலில் மரத்தாலான தூண்கள், வில்மாட அமைப்பில் உள்ள முகட்டைத் தாங்கும் வகையில் இவை அமைக்கப்பட்டன. தூபாராம சேத்தியத்துக்கு இவ்வாறான கோயிலை வசபன் கட்டினான். மரத்தூண்களுக்குப் பதிலாகப் பிந்திய அனுராதபுர காலத்தில் (8ம் நூற்.) கல்லாலான தூண்கள் நாட்டப்பெற்றன.

பிந்திய அனுராதபுர காலத்திலும் தாகபங்கள் முக்கிய வழிபாட்டு நிலையங்களாக விளங்கி வந்தபோதும், முந்திய அனுராதபுர காலத்தில் நிறுவப் பட்ட பாரிய தாகபங்களுக்கு இணையான பெரிய தாகபங்கள் கட்டப்படவில்லை. தாகபங்களின் அமைப்பில் சில மாறுதல்கள் எற்பட்டன. குறிப்பாக கும்மட்டத்துக்கு மேலுள்ள மேற்கோப்பில் சில மாற்றங்கள் புகுத்தப்பட்டன. முன்னர் வட்டவடிவினதாகவிருந்த தளம் இப்போது சதுர வடிவுக்கக் கொண்டு வரப்பட்டது. பழைய தாகபங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டபோது, அவையும் இப்புதிய போக்கை அனுசரித்துத் திருத்தப்பட்டன. மேடையைத் தாங்கி நிற்கும் சுவர்களும் இப்போது அலங்கரிக்கப்பெற்றன. ருவன்வலியை முன்பக்க யானையின் உருவங்கள் அலங்கரித்தன. 8ம், 9ம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட சிறிய தாகபங்கள் சில புதிய கட்டிட அம்சங்களைக் கொண்டிருந்தன. கும்மட்டம் சற்று நீளங்கூடியதாகவும், அடியிலிருந்து சுமார் இரண்டடிக்குக் கற்கள் பதிக்கப் பட்டும் இருந்தது. இவ்வகைக் கட்டிடத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு மிகிந்தலையில் மகாயானத்தவர் கட்டிடமாக விளங்கிய **இந்திகடுசாய** என்பதாகும். பிந்திய காலப்பகுதியில் சிறந்து விளங்கிய மற்றொரு கட்டிட வகை **வட்டதாகே** அல்லது **சேத்திய-கர**. இதற்கான சிறந்த எடுத்துக்காட்டுக்கள் மதிரிகிரியிலும்,

திரியாயிலும் அனுராதபுரத்தில் தூபாராமவிலம், லங்காராமவிலும் உள்ளவையாகும். பொலன்னறுவையிலுள்ள வட்டதாகேயும் இதேகாலப் பகுதிக்குரியதாகலாம். இக்கட்டிடங்களில் உள்ள தூண்கள் முன்னர் தாங்கி நின்ற மரத்தாலான மேற்கோப்பு இன்று அழிந்துவிட்டது. தூண்களில் செய்யப்பட்ட வேலைப்பாடுகளும், அவற்றின் தோற்றமும் அவற்றுக்கு வனப்பைக் கொடுக்கின்றன. இவ்வகைக் கட்டிடம் இந்திய முன்மாதிரியொன்றையொட்டி, இலங்கையிலேயே பின்னர் உருவாகியதெனலாம்.

அனுராதபுரக்கால இலங்கையின் ஸ்தூபிகளின் கட்டிடக்கலை ரீதியான அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு அதன் தனித்துவமாக வளர்ச்சி நிலையினை கலை வரலாற்றாசிரியர் எடுத்துக் காட்டுவர். கி.பி 10 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கிய இக்கட்டத்தில் இரு வேறுபட்ட நிலைகளில் ஸ்தூபிகளின் கட்டிடக்கலை ரீதியான வளர்ச்சி நிலைகள் நோக்கப்பட்டுள்ளன. சேனக பண்டாரநாயக்க என்பவர் தனது 'Sinhalese monastic Architecture' என்ற நூலில் அவ்வளர்ச்சி நிலைகளை இரண்டு பிரிவுகளாக வகுத்து நோக்கியுள்ளார்.

1. கி.பி 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஸ்தூபிகள்
2. கி.பி 6ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட ஸ்தூபிகள்

என்பனவே அவையாகும். பௌத்தமத வழிபாட்டுச் சின்னங்களில் இடம்பெறும் மிகமுக்கியமான ஒரு கூறாகவும், தேரவாத பௌத்தப் பிரிவின் குறியீடாகவும் விளங்கும் ஸ்தூபி கி.பி 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நிலையில் சுட்ட செங்கற்களினால் கட்டப்பட்டது. ஆரம்பத்தில் கும்மட்ட வடிவத்தில் மிகச் சிறிய தோற்றத்தில் அவை அமைக்கப்பட்டன. ஆனால் காலப்போக்கில் மிகவும் பிரமாண்டமான தோற்றப்பாட்டினைப் பெற்றுக்கொண்டு இலங்கையின் தனித்துவத்தினை வெளிப்படுத்தி நின்றன. இந்நிலையில் ஸ்தூபியின் அமைப்பு முறையானது அடிப்படையில் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது என்ற பரணவிதானாவின் வாதம் இன்று வலுவிழந்த ஒரு நிலைக்குள்ளாக்கப்பட்டு விட்டது. பதிலாக தென்னிந்தியாவில் உள்ள கிருஷ்ணா நதிப் பள்ளத்தாக்கில் மலர்ச்சியடைந்த அமராவதிக் கலையம்சங்களே, இலங்கையின் ஸ்தூபியமைப்பு முறையில் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தியது என்பதனைக் காணமுடிகிறது.

இலங்கையின் தொடர்ச்சியான பாளி வரலாற்று மரபுகளின்படி இத்தீவின் முதல் ஸ்தூபியானது தேவநம்பியதிஸ என்ற மன்னனால் உருவாக்கப்பட்ட தூபராம தாதுகோபமாகும். இத்தாதுகோபத்தின் மையப்பபுதியில் புத்தருடைய தோள்பட்டையில் உள்ள காறை எலும்பு ஒன்று பதிட்டம் செய்யப்பட்டுள்ளது என்பது பொதுவான ஐதீகம். தீசனுக்குப் பின்னர் துட்டகாமினி மன்னனின் ஆட்சிக்காலத்தில் பல ஸ்தூபிகள் அமைக்கப்பட்டன என மகாவம்சம் என்ற நூல் கூறுகின்றது. அனுராதபுரத்தில் மிரிசவட்டி தாதுகோபம், மகாதூபி என

அழைக்கப்படும் ரூவான்வெலிசாய தாதுகோபம் என்பன அம்மன்னனால் அமைக்கப்பட்டனவாக கொள்ளப்படுகின்றன. இவற்றுள் மகாதூபி எனப்படும் ரூவான்வலிசய தாதுகோபத்தின் அமைப்பானது கட்டிடக்கலை ரீதியாக பெரும் புகழ் பெற்றதாகவுள்ளது.

துட்டகாமினி மன்னனுடைய ஆட்சிக்காலத்தினைத் தொடர்ந்து வட்டகாமணி மன்னன் காலத்தில் பல ஸ்தூபிகள் உருவாக்கப்பட்டன. அவற்றுள் அபயகிரி தாதுகோபம், லங்காராம தாதுகோபம், தக்கின ஸ்தூபம் என்பன முக்கியமானவை யாகும். வட்டகாமினி காலத்தில் உருவாகியிருந்த மகாயானப் பௌத்தக் கோட்பாடுகள் பல ஸ்தூபியின் அமைப்பு முறையிற்கூட பல மாற்றங்களை உருவாக்கிவிட்டிருந்தன.

மகாசேன மன்னன் காலத்தில் கூடுதலான ஸ்தூபிகள் அனுராதபுரத்தில் கட்டியும், புதுப்பித்தும் வைக்கப்பட்டமையைச் சான்றுகள் காட்டுகின்றன. இவனால் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் ஜெதவனராம ஸ்தூபியானது இத் தீவினிலேயே மிகப் பெரியதொன்றாக அமைந்தது. கட்டிடக்கலை ரீதியாக பல்வேறு தொழில்நுட்பங்களை தன்னகத்தே இந்த ஸ்தூபி கொண்டு விளங்குவது ஸ்தூபி அமைப்பில் இலங்கை கொண்டிருந்த தனித்துவமான இயல்பிற்கு சான்றாக அமைகின்றது.

ஸ்தூபியும் அதன் கட்டிடக் கூறுகளும்

பௌத்த – பாளி மூல நூல்களிலே எண்ணற்ற ஸ்தூபிகளது விபரங்கள் கொடுக்கப்பட்டிருப்பினும், அனுராதபுரத்தில் இன்று எஞ்சியிருக்கும் ஸ்தூபிகளது கட்டிடப் பாகங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது அவற்றுள் மூன்று வகையான பிரிவுகளை அடையாளம் காணமுடிவதாக சேனக பண்டாரநாயக்கர் குறிப்பிட்டுள்ளார். அப்பிரிவுகளாவன:

அ. சேத்தியகர (ம்)

ஆ. போதிகர (ம்)

இ. பிரதிமாகர (ம்)

என்பனவாகும். சில கலை வரலாற்றாசிரியர்கள் சிங்களப் பௌத்தருடைய ஸ்தூபிக் கட்டிடக் கலையுடன் இணைந்ததாக வேறு சில கட்டிடக் கலையுடன் இணைந்ததாக வேறு சில கட்டிடக் கூறுகளையும் அவதானித்து அவற்றைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். அவற்றுள் தாதுசகர (ம்) அல்லது தாதுசாலா, திரிரத்ன, படிமாகர என்பவையே அவையாகும். சேனக பண்டாரநாயக்காவின் கருத்துப்படி தாதுகர அல்லது தாதுசால திரிரத்ன போன்றவற்றுக்கான சான்றுகளை அனுராதபுரகால ஸ்தூபியமைப்பு முறையில் காணமுடியவில்லை. கொடகும்புவை குறிப்பிடுவது போன்று ஆசனகர என்பது ஒரு கட்டிடக்கலைக் கூறு அல்ல என்பதும் அது போதிகரத்துடன் தொடர்புபட்ட ஒரு சிறு கூறு என்பதும் தெரிய வருகின்றது. பாரம்பரிய ஸ்தூபியமைப்பு முறையில் இலங்கையில் மூன்றே மூன்று கட்டிடக் கூறுகள் பின்பற்றப்பட்டமைக்கே சான்றுகளைக் காட்ட முடிகின்றது என சேனக பண்டார நாயக்க மிகவும் திட்டவட்டமாகக் குறிப்பிடுகின்றார்.

சேத்தியகர (ம்)

ஸ்தூபியின் ஸ்தாபிதம் ஆரம்பத்தில் இலங்கையில் (தென்) இந்தியப்பாணியில் அமைந்திருந்தாலும் அடுத்த நிலையில் அது இங்கு தனித்துவமான முறையில் வளர்த்தெடுத்துச் லெல்லப்பட்டது என்பதற்கு சேத்தியகர(ங்கள்) சிறந்த எடுத்துக் காட்டாகும். சேத்தியகர என்பது அனுராதபுர பொலநறுவைக் கால ஸ்தூபியமைப்பு முறையின் முக்கியமான ஓர் அங்கமாகும். இவ்வங்கமானது தூபகர(ம்) அல்லது வட்டதாகே எனப்பொதுவாக இங்கு அழைக்கப்படுகிறது. அனுராதபுரகால சேத்தியகரத்தினுடைய முக்கியமான கூறுகளாக ஓர் உயர்ந்த - வட்டவடிவினதான மேடை, அதன் மையத்தில் அமைந்துள்ள வட்டவடிவில் கும்மட்டமான அண்டம், அதனைச் சுற்றி வட்டவடிவினதாய் அமைந்த தூண் வரிசைகள் என்பன அமைந்துள்ளன. இத்தகைய கூறுகளையுடைய ஸ்தூபிகளை அனுராதபுரத்தில் தூபராமாவிலும், லங்காராமாவிலும், அம்பலத்தல தூபவிலுமே காண முடிகின்றது என்பது சேனக பண்டாரநாயக்காவின் முடிபாகும். ஆனால் மிக அண்மைக் காலத்தில் மிகிந்தலையில் உள்ள சிலசேத்தியத்திலும் அத்தன்மைகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

தூபராமாவின் அமைப்பு முறையை நோக்குவோமாயின் இலங்கையில் ஸ்தூபியின் அமைப்பில் சேத்திய கர(ம்) கொண்டுள்ள முக்கியத்துவம் நன்கு புலப்படும். தற்போது காட்சியளிக்கின்ற தூபராமாவின் தோற்றமானது, அது ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட காலம் தொடங்கி இற்றைவரையும் புதுப்பிக்கப்பட்டும் விசாலிக்கப்பட்டும் கொண்டுவரப்பட்ட ஒரு தோற்றமேயாகும். இருந்தும் சேதியகரத்துக்குரிய அம்சங்கள் மாறாமல் நிலைபெற்று வந்தமையை அங்கு அவதானிக்க முடிகிறது.

தூபராமா ஸ்தூபியானது 11 அடி 4 அங்குலம் உயரமான ஒரு வட்டவடிவான பீடத்தின் மீது ஒரு கும்மட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. அங்கும் மட்டத்தின் அடித்தளம் அமைந்துள்ள பரப்பின் விட்டமானது 164அடி 6 அங்குலங்களாகும். செங்கட்டியாலான ஒரு சுவர் வட்டவடிவமான பீடத்தின் விளிம்பிலே பாதுகாப்புக் கருதி கட்டப்பட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. பீடத்தின் மையப்பகுதியில் 59 அடி விட்டத்தினையுடையதும், 63 அடி உயரத்தினை உடையதுமான கும்மட்டம் (ஸ்தூபி) ஒன்று அமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். பீடத்தினைப் பொறுத்தவரையில் கருங்கற் பலகைகள் பாவட்டனவும், வெளிவிளிம்புச் சுவரும், மையப்பகுதியில் அமைக்கப்பட்ட கும்மட்டமும் செங்கற்களினால் அமைக்கப்பட்ட வெளிவிளிம்புப் பகுதி 10 அடி அகலமுடையதாக உள்ளமை குறிப்படத்தக்கது.

பொதுவாக ஸ்தூபிகளின் அமைப்பானது அடித்தளம், அண்டம், தூபி என மூன்று அடிப்படைக் கூறுகளைக் கொண்டிருக்கும். தாதுகோபம் எனவும் அழைக்கப்படும் ஸ்தூபிகளின் அடித்தளத்தில் முதலாம் சுற்றுப் பிரகாரம் அமைந்திருக்கும். அதனைச் சுற்றிக் காட்டப்பட்ட சுவர் வேதிகை என அழைக்கப் படும். வேதிகைக்கு வெளியே இரண்டாம் சுற்றுப் பிரகாரம் அமைந்திருக்கும்.

இதில் அலங்கார வேலைபாடமைந்த மூன்று அளியடைப்பு வரிசைகள் ஒன்றன்மேல் ஒன்றாக பக்கவாட்டாக அமைந்திருக்கும். சமாந்தரமாகச் செல்லும் இவ்வளியடைப்பு வரிசைகளைக் குறிப்பிட்ட இடைவெளிகளில் அமைக்கப்பட்ட நிலைக்குத்துத் தூண்கள் தாங்கிக் கொள்கின்றன.

ஸ்தூபியில் அண்டம் இரண்டாவது நிலையில் இன்றியமையாத ஓர் அங்கமாகக் காணப்படுகின்றது. அடித்தளத்தின்மேலேயே அண்டம் அமைக்கப்படுகின்றது. அண்டம் ஒரு முட்டையின் மேற்பகுதி வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அண்டத்தின் மேற்பகுதியிலுள்ள உச்சியில் தூபி அமைக்கப்பட்டிருக்கும். இத்தூபியானது 5 உப அங்கங்களுடன் காணப்படுவது மரபு. அண்டத்தின் மேலுள்ள பகுதி ஹதரஸ் கொட்டுவ என்றழைக்கப்படும் சதுரக்கோட்டம் ஆகும். அதற்கும் மேலுள்ள பகுதி தேவதாகொட்டுவ என்றழைக்கப்படும் சதுரக்கோட்டம் ஆகும். அதற்கும் மேலுள்ள பகுதி கோட்ட எனவும், கோட்டத்தின் மேல் சத்த எனப்படும் குடையும் அமைந்திருக்கும். குடைக்குமேல் இருப்பதனை கறல்ல எனக் குறிப்பிடுவர்.

அனுராதபுரகாலத்தில் கட்டப்பட்ட ஸ்தூபிகள் இந்தியாவில் உள்ள ஸ்தூபிகளைவிட பன்மடங்கு பெரிதானவையாகக் கட்டப்பட்டிருந்தன. இத்தூபிகளின் அடித்தள விட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் அவற்றின் பருமனை அறிந்து கொள்ளலாம். காஞ்சியிலுள்ள பெரும் ஸ்தூபியின் அடித்தள விட்டம் 120 அடிகள் மட்டுமே, அதன் உயரம் 54 அடிகளாகும். ஆனால் இலங்கையில் மகாதூபியின் அடித்தள விட்டம் 294 அடிகளாகும். பின்னர் கட்டப்பட்ட அபயகிரி ஸ்தூபியின் அடித்தள விட்டம் 325 அடிகளாகும். உயரம் 350 அடிகளாகவும் அமைந்து இருந்தது. மகாசேனனால் அமைக்கப்பட்ட ஜேதவன ஸ்தூபியின் அடித்தள விட்டம் 367 அடிகளாகவும் 400 அடிக்கு மேலான உயரத்தினையும் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கது.

அனுராதபுரகால ஸ்தூபியமைப்பு முறையில் சிறப்பான ஓர் அலங்காரக் கூறுவாஹல்கடங்களாகும். இவை இலங்கைக்கேயுரிய சிறப்புக் கூறாகவும் காணப்படுவது இங்கு நோக்கத்தக்கது. ஸ்தூபியின் நான்கு வாயில்களிலும் நிலைக்குத்தாகக் காணப்படும் தோரண வாயில்களே வாஹல்கடம் ஆகும். இக்வாஹல்கடங்கள் இலங்கையின் ஸ்தூபி வடிவத்தில் ஏற்படுத்தப்பட்ட முக்கியத்துவமற்ற மாற்றங்களுக்கான ஓர் உதாரணமாகின்றது. முற்பட்ட, பிற்பட்ட அனுராதபுர கலங்களில் இவ்வாஹல்கடங்களின் அமைப்பில் வேறுபாடுகள் ஏற்பட்டன. அனுராதபுரத்திலுள்ள மிரிஸவட்டி தாதுகோபத்திலும், மிகுந்தலையில் உள்ள கந்தக சைத்தியத்திலும் காணப்படும் வாஹல்கடங்கள் மிகவும் பழையன வாகும். இங்கு வாஹல்கடங்களின் கீழ்ப்பகுதிகள் கற்களாலும், மேற்பகுதிகள் செங்கற்களாலுமே அமைக்கப்பட்டிருந்தன. நிலைக்குத்தாக அமைந்த நீள்சதுரக் கற்கள் சிற்பவேலைப்பாடுகள் நிறைந்து காணப்பட்டன. பூக்கள், கும்பங்கள், நாகராச வடிவங்கள் என அவற்றில் புடைப்பு முறையில் சிற்பங்கள் செதுக்கப் பட்டிருந்தன. வாஹல்கடங்களில் சிற்பங்களைச் செதுக்கும் முறையானது மகாயான பௌத்த சமயக்கோட்பாடு பரவியதன் பின்னரே ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மகாயானக் கோட்பாடுகளின் விளைவாக ஸ்தூபி அமைப்பில் இணைக்கப்பட்ட இன்னொரு கட்டிடக்கலை கூறு சிலையங்களாகும். இவற்றைப் படிமாகர எனவும் அழைப்பர். வழிபாட்டிற்காகப் புத்தருடைய சிலைகளை உபயோகிக்கத் தொடங்கிய காலம் தொட்டு, புத்தர் சிலைகளை வைத்துப் பாதுகாப்பதற்காக இச்சிலையகங்கள் ஆக்கப்பட்டன. இச்சிலையகங்களின் கட்டிட வடிவ அமைப்பானது இலங்கைக்கே உரியதல்லாமல், தென்னாசியா முழுவதிலுமே அவை பரந்து காணப்படுகின்றன என கா. இந்திரபாலா குறிப்பிட்டுள்ளார். அனுராதபுரத்தில் விஜயராம, பங்குலிய ஆகிய இடங்களில் காணப்படும் நிலையகங்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.

இச்சிலையகங்கள் பிற்பட்ட அனுராதபுர காலக்கட்டிடக் கலைக்குரிய ஒரு கூறாகும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் முற்பட்ட அனுராதபுர காலத்தில் ஆசனகர என்றழைக்கப்பட்ட அரியணை வீடுகளே பிற்பட்ட அனுராதபுர காலத்தில் சிலையங்களாக மாற்றப்பட்டன. புத்தரின் புனித பாதச் சுவட்டினையுடைய சிரிபதுல் என்ற கற்களையும், அரியணையையும் (ஆசன) வழிபட்டு வந்த முற்பட்ட அனுராதபுரகால மக்கள் பின்னர் அவ்விடத்தில் புத்தரின் திருவுருவச் சிலைகளை வைத்து வழிபட்டு வந்தனர். மிகப்பழைய சிலையகங்களின் மாதிரி நீள்சதுரமாக அமைந்திருந்தது. அனுராதபுரத்திலுள்ள கெடிகே கட்டிடத்தின் எஞ்சிய பகுதிகளை இத்தகைய படிமனையாகக் கொள்கின்றனர்.

விகாரைக் கட்டிடக்கலை மரபு

பௌத்தம் பரவிய பின்னரே, இலங்கையில் அழியாத தன்மைகொண்ட கட்டிடங்கள் தோன்றலாயின. ஆனால் இவையும் முற்றிலும் கல்லாலானவையாக இருப்பதில்லை. மேற்கோப்புப் பெரும்பாலும் மரம் போன்ற அழியும் பொருட்களால் ஆனவையாகவே இருந்தன. எனவேதான், பெரும்பாலான சமயக் கட்டிடங்கள் முழுமையாகப் பேணப்படாது சிதைவடைந்து போயின. பௌத்தம் பரவியபோது, இரண்டு நோக்கங்களைக் கொண்ட சமயக் கட்டிடங்கள் எழுந்தன. பௌத்த குருமார்களுக்கு வேண்டிய உறைவிடங்கள், சங்கக் கருமங்கள் ஆற்றுதல் முதலானவற்றுக்கு வேண்டிய கட்டிடங்கள் ஒரு வகையாகும். இவை பெரும்பாலும் **விகாரைகள** அல்லது **ஆராமங்கள** எனப்படும். மிகிந்தலை முதலான இடங்களிற் காணப்படும் **குகைகளே** முதன்முதலில் பிக்குகளின் உறைவிடங்களாகப் பயன்படுத்தப்பட்டன. இயற்கையாகவே, பாறைகளில் உண்டான குகைகளுக்குத் தண்ணீர் உள்ளே புகாவண்ணம் பாறையில் ஒரு வரியை முன்தள்ளும் வகையில் அமைத்துத் **துறவோரகங்களாக** அவை மாற்றப்பட்டன. (இக்குகைகளைச் செப்பனிட்டு வழங்கியோர் பொறித்த பிராமிக் கல்வெட்டுக்களால், இவை மேலும் முக்கியம் பெற்றுள்ளன). ஆனால் தேவானம்பியதிசன் காலத்திலேயே, மகாவிகாரை முதலான விகாரைகள் நிறுவப்படலாயின. இவற்றில் கட்டிட அமைப்புப்பற்றி ஏதும் கூறமுடியாதிருக்கின்றோம். தொடர்ச்சியாக ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் தேவானம்பியதிசனது காலத்து விகாரைகள், காலாகாலங்களில் ஏற்பட்ட மாறுதல்களுடன், பௌத்த பிக்குகளின் உறைவிடங்களாக விளங்கி வந்துள்ளதால், அவை பழைய கட்டிட அமைப்பைக் கொண்டிருத்தல் இயலாது.

இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் வருங் குறிப்புக்களால், ஒரு சில செய்திகளை அறியமுடிந்துள்ளது. மகிந்தர் போன்ற தேரர்கள் வாழ்வதற்கு வழங்கப்பட்ட கட்டிடங்கள் **பிரசாதங்கள** எனப்பட்டன. பிக்குகளைச் சங்கத்திற் புதிதாகச் சேர்ப்பதற்கான உபசம்பதா என்ற சடங்கு நடைபெற்ற இடம் 'மாளக' எனப்பட்டது. உபோசத கர என்ற கட்டிடத்தில், குற்றங்களை ஒப்புக்கொள்ளல் போன்ற சடங்குகளும், பிற சங்கக் கருமங்களும் நடைபெறும். துட்டகாமணி நிறுவிய லோகபாசாத இத்தகைய கட்டிடமாகும். பிந்திய அனுராதபுர காலத்தில், பதானகர, சன்னிபாத-சால, மஹாபாலீ முதலான சமயக் கட்டிடங்கள் விகாரைகளின் உறுப்புக்களாக அமைந்து, பிக்குகளின் வெவ்வேறு தேவைகளை நிறைவு செய்தன.

பௌத்தகுருமார் வதியும் கட்டிட வகையில் விகாரைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். இலங்கையில் விகாரைகளின் தோற்றத்தினை பௌத்தமத வருகையுடனேயே நாம் காணுகின்றோம். அனுராதபுர காலப்பரப்பில் அமைக்கப்பட்ட விகாரைகளுள் **மகாவிகாரை, அபயகிரிவிகாரை, ஜேதவனவிகாரை** என்பன முக்கியமானவையாகும். தொடக்ககாலத்தில் பௌத்த குருமாரும், துறவிகளும் கற்பாறை உறைவிடங்களையே மையமாகக்கொண்டு வாழ்ந்து வந்தனர். இதனாலேயே விகாரைகளும் அக்குகைகளை மையமாகக்கொண்டே அமைக்கப் பட்டிருந்தமையைக் காணமுடிகிறது. இவ்விகாரைக் கட்டிடக்கலை அமைப்பு முறையில் இலங்கைக்கு வெளியிருந்து கொண்டுவரப்பட்ட கட்டிட வடிவம் இங்கு விகாரைகளின் அடித்தளமாக அமையவில்லை. அனுராதபுரகால பௌத்த விகாரைகளை ஆராய்ந்த சேனக்க பண்டாரநாயக்க என்பவர் **'உள்நாட்டுக் கட்டிட மரபே பௌத்த விகாரைக் கட்டிடக்கலை வளர்ச்சிக்கு முக்கிய ஊற்றாக அமைந்தது'** என்று குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

விகாரைகளுடன் தொடர்புபட்ட அங்கங்களாக உபோதகர என அழைக்கப்படும் உபவாச மண்டபங்கள், தான மண்டபங்கள், பாசரதங்கள், சந்திபாதசால எனப்படும் பேரவை மண்டபங்கள் என்பன அமைந்து காணப்பட்டன. இவை யாவும் விகாரை யுடன் இணைந்த முக்கிய அங்களாகும். 'உபாசதகர' என்பது பல்வேறுபட்ட தேவைகளுக்காக செங்கல்லால் கட்டப்பட்ட பல மாடிகளைக் கொண்ட கட்டிட மாகும். உலோக மகாபாயா என்ற கட்டிடம் இத்தகைய கட்டிட வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். மதகுருமார் வசிப்பதற்காகவும், பாவ மன்னிப்பு பெறுவதற்காகவும் இவ்வகைக் கட்டிடங்கள் உபயோகிக்கப்பட்டன.

தான மண்டபங்கள் என்பவை பௌத்த பிக்குகளுக்குரிய கஞ்சி, சோறு என்பனவற்றை வைத்திருக்கும் பெருந்தொட்டிகளையுடைய கட்டிடங்களாகும். அனுராதபுரத்தில் தந்ததாதுக் கோயிலுக்கு அண்மையிலுள்ள இத்தகைய ஒரு தொட்டியில் சாசனமொன்றும் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிக்குகளும், பொதுமக்களும் குறிப்பிட்ட நாட்களில் ஒருங்கே கூடியிருக்கும் மண்டபமாகப் பேரவை மண்டபங்கள் அமைந்து காணப்படுகின்றன. இவ்வாறாக விகாரைக்கலையானது பல்வேறு கட்டிடக் கூறுகளுடன் இலங்கைக்கேயுரிய தனித்துவமான சிறப்பியல்புகளுடன் கொண்டு விளங்கியமையைக் காணலாம்.

இந்த விகாரைகளானவை முற்பட்ட அனுராதபுரகாலத்தில் அதன் தளங்கள் செதுக்கிய கற்களினால் செய்யப்பட்டிருந்தன. பிற்பட்ட அனுராதபுரகாலத்தில் அத்தளங்களானவை செங்கட்டிகளால் பரவபடப்டிருந்தன. முற்பட்ட அனுராதபுர காலத்து விகாரைகளின் மேன்மாடிகள் மரத்தினால் அமைக்கப்பட்டிருக்க, பிற்பட்ட காலத்தில் அவை செங்கற் தளத்தினால் பரவப்பட்டிருந்தன. கூரை யமைப்பினைப் பொறுத்தவரையிலும் முற்பட்ட அனுராதபுரகாலத்தில் மரங்களினால் ஆக்கப் பட்டவையாயிருக்க, பிற்பட்ட அனுராதபுரகாலத்தில் அவை செங்கட்டிகளுக்கு மாற்றப்பட்டிருந்தன. அனுராதபுரகாலத்தின் இறுதிப்பகுதியில் அமைக்கப்பட்ட விகாரைகள் யாவும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அதிர்ஷடானம், வாயில்கள், படிக்கட்டுக்கள், துவாரபாலகர்கள் ஆகியன பிற்கால விகாரைகளில் செறிந்திருந்த அலங்கார வேலைப்பாடுகளாக அமைந்தன. வட இந்திய குப்த பண்பாட்டின் கலைச் செல்வாக்கும், காஞ்சிப்பல்லவ கட்டிடக்கலைச் செல்வாக்குமே பிற்பட்ட அனுராதபுரகால விகாரைக்கட்டிடக்கலை மரபினை அலங்கரித்திருந்த பின்னியாக அமைந்தன என்றால் மிகையாகாது. இதற்கு இசுருமுனியாவிலுள்ள காதலர் சிற்பம் எனப்பெயரிடப்பட்ட சிற்பத் தொகுதி ஒரு சிறப்புதாரணமாகின்றது.

பிற பௌத்த வழிபாட்டு நிலையங்கள: தாகபங்கள், வட்டதாகே என்பன அல்லாத பிற வழிபாட்டு நிலையங்கள் பற்றி நாம் மிகச்சுருக்கமாக இனிக் கூறுவோம். தொடக்கத்திலிருந்தே பௌத்தர்களின் வழிபாட்டுக்குரியவற்றுள், **போதி மரமும** மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. **போதி-கர** என்ற கட்டிடம் ஒரு காலத்தில் இந்தியாவிலும், இலங்கையிலும் பெருவழக்கில் இருந்த கட்டிடமாயினும், நில்லக்காமத்தில் (குருணாகலைப் பகுதியிலுள்ளது) மட்டும் ஒரு போதிகரவின் சிதைவுகள் குறிப்பிடத்தக்களவு இன்றுவரை பேணப் பட்டுள்ளன. இக்கட்டிடத்தில் இரு மேடைகள் உண்டு. உயரமான மேடையிலேயே போதிமரம் உண்டு. பதிவான இரண்டாவது மேடையைச் சுற்றி 7 அடி உயரமுடைய ஒரு கற்சுவர் கட்டப்பட்டுள்ளது. கீழ் மேடையில் இருந்த கற்றூண்கள், முன்னர் போதிமரத்துக்குப் பாதுகாப்பளித்த கூடாரத்தைத் தாங்கிநின்றன. கயாவிலுள்ள போதிமரத்தின் கீழ் புத்தர் இருந்த **'வஜ்ராசன'** என்பதனை நினைவுக்குக் கொண்டுவரும் முறையில், **ஆசன** அல்லது பீடவழிபாடும் அனுராதபுர காலத்திலிருந்து வந்தது. ஆசனங்களைக் கொண்டு நிறவப்பட்ட தனிக்கோவில்கள் எழுந்தன. இவ்வாறு எழுந்த கோவில்களில், நீள்சதுர வடிவுடைய செதுக்கப்பெற்ற கற்கள் உயரத்தில் வைக்கப்பட்டு வழிபடப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஓரிடத்தில் இன்றும் காணக்கூடியதாக இவ்வகைக் கட்டிடம் உண்டு. இத்தகைய கோவில்கள் **'ஆசனகர'** எனப்பட்டன. படிமமனை 'கெடிகே' போன்ற பிற கட்டிட வகைகளும் அனுராதபுர காலத்திலிருந்தன.

அனுராதபுரகாலக் கட்டிடங்களில் முழுவதும் கல்லாலான கட்டிடங்கள் மிகக்குறைவு. செங்கல், சுண்ணக்கல், மரம் முதலானவை அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. தூண்கள் முதலில் மரத்தால் ஆக்கப்பட்டன. பின்னரே, கல்லில் குடைத்தெடுக்கப்பட்ட தூண்கள் உபயோகிக்கப்பட்டன. பிந்திய அனுராதபுரகாலத்தில் அதிகமாகக் கல்லைப் பயன்படுத்தலாயினர். **பல்லவா**

பாணியைப் பின்பற்றி நாலந்தாவில் அமைக்கப்பட்ட கெடிகே தனியே கல்லால் அமைக்கப்பட்டது. தெவுந்தர (தேவிநுவர)வில் உள்ள பிரசித்தி பெற்ற உற்பலவண்ணன் (விஷ்ணு) கோவிலும் பல்லவர் கலை மரபின் சாயலைப் பின்பற்றியதெனக் கொள்வர். இவ்வாறாக, அனுராதபுரகாலத்தில் சமயத் தொடர்பான கட்டிடங்களே மிகுதியும் காணப்பட்டன. கட்டிடங்களில் சில பகுதிகள் மட்டுமே அழியாத பொருள்களாலானமையால், அவை முழுமையாக, இன்றுவரை பேணப்படவில்லை. இருப்பினும், பழைய அனுராதபுரம் முதுலான இடங்களில் காணப்படும் கட்டிடச் சிதைவுகள் அனுராதபுர காலத்தின் கலையெழிலை நினைவூட்டுவனவாகவுள்ளன.

ஆ. சிற்பக்கலை வளர்ச்சி

முந்திய அனுராதபுரகாலம்: சமயக் கட்டிடங்களின் சில பாகங்களை அழகுபடுத்தவே சிற்பங்கள் பெரும்பாலம் உதவியுள்ளன. புத்தரின் சில திருவுருவங்கள் தனியாகச் செதுக்கப்பட்டிருப்பினும், அவை பெரும்பாலும் பிந்திய அனுராதபுர காலத்தவையாகவே கொள்ளப்படுகின்றன. இலங்கைக் கட்டிடக் கலையில் **மௌரியா** செல்வாக்கும், பின்னர் பல்லவர் செல்வாக்கும் எற்பட்டது போலவே, சிற்பக்கலை வளர்ச்சியும் இந்தியக் கலை வளர்ச்சியின் செல்வாக்கைப் பெற்றதை நாம் காண்கின்றோம். முந்திய அனுராதபுரகாலத்தில் மௌரிய, ஆந்திரக்கலை மரபுகளே சிற்பத்துறையிலும் செல்வாக்குப் பெற்றிருந்தன. ஆனாலும் இலங்கைச் சிற்பிகள் இந்த நாட்டு நிலைமைகளுக்கேற்ப ஓரளவு தனித்தன்மையுடைய சில மரபுகளை வளர்த்து வரலாயினர். அக்காலத்தில் சிற்ப வேலைகளைப் பெரும்பாலும் கருங்கல், தீப்பாறைக் கல் போன்ற கடினமான கற்களிலும், சுண்ணக்கல்லிலும் செய்தனர். சில வேளைகளில் யானைத்தந்தம், செப்பு, வெண்கலம் போன்ற பொருட்களும் நுட்பம்வாய்ந்த சிற்பவேலைகளுக்குப் பயன்பட்டன.

தாபகங்களின் தளத்துடன் இணைந்த **வாகல்கடக**களில் இடம்பெற்ற **சிற்பத்தூண்கள**, பல வகைச் சிற்பவேலைகள் கொண்டவை. தூண்களின் முகப்புப் பாகங்கள் சில பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் யானை, அலங்கரிக்கப்பட்ட சாடி, மயில், முதலானவற்றின் உருவங்கள் (புடைப்பொவ முறையில்) செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்ப உருவங்கள், தாபகத்துக்குத் தாபகம் வேறுபடும். பூச்சாடியிலிருந்து வெளிவரும் மலர்க்கொடிகள் சிலவற்றை அலங்கரிக்கின்றன. மிகிந்தலையிலுள்ள கண்டக சேத்தியத்திலும், அனுராதபுரத்தில் **அபயகிரி, ஜெதவன** தாகபங்களிலும் உள்ள வாகல் கடக் களில் உள்ள சிற்பத்தூண்கள் இவ்வகைச் சிற்பவேலைகள் அமைந்தவையாகும் இச்சிற்பங்கள் சாஞ்சியிலும், **அமராவத**யிலும் உள்ள சிற்பங்களை நினைவு படுத்துபவையாதலால் அங்கள்ள கலைமரபுகள் இலங்கைக்குப் பரவியிருத்தல் புலனாகும். அமராவதியிலிருந்து கொண்டுவரப்பட்ட சலவைக்கற் சிற்பங்கள் **(மாயாதேவியின** கனவு போன்றவை) இதை மேலும் வலியுறுத்தி நிற்கின்றன. அமராவதீ கலைமரபுக் குரிய சலவைக் கற் புத்தர் சிலை ஒன்று

மகாஇலுப்பலாமையிற் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அக்கலைமரபைச் சேர்ந்த நின்ற புத்தரின் சிலைகளுக்குரிய சிறப்பியல்புகள் இதற்கும் உண்டு. இதுவும் ஆந்திர தேசத்திலேயே செதுக்கப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். சுண்ணக்கல்லில் செதுக்கப்பட்ட சில புத்தர் திருவுருவங்கள், ருவன்வலி தாகபம் முதலான இடங்களிற் காணப்பட்டன. இதே காலப்பகுதியைச் சேர்ந்த செப்பு உருவங்களும், யானைத்தந்த உருவமும் ஆராய்ச்சியாளருக்குக் கிட்டியுள்ளன. மட்பாண்டத் தொழில், பொற்கொல்லனது தொழில் ஆதியனவும் நல்ல வளர்ச்சி எய்தியிருந்ததைச் சில எடுத்துக்காட்டுக்கள் மூலம் உணரக் கூடியதாகவுள்ளது.

பிந்திய அனுராதபுர காலம்

இக்காலப்பகுதியில், கருங்கல்லிற் சிற்பவேலை செய்வதில் இலங்கைச் சிற்பிகள் தேர்ச்சி பெற்றிருந்தனர். புடைப்போவங்கள், உருவச்சிலைகள் ஆகிய இருவகைச் சிற்பவேலைகளிலும் அவர்கள் தமது திறமையை வெளிக்காட்டினர். குப்தர் பண்பாட்டின் செல்வாக்கு இலங்கையிற் பரவியமையால் சிற்ப வடிவங்களும் குப்தர் பாணியில் உருவாக்கப்பட்டன. உருவங்களின் கூறுகள் திருந்திய முறையிலும், அமைதியும் வனப்பும் வெளித்தோன்றும் வகையிலும் செதுக்கப்பட்டிருந்ததால், இசுருமுனியாவில் உள்ள புகழ்பெற்ற காதலர் சோடிச் சிற்பம் போன்றவை குப்தர் பாணியின் தனிப் பண்புகளைக் கொண்டிருத்தல் தெளிவு. இசுருமுனியாவிலுள்ள மற்றொரு சிற்பம் பெரும் பாராட்டுக்களைப் பெற்றதாகும். 7ம் நூற்றாண்டுப் பல்லவ கலைமரபின் தாக்கம் இச்சிற்பத்திலிருப்ப தாகக் கூறுவர். புடைப்போவ முறையில் அமைக்கப்பட்ட இருக்கம் மனிதனது உருவமும், அவனுக்குப் பின்னால் பாறையினுள்ளிருந்து வெளிவருவது போன்ற அமைப்பில் செதுக்கப்பெற்ற **குதிரையின் தலை**யும் பல்லவ பாணியின் சாயலைக் கொண்டுள்ளன. மனிதனது உருவத்தைச் செதுக்குவதில் கையாளப்பட்டுள்ள கட்டுப்பாடு, அணிகலன்களின்மையால் மனிதனது சொந்த உருவ இலட்சணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருத்தல், கை, கால்கள் நெடிதாகக் காட்டப்படல் பல்லவச் சிற்பங்களுக்கும் இதற்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளாம். இதேயிடத்திற் காணப்படும் யானைகளின் உருவங்கள் கங்கையின் வருகையென்ற மாமல்லபுரச் சிற்பத்தை நினைவுக்குக் கொண்டுவரும். **கித்துல் பவுவவில** உள்ள ஒரு போதிசத்துவ சிலையும் பல்லவர் மரபையே பின்பற்றியதாகக் கூறுவர்.

பிந்திய அனுராதபுரகாலக் கட்டிடங்களின் வாயில்கள் பல சிற்ப வேலைகளால் அணிசெய்யப்பட்டன. சந்திர வட்டப்படிக்கல், நாகதுவார பாலர்கள், வேலைப்பாடமைந்த படிக்கட்டு, கந்தணி என்பன இவ்வாயில்களில் இடம்பெற்ற சிற்ப அமைப்புக்களாகும். **திரியாயில** உள்ள **வட்டதாகேயின** வாயிலிலுள்ள துவாரபாலகர்கள் பல்லவ முறையையும், அனுராதபுரத்தில் இரத்தின பாசாதவின் வாயிலிற் காணப்படும் நாகராசன் வடஇந்தியாவைச் சேர்ந்த பால மரபையும் தழுவியதாகக் கொள்வர். சந்திரவட்டப் படிக்கற்களிலேயே அனுராதபுர காலச்சிற்பிகள் தமது முழுத்திறமையையும் காட்டியுள்ளனர். இவற்றின் நடுவில் ஒரு தாமரையின் உருவமும், இதைச் சுற்றிவர ஒழுங்காக வளைந்து செல்லும கோடுகளிடையே பல்வகை மிருகங்களின் உருவங்களும் வரிசை வரிசையாகச்

செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் பகுதிகள் ஒன்றாக இணைவதில் ஒரு முழுமையும் எழிலும் பெறுவதைக் காணலாம். மேலும் இவற்றிலுள்ள யானைகள் முதலான உருவங்கள் உயிர்த்துடிப்புள்ள வகையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கட்டிடங்களின் பகுதிகளாக அமையாது, தனிச் சிற்பங்களாகவுள்ள புத்தல் உருவங்கள் காலப்போக்கில் மிகவும் பிரமாண்டமான உருவில் செதுக்கப் படலாயின. புட்டளவுக் கண்மையில் உள்ள மாலிகா வெலவில் உள் சுண்ணக் கல்லாலான புத்தர் உருவம் 34 அடி உயரமுடையது. இதன் காலம் 7ம் நூற்றாண்டாகலாம். **அவுக்கானவில** உள்ள புத்தரின் சிலை இடைவிடப் பெரியது. **புதுருவெகலையில்** (ஊவாமாகாணத்தில்) உள்ள புத்தர்சிலை இயற்கைப் பாறையிலேயே செதுக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் ஐம்பது அடிக்கு மேல் வரும். இச்சிலையின் இருமருங்கிலும் போதிசத்துவர் (அவலோகிதேஸ்வரர், மஞ்சுஸ்ரீ) உருவங்களுள்ளன. 7ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவையாக இவை இருத்தல்கூடும். **அவலோகிதேஸ்வரரின** மற்றொரு தனியுருவம் வெலிகமையில் உள்ளது. வெண்கலத்திலும், மகாயானர்களுக்குரிய பல உருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அனுராதபுரத்திலும், பங்குளி, மதிரிகிரி போன்ற பிற இடங்களிலும் உள்ள இருக்கும் புத்தர்சிலைகளும் பிந்திய அனுராதபுர காலத்தைச் சேர்ந்தவையே. இச்சிலைகளும் ஓரளவு பெரிய சிலைகள் என்றே கூறவேண்டும். இவற்றுள் அனுராதபுரத்தில் அபயகிரிக்கண்மையிலும் பள்குளி யிலும் உள்ள புத்தர் சிலைகள் பிரசித்தி பெற்றவை. பிந்திய அனுராதபுரகாலத்து வெண்கலச் சிலைகள் சில, கொழும்பு அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை மகாயானச் சார்புடையவை. இவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கது, மைத்திரேய போதிசத்துவர் சிலையாகும். ஒன்றரை அடி உயரமுள்ள இச்சிலை தூபாராம தாகபத்துக்கு அண்மையிற் கண்டெடுக்கப்பட்டது. திருகோணமலைக்கண்மையிற் கண்டெடுக்கப்பட்டு இப்போது இலண்டன் அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள ஒரு வெண்கலச்சிலை பத்தினித் தெய்வத்தினுடையதாகக் கருதப்பட்டது. தாரா என்ற மகாயான தேவதையின் பெயரே இப்போது அதற்குரியதாகக் கொள்ளப்படுகின்றது.

இ. ஓவியம்

சீகிரி ஓவியங்கள: காலவேடுகளிலும், பாலி வியாக்கியானங்களிலும் ஓவியக்கலை பற்றியும் ஓவியர்கள் பற்றியும் குறிப்புக்கள் வரினும் முந்திய அனுராதபுர காலத்து ஓவியத்தின் நிலைபற்றி எதுவும் கூறும்நிலையில் நாம் இல்லை. அக்காலத்து ஓவியங்கள் ஒன்றேனும் எமக்குக் கிட்டாது போனமையே இதற்குக் காரணமாகும். 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த சீகிரி ஓவியங்களே எமக்கு கிடைத்த மிகப்பழைய ஓவியங்களாகும். சீகிரியைத் தலைநகராக்கிய 1ம் காசியப்பன், குன்றினது மேற்குப் புறத்தின் பெரும் பகுதியை அழுத்தமாக்கி அதன்மேல் சுண்ணச்சாந்தைப் பூசியபின், நூற்றுக்கும் அதிகமான அணங்குகளின் ஓவியங்களைத் தீட்டுவித்தான். இவற்றுள், இருபத்தொரு உருவங்கள் மட்டுமே

இன்றுவரை பேணப்பட்டுள்ளன. ஒரு பாறையொதுக்கில், 1500 ஆண்டுகளுக்கு மேல் இயற்கையால் ஏற்படும் அழிவுகளைத் தாங்கித் தம் பொலிவோ, வனப்போ குன்றாது இக்காலம் வரை இவை தப்பி வந்துள்ளன. இச்சுவரோவியங்களில் தீட்டப்பட்டிருக்கும் அணங்குகளில், சிலர் சோடிகளாகவும், வேறுசிலர் தனியாகவும் உள்ளனர். முகில்களில் மிதப்பதுபோல, அரைக்கு மேலுள்ள இவர்களின் வண்ண எழில் தோற்றங்கள் உள்ளன. சிலர் அரைக்குக் கீழேமட்டும் உடை தரித்துள்ளனர். பெரும்பாலானவர் மலர்களைக் கையில் தாங்கியவண்ணமும், ஒரு சிலர் மலர்த்தட்டுக்களை ஏந்திய வண்ணமும் காட்சியளிக்கின்றனர். இச் சுவரோவியங்களிலுள்ள பெண்களைக் காசியப்பனது அந்தப்புர மகளிராகவும், தேவகன்னியராகவும் பலவாறாக அறிஞர் குறிப்பிடுவர். இவர்கள் யாராக இருந்தாலும், உலகக் கலைப்பண்பறிஞர்களின் ஒருமித்த பாராட்டைப் பெற்ற சுவரோவியங்கள் இவை என்பதை நாம் குறிப்பிடவேண்டும். ஏறக்குறைய இதே காலத்தில் இந்தியாவில் அஜந்தாவில் உள்ள குகைகளில் வரையப்பட்ட வண்ண ஓவியங்களும் இதே கலைமரபில் அமைந்தமை ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுவிட்டது. சீகிரியாவிலுள்ள ஓவியச் செல்வங்களை, இயற்கையின் கோரங்களினின்றும் அங்குள்ள கற்பாறை பேணியதைப்போல, நமது சமுதாயத்தின் விரோதிகளான கலை அழிவுக்காரரிலிருந்தும் இவற்றைப் பேணுதல் அவசியமாகி விட்டது. சீகிரிச் சுவரோவியங்கள் வரையப்பட்ட காலத்தில் கண்டிக்கு அண்மையில் ஹிந்தகலையில் உள்ள குகையொன்றிலும் இவை போன்ற சுவரோவியங்கள் தீட்டப் பெற்றுள்ளன. சக்கக்கடவுள் (இந்திரன்) புத்தரிடம் வருகைதந்த கதையைக் கூறுவதாகத் தொடர்ச்சியாக இவை அமைந்திருக்கின்றன. இவ்வகையில் இவற்றுக்கும் அஜந்தாக் குகையோவியங்களுக்கும் ஒற்றமையுண்டு. ஸ்தூபங் களில் உள்ள எச்சக்கூடங்களிலும் நிறைவுபெறா ஓவியங்கள் காணப்படினும், இவை அத்துணை முக்கியம் வாய்ந்தவையல்ல.

அனுராதபுரகால சந்திரவட்டக்கல் கலைமரபு

இலங்கைக்கே உரிய பௌத்தக் கட்டிடக் கலைக்கூறுகளுள் பிரதான அம்சமாக சந்திரவட்டக்கல் கலை விளங்குகிறது. இச்சந்திர வட்டக்கல்லானது ஒரு பௌத்த வழிபாட்டுத்தலத்தின் வாயிலிலோ அல்லது புத்தர் சிலையகத்தின் முன்போ அல்லது புத்தர் சிலையகத்தின் முன்போ அல்லது ஸ்தூபியின் வாயிலிலோ படியின் அடித்தளத்தில் அமைக்கப்பட்டது. பொதுவாக சந்திரவட்டக்கல்லானது ஸ்தூபி வழிபாட்டு மையத்தில் அதன் பிரதான வாயிலில் அமைக்கப்படுவதே மரபாகும். எனவே பிரதான வாயிலின் படிக்கட்டின் கீழ்ப்பாகத்தில் அரை வட்ட வடிவமுடையதாக (Semi - Circle) காணப்படும். ஒரு கற்பலகையே சந்திரவட்டக்கல் என அடையாளம் காணமுடியும்.

இலங்கையில் சந்திரவட்டக்கல் கலையின் வளர்ச்சியினை நோக்கும் முன்பு இக்கலை மரபின் சில இயல்புகளை அறிந்துகொள்வது பொருத்தமாகும். சந்திர வட்டக்கல் வடிவமானது தென்னிந்தியாவில் நாகார்சனகொண்டா, அமராவதி ஆகிய இரு மையங்களிலே எவ்விதமான அலங்காரச் செதுக்கல் வேலைப்பாடுகளு மின்றி வெறுமையான கற்தட்டங்களாகத் தோற்றுவிக்கப்பட்டிருந்தன.

நாகர்ச்சுனகொண்டாவில் காணப்படும். சந்திரவட்டக்கல் மூன்று கற்துண்டங் களுடைய கற்தட்டமாகவே இணைந்து வைக்கப்பட்டுள்ள தன்மையைக் காண்கின்றோம். (இலங்கையில் கந்தரோடையில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட ஸ்தாபிகளின் அழிபாடுகளிடையே புராதனமான ஒரு சந்திரவட்டக்கல் எவ்விதமான செதுக்கல் வேலைப்பாடுகளுமின்றி, ஆரங்களுடன் கூடியவையாகக் காணப்படுவது அமராவதிக் கலைமரபினூடாக தொடர்பினை நிலை நிறுத்துவதாக உள்ளது.)

இலங்கையிற் கிடைத்த சந்திர வட்டக்கற்கலையின் பிரதான இயல்புகளை நோக்கும் போது, இலங்கையிலேதான் அவை மிகவும் நெருக்கமான முறையில், பல வளைய ஆரங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வளையச் சிறையில் தாமரைப்பூ இதழ்களைக் கொண்டுள்ள சந்திரவட்டக்கல்லானது முதலில் அன்னம், அடுத்து யானை, எருது, குதிரை, சிங்கம் என ஒரே ஆரச்சிறையிலுள்ள அசையும் மிருக வடிவங்களும் அதனையடுத்து கொடிப்பின்னல் வரிசையென அடுக்கடுக்காகச் செதுக்கப்பட்டுள்ள தன்மையினைக் காணலாம். தீ நாக்குகள் வடிவம் சந்திரவட்டக்கல்லின் வெளி விளிம்பில் செதுக்கப்பட்டிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

இலங்கையிலுள்ள சந்திரவட்டக்கல்லில் மிகப்பழமைவாய்ந்தது மிகிந்தலையில் உள்ள சந்திரவட்டக்கல் ஆகும். இது கி.மு.3ஆம் நூற்றாண்டுக்கு உரியதாதலால் எவ்விதமான செதுக்கல் வேலைப்பாடுகளுமின்றி வெறுமையான தாகவே உள்ளது. (கந்தரோடையில் கிடைத்த சந்திர வட்டக்கற்பலகையை ஒத்துள்ள தன்மையை மிகிந்தலையின் உதாரணம் கொண்டுள்ளது எனலாம்) ஆனால் ஒரு பிரதான வேறுபாடு என்னவென்றால் மிகுந்தலையில் உள்ள சந்திரவட்டக்கல்லின் உட்பகுதி முழுவதுமாக பிராமிவரிவடிவம் தீட்டப்பட்டுள்ளது என்பதாகும். சில வரலாற்றாசிரியர்கள் அவ்வரிவடிவத்தின் தன்மையைக் கொண்டு அச்சந்திர வட்டக்கல் ஆனது கி.மு 6ஆம் நூற்றாண்டுக்குரியது என மதிப்பீடு செய்வதனையும் காணலாம். அபயகிரி தாதுகோபத்திலுள்ள சந்திரவட்டக்கல் கி.மு. 1ஆம் நூற்றாண்டுக்குரியதெனக் கொள்ளப்படுகிறது. இச்சந்திர வட்டக் கல்லானது நகர்ச்சுனகொண்டாவில் எவ்வாறு மூன்று கற்பலகைகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு சந்திரவட்டக் கல்லாக்கப்பட்டதோ அதனையொத்த இங்கு பல கற்பலகைத் துண்டுகள் ஒன்றிணைக்கப்பட்டு (Composite Moonstone) ஒரு சந்திரவட்டக்க கல்லாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இச்சந்திரவட்டகல்லில் இரு ஆரச்சிறைகளை உள்ளடக்கிய வரைபுகளே காணப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

அனுராதபுரத்திலுள்ள Queen's Pavil-ion இல் உள்ள சந்திர வட்டக்கல் கலைத்துவ ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இதில் யானை, குதிரை, சிங்கம், எருது என்றவோர் ஒழுங்கில் மிருகங்கள் அசையும் நிலையில் ஒரே ஆரச்சிறையினுள் செதுக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இம்மிருகங்கள் யாவும் இடமிருந்து வலமாக அசையும் நிலையில் சித்தரிக்கப் பட்டுள்ளன. மொத்தமாக 08 ஆரச்சிறைகளுடன் காணப்படும் இச்சந்திர வட்டக்

கல்லானது தனியான ஒரு பிரிவிற்குள் (5ஆம் ஆரைச் சிறையினுள்) அன்னப்பட்சி வரிசையைத் தாங்கியுள்ளமையைக் காணலாம். அனுராதபுரத்திலுள்ள Bo-Tree Temple காணப்படும் சந்திர வட்டக்கல்லானது ஒழுங்கற்ற முறையில் ஒரே ஆரச் சிறையினுள் மிருக உருவங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் யானை உருவத்தினைப் பொறுத்தமட்டில் அது ஒன்றுவிட்டு ஒன்றாக வரும் நிலையில் செதுக்கப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. ஆனால் யானை உருவத்தினைப் பொறுத்தமட்டில் அது ஒன்றுவிட்டு ஒன்றாக வரும் நிலையில் செதுக்கப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. இச்சந்திரவட்டக் கல்லின் தனித்துவமான அம்சம் என்னவென்றால் சிங்க வடிவம் இடம்பெற்றிருக்காதவோர் நிலையும், தீச்சுவாலை வரிசையொன்று முதன்முதலாக சந்திரவட்டக் கல்லின் உட்பாகத்தில் இடம்பெற்றிருப்பதுமேயாகும். இங்கு படர்கொடி வரிசை ஒன்றும் தனியாக இடம் பெற்றிருப்பதனைக் காணலாம். ரூவான்வலிசாயா, பசவக்குளம் ஆகிய மையங்களிலுள்ள சந்திரவட்டக்கற்களும் சிற்பக்கலை ரீதியாக தனித்துவம் வாய்ந்தவையாக மிளிர்கின்றன.

இலங்கைத்தீவின் கலைவரலாறானது நான்கு பிரதான இயற்கைச் சக்திகளினால் செல்வாக்குப்பெற்ற நிலையில் அதன் அரசியல் நீரோட்டத்துடன் இணைத்து வளர்க்கப்பட்டிருந்தமையைக் காணலாம். அச்சக்திகளாவன.

1. தீவக நிலைக்குரிய சமுத்திரத்தின் செல்வாக்கு
2. புராதன நீர்ப்பாசனவியலின் அடிப்படையாக அமைந்த நதிகளின் செல்வாக்கு
3. தீபகற்ப இந்திய நிலப்பரப்பிற்கு மிகவும் அண்மித்ததாக அமைந்த அமைவிடத்தின் செல்வாக்கு
4. மேற்கும், கிழக்கும் இணையப்பெற்ற சர்வதேச வாணிப மார்க்கங்களின் வழிவந்த செல்வாக்கு என்பனவாகும்.

இந்நான்கு இயற்கையான உறுப்புக்களினூடாக உருவகிக்கப்பட்ட கலைமரபுகள் ஒரு பருவ காற்று நாட்டிற்குரிய சீதோஷ்ண காலநிலை அம்சங்களுக்கேற்ப மெருகூட்டப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டிருந்த வரன் முறையையே இலங்கையின் கலை மரபுகளின் வளர்ச்சி எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறான ஒரு பின்னணியில் இலங்கையின் கலை மரபுகள் முறையே சமுத்திரவியல், பண்பாட்டினதும், நீரியல் நாகரிகத்தினதும், இந்தியப் பண்பாட்டினதும், வாணிபச் செழிப்பானதும் இயல்புகளைத் துல்லியமாக வெளிப்படுத்துவனவாக அமைய ஏதுவாயிற்று. இவ்வகையான செல்வாக்கு நிலைகளுக்கும் அப்பால் இலங்கையின் கலை மரபுகளில் இனத்துவ ரீதியான சிங்கள பௌத்த அடையாளங் காணலின் அடிப்படையிலான கலையின் இயல்புகளையும் கலை வரலாற்றாசிரியர்கள் இனங்கண்டு, வெளிப்படுத்தியிருப்பதானது ஓரினத்தின் இருப்பிற்கான அடையாளத்தினை வன்மைப்படுத்தும் அடிப்படைவாதப் போக்கினையே தெளிவாக்கியுள்ளது எனலாம். அனுராதபுர காலக் கலைமரபுகளை அடையாளங் கண்ட கலை வரலாற்றாசிரியர் சிலர் திராவிட மூலத்தின் தனித்தன்மையோடு

காணப்படும் கலை மூலகங்களையெல்லாம் பொதுவியல் என்ற நிலைக்குள் வகையீடு செய்து, அதனை குறிப்பிட்ட ஒரினத்துவப் பங்களிப்புக்களிலிருந்து வெற்றிகரமாக நீக்கிவிட்டிருந்தமையை இங்கு பல உதாரணங்கள் வாயிலாகக் காட்டமுடியும். இசுருமுனியாவில் (முன்னீஸ்வரம்) உள்ள காதலர் சிற்பம் எனப்பெயரிடப்பட்ட சிற்பத் தொகுதி ஒரு சிறப்புதாரணமாகின்றது.

மதச்சார்பிலாக் கட்டிடங்கள்: அனுராதபுர காலக் கட்டிடங்களில் இன்றுள்ள இடிபாடுகள் அல்லது சிதைவுகள் பெரும்பாலும் சமயத் தேவைகளுக்குப் பயன்பட்டவையாகும். எனவே, இங்கு கூறப்படும் கட்டிடக்கலை வளர்ச்சியும், உண்மையில் சமயக் கட்டிடக்கலை வளர்ச்சியாகவேயிருக்கும். முதலில் சமயச் சார்பிலாக் கட்டிடங்களாக விருந்த ஒரு சிலவற்றைப் பற்றிக்குறிப்பிடுவதாயின், அனுராதபுரத்திலிருந்த அரசமாளிகை (இதுசுவடேயின்றி மறைந்தவிட்டது - சோழப் படையெடுப்பின்போது அது எரியூட்டப்பட்டிருக்க வேண்டுமென்பர்). சீகிரியாவில் காணப்பட்ட மாளிகையின் சுவடுகள் போன்றவற்றைக் குறிப்படலாம்.. சீகிரியாவில் இன்று கிடைத்துள்ள பிற இடிபாடுகள், அதன் கட்டிட அமைப்புக்கள் மிகவும் சிறப்பான முறையில் திட்டமிடப்பட்டமையைக் காட்டுகின்றன.

ஒரு பெருங்கற்பாறையை நகரமாக்கத் திட்டமிட்டு, அதன் வெவ்வேறு பகுதிகளை அப்பாறையிலேயே குடைந்து செதுக்கி முடித்தமையே அசாதாரணத் திறமையையும், கலைநுட்பத்தையும் காட்டுவதாகும். உச்சிப்பாகத்தின் அமைப் பிலும், உதிரிக் கற்பாறைகளைப் பயன்படுத்தி உருவங்கள் முதலானவற்றைச் செதுக்கிய வகையிலும் அகழி, மதிற்சுவர் என்பவற்றை நிறுவிய வகையிலும் மிகுதியான கலைநுட்பத்தையும் திட்டமிடும் திறனையும் காணலாம். படிக்கற்கள் உச்சிவரைக்கும் செல்லும் பாதைக்கு அமைக்கப்பட்டிருத்தலையம், குன்றின் உச்சிப்பாகத்தைத் தொடர்ச்சியாக உயர்ந்து செல்லும் மேடைகளாக வகுத்த அமைப்புத் திட்டத்தையும் காணமுடிகிறது. கீழேயுள்ள மேடைகள் பூங்காக்க ளாகவும், மேலேயுள்ள மேடை பார்வையாளருக்குரியதாகவும் பயன்படும் முறையில் அமைக்கப் பட்டிருத்தலைக் காணலாம். சீகிரி நகருக்கு மேற்குப்புறமாக நிறுவப் பெற்ற **அரசப் பூங்காவின** அமைப்புக்கு இணையாக அக்காலத்தில் ஏதும் அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. **'கண்ணாடிச் சுவர்'** என மிகப் பொருத்தமாக அழைக்கப்படும் சுவரை அவ்வளவு அழுத்தமும் பிரகாசமும் பெறவைத்த தொழினுட்பத்தின் திறமையைப் பாராட்டவே வேண்டும். எண்ணிக்கையில் அதிகமான வண்ண ஓவியங்கள் அங்கு தீட்டப்பட்டிராவிடினும், சீகிரியா **'ஒரு மகத்தான சாதனை'** யெனவும், **'ஆதிகாலச் சிங்களரின் வியத்தகு பொறியியல் வெற்றி', 'திட்டத்தில் புதுமை. கருத்தில் துணிச்சல், செயலில் தீரம்'** எனவும் அது **போற்றப்படவே செய்யும்.** அனுராதபுரத்திலுள்ள திசவாவிக்கு அருகாமையிலுள்ள ரன்-மசு-உயான எனப்பட்ட ஓர் அரசப் பூங்காவும், அரசக்கேணிகளும், அலங்கார மண்டபங்களும் மதச் சார்பிலாக் கட்டிடங்களுக்குப் பிற எடுத்துக்காட்டுக்களாகும். பிந்திய அனுராதபுர காலத்தைச்சேர்ந்த ஒரு மாளிகையின் அடித்தள அமைப்புத்திட்டம் (மனைபடம்) பசவக்குளத்துக்கு அண்மையிற் காணப்பட்டது.

பொலன்னறுவைக் காலம்

பொலன்னறுவை சோழரால் தலைநகராக்கப்பட்டதிலிருந்து மகானது ஆட்சியில் அமர்ந்தது வரையுள்ள சுமார் இரண்டேகால் நூற்றாண்டுக் காலத்தையே (1017 - 1235), 'பொலன்னறுவைக் காலம்' என்ற பெயரால் நாம் குறிக்கின்றோம். இக்காலப் பகுதியின் அரசியல் வரலாற்றை இதுவரை கூறிவந்தோம். சோழர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெற்றபின், விஜயபாகு, மகாபராக்கிரமபாகு, நிஸங்க மல்லன் முதலானோரின் ஆட்சிக் காலங்களில் நாடு அரசியற் சிறப்பையும், பொருளியல், சமயம், கட்டிடம் முதலான துறைகளிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகளையீட்டியதால், அதற்கு மகத்தான புகழ்கிட்டியது. ஆனால் பொலன்னறுவைக்கால அரசியற் போக்கின் ஒரு தன்மை இவ்வெற்றிகளை நிலைக்காவண்ணம் செய்தது. ஒவ்வொரு முக்கிய அரசனும் நீண்டகால உள்நாட்டுப் போருக்கு அல்லது விடுதலைப் போருக்குப் பின்னரே அரசைப்பெற்று, புனருத்தாரண வேலைகளிலும் ஆக்கப்பணிகளிலும் ஈடுபடலானான். ஆனால், அம்மன்னன் மறைந்ததும், அவனுடைய சாதனைகளை வீணடிக்கும் வகையில் உடனே அரசியற் சச்சரவுகளும், போட்டிகளும், உள்நாட்டுப் போர்களும் தொடரும். இதனால் மீண்டும் அரசைப் பெறுகின்ற முக்கிய மன்னன், எவ்வளவோ புனருத்தாரண வேலைகளைச் செய்யவேண்டி இருக்கும். அரசியலில் இவ்வாறு உறுதியின்மையும், குழப்பங்களும், உள்நாட்டுப் போர்களும் அடிக்கடி இடம்பெற்ற தால், பொருளியல் சமயம் முதலான துறைகள் பெரிதும் பாதிக்கப்பட்டதைக் காணலாம். இருப்பினும், இவ்வகையான சூழ்நிலையில் பொலன்னறுவைக்கால மன்னர்கள் ஈட்டிய பல்துறை வெற்றிகள் உண்மையிலேயே பெரும் சாதனைகளாக மதிக்கத்தக்கவையென்பதைக் காண்போம். பொலன்னறுவைக் காலத்தில் சிங்களப் பண்பாடு பல வழிகளிலும் ஏற்றம் பெற்றிருந்தமை இந்த அத்தியாயத்தைப் படிக்கும்போது எளிதிற் புலனாகும்.

பொருளியல், சமூக நிலைமைகள்

அ) பயிர்ச்செய்கையும் பாசனமும்

அனுராதபுரகாலத்தில் இருந்தது போலவே, பொலன்னறுவைக் காலப் பகுதியிலும் பயிர்ச்செய்கையே மக்களின் முக்கிய தொழிலாக இருந்தது. வயல்களுக்குப் பசளையிடப்பட்ட தொன்றைவிட, வேறுவிதமான புதிய முறைகள் எதுவும் புகுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. அரசாங்கத்துக்குக் கிடைத்த அரசிறைகளிலும் நிலவரியே இக்காலப் பகுதியிலும் முக்கியமானதாக இருந்தது. எனவே, அரசாங்கமும் பயிர்ச்செய்கையை ஊக்குவித்து, நில வருவாயை அதிகரிக்கச் செய்வதில் அக்கறை காட்டியது. 'கமநாயக'ர்கள் என்ற கிராம அதிகாரிகள் மூலமே (இவர்கள் 'குலீனர்'களாகயிருந்தமை குறிப்பிடத்தக்கது) மத்திய அரசு பயிர்ச் செய்கையை விருத்தி செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைக் கவனிக்கச் செய்தது. பயிர்ச்செய்கையைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் தலையீடு அதிகமின்றி, கிராம மக்கள் அதைக் கவனித்து வரலாயினர். பெரும்

நீர்ப்பாசனங்களை அமைப்பது, காடுகளை அழித்துக் களனிகளாக்குவது, சகதிகளை நீர் வற்றவைத்து பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாக்குவது போன்ற பணிகளையே மத்திய அரசு கவனித்தது. நீர்ப்பாசனங்களை நன்னிலையில் வைத்திருத்தல், நீர் விநியோகஞ்செய்தல், கால்வாய்களைத் திருத்துதல் போன்ற கருமங்களை உள்ளூராட்சிக் குழுக்கள் (கன்சபாக்கள்) கவனித்து வரலாயின.

பொலன்னறுவைக் காலத்தில், நீர்பாசனத்துறையில் பெரும் பணிகள் ஆற்றிய மன்னர்கள் மிகக்குறை. விஜயபாகு, மகாபராக்கிரமபாகு ஆகியோருடன் நிஸங்கமல்லனையும் சேர்த்துக்கொள்ளலாம். இவர்களுள், மகாபராக்கிரமபாகுவுக்கு நிகராக எந்த (பொலன்னறுவைக்கால) மன்னனையும் குறிப்பிடவியலாது. இத்துறையில் அவனுடைய சாதனைகள் அம்மாமன்னனை ஒரு மேதையாக்குகின்றன. எனவே அவனுடைய பாசனப்பணிகளே இங்கு சிறப்பான இடத்தைப் பெறும். மகாபராக்கிரமபாகுவிற்கு முன், 1ம் விஜயபாகு (1070 - 1110) இத்துறையில் குறிப்பிடத்தக்க பணிகளையாற்றியுள்ளான். சோழராட்சியை முடிவுக்குக்கொணர்ந்து இலங்கை முழுவதற்கும் விஜயபாகு அரசனானபோது, பாசனங்கள் பலவும் பாழெய்தி, பழுதுற்றிருந்தன எனப்படுகின்றது. சோழராட்சி ஏற்படுவதற்கு முன்னிருந்த அரசியற் பிணக்குகளும் மன்னர்களின் நிருவாகச் சீர்கேடுகளும், சோழராட்சியை எதிர்த்து நடைபெற்ற போர்களின்போது உண்டான அழிவுகளும், நீர்ப்பாசனங்கள் இவ்வாறு பாழடைந்தமைக்குக் காரணங்களாக இருந்தன. சோழர் தமது ஆட்சியின்போது இவற்றை வேண்டுமென்றே பாழாக்கியிருப்பர் எனக் கருதுவதற்கு இடமேயில்லை. இது எவ்வாறிருப்பினும் விஜயபாகு அரசைப் பெற்றபோது, இராஜரட்டையில் முன்னர் (அனுராதபுர காலத்தில்) நிறுவப்பட்டிருந்த பெரும் பாசனங்கள் பலவும் அழிவுற்றிருந்தன. எனவே, நாட்டின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு உழைத்த விஜயபாகு, நீர்ப்பாசனங்களை நன்னிலைக்குக் கொணர்ந்து பயிர்ச்செய்கையை விருத்தி செய்யப்பாடுபட்டான். எனவே இவனுடைய பாசனப்பணிகள் பெரும்பாலும் புனரமைப்பு, திருத்த வேலைகளாகவேயிருப்பதில் வியப்பில்லை. இவன் பழைய நன்னிலைக்குக் கொணர்ந்த குளங்கள், கால்வாய்கள் பலவற்றின் பெயர்களைச் சூளவம்சம் குறிப்பிட்டுள்ளது. ஆளிசாரக் கால்வாயைத் திருத்தி, அதனால் நீரைப்பெற்று இயங்கிய மின்னேரி-கவுடுலு-கந்தளாய்க் குளங்களை மீண்டும் செயற்படுத்தினான். இதைத் தவிர அனுராதபுரத்தின் சுற்றுப்புறத்திலுள்ள நாச்சதூவ, மகாகணதராவ, மகாகல்கடவைள போன்ற குளங்களையும் திருத்தியமைத்து, அவற்றை மீண்டும் இயங்க வைத்தான். இவன் புதிதாக நிறுவிய குளங்கள் குறைவாகவிருந்த போதும், விஜயபாகுவின் பாசனப் பணிகளை நாம் குறைத்து மதிப்பிடமுடியாது.

விஜயபாகுவின் ஆட்சியின் முடிவில் நாட்டில் உண்டான அரசியற் குழப்பங்களும், உள்நாட்டுப் போர்களும் பொருளியல் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி வைத்தன. இப்போர்களின்போது நீர்ப்பாசனங்கள் பல மீண்டும் சிதைவெய்தி, பாழடைந்தன. வேண்டுமென்றே சில குளங்களின் கட்டுக்கள் சிதைக்கப் பெற்றிருத்தல் கூடுமெனவும் கருதப்படுகின்றது. இப்போர்களின் பின், மகாபராக்கிரமபாகு

ஆட்சியைப் பெற்றபோதே, நாடு மீண்டும் பொருளியற் சுபீட்சத்தைப் பெற முடிந்தது. அனுராதபுரகால மன்னர்களின் சாதனைகளையும் விஞ்சும் அளவுக்கு மகாபராக்கிரமபாகுவின் பாசனப்பணிகள் அளவிலும் தரத்திலும் மேம்பட்டு விளங்கின. எவற்றையும் பெரிதாகத் திட்டமிட்டு, நிறைவேற்றும் இயல்பு படைத்தவன் பராக்கிரமபாகு, அவனது மற்றைய பணிகளுக்கும் இக்கூற்றுப் பொருந்துமாயினும், அவனது பாசனப் பணிகளை விவரிக்க இது மிகவும் ஏற்றது. 1140 அளவில் தக்கிணதேச ஆட்சியாளனான பராக்கிரமபாகு அப்பிரதேசத்தின் பொருளியல் வளங்களை விருத்தி செய்வதன் தேவையை உணர்ந்து பல திட்டங்களை நிறைவேற்றி வைத்தான். 'மழை நீரில் ஒரு சிறு துளியேனும் மனிதத் தேவைக்குப் பயன்படுமுன் கடலில் கலத்தல் சாலாது' என இக்காலத்திலேயே பராக்கிரமபாகு கூறியதாகச் சூளவம்சம் குறிப்பிட்டுள்ளது. தக்கிணதேச நிலவியல்புகளை அறிந்து அதன் தேவைகளைக் கவனித்து அவற்றுக்கு ஏற்புடைய திட்டங்களை வகுத்தான். தக்கிணதேச ஆட்சியாளனாகப் பராக்கிரமபாகு விளங்கிய காலத்து (1140 - 1153) அவன் நிறுவிய பாசனங்கள் பற்றி முதலில் குறிப்பிடுவோம்.

முதலில், தெதுறுஓயாவை (வஜ்ஜர நதி) ஆதாரமாகக்கொண்டு அவன் நிறுவிய மூன்று திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் ஒன்று கொட்டபத்த அணைக்கட்டையும் கால்வாயையும் கொண்டு அமைக்கப்பெற்றது. செங்கல்ஓயா எனப்படுவதே இக்கால்வாயாக இருக்கலாம் என்பர். இப்போதைய எபவலப்பிட்டியி லுள்ள அணைக்கட்டிலிருந்து றிடி-பண்டி-அள என்ற கால்வாய் மூலம் மாகல்லவாவி என்பதற்கு நீரைக்கொடுக்க அமைக்கப்பட்டது இரண்டாவது திட்டமாகும். மூன்றாவது திட்டத்துக்கு என அமைக்கப்பட்டது தெமோதரவிலுள்ள அணைக்கட்டு. தலகல்லவாவி என்ற குளத்துக்கே இவ்வணைக்கட்டிலிருந்து சென்ற கால்வாய் நீரைக்கொடுத்தது. இத்திட்டங்கள் நிறைவேறியபின் பராக்கிரமபுரம் என்ற தக்கிணதேச இராசதானியில் உள்ள பண்டவாவி என்ற பழைய குளத்தை ஆயிரம் ஏக்கருக்குமதிகமான பரப்பை உடையதாக விசாலித்து, பராக்கிரம சமுத்திரம் என்ற பெயரைச் சூட்டினான். இதுவே பிற்காலத்தில் 'பாண சமுத்திர'மென வழங்கலாயிற்று. இவற்றைத் தவிர மேலும் 57 குளங்களை அவன் புதுப்பித்ததாகச் சூளவம்சம் கூறுகின்றது. இவற்றில் ஒரு சிலவற்றை ஆராய்ச்சியாளர் இனங்கண்டுள்ளனர். இறுதியாக, மனித சஞ்சாரத்துக்குமட், பயிர்ச்செய்கைக்கும் உதவாதபடி சகதிகளையும், சதுப்பு நிலங்களையும் கொண்டிருந்த பஸ்துன்கோறளையை நீர் வற்றும்படி செய்து பயிர்ச்செய்கைக்கு அப்பிரதேசத்தை உகந்ததாக்கினான். இதனால் தக்கிணதேசத்தில் பயிர்ச் செய்கையில் இருந்த பிரதேசங்கள் அதிகமாயின.

1153ல் இலங்கை முழுவதற்கும் அரசனான பராக்கிரமபாகு, தனது நீண்டகால ஆட்சியின்போது, ஏராளமான பாசனங்களை நிறுவுவதில் ஈடுபட்டான். சூளவம்சத்தில் தரப்பட்டுள்ள இவனது பாசன வேலைகளின் நிரல், மிக நீளமானதும், எமது வியப்பைத் தூண்டுவதுமாகும் (அத். 79) 163 பெருங்குளங் களும், 2376 சிறு குளங்களும் இவனால் புதிதாகக் கட்டப்பெற்றன அல்லது

திருத்தப்பெற்றன எனச் சூளவம்சம் கூறியுள்ளது. 'காரகங்கையை குன்றுகளினிடையே ஒரு பெரிய அணையால் மறித்துக்கட்டி, ஆகாசகங்கை என்ற பிரம்மாண்டமான கால்வாய்மூலம் பெருவெள்ளமாகப் பாயும் அதன் நீரைக்கொண்டு, தொடர்ச்சியாக நீர் நிறைக்கப்பட்ட பராக்கிரமசமுத்திரம் எனப் பெயர் கொண்ட பொய்கைகளின் வேந்தை ஆட்சியாளன் நிறுவினான்.' (சூள. அத். 79 செய் 24 - 26). முன்னரே நிறுவப்பட்டிருந்த தோப்பவாவி, தம்புத்துலுவாவி என்ற இரு குளங்களையும் உள்ளடக்கிப் பொலன்னறுவையில் இப்போது அமைக்கப்பட்ட இப்பெரும் நீர்த்தேக்கமானது, பராக்கிரமபாகுவின் ஒப்பற்ற சாதனையாகும். இதற்கு நீர் வசதியை அளித்தற்கென வெட்டப்பெற்ற ஆகாச கங்கை என்ற கால்வாய் அம்பன் கங்கையில் (பின்னர் காரகங்கை எனப்பட்டது) அங்கமெடில்ல அணையில் தொடங்கியது (283ம் பக். உள்ள படத்தைப் பார்க்க). கிரித்தளையைப் பராக்கிரம சமுத்திரத்துடன் தொடுப்பதற்கு இவன் நிறுவிய கால்வாய் மூலம், முன்னரே அம்பன் கங்கையை ஆதாரமாகக் கொண்டு இயங்கிய நீர்ப்பாசனத் தொடருடன் (மின்னேரி - கவுடுலு - கிரத்தளை - கந்தளாய்) இதை இணைக்க முடிந்தது. இக்குளம் மூலம், 18,000 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாய்ச்ச முடியும். பராக்கிரம சமுத்திரத்தைச் சுற்றியமைக்கப்பட்ட கட்டு சுமார் 40 அடி உயரத்தையும், 8½ மைல் நீளத்தையும் கொண்டதாகும். பராக்கிரம தளாக(ம்), பராக்கிரம சாகர(ம்) என்ற வேறிரு குளங்களும் பராக்கிரமபாகுவின் பெயரைத் தாங்கிய பெருங்குளங்களாகும். மஹிந்த தளாக(ம்), ஏகாக வாபி என்பனவும் இவனால் புதிதாக நிறுவப்பெற்ற மற்றிரு குளங்களாகும்.

பராக்கிரமபாகுவால் புதுப்பிக்கப்பெற்ற, விசாலிக்கப்பட்ட குளங்களும், கால்வாய்களுமே பெருந்தொகையினவாக உள்ளன. இவற்றுள் அனுராதபுர காலத்துப் பெருங்குளங்கள் பல குறிக்கப்பெற்றுள்ளன. மின்னேரி, கவுடுலு, மகாதாரகல்ல, காலவாவி, கிரித்தளை, பதவியா, நாச்சதுவ, மானாமடு முதலான முப்பது பெருங்குளங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. பராக்கிரமபாகு நிறுவிய முக்கிய கால்வாய்களில் ஒன்று அசிரவதீ (காலிங்க-யோத-அள) என்பதாகும். மகாவலிகங்கையிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லுமாறு அது வெட்டப்பட்டது. இக்கால்வாய் தொடங்கிய அதேயிடத்தில் தொடங்கி, கிழக்குப் புறமாகச் செல்லும்படி வெட்டப்பட்ட மற்றொரு கால்வாயான கோமதீ கால்வாய் இப்போது பாழெய்திய நிலையில் உள்ளது. பழைய கால்வாய்கள் பலவற்றையும் பராக்கிரமபாகு புதுக்கினான். தாதுசேனனது ஜயகங்கை இவ்வாறு புதுப்பிக்கப் பெற்றவற்றுள் ஒன்றாகும்.

பராக்கிரமபாகு இயற்றிய இத்துணை மகத்தான பாசனப் பணிகளால், அவன் காலத்தில் பாசன வேலைகள் முன்னெப்போதும் இல்லாத புகழ்நிலையை எய்தியிருக்கும் எனத் துணிந்து கூறலாம். பராக்கிரமபாகுவின் சலியாத உழைப்பாலும், குன்றாத ஆர்வத்தாலும் தக்கிணதேசத்திலும் இராஜரட்டையிலும் நன்முறையில் இயங்கிய பாசனத்திட்டங்கள், நாட்டின் பொருளியல் நிலையை எவ்வளவுக்கு மேம்படுத்தியிருக்கும் என நாம் உணரலாம். பொலன்னறுவைக்

காலத்தில், இவனுடைய ஆட்சியுடன் இச்சுபீட்சநிலை ஏறத்தாழ முற்றுப் பெறுகின்ற தெனலாம். இவன் மறைந்த ஓராண்டுக்குள் ஆட்சியைப்பெற்ற நிஸங்கமல்லன் (1187 - 1196) தனது பொறிப்புக்களில் நிஸங்க சமுத்திரம், பாண்டிவிஜயக்குளம், பண்டவாபி போன்ற குளங்களைத் தானே நிறுவியதாகக் கூறியபோதும், (பக். 326ஐப் பார்க்க) அவனது கூற்றுக்களை மிகைக் கூற்றுக்களாகவே அறிஞர்கள் கொள்கின்றனர். முன்னர் நிறுவப்பட்டிருந்த குளங்களில் சில திருத்தங்களைச் செய்தபின், அவற்றைத் தனது பெயரால் அழைத்துவிடும் இயல்பு அவனிடம் உண்டு என்பர். நிஸங்கமல்லன் நீர்ப்பாசனத் துறையில் புதிய சாதனையாக எதையும் நிகழ்த்தாவிடினும், அத்துறையின் வளர்ச்சியில் ஓரளவு அக்கறை கொண்டிருந்தான் எனலாம்.

நிஸங்கமல்லனை அடுத்து இலங்கையில் ஏற்பட்ட அரசியற் குழப்பங்களின் போக்கை முந்திய அத்தியாயத்திற் கவனித்த எமக்கு, பொலன்றறுவைக் காலத்தின் இறுதிக்காலத்தில் நாட்டின் பொருளியல்நிலை அரசியல் நிகழ்ச்சிகளால் எவ்வளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கும் என்பது நன்கு புலனாகும். பொருளியல் வளர்ச்சியில் அக்கறை காட்டுதற்கு வேண்டிய அமைதியையோ அவகாசத்தையோ எந்த ஒரு மன்னனும் பெற்றிருக்கவில்லை. உண்மையில் அரசர்கள் வெறும் கைப்பாவைகளாக பிரதானிகள் என்ற சூத்திரதாரிகளால் முடுக்கப்பட்டனரேயன்றி, தம் எண்ணப்படி குடிகளின் நலனுக்கான பொருளியல் நடவடிக்கையேதும் எடுக்கும் நிலையில் அவர்கள் இருந்திலர். இவ்வாறான ஆட்சியாளரால் புறக்கணிக்கப்பட்டுப் பாழெய்தியிருந்த பாசனங்கள், கலிங்க மாகனது படையெடுப்பின்போது ஏற்பட்ட போர்களாலும் அவனது ஆட்சியின்போதும் முற்றாகச் செயலற்றிருக்கும் எனலாம். பண்டைச் சிங்கள மக்களினதும், மன்னர்களினதும் பெருமையின் சின்னங்களான நீர்ப்பாசனங்கள் அண்மைக்காலம் வரை கவனிப்பாரற்ற நிலையில், காடுகளாறங் சூழப்பெற்று மறைந்தன.

சமூக நிலைகள்

சாதி முறை: பொலன்னறுவைக் காலச் சமுதாயத்திலல் குலீனர் வகித்த முக்கியத்துவத்தைப் பற்றி முன்னரே கண்டுள்ளோம். இவர்களே, அரச குடும்பத்தினர்க்கும், பிராமணர்க்கும், பௌத்த சங்கத்தினர்க்கும் அடுத்த (சமுதாயத்) தளத்திலிருந்த உயர் வகுப்பினராவர். இவ்வகுப்பினர்க்கு, அவர்கள் அரசாங்கத்துக்கு ஆற்றும் சேவைக்கென வழங்கப்பட்ட நிலங்களின் வருவாய் களைப் பெறும் உரிமை உண்டு. இவ்வாறு வழங்கப்படும் நிலங்கள், 'பமுணு' அல்லது 'கம்வர' நிலங்கள் எனவும், பரபுரு (பரம்பரை) நிலங்களெனவும், ஜீவித அல்லது திவெல் நிலங்கள் எனவும் வெவ்வேறு பிரிவுகளைக் கொண்டிருந்தன. மன்னனது சேவையிலுள்ள முக்கிய பதவிகளில் குலீனர் அல்லது கொவி குலத்தவரே பெரும்பாலும் நியமிக்கப்பட்டிருந்தனர். உலோகத் தொழிலில் ஈடுபட்ட ஆசாரிகள் (சிற்பாசாரிகள், ஆயுதங்களை வடித்தவர்கள்) மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டிருந்தனர். மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் 'கெவுளு' சாதியினராகவும், மேளமடிப்போர் 'பெராவா'க்கள் எனவும்

வழங்கப்பட்டனர். சாதியினரிடையே அவர்களின் கடமைகள் பற்றிய சச்சரவுகளும் இடையிடையே தோன்றியுள்ளன. கலப்பு மணங்கள் பெருங்குற்றமாகக் கருதப்பட்டன.

அடிமை முறையும் பொலன்னறுவைக் காலத்தில் பெருவழக்கிலிருந்தது. ஏறத்தாழ ஒவ்வொரு உயர்குடியினர்க்கும் ஒன்று அல்லது இரண்டு அடிமைகள் இருப்பர். பிரதானிகள் முதலானவர்கள் இன்னும் அதிகமான அடிமைகளையும் வைத்திருந்தனர். இத்தகைய அடிமைகள் விகாரைகள் போன்ற நிறுவனங் களுக்கும் இருந்தனர். அடிமைகளைப் பரம்பரையாகப் பெற்றிருக்காவிடினும் அவர்களை விலைக்கு வாங்க முடிந்தது. தானசாலைகள், சத்திரங்கள், வைத்திய சாலைகள் (ஆதுரசாலை) என்பனவும் அக்காலத்தில் பெருந்தொகையாக நிறுவப் பட்டு, வறியோர், ஆதரவற்றோர், நோயாளிகள் முதலானோருடைய தேவைகள் அரசர்களால் கவனிக்கப்பட்டன. இத்தகைய பணிகளை ஆற்றியவர்களுள்ளும், பராக்கிரமபாகுவும், நிஸங்கமல்லனும் தனியிடத்தைப் பெற வேண்டியவர்கள்.

சமய விருத்திகள்

விஜயபாகுவுக்கு முன் சமயநிலை

பொலன்னறுவைக் காலத் தொடக்கத்தில், பௌத்த மதத்தின் நிலையானது சோழரின் படையெழுச்சிகளால் பெரிதும் தளர்ச்சியெய்தியிருந்தது. உண்மையில், அனுராதபுரகால இறுதி நூற்றாண்டில் ஆட்சிசெய்த சில மன்னர்களின் நிருவாகத்தில் காணப்பட்ட ஊழல்களால், பௌத்தம் நலிவடைந்திருந்தது எனல் வேண்டும். உறுதியான ஆட்சியைப் பெற்றிராத மன்னர்கள் பௌத்தத்துக்கு ஏற்பட்ட ஆபத்துக்களை வெல்லுதற்கு இயலாதவர்களாகக் காணப்பட்டனர். சங்கத்தினரின் ஒழுக்கத்திலும் சீர்கேடுகள் மலிந்து, அவர்களிற் பலர் உலகியற் சார்புடையவர்களாக விளங்கினர். சங்கத்தில் முன்னரே தோன்றியிருந்த ஒற்றுமையின்மை, சோழர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முன்னதாகவே பெரிதும் வலுப்பெற்றிருந்தது. சோழப் படையினரின் அழிவுக்காளான விகாரைகள் பல, முன்பே பாழெய்திய நிலையில் இருந்ததாகச் சூளவம்சம் தெரிவிக்கின்றது (சூள. அத். 79, செய் 100 தொடர்). எனவே, சோழப்படைகள் 993இலும் பின்னரும் இலங்கையில் நடத்திய போர்களின்போது, முன்னரே ஏற்பட்டு வந்த ஒரு போக்கைத் துரிதடைய வைத்தன. அனுராதபுரத்தில் பல அழிவுகளைச் செய்த அப்படையினர், அங்குள்ள விகாரைகளைத் தாக்கி அவற்றைச் சூறையாடினர். 'குருதியை உறிஞ்சும் இயக்க' ரென, விகாரைகளின் செல்வங்களை அவர்கள் தமதாக்கிக் கொண்டனர். போர்க்காலத்தில் போர் வீரர்க்கு எக்காலத் திலும் இயல்பாக ஏற்படும் காட்டுமிராண்டித் தனத்துடன் சோழப் படைவீரரும் நடந்திருத்தல்கூடும். ஆனால் பௌத்தம் அடைந்த தாழ்வுக்கு, சோழப் படையெடுப்புக்கு முன்னரே நிலவிய அரசியற் போக்கும் பெருமளவு காரணமாக இருந்ததை நாம் உணர்தல்வேண்டும்.

சோழர் இலங்கையைக் கைப்பற்றிய பின் (993) சுமார் எழுபத்தேழு ஆண்டுகள் வரை நாட்டைப் பரிபாலித்தனர். தமது ஆட்சியின்போது, சைவத்துக்கு

முதன்மையை அளித்தனர். வைஷ்ணவ மதத்தையும் ஓரளவுக்கு ஆதரித்தனர். பௌத்தத்துக்கு எதிரான நடவடிக்கைகளை அவர்கள் எடுத்தமைக்குச் சான்றுகள் இல்லை. திருகோணமலைக்கு அண்மையில் இருந்த 'வெல்கம்-வெஹர' என்பதை அவர்கள் ஆதரித்தமைக்குச் சான்று (கல்வெட்டு) உண்டு. அதைத் திருத்திக்கட்டி 'இராஜராஜப் பெரும்பள்ளி'யென அழைத்தனர். சோழரின் கொள்கை சமயப் பொறையாக இருந்ததெனக் கொள்வதற்கே சான்றுகள் உண்டு. இருப்பினும், காலவேடுகளைப் பின்பற்றி இக்காலத்தில் வரலாறு எழுதுவோரும், பௌத்தத்தின் வீழ்ச்சிக்குச் சோழரே காரணமாக இருந்தனரெனக் கொள்கின்றனர். கலாநிதி கே.கே. பிள்ளை கூறியுள்ளது போன்று, 'பொதுவாகக் கூறுமிடத்து, சிங்களரும் சோழருக்குமிடையேயிருந்த பரஸ்பர உறவைத் தீர்மானிக்கும் முழுமுதற் காரணியாகச் சமயப் பகைமை இருந்திலது.' சோழர் இலங்கையில் பல சிவாலயங் களையும், பிற இந்துக்கோவில்களையும் நிறுவினர். பொலன்னறுவையிலேயே ஏராளமான கோவில்கள் எழுந்தன. இவற்றுள் பல இன்றும் அழிவுகளாகக் காணப்படுகின்றன. வானவன்மாதேவி ஈஸ்வரம், பொலன்னறுவையிலும், இராஜராஜேஸ்வரம் என்பது மாதோட்டத்திலும், விஜயராஜ ஈஸ்வரம் எனப் பின்னர் அழைக்கப்பட்ட கோவில் கந்தளாயிலும் சோழர் காலத்தில் நிறுவப் பட்டிருந்தன. இவ்வாறு சோழராட்சியின்போது இலங்கையில் இந்துமதம் பெரிதும் வளர்ச்சியெய்தியதால், அதன் செல்வாக்கு பௌத்தத்திலும் ஏற்படலாயிற்று. பிராமணர்களின் முக்கியத்துவமும் அதிகரித்திருந்தது. கந்தளாயில் பிராமணர் களின் குடியிருப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது. பிராமணர்களின் விதிகளுக்கு அமைந்த கிரியைகளும் பௌத்த வழிபாட்டு முறைகளிலும், அரச வாழ்விலும் இடம்பெறலாயின.

விஜயபாகுவின் சமயப் பணிகள்

1ம் விஜயபாகு 1070ல் இலங்கைக்கு அரசனானபோது, பௌத்தத்தின் நிலை மிகவும் கவலைக்குரியதாகவே இருந்தது. பழைய தலைநகரான அனுராதபுரத்தில் இருந்த முக்கிய விகாரைகள், சஞ்சாரமற்றுப் பாழெய்தியிருந்தன. தாகபங்கள், பிரிவேனாக்கள் முதலான சமயக் கட்டிடங்கள் பல அழிவுற்று அல்லது பெருஞ்சேதமுற்றிருந்தன. பௌத்தக் குருமார்கள் உருகுணைக்கும், வெளிநாடுகளுக்கும் சென்று வாழலாயினர். இருந்தவர்களும் 'உபசம்பத' என்ற குரு அபிஷேகத்தை நடத்துவதற்குரிய தகுதியுடையவர்களாக இருக்கவில்லை. குருமாரிடையே உலகியற் பற்றும் ஊழல்களுமே மிகுதியாகக் காணப்பட்டன. எல்லா வகைகளிலும், பண்டைய பெருமையையும் பொலிவையும் இழந்து காணப்பட்ட பௌத்த 'சாஸன'வைப் (சமயம்) பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற உறுதியுடன் விஜயபாகு செயலாற்றினான். புதிய குருமார் களைச் 'சங்கத்திற் சேர்க்கும்' உபசம்பதா வைபவத்தை மீண்டும் நடத்தும்படி செய்ததே இவனுடைய முதற்பணியாகும். பர்மிய அரசனான அனோரத்தனுடன் விஜயபாகு கொண்டிருந்த நல்லுறவைப் பயன்படுத்தி, (பக்.259, 309 தொடர்) இச்சடங்கை நடத்தும் தகுதிவாய்ந்த குருமாரை அந்நாட்டிலிருந்து தருவித்தான்.

அறிவாற்றலிலும் சமய ஒழுக்கத்திலும் மேம்பட்ட பர்மியக் குருமார்கள் ஈழத்துக்கு வந்து உபசம்பதாச் சடங்கை நடாத்திப் பலரைப் சங்கத்திற் சேர்த்தனர். இலங்கையிலிருந்து திரிபிடகப் பிரதிகளை அனோரத்தன் பெற்றுப் பர்மிய அறிஞர் ஒருவரிடம் கொடுத்து, தாட்டனிலிருந்து பெறப்பட்ட சமய நூல்களுடன் ஒப்புநோக்கச் செய்தான். பர்மியக் குருமார்களின் வருகையுடன் இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சியும், இலக்கியப் புத்துயிர்ப்பும் இடம் பெறலாயின.

அனுராதபுர காலத்தில் சங்கத்தில் காணப்பட்ட பிளவுகள், குறிப்பாக மகாவிகாரை, அபயகிரி, ஜெதவன என்ற முப்பெரும் விகாரைகளைச் சார்ந்த பிரிவுகள், விஜயபாகுவின் காலத்திலும் ஒன்றுபடாது தனித்தனி இயங்கலாயின. ஆயின், அவற்றினிடையே நிலவிய பகைமை பெரிதும் தணிந்திருக்கும் என நம்பலாம். விஜயபாகு நிறுவிய சமயக் கட்டிடங்களுள், பொலன்னறுவையில் தந்ததாதுவுக்கென அமைக்கப்பட்ட கோவில் முக்கியமானது. தந்ததாதுவுக்கென விழா நடாத்த ஏற்பாடு செய்ததுடன், அனுராதபுரத்துக்கு வெளியே மகாகமை, மஹியங்கணை, மண்டலகிரி முதலான இடங்களில் பாழெய்திய பல சமய நிறுவனங்களைத் திருத்திக் கட்டுவித்தான். ஸ்ரீபாதவுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் வழிகளில் தங்கிச் செல்வதற்குச சில தானசாலைகளை அமைத்து, அவர்களுக்கு உணவளித்தற்காக இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள கிலீமலை எனும் கிராமத்தை மானியமாக வழங்கினான். புத்தகயாவிலுள்ள போதிமரக் கோவிலுக்கு விலையுயர்ந்த காணிக்கைகளைச் செலுத்தத் தன் தூதுவர்களைப் பலமுறை விஜயபாகு அனுப்பி வைத்தான். விஜயபாகுவின் பணிகளால், பௌத்தம் மீண்டும் நன்னிலை பெற்றதுடன், பௌத்த சங்கமும் பெரும் செல்வாக்கைப் பெறமுடிந்தது. பௌத்த மறுமலர்ச்சி இலக்கிய வளர்ச்சியையும் கட்டிடத்துறையில் அபிவிருத்தியையும் ஊக்கியதை அடுத்த பகுதிகளிற் பார்ப்போம்.

மகாபராக்கிரமபாகுவின் காலம்

விஜயபாகுவின் ஆட்சிக்குப் பின் நிகழ்ந்த அரசுரிமைத் தகராறுகளும் உள்நாட்டுப் போர்களும், மற்றைய துறைகளைப் பாதித்ததைப் போலவே, சமயத்துறையையும் பாதித்து, விஜயபாகுவின் ஆட்சியின்போது பௌத்தம் எய்திய முன்னேற்றத்தைக் கெடுத்தது. விஜயபாகுவால் தனது யுவராஜனாக நியமிக்கப்பட்டிருந்த விக்கிரமபாகுவுக்கு எதிராக நடைபெற்ற சதியில் சங்கப் பிரமுகர்களும் கலந்திருந்தமையால், ஆட்சியுரிமையை நிலைநாட்டியபின் அவன் அவர்கள்மீது வஞ்சந்தீர்த்தான். சுமார் நாற்பது ஆண்டுகள் நீடித்த உள்நாட்டுப் போர்களின் பின், பராக்கிரமபாகு ஆட்சியைப் பெற்றபோது, விஜயபாகு ஆட்சியைப் பெற்றபோதிருந்த நிலையிலேயே ஏறத்தாழ பௌத்தம் இருந்தது. பராக்கிரமபாகு வுக்கு முன் நிகழ்ந்த உள்நாட்டுப் போர்களின்போது, பொருள்வேட்கை கொண்ட சுதேச இளவரசர்கள் விகாரைகளுக்கும் தாதுக்களுக்கும் வழங்கப் பெற்றிருந்த திரவியங்களை அபகரித்தனர். சங்கத்தின் பெயருக்கு மாசுதரக்கூடிய முறையில் கூடாவொழுக்கமுடைய பிக்குகள் மலிந்திருந்தனர்.

பௌத்த சாஸனத்தை மேன்மைபெற வைப்பதையே குறிக்கோளாகக் கொண்டு இலங்கை முழுவதன் ஆட்சியைப்பெற்ற மகாபராக்கிரமபாகு சமயத்துறையில் ஆற்றிய பணிகளால், பௌத்த சாஸனம் உயர்வுபெற்றதோடு, சங்கமும் புனிதமும் ஒற்றுமையும் எய்திற்று. எவ்வளவோ எதிர்ப்பினிடையேயும், மகாபராக்கிரமபாகு தனது உறுதியைத் தளரவிடாது, சங்கத்தின் தூய்மையையும் ஒற்றுமையையும் நிலைநாட்டினான். திம்புலாகலை மகா காசியப்பதேரர் தலைமையிற் கூடிய சமய மன்றுபற்றி முன்னரே கூறியுள்ளோம் (பக்.285). சங்கத்திலுள்ள முப்பிரிவு களையும் ஒன்றுபடுத்தியதன்மூலம் வட்டகாமணியின் கால முதல் சங்கத்தில் ஏற்பட்டிருந்த பிளவுகள் நீக்கப்பட்டன. இதனைப் பராக்கிரமபாகுவின் ஒரு பெருஞ்சாதனையாகக் கொள்வர். சங்கத்தின் தூய்மைக்கும், ஒற்றுமைக்கும் குந்தகம் விளைத்த ஏராளமான 'துஸ்ஸீல' பிக்குகள் அதினின்றும் வெளியேற்றப் பட்டனர். இதன்பின், விநய (ஒழுக்க) விதிகள் பற்றிய கருத்து முரண்பாடுகள் அகற்றப்பட்டன. இதன் முடிவிலேயே, பொலன்னறு(வ) - கதிகாவத என்ற ஒழுக்கவிதிகள் கல் விகாரையிற் பொறிக்கப்பட்டன. திருநூல்களைக் குருமார்கள் பயிலுதல், குருமார்கள் வெளியே செல்லவேண்டிய இடங்களும் நேரமும், ஒரு சீடரைச் சங்கத்திற் சேர்க்கும்போது கவனிக்கவேண்டிய அம்சங்கள் இவ்விதிகளில் முக்கியமாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இக்கல்விகாரைப் பொறிப்பின் மூலம், சங்கத்தினரிடையே ஒற்றுமையை ஏற்படுத்த ஆண்டு கி.பி. 1165 எனக் கணிக்கப் பட்டுள்ளது. இவன் நிறுவிய சமயக் கட்டிடங்கள் பற்றியும் இங்கு விரிவாகக கூறவேண்டியதில்லை. பொலன்னறுவையில் இவனால் நிறுவப்பட்ட சமயக் கட்டிடங்களுள் கிரிவிகாரை, இலங்காதிலக விகாரை, தமிழதூபம், கல் விகாரை, திவங்க உஎருவீடு போன்றவை முக்கியமானவை. இவை பற்றி மீண்டும் பின்வரும் பகுதியிற் படிப்போம்.

நிஸங்கமல்லனும், அவனது பின்னோரும்

பராக்கிரமபாகுவின் ஆட்சியின் முடிவில், இலங்கைப் பௌத்தமும், சங்கமும், பர்மா முதலான பிற பௌத்த நாடுகளிடையே அளவற்ற மதிப்பைப் பெற்றிருந்தன. ஆனாலும், அவனது பணிகளும் நிலையான பயனைத் தந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், பராக்கிரமபாகுவுக்குப் பின் ஓராண்டுக்குள் ஆட்சியைப் பெற்ற நிஸங்க மல்லனும், சங்கத்தில் கூடாவொழுக்கமுடையோர் இருப்பதை உணர்ந்து அவர்களைக் களைந்துவிட முற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அவனுடைய கல்வெட்டுக்களில், பிக்குமார்கள் பின்பற்ற வேண்டிய விதிகள் பற்றித் தானே அறிவுறுத்தியுள்ளான். றனகொத் தாபகம முதலான அவனுடைய சமயக் கட்டிடங்கள், அவன் சமயத்திற் கொண்ட ஈடுபாட்டை இன்றும் பறைசாற்றி நிற்கும் சின்னங்களாகும். விஜயபாகு, பராக்கிரமபாகு, நிஸங்கமல்லன் ஆகிய மூவரும் பொலன்னறுவைக்கால மன்னருள் நாட்டபிவிருத்தியிலும், சமய வளர்ச்சியிலும் பெரும் அக்கறை காட்டியவர்கள் என்பது தெளிவு. இவர்களுக்குப் பின், பொலன்னறுவைக் காலப்பகுதியின் இறுதியில் ஆட்சி செய்தவர்கள் இடையிடையே சமய அக்கறை காட்டியுள்ளனர். குறிப்பாக, லீலாவதியை

அரசேற்றிய பராக்கிரமன், ஆயஸ்மந்தன் போன்ற தளபதிகள் சமயப் பணிகளாற்றியமைக்குச் சான்றுகள் உண்டு. ஆனால், இவர்களின் பணிகள் எவ்வித பயனையும் தராதவாறு, அந்நேரத்தில் நிலவிய சூழ்நிலைகள் தடுத்தன. இந்நிலையிலேயே, நாம் முன்னர் கவனித்தவாறு, மாகனுடைய படையெடுப்பு நிகழ்ந்து, பௌத்த மதத்துக்குப் பல அழிவுகளைச் செய்தது. சூளவம்ச விவரங்களில் மிகைக்கூற்றுகள் பல இருப்பினும், மகானுடைய படைவீரர்கள் பௌத்த நிறுவனங்களுக்குப் பல சேதங்களை உண்டுபண்ணியிருந்தன. மாகனுடைய ஆட்சியின்போது, ஒரு 'பொய்யான மத'த்தைப் புகுத்தப் பலவந்தமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் காலவேடுகளிற் குறிப்புக்கள் உண்டு. சமயத்துறையில் வேண்டுமென்றே ஓர் ஆட்சியாளன் கடைப்பிக்கக்கூடிய ஒறுத்தற் கொள்கையை கலிங்கமாகன் கடைப்பிடித்தான் என்பார். இத்தகைய ஒரு கொள்கை இலங்கை, இந்திய நாடுகளின் வரலாற்றில் மிக அரிதாகும். இவ்வாறாகப் பொலன்னறுவைக் கால முடிவில், பௌத்தத்தின் நிலை, அக்காலப் பகுதியின் தொடக்கத்திலிருந்ததைக் காட்டிலும் கீழ்நிலை அடையலாயிற்று எனலாம்.

வழிபாட்டு முறைகள்

பொலன்னறுவைக் காலத்தில் பௌத்தத்தின் பொதுவான வளர்ச்சியை மேலே கவனித்தோம். இனி, சில வழிபாட்டு முறைகள் முதலானவை பற்றிச் சிறப்பாகக் கவனிப்போம். புனிதப் பற் சின்ன (தந்த தாது) வழிபாட்டுமுறை பொலன்னறுவைக் காலத்தில் அதிக முக்கியம் பெற்றிருந்தது. விஜயபாகு இதற்கென ஒரு கோவில் நிறுவியதை முன்னரே குறிப்பிட்டிருந்தோம். பின்னர் இக் கோவிலின் பாதுகாப்பு வேளைக்காரப் படைப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்படையினர் அதன் பராமரிப்புக்கென ஒரு வேலி நிலத்தை ஒதுக்கியதாக ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. இக்காலத்திலேயே, புனித பற்சின்னத்தை வைத்திருத்தல் ஆட்சியுரிமை வலுப்பெறுதற்கு இன்றியமையாததென்ற கொள்கை உருவாயிற்று. உருகுணைக்குப் பாதுகாப்புக்காகக் கொண்டு செல்லப்பட்ட பல் ஐயக்கலச் சின்னங்களைப் பராக்கிரமபாகு அங்கிருந்து மீட்டு தனதுரிமையை வலுப்பெறச் செய்ததை முன்னர் கண்டோம். அவன் தந்ததாதுவுக்கு ஆண்டு தோறும் விழா எடுத்ததாகவும் கூறப்படுகின்றது. நிஸங்கமல்லனும், ஹட்டதாகே என அழைக்கப்படும் கட்டிடத்தை நிறுவி, புனிதப் பற்சின்னத்துக்கென அதை விட்டான். 'பரித்த' (பிரித்) ஒதுதலும் இக்காலப்பகுதியிலேயே முக்கியமடைந்து, பெருவழக்கில் இருந்து வந்தது. ஸ்ரீபாத (சிவனொளிபாதமலை) மலைக்கு மக்கள் யாத்திரைகளைச் செய்யும் வழக்கமும் இக்காலத்திலேயே அதிகமாகப் பின்பற்றப்பட்டது. விஜயபாகுவின் அம்பகமுப் பொறிப்பு சமனொளிக் குன்றில் உள்ள திருப்பாதத்துக்குக் காணிக்கைகளைச் செலுத்தியமையும், அதைத் தரிசிக்க யாத்திரை செய்யும் அடியவர் கூட்டத்தினர் தங்குவதற்கும் அவர்களின் பசியைப் போக்கவும் ஏற்பாடுகள் செய்ததைக் குறிப்பிட்டுள்ளது. நிஸங்கமல்லன் தானே நேரிற் சென்று திருவடியை வழிபட்டு, அதற்கென மானியங்களையும்

வழங்கினான். உபுல்வன் (விஷ்ணு), சமன் (யமன்) வழிபாடுகளும் தேவுந்தர (தேவிநுவர), தம்புளை, அலுத்நுவரை முதலான இடங்களில் நடைபெற்றமைக்குச் சான்றுகள் உண்டு.

பிற பௌத்த நாடுகளுடன் தொடர்புகள்

பொலன்னறுவைக் காலத்திலும், இலங்கை இந்தியாவுடன் சமயத் தொடர்புகள் வைத்திருந்தபோதும், அவற்றால் இலங்கையின் சமயப்போக்கு அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. விஜயபாகு புத்தகயாவுக்கு அனுப்பிய தூதுக்குழுக்கள் மூலம், மகதத்தில் அதே காலத்திலிருந்த பௌத்த சமயப் பிரிவினருடன் தொடர்புகள் ஏற்பட வாய்ப்பிருந்தது. இலங்கையில் இத்தொடர்புகளின் செல்வாக்கைக் காட்டும் சிற்பங்கள் காணப்படுகின்றன. (எ-டு மஹியங்கணை தாகபத்தின் சின்ன-அறைச்சிற்பம்), எனினும் வட இந்தியச் செல்வாக்கு விரைவில் அருகிவிடுகின்றது. ஏனெனில் அங்கு பௌத்தம் தேய்வு நிலையிலிருந்தது. தென்னிந்தியாவில் முக்கிய பௌத்த நிலையங்களாக விளங்கிய நாகபட்டினம், காஞ்சி ஆகிய இடங்களிலுள்ள நிறுவனங்களுக்கும் இலங்கைக்குமிடையே உறவுகள் நிலவின. இக்காலப் பகுதியில், தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையே தொடர்புகள் அதிகமாகி வந்தன. லிகோர் (அப்போதைய தம்பரட்ட (மலேஷியாவில்) என்ற பகுதி, விஜயபாகுவின் காலத்திலும் அதற்குப் பின்னரும் தேரவாத பௌத்த நிலையமாக விளங்கியது. இலங்கையிலிருந்து சென்ற ஆனந்ததேரர் அங்கு இம்மதத்தைப் பரப்புவதில் முக்கிய பங்கை வகித்ததாகக் கூறப்படுகின்றது. பர்மாவுடன் நிலவிய சமய உறவுகளால் இரு நாடுகளுமே பயனடைந்தன. (310ம் பக். தொடர் - பார்க்க). கம்போடியாவுடன் சமயத் தொடர்புகள் பொலன்னறுவைக் காலத்தில் குறைவாகவே இருந்தன. கம்போடியா மகாயான பௌத்தத்தையே பின்பற்றியதால், அதற்குப் பின்னரே இரு நாடுகளுக்குமிடையே சமயத் தொடர்புகள் வளர்ந்தன. சீயத்துடன் இருந்த தொடர்புகளுக்கு அறிகுறியாகவே, வட சீயத்தில் லும்பன் என்னுமிடத்தில் உள்ள ஒரு தனிவகைக கட்டிடத்தை நினைவு கூரும் முறையில், பொலன்னறுவையில் சத்மஹால் பாசாத என்பது உள்ளதாகக் கூறப்படும்.

பொலன்னறுவைக் காலச் சமய விருத்திகளை நோக்கும்போது, நாம் சில முடிவுகளுக்கு வரலாம். அரசியற் காரணிகளால் பௌத்த சமயம் பெரிதும் பாதிக்கப்படும் என்பது அடிக்கடி நிரூபிக்கப்பட்டுள்ளது. அமைதியும் உறுதியும் நிலவிய காலங்களில் அது துரித வளர்ச்சியும், படையெடுப்புக்களும் உள்நாட்டுப் போர்களும் நடைபெற்ற காலங்களில் திடீரென வீழ்ச்சியும் எய்தியதைக் காணலாம். பிற சமயங்களின், குறிப்பாக சைவ - வைணவ சமயங்களின் பாதிப்பு இக்காலத்தில் மிகுதியாகக் காணப்பட்டது. மஹாயானப் பிரிவு முதலானவை இந்தியாவிலேயே வலுவிலந்திருந்தமையால் இலங்கையிலும் சமயப் பிரிவுகளிடையே அதிக முரண்பாடுகள் இருக்கவில்லை. இதனாலேயே பராக்கிரமபாகு சங்கப் பிரிவுகளையொன்றுபடுத்த முடிந்தது. பௌத்தக் கோட்பாடுகளில் புதிய விருத்திகள் மிகக்குறைவாகவே ஏற்பட்டன. நடைமுறைச் சமயம், மக்கள்

வழிபாட்டுக்குரிய வகையில் மாறுதலடையலாயிற்று. விஜயபாகு, பராக்கிரமபாகு போன்ற பெருமன்னர்கள் மட்டற்ற சமய ஆர்வத்துடன் பௌத்த சாஸனத்தை மேன்மைபெற வைத்தனரெனினும், மன்னர்களின் சக்தியையும் மிஞ்சிய காரணிகள் பொலன்னறுவைக் கால முடிவில் அதன் வரலாற்றிலுண்டான பெரும் வீழ்ச்சியைக் கொடுத்தன.

1ம் விஜயபாகுவின் அட்டதாகே

விஜயபாகுவின் காலத்திலேயே, நீண்ட காலத்துக்குப் பின் சிங்களக் கற்றச்சர்களும் ஆசாரிகளும் தொழிற்பட ஆரம்பித்தனர். விஜயபாகு பழைய கட்டிடங்களைப் பழுது பார்ப்பதிலும் மீட்பதிலுமே தனது கவனத்தைச் செலுத்த வேண்டியவனானான். இவன் புதிதாக நிறுவிய கட்டிடங்கள் குறைவு. அனுராதபுரத்தில் தனது முடிசூட்டு விழாவை நடத்துவதற்கு ஒரு மாளிகையை அமைத்தான். அதன் சிதைவுகள் அண்மையில் தொல்பொருளாய்வுப் பகுதியினரால் அகழ்ந்து ஆராயப்பட்டன. புனிதப்பற் சின்னத்துக்கென இவன் நிறுவிய கோவில், பின்னர் வேலைக்காரர் பாதுகாப்பில் விடப்பட்டதென முன்னர் கண்டோம். அதுவே பொலன்னறுவையிலுள்ள 'அட்டதாகே'யென்ற கட்டிடச் சிதைவாகும். இக்கட்டிடமும், அனுராதபுரத்திலுள்ள பழைய கட்டிட அமைப்பையே தழுவியுள்ளது. இக்கட்டிட அமைப்பைக் கூர்ந்து நோக்கியவர்கள், இதனுடைய ஒரு மேல்மாடியிலேயே, தந்ததாது வைக்கப்பட்டிருந்ததென்பதை உணர்வர். விஜயபாகுவின் மறைவுடன் தொடங்கிய அரசுரிமைத் தகராறுகள் சுமார் 40 ஆண்டுகள் நீடித்து, கட்டிடத்துறை விருத்திக்குத் தடையாயின. தொடர்பாகக் கட்டிடக்கலை விருத்தியடையாது போனதால், கற்றச்சர்கள் (ஆசாரிகள்) பராக்கிரமபாகுவின் காலத்தில் குறைவாக இருந்தனர் என அறியக்கிடக்கின்றது. தென்னிந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட தமிழ் ஆசாரிகளே பராக்கிரமபாகுவின் காலக் கட்டிடங்களைக் கட்டியிருத்தல் வேண்டும். கட்டிடங்களில் உபயோகிக்கப் பட்ட கற்களில் தம் பெயர்களின் முதலெழுத்துக்களைத் தமிழில் பொறித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மகாபராக்கிரமபாகுவின் கட்டிடங்கள்

1ம் பராக்கிரமபாகுவும், நிஸங்க மல்லனுமே பொலன்னறுவைக் கால மன்னர்களுள் கட்டிடத்துறையில் பெருஞ் சாதனைகளை நிகழ்த்தியவர்கள். பொலன்னறுவையில் இன்றும் பார்வையாளரின் கவனத்தைப் பெறுகின்ற கட்டிட அமைப்புக்கள் பல பராக்கிரமபாகுவினுடையவை. ஆளா'னப் பிரிவெனாவுக்குரிய கட்டிடங்களில், இவன் நிறுவியவை **இலங்காதிலக உருவ வீடும், பத்தசீமபிரசாதவும** (உபோசத வீடு) ஆகும். கிரிதாகபம் என இப்போது அழைக்கப்படும் ரூபவதி சேத்தியவும், சுபத்திரா சேத்தியவும் பராக்கிரமபாகுவின் காலத்தவையாகும். இவையும் ஆளாஹன பிரவெனாத் தொகுதிக்குரியவையே. ஆளாஹன பிரிவெனாவின் அமைப்புத்திட்டம் போற்றுதற்குரிய முறையிலிருப்பதாக அறிஞர்கள் கருதுவர். மிகப் பெரிதாகத் திட்டமிட்டு நிறைவேறாத நிலையிற்

காட்சியளிக்கும் தமிழ தூபம், இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தமிழ்ப் போர்க் கைதிகளைக் கொண்டே நிறுவப்பட்டதாகக் கூறுவர். இது ஒரு புதுவகைக் கட்டிட அமைப்பைப் பின்பற்றியதாகலாம் எனவும் கூறுகின்றனர். **கல்விகாரை** என வழங்கும் உத்தராராமையிலுள்ள ஒவ்வொரு புத்தர் சிலைக்கும் ஒரு கோவில் முன்னர் நிறுவப்பட்டிருந்தது. பொலன்னறுவையின் வடகோடியில் அமைந்துள்ள ஜெதவனாராம விகாரையின் உறுப்புக்களாக விளங்கிய திவங்க உருவவீடு, தந்ததாதுவுக்கென அமைக்கப்பட்ட ஒரு வட்டதாகே தாமரைக் கேணி முதலான கேணிகள் குறிப்பிடத்தக்கவை. பழைய பொலன்னறுவையின் தென்புறத்தில் உள்ள பொத்கல் விகாரையும் இவனது காலத்தைச் சேர்ந்ததே. சமயச் சார்பில்லாத கட்டிடங்கள் சிலவும் இவனால் நிறுவப்பெற்றுள்ளன. மகாபராக்கிரமபாகுவின் அரச மாளிகை, செங்கற்களாலான ஒரு பிரமாண்டமான கட்டிடமாக இருந்திருக்கவேண்டும். இரண்டு மாடிகளையாவது இது கொண்டிருக்க வேண்டும். சூளவம்சத்தில், இம்மாளிகை ஏழு மாடிகளைக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. மாளிகையிலிருந்து கிழக்குப்புறமாகச் சென்றால் பராக்கிரமபாகு வின் வேத்தவை மண்டபத்தை அடையலாம். கல்லாலான மேடையொன்றில் நிறுவப்பட்ட இக்கட்டிடத்துக்குரிய பழைய பெயரான ராஜவேசி புஜங்க மண்டபம் வாயிற்படியொன்றில் பொறிக்கப்பட்டிருத்தலைக் காணலாம். அரச மாளிகையின் சுற்றுப்புறத்தில் நந்தவனம், தீபுய்யான முதலான பூங்காக்களில் குமாரபொக்குண எனப்படும் சிலா பொக்கரணீ போன்ற அழகிய கேணிகள் நிறுவப்பட்டிருந்தன. முன்னர் குறிப்பிட்ட தாமரைக் கேணியை (பதுமனஹ கொட்ட) 'கல்லால் உருவான காவியம்' என வர்ணித்துள்ளனர். இவ்வாறு, சமயத் தேவைகளுக்கும், உலகியல் தேவைகளுக்கும் என அமைக்கப்பட்ட கட்டிட அமைப்புக்கள் அவனது பெருமையையும், தாராண்மையையும், அவற்றிலும் மேலாக அவனது அழகியலுணர்வையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

சிற்பக்கலைகள்

பொலன்னறுவையையே தொடர்ந்து தலைநகராக வைத்திருந்த பராக்கிரமபாகு, அதைத் தலைநகருக்குரிய அமைப்புக்களையும், கட்டிட வகைகளையும் கொண்டு விளங்க வைத்தான். நகரைச் சுற்றியிருந்த சுவரைப் பலமுறக்கட்டி, ஆங்காங்கே இராஜவாயில், இந்திரவாயில், மகாதீர்த்தவாயில், மாயாவாயில் முதலான பதினான்கு வாயில்களை அமைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. அரச மாளிகை ஏழு மாடிகளையுடை செங்கற் கட்டிடமாக அமைக்கப்பெற்று, அதனுடன் இணைந்ததாக ராஜவேசிபுஜங்க மண்டபம் போன்ற சில உறுப்புக்கள் சேர்க்கப்பட்டன. அரச மாளிகையின் சுற்றுப்புறத்தில் நிறுவப்பட்ட நந்தவனம், தீபுய்யான முதலான பூங்காக்கள் மன்னர் குடும்பத்தினரின் உபயோகத்துக்கென நிறுவப்பட்ட வாவிகள் அல்லது கேணிகளைக் கொண்டிருந்தன. சிலாபொக்கரணீ (கல்வாவி), சித்திரப் பொக்கரணீ (சித்திரக்கேணி) முதலானவை உயர்ந்த கட்டிடக்கலைப் பண்புகளைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அரசமாளிகை யுடன் இணைந்ததாக நிறுவப்பட்ட கட்டிடங்களுள் ஒன்று பிராமணர்களின்

தேவைகளுக்குப் பயன்பட்டமையும் மனங்கொளத்தக்கது. இசை, நடன நிகழ்ச்சிகள் அரங்கேறுவதற்கு அமைக்கப்பட்ட மண்டபம் 'சரஸ்வதி மண்டபம்' என அழைக்கப்பட்டது. நகரின் தென்கோடியில் அமைந்த மாளிகையும், பிற கட்டிடங்களும் பூங்காக்களும் அழகு வாவிகளும் சமயச் சார்பற்ற கட்டிடக் கலையின் எடுத்துக் காட்டுகளாகும். இவற்றைவிட, சமயச் சார்புடைய கட்டிடங்கள் பல பராக்கிரமபாகுவின் தாராண்மையையும், மத ஈடுபாட்டையும் புலப்படுத்தி நிற்கின்றன. ஆளாஹன பிரவெனாத் தொகுதியென அழைக்கப்படும் கட்டிடத் தொகுதியில், இலங்காதிலக உருவவீடும் அவ்விகாரையின் உபோசத விடுதியுமான பத்தசீமபிரசாதவும், பராக்கிரமபாகுவின் இராணியான ரூபவதியால் நிறுவப்பட்டு அவள் பெயரைத் தாங்கி நின்ற ரூபவதி சேத்தியவும் (கிரி தாகபம்) சுபத்திரா சேத்தியவும் முக்கியமானவை. இப்பெரும் விகாரை (ஆளாஹன) நிறுவப்பட்டிருந்த இடத்தில் காணப்படும் இடிபாடுகளும், கட்டிடங்களும் ஒரு பெரும் அமைப்புத் திட்டத்தைக் கொண்டிருந்ததை உணர்த்துகின்றன. கல்விகாரை (உத்தராராமை) என்பதில் உள்ள புத்தரின் திருவுருவங்களும், அதன் பொதுவான அமைப்பும் இன்றும் பார்வையாளரையும் பக்தர்களையும் பரவசமூட்டும் வகையில் உள்ளன. மிகப்பெரிய அளவில் திட்டமிடப்பட்டு நிறைவேறாமலே விடப்பட்டது போன்று காட்சியளிக்கும் தமிழதூபம், தமிழ்ப் போர்க் கைதிகளாற் கட்டப்பட்டதென்பர். பொலன்னறுவையில் வடகோடியில் அமைக்கப்பட்ட ஜெதவனாராம என்ற விகாரையின் உறுப்புக்களாக நிறுவப்பட்ட திவங்க உருவவீடும், தந்ததாதுவுக்கு என அமைக்கப்பட்ட ஒரு வட்டதாகேயும், 'பதுமனஹகொட்ட' எனப்படும் தாமரைக் கேணியுட்பட எட்டுக்கேணிகளும் விளங்கின. பராக்கிரமபாகுவின் காலத்தில் எழுந்த பிற கட்டிட அமைப்புக்களில் குறிப்பிடத்தக்கது, பொத்கல்விகாரை என்பதாகும். பழைய பொலன்னறுவை நகரின் தென்புறத்திலுள்ள இக்கட்டிடத்தை பராக்கிரமபாகுவின் மற்றோர் இராணி (சந்திரவதி) கட்டுவித்ததாகக் கூறப்படும். இவ்விகாரையின் அயலிலேயே பராக்கிரமபாகுவின் சிலையெனப் பொதுவாகக் கருதப்படும் அழகிய சிலை கற்பாறையில் செதுக்கப்பெற்றுள்ளது. பழைய தலைநகரான அனுராதபுரத்தில் பாழெய்திய பல கட்டிடங்களையும் பராக்கிரமபாகு புதுப்பித்ததாகச் சூளவம்சம் கூறியுள்ளது. அங்குள்ள ரூவன்வலிசயவை தமிழ்க் கைதிகளைக் கொண்டு திருப்பிக் கட்டுவித்தான் என்பர். இவ்வாறு பொலன்னறுவையைக் கட்டிடங்களால் அழகுபொலிய வைத்த பராக்கிரமபாகு, அவற்றுடன் தொடர்புடைய சிற்பக்கலைகளும் வளர உதவினான்.

நிஸங்கமல்லனது சாதனைகள்

பராக்கிரமபாகுவைத் தொடர்ந்து அரசைப் பெற்ற நிஸங்கமல்லன், தன் முன்னோரது கட்டிடத்துறைச் சாதனைகளை விஞ்சவேண்டும் என்ற நோக்குடன் செயலாற்றினான். தன் குறுகிய ஒன்பதாண்டு ஆட்சியில், இவனால் நிறுவப் பெற்றதாகக் கூறப்படும் கட்டிடங்கள் உண்மையிலேயே இவனது காலத்தில் முடிவுற்றனவெனின், இத்துறையில் இம் மன்னன் தனக்குரிய புகழுக்கு எல்லா வகைகளிலும் அருகதை பெற்றுள்ளான் எனலாம். கல்-பொத்த (கல்லாலான புத்தகம்), நிஸங்க லதா மண்டபம் போன்ற புதுமையான கட்டிட அமைப்புக்களும

நிஸங்கமல்லன் காலத்திலே வெற்றியுடன் உருவாக்கப்பட்டன. இம்மன்னன் தனக்கு நிறுவிய மாளிகையின் சிதைவுகள் இன்றும் உள்ளன. கட்டிடக்கலை அம்சங்கள் இவற்றில் குறைவாகவே உள்ளன. இதுவும் இரண்டு மாடிகளை யாவது கொண்ட செங்கற் கட்டிடம் என்பது படிக்கட்டுக்களாலும், பிற அடிபாடு களாலும் புலப்படும். நிஸங்கமல்லனது வேத்தவை மண்டபத்தில், அரசனது இருக்கையினைத் தாங்கிய கல்லாலான சிங்கமும், வேத்தவை உறுப்பினர்களின் இருக்கைகளைக் குறிப்பிடும் பொறிப்புக்களையுடைய தூண்களும் இப்போதும் பேணப்பட்டுள்ளன. தளதா மாளுவ என்ற பகுதியிலுள்ள மிகவும் குறிப்பிடத்தக்க கட்டிடம் வட்டதாகேயாகும். நிஸங்கமல்லனது ஒரு கல்வெட்டு இதை அவன் நிறுவியதாகக் கூறியபோதும், கட்டிட அமைப்பைக் கொண்டு அது அவனது காலத்துக்கு முந்தியதென்பர். உண்மையில், நிஸங்கமல்லன் இக்கட்டிடத்துக்கு ஒரு புதிய பகுதியைச் சேர்த்திருத்தல் கூடும். சத்மஹால் பிரசாத என அழைக்கப்படும் ஒரு புதுவகைக் கட்டிட அமைப்பும் நிஸங்க மல்லனுடையதாகக் கொள்ளப்படினும், அவனே நிறுவினான் என உறுதியாகக் கூறுதற்கு ஆதாரமில்லை. உயர்ந்து, படிப்படியாகக் குறைந்து செல்லும் ஒரு கோபுர அமைப்பைக் கொண்ட இவ்வுறுதியான கட்டிடம் வடசீயத்திலுள்ள ஒரு கட்டிடத்தை நிகர்த்ததால், அங்குள்ள முறை இலங்கையைப் பாதித்திருக்கலாம் அல்லது இந்தியாவிலிருந்து பின்னர் அழிந்துபோன ஒரு கட்டிடத்தை அடியொற்றி இது நிறுவப் பெற்றிருக்கவும் கூடும். ஹட்டதாகே என்பதை இவனே நிறுவினான் என்பதற்கு ஆதாரமுண்டு. பற்சின்னத்தை வைத்தற்குக் கட்டப்பெற்ற இக்கட்டிடத் திலும் ஒரு மேல்மாடி இருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. சாகிரிய என்ற இடத்திலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு பெரும் பாறைக் கல்லை அழுத்தமாக்கி, அதில் இலங்கையிலுள்ள மிக நீண்ட கல்வெட்டை அவன் பொறிக்கச் செய்தான். இதுவே கல்பொத்த (Gal-Pota) என வழங்கப்படுகின்றது. சுமார் 27 அடி நீளமும், 5 அடி அகலமும், 2அடி உயரமும் கொண்ட இக்கல்லானது வரலாற்று முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. பொலன்னறுவையிலுள்ள மிகப் பெரிய (பூரணமான) தாகபம் றன்கொத் தாபகம் என வழங்கப்படும் ரூவான்வலி தாகபமாகும். 180 அடி உயரத்தையும், அடிப்பாகத்தில் 550 அடி சுற்றளவையுங் கொண்டது இக்கட்டிடம் ஆகும். நிஸங்கமல்லன் மறைந்ததைத் தொடர்ந்து உண்டான தகராறுகள், கட்டிடத்துறையில் மேலும் அபிவிருத்திகள் ஏற்படுவதைத் தடுத்தன. ஈற்றில் கலிங்கமாகனது ஆட்சியில் ஏற்பட்ட நிகழ்வுகள் இக்கட்டிடங்களிற் பல அழியவும் பாழெய்தவும் காரணமாயின. 13ம் நூற்றாண்டின் முடிவில் பொலன்னறுவையின் புகழை மீட்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், இவை எவ்வித பலனையும் தரவில்லை. ஆறு நூற்றாண்டுகளுக்கு மேற் காடுகளாற் சூழப்பெற்றிருந்த இப்பெருநகர் கடந்த அரைநூற்றாண்டுக் காலமாகத் தொல்பொருளாய்வுப் பகுதியினர் மேற்கொண்ட முயற்சிகளால் அங்குள்ள பழைய சின்னங்கள் இன்று நன்னிலையிற் பேணப்பட்டு வருகின்றன. இச்சின்னங்கள் பண்டைய ஈழத்தினதும், சிங்களப் பண்பாட்டினதும் பெருமைகளை நினைவுக்குக் கொண்டுவர உதவுகின்றன.

கட்டிடமுறையில் புதிய விருத்திகள்: பொலன்னறுவைக் காலத்தில் நிறுவப்பட்ட முக்கிய தாகபங்கள் அனுராதபுர காலத்துப் பாரிய தாகபங்களையே மாதிரிகளாகக் கொண்டு அமைக்கப்பெற்றன. தமிழதூபம் போலவே பராக்கிரமபாகுவின் காலத்தைச் சேர்ந்த வேறிரு (டெடிகமை, யதங்கனா ஆகிய இடங்களிலுள்ள) தாகபங்களும் நிறைவேறாத தோற்றத்தைக் கொண்டிருப்பதால், ஒரு வேளை 'ஸ்தூப' முறையின் வளர்ச்சியில் இதுவும் ஒரு புதிய போக்கைக் காட்டலாம் எனப்படுகின்றது. சேத்திய-கர என்ற கட்டிடவகை இலங்கையில் எய்திய வளர்ச்சியின் இறுதிப் படியைக் காட்டுவதாக பொலன்னறுவையில் உள்ள வட்டதாகேயைக் குறிப்பிடுவர். பிளிமகே எனப்படும் உருவவீடு என்பதே பொலன்னறுவைக் காலத்தில் அதிக முக்கியம் பெற்றிருந்தது. வளைந்த முகட்டையுடையதும், செங்கல்லால் கட்டப்பட்டதுமான இக்கட்டிட முறை அடிப்படையில் இந்துக் கோவில்களைப் போன்றது. தூபாராம எனப்படுவதும், இலங்காதிலகவும், திவங்க-படிமா-கரவும் பொலன்னறுவையில் இக்கட்டிட வகைக்கு உள்ள சிறந்த உதாரணங்களாகும். முன்னையதில் இருக்கும் புத்தர் சிலையும், பின்னைய இரண்டிலும் நிற்கும் புத்தர் சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன. தூபராம ஒன்றிலேயே வளைந்த மேற்கோப்பை இன்றும் காணமுடிகின்றது. நிஸங்க லதா மண்டபம், சத்மஹால் பிரசாத என்பனவும் புதிய அமைப்புக்களைக் கொண்டுள்ளதை முன்னரே கூறினோம்.

சிற்பம்

சிற்பக்கலையில் ஈடுபட்ட கலைஞர்கள், கட்டிடக்கலைஞர் களுக்குத் துணையாக அவர்கள் நிறுவும் கட்டிடங்களின் உறுப்புக்களாக உள்ளவற்றையும், சிலவேளைகளில் தனியான சிற்பங்களையும் செதுக்கி வந்தனர். பொலன்னறுவைக் காலப் புத்தர் சிலைகளுக்கு, கல்விகாரையில் செதுக்கப்பட்டுள்ள நான்கு உருவச்சிலைகள் சிறந்த எடுத்துக்காட்டுக்கள் ஆகும். அவை அணைத்துமே பெரிய சிலைகள் என்பதை அவற்றின் பரிமாணங்கள் விளக்கும். படுத்திருக்குமட் பாணியில் உள்ளது 46 அடி நீளமும், இருக்கும் திருவுருவம் 15 அடி உயரமும், மற்றொரு இருக்கும் பாணியில் செதுக்கப்பெற்ற புத்தர் சிலையும் முன்னையதை விடக் குறைந்த உயரமும் கொண்டவை. இவற்றைவிட, நின்ற திருவுருவச்சிலை (22 அடி உயரம்) கவர்ச்சியைக் கொண்டு விளங்குகின்றது. வட்டதாகேயில் உள்ள புத்த உருவங்கள் இலங்கையில் வேறெங்கும் காணமுடியாத ஒரு தனியான முறையில் அமைந்தவை. பொத்கல் விகாரையின் முன்னுள்ள ஒரு பாறையில் குடைந்தெடுக்கப்பட்ட உருவச்சிலை, எதைப் பிரதிபலிக்கின்றதென்பதை ஆராய்ச்சியாளர் முடிவுகட்டவில்லை. அகஸ்தியர் அல்லது புலஸ்தியர் சிலையாகவே நிறுவப்பெற்றது என ஒரு சாராரும், பராக்கிரமபாகுவின் சிலையே எனப் பிறிதொருசாராரும் முரண்பட்டு நிற்கின்றனர். இச்சிலையின் கையிலுள்ளதைப் புத்தகம் (ஓலை) எனப் பொதுவாகக் கொள்வர். ஆனால், பரணவிதான அதை அரசச் சின்னமாகக் கொள்வர். பராக்கிரமபாகுவாக இல்லாவிடினும் வோறொரு பொலன்னறுவைக்கால மன்னனையே அச்சிலை சித்தரிப்பதாக அவர்

கொள்கின்றார் பொலன்னறுவைக் காலத்திலும், கட்டிடங்களின் உறுப்புக்களாகப் படிக்கட்டுத் தொடர்கள், சந்திரவட்டப் படிக்கற்கள் முதலானவை பயன்பட்டன. ஆனால் இச்சிற்பங்கள் அனுராதபுர காலச் சிற்பங்களுக்கு இணையான எழிலைக் கொண்டிருக்கவில்லை. சந்திரவட்டக் கற்களில், பொலன்னறுவைக் காலத்தவை ஒன்றேனும் முந்திய காலப்பகுதியின் குறைந்த தரத்தவைக்கும் நிகராக இருக்கவில்லை. பொலன்னறுவைக்கால சந்திரவட்டக் கற்கள் தேவையற்ற அளவு வேலைப்பாடுகளையும் அலங்கார வேலைகளையும் கொண்டு உருவங்கள் நெருக்கமாகவும் உயிர்த்துடிப்பற்றும் இருப்பதைக் காணலாம். பொலன்னறுவையில் உள்ளவற்றுள் சிறந்ததாக வட்டதாகேயில் உள்ள சந்திர வட்டக்கல்லைக் குறிப்பிடுவர்.

ஓவியம்

பொலன்னறுவைக் காலத்தல் ஓவியக்கலை வளர்ச்சியுற்றிருந்த மைக்கு இலங்கியங்களில் பல குறிப்புக்கள் இருப்பினும், எமக்கு இன்று கிடைத்துள்ள ஓவியங்கள் மிகச் சில. மஹியங்கண தூபத்தின் தாது அறையில் வரையப்பட்ட ஓவியங்களே காலத்தால் முற்பட்டவை. திம்புலாகலையிலும், அதற்கு அண்மையிலும் உள்ள விகாரைகளில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. கல் விகாரையிலும் முன்னர் ஒவ்வொரு புத்தர் சிலையையும் சூழ உருவங்கள் தீட்டப்பெற்றிருத்தல் வேண்டுமென நம்பப்படுகின்றது. ஆனால் உத்தரராமையில் உள்ள **திவங்க பிளிமகேயிலேயே பெருமளவு ஓவியங்கள் நன்னிலையிற் பேணப்பட்டுள்ளன. ஜாதகக் கதைகளில் வரும் காட்சிகளையும், புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் சித்தரிக்கும் ஓவியங்களே இங்கு தீட்டப் பெற்றுள்ளன.** புறவுருவங்களை முதலில் சிகப்பில் வரைந்து, பின்னர் மஞ்சள், பச்சை முதலான வேறு வண்ணங்கள் மேலுக்குத் தீட்டப் பெற்றிருக்கின்றன. மொத்தத்தில் கவர்ச்சியும், உருவங்களின் முகபாவங்களைச் சித்தரித்துக் காட்டுவதில் திறமையும், இவற்றில் போற்றுதற்குரிய அம்சங்களாகும். சீகிரி அல்லது அஜந்தா ஓவியங்களுக்கு இவை நிகராக இல்லாதபோதும், இந்த ஓவியங்கள் வரையப்பட்ட காலத்தில் இந்தியாவிலும் ஓவியக்கலை தேய்வடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்டிடக்கலை சிற்பம் முதலியன

கட்டிடக்கலை முதலான கதவின் கலைகளிலும் பிற துறைகளில் காணப்பட்ட ஒரு தேய்வுநிலையே தம்பதெணி முதலான பிந்திய காலங்களிற் காணப்பட்ட தென்பர். இப்பிந்திய காலங்களில் இராசதானிகளாக விளங்கிய தம்பதெணிய, குருணாகலை, டெடிகமை யாப்பகுவ, கம்பளை, ரயிகமை, கோட்டை முதலான இடங்களில் போதிய அளவு இடிபாடுகளோ, படைய கட்டிடச் சின்னங்களளோ எமக்குக் கிட்டவில்லை. சோழர் நிகழ்த்திய அழிவு வேலைகளுக்குப் பின் அனுராதபுரத்திலும், மாகனுடைய அழிவு வேலைகளுக்குப் பின பொலன்னறுவையிலும் எஞ்சிய கட்டிடச்சிதைவுகளுள் ஒரு பகுதிதானும் இப்பிந்திய

காலத் தலைநகர்களில் காணப்படவில்லை. இதற்குக் காரணம், பின்னர் வந்த போர்த்துக்கேயர் கடைப்பிடித்த கலை அழிவுக்கொள்கையெனக் கூறலாம். ஆனால், இது ஒரு தகுந்த விளக்கமாகத் தென்படவில்லை. பொலன்னறுவை, அனுராதபுரம் என்பவற்றைப் போலப் பிந்திய கால இராசதானிகள் நெடுங்காலம் தலைநகர்களாக விளங்கவில்லை. அரசியல் அமைதியும் உறுதிச் சமநிலையும் குறைந்த இப்பிந்திய காலப்பகுதிகளில் அமைதியும் பொருளியற் செழிப்பும் உள்ள காலங்களைப் போன்று பெருந்தொகையான கட்டிட சிற்பவேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க முடியாது. அவசரவேலைகளாக இவை இருந்திருக்கு மாதலால், உறுதிவாய்ந்த கட்டிடங்களாக இல்லாது, அழிந்துவிடும் தன்மை உடைய செங்கல் முதலானவற்றால் கட்டப்பட்டவையாகவே இருந்திருக்க வேண்டும்.

கி.பி.1200 - 1500 வரையிலான இடைமாறு காலப்பரப்பில் இலங்கையின் கலைவளர்ச்சி

இந்த 300 வருடகாலப்பகுதியை உள்ளடக்கிய வரலாற்றை வரலாற்றாசிரியர்கள் **இடைமாறுகாலம** அல்லது **நிலைமாற்ற காலம** அல்லது **சிங்கள நாகரிகத்தின் வீழ்ச்சிக்காலம்** என வரையறை செய்துள்ளனர். ஓர் அதிகாரம்மிக்க ஆட்சியாளனின் வீழ்ச்சியின்பின் அரசியல் ஒருமைப்பாடு சிதை வடையும் என்பது ஒரு பொதுவான நிலைப்பாடாகும். முதலாம் மகாபராக்கிரமபாகு வின் மறைவிற்குப் பின்னரான (1153 - 1186A.D.) 33வருடகாலமான நிலையான -அதேநேரத்தில் வன்மையாகக் காணப்பட்ட ஆட்சியமைப்பு முறையானது அடுத்த 100 வருட காலத்திற்குத் தன்னிலையிழந்து, இரண்டாம் பராக்கிரமபாகு ஆட்சிக்கு வரும்வரைக்கும் பொலிவிழந்திருந்தது. பொலனறுவைக் காலக்கட்டிடக் கலைமரபு களும் நிசங்கமல்லனது (1187-1196A.D.) ஆட்சிக்குப்பின்னர் வளர்ச்சி பெற்றிருந்தமைக்கான எவ்விதமான பதிவுகளும் இன்றிக்காணப்பட்டது. ஆனால் பெருமளவிற்கு ஏற்கனவே காணப்பட்ட கட்டிடங்களைப் புதுப்பித்தல், மற்றும் மேலதிகமான கட்டிடக் கூறுகளைச் சேர்த்தல் போன்றவை நிகழ்ந்துள்ளன. நிசங்கமல்லனின் ஆட்சி முடிவுபெற்று வந்த அடுத்த 19 வருடகாலத்தினுள் 11 அரசர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். இக்காலகட்டத்திற்குள் இராணி லீலாவதி மும்முறை முடிசூட்டப்பட்டு பொலனறுவையின் அதிகாரத்தினைத் தலைமைதாங்கி நடாத்தி இருந்தார். இராணி கல்யாணவதியின் 06 வருடகால ஆட்சியே பொலனறுவையில் நிசங்கமல்லனுக்குப் பின்னர் நீண்ட ஆட்சிக்காலமாக விளங்கியது.

21 வருட கால மாகனது ஆட்சிக்காலமானது பொலனறுவையிலே மட்டுமன்றி இலங்கையின் அரசியல், பொருளாதார,கட்டிட, ஓவிய, சிற்பக்கலைமரபுகளில் பாரிய மாற்றங்களை நிகழ்த்தியது. நகரத்திட்டமிடல், மற்றும் சிங்கள சமூக - கட்டமைப்பு ஆகியவற்றில் பாரிய மாற்றங்களை நிகழ்த்தியது. 300 வருடகால இடைவெளியைக் கொண்ட இக்கால இலங்கை வரலாற்றில் 10 மையங்களை நோக்கி அரசியல் அதிகார மையம் மாற்றப்பட்டமையைக் காணலாம். பேரரசுகள தெற்கு மற்றும் இலங்கையின் மையம் நோக்கி நகர்த்தப்பட்டுக் கொண்டு

செல்லப்பட்டன. சமகாலத்தில் வெளிநாட்டிலிருந்து இலங்கையை நோக்கி பல முறைகளில் அடுத்தடுத்து நிகழ்ந்த படையெடுப்புக்களிலிருந்து அரசவம்சத்தினைப் பாதுகாப்பதன் பொருட்டே இவ்வாறு அருசுகள் பாதுகாப்பான பிரதேசங்களை நோக்கி திட்டவட்டமாக நகர்த்தப்பட்டன என்பதனை உணரலாம். பாதுகாப்பின்மையும் தளம்பலும் மிக்க இக்காலத்தில் கட்டிடக்கலை மரபுகள் வளர்ச்சி பெறுவதற்குரிய உகந்த சூழல் உருவாகவில்லை. அழகியல் சார்ந்த உணர்வுகளும் சிறந்த கட்டிட - சிற்பக்கலைமரபுகளை உருவாக்கும் திறன்களும் இக்கட்டத்தில் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து மங்கி மறைந்துவிட்டன. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் ஒரு புதிய அரசியல் தேவையின் பின்னணியில் மிக இலகுவானதும் விரைவாகவும் உருவாக்கி அமைக்கக்கூடிய கட்டிடக்கலை மரபொன்று தோற்றம் பெற்றதோடு, பல்வேறுபட்ட தேவைகளுக்காக - தேவைகளை நிறைவு செய்யும்வகையிலான கட்டிடங்கள் ஒருவாக்கப்பட்ட நிலையில் நகரங்கள் தோற்றுவிக்கப்பட்டமையைக் காணலாம்.

பிந்தியகாலக் கட்டிடச் சிதைவுகளுள், குறிப்பிடதக்க சின்னங்கள் யாப்பகுவவிலும், கம்பளைக்கண்மைமயிலுள்ள இரண்டு இடங்களிலும் உள்ளன. கோட்டை போன்ற இடங்களில் முன்னர் இராசதானிகளாக இருந்தமைக்கான சான்றுகளையே காண்டல் அரிது. யாப்பகுவவில் 'தளதா மாளிகாவ' எனத் தவறாக அழைக்கப்படும் ஒரு கட்டிடத்தின் சிதைவுகள் உள. இதைத் தவிர, பழைய நகரின் எல்லையில் எடுப்பான தோற்றமுடைய வாயிற்கட்டிட அமைப்புக்குக் கொண்டு செல்லும் பாரிய படிக்கட்டு உளது. உண்மையான தலதாமாளிகையின் சிதைவுகள் இவையாகவே இருக்கலாம் எனப் பரணவிதான குறிப்பிடுகின்றார். இக்கட்டிட அமைப்புக்களில் காணப்படும் அழகு வேலைப்பாடுகள் தென்னிந்திய (திராவிட) குறிப்பாகப் பிற்காலப் பாண்டிய மரபில் உள்ளவையாகும். படிக்கட்டில் உள்ள சில அம்சங்கள் கமேமர் (கம்போடிய) கட்டிடங்களின் பண்புகளைக் கொண்டிருப்பதாகக் கூறுவர்.

கம்பளைக் காலத்தில் கட்டிடத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்ததாகக் கருதலாம். அரசர்களின் அக்கறையும் சமயப்பற்றும் மட்டும் இதற்குக் காரணமாகா. தென்னிந்தியாவிலிருந்து முஸ்லிம் படையெடுப்புக்களின் விளைவாக தம் நாட்டைவிட்டு இலங்கை வந்த ஆசாரிகள் (கற்றச்சர்கள்), இங்கு சமயக்கட்டிடங்கள் நிறுவுவதில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனால் தென்னிந்தியக் கட்டிட மரபுகள் தழுவிய கட்டிடங்கள் பல இங்கு எழுந்தன என்பர். பௌத்தக் கட்டிடங்களில் தென்னிந்திய இந்துக்கோயில்களின் கட்டிட முறைகள் புகுந்தமைக்கு இத்தகைய விளக்கம் தரப்பட்டுள்ளது. கம்பளைக் கணித்தாகவுள்ள இரு வெவ்வேறு இடங்களில் ஏறத்தாழ ஒரே காலத்தில் நிறுவப்பட்ட லங்கா திலக, கடலாதெணிக் கோவில்கள் இக்காலத்துக் கட்டிடங்களுள் தனிச்சிறப்பைப் பெறுவன. சென்னலங்காதிகார என்ற அமைச்சனது வண்மையைப் பெற்று எழுந்த லங்காதிலகவின் பெரும்பகுதி செங்கல்லால் அமைந்தது. அடிப்பாகமும், கதவு நிலைகளும் கல்லால் ஆனாவை. 96 அடி

நீளமும் 78 அடி அகலமும், 80 அடி உயரமும் கொண்டதாக இருந்தது. இக்கட்டிடம் பாரிய புத்தர் திருவுருவம் வழிபாட்டுக்குரிய முக்கிய சிலையாக மூலக்கோயிலிலும், உபுலவன், சமன், விபீஷணன், கணேச, ஸ்கந்தத் தெய்வங்களின் சிலைகள் வெளிப்புறச் சுவர்களின் இடைகளிலும் (மாடக்குழிகளில்) வைக்கப்பட்டுள்ளன. இக்கட்டிடத்தில் பெரும்பாலும் பழைய சிங்களக் கட்டிட முறைகளுடன், தென்னிந்திய பர்மியக் கலைப்பண்புகளும் கலந்திருத்தல் புலப்படும்.

கடலாதெணிக் கோவிலின் தோற்றத்துக்குக் காரணமாகவிருந்தவர் தர்மகீர்த்தி என்ற தலைமைக் குருவாவர். லங்காதிலகவைப் போன்றே இதுவும் 5-ம் விஜயபாகுவின் காலத்தில் கட்டத்தொடங்கி 4-ம் புவனேகபாகுவின் மூன்றாம் ஆட்சியாண்டில் பூர்த்தியாக்கப்பட்டது. இது அக்காலத் தென்னிந்திய (விஜயநகர)க் கலைமரபில் கட்டப்பெற்றுள்ளது. மூலக்கோயிலில் வஜ்ராசனத்தில் வீற்றிருக்கும் புத்தரின் பாரிய உருவம் வைக்கப்பட்டுள்ளது. 'படிமாகர' என்ற பௌத்தக் கோவிலினதும், தேவாலயத்தினதும் அமைப்புக்கள் இந்தக் கட்டிடத்தின் மனை படத்தில் கலந்து இணைந்துள்ளன. இக்கட்டிடத்தின் சிகரம் என்ற பகுதியைவிட ஏனைய பகுதிகள் யாவும் கல்லாலானவை என்பது குறிப்பிடத்தக்கதே. திராவிடக் கட்டிட முறையில் அமைந்த மற்றும் இரு கோவில்கள் கண்டியில் உள்ள நாததேவாலை, ஆதாஹனமளுவவிலுள்ள கெடிகே என்பன.

சிற்பக் கலையும், கட்டிடத்துறை போலவே ஒருவகைத் தேய்வுநிலையையே எய்தியிருந்தது. இக்காலக் கட்டிடங்களில் எமக்குக் கிடைத்துள்ளவற்றில் பலவகைச் சிற்ப வேலைப்பாடுகளைக் காணலாம். பொலன்னறுவைக் காலத்தில் உள்ளவற்றைப் போன்ற சந்திரவட்டப் படிக்கல் பெலிகலவில் காணப்படுகின்றது. பிற்காலத்தில் இச்சிற்ப அமைப்பு பல மாற்றங்களை எய்தியது. கற்களாலான புத்தர் சிலைகளும் இக்காலத்தில் அருமையாகவே கிடைத்துள்ளன. அவற்றுள் கணேகொடையில் (அலவதுர-கேகாலை மாவட்டம்) உள்ளது மிகச்சிறந்தது எனலாம். இக்காலத்து வெண்கலச் சிலைகளும் கலையெழில் குறைந்தே காணப்படுகின்றன. ஓவியங்கள் பற்றி இலக்கியங்களில் வரும் குறிப்புக்களைத் தவிர, இக்காலப் பகுதிக்குரிய ஓவியம் எதுவும் எமக்குக் கிட்டவில்லை.

சமய நிலைமைகள்

பொலன்னறுவைக்கால முடிவில் பௌத்தமும், பௌத்த 'சங்க'மும் பெரும் சீர்கேடடைந்திருந்தன. சோழராட்சியின் முடிவிலிருந்ததைவிட, கலிங்கமாகனது ஆட்சியின் முடிவில் பௌத்தத்தின் நிலை பெருங்கவலைக்கிடமாகக் காணப் பட்டது. சங்கத்தில் தோன்றிய ஊழல்கள், விகாரைகளும் பிறசமய நிறுவனங்களும் அடைந்திருந்த சேதங்கள், அரச ஆதரவின்றிக் குருமார்கள் பட்ட அவதிகள் அனந்தம். பல பௌத்த குருமார்கள் பிற பௌத்த நாடுகளுக்குச் சென்று தங்கினர். பௌத்தம் இவ்விதமான நிலையிலிருந்தபோதே, தம்பதெனியாவின் முதல் அரசனாக 3-ம் விஜயபாகு அரசைப் பெற்றான். இவன் சங்கத்

தலைவர்களுடன் ஒத்துழைத்து சங்கத்தின் புனிதத்தையும் நற்பெயரையும் நிலைநாட்டுவதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டான். இவனுடைய காலத்தில் தம்பதெணியில் நிறுவப்பட்ட விஜய சுந்தராராமயவில் ஒரு சமயமன்று கூடி, அங்கு எழுந்த கருத்து வேற்றுமைகளை ஆராய்ந்து விநய விதிகளின்படி அவற்றுக்குத் தீர்வுகண்டு, சங்கத்தினர் பின்பற்றுதற்கென ஒழுக்கவிதிக் கோவை ஒன்றை வகுத்தது. 1222ல் வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் இக் கதிகாவத எமக்குக் கிட்டவில்லை. உபசம்பதாச் சடங்கை ஒழுங்காக வைத்தற்கு நடவடிக்கை களை எடுத்தும், திருநூல்களைப் பிரதி பண்ணவைத்தும், புதிய விகாரைகளை நிறுவியும், குருமார்களின் கல்விக்குரிய வசதிகளை ஏற்படுத்தியும் மற்றும் பல வழிகளிலும் சங்கத்தையும் பௌத்தத்தையும் பழைய நன்னிலைக்குக் கொண்டுவர மன்னன் பாடுபட்டான். இவற்றில அவன் ஓரளவுக்காயினும் வெற்றி பெற்றான் எனலாம்.

2-ம் பராக்கிரமபாகுவும தன் தந்தையின் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி, மேலும் பல பணிகளை ஆற்றி, சமயத்தை மேனிலைபெற வைத்தான். சோழ நாட்டிலிருந்தும், தம்பரட்டவிலிருந்தும் (மலாயா) வரவழைக்கப்பட்ட அறிவுசான்ற குருமார்கள் இலங்கையில் சமய மறுமலர்ச்சிக்கு உழைத்தனர். இலங்கையில் பெறமுடியாத சமய நூல்களின் சுவடிகளும் பிற பௌத்த நாடுகளிலிருந்தே தருவிக்கப்பட்டுப் பிரதி பண்ணப்பட்டன. முன்னரே நாம் கவனித்துள்ளவாறு 2-ம் பராக்கிரமபாகுவின் காலத்திலும் சமயப்பேரவை ஒன்றுகூடி, சங்கத்தைத் தூய்மை பெற வைத்தற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இப்பேரவை 1266-ல் கூடியதாகக் கொள்வர். தம்பதெணியில் கூடிய இச்சமயப் பேரவைக்குத் தலைமை தாங்கியவர் மேதங்கர மகாஸ்வாமி என்பாரே. பலரைச் சங்கத்தினின்றும் வெளியேற்றியதோடு, தம்பதெதணி கதிகாவத எனப்படும் ஒழுக்க விதிகளை இப்பேரவை தொகுத்து வெளியிட்டது. இவ்விதிகளை இன்னும் நாம் பயிலும் வாய்ப்பு உண்டு. இவ்விதிகளில் குருமாரின் ஒழுக்கமும் தூயவாழ்வும் வலியுறுத்தப் பெற்றிருப்பதோடு, அவர்கள் கல்வியிலும் சமய அறிவிலும் தேர்ச்சிபெற வேண்டு மெனவும் எதிர்பார்க்கப்பட்டது. 2-ம் பராக்கிரமபாகு ஒன்பது தடவைகள் உபசம்பதாச் சடங்கை நடாத்தி வைத்தான். அவனர் ஆட்சி முடிவடையும் தறுவாயில் தாஸ்தோட்டவில் அவ்வைபவம் நடத்தப்பட்டது. 2-ம் புவனேகபாகு என்ற மன்னன் காலத்தில் இவ்வைபவங்கள் ஆண்டுதோறும் நடைபெற்றதாகக் கூறப்படும். பிக்குகளுக்கு ஆடை வழங்கும் வைபவங்களும் தம்பதெனியாக் காலத்தில் சிறப்பாக நடைபெற்றன. 2-ம் பராக்கிரமபாகுவின் பின்னோரும் அவனைப் போலவே பல சமய நடவடிக்கைகளை மேற்கொண்டு சமயத்தில் நிலையைப் பாதுகாத்து வந்தனர்.

தம்பதெனிய மரபின் வீழ்ச்சியுடன், சங்கத்தில் மீண்டும் ஒழுக்கக் குறைவு புகுந்து அதன் பெயரை மாசுபடுத்தியது. கம்பளை மரபினர் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி, அமைதியான ஆட்சிமுறையையும் ஏற்படுத்தியபோது, இவ்வொழுக்கச் சீர்கேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. சென்னலங்காதிகார என்ற

அமைச்சனே இம்முறை சமயப் பேரவை கூடுதற்குக் காரணமாகவிருந்தவன். அமரகிரிவாச வனரத்தன மஹாசாமி என்பாரின் தலைமையில் கூடிய இச்சமயமன்று முந்திய சமய மன்றுகளைப் போலவே சங்கத் தூய்மைக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1341ல் இம்மன்று கூடியதெனலாம். இச்சமய மன்றின் நடவடிக்கைகளாலும் அதிகபயன் கிட்டவில்லை. சிறிது காலத்தின்பின், அளகேஸ்வரன் என்ற அமைச்சன் (பிரபுராஜா) ஒருவனும், வீரபாகு - ஆபா என்பவனும் மீண்டும் இத்தகைய மன்றுகளைக் கூட்டுவித்து சங்கத்தின் புனிதத்தை நிலைநாட்டினர்.

கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த பெருமன்னனான 6-ம் பராக்கிரமபாகுவும் மதவளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கினான். வீதாகம மாகாசாமி என்ற பிக்கு இவன் அரசைப் பெறத் துணைநின்றார் என்ற மரபுரைபற்றி முன்னர் கூறினோம். இவனுடைய காலத்தில் விளங்கிய விழுமிய குருமார்கள் பலர் சர்வதேசப் புகழ்பெற்றவர்கள். 6-ம் பராக்கிரமபாகுவும் தனது நாற்பத்தைந்தாவது ஆட்சியாண்டில், குருமார்கள் பின்பற்றுவதற்கான விதிகளை வெளியிட்டிருந்தான். ஆயின் இவ்விதிகள் முழுவதும் எமக்கு இப்போது கிட்டவில்லை. 6-ம் பராக்கிரமபாகுவுக்குப் பின் ஆட்சிசெய்த கோட்டை மன்னர்கள் சமய வளர்ச்சியில் அவன் அளவுக்கு அக்கறை காட்டியதாகப் புலப்படவில்லை. எனவே, போர்த்துக்கேயருடைய வருகைக்கு முன்பே, பௌத்தம் ஓரளவு தேய்வடையத் தொடங்கியிருந்ததெனலாம்.

13-ம், 14-ம், 15-ம் நூற்றாண்டுகளில் தென்கிழக்காசியாவிலுள்ள பிற தேரவாத பௌத்த நாடுகளிடையே இலங்கைக்கு மட்டற்ற மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டிருந்தது. இதனால் இலங்கைக்கும் அந்நாடுகளுக்குமிடையே அடிக்கடி சமய உறவுகள் ஏற்பட்டுவந்தன. கம்போடியா, பர்மா ஆகிய நாடுகளுடன் இருந்த தொடர்புகளை முன்னரே (அத்.20) குறிப்பிட்டுவிட்டோம். சீயம், சீனா ஆகிய இரு நாடுகளுடன் இம் மூன்று நூற்றாண்டுகளிலும் நிலவிய சமயத் தொடர்புகளை இங்கு சுருக்கமாகக் கூறுவோம். இலங்கையைச் சேர்ந்த உதும்பர மஹாசாமி என அழைக்கப்பட்ட பிக்கு தலைவர் எடுத்த முயற்சியின் விளைவாகவே, 14-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சுகோதய அரசியலும், வட சீயத்திலிருந்த தாய் அரசியலும் இலங்கையில் பின்பற்றப்படும் தேரவாதப் பிரிவு பரவலாயிற்று என அங்குள்ள ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. வேறு ஆதாரங்களைக் கொண்டு பர்மா, சீயத்துக்கு விஜயம் செய்து அங்கு தேரவாதப் பிரிவுக்குரிய ஒழுக்கங்களை அந்நாடுகளிற் பரவ வைத்தவர் மேதங்கர மகாசாமி (சங்கராஜா) என அறியப்படுகின்றது. இச் சங்கராசாவால் ஆட்கொள்ளப்பட்ட தாய் அரசன் லிதய்ய ஆவன். இவனுடைய சேவைபற்றிச் சங்கராஜா பாலியிற் பாடிய செய்யுள்கள் சில சுகோதயவில் பொறிக்கப் பெற்றுள்ளன. அனுராதபுரத்தில் உள்ள போதிமரத்துக்குரிய முளையொன்று சுகோதயவில் ஒரு விகாரையில் நாட்டப்பெற்றது. சீயத்தைச் சேர்ந்த பிக்குகளும் இலங்கை வந்து தங்கி, நூல்களை இயற்றிச் சென்றனர். அத்தகைய ஒருவரே, கடலாதெணியில் வந்து தங்கி, தம்மகீர்த்தி மகாசாமியிடம் பயின்று பின்னர் சத்தம்ம சங்ஹக என்ற

நூலை எழுதியவர். 6-ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இலங்கை வந்து, இங்கே திருநூல்களைக் கற்று உபசம்பதாச் சடங்கைக் களனியில் முடித்துத் திரும்பிய பிக்குகள் தம் நாட்டிலும் புதிய அமைப்பைக்கொண்ட சங்கத்தை நிறுவினர். அதற்கும் சீஹள சங்க என்ற பெயரே ஏற்பட்டது. இலங்கையிலிருந்து திரும்பியபோது ஒரு பிக்கு ஸ்ரீபாதமலையிலுள்ள திருவடியின் பிம்பம் ஒன்றை எடுத்துச் சென்றார். இதுவும் வழிபாட்டுக்குரிய பிற பௌத்தச் சின்னங்களும் காலத்துக்குக்காலம் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சுகோதயவிலும், வடசீயத்திலும் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வந்தன. இலங்கையில் வழிபடப்பட்ட பௌத்தச் சின்னங்கள் பற்றிச் சீனச் சக்கரவர்த்திகளும் அறிய வந்தனர். அவர்களுள் மிகவும் பிரசித்தி பெற்றவனான குப்ளாய் கான் 1284ல் இலங்கையிலுள்ள தந்ததாது, கேசதாது, ஜயக்கலம் என்பவற்றைப் பெறுதற்குத் தூதனுப்பினான். மிங் சக்கரவர்த்தியான யுங்-லோ ஸ்ரீபாதாவுக்குத் தன் காணிக்கையாக வழங்கும்படி சில விலையுயர்ந்த பொருட்களை அனுப்பினான்.

இலக்கிய வளர்ச்சி : தம்பதெனியக் காலம்

3-ம் விஜயபாகு தம்பதெனியை இராசதானியாகக் கொண்டு ஆட்சி நடத்தியபோது, முன்னர் மாகனது படையெழுச்சியின்போது பொலன்னறுவையை விட்டுப் பாதுகாப்பை நாடிப் பல விடங்களுக்கும் ஓடிய குருமார்களைத் தம்பதெணிக்கு அழைத்து அவர்களுக்குப் புகலிடம் அளித்தான். அழிவுற்ற பல நூல்களின் சுவடிகளைப் பிறநாடுகளிலிருந்து பெற்று, அவற்றைப் பிரதிபண்ணச் செய்தான். முன்னைய காலங்களைவிட, இப் பிந்திய காலங்களிலேயே சிங்களத்தில் இலக்கியங்கள் தோன்றலாயின. ஆனாலும், வடமொழிச் செல்வாக்கும் ஓரளவு இன்னும் இருந்தே வந்தது. தம்பதெனியக் கால மன்னர்கள் பலரும், குறிப்பாக 2-ம் பராக்கிரமபாகு, இலக்கிய வளர்ச்சியில் பெரிதும் அக்கறைகொண்டு, புலவர்களையும் அறிஞர்களையும் ஆதரித்தனர். 2-ம் பராக்கிரமபாகுவே ஒரு பெரும் புலவனாக மதிக்கப்படவேண்டியவன். இவனுடைய இலக்கியப் பணிகள் பற்றி முன்னரே கூறியுள்ளோம் (பக்.376). சோழ நாட்டிலிருந்தும் மலாயாவிலுள்ள தம்பரட்டவிலிருந்தும் அறிஞர்களை (குருமார்களை) வரவழைத்து அவர்களுக்குப் பல மரியாதைகளைச் செலுத்தினான். அவனுடைய வேண்டுகோளின்படியே அவனது காலம்வரை, சூளவம்சம் தொடர்ந்து பாடப்பட்டது. சிறீசங்கபோதியின் தன்னலமற்ற தியாகச்செயலை நினைவுகூர்தற்கு எழுந்த விகாரையின் வரலாறான ஹந்தவனகல்ல விகார வங்ஸ என்ற வசனநூல் (பாலியில்) எழுதப்பபட்டது வரலாற்று மரபுச் செய்திகள் இதில் உண்டு. வெதெஹ தேரர் என்பார் எழுதிய ரஸவாஹினீ, எளிய பாலி வசனநடையில் கதை ரூபத்தில் பல வரலாற்று நிகழ்ச்சிகளையும், மரபுரைகளையும் கூறுவது. இதில் வரும் 103 கதைகளில் நாற்பதும் இந்தியாவில் நடைபெற்றவை. சமந்தகூட வண்ணனா (ஸ்ரீபாதமலை வரலாற்றைக் கவிதை வடிவில் தருவது). மிகச் சிறந்ததொரு சிங்கள இலக்கண நூலான சிதத் சங்கராவ வெதெஹ தேரரின் மற்றைய படைப்புக்கள். வீரசோழியம் போன்ற தமிழ் இலக்கண நூல்களைப்

பின்பற்றியே வெதெஹ தேரர் தமது இலக்கண நூலை இயற்றியுள்ளார் என கொடகும்பர கொள்வர் வாகிரிகலை மயூரபாதப் பிரிவெனாத் தலைவரான புத்த புத்திரர் யோகர்ணவ என்ற வைத்திய நூலையும், பூஜாவலீ என்ற சமய நூலையும் எழுதினார். பாலியிலுள்ள 'தம்மதட்டகதா' என்பதில் வரும் கதைகளைச் சுவையான முறையில் சிங்களத்தில் கூறும் சத்தர்மரத்னாவலீ (வசனம்) இக்காலத்ததே. நெடுங்காலம் நிலைத்து வந்துள்ள ஓர் இலக்கியச் செல்வம் இது. 2-ம் பராக்கிரமபாகுதவின் புதல்வர்களும், தந்தையைப் போலவே இலக்கிய ஆர்வம் உடையவர்கள் : இலக்கிய வளர்ச்சிக்கு நிறைய உதவினர். இவர்களுடைய காலத்தில் வாழ்ந்த வனரத்தன மெங்கரர் பயோகசித்தி என்ற பாலி இலக்கண நூலை எழுதினார். புத்தரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கமான 'ஜினசரித'வை மற்றொரு மெதங்கரதேரரும் (இருவரும் ஒருவரேயென மாலாலசேகரா கருதுவர். இதே காலத்தவரே. குருணாகலையிலிருந்து ஆட்சி செய்த 4-ம் பராக்கிரமபாகு (1302 - 26) ஓரளவு இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தவன். தனது இராஜகுரு (சோழ நாட்டைச்சேர்ந்த ஒரு மகாதேரர்) வாயிலாக மன்னன் ஜாதகக் கதைகள் முழுவதையும் அறிந்து, அவற்றிற் பேரார்வங்கொண்டு, அவற்றைச் சிங்களத்தில் பெயர்க்கச் செய்தான். இச் சிங்கள ஆக்கமே 'பன்சிய-பணஸ்-ஜாதக-பொத்த' என்பது. இக்கதைகளைச் சிங்களத்தில் பெயர்த்தவர்கள் அக்காலச் சமூக நிலைமைகளைச் சுட்டும் செய்திகளை ஆங்காங்கே சேர்த்துவிட்டனர். தந்ததாதுவின் வரலாறான 'தளதா சிரித', எளு-போதி வங்ஸ, அனாகத வங்ஸ (பிந்திய இரண்டும் வசனநூல்கள் - ஸ்ரீ பராக்கிரமபாகு மாஹிமி என்பார் இயற்றியவை) இதே காலத்திலேயே எழுந்தன. சூளவம்சம் தொடர்ந்து 4-ம் பராக்கிரமபாகுவின் காலம்வரை பாடப்பட்டது. இவ்வாறு தம்பதெனிக் கால அரசியல் நிலைமை அவ்வளவு சிறப்பைப் பெற்றிராத போதும், இலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டதைக் காணலாம்.

கம்பளைக் காலம்

கம்பளைக் காலத்தில் சிங்களத்திலேயே மிகுதியான இலக்கியங்கள் இலங்கையில் தோன்றின. இதற்குக் கூறப்படும் காரணங்களை நாம் அறிதல் வேண்டும். இந்தியாவில், குறிப்பாக வடஇந்தியாவில் முஸ்லிம்களின் ஆதிக்கம் ஏற்பட்டதோடு, வடமொழியின் செல்வாக்கும அழியலாயிற்று. தென்னிந்தியாவில் விளங்கிய விஜயநகரப் பேரரசு தென்பிராந்திய (திராவிட) மொழிகளையே மிகுதியும் ஆதரித்தது. இலங்கையிலும் வடமொழி செல்வாக்கிழந்துவிட, சுதேச மொழியான சிங்களத்தில் நூல்கள் அதிகமாக எழுதப்பட்டன. மேலும் சமய விடயங்களையும் சமய வரலாற்றையும் கூறுதற்கே பாலி அதிகம் பயன்பட்டது. கற்பனை வளம் செறிந்த இலக்கியங்களை எழுதவும், உலகியல் சார்ந்த விடயங்களைக் கூறுவதற்கும் பாலி அதிகம் பயன்படமாட்டாது. வடமொழியைக் கற்றுத் தேர்ச்சிபெற்று, அம் மொழியிலேயே இலக்கியங்கள் சமைக்கும் அளவுக்குப் புலமை பெறுதல் அத்துணை எளிதன்று. அவ்வாறு புலமைபெற்று இலக்கியங் களைப் படைத்தாலும், அவற்றுக்குக் கற்றவர்கள் மத்தியில் மதிப்பைப் பெறுதல்

மிகக் கடினமானது. அவ்வாறு இலக்கியங்களை வடமொழியில் எழுதினால், அவற்றைப் பயன்படுத்தவல்ல வாசகர்களும் குறைவு. இத்தகைய காரணங்களா லேயே, சிங்களத்தில் நூல்கள் பெருந்தொகையாக இக்காலப் பகுதியில் எழுதப்பெற்றன. சிதத் சங்கராவ என்ற இலக்கண நூல் எழுதப்பட்டிருந்தமையும் சிங்களத்தில் நூல்கள் எழுதுவதற்குத் தூண்டுதலாகவிருந்தது.

கம்பளைக் காலத்தில் அரசியல் துறையில் போர்களும் போர்களுக்கான ஆயத்தங்களுமே அடிக்கடி இடம்பெற்று வந்தன. இடையிடையே நிலவிய அமைதியும், இலக்கிய வளர்ச்சிக்கு ஆதரவு தரும் ஆட்சியாளரும் இருந்த காலங்களில் இலக்கியங்கள் தழைத்து ஓங்கலாயின. 4-ம் புவனேகபாகுவின் அமைச்சனாக விளங்கிய செனாலங்காதிகார புலவர்களைப் போற்றும் புரவலனாக விளங்கினான். இவனுடைய தூண்டுதலால் கூடிய சமயப் பேரவையின் நடவடிக்கைகள் பற்றி முன்னரே கூறினோம். கம்பளைக் காலத்திலேயே 'சந்தேசய' என்ற தூதுப்பிரபந்தங்கள் சிங்களமொழியில் முதன்முதலாக செல்வாக்குப் பெறலாயின. கம்பளைக் காலத்தில் தோன்றிய இரு முக்கிய 'சந்தேச'க்களில் ஒன்றான திஸர சந்தேச (அன்னம் விடுதூது) என்பது, இப்போதுள்ள 'சந்தேச'க்கள் அனைத்துள்ளும் மிகப்பழையதாகும். டெடிகமையிலுள்ள ஆட்சியாளனுக்கு (5-ம் பராக்கிரமபாகுவுக்கு) தேவிநுவரையில் உள்ள ஒரு பௌத்த பிக்கு ஓர் அன்னம் மூலம் ஒரு செய்தியை அனுப்புவதாக அது பாடப் பெற்றது. மன்னனுக்குப் பாதுகாப்பையும், பகைவரை வெல்லும் வலிமையையும் அளிக்கும்படி தேவிநுவரையில் உள்ள உபுல்வன் (விஷ்ணு) தெய்வத்தைத் தாம் வேண்டினார். இதுவே மன்னனுக்கு அன்னம்மூலம் விடுக்கப்பட்ட செய்தி யாகும். காளிதாஸரின் வடமொழியிலக்கியமான மேகதூதத்தைத் தழுவி எழுந்த சிங்கள 'சந்தேச' பிரபந்தங்கள், இயற்கை வருணனை, இடங்களைப் பற்றிய வருணனைகள் முதலானவற்றுக்கும் அதிகமாக இடமளித்தன. இக்காலத்தில் எழுந்த மற்றொரு தூதுப் பிரபந்தமான மயூர சந்தேச (மயில் விடுதூது) 5-ம் புவனேகபாகுவின் காலத்தில் கடலாதெணியில் வாழ்ந்த ஒரு பிக்குவால் பாடப்பட்டது. தேவிநுவரையில் உள்ள உபுல்வன் தெய்வத்திடம் 5-ம் புவனேகபாகுவுக்கும் அவனது குடும்பத்தினர், அளகக்கோனார், சங்கராஜா, முதலானோர்க்கும் அருள் பாலிக்கும்படி வேண்டி மயிலைத் தூதாகக் கம்பளையிலிருந்து அனுப்புவதையே மயூர சந்தேச கருவாகக் கொண்டுள்ளது. கவித்துவச்சிறப்பு இச்சந்தேசயவில் அதிகமாகக் காணப்படுவதாகக் கூறுவர்.

5-ம் புவனேகபாகு (1372 - 1408) வின் ஆட்சியின் பிற்பகுதியில் சங்கராஜாவாக விளங்கிய தேவரக்கித ஜயபாகு தம்மகித்தி என்பார், இலங்கைப் பௌத்தமத வரலாறாக எழுதிய நிகாய - சங்கிரக'வில், வைதீக மதத்துக்கெதிராக நடைபெற்ற இயக்கங்கள் எய்திய தோல்விகளும், சங்கத்தைத் தூய்மைப்படுத்த எடுக்கப்பட்ட வெவ்வேறு நடவடிக்கைகளும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. இவருடைய மற்றொரு நூலான சத்தர்மாலங்கார, ரஸவாகினீயில் உள்ள கதைகளுடன் மேலும் பல கதைகளைக் கூறுகின்றது. பாலாவதார என்ற பாலி இலக்கண

நூலுக்குச் சிங்களத்தில் ஒரு 'சன்ன'வையும் இவரே எழுதினார். வீரபாகு ஆபா என்ற ஆட்சியாளனும் பல அறிஞர்களை ஆதரித்து அவர்களின் சேவைகளுக்கு வேண்டிய வசதிகளை அளித்தான்.

கோட்டைக் காலம்

கோட்டைக் காலத்திலும், குறிப்பாக 6-ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் (1412 - 67) இலக்கிய வளர்ச்சிக்குகந்த சூழ்நிலைகள் இருந்தன. இலக்கிய முயற்சிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டமையால் இலக்கிய வரலாற்றில் கோட்டைக் காலத்துக்குத் தனிச்சிறப்பு ஏற்பட்டது. 6-ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அறிவுப்பணியில் ஈடுபட்டிருந்த பிரிவெனாக்களுக்குப் போதிய ஆதரவை அவன் அளித்தான். இவற்றின் தலைவர்களும், வேறு பிக்குகளும் சிறந்த புலவர்களாகவும், அறிஞர்களாகவும் திகழ்ந்துள்ளனர். இவர்கள் எல்லோருள்ளும், தொடகமுவிலிருந்த விஜயபாகு பிரிவெனாவின் தலைரான ஸ்ரீ ராகுல என்பார் மிக்க சிறப்பைப் பெற்றவர். இளமைப் பருவத்திலேயே தாய்மொழி தவிர்ந்த ஆறுமொழிகளில் தேர்ச்சிபெற்றுள்ளதாக அவரே குறிப்பிட்டுள்ளார். இவர் எழுதிய நூல்களில் இவரது பெரும் புலமையும் நாட்டுப்பற்றும் மிளிர்கின்றன. சத்துபஸ்த - ஜாதகக் கதையை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீ ராகுல தேரர் பாடிய 'காவிய சேகர' என்பது, சிங்கள மொழியில் எழுந்த கவிதை நூல்களுள் ஓர் ஒப்பற்ற இடத்தை வகிக்கின்றது. பின்வந்த சிங்களக் கவிஞர்களுக்கெல்லாம் முன்மாதிரியான ஒரு கவிதை நூலாக இது விளங்கி வந்துள்ளது. வாரணாசி (காசி)யின் அரசனுடைய மதியூகியான அமைச்சன் சேனகனது கதையையே இது கூறுகின்றது. இவர் பாடிய பரவி சந்தேசயவில் ஸ்ரீ பராக்கிரமபாகுவின் மகளான சந்திராவதிக்கு ஏற்ற ஒரு வரனையும் இலங்கை முழுவதையும் ஆளும் தகைமை கொண்ட ஒரு மகனையும் அருளும்படி தேவிநுவரையில் உள்ள உபுல்வன் தெய்வத்தை வேண்டுவதாகப் புறாவிடம் தூதனுப்பப்படுகின்றது. தேவிநுவரை பற்றி இந்நூலில் பல அரிய விவரங்கள் உண்டு. ஸ்ரீ ராகுல தேரரின் மற்றொரு சந்தேசவான சளலிஹினி சந்தேசயவில், தூதுசெல்லும் பறவை (சளலிஹிணி) கோட்டையிலிருந்து விபீஷணக் கடவுளின் இருப்பிடமான களனிக்குச் செல்கின்றது. சிங்கத் தூதுப் பிரபந்தங்களில் இதுவே மிகவும் நீளம் குறைந்ததென்பர். பஞ்சிகா - பிரதீப, பதசாதன டீகா என்ற இரு (பாலி) இலக்கண விளக்க நூல்களையும் ஸ்ரீ ராகுல எழுதினார். இவருடைய பன்மொழிப் புலமையை முன்னையது காட்டும். விரிவும் விளக்கமும் கொண்ட பூரணமான பாலி இலக்கண நூலாக இன்றுவரை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இது மதிப்பைப் பெற்றுள்ளது.

ஏறக்குறைய இதேகாலத்தில் அல்லது சற்றுப் பிந்திய காலத்தில் வாழ்ந்த பிற புலவர்களுள் சிலர் பெரும்பாலும் சிங்கள இலக்கியங்களையே படைத்துப் புகழ் எய்தினர். கோகில சந்தேச என்ற மிக நீண்ட சந்தேச காவியத்தைப் பாடியவர் முல்கிரிகலையிலுள்ள இருகல்குல - பிரிவெனாத் தலைவராவா. தேவிநுவரையிலுள்ள ஒரு பிக்கு யாப்பாபட்டுண (யாழ்ப்பாணம்)வில் இருந்த

சபுமாலுக்குக் குயில் கொண்டு செல்லும் தூதைப்பற்றி இது கூறுகின்றது. இச்சந்தேசவே, சந்தேச காவியங்களுள் எல்லாம் சிறந்ததெனவும் கொள்கின்றனர். அக்கால அரசியல் நிலைமைகளைப் பற்றிய பல பயனுள்ள செய்திகள் இதன்கண் உண்டு. ஹம்ஸ சந்தேச என்ற மற்றொரு சந்தேசவும் இதே காலத்துக்குரியது. ஆனால், இதன் ஆசிரியர் பற்றிய தெளிவான குறிப்பு எதுவும் இல்லை. கிரா சந்தேச (கிள்ளைவிடுதூது) என்பதில் பிணி, பயம், போலிக்கோட்பாடுகள் என்பவற்றிலிருந்து தீவைக் காக்கும் வண்ணம் நாத என்ற தெய்வத்தை வேண்டும்படி தொடகமு ஸ்ரீ ராகுலவுக்கு ஒரு பிக்கு அனுப்பும் செய்தி அடங்கியுள்ளது. இதன் ஆசிரியர் பற்றியும் நாம் எதுவும் அறிய வாய்ப்பில்லை. இதுவும் சரித்திர நிகழ்ச்சிகள் பற்றிய சில குறிப்புக்களைக் கொண்டுள்ளது. ஸ்ரீராகுலரின் **விஜயபாபிரிவெனா** பற்றிய விவரங்களையும் கிராசந்தேச தருகின்றது. வாததாவ என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு பிக்குவால் குட்டில ஜாதகக் கதையைப் பின்பற்றிப் பாடப்பட்ட 'குட்டிலகாவிய' என்பது, இக்காலத்துத் தோன்றிய அருமையான கவிதை நூல்களுள் ஒன்றாக மதிக்கப்படு கின்றது. எளிமையும் எடுத்த பொருளைத் திறமையோடு கூறி முடிக்கும் ஆற்றலும் ஏற்ற இடத்தில் வரும் துல்லியமான வர்ணனைகளும் இதன் சில முக்கிய பண்புகளாகும். இக்காவியத்தைப் பின்பற்றியும், பின்னர் பல நூல்கள் எழுந்தன. 6-ம் பராக்கிரமபாகுவைப் பற்றிய புகழ்மாலையாகப் பாடப்பெற்ற பரகும்ப சிரிதவும், சத்தர்ம ரத்னாகர என்ற வசனநூலும் இக்காலத்து எழுந்த பிற நூல்களாகும். விதாகம மைத்திரேயர் என்பார் இயற்றிய நூல்களில், புதுகுணாலங்கார என்ற இவரது மற்றொரு நூலில், புத்தர் பெருமானின் நல்லியல்புகள் போற்றப்படுகின்றன. கோட்டையில் வந்து தங்கிய ஒருவங்காள தேசப் பிராமணரும் (ஸ்ரீராமச்சந்திர கவிபாரதி) பக்தி சகதம் போன்ற பிறநூல்களை வடமொழியில் ஆக்கியதாகத் தெரிகின்றது. 6-ம் பராக்கிரமபாகுவும் ருவன் மல என்ற ஒரு நூலை ஆக்கினான். வைத்திய, சோதிட நூல்களும் குறிப்பிடத்தக்க அளவு இக்காலத்தில் சிங்களத்தில் தோன்றலாயின. 6-ம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் காணப்பட்ட இத்தகைய இலக்கிய ஆக்கமுயற்சிகள், அவனது மறைவுடன் நின்றுவிட்டதாகவே தோன்று கின்றது. அதன் பின்னர் மேலைத்தேயத்தவரது குடியேற்ற - காலனித்துவ ஆட்சியின் கீழ் இலக்கிய வளர்ச்சி பெரிதும் தடைப்படலாயிற்று.

அத்தியாயம் : பதினைந்து

இலங்கையின் கலை மற்றும் இலக்கிய வளர்ச்சிப் பாரம்பரியம்:

(இந்துத் திராவிடப் பண்பாடு)

'இந்தியமயமாக்கம்' தொடர்பான நடைமுறையை வரலாற்றாசிரியர்கள் **இந்து சமயத்தினூடாகவே** அடையாளம் காண்கின்றார்கள். தென்ஆசிய மற்றும் தென்கிழக்காசியப் பிரதேசங்களில் செல்வாக்குப் பெற்றிருந்த புராதன மதங்களுள் இந்து சமயமும் அதனுடன் தொடர்புபட்ட நிறுவனங்களுமே சுதேசிய ஆட்சியாளர்களினூடாக மக்களது வாழ்வியலில் இணைத்துக்கொள்ளப்பட்ட மையைக் காணலாம். இவ்வாட்சியாளர்கள் ஒன்றில் தம்முடைய நேரடியான இந்தியத் தொடர்பின் அடிப்படையிலோ அல்லது இவ் ஆட்சியாளர்களது ஆட்சிப் பிரதேசத்திற்குள் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வர்த்தகர்களின் உதவியுடனோ அவர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக எடுத்துக் காட்டப்படு கின்றது. இம்முயற்சி என்று இங்கு குறிப்பிடப்படுவது இந்திய அரசியல் முறைகளையும், கோட்பாடுகளையும் பெற்றுக்கொண்டு தத்தமது அரசியல் சமூக-வாழ்க்கை முறைகளை அங்கு உருவாக்கியமை பற்றியே ஆகும். எடுத்துக் காட்டாக மிகவும் அண்மைக்காலத்தில் 19ஆம் நூற்றாண்டில் ஜப்பானும் தாய்லாந்தும் மேலைத்தேய மயமாக்கத்தை தத்தமது பிரதேசங்களில் தாமாகவே புகுத்திக் கொண்டமையைக் குறிப்பிடலாம். இந்நிலையில் மேலைத்தேயத்திற்குரிய கலை, தத்துவம், இலக்கியம் என்பன அங்கு பொருளற்றவையாயின: பதிலாக விஞ்ஞானம் - தொழில்நுட்பம் - அரசியல் முறை என்பனவே கவனத்தினை ஈர்த்துக்கொண்ட துறைகளாயின. அவ்வாறான ஒரு தேவை இவ்விரு நாடுகளுக்கும் இக்காலகட்டத்தில் ஏற்பட்டிருக்குமாயின் குறிப்பிட்ட அக்காலப் பகுதியில் திட்டவட்டமாக, இந்திய மதப்பெரும் பரப்பினால் சூழப்பட்டிருந்த புராதன அரசியற் கோட்பாடுகளும் வாழ்க்கை முறைகளும் தென்ஆசிய , தென்கிழக்காசிய நாடுகளில் உத்தியோகபூர்வமான முறையில் **இந்தியப் பிராமணிய முகவர் நிறுவனங்களினூடாக** அறிமுகப்படுத்தப்பட்டு, அதனைப் பிரதிபலித்து நிற்கக்கூடிய ஒரு சமூகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கொள்வதில் தவறேதும் இருக்காது. சுருக்கமாகக் குறிப்பிடுவ தாயின், இன்று இம் மூன்றாம் உலக நாடுகளில் மேலைத்தேயத்தினைச் சேர்ந்த ராஜதந்திரிகளை அல்லது தத்துவ வாதிகளை - அறிவியலாளர்களை சேவைக்கமர்த்தி, அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபடுவது போன்று அக்காலத்தில தென்கிழக்காசிய நாடுகளில் **பிராமணீய முகவர் நிலையங்கள்**

அச்சேவைகளைச் சுதேச மக்களுக்கு வழங்கியிருந்தன எனலாம். **இலங்கைத் தீவிலும் அத்தகைய பிராமணீய முகவரமைப்பு மையங்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலிருந்து தொழிற்பட்டிருந்தமைக்கான சாசனவியல் மூலாதாரங்கள் கிடைத்துள்ளமை** குறிப்பிடத்தக்கது. **சிவ எனக் குறிப்பிடப் பட்ட பெயர் முதலெழுத்துடன் காணப்படும் பிராமணர்களுடைய தானம் வழங்குதல் தொடர்பான செய்திகளை இலங்கையிற்கிடைத்த பிராகிருதப் பிராமிச்சாசனங்கள் பதிவுசெய்து வைத்துள்ளமையைக் காண்கின்றோம்.**

இன்னொரு வகையான இந்திய மயமாக்கல் நடைமுறையின் செயற்பாடானது **'வெற்றி கொள்வோர்'** (Adventurers) என்ற முறையில் இடம்பெற்றமையைக் காணலாம். சீன வரலாற்று நூல்களிலிருந்தும் சீன யாத்திரிகர்களது குறிப்புக்களில் இருந்தும் திரட்டப்பட்ட கருத்துக்கள் தென், தென்கிழக்காசிய நாடுகளுடனும் கொண்டிருந்த அரசியல் தொடர்பான இந்நடைமுறையை உறுதிப்படுத்தி உள்ளன. **இந்தியர்கள் செல்வங்களையும் வளங்களையும் (Fame and Fortune) வீரத்துடன் நாடி, கடல் கடந்துசென்று கண்டு அடைந்து கொண்ட நிகழ்வினை இச்செயல்முறை குறிப்பிட்டு நிற்கின்றது.** இச்செயல் முறையின்கீழ் **இந்து இந்தியர்களால** தென், தென்கிழக்காசியப் பிரதேசங்களில் பேரரசுகள் அமைக்கப்பட்டு **இந்திய மயமாக்கம்** மேற்கொள்ளப்பட்டமையைக் காணலாம். 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் **ராஜா சேர் ஜேம்ஸ் புறூக** என்பவர் சரவாக்கில் ஏற்படுத்தியதைப் போன்று, இந்திய வெற்றி கொள்வோரது இயக்கம் புராதன-மத்திய காலத் தென், தென்கிழக்காசியப் பிரதேசங்களில் இந்துமதத்தின் ஊடாகத் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது என்று குறிப்பிடுவதில் தவறேதும் இருக்கமுடியாது. அந்தவகையில் **விஜயன் என்ற பெயருடன் தனது 700 தோழர்களுடன் இலங்கைத்தீவிற்கு வருகைதந்த வெற்றியாளன் ஓர் இந்து என்பதனை எவருமே மறுக்கமுடியாது.**

தென்கிழக்காசியாவில் இந்திய அரசமைப்பினை ஒத்த ஆட்சி முறைகள் உருவாக்கப்பட்டு இருந்தமையை உறுதிப்படுததும் சீன இலக்கிய மூலங்களை சாசன மூலங்கள் மேலும் உறுதிப்படுத்தி உள்ளன. **கௌடிண்யன்** என்ற பிராமணன் தொடர்பாக அங்கு நிலவும் கதையும் கருத்தும் அத்தகையதாகும். அப்பிராமணன் இந்தோ-சீனாவிலுள்ள வூனான் (Funan) என்ற பிரதேசத்தில் பெருந்தொகையான சனக்குழுக்களுடன் சென்று அங்கு வூனான் இளவரசியைத் திருமணம் புரிந்ததன் அடிப்படையில் ஒரு பேரரசினை ஸ்தாபித்தார் என்ற கருத்து பரவலாக நிலவி வருகின்றது. ஒருவேளை பிற்பட்டகாலத்தில் இக்கதை யானது பெருமளவுக்கு தென்கிழக்காசியாவில் அரசுகளின் தோற்றத்தை பிராமணீயப்படுத்திக் காட்டுவதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. **நாக மன்னனுடைய** மகளான **'நாசிசோமா'** என்பவளை கௌடிண்யன் என்ற பிராமணன் திருமணம் செய்து கொண்டமையைத் தொடர்ந்தே **வூனான் அரசு** (Funan State) தோற்றம் பெற்றுக்கொண்டது என நம்பப்படுகிறது. இந் நம்பிக்கையை வலுப்படுத்தும் காரணிகளாக **கமோர் அரசர்கள** (Khamer)

தமது கலை வெளிப்பாட்டுச் சின்னங்களில் குறிப்பாக புடைப்புச் சிற்ப மரபுகளில் **நாகராச வடிவங்களைக** கொண்டு இக்கதையை வெளிப்படுத்தியமையிலிருந்தும், தென்னிந்தியாவில் **பல்லவவம்சத்தின் தோற்றத்துடன் வூனான் அரசின் தோற்றம் தொடர்பாகக் குறிப்பிடப்படும் ஐதீகமும** ஒன்றாக இங்கு அமைவதும் குறிப்பிடத்தக்கனவாகும். இருந்தும் தென் கிழக்காசியாவின் வரலாற்றைத் தொடக்கத்தில் நிலவியிருந்த பிராமண- நாகவம்சங்களின் கலப்பானது எந்தளவிற்கு இந்திய மயமாக்கலை உத்தியோகப் பற்றுள்ள மட்டத்தில் நடை முறைப்படுத்துவதற்கு ஏதுவாக இருந்தது என்பது தொடர்பாக சிறு ஐயமும் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் இங்கிருந்து முற்கால கட்டத்துக்குரியனவாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆதாரங்களும் புத்தருடையதும் திருமாலி னுடையதுமான சிற்பங்களே அதிகமாகக் காணப்பட்டிருந்தன என்பதனாலாகும். அவை அப்பிராந்தியத்திற்குரிய தனிப் பண்புகளைக்கொண்டு உருவாக்கப் பட்டமையும் அதன் அடியாக சுதேச கலை மரபொன்றுக்கான பின்னணி காணப் பட்டிருந்தது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. **இந்த பண்பாட்டு நிகழ்ச்சி நிரல் இலங்கைத்தீவிலும் நடந்தேறியிருந்தது.**

இந்திய மயப்படுத்தப்பட்ட தென்னாசியாவின் பண்பாட்டுப் பரிமாணத்தின் தனி முதன்மைக்கு சுதேச கலைமரபுகளின் எழுச்சி அல்லது மறுமலர்ச்சியே காரணம் என்று கூறமுடியாது. ஏனெனில் இந்திய மயமாக்கமானது ஒருமுறை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அது இருக்கவேண்டிய இடத்திற்குத் தானாக வரவில்லை. அதற்குரிய ஒரு சூழ்நிலையை பன்முறைப்படுத்தப்பட்ட வர்த்தக வலைப்பின்னற் பாதைகளே உருவாக்கிக்கொடுத்தன என்றால் அது மிகையாகாது. இந்தியாவுக்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையே வர்த்தக அடிப்படையிலான கடற்பாதைகள் உருவாக்கப்பட்டதன் பின்னரேயே வங்காள விரிகுடாவினைக் கடந்து இந்தியா தனது பண்பாட்டுப் பரிமாற்றத்தினை நடாத்தத் தொடங்கியிருந்தது. இந்நிலையிலேயே வட இந்தியாவில் குப்தர் காலத்தில் உருவாக்கப்பட்ட பண்பாட்டு மறுமலர்ச்சியும் **பால, சேன** வம்சங்களின் காலத்தில் **வங்காளத்தில்** உருவாக்கப்பட்ட மத-தத்துவக் கருத்துக்களும் தென்கிழக்காசிய நாடுகளில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன.

சைலேந்திர வம்சத்தின் கலை மரபுகளானவை கி.பி. 8ஆம் 9ஆம் நூற்றாண்டு களில் மத்திய ஜாவாவில் பெரும் செல்வாக்கினைப் பெற்றிருந்தன. அது மட்டுமன்றி கி.பி. 13ஆம் நூற்றாண்டளவில் **பொரபொதூர் கட்டிட மரபுகள், ஸ்ரீவிஜயப் பேரரசின் கலை மரபுகள்** என்பவை யாவும் இந்தியாவிலிருந்து மகாயான மரபுகளின் அடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட செல்வாக்கு நிலைகளைக் காட்டி நிற்கின்றன. வங்காளத்தில் ஆட்சிசெய்த பால வம்சத்தின் கலைமரபுகளைக் கூட தென்கிழக்காசிய நாடுகளில் காணமுடிகிறது. கி.பி. 7ஆம் 8ஆம் நூற்றாண்டுக்குரியதான வங்காளத்திலுள்ள பெரிய கோவிலான Paharpur I ஒத்து Borabodur, மத்திய ஜாவாவிலுள்ள Prambanan, கம்போடியாவிலுள்ள **ஆங்கோர்வார்ட்,** பர்மாவிலுள்ள **ஆனந்தா கோவில்** என்பன அமைக்கப பட்டமையைக் காணலாம். தொல்லியல் ஆய்வின் முடிவுகள் இக்கோயில்களின்

அடித்தளத் திட்டங்கள் (Ground Plan) யாவும் ஒரே மாதிரியைக் கொண்டிருக்கின்றன என்பதனைக் காட்டுகின்றன. எனவே இந்திய மயமாக்கத்தின் செயற்பாடுகளில், சுதேசக் கலைகளின் எழுச்சியானது சர்வதேச ரீதியில் நிகழ்ந்த இயக்கத்தின் அடிப்படையில் சேர்ந்து இயங்கியமையே தென்கிழக்காசிய நாடுகளின் இந்துப் பண்பாட்டின் செல்வாக்கு ஏற்பட்டிருக்கக் காரணமாயிற்று என முடிவு கொள்ளலாம். இப்பின்னணியில் இந்தியாவிற்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும், பின்னர் இந்தியாவுக்கும் மேலைத்தேயங்களுக்கும் அதன் பின்னர் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் மேலைத்தேயங்களுக்கும் இடையிலுமான தொடர்புகள் ஏற்படுத்தப் பட்டமையும் அதன் பின்னணியின் தனித்துவமான பண்பாட்டு வெளிப்பாடுகளையும் அவற்றின் சீரற்ற பிராந்திய சூழ்நிலைகளையும் எம்மால் அவதானிக்க முடிந்தது. **இதுவே இலங்கையிலும் தென்கிழக்காசியாவிலும் இந்துப்பண்பாட்டுப் பாரம்பரியம் தொடர்பாக கற்போருக்கும் உதவும் அறிமுகமாகும்.**

இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் தொடக்கநிலையில் அரச பதத்துடனான முதல் அங்கீகாரத்தினை நாகர் வம்சத்தினரே இலங்கையில் அம்மதத்திற்கு பெற்றுக்கொடுத்திருந்தமையைக் காண்கின்றோம்.

நாகர் வம்சத்தின் தொன்மையான நான்கு பிராந்தியங்கள்

இதுவரையிலும் பெருங்கற்காலப் பண்பாடு தொடர்பாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளினதும், அகழ்வாய்வுகளினதும் பெறுபேறாக **பூர்வீகத் திராவிடநாகரின்** வாழ்வுப் **பகைப்புலம்களாக** நான்கு பிரதான பிராந்தியங்களை அடையாளம் காணமுடிந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வைந்து பிராந்தியங்களிலும் **பூர்வீகத் திராவிடநாகர் மரபோடு** இணைந்து இற்றைவரைக்கும் நிலவிக் கொண்டிருக்கின்ற இந்துப்பண்பாட்டிற்குரிய ஐதீகங்களையும், அவற்றின் பின்னணியில் தொன்மையாக அமைந்துள்ள பண்பாட்டின் வளர்ச்சியின் உச்சநிலையினையும், வரலாற்றுக்கால வளர்ச்சியை அம்மையங்களுடன் இணைத்து உறுதிப்படுத்தும் இந்துமதம் தொடர்பான தொல்லியற் சான்றுகளையும் **மிகத்தெளிவாக அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது.** அவையாவன:

அ) **கதிர்காமக் குன்றுகள்** உள்ளிட்ட இலங்கையில் தென்கிழக்குப் பிராந்தியம் ஈழத்துப் இந்துப்பண்பாட்டு மக்களும் **தென்கிழக்காசிய நெல்லுற்பத்திப் பண்பாட்டுக்குரிய பெருங்கற் பண்பாட்டு வணிக மக்களும் சந்தித்த மையமாக திஸமஹரகமம், கதிர்காமக் குன்றுப்பரப்பு அமைந்து காணப்பட்டமை.** தினை, குரக்கன் பயிரிடப்பட்டது பற்றிய ஐதீகமொன்று **'வள்ளி தினைப்புனம் காத்துநின்ற'** கதைமரபாக இற்றைவரைக்கும் கந்தபுராணத்தினை கதிர்காமத்தோடு இணைத்துவிட்டுள்ள நிலையில் அப்பண்பாடு நிலைத்து நின்று வருவதற்குரிய பின்னணியும் இந்துப் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட அத்திராவிடப் **பெருங்கற்பண்பாட்டு மேல்கட்டுமானமேயாகும்.**

ஆ) **பூநகரி தொடங்கி பொன்பரப்பி வரையான** முத்து வியாபார மார்க்கத்தி னூடான, இந்துப் பண்பாட்டுத் தளங்களும், **ஈமக்காடும்** இணைந்த ஆதித் திராவிடநாகரின் பகைப்புலம். **மேற்காசிய, மத்தியாசிய வாணிபக்கடல் மார்க்கங்கள் ஒன்றிணையப் பெற்ற முத்து வியாபார மார்க்கங்களை ஒன்றிணைத்த வகையில் மன்னார் மாதோட்டத்துறைப் பரப்பினைப் பின்னணியாகக்கொண்டு வளர்ச்சிபெற்ற திராவிட நாகர் வம்சத்தினரின் கடல் முகப்புத்தளம். ஈழத்துப் பூதந்தேவனார் வாழ்ந்த நாகதேவன் துறைக் கிராமமும், பண்பாட்டுச் சூழலும் ஒருங்கிணைக்கப்பெற்ற ஓர் மையம் - பூநகரி, மண்ணித்தலைப்பகுதி.**

இ) **வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு** வெளியிலுள்ள பெருங்கற்காலப் படிமங் களும்; **பாண்டிய** - நாகர் வாணிப மரபுத் தொடர்புகளும கொண்ட ஆதித்திராவிட நாகரின் வாழ்வுப் புலம். **புத்தரின்** இலங்கைக்கான மும்முறை விஜயத்தில் **இரண்டாவது வருகை இந்துப் பாரம்பரியத்தினைத் தழுவிய** இரு **நாகதீப ராஜாக்களுக்கிடையே** ஏற்பட்ட முரண்பாட்டைத் தீர்த்து வைப்பதற்காக **நாகதீபத்திற்கு** கௌதம புத்தர் வந்தார் என்ற ஐதீகம் **திராவிட நாகர் வம்சம்** கொண்டிருந்த **அரசியல் ஆதிபத்தியத்தினை** வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் காணப்பட்ட **பெருங்கற்காலப் பண்பாட்டு விழுமியங்கள** ஊடாக காணமுடிவது, **ஆனைக்கோட்டை முத்திரை** மோதிரம், கந்தரோடையில் கிடைத்த **சானைக்கல் அம்மி** (பன்றி வடிவம்) **செப்புச்சூலம், நாகவடிவ செம்புக்காப்புக்கள், நாகமோதிரங்கள், நாகவடிவம் பொறிக்கப்பட்ட வெள்ளியினாலான அச்சுக்குத்தப்பட்ட நாணயங்கள்** முதலானவை பெருங்கற்கால நாகர் வம்சத்து **அரசியல் மைய** உருவாக்கத்தினை வெளிப்படுத்தும் சாதனங்களாகக் கொள்ள முடிவது.

ஈ) **மண்டலாய**, அம்பன், தாழையடி, நாகர்கோவில் உள்ளிட்ட வடமராட்சி - கிழக்குப் பிராந்தியத்திலுள்ள **பெருங்கற்கால நாகர்குல மரபுப் படிமங்களும், தென்கிழக்காசியத் தொடர்புகளும**. மலேசியா - **யாவா நாகமரபுத** தொடர்புகள், பெருங்கற்காலத்திய கணபதி வழிபாட்டு மரபு இந்தோனேசியா - யாவாவிலிருந்து வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திற்குப் பரவல். உதாரணம்: **'மண்டலாய்' பிள்ளையா**, **'துளாயிற்'** பிள்ளையார், **தில்லை அம்பலப்பிள்ளையா** போன்றன மோதகப் பிள்ளையாராக (Rice – cake) வருகை தரல்.

மேற்படி ஈழத்திலுள்ள **பெருங்கற்கால நாகர் மரபுப** பண்பாட்டுத் தளத்திற்குரிய **ஐந்து** தனித்துவமான பிராந்தியங்களையும் ஈழத்தமிழர் வாழ்வுப் பகைப்புலத்தினூடே முகிழ்ந்த இந்துப் பண்பாட்டு மையங்களாகவும், காலத்தால் முற்பட்ட ஈழத்து நாகர் வம்சத்தினரின் **அரசியல - வாணிபக் களஞ்சியங்க ளாகவும** தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் அடையாளம் காண முடிந்துள்ளது. அவ்வகையில் **ஈழநாகர் வம்சப் பண்பாட்டு வாழ்வுப்**

பகைப்புலத்தின் பிராந்திய எல்லைகளையும் கால வரையறைகளையும் அடையாளம் காட்டி நிற்கும் தொல்லியற் தடயங்களை நோக்குவதன் மூலம் இந்துப் பண்பாட்டுக்குரிய மக்களின் புராதன வாழ்விடங்களின் **'புதிய எல்லைகளை'** வரையறை செய்துகொள்ளமுடியும்.

கதிர்காமக்குன்றுகள் உள்ளிட்ட இலங்கையின் தென்கிழக்குப் பிராந்தியமும் இந்துப் பண்பாடும்

வடஇலங்கையில் **கந்தரோடை** என்ற பழம்பெரும் பெருங்கற்காலக் குடியிருப்பு **ஆழமாக ஆராயப்படாத** ஒரு நிலையில் இன்றும் இருப்பது போன்றே இலங்கையின் தென்கிழக்குப் பிராந்தியத்திலுள்ள திஸமஹரகாமம், கதிர்காமம் உள்ளிட்ட பெருங்கற்காலக் குடியிருப்புக்களும் **ஆழமாக** ஆராயப்படாமல் கைவிடப்பட்டுள்ளமையைக் காணலாம். இம்மையங்களில் 1884ஆம் ஆண்டில **பாக்கர்** (H.Parker) என்பவர் தொல்லியல் மேலாய்வுகளை நடாத்தியிருந்தார். கதிர்காமத்தில் அவர் அகழ்வு ரீதியான பரீட்சார்த்த ஆய்வுமுறையொன்றினையும் மேற்கொண்டிருந்தார். அவ்வகழ்வின்போது மேற்பரப்பிலிருந்து 18ஆவது அடி ஆழப்பரப்பிலிருந்து கறுப்பு - சிவப்பு வர்ண மட்பாண்டங்களை (BRW) மீட்டெடுத்துள்ளார். அம்மட்பாண்டங்களுடன் வீட்டுப் பாவனைக்குரிய பல்வேறு வகைப்பட்ட பொருட்களையும் அம்மண்படையிலிருந்த மீட்டெடுத்துள்ளார். இம் மையத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களில் பிராமி வரிவடிவங்கள் வரையப்பட்டிருந்தன என்று செய்தியையும் பாக்கரே குறிப்பிட்டுள்ளார். வீட்டுப் பாவனைக்குரிய பொருட்களுடன் உற்பத்திப் பாவனைக்குரிய உலோகப் பொருட்களும் (Spear Head etc.) பாக்கரினால் மீட்டெடுக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. திஸமஹரகாமத்திற்கு சற்று அண்மித்தான திவுல்வேவ (விளாங்குளம்) என்ற இடத்தில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மேற்கொண்ட ஆய்வின்போது அவருக்கு **வேல்சின்னம்** (Spear Head) போன்றவற்றுடன் **உழுகொழு** (Plough Coulter) உம் கிடைத்துள்ளமை பற்றி **சிரான் தெரணியாகல** குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது.

இப்பின்னணியிலிருந்து திஸமஹரகாமம் உள்ளிட்ட கதிர்காமக் குன்றுப் பிரதேசங்கள் கிறிஸ்துவிற்கு முற்பட்ட ஐந்தாம், நான்காம் நூற்றாண்டுகளுக்கு முன்னரில் இருந்தே பெருங்கற்காலப் பயிர்ச்செய்கைக்குரிய விளைநிலமாகவும், வாணிபத்தளமாகவும் விளங்கி வந்துள்ளது என்பது தெளிவாகின்றது. 'கித்துள்கொட' விலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட **குரக்கன்** (ராக்கி) தானியத்தின் வாணிபத்தொடர்பு, உற்பத்திமுறை முதலியன திஸமஹரகாமம், கதிர்காமக் குன்றுப் பரப்பிலிருந்தே தொழிற்பட்டிருக்கவேண்டும் என்பதும் இங்கு புலனாகின்றது. **'ராக்கியை'** (குரக்கனை) உற்பத்தி செய்தவர்கள் ராக்கிஸர்கள் / ராக்ஸஸர்கள் என்று **அக்காலப் பண்பாட்டுப் பகைப்புலத்தில்** அழைக்கப் பட்டிருந்தனர் என்பதும் தெளிவாகின்றது. மீன் பிடிப்பவர்கள் 'மீனவர்' என அழைக்கப்பட்டமை போன்றே 'ராக்ஸஸர்கள்' என்று குரக்கனை உழுது பயிரிட்ட உற்பத்தியாளர்களும் தனிக் குழுவாக அழைக்கப்பட்டிருக்க முடியும். இதேபோன்றே

'நெல்' தானியத்தை உற்பத்தி செய்தவர்கள் இப்பண்பாட்டுக் சூழலில் **'நாகர்கள்'** என அழைக்கப்பட்டிருக்கக்கூடும். கிழக்கிலங்கையில் **'போடியார்கள்'** எனக் குறிப்பிடப்படும் இன்றைய விவசாயப் பெருங்குடி மக்கள் **'நாகர்'** வம்சத்தினரே என்பதனையும் நினைவிற் கொள்ளவேண்டும்.

போல் ஈ. பீரிஸ் என்பவர் 1904 ஆண்டு கதிர்காமப் பரப்பில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வின் விளைவாக அச்சுக்குத்தப்பட்ட நாணயங்கள், பாண்டியன் பெருவழுதி நாணயங்கள், ரோம நாணயங்கள், லஷ்மி நாணயங்கள் போன்றவற்றை மீட்டெடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மிகவும் அண்மைக் காலங்களில் சேவையர் சேயோன் என்பவர் கதிர்காமப் பரப்பில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வுகளின்போது கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்டகால திராவிடப் பண்பாட்டினை உறுதிப்படுத்தக்கூடியதும் வலிமைப்படுத்தக்கூடியதுமான தொல்லியல் சான்றுகளைக் கண்டெடுத்துள்ளார். அகில இலங்கையின் நாணயவியற் சங்கத்தின் தலைவராக விளங்கும் சேயோன் கதிர்காமப் பரப்பிலிருந்து சங்ககால வேப்பம்பழ நாணயங்கள், நெல்லிக்கனி நாணயங்கள், லஷ்மி நாணயங்கள், கார்னேலியன் மணி வகைகள், சங்கு வளையல்கள் போன்றவற்றைச் சேகரித்துள்ளார்.

கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட காலத்தில் கதிர்காமத்தினை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த மஜிமகாராசா வழிவந்த பத்துச் சகோதரர்களின் ஆட்சி பற்றிய தகவல்களை **பிராமிக் கல்வெட்டுக்களிலிருந்து** பரணவிதான எடுத்துக்காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பாண்டிய நிர்வாக முறையில் பின்பற்றப்பட்டிருந்த **'பஞ்சவர் ஆட்சி மரபு'** போன்று, கதிர்காமத்தில் **'பதின்மர் ஆட்சி மரபு'** நீடித்து நிலைத்திருந்தமை அங்கு நிலவிய திராவிடப் பண்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வரசர்கள் மலேசியா, யாவா ஆகிய தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து படையுதவிகளையும் பெற்றிருந்தார்கள் என்பதனையும் இங்கிருந்து பெற்றுக்கொண்ட பிராமிச் சாசனங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. **'ஜாவஹநாயர்'** என இடம்பெறும் ஒரு பதமானது கதிர்காம அரசிருக்கையில் மலேசியாவிலிருந்து தருவிக்கப்பட்ட **'படைத்தளபதியை'க** குறிப்பதாக பரணவிதான கருதுகின்றார். **ஜாவா** நாகர் பண்பாட்டினுடைய **ஒரு பிரதான மையம** என்பதும் குறிப்படத்தக்கது.

பூர்வீக மலாயாவிலிருந்து தருவிக்கப்பட்ட அவ்வாறான **படைத்தளபதிகள்** பெரும்பாலும் **பூர்வீவ திராவிடர்களாகவே** விளங்கினர் என்பதனை **மலாயாவின் சரித்திரம்** என்ற நூலின் வாயிலாக உறுதிப்படுத்தப்படுகின்றது. இவர்களே பின்னர் துட்டகாமணி மன்னன் **மகாகமையிலிருந்து** (ரோகணத்தின் தலைநகர்) **அநுராதபுர ஆட்சியாளனாக** விளங்கிய **எல்லாளன்** மீது போர் புரிவதற்கும் உதவியை வழங்கியிருந்த தமிழ்த் தளபதிகளாக (மகாவம்சம் குறிப்பிடுவது போல்) தொழிற்பட்டிருந்தமையையும் காணமுடிகிறது. இப்போராட்டத்தின்போது துட்டகாமணி **வெள்ளி லோகத்திலான பெரியவேல்** (Great Spear in Silver) ஒன்றினையும் படைகளின் முன்னே எடுத்துச் சென்றிருந்தான் என மகாவம்சம்

குறிப்பிடுவதிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டுச் செல்வாக்கு **ஆக்ககால அரசியற் போரில்** செலுத்தியிருந்த தாக்கத்தினையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது. கந்தபுராணத்தில் வரும் **சூரபத்மன்** (சூரக்குடி - ஓர் இனக்குழு பரதவர்?) என்பவனுக்கும் **முருகவேளுக்கும்** (வேளிர் குலத்தலைவன்) இடையே நிகழ்ந்த **கதிர்காமப் போரினை** ஒத்தவகையிலேயே அநுராதபுரத்தில் **துட்டகாமணிக்கும் எல்லாள மஹாராஜாவுக்கு**மிடையே போர் நிகழ்ந்தது என்பதனை **மகாவம்சம** துல்லியமாக எடுத்துக்காட்டி நிற்கின்றது. பெருங்கற்காலச் சமூக - பொருளாதார விழுமியங்களை உள்ளடக்கிக் காணப்பட்ட இவ்விரு சமூக, மதப்பிரிவினரும **'வேல்'** ஒன்றையே தமது **'சக்திமிக்க'** போர்க் கருவியாகப் பயன்படுத்தியிருந்தமையையும் காணமுடிகிறது. அவ்வகையில் கந்தபுராணக் காலக் கதை வடிவமொன்றினைப் பெருங்கற்கால மையமொன்றில் நிகழ்ந்த நிகழ்வுகளுடன் ஒப்பிட்டு ஆராயமுடிவது என்பது எதிர்கால ஆய்வாளருக்குக் கிடைக்கும் **புதியதோர் ஆய்வுக்கருவாக** அமையும் என்பதில் சந்தேகம் எழமுடியாது. **அவ்வழியே தென்னிலங்கையில் பழந்தமிழரின் கந்தபுராணக் கலாசாரத்தின் பண்பாட்டுக் கட்டுமாணப் பணியின் புதிய எல்லைகளை அடையாளம் கண்டுகொள்ளவும் முடியும்.** ஈழத்தில் காலத்தால் முற்பட்ட பழந்தமிழ் செய்யுட்களைக் கொண்ட கல்வெட்டுப் பொறிப்புக்கள் தென்னிலங்கையினல் செறிந்து காணப்படுவதற்குரிய அடிப்படையும் இதுவேயாகும்.

பூநகரி தொடங்கி பொன் பரப்பி வரையான முத்து வியாபார மார்க்கமும், இந்துப்பண்பாட்டுத் தளங்களும்

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குப் தெற்கே மண்ணித்தலை - பூநகரிப் பிராந்தியத்திலிருந்து தென்மேற்குக் கரையோரமாகப் புத்தளத்திலுள்ள பொன்பரப்பி வரையுமுள்ள தொடர்ச்சியான நிலப்பரப்பில் பெருங்கற்காலக் குடியிருப்புப் பிராந்தியங்களும், ஈமக்காடுகளும் இந்துக்கோயில்களும் காணப்படுவது ஆய்வுகள்மூலம் புலப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு குறுணிக் கற்கால மண்படை அடுக்குகளிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டு வாழ்க்கைப்புலம் பரிணாமம் அடைந்து வளர்ச்சிபெற்றிருந்த முறைமையை அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தி உள்ளன. பூநகரி - மண்ணித்தலைப் பிராந்தியத்தில் பெருமளவிலான கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் நாணயங்கள், கார்னேலியன் மணி வகைகள், வளையல்கள், சிறப்பாக சங்கு, கண்ணாடி வளையல்கள் போன்றன கலாநிதி ரகுபதி, கலாநிதி புஷ்பரட்ணம் ஆகிய தொல்லியல் ஆய்வாளர்களால் தொல்லியல் மேலாய்வுகளின்போது பெருமளவில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. குறுணிக் கற்கால மண்படையடுக்குகளிலிருந்து தொடர்ச்சியான வகையில் பண்பாட்டு வளர்ச்சி ஏற்பட்ட ஒரு பிராந்தியமாகக் காணப்படும் **மண்ணித்தலை - பூநகரிப்** பிராந்தியமானது தீபகற்ப **யாழ்ப்பாணக்குடாநாட்டின் இந்துநாகரிக வளர்ச்சிக்குப்** பெரும்பங்காற்றியுள்ளது என்பதனை எவருமே மறுக்கமுடியாது. வரலாற்றுக்கு முற்பட்டகாலப் பரப்பிலிருந்து ஒல்லாந்தர்காலம் வரைக்கும்

இடையீடின்றி, தொடர்ச்சியன வகையில் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகளைத் தன்னகத்தே கையகப்படுத்தியிருந்த தனித்துவமான மையமாக **மண்ணித்தலை - பூநகரிப் பிராந்தியம்** காணப்பட்டிருந்தன. அச்சுக்குத்தப்பட்ட நாணயங்கள் முதல் டச்சு நாணயங்கள் வரைக்கும், சுதேச மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் தொடங்கி, வெளிநாட்டு பேரரசர்களுடைய நாணயங்கள் வரையில் பெரும் எண்ணிக்கையான நாணயங்களை புஷ்பரட்ணம் இப்பரந்தமையத்திலிருந்து சேகரித்துள்ளார் என்பதனைக் காணும்போது இலங்கையின் பிரதான நிலப்பரப்பிற்கும், குடாநாட்டிற்குமிடையே கலாசார, வாணிப பரிமாற்றங்களுக்கான பின்புலமாக அப்பிராந்தியம் விளங்கி வந்தமையை உறுதிப்படுத்திக்கொள்ளமுடியும். எவ்வாறு மத்தியதரைக் கடலினுள் கிரீட்டன் தீவானது எகிப்திய - மத்தியாசிய அறிவியல், நாகரிக, பண்பாட்டம்சங்களை உள்வாங்கி பண்டைய கிரேக்கத்திற்கு வழங்கியதோ அதனையொத்த வகையில், மண்ணித்தலை பூநகரிப் பிராந்தியமும் இத்தீவின் அரசியல், சமய - பண்பாட்டுக் கட்டுமான வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளது என்பதனைக் காணமுடிகிறது. **பூநகரி என்ற பெயர்கூட பூநாகர் என்ற வம்சத் தோற்றப் பெயரிலிருந்தே உருவாகியிருந்தமையைக் காணலாம்.**

தொடர்ச்சியான வகையில் ஆதித் திராவிடர் வாழ்ந்து வந்த மையம் என்ற வகையிலும், சமுத்திரவியல் வழிவந்த பண்பாட்டு வாழ்வுப் புலத்தினை உருவாக்கியதன் அடிப்படையிலும் தனியோரினத்தினது அதாவது இந்துப் பண்பாட்டெச்சங்களை கால ஒழுங்கில் தன்னகத்தே கொண்டுள்ளதென்ற வகையிலும் மண்ணித்தலை பூநகரிப் பரப்பு வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது.

நாகர்வம்சத்தின் இருதய பூமியாகக் காணப்பட்ட இப்பிராந்தியத்திலிருந்தே ஈழத்துப் பூதன்றேவனார் **'ஈழவூரிலிருந்து'** கல்வி - புலமை செல்வாக்கு மிகுந்த பிரதிநிதியாகத் தமிழகம் சென்று **மதுரைத் தமிழ்ச் சங்கத்தினை** அலங்கரித்திருந்தார் என்பதனை முதன்முதலாக கலாநிதி புஷ்பரட்ணம் எடுத்துக் காட்டியுள்ளமை மீண்டும் இங்கு நினைவுகூரத்தக்கது.

மத்திய காலத்தில் பூநகரியிலிருந்து மலர்களும் இலுப்பை எண்ணெயும் சேகரிக்கப்பட்டு **இலுப்பைக் கடவையூடாக** மாந்தைத் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து **தஞ்சாவூரில் உள்ள பெருங் கோயிலுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட** நிகழ்வுகளையும் நாம் வரலாற்றில் காண்கின்றோம். அவ்வகையில் மாந்தைத் துறைமுகச் சூழலும் பூநகரி - மண்ணித்தலைப் பிராந்தியங்களுடன் இணைந்த வகையில் பழந்தமிழர் மரபினை **நாகர் இனத்துடன** இணைத்த வகையில் வளர்ச்சி பெற்றுச் சென்றிருந்தமையைக் காணமுடிகிறது.

துறையும், தோணியும், பரதவர் குலமும், மீன் செல்வமும் இணைந்த வகையில் பெருங்கற்காலப் பண்பாட்டு வாழ்வுமுறைகளிலிருந்து முகிழ்ந்த

பழந்தமிழர் பாரம்பரியத்தினை மிகத் துல்லியமாகக் காட்டி நிற்கின்ற இப்பரப்பே தமிழ்ப்பிராமி வரிவடிவங்களை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் கந்தரோடைக்கும், வெளியே தமிழகத்திற்கும், செங்கடல் மார்க்கத்திலமைந்த வர்த்தக மையங்களுக்கும் வழங்கியிருந்த நிகழ்வினை எதிர்கால அகழ்வாய்வுகள் எடுத்துக்காட்டும் என்பதில் சந்தேகம் எழமுடியாது. கந்தரோடையிலுள்ள மையமொன்றிலிருந்து (உச்சாப்பனை) அகழப்பட்ட குழியில் காணப்பட்ட என்பினாலான கத்தி போன்ற கருவியில் தீட்டப்பட்டிருந்த எருத்தின் உருவமானது மத்தியதரைக் கடலில் அமைந்துள்ள கிரீட்டன் தீவிலுள்ள நோஸஸ் (Knossos) என்ற நகரில் வரையப்பட்ட எருத்தின் தோற்றத்தினை ஒத்துள்ளது. எனவே மண்ணித்தலையுள்ளிட்ட பூநகரிப் பிராந்தியத்தின் வெளிநாட்டுத் தொடர்புகள் கி.மு. 1500 ஆண்டுகளிலிருந்தே ஆரம்பித்து விட்டிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ளமுடிகிறது.

இத்தகைய காலத்தால் முற்பட்ட தொடர்புகளை பூநகரியிலிருந்து தெற்குக் கரையோரமாக புத்தளத்திலுள்ள பொன்பரப்பி வரைக்கும் உள்ள பெருங்கற்கால குடியிருப்புக்களுடன் ஏற்படுத்தித் தந்த வாணிபச் சரக்கு என்னவென்றால் அது மன்னாரில் விளைந்த **கடல் முத்தேயாகும்.** மன்னாரில் உள்ள அரிப்பு என்ற துறையே முத்துக்குளித்தலுக்கு வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு இற்றை வரைக்கும் முக்கியத்துவம் பெற்று மையமாக இருந்து வருவதனைக் காணலாம். சிந்துவெளி நாகரிக மக்கள் மேற்கொண்ட வாணிப நடவடிக்கைகளின் ஓரங்கமாக மாந்தைத் துறைமுகப் பரப்பில் இருந்து முத்து ஏற்றுமதி செய்யப்பட்டது. தென்மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் காணப்படும் புராதன **முத்துக்கவசம்** மன்னாரிலிருந்து கொண்டு செல்லப்பட்ட முத்துக்களாலேயே உருவாக்கப்பட்டது என்பதும் வெள்ளிடைமலை. தமிழகத்திலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள **ஆவரம்பிட்டி** என்ற மையத்திலிருந்து பரமசிவம் என்பவரால் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஏராளமான மணிக்குவியல்களுடன் கடல் முத்தும் காணப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இத்தகைய பின்னணியைக்கொண்டு நோக்கும்பொழுது மண்ணித்தலை - பூநகரித் தொடர்பரப்பிலிருந்து புத்தளத்திலுள்ள பொன்பரப்பி வரைக்குமான கரையோர நாகர் குடியிருப்புக்கள் புராதன சமுத்திரவியல் பண்பாட்டினை உள்வாங்கிய நிலையில் நாகரிகக் கட்டுமானத்தினை உருவாக்கி இருந்தன என்பதனை உணரமுடிகிறது. அத்தகைய ஒரு தனித்துவமான **பூர்வீக திராவிடநாகரின** ஈமக்காட்டுத் தொகுதியாக இன்று காணப்படுவது **04 ஏக்கர் பரப்பிலுள்ள** புத்தளத்திலுள்ள **பொன்பரப்பி என்ற பரந்த தாழிக்காடாகும்.** தமிழ்நாட்டில் தாமிரபரணியாற்றின் முகத்துவாரத்தில் அமைந்து காணப்பட்ட புகழ்பெற்ற **ஆதிச்சநல்லூர்** இடுகாட்டிற்கு சமாந்தரமாகவே இலங்கையில் புத்தளத்தில் **பொன்பரிப்பு இடுகாடு** அமைந்து காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இவ்விரு பெருங்கற்காலப் பண்பாட்டு குடிமக்கள் தமக்கிடையே **கடற்கலம்** செலுத்தி, இந்துப்பண்பாட்டு உறவுகளை பரிமாற்றம் செய்து கொண்டிருப்பர் என்பதில் சந்தேகம் எழமுடியாது. **ஆதிச்சநல்லூரில் கிடைத்த செம்பினாலான தாய்த்தெய்வத்தின் காலவரையறையை** தொல்லியலாளர்

கி.மு. 8ஆம் நூற்றாண்டு என வகுத்துள்ளனர். அக்கால வரையறையையே புத்தளத்திலுள்ள பொன்பரிப்புக்குரிய காலஎல்லையாக இலங்கைத் தொல்லிய லாளர்களும் கொள்வதனைக் காணலாம். எனவே பூநகரி - மண்ணித்தலை பண்பாட்டு களமானது இலங்கையின் மேற்கு கரையோரமாக நீண்டு சென்று புத்தளத்திலுள்ள பொன்பரிப்பில் சங்கமமாவதனைக் காண்கின்றோம். இத்தகையவொரு ஆதித் திராவிடநாகரது பண்பாட்டுப் பகைப்புலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு வரைக்கும் நல்லூர் ஆரியச்சக்கரவர்த்திகளின் மேலாண்மையின் கீழ் முத்து வியாபார வர்த்தக ஏகபோகத்தினை அனுபவித்து வந்தது, பின்னர் அத்தனித்துவத்தினை அந்நியர் வருகையைத் தொடர்ந்து (1616இலிருந்து) இழக்க வேண்டியிருந்தது என்பதனையும் வரலாற்றுக்காலச் சம்பவங்கள் தெளிவு படுத்தியுள்ளன.

பெருவழுதியாற்றுப் பள்ளத்தாக்கில் இந்துப் பண்பாட்டுப் படிமங்கள்

தென்னாசிய நாகரிக வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியிருந்த சம்பவமானது சிந்து மாகாணத்திலுள்ள லார்க்கான மாவட்டத்தில் **பௌத்த ஸ்தூபி** ஒன்றின் **சிதலங்களை** அகழ்ந்து வெளிப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டபோது ஏற்பட்டதாகும். அதாவது சிந்துநதி நாகரிகக் கண்டுபிடிப்பிற்கு அடிப்படையாக விளங்கிய கட்டிடச் சிதைவாக விளங்கியதே அப்பௌத்த ஸ்தூபியாக அமைந்தது. இதேபோன்று கந்தரோடையில் மேற்பரப்பில் காணப்பட்ட பௌத்த கலாசார அழிபாடுகளின் எச்சங்களே **வழுக்கையாற்றுப் பரப்பிலுள்ள வண்டல்மண் படிவுகளுக்குள் மறைந்திருந்த பெருங்கற்காலத் திராவிடக் கலாசாரத்தை வெளிக்கொணர உதவியிருந்ததென்றால் அதில் சந்தேகம் எழமுடியாது.** போல் ஈ பீரிஸ் என்பவரே முதன்முதலாக வழுக்கை யாற்றுப் பரப்பிலுள்ள தொல்லியல் எச்சங்களை நாடித்தேடி தனது ஆய்வு முயற்சியை கந்தரோடை தொடர்பாக ஆரம்பித்து வைத்தவராகக் காணப்படு கின்றார். **1971ஆம் ஆண்டில் பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலா பெக்லி 'விளாமரத்தடியில்' ஒரு பரீட்சார்த்த அகழ்வுக்குழி ஒன்றினைத் தோண்டி, விஞ்ஞானபூர்வமாக முதன்முதலில் பெருங்கற்கால மண்படையடுக்குகளை இனம்கண்டு கொண்டார். அவர் அவ்விளாமரத்தடிக் குழியிலிருந்தே செம்பினாலான முச்சூலமொன்றையும் அகழ்ந்தெடுத்தமை குறிப்பிடத்தக்கது.**

கலாநிதி ரகுபதியின் தொல்லியல் மேலாய்வே கந்தரோடையில் காணப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டின் சிறப்புக்களை இனங்காண உதவியது எனலாம். வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கின் மீதான தொல்லியல் மேலாய்வின்போது ஆனைக்கோட்டையிலுள்ள **கரையாம்பிட்டி ஈடுகாட்டு மையம** அடையாளம் காணப்பட்டு அகழ்வாய்வுக்குட்படுத்தப்பட்டது. **(Rescue Excavation)** 1980ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இவ்வகழ்வாய்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் **கா.இந்திரபாலாவின** தலைமையில் மேற்கொண்டிருந்தனர்

என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் விளைவாக பெருங்கற்கால மண்படையடுக்குகளிலிருந்து இரு மனித எலும்புக்கூடு களும், உணவெச்சங்களும், **இந்துப் பண்பாட்டுச் சான்றுகளும** சேகரிக்கப் பட்டன. அவற்றுள் ஓர் எலும்புக்கூட்டின் தலைப்பாகத்திற்கு அண்மித்த வகையில் கறுப்பு-சிவப்பு மண்பாண்டச் சட்டி ஒன்றுக்குள் முத்திரை மோதிரம் ஒன்று வைக்கப்பட்டிருந்தமையை அடையாளம் காணமுடிந்தது. ஆண் எலும்புக் கூட்டுக்குரிய தலைப்பாகத்திலேயே இச்செம்பினாலான முத்திரை மோதிரம் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது ஆனைக்கோட்டையில் மீட்டெடுக்கப்பட்ட செம்பினாலான முத்திரையில் காணப்பட்ட **ஈரின வரிவடிவம்** தொடர்பாக கா.இந்திரபாலா, பொ.இரகுபதி மைசூர் கல்வெட்டியல் நிபுணர் ரமேஷ் என்போர் பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தபோதிலும் பொதுவாக அம்முத்திரையிலுள்ள வாசகத்தினை **தமிழ்ப்பிராமி ஒலியன்களின் அடிப்படையில் வரும் 'கோவேதம்'** என்பதனை ஏற்றுள்ளனர். அவ்வகையில் இலங்கையின் பெருங்கற்காலப் பண்பாட்டு மண்படையடுக்குகளில் இருந்து கிடைத்த **முதலாவது தமிழ்ப் பிராமி வாசகம** இதுவென்பதும் **யாழ்ப்பாணக் குடாநாட்டின்கண் வெளிப்படுத்தப்பட்ட முதலாவது பூர்வீக இந்துப் பண்பாட்டின் காலத்தால் முற்பட்ட சான்று இதுவாகும்** எனவும் குறிப்பிட முடியும். அத்தகையவொரு சிறப்பினை வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கும் அதனோடு இணைந்திருந்த பெருங்கற்காலக் குடியிருப்புக்களும் பெற்றிருந்தன. கந்தரோடை **கோவேதம** என்ற அரச பதத்திற்குரிய பின்புலமாக விளங்கி வந்திருந்தது என்பதிலும் எவ்வித ஐயமும் எழமுடியாது. **அவ்வழியே இந்துப் பண்பாட்டின் தொட்டிலாக வழுக்கியாற்றுப்பள்ளத்தாக்கு விளங்கியிருந்தமை யினை எவருமே மறுக்கமுடியாது.**

வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கில் மிகவும் அண்மைக்காலத்தில் எமக்குக் கிடைத்த இந்துப் பண்பாட்டுப் படிமங்களுக்குரிய தொல்லியல் எச்சங்கள் கிடைத்துள்ளன. அதாவது பெருங்கற்கால மிருக வடிவங்களுள் ஒன்றான **பன்றியின்** உருவவியலை அடிப்படையாகக் கொண்ட **இச்சாணைக்கல் அம்மியானது** நான்கு கால்களைக் கொண்டும் ஒரு விளிம்பில் தொடர்ச்சியான மீன்வடிவங்களின் வரைபு ஒன்றினையும் கொண்டும் **முச்சூலக் குறியீடு** ஒன்றினையும் கொண்டும் காணப்படுவது ஆதித்திராவிடப் பண்பாட்டின் அடிப்படை மூலத்துடன் பூர்வீக இந்துமதத்தின் மூலங்கள் இணைந்திருப்பதனை எமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றது. சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகமொன்றில் பயிலப்பட்ட வரைபு முறையொன்று, மிக நீண்ட பிரதேசங்களையும், காலத்தினையும் கடந்து வந்து வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கிலுள்ள கந்தரோடையில் உள்ள **'கற்பொக்கணை'** என்ற மையத்தில் புதைந்திருந்த சாணைக்கல் அம்மியில் பதியப்பட்டிருந்தமையே **இந்துப்பண்பாட்டு மூலமொன்றின் சிறந்த வெளிப் பாடாக** அமைந்தது எனலாம். நிலைக்குத்தாக நோக்கும்போது **படகு ஒன்று பாய்மரத்துடன்** காணப்படும் தோற்றத்தினையும், பக்கவாட்டாக நோக்கும்போது

மீன்தலை வரிசை ஒன்றின் தோற்றத்தினையும் கொண்டு காணப்படும் இவ்வரை பானது சிந்துவெளி முத்திரைகளில் பெருமளவுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளவை யாகக் காணப்படுகிறது.

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் கந்தரோடை என்ற மையமானது ஆற்றின் இரு புறங்களிலும் சமத்துவமான முறையில் கட்டிட, மற்றும் பண்பாட்டு நிறுவன அலகுகளைக் கொண்டு வளர்ச்சி பெற்றிருந்தமையை தொல்லியல் மேலாய்வு களின்போது அவதானிக்க முடிந்தது. ரோமானிய வாணிபக்கிடங்கு ஒன்று வழுக்கையாற்றுக்கும் தற்போதைய உடுவில் குளத்திற்கும் இடையே காணப் பட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் அண்மையில் கிடைத்துள்ளன. புராதன தோணித்துறை ஒன்றினை 'திரும்புதுறை' என்ற பரப்பு கொண்டிருந்தது. இப்பிராந்தியம் தற்போதைய உடுவில் குளத்தின் ஒருமுனையைக் குறிப்பிட்டு நின்றதெனலாம். புதைந்துபோன மரத்தோணியின் பல பாகங்கள் இங்கிருந்து மீட்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

உரோம வியாபாரிகளினுடைய நாணயங்கள பெருமளவிற்கு வழுக்கை யாற்றுப் பள்ளத்தாக்கிற்குக் கிழக்குப் புறமாகவே சிதறிக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையாசிரியருக்கு ரோமத்தங்க நாணயம் உட்பட பல ரோம நாணயங்கள் தமிழ்க் கந்தையா வித்தியாசாலைக்கு அருகில் உள்ள புராதன காணியின் ஆலயச் சுற்றாடலில் கிடைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இப்பரப்பானது சுதேச வைத்திய பாரம்பரியத் தளமாக மிக நீண்ட காலமாக விளங்கி வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது).

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கிற்கு மேற்குப்புறமாக மாசியப்பிட்டி பொதுச் சந்தைக்கு அருகாமையில் மிகப் புராதனமான சிவன்கோயில ஒன்றின் அழிபாடுகள் காணப்படுகின்றன. (இங்கே ரோம வாணிபக்கிடங்கொன்று நிலத்தினுள் புதைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.) அருகே அங்கண்ணம்மைக் கடவை (அங்கணாவைக்கடவை) கண்ணகியம்மன ஆலயம் அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அம்பன், குடத்தனை, நாகர்கோயில் உள்ளிட்ட வடமராட்சிக் கிழக்குப் பிராந்தியமும் பூர்வீக இந்துப் பண்பாட்டுக் குடியிருப்புக் களும்

இற்றைவரைக்கும் 'நாகபூமி' எனத் தம் வாழ்வுப்புலத்தினை அழைத்துவரும் வடமராட்சி கிழக்குப் பிராந்திய மக்கள் குடாநாட்டின் எஞ்சிய பரப்பில் வாழும் மக்கட் தொகுதியிலிருந்து தம்மை தனித்துவப்படுத்திய வகையில் வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொண்டுவருவதனைக் காணலாம். மிகவும் இறுக்கமான இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியக் கொள்கைகளை தமது வாழ்வுப்புலத்தில் மிகத் தொன்மையான காலத்திலிருந்து கடைப்பிடித்து வருவதோடு மட்டுமல்லாது, தமது பூர்வீக இந்துக் கலாசார வெளிப்பாடுகளைக்கூட மாற்றுவதற்கு

முனையாது தமது ஜீவனோபாயத்தினை நடாத்திவரும் வடமராட்சி கிழக்குப் பிராந்திய மக்களே யாழ்ப்பாணக்குடாநாட்டில் இற்றைவரைக்கும் பெருங்கற்காலத்திற்குரிய இந்துப் பண்பாட்டு விழுமியங்களை வெளிப் படையாகத் தொடர்ந்து கடைப்பிடித்து வருபவர்களாகக் காணப்படுகின்றனர். அவ்வாறான ஒரு நிலைக்கு இப்பிராந்தியத்தின் இயற்கையமைப்பு, மண்வளம், நன்னீர்வளம், கடல்வளம், தென்கிழக்காசிய வாணிபக்கடல் வழிமார்க்கங் களை தழுவியநிலை போன்ற இன்னோரன்ன காரணிகளே வழிவகுத்து நின்றன எனலாம்.

அண்மைக் காலங்களில் நாகர்கோயிற் பரப்பிலுள்ள **கருமண்பிட்டிப் பரப்பிலிருந்தும் கௌத்தன் துறைமுகப** பரப்பிலிருந்தும் மீட்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால மட்கலசங்களும், கறுப்பு-சிவப்பு மட்பாண்ட ஓடுகளும், அச்சுக் குத்தப்பட்ட நாணயங்களும், ஓலை ஏடுகளும், புராதன மட்பாண்ட சிதைவுகளும் மண்ணினாலும் செம்பினாலான புராதன அகல்விளக்குகளும், தொன்மை வாய்ந்த இந்துப் பண்பாட்டுப் படிமங்களும் மிகத்தெளிவாக அப்பிராந்தியத்தின் இந்துப் பண்பாட்டிருப்பினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. கருமண்பிட்டிப் பரப்பிலிருந்து சேகரிக்கப்பட்ட **பல முனையுள்ள** (ஏழுமுனைகள்) **கெண்டி என அழைக்கப்படுகின்ற பெருங்கற்கால மட்கலசம்** ஒன்று அதன் மூடியுடன் கிடைத்திருப்பது **பூர்வீக இந்துப் பண்பாட்டின் தோற்றத்தினை** உறுதிப்படுத்தும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த **தொல்லியல்** சான்றாகவுள்ளது. கெண்டிமுனை உள்ள இக்கலசமானது (Multi- Spouted Vessal) பெருங்கற்காலச் சடங்காசார முறைகளுக்காக, சிறப்பாக **தூபமிடுவதற்கான** ஒரு கலசமாக பயன்படுத்தப் பட்டிருக்கவேண்டும். இவ்வாறான கலசங்களை **சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகப் பரப்பில்** காணமுடிந்ததையும் இங்கு நினைவுகூரத்தக்கது. அங்கு பல கண்களையுடைய (Perferreted Vessals) மட்கலசங்களின் பாவனையானது **தூபவழிபாட்டு** முறை இருந்தமையை உறுதிப்படுத்தி நிற்கின்றது. அவ்வாறான ஒரு வழிபாட்டுமுறை நாகர்கோயிற் பரப்பில் வாழ்ந்த (பெருங்கற் பண்பாட்டு) மக்களால் பின்பற்றப்பட்டிருந்தது என்பதனைக் காணும்போது வடமராட்சி கிழக்குப் பிராந்தியம் தனித்துவமான **இந்துப் பண்பாட்டுப்** பகைப்புலத்தினைக் கொண்டு அமைந்தமையை உறுதிப்படுத்திக்கொள்ளமுடிகிறது.

அம்பன், குடத்தனை, குடாரப்பு போன்ற கிராமக் குடியிருப்புகள் தென்கிழக்காசிய இந்து - வாணிபத் தொடர்புகளினூடே உள்வாங்கிய பண்பாட்டு மூலங்களைத் தம்மகத்தே கொண்டு விளங்குகின்றன. சிறப்பாக **அம்பன்** என்ற கிராமம் போர்த்துக்கீசரது பொருளாதார பண்பாட்டு நடவடிக்கைகளுக்கு உட்பட்ட வகையில் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் மலேசியாவில் உள்ள **அம்பன்** என்ற குடியேற்றப் பிரதேசத்துடன் இணைப்பு நடவடிக்கைகள் பலவற்றுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. போர்த்துக்கேய - ஒல்லாந்த நாணயங்கள் ஏராளமாக இக்கிராமத்தில் கிடைப்பதும் நோக்கத் தக்கது. இக்கிராமத்திலுள்ள மாட்டு வண்டில்களுக்கெல்லாம் போர்த்துக்கேய

- ஒல்லாந்த நாணயங்களைப் பயன்படுத்திப அலங்கார வேலைகளை ஏற்படுத்தியுள்ளமையை இன்றும் காணலாம். **இவ்வாறான பண்பாட்டு வெளிப்பாட்டுக்குரிய சிறப்பான காரணி தென்கிழக்காசிய நாடுகளுடன் இப்பிராந்தியம் கொண்டிருந்த இந்துப்பண்பாட்டுத் தொடர்புகளேயாகும்.** வரலாற்றுப் புகழ்பெற்ற நாகர்கோயிலில் வருடாவருடம் கொண்டாடப்படும் கப்பற்திருவிழாவும் இப்பண்பாட்டு பரிமாற்றத்தினையே வெளிப்படுத்தி நிற்கின்றதெனலாம்.

நாகர்கோயிலிலிருந்து வடக்கேயுள்ள **கௌத்தன்துறையானது** பலதரப்பட்ட தொல்லியல் மூலங்களை வெளிப்படுத்தியுள்ள ஒரு மையம் என்பதும் குறிப்பிடத் தக்கது. மிகவும் அண்மைக்காலத்தில் அத்துறைப்பரப்பில் கிணறு ஒன்றினை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டபோது அங்கு சோழர்காலப் பரப்பிற்குரிய புராதன கிணறு ஒன்று புதிதாகக்கிணறு தோண்டும்போது கண்டுபிடிக்கப்பட்டது. கிணற்றுக்குள் வந்த அந்தப்பழைய கிணறு **சுட்ட செங்கட்டிகளினால்** அமைக்கப் பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது (வல்லிபுரத்திற்கண்மையில் **ஆனை விழுந்தான் சந்திக்கு அண்மித்ததாக கிழக்காக உள்ள மணற்பரப்பில் புராதன கிணறு ஒன்றினது சுடுமண் வளையங்களை** இந்நூலாசிரியரினால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது) எனவே பெருங்கற்காலப் பரப்பில் இங்கு வாழ்ந்த வேளாண் சமூகத்தினர் தமது நெற்பயிர்ச் செய்கைத் தொழிலுக்கு தேவையான நீர்த்தேவையை **கொட்டுக்கிணறுகள் வாயிலாகவே** பெற்று பூர்த்தி செய்திருந்தனர் என்பதும் தெளிவாகின்றது. இன்றைய நிலையில் வடமராட்சி கிழக்குப் பிராந்திய மக்கள் **'துரவு'களை** அமைத்து அவற்றிலிருந்து பாசனத்திற்கான நீர்வளத்தினைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பிராந்தியத்தில் எங்கும் நன்னீர் ஊற்றுக்களே பரந்திருப்பதனால் புராதன காலக்குடியிருப்புக்கள் மிகவும் நெருக்கமாகக் காணப்பட்டிருக்க வேண்டும். **'சிங்கை நாகர்'** இப்பின்னணியிலேயே வளர்ச்சிபெற்று இப்பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்தியவர்களாக விளங்கியிருக்கவேண்டும்.

இங்கு மண்டலாய் பிள்ளையார், துளாயிற் பிள்ளையார், தில்லையம்பலப் பிள்ளையார் எனப் புராதன கோயில்கள் பலவுண்டு. **மண்டலாய்** என்பது இந்தோனேசியாவிலுள்ள பிரதானமானதொரு பௌத்த மையம் என்பது தெளிவு. மண்டலகிரியான நித்திய விநோதபுரம் (கந்தளாய்) திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் ஒரு பண்பாட்டு மையமாகும். 'துளாய்' அல்லது 'துளாயில்' என்ற மையம் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை மருவிய வகையில் பருத்தித்துறைக்கு மேற்குப்புறமாக காணப்படும் ஒரு பழமையான மையமாகும். தில்லையம்பலப் பிள்ளையார் என்ற ஆலயம் கரவெட்டி கிழக்கில், வரணிக்கு மேற்குத்திசையில் வயல் நிலங்களின் நடுவே காணப்படுகின்றது. இம்மூன்று கோயில்களும் மிகப்பழமைமிக்கனவாக நெல்லுற்பத்தி வயல்களுக்கு நடுவே அமைந்து காணப்படுபவையாகக் காணப்படுகின்றன. இவை நெல்லுற்பத்திப் பண்பாட்டுடன்

நெருங்கிய தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. தென்கிழக்காசியாவிலேயே காலத்தால் முற்பட்ட நெற்பயிர்ச் செய்கைமுறை ஆரம்பிக்கப்பட்டிருந்தது என்பதனை தற்கால அகழ்வாராய்ச்சி முடிபுகள் நிரூபணம் செய்கின்றன. எனவே **மண்டலாய் பிள்ளையார்**, கோவிலின் அமைவுகூட அத்தகைய ஒரு நெல் உற்பத்திப் பண்பாட்டுடன் இணைக்கப்பட்ட வகையில் வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திற்கும், தென்கிழக்காசியாவிற்கும் இடையே இருந்த உறவினால் வருகை தந்த ஒரு பண்பாட்டு விழுமியமாக அமைந்திருக்கவேண்டும். தில்லையம்பலப் பிள்ளையார் வழிபாடும் அத்தகையதே (அண்மையில் பழைய முறிகண்டிப் பிள்ளையார் கோயிலுக்குக் கிழக்காக உள்ள சுமார் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் வட்டவடிவமான ஒழுங்கில் குத்துக்கற்கள் (பத்துப் பத்தாக) நிலத்தினுள் புதைக்கப்பட்டிருப்பதும், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் அதிகளவில் சிதறிக் காணப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள செய்தி எமக்குக் கிடைத்துள்ள நிலையில் வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திலுள்ள அப்புராதன பிள்ளையார் ஆலயங்கள் யாவும் பெருங்கற்காலப் பண்பாட்டு மண்படையடுக்குகளிலிருந்து தோற்றம் பெற்று வளர்ச்சிபெற்றிருந்தன என்பதனை உறுதிப்படுத்திப்கொள்ள முடிகிறது. அவ்வழியே தென்கிழக்காசிய வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்துடனான பண்பாட்டுத் தொடர்புகளையும் இனங்காணமுடிகிறது. கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் தென்கிழக்காசிய நாடுகளில் வேரூன்றி இருந்தமையை இந்தியத் தொல்லியலாளர் சுட்டிக்காட்டுவதும் இங்கு குறிப்பிடத் தக்கது. மணிமேகலை என்ற தமிழ்க்காப்பியம் பெருங்கற்பண்பாட்டினையும், பௌத்தத்தினையும் **சுமாத்திரா - யாவா** ஆகிய தீவுகளை மையமாகக் கொண்டு இணைத்து தனித்துவமான பண்பாட்டுக் காப்பியமாக வளர்ச்சி பெற்றிருந்தமையை நாம் மறந்துவிடக்கூடாது. **அவ்வழியே மணிமேகலை காப்பியத்திற்கும் வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திலுள்ள பெருமணற் றொடர்களுக்கும் இடையே பாரிய தொடர்புகள் இருந்துள்ளமையினையும், ஆபுத்திரன் கதையில் வரும் மணிபல்லவம் இப்பிராந்தியமே என்பதனையும் நாம் அடையாளம் கண்டுகொள்ளமுடியும்.**

அனுராதபுரகால இந்துக் கோயிற் கட்டிடக்கலை மரபு : திராவிட மரபு

கி.பி 6ஆம் நூற்றாண்டினைத் தொடாந்து பிராமணியமயப்படுத்தப்பட்ட திராவிட இந்துக்கோயிற் கட்டிடக் கலைமரபு தென்னிந்தியாவில் திடீர் வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டதன் அடிப்படையில் இலங்கையிலும் அனுராதபுர காலத்தில் அக்கட்டிடக் கலைமரபானது வளர்ச்சி பெற்றிருந்தது எனலாம். கி.பி முதலாம் நூற்றாண்டிற்குரிய வணிகர் குழுவின் கட்டிட அடித்தளம் ஒன்று அனுராதபுரத்தில் பெயர்ப்பொறிப்புடன் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இதுவே இலங்கையில் தோன்றிய திராவிடக் கட்டிடக்கலை முறைக்கு காலத்தால் முற்பட்ட உதாரண மாகவும் விளங்குகின்றது.

அனுராதபுரத்தில் விஜாராமத்திற்குப் போகும் வீதிக்கும் யோதஎலவுக்கு மிடைப்பட்ட பரப்பிலுள்ள குட்டம் பொக்குணவிற்கு வடக்கே உள்ளதுமான

பரந்த நிலப்பரப்பில் **12க்கும் மேற்பட்ட திராவிடக் கட்டிடக் கூறுகளின் அழிபாடுகள** காணப்படுகின்றன. இவற்றில் சில தேவாலயங்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது. **முன்மண்டபம், அர்த்த மண்டபம், கருப்பக்கிரஹம் என்பன வற்றுடன் கூடியுள்ள அச்சிவன்கோயில்கள்** அனுராதபுரகால திராவிடக் கட்டிடக் கலைக்குரிய சிறப்பாதாரங்களாகின்றன. இவற்றின் அடித்தளம் செங்கற்களால் பரவப்பட்டதும், கற்றூண்களை உள்ளடக்கிய வெளிச்சுவர்களைக் கொண்டவையாகவும் அவை காணப்படுகின்றன.

தென்னிலங்கையிலுள்ள **தொந்திரா** என்று குறிப்பிடப்படும் தேவேந்திர முனையிலுள்ள **'உபுல்வன'** விஷ்ணு கோயில் தனித்துவமானதும், பல்லவர்கால கட்டிடக் கலைமரபினை வெளிப்படுத்துவதுமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. தனித்துவமான இந்து திராவிடக் கட்டிடக் கலைமரபினை வெளிப்படுத்தி நிற்கும் இக்கோவிலானது கருவறை, முகப்புமண்டபம், பிரகாரம் என்பனவற்றைக் கொண்டு விளங்குகின்றது. திராவிட அழகியலடிப்படையில் கட்டப்பட்ட இக்கோவிலினது முழு நீளமும் 26அடி 5அங்குலங்களாகும். புராதன இலங்கையின் கட்டிடப்பாணி எவற்றையும் தழுவியிருக்காத நிலையில், இக்கோவிலானது தென்னிந்தியக் கலைச்சாயலை வெளிப்படுத்தி நிற்பதனைக் காண்கின்றோம். இலங்கையின் கலை வரலாற்றாசிரியர்களின் கருத்துப்படி முன்னைய கட்டிடக்கலை எதனையும் பின்பற்றாமலும், பின்னைய காலத்திற்கு ஒரு வழிகாட்டியாக அமையாமலும் ஒரு தனிப்பட்ட பரிசோதனையாக இக்கோவில் இங்கு அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கோவிற் கலைமரபின் பின்னணியிலேயே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டேஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகிய பஞ்ச ஈஸ்வரங்களும் தலச் சிறப்பினைப் பெற்றிருந்திருக்க வேண்டும் எனலாம்.

இலங்கையின் ஆரம்பகால கலையின் தோற்றப்பாடுகளை ஆராயும் ஒருவர் கட்டிடக்கலையிலும் சரி, சிற்பம், கைவினைக் கலைகளிலும் சரி, இந்து பௌத்த மதங்களின் செல்வாக்குக் கலந்த நிலையில் அக்கலையின் உருவாக்கத்திலும், வடிவமைப்பிலும் செல்வாக்குச் செலுத்தியிருந்த முறைமையை உணரலாம். சிறப்பாக அனுராதபுரகால சிற்பக் தொகுதிகளில் இந்துமதச் செல்வாக்கினையும் அனுராதபுரகால பௌத்தமதக் கட்டிடத் தொகுதிகளில் **இந்துமதச் செல்வாக்கினையும** நன்கு அடையாளம் காணக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலைமையானது ஒருவேளை முற்பட்ட அனுராதபுர காலத்து வெளிநாட்டுத் தொடாபுகள் வட இந்தியாவுடனும், பிற்பட்ட அனுராதபுர காலத்து வெளிநாட்டுத் தொடர்புகள் தென்னிந்திய மாநிலங்களுடனும் ஏற்பட்டிருந்தமையின் விளைவினால் உருவாக்கப்பட்டிருக்கலாம். இருந்தும் கி.பி 1ம் நூற்றாண்டில் தேவராத பௌத்த சமயத்தில் ஏற்பட்ட முதற்பெரும் பிளவானது **மகாயானம்** என்ற பெயரில் பௌத்த - இந்து மதக் கோட்பாடுகள் இலங்கையின் அனுராதபுரகாலக் கட்டிட, சிற்பக் கலைகளில் செல்வாக்குச் செலுத்துவதற்கு வாய்ப்பளித்தது. இருந்தும் பௌத்த மதம் இத்தீவில் அறிமுகப்படுத்தப்பட்டு பல நூற்றாண்டுகட்குப் பின்னரும் கூட நாட்டின் பல பகுதிகளில், குறிப்பாக

கதிர்காமம், மகாகம, தேவுந்தர போன்ற கரையோரப் பகுதிகள் இந்து மதச் செல்வாக்கிற்குள் இருந்து வந்தமையினைச் சாசனச் சான்றுகள் உறுதிப்படுத்தி நிற்கின்றன. இந்நிலையில் இலங்கையின் கட்டிட, சிற்பக் கலைகளின் தோற்ற வளர்ச்சி, நிலைகளில் இந்து பௌத்த மதங்களின் செல்வாக்கினை மாறிமாறிக் காணமுடிகின்றது. இந்து சிற்பக் கலைக்குரிய அமைதிகள் பௌத்த கலைமரபிற்குரிய சிற்பிகளின் கைவண்ணத்திலும் பௌத்த கட்டிடக் கலைக்குரிய பாணிகள் இந்து திராவிடச் சிற்பிகளின் கை வண்ணத்திலும் உருவாக்கியளிக்கப்பட்டவொரு சிறப்பினை இத்தீவிலே காணமுடிகிறது. **தக்கணத்தில் தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்திருந்த வேசரபாணியில் வட இந்திய நாகரபாணி, தென்னிந்திய திராவிட பாணி** என்பன இரண்டும் கலந்துகொண்டமை போன்று **இலங்கையில் பௌத்த - இந்துக் கலைமரபுகள் ஒன்றில்ஒன்று** கலந்து செல்வாக்கினை ஏற்படுத்தித் தனித்துவமான முறையில் இங்கு கலை வளர்ச்சி ஏற்படுவதற்கு வழி வகுத்தன.

ஈழத்தில் திராவிடர் கலைப் பாரம்பரியம் வெண்கலப் படிமங்கள்

ஈழம் தனித்துவமான பண்பாட்டுத் தோற்றப்பாட்டிற்குரிய பகைப்புலமாக நெடுங்காலமாகவே விளங்கி வந்திருக்கின்றது. பண்பாட்டு வருகைகளுக்கு மத்தியிலும் ஈழத்துக்குரிய பண்பாட்டு மரபு ஒன்று வளர்ச்சி பெற்று வந்துள்ளமையை சான்றுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இருந்தும் ஈழப்பண்பாடு என்பது தீவகப் பண்புக்குரியதாக, சமுத்திரவியல் வழிவந்த செல்வாக்கினைப் பிரதிபலிப்பதாக அமைந்ததாகக் கொள்ளலாம். ஈழத்து மக்களது வாழ்வு பல நிலைகளிலும், பல முனைகளிலும் மிகவும் அண்மித்த நிலையில் சமுத்திரவியல் வளங்களுடனும், ஜீவனோபாயத்துடனும் தவிர்க்க முடியாதபடி இணைக்கப் பட்டிருந்தது. இச் சூழலே இங்கு தனித்துவமான கலைமரபுகள் வளர்ச்சி பெறுவதற்கும் காரணமாக அமைந்தது.

ஈழத்தில் கலைமரபுகளின் தோற்றமும் வளர்ச்சியுமானது காலஓட்டத்திலே இந்தியத் துணைகண்டத்தில், சிறப்பாக மிகவும் அண்மித்த தரைப் பரப்பான தென்னிந்தியத் தீபகற்பத்தில் ஏற்பட்டுக் கொண்ட மாற்றங்களுடன் பக்கம் பக்கமாக இணைத்துக் கொண்டுமிருந்தது. இதனால் இங்கு தனித்துவமான வகையில் ஏற்கனவே வடிவமைத்துக் கொண்டிருந்த கலை மரபுகள் மேலும் வெளியே இருந்து ஏற்பட்டிருந்த மாற்றங்களின் தாக்கங்களினால் கலப்புற வேண்டிய நிலையை எய்தியது. இப்பண்பாட்டுக் கலப்பானது (Cultural Fusion) ஒரு வரையறுக்கப்பட்ட (தீவுப்) பரப்பிற்குள்ளோ அல்லது குறித்த இன - மதவடிப்படையிலோ தனித் தனியான முறையில் ஏற்பட்டிருக்கவில்லை. அந்த வகையில் குறிப்பிட்ட பண்பாட்டு வடிவமானது (இன்னொரு நிலையில்) அதே மையத்தில் பிறிதொரு பண்பாட்டு மரபினால் கலப்புறச் செய்யப்பட்டு, முன்னையது கைவிடப்பட்டு அல்லது அதனுடைய பிரதான பண்பாட்டு விழுமியங்களை உள்வாங்கிய நிலையில் பிந்திய பண்பாட்டு வடிவங்கள் செல்வாக்குச் செலுத்திய

தன்மையே காணமுடிகிறது. ஈழத்தின் பல மையங்களில் வெளிப்பட்டிருக்கும் பண்பாட்டு எச்சங்களை ஆதாரம் காட்டி இக்கருதுகோளினை நன்கு நிறுவ முடியும். பெருநிலப்பரப்பொன்றினைக் கொண்டிராத தீவக நிலைக்குரிய செயற்பாடுகளே இதற்குரிய அடிப்படைக் காரணமாகின்றன. இவையே இத்தீவில் ஓர் இனத்துக்குரிய அல்லது மதத்தினருக்குரிய பண்பாட்டு வடிவங்கள் ஒரே மையத்தில் தொடர்ச்சியாகக் கிடைக்கப் பெறாமைக்குரிய காரணமும் ஆகின்றன. இங்கு தமிழ் - சிங்களப் பண்பாட்டுக் கலைக்கூறுகளை வேறுபடுத்திப் பார்க்க முடியாதவாறு மத்தியகாலம் வரைக்குமாவது இந்து - பௌத்தக் கலைமரபுகள் இரண்டும் ஒன்றில் ஒன்று கலந்தும் அல்லது ஒன்றுவிட்டு மற்றொன்றுமாக வளர்ச்சிபெற்றுச் சென்றுள்ள தன்மையைக் காணமுடிகிறது. இத்தீவின் எவ்விடத்தினைப் பண்பாட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டாலும் இப்பொதுத் தன்மையைப் பேதமின்றிக் கண்டுகொள்ள முடிகிறது. இது தாயகக் கோட்பாட்டு நோக்கில் ஓர் இனத்தின் பண்பாட்டு வெளிப்பாடுகளை ஆராயப்புகும் கலை ஆர்வலர்க்கும் ஆய்வாளர்க்கும் பிரதானமான சவாலாகவும் அமைகின்றது. இதுவே ஈழத்துப் பண்பாட்டுப் பரப்பில் தமிழரின் தொடர்ச்சியான கலை மரபினை இனங்காணும் நோக்கில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும் பிரதானமான தடைக்கல்லாகின்றது. ஈழத்தில் வெண்கலப் படிமங்கள் ஊடாக அறியப்படும் 'தமிழர் கலைமரபு' பற்றிய பிரச்சினையை முதலில் எடுத்து நோக்கப்படுகின்றது.

ஈழத்துக் கலைமரபு பற்றிய சர்ச்சைகள்

ஈழத்து வரலாற்று எழுத்தியலில் புதிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுக் கொள்கின்ற இக்காலகட்டத்தில், அதன் கலை வரலாறு தொடர்பாகவும் புதிய நோக்குகளும், புதிய அணுகுமுறைகளும் உருவாகிக்கொண்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. இத்தீவில் ஆதிகாலச் சமூகம் உருவாக்கியிருந்த கலைமரபுகள் பற்றி ஆராய்ந்த கலை வரலாற்று ஆசிரியர்கள் இரண்டு நிலைகளில் நின்று தமது முடிவுகளை முன்வைத்துள்ளனர். முதலாவது பிரிவினர் ஈழத்துக் கலைமரபின் தோற்றமுட்பட, கலையம்சங்கள் பலவும் வட இந்தியாவுடன் இத்தீவு கொண்டிருந்த உறவுகளின் அடிப்படையில் இங்கு கொண்டுவரப்பட்டு, வளர்த்தெடுக்கப்பட்டன எனவும் இரண்டாவது பிரிவினர் மிக அண்மித்ததாக அமைந்த தென்னிந்தியாவுடன் ஈழம் கொண்டிருந்த பன்முனைப்பட்ட உறவு நிலைகளினாலேயே இத்தீவின் கலைமரபுகள் உருவாக்கப்பட்டன எனவும் வாதிடுகின்றனர். வடஇந்தியாவுடனான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டே ஈழத்துக் கலையூற்றுக்கள் மடைதிறந்தன என வாதிடுவோர்களுள் பரணவிதான மிக முக்கியமானவராக உள்ளார். இவர் ஈழத்துக் கலைவளர்ச்சியை வடஇந்திய ஆரிய வர்த்தத்துடன் தொடர்புபடுத்தி ஈழத்துக் கலையூற்றுக்கள் ஆரிய மயமாக்கலுடனேயே வளர்த்தெடுக்கப்பட்டன என வாதிடுகின்றார். கொடகும்புர போன்ற வரலாற்று ஆசிரியர்கள் ஈழத்துக் கலையூற்றுக்களானவை தென்னிந்தியா ஊடாகவே வந்தடையப்பட்ட காரணத்தினால் தென்னிந்தியச் செல்வாக்கிற்கு உட்பட்டவையான கலை மரபுகளே இங்கு வளர்ச்சிபெற்றன எனக்

குறிப்பிடுகின்றனர். குறிப்பாக ஆந்திரக் கலை மரபுகளின் ஊடாகவே ஈழத்துக் கலையூற்றுக்கள் மெருகூட்டப்பட்டு புத்தூக்கம் பெற்றன என்பது இவர்களது வாதமாகும்.

ஆனால் மிகவும் அண்மைக் காலத்தில் ஈழத்துக்கேயுரிய தனித்துவமான கலை மரபுகளின் அடியாகத் தோற்றம் பெற்று பெருவளர்ச்சி கண்ட கலைப் பாரம்பரியத்தினை அடையாளம் கண்டுகொண்ட வகையில் சேனக பண்டாரநாயக்கா போன்ற கலைத்துறை ஆர்வம்மிக்க ஆய்வாளர்கள் சமூகமானிடவியல் நோக்கில் ஈழத்துக்கலை வளர்ச்சி பற்றி ஆராய்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். சேனக பண்டாரநாயக்கா ஈழத்துக் கலைவளர்ச்சியை இத்தீவுக்கேயுரித்தான தனித்துவமான ஓரம்சமாக எடுத்துக்காட்டி அயல்நாடான இந்தியா எவ்விதத்திலும் இங்கு கலைமரபு உருவாவதற்கு அடியிட்டுக் கொடுக்க வில்லை என வாதிடுகின்றார். இம்மூன்று பிரவினருமே 'சிங்களக் கலைமரபு' என்ற ஒன்றினை தனித்துவமாக இனங்காணவேண்டி தத்தமது வாதங்களைக் கொண்டு சென்றிருப்பதனைக் காணலாம்.

இந்நிலையில் பௌத்தமதச் செல்வாக்கிற்குட்பட்ட கலை வடிவங்கள் யாவும் 'சிங்களக் கலைமரபு' எனப் பெயரிடப்பட்டு, ஈழத்தில் பௌத்த சிங்களக் கலைமரபு மட்டுமே தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந்தது என எடுத்துக்காட்ட முற்பட்டுள்ளனர். மிகவும் அருமையாகவே பௌத்தமதத் தொடர்பற்ற கலை வடிவங்களைப் பௌராணிக நிலைக்குரியதாகத் திரித்துக் காட்டவும் முயன்றுள்ளனர். இந்துமதச் செல்வாக்கின் நிலைகளைக் கலைமரபுகள் வெளிப்படுத்தி நிற்கின்ற தன்மைகள் பெருமளவுக்கு மறைக்கப்பட்டோ அல்லது அதிமுக்கியத்துவம் கொடுக்காது பின்தள்ளி வைக்கப்படுவதன் மூலமோ 'ஈழத்துத் தமிழர் கலைப் பாரம்பரியம்' அல்லது 'திராவிடர் கலை மரபு' என்பது இத்தீவின் பண்பாட்டு வரலாற்றில் தனித்துவத்தினை ஏற்படுத்தமுடியாது எனக் கருதப்பட்ட போதும் இவ்வாறான பண்பாட்டு ஆய்வுச்சிக்கல்கள் மத்தியிலும் ஈழத்தமிழர் வளர்த்தெடுத்த கலை மரபுகளுள் ஒரு பகுதியான வெண்கலப்படிமக் கலைமரபு பற்றிக் கிடைக்கப்பெற்ற சான்றாதாரங்களுடன் இங்கே ஆராய வேண்டிய அவசியம் இப்பொழுது உணரப்பட்டுள்ளது.

வெண்கலப் படிமங்கள் கிடைத்த மையங்கள்

இலங்கையில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் தொடக்கி வைக்கப்பட்ட மேலாய்வுகளினதும், அகழ்வாய்வுகளினதும் விளைவாகவும், தற்செயலாக வெளிவந்த கலைக்கருவூலங்கள் காரணமாகவும், தனிப்பட்டோர்களது அரும்பொருட் சேகரிப்பு முயற்சி காரணமாகவும் ஓரளவிற்காவது ஈழத்தில் தமிழர் பங்களிப்பினை வெளிப்படுத்தக் கூடியளவிற்கு வெண்கலப் படிமங்கள் கிடைக்கப்பெற்றும், கிடைத்த வண்ணமும் உள்ளன. இத்தகைய வெண்கலப் படிமங்கள் பெருமளவிற்கு இந்து விக்கிரஹவியற் கோட்பாடு நெறிமுறையின் கண்நின்று உருவாக்கப்பட்டவையாகவே காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

எண்ணிக்கையின் அடிப்படையில் அதிகமாகக் கிடைத்த வண்ணம் இருப்பவை பார்வதியின் வெண்கலச் சிற்பங்கள் ஆகும். இதுவரையில் 20இற்கு மேற்பட்டவை இத்தொகுதியிற் கிடைத்துள்ளன. இதற்கடுத்த நிலையில் குறிப்பிடத்தக்க அளவில் கிடைத்திருக்கும் வெண்கலச் சிற்பங்கள் சிவனது நடராச வடிவங்களாகும். கிடைத்துள்ள 7 வெண்கலங்களுள் 5 மட்டும் திருவாசியுடன் காணப்படுகின்றன. நடராச படிமங்களைவிட சிவனது படிமங்களும், சோமாஸ்கந்த மூர்த்திக்குரிய படிமங்களும் இத்தீவில் கிடைத்திருப்பது தமிழர் வளர்த்தெடுத்த படிமக் கலைமரபுக்கு மேலும் சான்று சேர்ப்பதாகவுள்ளன. இவை அனைத்துக்கும் மேலாக சைவ நாயன்மார்களது வெண்கலப் படிமங்கள் 8 உம் 3 விநாயகர் படிமங்களும், காரைக்காலம்மையாரது படிமம் ஒன்றுமாக கிடைத்துள்ள மாதிரிகள் ஈழத்துக்கேயுரித்தான வெண்கலப் படிமக் கலையின் தனித்துவமான கூறுகளை அடையாளம் காண்பதற்கு வழிவகுப்பதாகவுள்ளன. மிக அண்மையில் கிடைத்துள்ள வெண்கலப் படிமமான சிவனது இன்னொரு வடிவம் அர்த்தநாரீசுவரர் சிலையானது ஈழத்தமிழர் கைவண்ணத்திலிருந்து உருவானது என்பதனைத் தென்னிலங்கை ஆய்வாளர்களே ஏற்றுக்கொண்டுமுள்ளனர். இவை அனைத்துக்கும் மேலாக நிற்கின்ற தோற்றத்துடன் கிடைத்துள்ள ஸ்ரீ விஷ்ணுவின் வெண்கலப் படிமங்கள் ஈழத்துக்கேயுரிய அலங்காரக் கூறுகளினால் ஆனவை என்பதனையும் இவ்வறிஞர் உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறு 65க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் கிடைத்துள்ள இந்து வெண்கலப் படிமங்களுள் செம்பாகத்திற்கும் மேற்பட்டவை ஈழத்துத் தமிழ் மரபின் தோற்ற முறையைச் சுட்டி நிற்கின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட வெண்கலப் படிமங்கள் யாவும் கிடைத்துள்ள மையங்களாகப் பின்வருவன காணப்படுகின்றன. 'ஜனநாதமங்களம்' என்ற தமிழ்ப் பெயரால் புராதனகாலத்தில் அழைக்கப்பட்ட பொலநறுவையில் இருந்தே மிகக் கூடுதலான வெண்கலப்படிமங்கள் அகழ்வாய்வுகளின் மூலம் பெற்றுக் கொள்ளப் பட்டன. இப்பண்பாட்டு மையத்திலிருந்து ஐந்து சிவன் கோவிலும், ஏழு விஷ்ணு கோவில்களும் ஒரு காளிகோவிலும் அகழ்வாய்வின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த நிலையில் காலத்தால் முற்பட்ட வெண்கலப் படிமங்களைக் கொண்டிருந்த மையமாக அநுராதபுரம் விளங்குகின்றது. இங்கிருந்தும் இந்துக் கோவில்கள் பலவற்றின் அழிபாடுகள் தொல்லியல் அகழ்வின்பொழுது வெளிக்கொணரப்பட்டன. தற்பொழுது பதவியா என்றழைக்கப்படும் ஸ்ரீபதிக் கிராமத்திலிருந்து பல பார்வதி வெண்கலச் சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டன. ஸ்ரீ பார்வதிபுரம் எனவும் பதவியா அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இங்கிருந்தே நந்திச் சின்னம் (சேதுவடிவம்) பொறித்த செம்பினாலான முத்திரைச் சாசனம் கண்டுபிடிக்கப்பட்டது. இது தமிழர் பாரம்பரிய வரலாற்றுக்கு ஒரு திறவுகோல் எனலாம். திருகோணமலையில் இருந்து தற்செயலாகக் கிடைக்கப்பெற்ற தங்கம் கலந்த வெண்கல விக்கிரஹங்கள் ஈழத்தமிழர் படிமக்

கலைக்கோர் உரைக்கல் எனலாம். திருக்கேதீஸ்வரத்திலிருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட வெண்கலப் படிமங்கள் வார்ப்புக்கலையின் பிராந்திய வேறுபாடுகளை அல்லது பிராந்தியத்திற்குரிய தனித்துவமான பண்புகளை விளக்கி நிற்கின்றன. தற்பொழுது கலாசார முக்கோணத்திட்டத்தின் கீழ் யூனெஸ்கோவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் பண்பாட்டு ஆய்வுகளின்போது குறிப்பிடத்தக்களவிலான இந்து வெண்கலச் சிற்பங்கள் கிடைத்து வருகின்றன. முழுக்க முழுக்க இந்துப்பண்பாட்டுச் சூழலின் அடியாகவே அவை கிடைத்து வருகின்றன. கண்டி, அநுராதபுரம், பொலநறுவை ஆகிய மூன்று மையங்களையும் இணைக்கும் ஒரு முக்கோணப் பரப்பிற்குள்ளேயே இவ்வாய்வுத்திட்டம் மேற்கொள்ளபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

பார்வதி வெண்கலப் படிமங்கள் காட்டும் ஈழத்துக் கலைமரபு

ஈழத்துத் தமிழர் கலைமரபொன்றினை மிகவும் இலகுவாக அடையாளம் காணத்தக்க வகையில் எமக்குக் கிடைத்துள்ள மிகச்சிறந்த சான்றாதாரங்களாக பார்வதி வெண்கலப் படிமங்கள் விளங்குகின்றன. கொழும்பில் உள்ள தேசிய அரும்பொருட் காட்சிச்சாலையிலும் அநுராதபுரத்திலுள்ள தேசிய நூதனசாலை யிலும் பொலநறுவையில் உள்ள கலாசார முக்கோணத்திட்ட அலுவலகத்திலும் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் இப்பார்வதி வெண்கலப்படிமங்கள் இதுவரையில் நுண்கலை நின்ற ஆய்வுநெறிக்குட்படுத்தப்படாத நிலையில் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

20க்கும் மேற்பட்ட பார்வதி வெண்கலப் படிமங்களில் இரண்டு படிமங்கள் மாத்திரம் இருக்கின்ற நிலையில் உருவாக்கப்பட்டுள்ளனவாகும். மிகுதியானவை நிற்கின்ற நிலையில் சமபங்க, திரிபங்க நிலைகளுக்குட்படுத்தப்பட்ட முறையில் உருவாக்கப்பட்டுள்ளன. நிற்கின்ற பார்வதி வெண்கலப் படிமங்கள் யாவும் முழுமையாக மலர்ந்த தாமரைப்பீடத்தின்மீது உருவாக்கப்பட்டுள்ளன. தென்னிந்திய கலை வரலாற்றாசிரியர்கள் உட்பட இதுவரைக்கும் ஈழத்திற் கிடைத்த நடராச வெண்கலப் படிமங்களைப் பற்றியே பெருமளவுக்குத் தமது குறிப்புகளையும், வர்ணனைகளையும் கொடுத்தனரேயொழிய பார்வதி வெண்கலப்படிமங்களைப் பற்றிய விரிவான ஆய்வில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட பிராந்தியத்தின் பண்பாட்டு வெளிப்பாட்டினைப் 'பெண்மை' எவ்வாறு வெளிக் கொணரத்தக்க ஊடகமாக விளங்குகின்றதோ அதனையொப்ப இத்தாய்த் தெய்வ உருவங்களும் குறிப்பிட்ட இனத்தினதும், மதத்தினதும் இயல்பான கலைமரபுகளை வெளிக்கொணரும் ஊடகமாக விளங்குகின்றன எனலாம். அந்த வகையில் ஈழத்தின் புராதன காலப் பண்பாட்டு வளர்ச்சியில் பார்வதி வெண்கலப்படிமங்கள் பிரதான பங்கினைப் பெற்றிருந்தன என்றால் அக்கூற்று மிகையாகாது.

ஈழத்தில் உருவாக்கி, செம்மைப்படுத்தப்பட்ட நிலையில் எமக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு படிமமாகப் பார்வதிசிலை இல.1 (CMR No. 13, 104, 286) காணப்படுகின்றது. இப்படிமத்தின் கலையம்சங்கள் முழுவதுமே ஈழத்து சிற்பியின்

கைவண்ணத்தினூடாக வடிவமைக்கப்பட்டது என்பதில் கலை ஆய்வாளர் எவருக்குமே சந்தேகம் இருக்கமுடியாது. தாமரை ஆசனத்தின்மீது நிற்கும் நிலையில் அமைக்கப்பட்ட இப்படிமமானது 51.2 சென்ரிமீற்றர் உயரத்தினைக் கொண்டதாக, தலையில் கரண்ட மகுடத்தினையும், கழுத்தில் கடி சூத்திரம் உட்பட ஆபரண அடுக்குகளைத் தாங்கியும் வடிவமைக்கப்பட்டுள்ளது. வலதுகரமானது நீலத்தாமரை மொட்டொன்றினைத் தாங்கி நிற்க, இடது கரமானது கடஹஸ்த நிலையில் கீழே தொங்கவிடப்பட்ட நிலையில் காட்டப்பட்டுள்ளது. மேகலையுடன் கூடிய இடையலங்கார ஆபரணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஆடையமைப்பானது கீழே கணுக்கால் வரைக்கும் காட்டப்பட்டுள்ளது. இப்படிமத்தின் சிற்ப அமைதியை நன்கு அவதானிக்க இந்திய சிற்பக்கலை வல்லுனரான கங்கூலி என்பவர் தென்னிந்திய படிமக்கலை மரபிலிருந்து இது முற்றிலும் வேறான படிமக்கலை மரபொன்றினூடாக வடிவம் பெற்றிருக்கவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இப்படிமத்தின் 'திரிபங்க' நிலையானது (அசைவுநிலை) வலதுபக்கமாக வலது பாதமும் வலது இடையும் முறையே மடிக்கப்பட்டும், வளைக்கப்பட்டும் எடுத்துக் காட்டப்பட்டிருப்பது அதனைத் தென்னிந்திய சிற்ப மரபு லஷ்ணங்களில் இருந்து வேறுபடுத்தி தனித்துவப்படுத்தியுள்ளது. தென்னிந்தியத் திரிபங்க நிலையானது படிமத்தின் இடதுபக்கமாகவே அமைந்திருப்பது பொதுவழக்காகும். இப்படிமத்தின் இன்னொரு புனிதத்துவமான அமசமாக விளங்குவது வலது கரத்தில் காணப்படுகின்ற தாமரை மொட்டின் நிலையானது வலது மார்பக மணிக்கு மேலே உயர்ந்திருப்பது என்பதாகும். சிற்ப லட்ஷணங்களின்படி பார்வதியின் உருவ அமைதியில் வலது கரத்தினால் தாங்கப்பட்டுள்ள தாமரை மொட்டானது மார்பகத்திற்கு மட்டமாக அல்லது கீழேயே அமைதல் வேண்டும் என்பதாகும்.

பொதுவாகக் குறிப்பிடுவதாயின் இவ்வெண்கலப் படிமத்தின் வெளிப்பாடானது ஈழத்திற்கேயுரிய சிற்பியின் கைத்தேர்ச்சியூடாக வடிவமைக்கப்பட்டது என்பதே உண்மை. இப்பார்வதி சிலையின் தலையிற் காணப்படும் முடியின் அமைப்பானது பிற்காலத்தில் தமிழர் நாட்டுக்கூத்து மரபில் பின்பற்றப்பட்ட வடமோடிக்குரிய 'கரண்ட்' வடிவத்தில் இடம்பெற்றிருப்பது அப்படிமத்தின் வடிவமைப்புக்குரிய பாணியை தெளிவுபடுத்துவதாக உள்ளது. கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் இப்படிமத்தின் காலத்தினை கி.பி. 10, 13ஆம் நூற்றாண்டுகட்கிடைப்பட்டது என வரையறை செய்கின்றனர்.

ஈழத்துக் கலைஞனின் கைவண்ணத்தில் தோற்றப்பொலிவுடன் உருவான மற்றொரு பார்வதி வெண்கலப்படிமமானது இலக்கம் 8 (CRM No. 296, 285) ஆகும். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கலைமரபில் உருவாக்கப்பட்டு, இருக்கின்ற நிலையில் (Sitting Posture) வெளிப்படுத்தப்பட்ட இப்பார்வதி வெண்கலப் படிமமானது 41 சென்ரி மீற்றர் உயரத்தினையுடையதாக, (தாமரை யாசனத்தினை இழந்த நிலையில்) பொலநறுவையில் இருந்து மீட்டெடுக்கப்பட்டது. இப்படிமத்திலும் பார்வதிநிலை இலக்கம் 1இனது குணவியல்புகளைப் போன்றே பல தனித்துவமான கலையம்சங்களைக் காணமுடிகின்றது.

சுகாசன நிலையில் அமைக்கப்பட்ட இப்படிமத்தின் இடதுபாதமானது கீழ் நோக்கியவாறு தொங்கவிடப்பட்டும், வலது பாதமானது மடிக்கப்பட்ட நிலையிலும் வலது கரம் தாமரைமொட்டு ஒன்றினைத் தாங்கிய நிலையிலும் இடதுகரம் வரத'ஸ்த நிலையிலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. தாமரை மொட்டானது வலதுபக்க மார்பக மணிக்குமேல் உயர்த்தப்பட்டுக் காட்டப் பட்டுள்ளது. இந்நிலையானது மரபு ரீதியான சிற்பலஷணங்களை மீறிய தன்மையைக் காட்டி நின்றாலும் கூட, சுதேசக்கலை மரபு ஒன்றின் பிரசவிப்பாகவே வெளிப்படுத்தப்பட்ட தன்மை யினை உறுதிப்படுத்தி நிற்கின்றது எனக் குறிப்பிடலாம். இதனை அவதானித்த இந்தியச் சிற்பவியல் ஆய்வாளர் கங்கூலி என்பவர் இச்சிற்பப் படிமத்தினைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'..... ஓரளவுக்கொத்த இன்னொரு பார்வதி சிலையுடன் இச்சிலையை ஒப்பிட்டு நோக்குவோமேயானால், அவற்றின் உருவ அமைதிக்கும், மெருகூட்டலுக்கும், ஆடையாபரணங்களது வரைவுகளுக்குமிடையே காணப்படும் பாரிய வேறுபாடு என்பன எல்லாவற்றையும் கொண்ட இலங்கையின் உதாரணங் களானவை தென்னிந்திய விதிமுறைகளுக்கு அவ்வுலோகச் சிற்பியானவன் வழிப்படுத்தப்பட்டவன் அல்லன் என்பதைத் தெளிவாக்குகின்றன.'

கங்கூலியினது இக்கருகோளானது திட்டவட்டமாக ஈழத்துக்கேயுரிய படிமக்கலைப் பாரம்பரியத்தினை (Bronze Casting School of Art of Ceylon) நிறுவுவதாகவே அமைகின்றது. ஈழத்துக்கலைமரபின் பிரதான அம்சங்களைக் கொண்டிருக்கும் இப்படிமத்தின் சிரசிலே கூம்பு வடிவமாக (Conical) அமைந்த முடி ஒன்றும், காதுகளில் அமைந்துள்ள ஆபரணங்கள் இரண்டும், கழுத்திலே அமையப்பெற்ற மாலைகள் மூன்றுமாக இணைந்து, இப்பார்வதிசிலையின் தனித்துவமான பிறப்பினை சுதேசக்கலை மரபுக்குரியதாக்கியுள்ளது. கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இச்சிலையை கி.பி. 10ஆம் 13ஆம் நூற்றாண்டு களுக்கு இடைப்பட்டது என வரையறுத்துள்ளார். இவ்வகையில் ஈழத்தமிழர் படிமக்கலை வரலாற்றில் பார்வதிசிலைகள் இல.08உம் முக்கியமான வரலாற்று மூலாதாரமாகின்றன.

திருகோணமலையில் வடக்குக் கடற்கரை வீதியில் தற்செயலாகக் கிடைத்த பெரும் கலைக்கருவூலங்களுள் இரண்டு பார்வதி வெண்கலப்படிமங்களும் உள்ளடங்கியிருந்தன. ஈழத்துத் தமிழர் படிமக்கலை வரலாற்றிற்குத் திருகோணமலையிற் கிடைத்த இவ்வெண்கலப்படிமங்கள் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. பார்வதிசிலைகள் இலக்கம் 11, 12 (Find No. 1950. tri.) என அடையாளமிடப்பட்ட இப்படிமங்களுள் முதலாவது இருக்கின்ற நிலையிலும், இரண்டாவது நிற்கின்ற நிலையிலும் முறையே 47.6 சென்ரி மீற்றர், 50 சென்ரிமீற்றர் உயரங்களையுடையதாய் அமைக்கப்பட்டதனைக் காணலாம்.

ஈழத்திற்கேயுரிய - காலத்தால் முந்திய தனித்துவமான தமிழா படிமக்கலை மரபு ஒன்று திருகோணமலை மாவட்டத்தில் தோற்றம்பெற்று வளர்ச்சி

அடைந்திருந்தமைக்கு இவை சிறப்பான சான்றுகளாகும். வரதமுத்திரையுடன் கூடிய இருக்கின்ற நிலையில் உள்ள பார்வதியின் வலது கரத்திலே நீலோற்பல மலர்மொட்டு காணப்படுகின்றது. சுகாசன நிலையில் அமைந்த இச்சிலையின் வலது பாதத்தின் பெருவிரல் சாய்வாக கீழே தொங்கிக் கொண்டிருக்கும் இடது பாதத்தின் முழங்காலினை மெல்லத் தொட்டபடி காணப்படுவது அதன் பழமைத்தன்மையை எடுத்துக்காட்டுகின்ற இயல்பெனலாம்.

நிற்கின்ற நிலையில் அமைந்த பார்வதியின் சிறப்பியல்புகள் பல இந்திய, ஐரோப்பிய சிற்பக்கலை ஆய்வாளர்களை ஒருங்கே ஈர்த்துள்ளது. இச்சிலையின் விசேட அம்சம் என்னவெனில் திருவாசி அல்லது பிரபா மண்டலத்தினுள் தாமரையாசனத்தின் மீது உருவாக்கப்பட்ட ஒரேயொரு வடிவம் இதுவாகும். துரதிஷ்டவசமாக அத்திருவாசியின் மேற்பாகம் எமக்குக் கிடைக்காமற் போயிற்று 'மீனாட்சி' என்று வர்ணிக்குமளவிற்கு எடுத்த எடுப்பில் ஒரு மீனைப்போன்ற தோற்றத்தில், உண்மையான திரபங்க நிலையில், பெண்மையின் இலட்சியப் பிம்பம் பிரதிபலிக்கும்படி வடிவமைக்கப் பட்ட இப்படிமம் H.Zimmer என்ற மேலைத்தேயக் கலைப்புலவரை ஒருங்கே ஈர்த்துள்ளது. ஈழத்து சமுத்திரவியல் வழிவந்த குணவியல்புகள் இலகுவிலே இலங்கும்படி வடிவமைக்கப்பட்ட ஒரு படிமமாகவே இதனைக் கொள்ளவேண்டும். ஈழத்துத் தமிழர் படிமக்கலை வரலாற்றில் இப்பார்வதி படிமமானது தனித்துவமான உள்ளூர் கலைமரபின் வளர்ச்சிக்கு ஓர் உதாரணமாகத் திகழ்கின்றது. கிருஷ்ணஜயர் என்பவரது கருத்துப்படி இப்படிமமானது கி.பி. 11ஆம் நூற்றாண்டுக்குரியது என்பதாகும். ஆனால் இப்படிமத்தினை கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக்கொள்ள இடமுண்டு.

சிவநடராச வெண்கலப் படிமங்கள் காட்டும் ஈழத் தமிழர் கலைமரபு

சிவனது ஒரு வடிவமான நடராச வடிவங்களுடைய வெண்கலப்படிமங்கள் முழுவதுமே பொலனறுவை என்ற மையத்திலிருந்து மாத்திரம் பெற்றுக் கொள்ளப் பட்டமை இங்கு மனங்கொள்ளத்தக்கது. இதுவரையில் எல்லாமாக 7 நடராச வெண்கலப் படிமங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பொலனறுவையின் சைவக் கோயில்களில் இடம்பெற்றிருந்த இப்படிமங்கள் பின்னர் பொலனறுவை வீழ்ச்சியடைந்த காலத்தில் கோயில்களில் புதைக்கப்பட்டும் வேறிடங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டும் நீண்டகாலமாக மறைந்திருந்தன. கடந்த நூற்றாண்டின் முடிவிலும் இந்நூற்றாண்டின் நடுப்பகுதியிலும் பொலனறுவையில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வுகளின் விளைவாகவே இந்த சிற்பப்படிமங்கள் வெளிக்கொணரப் பட்டன. இவ்வாறு வெளிக்கொணரப்பட்ட கலைக் கருவூலங்களானவை ஈழத்து சுதேச வெண்கலப் பாரம்பரியத்தின் தனித்துவமான இயல்புகளை தெளிவாகப் பிரதிபலிப்பவையாக விளங்குகின்றன. பேராசிரியர் இந்திரபாலா என்ற கலையாய்வாளர் பொலனறுவையிற் கிடைத்த நடராசர் படிமங்களைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

'..... தமிழ் நாட்டிற்போல, இலங்கையிலும் நமக்குக் கிடைத்துள்ள சைவ உலோகச் சிற்பங்களுள் மிகச் சிறந்தவையாய் இருப்பவை நடராசர் சிலைகளே. இங்கு கிடைத்த இரண்டு நடராசர் சிலைகளைப் போன்று சிறந்தவையாய் தமிழ் நாட்டிலும் அதிக சிலைகள் கிடைக்கவில்லை எனக் கலாவிமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தஞ்சாவூரிலே கிடைத்துத் தற்பொழுது சென்னை அரும்பொருளகத்தில் (Museum) வைக்கப்பட்டுள்ள நடராசர் சிலையும் பொலனறுவையிலே கிடைத்துக் கொழும்பு அரும் பொருளகத்தில் வைக்கப் பட்டுள்ள முதலாவது (No.1) நடராசர் சிலையும் நடராசர் சிலைகளுள் வைத்தெண்ணத்தக்கவை...'.

பொதுவாக நடராஜர் சிலை இல.1 (CMR No. 13.89.283), நடராஜர் சிலை இல.5 நடராஜர் சிலை இல.6 என்பன அவ்வவற்றின் தனித்துவமான கலை வெளிப்பாட்டினைப் பிரதிபலிக்கும் வகையில் ஈழத்து தமிழர்களது வெண்கலப் படிமக்கலையின் வளர்ச்சி நிலையை உறுதிசெய்வனவாக அமைந்துள்ளன. நீள்சதுர முகவெட்டுத் தோற்றப்பொலிவுடன் விளங்கும் நடராஜர் சிலை இல.1உம், விரித்த பின்னற்சடையுடன் திருவாசியின்றி ரிஷப குண்டலத்துடன் விளங்கும் நடராஜர் சிலை இல.2உம் ஈழத்துக்கேயுரிய உருவாக்கத்தினைப் பிரதிபலித்து நிற்கின்றன. சி.சிவராமமூர்த்தி என்ற கலாவிமர்சகரது கருத்துப்படி தமிழ்நாட்டில் எங்குமே கிடைத்திருக்காத வகையில் தேவாரங்களில் பாடப்பட்ட வருணனை களுக்கமைய ஈழத்தில் நடராஜர் சிலை இல.2 கிடைத்துள்ளது என்பதாகும். நாகபாம்பினை ஆபரணங்களாக அணியப்பெற்ற தோற்றப்பாடுடைய இப்படிமத் தினைப் பற்றி சிவராமமூர்த்தி தனது தென்னிந்திய வெண்கல உருவங்கள் என்ற நூலில் விபரித்துள்ளார். இச்சிற்பத்தின் சடையானது தென்னிந்திய சிற்பங்களில் பொதுவாகக் காணப்படுவது போலல்லாது திரிந்து முறுகி, பின்னி அமைந்துள்ளது. தேவாரங்களின் 'புரிபுன்சடையீர்' போன்று வர்ணிக்கப்பட்டதற்கேற்ப நடராஜர்சிலை இல.2 அமைந்துள்ளமையை சிவராமமூர்த்தி அவதானித்துள்ளார்.

1960இல் பொலனறுவையிலுள்ள ஐந்தாம் சிவதேவாலயத்திற்குப் பின்புறமாகவுள்ள ஓர் இடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட திருவாசியுடனான நடராஜரே இது வரைக்கும் பெற்றுக்கொள்ளப்பட்டவற்றுள் இருந்து உயரத்தாற் கூடியதாகவும், அதிவிசேடமான சிற்பக்கலைப் பரிமாணங்களை யுடையதாகவும் காணப்படுகின்றது. சிலை இல.6 என அடையாளமிடப்பட்ட இப்படிமம் 146.8 சென்ரி மீற்றர் உயரமுடையதாகவுள்ளது. தமிழ் நாட்டிலோ அல்லது ஈழத்தின் பிற இடங்களிலோ இதனைப் போன்ற நடராஜர் படிமம் கிடைக்கப் பெற்றிருக்க வில்லை. விரிந்த ஜடையின்றி ஜடாமகுடத்துடன் காணப்படும் இப்படிமம் அபய முத்திரையிற் காட்சிகொடுக்கும் முன் வலக்கரத்தில் ஐந்துதலை நாகபாம்பு ஒன்றினைத் தாங்கியுள்ளது. அதுமட்டுமன்றி திருவாசியைக் கொண்டுள்ள பீடத்தின் முன்புறத்தில் வாத்தியக்காரர்களைக் கொண்ட நால்வருடைய உருவங்கள் மிக லாவகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தாளம், சங்கு, குழல், மத்தளம், ஆகிய வாத்தியக் கருவிகளை அவர்கள் மீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

உலோகத்தாலான நடராஜர் சிற்பங்களில் இத்தகைய வாத்தியக் கலைஞர் களுடைய உருவங்கள் இடம்பெறுவது வழக்கமில்லை என முதன்முதலாக கொடகும்புர என்பவர் எடுத்துக் காட்டியுள்ளார். தென்னிந்திய உலோகச் சிலைகளை ஆராய்ந்த சிவராமமூர்த்திகூட இப்படிமத்தின் தனித்துவமான சிற்பப் பெறுமானங் களை விரிவாக விளக்கியுள்ளார். இப்படிமத்தினை உருவாக்கிக் கொடுத்த ஈழத்துச் சிற்பி தேவாரங்களில் விபரிக்கப்பட்டுள்ள வர்ணனைகளுக்கமைய அதனை உருவாக்கியிருப்பதும், குறிப்பாக திருஞானசம்பந்தருடைய தேவாரப் பதிகத்தினை நினைவூட்டுமுகமாக ஐந்துதலை நாகபாம்பினை வலது கரத்தில் வடித்திருப்பதும் ஈழத்துத் தனித்துவமான படிமக்கலை வளர்ச்சியையே எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் இப்படிமக்கலை மரபின் தோற்றம், வளர்ச்சி தொடர்பாகக் குறிப்பிடும்பொழுது இவற்றை அமைத்தவர்கள் பௌத்த சிற்பங்களை அமைப்பதில் தேர்ச்சிபெற்றிருந்த சிங்களச் சிற்பிகளே என்று சி.எச்.கொடகும்புர கூறுவது ஏற்கக்கூடியதாய் இல்லை என்று விபரித்துள்ளார். அந்த வகையில் இலங்கையில் வளர்ந்த இந்து வெண்கலச் சிற்ப மரபை (ஈழத்) தமிழர் தம் சிற்பமரபின் (ஓர்) அம்சமாகவே கருதவேண்டும் என்றும் தனது முடிவினைக் குறித்துள்ளார்.

வெண்கலப்படிமங்கள் பற்றிய ஆய்வுகள் ஒரு வகையில் தொழில்நுட்பம் பற்றியதாகவும் அமையக்கூடியன. அத்தொடர்பில் ஓர் இனத்தின் அல்லது பண்பாட்டின் அறிவியல் தேட்டமாகவும் அவை அமைந்துவிடுகின்றன. அறிவியல் தேட்டங்களும், அனுபவத் திரட்டுக்களும் பல்வேறு காலகட்டங்களின் ஊடாகப் பிற்சந்ததியினருக்கும் கையளித்துவிடப்பட்ட பண்பாட்டின் ஒரு புறச்சூழல் பற்றிய ஆய்வாகவும் வெண்கலப்படிமங்கள் பற்றிய ஆய்வுகள் அமைந்துவிடுகின்றன. இத்துறையூடான ஆய்வு பொதுவாக எல்லோருமே கருதிக்கொள்வது போன்று மதத்தையும், ஆத்மீக வெளிப்பாட்டினையும்,தத்துவார்த்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் எடுத்தியம்பும் விக்கிரஹ முறையியல் (Iconography & Iconometry) தொடர்பானதாகக் கருதப்பட்டாலும்கூட அது ஒரு பரந்த பண்பாட்டு மானிடவியலின் தேடலுக்குரிய ஊடகமாகவும் அமைந்துவிடுவது தவிர்க்க முடியாததாகின்றது. அவ்வழியே ஓரினத்தின் அல்லது மதத்தின் தொடர்சியான அல்லது தொடர்சியற்ற பண்பாட்டு இருப்பினை இனங்காட்டி நிற்கும் அதேவேளை, அப்பண்பாட்டுக் குழுமத்தின் பரவலான தொடர்புகள், இடப்பெயர்வுகள், வணிகநெறிவாதம், பண்பாட்டு மயமாக்கவாதம் (Cultural Assimilation) பண்பாட்டக் கலப்பியல் (Cultural Fusion) போன்ற நிகழ்வுகளை வெளிப்படுத்திநிற்கும் ஓர் ஊடகமாகவும் அமைந்துவிடுவது தவிர்க்க முடியாததாகின்றது. இன்னும் அத்துறை தொடர்பான ஆய்வு முயற்சிகளானவை தற்போதைய பூகோளமயமாக்கவியற் கோட்பாட்டிற்குச் (Globalization) சற்றுப் பின்னடைவை முனைப்பாக்கும் காரணிகளை வழங்கும் தளமாகவும் அமையப்போகின்றது. இதனாற்றான் உலகிலுள்ள மிகப் பழமையான அரும்பொருளகங்கள் [பாக்தாத்தில் நிகழ்ந்தமை போன்று] ஏதோவொரு காரண-

காரியத்தொடர்பின் அடிப்படையில் நிர்மூலமாக்கப்பட்டோ, பெறுமதிமிக்கவை திருடப்பட்டோ அல்லது சர்வதேசிய அரும்பொருட் கடத்தல் வாணிப வலையமைப்பிற்குள்ளோ அவை கைமாற்றப்படுவதனைக் கண்டுகொள்ள முடிகிறது.

'Bronze Image' என ஆங்கிலத்தில் வழங்கப்படும் பதத்திற்கு நிகரான பொருளுடைய தமிழ்மொழிப்பதமாகவே வெண்கலப்படிமம் [Alloy of copper and tin] என்ற சொற்பிரயோகம் குறித்து நிற்கின்றது. வெண்கலம் என்றழைக்கப்பட்ட உலோகக் கலவையின் அலகான செம்பு உலோகத்தின் கண்டுபிடிப்பானது மனிதகுல வாழ்வுப் பரிமாணத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்துவிட்டது. இப்பௌதீகவரங்கத்தில் மனுக்குலத்தினை மிருக வாழ்க்கை முறையிலிருந்து (Period of Savegery) மீட்டெடுத்துத் தந்தபெருமை வெண்கலத்திற்கே உண்டென்றால் அது தவறாகாது. மனுக்குலத்தின் முதல் உலோகக் கருவியாக்கல் விருத்திக்கு இலகுவாக ஈடுகொடுக்கக்கூடியதான வகையில் கண்டுபிடிக்கப்பெற்ற செம்புப் பாவனையானது, மிருகவுலகிலிருந்து [லௌகீகவிருப்புக்களிலிருந்து] பகுத்தறிவுலகிற்கு [ஆன்மீக உணர்வொன்றின் தோற்றத்திற்கு] மனித வாழ்வை இட்டுச்சென்றது. அவனது கருவியாக்கல் உணர்விற்கு வளமூட்டிய மூலமாகத் திகழ்ந்த செம்பு உலோகம் மானிட உணர்வுகளின் வெளிப்பாட்டிற்குரிய ஓர் ஊடகமாகவும் திகழ்ந்தது. இற்றையிலிருந்து சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் இச்செம்பு உலோகப் பாவனையானது உலகின் குறிப்பிட்ட நதிப் பள்ளத்தாக்கு நாகரீக-நகர மையங்களிலே அறிவியல், அறவியல் ரீதியான வெளிப்படுத்துகைக்கு ஏற்ற திண்மப்பொருளாக விளங்கியது.

கற்கால உலகிலிருந்து எத்தனையோ மில்லியன் வருடங்களைக் கழித்துவிட்ட மனிதனுக்கு ஒரு பண்பாட்டுப் பாய்சலுக்குரிய ஓர் ஊடகமாகவே செம்பு உலோகக் கண்டு பிடிப்பு நிகழ்தது. அதுவே பின்னர் உலகிலுள்ள பிராந்தியங்களை ஒன்றிணைப்பதற்குரிய, கருவியாக்கல் புரட்சிக்குரிய அடித்தளமாகவும் அமையக் காரணமாகியது தென்னாசியாவில் செம்புக்காலப் பரிவர்தனை இந்துநதி நாகரிக கால மக்களது வாழ்வியற் கோலங்களினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட முறையை அடிப்படையாகக் கொண்டு தென்னிந்திய-இலங்கைப் பிராந்தியங்களில் அத்தகைய வாழ்வுமுறையொன்று கி.மு.1000 அளவில் அப்பிராந்திய மனிதனால் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகக் கொள்ளமுடிகிறது. இக்காலப்பரப்பினையே தென்னிந்திய - இலங்கைப் பெருங்கற்காலயுகம் எனக் குறிப்பிடுகின்றனர். 'இச்செம்புக்காலம்' எனக் குறிப்பிடப்பட்ட பண்பாட்டுக் காலப்பரப்பு கி.பி.4 ஆம் நூற்றாண்டுவரைக்கும் எமது பிரதேசத்தில் நீடித்திருந்தது. அன்றிலிருந்து செம்பு உலோகத்தடன் இணைந்து உருவாக்கப்பட்ட பஞ்சலோக வெண்கலப்பாவனையானது கி.பி.17 ஆம் நூற்றாண்டு வரைக்கும் மதரீதியாக மனிதனது நடவடிக்கைகளில் தென்னாசியாவில் பங்கெடுத்திருந்தமையையும் காண்கின்றோம்.

தென்னிந்தியாவில் தாமிரபரணியாற்றின் முகத்துவாரத்தில் உள்ள ஆதிச்ச நல்லூர் என்ற பெருங்கற்கால யுகத்திற்குரிய வெண்கலத் தாய்த்தெய்வப் பாவையானது கி.மு.8 ஆம் நூற்றாண்டுக்குரியதாக எடுத்துக்காட்டப்பட, இந்து

நதிப்பள்ளத்தாக்கில் கிடைத்த நடனமாதின் வெண்கலப்படிமமானது கி.மு.2700 ஆம் வருடங்கட்குரியது என தொல்லியலாளரால் எடுத்துக்காட்டப்படுவதனைக் காணலாம். எனவே ஆதிச்சநல்லூர் என்ற புராதனம் வாய்ந்த பெருங்கற்கால மக்கட்குடியிருப்பிற்கு நேர் கிழக்கே இலங்கையில் பொம்பரிப்பு [பொன்பரப்பி] என்ற மையத்தில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களும் அதேநூற்றாண்டிலேயே செம்பு உலோகத்தின் பயன்பாட்டை அறிமுகப்படுத்தியிருந்தனர் எனக்கொள்வதும் ஏற்புடையதே. இலங்கையில் வெண்கல தெய்வமாக்கற் படிமக்களை மரபானது கி.பி.7ஆம் நூற்றாண்டுக்குரியதாக இருப்பதனையே அகழ்வாய்வுச் சான்றுகள் எடுத்துக்காட்டி உள்ளன. எவ்வாறிருப்பினும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள 'அக்குறுகொட' என்ற புராதன பண்பாட்டு மையத்திலிருந்து அண்மையில் கிடைத்த தொல்லியற் சான்றுகள் மேற்குறித்த காலவரையறையை மேலும் முன்னோக்கியதாக ஆக்க உதவுகின்றன.

ஈழத்து வெண்கலச் சிற்ப மரபின் புறச்சூழல்: ஒரு புதிய அறிமுகம்

பிரதேசம் ஒன்றினது அல்லது வாழும் ஒரு குழுமத்தின் கலைப்பரிமாண மானது அதன் சார்பியல் நிலையில் வெளியேயிருந்து வரும் செல்வாக்கு உள்ளீர்ப்புக்களாலும் [Centripetal Force] கலைப்பாணிகளாலும் (Styles) வழப்படுத்தப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டாலும்கூட, அப்பிரதேச குழுமத்தின் [Ethinic] அடிப்படை விழுமியங்களைத் தழுவிய வகையிலான கலையாக்கம் ஒன்றினது அடிப்படை இயல்புகள், அவற்றின் தனித்துவம் என்றுமே அக்குழுமத்தின் கலைவடிவமைப்புக்களிலிருந்து முற்றாக மறைந்துவிடமாட்டாது. அவ்வாறான இன-பிரதேச-மத தனித்துவத்தினை வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்படும் அதன் அடிப்படை மூலகங்களுக்கு அப்பிரதேச ஆக்ககாலச் செயற்திட்டங்களே அடிப்படையாக அமையும். இலங்கைத்தீவினை பொறுத்தவரையிலும் அதன் கலை-வடிவமைப்புக்கு ஆக்ககால முன்னேற்றங்களே வடிகாலாக அமைந்திருந்தன.

'இன்றைய காலகட்டத்தில் பெரும்பான்மைச் சிங்களமக்கள் பௌத்த பண்பாட்டையும், தமிழ் மக்களிற் பலர் இந்துப் பண்பாட்டையும் பின்பற்றி வாழ்வதினால் முற்பட்ட காலங்களிலும் அவ்வாறே வாழ்ந்தனர் என நம்பப்படுகிறது. இதனால் இலங்கையின் பண்பாட்டு வளர்ச்சியில் சிங்களவரின் பங்களிப்பு அதிகம் எனவும், தமிழருடைய பங்களிப்பு குறைவு என்றும் கூறப்படுகிறது. ஆனால் இக்கூற்றை சற்று நுணுகி ஆராய்ந்தால் புராதன காலத்தில் இரு இனத்தவரும் இலங்கைப் பண்பாட்டு வளர்ச்சியில் பெருங்காற்றியுள்ளனர் என்ற உண்மையைக் கண்டுகொள்ளலாம். சிற்பக்கலையும் இவ்வாறே இரு இனத்தவரின் கூட்டுமுயற்சியினால் கலைகள் இங்கு பிரதேச தனித்துவத்துடன் வளர்ச்சி பெற்றதெனலாம். இதற்குச் சமகாலத் தென்னிந்தியாவில் நிலவிய சமயங்களும் அவற்றின் கலைமரபுகளும் அடிப்படைகளாக அமைந்தன.' (புஸ்பரத்தினம, 1988, ஓஏ.).

'தென்னாசியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாய் பலவகைப்பட்ட இனங்கள் மத்தியில் வழங்கிவந்த பல வழிபாட்டுமுறைகளும், தத்துவங்களும் காலப்

போக்கில் இணைந்து இன்று இந்துமதம் என்னும் பொதுப்பெயர் பெற்றது..... ஆனால் தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய இடங்களிற் காணப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டில் இந்து மதத்திற்குரிய புராதனச் சான்றுகள் காணப்படுவதினால் தென்னிந்தியச் செல்வாக்கால் இலங்கை யிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் இந்து மதக்கருத்துக்கள் தோன்றின எனக் கூறலாம். நீலகண்ட சாஸ்திரி இலங்கைக்குச் சைவமதத்தின் அறிமுகம் தமிழ்நாட்டின் பின்னணியில் தோன்றியது என்பதில் சந்தேகம் இல்லையெனக் கூறியிருப்பது பொருத்தமானதாகத் தெரிகிறது' என ப.புஸ்பரத்தினம் மேற்கோளுடன் குறிப்பிட்டிருப்பது எமது இந்த ஆய்வில் முக்கிய கருப்பொருளாகின்றாது. ஏனெனில் சைவசமயம் என்பதற்கான பொருளும், தத்துவமும் வரலாற்று மானிடவியல் நோக்கில் பிராமணீயக் கிரியைகள் சார்ந்ததாக இல்லாமல் பயிர் வேளாண்மரபுக் கிரியைகளும், மண்ணிடை மரித்தவரை வைத்து மூடிவிடும் சடங்குகளும் கலந்த நிலையில் உருவான ஒரு வாழ்க்கை முறையே ஆகும். அவ்வாழ்க்கை முறை தமிழகத்திலிருந்து இலங்கைக்கு பரப்பப்பட்டது என்று குறிப்பிடுவதிலும் பார்க்க தென்கிழக்காசியாவிலிருந்தே இலங்கைத் தீவு ஊடாக தமிழகத்தைச் சென்றடைந்திருக்க வேண்டும் என்று கொள்வதற்கான தொல்லியற்சான்றுகள் அதிகளவில் கிடைத்து வருகின்றன. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அக்குறுகொட என்ற மையத்தில் கிடைத்த அரும்பொருட்கள் அக்கருத்தினை மீண்டும் வலியுறுத்தத் தூண்டுகின்றன. [புஸ்பரட்ணம், ப, 2002.]

நீலகண்டசாஸ்திரி குறிப்பிட்டவற்றின் பின்னணியில் ஓரளவிற்குச் சாத்தியமான கூறுகள் கலந்திருப்பினும், அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் அகழ்வாய்வின் பின்னணியில் மாற்றுக்கருத்துக்களையும் முன்வைக்க வேண்டியவர்களாக உள்ளோம். அதாவது தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டு கேந்திரமையமான மஹாராட்டிர மானிலத்தின் தென்பகுதியில் அதாவது கர்நாடகமானிலத்தின் வட பகுதியில் கி.மு.1000ஆம் ஆண்டிலிருந்து அப்பண்பாடு தெற்கு நோக்கி பரவிவந்து, மிழகத்தை கி.மு.800க்குச் சற்று முற்பட்ட காலப் பரப்பிலும், அதற்கு தெற்கே உள்ள இலங்கைத்தீவினை இன்னும் சற்றுப்பிற்பட்ட காலத்திலும் தழுவிக்கொண்டிருந்ததாக தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடு கின்றார்கள். தென்னாசியாவில் நகரங்களினதும் அரசுகளினதும் தோற்றத்தினை ஆராய்ந்த அல்ஜின் (Allchin,F.R.;1995) கூட இதே காலவரையைக் கொள்வதனைக் காண்கின்றோம். இருந்தபோதும் இப்பண்பாட்டுக்கெல்லாம் உயிரோட்டமான ஜீவாதாரமாகத் திகழ்ந்த நெல்லரிசியும், அதன் உற்பத்தி அறுவடையும் தென்னிந்தியப் பரப்பில் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்னர் தென்கிழக்காசியாவில் முதலில் தாய்லாந்திலும், பின்னர் பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் தோற்றுவிக்கப் பட்டிருந்த முறைமையை அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுச் சான்று களினூடாக உறுதிப்படுத்தியுள்ளனர் [Robin Charteris:1986]. இங்கு கி.மு.300ஆம ஆண்டிற்குரிய ஈமக் காடொன்றில் நெல்லரிசியைக் கொண்டிருந்த மட்பாண்டங் களும், அவற்றுடன் இணைந்து காணப்பட்டிருந்த செங்கட்டிகளுடனாக நெல் உமியும் [Paddy Husk] தொல்லியல் அகழ்வாய்வூடாக வெளியுலகிற்குத்

தெரியப்படுத்தப்பட்டன [Robin Charteris,1986.]. எனவே பெருங்கற்கால ஜீவாதாரமாகத் திகழ்ந்த நெற்பயிர்ச் செய்கையின் முதல் உற்பத்திப்பண்பாடு நிலவிய பிராந்தியமாக தென்கிழக்காசியா விளங்கியிருந்த நிலையில் இலங்கைக்கான நெல் உற்பத்திப் பண்பாட்டின் அறிமுகம் தமிழகத்திலிருந்து வந்திருக்கக்கூடிய சாத்தியம் பற்றிய எண்ணக்கருவை இப்பொழுது மறுதலிக்க வேண்டியுள்ளது. அவ்வழியே ஈழத்தின் கலையுருவாக்கம் தொடர்பான விடயங்களிற்கூட தென்கிழக்காசியாவே முதற்செல்வாக்கு செலுத்தியிருந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை. ஒரு புதிய சமயத்தின் சடங்காக (சைவம்?) மோதகக் கணபதி [Ganapati worship with Rice cake] மரபு தென்னிலங்கையூடாக இராசரட்டைப் பரப்பிற்கு செறிந்து வந்திருந்தது என்றால் மலேசியா, யாவா (இந்தோனேசியா நாடுகளிற் சில) தென்னிலங்கையுடன் கொண்டிருந்திருக்கக் கூடிய சமுத்திரவியற் தொடர்புகளை உள்ளீர்த்துக் கொண்டிருந்த ஒரு வரன் முறையை குறிப்பிடுவதாக கொள்ளலாம். [இங்கே தான் தென்னிலங்கையிலுள்ள மகியங்கனை விகாரைக்கு கௌதமபுத்தர் ஆகாயமார்க்கமாக முதலாவது வருகையாக வந்திருந்ததாகக் குறிப்பிடப்பட்ட மர்மம் துலங்குகின்றது]. தென்கிழக்கிலங்கைத் துறைமுகநகரங்கள் இந்தோனேசியா நாடுகளிலிருந்து மிகவும் தொன்மையான இந்துப் பண்பாட்டுத் தொடர்புகளை ஈர்த்து வைத்திருந்த வகையினை அக்குறுகொட போன்ற மையங்களில் நிகழ்த்தப்பெற்ற ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன [Bopearchi - 2003].

நெல்லுற்பத்திப் பண்பாட்டின் இருபக்க நுழைவு

இலங்கைத்தீவினைப் பொறுத்தவரையில் பெருங்கற்காலப் பண்பாட்டுத் தொடர்புகளின் அலைகள் இருபக்க நுழைவாய்களின் ஊடாக உட்சென்று, வெளிவந்திருந்தன. காணபத்திய நாடான இந்தோனேசியப் பெருங்கற்காலப பண்பாட்டுப் பரவல்களினூடாக உள்வாங்கப்பட்ட மோதகக் கணபதி வழிபாட்டு மரபானது தென்னிலங்கையுட்பட இலங்கையின் கிழக்குக் கரையோரமாகச் செல்வாக்குப் பெற்று நிற்க, வட இலங்கையில் மாங்கனிக் கணபதியின் மரபு தென்னிந்திய ஆக்ககால மரபின் செல்வாக்கினூடாக கலைமரபு ஒன்றினை உருவாக்க உதவியதாக இருந்திருக்கவேண்டும். சிங்கள-பௌத்த மரபில் கணபதி வழிபாடு பிரசித்தமானதாக உருவாகியபோது நெற்செய்கை-அறுவடை நடவடிக்கைகளுக்குக் காட்டு யானைகளது அச்சுறுத்தல்-அழிப்பு நடவடிக்கைகள் அதிகரித்திருந்தமையின் காரணமாக கணதெய்யோ வடிவம் யானை வடிவம் கொண்டதாக மாறியிருக்கவேண்டும். அவ்வாறான ஒரு மாற்றத்தின் இன்னொரு வடிவமாகவே மோதகம் என்பதும் விளாங்கனியாக உருவம்பெறக் காரண மாகியது. ஆனால் இலங்கையின் வடபகுதியில் அதன் தொன்மையான காலப் பரப்பிலிருந்தே மாங்கனி வடிவம் மாங்கனியாகவே இருந்து கொண்டிருப்பது பல பண்பாட்டுத் தகவல்களை எமக்கு வழங்குவதாக கொள்ளக்கிடக்கின்றது. அதாவது சைவசமயமே தொடர்ச்சியான இருப்பில் வட இலங்கை பொறுத்து இருந்து கொண்டிருப்பதனை மாங்கனிப் பண்பாடு உறுதிப்படுத்துகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் 22 பார்வதி வெண்கலப் படிமங்களும் 10 சிவனது படிமங்களும், 8 சிவநடராஜரது படிமங்களும் 8 சைவநாயன்மார்களது படிமங்களும், 1960ம் ஆண்டு வரைக்குமுள்ள காலப்பகுதியில் கிடைத்திருந்தன. இவற்றுள் ஒரு காளியின் படிமமும், ஒரு கணபதியின் படிமமும் உள்ளடங்கும். 1960ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் விளைவாக மேலும் பல புதிய இந்து வெண்கல உலோகப் படிமங்கள் கிடைத்திருந்தன. 1970களில் மேற்கொள்ளப்பட்ட கலாசார முக்கோண வலைய அகழ்வு வேலைகளினூடாகவும் குறிப்பிடத்தக்க வெண்கல உலோகப் படிமங்கள் இந்துமதம் தொடர்பான வகையில் கிடைத்திருந்தன. இவற்றுள் அர்த்தநாரீஸ்வரர் படிமம் ஒன்றும், வணிகக் கணங்களின் பெயர் பொறிக்கப்பட்ட வகையிலான பார்வதியின் வெண்கலப் படிமங்களும் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கவையாகும். அண்மைக் காலங்களில் கிடைத்த இந்து மதத்துக்குரிய வெண்கலப்படிமங்கள் பல அரும்பொருளகங்களின் பின்னிருப்பில் (Store) வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கு எடுத்துக்கொள்ளப்படும் ஆய்வில் கி.பி.9ம் நூற்றாண்டிற்கும் கி.பி.12ம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட மத்திய காலத்துக்குரியதாகக் கணிக்கப்பட்ட இந்து வெண்கலப்படிமங்கள் பற்றியே ஆராய முயல்கிறோம். இக்கால கட்டத்துக்குரிய இவ்வெண்கலப்படிமங்கள் கி.பி.13ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஜகலிங்கமாகனது படையெடுப்பு நிகழ்விலிருந்து இராட்சாட்டையில் தலைகீழாகப் புதைக்கப்பட்ட முறையில் கி.பி. 19ம் நூற்றாண்டின் இறுதிவரைக்கும் மண்ணுக்குள்ளிருந்து H.C.P. பெல்லினால் (1907/08) தோண்டி எடுக்கப்படும் வரைக்குமுள்ள 600 வருட காலங்களாக இயற்கையின் பௌதீக-காலநிலையின் தாக்கத்திற்கு உட்பட்டவையாக காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 1950ஆம் ஆண்டில் திருகோணமலையில் தற்செயலாக அகழ்ந்தபோது வெளிவந்த தங்கலோகம் கலந்த இந்துக் கடவுள்களுடைய வெண்கலப் படிமங்களை 1960களில் பொலநறுவையில் கிடைத்தவற்றுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதும் எமது ஆய்வின் வரையரைக்குள் உட்படுத்தப்படுகிறது. ஏறத்தாழ 54 வெண்கலப் படிமங்களை உள்ளடக்கிய இவ்வாய்வேட்டில் தென்னிந்திய இந்துப் படிமங்களுடனான ஒப்பியல் நோக்குத் தவிர்க்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் தேவை ஏற்படும் சந்தர்பங்களில் இலங்கை உதாரணங்களுடன் அவற்றைப்பற்றிச் சுட்டிக்காட்டவும் தயங்கவில்லை.

இங்கு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விடயமானது இந்தப் பண்பாட்டின் விக்கிரஹவியற் கண்ணோட்டத்திலே அல்லாது நுண்கலை நின்ற மரபின் பின்னணியிலே வைத்து ஆராயப்படவில்லை. ஈழத்துக் கலை வரலாற்றெழுத்தியலிற்கு இக்காலப்பரப்பிற்கிடைத்த இக்குறிப்பிட்ட வெண்கலப்படிமமான ஆவணச் சான்றுகள் எவ்வகையான பண்பாட்டு அடித்தளத்தினை வழங்கும் என்பதனைக் கண்டுகொள்வதாகவே இவ்வாய்வுப்பரப்பு மிகவும் குறுகியதாக அமைக்கப் பட்டுள்ளது. அத்தகைய தேடலுக்கு உதவுமுகமாகவே 'இலங்கையில் இந்து வெண்கலச் சிற்பங்கள்-கி.பி.9ஆம் 12ஆம் நூற்றாண்டிற்கிடைப்பட்டவை-அவற்றின

உருவாக்கமும் உருவாக்கியவர்களும் [Origin and authership] பற்றிய ஓர் உசாவல்' என்ற தலைப்பினை நாம் தேர்ந்தெடுத்தோம்.

ஆய்வின் வரையறைக்குட்பட்ட காலப்பரப்பின் பண்பாட்டு நிறுவனங்களினது வளர்ச்சி, மற்றும் கலைப்பாரம்பரியப் பங்களிப்புக்கள் யாவும் இலங்கையுள்ளிட்ட தென்னிந்தியப் பிராந்தியங்களில் வளர்ச்சி பெற்றிருந்த சமுத்திரவியற் பண்பாட்டுப் பின்னணியில் கலந்து, தனித்துவமான கோவிற் பொருளியற் பண்பாடாக உருவாக்கம் பெற்றிருந்த காலமாகும். முகாமையும், நிலமும் ஒன்றிணைக்கப்பட்ட வகையில் சமுத்திரவியற் பலமும், தேட்டமும் உந்துவிசையாக அமைய கோவும், கோவிலும் மக்களின் வாழ்வுமுறையை ஒரு கோட்பாட்டு அடிப்படையினதாக மாற்றியமைந்தன. உழைப்பும் சக்தியும் ஈட்டமும் கோயிற் கணியத்தின் வரம்புகளாக, வியவஸ்தையிலிடப்பட்டு ஊழியம் பெறப்பட்ட காலப்பகுதியாக விளங்கிய இம்மத்தியகால இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் இவ்வார்ப்புத் தொழிநுட்பம் அதியுச்ச வளர்ச்சியைப் பெற்றிருந்தமை அவதானிக்கப்பட வேண்டியதாகும். இவ்வார்ப்புத் தொழிநுட்பத்தின் பின்னணியில் சமயங்களும் தத்துவங்களும் மூர்த்தி-தலம்-தீர்த்தம் எனக் குறிப்பிடப்பட்ட முச்சிறப்புருவங்கள் ஊடாக மக்களது ஆணையை-உழைப்பினை-மேலதிக ஈட்டத்தை ஈர்த்துக் குவித்தன. இதன் விளைவாக கோயில் நகரங்களும், துறைமுகக் கோயில்களும், புனிதத்துறைகளும் சமூகத்தின் இன்றியமையா வாழ்வுத் தளங்களாயின. இப்பின்னணியிலேயே கி.பி.8ஆம் நூற்றாண்டிற்கும் 12ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பண்பாட்டு நிறுவனங்களில் பெறுமதிமிக்க பஞ்சலோகப் படிமங்களைப் பதிட்டம் செய்யும்வழக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. துறைமுக நகரங்களின் ஊடாக உள் ஊர்-வர்த்தக, சமய மையங்கள், மற்றும் மக்கள் ஒன்றுகூடும் மையங்கள் ஒன்றாக ஒரே வழிப்பாதையால் இணைக்கப் பட்டிருந்தமையைக் காணலாம். இவ்வாறான ஓர் இணைப்பின் வலைப் பின்னலிலேயே பாரதநாடு கண்ட மதுராக் கலைமரபு (Mathura school of Art), காந்தாரக் கலைமரபு (Gandhara school of Art), அமராவதிக் கலைமரபு (Amaravati school of Art), மாமல்லபுரக் கலைமரபு, தஞ்சாவூர் கலைமரபு, மதுரைக் கலைமரபு என்றெல்லாம் கலா நிறுவனங்களது இருப்பையும், மக்கள் வாழ்வுடன் அவை ஒன்றித்திருந்த வகையினையும் அன்றை காலகட்ட கலைச்செல்வங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. இதே போன்றதொரு பின்னணியிலேயே ஈழத்து கலை வரலாற்றுப் பாரம்பரியமும் தனித்துவமான கலைமையங்களை (School of Art) ஏதோவொரு வகையான வாணிப-துறைமுக-உள் ஊர் வர்த்தக மையங்களை ஒன்றிணைத்திருந்த வகையில் உருவாக்கி, வளர்த்தெடுத்திருந் திருக்க வேண்டும். இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் கோணேஸ்வரமும், கேதீஸ்வரமும், நகுலேஸ்வரமும், தொண்டேஸ்வரமும், முனீஸ்வரமும் இவ்வழிப்பாதையால் இணைப்பெற்ற ஐந்து பிரதான கலாமையங்களா என்பது இங்கு ஆராயப்பட வேண்டியதாகிறது. சமுத்திரவியற் பண்பாட்டின் நிலைக்களங்களாகப் பங்காற்றி வந்திருந்த இவ்வைந்து கலா மையங்களிலிருந்து காலத்திற்குக் காலம் மீட்டெடுக்கப்பட்ட வெண்கலப்படிமங்கள் மிகவும் தனித்துவமாக, தென்னிந்திய

மரபுகளிலிருந்து விலகிய வகையிலான தால, பங்க, ‘ஸ்தங்களுடன் மிளிர் வதனைக் காண்கின்றோம்.

‘இலங்கையில் இந்துமதச் சூழல்ப்பரப்பின் பின்னணியில் தோற்றம் பெற்று, வளர்ச்சியடைந்த நுண்கலை வரலாறு இன்னும் பொருத்தமான அணுகுமுறையில் எழுதப்பட்டிருப்பது எமது துரதிஷ்டமே! H.C.P. பெல் 1908ஆம் ஆண்டில் வெண்கலப் படிமங்களை அநுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலுள்ள காடுகளுக்குள்ளிருந்து அகழ்ந்தெடுத்த நிகழ்வுகள் தொடங்கி, இற்றைவரைக்கும் 60க்கும் மேற்பட்ட எண்ணிக்கையான வெண்கலப்படிமங்கள் இந்து மதம் தொடர்பானவையாகக் கிடைத்திருந்தும் அத்துறை தொடர்பான ஆய்வுகளில் இருந்து ஒரு முழுமையான, ஒன்றுதிரட்டப்பட்ட ஈழத்து இந்துப்படிமக்கலை வரலாறு உருவாக்கப்படாதிருப்பது என்பது எம்மைப்பற்றி நாமே சிந்திக்காமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதையே காட்டுகின்றது. ஆனால் காலத்திற்குக் காலம் இங்கொன்றும் அங்கொன்றுமாகவும் கிடைத்து வருகின்ற ஈந்து வெண்கலப் படிமங்கள், சின்னங்கள் தொடர்பாக அவ்வப்போது விளக்கக் கட்டுரைகளை எழுதியதோடு முடித்துவிடுகின்றனர். ஆகையினால் இம்மூலங்கள் யாவற்றையும் ஒன்றாக உள்ளடக்கக்கூடிய வகையில் ஆய்வுப்புலம் தழுவிய முயற்சிக்கு அவற்றைப் பயன்படுத்தமுடியாத ஒரு சூழ்நிலையே தொடர்ந்தும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

தமிழகக் கலைவரலாற்றை எழுதியோர் அதன் ஒருபாகமாக ஈழத்தின் இந்துக் கலைவரலாற்றைக் கருதாத ஒரு மரபின் பின்னணியில், இந்திய-தென்னிந்திய வரலாற்று எழுத்தியலில் மாத்திரமே ஈழத்து கலைமரபுகள் தொடர்பாக விசேட குறிப்புகளை விட்டுச்செல்வதனை காணக்கூடியதாகவுள்ளது. ஆனால் ஈழத்து கலை வரலாற்றாசிரியர்களின் அணுகுமுறையில் இலங்கையின் கலைவரலாற்று வளர்ச்சியை 1960ஆம் ஆண்டுவரைக்கும் தமிழகத்துடனோ அல்லது தென்னிந்தியா வுடனோ இணைத்துப் பார்பதற்குப்பதிலாக, பெருமளவிற்கு வடஇந்தியாவுடனேயே ஒப்பிடுகின்ற போக்கு காணப்பட்டிருந்தது. இதனாலேதான் ஆங்காங்கு உதிரிகளாக எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளிலிருந்து, ஆய்வரங்கு களில் வாசிக்கப்பட்டிருந்த கட்டுரைத் தொகுதிகளில் இருந்துமே இலங்கையின் படிமக்கலைமரபில் இந்துமதம் கொண்டிருந்திருக்கக் கூடிய பங்கினை அளவீடு செய்யமுடிந்தது. H.C.P. பெல், கலாயோகி ஆனந்தகுமாரசாமி, S. பரணவிதான, P. அருணாசலம், கிருஸ்ணஐயர் போன்றோர் ஈழத்தில் அகழ்ந்தெடுத்து, வெளிப்படுத்தப்பட்ட இந்து வெண்கலப் படிமங்கள் யாவும் தென்னிந்தியாவிலிருந்து காலத்திற்குக்காலம் இங்கு கொண்டுவரப்பட்டு, ஆராதிக்கப்பட்டவையே என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால் இன்னொருவகையான கலாவிமர்சகர்களுள் H.சிம்மர், A.E.கொடகும்புர, S. பாலேந்திரா, C. சிவராமமூர்த்தி, கா.இந்திரபாலா, சிறிமல் லக்துசிங்க போன்றோர் ஈழத்தில் கண்டெடுக்கப்பட்ட இந்து வெண்கலப்படிமங்களுள் பெரும்பாலானவை சுதேசியக் கலை மையங்களிலிருந்தே உருவாக்கம் பெற்றிருந்தன என

விவாதித்துள்ளனர். ப.புஸ்பரத்தினம் தனது அண்மைய ஆய்வொன்றின் மூலம் மேலும் இக்கருத்தினை மிகவும் இறுக்கமான முறையில் வலியுறுத்துவதனையும் காணமுடிகிறது. (புஸ்பரத்தினம்,ப. 2002,75.)

வீதியுலாத் திருவுருவங்கள் [Moving Images]

இலங்கையில் கண்டுபிடிக்கப்பெற்ற புராதன பௌத்த வெண்கலப்படிமங்கள் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த எந்தவொரு கலாவிமர்சகரும் அப்படிமங்கள் வடஇந்தியாவிலிருந்தோ அல்லது தென்னிந்தியாவிலிருந்தோ இலங்கைக்கு எடுத்துவரப்பட்டது என்று குறிப்பிடுவதற்குத் துணியாது கலைப்பாணியை மட்டுமே அங்கிருந்து ஏற்றுக்கொண்டு வார்ப்பு முறையை ஈழத்து கலைஞர்களே செய்து முடித்தனர் எனக் குறிப்பிடுகின்றனர். ஆனால் ஈழத்தில் அகழ்ந்து கண்டுபிடிக்கப் பெற்ற இந்து வெண்கலப் படிமங்கள் மட்டும் அண்மைய நாடான தென்னிந்திய தமிழகப் பரப்பிலிருந்து எடுத்துவரப்பட்டவை, இந்தியச்சிற்பிகள் ஸ்தபதிகள் இலங்கையில் தங்கியிருந்து உருவாக்கியவை எனக் குறிப்பிடுவதற்கான அடிப்படைகள் யாவை? பௌத்த வெண்கலப்படிமங்களைப் போன்றோ அல்லது பெரும்பாலான தென்னிந்திய வெண்கலப்படிமங்களைப் போன்றோ இல்லாது இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்து வெண்கலப் படிமங்கள் பீடத்துடன் கூடிய வீதியுலா திருவுருவங்களாகவே வார்க்கப்பட்டிருந்தன என்பதனை கூர்ந்து நோக்கும் ஒருவர் அதை தனித்துவமான வகையில் பிராந்திய வோறுபாடு கொண்டிருந்த இத்தீவிலேயே உருவாக்கப்பட்டவை எனக்கண்டு கொள்வர். பீடத்தின் இரு மருங்கிலும் **காவுதடிக்கு** ஏற்ற அளவுடைய/விட்டத்தினுடைய, துவாரங்களைக் கொண்டுள்ளனவாகவும், வளையங்களையும் (Hoops) கொழுக்கி களையும் (Hooks) மேலதிகமாக பீடத்தின் இருமருங்கிலும் வைத்திருப்பனவாகவும் வடிவமைக்கப்பட்ட வெண்கலப் படிமங்கள் இலங்கைக்கேயுரிய தனித்துவ வார்களாகக் காணப்படுகின்றன. தமிழகத்து வெண்கலப் படிமங்களை எடுத்து நோக்கினால் அவற்றுள் 10 சதவீதமானவையே வீதியுலாவிற்குரிய அமைப்புடன் வார்க்கப்பட்டவையாக உள்ளன. இலங்கையைப் பொறுத்த வரையில் கண்டு பிடிக்கப்பெற்ற வெண்கலப்படிமங்கள் யாவுமே வீதியுலாவிற்குரிய வளையங்கள், கொழுக்கிகளுடன் காணப்படுவது தனித்துவமான ஓரம்சமாகும்.

ஈழத்து சில்பசாஸ்திர மரபு

இலங்கையில் கிடைத்த உற்சவ மூர்த்திகள் யாவுமே உலோகப் படிம விதிமுறைகளைத் தழுவிய வகையில் செய்யப்பட்டவையே. அடிப்படையில் இந்துப்படிமக்கலை பற்றிய உணர்வுபூர்வமான வடிவமைப்பு இருநிலைகளில் வெளிப்படுத்தப்பட்டாலும் பொதுமையான சில்ப சாஸ்திர மரபொன்றைத் தழுவியே அச்செயன்முறை பின்னற்றப்பட்டிருந்தது என்பதில் ஐயமில்லை. அவ்வாறான தனித்துவமான ஓர் ஒழுங்கு விதியினைக் கோடிட்டுக் காட்டும் ஆதாரமாக இலங்கையில் கிடைத்திருப்பது தனித்தும் பொருந்திய ரூப பாலிய (Rupa baliya) என்றழைக்கப்பட்ட விக்கிரஹ அமைப்பியல் சார்ந்த இலக்கண நூலாகும்.

இவ்விலக்கண நூல் இலங்கையிலேயே கண்டெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது [Krishnarajh,S. 1983, PP.]. கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, கங்கூலி ஆகியோர் இலங்கையில் கிடைத்திருந்த ரூப பாலிய என்ற சிற்பநூல் தொடர்பான விளக்கங்களைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. கங்கூலி இலங்கையில் கிடைத்த சில்ப சாஸ்திர இலக்கண நூலின் தன்மை, அவற்றில் சொல்லப்பட்ட விபரங்கள், விபரிக்கப்பட்டுள்ளன செய்கை முறைகள் எனப் பல சிறப்பு அம்சங்கள் தொடர்பாகவும் விபரித்துள்ளனர் (Gangoly,O.C,PP.74 & 75,1915). மேலும் அவர் குறிப்பிடும்போது இலங்கையில் தென்னிந்திய சிற்ப நூல்கள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும், பதிலாக இங்கு பல்வேறு வகைப்பட்ட மகாயான பௌத்தக் கோட்பாடுகளைச் சித்தரிக்கின்ற சுவடிகளும், கட்டிட-சிற்பக் கலை மற்றும் வார்ப்புக் கலை தொடர்பான நூல்களுமே இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டிருப்பது இங்கு எமது கவனத்திற்குரியதாகின்றது. ஏனெனில் ஈழத்தில் வாழ்ந்த இந்துக்களுக்கென தனித்துவமான கலை வடிவமைப்பு முறை ஒன்று தொன்று தொட்டு வளர்ச்சி பெற்றிருந்த வகையை ஆக்ககால இலங்கையின் [Formative period of Sri lankan Art History] கலை உருவாக்கங்கள் வெளிப்படுத்தி நிற்பதனாலாகும். (புஸ்பரத்தினம், ப.2002.,PP.87-88) கி.பி.1ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.3ஆம் 4ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் ஈழத்தில் பௌத்த-இந்து மதங்களை ஒரே நேர்கோட்டில் இணைத்தவகையில் உருவாக்கப்பட்ட அவலோகதீஸ்வரர் வடிவங்கள் கந்தரோடை உட்பட (வெண்கல சுண்ணக்கல்லிலான நாக அவலோகிதீஸ்வரர் சிற்பத்தின் தலை யாழ்ப்பாணம் அரும் பொருளகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.) இலங்கையில் பல்வேறு மையங்களிலிருந்து கிடைத்திருப்பது பௌத்த-இந்து மதங்களின் இணைவின் பின்னணியில் உருவான கலை மையங்கள் பற்றிய தன்மையை எமக்கு எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில் மகாயான பௌத்த சமயத்தின் கூடுதலான செல்வாக்கிற்குட்பட்ட காரணத்தினாலேயே இந்து மதம் என்ற சட்டத்திற்குள் சைவம், சாஸ்தம், வைணவம் என்ற முப்பெரும் பிரிவுகள் (Sects) தென்னிந்தியா-தமிழகத்தைப் போன்றதொரு தனித்துவமான உட்பிரிவு களாக-பகைமை முரண்பாடுடன் - மக்கள் மத்தியில் வாழ்ந்த முறையை அமைத்துக் கொடுக்கவில்லை. ஆதலாற்றான் ஈழத்து பௌத்த இந்து ஆலயங்களில் சிவன், விஷ்ணு, சக்தி, கண்ணகி என நான்கு அம்சங்களும் ஒரே கூரையின் கீழ் வணங்கப்பட்டு வருகின்ற முறைமை வளர்ச்சி பெற்றுள்ளது. இதனை இந்திய மரபில் கண்டுகொள்ள முடியாது. இதுவே ஈழத்தில் தனித்துவமான சிற்பக்கலை உட்பட, படிமக்கலைமரபு ஒன்று வெண்கல வார்ப்பு முறையில் உருவாக்கக் காரணமாகியது. மகாயான பௌத்த மரபின் செல்வாக்கு ஈழத்து இந்து வெண்கலப் படிமங்களிடையே அதிகளவில் விரவிக் காணப்படுவதற்கான தளமும் இதுவாகத்தான் இருக்கவேண்டும்.

உலோகவார்ப்பு முறை

பொதுவாக சிற்ப சாஸ்திரங்கள் இரண்டு வகையான உலோக வார்ப்பு முறையைச் சிதிதரிக்கின்றன. இலங்கையிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூப பாலிய என்ற சில்ப இலக்கண நூலும் இவ்விரு வகையான உலோகவார்வை முறையினை எடுத்து விபரிப்பதனைக் காணலாம். வெண்கலப்படிமங்களின் உருவாக்கத்தில் Lost-wax-system எனக் குறிப்பிடப்படும் பூரண உள்நிரம்பல் முறையிலான ஒரு செயன்முறையே பெருமளவிற்குப் பின்பற்றப்பட்டு வந்திருந்த முறையினைக் காணமுடிகிறது. பூரண உள்நிரம்பல் முறையில் அமைந்த வெண்கலப் படிமங் களை உருவாக்கும்போது முதலில் ஸ்தபதி மெழுகினால் உருவாக்கப்பட்ட குறிப்பிட்ட படிமத்தின் தால, பங்க, ஹஸ்த ஒழுங்குகளை சில்ப சாஸ்திர விதிகளுக்கு ஏற்ற வகையில் சீர்செய்து விடுவார். அதன் பின்னரே அரைத்து பிசையப்பட்ட புற்றுமண் கொண்ட களிமண்ணினால் அம்மெழுகுப்படிமத்தினை முழுவதுமாக அப்பி, மூடிக்கடினமாகும் வரைக்கும் வெயிலில் உலரவைத்து விடுவார். இரு துவாரங்கள் மிகச்சிறிய அளவில் அவ்வுருவின் உச்சிலும் பாதப்பரப்பிலும் ஏற்படுத்தி, வெண்கலப்படிமத்தின் உருகிய உலோகக் குழம்பு திரவ நிலையில் உச்சியிலுள்ள துவாரத்தின் வழியாக வார்க்கப்படும்போது, உள்ளேயிருக்கும் மெழுகினாலான படிமம் விரைவாக உருகி, பாதப்பரபிலுள்ள துவாரத்தின் வழியாக திரவமாக வெளியேறி விடுவதற்கு ஏற்றவகையில் இப்படிம உருவாக்கல் முறை அமைக்கப்பட்டிருந்தது. தென்னிந்தியா, இலங்கை, மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் உள்ளிட்ட பிரதேசங்களின் வெண்கலப்படிம வடிவமைப்பில் பெருமளவிற்கு Lost-wax-system என அழைக்கப்படுகின்ற பூரண உள்நிரம்பல் முறையே கையாளப்பட்ட வகையினை மத்தியகாலப் பகுதியில் காணமுடிந்தது.

வெண்கலப்படிம உருவாக்களில் கடைப்பிடிக்கப்பட்ட இரண்டாவது முறை கோது வடிவத்தில் (Hollow system) தெய்வீக வடிவங்களை வடிவமைப்பதாகும். இதனை தகட்டு உருவம் என்றும் குறிப்பிடுவர். இம்முறையின் அடிப்படையில் முதலில் பதப்படுத்தப்பட்ட களிமண்ணினால் சில்ப வரைவிலக்கணங்களினது மரபுக்கேற்ப கடவுளர் உருவம் வடிவமைக்கப்படும். அதன் பின்னர் குறிப்பிட்ட தடிப்பத்தில் மெழுகினால் அவ்வுருவத்தின் வெளிப்பரப்பு மூடப்படும். மூடப்பட்ட மெழுகு வரைபு உருவத்தின் மீது இன்னோர் படிமம் கவிந்தது போல் காட்சி யளிக்கும். அதன் பின்னர் மீண்டும் களிமண் கொண்டு அம்மெழுகுப்படிமத்தை மூடிவிட்டு, இறுக்கி வன்மைப்படுத்தி விடுவார்கள். இதன் பின்னரே உருக்கிய வெண்கலக் குழம்பினை அல்லது பஞ்சலோகக் குழம்பினை உச்சிப்பகுதியில் உள்ள சிறிய துவாரத்தின் ஊடாக மெழுகுப்படிவம் காணப்படும் படைக்குள் செலுத்துவார்கள். இம்முறையினடியாக உருவாக்கப்படும் படிமம் இருசம பாகங்களாக நெடுக்கு வாட்டாக பிளந்து எடுக்கக்கூடிய முறையில் அங்கு மெழுகுப்படிமம் உருவாக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. வெளியேறிய மெழுகின் மெல்லிய தகட்டுப்பரப்பினை உலோகக்குழம்பு சென்று நிரப்பிவிடும். பின்னர் காய்ந்து இறுகிய பின், வெளியே பூசப்பட்டிருந்த களிமண் பரப்பினை

நீக்கும்போது உள்ளேயிருக்கும் வெண்கலத் தகட்டிலான படிமம் இருசம பாதி உருவங்களாக வெளியே எடுக்கக்கூடியதாக அமையும். பின்னர் அவ்விரு சமபாதிப் படிமங்களையும் பொருத்தி முழுமையான படிமமாக்கி விடுவார்கள். பாரமற்ற நிலையில், அதிக பொருட்செலவின்றி, இலகுவாக எடுத்துச்செல்லக்கூடிய வகையில் இம்முறை அமைவது குறிப்பிடத்தக்கது. இருந்தும் சில்ப சாஸ்திரங் களில் இம்முறையைப் பின்பற்றி கடவுளர் படிமங்களை உருவாக்குகின்ற முறைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது வகையான உட்கிடை கோதான அமைய உருவத்தின் புறவெளி மட்டும் தகட்டு/உலோகத்தகட்டு முறையில் உருவாக்கப்படும் செயற்பாட்டினை சில்ப சாஸ்திரங்கள் அனுமதித்து ஊக்குவிப்பதில்லை. ஸ்தபதிகளும், ஆச்சாரிமார் களும் இச்செயற்பாட்டடிப்படையிலான தெய்வீக உருவ அமைப்பினை எந்தவிதத் திலும் ஏற்றுக்கொள்வதோ அல்லது அனுமதிப்பதோ கிடையாது. இம்முறையை நாடுபவர்களுக்கு நிகழக்கூடிய/நேரிடக்கூடிய துன்பகரமான நிமிர்த்தங்கள் தொடர்பாக பல்வேறு விபரங்களைச் சில்ப நூல்கள் எடுத்துக்கூறுகின்றன. ரூபபாலிய (Rupabaliya) என்ற இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட சில்ப நூலிலும் அவ்வாரான துன்பகரமான வாழ்வு பற்றியும், துரதிஸ்டமான நிலைகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளவற்றைக் காண்கின்றோம். இருந்தபோதும் H.C.P.பெல்லினால் பொலநறுவையிலிருந்தும், அனுராதபுரத்திலிருந்தும் அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்ட பௌத்த வெண்கலப் படிமங்களுள் ஒரு சில அவற்றின் உட்கிடை கோதாக அமைந்த வகையைச் சேர்ந்தனவாக உள்ளமையும் குறிப்பிடத் தக்கது. இந்து வெண்கலப் படிமங்களைப் பொறுத்தவரையில் அவ்வாறான உதாரணங்கள் இன்னும் எமக்குக் கிடைக்கவில்லை. இந்த இரண்டாவது முறையின் அடிப்படையில் (Hollow system) வெண்கலப் படிமங்களை விசேடமாக பஞ்சலோகப் படிமங்களை [தங்கம், வெள்ளி, பித்தளை, தகரம், செம்பு] வடிவமைப்பதால் இறைவனின் இருப்பிற்கு உரிய படிமத்திற்கு மிகக்குறுகிய ஆயுட்காலமாக அமையுமாகையால் உட்கிடைக் கோதாக அமைந்த கடவுளர் படிமங்களைக் கோயில்களில் ஏற்றுக்கொள்ளும் மரபு காணப்பட்டிருக்கவில்லை. நித்திய அபிடேக ஆராதனைகளின் போது (More Moisture) உட்கிடை கோதான படிமத்தில் விரைவில் துவாரங்கள் உருவாகி, ஊறு ஏற்பட்ட தெய்வவடிவமாக அப்படிமம் மாறிவிடும். மதக்கோட்பாடுகளின்படி ஊறுபட்டவை உலகிற்குக் கேடு விளைவிப்பதால், அத்தகைய தெய்வீகப் படிமமங்களைப் புனித நீர் நிலைகளுக்குள்ளோ, அல்லது மனிதரின் காலடி பதியாத இடங்களிலோ கொண்டு சென்று புதைத்துவிட வேண்டும் என்பது விதி. இக்காரணங்களினாலும், தென்-தென்கிழக்காசியப் பிரதேசம் பருவப்பெயர்ச்சிக் காற்றின் அடிப்படையிலான மழைவீழ்ச்சியை ஒழுங்காகப் பெற்றும் வந்ததினால் காலநிலை-மழைவீழ்ச்சியின் தாக்கம் இவ்வாறான உட்கிடை கோதான படிமங்களின் இருப்பினை பாரதூரமாகப் பாதிக்கும் என்ற ஒரு காரணத்தாலும், மிகவும் இலகுவாக அப்படிமங்கள் மறைத்து எடுத்துச் செல்லப்படக்கூடியவை என்ற காரணத்தினாலும் உட்கிடை கோதான படிமக்கலை வடிவமைப்பினை ஸ்தபதிகள் நாடுவதில்லை.

பருவப்பெயர்ச்சிக் காலநிலையும் இந்துக் கலையின் வடிவமைப்பும்

Sinhalese Monastric Architecture என்ற நூலில் சேனக்க பண்டாரநாயக்க என்பவர் இலங்கையின் கலைவரலாற்றுத் தொடக்கம், கலைமரபுகளின் தன்மை, கலைச் செல்வாக்கும் வடிவமைப்பும் என்பனபற்றி விசேடமாக ஆராயும்போதே **பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலநிலை** வலையத்தைச் சேர்ந்த நாடுகளின் கலைமரபுகள் பற்றி ஒரு புதிய கண்ணோட்டத்தில் நோக்கியிருப்பது இங்கு எமது கவனத்தை ஈர்த்துள்ளது. தென்-தென்கிழக்காசிய நாடுகளின் கலைச் செல்வாக்கானது பருவக்காற்று முறையில் மழைவீழ்ச்சியைப்பெறும் பொதுமை யான காலநிலையின் தன்மைக்கு ஈடுகொடுக்கு முகமாகவே வடிவமைப்புப் பெற்றுக்கொண்டது என்பதைத் தெளிவுபடுத்திய சேனக்க பண்டாரநாயக்க **இலங்கைத் தீவுமானது அதன் பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சி, அமைவிடம், காலநிலை இவற்றுக்கேற்ப ஒரு தனித்துவமான அடிப்படையைக் கொண்ட கலை மரபுகளையும், வடிவமைப்பினையும் உருவாக்கி வருவதோடு, பௌத்தக் கலைப் பாரம்பரியத்தில் அதன் தனித்துவத்தினையும் வளர்த் தெடுக்கத் தவறவில்லை என்று** குறிப்பிடுகின்றனர். பௌத்தக் கலைமரபு பொறுத்து அவ்வாறு அவரால் சான்றுகள் காட்டப்பட்டு, விபரிக்கப்பட்ட கலையின் வடிவமைப்பில் சந்திரவட்டக்கற்கலை, நாகதுவார பாலகர்சிற்பங்கள், வாஹல்கடங்கள் என்பன முக்கிய இடத்தினை வகிக்கின்றன. அவருடைய வாதத்தினையும், அவரால் எடுத்துக்காட்டப்பட்ட கலைமூலங்களின் வடிவமைப்புத் தொடர்பான விளக்கங்களையும் இலங்கைக் கலைவரலாற்றாசிரியர்கள் பௌத்த மதத்தொடர்பாக ஏற்றிருக்கும் அதேவேளையில், **ஈழத்து இந்துமதம் தொடர்பான தனித்துவமான கலை மூலங்களையும், வடிவமைப்பினையும் எவருமே எடுத்துக்காட்டாதிருப்பது கவலையளிக்கக்கூடிய ஒரு விடயமாகும்.** இதற்கான ஓர் அடிப்படைக் காரணமாக அமைவது இதுவரையில் இலங்கைத் தீவின் கலைவரலாறு தொடர்பாக எழுதப்பட்ட வரலாற்று எழுத்தியலே ஆகும். ஆனால் இலங்கையின் மீதான கலைவரலாற்றுப் பார்வையில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடக்கி வைத்ததாக-ஒரு புதிய திருப்புமுனையாக ப.புஸ்பரத்தினால் வெளியிடப்பட்ட **'தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டைக்கால மதமும் கலையும்'** என்ற ஆய்வு நூல் அமைந்துள்ளது. சேனக்க பண்டாரநாயக்கவினால் தேடப்பட்ட அத்தனித்துவமான கலை மரபொன்றின் வடிவமைப்பினை **இந்து மதம** தொடர்பான கலை நோக்கில் புஸ்பரட்ணம் எடுத்துக்காட்டியிருப்பது எமது வரவேற்புக்குரியதாகின்றது.

இலங்கையின் கலைவரலாற்றினைக் கற்கின்ற மாணவர்களும் சரி, ஆசிரியர்களும் சரி இற்றைவரைக்கும் அதனை ஓரினத்தினதும், ஒரு மதத்தினதும் வெளிப்பாடாகவே நோக்கிவருவதனைக் காண்கின்றோம். இதற்கான காரணம் இற்றைவரைக்கும் இலங்கையின் கலைவரலாறு பற்றிய வரைபுகளானவை இன்னும் இத்தீவிற்குரிய பொதுமையான அடிப்படையில், குறிப்பாக பல மொழி, பல்லினம் என்ற பன்மைச் சமூகத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு,

பிராந்தியங்களின் கலையுருவாக்கத்தினை மையப்படுத்தி ஒரு பொதுமையான நோக்கிலமைந்த கலைவரலாறு அமைக்கப்படாமையே ஆகும். இதுவரை காலமும் இலங்கையிலுள்ள கலை வரலாற்றாசிரியர்களால் எழுதி வெளியிடப்பட்ட நூல்களானவை மகாவம்ச நோக்கினின்று கைக்கொள்ளப்பட்டு வந்திருக்கக்கூடிய இன-மத-நோக்கினடிப்படையாகவே எழுதப்பட்டவையாக உள்ளன. உதாரணமாகக் குறிப்பிடுவதாயின் அனுராதபுரக்காலக் கலைகள் என்று செ.பரணவிதானாவினால் எழுதப்பட்ட கலைவரலாறானது ஓரின-ஒரு மதச் சார்பானதாகவே எழுதப் பட்டுள்ளமையை இங்கு சுட்டிக்காட்டலாம். இக்காலகட்டத்து கலைவரலாற்றுப் பகுப்பில் **திராவிடக் கலைப்பாணி** [Dravidian styles], இந்துக்கலாசாரத்தின் பின்னணியில் அனுராதபுரத்தின் வளர்ச்சி இந்துக்களின் மரபுகள் ஆகியன பற்றியோ பௌத்தகலைமரபிற்கு ஈழத்து இந்துக்களின் பங்களிப்புகள் பற்றியோ செ.பரணவிதானாவைத் தழுவி கலை வரலாற்றை எழுதியவர்களால் விபரிக்க முடியாமற் போனமைக்கான காரணங்கள் யாவை? யதார்த்தத்தின் பின்னணியில் ஈழத்தின் இந்துமத தத்துவ விரிவாக்கம் நிகழ்ந்த ஒரு மையமாக அனுராதபுரம் என்ற பழம்பெரும் நகர் வகித்துக் கொண்டிருந்த வரலாற்றுச் சம்பவங்களை ஈழத்து இந்துமத வரலாற்றாசிரியர்கள் எவருமே கருத்தில் எடுத்திருக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட மதத்தின் தத்துவார்த்த அடிப்படைகளை மக்கள் தமது வாழ்க்கை முறையாக மாற்றும்போது ஏற்கனவே பின்பற்றப்பட்டிருந்தவை கைவிடப்பட்டும், அழிக்கப்பட்டும் popular cult என்ற பிரதான மதவாழ்வின் எழுச்சிக்குள் ஏனைய சிறு தத்துவ தெய்வங்களின் வழிபாடாற்றுகை மறைந்துவிடுகின்ற இயல்பைக் காணமுடியும். சமண ஆலயங்களும், இந்து ஆலயங்களும், பௌத்த ஆலயங்களும் ஒரு நானூறு வருடகால எல்லைக்குள் அனுராதபுரத்தில் மாறிமாறி இடித்தழிக்கப்பட்ட வரலாறு என்பது இந்துமதத்தின் பின்னணியில் அந்நகர் பெற்றிருந்த செல்வாக்கினையே எடுத்துக்காட்டுவதாக உள்ளது. ஆனைக்கோட்டை அக்கிராயன், அபயகிரி, அக்குருகொட என்ற தொடர்ச்சியான கலா மையங்களி னூடாக எமக்குக் கிடைத்த தொல்லியற்படிமங்களை மீளாய்வு செய்யும் ஒருவர் இந்துக் கலைப்பாரம்பரியம் ஒன்று எவ்வாறு ஈழத்தின் அடித்தளத்தில் பண்பாட்டுத் தொட்டில் கட்டி அமைத்திருந்தது என்பதனை உணர்வர். அப்பண்பாட்டுத் தொட்டிலின் ஒரு முகிழ்ப்பையே அனுராதபுர நகரில் தொல்லியலாளர் இப்பொழுது தரிசனம் செய்கின்றனர். **அபயகிரி தந்த அர்த்தநாரீஸ்வரர் வெண்கலப்படிமம் அதனையே உறுதிப்படுத்தியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.**

இலங்கையின் வடபகுதியிலும், யாழ்ப்பாணக்குடாநாட்டிலும் இம்மக்கள் பின்பற்றி வந்திருந்த இறந்தோருக்கான ஈமக்கிரியை மற்றும் ஈமப்புதையல் முறைகளில் வெண்கலமும், வெள்ளிரும்பும் நன்கு பயன்படுத்தப்பட்டிருந்தன. ஆனைக்கோட்டையில் பெருங்கற்கால ஈமப்படையல்களின் அகழ்வின்போது கிடைத்த வெள்ளிரும்பினாலான அகல்விளக்கு திட்டவட்டமான ஒரு கலைப் படைப்பாக உள்ளது பூநகரியில் இருந்துகண்டு பிடிக்கப்பெற்ற வெண்கலத்தாலான வேலும் மயிலும் பெருங்கற்கால வடஇலங்கையின் கலைவரலாற்றிற் குக்கிடைத்த சிறந்த சான்றாகும். கந்தரோடையிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட இரும்பினாலான

நீண்ட வேல், பொன்முலாம் பூசப் பெற்ற சுடுமண்ணாலான மயிற்தலை, வெண்கலத் தாலான இரு சிறிய கணேசர் படிமங்கள் ஆகியன பெருங்கற்காலக் கலைப் படைப்புக்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தொடங்கப்பெற்ற இலங்கையின் கலைவரலாறானது கி.பி.13ஆம் நூற்றாண்டு வரைக்கும் நீர்ப்பாசனவியல் வளர்ச்சியின் செழிப்பில் முகிழ்த்த பொருளாதார ஈட்டத்தின் அரவணைப்பில் ஈழத்து இந்து மக்களின் ஆத்மீக வெளிப்பாடாக இந்து உலோகப் படிமக்கலை பரிணாமமடைந்தது. **உண்மையிலே இங்கு கிடைத்த பௌத்தப் படிமங்களினுடைய எண்ணிக்கையை விட இந்து மதத்தோடு தொடர்பான படிமங்களின் எண்ணிக்கையே அதிகமானதாகும்** என்பதனை நாம் மனங் கொள்ளவேண்டும். **அவையே இன்று ஈழத்து இந்துமத வரலாற்றிற்குக் கிடைக்கும் ஆத்மீக பலமாகவும் இந்துக்களின் ஆதார சுருதிகளாகவும் அமைகின்றனவென்றால் அது மிகையில்லை.**

இந்து வெண்கலப்படிமங்கள் - வகையீடு

இதுவரையில் இலங்கையிற் கிடைத்த இந்து வெண்கலப் படிமங்களை அடிப்படையாகக் கொண்டு ஓர் அட்டவணையைத் தயாரிக்க முடிந்ததன் அடிப் படையில் இங்கு 60 வெண்கலப் படிமங்களை வகையீடு செய்ய முடிந்துள்ளது. இன்னும் சில குறிப்பிட்ட எண்ணிக்கையானவை கலாசார முக்கோண வலய அலுவலகத்திலேயே இருப்பில் இருந்து கொண்டுள்ளமையினால் ஆய்வடிப் படையில் இன்னும் அவற்றை அணுக முடியாதுள்ளது. S.பத்மநாதன் **இலங்கையில் இந்துக்கலாச்சாரம்** என்ற நூலில் இவ்வாறு கிடைத்துள்ள 06 பார்வதி வெண்கலச் சிற்பங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எனவே இங்கு ஆய்வு நோக்கில் 08 நடராஜர் படிமங்களும் 09 சிவனது படிமங்களும் 14 பார்வதி வெண்கலப் படிமங்களும் வைஷ்ணவப் படிமங்களாக 06 படிமங்களும், அர்த்தனாரீஸ்வரர், காரைக்காலம்மையார், ஸ்கந்தர், சூரியன் ஆகியனவற்றில் ஒவ்வொன்றுமாக 04 படிதங்களும், கணபதி படிமத்தில் மூன்றுமாக மொத்தம் 52 வெண்கலப் படிமங்கள் ஆய்வின் பொருட்டு இங்கு உள்வாங்கப்பட்டுள்ளன.

ஆய்விற்கெடுத்துக்கொள்ளப்பட்ட மேலே எண்ணிக்கையிடப்பட்ட வெண்கலப் படிமங்களை ஆய்வின் வரையறையின் பொருட்டு மூன்று பிரதான பிரிவுகளாக வகுத்து ஆராயமுடியும். அவையாவன: ஒன்று சைவசமயப்பிரிவிற்குரியவை, இரண்டு வைஷ்ணவ மதப்பிரிவிற்குரியவை, மூன்று சக்தி வழிபாட்டிற்கு உரியவை என்பனவாகும். ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் இவ் இந்து சமயத்தின் முப்பிரிவுகளும் இலங்கை மக்களை முக்கூறுகளாக பண்பாட்டு- வழிபாட்டு-வாழ்வாதாரத்தின் அடிப்படையில் ஊடுருவி பிரிவினையை ஏற்படுத்தியிருக்காத வகையில் நாம் இங்கு குறிப்பிடப்பட்ட வெண்கலப் படிமங்களை ஈழத்து இந்து மக்களின் ஒன்றிணைந்த இந்துப் பண்பாட்டு முதுசமாகக் கொண்டு ஆராய்வதே பொருத்தமானதாகும். எவ்வாறெனினும் இலங்கைத்தீவின் தனித்துவமான அமைவிடம் காரணமாக நாம் இங்கு கோடிட்டு, வரையறுத்து இங்கு உருவாக்கப்பட்ட அல்லது கண்டுபிடிக்கப்பட்ட இந்து வெண்கலப்படிமங்களை

இருபிரிவுகளாக வகுத்து நோக்கலாம். அவையாவன: (1) பௌத்தமதச் செல்வாக்கின் அடியாக வடிவமைப்புச் செய்யப்பட்ட இந்து வெண்கலப் படிமங்கள், (2) இந்துத்திராவிட மரபின் அடியாக உருவாக்கப்பட்ட இந்துப்படிமங்கள் என்பனவே அப்பாகுபாடாகும். தற்கால இலங்கை-இந்தியக் கலைவரலாற்றாசிரியர்கள் இவ்விரு வகையான வகையீட்டினையே அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து வருவதனைக் காண்கின்றோம். அவ்வகையீட்டினையே நாமும் பின்பற்றி, இலங்கையின் இந்து வெண்கலப் படிமங்களின் தோற்றம் பற்றியும் தோற்று வித்தவர்கள் பற்றியும் எமது ஆய்வுக்கான தரவுகளை நிரைப்படுத்துவது இங்கு பொருத்தமாகவும், நோக்கமாகவும் கொள்கின்றோம்.

1980களில் ஏககாலத்தில் இத்துறை ஆய்வில் இருவேறு பல்கலைக்கழகங் களில் இரு ஆய்வாளர்கள் ஈடுபட்டு, தத்தம் ஆய்வு முடிபுகளை முதுகலைமாணிப் பட்டப்படிப்புக்குரிய ஆய்வேடுகளாகச் சமர்ப்பித்திருந்தனர். அவர்களுள் முதலாமவர் இலங்கைத் தொல்லியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் தலைவராக விளங்கும் கலாநிதி சிறிமல் லக்துசிங்க என்பவராவர். **'ஸ்ரீ லங்காவில் இந்து சிற்பங்கள்-கி.பி.15ஆம் நூற்றாண்டு வரையிலானவை'** என்ற தலைப்பில் சிங்கள மொழி மூலத்தில் அவ்வாய்வு நிகழ்த்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இரண்டாமவரான இந்நூலாசிரியர் **'SAIVA BRONZES IN SRI LANKA-10TH and 12th C.A.D.'** என்ற தலைப்பில் முதுகலைமாணிப் பட்டத்துக்காக ஓர் ஆய்வினைச்செய்து முடித்திருந்தார். இவ்விரு ஆய்வுகளிலேயும் ஏறத்தாழ ஒத்த முடிபுகளையே இவ்விரு ஆய்வாளர்களும் எடுத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நடராசர் படிமங்களும் கலைப்பாங்கும்

மத்தியகால ஈழத்து இந்து மக்களால் முதுசொமாக எமக்கு விட்டுச் செல்லப்பட்டவற்றுள் கலைநோக்கில் முதலிடம் வகிப்பது நடராஜர் வெண்கலப் படிமங்களாகும். பேரண்டப் பொறிமுறையைத் தத்துவார்த்த அடிப்படையில் வெளிப்படுத்திநின்ற அவ்வடிவம் ஒரு சர்வதேசியப் பொதுமைமிக்க கலைக் கருவூலமாகவும் பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு தனிச்சிறப்பினையும் கொண்டுள்ளது. அத்தகைய சர்வதேசியப் பொதுமைவாய்ந்த கலைக் கருவூலத்தினை உருவாக்கி, இன்றைய நாகரிக மக்களுக்கு கையளித்தவோர் நாடாக இலங்கையும் விளங்கி யிருந்தது என்பதனைக் குறிப்பிடும்போது ஈழத்து இந்துக்களாகிய நாம் ஒவ்வொருவரும் மிக்க மகிழ்வுகொள்ளாமல் இருக்கமுடியாது. இவ்வாழ்வு முறையினூடாக மத்தியகால இந்துக்களால் வளர்த்தெடுக்கப்பட்ட வார்ப்புத் தொழினுட்பமானது மேலைத்தேயக் கலைவல்லுனர்களையும் பிரமிக்க வைத்துள்ளது.

இலங்கையில் பல்வேறு உயரவேறுபாடுகளுடனான திருவாசியுடன் கூடிய 05 நடராஜ வெண்கலப் படிமங்களும் திருவாசியற்ற நிலையில் பீடத்துடன் கூடிய 03 நடராஜப்படி மங்களும் இக்குறிப்பிட்ட காலவரையறைக்குட்பட்டவை யாகக் கிடைத்துள்ளன. பிரபாமண்டலம் எனப்படும் திருவாசியுடன் கூடிய

நடராஜப் படிமங்களின் இயல்புகள், தலையலங்காரம், கழுத்தணிகள், இடுப்பாபரணங்கள் போன்றவை இலங்கைச் சிற்பிகளது தனித்துவமான வார்ப்புக் கலையின் இயல்புகளையே வெளிப்படுத்தி நிற்கின்றன. நடராஜர் வெண்கலப்படிம இலக்கம் 1 க்குரிய (CMR No 13.88.283.) பிரபாமண்டலமானது கோளவடிவமாக (Ovel shap) வடிவமைக்கப்பட்டுள்ள அதேநேரத்தில் இரட்டைப்படுத்தப்பட்ட தாமரை மலர்ப்பீடமொன்றின்மீது (Double Lotus Pedestal) இருபக்கமும் அணைக்கப்பட்டுள்ள மகரவாய்கள் வழியாக அப்பிரபாமண்டலம் வெளிவருவதாகவும் உருவமைக்கப் பட்டுள்ளது. நடராஜர் வெண்கலப்படிமங்கள் இலக்கம் 4, இலக்கம் 7 ஆகியன சிறிய தோற்றத்தில் பிரபா மண்டலங்களைக் கொண்டிருப்பதனைக் காணலாம். இலக்கம் 7ஐக்கொண்ட நடராஜர் படிமமானது முற்றுப்பெறாத - முடிவிக்கப்படாத கலை இயல்புகளை கொண்டிருக்கின்ற முறையில் அப்படிமமானது பொலனறுவை யில் இருந்திருக்கக்கூடிய சிற்பாலயத்தில் இருப்பில் வைத்திருக்கப்பட்ட ஒரு படிமமாகக் கருதுவதற்கு இடமுண்டு. இப்படிமத்தில் தீநாக்குகள் இன்னும் செப்பனிடப்பட்டு, சுடரின் சம அரைப்பங்காக கோளவடிவம் சீர்செய்யப்படாதவோர் நிலையும், மகரவாய்களின் வழியாக இருபக்கங்களிலிருந்தும் வெளிவரும் திருவாசியின் செதுக்கல் வேலைகள் இன்னும் தொடங்கப் பெறாதவோர் நிலையும் இந்நடராஜர் வெண்கலப் படிமத்தினை முடிவுபெறாதவோர் (unfinished) கொள்ள வைக்கின்றது.

தனித்துவமானதும் பிரமாண்டமானதுமான உருவ வடிவமைப்பில் இருநடராஜர் படிமங்கள் காணப்படுகின்றன. படிமம் இலக்கம் 5 உம் படிமம் இலக்கம் 6உம் அவ்வாறான சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன. படிமம் இலக்கம் 5 தற்பொழுது கொல்கொத்தாவிலுள்ள அரும்பொருளகத்திற்கு கைமாற்றப்பட்டுள்ளது. இந்த நடராஜர் படிமத்திலுள்ள பிரபா மண்டலமானது ஈழத்திற்கேயுரிய மிகத் தனித்துவமான வடிவமைப்பாக உள்ளது. பிரபா மண்டலத்திற்குள்ளும் புறமும் நன்கு அலங்கரிக்கப்பட்ட வேலைப்பாடுகளைக் கொண்டு திகழும் இவ்வுதாரண மானது நெடுக்குவாட்டில் இருசமஅரைக்கோள வடிவமாகத் திகழத்தக்க வகையில் தீ நாக்குகளின் எண்ணிக்கையால் சமநிலையைப் பேணியுள்ளது. நடன அசைவுடன் காற்றின் இணைவும் சேர்ந்து நடராஜருடைய ஆடையின் ஒத்திசைவைக் காட்டுவதோடு இப்படிமத்திலுள்ள ஆடையின் அலங்காரமானது ஈழத்து உற்பத்திக்குரிய பாணியை எமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றது.

பீடவடிவமைப்பினைப் பொறுத்தவரையிலும் இவ்வெண்கல நடராஜர் ஈழத்திற்கேயுரிய தனித்துவம் புலப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு பீடத்தின்மீது இன்னொரு பீடமாக மேற்றட்டில் நடராஜருக்குரிய பீடமும், கீழே அதனைத் தாங்கியவாறு பிரபாமண்டலத்துக்குரிய பீடமும் காட்சியளிக்கின்றன. அதாவது கீழேயமைந்த பீடம் நீள்சதுரவடிவில் மூன்று தட்டுக்களாலான அல்லது புருவங்களாலான தாமரையிதழ் வடிவமைப்புடன் கூடியதாகக் காணப்பட அதன்மேல் வட்டவடிவமான, இரட்டைப்படுத்தப்பட்ட தாமரைமலர்ப்பீடம் நடராஜரைத் தாங்கி நிற்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறானவோர்

உருவவியல் அமைப்பே இந்நடராஜருடைய உருவத்தோற்றத்தினை மிகைப் படுத்திக் காட்டுவதற்குரிய அடிப்படையாக அமைந்துள்ளது. திராவிட மரபிற்குரிய அலங்கார வடிவங்கள் அத்தனையையும் செடி-கொடி படர் வரிசையுடன் கச்சிதமாக வெளிப்படுத்த முயன்றுள்ள வகையில் இவ்வார்ப்புப் படிமமானது பௌத்தக் கலைமரபின் இலட்ஜணங்களில் தேர்ச்சிபெற்றிருந்த ஓர் ஸ்தபதியின் வெற்றிகரமான வார்ப்பு வெளிப்பாடாகும் என்பதில் சந்தேகமேற்படமுடியாது. யாளியின் வாயும் மகரமீனின் வடிவமைப்பும் இத்திருவாசியின் தனித்துவத்தினை, பிறப்பினை, உற்பத்தியை இலங்கைத் தீவிற்கே முதுசொமாக்கியுள்ள விந்தையை எண்ணி யாருமே வியக்காமல் இருக்கமுடியாது.

இலங்கையிற் கிடைத்த நடராஜர் படிமங்களுள் MASTER PIECE என்று கருதத்தக்க வகையில் கிடைத்த உருவமே இலக்கம் 6 ஐக்கொண்ட படிமமாகும். நீண்ட சதுரக்கட்டமைப்புடைய பீடத்தின் இருபக்கத்திலுமிருந்தும் மேலெழும்பும் பிரபாமண்டலமானது அதன் உச்சியிலுள்ள இருபக்கங்களிலும் எதிர்ப்புறமாக எதிர்நோக்கியிருக்கும் மகரங்களின் வாய்வழியே உட்சென்று மறைகின்றது. இரு அரைவட்டங்களால் உருவாக்கப்பட்டது போன்ற தோற்றத்தினை அளிக்கும் (Two semi circles) இத்திருவாசியின்கீழ் இரு அந்தங்களும் பீடத்தின் இருபக்கங்களிலிருந்தும் நிலைக்குத்தாக மேலெழும்பும் கனம்வாய்ந்த இரு தண்டுகளைச் சந்திக்கின்றன. தீ நாக்குகள் ஒன்றுடன் மற்றொன்று மேனோக்கிய நிலையில் சுடர்விட்டு, இணைந்து பிரகாசிப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. எண்ணிக்கையடிப்படையில் அவை இருபக்கச்சமச்சீரின்றிக் காணப்பட்டாலும்கூட ஒட்டுமொத்தமான உருவத்தோற்றத்தில் சமச்சீர் பின்பற்றப்பட்டவோர் தன்மையை இந்நடராஜர் படிமம் தாங்கிக்கொண்டிருப்பதனைக் காணலாம். தென்னிந்திய - ஈழத்து கலைவல்லுனர்களை ஒருங்கே தம்பால் ஈர்த்துள்ள இந்நடராஜர் படிமத்தின் பீடமுகப்பில் புடைப்புமுறையில் நன்கு அலங்கரிக்கப்பட்ட படிமக் கலையம்சங்கள் காணப்படுகின்றன. அவை வாத்தியக்காரர்களது உருவங்களும் இவர்கள் இசையை மீட்டிக்கொண்டிருக்கும்போது நடனமாது ஒருவர் அபிநயத்தவண்ணம் இருக்கின்ற காட்சியுமாக வடிவமைக்கப்பட்டிருப்பதனைக் காண்கின்றோம். இக்காட்சிப்படுத்தலானது, சி. சிவராமமூர்த்தி குறிப்பிடுவது போன்று இந்த உதாரணமானது தமிழ்நாட்டு மரபினை அடியொற்றி இங்கு வடிவமைக்கப்பட்ட தெனலாம்.

ஈழத்தில் கிடைத்த 8 நடராஜர் வெண்கலப் படிமங்களதும் தலையலங்கார முறையை ஆராயும்போது அவை தென்னிந்திய வழிவந்த மரபினைப் பின்பற்றியிருக்காத தன்மை வெளிப்பட்டிருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவை ஒவ்வொன்றும் மிக மிகத்தனித்துவமான வகையில் அதன் அலங்கார அலகுகள் வடிவமைக்கப்பட்டிருப்பதே ஈழத்து உதாரணங்களின் தனித்துவத்தினைத் தீர்மானித்த விசேட அம்சமாகும். நடராஜர் வெண்கலப்படிமம் இலக்கம் 1 இனது தலையலங்காரமானது படர்சடையாக தலையின் இருபுறங்களிலும் விரிந்துகொண்டுள்ள நிலையிலும் நடராஜர் படிமம்

இலக்கம் 2 இல் பின்னல் புரிசடையாக அதன் முடியின் இருபுறமும் பரவிவிடப்பட்ட வகையும், நடராஜர் படிமம் இலக்கம் 4 மற்றும் 7 இல் தலையின் முடியமைப் பானது வார்சடையாகத் திகழ்வதனையும் காணமுடிகின்றது. இவ்வார்சடை அமைப்பினைக்கொண்ட இலக்கம் 4 ஐக்கொண்ட நடராஜரது முடியிலுள்ள கேசம் திருவாசியின் உட்பக்க விளிம்புகளை எட்டமுடியாத நிலையிலும், இலக்கம் 7ஐக் கொண்ட நடராஜர் படிமத்தில் திருவாசியைத் தொடுகின்ற வகையிலும் வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அக்கேசத்தின் இயல்புகள் இன்னும் தீரணப்படுத்தப்படாத (unfinished) ஒரு நிலையில், FINISHINIG TOUCH என்பது அவ்வெண்கலப்படிமத்தில் இடம்பெற்றிருக்காதவோர் நிலையில் அந்நடராஜர் இன்னும் தோற்றமளிப்பது அப்படிமத்தின் உருவாக்கத்துக்குரிய கலைக்கூடமானது ஈழத்திற்கேயுரித்தானது என்பதனைக் கோடிட்டுக்காட்டுகின்றது. ஏனைய நடராஜர் வெண்கலப்படிமங்களில் தலையலங்காரமானது கேச மகுடமாகவும் கரண்ட மகுடமமாகவும் மலர்க்கேச மகுடமாகவும் வடிவமைக் கப்பட்டுள்ளன. இவற்றுள் நடராஜர் படிமம் இலக்கம் 3இல் தலையலங்காரமானது கொக்குச்சிறகின் அல்லது மயிற்பீலியின் தோற்றத்திலும் நடராஜர் படிமம் இலக்கம் 6இல் துள்ளற் குஞ்சங்களின் தோற்றத்திலும் தலைமகுடம் வடிவமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிடைத்துள்ள 8 நடராஜர் வெண்கலப் படிமங்களிலும் நாற்கரங்களினதும் வடிவமைப்பானது மிகவும் தனித்துவம் வாய்ந்ததாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. தென்னிந்திய மரபிலுதித்த நடராஜர் படிமங்களில் காணப்படுகின்ற நாற்கரங்களின் வடிவமைப்பானது பெருமளவிற்கு முழங்கைப்பட்டையிலிருந்தே தோற்றுவிக்கப்பட்ட நிலையில், இலங்கையில் கிடைத்த நடராஜ விக்கிரஹங்களின் நாற்கரங்களும் தோட்பட்டையிலிருந்தே தோற்றுவிக்கப்பட்ட முறையைக்காண முடிகின்றது. இலங்கையின் இத்தனித்துவமான மரபில் இரு பண்புகள் மிகவும் தனித்துவமாகப் பின்பற்றப்பட்டிருந்தமைக்குரிய உதாரணங்களாக நடராஜர் இலக்கம் 2ஆம் 3ஆம் 5ஆம் 6ஆம் படிமங்கள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகின்றன. இவ்வுதாரணங் களில் தோட்பட்டைக்குச் சற்று வெளியேயும் ஆனால் முழங்கைப்பட்டைக்குச்சற்று மேலேயும் நாற்கரங்கள் பிரிவிற்குள்ளாவதனைக் காணமுடியும். இலங்கைப் படிமங்களில் கீழ் இடதுகரங்களின் நீட்சியிலும் அவை காட்டி நிற்கும் வரதஹஸ்த நிலையிலும் தனித்துவமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதனால் அவற்றைத் தென்னிந்திய உதாரணங்களுடன் ஒப்பிடக்கூடிய வகையிலோ அல்லது இலங்கையில் அவை யாவும் ஒரே கலாமையத்தில் வார்த்தெடுக்கப் பட்டனவென்றோ குறிப்பிடமுடியாது. இலங்கையின் உதாரணங்களில் காணப்படும் கீழ் இடதுகரங்களினால் உணர்த்தப்படும் வரத அல்லது லோலஹஸ்தங்கள் என்பன கலை வரலாற்றாசிரியர்களிளால் பாகுபடுத்தப்படுவதில் ஒரே சீரான அளவீட்டைப் பேணியிருக்கவில்லை. அவ்வாறான நிலைக்கான காரணம் கீழ் இடதுகரங்களின் புறங்கையும், உள்ளங்கையும் நேர்பார்வைக்குத் தெளிவாகத் தெரியும் வண்ணம் அக்ஹஸ்த்தங்கள் (நடராஜர் படிம இலக்கம் 2., படிம இலக்கம் 5.) வடிவமைக்கப்பட்டுள்ளமையினாலாகும். இந்த வார்ப்பு முறையானது

இலங்கைக்கேயுரிய, பௌத்தமதத்திற்குரிய படிம ஹஸ்தங்களுடன் இணைந்தவை யாக காணப்படுவதனை எமக்குக்கிடைத்த நடராஜர் படிமங்கள் உறுதி செய்கின்றன. இவற்றுக்கும் மேலாக, நடராஜர் வெண்கலப்படிமம் இலக்கம் 5 இல் காணப்படும் இடது கீழ்க்கரத்திலுள்ள வரத ஹஸ்தமானது உள்ளங்கை லட்ஜணத்தினை நேர்ப்பார்வையில் வெளிப்படுத்தி நிற்பதோடு, அக்கரத்தின் விரல்கள் யாவும் லோல ஹஸ்தத்திற்குரியதாக வடிவமைக்கப்பட்டிருப்பதும் அதன் சிறப்பம்சமாகும்.

பொதுவாகவே இலங்கையில் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த 8 நடராஜர் படிமங்களிலும் அவ்வவற்றின் ஆபரணப்பதிவுகள், ஆடைகளின் தொங்கல்கள், கணுக்கால் வரையிலான ஆடையலங்கார முறைகள் போன்றவற்றை மிகவும் நுணுக்கமாக அவதானிக்கும்போது தென்னிந்திய - தமிழக ஆடையலங்கார, அலங்கரிப்பு முறைகளிலிருந்து அவை பெருமளவிற்கு வேறுபட்டு, மிகவும் தனித்துவமான குணாதிசயங்களைக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

ஈழத்து நடராஜர் வெண்கலப் படிமங்களைப் பொறுத்தமட்டில் இன்னொரு தனித்துவமான ஆனால் மிகமுக்கிய உறுப்பாகக் காணப்படுவது 'அபஸ்மாரபுருஷன்' எனப்படும் ஒரு குட்டையான அல்லது குள்ளமான மனித உருவமாகும். நடராஜரது வலது பாதத்தினால் மிதியுண்ட நிலையில் வடிவமைக்கப் பட்ட அபஸ்மாரபுருஷனின் தோற்றப்பொலிவானது ஈழத்தினைப் பொறுத்தவரையில் அதன் சுதேசியக் கலைமரபொன்றின் செல்வாக்கினை வெளிப்படுத்துவதற்கேற்ற ஓர் உறுப்பாகத் திகழ்கின்றது. தாமரையாசன பீடத்திற்கும் நடராஜரது பாதத்திற்கு மிடையே மிகக்கெட்டியாக அமைக்கப்பட்ட அவ்வடிவமானது குள்ளமான யக்ஷமுகத் தோற்றத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இடதுகரத்தால் நாகமொன்றினை முகத்தின் முன் பற்றிக்கொண்டு இடதுபக்கம் நோக்கிய நிலையில் கிடையாகக் காணப்படுகின்ற காட்சியானது நடராஜ தத்துவத்தினை ஒருங்கே வெளிப்படுத்தி நிற்கும் வகையாகக் காணப்படுகின்றது. மேலும் இவ்வடிவமானது இலங்கையின் பூதகணங்களின் வரிசையில் தீட்டப்பட்ட உருத்தோற்றத்தினைக் கொண்டிருப்பதும் மேலும் ஆராயத்தக்கவோர் விடயமாகும். அபஸ்மாரபுருஷனின் முகத்தோற்றமானது விகாரமாக, துன்பஉணர்வுகள் வெளிப்படத்தக்க வகையிலேயே வடிவமைப்பது மரபாகும். ஆனால் இலங்கையில் கிடைத்த அபஸ்மாரபுருஷர்கள் யாவுமே வேறுபட்ட உணர்வுகளுடனும், வேறுபட்ட முகத்தோற்றங்களுடனும் வடிவமைக்கப் பட்டிருப்பது ஆய்வுக்குரியதொன்றாகக் காணப்படுகின்றதெனலாம். நடராஜர் வெண்கலப்படிமம் இலக்கம் 1 இல் காணப்படும் அபஸ்மார புருஷனின் வடிவமைப்பானது இலங்கையில் கிடைத்தவற்றுள் மிகச்சிறப்பானதாகும்.

சிவமூர்த்த வெண்கலப் படிமங்களும் ஈழத்து இந்துக் கலைமரபும்

தனித்துவமான சுதேசியப் படிமக்கலைக்கோலங்களைக் காண்பிக்கும் ஈழத்து இந்துப்படிமங்களுள் சிவமூர்த்தங்களின் பல்வேறு வகைகள் இலங்கையிற் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இங்கு எமது ஆய்வுப் பரப்பிற்குள்

சிவனது அர்த்தநாரீஸ்வரர் வடிவமும் சிவனும் பார்வதியும் சுகாசனத்தில் காணப்படுகின்ற நிலைகள், சிவனும் பார்வதியும் சோமாஸ்கந்த மூர்த்தத்திலுள்ள நிலைகள், சிவனது பைரவமூர்த்தங்கள், சந்திரசேகர மூர்த்தங்கள், சண்டேஸ்வர மூர்த்தங்கள், வகுலீஸ்வரர் என்றழைக்கப்பட்ட சிவனது இன்னொரு படிமம், என்றவாறாக மொத்தம் 14 வெண்கலப் படிமங்கள் இப்பிரிவில் கிடைத்துள்ளன.

அனுராதபுரத்தில், அபயகிரி என்ற மையத்திலிருந்து 1982 ஆம் ஆண்டில் அகழ்வின்போது கிடைத்த அர்த்தநாரீஸ்வரர் வெண்கலப்படிமம் மிகமிகத் தனித்துவமான படிமக்கலையம்சங்களைக் கொண்டு காணப்படுகின்றது. 13cm உயரமுடைய இப்படிமத்தின் திருக்கோலம் தனித்துவமானது. தென்னிந்திய மரபிலிருந்து முற்றிலுமே வேறுபட்ட வடிவமைப்பினை இப்படிமம் கொண்டுள்ளது. இங்கு இடது பாகத்தில் காணப்படவேண்டிய உமையின் பாகம் வலது பக்கத் திலும் நான்கு திருக்கரங்களில் ஒன்று அதாவது வலது மேற்கரமானது மாங்கனி ஒன்றை வைத்திருப்பதும் அதிவிசேடமான, இலங்கைக்கேயுரிய குணாம்சங்களைக் காட்டுவதாகவுள்ளது. திரிபங்க நிலையிலுள்ள அர்த்தநாரீஸ்வரருடைய தலையலங்காரமானது கேச மகுடமாகக் காணப்படுகின்ற அதேவேளையில் சிகையின் மேல்முடிச்சிலிருந்து பின்புறமாக கீழே சிகை பரவிக் காணப்படுகின்றது. இதனை வத்தவேணி அலங்காரம் எனக் குறிப்பிடுகின்றனர். அர்த்தநாரியின் நடன முத்திரையைக் காட்டிநிற்கும் கரங்களுள் இடது கீழ்க்கரமானது அபய கரத்தினைப் போன்ற தோற்றத்தினை வழங்கினாலும் சின் முத்திரை போன்ற விரல்களின் அமைப்பினையும் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. இதேவேளை வலது கீழ்க்கரமானது லோலஹஸ்தத்தில் வடிவமைக்கப் பட்டிருப்பதும் தெளிவாக உள்ளது. இவ்வெண்கலப் படிமத்தின் பாதங்களை அவதானிக்குமபோது கணுக்கால்கள் பூமியில் தொடும்படியான ஒரு நிலையிலேயே இப்படிமத்தின் வார்ப்பு வடிவமைக்கப்பட்டிருக்கின்றது என்பதும் தெளிவாகின்றது. இப்படிமத்தின் ஆடை, ஆபரண, அலங்கார அம்சங்கள் இன்னும் இறுதி வடிவமைப்பினை எட்டவில்லை (FINAL TOUCH) என்றே குறிப்பிடவேண்டியுள்ளது.

சிவனும் பார்வதியுமாக இணைந்திருக்கின்ற சுகாசன, சோமாஸ்கந்த நிலைகள் இலங்கையின் படிமக்கலைவரலாற்றில் பிராந்தியத் தனித்துவத்தினை கோடிட்டுக் காட்டுவனவாக வடிவமைக்கப்பட்டுள்ளன. திருக்கேதீஸ்வரத்திலிருந்து கிடைத்துள்ள சோமாஸ்கந்த நிலைக்குரிய வெண்கலப்படிமமானது இலங்கையில் கிடைத்த சோமாஸ்கந்த மூர்த்தங்களுள் காலத்தால் முற்பட்டதாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. (கோபாலகிருஷ்ண ஐயர், ப., 1981,பக்.) கி.பி.9ஆம் நூற்றாண்டிற்கும் சற்று முற்பட்டதான ஒரு காலப்பரப்பில் அப்படிமம் வடிவமைக்கப் பட்டிருக்கவேண்டும் என்பதனை அப்படிமத்திலுள்ள உமையின் அங்க லட்சணங்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பல்லவர் மரபோடு இணைத்து எடுத்துக்காட்டுவர். திருகோணமலையிலிருந்து கிடைத்த சிவனது இதே நிலைக்குரிய சோமாஸ்கந்த வெண்கலப்படிமமானது இன்னொரு பிராந்தியக் கலைச்சிறப்பினை - அதன் முகிழ்ப்பினை கோடிட்டுக்காட்டுகின்றது. பஞ்சலோக மரபில் மிகக்கூடுதலான தங்கஉலோகக்கலவையை ஆதாரமாகக்கொண்டு

இப்படிமம் உருவாக்கப்பட்டுள்ளது. பிற்பட்டசோழர் காலத்துக் கலைப்பாணியின் வெளிப்பாட்டினை திருகோணமலையிலிருந்து கிடைத்துள்ள இச் சோமாஸ்கந்த மூர்த்தம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

பொலனறுவையிலிருந்து கிடைத்த இருக்கும் நிலையிலுள்ள சிவன்- பார்வதி வெண்கலப்படிமம் கூட பிராந்திய படிமக்கலை வனப்பினை வெளிப்படுத்தி நிற்பதனைக் காணலாம். பத்திராசனத்தின் மீதான இரட்டிக்கப்பட்ட தாமரைப் பீடமொன்றில் காணப்படும் சிவனது வலதுகாதில் மகர குண்டலமும் இடது காதில் பத்திரகுண்டலமும் காணப்படுகின்றன. கழுத்திலே மாலையும், தொங்கிக் கொண்டிருக்கும் முத்துச்சரமும் பிற்பட்ட சோழர்காலக் கலைவனப்பினை வெளிப் படுத்தி நிற்கின்றன. பார்வதி தலையிலே கரண்ட மகுடத்துடனும், காதுகளில் மகரகுண்டலாபரணங்களுடனும், கழுத்தில் மாலையுடனும் உபவீதத்துடனும் வடிவமைக்கப்பட்டுள்ளார். பார்வதியினுடைய வலதுகரம் தாமரை மொட்டொன்றைத் தாங்கியுள்ள நிலையில் இடது கரமானது வரதஹஸ்தமாகக் காணப்படுகின்றது. இவ்வுருவங்கள் இரண்டிற்குமிடையே ஸ்கந்தனுடைய நிலைக்கு பீடத்தில் இடமில்லாதவொருநிலையில் சிவனும் பார்வதியுமான இச்சுகாசன இருக்கையை உமாமகேஸ்வரர் என கலாயோகி ஆனந்தகுமாரசாமி அடையாளம் காண்கின்றார்.

பொலனறுவையிலிருந்தும், ஜெதவனராமயச் சுற்றாடலிலிருந்தும் கிடைத்துள்ள வீரபத்திரர் படிமங்கள் இலங்கையின் இந்துப்படிமக்கலை வரலாற்றில் தனித்துவமாக அமைந்த விக்கிரஹவியற் சான்றாகக் காணப்படுகின்றது. பொலனறுவையிலிருந்து கிடைத்த படிமம் படுகவைரவர் எனவும், ஜெதவனராமை யிலிருந்து கிடைத்தபடிமம் வீர பைரவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. படுகவைரவரது படிமமானது இடுப்பிலே நிறைந்த ஆபரணத்துடன், நிர்வாணக் கோலமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. 14cm உயரமான இச்சிலையானது அதன் பின்பக்கத்தில் நாய்வாகனத்துடன் நின்று கொண்டிருக்கும் நிலையில், சமபங்கதோற்றத்தினை வெளிப்படுத்தியுள்ளது. தலையலங்காரமானது அக்னி ஜடாபாரமாக அதிலுள்ள எரிசுடர் மேனோக்கிய தோற்றத்திலுள்ளது. நான்கு திருக்கரங்களுள் மேலிருகரங்கள் உடுக்கும், பூக்காம்பும் கொண்டிருக்க, கீழிருகரங்கள் திரிசூலமும் கபாலமும் தாங்கிய வண்ணமுள்ளன.

ஜெதவனராமையிலிருந்து பெறப்பட்ட வீரபத்திரர் திரிபங்க நிலையில், நீள் சதுரமான பீடமொன்றில் வடிவமைக்கப்பட்டுள்ளார். தனித்துவமான படிமக் கலையம்சங்களுடன் காணப்படும் இச்சிலையில் வலது கால் மடித்தூன்றிய நிலையில், இடதுகால் அகலப்புறமாக வீசி மடிக்கப்பெறாது, ஊன்றிய நிலையில் காணப்படுகின்றது. சற்றுப்பருமனான உடலைத் தாங்கிய வண்ணம் பாதங்கள் இரண்டும் முத்தலைப்பாம்புகளை உழக்கிய வண்ணம் மல்லுக்கட்டிய நிலையில் காணப்படுகின்றன. வலதுகரத்தில் வாளும் இடது கரத்தில் அறுத்தெடுத்த தலையையும் கொண்டுள்ள இவ்வெண்கலப்படிமம் வட்டமான அக்கினி மண்டலத்தினை தலைமேலுள்ள சிகையலங்காரமாகக் கொண்டுள்ளது. போரிலே பகைவனை வெற்றிகொண்டு, அவனுடைய தலையைக்கொய்து, அதனைக்

கையிற் பிடித்தவண்ணம் உக்கிரதாண்டவம் புரியும் வீரபத்திரரின் நின்ற திருக்கோலம் இதுவென S.பத்மநாதன் குறிப்பிடுவது மிகப்பொருத்தமானதாகும். இப்படிமத்தின் நீள்சதுரமான பீடத்தின் முற்பக்கத்தில் 'ஸ்ரீ நானா தேசியன்' என கி.பி. 12ஆம் நூற்றாண்டிற்குரிய தமிழ் எழுத்துக்களினால் பொறிக்கப் பட்டுள்ளமை அதன் தோற்றம் தொடர்பாகவும், தோற்றுவித்தவர்கள் தொடர்பாகவும் அறிவதற்குரிய மூலமாக அமைகின்றது.

சிவனது ஏனைய படிமங்களான சந்திரசேகரர் மூர்த்தங்கள் திருகோணமலை, பொலநறுவை, யதவனராமய ஆகிய கலா மையங்களிலிருந்து கிடைத்துள்ளன. சோமாஸ்கந்த மூர்த்தத்திற்குரிய மேலும் இரு தனியான வெண்கலப்படிமங்கள் பொலநறுவையிலிருந்தும் கிடைத்துள்ளன. இவற்றின் முகவெட்டும், ஆபரண வடிவமைப்பும் பிராந்திய வேறுபாடுகளையே காட்டிநிற்கின்றன. யதவனராமய விலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சந்திரசேகரது பீடம் கவிழ்ந்த தாமரைமலர் வடிவப்பீடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கவிழ்ந்த தாமரை (Inverted Lotus Pedestal) வடிவம் பௌத்த கலை அம்சங்களில் இடம்பெற்று வந்த ஓர் அலங்கார உறுப்பாகும். இந்துக் கலைமரபில் அவ்வாறு இடம்பெறுவது மிகவும் அரிதான ஒரு நிகழ்வாகும். இலங்கையில் இந்துபடிமக்கலைமரபில் கவிழ்ந்த தாமரை மலர்ப்பீடமொன்று சந்திரசேகரருக்குரியதாகக் காணப்படுவது என்பது அப்படிமத்தின் பிறப்பினைப் பற்றியும் தோற்றுவித்தவர்கள் பற்றியும் அறிய வைப்பதாகவுள்ளது. இப்படிமத்தின் தலையிலுள்ள முடி அலங்காரமானது கொக்கின் இறகுகள் நிரையில் அடுக்கி வைத்தால் போன்ற தோற்றத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. பொலநறுவையில் கண்டுபிடிக்கப்பட்ட நடராஜர் படிமம் இலக்கம் 3 இல் உள்ள தலையலங்காரத்தை ஓரளவிற்கு இப்படிமத்தின் முடியலங்காரம் நினைவுகூர வைக்கின்றது.

பார்வதி வெண்கலப் படிமங்களும் ஈழத்தின் இந்துக் கலைப்பாங்கும்

இந்து வெண்கலப் படிமக்கலை மரபில் மிகக்கூடுதலான எண்ணிக்கையில் கிடைத்துள்ள படிமங்கள் பார்வதி வகையைச் சேர்ந்தனவாகும். பதவியாவில் இருந்தும், திருகோணமலையிலிருந்தும், கந்தளாய் அநுராதபுரத்திலிருந்தும் பொலநறுவையிலிருந்தும் பூநகரியிலிருந்தும் பார்வதி வெண்கலப் படிமங்கள் கிடைத்துள்ளன. இவையாவுமே ஒன்றுடன் மற்றொன்றை ஒப்பிடமுடியாத அளவிற்கு தனித்துவமான இயல்புகளைக்கொண்டு காணப்படுகின்றன. பதவியாவிலிருந்து பார்வதி வெண்கலச்சிலைகள் படிமங்கள் பல கிடைத்திருந்தும் அவை சரியான முறையில் அடையாளம் காணப்படாத வகையிலும், பெற்றுக் கொள்ளப்பட்ட இடத்தின் பெயர் பதிவு செய்யப்படாத ஒரு நிலையிலும், பல அரும்பொருளகங்களின் கைமாற்றங்களினூடாக கொழும்பு தேசிய அரும்பொருளகத்தினை அவை சென்றடைந்ததன் காரணமாகவும் லக்ஷ்மி அல்லது கௌரி என்ற பெயரில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையையும் காணலாம்.

இலங்கையில் இது வரையில் 22க்கு மேற்பட்ட பார்வதி வெண்கலப்படிமங்கள கிடைத்திருந்தும் 20 படிமங்களே ஆய்வுக்குட்படுத்தக் கூடியவகையில் காணப்படு

கின்றன எனலாம். இந்த 20 படிமங்களுள் 18 படிமங்கள் நிற்கின்ற நிலையில் காணப்பட ஏனைய இரண்டும் இருக்கும் நிலையில் காணப்படுகின்றன. இவற்றுள்ளே இரண்டு படிமங்கள் மாத்திரம் பீடங்களின்றிக் கிடைத்துள்ளன. ஏனைய 18 பார்வதி வெண்கலச்சிலைகளும் தாமரை ஆசனத்துடன் கூடியவையாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது வரைக்கும் இலங்கையில் கிடைத்த வெண்கல இந்து உலோகச்சிலைகள் பற்றி ஆய்வு செய்தோர் காலத்துக்குக்காலம் எண்ணிக்கையில் அதிகரித்துவந்த இப்பார்வதி படிம மரபின் சிறப்பியல்புகளை தனித்துவமாக வெளிப்படுத்துவதற்கு இதுவரையில் முயற்சிக்கவில்லை. கலாசார முக்கோணப்பரப்பிற்குள் எண்ணிக்கையில் அதிகமாக கிடைத்துவந்த பார்வதி படிமங்களை இற்றைவரைக்கும் ஆய்வுநோக்கில் அணுக முடியாதவொரு சூழ்நிலை காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எமக்குக் கிடைத்த பார்வதி சிலைகளின் பொதுப்பண்புகளை அவதானிக்கும் போது நிற்கும் நிலையில் வடிவமைக்கப்பட்டவை யாவுமே தாமரை ஆசனத்தின் மீது உள்ளனவாகவும் இருக்கும் நிலையில் வடிவமைக்கப்பட்ட இரு பார்வதி படிமங்களின் பீடங்களும் எத்தகையன என்பது தெரியாத நிலையிலும் காணப்படு கின்றன. பார்வதி படிமங்களின் முகவெட்டை நோக்கும்போது சதுரப்பட்டையான முகவெட்டும் கோளவடிவ முகவெட்டும் பெருமளவிலானவற்றில் காணப்படுகின்றன. படிமக்கலைக்குரிய பண்பாட்டுக்கூறுகளை அதாவது சில்ப நூல்களிலே விபரிக்கப் பட்ட தாள, ஹஸ்த நயனங்களை மிக இலகுவில் வெளிப்படுத்தக்கூடியவையாக இப்பார்வதி படிமங்கள் காணப்படுகின்ற தன்மை காரணமாக, ஈழத்து பிரதேச தனித்துவத்தினையும் அவற்றினூடாக மிக இலகுவாக வெளிப்படுத்திவிடக்கூடிய குணாதிசயங்களையும் இப்பார்வதி படிமங்கள் ஒருங்கே கொண்டிருக்கின்றன எனலாம்.

பொலநறுவையிலிருந்தும் பதவியாவிலிருந்தும் கிடைத்தவற்றில் பாரிய குணாதிசய வேறுபாடுகள் காணப்படுகின்றன. கந்தளாய், பதவியா ஆகிய பிரதேசங்கள் சதுர்வேதிமங்கலங்கள் என அழைக்கப்பட்ட பிராமணக் குடியேற்றங்கள் காணப்பட்டமையின் பின்னணியில் சில்ப-சாஸ்திர அளவீடுகளைப் பின்பற்றி இங்கு பார்வதிப் படிமங்கள் உருவாக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதில் ஐயம் எதுவுமே எழமுடியாது. ஆனால் பொலநறுவையோ பௌத்த கலைமரபின் செல்வாக்கிற்குள் வளர்ச்சி பெற்றிருந்த ஒரு மையமாகையால் அங்கு உருவாக்கப் பட்ட பார்வதி வெண்கலப்படிமங்களும் பௌத்த கலைமரபின் செல்வாக்கினை உள்ளீர்த்துக்கொள்வது தவிர்க்க முடியாததாயிற்று. இக்காரணத்தினாலேயே பொலநறுவையிலிருந்து வெளிவந்த பார்வதி படிமங்களில் சில்ப விதிகளை மீறிய வகையிலான கலைக்கோலங்கள் அதிகளவில் காணப்படுவதற்கு காரணமாயிற்று. தென்னிந்திய-இலங்கை கலைவல்லுணர்கள் இவ்வாறான சில்பசாஸ்திர விதிகளை மீறியவகையிலான உருவாக்கப்பட்ட பார்வதி படிமங்கள் உட்பட பல்வேறு இந்துப் படிமங்களை இலங்கைக்குரிய பிறப்பிற்கு சிறந்த உதாரணமாகக் கொள்வதனை நான் காண்கின்றோம்.

காரைக்காலம்மையார், கணபதி, சைவநாயன்மார்

'ஈழத்து உற்பத்தி' எனப் பெரும்பாலான கலைவரலாற்று ஆசிரியர்களினாலும் தொல்லியலாளர்களினாலும் விதந்துரைக்கப்பட்ட வெண்கலப்படிமங்களாக காரைக்காலம்மையாரது படிமமொன்றும் கணபதியின் நின்ற திருக்கோலத்திலான படிமங்கள் இரண்டும் கணபதியின் இருக்கின்ற திருக்கோலத்தில் படிமம் ஒன்றுமாக கணபதி படிமங்கள் மூன்றும், சைவநாயன்மார் படிமங்களில் மொத்தம் ஆறுமாக இப்பிரிவில் பத்து வெண்கலப் படிமங்கள் கிடைத்துள்ளன. சைவநாயன்மார் படிமங்களுள் சுந்தரர் படிமங்கள் இரண்டும் அப்பர் படிமங்கள் இரண்டும் சம்பந்தர், மாணிக்கவாசகர் படிமங்களில் முறையே ஒவ்வொன்றுமாக ஆறு படிமங்கள் எமது ஆய்விற்கு கிடைத்துள்ளன. இவை யாவுமே பொலநறுவையில் இருந்து கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கணபதியினுடைய நிற்கும் நிலையில் கிடைத்த படிமமானது பொலநறுவையில் இருந்து ஒன்றும் திருகோணமலையிலிருந்தும் ஒன்றுமாக கிடைத்துள்ளன. இவற்றுள் திருகோணமலையிலிருந்து கிடைத்த கணபதி படிமத்தில் தங்க உலோகம் கூடுதலான விகிதாசாரத்தில் சேர்க்கப்பட்டுள்ளதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலே சொல்லப்பட்ட வெண்கலப் படிமங்களின் தனித்துவமான இயல்புகள் காரணமாக கொடகும்புரே, சிம்மர், சிவராமமூர்த்தி, கங்கூலி ஆகியோர் அவற்றை ஈழத்தின் படிமக்கலை உற்பத்திக்குரிய ஏற்ற சான்றுகளாக ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளனர். பொலநறுவையிலிருந்து கிடைத்த இருக்கின்ற நிலையில் உள்ள மாம்பழக்கணபதியும், சுந்தரமூர்த்தி நாயன்மாரின் படிமமும் இந்து வெண்கலப்படிம அழகுக்கலைக்குரிய உரைகற்களாக காணப்படுகின்றன. இக்குறிப்பிட்ட இரண்டு வெண்கலப் படிமங்களையும் அவற்றின் அழகுக் கோலங்களையும் விஞ்சுகின்ற அளவிற்கு தென்னிந்தியாவிலோ அல்லது வேறு பிற இடங்களிலோ அவற்றை விஞ்சக்கூடிய படிமங்கள் கிடைக்கப்பெறவில்லை. 'The beauty of the Romance' என்று மேல்நாட்டவர்களால் குறிப்பிடும் அளவிற்கு இலங்கையில் கிடைத்த சுந்தரருடைய வெண்கலப்படிமம் திகழ்கின்றது. இவை யாவற்றையும்விட பேயுருக்கொண்ட காரைக்காலம்மையாரது வெண்கல உலோகப்படிமமொன்று பொலநறுவையிலிருந்து கிடைத்தமையானது இலங்கை மீதான மாங்கனி பண்பாட்டின் செல்வாக்கினையும் சைவசமயத்தில் மாங்கனி உணர்த்தும் தத்துவ அடிப்படைகளிலான வாழ்க்கை முறைகளிலும் ஈழத்து இந்துக்கள் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டை பேயுருக்கொண்ட இக் காரைக்காலம்மையாரது வெண்கலப் படிமம் உணர்த்தி நிற்கின்றது. இதேபோன்றதொரு வெண்கலப் படிமமானது இந்தோனேசியாவிலுள்ள ஓரிடத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. காணபத்திய நாடான இந்தோனேசியா மாங்கனிப் பண்பாட்டிற்கும் மோதகப் பண்பாட்டிற்கு மிடையே செல்வாக்குச் செலுத்தியிருந்த கணபதியின் வணக்கமுறைக்கு பெயர் பெற்றிருந்த நாடு என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையிலே காரைக்காலம்மை யாரது வாழ்க்கைமுறை ஈழத்தின் கிழக்குப் பிராந்தியத்தில் தென்கிழக்காசியா விலிருந்து கொண்டுவரப்பட்ட பண்பாட்டுக் கூறுகளுடன் இணைந்து வளர்ச்சி பெற்றிருந்ததனையும் காண்கின்றோம்.

வைஷ்ணவ வெண்கல உலோகப் படிமங்கள்

ஈழத்து இந்துக்கலை மரபுகளுடனும் பௌத்தக்கலை மரபுகளுடனும் ஒன்று கலந்து, ஒரு பொதுமையான வகையில் தன்னை வளர்த்தெடுத்துக்கொண்ட ஒரு பிரிவாகவே வைஷ்ணவ மதப்பிரிவு காணப்படுகின்றது. பௌத்தமத விக்கிரஹவியலிலும் இந்துமத விக்கிரஹவியலிலும் மிகக்கூடுதலான படிமக்கலைச் செல்வாக்கினை ஏற்படுத்தி, இரு இனங்களுக்குமிடையிலான பண்பாட்டுப் பாலமாக, வாணிப முகாமைத்துவத்தின் கேந்திரநிலையமாக - விஷ்ணு தேவாலயங்களாக உபுல்வன் கோயில்களாக வைஷ்ணவ வழிபாடாற்றும் இராச பாரம்பரியத்துக்குரிய அரச வடிவமாக விஷ்ணுவின் திருக்கோலம் இலங்கையில் பேணப்பட்டிருந்த வரன்முறையைக் காண்கின்றோம். இலங்கைத் தீவிற்கு பௌத்தமதம் பரப்பப்பட்ட காலம் முதலாக பௌத்த சாசனத்தினை பாதுகாக்கும் கடவுளராகவும் விஷ்ணு கருதப்பட்டு வந்தமை காரணமாக பௌத்த விக்கிரஹவியல் கலைக்கூடத்திலும் வைஷ்ணவக் கடவுளர்வரிசை முதன்மை பெறக்காரணமாகியது. இலங்கையைப் பொறுத்தவரையில் கல்லினாலான விஷ்ணு சிற்பங்களும் அவ்வவதாரத்துடன் தொடர்பான பிற சிற்பங்களும் கிடைத்துள்ள எண்ணிக்கையின் அளவில் வெண்கல உலோகத்தாலான வைஷ்ணவ மதப்படிமங்கள் கிடைத்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உலோகத்தாலான விஷ்ணுவின் நின்ற திருக்கோலப்படிமம் ஒன்றும் இராமர் என அடையாளம் காணப்பட்ட வெண்கலப்படிமம் ஒன்றும் ஹனுமான் வெண்கலப் படிமத்தில் இரண்டும் பாலகிருஷ்ணர் வெண்கலப்படிமத்தில் நான்குமாக மொத்தம் 9 வைஷ்ணவ உலோகப்படிமங்கள் எமது ஆய்விற்காகக் கிடைத்துள்ளன. இப்பிரிவிற்குள் சூரியதேவர் படிமமொன்றையும் இணைத்து நோக்கிக்கொள்வது பொருத்தமாக அமையும்.

பொலனறுவையிலுள்ள 5ஆம் சிவதேவாலயத்திலிருந்து பெறப்பட்ட 30cm உயரமான விஷ்ணுவின் உலோகப்படிமமானது (அனுராதபுர அரும்பொருளகம் - 381.) பொதுவான படிம இலச்சினைகளுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நான்கு கரங்களுள் மேல் வலதுகையில் சக்கராயுதமும், இடது கையில் சங்கும் காணப்படுகின்றது. கீழ் வலது கரம் அபயமுத்திரையில் தோற்றமளிக்க, கீழ் இடதுகரமானது கதாயுதத்தினைத் தொட்டுக்கொண்டிருப்பது போன்ற வகையில் காணப்படுகின்றது. இரு காதுகளிலும் மகரகுண்டலாபரணமும், கழுத்தில் மாலையும், தோளில் உபவீதமும், இடைக்கச்சும் அமைந்துள்ளன. புஜம் கேயூரம் என்னும் ஆபரணத்தாலும் முழங்கை வாசிகைக்கட்டு என்னும் ஆபரணத்தாலும், வளையல் அணிந்த வளைகரத்துடனும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அணிந்திருக்கும் தார்ப்பாச்சும் மேகலையின் முகப்பிலுள்ள திருகுசிங்கமும் மிகத் தனித்துவம் வாய்ந்த ஆபரணங்களாகவே உள்ளன. இவ்விஷ்ணு வெண்கலத்துக்குரிய பீடத்தினை அவதானித்த ஸ்ரீநிவாசன் பத்திரபீடத்தின்மீது வடிவமைக்கப்பட்ட தாமரைப்பீடமானது கீழேயுள்ள பீடத்திலிருந்து ஒருசிறிய வரைபொன்றினால் பிரிக்கப்பட்டுள்ளமையானது இலங்கைச் சிற்பங்களுக்குரிய

காலவரையறையை ஏற்படுத்துவதற்கு பெரிதும் உதவுவதாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். சிவராமமூர்த்தியும் அக்கருத்தினை ஏற்றுக்கொண்டுள்ளார்.

கந்தளாயிலிந்து கிடைத்த இராமர் வெண்கலப் படிமமொன்று துவிபங்க நிலையில் இரு கரங்களுடன் அனுராதபுரத்திலுள்ள அரும்பொருளகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. கரங்கள் இரண்டும் வில்லினையும் அம்பினையும் கொண்டிருப்பது போன்ற தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இப்படிமத்துடன் பாலகிருஷ்ணர் படிமமொன்றும் அனுராதபுர அரும்பொருளகத்தில் காணப்படுகின்றது. 15.5cm உயராமான பாலகிருஷ்ணர் வலது காலை உயர்த்திய வண்ணம் கையிலே வெண்ணெய்க்கட்டியொன்றைக் கொண்டுள்ளவாறு வடிவமைக்கப்பட்டுள்ளார். இதேபோன்ற இன்னொரு பாலகிருஷ்ணர் வெண்கலப்படிமமானது கொழும்பு அரும்பொருளகத்தில் (CMR.No 13.107. 287.) காணப்படுகின்றது. அதன் உயரம் 53.7cm ஆகும். சிறுகுழந்தை யொன்று தவழ்ந்து செல்வதுபோல் இச்சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்றதொரு மிகச்சிறப்பான, அலங்காரமான வெண்கலப்படிமமொன்று யாழ்ப்பாணத்திலுள்ள கந்தரோடையிலிருந்தும் எமக்குக் கிடைத்துள்ளது. பிற்பட்ட சோழர்கால கலைப்பாணிக்குரியதாக, மிகவும் தனித்துவமான அலங்காரக் கலைவனப்பினை இப்பாலகிருஷ்ணர் கொண்டுள்ளார். கந்தரோடையிலிருந்து கிடைத்த இன்னொரு வெண்கலப்படிமம் ஹனுமான் வடிவமாகும். ஒரு வெண்கலப் பதக்க வட்டகைக்குள் ஹனுமான் மூலிகைமலையை இடதுகையில் தாங்கியவாறு ஆகாய வெளியில் பறந்து செல்வதுபோன்று இப்படிமம் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதுவும் பிற்பட்ட சோழர் காலத்துக்குரிய ஈழத்துக் கலைப்பாணியை மிகச்சிறப்பாக வெளிப்படுத்தி நிற்பதனைக் காண்கின்றோம்.

முடிவுரை:

இலங்கையில் இந்து வெண்கலச் சிற்பங்கள்: (கி.பி. 9ஆம் 12ஆம் நூற்றாண்டு கட்கு இடைப்பட்டவை) உருவாக்கமும், உருவாக்கியவர்களும் பற்றிய ஓர் உசாவல் என்ற இந்த ஆய்வுப் பனுவலில் வர்ண ஒளிப்படங்களைப் பின்னணி யாகக் கொண்டு பல தகவல்களை உங்கள் முன்னிலைப்படுத்தியுள்ளேன். இலங்கையின் முழுமையான - பக்கச்சார்பற்ற கலை வரலாறு எழுதப்படும் வரைக்கும் இந்துத்திராவிட கலை மரபுகள் பற்றிய ஆய்வுகள் ஆங்காங்கே, துண்டுதுண்டாகவே விருப்பு-வெறுப்புக்கு உட்பட்டவகையில் வரையப்படுவது தவிர்க்கமுடியாததாகின்றது. எவ்வாறெனினும் இலங்கையிற் கிடைத்த இந்து வெண்கல உலோகப்படிமங்களைப் பொறுத்தவரைக்கும் ஒரு முழுமையான ஆய்வினை ஒழுங்கமைக்கப்பட்ட ஆய்வாளர் குழு (A Research Team) ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுத்துச் செல்லவேண்டிய தேவை மிகவும் அவசியமானது என்பதனை இங்கு கோடிட்டுக் காட்டவேண்டிய தேவையில்லை. எதிர்காலத்தில் பின்வரும் மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு அவ்வாய்வு முயற்சியை முன்னெடுக்க வேண்டியவர்களாகவுள்ளோம். அவையாவன:

1) கிடைத்த இந்து வெண்கலப்படிமங்கள் யாவும் திரும்ப அடையாளம் காணப்படவேண்டும்.

2) இலங்கையின் பிராந்திய கலா மையங்கள் இனங்காணப்படவேண்டும்.

3) ஈழத்து இந்துப் படிமங்கள் மீதான தென்கிழக்காசிய நாடுகளின் கலைச் செல்வாக்கு அடையாளம் காணப்படவேண்டும்.

4) தேர்ந்தெடுத்த இந்துப்படிமங்களுக்கு Thermoluminicence அடிப்படையிலான விஞ்ஞானக் காலப் பாகுபாட்டு கால நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

ஈழத்து இந்து வெண்கலப்படிமக்கலை வரலாற்றிற்கு இன்னும் பல்வேறு வகையான பலமங்கள் சான்று சேர்க்க உதவுகின்றன. அவற்றுள் திருகோண மலையிலிருந்தும், திருக்கேதீஸ்வரத்திலிருந்தும் (மாந்தையிலிருந்தும்) கிடைக்கப் பெற்ற சோமஸ்கந்தமூர்த்தங்கள் மிகப் பிரதானமானவையாகும். திருக்கேதீஸ் வரத்தில் கிடைத்தவை கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்குரிய கலைமரபுகளைக் கொண்டுள்ளன. இவற்றினையும்விட சைவநாயன்மார் வெண்கலப் படிமங்களுள் சுந்தரருடைய படிமங்கள் ஈழத்தமிழர் வெண்கலப் படிமக்கலையில் அழகியல் ரீதியாக அவர்கள் ஈட்டிக் கொண்டிருந்த சாதனையின் வெளிப்பாடாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈழத்துச் சுந்தரருடைய வெண்கலப் படிமங்களை ஒத்த வேறு எவையும் தமிழகத்திலும் இதுவரையில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாக உள்ளது. மேலும் இங்கு கிடைக்கப்பெற்ற அர்த்தநாரீசுவரர் வெண்கலப்படிமம், காரைக்காலம்மையாருடைய பேயுருக்கொண்ட தோற்றத்தினையுடைய வெண்கலப்படிமம் என்பன ஈழத்துப் படிமக்கலை வரலாற்றிற்கு மேலும் மெருகூட்டுபவையாக உள்ளன. மாங்கனிக்குப் பதிலாக கையிலே மோதகத்துடன் தனது இருக்கையில் காட்சியளிக்கும் விநாயகருடைய வெண்கலப் படிமம் ஈழத்தின் அழகியற் கோட்பாட்டினை வெளியுலகிற்குப் பறைசாற்றுகின்றது எனலாம்.

இறுதியாக ஈழத்தில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பெற்று வெளிக்கொணரப்பட்ட இந்து வெண்கலப்படிமக்கலை மரபு தொடர்பாக பின்வரும் கருதுகோள்களினை நாம் மனதிற் கொள்ளலாம். அவை ஒரு வேளையில் ஈழத்தமிழர் வளர்த்தெடுத்த பண்பாட்டு மரபினை உறுதிசெய்வதற்கு உதவக்கூடும். அவையாவன:

அ) ஈழத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்து வெண்கலங்களில் பெரும்பாலானவை உள்ளூர் வேறுபாடுகளைக் கொண்டவை (பிராந்திய தனித்துவம் வாய்ந்தவை)

ஆ) கண்டுபிடிக்கப்பட்ட பல வெண்கலப்படிமங்கள் முடித்துக் கொடுக்கப்படாதவை (Unfinished).

இ) ஈழத்துக்கேயுரிய பிராந்திய வரிவடிவங்களுடனான வெண்கலப்படிமங்கள்.

ஈ) பௌத்த சிற்பக்கலைச் சாயல்களுடனான இந்து வெண்கலப் படிமங்கள்.

உ) மரபுரீதியான சிற்ப லஷணங்கள் மீறப்பட்ட நிலையில் படைக்கப்பட்ட வெண்கலப்படிமங்கள்.

ஊ) வணிக கணங்களுடைய பெயர்கள் பொறிக்கப்பட்ட வெண்கலப்படிமங்கள்.

மேற்கூறப்பட்ட ஆறு குணாதிசயங்களையும் நிறுவக்கூடிய வெண்கலப் படிமங்கள் ஈழத்திலிருந்து இதுவரையில் பெற்றுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் திட்டவட்டமாக ஈழத்தமிழர் வளர்த்தெடுத்த கலைப்பாரம்பரியத்தின் ஓரங்கமாகவே இவ் வெண்கலப் படிமக்கலையும் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதனை உறுதிப்படுத்தலாம்.

கந்தரோடையிற் கிடைத்த வெண்கல உலோகச் சிலைகள்

யாழ்ப்பாணத்தில் வெண்கலச் சிற்பக்கலை பற்றிய வரலாறானது மிகவும் தனித்துவமுடையதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் யாழ்ப்பாணத்தவர் கலைமரபு எனக் குறிப்பிட்டு இனங்காட்டக் கூடியவாறான தனித்துவமான கலையம்சங்களை இதுவரையில் வெண்கலச் சிற்பக்கலைமரபு பொறுத்து எடுத்துக்காட்டமுடியாது போனமையினாலாகும். ஆனாலும் வட இலங்கை மீதான அண்மைக்காலத் தொல்லியற் சான்றுகள் இப்பிராந்தியத்தோடு இணைந்து உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய பிரதேச தனித்துவம் வாய்ந்த நாணயங்களின் புழக்கத்தினையும், புராதன - பூர்வ பௌத்த, தமிழ்ப் பிராமி வரிவடிவங்களையும் - வாசகங்களையும் உள்ளடக்கிய வகையிலான சாசனங்களையும், அரசிருக்கை யையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்ற முறைமையைக் காண்கின்றோம். அம்முறைமையை மேலும் வலுப்படுத்தி, இப்பிரதேச தனித்துவத்தினைத் துல்லியமாக அடையாளம் கண்டுகொள்ளும் வகையிலான வெண்கல சிற்பங்கள் வழுக்கியாற்று மருங்கிலுள்ள கந்தரோடையிலிருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ளன. அவ்வகையான ஐந்து சிற்பங்களைப் பற்றிய ஆய்வினை உள்ளடக்கிய வகையில் இச்சிறு ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

கந்தரோடை: வாணிபப் பாரம்பரியத்தில் முகிழ்த்த கலைநகர்

புராதன வயல்நிலப்பரப்பினை பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் தொடர்ச்சியாகக் கொண்டு காணப்பட்டிருந்த வழுக்கையாற்றுப் பரப்பானது வரலாற்று ஆக்ககாலம் தொடக்கம் (Formative Period) வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகளிலும் குறிப்பிடத் தக்க அளவில் ஈடுபட்டு வந்திருந்தமையை கந்தரோடையிலிருந்து இதுவரையில் ஏராளமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்து கின்றன. கந்தரோடை என்ற மையத்தின் அமைவிடம், உள்நாட்டு, வெளிநாட்டு நீர்ப் போக்குவரத்திற்கு ஏற்றவகையில் அமைந்த நீர்வழி, நன்னீர் வளம், தரைப்பாதை ஆகியன வரலாற்று ஆக்க காலத்திலிருந்தே இம்மையத்தில் மக்களைக் குடியிருக்க வாய்ப்பளித்த காரணிகளாக அமைந்தன. இக்காரணி களின் சங்கமிப்பினால் உள்நாட்டு வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகளை முகாமைப்படுத்தி சந்தைப் பொருளாதார அசைவியக்கத்தை கந்தரோடையில் மிகவும் நீண்ட காலத்திற்கு நிலைபெற வைத்ததன் அடிப்படையில், மக்கள் வாழ்வு கலைவனப்புடன் செழிப்புடையதாக்கப்பட்டது. அப்பின்னணியில் தமிழக கடற்கரைப் பட்டினங்களான ஆதிச்ச நல்லூர், காவிரிப்பூம்பட்டினம், நாகபட்டினம், அரிக்கமேடு, கிருஷ்ணா நதியின் முகத்துவாரப் பகுதியான அமராவதி ஆகிய

செழிப்புமிக்க பண்பாட்டு மையங்களுடன் மிகவும் இறுக்கமான வாணிபப் பண்பாட்டுத் தொடர்புகளையும் கந்தரோடை கால ஒழுங்கில் ஏற்படுத்திக் கொண்டமையைக் காண்கின்றோம். இவ்வகையான பண்பாட்டுத் தொடர்புகளின் நிமித்தமாகவும், உள்நாட்டு மிகையுற்பத்தியின் இணைவின் காரணமாகவும் கந்தரோடையில் கலை நன்கு வளர்ச்சி கண்டிருந்தது. அவ்வளர்ச்சி நிலையின் ஒரு வெளிப்பாடாகவே கந்தரோடை ஈந்த பண்பாட்டுச் சான்றுகளுள் கிடைத்த வெண்கலச் சிலைகளையும் கொள்ள வேண்டியுள்ளது. அவ்வைந்து வெண்கலச் சிலைகளுள் காலத்தால் முற்பட்டவையாகக் காணப்படும் இரு கணேசர் சிலை களும், அதனைத் தொடர்ந்து ஹனுமான் சிலை ஒன்றும், சோழர்கால நாகபட்டினக் கலைக்கூட மரபினை வெளிப்படுத்தி நிற்கும் தங்கமுலாமிடப்பட்ட வெண்கலச் சமாதி புத்தர் சிற்பம் ஒன்றும்,[3] செம்பு உலோகத்தால் செய்யப்பட்ட பாலகிருஷ்ணர் சிலை ஒன்றுமாக ஐந்து சிலைகளை இவ்வாய்வுக் கட்டுரையின் கண் எடுத்து நோக்கமுடிகின்றது. கிடைத்த சான்றுகள் முதல் தடவையாக இங்கு ஆய்விற்கு எடுக்கப்படுவதினால் அவை பற்றிய ஆய்வுப் போக்கு விபரண ரீதியிலேயே இங்கு கொடுக்கப்படுகின்றது என்பது மனங்கொள்ளத்தக்கது.

கணேசர் சிலை இல. 1

வெள்ளிரும்பும், செம்பும் கலந்த வகையில் உருவாக்கப்பட்ட இச்சிலையானது 1995ஆம் ஆண்டில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட (பரீட்சார்த்த) பாதுகாக்கும் நோக்கில் அமைந்த அகழ்வின்போது (Resque Excavation) சந்தரோடையிலுள்ள உச்சாப்பனை என்ற மையத்தில் இருந்து மீட்கப்பட்டது. இச்சிலையினது உயரம் 5 சென்ரிமீற்றர் ஆகும். முற்பக்கத்தின் தோற்றத்தளவில் மிகவும் புராதன காலத்திற்குரிய தன்மையை வெளிப்படுத்தி நிற்கும் இக்கணேசரது உருவ லட்சணங்கள் தனித்தவம் வாய்ந்தவையாகும்.

வடிவமைப்பும் இயல்புகளும்

பெருங்கற்கால மண்படை அடுக்குகளிடையே புதையுண்டிருந்த இக்கணேசரது உருவவியலானது மிகவும் பொருமல் மிக்கதாகக் காணப்படுகிறது. அழுத்தம் திருத்தமற்ற மேற்பரப்பினூடே வெளியே புடைத்து நிற்கும் உறுப்புக்களே அவ்வுருவவியலை கணேசரது பூர்வீக வடிவம் (Proto type) என்பதனைச் சுட்டி நிற்கின்றன. இவ்வுருவத்தின் மேற்பாகத்தில் அதன் வலது, இடது புறங்களில் அகன்ற யானைச் செவி போன்று காதுகள் புடைப்புப் பண்பில் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. தும்பிக்கை போன்று மிக நீண்டபுருவம் ஒன்று அச்சிலையின் முகப்பரப்பில் புடைப்பு முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சுவஸ்திகா குறியீட்டினூடாக நீண்டு செல்லும் அத்தும்பிக்கையானது வலது பக்கம் நோக்கிய நிலையில் வளைக்கப்பட்ட முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையையும் அவதானிக்கத்தக்கது.

இச்சிற்ப வெளிப்பாட்டின் இன்னோர் சிறப்பியல்பு என்னவெனில் ஓங்கார வடிவத்தில் அதன் வடிவமைப்பு வெளிப்படுத்தப்படுவதற்கு முயன்றிருப்பது போல்

தோற்றமளிக்கின்றது எனலாம். அதாவது குறியீட்டு வடிவமைப்பில் இருந்து மானிட வடிவத்திற்கு கடவுளர் வணக்கம் படிப்படியாக இட்டுச் செல்லப்பட்ட முதலாவது படிமுறை வளர்ச்சியை இச்சிற்பத்தில் கண்டுகொள்ளமுடிகிறது. அவ்வடிப்படையில், கந்தரோடையிலிருந்து மீட்கப்பட்ட சிலை என்ற வகையில், வரலாற்றுதய காலக்கடவுளர் வரிசையில் இலங்கையில் புராதன உருவ அமைதியைக் கொண்டதாக இக்கணபதி வடிவம் அமைந்திருப்பது யாழ்ப்பாணத்த வரின் கலை வரலாற்றிற்குச் சான்று சேர்ப்பதாக அமையும் எனத் துணிந்து குறிப்பிடலாம். மேலும் இச்சிற்ப லட்சணங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு இடமுண்டு.

கணபதி உலோகச்சிலை: 2

செம்பு உலோகத்தாலான இப்படிமமானது வழுக்கையாற்றின் மருங்கில் உள்ள கற்பொக்கணை என்ற சிறு குறிச்சியொன்றிலிருந்து புதைந்த நிலையில் இருந்து மீட்கப்பட்டதாகும். 9 செ.மீ உயரத்தினையும் 5 செ.மீ அகலத்தினையும் கொண்டுள்ள இக்கணபதியின் படிமமானது யாழ்ப்பாணத்தின் விக்கிரஹவியல் வரலாற்றிற்குச் சான்று சேர்க்கின்ற ஓர் ஊடகமாக அமைவதனைக் காணலாம். பூரணப்படுத்தப்படாத ஒரு நிலையில் (Unfinished) தோற்றமளிக்கும் பீடமானது இரட்டைப்படுத்தப்பட்ட சதுர (Double Square) வடிவினைக் கொண்டு காணப்படு கின்றது. இருக்கின்ற நிலையில் காணப்படும் இக்கணபதியின் படிமக்கலையூடாக அதன் உருவவியல், வடிவமைப்பு, தாங்கியிருக்கும் கருவிகள், ஆபரணம் ஆகியவற்றின் தனித்தன்மை ஆகியனவற்றைக் கண்டுகொள்ள முடிகின்றது. இப்படிமமானது தற்போது யாழ்ப்பாண அரும்பொருளகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

உருவவியலும் கலைப்பண்பும்

மிருக வடிவமும் மானிட உருவும் ஒன்று கலந்த நிலையின் தொடக்க நிலையை இக்கணபதியின் உலோகச்சிலை எடுத்துக்காட்டுகின்றது. இதன் உருவ அமைப்பியலை எடுத்துக்கொண்டால் நான்கு தனித்துவமான கூறுகளை அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது. அவையாவன பின்வருமாறு:

1) யானைத் தலையின் தோற்றமும் காதுகளின் தன்மையும் (தும்பிக்கை நீட்சி பெறாத முப்பரிமாணநிலை)
2) முழங்கைப் பட்டையிலிருந்து நான்கு கரங்கள் பிரிவிடப்பட்ட தன்மை
3) உருண்டை வடிவிலான / மோதக வடிவிலான ஒரு பண்டத்திற்கு மேல் இருத்திவிட்ட தோற்றப்பாட்டுடனான வயிற்றுப் பாகம்
4) இரட்டைத் தாமரை மலர்ப்பீடம் ஆகியனவாகும்.

இக்கணபதியின் படிமச்சிரசு தனித்துவமான உருவ லட்சணத்தை வெளிப் படுத்தி நிற்பது ஓர் அபூர்வ தோற்றப்படாகும். கரண்ட மகுடத்தோற்றவமைப்பினை அடிப்படையில் கொண்டிருக்கும் சிரசில் யவனருடைய கலைப்பாணி துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள தன்மையை இனங்கண்டு கொள்ளமுடிகிறது. ஆந்திர

பௌத்த - திராவிட பாணிமரபின் அடியாக உதித்த யவனர்கலைப் பாணியை ஒத்து இக்கணபதி செப்புப்படிமம் அமைக்கப்பட்டிருப்பதனையும், ஆனால் மூஸிகத்துடன் கூடிய செப்புப் படிமத்தின் பீட அலங்கார வேலைகள் முடிவுறாத ஒரு நோக்குநிலையில் காணப்படுவதனையும் அவதானிக்கமுடிகிறது. எனவே முடிவுபடுத்தப்படாத ஒரு படிமம் என்ற வகையில் இக்கணபதி விக்கிரஹத்தினை யாழ்ப்பாண மண்ணுக்குரிய படைப்பாகக் கொள்ளமுடியும்.

கரங்களின் அமைப்பு

தனித்துவமான தோட்பட்டையுடன் கூடிய நான்கு கரங்களும் அலங்காரக் கலையம்சங்களினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. தனித்தவமான சிற்பச் செதுக்குகை என்னவென்றால் மார்பகம், புஜம் இவை இரண்டும் திண்மமான தன்மையை கொண்டுள்ள தோற்றப்பாட்டுடனான கரங்களின் வெளிப்படுகை ஆகும். புஜவலிமை வெளிப்படுத்தப்படும் வகையில் கரங்கள் தாங்கி நிற்கின்ற ஹஸ்தங்கள் நோக்கத்தக்கவையாகும்.

நான்கு கரங்களுள் வலது முன், பின் இரு கரங்களும் முறையே ஓலைச் சுவடியினையும், எழுத்தாணி/தந்தத்தினையும் கொண்டும், இடதுமுன், பின் கரங்கள் முறையே மோதகமும் (உடைந்துவிட்ட நிலையில் உள்ளது) வரதஹஸ்த்தமுமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சதுர பீடத்தின் வலது மூலையில் இருக்கும் மூஸிகம் இடது கையில் காணப்படும் மோதகத்தினை நோக்குவதாகவே வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வலதுபக்க இரு கரங்களின் மணிக்கட்டுக்களும் காப்புகளினால் அலங்காரப்படுத்தப்பட்ட தன்மை நன்கு தெளிவாகத் தெரிகின்றது.

முழங்கைப் பட்டையிலிருந்து பல கரங்கள் பிரிந்து செல்கின்ற மரபினை பிற்காலந் தென்னிந்திய வெண்கலச் சிலைமரபில் காணமுடிந்தாலும், காலத்தால் முற்பட்ட நிலைக்குரிய வெண்கலப்படிமம் என்ற வகையில் இக்கணபதி உலோகச் சிலையானது இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணக்குடா நாட்டினுள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்திற்குரிய காலஎல்லையில் உருவாக்கப்பட்டதாகவே கொள்ள வைக்கின்றது.

கணபதி உருவத்தோடு ஒத்திசைவாக அமைந்த உறுப்புக்களாக அமைந்த பாகம் அப்படிமத்தின் கால்களாகும். வலது பாதமானது சதுரமான பீடத்தின் மீது அமைந்தள்ள தாமரை மலரின்மீது கவித்து வைக்கப்பட்ட (பானை) வயிற்றுப் பாகத்தோடு அணைந்த வகையில் நிலைக்குத்தான பாதப்படுக்கையாக உருவமைக்கப்பட்டுள்ளது. இடது பாதமானது (பானை) வயிற்றுப்புறத்தினை அரவணைக்க முடியாத நிலையாக, தாமரைமலரில் அதன் துதிப்பாகம் பட்டும், முன்பகுதி தாவாத ஒரு நிலையிலும் வெளிப்படுத்தப்பட்டிருப்பதனைக் காணலாம். ஒரு வீச்சில் நோக்கிய தோற்றப்பாட்டில் இக்கணபதியின் படிமத்தின் முற்பகுதியில் ஒரு முழுக்கோளமான பாத்திரம் வைக்கப்பட்டது போன்ற உணர்வு அலை எழும் வண்ணம் அதன் உதரபாகமும், உதர பந்தமும் அமைக்கப்பட்ட சிறப்பினைக் காணலாம்.

(இதனையொத்த கருங்கற்சிற்பமொன்று உடுவிலில் உள்ள மல்வம் என்ற மையத்தில் அமைந்த கோவிலில் காணமுடிந்ததையும் இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது). மேலும் இக்கணபதியின் தும்பிக்கை இடது கையிலிருந்த மோதகத்துடன் இணைந்திருந்தது என்பதனை அதன் உடைவுப் பாகம் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றது. எனவே கந்தரோடையிலிருந்து மீட்டு எடுக்கப்பட்ட இக்கணபதி படிமம் எமது சுதேசக் கலைமரபினையே எடுத்து விளக்கி நிற்கின்றது என்பதனை நாம் காணமுடிகிறது.

ஹனுமார் சிற்பம் (வெண்கலப் பதக்கம்)

நாக வம்சத்தவர்களது அரசிருக்கையான கந்தரோடையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தொல்லியல் கலைக்கருவூலங்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க படிமமாகக் கிடைத்திருப்பது ஹனுமான் வெண்கலப்பதக்கமாகும். ஐந்து தலை நாகபாம்பொன்றின் குடைநிழலில் வாயுதேவனின் புத்திரரான உருத்திரமூர்த்தி ஹனுமான் பறந்து செல்கின்ற தோற்றப் பாடொன்றினை சிறைப்பிடித்த வகையில் இவ்வெண்கலப் பதக்கம் எமக்குக் கிடைத்துள்ளது. இப்படிமம் தற்பொழுது யாழ்ப்பாண அரும்பொருள்கத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உருவவியலும் லக்ஷணங்களும்

ஆறு அங்குல விட்டம் வாய்ந்த ஒரு வட்டத்திற்குள் மிகவும் வேலைப் பாடுடைய அலங்காரக் கோலங்களுடன் பறந்து செல்லும் ஹனுமானின் உருவ அமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது. மிகவும் ஆழமானதும், நுணுக்கமானதுமான கைவினைக் கலை வேலைப்பாடுகளைக் கொண்டு மிளிரும் வட்டமான இவ் வெண்கலப் பதக்கமானது யாழ்ப்பாணத்திற்கேயுரிய ஒரு கலைமரபின் தொடர்ச்சியின் வளர்ச்சிக்கான முத்திரையாக விளங்குவதனைக் காணலாம். அவ்வாறான ஒரு கலைவேலைப்பாடானது ஈழத்தில், சிறப்பாக யாழ்ப்பாணத்தின் கலைமரபின் வெளிப்பாடாக அமையும்போது அது எம் எல்லோரையும் வியக்கத்தக்க நிலைக்குள்ளாக்கும் என்பதும் தெளிவாகின்றது.

தென்னிந்திய படிமக் கலைமரபின் பின்னணியைவிடச் சற்றுத் தனித்துவமான வகையில் இங்கு ஹனுமானின் உருவ லஷ்ணம் அமைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஹனுமானின் இரு கரங்களும், இரு கால்களும் வானவெளியில் பறந்து கொண்டு செல்கின்ற திசைக்கும், எதிர்த்திசைக்குமேற்ப அங்க அசைவுகளை உடையதாக உருவமைக்கப்பட்டுள்ளது. சிறப்பாக வலது கரமும் வலது பாதமும் ஹனுமான் பறந்து செல்கின்ற திசைக்கு எதிர்த்திசையை நோக்கி (காற்றினது உராய்விற்கு ஏற்ப) இழுபட்டுச் செல்வதனைக் காண முடிகின்றது. அதேநேரத்தில் இடது கரமும் இடது பாதமும் செல்கின்ற திசையை எதிர்கொள்ளுமுகமாக வலுவான நிலையில் இருப்பதனைக் குறிப்பதற்கான மடிக்கப்பட்ட நிலையில் இடது கரமானது இடது முழந்தாளில் வேகத்தின் வலுவைச் சமப்படுத்தும் வகையில் அதன் உராய்வினைத் தாங்கும் முறையிலும்,

இடது பாதமானது மடிக்கப்பட்ட நிலையில் கீழே தொங்கிய வண்ணமுமாக உருவமைக்கப்பட்டமையையும் காணமுடிகிறது. ஒட்டுமொத்தமாக நோக்கின் ஹனுமான் என்ற உருவத்தின் இத்தோற்றப்பாடானது ஒரு நிகழ்வு நிகழ்ந்து கொண்டிருக்கின்ற காலம், இடம், வேகம் ஆகிய மூன்று அம்சங் களையும் ஒருங்கே வெளிப்படுத்துவதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பல சிறப்பியல்புகளைத் தாங்கிய ஹனுமன் வெண்கலப் பதக்கத்தை ஒத்த வகையில் இன்னொரு வெண்கலப் பிரதிமையானது மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள அரும்பொருளகமொன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு படிமங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது கந்தரோடையிலிருந்து எமக்குக் கிடைத்த கருவூலமானது மகாராஷ்டிர மாநிலத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கி.பி 16ஆம் நூற்றாண்டிற்குரிய படிமத்தைவிடக் காலத்தால் முற்பட்டது என்பதனைத் தெளிவாகக் கண்டு கொள்ளமுடிகின்றது. மூலிகை மலையிலிருந்து மிகவும் முக்கியமான மூலிகைக்கொடி ஒன்றினை மிகவும் அவசரமாக எடுத்துச் செல்லும் காட்சியை இவ்வெண்கலப் பதக்கம் வெளிப்படுத்தி நிற்கும் வகையில், இராமாயணத்தில் குறிப்பிடப்பட்ட ஐதீகமொன்றுக்கான காட்சியொன்றைச் சிறைப் படுத்துவதாக இவ்வெண்கலப் பதக்கம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இராமாயணக் காட்சிகளில் வரும் ஒரு முக்கிய கட்டத்தை இந்த வெண்கலப் படிமத்தினூடாக ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அதனைப் படிமக் கலையாக, வெளிப்படுத்துவதில் கலைஞன் முயன்று, வெற்றி கண்டுள்ளான் எனக் காணும்போது ஈழத் தமிழர் வாழ்வில் இராமாயணப் பண்பாடு மிக ஆழமாக வேரூன்றி நிலைத்திருந்தது என்பதனைக் காணமுடிகிறது.

காதணிகள் இரண்டும் மகர குண்டலங்களாகக் காணப்படுகின்றன. அவை தோட்பட்டைகளினால் தாங்கிய வண்ணம் தொங்கிக் கொண்டிருப்பது ஹனுமானின் காதின் வனப்பினை மேலும் மெருகுபடுத்துவதாகவே உள்ளது. 'பறத்தல்' என்ற நிகழ்வுடன் கூடிய உடற்தோற்ற இயலில் ஹனுமனின் கட்டுடல் வனப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ள வகை மிகவும் கூர்ந்து ஆராயத்தக்கதாகவுள்ளது. தடித்த வார்ப்பட்டையுடனான கட்டைக்காற்சட்டை போன்ற ஆடை முறை ரோமானிய கலைக் கூடத்தினைத் தழுவியதாகவே உள்ளது. இடுப்பிலுள்ள இந்த ஆடையின் இறுக்கமும் யௌவனமும், வார்ப்பட்டையில் தொங்குகின்ற உறையுடன் கூடிய வாளும் திட்டவட்டமாக ரோமானியக் கலைவார்ப்பினை வெளிப்படுத்தி நிற்கும் அம்சங்களாகும். இருப்பினும் கட்டைக் காற்சட்டையிடையே தொங்குகின்ற பீதாம்பரம் இந்திய அழகியலை வெளிப்படுத்துவதாக இருப்பதனைக் காணலாம். மிகவும் அலங்காரப்படுத்தப்பட்ட இப்பீதாம்பரம் விஷ்ணுவினுடைய ஆடை அலங்கார முறையுடன் தொடர்புபடுத்திய வகையில் ஆந்திரக் கலைமரபின் சாயலையே எமக்குத் தருகின்றது எனலாம். இத்தகைய ஆடை - அலங்கார வெளிப்பாட்டினை மையமாகக் கொண்டு பார்க்கையில் ஆந்திர - ரோமானிய கலையூற்றின் சாயலில் (கி.பி 3 - 6ஆம் நூற்றாண்டுகள்) யாழ்ப்பாணத்தில் படிமமாக்கப்பட்ட ஒரு பிரதிமையாகவே இவ்வனுமான் உலோகச்சிலை காணப்படுகிறது.

அதனை அப்படிமத்தில் காணப்படும் இன்னோர் சிறப்பம்சம் மேலும் வலுவுள்ளதாக்குகின்றது. அதாவது அனுமான் உடற்கட்டினை சட்டகப்படுத்தி உள்ள வட்டவடிவான வலது கீழ்ப்பக்க விளிம்பிலே புடைப்புச் சிற்பமுறையில் செதுக்கப்பட்டுள்ள இன்னோர் உருவ லஷணமாகும். அது பொலநறுவையில் காணப்படுகின்ற அகத்தியருடைய (புலத்தியர்) உருவத்தினை ஒத்த வகையில் ஒரு சிறிய மனிதவடிவமாகும். அனுமானுடைய மடிக்கப்பட்ட வலது பாதத்தின்கீழ் வளைவான சட்டகப் பரப்பில் புடைப்பு முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அகத்தியர் அல்லது புலத்தியர் வடிவம் தலையில் முடியுடனும், வலது கரத்தில் ஒரு வாளும், இடது கரத்தில் ஒரு கேடயமும் தாங்கிய வகையில், நிற்கின்ற சமபங்க நிலையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. திட்டவட்டமாக இவ்வடிவம் இலங்கைக்கேயுரிய ஒரு கலைக்கூறு என்பதனை அதன் உருத்தோற்றவியல் நன்கு உறுதிப்படுத்தியுள்ளது.

அனுமான் வெண்கலச் சிற்பத்தில் காணப்படுகின்ற மூன்றாவது அம்சமே இச்சிற்ப உள்ளடக்கத்தின் கலை வரலாற்றுப் பகைப்புலத்தினைக் கோடிட்டுக் காட்டும் அம்சமாக உள்ளது. அனுமானுடைய தலைக்குச் சிகரம் வைத்தாற்போல் ஐந்துதலை நாகமொன்றின் விரித்த தலை, வளையத்தின் உச்சியில் குடை போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. மிகவும் தனித்துவமான கலையின் இயல்பு களை வெளிப்படுத்தி நிற்கும் இந்த நாக வடிவம் மிகவும் அலங்கரிக்கப்பட்ட வகையில் அனுமானின் பறந்து செல்லும் பணிக்கு பாதுகாப்பினை வழங்குவது போன்று படிமமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாகதீபத்தின் புராதன தலைநகரம் என்ற வகையில் நாகத்தலையுடன் கூடிய அனுமானின் இவ்வெண்கலப் பதக்கமானது ஆந்திரநாகர் மரபின் வழிவந்த ஈழநாகர்களுடைய கலைப்பணியின் பெறுபேறாக அமைந்ததா என்பது மேலும் ஆராயத்தக்கதாகும்.

வெண்கலச் சமாதி புத்தர் படிமம்

மிகவும் அருமையானதும், யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுப் பெறுமதிமிக்கதுமான, தங்கமுலாமிடப்பட்ட சிறிய சமாதிப்புத்தர் படிமம் ஒன்று கற்பக்குணை என்ற சிறிய கிராமத்திலிருந்து ஒரு மட்பாண்டத்திற்குள் புதையுண்டிருந்த நிலையில் மீட்டு எடுக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டில் இந்த உலோக வார்ப்புச்சிலை கிடைத்திருந்தும் கூட, அதனை ஆய்விற்காகப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தினை இப்பொழுதே பெற்றுக்கொள்ள முடிந்தது என்பது குறிப்பிடத்தப்பது.

6 சென்ரிமீட்டர் உயரத்தினையும், 5 சென்ரிமீற்றர் அகரத்தினையும் கொண்ட இச்சமாதி நிலைக்குரிய புத்தர் உலோகச் சிலையானது தமிழ்நாட்டில் உள்ள நாகபட்டினத்து பௌத்தப் பள்ளிக்குரிய கலையம்சங்களோடு திகழ்வதனைக் காணலாம். இதனையொத்த புத்தர் உலோகச்சிலைகள் பல திருகோணமலை மாவட்டத்திலுள்ள 'வெல்கம்விகர' என்றழைக்கப்படும் சோழர் பௌத்தப் பள்ளியின் அழிபாடுகளிடையேயிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு, அவை இன்று அனுராதபுர அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

கற்பொக்குணையிலிருந்து கிடைத்த இவ்வெண்கலச் சமாதி புத்தர் நிலையின் உருவ இயல்பினை நோக்கும்போது சோழர்கால இலங்கையில் கந்தரோடை நகரமும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களும் தமிழ்ப் பௌத்தப் பண்பாட்டியலை இன்னும் தழுவியிருந்த ஒரு சந்தர்ப்பத்தினையே எமக்கு நினைவுகூர வைக்கின்றது. யோக நிலையில் கண்கள் இரண்டினையும் மூடிய முறையில், சமாதி இடுருக்கை நிலையைக் கொண்டுள்ள வண்ணம் இப்படிமம் வடிவமைக்கப் பட்டுள்ளது. கைகள் இரண்டும் இடது கை மீதாக வலது கை என்ற முறையில் யோக முத்திரையை வெளிப்படுத்திய வண்ணம் இப்பொன் முலாம் பூசப்பெற்ற புத்தர் பெருமானின் படிமம் கிடைத்துள்ளது. இடது மடித்த பாதத்தின் மீதாக வலது மடித்த பாதத்தைக் கொண்ட சந்திரகலை முறையில் இப்புத்தர் படிமம் வடிவமைக்கப்பட்ட வகையானது பௌத்த மதத்துடன் சந்திர மாத பருவகால வகை கொண்டுள்ள முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

இச்சிறிய உலோகப் படிமத்தின் தலையமைப்பினை நோக்கும்போது வட்டவட்டச் சுருள்கேசத்தின் உச்சியில் இடைவந்திக்கட்டுடனான கூரிய கேசபந்தம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். நீண்டு, ஒடுங்கித் தொங்கும் இருபக்க காதுகளுக்கும் முத்தாய்ப்பாக ஒரு சிகரம் வைத்தாற்போல் இப்புத்தர் படிமத்தின் உச்சிக்குடுமி நாகபட்டினத் தமிழ்ப் பௌத்தக் கலைமரபினை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கின்றது. கழுத்திலே உடலை ஒட்டிய வண்ணம் ஒரு சிறு நூல் கயிறு கட்டப்பெற்றுள்ள தோற்றத்துடன் இடது தோற்பட்டையூடாகச் செல்லும் இரட்டைப்பட்டு யக்ஞோபவீதமும் இப்படிமத்திலே துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சமபங்கநிலையுடனான இச்சமாதி புத்தர் படிமமானது அதன் உருவாக்கத்திலும் வடிவமைப்பிலும் தென்னிந்தியத் திராவிடக்கலை முறையை திட்டவட்டமாகவே வெளிப்படுத்தியிருப்பதன் அடிப்படையில் கிழக்கு மாகாணத்திலுள்ள திரியாய் என்ற இடத்தில் காணப்பட்ட சோழர்காலத்துச் சமகாலப் பண்பாட்டு நிலைமை களையே கந்தரோடையிலும் கொண்டிருந்திருக்கவேண்டும் என்பதனை இப்படிமக்கமல மரபின் கண்டுபிடிப்பு தற்போது எமக்குப் புலப்படுத்துகின்றது. அப்பின்னணியில் பார்க்கும்போது பிற்காலச் சோழர்களது தமிழ்ப் பௌத்தப் பண்பாட்டு விஷ்தரிப்பு நடவடிக்கைகளை யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் கந்தரோடை என்ற பழம்பெரும் புராதன நகரத்தையும் கொண்டிருந்தமையால், உரகநாட்டின் தலைநகராக கந்தரோடையே கி.பி 10ஆம் நூற்றாண்டு வரைக்கும் விளங்கியது என்பதும் தற்போது தெளிவாகின்றது.

யாழ்ப்பாணத்தின் விக்கிரஹவியல் கலை வரலாற்றிற்கு இவ்வுலோகச் சமாதி புத்தர் படிமமானது தனித்துவமான ஒரு வரலாற்றுப் பதிவினை வழங்கியுள்ளது எனலாம். இலங்கையைப் பொறுத்தவரையில் அத்தீவின் இந்து - பௌத்த சிற்பக்கலை வரலாறானது இந்தியாவைப் போலன்றி, இங்கு இரண்டு மதங்களும் இணைந்த ஒரு பொதுமையான கலை மரபிலிருந்தே வளர்த்தெடுக்கப்பட்டு

வந்திருக்கவேண்டும் என்று கலாநிதி புஸ்பரட்ணத்தின் திடமான தனது எண்ணக் கருவினைக் கொண்டிருந்ததனை உறுதிப்படுத்துவதாகவே இச்சமாதி புத்தருடைய படிமத்துடன் இணைந்து காணப்பட்ட மற்றொரு வெண்கல உலோகப் படிமமான பாலகிருஷ்ணருடைய படிமம் உறுதிப்படுத்தி நிற்கின்றது.

பாலகிருஷ்ணர் செப்புப்படிமம்

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் மருங்கில் அமைந்த கற்பொக்கணை என்ற கிராமத்தில் கிடைத்த இப்படிமமானது 10 சென்ரி மீட்டர் உயரத்தினைக் கொண்டு காணப்படுகின்றது. தனித்துவமான செம்பு உலோகத்தினாலான பாலகிருஷ்ணருடைய இப்படிமம் கவரத்தக்க கலை - அழகியல் வேலைப் பாடுகளுடன் மிளிர்வதே அதன் சிறப்பம்சமாக அமைகின்றது.

சிலையின் வடிவமைப்பும் இயல்புகளும்

இடது கையை தரையில் ஊன்றிய நிலையில் இடது காலை பின்னே மடித்தும் வலது காலை முன்வைத்தும் தவழ்ந்து வருகின்ற பாணியில் வடிவமைக்கப்பட்ட குழந்தைப் பருவத்திற்குரிய இப்பாலகிருஷ்ணர் படிமமானது அதன் வலது கரத்தில் வெண்ணெய்க் கட்டியொன்றைத் தாங்கியவாறு, ஒரு குழந்தை இனிப்புப் பண்டத்தினை கையில் வைத்து முதன்முதலாகச் சுவைப்பதற்கு எத்தனிக்கின்ற நோக்குநிலையில் இப்படிமம் மிகவும் தத்துரூபமாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

மிகவும் அலங்காரப்படுத்தப்பட்ட நிலையில் இப்படிமமானது காட்சி அளிக்கின்றது. தலையலங்காரத்தினைப் பொறுத்தவரையில் பார்ப்போரைக் கவரத்தக்க வகையில் தலைப்பாகையொன்று மிகவும் உயரமாக்கப்பட்ட நிலையில் சிரச சக்கரத்துடன் இணைக்கப்பட்டிருப்பதனைக் காணமுடிகின்றது. இத்தலைப் பாகை 6 கரண்ட வளையங்களினால் ஆனது. சிரச சக்கரத்தின் வெளிப்புறம் மலர் அலங்காரமொன்றினால் செழுமைப்படுத்தப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது.

தலையில் கேசம் நடு உச்சி - வகிடு முறையைக் கொண்டுள்ள நிலையில் அதன் சுருள்கள் முன்னெற்றியின் இரு மருங்கிலும் தொங்கிக் கொண்டுள்ள மையைப் போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. உச்சி வகிட்டின் இருபுறத்திலும் சூரிய - சந்திர பிறை எனக் குறிப்பிடப்படும் தலையலங்காரம் காணப்படுகின்றன.

இருபக்கக் காதுகளுடனும் காதுக்குஞ்சங்கள் செருகப்பெற்று இருபக்க தோட்பட்டையிலும் அவை வந்து தொங்குகின்ற காட்சி மிகவும் அற்புதமாக வுள்ளது. காதுகளில் குண்டலங்கள் செருகப் பட்டிருக்கின்ற விதமும் தனித்துவ மானது. இருபக்க காதுகளின் மேற்சோணைக்கு அருகாக தலைப்பாகையின் இருபக்க சோணைகள் வெளியே தெரியும் வகையில் காட்சியளிப்பது பிற்பக்கப் பார்வையில் பூனையின் காதுகள் போன்ற தோற்றத்தினை நினைவூட்டவல்ல தாகவுள்ளது. ஒட்டுமொத்தத்தில் மிகச்சிறிய இவ்வெண்கலப் படிமத்தின் தலையலங்காரம் மிகமிக அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

கழுத்திலுள்ள ஆபரணக் கலையைப் பார்க்கும்போது அவை மிகவும் தனித்துவமானவையாக மிளிர்வதனைக் காணமுடிகின்றது. மூன்று வகையான கழுத்தாபரணங்களை இச்செப்புப் படிமத்தில் காணமுடிகிறது. குழந்தையின் கழுத்தோடு ஒட்டிய வகையில் நூலில் இணைக்கப்பட்ட ஒரு தாயத்து, அதற்குக்கீழ் கிண்கிணி மாலை அல்லது முத்துவடம் அதற்கு மேல் மிகவும் தடிப்பான மூன்றுவடம் கொண்ட சங்கிலியுடனான பஞ்சாயுதம் தொங்கிக் கொண்டிருக்கின்ற வகையிலும் கழுத்தாபரணங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. குழந்தை குனிந்து தவழ்ந்து வருகின்ற நிலைக்கேற்ப நீண்ட பஞ்சாயுத மாலை உடலோடு சரிந்து, தொங்கிய வண்ணம் இருப்பதனைக் காணலாம். குழந்தையின் அரைஞாண் கயிறும் அதன் இரட்டைப்பட்டு வடமும் அதிற் செருகப்பட்டிருக்கின்ற கிண்கிணி மணிகளும் இடுப்பின் இருபுறத்திலும் தொங்கும் குஞ்சங்களும் மிகவும் அற்புதமான அழகியல் உணர்வோடு வடிவமைக்கப் பட்டுள்ளன. காற்பாதங்களில் இரட்டைக் கொலுசும், கைகளில் வளையல்களுடன் இணைந்த குஞ்சங்களும் மேலும் இப்படிமத்தை மெருகூட்டுகின்றன.

கற்பொக்கணையிற் கிடைத்த பாலகிருஷ்ணருடைய இப்படிமமானது அதன் முகத்தோற்றத்தில் ஈழத்திற்கேயுரிய கலைவனப்பினை வெளிப்படுத்தி நிற்கின்றது எனலாம். இதேமுகச் சாயலையொத்த சிவனது வெண்கலச் சிலையொன்றை பொலநறுவையில் காணமுடிவதிலிருந்து இப்படிமத்தை ஈழத்திற்கேயுரியது எனத் திட்டவட்டமாகக் கொள்ளமுடியும். பிற்காலச் சோழ மரபிற்குரிய வெண்கலச் சிற்ப முறையை இப்படிமம் பிரதிபலித்து நிற்பதன் அடிப்படையில் கி.பி 10ஆம் 11ஆம் நூற்றாண்டிற்குரிய ஈழத்தில் வடிவமாக்கப்பட்ட ஒரு கலைக் கருவூலம் எனக் கொள்வதில் தவறுகள் இருக்காது.

முடிவுரை

கந்தரோடையிற் கிடைத்த வெண்கல உலோகச் சிலைகள் என்ற தலைப்பினாலான இவ்வாய்வுக் கட்டுரையின் பிரதானமான நோக்காக அமைந்தது யாழ்ப்பாணக் குடாநாட்டின் பண்பாட்டுப் பரிமாணத்தில் அண்மையில் புதிதாகக் கிடைத்த உலோகச் சிலைகள் பெறும் வீச்சினை வரையறை செய்வதாகவே அமைந்தது. ஆதலால் யாழ்ப்பாணத்தவரது சுதேசக் கலைமரபிற்குக் கிடைத்த இவ் உலோகச் சிலைகள் ஓர் உரைகல்லாக அமையுமா என நோக்கும்போது அவற்றைப் பின்வருமாறு வரையறை செய்யமுடிகிறது. அவையாவன:

1) தென்னிந்திய பெருநிலப் பரப்பினைக் காட்டிலும் இலங்கைத் தீவில் கலையின் தோற்றம் காலத்தால் முற்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கேற்ற உலோகச் சிலைகள் கிடைத்துள்ள வகை.

2) தென்னிந்திய பெருநிலப் பரப்பில் தோற்றம்பெற்ற சமய தத்துவப் புலத்திற்கான மிகவும் நேர்த்தியான கலையமைப்பு ஈழத்திலேயே தோற்றுவிக்கப்பட்டது என்பதும், யாழ்ப்பாணக் குடாநாடும் அதற்குப் பங்களித்துள்ளது என்பதும்,

3) தென்னிந்தியக் கலைமரபுகளை உள்வாங்கிய அதேநேரத்தில் ஈழத்தவர் களுக்கு அல்லது யாழ்ப்பாணத்தவர்களுக்கு எனத் தனித்துவமான கலைவடிவை உருவாக்கியிருந்தமை என்பதும்

யாழ்ப்பாணத் தமிழர்களது வாழ்வின் தொன்மையை- வெறுமையின்மையை வெளிப்படுத்துவதற்கு தொல்லியல் அடிப்படையிலான மேலாய்வு, அகழ்வாய்வுகள் என்பன தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட வேண்டும் என்பதனையுமே மேற்கூறப்பட்ட வெண்கலப் படிமங்களின் வடிவமைப்பும் இயல்புகளும் எமக்குத் தெரிவிக்கின்ற செய்திகளாகும்.

பின்னிணைப்பு - 1

அநுராதபுரகால மன்னர் வரிசையும் கால ஒழுங்கும்

பெயர்	காலம்	தலைநகரம
விஜயன் (Mythical King)	கி.மு. 544 - 505	தம்மன்னுவர
உபதிசன்	கி.மு. 505 - 504	உபதிசநுவர
பாண்டுவாசுதேவன்	கி.மு. 504 - 474	உபதிசநுவர
அபயன்	கி.மு. 474 - 454	உபதிசநுவர
உண்ணாட்டுக்கலகம்	கி.மு. 454 - 437	
பண்டுகாபயன்	கி.மு. 437 - 367	அநுராதபுரம்
மூத்தசிவன்	கி.மு. 367 - 307	அநுராதபுரம்
தேவநம்பியதீசன்	கி.மு. 307 - 267	அநுராதபுரம்
உதியன்	கி.மு. 267 - 257	அநுராதபுரம்
மகாசிவன்	கி.மு. 257 - 247	அநுராதபுரம்
சூரதிசன்	கி.மு. 247 - 237	அநுராதபுரம்
சேனன் + குட்டகன்	கி.மு. 237 - 215	அநுராதபுரம்
அசேலன்	கி.மு. 215 - 205	அநுராதபுரம்
எல்லாளன்	கி.மு. 205 - 161	அநுராதபுரம்
துட்டகாமணி	கி.மு. 161 - 137	அநுராதபுரம்
சாந்ததிசன்	கி.மு. 137 - 119	அநுராதபுரம்
துலத்தநாகன்	கி.மு. 119	அநுராதபுரம்
லாஞ்சதிசன்	கி.மு. 119 - 109	அநுராதபுரம்
கல்லாடநாகன்	கி.மு. 109 - 104	அநுராதபுரம்
வட்டகாமணி	கி.மு. 104 -	அநுராதபுரம்
புலஹத்தா	கி.மு. 103 - 100	அநுராதபுரம்
பாகியன்	கி.மு. 100 - 98	அநுராதபுரம்
பனயமாற	கி.மு. 98 - 91	அநுராதபுரம்
பிலயமாற	கி.மு. 91 -	அநுராதபுரம்
தாதியன்	கி.மு. 90 - 88	அநுராதபுரம்
வட்டகாமணி	கி.மு. 88 - 76	அநுராதபுரம்
மகாகுலிமாகாதிச	கி.மு. 76 - 62	அநுராதபுரம்
சோரநாகன்	கி.மு. 62 - 50	அநுராதபுரம்
குடதிசன்	கி.மு. 50 - 47	அநுராதபுரம்
அனுலா	கி.மு. 47 - 41	அநுராதபுரம்
மகலாந்தகதிசன்	கி.மு. 41 - 19	அநுராதபுரம்
பட்டிகாபயன்	கி.மு. 19 - 09	அநுராதபுரம்
மகாதாதிகமகாநாக	கி.மு. 09 - 21	அநுராதபுரம்
ஆமண்டகாமணிஅபய	கி.பி. 21 - 30	அநுராதபுரம்
கினிஹிரிதல்ல	கி.பி. 30 - 33	அநுராதபுரம்

சுலாபயன்	கி.பி.	33 -	34	அநுராதபுரம்
சீவலி	கி.பி.	34 -	38	அநுராதபுரம்
ஈழநாக	கி.பி.	38 -	44	அநுராதபுரம்
சந்தமுகசிவன்	கி.பி.	44 -	52	அநுராதபுரம்
யஸலாளகதிசன்	கி.பி.	52 -	60	அநுராதபுரம்
சுபா	கி.பி.	60 -	66	அநுராதபுரம்
வசபன்	கி.பி.	66 -	110	அநுராதபுரம்
வங்கநாசிகன்	கி.பி.	110 -	113	அநுராதபுரம்
கஜபாகு	கி.பி.	113 -	125	அநுராதபுரம்
மகல்லகநாகன்	கி.பி.	125 -	131	அநுராதபுரம்
பட்டியதிசன்	கி.பி.	131 -	155	அநுராதபுரம்
கனிட்டதிசன்	கி.பி.	155 -	173	அநுராதபுரம்
சூளநாகன்	கி.பி.	173 -	183	அநுராதபுரம்
குடநாகன்	கி.பி.	183 -	184	அநுராதபுரம்
சிறீநாகன் 1	கி.பி.	184 -	209	அநுராதபுரம்
வொகாரிகதிசன்	கி.பி.	209 -	231	அநுராதபுரம்
அபயநாகன்	கி.பி.	231 -	239	அநுராதபுரம்
ஸ்ரீநாகன் 11	கி.பி.	239 -	241	அநுராதபுரம்
விஜயகுமார 11	கி.பி.	241 -	242	அநுராதபுரம்
சங்கதீசன்	கி.பி.	242 -	246	அநுராதபுரம்
ஸ்ரீசங்கபோ	கி.பி.	246 -	248	அநுராதபுரம்
கொடபாயன்	கி.பி.	248 -	261	அநுராதபுரம்
ஜெட்டதிசன்	கி.பி.	261 -	275	அநுராதபுரம்
மகாசேனன்	கி.பி.	275 -	303	அநுராதபுரம்
கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன்	கி.பி.	303 -	331	அநுராதபுரம்
ஜெட்டதிசன் 11	கி.பி.	331 -	340	அநுராதபுரம்
புத்ததாச	கி.பி.	340 -	368	அநுராதபுரம்
உபதிசன் 1	கி.பி.	368 -	410	அநுராதபுரம்
மகாநாமன்	கி.பி.	410 -	432	அநுராதபுரம்
சோத்திசேன	கி.பி.	432 -		அநுராதபுரம்
லாமினிதிசன்	கி.பி.	432 -	433	அநுராதபுரம்
மித்தசேனன்	கி.பி.	433 -	434	அநுராதபுரம்
பாண்டு	கி.பி.	434 -	439	அநுராதபுரம்
பாரிந்த	கி.பி.	439 -	451	அநுராதபுரம்
குட்டபாரித்த	கி.பி.	451 -	456	அநுராதபுரம்
திரிதர	கி.பி.	456 -		அநுராதபுரம்
தாதிய	கி.பி.	456 -		அநுராதபுரம்
பிட்டிய	கி.பி.	456 -		அநுராதபுரம்
தாதுசேனன்	கி.பி.	456 -	477	அநுராதபுரம்
காசியப்பன்	கி.பி.	477 -	495	சிகிரியா

மொஹல்லான	கி.பி.	495 -	512	அநுராதபுரம்
குமாரதாச	கி.பி.	512 -	521	அநுராதபுரம்
கீர்த்திசேனன்	கி.பி.	521 -		அநுராதபுரம
மாடசிவன்	கி.பி.	521 -		அநுராதபுரம்
உபதிஸ்ஸ 11	கி.பி.	521 -		அநுராதபுரம்
சீலாகாலன்	கி.பி.	521 -	534	அநுராதபுரம்
தப்புலன் 1	கி.பி.	534 -	535	அநுராதபுரம்
மொஹல்லான 11	கி.பி.	535 -	555	அநுராதபுரம்
கீர்த்தி ஸ்ரீமேகவர்ணன்	கி.பி.	555 -	572	அநுராதபுரம்
மகாநாகன்	கி.பி.	572 -	575	அநுராதபுரம்
அக்கிரபோதி 1	கி.பி.	575 -	608	அநுராதபுரம்
அக்கிரபோதி 11	கி.பி.	608 -	618	அநுராதபுரம்
சங்கதிசன் 11	கி.பி.	618 -		அநுராதபுரம்
மொஹல்லான 111	கி.பி.	618 -	623	அநுராதபுரம்
சிலாமேகவண்ண	கி.பி.	623 -	632	அநுராதபுரம்
அக்கபோதி 111	கி.பி.	632 -	648	அநுராதபுரம்
ஜெட்டதிஸ்ஸ111	கி.பி.	632 -		அநுராதபுரம்
தாத்தோபதிஸன் 1	கி.பி.	648 -	650	அநுராதபுரம்
காஸியப்பன் 11	கி.பி.	650 -	658	அநுராதபுரம்
தப்புலன் 11	கி.பி.	658 -	659	அநுராதபுரம்
தாத்தோப திஸ்ஸ 11	கி.பி.	659 -	667	அநுராதபுரம்
அக்கபோதி iv	கி.பி.	667 -	683	அநுராதபுரம்
தாத்த	கி.பி.	683 -	684	அநுராதபுரம்
கத்தாடதன்	கி.பி.	684 -		அநுராதபுரம்
மானாவர்மன்	கி.பி.	684 -	718	அநுராதபுரம்
அக்கிரபோதி v	கி.பி.	718 -	724	அநுராதபுரம்
காஸியப்ப 111	கி.பி.	724 -	731	அநுராதபுரம்
மகிந்து 1	கி.பி.	731 -	732	அநுராதபுரம்
அக்கிரபோதி vi	கி.பி.	732 -	772	அநுராதபுரம்
அக்கிரபோதி vii	கி.பி.	772 -	778	அநுரா/பொலனறுவை
மகிந்த 11	கி.பி.	778 -	797	அநுராதபுரம்
தப்புலன் 111	கி.பி.	802 -	806	அநுராதபுரம்
மகிந்த 111	கி.பி.	797 -	802	அநுராதபுரம்
அக்கிரபோதி viii	கி.பி.	806 -	817	அநுராதபுரம்
சேனன்1	கி.பி.	883 -	853	அநுராதபுரம்
சேனன் 11	கி.பி.	853 -	887	அநுராதபுரம்
உதயன் 11	கி.பி.	887 -	896	அநுராதபுரம்
காசியப்பன் iv	கி.பி.	896 -	913	அநுராதபுரம்
காசியப்பன் v	கி.பி.	913 -	923	அநுராதபுரம்
தப்புலன் iv	கி.பி.	923 -		அநுராதபுரம்

தப்புலன் V	கி.பி.	923 -	935	அநுராதபுரம்
உதயன் 111	கி.பி.	935 -	938	அநுராதபுரம்
சேனன்111	கி.பி.	938 -	946	அநுராதபுரம்
உதயன் iV	கி.பி.	946 -	954	அநுராதபுரம்
சேனன் iV	கி.பி.	954 -	956	அநுராதபுரம்
மகிந்தன் iV	கி.பி.	956 -	972	அநுராதபுரம்
சேனன் V	கி.பி.	972 -	982	அநுராதபுரம்
மகிந்தன் V	கி.பி.	982 -	993	அநுராதபுரம்
இராசராசன் I	கி.பி.	993 -	1012	அநுராதபுரம்

பொலனறுவைக்கால மன்னர் வரிசையும் கால ஒழுங்கும்

சோழமன்னர் ஆட்சி	கி.பி.	1017 -	1070	பொலனறுவை
விஜயபாகு 1	கி.பி.	1070 -	1110	பொலனறுவை
ஜயபாகு 1	கி.பி.	1110 -	1111	பொலனறுவை
விக்கிரமபாகு 1	கி.பி.	1111 -	1132	பொலனறுவை
கஜபாகு 11	கி.பி.	1132 -	1153	பொலனறுவை
பராக்கிரமபாகு 1	கி.பி.	1153 -	1186	பொலனறுவை
விஜயபாகு 11	கி.பி.	1186 -	1187	பொலனறுவை
கீர்த்தி நிசங்கமல்ல	கி.பி.	1187 -	1196	பொலனறுவை
விக்கிரமபாகு 11	கி.பி.	1196 -		பொலனறுவை
சோடகங்க	கி.பி.	1196 -	1197	பொலனறுவை
லீலாவதி (மு.முறை)	கி.பி.	1197 -	1200	பொலனறுவை
சாஹஸமல்லன்	கி.பி.	1200 -	1202	பொலனறுவை
கல்யாணவதி	கி.பி.	1202 -	1208	பொலனறுவை
தர்மாசோகதேவ	கி.பி.	1208 -	1209	பொலனறுவை
அனிகங்க மகாதிபாத	கி.பி.	1209		பொலனறுவை
லீலாவதி (இ.முறை)	கி.பி.	1209 -	1210	பொலனறுவை
லோகேஸ்வரன்	கி.பி.	1210 -	1211	பொலனறுவை
லீலாவதி (மூ.முறை)	கி.பி.	1211 -	1212	பொலனறுவை
பராக்கிரமபாகு 11	கி.பி.	1212 -	1215	பொலனறுவை
மாகன்	கி.பி.	1215 -	1236	பொலனறுவை

இடப்பெயர்வுக்கால மன்னர்கள் வரிசை

விஜயபாகு 111	கி.பி.	1232 -	1236	தம்பதெனியா
பராக்கிரமபாகு 11 (பண்டித பராக்கிரமபாகு)	கி.பி.	1236 -	1270	தம்பதெனியா
விஜயபாகு IV	கி.பி.	1270 -	1272	பொலனறுவை
மித்தா	கி.பி.	1272 -		பொலனறுவை
புவனேகபாகு 1	கி.பி.	1272 -	1284	யாப்பகூவ
சந்திரபானு	கி.பி.	1270 -		யாப்பகூவ
பராக்கிரமபாகு 111	கி.பி.	1287 -	1293	பொலனறுவை

புவனேகபாகு 11 (வரஸ்திசேலபுர)	கி.பி. 1293 - 1302	குருநாகல்
பராக்கிரமபாகு iv	கி.பி. 1302 - 1326	குருநாகல்
புவனேகபாகு 111	கி.பி. 1326 - 1335	குருநாகல்
விஜயபாகு v	கி.பி. 1335 - 1341	குருநாகல்
புவனேகபாகு 1V (கங்கசிறீபுர)	கி.பி. 1341 - 1351	கம்பளை
பராக்கிரமபாகு V	கி.பி. 1344 - 1359	கம்பளை
விக்கிரமபாகு 111	கி.பி. 1357 - 1374	பேராதனை
புவனேகபாகு V	கி.பி. 1371 - 1408	கம்பளை
வீரபாகு 11	கி.பி. 1408 - 1410	கம்பளை
பராக்கிரமபாகு VI	கி.பி. 1411 - 1466	கோட்டை
பராக்கிரமபாகுVII (வீர பராக்கிரமபாகு)	கி.பி. 1477	கோட்டை
பராக்கிரமபாகு viii	கி.பி. 1477 - 1489	கோட்டை
பராக்கிரமபாகு ix	கி.பி. 1489 - 1513	கோட்டை

யாழ்ப்பாண இராச்சியமும் ஆட்சியாளர்களின் ஒழுங்கும்.

விஜயகூழங்கைச்சக்கரவர்த்தி	கி.பி. 1215 - 1240	கந்தரோடை
குலசேகரசிங்கையாரியன்	கி.பி. 1240 - 1256	கந்தரோடை
குலோத்துங்கசிங்கையாரியன்	கி.பி. 1256 - 1279	கந்தரோடை
விக்கிரம சிங்கையாரியன்	கி.பி. 1279 - 1302	கந்தரோடை
வரோதய சிங்கை ஆரியன்	கி.பி. 1302 - 1325	நல்லூர்
மார்த்தாண்டசிங்கையாரியன்	கி.பி. 1325 - 1348	நல்லூர்
குணபூசண சிங்கை ஆரியன்	கி.பி. 1348 - 1371	நல்லூர்
வரோதயசிங்கை ஆரியன்	கி.பி. 1371 - 1380	நல்லூர்
ஜெயவீரசிங்கை ஆரியன்	கி.பி. 1380 - 1410	நல்லூர்
குணவீரசிங்கை ஆரியன்	கி.பி. 1410 - 1440	நல்லூர்
கனகசூரியசிங்கையாரியன்	கி.பி. 1440 - 1450	நல்லூர்
சபுமால்குமரய்ய (செண்பகப்பெருமாள்)	கி.பி. 1450 - 1479	நல்லூர்
கனகசூரியசிங்கையாரியன்	கி.பி. 1467 - 1478	நல்லூர்
சிங்கை பரராசசேகரன்	கி.பி. 1478 - 1519	நல்லூர்
சங்கிலி - 1	கி.பி. 1519 - 1561	நல்லூர்
புவிராச பண்டாரம்	கி.பி. 1561 - 1665	நல்லூர்
பெரியபிள்ளை	கி.பி. 1565 - 1582	நல்லூர்
புவிராசபண்டாரம்	கி.பி. 1582 - 1591	நல்லூர்
எதிர்மன்னசிங்கம்	கி.பி. 1591 - 1616	நல்லூர்
சங்கிலி 11	கி.பி. 1616 - 1619	நல்லூர்

BIBLIOGRAPHY

இராசமாணிக்கனார், டாக்டர் மா : சோழர் வரலாறு (மூன்று பாகங்கள்) சென்னை 1959.

இராசநாயகம், முதலியார் செ. : யாழ்ப்பாணச் சரித்திரம - யாழ்ப்பாணம், 1933.

இந்திரபாலா, கா. : இலங்கையில் தமிழர - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு (கி.மு. 300 - கி.பி. 1200), குமரன் புத்தக இல்லம். கொழும்பு, 2006.

சத்தியநாதய்யர், ஆர் பாலசுப்பிரமணியன், டீ : இந்திய வரலாறு அண்ணாமலை, 1960.

சதாசிவப்பண்டாரத்தார், ரீ.வீ. : பாண்டியர் வரலாறு, சென்னை, 1966.
பிற்காலச்சோழர் வரலாறு (3 பாகங்கள்) அண்ணாமலை நகர், 1967.

சபாநாதன், முதலியார் குல.(ed) : யாழ்ப்பாண வைபவமாலை, கொழும்பு, 1953.

சுப்பிரமணியன், ந : இந்திய வரலாறு (முதற்பாகம்) சென்னை, 1964.

சுதாகரன், கு. & உதயமலர், உ. (ed) : காலசுரபி, இதழ் iii , 2001, வரலாற்றுக்கழகம், யாழ்-பல்கலைக்கழகம்.

சித்திரலேகா, மௌ., (ed) : இலங்கையில் இனத்துவமும் சமூகமாற்றமும், SSA வெளியீடு, கொழும்பு, 1980.

உசோலின்சன் : இந்தியா-ஒரு பண்பாட்டு வரலாற்றுச் சுருக்கம்

பரணவிதான, செ. : இலங்கைத் தூபி

புஷ்பரட்ணம், ப. : பூநகரி- தொல்பொருளாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, 1993.

நீலகண்ட சாஸ்திரி க.அ : தென்இந்திய வரலாறு

ஸிரிமா கிரிபமுண., : கலிங்கர் ஆட்சிக்காலம் - 'சிந்தனை', மலர் 1, இதழ் 1 - 4, பேராதனை, 1969.

நடராசா, வே.க. : பண்டைய ஈழம் (1ம் 2ம் பாகங்கள்) சேது நூலகம், கரவெட்டி, 1971.

Culavamsa (Parts I & II) : **(Ed.) W. Geiger, Colombo, 1953.**

Dipavamsa : **(Ed.) B.C. Law, C.H.J. Colombo, 1959.**

Mahavamsa : **(Ed.) W.Geiger, with Addendum by G.C. Mendis Colombo, 1950.**

Rajavali : **(Ed.) B. Gunasekara, Colombo,** 1954.

Yogasundaram, N., : **History of Sri Lanka**, Vijitha Yapa publication, Colombo, 2008.

Basham, A.L. : Prince Vijaya and the Aryanisation of Ceylon C.H.J. Vol.I, pp. 163 - 171.

Nilakanta Sastri, K.A. : Vijavabahu I, Liberator of Lanka J.C.B., R.A.S. New Series Vol. IV pp. 45 - 71.

Paranavitana, S : 'Pre Buddhist Religious beliefs in Ceylon JCBRAS Vol.XXXI, pp. 302 - 328.

Paranavitana, S : Mahayanism in Ceylon CJSG Vol. II, pp. 35 - 71.

Paranavitana, S : Sigiri, the abode of a God King JCBRAS, J.S. pp. 129 - 183.

Paranavitana, S : Kalinga Dynesty of Ceylon, CJSG, Vol. VII, pp. 57 - 64.

Perera, E.W. : **The Age of Parakramabahu** VI, JCBRAS Vol. XXII, pp 6 - 44.

Adikaram, E.W. : **Early History of Ceylon** (1953)

Ariyapala, M.B. : **Society in Medieval Ceylon** (1956)

Godakumlbara C.E. : **Sihalese Literature** (1955)

Hall D.G.E. : **A History of South East Asia** : MacMillan (1964)

Kanagasabaipillai, S : **Tamils Eighteen Hundred years ago**, Madras, 1961.

Liyanagamage, Amaradasa : **The Decline of Pollonaruwa and the Rise of Dambadeniya** (1968).

Malalasekarea, G.P. : **Pali Literature of Ceylon** (1958)

Mudiyanse, Nandasena : **Mahayana Monuments in Ceylon** (1967)

Navaratnam, C.S. : Tamil & Ceylon, 1st Ed. Jaffna.

Navaratnam, C.S : Vanni and the Vanniyas - Jaffna.

Nicholas & Paranavitana : A Concise History of Ceylon (1961).

Nilakanta Sastri, K.A. : A History of South India, Madras, 1958.

Paranavitana, S : Ceylon and Malaysia (1966)

Paranavitana, S (Ed.) : University of Ceylon, History of Ceylon, Vol.I, Parts I & II (1959 & 60).

Pillai, K. K. : South India & Ceylon, Madras (1963)

Raghavan, M. D. : Handsome Beggars (1957).

Rahula, Walpola Rev. : History of Buddhism in Ceylon (1956)

Rasanayagam, Mudaliyar, C : Ancient Jaffna Madras (1926)

Wijesekara, N. D : The People of Ceylon (1951).

Begley, Vimala : Archaeological Exploration in Northern Ceylon Expedition, 9 (4) Summer, 1967.

Casie Chetty, Simon : "Vedi - Arasan - Kottai", C.J. 1832.

Casie Chetty, Simon : "Description of a ruin at Welaney", C.J. 1 (4) Jan 13, 1852.

Casie Chetty, Simon : "On the History of Jaffna from the earliest period to the Dutch Conquest", J.R.A.S.C.B.Vol. I, 1845 - 48.

Codrington, H.W. : Ceylon coins and currency, Colombo, 1924.

Cdorington, H.W. : A short History of Ceylon

Devendra, Don Titus : "A ruined degaba in delft" J.R.A.S.C.B. 13, 1969 (Vedi Arasan Kottai)

Ellawala, H : Social History of Early Ceylon, Dept. of Cultural Affairs, Ceylon, 1969.

Gnanaprakasar, S : "The forgotten coinage of the kings of Jaffna", C.L.A.R., 1920, April, p. 172.

Gnanaprakasar, S : 'Sankily's fortress at Kopay, C.A.L.R. 2(3) 1917, pp 194 - 195.

Gnanaprakasar, S : "Sinhalese place name in the Jaffna peninsula", C.A.L.R, 1910 - 17, p. 167.

Godakumbura, Charles Edmund, : 'Archaeology of Ceylon's Northern Peninsula, I & III C.T. Jan 1967, 3 - 10, Aug. 1967 10 - 15: Nov. 1967.

Godakumbura, C.E., : Kanterodai" J. R.A.S.C.B. 12, 1968.

Horsburgh, B : "Sinhalese place - name in the Jaffna Peninsula, C.A.L.R., 1916 - 17, p.54.

Iravatham Mahadevan : 'Some Rare coins of Jaffna', Damilica, Vol.I Journal of the department of Archaeology, Governmnet of Tamil Nadu.

Indrapala, K. : The Evolution of an Ethnic Identity: The Tamils in Sri Lanka(B.C.300 -1200 A.D.) The South Asian Studies Centre, Sydney,2005.

Indrapala, K : (Editor), Epigraphia Tamilica, Jaffna Archaeological Society Publication Series, No.I Jaffna, 1971.

Indrapala, K : "The Nainativu Tamil Inscription of Parakramabahu - I, U.C.R. XXI No.I Ap. 1963.

Katirresu, S : 'A Hand Book of Jaffna Peninsula', A Sopuvenir of Northern Railway Opening in 1906, Jaffna.

Lewis, J. P : Some notes on Archaeological matters in the Northern Province', C.A.L.R. 2 (2) Oct., 1916, pp. 94 - 99.

Lewis, J.P : 'Nayi - Nettive or Ayikuntike Minisu, C.A.L.R., 1916 - 17, p. 274.

Lewis, J.P. : 'Sinhalese occupation of the Jaffna Peninsula', J.R.A.S.C.B. Vol XXVIII, p. 87.

Pathmanathan, S : The Kingdom of Jaffna, 1978.

Paranavitana, S : Epigraphia Zeylanica, Vol. IV, Dept. of Archaeology, Colombo.

Pieris, Paulus Edword, : 'The Kantarodai Finds', J,R,A.S.C.B. 28 (74), 1921, p. 148.

Pieris, P.E. : 'Nagadipa and Buddhist Remains in Jaffna, J.R.A.S.C.B. 26 (76), 917, pp 11 - 50, 28 (72), 1919 : pp. 40 - 66.

Pieris, P.E. : 'Sinhalese coins in Jaffna, J.R.A.S.C.B. Vol.XXVI No. 70, 1917.

Pieris, P.E. : 'Pandara Malikai', J.R.A.S.C.B. Dec., 1916 (An old Building at Nallur).

Perera, B.J. : 'The ports of Ancient Ceylon', C.H.J., Vol I No.2, Jan. 1952.

Perera, B.J. : 'Jambukola (Kankesanturai) and Mahatittha (Mantota) as ports of Ceylon', C.H.J. Vol. I & 2, Jan. 1952.

Pearson Joseph : 'Notes on the Forts of the Jaffna Islands', J.R.A.S.C.B., Vol.XXIX, No. 76, 1929.

Raghavan, M.D. : 'Tamil Culture in Ceylon', Kalianilayam, Colombo, 1971.

Rasanayagam, C : Ancient Jaffna, Every mans Publishers, Madras, 1926.

Sircar, D.C. : Studies in Indian Coins, Delhi 1968, pp 1 - 2.

Tennent, A : Ceylon, Vol.II, p.539.

Paranavitana, S., (ed), : History of Ceylon, Vol.I, Part I, (Colombo), p.96. 1959.

2. Deraniyagala, S.U., : Pre and Proto - historic settlements in Sri Lanka, 1997.

: Economic Review, Oct/Nov. 1997. 3. Paranavitana.S., Op.cit., Chapters II-IV. 1959.

Sitrampalam, S.K., : The Megalithic Culture of Sri Lanka, Unpublished Ph.D. Thesis, University of Pune, 1980.

Sitrampalam, S.K., : 'Proto-historic Sri Lanka - An interdisciplinary Perspective', Paper presented at the 11th International Conference of Historians of Asia, (Colombo), 1988.

Sitrampalam, S.K., : 'Tamils in Ancient Sri Lanka - A Multi disciplinary Perspective', Prof.S.Vithiananthan Memorial Lecture delivered at the University of Jaffna on 16.0.2000.;

Sitrampalam, S.K., : 'Proto-historic Sri Lanka – A Retrospect' Proceedings of Jaffna Science Association – Ninth Annual Sessions held on April 4–6, University of Jaffna, Thirunelvely, 2001.

Seneviratne, Sudharshan, 1996. : 'Peripheral Regions and Marginal communities towards an alternative explanation of early Iron Age material and social formations in Sri Lanka', Dissent and Ideology, Essays in honour of Romila Thapar, (ed) Champaka Lakshmi .R. and Gopal,S., (Oxford University Press), pp.364 - 310.

Kirk.R.I., 1976. : 'The legend of Prince Vijaya - A study of Sinhalese Origins' American Journal of Physical Anthropology,. Vol.40, No.1, pp.91 - 99; Papiha,S.S., Mastana, S.S and Jeyasekara.R., 'Genetic variation in Sri Lanka'

Human Biology - Vol.68(5) p.735; Saha.N., 1998, 'Blood Genetic markers in Sri Lankan populations- Reappraisal of the legend of Prince Vijaya', American Journal of the Physical Anthropology, 76, pp.217-225. 1996.

Gunawardhana,W.F., : The origin of the Sinhalese language (Colombo).1918

Ryan Bryce, : Caste in Ceylon - the Sinhalese System in Transition (New Jersey) Karunatilaka.P.V.B. 1983 Early Sri Lankan Society - Some reflections on Caste, Social groups and Ranking, The Sri Lanks Journal of Humanities, Vol.IX, Nos. 1&2 1983 (Published in 1986). pp.108-143. 1953

Bechert.H., 1973., : 'The Cult of Skandakumara in the Religious history of South India and Ceylon', Proceedings of the Third International Conference Seminar of Tamil Studies, Paris (Pondichery), pp.199-206.

Goonetillake, Susantha,, : 'Sinhalisation: Migration or Cultural Colonialism', Lanka Guardian, Vol.3, No.1. May 1, 1980, pp.22-29: Vol.3., No.1 May 15, 1980, pp.18-19. 1980.

Paranavitana.S., : Inscriptions of Ceylon, Vol.I, Early Brahmi Inscriptions (Colombo), p.LXXXIX-XC. 970

Zvelebil, Kamil, V., : The term Tamil, Journal of the Institute of the Asian Studies, Vol.4< No.2, March 1987, pp.1-10; Joseph.P.M., The word Dravida International Journal of Dravidian Linguistics, Vol.XVIII, No.2 pp.135-136. 1987,

Sitrampalam.S.K. : 'The form Velu (Vç!) of Sri Lankan Brahmi Inscriptions - A Reappraisal', Perspectives in Archaeology, Leelananda Prematilleke Festschrift (ed) Seneviratne Sudharshan et.al.

Dept. of Archaeology, University of Peradeniya (Talagama) pp. 89-94. 1990.:

Sitrampalam,S.K., : 'The title Aya of Sri Lankan Brahmi Inscriptions - A Reappraisal', Summary of the paper submitted to the Archaeological Congress, (Colombo), 1988.

Veluppillai.A., : 'Tamil Influence in Ancient Sri Lanka with special reference to Early Brahmi Inscriptions', **Journal of Tamil Studies**, Vol. 16< Dec. 1979, pp.63-79 and Vol.17 June 1980, pp.6-19. 1980.

Pushparatnam.P. : Tamil place names as gleaned from the Brahmi Inscriptions of Sri Lanka - Kaveri, **Studies in Epigraphy, Archaeology and History, Professor Y.Subbarayalu Felicitation Volume**, (ed)

Rajagopal.S., (Chennai), pp.343-366. 2001

பின்னிணைப்பு - 2

தென்னிந்தியாவை அண்மித்த இலங்கையின் நிலையம்



தமிழகமும் வடஇலங்கையும் - நிலவியல் தொடர்புகள்




THE DIALECT REGIONS
OF
THE OLD TAMIL LAND
76°
84°
16°
8°
12
1
2
3
4
5
6
7
8
9
10
11
SRILANKA
N
W
E
S

இலங்கையின் பெருங்கற்கால பண்பாட்டு சவக்குழிகள்



இலங்கையில் தாதுக்கனியப்பொருட்களின் பரம்பலும் அவற்றுடன் இணைந்த தொல்லியல் மையங்களும்



புராதன இலங்கையின் கடலமுகப்பு மையங்களும் வரலாற்று நகரங்களும்



இலங்கையின் வரள் வலய பிரதேசமும் மண் வளமும்



வரண்ட வலயமும் பெருங்கற்காலச் சவஅடக்க மையங்களும் சமவகைகளும்



பெருங்கற்கால மட்பாண்டங்களிலும் ஆதிப்பிராமிச் சாசனங்களிலும் காணப்படும் குறியீடுகள்



கிறிஸ்துவுக்கு முற்பட்ட 3ஆம் 2ஆம் நூற்றாண்டுகளுக்குரிய சிங்களப் பிராகிருதச் சாசனங்கள் கிடைத்த மையங்களும் மாவட்டங்களும்



இலங்கையின் பிரதான வர்த்தக துறைமுக நகரங்களும் பண்பாட்டு மையங்களும்



மகாபராக்கிரமபாகுவின் சோழர்களுக்கெதிரான படையெடுப்புப் பாதை









PMI-2 A & C: Indian Ocean and Location of Jaffna peninsula.

B: Main ports linked with the main city of Jaffna.




Capitals of the Island
3rd c. BC – 1815 AD
1 Anuradhapura (3rd c. BC – 1017 AD)
2 Polonnaruwa (1017-1232)
3 Dambadeniya (1232-1272)
4 Yapahuwa (1272-1293)
5 Kurunegala (1293-1340)
6 Rampola (1341-1334)
7 Kotte (1372-1597)
8 Sitawaka (1521-1593)
9 Senkadagalapura or Kandy (1474-1815)

Sites of Kahapana finds



PMI-6A: Distribution of Kharsapana in the peninsula and its main land

Based on Amarasinghe and Sirisoma



Based on Codrington - SHC


INDIA
SRI LANKA
Bay of Bengal
Gulf of Mannar
Colombo
Moratuwa
Galle
INDIAN OCEAN


INDIA
BAY OF BENGAL
CEYLON
JAFFNA
MANNAR
BAY OF BENGAL
CEYLON
ANURADHAPURA

Sites of Roman Coin finds

2nd c. BC – 7th c. AD



An update of John Still's Map of 1


இலங்காபுரி
திராவிடக் குடியிருப்புகள்
ஆரியக் குடியிருப்புகள்
(கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர்)


புராதன தமிழ்



Site location of ancient Chinese ceramics

251892



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசாவினது இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள் (Structure of the Evolution of Culture of Sri Lanka up to 1500 A.D.) என்ற இந்தப் பண்பாட்டு வரலாற்று நூலானது ஒரு புதிய தோற்றப்பொலிவுடன் வெளியிடப்பட்டுள்ளமையையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் இவர் இலங்கையின் வரலாற்று எழுத்தியலில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும், ஓரினச்சார்புக்கொள்கையின் நிலைப்படுத்தலையும் நூல்களூடாக நன்கு அவதானித்ததின் அடிப்படையில் அவற்றை தமிழில் வெளிப்படுத்துமுகமாகவும், யதார்த்தமான புராதனப் பண் பாட்டு வரலாற்றின் வளர்ச்சியும் ஒழுங்கமைவும் அதன் பல்பக்கப்பண்பாட்டுச் செல்வாக்கு எவ்வாறிருந்ததென்பதனையும் ஒருங்கே வெளிப்படுத்துமுகமாகவும் இக்கனதியான நூலைப்படைத்துள்ளார்.

இந்நூலாசிரியர் ஏற்கெனவே ஆறு நூல்களையும் பல ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மிகவும் தனக்கேயுரித்தான, தனித்துவமான முறையில் வரலாற்று அணுகு முறையியலைக் கைக்கொண்ட பேராசிரியர் கிருஷ்ணராசா இந்நூலிலும் அதனை நன்கு வெளிப்படுத்தியுள்ளமை சிறப்பான ஓர் அம்சமாகும். இந்நூல் பல அத்தியாயங்களை (15) கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. புராதன நதிக்கரையோர நாகரிகங்களும் இலங்கையின் நீரியல் நாகரிகத்துடனான பண்பாட்டு வழித்தொடர்புகளும் என்ற ஒரு சிறப்பு அத்தியாயத்தினையும், விலங்கு வேளாண்மைக் குதிரைக்குழுமங்களின் வருகையும் கீழைத்தேயத்தில் அவர்களது குடியேற்ற நடவடிக்கைகளும் (Horse riders as Cattle Keepers) என்று ஆரியர் வருகை தொடர்பான பிறிதொரு அத்தியாயத்தினையும் மிகவும் தனித்துவமான வகையில் இந்நூலில் இணைத்துள்ளமை மாணவர்களை சர்வதேச, தென்னாசிய நிலைகளில் நின்று, இனத்துவ ரீதியாக எழுதப்பட்ட இலங்கை வரலாற்றினை விளங்கிக் கற்றுக் கொள்வதற்கு வழிவகுத்துள்ளதாகக் கருத இடமளிக்கின்றது. மேலும் இந்நூலில் கி.பி.1500 வரையான காலப்பகுதியில் இலங்கையில் வளர்ச்சி பெற்ற பௌத்த - இந்துக்கலைகளின் வளர்ச்சி பற்றியும் மிக விரிவாக எழுதியிருப்பது இலங்கையின் பண்பாட்டு வரலாற்றின் வளர்ச்சி யினைப் புரிந்து கொள்வதற்கேற்றவகையாக அமைந்திருக்கின்றது.

இப்பண்பாட்டு வரலாற்று நூலை மாணவர்களுக்கு மாத்திரமன்றி, வேறு எத்துறை களிலும் ஈடுபாடுடைய துறைசார் நிபுணர்களும் வாசித்து அறிந்து கொள்வதற்கேற்ற வகையில் ஒரு தனித்துவமான மொழிநடையைப் பிரயோகித்து எழுதியிருப்பது ஒரு சிறப் பம்சம் எனலாம். ஆசிரியரது நல்நோக்கம் தொடர்ந்து வளர்ச்சியடைய வேண்டும், அவர் இன்னும் பல நூல்களை தமிழில் எமக்குத்தரவேண்டும் என்று வாழ்த்தி, எமது பல்கலைக் கழகத்தினுள் கோயில் கொண்டிருக்கின்ற பார்வதி சமேதர பரமேஸ்வரரின் அருளாட்சி அவருக்கு என்றும் கிடைக்கவேண்டுமென்றும் ஆசிகூறுகின்றேன்.

பேராசிரியர் சமாதிலிங்கம் சத்தியசீலன்,
பீடாதிபதி/ உயர்பட்டப்பின் படிப்புகள் பீடம்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

Distributed By:
LANKA BOOK DEPOT
F.L. 1. 14, Dias Place,
Gunasingapura, Colombo 12.
Tel: 011-2-341942

ISBN 978-955-4568-02-0
978-955-4568-02-0

விலை : 1,500/-